திருக்குறள் தமிழ்மரபுரை

ஞா. தேவநேயன்

தேவநேயப் பதிப்பகம்

திருக்குறள்
தமிழ் மரபுரை

✻

தேவநேயன்
எழுதியது.

✻

நேசமணி பதிப்பகம்
காட்டுப்பாடி விரிவு

பதிப்புரிமை]

[விலை ரூ உருபா

(C) ஞானமுத்து தேவநேயன் (1902)

Ed 1 Dec. 1969

O31, IC5
K9

THIRUKKURAL THAMIL MARABURAI

15 உருபா

பாரி அச்சகம், 127, பெருவழி (பிராட்வே), சென்னை-1.
(படிவம் 51, 52 மட்டும் : திருவரங்கனார் அச்சகம், சென்னை-13.)

முகவுரை

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

(தண்டியலங்காரவுரை மேற்கோள்)

வரலாற்றிற் கெட்டாத தொன்முது பழங்காலத்திற் குமரிக் கண்டத் தென்கோடியில் தோன்றியதும், நாகரிக மாந்தனூலெத் (Cultural Anthropology) தொடங்கி வைத்ததும், உலக முதற்ருயர் தனிச் செம்மொழியுமான ஒண்டீந்தமிழி லெழுந்த முதலிரு கழக நூல்களும் ஆரியரா லழியுண்டபின், எஞ்சியுள்ள பண்டைத் தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கிநிற்கும் இருபெருந் தூண்கள், ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமும் திருக்கற மறையாந் திருக்குறளுமாகும். இவற்றுள், முன்னது கற்ருர்க்கன்றி மற்ருர்க்கு ஏலாமையின், பின்னதே பொதுமக்கட்கும் புலமக்கட்கும் ஒப்ப வேற்கும் முழுமுதல் விழுநூலாம்.

இந்நூற்குப் பதினன்காம் நூற்ருண்டிற்குமுன் உரைவரைந்த ஆசிரியர் பதின்மர்.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமே லழகர்—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்." (தனிப்பாடல்)

இவருள் மணக்குடவர், பருதி, பரிப்பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் என்னும் ஐவருரையே இன்று நமக்குக் கிடைப்பன. மணக்குடவரை மணக்குடியர் என்றும், பருதியை பரிதியென்றும், காலிங்கரைக் காளிங்கர் என்றுங் குறிப்பர்.

இவ்வைவருள்ளும் காலத்தாற் கடைப்பட்டவரும் உரைத் திறத்தால் தலைசிறந்தவரும் பரிமேலழகரே யாவர். இவரையும் இவருரையையும் சிறப்பித்துக் கூறும் பாக்கள் வருமாறு.—

"வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்

தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.'' உமாபதி சிவாசாரியார்)

திருந்திய தமிழில் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் விடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்கு
ஒருரை யின்றி யொன்பது சென்றும்
ஐயுற வாக நையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்
குள்ளிய பொருளா யுரைத்தன னென்ன
எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்துவே தாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்
கிதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்சம்
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தனன்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பரு ணெஞ்சப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி ஈசன தருளால்
உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்
பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தகைமை யோனே.''

(பெருந்தொகை, கடிசுகை)

''திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்துமதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகன்எனு
மன்னு முயர்நாமன் வந்து.'' (ஷி கடிசை)

''பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
றெரித்த வுரையாமோ தெளி.'' (ஷி கடிசை)

''தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்த பரி மேலழகன் ஓர்ந்து.'' (ஷி கடிசை)

"விரைத்தா ரலங்கல் திருவள்ளுவர் முன்னம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும் விளங்க நெறிப்புலவர்
உரைத்தார் பலரும் அதற்குரை தன்னே யுலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலே தேர்வக்கை
வரவல்னே". (ஷ கஷசஎ)

"வள்ளல் சிலேப்பெரு மான்நச்சர் சாத்தர் வழுதிமுதல்
தள்ளுவ னுர்க்குந் தலேயான பேரையும் தன்னுரையை
விள்ளுவ னுர்க்குந் திருக்காஞ்சி வாழ் பரிமேலழகன்
வள்ளுவ னுர்க்கு வழிகாட்டி னன்றெண்டை மண்டலமே".
(தொ. ம. சத. சக)

இதுபோது திருக்குறள் மூப்பது மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அவையுட்பட அந்நூலுரைகள் ஏறத்தாழ நூறுள்ளன. ஆயினும், இன்னும் பரிமேலழகருரையே தலே சிறந்த தெனவும் எவ்வுரையாலும் வீழ்த்தப்படாததெனவும் பொதுவாகக் கருதப்பட்டு வருகின்றது. அது பெரும்பாலும் ஏனையுரைகளெல்லா வற்றினுஞ் சிறந்ததென்பதும், சில குறள்கட்கு ஏனையுரையாசிரியர் காணமுடியாத உண்மைப் பொருளேப் பரிமேலழகர் நுண்மையாக நோக்கிக் கண்டுள்ளார் என்பதும், உண்மையே. ஆயின், பெறுதற்கரிய அறுசுவையரசவுண்டியில் ஆங்காங்குக் கடுநஞ்சு கலந்து படைத்துள்ள தொப்ப, உண்மைக்கு மாருனதும் தமிழுக்குந் தமிழர்க்குங் கேடு பயப்பதுமான ஆரிய நச்சுக் கருத்துக்களோ, முதலும் இடையும் முடிவுமாக நெடுகலும் குறிக்கோளாகக்கொண்டு புகுத்தியிருப்பது, இவ்வுரையை நடுநிலேயுடன் நோக்கும் எவர்க்கும் புலனுகாமற் போகாது. இனி, சில குறள்கட்கு முழுத்தவருகவும் சில குறள்கட்கு அரைத்தவருகவும் பொருள் கூறியுள்ளார். சில தென் சொற்களோ வட சொல்லாகக் காட்டியிருப்பதுடன், சில சொற்கட்குத் தவருன இலக்கணவமைதியுங் கூறியுள்ளார்.

பரிமேலழகர் வழுவியுள்ள வழிகள் :—

க. ஆரிய வழி காட்டல்

எ—டு: "தத்துவ மிருபத்தைந்தினேயுந் தெரிதலாவது...சாங்கிய நூலு ளோதியவாற்ருன் ஆராய்தல்" (உ எ ஆம் குறளுரை)

"இவர் பொருட்பாகுபாட்டினே அறம்பொருளின்பமென வட நூல் வழக்குப்பற்றி யோதுதலான்" (களவியல் முகவுரை).

உ. பொருளிலக்கணத் திரிப்பு

எ—டு : வடநூலுட் போசராசனும் ...யாங் கூறுவதின்பச்சுவை யொன்றனையுமே யென இதனையே மிகுத்துக் கூறினன். இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும்.''. (வெ)

தமிழ் அகப்பொருள் நூல்களும் திருக்குறளின்பத்துப்பாலும் கூறுவது இன்ப வாழ்க்கையே யன்றி இன்பச்சுவை மட்டுமன்று. இவ்வாழ்க்கை களவு கற்பு என்றே இருவகைப்படும்.

ஊ. ஆரியவழிப் பொருள் கூறல்

எ—டு : ''பிதிரராவார் படைப்புக் காலத்து அயனுற்'' படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி. (குறள். சூக; உரை.)

எ. ஆரியக் கருத்தைப் புகுத்துதல்

எ—டு : ''இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. (குறள். கிசுகி)
''முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.'' (குறள் கிஙிகூ.)

என்று, உடன்பாட்டு வடிவிலும் எதிர்மறை வடிவிலும் செங்கோலே மழை வருவிக்குமென்று ஆசிரியர் கூறியிருப்பவும், ''பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்; ஆகவே வானம் பெயலொல்லாதென்பதாயிற்று'' என்று பரிமேலழகர்.

''ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.''

என்னுங் குறளுரையில் தலைகீழாய்க் கருமகத்தைக் காரணமாகக் கூறியிருத்தல் காண்க.

ஙி. தென்சொல்லை வடசொன் மொழிபெயர்ப் பெனல்

எ—டு : 'உழையிருந்தான்' எனப்பெயர் கொடுத்தார், அமாத்தியர் என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின் (குறள். சூகூ உரை). குடங்கர் என்பது குடங்கமென்னும் வடசொற்றிரிபு. (அகூ உரை.)

கூ. தென்சொற்கு வடமொழிப் பொருள் கூறல்

எ—டு : அங்கணம் = முற்றம்

எ. சொற் பகுப்புத் தவறு

எ—டு : பெற்றத்தால்—'பெற்ற' வென்பதனுள் அகரமும், அதனென்பதனுள் அன்சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன.'' (குறள். இஉச உரை.)

அ. சொல் வரலாற்றுத் தவறு

எ—டு : அழுக்காறென்பது ஒரு சொல்—அச்சொற்பின் னழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை யாகாரமும் மகர வைகார விகுதியும் பெற்று அழுக்காறுமையென நின்றது. (அழுக்காறுமை யதிகார முகவுரை)

கூ. சொற்பொருள் தவறு

எ—டு : இனிது = எளிது. (குறள். கஉ0க)

கஉ0. அதிகாரப் பெயர் மாற்று

எ—டு : மக்கட்பேறு = புதல்வரைப் பெறுதல்.

கக. சுட்டுமரபறியாமை

எ—டு : ''அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்''
(குறள். உக)

அஃதும் = ஏனைத்துறவறமோ வெனின்.

கஉ. இருகுறளைச் செயற்கையாக இணைத்தல்

எ—டு : கூஉக, கூஉஉ.

இங்ஙனம் இவர் இந்நூற்கு ஆரியச் சார்பான உரை வரைந்திருப்பதற்கு, தமிழகப் பிராமணர் தொன்றுதொட்டுத் தமிழ் நூலாசிரியரும் நுவலாசிரியரும் உரையாசிரியருமாகி ஆரியக் கருத்துக்களைத் தமிழிலக்கியத்திற் புகுத்தி, தமிழரை அடிமைப்படுத்தியிருப்பதே அடிப்படைக் காரணியமாம்.

பரிமேலழகருரையினும் இவ்வுரை திருந்தியுள்ள வகைகள்

க. உரைத்திருத்தம்

எ—டு : முற்றும்—குறள். கூகக
ஒரு மருங்கு—குறள். கஉகஉ

உ. உரைவிளக்கம்

எ—டு : குறள். உ.கூ.நி, கூ.கூ.அ

கூ. சொல்விளக்கம்

எ—டு : குறள். கஉள

சு. கொளு விளக்கம்

எ—டு : குறள். கஅகசு, கஉஉநி

இ. மூலச்சொல்லியே உரையில் ஆளாமை

எ—டு : குறள். ககசுகூ, கசுஉஅ

இனி, இவ்வுரையைக் குறள்தொறும் பரிமேலழகருரையோடு ஒப்புநோக்கினும், பல விடத்துப் பல வகையில் திருத்தமும் வேறுபாடுங் கண்டு இப்புத்துரையின் தேவையை உணரலாம். ஆயின், பரிமேலழகருரையால் ஒரு பெரு நன்மையும் இல்லையோவெனின், உண்டு; அது எதுவெனின் அவருரைத் தொடர்பால் திருக்குறள் இது வரை அழிக்கப்படாதிருந்ததேயென்க; எது போலவெனின், முதலிரு கழகத்தும் வழங்கிய இயற்றமிழிலக்கணம் முழுதும், அதன் தொகுப்பாசிரியராகிய தொல்காப்பியரது தொல்காப்பியம் என்னும் பிண்ட நூலான் போற்றப்பட்டு வந்திருப்பது போன்று என்க.

தாமரைச் செல்வன் தமிழ்நூ லுலகெங்கும்
காமரு கட்டடங் கண்குளிரப்—போமுறை
யச்சிட்ட சுப்பையா யாய்ந்தேயிம் மெய்ந்நூற்கும்
மெச்சுற்றுப் பார்த்தனன் மெய்ப்பு.

இவ்வுரை யச்சீட் டிறுதி தனிநின்று
செவ்வகை பார்த்த செயல்நோக்கின்—எவ்வண்
சுழன்றுந் தமிழுலகம் சு.ப்பையாப் பின்னும்
உழந்தும் அவனே தலை.

சேர்ப்பு : இத்திருக்குறள் தமிழ் மரபுரைக்குப் பிழைதிருத்தப் பட்டியும் அருஞ்சொல் அகர முதலியும் தொகுத்த திரு. இராசிபுரம் சேயோனுக்கும், அதிகார அகரமுதலியும் குறள் முதற்குறிப்பகர முதலியும் தொகுத்த திரு. ஆரணிச் செல்வராசனுர்க்கும் என் நன்றி உரித்தாம்.

முப்பால் தமிழ்மரபு முன்னிய விவ்வுரையை
எப்போதும் போல இனிதாகத்—தப்பாமல்
அச்சிட்டுத் தந்தான் அழகிய பாரிப்பேர்
அச்சகத்தான் நாரா யணன்.

கார்வாழி யேர்வாழி கன்னித் தமிழ்வாழி
சீரார்பல் செல்வஞ் சிறந்துதவப்—பார்நீடு
பேரோங்கப் பாரிப் பெயர்தாங்கும் அச்சகத்தான்
நாரா யணன்வாழி நன்கு.

மேலத் தாம்பரம், சென்னை - 59,
கஅ, கன்னி, 2000
(4-10-1969)

ஞா. தேவநேயன்.

—0—

நன்றியுரை

ஆரா யணியன்னத் தாளக வாசிரி யன்முருகன்
நேரா யுரைவள் ளுவன்குற ளுற்றிட நீணிலத்தில்
சீரார் தமிழ்ப்புல வன்கந்த சாமியுஞ் சேர்துணையால்
ஈரா யிரத்தின் மிகவெண் பொன் ருன்றெருகுத் தீந்தனனே.

தொடைகெழு பாபுலீ காவிரி தூன்றுந் திருச்சிநக
ரிடையொரு சாலீல கல் லூரிமெய் யன்பர் விடுத்தபண
விடைவழு வாது மதிதொறும் வந்து விழுக்குறள் தென்
நடைகொளு மிவ்வுரை யச்சீடு நன்ருய் நடந்ததுவே.

பத்திற் குறையா மதிபல் லகஞ்சென்றும் பாகமன்றி
மெத்தக் கவன்றும் முடியாவிம் மெய்ந்நூல் மரபுரைதான்
தித்தித் தொழுகிந் தியநாட்டு வைப்பகத் தின்கணக்கன்
முத்துக் கிருட்டிணன் இல்லம் புகுந்ததும் முற்றியதே.

பணத்திற்கு மூன்று படிவிற்ற காலீல பரிந்துகம்பன்
உணத்தந்த வள்ளல் சடையன் உதவிய தோர்வியப்போ
கிணறறிற்குட் கேணியு மூருநாள் முத்துக் கிருட்டிணன்ருன்
குணத்திற்கீ டின்றிக் கொடுத்தனன் யாவுங் குறிப்பறவே.

நாவிரும் பின்சுவை யேர்மண நல்லுணு நாளுமுண் ணத்
தேவனின் நேய னெனவென்னைத் தீதற வைகுவித்தே
ஆவியன் முத்துக் கிருட்டிணன் என்னுரை யச்சகத்தை
மேவுவித் தேயதன் மெய்ப்புந் திருத்தினன் மேதகவே

———

சில சிறப்புக் குறிப்புக்கள்

வடசொல்நேர் தென் சொற்கள் :

உபசரித்தல் என்னும் வடசொல் சார்த்திக் கூறுதல் என்னுந் தென் சொல்லாலும், காரணம் என்னுஞ் சொல் கரணியம் அல்லது கரணகம் என்னும் வடிவினுலும், காரியம் என்னுஞ் சொல் கருமகம் அல்லது கருமியம் என்னும் வடிவினுலும், குறிக்கப்பட்டுள.

ஒருபொருட் பலசொற்கள் :

மன்னன் என்பது குறுநிலவரசனையும் வேந்தன் என்பது அவனை யடக்கியாளும் பெருநில வரசனையும் சிறப்பாகக் குறிக்குஞ் சொற்க ளேனும், இவ்விரண்டும் மோனை யெதுகை தழுவி நோக்கி வேறுபாடின் றியே பல குறள்களிலும் ஆளப்பட்டுள்ளன.

இலக்கணக் குறிப்புக்கள் :

அன்னது, பாலது என்னும் சொற்கள் ஈற்றின் அகர முதல் கெடின் அற்று பாற்று எனத் திரிந்து நிற்கும். இறந்தகால வினை யெச்ச வடிவோடு 'அற்று'க் கூடிவருமிடமெல்லாம் பெயரெச்சம் + அற்று என்றே உரை நெடுகலும் பிரிக்கப்பட்டுள்ளது.

எ - டு: நிறைந்தற்று = நிறைந்த அற்று. உவமையின் இரு கூறுகளும் உவமம் (உவமானம்) பொருள் (உவமேயம்) என்றே குறிக்கப்பட்டுள்ளன.

'இன்' என்னும் நீக்க வேற்றுமையுருபிற்கு உறழ் பொருளே யுரி யதெனினும், அது பொருந்தாத இடங்களிலெல்லாம் செய்பொருள் வேற்றுமைக்குரிய ஒப்புப் பொருளே கொள்ளப்பட்டுள்ளது.

ஆகுபெயர் போன்று ஆளப்பட்டுள்ள பெயர்களையெல்லாம் ஆகு பெயரென்றே பரிமேலழகர் குறித்துள்ளார். அவை இங்கு ஆகு பொருளி (இலக்கணை) என வேறுபடுத்தப்பட்டுள்ளன. இடைச் சொல்லாக ஆளப்பட்டுவரும் மன்னே, மாதோ என்னுஞ் சொற்கள் முதற்காலத்தில் முறையே அரசே, பெண்ணே என்று பொருள்பட்டு ஆடூஉ முன்னிலையாகவும் மகடூஉ முன்னிலையாகவும் இருந்தன வேனும், இங்கு உரையாசிரியன்மார் கருத்திற்கேற்ப மன் + ஓ, மாது + ஓ யென்றும் பிரிக்கப்பட்டுப் பொருந்துமிடமெல்லாம் இடைச் சொற்பொருள் கூறப்பட்டுள்ளன.

பரிமேலழகருரையில் அதிகார முகவுரையைத் தொடங்கும் 'அஃதாவது' என்னுஞ்சொல், இவ்வுரையின் பிற்பகுதியில் 'அதாவது' என்றே ஆய்தமின்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வடிவம் வழு நிலையே.

அளபெடை வடிவம் செய்யுள் நடையால் ஏற்பட்ட திரிபாதலின் உரை கூறுவதற் கெடுத்துக் கொண்ட மூலத் தொடர்களிலெல்லாம் அளபெடைச் சொற்கள் அளபெடை நீக்கியே குறிக்கப்பட்டுள்ளன

குறுக்க விளக்கம் :

அதி. — அதிகாரம்
ஆ. பா. — ஆண் பால்
இடை. — இடையியல்
இ - ரை. இதன் தொடருரை
இலத் —இலத்தின்
இ. - வே. — இருக்கு வேதம்
எ - டு. — எடுத்துக் காட்டு
ஒ. நோ: — ஒப்பு நோக்க
க. — கன்னடம்
கம்ப—கம்பவி ராமாயணம்
கலி, கலித். — கலித்தொகை
கள. — களவியல்
சச் — சச்சிதானந்த சிவம்.
சிலப். — சிலப்பதிகாரம்
சீவக. — சீவக சிந்தாமணி
சொல். — சொல்லதிகாரம்
த. வி. — தன்வினை.
திருமந். — திருமந்திரம்
தெ. — தெலுங்கு
தொல் — தொல் காப்பியம்
நன். — நன்னூல்
,,
நாலடி. — நாலடியார்
,,
பி .வி. — பிறவினை
புறம். — புறநானூறு
பெ. பா. —பெண் பால்.
,,
பொதுப்பா — பொதுப்பாயிரம்
ம. — மலையாளம்
முல்லை. — முல்லைப்பாட்டு
வ. — வடசொல்.
,,

AF—Anglo-French
E—English
F—French
G—German
Gk—Greek
L—Latin
LL—Late Latin
ME—Middle English
MHG—Middle High German
OE—Old English
OF—Old French
OHG—Old High German
OS—Old Saxon
Skt—Sanskrit

உள்ளடக்கம்

பக்கம்

முகவுரை ங

நன்றியுரை கo

சில சிறப்புக் குறிப்புக்கள் கக

குறுக்க விளக்கம் கஉ

திருக்குறள் மரபுரை

முன்னுரை க

க. தமிழ நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டமை ››

உ. தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள் .?

கூ. தமிழிலக்கியப் பல்வேறு பொருட்பாகுபாடு ஙூ

ச. திருவள்ளுவர் வரலாறு ச

ஙி. திருவள்ளுவர் குமுகாய (சமுதாய) நிலை கஙு

திருவள்ளுவர் காலச் சமய நிலை ››

ஞ. திருவள்ளுவர் திருக்குறளியற்றிய நோக்கம் கஞ

அ. திருக்குறட் சிறப்பு கஅ

கூ. திருக்குறள் நூல் வகை உகூ

கo. பாயிர விளக்கம் ››

கக. திருக்குறள் நூற்பகுப்பு ஙூக

கஉ. பரிமேலழகர் நச்சுக் கருத்துக்கள் கூஉ

திருக்குறள் மூலமும் உரையும்

கூ. அறத்துப்பால்

க. பாயிரவியல் ››

(க) முதற் பகவன் வழுத்து ››

(உ) வான் சிறப்பு ஙூஉ

(கூ) நீத்தார் பெருமை ஙூ

(ச) அறன்வலி யுறுத்தல் ஙூச

உ. இல்லறவியல் இஅ

(க) இல்வாழ்க்கை இக

(உ) வாழ்க்கைத் துணை நலம் ஈஇ

(ஊ) மக்கட்பேறு ஸ்கூ

(ச) அன்புடைமை எச

(இ) விருந்தோம்பல் ஸ்கூ

(ஈ) இனியவை கூறல் அச

(எ) செய்ந்நன்றி யறிதல் அஅ

(அ) நடுவு நிலைமை கூஉ

(ஃ) அடக்கமுடைமை கூஈ

(கo) ஒழுக்கமுடைமை கoக

(கக) பிறனில் விழையாமை கoச

(கஉ) பொறையுடைமை கoஅ

(கஊ) அழுக்காறாமை ககக

(கச) வெஃகாமை ககஇ

(கஇ) புறங் கூறாமை ககஅ

(கஈ) பயனில சொல்லாமை கஉஉ

(கஎ) தீவினையச்சம் கஉஈ

(கஅ) ஒப்புரவறிதல் கஉஊ

(கஃ) ஈகை கஊஃ

(உo) புகழ் கஃஅ

ஊ. துறவறவியல் கசஇ

(க) அருளுடைமை களள

(உ) புலான் மறுத்தல் கதிக

(ஊ) தவம் கஇஇ

(ச) கூடாவொழுக்கம் கசக

(இ) கள்ளாமை கசஈ

(ஈ) வாய்மை களo

(எ) வெகுளாமை களச

உள்ளடக்கம் — கஙி

(அ) இன்ஞ செய்யாமை — கஎஅ
(கூ) கொல்லாமை — கஅட
(கo) நிலையாமை — கஅஅ
(ககூ) துறவு — ககூஙி
(ககூ) மெய்யுணர்தல் — உoo
(ககூ) அவாவறுத்தல் — உoஅ
ஈ. ஊழியல — உகஙி
ஊழ் — ,,
உ. பொருட்பால்
க. அரசியல் — ,,
(க) இறைமாட்சி — ,,
(உ) கல்வி — உஉஎ
(கூ) கல்லாமை — உகூதி
(ச) கேள்வி — உசஙி
(இ) அறிவுடைமை — உஙிo
(ஈ) குற்றங் கடிதல் — உஙிச
(எ) பெரியாரைத் துணைக்கோடல் — உசo
(அ) சிற்றினஞ் சேராமை — உகூஙி
(கூ) தெரிந்து செயல்வகை — உஎo
(கo) வலியறிதல் — உஎஙி
(ககூ) காலமறிதல் — உஅக
(ககூ) இடனறிதல் — உஅஙி
(ககூ) தெரிந்து தெளிதல் — உகo
(கச) தெரிந்து வினையாட்டல் — உகூ
(கஙி) சுற்றந் தழால் — கூoக
(ககூ) பொச்சாவாமை — கூoக
(கஎ) செங்கோன்மை — கூகo
(கஅ) கொடுங்கோன்மை — கூகச
(ககூ) வெருவந்த செய்யாமை — ஏஉகூ
(உo) கண்ணோட்டம் — கூஉஎ

(உக) ஒற்றுடல் ங்ஙங்ஙே
(உஉ) ஊக்கமுடைமை ங்ஙங்அ
(உங) மடியின்மை ங்ஙசஉ
(உச) ஆள்வினையுடைமை ங்ஙசசு
(உஞ) இடுக்கணழியாமை ங்ஙஞஞ
உ. உறுப்பியல் ங்ஙசுஐ
க. அமைச்சு ,,
(க) அமைச்சு ,,
(உ) சொல்வன்மை ங்ஙசுஞ
(ங) வினைத்தூய்மை ங்ஙஎஐ
(ச) வினைத்திட்பம் ங்ஙஎஞ
(ஞ) வினை செயல்வகை ங்ஙஅஐ
(சு) தூது ங்ஙஅஞ
(எ) மன்னரைச் சேர்ந்தொழுகல் ங்சுசுக
(அ) குறிப்பறிதல் ங்சுசுசு
(கூ) அவ்வயறிதல் சஐக
(கஐ) அவையஞ்சாமை சஐஅ
உ. நாடு சகசுங
நாடு ,,
ங. அரண் சகசுசு
அரண் ,,
ச. பொருள் (கூழ்) சஉசு
பொருள் செயல்வகை ,,
ஞ. படை சஙஉ
(க) படைமாட்சி ,,
(உ) படைச் செருக்கு சஙசு
சு. நட்பு சசஞ
(க) நட்பு சசஞ
(உ) நடபாராய்தல் சஞஐ

உள்ளடக்கம் ௧௭

(ஈ) பழைமை ௬௬
(ச) தீ நட்பு ௭௦
(ஞ) கூடா நட்பு ௭௯
(ட) பேதைமை ௮௯
(ண) புல்லறிவாண்மை ௯௫
(த) இகல் ௯௭
(ந) பகைமாட்சி ௰௩
(ப0) பகைத்திறந்தெரிதல் ௰௮
(ம) உட்பகை ௰௯
(ய) பெரியாரைப் பிழையாமை ௰௯
(ர) பெண்வழிச் சேறல் ௰௯
(ல) வரைவின் மகளிர் ௰0
(வ) கள்ளுண்ணாமை ௰0
(ஸ) சூது ௰0
(ள) மருந்து ௰0

ஈ. குடி ௰0
(க) குடிமை ,,
(உ) மானம் ௰0
(ஊ) பெருமை ௰0
(ச) சான்றாண்மை ௰0
(ஞ) பண்புடைமை ௰0
(ட) நன்றியில் செல்வம் ௰0
(ண) நாணுடைமை ௰0
(த) குடிசெயல்வகை ௰0
(ந) உழவு ௰0
(ப0) நல்குரவு ௰0
(ம) இரவு ௰0
(ய) இரவச்சம் ௰0
(ர) கயமை ௰0

ரு.	இன்பத்துப்பால்	சுஎஉ
க.	களவியல்	சுஎசூ
	(க) தகையணங்குறுத்தல்	சுஎதி
	(உ) குறிப்பறிதல்	சுகக
	(கூ) புணர்ச்சி மகிழ்தல்	சுகஎ
	(ச) நலம்புனைந்துரைத்தல்	சுஉச
	(ஞ) காதற் சிறப்புரைத்தல்	சுஉஅ
	(சு) நாணுத் துறவுரைத்தல்	சுஙஉ
	(எ) அலரறிவுறுத்தல்	சுஙஅ
உ.	கற்பியல்	சுசகூ
	(க) பிரிவாற்றுமை	சுசஞ
	(உ) படர் மெலிந்திரங்கல்	சுடுக
	(கூ) கண்விதுப் பழிதல்	சுடுசு
	(ச) பசப்புறு பருவரல்	சுசஃ
	(ஞ) தனிப்படர் மிகுதி	சுசச
	(சு) நினைந்தவர் புலம்பல்	சுசஅ
	(எ) கனவுநிலை யுரைத்தல்	சுஎங
	(அ) பொழுதுகண் டிரங்கல்	சஎஎ
	(கூ) உறுப்பு நலனழிதல்	சுஅக
	(கஃ) நெஞ்சொடு கிளத்தல்	சுஅடி
	(ககூ) நிறையழிதல்	சுகஃ
	(கஉ) அவர்வயின் விதும்பல்	சுகச
	(ககூ) குறிப்பறி வுறுத்தல்	சுகசு
	(கச) புணர்ச்சி விதும்பல்	எஃச
	(கஞ) நெஞ்சொடு புலத்தல்	எஃஅ
	(ககூ) புலவி	எகஉ
	(கஎ) புலவி நுணுக்கம்	எகஎ
	(கஅ) ஊடலுவகை	எகஉ

பின்னிணைப்பு :

(க) உரையெச்சம் எஉஎ
(உ) ''அகர முதல வெழுத்தெல்லாம்'' எஉஈ
(ஊ) திருக்குறள் வட சொற்கள் எஊ0
(சு) திருக்குறட்கு வடசொல் தேவையின்மை எஊஉ
(இ) திருக்குறளிலுள்ள வடமொழிச் சென்ற தென் சொற்கள் எஊஇ
(சு) திருக்குறட் சிறப்புச் சொற்கள் எஇஇ
(எ) திருவள்ளுவர் பெயரிலுள்ள தனிப்பாடல்கள் எஇசு
(அ) திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றிய சிறப்புப் பாக்கள் எஇவ
(க) திருவள்ளுவ மாலை எஇஅ
(க0) திருவள்ளுவர் காலத் தமிழ்நூல்களும், கலியறிவியல்களும் எவஇ
(கக) அரசு வகைகளும் திருக்குறள் அரசியலும் எளஅ
(கஉ) நாற்பொருளும் முப்பாலும் எஅ0
(கஊ) திருக்குறளின் தன்னேரின்மை எஅஉ
(கசு) திருவள்ளுவரின் மெய்ப்பொருள் மேம்பாடு எஅஅ
(கஇ) திருவள்ளுவர் எம் மதத்தார் ? ,,
(கஈ) வீடுபேற்று விளக்கம் எஅஇ
(கஎ) இன்பத்துப்பாலின் இருதிறம் எஅஎ
(கஅ) தமிழ ஆரியக் கருத்து வேறுபாடுகள் ,,
(கக) திருக்குறட் பொதுக் கூறுகள் எஅசு
(உ0) இக்காலத்திற் கேலாத் திருக்குறட் கருத்துக்கள் ,,
(உக) வழக்கற்ற பண்டைப் பழக்க வழக்கங்கள் ,,
(உஉ) திருக்குறள் தொல் (புராணக்) கதைகள் ,,
(உஊ) திருவள்ளுவர் திருவுள்ளம் ,,
(உசு) திருவள்ளுவர் ஈராயிரவாட்டை விழாச் செய்தி எஈ0
அருஞ் சொல் அகரமுதலி எஈஉ
திருக்குறள் முதற்குறிப் பகரமுதலி எஈஎ
பிழை திருத்தப்பட்டி அகக

திருக்குறள் தமிழ் மரபுரை

முன்னுரை

க. தமிழ நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டமை

தமிழன் பிறந்தகம் குமரிநாடென்பதும், தமிழ நாகரிகம் ஆரியர் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென்பதும், இன்னும் சரிவர அறியப்படாமையால், தமிழரின் முன்னோர் கிரேக்க நாட்டுப் பக்கத்தினின்று வந்தவரென்றும், ஆரிய நாகரிகத்தைப் பின்பற்றியவரென்றும், தமிழ் பன்மொழிக்கலவையென்றும், வட இந்தியாவிலுள்ளவரெல்லாரும் ஆரியரென்றும், வடஇந்தியாவிலும் சமற்கிருதத்திலுமுள்ளவையெல்லாம் ஆரியர் கண்டவையென்றும், உண்மைக்கு நேர்மாறுகச் சொல்லப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது.

உலகில் மிகப் பழைமையானது குமரிக்கண்டத் தமிழ் நாடென்பதையும், முதன்முதல் தோன்றியது தமிழநாகரிக மென்பதையும், தமிழ் உலகமுதல் உயர்தனிச் செம்மொழியென்பதையும், அறிந்தாலொழிய; தமிழ் மொழி யிலக்கிய நாகரிகப் பண்பாட்டின் உண்மையான இயல்பையும் உயர்வையும் உணரமுடியாது.

உ. தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள்

உலகில் இன்பத்தை நுகரவேண்டுமென்பதே பொதுவாக எல்லா மாந்தர்க்கும் இயல்பான நோக்கம். அவ்வின்பத்திற்குப் பொருள் இன்றியமையாதது. பொருள் சிறந்தபின், "தனக்கு மிஞ்சித்தானம்", "பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே." என்னும் நெறிமுறைப்படி, தான் நுகர்ந்ததுபோக எஞ்சியதை உழைக்கவியலாதவரும் துறவியருமான பிறர்க்கு அளிப்பதும் இயல்பே. இதுவே அறமெனப்படுவது. இங்ஙனம் இன்பம், பொருள், அறம், என்னும் மூக்குறிக்கோள் இயற்கையாகத் தோன்றின. அறத்தைச் சிறப்பாக நோக்காது இன்பத்தையே நோக்கும் இன்பநூல்களும் இலக்கண நூல்களும் இம்முப்பொருளையும் இம்முறையிலேயே குறிக்கும்.

> "இன்பமும் பொருளும் அறனு மென்றுங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
> காமக் கூட்டங் காணுங் காலை" (கள. 5)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க.

தமிழர் புறநாகரிகத் துறைகளில் மட்டுமன்றி அகநாகரிக மான பண்பாட்டுத்துறையிலும் மறுமைக்குரிய சமயத்துறையிலும் தலைசிறந்திருந்ததினால், சமயநூலாரும் அறநூலாரும் அறத் திற்கே சிறப்புக்கொடுத்து அறம் பொருளின்பம் எனத்தலைமாற்றிக் கூறினர்.

''அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப'' (செய். ௧0இ)

என்று தொல்காப்பியமும்,

''அறனும் பொருளும் இன்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்'' (உஅ)

''சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல'' (ஊக)

என்று புறநானூறும் கூறுதல் காண்க. அறவழியிற் பொருளீயீட்டி அதைக் கொண்டு அறவழியில் இன்பம் நுகர வேண்டுமென்பது கருத்து. இன்பம் என்பது முதற்கண் இவ்வுலக வின்பத்தையும் பின்பு அதனெடு விண்ணுலக வின்பத்தையும் அதன்பின் அவற்றெடு வீட்டுலக வின்பத்தையுங் குறித்தது. இது சமயத்துறை பற்றிய நாகரிக வளர்ச்சியைக் காட்டும். வீட்டின்பம் பலவகையில் ஏனையிரண்டினும் வேறுபட்டதாதலின், பின்னர் அறம் பொருளின்பம் வீடு எனப் பிரித்துக் கூறப்பட்டது. ஆயினும் வீடென்பது அறம் என்னும் வாயில் வகையிலும் காதலின்பம் என்னும் உவமை வகையி லுமன்றி வண்ணனை வகையிற் கூறப்பட வியலாதாதலின், நாற்பொ ருளும் நூலளவில் என்றும் முப்பாலாகவே இருக்கும். அதனாலேயே திருக்குறட்கும் முப்பால் என்று பெயர். நாற்பொருளும், மாந்தர்க்கு நன்மைசெய்தல் பற்றி உறுதிப் பொருள் என்றும், சிறப்புடைமை பற்றி மாண்பொருள் என்றும் கூறப்படும். கல்வியின் பயன் கடவுள் திருவடியடைதல் என்னுங் கருத்தெழுந்தபின், நாற்பயனே நூற் பயன் என்றுயிற்று.

''அறம்பொரு ளின்பம்வீ டடைதல் நூற்பயனே.''

என்பது நன்னூற்பாயிரம் (௧0).

அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நாற்சொல்லையும், மூறையே தர்ம அர்த்த காம மோக்ஷ என மொழிபெயர்த்தனர் வட மொழியாளர். ஆயின், தமிழில் அறம் என்பது நல்வினையையும், வடமொழியில் தர்ம என்பது வருணச்சிரம தருமம் என்னும் குல வொழுக்கத்தையுமே குறிக்கும்.

கூ. தமிழிலக்கியப் பல்வேறு பொருட்பாகுபாடு

தமிழிலக்கியத்தின் இயல்பை அறியாத ஆரியவழியினரும் ஆராய்ச்சி யில்லாரும், பொருளிலக்கணப் பாகுபாடொன்றையே தமிழர் பொருட்பாகுபாடென்று கொண்டு, அறம் பொருளின்பம் வீடென்னும் அறநூற் பாகுபாட்டை ஆரியரதென்றும் தமிழர் அதைத் தழுவினரென்றும், முறையே துணிந்தும் மயங்கியும் கூறுவாராயினர். பொருட்பாகுபாடு பெரும்பாலும் நூல்தொறும் வேறுபடுவதாகும்.

பொருள், குணம், கருமம், பொது, சிறப்பு, ஒற்றுமை, இன்மை என்பொருள் ஏழென்பது ஏரண (தருக்க) நூல்.

> ''பொருள் குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
> இன்மை யுடன்பொரு ளேழென மொழிப.''

என்பது அகத்தியத் தருக்க நூற்பா.

இறை (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) எனப்பொருள் மூன்றென்பது சிவனியக் கொண்முடிபு (சைவசித்தாந்த) நூல்.

அறம், பொருள், இன்பம், வீடு எனப்பொருள் நான்கென்பது அறநூல்.

இலக்கண நூலில் அதிகாரந்தொறும் பொருட்பாகுபாடு வேறுபடும்.

உயிர், மெய், உயிர்மெய், (பிராணி) எனப் பொருள்களை மூன்றுகப் பகுப்பது எழுத்ததிகாரம்; பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என ஆறுகவும், உயர்திணை அஃறிணை என இரண்டாகவும் பகுப்பது சொல்லதிகாரம்; அகம் புறம் என இரண்டாகப் பகுப்பது பொருளதிகாரம்.

> ''அன்பே அறனே இன்பம் நாணெடு'' (பொருள். உக)
> ''அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்'' (கற். இச)
> ''ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்'' (அகத். சச)
> ''பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே'' (பொருள்.உ0)
> ''எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது'' (பொருள். உக)

என அறம் பொருளின்பங்கள் தனித்தனியாகவும், ''மூன்றன் பகுதியும்'' (அகத். சக) எனத் தொகுத்தும், அகப்பொருளிலக்கணத்திற் கூறப்பட்டிருப்பதால், எல்லார்க்கும் பொதுவான இருவகை வாழ்க்கைக்குமுரிய அறநூற் பாகுபாடும் புலவரே செய்யும் இலக்கண

ஆராய்ச்சிக்குரிய பொருளதிகாரப் பாகுபாடும், வெவ்வேறு நூலன வென்றும் வெவ்வேறு பயனேக்கியனவென்றும் அறிந்துகொள்க. மூன்றன் பகுதியாவது அறத்தாற் பொருளீட்டி அப்பொருளால் இன்பம் நுகர்வேன் எனல். இதனுல் அறநூற்பாகுபாடு தமிழரதே என்று தெளிக.

தமிழ நாகரிகத்தின் சிறந்த கூறுகளையெல்லாம் தழுவிக் கொண்டு அவற்றைத் தமவெனக் கூறல், ஆரியரின் தொன்று தொட்ட வழக்கமே. அறம்பொருளின்பம் வீடெனத் தமிழற நூலார் வகுத்த பொருட்பாகுபாட்டையே இலக்கண நூலார் இன்பம் அக மென்றும் ஏனை மூன்றும் அஃதல்லாத புறமென்றும் இரண்டுள் அடக்கி மாற்றி வகுத்தனர் என்க. இதையுணர்த்தற்கே

"இன்பமும் பொருளும் அறனும் என்றுங்கு
.....
காமக் கூட்டங் காணுங் காலை" என்று தொல்காப்பியங் கூறியதும் என அறிக. முழுத் தமிழிலக்கணந் தோன்றியது தலைக் கழகக் காலம் (கி. மு. 10,000). அது தோன்றிய போதே முத் தமிழாகத் தோன்றிற்று. அவற்றுள் அடிப்படையான இயற்றமிழ் இலக்கணமும் மூவதிகாரப் பிண்டமாகவே தோன்றிற்று. இதனுல் பொருளதிகார அகப்புறப் பொருட்பாகுபாட்டிற்கு மூலமான அற நூற்பொருட்பாகுபாடு, தலைக்கழகத்திற்கும் முந்தியதென அறிக. அது ஆரியம் என்னும் பேரும் இனமுந் தோன்றுத முதுபண்டைக் காலம். அகம் புறம் என்பதே தமிழர் பொருட்பாகுபாடென்பது, பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழில் என்பதே தமிழர் பொருட் பாகுபாடென்பது போன்றதே.

ச. திருவள்ளுவர் வரலாறு

பெயர்: இவர் பெயர் வள்ளுவன் என்பதே. வள்ளுவர் என்பது உயர்வுப் பன்மை. இவரது இறைப்பற்றிருடு கூடிய ஒழுக் கத்தின் உயர்வும் இவர் நூலின் மறைத் தன்மையும், இவருக்குத் திருமை (தெய்வத்தன்மை) யுண்டாக்கியதினுல், இவர் பெயர்க்கு முன் திரு என்னும் அடைமொழி சேர்க்கப்பெற்றது. தேவர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர், முதற்பாவலர், பெருநாவலர், செந்நாப் போதார், நாயனர் முதலிய பிற பெயர்களெல்லாம், இவரைப் பாராட் டிக்கூறிய புலவர் ஆண்ட புகழ்ச் சொற்களேயன்றி வேறல்ல.

வள்ளுவன் என்பது இயற்பெயராகவுமிருக்கலாம்; தொழில் பற்றிய பெயராகவுமிருக்கலாம். திருவள்ளுவர் பெயர் இவற்றுட் பின்னதென்பதே பெரும்பான்மைப் பொருத்தமாம்.

வள்ளுவன் என்பான், அரசன் கட்டளையைப் பறையறைந்து அறிவிப்பவன் என்று பெருங்கதையும், அரசர்க்கு உள்படு கருமத் தலிவன் என்று பிங்கல நிகண்டும், புள்ளுவன் (நிமித்திகன்) என்று சீவகசிந்தாமணியும், கூறுகின்றன.

வள் என்னும் அடிச்சொற்குள்ள பலபொருள்களுள் மூன்று, கூர்மை வலிமை வண்மை என்பன. ஆதலால், வள்ளுவன் என்னும் சொற்கு, கூர்மதியன், வல்லவன், வள்ளியோன் என்று முப்பொருள் கொள்ளலாம்.

"ஏற்றுரி போர்த்த விடியுறழ் தழங்குரற்
கோற்றெழில் வேந்தன் கொற்ற முரசம்
பெரும்பணைக் கொட்டிலு ளரும்பலி யோச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேணை வள்ளுவ முதுமகன்"

என்று பெருங்கதை (உ: உ அ-கூ) கூறுவதால், வேத்தியல் விளம்பர அதிகாரியான வள்ளுவன் பெருமை விளங்கும். (முதுமகன் முப்ப தாண்டிற்கு மேற்பட்டவன்.). இவனையே பிங்கல நிகண்டு,

"வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்
குள்படு கருமத் தலிவர்க் கொன்றும்." (இ: ககஅ)

என்று உள்படுகருமத் தலிவருள் ஒருவனுகக் குறிக்கும். வள்ளுவன் அரசன் கட்டளையையே முரசறைந் தறிவிப்பவன்; சாக்கையன் அரசர்க்கே நாடகம் நடிப்பவன். ஆதலால் இவ்விருவரும் அரசர் தொடர்பே கொண்ட அரண்மனைப் பணியாளராவர். சிலர் கருது கின்றவாறு, வள்ளுவன் அரசன் பள்ளியறைக் கண்காணிப் பாளனை மாளிகை நாயகம் (Chamberlain) அல்லன்.

பெருங்கணி குறித்த நன்னாளிலேயே வள்ளுவன் பறையறைய வேண்டியிருந்ததினாலும், வள்ளுவனைப் புள் (நிமித்தம்) அறிவிப் பவன் என்றும் சிந்தாமணி கூறுவதனாலும், வள்ளுவர் என்பார் இன்றும் கணியராயிருந்து வருவதனாலும், பண்டை வள்ளுவனும் கணியம் அறிந்தவனே என்று கருத இடமுண்டு. நாள்கோள்களின் இயக்கத்தை யறிந்து ஐந்திறம் (பஞ்சாங்கம்) வகுத்தற்கும் அரசர்க் குப் பிறப்பியம் (சாதகம்) எழுதுதற்கும் நுண்மாண் நுழைமதி வேண்டியிருத்தலின், கணியருள் ஒரு பிரிவார் வள்ளுவர் எனப்பட்ட தாகத் தெரிகின்றது.

நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய ஒருசிறைப்பெரியனார், மருதனிள நாகனார், ஒளவையார், கருவூர்க் கதப்பிள்ளை ஆகிய நால்வரும் அவனை நாஞ்சிற் பொருநன் என்றே குறிக்கின்றனர். பொருநன் போர்மறவன் அல்லது படைத்தலைவன்.

"பொருந ரென்ப பெரும்போர்த் தலைவர்."

என்பது பிங்கலம் (இ: கக கூ).

பாண்டிநாட்டிற்கும் சேரநாட்டிற்கும் இடைப்பட்ட நாட்டை யாண்டதினால், ஒருகாற் பாண்டியனுக்கும் மற்றொருகாற் சேரனுக் கும் படைத்தலைவனாக இருந்ததாகத் தெரிகின்ற நாஞ்சில் வள்ளு வனை, வலிமையிலும் வண்மையிலும் சிறந்தவனாக மருதனிள நாக னாரும் ஒளவையாரும் கதப்பிள்ளையும் பாடியிருத்தலால், அவன் பெயர் வலிமையாலோ வண்மையாலோ வந்ததாகவுமிருக்கலாம்; இயற்பெயராகவுமிருக்கலாம்.

வல்லப என்னும் வடசொல், வேரில்லாததாகவும் காதலன், நண்பன், கணவன், மேலோன், கண்காணி என்றே பொருள்படுவ தாகவும் இருத்தலால், அது வள்ளுவன் என்னும் தென்சொற்கு மூலமாயிருத்தல் முடியாது. கல்வெட்டுக்களில் வரும் வள்ளுவன் வல்லுவன் என்னும் சொற்களும், தூய தென்சொற்களேயன்றி வல்லப என்னும் வடசொல்லின் திரிபாகா. உண்மை யெதுவெனின், வல்லவன் என்னும் தென்சொல் வடமொழியில் வல்லப என்று திரிந் துள்ளது என்பதே. வகரம் பகரமாவது வடமொழிக்கியல்பே. ஆண்மகன் என்னும் சொல் கணவனையும் ஆண்டகையென்னுஞ் சொல் சிறந்த தலைவனையுங் குறித்தல் போன்றே, வல்லவன் என்பதன் திரிபான வல்லப என்பதும் வடமொழியில் கண்காணிப்புத் தலைவனையும் கணவனையும் காதலனையும் நண்பனையும் முறையே குறித்ததென்க.

குடி: திருவள்ளுவர் அரசனின் முரசறை விளம்பரத் தலைவரா யிருந்தாரெனின், அவர் பிறந்த குடி வள்ளுவக் குடியென்றே கொள்ளலாம். கடைக் கழகக் காலத்திற் பிராமணர் தம்மை மேன் மேலுயர்த்தத் தமிழரைப் படிப்படியாய்த் தாழ்த்தி வந்தாரெனினும், கடைப்பட்ட வகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு இக்காலத்திற் போல் அக்காலத்தில் இழிவு இருந்ததில்லை. அதனால், இக்கால நிலைமைபற்றித் திருவள்ளுவரை வள்ளுவக் குடியினரென்று கொள்வது அவருக்கிழுக்காகும் என்று கருதுவது, அறியாமையின் விளைவேயாம்.

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை யவர்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்."

என்று மாமூலர் பெயரிலுள்ள திருவள்ளுவமாலைப்பாவும், திருவள்ளுவரைத் தெய்வப் பிறப்பினரென்றே கொள்ளவேண்டுமென்றும், மறந்தும் மக்கட் பிறப்பினராகக் கொள்ளக்கூடாதென்றும், கூறுகின்றதேயன்றி, அவர் குடி எள்ளளவேனும் இழிவுள்ளதாகக் கருதுவதன்று.

காலம்: திருவள்ளுவர் காலம் இன்ன நூற்றாண்டென்று திட்டமாய்த் தெரியாவிடினும், தொல்காப்பியர் காலமான ஏழாம் நூற்றாண்டிற்கும் கடைக்கழக முடிவான மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதென்று கொள்வது, எவ்வகையினும் இழுக்காகாது.

கடைக்கழக முடிவிற்கு முற்பட்ட தென்பதற்குச் சான்றுகள்:—

(க) "பிறர்க்கின்ன முற்பகற் செய்யின் தமக்கின்ன
பிற்பகற் றாமே வரும்." என்னுங் குறள் (கூகக),
"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்"

என்று கி. பி. உ-ஆம் நூற்றாண்டினதான சிலப்பதிகார அடிகளில் (உக: கூ—ச) அமைந்திருத்தல்.

(உ) அதே நூற்றாண்டினதான மணிமேகலையில்
(உஉ: இக - சுஉ)

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்"

என்று, சீத்தலைச் சாத்தனார் சதுக்கப் பூதத்தின் கூற்றாக ஙஙி-ஆம் திருக்குறளை யெடுத்துக்கூறி அதன் ஆசிரியரையுங் குறித்தமை.

(ஊ) மணிமேகலைக்கு முந்திய புறநானூற்றில், சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடிய பாட்டில் (கூச),

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென

நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ''

என்று,

''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.'' (௧௦)

என்னும் குறளும், காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டில் (உஎஅ),

''ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே''

என்று ௯-ஆம் குறளிலுள்ள ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என்னும் தொடரும், குறிக்கப்பட்டுள்ளமை.

சான்றோன் என்னும் பெயர் அமைந்த ஒழுக்கமுள்ள மறவனை யும் (பதிற். ௪௰: ௧உ) குறித்தலால்,

''செங்களந் துழவுவோள் சிதைந்துவே ருகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.''

என்னும் புறப்பாட்டுப் பகுதி, ''தன்மகனைச் சான்றோ னெனக் கேட்ட தாய்.'' என்னுங் குறட்பகுதியொடும் முற்றும் பொருந்துவதே.

(ச) கி. பி. மூன்றும் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற திருச் சிற்றம்பலக் கோவை ௬00 துறைகளும் உரு கிளவிகளுங் கொண் டிருக்க, திருக்குறட்கோவையாகிய இன்பத்துப்பால் உரு தழீஇப்பின் கீழ்க் கிளவிப்பாகுபாடின்றி ௭௬ துறைகளே கொண்டிருத்தல்.

தொல்காப்பியத்தில் ஏறத்தாழ ௬00 துறைகள் குறிக்கப் பட்டுள. அவற்றுட் சில திருக்கோவையில் இல்லாதன; சில பெயர் குறிக்கப்பெறுதன; சில நுண்வேறுபாடுகளைக் கொண்டன. திருக் கோவைக்குப் பிற்பட்டவற்றில் ஏறத்தாழ ௮இ துறைகள் கூடி யுள்ளன. திருவள்ளுவர் அறநூன்முறையில் ஒருமனை மணம் பற்றிய இன்றியமையாத துறைகளையே கூறினாரேனும், அவற்றின் சுருக்கமும் பெயர் முறையும் திருக்குறளின் முன்மையைத் தெளிவுறக் காட்டுவனவாம்.

(ஞ) திருவள்ளுவரின் பிற்காலத் தொழிலாகத் தெரிகின்ற நெசவிற்கு நூலுதவினதாகச் சொல்லப்பெறும் ஏலேலசிங்கர் என்னும் சோணாட்டுக் கடல் வணிகர் காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டா யிருந்தமை.

(ஈ) கிறித்துவிற்குப் பிற்பட்ட நூல்களோ அல்லது நிகழ்ச்சி களோப்பற்றித் திருக்குறளில் யாதொரு குறிப்புமின்மை.

கடைக் கழகச் செய்யுட்களில் கூறப்பெறும் யவனரைப்பற்றித் திருக்குறளில் ஒரு குறிப்புமின்மை கவனிக்கத்தக்கது.

தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்ட தென்பதற்குச் சான்றுகள் :—

(க) தொல்காப்பிய நூற்பாக்களையும் மக்கட் பகுப்பையும் திருவள்ளுவர் தழுவியிருத்தல்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்னும் தொல்காப்பிய நூற்பா (சசஉச)

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்னுங் குறளில் (உஅ) தழுவப்பெற்றுள்ளது.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை யின்மை யான."

என்னும் தொல்காப்பிய நூற்பா (கூஅக),

"கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்."

என்னுங் குறளில் (சகஉஎ) தழுவப்பெற்றுள்ளது.

"மாவும் மாக்களும் ஐயறி வினவே" (கஙிக)
"மக்கள் தாமே ஆறறி வுயிரே" (கஙிஉ)

என்று தொல்காப்பியர் வகுத்ததற்கேற்பவே, திருவள்ளுவரும் மாந்தருட் பண்பட்டவரை மக்கள் என்றும் படாதவரை மாக்கள் என்றும் பிரித்துக் கூறியுள்ளார்.

எ-டு :

"மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர் (கூஎ)
"மக்களே போல்வர் கயவர்" (கஎக).
"கொலிவினைய ராகிய மாக்கள்" (கஉசு)
"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" (சஉ஦).

(உ) "இல்லதெ னில்லவள் மாண்பானு ளுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை." (ஙிக)

என்னுங் குறளில் வந்துள்ள ஆனுல் என்னும் சொல்வடிவம் தொல் காப்பியர் காலச் செய்யுள் நடைக்கு ஏற்காமை.

(ஊ) "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்

வழக்கி ஞகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.'' (இகo)

என்னுந் தொல்காப்பிய நெறியீடு, கடைக்கழகச் செய்யுளிற் போன்றே திருக்குறளிலும் கைக்கொள்ளப் பெறுதிருத்தல்.

எ-டு : ''நெருநற்றுச் சென்றுரைங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.'' (கஉஎஅ)

இவ்வுயர்வுப் பன்மையாட்சியே ''மற்றையவர்கள்'' (உகஉ) என்னும் இரட்டைப் பன்மையாட்சிக்கும் இடந்தந்தது.

(சு) ''எஞ்சா மண்நசை வேந்தனே வேந்தன்
அஞ்சுதகத் தகலச்சென் றடல்குறித் தன்றே.'' (கoo உ)
''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனூர் புலவர்.'' (கஉகக உ)

என்று மூவேந்தரும் தகுமை குன்றுத தொல்காப்பியர் கால நிலைமைக்கு மாறுக,

''பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தகலக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.'' (எஉஇ)

என்று வேளிருங் கோசருமான குறும்பரால் மூவேந்தரும் அகலக்கப் பட்ட நிலைமையைத் திருக்குறள் குறிப்பாகக் கூறுதல்.

(இ) ''தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவ ரில்.'' (உஇக)

என்று திருவள்ளுவர் புத்தமதக் கொள்கையைக் கண்டித்தல்.

புத்தர் கி. மு. ஆறும் நூற்றாண்டினராயினும், புத்தமதம் அசோகனால் இந்தியாவிலும் வெளியிலும் பரப்பப்பட்ட காலம் கி. மு. உஎஉ—உஉக ஆகும். அசோகனின் மகனும் (அல்லது உடன் பிறந்தானும்) வேறு நால்வரும் இலங்கைக்கு வந்து புத்த மதத்தைப் பரப்பின காலம் கி. மு. உசஎ—உoஎ. அதன் பின்னரே அம்மதம் அங்கிருந்து தமிழகத்திற்கு வந்திருத்தல் வேண்டும். ஆதலால், கி. மு. உ-ஆம் நூற்றாண்டிலேயே திருவள்ளுவர் அதைக் கண்டித்திருக்கக் கூடும்.

(சு) திருவள்ளுவர் தம் நூலின் முதலதிகாரமாகிய முதற்பகவன் வழுத்தில், 'மலர்மிசை யேகினன்' (பூமேல் நடந்தான்). 'பொறி வாயி லைந்தவித்தான்' என்னும் அருகன் பெயர்களைக் கடவுட்கு ஆண்டிருத்தல்.

ஆருகதம் என்னும் சமணமதம் புத்தமதத்திற்குப் பின்னரே தமிழகத்துட் புகுந்தது.

மேற்காட்டிய இருவகைச் சான்றுகளால், திருவள்ளுவர் காலம் கி. மு. உ-ஆம் நூற்றாண்டென்று கொள்வதே பொருத்தமாம் எனினும், ஒ-ஆம் நூற்றாண்டு வரை கொள்ளவும் இடமுண்டாம்.

பிறந்தவூர் : இது இன்னதென்று தெரியவில்லை.

பெற்றோர் : இவர் இன்னாரென்று தெரியவில்லை. திருவள்ளுவர் யாளிதத்தன் என்னும் பிராமணனுக்கும் ஒரு சண்டாளப் பெண்ணிற்கும் பிறந்தாரென்று கி. பி. க-ஆம் நூற்றாண்டினதாகச் சொல்லப்படும் ஞானூயிர்தமும், பகவன் என்னும் பிராமணனுக்கும் ஆதி யென்னும் புலைச்சிக்கும் பிறந்தவரென்று பிற்காலத்துக் கபிலர் அகவலும், கூறுவன கொள்ளத்தகாத கட்டுக் கதைகளாகும்.

திருக்குறள் உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற பொது அறநூல் என்பதைக்கண்டு பொறாது மனம் புழுங்கிய சில பிராமணர், முதற் குறளிலுள்ள ஆதிபகவன் என்னும் தொடரைப் பயன்படுத்திக் கொண்டு திருவள்ளுவரை ஒரு பிராமணனுக்குப் பிறந்தவராகவும் அதேசமையத்தில் ஓர் இழிகுலத்தாராகவுங் காட்டல் வேண்டிக் கட்டிய கதைகளே மேற்கூறியவை என்க.

முதன்முதற் கடவுளைக் குறித்த பகவன் என்னும் சொல் பிற்காலத்திற் பெருந்தேவர்க்கும் சிறு தெய்வங்கட்கும் முனிவர்க்கும் பிராமணர்க்கும் வழங்கப்பட்டுத் தன் முதற் பொருள் குன்றியமையால் அதை நிறைவுபடுத்தற்கு ஆதி என்னும் அடை கொடுக்க வேண்டிய தாயிற்று. இதை ஆதிசங்கராச்சாரியார் என்பது போலக் கொள்க. முதற் சங்கராச்சாரியார் ஆதியென்னும் புலைச்சியை மணந்தவரல்லர்.

ஆதிபகவன் என்பது, ஆதியாகிய பகவன் என்றுவது ஆதிப்பக வன் என்றுவது விரியும்.

யாளிதத்தனின் மனைவி, அவனுல் முன்பு வெட்டுண்டு கிணற் றிலே தள்ளப்பட்ட ஓர் அறிவில்லாத சண்டாளப் பெண் என்றும், பின்பு ஒரு பிராமணன் அவளை எடுத்துக்கொண்டுபோய் உத்தர தேசத்தில் வளர்த்து அவளை மீண்டும் யாளிதத்தனுக்கே பிராமண மனைவியாகக் கொடுத்தானென்றும், ஞானூயிர்தவுரை கூறும். கபிலர் அகவலோ, பகவன் மனைவியாகிய ஆதி யென்னும் புலைச்சி கருவூர் மாநகரத்தாள் என்று குறிக்க, அதன் உரையான கதை, அவளும் அவனுல் முன்பு வெட்டுண்டாளென்று குறிப்பினும், பலநாட்பின்னர் அவளை அவன் கருவூர்ச் சத்திரத்தில் ஓரிரவிற்கண்டு அடையாளந்

தெரியாமல் அவளைத் தானே மணவியாகக் கொண்டான் என்று கூறும். இவ்வேறுபாடே இவற்றின் கட்டுத்தன்மையைக் காட்டுதல் காண்க.

உடன்பிறந்தார்: இவருக்கு உடன் பிறந்தார் இருந்ததாகத் தெரியவில்லை.

யாளிதத்தனின் மனைவி பிராமணத்தியாயிருந்து பிள்ளைகளைப் பெற்றுளென்று ஞானமிர்தவுரையும், ஆதியென்னும் புலைச்சி மறு நாட்பகலில் அடையாளங்கண்டுபிடிக்கப்பட்டபின், பிறக்கும் பிள்ளை களையெல்லாம் உடனுடன் விட்டுவிட்டு வரவேண்டுமென்னும் நிலைப் பாடு பற்றியே நிலையான மனைவியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டா ளென்று கபிலரகவல் பற்றிய கதையும் வேறுபட்டுக் கூறினும், பிறந்த பிள்ளைகள் வள்ளுவருள்ளிட்ட கபிலர் முதலிய எழுவர் என்பதில் மட்டும் ஒன்றுபடுகின்றன.

"கபில ரதிகமான் காண்குறவர் பாவை
முகிலனைய கூந்தன் முறுவை—நிகரில்லா
வள்ளுவ ரௌவை வயலூற்றுக் காட்டிலுப்பை
யெள்ளி லெழுவ ரிவர்."

என்பது ஞானமிர்தவுரை யடிக்குறிப்பு.

"யாளி—கூவற் றூண்டு மாதப் புலைச்சி
காதற் காசனி யாகி மேதினி
யின்னிசை எழுவர்ப் பயந்தோ ளீண்டே"
என்பதே ஞானமிர்த மூலம்.

"அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினி லன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே
என்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனில்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்
... ...
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணு ரகத்தில் உப்பை வளர்ந்தனள்
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியில்
சான்று ரகந்தனில் உறுவை வளர்ந்தனள்
நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாணரகத்தில் ஔவை வளர்ந்தனள்

குறவர் கோமான் கொய்திகழ் புனஞ்சூழ்
வண்மகிழ்ச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்
தொண்டை மண்டலத்தில் வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்'*

என்பது கபிலர் அகவல் (ஙஙூ—ஙஙங).

இதன் புரைமையையும் பொருந்தாமையையும் அறிஞர் அறிந்து கொள்க.

மணவியார் : திருவள்ளுவர் மணவியார் வாசுகி யென்னும் பெயர் கொண்ட கற்பரசியார் என்றும், மார்க்க சகாயர் என்னும் வேளாள ரின் மகளார் என்றும், அவ்வேளாளர் செய்த பயிர்பச்சைகளைத் தாக்கிய நோயைத் திருவள்ளுவர் நீக்கியதால் அவர் தம் மகட்கொ டையைப் பெற்றரென்றும், அவ்வம்மையாரை மணக்குமுன்பே அவர் செய்த ஓர் இறும்பூதுச் செயலால் அவர்கற்பைத் திருவள்ளுவர் கண்டாரென்றும், நீண்ட கால வரலாறு வழங்கிவருகின்றது. இதில் நம்பத்தகாதது ஒன்றுமில்லை. இறும்பூதுச் செயல் கற்பினாலும் நிகழலாம்; இறைவன் அருளிய ஈவினாலும் நிகழலாம்; இன்றும் சோழநாட்டு மருதூரிலுள்ள நெசவுத்தொழில் செய்யும் தெய்வயாண யம்மையார் பற்பல இறும்பூதுகள் செய்துவருவதாக, புலவர் மறைத்திருநாவுக்கரசர் எழுதிய மறைமலையடிகள் வரலாற்றில் வரையப்பெற்றிருத்தல் காண்க.

நல்கூர்வேள்வியார் என்னும் புலவர் பெயரிலுள்ள திருவள்ளுவ மாலைப்பாவில் மாதானுபங்கி யென்றிருக்குஞ்சொல், தாய்போலொழுகு பவள் என்று பொருள்படலாமேயன்றி, வள்ளுவரின் மணவியார் பேராயிருந்திருக்க முடியாது.

மக்கள் : திருவள்ளுவர்க்கு மக்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

தொழில் : திருவள்ளுவர் தம் நூலியற்றுமுன் பாண்டியனின் முரசறை விளம்பர அதிகாரியாய் இருந்திருக்கலாம். பல்துறைப் பன்னூல்களைக் கற்கவும் அரசியல் வினைகளை நெருங்கியறியவும் அது மிகுந்த வாய்ப்பளித்திருக்கும். அவர் நூல் ஆரியத்தை வன்மையாகக் கண்டிப்பதால், அது இயற்றப்பெற்றபின் பிராமணர் கிளர்ச்சியாலும்

அரண்மனைப் பிராமணப் பூசாரியின் தூண்டுதலாலும் அவர் தம் பதவியை இழந்திருக்கவேண்டும்.

அதன்பின், அவர் நெடுந்தொலைவிலுள்ள மயிலை சென்று நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கலாம். அல்லாக்கால் ஏலேலசிங்கன் தொடர்பிற்கும், பட்டப்பகலில் நெசவுக்குழலைத்தேட வாசுகியம்மையார் தம் கணவர் சொற்படி விளக்குக்கொண்டுவந்தார் என்னும் கதைக்கும், இடமில்லை.

வாழ்ந்த இடம்: திருவள்ளுவர் முன்பு மதுரையிலும் பின்பு மயிலையிலும் வாழ்ந்ததாகத் தெரிகின்றது.

அவர் பாண்டி நாட்டில் நீண்டகாலம் வாழ்ந்திராவிடின், ஊருணி, பைய, வாழ்க்கைத்துணை என்னுஞ் சொற்களை ஆண்டிருக்கவும் அண்மையிலுள்ள சேரநாடு சென்று அக்காலத்து நம்பூதிரிப் பிராமணக் கன்னிகையர் சவச்சடங்கையறிந்து,

> ''பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
> லேதில் பிணந்தழீஇ யற்று.'' (கூகூ)

என்னும் உவமையை அமைத்திருக்கவும் முடியாது.

> ''இப்பக்க—மாதாரு பங்கி மறுவில் புலச்செந்நாப்
> போதார் புனற்கூடற் கச்சு.''

என்பதும் ஒருவகையில் திருவள்ளுவரின் மதுரை வாழ்க்கையை உணர்த்தும்.

சமயம்: ஆரியர் வருமுன்னரே, தமிழர் சமயத்துறையில் தத்தம் அறிவு நிலைக்கேற்ப, சிறு தெய்வ வணக்கத்தாரும் பெருந்தேவ வழிபாட்டாரும் கடவுள் மதத்தாரும் ஆக முந்நிலைப்பட்டிருந்தனர்.

இம்மைப்பயனையே அளிப்பனவாகக் கருதப்பெறும் இடைத் தெய்வங்களும் பூதத்தெய்வங்களும் நடுகல்தெய்வங்களும் சிறு தெய்வங்களாம். இம்மையில் மழையையும் மறுமையில் விண்ணுலக வின்பத்தையும் அளிப்பவனைக் கருதப்பெற்ற வேந்தன் பெருந்தேவனும். இம்மையில் இவ்வுலக இன்பத்தோடு மறுமையில் பிறவி நீக்கப்பேரின்பவீட்டையும் அருள்பவனைக் கருதப்பெற்ற இறைவன் எல்லாவற்றையுங் கடந்துநிற்கும் கடவுளாம். முதற்கண் சிறுதெய்வ வணக்கமாகவிருந்து பின்பு பெருந்தேவ வழிபாடாகவுயர்ந்த சேயியமும் மாலியமும் இறுதியில் முறையே சிவனியம் திருமாலியம் என்னும், வீடுபேற்று மதங்களாக வளர்ந்துவிட்டன. ஆயின், கடவுள் மதத்தார் கடவுள் என்னுஞ் சொற்கேற்ப அவ்விரண்டிற்கும் பொதுவாயிருக்க வேண்டியதாயிற்று.

''அங்கிங்கெனுதபடி யெங்கும் பிரகாசமாய்'', ''பண்ணேனுனக் கான பூசை'' என்னும் தாயுமானவர் பாட்டுக்களும், ''உளியிட்ட கல்லியு மொப்பிட்ட சாந்தையும்,'' ''சொல்லிலும் சொல்லின் முடி விலும்,'' ''எட்டுத்திசையும் பதினெறு கோணமும்'' என்னும் பட்டினத்தார் பாட்டுக்களும் கடவுளியல்பைத் தெளிவாகக் காட்டும்.

சிவனியமும் திருமாலியமும் முறையே சிவன் என்னும் பெயரா லும் திருமால் என்னும் பெயராலும் கடவுளையே வணங்கும் வீடு பேற்று மதங்களாம். ஆதலால் கிறித்தவமும் இசலாமும் போலக் கொள்கையால் வேறுபடினும் தெய்வத்தால் ஒன்றும். எனினும், உருவ வணக்கங் கொள்வதால் வீடுபேற்று மதங்களேயன்றிக் கடவுள் மதமாகா.

கடவுட்கொள்கையும் கோயில் அல்லது உருவவழிபாடுமில்லாத ஆரியர், சிவனியம், திருமாலியம் என்னும் இரு தமிழ மதங்களையும் ஆரியப்படுத்தற்கும், தம்மினு முயர்ந்த தமிழரை அடிமைப்படுத்தற் கும் கடவுள் முத்தொழிலோன் என்னுங் கொள்கையைப் பயன் படுத்திக்கொண்டு, பிரமன் என்னும் ஒரு தெய்வத்தைப் புதிதாகப் படைத்து, அப்பிரமன் படைப்போனென்றும் திருமால் காப்போ னென்றும் சிவன் அழிப்போனென்றும் முத்திருமேனிக் கொள்கை யைத் தோற்றுவித்துவிட்டனர்.

சிவனையும் திருமாலையும் சிவனியரும் திருமாலியரும் முத்தொழில் இறைவனென்றே கொள்வதாலும், முத்திருமேனியர்க்கு முதல்வனெ ருவன் வேண்டியிருப்பதினாலும், தமிழ அறிஞரும் கடவுண்மதத்தாரும் முத்திருமேனிக் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை.

கடவுள் மதமாவது, காலமும் இடமும்போல முதலும் முடிவும் உருவமும் நிறமுமின்றி, இயல்பாகவே எங்கும் நிறைந்தவனாகவும், எல்லாம் வல்லவனாகவும், எல்லாம் அறிந்தவனாகவும், எல்லாம் உடையவனாகவும், முற்றின்பனாகவும், முழுத்தூயனாகவும், எல்லை யில்லா அருளனாகவும், எல்லாவுலகங்களையும் படைத்துக் காத்தழிப் பவனாகவு மிருந்து ஒப்புயர்வற்று மனமொழி கடந்த கடவுளை, உள்ளத்தில் எங்கும் என்றும் தொழுது, எல்லாவுயிர்களிடத்தும் அன்பும் அருளும் பூண்டொழுகுதலேயாம். திருவள்ளுவர் சமயமும் அதுவே.

இதனாலேயே அவர் எச்சமயத்தையுந் தழுவாது எல்லாச் சமயங்கட்கும் பொதுவாகக் கூறியதும், எல்லாச் சமயங்களும் கூறும். இறைவன் பெயர்களையும் கடவுட்குப் பொருத்தியதும் என்க.

வேறுநூல் : திருவள்ளுவர் வேறுநூல் செய்ததாகத் தெரிய வில்லை. இவர் பெயரால் வழங்கும் ஒரு சில இவர் பெயரைத் திருட்டுத்தனமாகக் கொண்டனவே.

(அ) திருவள்ளுவர் காலக் குமுகாய (சமுதாய) நிலை

திருவள்ளுவர் காலத்தில் ஆரியம் வேரூன்றிவிட்டது. நிறம் பற்றிய நால்வகை வரணப்பாகுபாடும் புகுத்தப்பட்டுவிட்டது. தமிழ ரெல்லாரும் பிராமணருக்குத் தாழ்ந்தவராயினர். பார்ப்பாரென்று சொல்லப்பட்ட இல்வாழ்க்கைப் பிராமணரும் தம்மை அந்தண ரென்று கூறிக்கொண்டனர். தொழில்பற்றி யேற்பட்ட குல்ங்களும் பிறப்புப் பற்றிப் பெயர்பெறலாயின. புலவருள்ளும் பிராமணர் உயர்ந்தவர் என்னுங் கருத்தெழுந்தது, அறங்களெல்லாம் பொது வாகப் பிராமணர்க்கே செய்யப்பட்டன. தமிழருக்குள் உறவுக்கலப் பும் ஒற்றுமையும் வரவரக் குறைந்துவந்தன. மூவேந்தரும் மன்னர் சிலரும் ஆரியச்சார்பாயிருந்ததினால். பிராமணியத்தைக் கண்டிக்க எவருக்கும் வாயில்லாமற் போயிற்று. அதனாற் புலவரும் அடிமையரா யினர். பிராமணர் தெய்வப் பிறப்பினர் என்னுங்கருத்து தமிழருக்குள் வளர்ந்து வந்தது. அதனால் வடசொற்கள் தமிழில் தாராளமாகக் கலக்கவும் தமிழ்ச்சொற்கள் மறையவும் புதுத் தமிழ்ச் சொற்கள் தோன்றுதிருக்கவும், வழிவகுக்கப்பட்டுவிட்டது.

(சு) திருவள்ளுவர் காலச் சமயநிலை

ஆயிரமாண்டாக ஆரியம் தமிழகத்தில் இருந்துவந்ததினால், சம யத்துறை பெரும்பாலும் ஆரியவண்ணமாக மாறிவிட்டது. அரண்மனை களிலும் கோயில்களிலும் செல்வர் மாளிகைகளிலும், வழிபாடும் சடங்குகளும் பிராமணராற் சமற்கிருதத்திலேயே நடத்தப்பட்டன. அரசர் ஆரியவேள்விகளை வேட்கத் தலைப்பட்டுவிட்டனர். துறவி னால் மட்டும் வீடுபேறு கூடுமென்றும், அத்துறவு பிராமணனுக்கே யுரியதென்றும், ஆதன்கள் (ஆன்மாக்கள்) பல அஃறிணைப்பிறப்புப் பிறந்து அதன்பின் உயர்திணைப் பிறப்படைவதுபோல் உயர்திணைப் பிறப்பிலும் பலபிறப்பின்பின்னரே பிராமணனைப் பிறக்கமுடியு மென்றும் இறைவன் என்றும் பிராமண வடிவிலேயே காட்சியளிப்பா னென்றும், ஆரியக்கருத்துக்கள் தமிழருள்ளத்திற் பதிக்கப்பட்டன. தமிழத் தெய்வங்களை ஆரியத் தெய்வங்களாகமாற்றுதற்கும் தமிழரை அடிமைடையராக்குதற்கும் பலபுராணங்கள் இயற்றப்பட்டன. தமிழர் கொண்முடிபு (சித்தாந்த) நூல்களிலும் ஆரியக் கருத்துக் களும் சொற்களும் சேர்க்கப்பட்டன.

இங்ஙனம் ஆரியத்தால் ஏற்பட்ட அவலங்கள் போதாவென்று, புத்தம் சமணம் முதலிய துன்பமதங்களும் உலகாயதம் பூதம் முதலிய சிற்றின்ப மதங்களும், தமிழகத்தை அளவிறந்து அலைக்கழித்தன.

(எ). திருவள்ளுவர் திருக்குறளியற்றிய நோக்கம்

ஆரியத்தாலும் நம்பா (நாத்திக) மதங்களாலும், சிறப்பாக ஆரியத்தால், குமுகாயத்துறையிலும் சமயத்துறையிலும் தமிழகத்திற்கு ஏற்பட்ட எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்பமாக வாழவேண்டுமென்னும் இன்னருள் நோக்கங்கொண்டே, தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் திண்ணிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்க.

"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்."

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று."

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்"

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

"உழுவா ருலகத்திற் காணியஃ தாற்று
தொழுவாரை யெல்லாம் பொறுத்து."

என்பன ஆரியத்தைக் கண்டித்தனவாகும். பிறவற்றைக் கடிந்ததை ஆங்காங்கு நூலுட் காண்க.

(அ). திருக்குறட் சிறப்பு

உலகியல் இனிது நடைபெறுதற்கு இன்றியமையாத நால் நிலை மையும் இல்லறமுந் துறவறமும் அரசியலும் கணவன் மனைவியர் காமவின்பமும் பற்றி, உண்மையாகவும் நடுநிலைமையாகவும் எல்லார்க் கும் ஒப்ப முடிந்த வகையிலும், தலைசிறந்த பாவாலும் சிறந்த சொற் களாலும் இலக்கண வழுவின்றி இருவகை யணிகளுடன், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல் திருக்குறள் ஒன்றே. இருமைக்கும் உதவும் விழுமிய பொருளை அணிமிக்க குறள்வெண்பாவாற் பாடியி ருப்பது, பன்மணிபதித்த ஒளிய வேலைப்பாட்டுப் பொற்கலத்தில் அரசர்க்குரிய அறுசுவையுண்டியைப் படைத்தாற் போலும். குறள் வெண்பாவால் ஆனதினாலும், வீடுபேற்று வழியைக் கூறி மறைத் தன்மை பெற்றதினாலும், திருக்குறள் என அடையடுத்த ஆகு பெயர் பெற்றது.

இருவகை மொழிநடையுட் சிறந்தது செய்யுள். இருவகைச் செய்யுளுட் சிறந்தது பா. நால்வகைப் பாவுட் சிறந்தது வெண்பா.

> ''காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
> பேசும் உலாவிற் பெதும்பை புலி—ஆசு
> வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்
> புலவர்க்கும் வெண்பாப் புலி.'' (தனிப்பாடல்)

ஐவகை வெண்பாவுட் குறுகியது குறள் வெண்பா. பயனில் சொல் பகர்வானைப் பதடியென்னும் திருவள்ளுவர், சொற்சுருக்கம் பற்றிக் குறள் வெண்பாவையே தம் நூற்குத் தெரிந்து கொண்டார்.

திருவள்ளுவரின் பாச்சிறப்பை,

> ''பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
> ஆவிற் கருமுனியா யானைக் கமரரும்பல்
> தேவிற் றிருமால் எனச்சிறந்த தென்பவே
> பாவிற்கு வள்ளுவர்வெண் பா.''

என்னும் திருவள்ளுவ மாலைப் பாவும்; நூற்சிறப்பை,

> ''நிழலருமை வெய்யிலிலே நின்றறிமி னீசன்
> கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழுதமிழ்ச்
> சொல்லருமை நாவிரண்டிற் சோமன் கொடையருமை
> புல்லரிடத் தேயறிமின் போய்.''

(ஔவையார் தனிப்பாடல்)

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ."
(பரிமேலழகருரைச் சிறப்புப் பாயிரம்)

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி." (பழமொழி)

என்பனவும்; புலமைச் சிறப்பை,

"புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லீக்கும் பெயர்மாலீ மற்றும்
கறங்கிருள்மா லீக்கும் பெயர்."

என்னும் திருவள்ளுவமாலைப்பாவும்; கருத்துப் பரப்பை,

"மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து."

என்னும் திருவள்ளுவமாலைப் பாவும்; சுருங்கச் சொல்லலை,

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பா விரி."

என்னும் திருவள்ளுவமாலைப் பாவும்; விளங்கவைத்தலை,

"பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்."

என்னும் திருவள்ளுவ மாலைப் பாவும்; உணர்த்தும்.

இங்ஙனம் திருக்குறள் எல்லா வகையிலும் ஒப்புயர்வற்ற உலகத் தமிழ் நூலாம். அதனால், முப்பொருண்மை பற்றி முப்பால், முப்பால் நூல் என்றும்; ஆசிரியனை நோக்கி வள்ளுவம், வள்ளுவநூல், வள்ளுவப்பயன் என்றும்; உண்மை யுரைத்தல் பற்றிப் பொய்யா மொழி என்றும்; மந்திரத்தன்மைபற்றி வள்ளுவர் வாய்மொழி யென்றும் மறைத்தன்மை பற்றித் தமிழ்மறை, பொதுமறை என்றும், தெய்வத்தன்மை பற்றித் தெய்வநூல் என்றும்;

"வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதலின்றி வழிநனி பயக்குமென்
றேம்பணைக் கிளவியின் வாயுறுத்தல்"

பற்றி வாயுறைவாழ்த்து என்றும்; பெயர் பெற்றுள்ளதென்க.

முதனூன்மை: திருக்குறள் எல்லாவகையிலும் தூய முதனூலாகும். அறம் பொருளின்பம் என்னும் முப்பொருளையும் பற்றித் திருக்குறள் முறையிற் கூறும் வடநூல் ஒன்று மில்லை. நான்முகன் (பிரமன்) முதலில் 'திரிவர்க்கம்' என்னும் பெருநூலைச் செய்தானென்றும், அதை வியாழனும் (பிருகற்பதி) வெள்ளியும் (சுக்கிரன்) சுருக்கி முறையே பார்கற்பத்தியம் சுக்கிரநீதி என்னும் நூல்களை இயற்றினரென்றும், திருவள்ளுவர் 'திரிவர்க்கம்' போல் அறம் பொருளின்பம் பற்றி நூல் செய்ததனாலேயே நாண்முகனின் தோற்றரவு (அவதாரம்) எனக்கருதப் பெற்றாரென்றும், தமிழ்ப் பற்றில்லாத பிராமணத் தமிழ்ப் புலவர் கூறுவர். ஒருவரோ பலரோ கட்டிப் பாடிய திருவள்ளுவமாலையில்,

" நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்
[தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறை "

என்று உக்கிரப்பெருவழுதி பெயரிலுள்ள பாவும்,

"மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
கூன்றா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யன்றா மரைமே லயன்."

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பெயரிலுள்ள பாவும், எல்லா அறநூல்களையும் மறைநூல்களையும் ஆரியவேத வழி நூலாகக் கொள்ளும் பண்டை மரபு பற்றிக் கூறியதைக் கொண்டு, அவர் அங்ஙனங் கூறுகின்றார் போலும்!

மேற்காட்டிய பாப் பகுதிகளில் நான்மறையென்றும் வேதமென்றும் குறித்திருக்கின்றதே யொழிய, திரிவர்க்கமென்று குறிக்கப்படவில்லை. இதற்கு முற்றும் மாறாக,

" தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா வறமுதலா வந்நான்கும்—ஏனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று."

எனவுள்ளது நக்கீரர் பெயரிலுள்ள பாட்டு.

நான்முகன் தேவியாகச் சொல்லப்படும் நாமகள் பெயரிலுள்ள பாட்டு,

> "நாடா முதனூல் மறைநான் முகனுவிற்
> பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
> யெள்ளிய வென்றி யிலங்கிலைவேல் மாறபின்
> வள்ளுவன் வாயதென் வாக்கு."

என்பது. இதிலும் திரிவர்க்கக் குறிப்பில்லை.

மேலும், திருவள்ளுவர் முப்பாலால் நாற்பொருளுங் கூறினரே யன்றி, முதல் முப்பொருளே மட்டும் கூறினரல்லர். மக்களால் இயற்றப் பட்ட முப்பானூல் வடமொழியில் இல்லாததினாலேயே, 'திரிவர்க் கம்' என்பது நான்முகனூல் இயற்றப் பெற்றதென்றும், "ஓடிப்போன முயல் பெரிய முயல்." என்பதற்கொப்ப அது 'மகாசாஸ்திரம்' என் றும், கூறுவாராயினர் என்க.

இனி, கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சாணக்கியரும் அவர் மாணவராகிய காமந்தகரும் எழுதிய பொருள்நூற் கருத்துக்கள் திருக்குறளிற் பயின்று வருவதால், அதன் பொருட் பாலுக்கு வடமொழி 'அருத்த சாத்திரம்' முதனூலென்பர் தமிழ்ப் பகைவரும் போலித்தமிழரும்.

"தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டிய ரென்றிரு போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று பரிமேலழகராலும் பழைமை கூறப்படும் மூவேந்தர்குடிகளும், அவற் றுள்ளும் சிறப்பாகப்

> "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன்" குடி,

வரலாற்றிற் கெட்டாத தொன்றுதொட்டுத் தென்னாட்டையாண்டு வருவதாலும்,

> "ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவற் றுணிவு."
>
> "பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
> தொகுத்தவற்று ளெல்லாந் தலை."
>
> "மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
> யாவுள முன்னிற் பவை."

"பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு மோர்க்குந் துணிவு."

என்று திருக்குறள் பல்துறை நூல்களையுஞ் சுட்டுவதாலும்,

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்." (ககூசஞ)

என்னுந் தொல்காப்பிய நூற்பா கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட அறம்பொருளின்ப வீட்டு நூல்களைக் குறிப்பதாலும்,

"மாரணம் பொருள் என்றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள."

என்று ஒரு பழந்தனிச் செய்யுள் கூறுவதாலும்,

திருவள்ளுவர் வேந்தர்க்கு உள்படுகருமத் தலைவராயிருந்ததாகத் தெரிவதனாலும், அவர் திருக்குறள் இயற்றியதற்கு வடநூற்றுணை எத்துணையும் வேண்டியதாயிருந்ததில்லையென, அவர் நூலை வழிநூலென்பார் கூற்றை மறுக்க.

முழுநிறைவு :

அறம்பொருளின்பம் வீடென்னும் நாற்பொருளையும் பற்றி விளக்கமாகக் கூறுவதனாலும், ஒவ்வோர் அதிகாரத்திலும் அதற்குரிய பொருளைப் பற்றிய எல்லாக் கருத்துக்களையுங் கொண்டிருப்பதனாலும், திருக்குறள் முழுநிறைவான நூலாகும்.

"அகரமுதல" என்று தமிழ் நெடுங்கணக்கின் முதலெழுத்தில் தொடங்கி "முயங்கப் பெறின்" என்று அதன் இறுதியெழுத்தில் முடிந்திருப்பதும், திருக்குறளின் முழுநிறைவைக் காட்டும்.

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்."—திருவள்ளுவமாலை.

உலகப் பொதுமை :

திருக்குறள் தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றி உலக முழுமைக்கும் ஒத்ததென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததே. இதுபற்றியே "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடினார் பாவலர் சுப்பிரமணிய பாரதியாரும்.

வாழ்க்கைத்துறையிலும் ஆட்சித்துறையிலும் மட்டு மன்றிச் சமயத் துறையிலும் பொதுவாயிருப்பதால் பொதுமறை யெனப்பட்டது.

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா வலரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"—திருவள் ளுவமாலை.

காலவரம்பின்மை :

திருக்குறள் இத்துணைக்காலந்தான் அல்லது இன்ன நூற்றாண்டு வரைதான் பயன்படுமென்று எவருஞ் சொல்லுதற்கிடமின்றி, எக்கா லத்திற்கும் ஏற்றதாயிருப்பதும் அதன் ஏற்றங்களுள் ஒன்றும்.

கோவரசும் (Monarchy) குடியரசும் (Democracy) மக்களாட்சி யும் (Republic) கூட்டுடைமையும் (Socialism) நீங்கி உலகெங்கும் பொதுவுடைமை (Communism) வரினும், அதற்கும்,

"பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை."

"பாத்தூண் மீஇ யவனைப் பசியென் னுந்
தீப்பிணி தீண்ட லரிது."

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்."

என்னுங் குறள்கள் இடந்தரும் என்க.

மறையியல் :

திருக்குறள் இம்மைக்குரிய ஒழுக்க வரம்பு கூறும் அறநூலாக மட்டுமன்றி, மறுமையில் உயர் பிறப்போ விண்ணின்பமோ வீட்டின் பமோ பெறுதற்குரிய வழிகாட்டும் மறைநூலாகவுமிருப்பதால், தமிழ் மறை, பொதுமறை, வள்ளுவர் வாய்மொழி, தெய்வநூல் எனப் பெயர் பெற்றுள்ளது.

"இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள் வெண் பா."—திருவள் ளுவமாலை.

இயல்வரையறைச் சிறப்பு :

பொருள்கட்கும் பண்புகட்கும் வினைகட்கும் இயல்வரையறை (Definition) கூறுவதில் திருக்குறள் தலைசிறந்ததாகும்.

எ-டு:

''அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.''

''வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.''

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.''

நவில்தொறும் நயமுடைமை :

இதுவரை பகுதிக்கும் முழுமைக்கும் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் திருக்குறட்குத் தோன்றியுள்ள உரைகள் ஏறத்தாழ நூறும், அது மொழிபெயர்க்கப் பெற்ற மொழிகள் இருபதும், ஆகும். ஆயினும், இன்னும் அச்சுரங்கத்தினின்று கருத்துமணிகள் தோண்டத் தோண்ட மேன்மேலும் வந்து கொண்டேயிருக்கின்றன.

எ-டு :

''நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.''

நாடு என்ப - சிறந்த நாடென்று சொல்லப்படுவன; நாடா வளத்தன—பிறநாடுகளின் உதவியை வேண்டாது தமக்கு வேண்டிய பொருள் வளங்களையெல்லாம் தம்மகத்தே கொண்டனவாகும்; நாட வளந்தரு நாடு—பிற நாட்டுதவியை நாடுமாறு குன்றிய வளங் கொண்ட நாடுகள்; நாடு அல்ல—சிறந்த நாடாகா.

''மணற்கேணி மக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணைச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணைக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.''—திருவள்ளுவமாலை.

நடுவு நிலைமை :

எல்லாரும் வாழவேண்டுமென்பதும், குற்றத்திற்கேற்ப எல்லாரையும் ஒப்பத் தண்டிக்க வேண்டுமென்பதும், திருக்குறளின் நடுநிலைக் கொள்கைகளாம். இவை ஆரியக் கொள்கைகட்கு நேர் மாறுனவை.

''வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொரு குலத்திற் கொருநீதி.''

என்று மனோன்மணீய ஆசிரியர் கூறுதல் காண்க.

உயர்நிலையறம் :

எல்லா அறநூல்களுள்ளும் உயர்ந்த ஒழுக்க வரம்புகளைக் கூறுவது திருக்குறளே.

எ-டு:

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்."

"இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்."

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்."

"ஈன்ருள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்ரோர் பழிக்கும் வினை."

"இறந்த மூப்பினராய இருமுது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்து மெல்லைக்கண், தீயனபலவுஞ் செய்தா யினும் புறந்தருக." என்பது ஆரிய அறநூல் நெறியீடு.

நடைமுறையறிவு :

திருவள்ளுவர் மக்கட்கு உயர்ந்த ஒழுக்கத்தை வகுத்தாரேனும், உலகியலறிந்து அதன் ஒழுங்கான நடப்பிற்குத் தோதாகவே சில விலக்குகளையும் அமைத்திருக்கின்ருர்.

அருளுடைமை, புலான்மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னுசெய்யாமை, கொல்லாமை என்னும் அறவினைகளை அரசியலில் முற்றக் கடைப்பிடிப்பது அரிதாதலின், அவற்றை இல்லறவியலிற் கூறுது துறவறவியலிலேயே கூறியுள்ளார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்று சொன்ன வள்ளுவரே, "புலத்தலிற் புத்தேளுண்டோ" என்றும், "ஊடுதல் காமத்திற் கின்பம்" என்றும் உடன்பட்டுள்ளார்.

உண்மைக்கூற்று :

இறைவனே நால்வகை வருணத்தாரையும், முறையே தன் முகத்தினின்றும் மார்பினின்றும் தொடையினின்றும் பாதத்தினின்றும் படைத்தானென்றும், அவருட் பிராமணனே உயர்ந்தவனென்றும், மற்ற மூவரும் அவனுக்குத் தாழ்ந்தவரென்றும் அவனுக்குத் தொண்டு செய்யவே படைக்கப்பட்டவரென்றும், ஆரிய நூல்கள் துணிந்து பொய்யுரைப்பது போல, திருக்குறள் ஓரிடத்தும் கட்புல

ஞன உண்மைகளைத் திரித்துக் கூறுவதில்லை. எங்கேனும் ஓரிடத்தில் உயர்வு நவிற்சி அளவிறந்திருப்பினும், அது அணிநலமுழுவியதும் உண்மை எல்லாராலும் அறியப்படத்தக்கதுமாகவே யிருக்கும்.

எ-டு :

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்."

"பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே"—திருவள்ளுவமாலை.

அதிகாரவொழுங்கு :

நூன் முழுதும் ஈரடி அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருப்பதும், ஒவ்வொன்றும் பப்பத்துக் குறள் கொண்டிருப்பதும், ஒவ்வோரியலி லும் அதிகாரங்கள் ஒன்றேடொன்று கோவையாகத் தொடர்பு கொண்டிருப்பதும், பிறநூல்களிற் காணற்கரிய ஒழுங்காகும்.

சொற்பொருள் தூய்மை :

அக்காலத்தில் மொழியாராய்ச்சி யின்மையாலும், வடசொற்கள் ஒவ்வொன்றுகப் புகுத்தப்பட்டமையாலும், தமிழருட் பெரும்புலவர்க் கும் தென்சொல் வடசொல் வேறுபாடு தெரியாதிருந்தது. அதனல் திருக்குறளிலும் சில வடசொற்கள் புகுந்து விட்டன. அவை அந்தம், அமரர், அவி, ஆகுலம், ஆசாரம், ஆதி, இந்திரன், கணம் (க்ஷணம்), கவரி, காரணம், சலம் (வஞ்சனை), நாமம் (பெயர்), பாக்கியம், பாவம், பாவி, வித்தகர் என்னும் பதினேழ், ஆரிய வெறியர் கூறுவது போல் ஐம்பதல்ல.

அப்பதினேழனுள்ளும், அமரர், காரணம், பாக்கியம், வித்தகர் என்னும் நான்கும் தமிழ் வேரினவே.

அல்—அ. மடி—மரி—மரர்.

காரணம்—காரணம் (வ.) கரு + அணம் = காரணம் = செய்கை, செய்கைக் கருவி. கருத்தல் செய்தல். இது ஒரு வழக்கற்றவினை.

பகு—பக்கு—பாக்கு = பகுதி. பாக்கு—பாக்கியம் = நற்பகுதி, நற்பால், நற்பேறு.

விழித்தல் = கண்திறத்தல், பார்த்தல், அறிதல். விழி = அறிவு. விழி—விடி—விதி—வித் (வ.)—வித்தக. கவரி என்பது சமரி என்னும் வடநாட்டுச் சொல்லின் திரிபு.

அதி என்பது அதை என்னும் சொல்லிற்கினமான வழக்கற்ற தமிழ் விகீனச்சொல். ஆயம் என்னுஞ் சொல்லின் முதனிகீலயான ஆ என்பது வா என்பதன் திரிபு.

குணம், நிச்சம் என்னும் இரண்டும் தென்சொல்லே. கொள்ளுதல் = கொண்டிருத்தல், உடையனுயிருத்தல். கொள்—கொள்கை = இயல்பு. கோள்—கோள் = தன்மை. கொள்—கொண்—(கொணம்)—குணம் = கொண்டதன்மை, தன்மை.

இச்சொற்கு வடவர் காட்டும் மூலம் க்ரஹ் (பற்று) என்பதே.
நில்—நிற்றல் = நிகீலப்பு.
"குணபத்திரன்ருள் நிற்றலும் வணங்கி" (சூடா : எ: எசு).
நிற்றல்—நிச்சல். ஒ. நோ: முறம்—முற்றில்—முச்சில்.
"நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய" (திவ். திருவாய், (க: கூ: கக)

நிச்சல்—நித்தல். "நித்தல் விழாவணி" (சிலப். உரைபெறு கட்டுரை). நில்—நிற்றம். ஒ.நோ: வெல்—வெற்றம்.

நிற்றம்—நிச்சம்—நித்தம்—நித்ய(வ.)
இன்னும் இவற்றின் விளக்கத்தை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலுட் கண்டுகொள்க.

திருக்குறளிற் சொல்லப்பட்டுள்ள பொருள்களெல்லாம் தூய தமிழ்ச் செய்திகளே. ஆரியத்தைக் கண்டித்தற்கென்றே நூலியற்றிய வர் எங்ஙனம் ஆரியச் செய்திகளைத் தழுவ முடியும்? இயன்றவிட மெல்லாம் வலிந்தும் நலிந்தும் ஆரிய மூலங்காட்டும் பரிமேலழகரும்,

"இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்"

என்னுங் குறட் சிறப்புரையில், "இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிகீலயின்மையையும் மானத்தினது நிகீலயுடைமையையுந் தூக்கி அவை செய்யற்க வென்பதாம்." என்று வரைந்திருத்தல் காண்க.

செய்யுட்சிறப்பு:

திருக்குறள்போற் சூறள்வெண்பாவிற்குச் சிறந்தநூல் முன்னுமில்கீ; பின்னுமில்கீ. ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு வகையில் ஒளிவிடும் மணிபோல்வதாம்.

எ-டு:

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு."

என்பன இன்னோசை யுள்ளன.

"இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்."

"உழுவா ருலகத்திற் காணி யாஞ்சாற்று
தெழுவாரை யெல்லாம் பொறுத்து."

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்."

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள."

என்பன பொருட் சிறப்புள்ளன.

"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது."

என்பது சொற்சுருக்க முள்ளது.

"தகலயி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை." (உவமை)

"வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு." (இடி)

"உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறிது
மிக்கற்றல் நீள விடல்." (இடி)

"நெடுநீர் மறவி மடியுயில் நான்குங்
கெடுநீரார் காமக் கலன்." (உருவகம்)

"நுனிக்கொம்ப ரேறினு ரஞ்சிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்." (பிறிதுமொழிதல்)

"தீயினுற் சுட்டபு ணுள்ளாறும் ஆருதே
நாவினுற் சுட்ட வடு." (வேற்றுமை)

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்." (வஞ்சகப்புகழ்ச்சி)

"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்." (முரண்)

"நெருநற் றுளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு." (எதிர்ப்பொருள்)

"காணுதற் காட்டுவான் தான்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு."
(சொற்பொருட் பின்வருநிலை)

என்பன பல்வேறு அணியுடையன.

கூ. நூல்வகை :

கடைக்கழகச் செய்யுட்கள் அல்லது நூல்கள் என்று முதலில் வழங்கியவை பத்துப் பாட்டும் எட்டுத்தொகையுமே. திருவள்ளுவர் கழகப்புலவரன்மையாலும், அவர் நூல் கழகத்திலுள்ள பிராமணப் புலவரால் ஒப்புக் கொள்ளப் பெருமையால் அரங்கேறுதிருந்ததினாலும், அது கழக நூலும் கழக மருவியநூலுமல்லாது தனியாகவே யிருந்து வந்தது. பிற்காலத்திற் கடைக்கழகங் கலைக்கப்பட்டபின், சமணத் தமிழ்க் கழகத்தைச் சேர்ந்த அறநூலாசிரியர் சிலர் தம் நூல்கட்குக் கடைக்கழக நூல் நிலைமை யூட்டல் வேண்டி, கழகக் காலத்தனவும் பிற்காலத்தனவுமான பதினெண் நூல்களை ஒரு தொகுதியாக்கி, அவற்றைப் பதினெண் கீழ்க்கணக்கென்றும் பத்துப் பாட்டையும் எட்டுத் தொகையையும் பதினெண் மேற்கணக்கென்றும் வழங்கினதாகத் தெரிகின்றது.

திருக்குறள் கழக நூலன்மையாலும், அதற்கு நால் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கார்நாற்பது, களவழிநாற்பது, இன்னாநாற்பது, இனியவை நாற்பது என்னும் நான்கே கழகக்காலத்தனவாதலாலும், ஏனையவெல்லாம் வச்சிரநந்தி ரு-ஆம் நூற்றாண்டில் மதுரையில் சமணத் தமிழ்க்கழகம் நிறுவிய பின்னரே எழுந்தவையாதலாலும், அவற்றுள் ஆசாரக்கோவை திருக்குறட்கு நேர்மாறாக வடசொல்லும் ஆரியக்கொள்கையும் மிகுந்திருப்பதுடன், இழிதகு நிலையில் தமிழரைப் பிராமணர்க்கு அடிமைப் படுத்தியிருப்பதாலும், பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுதிமுறை மிகத்தவறானதென்றும், திருக்குறளை அதிற் சேர்த்தது அதினும் மிகத் தவறானதென்றும் அறிந்துகொள்க.

திருக்குறளைக் கடைக்கழகக் காலத்து அம்மை வனப்பு நூலென்று கொள்வதே தக்கதாம்.

கo. பாயிரவிளக்கம்

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே."

"மாடக்குச் சித்திரமும் மாநர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல்—நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது."

"பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும்."

பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைப்படும். இலக்கண நூற்கு இவ்விரண்டும் வேண்டும்; இலக்கிய நூற்குச் சிறப்பொன்றே போதும். அச்சிறப்பும், பிறர் ஆசிரியனையும் நூலையும் சிறப்பித்துக் கூறுவதும் ஆசிரியன் நூற்பொருளைச் சுருக்கிக் கூறுவதும் என இரு வகையாம். ஆசிரியன் கூறுவது தற்சிறப்புப்பாயிரம் எனப்படும். அது கடவுள் வழுத்தொடு கூடியும் கூடாதும் இருக்கும்.

மக்களெல்லாரும் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ வேண்டுமென்பதே, திருவள்ளுவர் திருக்குறளியற்றியதன் நோக்கம். இல்லறத்தில் இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றவாறு எங்ஙனம் ஒழுக வேண்டுமென்பது இல்லறவியலிலும், இறந்தபின் வீடு பெறுவதற்கு எவ்வெவ்வறங்களையும் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென் பது துறவறவியலிலும், எல்லாரும் தத்தம் தொழிலைச் செய்து பொரு ளீட்டி வாழ்வதற்கு அரசன் எங்ஙனம் பாதுகாப்பளிக்க வேண்டு மென்பது பொருட்பாலிலும், கணவனும் மனைவியும் காமவின்பத்தை எங்ஙனம் நுகரவேண்டுமென்பது இன்பத்துப் பாலிலும், கூறப்பட் டுள்ளன.

இங்ஙனம் மக்களெல்லாரும் இடையூறின்றி இனிது வாழ்தற்கு, முதற்படியாக வேண்டிய ஏதுக்கள் நான்கெனத் திருவள்ளுவர் கண் டார். அவை கடவுள்வழிபாடு, மழைபெயல், துறவியர்உறைவு, அறவொழுக்கம் என்பன. இவற்றையே ஆதிபகவன் வழுத்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல் என்னும் பாயிர வதிகாரங்கள் நான்கும் எடுத்தோதுகின்றன. ஆதலால், திருக்குறட்குப் பாயிரந் தேவையில்லை யென்பதும், அது இடைச் செருகலென்பதும், ஆராய்ச்சியில்லார் கூற்றேயென அறிக.

பாயிரம் என்னும் சொல், முதற்கண் போர்மறவர் போர்க் களத்திற் பகைவரை விளித்துக்கூறும் நெடுமொழியென்னும் மறவியல் முகவுரையைக் குறித்துப் பின்பு நூன் முகவுரையைக் குறித்தது.

பயிர்தல்=(க) ஊரி விலங்கு பறவைகள் ஒன்றையொன்று அழைத்தல். "செங்காற் பல்லி தன்றுணை பயிரும்" (குறுந். கசு).

"கடுவன்...மந்தியைக் கையிடூஉப் பயிரும்" (புறம். கநஅ).

"புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்" (குறுந். எக.)

(உ) மக்களை அழைத்தல்.

"நாட்டிறை பயிருங்காலை முரசம்" (சிலப். உசு:இஉ)

பயிர்—பயிரம்—பாயிரம் = அழைப்பு; போருக்கழைப்பு, போருக் கழைக்கும் முகவுரை, முகவுரை.

ஒ. நோ: அகவுதல் = அழைத்தல். அகவு—ஆகவம் = போர்.

"மறுமனத்த னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த ஞகி யொழுகின்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்." (பழமொழி. உசசு)

பாயிரங் கூறி என்பதற்கு "வீரத்திற்கு வேண்டும் முகவுரைகள் சொல்லி" என்று பழைய வுரையாசிரியர் பொருள் வரைந்திருப்பதை நோக்குக.

ஙக. நூற்பகுப்பு

திருக்குறள், பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையும், இயல் என்னும் எண் சிறு பிரிவுகளையும், அதிகாரம் என்னும் ஙஙங உட்சிறு பிரிவுகளையும் உடையது. ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்துக் குறள்களைக் கொண்டது. ஆக, மொத்தம் ஙஙஙo குறளாம். பாயிரமும் ஊழும் நூல் முழுமைக்கும் பொதுவாம்.

அதிகாரக் கணக்கு

பால்	இயல்	அதிகாரத்தொகை	
அறத்துப்பால்	பாயிரவியல்	(4)	ச
	இல்லறவியல்	(20)	உo
	துறவறவியல்	(13)	ஙஙு
	ஊழியல்	(1)	ங
பொருட்பால்	அரசியல்	(25)	உஇ
	உறுப்பியல்	(45)	சஇ
இன்பத்துப்பால்	களவியல்	(7)	எ
	கற்பியல்	(18)	ஙஅ
	மொத்தம்		ஙஙங

உறுப்பியல் அமைச்சு (அo), நாடு (ச), அரண் (ங), பொருள் (கூழ், ங), படை (உ), நட்பு (ஙஎ), குடி (ஙஙு) என ஏழு பகுதிகளையும் சஇ அதிகாரங்களையும் உடையது. நட்பிற்பகையும் (ஙச) அடங்கியுள்ளது.

"அரசிய லேயைந் தமைச்சிய லீரைந்
துரை நா டரண்பொரு ளொவ்வொன்—றுரைசால்
படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
குடியெழுபான் றொக்கபொருட் கூறு."

என்பது திருவள்ளுவமாலை.

கஉ. பரிமேலழகர் நச்சுக் கருத்துக்கள்

அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

அதுதான் (அறம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறு பாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து.....கூறப்பட்டது. (உரைப்பாயிரம்)

இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யெனவறிக; என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு, அவற்றுள் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையும் கூறவுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமை யாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினரென வுணர்க (கடவுள் வாழ்த்து அதிகார முகவுரை).

தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி 'எழுத்தெல்லா' மென்றார். (க) தத்துவமிருபத்தைந்தினையுந் தெரிதலாவது, ...சாங்கிய நூலுளோதியவாற்றுள் ஆராய்தல் (உஎ.)

ஏனை மூவராவார், ஆசாரியனிடத்தினின்றேதுதலும் விரதங் காத்தலுமாகிய பிரமசரிய மொழுக்கத்தானும், இல்லிலிவிட்டு வனத் தின்கட் டீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யுமொழுக் கத்தானும், முற்றத்துறந்த யோகமொழுக்கத்தானுமென இவர்.(சக)

பிதிரராவார் படைப்புக்காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், 'தென்புலத்தா' ரென்றார். (சஙட)

புதல்வரைப் பெறுதல்—அஃதாவது, இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக விறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள் வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன்

புதல்வரைப் பெறுதலானு மல்லது இறுக்கப் படாமையின், அக்கட னிறுத்தற் பொருட்டு நன்மக்களீப் பெறுதல்.

(மக்கட் பேற்றதிகார முகவுரை)

மக்களென்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது. (சக)

பெண்ணியல்பாற் ருனுக வறியாமையிற் 'கேட்டதா' யெனவுங் கூறினர். (சக)

தீயசொற்களாவன.....வருணத்திற்கு உரியவல்லனவுமாம் (கஈக).

இனி மனு முதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும். (உசஐ)

வேதமும் அறமும் அநாதி. (திசஈ)

பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத் தற்குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும், வேள்வி நட வாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லா தென்பதாயிற்று. (கசஐ)

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளி களது துணிவு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறு கின்றமையின், ஈண்டு விஞ்சத்தாய்மையும் உடன் கூறினர். (சுசஉ)

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்ருர் பிறரும். நகுட னென்பான் இந்திரபதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய, அதனுற் சாப மெய்தி அப்பதம் இடையே இழந்தானென்பதனை 'யுட்கொண்டு இவ்வாறு கூறினர். (அகக)

பெண்பாலாக்கியது வடமொழி முறைமை பற்றி. (சுஉச)

விஞவயத்தாற் பஞ்சபூத பரிணமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதின் பயனனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கு மொத்தலிற் 'பிறப்பொக்கு' மென்றும்.....கூறினர். (கஎஉ)

வடநூலார் அங்கமென்றமையின் 'உறுப்' பென்ருர். (கஙஙஐ)

காமத்துப்பால்—இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊட லென்பனவோவெனின், இவர்

பொருட்பாகுபாட்டினை அறம் பொருளின்பமென வடநூல் வழக்குப் பற்றி யோதுதலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்கணடக்கினு ரென்க. இனி, அவை தம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பு மொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்ருர்.

(காமத்துப்பால் முகவுரை).

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம் பற்றிச் செலவு ஆற்ருமை விதுப்புப் புலவியென நால்வகைத் தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்ருமையுள்ளும், ஆற்ருமை படர்மெலிந்திரங்கன் முதல் நிறையழித லீருயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன் முதற் புணர்ச்சி விதும்ப லீருயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தன் முதல் ஊடலுவகை யீருயவற்றுள்ளுங் கண்டு கொள்க. அஃதேல், வடநூலார் இவற்றுடனே சாபத்தினுலுய நீக்கத்தையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத் தென்ருராலெனின், அஃது அறம்பொரு ளின்ப மென்னும் பயன்களுள் ஒன்று பற்றிய பிரிவன்மையானும், முனிவராலுணையான் ஒருகாலத் தோர்குற்றத் துளதாவதல்லது உலகி யல்பாய் வாராமையானும். ஈண்டொழிக்கப்பட்டதென்க.

(காமத்துப்பால் முடிவுரை).

ஏனைக் கருத்துக்களை ஆங்காங்கு உரையிற் காண்க.

தி ரு க் கு ற ள்

அறத்துப் பால்

பா யி ர ம்

அதிகாரம் க—முதற்பகவன் வழுத்து

அஃதாவது, ஆசிரியன் தான் இயற்றும் நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டும், தன் நூலிற்கு வேண்டிய தெள்ளிய அறிவை அறிவிற்குப் பிறப்பிடமாகிய இறைவனிடத்தினின்று பெறற்பொருட்டும், இறைவனருள் உலக நடப்பிற்கு இன்றியமையாத முதற்காரணமாதலின் அதைத் தேடுதற்கு எல்லா மாந்தரும் எவ்வினையையும் இறைவனைத் தொழுதே தொடங்கல் வேண்டும் என்னும் நெறிமுறையை உலகிற்கு உணர்த்தற் பொருட்டும், இறைவனை வழுத்துதல். வழுத்துதல் போற்றுதல். துதித்தல் என்பது வடசொல்.

சிறுதெய்வ வணக்கம், பெருந்தேவ வணக்கம், கடவுள் வணக்கம் என முறையே ஒன்றினொன்றுயர்ந்த மூவகை வணக்கங்களுள், இது கடவுள் வணக்கம். கடவுள் என்னும் சொல் இம் முதலதிகாரப் பத்துக் குறள்களுள் ஒன்றிலேனும் வாராமையானும், முதற்குறளில் ஆதிபகவன் என்னும் பெயரே குறிக்கப் பெற்றிருத்தலானும், கடவுள் வாழ்த்து இங்கு முதற்பகவன் வழுத்து எனப் பெற்றது.

வாழ்த்து என்னும் சொல் மக்களை வாழ்வித்தலும் இறைவனைப் போற்றுதலும் ஆகிய இருபொருள் தந்துமயங்கற்கிடனுக நிற்றலால், வழுத்து என்னும் சொல்லை அதனின்று திரித்தனர் முன்னை யறிஞர்.

அதிகரித்தது அதிகாரம். இது இலக்கண நூல்களிற் பெரும் பகுதியைக் குறிக்குமேனும், இங்கு உட்சிறுபகுதியைக் குறிக்குமாறு ஆளப்பட்டது.

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இதன் தொடருரை) எழுத்து எல்லாம் அகர முதல-நெடுங்கணக்கில் (அல்லது குறுங்கணக்கில்) உள்ள எழுத்துக்களெல்லாம்

அகரத்தை முதலாக வுடையன; உலகு ஆதிபகவன் முதற்று—அது போல உலகம் முதற்பகவனை முதலாக வுடையது.

இது உவமத்தையும் பொருளையும் இணைக்கும் உவமையுரு பின்மையால் முதன்மை பறறி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத் திற்குரிய அங்காப்பின்றியும் மகரமெய் ஒலிக்கப் பெறுதலால் 'நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களெல்லாம்' என்று உரைக்கப் பட்டது.

பகவன் என்பது பகுத்துக்காப்பவன் அல்லது எல்லாவுயிர் கட்கும் படியளப்பவன் (Dispenser) என்று பொருள்படும் தென் சொல். பகு—பகவு—பகவன். பகு என்னும் வினைமுதல் வட மொழியில் பஜ் (bhaj) என்று திரியும். ஒ. நோ: புகு—புஜ் (bhuj), உகு—யுஜ்.

பகவன் என்னும் சொல் முதற்காலத்திற் கடவுளையே குறித்தது. ஆயின், பிற்காலத்தார் அலகப் பிரமன் விட்டுணு உருத்திரன் என் னும் ஆரிய மத முத்திருமேனியர்க்கும் அருகன் புத்தன் என்னும் பிற மதத் தலைவர்க்கும் வழங்கிவிட்டமையால், கடவுளைக் குறிக்க முதல் என்னும் அடை கொடுக்க வேண்டியதாயிற்று. கடவுள் என்னும் சொல்லும் இங்ஙனமே இழிபடைந்துவிட்டமையால், முதற்கடவுள் என்றும் முழுமுதற்கடவுள் என்றும் அடைகொடுத்துச் சொல்லும் வழக்கை நோக்குக. பகம் (ஆறு) என்னுஞ் சொல்லை மூலமாகக் கொண்டு, பகவன் என்பதற்குச் செல்வம், மறம், புகழ், திரு, ஓதி (ஞானம்), அவாவின்மை என்னும் அறுகுணங்களையுடையவன் என்று பொருள் கூறுவது பொருந்தாது.

இறைவன் கடவுள் தேவன் என்னும் பிற சொற்கள் இருக்கவும் பகவன் என்னுஞ் சொல்லை யாண்டது, அகரம் என்னும் சொற்கு எதுகையாயிருத்தல் நோக்கியே.

ஆதி என்பது வடசொல்; அதாவது வடநாட்டுச்சொல். இதன் விளக்கத்தை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலுட் காண்க.

ஆதிபகவன் என்னுந் தொடர்ச்சொல் தமிழியல்பிற் கேற்ப ஆதிப்பகவன் என்று வலிமிக்கும் இருக்கலாம்.

ஏகாரம் தேற்றம்; ஆதலால் இன்றியமையாததே. இவ்வேகா ரத்தை ஈற்றசையாகக் கொண்டு,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

என்னும் இடைக்காடர் பாராட்டு எங்ஙனம் பொருந்தும் என்று புலவர் ஒருவர் வினவ, அதற்கு இராமவிங்க அடிகள் "முதல் தே எனப் பிரித்தாற் குற்றமென்ன?" என்று எதிர் வினவியதாகச் சொல்லப்படுகின்றது. ஏகாரம் ஈற்றசையுமன்று; அடிகள் விடை மிகைபடக்கூறலாகவும் உவமச் சொல்லிய (வாக்கிய) அமைப்பொடு ஒவ்வாததாகவும் இருத்தலாற் பொருந்துவது மன்று.

அகரம் எல்லா எழுத்துக்கட்கும் முதலாகவும், ஏனையுயிரெழுத்துக்களோடு நுண்ணிதாகக் கலந்தும், எல்லா மெய்யெழுத்துக்களையும் இயக்கியும், நிற்றல் போல்; இறைவனும் உலகிற்கு முந்தியும் உயிருக்குயிராகியும் உயிரற்ற பொருள்களையெல்லாம் இயக்கியும் நிற்பவன் என்னும் உண்மை, இம்முதற்குறளால் உணர்த்தப் பெற்றது.

உலகம் பலவாதலின், உலகு என்பதைப் பால்பகா அஃறிணைப் பெயராகவும் முதற்று என்பதை வகுப்பொருமைக் குறிப்புவினை முற்றாகவும் கொள்ளின், உவமத்தின் பன்மை பொருளிற்கும் ஏற்கும்.

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

(இ-ரை) வால் அறிவன் நல்தாள் தொழார் எனின்—தூய அறிவையுடைய இறைவனின் நல்ல திருவடிகளைத் தொழாதவராயின்; கற்றதனால் ஆய பயன் என்—நூல்களைக் கற்றவர்க்கு அக்கல்வியால் உண்டான பயன் யாதாம்?

அஃறிணை யிருபாற் பொதுவான எவன் என்னும் வினாப்பெயர் என் என்று தொக்கு இங்கு இன்மை குறித்தது. கொல் என்பது அசைநிலை. தூய அறிவாவது இயற்கையாகவும் முழுநிறைவாகவும் ஐயந்திரிபற்றும் இருப்பது. தமிழக மருந்துகள் பெரும்பாலும் தழையுந் தண்டு மாயிருத்தலின், பிறவிப்பிணிக்கு மருந்தாகும் குறிப்புப்பட இறைவன் திருவடிகளை நற்றாள் என்றார். 'தொழாஅர்,' இசை நிறையளபெடை.

கல்வியின் சிறந்த பயன் கடவுளை வழிபட்டுப் பேரின்ப வீடு பெறுவதென்பதே பண்டையறிஞர் கொள்கை.

"ஆண்டவனுக்கு அஞ்சுவதே அறிவின் தொடக்கம்." என்றார் சாலொமோன் ஓதியார் (ஞானியார்.)

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

என்பது பழஞ் செய்யுள்.

"கற்பக் கழிமடம் அஃகும் மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும்—கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறியே
இப்பால் உலகத் திசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்."

என்பது நான்மணிக்கடிகை. (உ)

கடவுளை வணங்காவிடின் கல்வியாற் பயனில்லை என்பது இக் குறட் கருத்து.

உ. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(இ – ரை) மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார் - அடியாரின் உள்ளத்தாமரை மலரின் கண்ணே அவர் நினைந்த மட்டில் விரைந்து சென்றமரும் இறைவனின் மாட்சிமைப்பட்ட அடிகளை அடைந்தவர்; நிலமிசை நீடுவாழ்வார் - எல்லா வுலகிற்கும் மேலான வீட்டுலகின்கண் நிலையாக வாழ்வார்.

மலர் என்னுஞ்சொல் தனித்துநின்று மனத்தைக் குறியாமையாலும், ஏகினான் என்னுஞ் சொல்லாட்சியாலும், மலர்மிசையேகினான் என்பது இயல்பாக இறைவன் பெயராதற்கு ஏற்காமையாலும், 'பூமேல் நடந்தான்' என்னும் அருகன் பெயரையே ஆசிரியர் இறைவனுக்குப் பொருந்துமாறு ஆண்டார் என்பது தெரிகின்றது. "மலர்மிசை நடந்தோன்" என்று இளங்கோவடிகளும் கவுந்தியடிகள் கூற்றுக் கூறுதல் காண்க (சிலப். 10 : 204.). சமணர் தம் பொய்யான சமயத்தை விட்டுவிட்டு மெய்யான கடவுளை வணங்க வேண்டுமென்பது இக்குறளின் உட்குறிப்பு.

அடியாரின் உள்ளத்தாமரை நோக்கி ஏகுவானை ஏகினான் என்று இறந்தகால வாய்பாட்டாற் கூறியது, விரைவு பற்றிய கால வழுவமைதி. அடிசேர்தல் – இடைவிடாது நினைத்து அதற்கேற்ப ஒழுகுதல்.

ச. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(இ-ரை) வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு-விருப்பு வெறுப்பில்லாத இறைவனடியைச் சேர்ந்தவர்க்கு; யாண்டும் இடும்பை இல-எங்கும் எக்காலத்தும் துன்பமில்லை.

விருப்பு வெறுப்பினாலேயே துன்பங்கள் வருவதனாலும், விருப்பு வெறுப்பில்லாத இறைவனை யடைந்தவரும் விருப்பு வெறுப்பற்றவராயிருப்பராதலாலும், இறைவன் இன்ப வடிவினனாகவும் எல்லாம் வல்லவனாகவுமிருப்பதனாலும், அவனடியடைந்தார்க்கு எங்கும் என்றும் எவ்வகைத் துன்பமும் இல்லையென்பது.

ந. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(இ-ரை) இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு - இறைவனின் மெய்யான புகழை விரும்பினரிடத்து; இருள்சேர் இருவினையும் சேரா-மயக்கஞ் செய்யும் நல்வினை தீவினை என்னும் இருவினையும் இல்லாதனவாகும்.

வழிதெரியாத இருள் போலிருத்தலின் அறியாமையை இருளென்றும், நல்வினையும் பிறவிக்கேதுவாமென்பது கொண்முடிபு (சித்தாந்தம்) ஆதலின் இருவினையுஞ் சேராவென்றும் கூறினர். மக்கள் எத்துணைப் பெரியோராயிருப்பினும் அவரின் அறிவாற்றலுங் காலமுங் குறுகிய வரையறைப்பட்டிருப்பதனாலும், அவரை மகிழ்விக்கக் கூறும் புகழுரைகளெல்லாம் உயர்வுநவிற்சியும் இன்மைநவிற்சியுமேயாதலாலும், எல்லாவாற்றலும் என்றும் நிறைந்திருக்கும் இறைவன் புகழே பொருளுள்ள புகழ் எனப்பட்டது. புரிதல் - விரும்பிச் சொல்லுதல். இறைவன் - எங்குந் தங்கியிருப்பவன். இறுத்தல் - தங்குதல். நல்வினை பிறவிக்கேதுவாவது கடவுள் வழுத்தொடு கூடாத போதும் தீவினையொடு கலந்த விடத்துமாம்.

கூ. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ-ரை) பொறிவாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளையும் வழியாகக்கொண்ட ஐவகையாசைகளையும் விட்ட இறைவனது; பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார்-மெய்யான ஒழுக்கநெறியில் ஒழுகினவர்; நீடு வாழ்வார் - வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வார்.

ஊறு, சுவை, காட்சி, மணம், இசை என்பன ஐவகை ஆசைப் புலன்கள். ஊறென்பது உடம்பால் தொட்டின்புறுதல். இறைவன் இயல்பாகவே ஆசையில்லாதவனுதலால், ஐந்தவித்தான் என்னும் பெயரும் சமணரை வயப்படுத்துமாறு சமண நெறியினின்று எடுத் தாண்டதே. ''ஐவரை வென்ரேன்'' என்று இளங்கோவடிகளுங் கூறுதல் காண்க (சிலப். கo : ககஅ). ஒழுக்கநெறி இறைவனுற் சொல்லப்பட்டது அல்லது அவனுக்கு ஏற்றது.

இந்நான்கு குறளாலும், இறைவனே இடைவிடாது நினைப்பாரும் வழுத்துவாரும், அவனெறியொழுகுவாரும் வீடு பெறுவரென்பது கூறப்பட்டது.

ஏ. தனக்குவமை இல்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

(இ - ரை) தனக்கு உவமை இல்லாதான் - ஒருவகையாலும் தனக்கு ஒப்பில்லாத இறைவனுடைய; தாள் சேர்ந்தார்க்கல்லால்- திருவடிகளை யடைந்தார்க்கல்லாமல்; மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தின்கண் நிகழுந்துன்பங்களையும் அவற்றுல் ஏற்படும் கவலை யையும் நீக்குதல் இயலாது.

இம்மைக்கும் மறுமைக்கும் உரிய எல்லாப் பொருள்களையும் நலங்களையும், எல்லார்க்கும் என்றும் வரையாதளிக்கக்கூடிய வள்ளல் இறைவன் ஒருவனேயாதலின், அவனையடைந்தார்க்கல்லது துன்பமும் கவலையும் நீங்காவென்பதாம்

அருமைச் சொல்லிற்குரிய சின்மை இன்மையென்னும் இரு பொருள்களுள், இங்கு வந்துள்ளது இன்மை.

அ. அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(இ - ரை) அறவாழி அந்தணன் — அறக்கடல் வடிவினனும் அழகிய குளிர்ந்த அருளாளனுமாகிய இறைவனது; தாள் சேர்ந்தார்க் கல்லால்-திருவடியாகிய புனையைச் சேர்ந்தார்க்கல்லது; பிற ஆழி நீந்தல் அரிது-அதனெடு சேர்ந்த பிறவாகிய பொருளின்பக் கடல் களைக் கடத்தல் இயலாததாகும்.

எல்லா அறங்களுந் தொக்கதொகுதி கடல்போற் பரந்ததாதலின், இறைவனை அறவாழியென்ருர். பொருளின்பங்களைக் கடலாக வுரு வகித்தமையால், அவற்றெடு தொடர்புள்ள அறவாழி என்பது அறக்

கடலியன்றிப் புத்தனது தரும சக்கரத்தை யுணர்த்தாது, பிறவாழி கடவாமையாவது பொருளின்ப ஆசையுள் மூழ்கித் துன்புறுதல். இறைவனடி சேர்ந்தவர் அத்துன்பத்தினின்று நீங்கி என்றென்றும் பேரின்பத்தில் திளைப்பர் என்பதாம்.

அறம் பொருளின்பத்தை ஆழியென்றுருவகித்து இறைவன் திருவடியைப் புணையென்றுருவகியாது விட்டது, ஒருமருங்குருவகம்.

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ருளே வணங்காத் தலை.

(இ - ரை) எண் குணத்தான் - எண்வகைப்பட்ட குணங்களை யுடைய இறைவனின்; தாளை வணங்காத் தலை-திருவடிகளை வணங்காத தலைகள்; கோளில் பொறியின்-தத்தம் புலன்களைக் கொள்ளாத பொறிகளைப்போல; குணம் இல-பயன் படாதனவாம்.

எண்குணங்களாவன தன்வயத்தம், தூய்மை, இயற்கையறிவு, முற்றறிவு, கட்டின்மை, பேரருள், எல்லாம் வன்மை, வரம்பிலின்பம், என்பன. தாளை வணங்காத் தலையென்று தலையையே விதந்தோதினுமெனினும், வழுத்தாநாவும், புகழ்கேளாச் செவியும் அங்ஙனமே பயனில்லாதனவென்று கொள்க குணமிலவே என்னும் பன்மை விளைகொண்டு முடிதலால், தலை என்பது பன்மை குறித்துவந்த பால் பகாவஃறிணைப் பெயர். இறைவனுக்கு உடம்பில்லாவிடினும், அவன் என்றேனும் ஒருவடிவுகொள்ளின் அதன் அடியும் முடியும் ஒரு நிகரவாகவே தூய்மையாயிருப்பினும், அவனை வணங்கும் மக்களின் பணிவியலை மிகுத்துக்காட்டற்கே, திருவடி தொழுதல் அல்லது வணங்குதல் என்று கூறுவது மரபாகும்.

இறைவன் வழிபாட்டிற்குப் பயன்படுவதே மாந்தன் உடம்பின் தலையாய பயன் என்பது இக்குறட் கருத்து.

கo. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

(இ - ரை) இறைவன் அடி (சேர்ந்தார்) - இறைவன் திருவடியாகிய புணையைச் சேர்ந்தவர்; பிறவிப் பெருங்கடல் நீந்துவர்-பிறவியாகிய பெரியகடலைக் கடப்பர்; சேராதார் நீந்தார்-அப்புணையைச் சேராதவர் அக்கடலைக் கடவாதவராய் அதனுள் அழுந்துவர்.

வீடுபேறுவரை கணக்கில் கழிநெடுங்காலம் விடாது தொடர்ந்து வருவதாகக் கருதப்படுதலின், பிறவியைப் பெருங்கடல் என்றார். பிறவி வாழ்வு எல்லையில்லாது தொடர்ந்துவரும் துன்பம் மிகுந்த நிலை

யற்ற சிற்றின்பமேயாதலால், அதனின்று விடுதலைபெற்று நிலையான தூய பேரின்பந்துய்க்கும் பிறவாவாழ்வைப் பெறும்வழியை இக்குறள் கூறுகின்றது.

சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். பிறவியைப் பெருங்கடலாக உருவகித்து இறைவனடியைப் புணையாக உருவகியாதுவிட்டது ஒரு மருங்குருவகம். புணை யெனினும் கலம் எனினும் ஒக்கும்.

அதி. உ—வான் சிறப்பு

அஃதாவது, இறைவனருட்கு அடுத்தபடியாக, அவன் ஏற்பாட்டின்படி, உலக நடப்பிற்கும் அறம் பொருளின்பப் பேற்றிற்கும் இன்றியமையாத துணைக்காரணமாகிய மழையின் சிறப்பைக் கூறுதல்.

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
ருனமிழ்த மென்றுணரற் பாற்று.

(இ - ரை) வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை வரையறவாய் நின்றுவிடாது தொடர்ந்து பெய்துவர அதனால் உலகம் நடைபெற்று வருதலால்; தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று - அம்மழை உலகிற்கிற்குச் சாவாமருந்து என்று கருதப்பெறுந் தன்மையது.

உலகம் என்பது அதிலுள்ள உயிர்களைக் குறித்தலால் இங்கு இடவாகுபெயர். அமிழ்தம் என்றது சாவா மருந்தாகிய இருவகை யுணவை. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சோறும், நீரும் தொடர்ந்த பசிதகை (தாக) நோய்களால் நேரும் சாவைத் தவிர்த்தலால் இருமருந்து எனப்பெறும்.

" இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன் " (புறம் எ0). நீரும் சோறும் மழையாலேயே பெறப்படுதலால், மழை உலகிற்கு அமிழ்தமாயிற்று. ஆயினும், உயிர்கட்கெல்லாம் பிணிமூப்புச் சாக்காடிருத்தலால், சாவாமை என்பது சாக்காடு வரையுள்ள நிலைமையேயாம். மருந்தினால் நோய் நீங்கினவனைச் சாவினின்று தப்பினான் என்று கூறும் வழக்கைக் காண்க.

அமிழ்தம் என்னும் சொல் சோற்றையும் பாலையுங் குறிக்கும் இருவேறு சொற்களின் திரிபாகும்.

அவிழ்=வெந்து மலர்ந்த சோற்றுப்பருக்கை, சோறு. அவிழ் - அவிழ்து - அவிழ்தம் - அமிழ்தம் = உணவு. " அறுசுவை நால்வகை யமிழ்தம் " (மணி. உஅ : ககசு). அவிழ்து - அமிழ்து - அமுது = சோறு, உணவு, நீர்.

நீரும் உணவாதலால் அமுதெனப் பெற்றது. அமிழ்தம் — அமுதம்=சோறு, நீர்.

மருமம்-(மம்மம்)-அம்மம்=முலை, தாய்ப்பால், குழந்தையுணவு.

பாலும் ஒருவகை யுணவாதலாலும், அம்மம் அமுது என்னும் சொற்களின் ஒருபுடையொப்புமையினாலும், அமுது என்னும் சொல்லும் பாலைக் குறித்தது. அமுது=பால், அமுதம்=பால், அமிழ்து=பால்.

அமுதம் என்னும் தென்சொல் வடமொழியில் அம்ருத என்னும் வடிவுகொள்ளும். அவ்வடிவை அ+ம்ருத என்று பிரித்து, சாவை (மரணத்தை)த் தவிர்ப்பது என்று பொருளுறுத்தி, அதற்கேற்பத் தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த அமிர்தம் என்று கதையுங் கட்டிவிட்டனர் வடமொழியாளர்.

இங்ஙனங்கட்டினும், மீண்டும் அது தென்சொல் திரிபேயாதல் காண்க.

அல் (எதிர்மறை முன்னொட்டு)-அ. ஒ. நோ : நல்-ந. மடி-மரி-ம்ரு (வ.)-ம்ருத, ம்ருத்யு (சாவு).

தேவர் அமுதமுண்டார் என்பது கட்டுக்கதையாதலால், தேவ ரமுதம் என்னும் இல்பொருளை உவமையாகக் கூறுவதால் ஒரு பயனு மில்லையென உணர்க.

கூ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(இ - ரை) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி - உண்பார்க்கு நல்ல வுணவுகளை உண்டாக்கி; துப்பார்க்கு - அவற்றை உண்பவர்க்கு; துப்பாயதும் மழை-தானும் உணவாவது மழையே.

இருதிணை யறுவகை யுயிர்கட்கும் உணவு இன்றியமையாத தெனும், தலைமைபற்றித் துப்பார் என உயர்திணைமேல் வைத்துக் கூறினர். முந்தின குறளில் அமிழ்தம் என ஒன்றைக் கூறியதை, இக்குறளில் நீரும் உணவும் என இருவகையாக வகுத்தார். உணவென்றது உண்பனவும் தின்பனவும் பருகுவனவும் நக்குவனவுமான நால்வகை விளைபொருட்களை, சோறுங் களியுமாகச் சமைக்கப்பெறும் நெல் புல் (கம்பு) முதலியன உண்பன; காய்கறிகள் தின்பன; பாலும் பதனீரும் (தெளிவும்) பருகுவன; தேனும் நெகிழ்நிலைப் பயினும் நக்குவன. மழை உணவுப்பொருளை விளைப்பதொடு தானும் நீராக உண்ணப்படுவது என்று அதன் சிறப்புக் கூறப்பட்டது.

துத்தற்சொல் நான்முறை வந்தது சொற்பொருட் பின்வருநிலை யணி. "துப்பாய துப்பாக்கி" என்பது சொற்பின் வருநிலையணி. துப்பாய தூஉம் என்பது இசைநிறை யளபெடை.

கங. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

(இ-ரை) விண் இன்று பொய்ப்பின்-வேண்டிய காலத்து மழை பெய்யாது நின்றுவிடுமாயின்; விரிநீர் வியன் உலகத்துள்-பரந்த கடலாற் சூழப்பட்ட அகன்ற நிலவுலகத்தின்கண்; பசி நின்று உடற்றும்-பசி நிலைத்துநின்று உயிர்களை வருத்தும்.

ஞாலத்தின் (பூமியின்) முக்காற் பங்கு என்றும் வற்றுக் கடலாயினும் அதனைப் பஞ்சக்காலத்திற் பயனில்லையென்பதை, விரிநீர் என்னும் அடைமொழியாற் குறிப்பாக வுணர்த்தினர். வருத்து தலாவது உணவு விளையாமையால் மீண்டும் மழை பெய்யும்வரை கொல்லுதலும் துன்புறுத்துதலும். பெய்யும் என்று எதிர்பார்க்கப் பட்டது பெய்யாமை பொய்த்தது போலாயிற்று.

கச. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(இ-ரை) புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால்-மழையென்னும் வருவாய் வரவற்றுவிடின்; உழவர் ஏரின் உழார்-உலகத்திற்கு ஆணியாகிய உழவர் தமக்கும் பிறர்க்கும் உணவு விளைவிக்குமாறு ஏரால் உழுதலைச் செய்யார்.

சுழல்காற்று மழையைக் குறிக்கும் புயல் (Cyclone) என்னும் சொல் இங்குப் பொதுப்பொருளில் ஆளப்பட்டது. பசி உயிர்களை வருத்துதற்குக் காரணியங் கூறியவாறு.

உழாஅர் என்பது இசைநிறை யளபெடை. குன்றியக்கால் என்பது குன்றிக்கால் எனக்குறைந்து நின்றது. குன்றுதல் இங்கு இன்மையாதல்.

கரு. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

(இ-ரை) கெடுப்பதூஉம் — பெய்யாதுநின்று பண்பாட்டிலும் தொழிலிலும் மக்களைக் கெடுப்பதும்; கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம்-அங்ஙனங் கெட்டார்க்குத் துணையாகப்பெய்து மூன்பு கெடுத்தது போன்றே பின்பு அவரைத் தூக்கிவிடுவதும்; எல்லாம் மழை-ஆகிய எல்லாம் செய்வது மழையே.

''தனக்குமிஞ்சித் தானம்.'' ஆதலால், வளமில்லாக் காலத்தில் வள்ளன்மை இல்லாதாரின் பண்பாடு கெடுவதும், விளைபொருளும் கருவிப்பொருளும் இல்லாக்காலத்தில் வணிகர் கைத்தொழிலாளர் ஆகியோரின் தொழில் கெடுவதும், இயல்பாதலாலும்; மழையில்லாப் பஞ்சக்காலம் நெடிதுங் குறிதுமாக இடையிடை நேரினும், பின்பு இறைவனருளால் மீண்டும் மழைபெய்து மக்கட்பண்பாடும் தொழிலும் முன்போல் திருந்துவதனாலும்; கெடுப்பதும் எடுப்பதுமாகிய இரு முரண்பட்ட செயலியும் மழை செய்வதாகக் கூறினர். ஆயினும், காலத்திற்கேற்ப மக்கள் நிலைமை மாறும் என்பதும், இடையிடை நிற்பினும் அறுதியாய் நின்றுவிடாது உலகம் அழியும் வரை மழைபெய்துவரும் என்பதும், மழை பெய்யாமைக்கு ஏதேனும் ஒரு காரணியம் இருத்தல்வேண்டும் என்பதும், குறிப்பாக உணர்த்தப் பெறும் உண்மைகளாகும். செல்வமிழந்தவரைக் கெட்டார் என்பது இருவகை வழக்கிலுமுண்டு.

கெடுப்பதூஉம் எடுப்பதூஉம் என்பன இன்னிசையளபெடை. 'மற்று' வினைமாற்றிடைச் சொல். 'ஆங்கு' உவமையுருபு.

கக. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் ருங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(இ - ரை) விசும்பின் துளிவீழின் அல்லால் - வானத்தினின்று மழைத்துளி விழுந்தாலன்றி; மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பு அரிது — பின் அப்பொழுதே பசும்புல் நுனியையும் காண்பது அரிதாகும்.

'மற்று' வினைவு குறித்த பின்னைப்பொரு ளிடைச்சொல். ஆங்கே என்றது தேற்றமும் விரைவும் பற்றிய காலவழுவமைதி. புற்றலை என்பது புன்னிலம் என்றுமாம். ஒரு நாட்குள் முளைக்கும் புல்லும் இல்லையெனின், மற்ற மரஞ்செடி கொடிகளின் இன்மையைச் சொல்லவேண்டுவதில்லை. ஓரறிவுயிர் இல்லையெனின் மற்ற ஐவகை யுயிர்களும் நாளடைவில் இராவென்பதாம். இழிவு சிறப்பும்மை செய்யுளால் தொக்கது.

கள. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(இ-ரை) நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்-மாபெருங்கடலும் தன் இயல்பு குறையும்; எழிலி தடிந்துதான் நல்காதாகிவிடின்-முகில் (மேகம்) அதனைக் குறைத்துப் பின்புதான் அதன்கண் பெய்யாது விடின்.

தன்னியல்பு குறைதலாவது மீன் முதலியன கலியாமையும் முத்து முதலியன விளையாமையும். கடலைக் குறைத்தலென்பது அதில் நீரை முகத்தல். இது பண்டை நம்பிக்கை.

'கடல்குறை படுத்தநீர் கல்குறைபட வெறிந்து" என்று பரி பாடலும் (உ0),

"இலங்க லாழியி னுன்களிற் றீட்டம்போற்
கலங்கு தெண்டிரை மேய்ந்து கனமழை"

என்று சிந்தாமணியும் (கூஉ) கூறுதல் காண்க. முகப்பது முகில். முகந்தபின் மேலெழுவது எழிலி. கடல்நீர் ஆவியாக மாறி மேலெழு வது முகிலாவதால், பண்டை நம்பிக்கையும் ஒருமருங்கு உண்மை யானதே. மழைக்கு மூலமாகிய மாபெரு நீர்நிலைக்கும் மழை வேண்டும் என்று மழையின் சிறப்புக் கூறியவாறு.

உம்மை சிறப்பும்மை.

கூஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(இ-ரை) வானம் வறக்குமேல்-மழை பெய்யாவிடின்; ஈண்டு வானோர்க்கும் பூசனைசிறப்பொடு செல்லாது-இவ்வுலகில் தேவர்க்கும் அன்றாடு பூசையும் ஆட்டைவிழாவும் நடைபெறா.

அன்றாடு பூசை, கதை நிகழ்ச்சி குறியாதும் கொண்டாட்ட மின்றியும் ஒரு சிலரான அக்கம் பக்கத்தார் மட்டும் கலந்தும் கலவா மலும், வழக்கம்போற் சிற்றளவான வழிபாடாகக் கோவிற்குள் மட்டும் நடைபெறுவது; ஆட்டைவிழா, ஒருகதை நிகழ்ச்சி குறித் தும் கொண்டாட்டத்துடனும் நாட்டு மக்களெல்லாம் வரவழைத் தும், பேரளவாக ஊர்வலஞ்செய்து நடைபெறுவது. உம்மை சிறப்பும்மை.

பூசுதல்=கழுவுதல், தெய்வப் படிமையை நீரால் துப்புரவாக்கு தல். பூசு—பூசி. பூசித்தல்=பூச்சாத்தியும் தேங்காய் பழம் முதலி யன படைத்தும் வழிபடுதல். உழவு என்பது பயிர்த்தொழிலின் பின்விளைகளையும் குறித்தல்போல், பூசித்தல் என்பதும் வழிபாட்டின் பின்விளைகளையும் குறித்தது.

பூசி—பூசை. ஒ. நோ: ஆசு (பற்று)—ஆசி (அவாவு)—ஆசை (அவா). பூசி—பூசனை, பூசனம். ஐ, அனை, அனம் என்பன தமிழ் ஈறுகளே. பூசை—பூசாரி. ஆரி தலையாரி என்பதிற்போல் ஓர் ஈறு. பூசாச்சாரி (பூசை+ஆச்சாரி) என்னும் வழக்கு வடமொழியிலு மில்லை.

பூ செய் என்பது பூசை என்றுயிற்றென்று கொள்வது பொருந்தாது.

பூசி—பூஜ் (வ.), பூசை—பூஜா (வ.), பூசனம்—பூஜன (வ.), பூசனை—பூஜனு (வ.).

வேத ஆரியர்க்கு வேள்வி வேட்டலேயன்றிப் படிமைப்பூசையும் கோவில் வழிபாடும் இல்லை. பூஜ் என்னும் சொல்லும் வேதத்திலில்லை. பாரதம் முதலிய பிற்கால வடபனுவல்களிலேயே அது வழங்குகின்றது.

கக. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ-ரை) வானம் வழங்காதெனின் — மழை பெய்யாவிடின்; வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா—இப் பரந்தவுலகின்கண் அறக் கொடையும் தவமும் ஆகிய இருவகை நல்வினைகளும் செய்யப்பெரு.

தானம் என்பது, நல்வழியில் ஈட்டப்பட்ட பொருளை, தெய்வப் பற்றுக் கரணியமாகக் கோவிற்கும் அடியார்க்கும், அருளுடைமை கரணியமாக இரப்போர்க்கும், ஈடின்றிக் கொடுத்தல். தவம் என்பது. ஐம்புலவடக்கம் பற்றித் துறவறத்தார் கடுமையாகவும், மகப்பேறு முதலியன கருதி இல்லறத்தார் எளிமையாகவும், உடலை வருத்துதல். கடுமையாக வருத்தும் வகைகள் துறவறவியலிற் கூறப்பெறும், எளிமையாக வருத்தும் வகைகள் உண்டி சுருக்கல், எளிய வுடை யுடுத்தல், இன்பம் விலக்கல் முதலியன.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னேற்றான் கொல்லெனுஞ் சொல்."

என்று திருவள்ளுவரும்,

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து" என்று பட்டினத் தடிகளும் பாடியிருப்பதால், தவம் துறவறத்தின் மேலதென்றுவரை யறுப்பது பொருந்தாது. தானம் பிறர்க்குக்கொடுப்பது; தவம் தன்னை ஒடுக்குவது.

தானம் என்பது தென்சொல்லென்பதை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலிற் கண்டு தெளிக.

உ0. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(இ-ரை) யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின்—எத்துணை உயர்ந்தவர்க்கும் நீரின்றி உலக வாழ்வு நடவாதா

யின்; ஒழுக்கு வான் இன்று அமையாது—அந்நீர் இடையருது ஒழுகும் ஒழுக்கும் மழையின்றி நிகழாது.

உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளும் ஒப்புயர்வற்ற வேந்தனு யினும், மழையின்றி வாழும் வழியில்லை யென்பதாம்.

அதி. ஙூ— நீத்தார் பெருமை

அஃதாவது. இறைவன் திருவருளைப் பெற்றவரும், மழைபெயற்கு ஓரளவு கரணியமாகக் கருதப் பெறுபவரும், பேரரசர்க்கும் பெருந் துணையாகும் அறிவாற்றல் மிக்கவரும், மழைக்கு அடுத்தபடியாக நாட்டு நல்வாழ்விற்கு வேண்டியவருமான, முற்றத்துறந்த முழு முனிவரின் பெருமை கூறுதல்.

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(இ-ரை) பனுவல் துணிவு — நூல்களது துணிவு; ஒழுக்கத்து நீத்தார் பெருமை — தமக்குரிய ஒழுக்கத்தின்கண் உறைத்து நின்று உலகப்பற்றைத் துறந்த முனிவரது பெருமையை; விழுப்பத்து வேண்டும் — சிறந்த பொருள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததாக விரும்பும்.

ஆசிரியர் துணிவு அவர்நூல்மேல் ஏற்றப்பட்டது.

''தொண்டரே இறைவ னுள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே.''

என்னும் ஔவையார் கூற்றைத் தழுவியது இக்குறள். பற்று, நான் என்று தன்னைப்பற்றிய அகப்பற்றும் எனது என்று தன் உடமை களைப் பற்றிய புறப்பற்றும் என இருவகையாம்.

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(இ-ரை) துறந்தார் பெருமை துணைக்கூறின்-இருவகைப்பற்றை யும் முற்றும் விட்டுவிட்ட முனிவரது பெருமையை இவ்வளவின தென்று அளவிட்டுக் கூறப்புகின்; வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று—அது இவ்வுலகத்தில் இதுவரை பிறந் திறந்தவரையெல்லாம் இத்தனையர் என எண்ணியறியப் புகுந்தாற் போல்வதாம்.

இரண்டும் முடியாதென்பது. கொண்டால் என்னும் வினை யெச்சம் கொண்டு எனத்திரிந்தது. கொண்ட அற்று எனினுமாம்.

உங. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(இ-ரை) இருமை வகை தெரிந்து—பிறப்பு வீடு என்னும் இரண்டின் துன்பவின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து; ஈண்டு அறம்பூண்டார் பெருமை — பிறப்பறுத்தற்கு இப்பிறப்பில் துறவறம் பூண்டாரது பெருமையே; உலகு பிறங்கிற்று — உலகின்கண் விளங்கித் தோன்றிற்று.

படைகொண்டு பொருது பார்முழுதும் வென்றவரினும், ஐம்பு லனையடக்கி ஆசையை வென்றவரே பெரியர் என்பது. பிரிநிலே யேகாரம் செய்யுளில் தொக்கது.

உச. உரனென்னுந் தோட்டியா ஞ்ரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

(இ - ரை) உரன் என்னும் தோட்டியான் - அறிவு என்னும் துறட்டியினால், ஓரைந்தும் காப்பான் - பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தன்தன் புலன்மேற் செல்லாது அடக்குபவன்; வரன் என்னும் வைப்பிற்கு-எல்லா நிலங்களுள்ளும் மேலான வீட்டு நிலத் திற்போய் முளைத்தற்குரிய; ஓர் வித்து-ஒரு விளைந்த மணி விதை போல்வான்.

உரனைத் துறட்டியாக உருவகித்துப் பொறிகளை யானைகளாக உருவகியாதது ஒருமருங்குருவகம். துறடு-துறட்டி.-தோட்டி.

புரம் = மேல், மேன்மாடம். புரம்-பரம் = மேல், மேலிடம், மேலுலகம். பரம்-வரம்=மேன்மை. வரம்-வரன் (கடைப்போலி)= மேலுலகம், வீட்டுலகம்.

இனி, வைப்பு என்பதற்குச் சேர்த்து வைக்கும் இடம் என்று பொருள்கொண்டு, வீட்டுலமாகிய களஞ்சியத்திற் சேர்த்துவைக்கப் பெறும் விளைந்த மணிபோல்வான் என்று உரைக்கினும் பொருந்தும்.

உடு. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(இ - ரை) ஐந்தவித்தான் ஆற்றல் - ஐம்புலனையும் அடக்கின முனிவனது வலிமைக்கு; அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி-அகன்ற வானத்துள்ள தேவர்க்கரசனுகிய வேந்தனே (இந்திரனே) போதிய சான்றாளும்.

ஐந்து என்பது தொகைக் குறிப்பு. ஐந்தும் என்னும் முற்றும்மையும் ஆற்றற்கு என்னும் ச-ஆம் வேற்றுமையுருபும் செய்யுளால் தொக்கன. ''தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவன தாற்றல் உணர்த்தினளுதலின், 'இந்திரனே சாலுங் கரி' யென்றார்.'' என்று பரிமேலழகர் அகலிகை சாபிப்புக் கதையை இங்கெடுத்துக் காட்டியது பொருந்தாது; அவள் கணவனனை கோதமன் ஐந்த வித்தானல்லன் ஆகலின்.

''இந்திரன் சான்று என்றது, இவ்வுலகின்கண் மிகத்தவஞ் செய்வார் உளராஞல், அவன் தன்பதம் இழக்கின்றனை நடுங்குமாத லான். இது தேவரினும் வலியன் என்றவாறு.'' என்று மணக்குட வரும்,

''ஈண்டுத் தன்பதங் கருதித் தவஞ்செய்யும் நீத்தார்மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வமகளிரை விடுத்து, மற்று அத்தவ மழித்துந் தவம் அழியாமை நிலைநிற்கையாலும், தனது பதம் விரும் பாமையாலும், தானே சான்றுய் அமையும் என்றவாறு.'' என்று காளிங்கரும் கூறிய விளக்கம் ஒருவாறு பொருந்தும்.

ஆயினும், ஆசிரியர் கருதிய கதை ஒன்றிருத்தல்வேண்டும். அது இன்று அறியப்படவில்லை. இந்திரன் என்பது வேந்தன் என்னும் தென்சொற்கு நேரான வடநாட்டுச் சொல். வேந்தன் மருத நிலத் தமிழ்த்தெய்வம். ''வேந்தன் மேய தீம்புன லுலகமும்'' (தொல். அகத். 5).

உக. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(இ-ரை) செயற்கு அரிய செய்வார் பெரியர்-உயர்திணை எனப் படும் மக்களுள் பிறர் செய்யமுடியாத அருஞ்செயல்களைச் செய்து முடிப்பவர் பெரியோர்; செயற்கு அரிய செய்கலாகாதார் சிறியர்-பிறர் செய்யமுடியாத அருஞ்செயல்களைச் செய்யாது எளிய செயல் களையே செய்து முடிப்பவர் சிறியோர்.

''செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக வுறுப்புக்கள்.'' என்பர் பரிமேலழகர். எண்வகை ஓக உறுப்புக்கள் கடிவு (இயமம்), நோன்பு (நியமம்), இருக்கை (ஆசனம்), வளிநிலை (பிராணயாமம்), ஒருக்கம் (பிரத்தியாகாரம்), நிறை (தாரணை), ஊழ்கம் (தியானம்), ஒன்றுகை (சமாதி) என்பன. இவற்றுள் ஒருக்கமும் நிறையுமான மனவடக்கம் சிறந்ததாம்.

"வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறெருவர் காணுமை லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றெரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமே னடக்கலாம் கனன்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது"

என்னும் தாயுமான அடிகள். ஆகலால், மனமடக்குதலும் அவாவறுத்தலுமே செயற்கரிய செயல்கள் என அறிக.

செயற்கரியவாவன உலகத்தொழில் செய்தலும் பொருளீட்டுதலும் இன்பந்துய்த்தலும் எளியாரை வாட்டுதலுமாம். இல்லறம் துறவறத்தை நோக்க எளிதாயினும், அதையுஞ்செய்ய இயலாதவர் சிலர் உளர். அவரே சிறியர் என்னுங் கருத்தினர் "செயற்குரிய செய்கலாதார்" என்று பாட வேறுபாடு காட்டுவர். அவ்வேறுபாடு பெரியர் சிறியர் என்னும் இரு வகுப்பார்க்கும் இடையே வேறொரு வகுப்பாரையும் வேண்டுதலின், அது அத்துணைச் சிறந்ததன்றும்.

உஎ. சுவையொளி யூருறுசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(இ-ரை) சுவை; ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை—சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்னும் பூதமூலங்கள் ஐந்தின் கூறுபாட்டையும்; தெரிவான்கட்டே உலகு-ஆராய்ந்தறியுப் ஒகியின் அறிவிற்குள் அடங்கியதே உலகம்.

கார்ட்சி ஒளியினுல் தோன்றுதலின் ஒளியெனப்பட்டது. உறுவது ஊறு. உறுதலாவது உடம்பின் உள்ளும் புறம்பும் படுதல் அல்லது தொடுதல். உலக வழக்கில் தீப பொருளிலேயே வழங்கும் நாற்றம் என்னும் சொல், இங்கு நறுமைக்குந் தீமைக்கும் பொதுவாய் நின்றது.

உகு-யுஜ் (வ). ஒகம்-யோக (வ.ழ). ஒகி-யோகின் (வ.ழ).

ஐந்தின் கூறுபாடாவன, மேற்கூறிய பூதமூலம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய நிலம், நீர், தீ, வளி, (காற்று) வெளி என்னும் பூதங்கள் ஐந்தும், அவற்றொடு தொடர்புடைய புலனுக் கொண்ட மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிவும்

பொறியைந்தும், அவற்றைப்போல் உடம்பின் கூருகிய நாவு, கை, கால், அண்டி, (எருவாய்) குறி (கருவாய்) என்னும் கருமப்பொறி யைந்தும் ஆக இருபதுமாம். இனி, 'வகைதெரிவான் கட்டு' என்றதி னால், தெரிகின்ற ஆதனும் (புருடனும்), அவன் தெரிதற் கருவியாகிய மதி (மான்) தன்மூனைப்பு (அகங்கார) மனங்களும், அவற்றிற்கு முதலாகிய சித்தமும் (மூலப்பகுதியும்) பெறப்படும்.

இவற்றை ஆராயும் வகை :—

ஆதன் தான் ஒன்றினின்று தோன்றுமையாலும் பிறிதொன் றைத் தோற்றுவியாமையாலும் தனிநிலையாம்.

மூல முதனிலை (சித்தம்) தான் ஒன்றினின்று தோன்றுமையால் முதனிலையாம்.

மதியும் அதனின்று தன்மூனைப்பும் அதனின்று பூத மூலங்களு மாக ஏழும், மூல முதனிலையினின்று முறையே தோன்றுவதனாலும் மன முதலியவற்றைத் தோற்றுவித்தலாலும் இடைநிலையாம்.

மனமும் அறிவுப்பொறிகளும் கருமப்பொறிகளும் பூதங்களு மாகிய பதினாறும், இடைநிலையினின்று தோன்றுவதனாலும் வேறெ வற்றையுந் தோற்றுவியாமையாலும் இறுதிநிலையாம்.

இனி, சாங்கியத்திற்கு மாறுக,

> " அகர முதல வெழுத்தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு. '

என்றமையால், எல்லாவற்றிருடுங் கலந்துநின்று அவற்றையியக்கி மூத்தொழிற்படுத்தும் இறைவனென்னும் முழு முதனிலையொரு சேர்க்க. மெய்ப்பொருள்கள் மொத்தம் இருபத்தாரும். ஆகவே, " சாங்கிய நூலுள் ஓதியவாற்றுன் ஆராய்தல் " என்பது தவரும் நுண்ணிய அடிப்படைப் பாகுபாட்டில், ஆவிவடிவான உயிராதனும் (சீவாத்துமாவும்) பரவாதனும் (பரமாத்துமாவும்) காற்றுள் அடங்கு தலால், ஐந்தின் வகையென்று எல்லாவற்றையும் அடக்கினர் ஆசிரியர். வெளி என்னும் இடத்தின் உண்மை நீட்சி அல்லது தொடர்ச்சியே காலம்.

ஐம்பூதங்களும் அவற்றொடு தொடர்புள்ள பொறிபுலன்களும்

பூதம்	பூதத்தன்மை	பொறி	புலன்
நிலம்	நாற்றம்	மூக்கு	முகர்தல்
நீர்	சுவை	வாய்	சுவைத்தல்
தீ	ஒளி	கண்	காண்டல்
வளி	ஊறு	மெய்	உறுதல் (தொடுதல்)
வெளி	ஓசை	செவி	கேட்டல்

"வகை தெரிவான் கட்டு" என்றது உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தி; அதாவது, ஓர் உண்மையை அல்லது நெறியை வெளிப்படையாகக் கூருது ஒரு சொல்லாட்சியாற் பெறவைத்தல். கண்ணது-கட்டு (கண்+து).

மூலப்பகுதியின் சேர்க்கையாற் கட்டுற்ற ஆதன் (புருடன்) அதைத்தன்னின் வேருகக் காண்டலே வீடுபேறென்பது சாங்கியக் கொள்கை. அதிற் கடவுட் கொள்கையில்லை.

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ-ரை) நிறைமொழி மாந்தர் பெருமை - பயன் நிறைந்த சொற்களையுடைய துறவியரின் பெருமையை; நிலத்து மறைமொழி காட்டிவிடும்-நிலவுலகத்தில் அவர் கட்டளையாகச் சொல்லப்பெறும் மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்.

இக்குறள்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்னும் தொல்காப்பிய நூற்பாவைத் (1434) தழுவியது. மறை மொழி அல்லது மந்திரம் என்பது, வாய்மொழியும் சாவிப்பும் என இருவகைப்படும். திருமூலரின் திருமந்திரமும், நம்மாழ்வாரின் திரு வாய்மொழியும் வாய்மொழிபோல்வன; கவுந்தியடிகள் காவிரித் தென்கரைச் சோலையொன்றில் வம்பப்பரத்தையும் வறுமொழியாளனு மான இருவரை நரிகளாக்கியது சாவிப்பு. மறை (வேதத்)தன்மை யுடைய மொழி மறைமொழி; மனத்திண்மையாற் கருதியது நிறை வேறும் மொழி மந்திரம். மன் + திரம் = மந்திரம். முன்னுதல் = கருதுதல். முன்-மன். திரம் = திறம். ஒ. நோ: மன்று - மந்து - மந்தை. மூரி-முறி (வலி)

ஆரியர் வருகைக்கு முற்பட்டதும், எண்வகை வனப்பான பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் எழுநிலத்திற்கும் இலக்கியமாயிருந்ததுமான முதலிரு கழகத் தூய தமிழிலக்கியம் முழுவதும் அழிக்கப்பட்டுவிட்டதென அறிக.

உஉ. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(இ-ரை) குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி-நற் குணத்தொகுதி என்னும் மலையின் கொடுமுடியேறி நின்ற முனிவரின்

கடுஞ்சினத்தை; கணமேயும் காத்தல் அரிது-சினக்கப்பட்டாரால் நொடி நேரமேனுந் தடுத்தல் முடியாது.

குன்று சிறுமலி. இங்கு மலியென்னும் பொதுப் பொருளது எரிக்கும் நெருப்புப் போன்றது வெகுளி. வேகு—வெகுள்—வெகுளி. திண்மையும் பெருமையும் வண்மையும் பற்றி நற்குணத்தொகுதியை மலியாக வுருவகித்தார். இக்குறட்கு, நற்குணமலியாகிய முனிவர் நொடிநேரமேனும் தம் உள்ளத்திற் சினத்தைப் பேணுதலில்லை யென்று பொருள் கூறுவாருமுளர். அது உரையன்மை, முந்தின குறளாலும் ''சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம்'' என்னுங் கம்பர் கூற்றாலும் (பால. தாடகை. எக) கண்டு தெளிக. உம்மை இழிவு சிறப்பு.

கூ0. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

இ—ரை) எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் —எவ்வகைப்பட்ட உயிர்களிடத்தும் செம்மையான குளிர்ந்த அருளைப் பூண்டொழுகுதலால்; அந்தணர் என்போர் அறவோர்— அந்தணரென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் துறவியரே.

அந்தணர் என்னுஞ்சொல் அழகிய குளிர்ந்த அருளையுடையவர் என்னும் பொருளது. அருளாவது ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரைப்பட்ட எல்லாவுயிர்களிடத்தும் இரக்கங் கொண்டு அன்பு செய்தல். இது துறவியர்க்கே இயலும். அதனால், அருளுடைமை யைத் துறவுநிலைக்குரிய முதலறமாகக் குறித்தார் திருவள்ளுவர். தமக்கு வாழ்வளித்துக் காக்கும் தலைநாகரிக மக்களையுந் தாழ்வாகக் கருதும் தந்நல ஆணவப் பிராமணர் அந்தணராகார் என்பது, இதனால் அறிவிக்கப்பட்டது. பூணுதல் நோன்பாக மேற்கொள்ளு தல். 'என்போர்' செயப்பாட்டுவினை செய்வினையாக நின்றது. 'மற்று' அசைநிலை. உம்மை முற்றும்மை.

அதி. ச—அறன்வலியுறுத்தல்

அஃதாவது, முனிவரால் கூறப்படும் மூன்றனுள் முதன்மையா னதும், மக்கள் இருவகையின்பமும் அடைதற்கும் உலகம் இனிது நடைபெறற்கும் எல்லாராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியதுமான, அறத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறுதல்.

கூக. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(இ—ரை) சிறப்பு ஈனும்—மறுமையில் விண்ணுலக வின்பத்தையும் வீடுபேற்றையுந் தரும்; செல்வமும் ஈனும்— இம்மையிற் செல்வத்தையுந்தரும்; உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவனோ—ஆதலால் மக்களுயிர்க்கு அறத்தைவிடச் சிறந்த ஆக்கம் எதுதான்?

எல்லாப் பேற்றுள்ளும் சிறந்த பேரின்ப வீடும் சிற்றின்பத்துட் சிறந்த விண்ணின்பமும் சிறப்பெனப் பெற்றன. செல்வமும் விண்ணின்பமும் இல்லறத்தார்க்கும் வீடு துறவறத்தார்க்கும் உரியனவாம். ஆகுவது ஆக்கம். ஆகுதல் மேன்மேலுயர்தல் 'அறத்தினூ உங்கு' இன்னிசை யளபெடை. ஆக்கம் என்றது அகற்கேதுவை. 'ஓ' அசை நிலை.

௩௨. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(இ—ரை) அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை—ஒருவர்க்கு அறஞ்செய்வதிலும் சிறந்த ஆக்கவழியுமில்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை— அதை மறந்து செய்யாது விடுவதினும் பெரிய கெடுதல்வழியு மில்லை.

'அறத்தினூஉங்கு இன்னிசை யளபெடை. செய்யாமையாகிய எதிர்மறையொடு வேற்றுமைப் படுத்திக் காட்டற்கு, மேற்கூறிய உடன்பாட்டுச் சொல்லியத்தை (வாக்கியத்தை) வழிமொழிந்தார்.

௩௩. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ—ரை) அறவினை — அறமாகிய நல்வினையை; ஒல்லும் வகையான் — தத்தமக் கியன்றவாறு; செல்லும்வாய் எல்லாம் ஓவாதே செயல் — அது நடை பெறக் கூடிய வழியெல்லாம் இடை விடாது செய்க.

ஒல்லும் வகையாவது, இல்லற வினையை இடம்பொருளேவற்கு ஏற்பவும், துறவறவினையை உடம்புநிலைக்கும் உளநிலைக்கும் ஏற்பவும், செய்தல். செல்லும் வாய்கள் மனம் மொழி மெய் என்னும் முக்கரணங்கள். அவற்றுற் செய்யப் பெறுவன நல்லெண்ணம் நன்சொல் நற்செயல் என்பன. வாய் என்பது வழியை மட்டுமன்று இடத்தையுங் குறித்தலால், 'செல்லும் வாய்' என்பன எல்லா அறத்துறைகளுமாம்.

௩௪. மனத்துக்கண் மாசில னாதல னனைத்தற
னூகுல நீர பிற.

(இ—ரை) மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்—ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமற்றவனு யிருத்தலாகிய அவ்வளவே அறமாவது; பிற ஆகுல நீர—மற்றப் பூச்சும் ஆடையும் அணியுமாகிய கோலங்களெல்லாம் வீண் ஆரவாரத்தன்மையன.

மனம் தூய்மையாயிருப்பின் அதன் வழிப்பட்ட முக்கரண வினை சுளும் தூய்மையாயிருக்குமாதலின், மாசிலா மனமே அறத்திற்கு அடிப்படை என்றவாறு. மனம் தூயதாயிருப்பின் வெளிக்கோலம் வேண்டாததாயும், தீயதாயிருப்பின் வெளிக்கோலம் பிறரை ஏமாற்றுவதாயுமிருத்தலின், இருவழியும் பயனின்மை நோக்கி வெளிக் கோலத்தை வீண் ஆரவாரமென்றார். 'ஆதல்' வியங்கோளுமாம்.

நஎ. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(இ—ரை) அழுக்காறு—பிறராக்கம் பொருமையும்; அவா — அவ்வாக்கத்தின்மேற் செல்லும் ஆசையும்; வெகுளி — அதைப் பெருதவிடத்து எழும் சினமும்: இன்னாச் சொல்—அது பற்றிவருங் கடுஞ்சொல்லும்; நான்கும் இழுக்கா இயன்றது அறம்—ஆகிய இந் நான்கையும் விலக்கி நடந்ததே அறமாவது. (இழுக்கா = இழுக்கி)

நஏ. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

(இ—ரை) அன்று அறிவாம் என்னாது அறம் செய்க—யாம் இன்று இளமையாயிருப்பதாற் பிந்தி முதுமையிற் செய்வே மென்று கடத்திவையாது இன்றிருந்தே அறவினையைச் செய்து வருக; மற்று அது பொன்றுங்கால் பொன்றுத்துணை—பின்பு அவ்வறம் இறக்குங் காலத்து இறவாத் துணையாம்.

இறத்தலாவது உடம்பினின்றும் உயிர் நீங்குதல். உயிர் நீங்கிய உடம்பு அழியவும் அதனாற் செய்யப்பட்ட அறம் அதனோடழியாது உயிரோடொன்றி நின்று உதவுவதால், பொன்றுத்துணையாயிற்று. நிலையாத உடம்பு நிலையும் பொழுதே நிலைக்கும் பயனைப் பெற்றுக் கொள்க என்பது ஆசிரியரின் அன்பார்ந்த அறிவுரை.

நஐ. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

(இ—ரை) அறத்து ஆறு இது என வேண்டா — அறத்தின் பயன் இதுவென்று உரையளவையால் ஒருவர் அறிவிக்க வேண்டிய தில்லை: சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை — பல்லக்கைச்

சுமப்பானேடு அதில் ஏறிச் செல்வானிடைப் பட்ட காட்சியளவை யாலேயே அது அறியப்படும்.

இதுவே ஆசிரியர் கருத்தென்பது, பின்னர் அவர் ஆங்காங்கு நூலிற் கூறும் கூற்றுக்களாலும், பல்பிறவியும் பழவினையும் பற்றி அவர்க்கிருந்த நம்பிக்கையாலும்,

> "செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
> எய்த வருமோ இருநிதியம்—வையத்து
> அறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
> வெறும்பாலை பொங்குமோ மேல்."

என்னும் ஔவையார் கூற்றாலும், (நல்வழி-கஎ.)

"Need not in words to dwell on virtue's fruits: compare
The man in litter borne with them that toiling bear!"

என்னும் போப்பையர் மொழிபெயர்ப்பாலும், அறியப்படும்.

'பல்லக்கைச் சுமப்பாரையும் அதில் ஏறிச் செல்வானையுங் காட்டி இதுதான் அறத்தின் பயன் என்று கூருதே.' என்பதை இக் குறளுரையாகக் கூறுவது, இக்காலத்திற் கேற்குமேயன்றி ஆசிரியர் கருத்தாகாது.

ஆறென்பது வழி. அறத்தின் வழிப்பட்ட பயனை ஆறென்றார். அறியப்படும் என்பது சொல்லெச்சம்.

கூஅ. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(இ—ரை) வீழ்நாள் படாமை நன்று ஆற்றின்—செய்யாது விணுகக் கழியும் நாள் இல்லாவாறு ஒருவன் நாள்தோறும் அறத்தைச் செய்துவருவானுயின்; அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல்—அச்செயல் அவன் இவ்வுலகில் உடம்போடுகூடி வாழும் நாள் வரும் வழியை அடைக்குங் கல்லாகும்.

'படாஅமை' இசைநிறை யளபெடை. வாழ்நாள் வழியடைத்தலாவது பிறவியை நீக்கி வீடுபெறுவித்தல்.

கூக. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ—ரை) அறத்தான் வருவதே இன்பம்—அறவழியால் ஒருவர்க்கு வரும் இன்பமே உண்மையான இன்பமாவது; மற்று எல்லாம்

புறத்த—வேறு தீயவழியில் வருவனவெல்லாம் இன்பம்போல் தோன்றினும் துன்பத்தின்பாற் படுவனவே; புகழும் இல—அதோடு அவை புகழுடையனவும் ஆகா.

இங்கு இன்பமென்று பொதுப்படக் கூறியது உலகின்பமாகிய சிற்றின்பத்தை; அறவழியல்லது வேறுவழியிற் பேரின்பம் ஒருவன் பெறமுடியாதாகலின். உலகின்பம் ஒருபுலவின்பமும் பலபுலவின்பமும் ஐம்புலவின்பமாகிய முற்றின்பமும் என முத்திறப்படும். வண்ணவோவியமும் எழுவும்யாழும் இன்னடிசிலும் நறுவிரையும் மெல்லணைக் கட்டிலும் போல்வன, ஒருபுலவின்பமே தருவன; அழகிய வளமனையும் பல்வகைப் பழுமரக்காவும் போல்வன பலபுலவின்பந் தருவன; கட்டழகியான கற்புடை மனைவியெனின் ஐம்புலவின்பமும் ஒருங்கே தர வல்லாள். இனி, இன்பப் பொருள் போன்றே அதனைக்கொள்ளும் செல்வப்பேறும் உள்ளத்திற்கு இன்பந்தருவதாம். காசு தானுக இன்பந்தராவிடினும் இன்பப் பொருள்களைக் கொள்ளுங் கருவியாதல் காண்க. விலையாகக் கூடிய எல்லாப் பொருளும் காசுபோற் பயன் படுவனவே.

ஒருவன் அறவழியில் தேடிய தன்பொருளை நுகர்வதே புகழொடு கூடிய இன்பமாம்; பிறன்பொருளை நுகர்வது பழியொடு கூடிய துன்பமாம். பிரிநிலை யேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது.

சூ0. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(இ—ரை) ஒருவற்குச் செயற்பாலது அறனே—ஒருவன் என்றுஞ் செய்யத்தக்கது நல்வினையே; உயற்பாலது பழியே—செய்யாது விடத்தக்கது தீவினையே.

'ஒரும்' ஈரிடத்தும் அசைநிலை. ஆயினும், முதற்காலத்தில் 'ஆராய்ந்தறியும்' என்று பொருள்படும் ஏவற்பன்மை அல்லது பெயரெச்சமாகவே அது வழங்கியிருத்தல் வேண்டும். பிரிநிலை யேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது.

பாயிரம் முற்றிற்று.

க. அறத்துப்பால்

அறநூற் பாகுபாட்டின்படி அறம் பொருளின்பம் வீடென வரிசைப் படுத்தப்பட்ட உறுதிப்பொருள் நான்கனுள், முதலதான அறத்தைக் கடைப்பிடிக்கும் இருவகை வாழ்க்கை முறைகளையுங் கூறும் பெரும்பகுதி, அறத்துப்பால் எனப்பட்டது. இது பாயிரத்தின் இறுதி அதிகாரமான அறன் வலியுறுத்தலோடு பொருள்தொடர்புங் கொண்டதாயிற்று. பகு—பகல்—பால்=பகுதி, நூற்பெரும் பகுதி.

உ. இல்லற வியல்

இருவகை அறவாழ்க்கைகளுள், இயல்பானதும் பெரும்பான்மையானதும் உலகநடப்பிற்கு இன்றியமையாததும், துறவறத்திற்கும் இன்றியமையாத துணையாவதும், உலகிலுள்ள ஐம்புலவின்பமும் துகர்வதும், முறைப்படி கடைப்பிடிக்கப்பெறின் வீடுபேற்றையுந் தருவதும்; நல்லறமென்று உயர்ந்தோராற் சிறப்பிக்கப் பெறுவதுமான இல்லற வாழ்க்கையின் இயல்பைக் கூறும் சிறு பகுதி இல்லற வியல் எனப்பட்டது.

அதி. நி—இல்வாழ்க்கை

அஃதாவது, ஒருவன் தன் கற்புடை மனைவியொடு கூடி இல்லத்தின்கண் இருந்து இன்பந்துய்த்து வாழும் அறவாழ்க்கையின் இன்றியமையாமையையும் சிறப்பையும் எடுத்துக் கூறுவது.

சக. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(இ—ரை) இல்வாழ்வான் என்பான் இல்லறத்தில் வாழ்பவன் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் வேளாளன்; இயல்புடைய மூவர்க்கும்—இல்லறத்தில் வாழும் இயல்புடைய ஏனை மூவர்க்கும்; நல்லாற்றின் நின்ற துணை—அவர் செல்லும் நல்லற நெறிக்கண் நிலை பெற்ற துணையாம்.

ஏனை மூவராவார் இருவகை யந்தணருள் இல்லறத்தாஞான பார்ப்பானும் அரசனும் வணிகனுமாவர். 'இயல்புடைய' என்னும் அடைமொழி அதிகார இயைபினால் இல்லறத்தாரைக் குறிக்குமேயன்றித் துறவறத்தாரைக் குறிக்காது. அந்தணர் (பார்ப்பார்)

முதலிய நால்வரும் இல்லறத்தாரா யிருப்பரேனும், அவருள் தலை சிறந்தவர் வேளாளரே யென்பது கருத்து.

"உழுவா ருலகத்திற் காணிய ஃ தாற்று
தெழுவாரை யெல்லாம் பொறுத்து."

"ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்."

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்ரு
கைம்புலத்தா ரோம்ப றலை."

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு."

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்."

என்று திருவள்ளுவரும்,

"வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணுதான்" என்று நல்லாதனரும், கூறியிருத்தலையும், 'இல்வாழ்வான்' என்பதனோடொத்த 'குடியானவன்' என்னுஞ் சொல் உலக வழக்கில் உழவனையே குறித்து வருதலையும் நோக்குக.

ஆரியர் வருமுன் ஐயரென்றும் பார்ப்பாரென்றும் சொல்லப்பட்ட இருவகையந்தணரும் தமிழரே. அவருள் முன்னவர் துறவியர்; பின்னவர் ஆசிரியர் புலவர் பண்டாரம் உபச்சர் குருக்கள் திருக்கள் நம்பியர் போற்றியர் எனப் பல்வேறு பெயர்பெற்ற இல்லறத்தார். ஏனை மூவகுப்பார் போன்றே அந்தணரும் இருவகுப்பார் என அறிக.

திருவள்ளுவர் பிராமணீயம் என்னும் ஆரியத்தை ஒழிக்கவே நூல் செய்தாராதலின், பிரமசரியம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் முந்நிலைப்பட்ட பிராமணரைக் காத்தலைத் தமிழ வேளாளன் கடமையெனக் கூறியிராரா என்பது தெளிவுறு தேற்றமாம்.

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்று ஆசிரியர் கூறுவதால், 'நல்லாறு' என்றது இல்லறத்தையே என்பது துணியப்படும். 'என்பான்' என்னும் செய்வினை வாய்பாட்டுச் சொல் செயப்பாட்டு வினைப் பொருளது.

சஉ. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(இ—ரை) துறந்தார்க்கும் — உலகப்பற்றைத் துறந்தவர்க்கும்; துவ்வாதவர்க்கும் — உண்பதற்கில்லாத வறியர்க்கும்; இறந்தார்க்கும் — ஒருவருமின்றித் தன்னிடம் வந்து இறந்தார்க்கும்; இல்வாழ்வான் என்பான் துணை — இல்லறத்தான் என்று சிறப்பித்துச் சொல்லப் படுபவன் துணையாம்.

"உழவினுர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை."
'இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்."

என்று ஆசிரியர் வேறிடத்துங் கூறுதல் காண்க.

"துறந்தார் பெருமை" (உட) "துறந்தாரின் தூய்மை" (கஙஎ), "துறந்தார்க்குத் துப்புரவு" (உஉக), "துறந்தார் படிவத்தர்" (ஙிஅசு) என வருமிடமெல்லாம், துறந்தார் என்னுஞ்சொல் செய்வினைப் பொருளே தருதலால், "கனாகணனவராற்றுறக்கப் பட்டார்க்கும்" என்று பரிமேலழகர் ஈண்டுச் செயப்பாட்டுவினைப் பொருள் கூறுவது பொருந்தாது. முந்தின குறளுரையில் அவர் மூவகைப் போலித் துறவியரைப் பொருத்தியதினுலேயே இங்கு இவ்வாறுரைக்க நேர்ந்தது. கனாகணனவரால் துறக்கப்பட்டவரும் துவ்வாதவருள் அடங்குவர். இறந்தார்க்குச் செய்யுந்துணை ஈமக்கடனும் இறுதிச் சடங்கும் தென்புலத்தார் படையலுமாம்.

சஙு. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்ருங்
கைம்புலத்தா ரோம்ப றலை.

(இ—ரை) தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று — இறந்த முன்னோர் வழிபடுதெய்வம் விருந்தினர் ஏழையுற வினர் தன் குடும்பம் என்று சொல்லப்படும்; ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் — அவ் வைந்திடத்தும் செய்யவேண்டிய அறவினைகளைப் பேணிச் செய்தல்; தலை — இல்லறத்தானுக்குத் தலையாய கடமை யாம்.

முதற்காலத் தமிழகமாகிய குமரிநாடு பல்வேறு கடல்கோள் களால் மூழ்கிப் போனமையால், அது இருந்த தென்றிசை கூற்றுவன் திசையாகவும் இறந்தோரின் இருப்பிடமாகவும் கொள்ளப்பட்டது. தென்புலத்தார்க்குச் செய்யும் அறவினையாவது, அவர் ஆவி ஆறுதலும் மகிழ்வும் அடைதற்பொருட்டு, அவர் இறந்த நாளில் தெய்வத்

திற்குப் படைப்பது போல் அடையாள முறையிற் சில வுண்டிகளை அவர்க்கும் படைத்து, அவர் பெயரால் துறவியர்க்கும் இரப்போர்க்கும் சிறந்த உணவும் புத்தாடையும் உதவுதல். தெய்வம் என்றது அவரவர் உளநிலைக் கேற்றவாறு சிறுதெய்வமும் பெருந்தேவனும் கடவுளுமாகிய மூவகைத் தேவுகளை. கோயிற்கும் அடியார்க்கும் செய்யும் தானங்களும் தெய்வ வழிபாட்டின் பாற்படும். விருந்து என்றது புதிதாக வரும் மதிப்புள்ள அயலாரை. அவரை வரவேற்றுச் சிறந்த உணவளிப்பது இக்காலத்து வழக்கற்றது. அயலாரினின்று வந்த உறவினர்க்குச் சிறந்த வுணவளிப்பது கைம்மாறு கருதிய கடமையேயன்றி அறமாகாது. தன் என்றது தன்னையுந்தன் குடும்பத்தையும் "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" (புறம்-கஅ). "உடம்பாரழியின் உயிரா ரழிவர்" (திருமந்திரம், எஉசு). ஆதலால், பிறருக்குத் தொண்டு செய்பவன் தன்னையும் பேணிக் கொள்ளல் வேண்டும். "தனக்கு மிஞ்சித் தானம்." ஆதலால், ஒருவன் தன் குடும்பத்தைக் கவனியாது பிறரைப் பேணுதலும் அறமாகாது.

இங்குக் குறிக்கப்பட்ட ஐந்திட வினைகளும் அறவினையாகவே, ஆருவது இடமாகிய அரசிற்குச் செலுத்தவேண்டிய வரி கட்டாய வினையாகிய கடமையாயிற்று. ஆறிலொரு கடமையிறுத்தல் என்னும் பண்டை வழக்கும், உழவனையே இல்லறத்தாருட் சிறந்தவனாகக் காட்டும். பிறதொழிலார் எல்லாரும் பெரும்பாலும் குறிப்பிட்ட சிறுதொகைப் பணத்தையே வரியாகச் செலுத்திவந்தனர்.

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

என்று திருவள்ளுவரும்,

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை வினைப்போர் பழவிற லூர்களும்"
(சிலப். கo: சசகூ-கஇo).

என்று இளங்கோவடிகளும், கூறுதல் காண்க.

சச. பழியஞ்சிப் பாத்தூண் ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(இ—ரை) வாழ்க்கை—ஒருவனது இல்லறவாழ்க்கை; பழி அஞ்சிப் பாத்துஊண் உடைத்தாயின் — ஈயாத கஞ்சன் என்று பிறர் பழித்தற்கு அஞ்சித் துறந்தார் முதலிய மூவர்க்கும் தென்புலத்தார் முதலிய ஐவர்க்கும் அவன் பொருளைப் பகுத்தளித்து உண்டால் இயல்பாகக் கொண்டிருப்பின்; வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல் —

அவனது மரபுவழி ஒருபோதும் அருது எக்காலும் தொடர்ந்து வருவதாம்.

இறைவனருளும் உலகோர் வாழ்த்தும் அவன் வழியை நீடிக்கச் செய்யும் என்பது கருத்து.

சடு. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(இ—ரை) இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் — ஒருவனது இல்லறவாழ்க்கை அவனுக்கும் அவன் வாழ்க்கைத் துணைக்கும் இடைப்பட்ட இருதலைக் காதலையும் அவர் கருத்தொருமித்துப் பிறர்க்குச் செய்யும் அறவினைகளையும் உடைத்தாயின்; அது பண்பும் பயனும் — அவ்வுடைமை அவ்வாழ்க்கைக்கு முறையே தன்மையும் பயன்விளைவுமாகும்.

இல்லறவாழ்க்கை இருபகட் டொருசகட் டொழுக்கம் போல்வ தாகலின், கணவன் மனைவியரிடைப்பட்ட இருதலையன்பு அதன் பண்பாயிற்று. அதனுற் செய்யப்படும் அறம் அதன் பயனுயிற்று. அன்பு பண்பும் அறம் பயனும் ஆகும் என்பது நிரனிறை.

சஙூ. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(இ—ரை) இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் — ஒருவன் இல்லறவாழ்க்கையை அதற்குரிய அறநெறிப்படி நடத்துவானுயின்; புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன் — அதற்குப் புறம்பாகிய துறவு நெறியிற் போய்ப் பல்வகையில் துன்புறுவதல்லது சிறப்பாகப் பெறும் பயன் யாது?

அறத்தாறு என்றது அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்க முடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்கா றுருமை, வெஃகாமை, புறங்கூறுமை, பயனிலசொல்லாமை, தீவினை யச்சம், ஒப்புரவறிதல், ஈகை என்னும் பதினெறகத் தொகுதியை. இல்லறத்தாலும் வீடுபேறுண்டாமென்பது தமிழர் கொள்கையாத லின், துறவறத்தினுல் மட்டும் வீடுபெற முடியும் என்னும் ஆரியக் கொள்கையை மறுத்து, இல்லறத்தில் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செய்து இறுதியில் பேரின்பமும் பெறுவதாயிருக்க; துறவறத்திற் போய்ப் பசி பட்டினியாலும் தட்பவெப்ப மிகையாலும் துன்புற்றும் ஒருவர்க்கும் ஒருவகையிலும் உதவாதும், கூடாவொழுக்கத்திற் காளாகியும், ஒருகால் இறுதியிற் பிறவாவீடுபெறினும் சிறப்பாகப்

பெறுவது எதுதானென்று வினவுகின்றார் ஆசிரியர். சிவனடியார் பலர் இல்லறத்தில் நின்றே வீடு பெற்றாரென்று பெரிய புராணங் கூறுதல் காண்க. போஒய் என்பது இசைநிறை யளபெடை.

ஈள. இயல்பிலு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(இ—ரை) இயல்பிலுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் — முறைப்படி இல்லறவாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுகின்றவன்; முயல்வாருள் எல்லாம் தலை — பற்றறுக்க முயலும் துறவு நெறியார் எல்லாருள்ளும் தலைமையானவனும்.

முற்றத்துறந்தார் யாரென மக்களால் அறியப் படாமையின், 'முயல்வாருளெல்லாம்' என்றும், இருவகை யறத்தார்க்கும் உதவியே வீடு பெறுதலின் 'தலை' என்றுங் கூறினார். என்பான் என்னும் செய்வினை வாய்பாட்டுச் சொல் செயப்பாட்டு வினைப்பொருளது.

ஈஅ. ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

(இ—ரை) ஆற்றின் ஒழுக்கி — தவஞ்செய்வாரைத் தவநெறியில் ஒழுகச் செய்து; அறன் இழுக்கா இல்வாழ்க்கை — தானும் தன் அறத்தினின்று தவறாத, இல்லறவாழ்க்கை; நோற்பாரின் நோன்மை உடைத்து — அத்தவஞ் செய்வார் நிலையினும் மிகுந்த பொறைத் திறனை யுடையது.

பசி தகை முதலிய இடையூற்றை நீக்கலின் 'ஆற்றினெழுக்கி' என்றார். இல்வாழ்வான் தன்மை அவன் வாழ்க்கைமேல் ஏற்றிக் கூறப்பட்டது. இல்லறத்தையுங் காத்துத் தவநெறியையும் ஊக்குவது, தவநெறியை மட்டுங் காப்பதினும் வலிமையுடைத்தாயிற்று. நோற்பார் என்பது ஆகுபொருட்சொல்.

ஈக. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(இ—ரை) அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே — இருவகை யறத்துள்ளும் அறம் என்று தமிழ் நூல்களாற் சிறப்பித்துச் சொல்லப்பெற்றது இல்லறமே; அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று — அவ்வில்லறமும் பிறராற் பழிக்கப்படாத தூய்மையுடைத்தாயின் மிக நன்றும்.

பிரிநிலையேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. அஃது என்னுஞ் சுட்டுப் பெயர், முற்குறிக்கப் பெற்ற இல்லறத்தைச் சுட்டுமேயன்றி

அதற்கு மறுதலையானதும் ஓரிடத்துங் குறிக்கப் பெறுததுமான துற வறத்தைச் சுட்டாது. மேலும், துறவறமும் நல்லதே யென்று கூறின், அது 'அறனெனப் பட்டது இல்வாழ்க்கையே' என்னும் பிரிநிலைத்தேற்றக் கூற்றின் வலிமையைக் கெடுத்து முன்னுக்குப் பின் முரணுதல் காண்க. "இல்லற மல்லது நல்லற மன்று" என்னும் ஔவையார் கூற்றையும் நோக்குக.

பிறன்பழிக்கும் இல்வாழ்க்கை விருந்தோம்பாமையாலும் பிறனில் விழைவாலும் வரைவின் மகளிர் தொடர்பாலும் பிறவற்றாலும் நேர்வ தாம்.

நூ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்.

(இ—ரை) *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*—இவ்வுலகத் தில் இல்லறத்து வாழும் முறைப்படி வாழ்கின்றவன்; *வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்* — இவ்வுலகத்தானேயாயினும் வானுல கிலுள்ள தேவருள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான்.

இல்லறவாழ்க்கையில் தூய்மையாக வாழ்பவன் மக்களுட் சிறந்த வனாக இருப்பதனாலும், இம்மையிற் செய்த நல்வினைப் பயனை மறுமையில் தேவனாகித் தேவருலகத்தில் நுகர்வான் என்னும் நம்பிக் கையினாலும், 'வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார். தெய்வம் என்றது வகுப்பொருமை.

அதி. கூ—வாழ்க்கைத் துணைநலம்

அஃதாவது, இல்லறத்தானின் வாழ்க்கைத் துணையாகிய கற் புடை மனைவியின் நலங்களை எடுத்துக்கூறுதல்.

நூக. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(இ—ரை) மனைத்தக்க மாண்பு உடையளாகி — இல்லறத்திற் கேற்ற நற்குண நற்செய்கைகள் உடையவளாய்; தற்கொண்டான் வளத்தக்காள்—தன்னை மணந்து கொண்ட கணவனின் வருவாய்க் குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவள்; வாழ்க்கைத் துணை— அவனுக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாம்.

நற்குணங்களாவன, கணவனையும் பிறக்கும் மக்களையும் பேணு தலும் அன்பாக விருந்தோம்புதலும் துறவியரைப் போற்றுதலும் இரப்போர்க்கு ஈதலும் முதலியன. நற்செய்கைகளாவன, அறுசுவை

யுண்டிகளைச் சுவையாகச் சமைத்தலும் வீட்டையும் பொருள்களை யும் பாதுகாத்துக் கொள்ளுதலும் அக்கம் பக்கத்தாரொடு நட்பாயி ருத்தலும் கணவன் உத்தரவின்றி வீட்டைவிட்டு வெளியேருமையும் முதலியன.

நுஉ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(இ—ரை) மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் — இல்லறத் திற்கேற்ற நற்குண நற்செய்கைகள் ஒருவனுடைய மனைவியிடத்தில் இல்லாவிடின்; வாழ்க்கை எனைமாட்சித்தாயினும் இல் — அவனது இல்வாழ்க்கை வேறு செல்வத்திலும் அதிகாரத்திலும் எத்துணைச் சிறந்ததாயினும் சிறப்புடையதாகாது.

'இல்' என்றது பயனின்மையை, "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே." என்னும் பழமொழி இங்குக் கவனிக்கத் தக்கது.

நுங. இல்லதெ னில்லவண் மாண்பானு லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை.

(இ—ரை) இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என் — ஒருவ னுடைய மனைவி நற்குண நற்செய்கைச் சிறப்புடையவளானால் அவனுக்கு இல்லாதது எது? ; இல்லவள் மாணாக்கடை உள்ளது என் — அம்மனைவி அச்சிறப்பில்லாதவளானால் அவனுக்கு உள்ளது எது ?

மாண்பு என்னும் பண்பின் பெயர் பண்பியின்மேல் நின்றது. இல்லறத்திற்கு முதன்மையாக வேண்டுவது மனைவியின் குணச் சிறப்பே என்பது இதனாற் கூறப்பட்டது.

நுச. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ—ரை) பெண்ணின் பெருந்தக்க யா உள — ஒருவன் இவ்வுலகத்திற் பெறக்கூடிய பொருள்களுள் மனைவியினுஞ் சிறந்த தகுதியுடையவை வேறு எவை உள்ளன? ; கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் — அவளிடத்திற் கற்பு என்னும் கலங்கா நிலைமை மட்டும் அமைந்திருக்குமாயின்.

கற்பு என்பது கற்போல் உறுதியான இருபாலிடைக் காதற் பண்பு. கல்—கற்பு. "கற்பு றுத்திய கற்புடை யாடனே" என்று கம்பரும் (அயோத்தி. நகர்நீங்கு. கக) கூறுதல் காண்க. அது மணப்பருவம் வரை தோன்றுதிருந்து பின்பு ஒருவரையே காதலிப்

பது; இருபாற்கும் பொதுவானது. ஆதலின், மனைவியையன்றி அணங்கையும் நோக்காத ஆண்கற்பும் கணவனையன்றிக் காவலனையும் நோக்காத பெண்கற்பும் எனக்கற்பு இருசிறப்பட்டதாம். இங்குக் கூறியது பெண்கற்பு என அறிக. இன்னும் இதன் விளக்கத்தைக் கற்பியலிற் காண்க.

கற்புடை மனைவியால் அறம்பொருளின்பப் பேற்றுடன் வாழ்நாளும் நீடிப்பதால், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்றார். 'உண்டாகப் பெறின்' என்பது உண்டாதலின் அருமை குறித்து நின்றது.

நடு. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(இ—ரை) தெய்வம் தொழாள் — தான் மணக்கு முன்பு தொழுதுவந்த சிறுதெய்வமாகிய இல்லுறை தெய்வத்தைத் தொழாது; கொழுநற் றொழுதெழுவாள் — தன் கணவன் பாதங்களையே வைகறையிறுதியில் தொட்டுக் கும்பிட்டெழும் கற்புடை மனைவி; பெய் என மழை பெய்யும் — பெய்யென்று சொன்னவுடன் மழை பெய்யும்.

"அணங்குடை நல்வில்" என்னும் மதுரைக்காஞ்சித் தொடர் (கூஎஅ) இல்லுறை தெய்வத்தைக் குறித்தல் காண்க. சிவனும் திருமாலும் போன்ற பெருந்தேவரைக் கற்புடை மனைவியரும் தத்தம் கணவனுரொடு கூடி வழிபட்டமையை, திருநீலகண்ட நாயனாரின் மனைவியார், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் முதலியோர் வாழ்க்கையினின்று அறிந்துகொள்க.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு" (சிலப். கஅ: கசஅ—எ)

என்னும் பண்டை நம்பிக்கை, நாளடைவில் "பெய்யெனப் பெய்யும் மழை", "வான்றரு கற்பின் மனையறம்" (மணி: உஉ: அகூ), "மழை தரும் இவள்" (ஷெ: ஷெ கூக) என்னும் வழக்குக்கட்கு வழிவகுத்தது போலும்! ஒருகால் வள்ளுவர் குறள் பண்டைக்காலத்து ஒரு பத்தினிப் பெண் செய்த இறும்பூதை (அற்புதத்தை) அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கலாம்.

இனி, "அனிச்சமும்.....நெருஞ்சிப்பழம்" என்பதைப்போல் உயர்வுநவிற்சியாகக் கொள்ளின் ஒரு குற்றத்திற்கும் இடமில்லை.

புரட்சிப் பாவலர் பாரதிதாசனார், "கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பாவள்." என்ற பொருள் கூறிப் பொருத்தமாக்குவர்.

தொழாஅள் என்பது இசைநிறை யளபெடை.

நிகூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(இ—ரை) தற்காத்து—தன் கற்பையும் உடல்நலத்தையுங் காத்து; தற்கொண்டாற் பேணி — தன் கணவனையும் உண்டி மருந்து முழுக்கு முதலியவற்றுற் பேணி; தகைசான்ற சொல்காத்து—தம் இருவரையும் பற்றிய தகுதிவாய்ந்த உலக மதிப்பையுங் காத்து; சோர்விலாள் — பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் தளர்ச்சியில்லாதவள்; பெண் — இல்லறத்திற்குச் சிறந்த பெண்ணுவாள்.

நிஎ. சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(இ—ரை) மகளிர் சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் — பெண்டிரைக் கணவர் சிறைச்சாலையுள் அடைத்துவைத்தாற்போற் காக்குங் காவல் என்ன பயன்படும்?; நிறை காக்கும் காப்பே தலை — அப்பெண்டிரே தங்கள் கற்பினைத் தங்களைக் காத்துக் கொள்ளுதலே தலையாய காவலாம்.

சிறை காப்பாவது இரவும் பகலும் வீட்டைவிட்டு வெளியேறுமற் காவல் செய்தல். நிறை யென்பது மனத்தைக் கற்புநெறியில் நிறுத்துதல். கற்பில்லாத பெண்ணைக் காவல் செய்தல் அரிது என்பது கருத்து. ஏகாரம் பிரிநிலை.

நிஅ. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(இ—ரை) பெண்டிர் பெற்றுப் பெறின் — பெண்டிர் தம் கணவனுக்குத் தொண்டு செய்தலைப் பெறுவாராயின்; புத்தேளிர் வாழும் உலகு பெருஞ் சிறப்புப் பெறுவர் — தேவர் வாழும் உலகின்கண் அவராற் பெருஞ்சிறப்புச்செய்யப் பெறுவர்.

தொண்டுசெய்தல் என்பது சொல்லெச்சம். கொண்டானைப் பேணும் பெண்டிர் மண்ணுலகத்தில் மட்டுமன்றி விண்ணுலகத்திலும் சிறப்படைவர் என்பது இதனாற் கூறப்பட்டது.

நிகூ. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(இ—ரை) புகழ் புரிந்த இல் இல்லோர்க்கு — தனக்கும் தன் கணவனுக்கும் புகழை விரும்பிய மனையியில்லாதார்க்கு; இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை இல்லை—தம்மைப் பழித்துரைக்கும் பகைவர் முன் ஆணரிமா போல் இறுமாந்து நடக்கும் பெருமித நடையில்லை.

புரிந்த என்னும் பெயரெச்சத்தின் அகரம் தொக்கது. ஏறு என்னும் விலங்கின ஆண்பாற் பொதுப் பெயர் நடைச் சிறப்புப் பற்றி இங்கு அரிமாவின் (சிங்கத்தின்) ஆண்பாலைக் குறித்தது. கற்புடை மனையியாற் கணவன் மதிக்கப்படுதலை,

> "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறம். ௯:௯),
> "அறம்பா டிற்றே ஆயிழை கணவ" (புறம். ௯௪:௭),
> "சேணுறு நல்லிசைச் சேயிழை கணவ" (பதிற். அ௪: ௯௭)

என்னும் விளிகள் உணர்த்துதல் காண்க.

௬0. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
கல நன்மக்கட் பேறு.

(இ-ரை) மனைமாட்சி மங்கலம்-மனையியின் நற்குண நற்செய்கைச் சிறப்பே இல்லறத்திற்கு மங்கலமாவது; நன்மக்கட்பேறு அதன் நன்கலம்-நல்ல அறிவுடை மக்கட்பேறு அதற்கு அணிகலமாவது; என்ப—என்று கூறுவர் அறிந்தோர்.

மங்கலமென்பது நெடுநன்மை. அறிந்தோர் என்னும் எழுவாய் எஞ்சி நின்றது. 'மற்று' அசைநிலை; பெயர்மாற்று எனினும் ஒக்கும். இல்லறத்திற்கு அணிகலங் கூறுமுகத்தான் அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

அதி. ௬—மக்கட்பேறு

அஃதாவது, இனப்பெருக்கத்திற்கும் உலக நடப்புத் தொடர்ச்சிக்கும் இறைவன் வகுத்த இயற்கையான ஏற்பாட்டின்படியும், தத்தம் தொழிலில் தமக்கு உதவி செய்தற்பொருட்டும், உழைக்க இயலாத முதுமைக்காலத்தில் தம்மைப் பேணும் பொருட்டும், தாம் இறந்தபின் தம் பெயரால் அறஞ்செய்தற் பொருட்டும், தம் பெயரை இவ்வுலகில் நிலவச்செய்தற் பொருட்டும், பிள்ளைகளைப் பெறுதல்.

௬௧. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ—ரை) பெறுமவற்றுள்—இல்லறத்தான் பெறக்கூடிய பேறுகளுள்; அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல — அறியத்தக்க

நூல்களை அறியக்கூடிய பிள்ளைப்பேறு அல்லாத; பிற — வேறு சிறந்தவற்றை; யாம் அறிவதில்லை — யாம் அறிந்ததில்லை.

அறிவு என்பது அறிவைத்தரும் நூலைக் குறித்தலால் கருமிய, (காரிய) வாகுபெயர். அறிந்த என்பது தேற்றம் பற்றிய காலவழுவமைதி. பெற்றோர், பேறுகாலம் என்னும் இருசொற்களும் பிள்ளைப்பேற்றின் தலைமையை எடுத்துக் காட்டும்.

கூஉ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(இ—ரை) பழிபிறங்காப் பண்பு உடை மக்கட்பெறின் — பழி தோன்றுத நற்குணங்களையுடைய மக்களைப் பெறின்; எழுபிறப்பும் தீயவை தீண்டா — பெற்றோரை எழுபிறவி யளவும் துன்பங்கள் அணுகா.

பண்பு என்றது பெற்றோரை நோக்கி அறஞ்செய்வதற்கேற்ற நற்குணத்தை. பிள்ளைகள் செய்யும் நல்வினையாற் பெற்றோரின் தீவினைதையும் என்னும் கருத்துப்பற்றி, 'எழுபிறப்புந் தீயவை தீண்டா" என்றார். நிலத்திணை (தாவரம்) நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர் என்னும் எழுவகைப் பிறப்பினும் தீயவை தீண்டா என்பது, பிறப்பின் வகை பற்றியும் தொகை பற்றியும் பொருந்தாமையின், எழு மக்கட் பிறப்பு என உரைக்கப்பட்டது. இதுவும் ஒருவகை உயர்வு நவிற்சியே. ஏழு என்பது ஒரு நிறைவெண்; ஆதலால் நீண்ட காலத்தைக் குறிப்பது.

பிறங்குதல் விளங்குதல். கண்ணோட்டம் அல்லது அச்சம் பற்றி ஒருவரைப் பிறர் பழியாமலுமிருக்கலாமாதலின், "பிறராற் பழிக்கப்படாத" மக்கள் என்பது முற்றும் பொருந்தாது.

கூங. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(இ—ரை.) தம் மக்கள் தம் பொருள் என்ப — தம் மக்களைத் தம் செல்வமென்று பாராட்டுவர் பெற்றோர்; அவர் பொருள் தம்தம் வினையான் வரும் — அம்மக்களின் மகச்செல்வம் அவரவர் வினைக்கேற்றவாறு வரும்.

இம்மையிலும் மறுமையிலுமாக எதிர்காலத்தில் தம் மக்கள் தமக்குச் செய்யக்கூடிய நன்மையை எள்ளளவும் எதிர்நோக்காதே, அவர்களைக் குழவிப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் தம் சிறந்த செல்வமாகப் பாராட்டுவது பெற்றோர் வழக்கம். மக்களைப் பெற்றோ

ரின் உடைமையாகக் குறிக்கும்போதே அவ்வுடைமைகளும் பின்பு பெற்றோரைப்போல உடையோராக மாறும் நிலைமையிருத்தலால், அம்மாறுநிலைத் தொடர்ச்சியைக் காட்டற்கே "அவர் பொருள் தந்தம் வினையான் வரும்" என்றார். அது கரணிய (காரண)க் கிளவியமா யின், 'தம்வினை யான்வரு வான்" என்றே அமைத்திருப்பார்.

கூச. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(இ—ரை.) தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ்—தம் மக்களின் சிறுகைகளால் துழாவிக் குழைக்கப் பட்ட சோறு; அமிழ்தினும் ஆற்ற இனிதே — பெற்றோர்க்கு அவர்களின் மீதுள்ள காதல் மிகுதி யால் தேவருணவினும் மிக இனிமையுடையதாம்.

தம் என்னும் சொல், பெற்றோரின் உடற்கூறுயிருந்து அவருடம் பினின்றும் வெளிப்பட்ட மக்களின் நெருங்கிய தொடர்பை உணர்த்தும். தேவருண வென்றது மக்களின் குருட்டு நம்பிக்கை யான உலக வழக்கைத் தழுவியது.

"படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களோ யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே." (புறம். கஅஉ)

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்கோயுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்கோயிங் கில்லா தவர்." (நள. கலிதொடர்.)

என்னும் பாக்கள் இங்குக் கவனிக்கத் தக்கன.

கூரு. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(இ—ரை) மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம—பெற்றோர்க் குத் தம் குழந்தைகளின் உடம்பைத் தொடுதல் தம் உடலுக்கு இன் பம்; அவர் சொல் கேட்டல் செவிக்கு இன்பம்—அவரது மழலைச் சொற்கேட்டல் தம் செவிக்கு இன்பம்.

'மற்று' வினைமாற்று. இங்கு இன்பத்திற்குக் காரணியம், பெற்றோரின் காதலொடு குழந்தைகளின் உடம்பு நொய்ம்மையும் குரல் மழலைமையுமாம்.

கூகூ. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

(இ—ரை) தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் — தம் குழந்தைகளின் குதலைச் சொற்களைக் கேட்டறியாதவர்; குழல் இனிது யாழ் இனிது என்ப—புல்லாங்குழலிசை இனிதென்றும் செங்கோட்டியாழிசை இனிதென்றுங் கூறுவர்.

'குழல்' 'யாழ்' என்பன ஆகுபெயர். ஈரிசையினும் மழலைச்சொல் இனிதென்பது காதல்பற்றிய உயர்வு நவிற்சியே. செங்கோட்டியாழ் குடத்தின்மேல் தோல் போர்க்கப்பட்ட பண்டை வீணை.

கூஎ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(இ—ரை) தந்தை மகற்கு ஆற்றும் நன்றி — தந்தை கல்வித் திறமையுள்ள தன் மகனுக்குச் செய்யவேண்டிய நன்மையாவது; அவையத்து முந்தி இருப்பச் செயல்—கற்றோரவையின்கண் முதன்மையாயிருக்குமாறு அவனைச் சிறந்த கல்விமானாக்குதல்.

மகனைச் செல்வனாக்குவதினும் கல்விமானாக்குவது சிறந்தது என்பது கருத்து. "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே." என்றார் பொன்முடியாரும். (புறம். கூகஉ.).

கூஅ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(இ—ரை) தம்மின் — தம்மினும் மிகுதியாக; தம் மக்கள் அறிவுடைமை — தம் மக்கள் கல்வியறிவுடையராயிருத்தல்; மாநிலத்து மன் உயிர்க்கெல்லாம் இனிது — பெற்றோராகிய தமக்கு மட்டுமன்றி இம்மண்ணுலகத்துள்ள மற்றெல்லா மக்கட்கும் இன்பந் தருவதாம்.

மன் = மாந்தன் (OF, OS, OHG man. Skt. மநு). மன்பதை = மக்கட் கூட்டம். மன்னுயிர் என்பது இருபெயரொட்டு. மக்கள் கல்வியறிவில் அவையோரின் மட்டுமன்றிப் பெற்றோரினும் விஞ்சியிருக்கலாமென்பது கருத்து. தந்தையும் கற்றோனாகவும் அவையத்து முந்தியிருப்பவனாகவு மிருக்கலா மாதலால், "தந்தையினும் அவையத்தா ருவப்பர்." என்று பரிமேலழகர் கூறுவது பொருந்தாது.

கூகூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(இ—ரை) தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்—தன் மகனைக் கல்வியறிவு நிறைந்தோனென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய்; ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்—தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதினும் பெரிது மகிழ்வாள்.

"ஐயிரு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து"

மகிழ்ந்ததினும் சான்றோனெனக் கேட்ட மகிழ்ச்சி சிறந்ததாதலின், 'பெரிதுவக்கும்' என்றார். அறிவுடையோர் என்பது அவாய் நிலையான் வருவிக்கப்பட்டது. காமஞ்செப்பாது கண்டது மொழியும் நடுநிலையுண்மைக் கூற்று அவரதேயாகலின். மனம் மட்டுங் குளிரும் தந்தை மகிழ்ச்சியினும் மனமும் வயிறும் மார்பும் குளிரும் தாய் மகிழ்ச்சி மிகப்பெரிதாகலின் தனித்துக் கூறப்பட்டது.

தமிழ மகளிர்க்கு உயர்நிலைக் கல்வி விலக்கப் படாமையாலும் இருபாலார்க்கும் உரிய பொதுச் செய்திகளையும் தலைமைபற்றி ஆண் பாலின்மேல் வைத்துக் கூறுவது மரபாதலாலும், "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை" என்று ஆசிரியரும் பொதுப் படக் கூறியிருப்பதாலும், "பெண்ணியல்பால் தானுக வறியாமையிற் 'கேட்டதாய்' என்றார்." என்று பரிமேலழகர் கூறியது தவரும். இனி, ஔவையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, பூதப்பாண்டியன் தேவியார், பேய்மகள் இளவெயினி, வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார் முதலிய பண்டைப் புலத்தியரை அவரும் அறிந்திருந்தமையால், அவர் கூற்று நெஞ் சார்ந்த பொய்யுமாம். மகன்மேலுள்ள அன்புப் பெருக்கால் அவனறிவை மிகுத்தெண்ணும் தாய்க்கு நடுநிலையறிஞர் பாராட்டு, முழுநம்பிக்கை யுண்டாக்கும் என்பதே கருத்து.

ஏ0. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

(இ—ரை) தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி—தான் பிறந்ததினின்று தன்னை வளர்த்துக் கல்வி கற்கவைத்து, உலகிற் பிழைப்பதற்கு ஒரு தொழிலிற் பயிற்றி, மணஞ் செய்வித்து மனையறம் படுத்தி, தன் தேட்டிலும் ஒரு கூறளித்த தன் தந்தைக்கு, மகன் செய்ய வேண்டிய கைம்மாறுவது; இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல்—தன் அறிவாற்றலையும் நற்குண நற்செயல்களையும்

கண்டோர், இவன் தந்தை இவ் வருமந்த மகனைப் பெறுதற்கு என்ன கடுந்தவஞ் செய்தானே என்று வியந்து கூறுஞ்சொல்லே, அவர் வாயினின்று தானுக வரச் செய்தலாம்.

சொல் என்றது சொல்லே வருவித்தலைக் குறித்தது. 'கொல்' ஐயம் குறித்த இடைச்சொல். தந்தை நெடுங்காலமாகச் செய்த பல் வேறு பெருநன்மைக்கும் மகன் செய்ய வேண்டிய கைம்மாறு ஒரு சொல்லே என்று; ஒருவகை அணிநயம் படக் கூறினர். இதனால், தந்தை செய்த நன்றிக்குச் சரியாக ஈடுசெய்தல் அரிதென்பதும், "தென்புலத்தார் கடனைத்" தீர்க்க நன்மக்களைப் பெறுதல் பெற்றோர் தம் விருப்பம்போற் செய்துகொள்ளக்கூடிய செயலன்றென்பதும், பெறப்படும்.

அதி. அ — அன்புடைமை

அஃதாவது, இல்லறத்தானும் அவன் வாழ்க்கைத் துணையு மாகிய, கணவனும் மனைவியும் தாம் பெற்ற மக்களிடத்துக் காட்டிய அன்பை, துறவோர்ப் போற்றல், விருந்தோம்பல், ஒப்புரவொழுகல், இல்லார்க் கீதல், இரப்போர்க்கிடுதல் முதலிய இல்லறவினைகள் நடை பெறற்கேற்பப் பிறரிடத்தும் உடையராயிருத்தல். பிள்ளைகளைப் பெற்றவர்க்கே பிறரிடத்து அன்புண்டாகும் என்பது பொதுவான உலகக் கொள்கை.

எக. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

(இ—ரை) அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்—ஒருவரது அன்பிற்கும் அதைப் பிறர் அறியாதவாறு அடைத்துவைக்கும் தாழ்ப்பாள் உளதோ?; ஆர்வலர் புன் கண் நீர் பூசல் தரும்—தம்மால் அன்புசெய்யப் பட்டாரது துன்பங்கண்டவிடத்து அன்புடையாரின் துன்புறுங் கண் சிந்தும் நீரே அவருள்ளத்திலுள்ள அன்பை எல்லா ரும் அறியப் பறைசாற்றிவிடும்.

உம்மை சிறப்புப் பற்றியது. புன்கண் புன்கூர்ந்த கண். புன்மை துன்பம். ஆர்வலர் துன்பம் அவர் கண்ணின் மேல் ஏற்றப்பட்டது.

இனி, துன்பக்கண்ணீரன்றி நீண்டகாலத்திற்குப்பின் கண் ணன்ன கேளிரைக் காணும்போது சிந்தும் காதற்கண்ணீரும் உண் டென அறிக.

எஉ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(இ—ரை) அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் — அன்பில்லாதவர் எல்லாப் பொருள்களையுந் தமக்கே பயன் படுத்துவர்; அன்பு உடையார் என்பும் பிறர்க்கு உரியர்—அன்புடையாரோ பிறிதின் கிழமைப்பொருள்களை மட்டுமன்றித் தற்கிழமைப் பொருளாகிய தம் உடம்பையும் பிறர்க்குப் பயன் படுத்துவர்.

பிரிநிலையேகாரமும், 'உரியர்' என்னும் வினைக்கேற்ற 'எல்லாவற்றிலும்' 'என்பாலும்' என்னும் கருவி வேற்றுமையுருபுகளும் தொக்கன. எலும்பு என்பதன் மரூஉவான 'என்பு' சினையாகு பெயர். உம்மை சிறப்புமை. உடம்பைப் பிறர்க்கு உதவிய அன்பிற்கு, தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவிற்காகத் தன் தசையையும் உடம்பையும் அளித்த செம்பி (சிபி) என்னும் சோழ வேந்தன் கதை எடுத்துக் காட்டாகக் கூறப்பெறும். ஆயின், அதனினும் சிறந்த எடுத்துக் காட்டு, தன் தம்பியால் தன் நாடு கொள்ளப்பட்டுக் காட்டிற்போய்த் தங்கியிருந்த குமணன், தன்னைப்பாடிய பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்குத் தன்தலையை வெட்டிக்கொண்டுபோய்த் தன் தம்பியிடங் காட்டிப் பெரும் பொருள் பெறுமாறு தன் வாளைக் கொடுத்ததாகும். இதை,

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் ஞெதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்"

என்று (புறம். கசுடி) அப்புலவர் பாடியதினின்று அறிந்து கொள்க. இனி, பாரி தன்னையும் பரிசிலர்க்குத்தர அணியமாயிருந்ததும் இத்தகைய செயலாம்.

"பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னுன் அவர்வரை யன்னே."

என்று (புறம். கஅஅ) கபிலர் பாடியிருத்தல் காண்க.

எங. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ—ரை) ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு — பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடு பொருந்திய தொடர்பை;

அன்போடு இயைந்த வழக்கு என்ப — அன்பு செய்தற்கு ஏற்பட்ட நெறியின் பயன் என்று கூறுவர் அறிவுடையோர்.

வழக்கு என்பது வழங்கும் நெறி. அஃது இங்கு அதன் பயனைக் குறித்தது. 'அன்பு' ஆகுபெயர். அன்பு செய்தலே மக்கட் பிறப்பின் நோக்கமும் பயனும் என்பது இங்குக் கூறப்பட்டது.

எச. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(இ—ரை) அன்பு ஆர்வமுடைமை ஈனும்—உறவினரிடத்துச் செய்யும் அன்பு ஒருவனுக்குப் பிறரிடத்தும் விருப்பத்தை உண்டாக்கும்; அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும் — அது நாளடைவில் எல்லாரையும் நட்பாக்கி எல்லாப் பொருள்களும் எளிதாய்க் கிடைக்கக் கூடிய நல்ல நிலைமையை உண்டு பண்ணும்.

நாடாமை வருந்தித் தேடாமை.

எடு. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்ரு ரெய்துஞ் சிறப்பு.

(இ—ரை) வையகத்து இன்புற்ரூர் எய்தும் சிறப்பு—இவ்வுலகத்து இல்லறத்தில் நின்று இன்பம் நுகர்ந்தவர் மறுமையில் தேவருலகஞ் சென்று அடையும் சிறந்த இன்பத்தை; அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப—அவர் முன்பு இங்கு அன்போடு பொருந்த வாழ்ந்த நெறியின் பயன் என்று சொல்வர் அறிந்தோர்.

'வழக்கு' என்பது ஆகுபொருளது. இல்லறத்தினாலேயே இம்மையில் இவ்வுலக இன்பமும் மறுமையில் விண்ணுலக வின்பமும் பெறுவதற்குக் காரணியமாயிருப்பது அன்பு ஒன்றே என்பது இங்குக் கூறப்பட்டது.

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(இ—ரை) அன்பு அறத்திற்கே சார்பு என்ப—அன்பு அறத்திற்கே துணையாவது என்று சிலர் சொல்வர்; அறியார்—அவர் அறியார்; மறத்திற்கும் அஃதே துணை—அதன் மறுதலையான மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது.

அறம் மறம் என்பன இங்கு நல்வினை தீவினை என்று பொருள் படும் எதிர்ச் சொற்கள். அன்பு மறத்திற்குத் துணை என்பது, இஞ்சி பித்தத்திற்கு நல்லது என்பது போல்வது.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்." (கஙிஅ)

"இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (க்கச)

என்னுங் குறள்கள் இங்குக் கவனிக்கத் தக்கன. ஒரு பகைவனுக்கு நன்மை செய்தவிடத்து அவன் நாணித் தன் பகைமையை விட்டு நட்பாவது இயல்பாதலின், "மறத்திற்கு மஃதே துணை" என்றார்.

ஒருவன் தன் மனைவி மக்கள் மேலுள்ள அன்பினால், அவரைக் காத்தற்குத் நீயவழிகளிலும் பொருள் தேடுதல் உலகத்து நிகழ்தலால், அதனையே "மறத்திற்கு மஃதே துணை" என்று குறித்தார் என்று உரை கூறுவாருமுளர். அகப்பற்றால் தீமை செய்வது போன்றதே புறப்பற்றால் தீமை செய்வது மாதலானும், தீமைக்குத் துணைசெய்வது அறத்தொடு பொருந்தாமையாலும், அது உரையன்மை அறிக.

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(இ—ரை) அறம்—அறத்தெய்வம்; அன்பு இலதனை—அன்பில்லாத உயிரை; என்பு இலதனை வெயில் போலக் காயும்—எலும்பில்லாத வுடம்பை வெயில் எரித்தாற் போல் எரிக்கும்.

எலும்பில்லாத வுடம்பு பூச்சி புழுக்களுடையன. அன்பில்லாத வுயிர் என்றது மக்களுயிரை. வெயில் வந்தபோது எலும்பில்லா வுடம்பு துன்புறுவதுபோல, வினைப்பயன் வந்தபோது அன்பு செய்யா மக்களுயிர் துன்புறும் என்பது. அன்பு செய்யாமையாவது அதற்கு மறுதலையான தீமை செய்தல். "அறம் பிழைத்தோர்க்கு அறங் கூற்ற மாவது" என்றார் இளங்கோவடிகள் (சிலப். பதிகம்.) "அல்லவை செய்வார்க் கறங் கூற்றம்" என்றார் விளம்பிநாகனார் (நான்மணி. அ). மக்களை உயிர் என்றது அன்பின்மையாகிய இழிவு பற்றி.

எஅ அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

(இ—ரை) அகத்து அன்பு இல்லா உயிர்வாழ்க்கை—உள்ளத்தில் அன்பில்லாத வுயிர் இல்லற வாழ்க்கை நடாத்துதல்; வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்த அற்று—பாலை நிலத்தின்கண் பட்டுப்போன மரம் தளிர்த்தாற் போலும்.

நடவாத தென்பதாம். 'வற்றல்' தொழிலாகு பெயர். 'வற்றன் மரம்' இருபெயரொட்டு. அன்னது—அற்று. அன்பில்லா மக்களே உயிர் என்றது இழிவுக் குறிப்பு.

எங. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(இ—ரை) யாக்கை யகத்து உறுப்பு அன்பு இல வர்க்கு—இல்லறம் நடத்துவாரின் உடம்புள் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு; புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்—மற்றப் புறத்து நின்று உறுப்பாவன வெல்லாம் அவ்வறஞ் செய்தற் கண் என்ன உதவியைச் செய்யும்?

புறத்துறுப்பாவன இடம் பொரு ளேவல் முதலியன.

இது பரிமேலழக ருரையைத் தழுவியது.

இனி, மணக்குடவர் பரிதி காளிங்கர் உரைக் கருத்து வருமாறு :—

உடம்பிற்கு அகத்துறுப்பாகிய அன்பிலாதவர்க்குப் புறத்துறுப் பாகிய மெய் வாய் கண் மூக்குச் செவியும், மார்பும் தோளும் முகமும் மயிர்முடியும் பிறவும், மரப்பாவை போல் அழகாயிருந்தும் என்ன பயன்?

இதுவுங் கொள்ளத் தக்கதே. அகத்துறுப்பாகிய அன்பில்லாத வர்க்குப் புறத் துறுப்பாகிய ஐம்பொறிகளும் கை கால் முதலிய வினை யுறுப்புக்களும் நிறைவாயிருந்தும், அவற்றுல் இல்லற நடப்பிற்கு என்ன பயன் என்று வினவற்கிட மிருத்தலால், ''அதற்கு இல்லறத் தோடு யாதுமியை பில்லாமை யறிக.'' என்று பரிமேலழகர் மறுத் துரைப்பது பொருந்தாது. அன்பில்லாத வுடம்பு என்பு தோற் போர்ப் பென்று ஆசிரியரும் அடுத்த குறளிற் கூறுதல் காண்க.

அ○. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(இ—ரை) அன்பின் வழியது உயிர்நிலை—அன்பின் வழிப்பட்ட உடம்பே உயிர்நிலை என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த—அவ்வன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்புகள் உயிரில்லாது எலும்பைத் தோலாற் போர்த்த போர்ப்புக்களே.

அன்பின் வழியது என்பது அன்பு செய்தற் கென்றே ஏற்பட்டது. இதன் விளக்கமே,

''அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.''

என்னுங் குறள். உயிர்நிலை என்பது கதவுநிலை என்பது போன்ற கூட்டுச் சொல். என்புதோற் போர்ப்பு என்றது பிணத்தினும் இழிந்த தென்னுங் குறிப்பினது.

அதி. ௪—விருந்தோம்பல்

அஃதாவது, இல்லறம் நடத்தும் கணவனும் மனைவியும், அன்புடையராயிருந்து, தம் இல்லத்திற்கேனும் ஊருக்கேனும் புதிதாக வந்த உயர்ந்தோரையும் ஒத்தோரையும், அவர் தங்கும் சில பல நாட்கட்கு அவர் தகுதிக்கும் தம் நிலைமைக்கும் ஏற்ப, உறையுளும் சிறந்தவுணவும் உதவிப் பேணுதல்.

வேற்றூரிலிருந்து வந்த உறவினர்க்கும் நண்பர்க்கும் இங்ஙனமே சிறப்பு நடக்குமேனும், அது அறத்தின்பாற் படாது வழக்கமும் கடமையும் பற்றியதாகும். அதனால், அதை உறவாடல் என்றும் நட்பாடல் என்றும் பிரித்துக் கூறல் வேண்டும்.

விருந்தோம்பல் என்னும் சிறந்த அறம், ஆரியர் தென்னாடு வந்து பிறப்பொடு தொடர்புற்ற குலப் பிரிவினையால் தமிழரின் ஒற்றுமையைச் சிதைத்தபின், தமிழகத்து அடியோடு நின்று விட்டது.

விரும்புவது என்னும் வேர்ப் பொருளாக் கொண்ட விருந்து என்னுஞ் சொல், பின்பு விரும்பப் பெற்ற புதியவரையும் அவர் நிலைமையான புதுமையையும் அவர்க்களிக்கும் சிறந்த வுணவையும் முறையே குறித்து, இன்று உறவினர்க்கும் நண்பர்க்கும் படைக்கும் சிறந்த வுணவையே குறிக்கும் இழிபடைந்துள்ளது. பண்டை விருந்தினர் புதியவராயிருந்ததினால் புதுவர் எனவும் பட்டார்.

''புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்'' (மலைபடு. ௫௪௨).

அகு. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ—ரை) இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம்—கணவனும் மனைவியும் தம் இல்லத்தின்கண் இருந்து தம்மையும் தம் மக்களையும் தம் பொருள்களையும் பேணிக்காத்து வாழ்வதெல்லாம்; விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு—விருந்தினரைப் பேணி அவருக்குப் பலவகையிலும் நன்றி (உபகாரம்) செய்தற் பொருட்டே.

இக்காலத்திற்போல் உண்டிச் சாலைகளும் தங்கல் விடுதிகளு மில்லாத பண்டைக் காலத்தில், பணம் பெற்றேனும், இல்லறத்தாரை யன்றி விருந்தினரைப் பேண ஒருவரு மின்மையின், இல்வாழ்க்கை யின் அடிப்படை நோக்கம் விருந்தோம்பலே என்றார். 'விருந்து' பண்பாகு பெயர்.

அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(இ—ரை) சாவா மருந்து எனினும்—உண்ணப் படும் உணவு சாவை நீக்கும் மருந்தே யெனினும்; விருந்து புறத்ததாத் தான் உண்டல் வேண்டற் பாற்று அன்று—விருந்தினரை வீட்டிற்கு வெளியே வைத்துவிட்டுத் தான் மட்டும் உள்ளிருந்து தனித் துண்டல் விரும்பத்தக்க தன்று.

இனி, விருந்தினரை வெளியே வைத்துவிட்டுத் தனித் துண்டல் சாவா மருந்தாகும் என்று சிலர் சொன்னாராயினும், அது செய்யத் தக்கதன்று என வேறோர் உரையுமுளது. அது,

"நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று."

என்றற் போல்வது.

சாவா மருந்து சாவாமைக்குக் காரணியமாகிய மருந்து. நோவா மருந்து, மூவா மருந்து, சாவா மருந்து என்னும் மூவகை மருந்து களுள் சாவா மருந்து தலை சிறந்ததாதலின், உம்மை முற்றும்மை.

அதிகமான் ஔவையார்க்கு அளித்த அருநெல்லிக்கனி பரிசில் போன்றதாதலின், ஈண்டைக்கு எடுத்துக் காட்டாகாது.

இனி, விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாம் (சாவை யொக்கும்). அங்ஙனம் உண்பது சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று என்றும் பிரித்துப் பொருள் கொள்வர்.

அங. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(இ—ரை) வைகலும் வருவிருந்து ஓம்புவான் வாழ்க்கை—நாள்தோறும் தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரைப் பேணு வானது இல்வாழ்க்கை; பருவந்து பாழ்படுதல் இன்று—வறுமையால் துன்புற்றுக் கெடுதல் இல்லை.

இது நாட்டு வளத்தையும் இல்லறத்தானின் செல்வநிலையையும் பொறுத்தது.

அஅ அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(இ—ரை.) முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்—முக மலர்ந்து நல்ல விருந்தினரைப் பேணுவானது இல்லத்தின்கண்; செய்யாள் அகன் அமர்ந்து உறையும்—திருமகள் மனமகிழ்ந்து வதி வாள்.

திருமகள் மனமகிழ்தல் செல்வம் நல்வழியிற் செலவிடப்படுதல் பற்றி. வதிதல் நிலையாகத் தங்குதல். நல் விருந்தினர் அறிவும் ஒழுக்கமும் தன்மானமும் உள்ளோர்.

அடு. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

(இ—ரை.) விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்—முன்பு விருந்தினரை உண்பித்துவிட்டுப் பின்பு மீந்ததைத் தானுண்ணும் வேளாளனது நிலத்திற்கு; வித்தும் இடல் வேண்டுமோ—விதை தெளித்தலும் வேண்டுமோ? வேண்டியதில்லை.

தானே விளையும் என்பது குறிப்பெச்சம். இஃது இக்காலத்திற்கு இன்மை நவிற்சியாகத் தோன்றலாம். வளமிக்க பண்டைக் காலத்தில், அறுவடை நாளில் வயலிற் சிந்திய மணிகள் களந் தூர்க்கப் படாமலே கிடந்து, அடுத்துப் பெய்த மழையால் முளைத்து வளர்ந்து விளைந்திருக்கலாம். இனி, இக்காலத்தும், வித்தையும் சமைத்து விருந்தினர்க்குப் படைத்த வேளாளனது நிலத்தில், அவனுக்குத் தெரியாமல் இரவோடிரவாக வேறோர் அறவாண னன செல்வன் தன் சொந்த வித்தை விதைக்கலாம்.

இனி, விருந்தோம்பி மிச்சில் மிசைவான்—விருந்தினரை யுண் பித்துப் பின் மீந்ததை யுண்ணும் இயல்புள்ள வேளாளன்; புலம் வித்து இடலும் வேண்டுமோ—விருந்தோம்பல் முட்டுப் பட்ட விடத் துத் தன் நிலத்தில் விதைக்கு வைத்திருந்ததை விதைக்கவும் விரும்புவானேனோ? விரும்பான் என்று, வேறும் ஒரு பொருள் கொள் வர். இதற்கு இனியான்குடி மாற நாயனார் வரலாறு ஓர் எடுத்துக் காட்டாம்.

'கொல்' அசைநிலை. பிச்சில் அடுகலத்தில் அல்லது பெட்டியில் மிஞ்சுவது: தூய்மையாயிருப்பது. எச்சில் உண்கலத்தில் அல்லது இலையில் எஞ்சுவது: எச்சிலோடு கூடியது. இவ்வேறுபாடறிக.

அசு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
ரல்லிருந்து வானத் தவர்க்கு.

(இ-ரை.) செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்-தன்னிடம் முந்திவந்த விருந்தினரைப் பேணிவிட்டுப் பின்பு பிந்தி வரும் விருந்தினரையும் எதிர்பார்த்து அவரோடு தானுண்ணக் காத்திருப்பான்; வானத்தவர்க்கு நல்விருந்து—மறுமையில் தேவனாகி விண்ணகத்தாரால் சிறந்த விருந்தினனாக ஏற்றுக்கொள்ளப்படுவான்.

பண்டை வேளாண் மகளிர் தம் பிள்ளைகளை முறையாக விடுத்து வழிப்போக்கரைத் தடுத்துத் தம் வீட்டிற்கு வருவித்து விருந்தோம்பிய செய்தியை.

"உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்கா முலக்கை யிரும்புழுகந் தேய்த்த
அவைப்புமா னெரிசி யமலிவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்"

என்னும் சிறுபாணாற்றுப் படைப் பகுதியால் (கஉ0—கஉக) அறிக.

அள. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந் தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(இ - ரை.) வேள்விப்பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை—விருந்தினர்க்குணவு படைத்தலின் பயன் இவ்வளவினது என்று வரையறுத்துச் சொல்லுந் திறத்த தன்று; விருந்தின் துணைத் துணை—விருந்தினரின் தகுதியளவே அதன் அளவாம்.

வேட்டுச் செய்யும் வினையாகலின் விருந்தோம்பலை வேள்வி என்றார். வேட்டல் விரும்பல்.

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்."

என்பது நாலடியார் (உஅ).

அஅ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(இ - ரை.) விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார்—விருந்தினரைப் பேணி அவர்க்குச் சிறந்த உணவு படைத்தலை மேற்கொள்ளாதார்; பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர்—அவ்வறங்கட்குச் செலவிட வேண்டிய பொருளை நிலையானதென்று மயங்கி வருந்திப் பாதுகாத்தும் பின்பு இழந்துவிட்டதனால், இன்று எமக்கு யாதொரு பற்றுக்கோடும் இல்லையென்று நொந்து கூறுநிற்பர்.

"ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங்—காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்." (நாலடியார், உஅ0)

ஆதலால், நிலையாத பொருள் நிலையும் போதே நிலைத்த பயனைத் தேடிக்கொள்க என்பது இதனாற் கூறப்பட்டது.

வேள்வி என்னும் தூய தென்சொல்லாகிய தொழிலாகுபெயர் (ம., தெ. வேள்வி; க. பேளுவெ) விரும்பு என்று பொருள்படும் வேள் என்னும் முதனிலையடிப் பிறந்து, பின்வருமாறு, விரும்பிச் செய்யும் பல்வேறு வினைகளைக் குறிக்கும்.

க. திருமணம். "நா முன்பு தொண்டுகொண்ட வேள்வியில்" (பெரியபு. தடுத்தாட். கூஎ).

உ. விருந்தினர்க்குப் படைப்பு. "வேள்வி தலைப்படாதார்" (குறள். அஅ).

கூ. தெய்வத்திற்குப் படைப்பு, பூசனை (பிங்.) "வேள்வியினழகியல் விளம்புவோரும்" (பரிபா. கூ : சூஉ).

ச. பேய்கட்குப் படைப்பு, களவேள்வி. "பண்ணிதைஇய பயங்கெழு வேள்வியின்" (அகம். கூ : கக).

ஙி. கொடை (பிங்.).

ஆரியர் தம் ஆரியக் கொள்கைகளைத் தமிழ்நாட்டிற் பரப்புதற்கும் 'யாகம்' என்னும் கொலை வேள்வியைத் தமிழரிடை எதிர்ப்பின்றிச் செய்தற்கும், தம் கொலை வேள்விக்குக் கடவுள் வேள்வியென்றும் வேதக்கல்விக்குப் பிரம வேள்வியென்றும் பெயரிட்டு, அவற்றொடு பேய்ப்படையலாகிய பூத வேள்வியையும் விருந்தோம்பலாகிய மாந்தன் வேள்வியையும் இறந்த முன்னோர்க்குப் படைத்த

லாகிய தென்புலத்தார் வேள்வியையுஞ் சேர்த்து, ஐவகை வேள்வி யென்று தொகுத்துக்கூறி, வேள்வியென்று வருமிடமெல்லாம் ஆரிய வேள்வியை நீக்குமாறு செய்துவிட்டனர்.

அஙூ. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(இ - ரை.) உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை—செல்வக் காலத்து வறுமையாவது விருந்தோம்பலிலப் புறக்கணிக்கும் பேதைமை; மடவார்கண் உண்டு—அது பேதைய ரிடத்திலேயே உள்ளது.

செல்வத்தின் பயனே இழப்பித்து அதை வறுமையாக மாற்று வதால், பேதைமையை வறுமையாகச் சார்த்திக் கூறினர்.

கூ0. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(இ - ரை.) அனிச்சம் மோப்பக் குழையும்—இயல்பாக மென் மையாகவுள்ள பூக்களுள்ளும் மிக மென்மையானதாகச் சொல்லப் படும் அனிச்சப் பூவும் மோந்தால் மட்டும் வாடும்; விருந்து முகம் திரிந்து நோக்கக்குழையும்—ஆனால், தன்மானமுள்ள விருந்தினரோ, வீட்டாரின் முகம் வேறுபட்டு நோக்கிய மட்டில் வாடிவிடுவர்.

'அனிச்சம்' முதலாகுபெயர். தொட்டு முகந்தால் வாடும் அனிச்ச மலரினும் தொலைவில் முகம் வேறுபட்டு நோக்கிய மட்டில் வாடும் விருந்தினர் மென்மையராதலின், விருந்தோம்புவார் இன் சொற்கும் இன்செயற்கும் முன் இன்முகங் காட்டவேண்டுமென்பது இங்குக் கூறப்பட்டது.

அதி கo—இனியவை கூறல்

அஃதாவது, பொதுவாக எல்லார்க்கும், சிறப்பாக விருந்தினர்க் கும், இன்முகங் காட்டியபின் இன்சொற் சொல்லுதல்.

கூக. இன்சொலா லீர மளீஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(இ - ரை.) இன்சொல்—இனிய சொல்லாவன; ஈரம் அளீஇ—அன்பு கலந்து; படிறு இலவாம்—வஞ்சனை யில்லாத; செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்—மெய்ப் பொருளையறிந்த சான்றோர் வாய்ச் சொற்கள்.

'ஆல்' அசைநிலை. படிறு—பொய். எப்பாலவரும் இயையும் உண்மைப்பொருள் என்றும் மாறாது நேராயிருத்தலின் 'செம்பொருள்' என்றார். 'செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்றது, அவர் வாயினின்று வருஞ்சொற்களெல்லாம் என்றும் இனியனவே என்பதை உணர்த்தற்கு; 'அதூஉ' சொல்லிசையளபெடை.

கூஉ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னுகப் பெறின்.

(இ - ரை.) முகன் அமர்ந்து இன்சொலனுகப் பெறின்—ஒருவரைக் கண்டபொழுதே முகமலர்ந்து இனிய சொல்லும் உடையனுகப் பெறின்; அகன் அமர்ந்து ஈதலின் நன்று—அது மனமுவந்து ஒரு பொருளைக் கொடுத்தலினும் சிறந்ததாம்.

வெறுநோக்கினும் வெறுஞ் சொல்லினும் ஒரு பொருளைக் கொடுத்தலே உண்மையிற் சிறந்ததாயினும், மக்கள் பொதுவாக வெளிக்கோலத்திற்கே வயப்படுவதால், அகமலர்ச்சி வெளிப்படாத கொடையினும் முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல்லே நல்ல தென்றார்.

கூஎ. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சொ லினதே யறம்.

(இ - ரை.) முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி—ஒருவரைக் கண்டபொழுதே முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி, அகத்தான் ஆம் இன்சொலினதே அறம்—பின்பு நெருங்கியவிடத்து அக மலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுதலே யுடையதே அறமாவது.

ஒருவரைக் கண்டபொழுதே ஒரு பொருளீதல் பொதுவாக இயையாமையின், முதற்கண் இன்முகங் காட்டலும் உடனும் அடுத்தும் இன்சொற் சொல்லுதலும் மக்களைப் பிணித்து மகிழ்விக்குந் தன்மையனவாதலின், விருந்தினரிடத்தும் அம்முறையைக் கையாள்வதே சிறந்ததென்றார்.

கூஏ. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

(இ - ரை.) யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்கு—யாரிடத்தும் இன்புறுத்தும் இன்சொல்லைச் சொல்வார்க்கு; துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்—துன்புறுத்தும் வறுமை இலதாகும்.

'உறாஅம்' ஈரிடத்தும் பிறவினையான சொல்லிசை யளபெடை. துவ்வாமை நுகராமை. துய்—து. எல்லாரிடத்தும் இன்சொற் சொல்வார்க்கு எல்லாரும் நண்பரும் அன்பருமாவராதலின், எல்லாப் பொருளுங் கிடைக்குமென்றும் அதனுல் வறுமையிராதென்றும் கூறினுர். வறுமையால் ஐம்புல நுகர்ச்சி கூடாமையின் வறுமையைத் துவ்வாமை யென்றுர். வறியவரைத் 'துவ்வாதவர்' என்று முன்னரே (சக) கூறியிருத்தல் காண்க.

கூடு. பணிவுடைய னின்சொல னுத லொருவற்
கணியல்ல மற்றப் பிற.

(இ - ரை.) ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலன் ஆதல்—ஒருவனுக்கு அணியாவன அடக்கமுடைமையும் இன்சொலுடைமையுமாம்; பிற அல்ல—மற்றப் பொன்னுலும் மணியாலும் செய்யப்பட்ட அணிகள் அணிகளாகா.

பணிவுடைமை இன்முகத்தோடு கூடியதாதலின் இன்சொற்கு உடன் சேர்த்துக் கூறப்படும் இனமாயிற்று. பண்டைக்காலத்தில் ஆடவரும் காதிலும் கழுத்திலும் கையிலும் அணியணிவது பெரு வழக்கமாதலின், 'ஒருவற்கு' என ஆண்பாலாற் குறித்தது தலைமையைப் பற்றியதாகும். அடக்கமுடைமையும் இன்சொலுடைமையும் இரு பாற்கும் ஒப்பப் பொதுவேனும், அணியுடைமை பெண்பாற்குப் போல் ஆண்பாற்குத் தேவையன்று என்பது குறிப்பான் அறியப்படும். 'மற்று' அசை நிலை.

கூசு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(இ - ரை.) நல்லவை நாடி இனிய சொலின்—விளைவாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை ஆராய்ந்தறிந்து அவற்றைச் செவிக்கினிதாக ஒருவன் சொல்வானுயின்; அல்லவை தேய அறம் பெருகும்—அவனுக்குத் தீவினைப் பயன் குன்ற நல்வினைப் பயன் வளரும்.

அறம் நல்வினை; இங்கு அதன் பயனைக் குறித்தது. அறமல்லாதவை தீவினைகள். தீவினைகள் தேய்தலாவது தீவினைப் பயன் குன்றல். நல்வினையும் தீவினையும் ஒளியும் இருளும் போல மறுதலைப் பொருள்களாதலின், ஒளியின் முன் இருள் கெடுதல் போல நல்வினைப் பயன் முன் தீவினைப் பயன் கெடுமென்றுர். நல்லவற்றைச் சொன்னலும் அறமாகுமேனும், அவற்றைக் கடுமையாகச் சொல்லின் கேட்பார் மனம் வருந்தி அவ்வறங் கெடுதலால், நல்ல

வற்றையும் இனிதாகச் சொன்னலன்றி அறமாகாதென்றார். இதனால் இன்சொல்லின் அறத்தன்மை வலியுறுத்தப் பெற்றது.

கூஎ. நயனீன்று நன்மை பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(இ-ரை.) பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல்—விளைவாற் பிறர்க்கு நன்மை செய்து இனிமைப் பண்பினின்றும் நீங்காத சொல்; நயன் ஈன்று நன்றி பயக்கும்—இம்மைக்கு நேர்பாட்டை (நீதியை) உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் விளைவிக்கும்.

நேர்பாடு என்பது நீதி என்னும் வடசொற்கு நேர்த்தென்சொல். நேர்மை என்பது நேர்பாட்டையுங் குறிக்கும் பல பொருளொரு சொல். நேர்பாடு நேர்மையான ஒழுக்கம். "கோணே நேர்பாடா யிருந்தான்" (பாரத. சூது. உஉ எ). 'பண்பு' என்பது இங்கு அதிகாரத்தால் இனிமைப் பண்பைக் குறித்தது. தலைப்பிரிதல் என்பது தலைக்கூடுதல் என்பதற்கு எதிர்.

கூஅ. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்

(இ – ரை.) சிறுமையுள் நீங்கிய இன்சொல்—விளைவாலும் பொருளாலும் குரலாலும் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல்; இம்மையும் மறுமையும் இன்பம் தரும்—ஒருவனுக்கு இருமையிலும் இன்பம் விளைவிக்கும்.

இம்மை இன்பமாவது ஐம்புல நுகர்ச்சி பெற்று நோயற்ற நீடு வாழ்வு. மறுமையின்பமாவது விண்ணுலக வாழ்வு அல்லது மண்ணுலக நற்பதவி. இன்சொல் என்பது இன்செயலையுந் தழுவும்.

கூக. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(இ—ரை.) இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்—பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பந் தருதலை நுகர்ந்தறிகின்றவன்; வன்சொல் வழங்குவது எவனோ—தான் மட்டும் பிறரிடத்தில் வன்சொல்லை ஆள்வது என்ன பயன்கருதியோ!

'கொல்' அசைநிலை. 'ஓ' இரக்கப் பொருளது. "தன்னுயிர் போல் மன்னுயிரை நினைக்க வேண்டும்." என்பது, இங்கு வற்புறுத்தப் பட்டது.

க00. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(இ—ரை.) இனிய உளவாக இன்னாத கூறல்—தனக்கு அறமும் பிறர்க்கு இன்பமும் பயக்கும் இனிய சொற்களும் எளிதாய் வழங்குமாறு தன்னிடத்திலிருக்கவும், அவற்றை வழங்காது தனக்குத் தீதும் (பாவமும்) பிறர்க்குத் துன்பமும் பயக்கும் கடுஞ் சொற்களை ஒருவன் வழங்குதல்; கனி இருப்பக் காய் கவர்ந்த அற்று—இனியனவும் வாழ்நாளை நீட்டிப்பனவுமான கனிகளும் கைப்பனவும் சாவைத் தருவனவுமான காய்களும் ஒரு சரியாய்க் கைக்கு எட்டுவனவாக விருக்கவும், அவற்றுள் முன்னவற்றை வீட்டுவிட்டுப் பின்னவற்றை மட்டும் பறித்துண்ட லொக்கும்.

பொருளைச் சிறப்பிக்கும் அடைமொழிகள் உவமத்திற்கும் ஏற்குமாதலால், இனிய கனி என்பது ஒளவையாருண்ட அருநெல்லிக் கனி போலும் வாழ்வு நீட்டியையும், இன்னாத காய் என்பது எட்டிக்காய் போலும் உடன்கொல்லியையும், குறிக்கும் என அறிக. 'கவர்ந் தற்று' என்னும் சொல் மரங்களினின்று காய்கனிகளைப் பறிக்குஞ் செயலை நினைவுறுத்தும். கவர்தல் பறித்தல்; இங்குப் பறித்துண்டல். பிறரிடத்து இன்னுச் சொற் சொல்லுதல் தனக்கே தீங்கை வருவிக்கும் பேதைமை யென்பது இதனாற் கூறப்பட்டது.

உவமமும் பொருளும் சேர்ந்தது உவமை என அறிக.

அதி. கக—செய்ந்நன்றி யறிதல்

அஃதாவது, இன்முகத்தோடும் இன்சொல்லோடும் விருந்தோம்பி வேளாண்மை செய்தவர்க்கும் வேறு வகையில் உதவினவர்க்கும் நன்றியறிவுடையராயிருத்தல். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை." "உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணுகிறதா?" என்னும் பழமொழிகள் இங்கு நினைக்கத் தக்கன.

கoக. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(இ—ரை.) செய்யாமல் செய்த உதவிக்கு—தன்னிடத்திலிருந்து ஓர் உதவியையும் முன்பு பெறுதிருந்தும் ஒருவன் தனக்குச் செய்த வுதவிக்கு: வையகமும் வானகமும் ஆற்றல் அரிது—'மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைம்மாறுகக் கொடுத்தாலும் அவை ஈடு செய்தல் அரிது.

கைம்மாறுகளெல்லாம் எத்துணைச் சிறந்தன வாயினும், முதல் வினையைப் பின்பற்றின வழிவினைகளாதலின் முதல் வினைக்கு ஈடாகா என்பது கருத்து.

செய்யாமைச் செய்தவுதவி யென்று பாடமோதி, மறுத்துதவ மாட்டாமை யுள்ள விடத்துச் செய்த வுதவி யென்று பொருளுரைக் கத் தேவையில்லை. அப்பொருள்,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னுற்றுங் கொல்லோ வுலகு." (உகக)

என்னுங் குறளாற் பெறப்படுதலால்.

கூ0உ. காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(இ—ரை.) காலத்தினுல் செய்த நன்றி—ஒருவனது வாழ்க் கைக்கேனும் தொழிற்கேனும் இறுதி நேரும் நெருக்கடி வேளையில் அதை நீக்க இன்னொருவன் செய்த வுதவி; சிறிது எனினும் ஞால த்தின் மாணப் பெரிது—பொருளளவிலும் முயற்சியளவிலும் சிறிதா யிருந்தாலும், அக்கால நிலைநேரக்க நிலவுலகத்தினும் பெரிதாம்.

ஒருவர் செய்த நன்றியை அது செய்யப்பட்ட காலநிலைக்கேற்ப மதிக்க வேண்டுமென்பது கருத்து. 'காலத்தினுல்' என்பது காலத் தாலே வந்தான் என்னும் மேலைவடார்க்காட்டு வழக்குப் போன்ற வேற்றுமை மயக்கம்.

கூ0ங. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(இ - ரை.) பயன் தூக்கார் செய்த வுதவி நயன் தூக்கின்—இவருக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்குமென்று ஆராயாது ஒருவர் செய்த வுதவியின் அருமையை ஆய்ந்து நோக்கின்; நன்மை கடலின் பெரிது—அதன் நன்மை கடலினும் பெரியதாம்.

காலத்தினுற் செய்த நன்றி பயன் தூக்கியதாகவு மிருக்கலா மாதலால், பயன் தூக்காது செய்த வுதவியும் ஒருவகையிற் பெரியதே யென்றார்.

கூ0ச. திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

(இ - ரை.) திணைத்துணை நன்றி செயினும்—திணையளவின தாகிய சிற்றுதவியையே ஒருவன் தமக்குச் செய்தானெயினும்; பயன் தெரிவார் பனைத் துணையாக் கொள்வர்—அதன் பயனளவை யறிந் தவர் அதைப் பனையளவினதாகிய பேருதவியாகக் கருதுவர்.

'திணை', 'பகை' என்னும் நிலைத்திணைப் பெயர்கள், இங்குச் சிறுமை பெருமை குறிக்கும் அளவைப் பெயர்களாக வந்தன. 'உம்மை' இழிவு சிறப்பு. ஒருவர் செய்த வுதவியைப் பொருளளவிலும் முயற்சியளவிலும் நோக்காது பயனளவில் நோக்க வேண்டுமென்பது, இங்குக் கூறப்பட்டது.

கoடு. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(இ - ரை.) உதவி உதவி வரைத்து அன்று—கைம்மாறான உதவி காரணத்தானும் பொருளானுங் காலத்தானுமாகிய மூவகையானும் முன் செய்த உதவியளவினதன்று; உதவி செயப் பட்டார் சால்பின் வரைத்து—அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதியளவிற்று.

பெரும்பாலும் இக்கருத்தைத் தழுவியே மணக்குடவ பரிதி காளிங்கர் உரைகளும் உள்ளன.

இக்குறள் கைம்மாறு பற்றியது என்பதற்கு அதில் ஒரு குறிப்பு மில்லை. செய்யாமற் செய்ததும் காலத்தினாற் செய்ததும் கைம்மாறு கருதாமற் செய்ததும் பயனளவிற் பெரியதுமான நன்றிகள் இதுவரை கூறப்பட்டன. அவையல்லாது, பெரியார்க்குச் செய்த நன்றியென்றும் ஒரு சிறப்புவகை யுளது. அதுவே இக்குறளிற் கூறப்பட்டுள்ளது.

உதவி உதவி வரைத்தன்று—ஒருவர் ஒருவர்க்குச் செய்த நன்றி மேற் கூறிய நால்வகை யுதவியளவினது மட்டுமன்று;—உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து—நன்றி செய்யப் பட்டவரின் மேன்மையளவினது மாகும்.

இது, "இகவாத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்."

என்னுங் கருத்தை யொத்தது. அங்குக் கூறியது விருந்தோம்பல் பற்றியது. இங்குக் கூறியது வேறு வகை நன்றி பற்றியது. எச்சவும்மை தொக்கது.

"The kindly aid's extent is of its worth no measure true
Its worth is as the worth of him to whom the act you do."

—G. U. P.

"The benefit itself is not the measure of the benefit, the worth of those who have received it is the measure."

—W. H D.

Help has no measure of its own. Its worth is as much as the worth of the recipient."

—M. S. P.

கoசு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(இ - ரை.) துன்பத்துள் துப்பு ஆயார் நட்புத் துறவற்க—துன்பக் காலத்தில் தனக்குப் பற்றுக்கோடானவரின் நட்பை விடாதிருக்க; மாசு அற்றார் கேண்மை மறவற்க—மனத்திற் குற்ற மற்றவரது உறவை மறவாதிருக்க.

மாசற்றார் கேண்மை இம்மைக்கும் மறுமைக்கும் பலவகையில் உதவும் என்பது கருத்து.

கoஎ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

(இ - ரை.) தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு—தங்கட்கு நேர்ந்த துன்பத்தை நீக்கினவரது நட்பை; எழுமை யெழு பிறப்பும் உள்ளுவர்—ஏழேழு பிறவியளவும் அன்புடன் நினைப்பர் நன்றியறிவுடையோர்.

எழுவகைப் பிறப்பிலும் நினைப்பர் என்பது பதத்தறிவிற்குப் பொருந்தாமையின், ஏழேழ் மக்கட் பிறப்பு என உரைக்கப்பட்டது. அதுவும் உயர்வு நவிற்சியே. ஏழேழு என்பது கழிநெடுங் காலத்தைக் குறிக்க வந்த இருமடி நிறைவெண். நீக்கின விழுமையின் விரைவும், நிறைவுந் தோன்றத் 'துடைத்தல்' என்றார்.

கoஅ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(இ - ரை.) நன்றி மறப்பது நன்று அன்று—ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறனன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று—அவர் செய்த தீமையை அன்றே மறப்பது அறனுவது.

நன்றி மறப்பதென்பது மறந்து ஈடான நன்மை செய்யாமையும் தீமை செய்தலுமாம். நன்றல்லது மறப்பதென்பது மறந்து எதிர்த் தீமை செய்யாமையும் நன்மை செய்தலுமாம்.

கoஙூ. கொன்றன்ன வின்னு செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(இ - ரை.) கொன்ற அன்ன இன்னு செயினும்—தமக்கு முன் பொருகால் ஒரு நன்மை செய்தவர் பின்பு கொன்றுற் போன்றபெருந் தீமைகளைச் செய்தாராயினும்; அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும்—அவையெல்லாம் அவர் செய்த நன்மை யொன்றையே நினைத்த மட்டில் நன்றியறிவுடையார் மனத்தில் இல்லாமல் மறைந்துபோம்.

இஃது உண்மையான அல்லது தலையாய நன்றியறிவுடையார் செயலாம்.

கக0. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ - ரை) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்—எத்துணைப் பெரிய அறங்களைக் கெடுத்தவர்க்கும் அத்தீவினைகள் நீங்கும் கழுவாய் (பிராயச் சித்தம்) உண்டாம்; செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை—ஆயின், ஒருவர் செய்த நன்றியைக் கெடுத்தவனுக்கோ தப்பும் வழியே இல்லை.

போறக் கெடுப்புகளாவன, ஆவின் மடியறுத்தலும், குழவிகளையும் நிறை சூலியரையும் தூய துறவியரையுங் கொல்லுதலும், ஊருண்ணுங் கிணற்றில் நஞ்சிடுதலும், இவை போல்வன பிறவுமாம்.

அதி. கஉ—நடுவு நிலைமை

அஃதாவது, தகுதி பற்றி ஒருவரை ஒருவினைக்கு அமர்த்தும் போதும், திறமை பற்றி ஒரு துறையிற் சிறந்தவர்க்குப் பரிசளிக்கும் போதும், விலைக்குக் கொள்ளும் பொருட்டுப் பண்டங்களுள் நல்லன வற்றைத் தெரிந் தெடுக்கும்போதும், குற்றச்சாட்டுப் பற்றி ஒருவர் நடத்தையை ஆய்ந்து தீர்ப்புக் கூறும் போதும் பகை நட்பு நோதுமல் (அயல்) என்னும் முத்திறத்தும் ஒத்திருந்து உண்மைப் படி ஒழுகுதல். நன்றி செய்தவரிடத்துங் கண்ணோடி நடுநிலை திறம்பக் கூடாதென்பதற்கு இது செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது

நடுநிலை என்னும் சொல், சமன் செய்து சீர்தூக்குந் துலைக் கோலில் நடுநின்று ஒருபாற் கோடாத நாவின் நிலைமையினின்று எழுந்தது.

கக0. தகுதி யெனவொன் றுன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(இ - ரை.) பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின்—பகை நட்பு நோதமல் என்னும் முத்திறத்தும் முறைமை தவருது ஒழுகப் பெறின்; தகுதி என ஒன்றே நன்று—நேர்மை என்று சொல்லப்படும் ஓர் அறமே நல்லதாம்.

தகுதி என்ற சொல்லால் இங்குக் குறிக்கப்பட்டது நடுவுநிலை. தமிழரின் ஏமாளித்தனத்தினால் 'யோக்கியதை' என்னும் வடசொல் வழக்கூன்றவே, தகுதி என்னும் தகுந்த தமிழ்ச்சொல் வழக்கு வீழ்ந்தது. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. 'பகுதியான்' என்பது பகுதிதொறும் என்று பொருள் படுதலால், ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருளது. 'பெறின்' என்பது அவ்வொழுக்கத்தின் அருமை தோன்ற நின்றது

கஙஉ. செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(இ - ரை.) செப்பம் உடையவன் ஆக்கம்—நடுவுநிலைமை யுடையவனது செல்வம்; சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து—பிறர் செல்வம் போல் அழியாது அவன் வழியினர்க்கும் வலிமையாதலி யுடையது. வலிமை பாதுகாப்பு.

எச்சவும்மை தொக்கது. ஒருவனுக்குப் பின் எஞ்சி நிற்பதாகலின் வழிமரபு எச்சமெனப்பட்டது

கஙங. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

(இ - ரை.) நன்றே தரினும்—அறவழியில் வந்த செல்வம் போல் நன்மையே விளைப்பினும்; நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்—நடுவுநிலை திறம்புவதால் வரும் செல்வத்தை அப்பொழுதே விட்டு விடுக.

நன்மை தராமையின் 'நன்றே தரினும்' என்பது எதிர்மறை யும்மை தன்னை மட்டுமன்றித் தன் எச்சத்தையுந் தாக்குமாதலின், 'அன்றேயொழிய விடல்' என்றார். 'விடல்' என்பது அல்லீற்று வியங்கோள்.

கஙச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(இ-ரை.) தக்கார் தகவு இல்லர் என்பது—இவர் நேர்மை யுடையவர் அல்லது இல்லாதவர் என்னும் உண்மை; அவரவர் எச்சத்தால் காணப்படும்—அவரவருடைய மக்களால் அறியப்படும்.

தக்கார்க்கு நன்மக்களும் தகவிலார்க்குப் புன்மக்களும் பிறத்தல் இயல்பாதலின், 'அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்றார். எச்சம் என்னும் சொல், மக்களின் வாழ்க்கை மட்டுமன்றிப் பெற்றோரின் முகத்தோற்றமும் குணவமைதியும் எஞ்சி நிற்பதைக் குறிக்கும். அதனால், மக்கள் என்னுஞ் சொல்லினும் தகுதியும் பொருட்பொலிவு முடையதாம்.

'யோக்கியர்' என்னும் வடசொல் வழக்கூன்றியதால், தக்கார் என்னும் தமிழ்ச்சொல் வழக்கற்றதென அறிக.

கஉடு. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ-ரை.) கேடும் பெருக்கமும் இல் அல்ல—பழம் பிறப்பிற் செய்த தீவினையாற் கேடும் நல்வினையால் ஆக்கமும் ஏற்கெனவே எல்லார்க்கும் வகுக்கப்பட்டிருத்தலால், அவை இப்பிறப்பில் யார்க்கும் இல்லாதவையல்ல; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி—ஆதலால் இவ்வுண்மையறிந்து வரும் பிறப்பிலும் கேடு நேராதவாறு மனத்துக்கண் ஒருபாற் கோடாமை, அறிவுநிறைந்தோர்க்கு அழகாம்.

அறிவுநிறைந்தோரும் உண்மையறியாது நடுவிகந்தா மாக்கம் விரும்பி ஒருபாற் கோடுவராயின், தம் சிறப்பிழந்து பிறர்போலாவர் என்பது கருத்து.

கஉஊ. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

(இ-ரை.) தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின்—ஒருவன் தன் மனம் நடுநிலை திறம்பித் தீயவற்றைச் செய்யக் கருதுமாயின்; யான் கெடுவல் என்பது அறிக—அக்கருத்தையே தன் கேட்டை முன்னறிவிக்குந் தீக்குறியாகக் கொண்டு, "நான் இனிக்கேடடைவேன்," என்று திட்டமாய் அறிந்து கொள்க.

கருதுதல் மனத்தின் செயலாதலின் 'செயின்' என்றார். ஒருவி என்பது ஒரீஇ என அளபெடுத்தது இன்னிசை யளபெடை. நெஞ்சார நடுநிலை திறம்புவார்க்கு எச்சரிக்கை இக்குறளாற் கூறப்பட்டது.

கஉஎ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் ருழ்வு.

(இ - ரை.) நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு-நடுநிலை நின்று அறத்தின்கண் தங்கினவனது வறுமையை; உலகம் கெடுவாக வையாது—உயர்ந்தோர் கேடாகக் கருதார்.

'கெடு' என்பது மூதலிலைத் தொழிற் பெயர். உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்" (திருமுரு. 82). கெடுவாக வையாது எனவே, செல்வமாகக் கொள்ளும் என்பது கருத்து.

"ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து." (212)

என்பதால், அறத்தினுல் வருங்கேடெல்லாம் விரும்பத் தக்கது என்பதே அறிஞர் கொள்கை.

கஙஅ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ - ரை.) சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல்-இயல்பாகச் சமனாக நின்று தன்கண் வைத்த பொருளின் நிறையை வரையறுத்துக்காட்டும் துலாக்கோல் போல; அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி—மனத்திற் சம நிலையாக விருந்து ஒரு பக்கஞ் சாயாது உண்மை யுரைத்தல் அறிவு நிறைந்தோர்க்கு அழகாம்.

சமன் செய்தலும் சீர் தூக்கலும் ஆகிய உவம வடைகள், முறையே, அமைதலும் ஒருபாற்கோடாமையும் ஆகிய பொருளடைகளை ஒப்பனவாம். ஒருபாற் கோடாமையாவது, துலாக்கோல் சீர் தூக்கிப் பொருள்களின் நிறையை உள்ளவாறு காட்டுதல்போல, முத்திறத்தாரிடத்தும் ஒத்து நின்று ஆய்ந்து கண்ட உண்மையை உள்ளவாறுரைத்தல். இங்குக் கோடாமை என்றது கோடாதிருந்து உண்மையுரைத்தலே. ஆகவே, ஒருபாற்கோடாமையுள்ளேயே ஆய்ந்துண்மை காண்டலும் அடங்கிற்றென அறிக இது 'கவர்ந்தற்று' என்றது கவர்ந்துண்டலைக் குறித்தது போன்றதாம்.

கஙக. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

செப்பம் சொல் கோட்டம் இல்லது—நடுவுநிலைமையாவது ஆய்ந்து கூறும் தீர்ப்பின்கண் சிறிதும் சொற்கோடுதல் இல்லதாம்; உள்கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின்—அது அங்ஙனம் நிகழ்வது மனத்தின்கண் கோட்டமின்மையை முழுவுறுதியாகப் பெற்றவிடத்தே.

மனம் வாய் மெய் என்னும் முக்கரணங்களுள் மனமே ஏனை யிரண்டிற்கும் மூலமாதலாலும், மனத்துக்கண் மாசிலனுதலே அறமாதலாலும், சொற்கோட்ட மில்லா நடுவுநிலைக்கு உட்கோட்ட மின்மை இன்றியமையாத தென்றார். ஆயினும், கண்ணன்ன கேளிருக்கும் பெருநன்றி செய்தவர்க்கும் செல்வத்தாலும் அதிகாரத் தாலும் ஆட்டுணையாலும் வலியவர்க்கும் கருதியது செய்து முடிக்கும் கயவருக்கும் மாறுக, உயிர்நாடிச் செய்திகளில் உண்மை கூறுவதற் குத் தெய்வத் தன்மையான மனச்சான்றும் இறுதிவரினும் அஞ்சாத் தறுகண்மையும் வேண்டியிருத்தலின், அவையிரண்டும் அமையும் அருமை நோக்கி, 'உட்கோட்ட மின்மை பெறின்' என்றார்.

கூ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

(இ - ரை.) பிறவும் தமபோல் பேணிச் செயின்—பிறர் பொருளையுந் தம் பொருள் போலப் பேணிச் செய்யின்; வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்—வாணிகஞ் செய்வார்க்கு நடுநிலையான நல்வாணிகமாம்.

'கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்''

(பட்டினப். உ0இ-உக)

வாணிகம் கொள்வனையையும் விற்பனையையும் ஒப்பக் கருதுவத னாலும், பொய்க்குங் கொள்ளாக்கும் இடந்தராமையாலும், மொத்த வணிகர் சில்லறை வணிகர் கொள்வோர் ஆகிய முத்திறத்தார்க்கும் தீதுங்கேடுமில்லா நல்வாணிகமாம்.

அதி. கஙு—அடக்கமுடைமை

அஃதாவது, செருக்கின்றியும் வரம்பிறந்தொழுகாதும் முக் கரணத்தாலும் அடங்கிநடத்தல். இது தன்னுயிர் போல் மன்னுயி ரைக் கருதும் நடுநிலை மனப்பான்மை வழியதாகலின், நடுவுநிலைமை யின் பின் வைக்கப்பட்டது.

கூஉக. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(இ - ரை.) அடக்கம் அமரருள் உய்க்கும்—அடக்கமாகிய நன்று ஒருவனைத் தேவருலகத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும்; அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும்—அடங்காமையாகிய தீது ஒருவனைத் தங்குதற்கரிய இருளுலகத்திற்குச் செலுத்திவிடும்

இருள் என்றது இருளுலகத்தை. இருளுலகமாவது நரகம். "இருளுலகஞ் சேராதவாறு" என்று நல்லாதனார் (திரிகடுகம், கூ0) கூறுதல் காண்க. பண்டைக் காலத்தில் இருட்டறையுள் அடைப்பதும் ஒருவகைத் தண்டனையாயிருந்தமையின், நரகம் இருளுலகம் எனப்பட்டது. ஆர் இருள் என்பது நிறைந்த இருள் என்றுமாம். விடு என்பது விரைவும் நிறைவும் உணர்த்தும் துணை வினைச்சொல்.

கூஉஉ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினுங் கில்லை யுயிர்க்கு.

(இ - ரை.) அடக்கத்தைப் பொருளாக் காக்க—அடக்க முடைமையை ஒரு செல்வமாகப் பேணிக் காக்க; உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை—மக்கட்கு அதனினும் சிறந்த ஆக்கந் தருவது வேறொன்று மில்லை.

உயிர் என்பது வகுப்பொருமை. அது இங்கு மக்களுயிரைக் குறித்தது: அடக்க முடைமையாகிய அறத்தை மேற்கொள்வது அதுவே யாகலின். அறிவற்றதும் பிறவிதொறும் நீக்குவதுமான உடம்பை இயக்குவதும் இன்ப துன்பங்களைத் துய்ப்பதும் உயிரே யாதலின், 'உயிர்க்கு' என்றார்.

கூஉங. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(இ - ரை.) அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்—ஒருவன் அறியத் தக்க நூல்களை யறிந்து இல்லறத்தின்கண் அடங்கி யொழுகுவானுயின்; செறிவு அறிந்து சீர்மை பயக்கும்—அவ்வடக்கம் பிறரால் அறியப்பட்டு அவனுக்குச் சிறந்த நன்மையை விளைவிக்கும்.

ஆற்றின் அடங்குதலாவது, பிறன் பொருளைக் கவராமையும் பிறன் மனைவியை விழையாமையும் பிறனைத் தனக்கு அடிப்படுத்தாமையுமாம்.

கஉச. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

(இ - ரை.) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் — இல்லறத்தின்கண் வழுவாது நின்று அடங்கினவனது உயர்ச்சி; மலையினும் மாணப் பெரிது — மலையுயர்ச்சியினும் மிகப் பெரிது.

மலை யென்பது வளமிகுந்ததாதலின், குட மலையும் பனி (இமய) மலையும் போல்வதாகும். உம்மை உயர்வு சிறப்பு. 'நிலையிற்றிரியா தடங்குதல்' ஐம்புலனின்பமும் நுகர்ந்து கொண்டே அடங்கியொழுகுதல்.

கஉடு. எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(இ – ரை.) பணிதல் எல்லார்க்கும் நன்றும் — செருக்கின்றி யடங்குதல் எல்லார்க்கும் பொதுவாக நல்லதாம்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து — ஆயினும், அவ்வெல்லாருள்ளும் செல்வம் உடையவர்க்கே அது வேறொரு செல்வமாந் தன்மைய தாகும்.

எல்லாராலும் மதிக்கப்படும் இயல்பும், எண்ணியதைச் செய்து முடிக்குந் திறனும், ஒட்டோலக்கமாக (ஆடம்பரமாக) வாழ்ந்தின் புறும் உயர்வும், இடம்பொருளேவலால் வரம்பிறந் தொழுகத் தூண்டும் நிலைமையும், உடைய செல்வரின் வாழ்க்கை அடக்க முடைமைக்குப் பெரிதும் ஏற்காததாயிருப்பதால், அவரிடத்து அவ்வறம் அமைவது அவர்க்கு மற்றொரு செல்வப்பேறும் என்றார். செல்வத் தகைத்து என்பது இன்னோசை பற்றி மெலிந்து நின்றது.

கஉஎ. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ரை.) ஆமைபோல் — ஆமையானது, தனக்குத் தீங்கு நேராவாறு, தன் ஒருடம்பிற்குள் தன் தலையும் நாற்காலுமாகிய ஐந்துறுப்புக்களையும் அடக்கிக் கொள்ளுதல் போல; ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் — இல்லறத்தானும் ஒரு பிறப்பில் தன் ஐம் பொறிகளையும் தீவினை நேராவாறு அடக்க வல்லனாயின்; எழுமையும் ஏமாப்பு உடைத்து — அவ்வல்லமை அவனுக்கு எழு பிறப்பளவும் அரணுதலை யுடையது.

ஒருமை, ஐந்து, எழுமை என்பன தொகைக் குறிப்பு. இவற்றுள் ஒருமை எழுமை என்பன எண்ணுயிருக்கும் நிலைமை குறியாது

எண்ணையே குறித்து நின்றன. எழுபிறப்பு என்பதற்கு ௯உ—ஆம் குறளுரையில் தந்த விளக்கத்தையே இங்குங் கொள்க.

௯உ௭. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ - ரை.) யா காவாராயினும் நா காக்க—மக்கள் வேறெ வற்றைக் காவாவிடினும் நாவையாவது காத்துக் கொள்க; காவாக் கால் சொல்லிழுக்குப் பட்டுச் சோகாப்பர்—அதைக் காவாவிடின் சொற்குற்றப்பட்டுச் சிறைத் தண்டம் அடைவர்.

யா=எவை. இதற்கு யாவும் என்று பொருள் கொண்டு "முற்றும்மை விகாரத்தாற் றொக்கது." என்றார் பரிமேலழகர். 'காவாராயினும்" என்னும் வைத்துக்கொள்வு அல்லது ஒத்துக் கொள்வுக் கிளவியத்திற்கு (Adverb Clause of Supposition or Concession) அப்பொருள் பொருந்தாமை காண்க. சொல்லிழுக்கு என்றது இங்குப் பழிச் சொல்லே. சோ காத்தல் சிறையிற் காத்தி ருத்தல். அது கனக விசயர் என்னும் ஆரிய மன்னர் தமிழ் வேந்த ரைப் பழித்ததினால், சேரன் செங்குட்டுவனின் சிற்றத்திற் காளாகிச் சிறைப்பட்டது போல்வது.

"அடல்வேல் மன்ன ராருயி ருண்ணும்
கடலந் தானைக் காவல னுரைக்கும்
பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது"

(சிலப். உசு : கஙசு-கசஉ)

"ஆரிய வரசரை யருஞ்சிறை நீக்கி" (சிலப். உஅ : கசுஙி).

சோ என்பது அரிய பொறிகள் ஏற்றப்பட்ட சிறந்த அரண். அஃது இராவணனின் இலங்காபுரியிலும் வாணனின் சோணிதபுரத் திலும் இருந்தது.

"தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்" (சிலப். ஆய்ச்சியர் குரவை)

"ஆனிரை தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்." (நான்மணி, உ.)

சோ என்னும் சொல்லைப் பிற்காலத்தார் பொதுவான மதிற் பெயராகவும் ஆண்டு விட்டனர்.

"சோமே லிருந்தொரு கோரு வெனின்"

(சி. சி. மறைஞான தேசிகர் உரை).

காத்தல் என்பது காத்திருத்தல் அல்லது நிலையில்லாது தங்கியிருத்தல். Wait என்னும் ஆங்கிலச் சொற்கும் tarry, stay என்று ஆக்கசுப் போர்டு ஆங்கிலச் சிற்றகர முதலி பொருள் கூறியிருத்தல் காண்க.

சோகா என்னும் சொல்லை வடசொல் தொடர்பினதாகக் காட்டல் வேண்டி, செவ்வோப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலி, அதற்குச் சோகம்+யா என்று மூலங் குறித்திருப்பது பொருந்தாது. யாத்தல் கட்டுதல். அரையாப்பு, கழல்யாப்பு, மார்யாப்பு (மாராப்பு) விதலையாப்பு முதலிய கூட்டுச் சொற்கள் போல் சோக(ம்) யாப்பு என்றெரு சொல்லின்மையும், கூவ் விருபிறப்பியில் (Hybrid) யாப்பு என்னும் சொல் இயற்கையாகப்பொருந்தாமையும், நோக்குக. இனி, சோ என்னும் சொல்லையுச், வாணன் தலைநகர்ப் பெயரான சோணிதபுரம் என்பதன் சிதைவாக அவ்வகரமுதலி காட்டியிருப்பதும் குறும்புத்தனமாம். வாணனுக்கு முந்தின இராவணன் காலத்திலேயே சோவரண் இருந்தமையை நோக்குக.

கஉஅ. ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்ருகா தாகி விடும்.

(இ - ரை.) தீச்சொற் பொருட்பயன் ஒன்ருனும் உண்டாயின்—ஒருவன் கூறும் தீய சொற்களின் பொருளால் விளையும் துன்பம் ஒன்றேனும் பிறர்க்கு உண்டாயின்; நன்று ஆகாது ஆகிவிடும்—அவன் ஏற்கெனவே செய்துள்ள பிறவறங்கள் பயன்படாமற்போம்.

சொற்குற்றம் பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என நான்கு என்பர்.

"ஒரு சொல்லேயாயினும் கேட்டார்க்கு இனிதாயிருந்து தீய சொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மை யாகாதாகியேவிடும்" என்னும் மணக்குடவ ருரை பொருந்துவதன்று.

கஉக. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு.

(இ — ரை.) தீயினுல் சுட்ட புண் உள் ஆறும்—ஒருவன் ஒருவனை நெருப்பினுற் சுட்ட புண் காட்சிப் பொருளாகிய

உடம்பையே சுட்டதினுல், அப்பொழுதேயோ அப்புண் ஆறின பின்போ உள்ளத்தில் ஆறிவிடும்; நாவினுல் சுட்ட வடு ஆருது— ஆயின், நாவினுற் சுட்ட புண்ணே, கருத்துப் பொருளாகிய உள்ளத் தைச் சுட்டதினுல், ஒருகாலும் ஆருது அதன் கண்ணே நிற்கும்.

தீயினுற் சுட்ட புண் ஆறிப்போதலால் அதைப் புண் என்றும், நாவினுற் சுட்ட புண் ஆருது நிற்றலால் அதை வடு என்றும், வெவ் வேறு சொல்லாற் குறித்தார். மருந்தினுல் ஆறிவிடுவது புண்; புண் ஆறியபின் என்றும் மாருது நிற்பது வடுவெனும் தழும்பு. நாவினுற் சுட்டது புண்ணிலுமையும் வடுநிலுமையும், ஒருங்கே கொண்டது என்பதை உணர்த்தச் 'சுட்ட வடு' என்ருர். கடுஞ்சொல்லும் பழிச்சொல்லுமாகிய சுடு சொல்லின் தொழில், அதற்குக் கருவி யான நாவின்மேல் ஏற்றிக்கூறப்பட்டது. ஏகாரம் தேற்றம்.

இனி, சூடிடுதல் சில நோய்க்கு மருந்துமாகலின், சுடுசொல் இருவகையில் தீயினுங்கொடியதாம். இருவகைப் புண்ணையும் வேறு படுத்திக் காட்டியது வேற்றுமையணி யாகும்.

கஙo. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(இ - ரை.) கற்றுக் கதம் காத்து அடங்கல் ஆற்றுவான் செவ்வி—அறநூல்களைக் கற்றறிந்து சினம் வராமற் காத்து அடங்கி யொழுக வல்லவனின் செவ்விய மனநிலையை; அறம் ஆற்றின் நுழைந்து பார்க்கும் — அறத்தெய்வம் அவனைத் தலைக்கூடுமாறு அவனியடையும் வழிச்சென்று நுணுகி நோக்கும்.

செவ்வியாவது ஒருவரைக் கண்டுரையாடுதற் கேற்ற இனிய மனநிலை. செவ்வையான நிலை செவ்வி. அறத்தெய்வம் அவனைக் கண்டு பாராட்டி மகிழ்தற்குச் சமயம் பார்க்கும் என்றது, அந்த அள விற்கு அவன் அடக்கமுடைமையிற் சிறந்தவன் என்பதை உணர்த் தற்கு. "நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை" (தொல். அகத்).

அதி. கஉ—ஒழுக்கமுடைமை

அஃதாவது, அறத்திலும், கடமையிலும் வழுவாதொழுகுதல். மூக்கரணமும் அடங்கிய வழி இஃது எளிதாகலின், அடக்கமுடை மையின் பின் வைக்கப்பட்டது.

கஙக. ஒழுக்கம் விழுப்பந் தரலா னெழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(இ — ரை.) ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம் எல்லார்க் சிறப்பைத் தருதலால்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்— அவ் வொழுக்கம் உயிரினும் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும்.

உயிர் எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும், அவ்வுயிருக்கே சிறப்பைத் தருதலால் 'உயிரினு மோம்பப்படும்' எனறார்.

கஙூஉ. பிரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(இ - ரை.) ஒழுக்கம் பரிந்து ஓம்பிக்காக்க—ஒழுக்கத்தை எவ் வகையிலும் கெடாவாறு வருந்தியும் பேணிக்காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை—பலவகை யறங்களையுமாராய்ந்து அவற் றுள் இருமைக்கும் துணையாவதை எவ்வளவு கவனமாகத் தேர்ந்தா லும், அவ்வொழுக்கமே துணையாக முடியும். ஏகாரம் பிரிநிலை.

கஙஙு. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(இ - ரை.) ஒழுக்கமுடைமை குடிமை—நல்லொழுக்க முடை மையே உயர்குலத் தன்மையாம்; இழுக்கம் இழிந்த பிறப்பு ஆய் விடும்—தீயொழுக்கம் தாழ்ந்த குலமாகிவிடும்.

குடி என்னும் சொல் தலைக்கட்டு, குடும்பம், சரவடி (கோத்திரம்), குலம், குடிகள் (நாட்டினம்) என்னும் ஐவகை மக்கட் கூட்டத்தை யுங்குறிக்கும். இங்குக் குடியென்றது குலத்தை. குலமாவது ஒரே தொழில் செய்யும் மக்கள் வகுப்பு. வரணம் என்பது ஆரியர் வந்தபின் நிறம்பற்றியும் பிறப்புப்பற்றியும் ஏற்படுத்தப்பட்ட ஆரிய வகுப்புப் பிரிவினையாதலால், அது ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'', ''குலமும் ஒன்றே குடியும் ஒல்லே'', ''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்'' என்னும் தமிழ்க் கொள்கைக்கும், அதைத் தழுவிய வள்ளுவர் கருத் தற்கும் ஏற்காது. ஆகவே, தமிழ வொழுக்கங்கெடின் பிராமணனுந் தாழ்ந்தவனுவான் என்பதே வள்ளுவர் கருத்தாம்.

கஙூச. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(இ - ரை.) பார்ப்பான் ஒத்து மறப்பினும் கொளல் ஆகும்— ஆரியப் பார்ப்பானை பிராமணன் தான் கற்ற வேதத்தை மறந்தா னுயினும் அதைத் திரும்ப ஓதிக்கொள்ள முடியும்; பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும்—ஆனல் அவன் தன்னை உயர்ந்தவனுகச் சொல்லிக் கொள்ளும் பிறப்பு, தமிழ ஒழுக்கங் குன்றின் கெடும்.

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டுப் பண்பாட்டின்படியே ஒழுக்கவரம்பிருக்கும். பிராமணன் வேதத்தை மறந்தானு மறக்க வில்லியா என்பது தமிழ்நாட்டில் ஆய்விற்குரியதன்று; அவன் தமிழ வொழுக்கத்தைக் கடைப்பிடித்தானு இல்லியா என்பதே அதன் ஆய்விற்குரியதாம். ஆகவே, அவ்வொழுக்கத்தினுலேயே அவன் உயர்குலத்தானுவான் என்பதும். அது கெட்டவிடத்துத் தாழ்ந்த குலத்தானுகிவிடுவான் என்பதும், தமிழறநூல் முடிபாம்.

கஙூஙு. அழுக்கா றுடையான்க ணுக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(இ - ரை.) அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று — பொருமையுள்ளவனிடத்திற் செல்வமில்லாதது போல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கமில்லாதவனிடத்து உயர்வு இல்லை. உயர்வு உயர்குலத்தானுதல்.

கஙூக. ஒழுக்கத்தி லெல்லா ருயரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ரை.) இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து—ஒழுக்கக் கேட்டால் தமக்குக் குலவிழிபாகிய கேடுண்டாவதை யறிந்து, உரவோர் ஒழுக்கத்தின் ஒல்கார்—அறிவுடையோர் ஒழுக்கத்தில் தளரார்.

'பாக்கு' ஒரு தொழிற்பெயரீறு.

கஙூஎ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்—ஒழுக்கத்தினுல் எல்லாரும் உயர்வடைவர்; இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர்—அவ்வொழுக் கத்தினின்று தவறுவதால் தமக்கு உரியதல்லாத பழியையும் அடைவர்.

ஒருவன் ஒரு குற்றஞ் செய்தபின், அத்தகைய குற்றம் பிறர் செய்திருப்பினும் அவையும அவன்மேல் ஏற்றப்படுவது இயல்பாத லின், 'எய்தாப் பழி' எய்துவர் என்றார்.

கஙூஅ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்

(இ - ரை.) நல் ஒழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும்-ஒருவனுக்கு நல்லொழுக்கம் நன்மைக்குக் காரணியமாய் இருமையிலும் இன்பந் தரும்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்—தீயவொழுக்கம் எக்காலும் துன்பமே தரும்.

மறுமையில் விளையும் இன்பத்திற்கு இம்மையில் ஒழுகும் நல்லொழுக்கம் வித்துப்போன்றிருத்தலால், 'வித்தாகும்' என்றார். தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்பதால், நல்லொழுக்கம் இம்மையிலும் இன்பந்தருதல் பெற்றாம்.

கூடுகூ. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(இ - ரை.) வழுக்கியும் தீய வாயால் சொலல்—மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லும் சொலவுகள்; ஒழுக்கம் உடைய வர்க்கு ஒல்லா—ஒழுக்கமுடைய உயர்ந்தோர்க்கு இயலா.

வழுக்குதல் கால்தவறுதல்போல் வாய்தவறுதல்; அதாவது மறத்தல். 'வாயால்' என்று வேண்டாது கூறியது, 'செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்பதிற்போல (கூக) நல்ல சொற்களே' பயின்ற தன்மையை உணர்த்தற்கு. ஏகாரம் தேற்றம். 'சொலல்' பால்பகாவஃறிணைப் பெயர்.

கூசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(இ - ரை.) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார்—உயர்ந் தோரொடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார்; பல கற்றும் அறி விலாதார்—பல நூல்களைக் கற்றவரேனும் அறிவிலாதாரே.

உலகம் என்றது வரையறைப்பட்ட இடவாகுபெயர். அறநூல் களில் எல்லா வொழுக்க முறைகளும் சொல்லப்படாமையானும், காலந்தோறும் பழையன கழிதலும் புதியன புகுதலும் நிகழ்தலானும், ஒழுக்க வகையில் உயர்ந்தோரைப் பின்பற்றுதல் இன்றியமையாத தாயிற்று. கல்வியால் அறிவும் அறிவால் ஒழுக்கமும் பயனதலின், உயர்ந்தோரொடு பொருந்த வொழுகலைக் கல்லாதார் பல நூல்களைக் கற்றும் அறிவில்லாதவரேயாவர். ஒழுகுதலைக்கற்றலாவது பின்பற்றி யொழுகுதல்.

அதி. கரு—பிறனில்விழையாமை

அஃதாவது காமமயக்கத்தாலும், அழகுள்ள பெண்டிர் பலரொடு கூடி இன்பம் நுகரவேண்டுமென்னும் ஆசையாலும், பிறன் மனைவியை விரும்பாமை. இஃது ஒழுக்கத்திற் சிறந்தாரிடத்திலேயே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

கூசக. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

(இ—ரை.) பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை—வேறொருவன் உடமையாகவுள்ளவளைக் காதலித்தொழுகும் மடமை; ஞாலத்து அறம்பொருள் கண்டார்கண் இல்—நிலவுலகத்தில் அறநூலையும், பொருள்நூலையுங் கற்றுத் தெளிந்தவரிடம் இல்லை.

பிறன் மனைவியைக் காதலிப்பவர், இம்மைக்குரியனவும் மாந்தனுக்கு உறுதிபயப்பனவுமான அறம் பொருளின்பம் என்னும் மூன்றனுள் இன்பம் ஒன்றையே கருதியவர் என்பதை உணர்த்தற்கு, 'அறம் பொருள் கண்டார்கணில்' என்றார்.

பொருள்நூலை அறியாததினால் பிறன் மனைவி பிறன் பொருளென்பதும், அறநூலை யறிதாததினால் பிறன் பொருளை நுகர்தல் தீவினை யென்பதும், தெரியாதுபோயின. அறம் பொருள் என்பன கருமிய (காரிய) வாகுபெயர். எண்ணும்மை தொக்கது. பூமி என்னும் வடசொல் வழங்கவே, ஞாலம் என்னும் தென்சொல் வழக்கற்றது. பேதைமை என்பது நல்லதை விட்டுவிட்டுத் தீயதைத் தெரிந்துகொள்ளுந் தன்மை.

குசஉ. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(இ—ரை.) அறன்கடை நின்றாருள் எல்லாம்—காமம்பற்றித் தீவினை செய்தாரெல்லாருள்ளும்; பிறன்கடை நின்றாரின் பேதையார் இல்—பிறன் மனைவியைக் காதலித்து அவன் வீட்டு வாயிற்கண் போய் நின்றாரைப்போலப் பேதையாரில்லை.

அறத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதென்னுங் கருத்தால் கரிசு (பாவம்) அறங்கடை எனப்பட்டது. காமத்தாற் பெண்ணிற்கடிமையாகும் அண்ணலரும் விலைமகளிரொடு கூடும் காமுகரும் போல, அறமும் பொருளும் இழத்தலேயன்றி, அச்சத்தால் தாம் விரும்பிய இன்பமும் இழத்தலால், பிறன் மனைவியை விரும்புவாரைப் போலப் பேதையாரில்லை என்றார். கடை என்னும் சொல்லொப்புமை பற்றித் தீவினையில் நிலைத்தவரையும் 'நின்றார்' என்றார். பிறன் கடைநிற்றல் என்பது இரப்போன் நிலை போன்ற இழிவையும் உணர்த்திற்று.

குசஊ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

(இ—ரை.) தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார்—தம்மை நல்லவரென்று நம்பித் தாராளமாய்ப் பழகவிட்டவரின் மனைவியின் கண் தீவினை செய்தலை விரும்பியொழுகுவார்; மன்ற—உறுதியாக; விளிந்தாரின் வேறு அல்லர்—இறந்தாரின் வேறுபட்டவரல்லர்.

உயிர் அடையவேண்டிய அறம்பொருளின்பங்களை அடையாமை பற்றியும், தீமை செய்யாரென்று நம்பிப் பழகவிட்ட நிலைமையையே தீமை செய்தற்குப் பயன்படுத்தியது பற்றியும், உயிருடையவரேனும் செத்தவரே என்றார். 'மன்ற' தேற்றப் பொருளிடைச் சொல்.

கசஉ. எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணை யும்
தேரான் பிறனில் புகல்.

(இ—ரை.) எனைத்துணையர் ஆயினும்—எத்துணை உயர்ந்தோராயினும்; தினைத்துணையும் தேரான் பிறன் இல்புகல்—தாம் செய்யுந் தீவினையைத் தினையளவும் எண்ணிப்பாராது பிறன் மனைவியை விரும்பி அவன் இல்லத்திற்குட் புகுதல்; என் ஆம்—என்ன பயனுடைத்தாம்?

உயர்ந்தோர் அரசனும் தலைமையமைச்சனும் படைத்தலைவனும் போலப் பதவியிற் சிறந்தார். தேரான் என்பது தேர்வான் என்னும் உடன்பாட்டு எதிர்கால வினையெச்சத்தின் எதிர்மறை. எத்துணை உயர்ந்தோனாயினும் குற்றங் குற்றமே யென்பது இக்குறளாற் கூறப் பட்டது.

கசஎ. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

(இ-ரை.) எளிது என இல் இறப்பான்—பின்விளைவு கருதாது இன்பம் ஒன்றையே நோக்கி அதையடைவது எளிதென்று பிறன் மனைவியின் கண் நெறிகடந்தொழுகுபவன்; விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும்—தீராது எப்போதும் நிற்கும் தன் பழியையும் தன்குடிப்பழியையும் அடைவான்.

'இல்லிறப்பான்' என்பது இல்லத்தின்கண் கொல்லப்பட்டுச் சாவான் என்றும் பொருள்பட்டு இரட்டுறலாய் நின்றது.

கசஅ. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(இ—ரை.) இல் இறப்பான் கண்—பிறன் மனைவியின் கண் நெறிகடந்து ஒழுகுபவனிடத்து; பகை, பாவம், அச்சம், பழி என நான்கும் இகவாவாம்—பகையும் கரிசும் அச்சமும் பழியும் ஆகிய நாற்கேடுகளும் ஒருகாலும் நீங்காவாம்.

"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்ருரம் நச்சுவார்ச் சேரா—பிறன்ருரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டைந்நாற் பொருள்." (அஉ)

"புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றுமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்" (அக)

"காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும்
ஆணின்மை செய்யுங்கா லச்சமாம்—நீணிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெணேத்தாற் கூறு." (அச)

இவை நாலடியார்.

கசஎ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

(இ—ரை.) அறன் இயலான் இல்வாழ்வான் என்பான்—அற வியல்போடு கூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுபவன்; பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்—பிறனுக்கு உரிமைபூண்டு அவன் வழி நிற்பவளின் பெண்டன்மையை விரும்பாதவனுவான்.

ஆனுருபு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. பிறன் மனேயை விழை யாதவனே உண்மையான இல்லறத்தான் என்றவாறு.

கசஅ. பிறன்மனே நோக்காத பேராண்மை சான்ரோர்க்
கறனெனன்ரு வான்ற வொழுக்கு.

(இ—ரை.) சான்ரோர்க்கு—அறிவுநிறைந்தோர்க்கு; பிறன்மனே நோக்காத பேராண்மை அறன் ஒன்ரே—பிறன் மனேவியைக் கருதாத பெரிய ஆண்டகைமை அறம் மட்டுமோ; ஆன்ற ஒழுக்கு—நிரம்பிய ஒழுக்கமுமாம்.

புறப் பகைகளே வெல்வதினும் அகப் பகைகளே வெல்வதே அருமையாதலின், அறுவகை உட்பகைகளுள் ஒன்ருகிய காமத்தை அடக்குவதைப் பேராண்மை என்ருர். ஒன்ரே என்பது ஒன்று தானே என்று பொருள்படுவதாம். பிறன்மனே நோக்காமை பிறர்க் குச் சிறந்த அறமாயினும் சான்ரோர்க்கு இயல்பான ஒழுக்கம் என் பது கருத்து. எச்சவும்மை தொக்கது.

கசக. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(இ - ரை.) நாமநீர் வைப்பின்—அஞ்சத்தக்க கடலாற் சூழப் பட்ட நிலவுலகத்தின் கண்; நலக்கு உரியார் யார் எனின்—எல்லா

நலங்களும் பெறுதற்குரியார் எவர் எனின்; பிறற்கு உரியாள் தோள் தோயாதார்—பிறனொருவனுக்குரியவளின் தோளைத் தழுவாதார்.

நாமம் அச்சம். இஃது உரிச்சொல். அகலம், ஆழம், தீயவுயிர்கள், கொந்தளிப்பு, நிலமுழுக்கு முதலியவற்றுல் அஞ்சத்தக்கதாதலின், கடலை நாமநீர் என்றார். 'நலத்திற்கு' என்பது அத்துச் சாரியை தொக்கு நின்றது. 'தோள் தோய்தல்' இடக்கரடக்கல்.

கூடு. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று.

(இ - ரை.) அறன் வரையான் அல்ல செயினும்—ஒருவன் அறத்தைத் தனக்கு உரியதாகக் கொள்ளாது தீவினைகளைச் செய்து வருவானுயினும்; பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று—பிறனுட்சிக் குட்பட்டவளின் பெண்டன்மையை விரும்பாமையை அவன் மேற்கொள்ளின் அது அவனுக்கு நல்லதாம்.

இக்குணம் அவன் குற்றங்களை ஓரளவு மறைக்கும் என்பது கருத்து.

அதி. கக—பொறையுடைமை

அஃதாவது, தெரிந்தோ தெரியாமலோ பிறர் தமக்குச் செய்த சிறியவும் பெரியவுமான தீங்குகளை யெல்லாம் திருப்பிச் செய்யாதும், அவற்றிற்காக அவரைத் தண்டியாதும், பொறுத்துக் கொள்ளுதல். பெருங்குற்றமாயினும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றற்கு, இது பிறனில் விழையாமையின் பின் வைக்கப்பட்டது.

கூடுக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(இ - ரை.) அகழ்வாரைத் தாங்கு நிலம்போல—தன்னைத் தோண்டுவாரை விழாமல் தாங்கும் நிலம்போல; தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை—தம்மை மதியாது தீங்கு செய்தாரைப் பொறுத்தல் தலையாய அறமாம்.

இகழ்தல் புகழ்தலுக்கு எதிர். அது இங்கு மதியாது சொல்லும் சொல்லுமட்டு மன்றிச் செய்யுஞ் செயலையுங் குறித்தது.

கூடுஉ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை மறத்த லதனினு நன்று.

(இ - ரை.) இறப்பினை என்றும் பொறுத்தல்—பொறை நன்றுதலால், பிறர் செய்த மிகையை எக்காலத்தும் பொறுத்துக் கொள்க; அதனை மறத்தல் அதனினும் நன்று—இனி, அதை மனத்திற் கொள்ளாது அப்பொழுதே அடியோடு மறக்க முடியுமாயின் அது அப்பொறையினும் நன்றும்.

பழிக்குப் பழி வாங்கக்கூடிய அல்லது தீங்கு செய்தாரைத் தண்டிக்கக் கூடிய காலத்துப் பொறுத்துக் கொள்ளுதலே உண்மையான பொறையாதலின், அக்காலமும் அடங்க 'என்றும்' என்றார். இறப்பு சொல்லிலும் செயலிலும் நெறி கடந்த நடத்தை. அதைப் பொறுத்த காலத்தும் அது உள்ளத்திலிருத்தலால், மறத்தல் அதனினும் நன்றென்றார். மறத்தலாவது தீங்கு செய்தாரை நட்பாகக் கருதுதலும் அவருக்கு நன்மை செய்தலும். 'பொறுத்தல்' வியங் கோள் வினை.

கஎடி. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(இ - ரை.) இன்மையுள் இன்மை விருந்து ஓரால்—ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரை ஏற்றுக் கொள்ளாது விடுதல்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை—அதுபோல வலிமையுள் வலிமையாவது அறிவிலார் செய்த மிகையைப் பொறுத்துக் கொள்ளுதல்.

இது ஓர் உவமியத்திற்கு வேறோர் உவமியத்தை உவமமாக்கிய எடுத்துக் காட்டுவமை. ஓரால் ஒருவுதல். உவமியம் பொருள்.

கஎடி. நிறையுடைமை நீங்காமை வேண்டிறை பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(இ - ரை.) நிறையுடைமை நீங்காமை வேண்டின்—ஒருவன் தற்குண நிறைவு தன்னிடத்தினின்று நீங்காமையை விரும்பின்; பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்—அவனைப் பொறையுடைமை பேணிக்காத் தொழுகப்படும்.

பொறையுடைமை யின்றி நற்குண நிறைவில்லை யென்றவாறு. படும் என்பது வேண்டும் எனற் பொருள்படும் துணைவினையுமாம்.

கஎடு. ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(இ - ரை.) ஒறுத்தாரை ஒன்றுக வையார்—பிறன் செய்த தீங்கைப் பொருது அவனைத் தண்டித்தாரை அறிவுடையோர் ஒரு பொருட்டாகக் கொள்ளார்; பொறுத்தாரைப் பொன்போல்

பொதிந்து வைப்பர்—ஆனால், அத்தீங்கைப் பொறுத்தாரையோ பொன்போற் போற்றி வைத்துக் கொள்வர்.

தீங்கு செய்தவனைத் தண்டித்தவரும் அத் தீங்கு செய்தவனை யொத்தலின், 'ஒன்றுக வையார்' என்றார். பொன்போற் பொதிதலாவது மிக மேன்மையாகப் போற்றுதல். ஏகாரம் தேற்றம்.

கருக. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(இ - ரை.) ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்—தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளை யின்பமே; பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்—ஆனால், அத்தீங்கைப் பொறுத்தார்க்கோ உலகம் அழியும்வரையும் புகழுண்டாம்.

'ஒருநாளை யின்பம்' சரிக்குச் சரி செய்தேம் என்னும் பொந்திகை (திருப்தி). புகழ் உலகமுள்ள காலமெல்லாம் தொடருமாதலால், பொன்றுதல் இங்கு உலகத்தின் தொழில்.

கருஎ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

(இ - ரை.) திறன் அல்ல தன் பிறர் செய்யினும்—செய்யத் தகாத கொடியவற்றைத் தனக்குப் பிறர் செய்தாராயினும்; நோநொந்து அறன் அல்ல செய்யாமை நன்று—அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக உளம் நொந்து அறனல்லாதவற்றைத் தான் அவர்க்குச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நல்லதாம்.

உம்மை உயர்வு சிறப்பு. துன்பத்திற்கு நோதகவைத்

> "தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
> றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
> எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
> பரிவதூஉம் சான்றோர் கடன்" (இஅ)

என்னும் நாலடியார்ச் செய்யுளால் அறிந்து கொள்க.

கருஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

(இ - ரை.) மிகுதியான் மிக்கவை செய்தாரை—செருக்கினால் தமக்குத் தீயவை செய்தவரை; தாம் தம் தகுதியான் வென்று விடல்—தாம் தம் பொறையினால் வென்று விடுக.

சரிக்குச் சரி தீங்கு செய்யும் இழுக்க வெற்றி ஒழுக்கத் தோல்வி யென்றும்; தீயவை செய்தாரைப் பொறுத்துக் கொள்ளும் ஒழுக்க வெற்றியே உண்மையான வெற்றி யென்றும் உணர்த்தற்குத் 'தகுதி யான் வென்று விடல்' என்றார். 'விடல்' வியங்கோள் வினை.

கடுகூ. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ னோற்கிற் பவர்.

(இ - ரை.) இறந்தார் வாய் இன்னுச் சொல் நோற்கிற்பவர்— நெறி கடந்த கீழ் மக்களின் வாயினின்று வரும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றலுடைய மேன்மக்கள்; துறந்தாரின் தூய்மை உடையர்— இல்லறத்தின் கண் நின்றாலும் துறவியர் போல மனத் தூய்மையுடைய ராவர்.

'வாய்' என மிகைபடக் கூறியது, கீழோர் வாயினின்று தீய சொற்களே மிகுதியாக வரும் என்பதை உணர்த்தற்கு. ஐந்தாம் வேற்றுமை யின்னுருபு உறழ் பொருளிற்கே யுரியதாதலால், துறந் தாரைவிடத் தூயர் எனினுமாம். சுடுகின்ற வெயிலைப் பொறுத்தலி னும் சுடுகின்ற சொல்லைப் பொறுத்தல் அரிதாதல் காண்க. 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. வெயில் பிறப்பிக்காத சினத்தைச் சுடுசொல் பிறப்பித்தலால் அதைப் பொறுத்துக் கொள்ளுதலே மிகுந்த மனத் தூய்மையைக் காட்டும் என்பது கருத்து.

கூஈ உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுச்சொ னோற்பாரிற் பின்.

(இ - ரை.) உண்ணாது நோற்பார் பெரியர்—நோன்பினால் உணவைத் தவிர்ந்து பசியையும் தட்ப வெப்பத்தையும் பொறுத்துக் கொள்ளும் துறவியர் மக்கட்குப் பெரியவரே; பிறர் சொல்லும் இன்னுச் சொல் நோற்பாரின் பின்—ஆயின் அவர் பெரியவராவது பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் இல்லறத் தார்க்கு அடுத்தபடியே.

பிறர் என்றது தீயவரை. இன்பம் பெறுதற்குரிய இல்லறத்தினி ருந்து கொண்டே துன்பம் பொறுத்தற்குரிய துறவியரினும் மிகுந்த பொறையை மேற்கொள்வதால், முதற்படியாகப் பெரியவர் என்றார்.

அதி. கஙி — அழுக்காருமை

அஃதாவது, பிறராக்கங் கண்டு பொருமைப் படாமை. பொருமை என்பது பொறுத்தலின் மறுதலையாதலால், அதை விலக்கு தற்கு இவ்வதிகாரம் பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது.

அழுங்குதல் வருந்துதல் அல்லது துன்புறுதல். அழுங்குவது அழுக்கு. அது உறு என்னும் துணைவினை பெற்று அழுக்குறு என நிற்கும். அழுக்குறுதல் பிறராக்கங் கண்டு பொருது வருந்துதல். நாசமுறு என்னும் வினை நாசமறு என்று உலக வழக்கில் திரிந்தாற் போன்று, அழுக்குறு என்பதும் அழுக்கறு என இலக்கிய வழக்கில் திரிந்தது. "அழுக்கற் றகன்ருருமில்லை" (கஎ0) என வள்ளுவரே கூறுதல் காண்க. நாசமுற்றுப் போவான் என்பது நாசமற்றுப் போவான் என்றே வழங்குதல் காண்க.

அழுக்கறு என்னும் கூட்டுவினை அழுக்காறு என நீண்டு தொழிற் பெயராகும். அது முதனிலை திரிந்த தொழிற்பெயர். அழுக்காறு கடும் பொருமை. அழுக்கருமை என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் அழுக்காருமை என நீண்டு வழங்குகின்றது. இது வராமை தராமை என்பன வாராமை தாராமை என நீண்டது போன்றது.

க்கூக. ஒழுக்காருக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(இ - ரை.) ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு —ஒருவன் தன் நெஞ்சத்திற் பொருமை யில்லாத தன்மையை; ஒழுக்காருக் கொள்க—தனக்குரிய ஒழுக்க நெறியாகக்கொள்க.

இயல்பு இயல்பான தன்மை. ஒழுக்காருக் கொள்ளுதல் உயிரினுஞ் சிறப்பாகப் பேணிக் காத்தல்.

க்கூஉ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டும்
மழுக்காற்றி னன்மை பெறின்.

(இ - ரை.) யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்— யாரிடத்தும் பொருமையில்லா தொழுகுதலே ஒருவன் பெறுமாயின்; விழுப் பேற்றின் அஃது ஒப்பது இல்லை—அவன் பெறுஞ் சிறந்த பேறுகளுள் அதை யொப்பது வேறு ஒன்றும் இல்லை.

'யார் மாட்டும்' என்றதால், பகைவரிடத்தும் பொருமை கொள்ளுதல் விலக்கப்பட்டது.

க்கூங. அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

(இ - ரை.) ஆக்கம் அறன் வேண்டாதான் என்பான்— இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய செல்வமும் அறமும் ஆகிய

பேறுகளைத் தனக்கு வேண்டாதவனென்று சொல்லப்படுகின்றவன்; பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான்--பிறன் செல்வங் கண்ட விடத்து அதற்கு மகிழாது பொறாமைப்படுபவனுவன்.

பொறாமைக்காரன் பிறனுக்கு ஒரு தீங்குஞ் செய்ய இயலாது தனக்கே கேட்டை வருவித்துக் கொள்கின்றான் என்பது, இதனாற் கூறப்பட்டது.

௧௧௭. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ரை.) அழுக்காற்றின் அல்லவை செய்யார்—அறிவுடை யோர் பொறாமை கொண்டு அதனால் அறனல்லாதவற்றைச் செய் யார்; இழுக்கு ஆற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து—அத்தீய நெறி யால் தமக்கு இழுமையிலுங் கேடு வருதலை யறிந்து.

அல்லவை செய்தலாவது, கல்வி செல்வம் அதிகாரம் ஆற்றல் முதலியன வுடையார்க்குத் தீங்கு எண்ணுதலும் சொல்லுதலும் செய்தலுமாம். 'பாக்கு' ஒரு தொழிற்பெயரீறு.

௧௧௮. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(இ - ரை.) ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது—பகைவர் கேடு செய்யத் தவறினும் பொறாமை தப்பாது கேடு செய்வதாதலின்; அழுக்காறு உடையார்க்கு அது சாலும்—பொறாமையுள்ளவர்க்குக் கேடு செய்ய அது ஒன்றே போதுமானது; வேறு பகை வேண்டிய தில்லை.

உம்மை எதிர்மறைப் பொருட்டு. அதுவே என்னும் பிரிநிலை யேகாரம் தொக்கது.

௧௧௯. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(இ - ரை.) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்—ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதைப் பொறாமையால் தடுப்பவன் மட்டு மன்றி அவன் உறவினரும்; உண்பதும் உடுப்பதும் இன்றிக் கெடும்—உண்ணும் பொருளும் உடுக்கும் பொருளு மில் றிக் கெடுவர்.

சுற்றமும் என்னும் எச்சவும்மை தொக்கது. ஒரு செல்வனது பொருளைக் கண்டு பொறாமைப் படுவதினும் ஒரு செல்வன் ஓர் ஏழைக்குக் கொடுப்பதைப் பொறாமையால் தடுப்பது மிகக் கொடிய

தாதலின், அக் கொடுமை செய்தவன் தன் சுற்றத்தோடும் உண்ப தும் உடுப்பதுமின்றிக் கெடுவான் என்றார். இவ் விளைவு பொருமைக் குற்றத்தோடு ஏழை வயிற்றெரிச்சலும் கூடுவதால் நேர்வது. ஊணுடை யென்னுது உண்பது முடுப்பதும் என்றமையால், உண் ணத்தக்கனவும் உடுக்கத்தக்கனவுமான எவ்வகைப் பொருளையு மிழப்பர் என்பது பெறப்படும். 'சுற்றம்' தொழிலாகு பெயர். சுற்றி யிருக்கும் இனம் சுற்றம். அளபெடை ஈரிடத்தும் இன்னிசை பற்றியது.

ககூஎ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(இ - ரை.) அழுக்காறு உடையானை—பிறராக்கங் கண்ட விடத்துப் பொருமை கொள்பவனை; செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டி விடும்—செங்கோலத்தினளாகிய திருமகள் தானும் பொறாது தன் அக்கையாகிய மூதேவிக்குக் காட்டி விட்டு நீங்கும்.

அவ்வை அக்கை. தம் அவ்வை தவ்வை; தம் அக்கை தமக்கை என்பது போல. திருமகளின் அக்கை வறுமைக்குத் தெய்வமாதலின், அவளுக்குக் காட்டுதல் என்பது வறியவனுக்குதல். தவ்வையை என்பது இரண்டாம் வேற்றுமையுருபு நாலாம் வேற்று மைப் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம். 'விடும்' என்பது இங்குத் தகுமையாய் வந்த தனிவினை.

ககூஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(இ - ரை.) அழுக்காறு என ஒரு பாவி—பொருமை யென்று சொல்லப்படும் ஒப்பற்ற கரிசன் (பாவி) : திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும்—தன்னை யுடையவனை இம்மைக்கண் செல்வங் கெடுத்து மறுமைக்கண் நரகத்திற் புகுத்தி விடுவான்.

பொருமைக் குணத்தை ஒரு கொடியனுகக் குறித்தது ஆட்படையணி (Personification). தீயுழி என்பது எரிவாய் நரகத் தின் பெயர். விடும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு விளை முற்று. கரிசு (பாவம்)—கரிசன் (ஆண்பால்), கரிசி (பெண் பால்).

ககூக. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(இ - ரை.) அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்—பொருமை மனத்தானது செல்வமும்; செவ்வியான் கேடும்—பொருமை கொள்

ளாத செவ்விய மனத்தானது வறுமை அல்லது துன்பமும்; நிலைக்கப் படும்—எக்காரணியம் பற்றி நேர்ந்தன வென்று ஆராயப்படும்.

இரு நிலைமையும் இயற்கைக்கும் அறநூற் கொள்கைக்கும் மாறு பிருப்பதால், அவற்றிற்குக் காரணியம் பழவினையே என்பது ஆராய்ச் சியால் அறியப்படும்.

''இம்மைச் செய்தன யானறி நல்வினை
யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது''

என்னும் மாடலன் கூற்றும் (சிலப். கஇ கக—கூ.)

''என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே''.

என்னும் பட்டினத்தார் பாடலும், இவ்வகை யாராய்ச்சியைக் குறிக்கும்.

கஎ0. அழுக்கற் றகன்ற்ருரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்தீற் றீர்ந்தாரு மில்.

(இ—ரை.) அழுக்கற்று அகன்ருரும் இல்லை—பொருமைப் பட்டுப் பெரியவராயினுமில்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்—அக்குணமில்லாதவர் பேராக்கத்தினின்று நீங்கினருமில்லை.

இது பழவினையால் தாக்குண்ணுத பிறப்பின் நிலைமையைக் கூறுவது.

அதி. கஅ—வெஃகாமை

அஃதாவது, பிறர் பொருள்மேல் ஆசைகொள்ளாமை. பொரு மையினுற் பிறர் பொருளைக் கவர விரும்புவது இயல்பாதலால், இது கூடாதென்பதற்கு அழுக்காருமையின் பின் வைக்கப்பட்டது. வெள்-வெள்கு-வெஃகு வெள்ளுதல் விரும்புதல்.

கஎக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ—ரை.) நடுவு இன்றி நல் பொருள் வெஃகின்—பிறர் பொரு ளும் தம்பொருள்போற் கருதும் நடுவுநிலைமையில்லாது அவரது

நற்செல்வத்தின்மேல் ஒருவன் ஆசைவைப்பின்; குடிபொன்றி— அவன் குடிகெட்டு; குற்றமும் ஆங்கே தரும்—அத்தீய ஆசைவைப்பு அவனுக்கு மறுமைத் துன்பத்திற்கேதுவாகிய தீவினைக் குற்றத்தை யும் உண்டாக்கும்.

அறவழியில் ஈட்டப்பட்டு நல்வழியிற் செலவிடப்பெறும் செல் வத்தை 'நன்பொருள்' என்றார். பொன்றி என்பது பொன்றியபின் என்னும் பொருளது.

கஎஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(இ—ரை.) நடுவு அன்மை நாணுபவர்—நடுவுநிலையன்மைக்கு அஞ்சி நாணுபவர்; படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்—பிறர் பொருளைக் கவர்வதனால் தமக்குண்டாகும் பயனை விரும்பிப் பழிக்கத் தக்க செயல்களைச் செய்யார்.

'நடுவு' தமவும் பிறவும் ஒப்ப நாடிப் பிறவுந் தமபோற் பேணு தல்.

கஎக. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(இ—ரை.) சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யார்—பிறர் பொருளைக் கவர்வதால் தாம் அடையும் நிலையில்லாத சிற்றளவான தீய இன்பத்தை விரும்பி அறனல்லாத செயல்களைச் செய்யார்; மற்றின்பம் வேண்டுபவர்—அறத்தால் வருவதும் நிலையானதும் பேரள வினதுமான வேறு நல்லின்பத்தை வேண்டும் அறிவுடையோர்.

இன்பத்தின் சிறுமை காலமும் அளவும் தீமையும் பற்றியது. மற்று வேறு. ஏகாரம் தேற்றம்.

கஎச. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(இ—ரை.) புலம் வென்ற புன்மை இல் காட்சியவர்—ஐம்புலன்களையும் அடக்கிய குற்றமற்ற அறிவினையுடையோர்; இலம் என்று வெஃகுதல் செய்யார்—யாம பொருளிலேம் என்று எண்ணி அவ்வின்மையைத் தீர்த்தற்பொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார்.

புலம் வெல்லுதல் தீய வழியில் இன்புறுது மனத்தைத்தடுத்தல். 'புன்மையில் காட்சி' ஐயத்திரிபறப் பொருள்களை யறிதல். அதாவது, பிறர்பொருள்மீது தமக்குரிமையில்லையென்றும், அதைக் கவரின் அது

நிகிலயாதாகையாற் பின்னும் வறுமையுண்டாகுமென்றும், ஆகவே, அக்கவர்வால் இருமையிலுந் துன்பமன்றி யின்பமில்லை யென்றும், உணர்தல்.

கஎடு. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(இ—ரை.) அஃகி அகன்ற அறிவு என்னாம்—உணர்வால் நுணுகிப் பொருளாற் பரந்த ஒருவரது கல்வியறிவால் என்ன பயனும்?; வெஃகி யார்மாட்டும் வெறிய செயின்—அவர் பிறர் பொருளை விரும்பி எல்லாரிடத்தும் தம் அறிவொடு பொருந்தாத செயல்களைச் செய்வாராயின்.

யார் மாட்டும் வெறிய செய்தலாவது, நல்லார் பொல்லார் சிறியார், பெரியார், இளையார் மூத்தார், ஆடவர் பெண்டிர், நலவர் பிணியர், என்னும் வேறுபாடின்றி, இழிந்தனவுங் கடியனவுஞ் செய்தல்' வெறுமை அறிவென்னும் உள்ளீடின்மை. அறிவாற் பயனின்மை யின் 'என்னும்' என்றார்.

கஎசு. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

(இ—ரை.) அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான்—அன்பை மட்டுமன்றி அருளையும் விரும்பி இல்லறத்தின்கண் நின்றவன், பொருள் வெஃகிப் பொல்லாத சூழக் கெடும்—பிறர் பொருளைவிரும்பி அதைக் கைப்பற்றத் தீய வழிகளை ஆராய்ந்தெண்ணிய மட்டிற் கெட்டு விடுவான்.

விருந்தோம்பல் ஒப்புரவொழுகல் ஈகை ஆகிய அறங்கட்கு அன்பும், இரப்போர்க்கீதற்கு அருளும் வேண்டியிருப்பதால், இல்லற மும் ஓரளவு அருள்நெறிப்பட்டதாம். ஆதலால், இல்லறத்தைத் துறவறத்திற்கு ஆறென்று பரிமேலழகர் கூறியது முழுதும் பொருந்தாது .சூழ்வு வெளிப்பட்டவுடன் பொருளையிழக்க விருந் தாரால் தீங்குநேர்தலின், 'சூழக்கெடும்' என்றார்.

கஎஎ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(இ—ரை.) வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க—பிறர் பொரு ளாக்கவர்தலால் உண்டாகும் ஆக்கத்தை விரும்பற்க; விளைவயின் பயன் மாண்டற்கு அரிது ஆம்—பின்பு நுகருங் காலத்தில் அவ் வாக்கத்தின் பயன் நன்றுதலில்லையாதலின்.

'விளைவயின்' வினைத்தொகை. அருமை இங்கு இன்மை மேற்று.

கஎஅ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(இ—ரை.) செல்வத்திற்கு அஃகாமை யாது எனின்—ஒருவனது செல்வம் சுருங்காமலிருத்தற்கு வழி எதுவெனின்; பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை—அது பிறனுக்குத்தேவையான அவனது கைப்பொருளைத்தான் விரும்பாமையாம்.

அஃகாமை இங்கு ஆகு பொருளது.

கஎக. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

(இ—ரை.) அறன் அறிந்து வெஃகா அறிவு உடையார்—இது அறமென்று தெளிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரிடத்து; திரு திறன் அறிந்து ஆங்கே சேரும்—திருமகள் தான் அடைதற்கான திறங்களையறிந்து அவற்றின்படியே சென்றடைவாள்.

'திரு' ஆகுபெயர். திறங்கள் காலமும் இடமும் · வினையும். பிறன் பொருளை விரும்பாமையாற் செல்வம் சுருங்காதிருப்பதோடு புதிதாகத் தோன்றவுஞ்செய்யும் என்பது இதனாற் கூறப்பட்டது.

கஅ0. இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(இ—ரை.) எண்ணுது வெஃகின் இறல் ஈனும்—பின் விளைவதை எண்ணிப்பாராது ஒருவன் பிறன் பொருளைக் கைப்பற்றக் கருதின், அக்கருத்து அவனுக்கு முடிவைத் தரும்; வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும்—பிறன் பொருளை விரும்பாமை யென்னும் பெருமிதம் ஒருவனுக்கு வெற்றியைத் தரும்.

முடிவு பொருளிழந்தாராலும் அரசனாலும் நேர்வது. "கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று" என்று ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் கூறியமை காண்க (சிலப். உ0 · கூச). வெற்றி வெஃகுவார் எல்லார் மீதும் ஆசை மீதுங்கொண்டது.

அதி. கக—புறங்கூறாமை

அஃதாவது, ஒருவரில்லாதவிடத்து அவரைப் பற்றித் தீதாகப் பேசுதல். புறம் முதுகு அல்லது பின்பக்கம். ஒருவரில்லாத இடம் அவருக்குத் தெரியாத முதுகுப் பக்கம் போன்றிருத்தலால் புறம் எனப்பட்டது. புறத்திற் கூறுவது புறங்கூறுதல். அது புறம் எனவும் படும். அன்று அது இடவாகு பெயர்.

புறங்கூறுதல், கோட் சொல்லுவதும் குண்டுணி பேசுவதும் என இரு வகைத்து. ஓர் அதிகாரியினிடத்தில் ஒரு பணியாளனைப் பற்றித் தீதாகச் சொல்வது கோள்; சோம்பேறிகள் பலர், சிறப்பாக வேலையொழிந்த பெண்டிர், ஒருவரைப் பற்றித் தீதாகப்பேசி மகிழ்வது குண்டுணி. கோள் குறளை யெனவும்படும்.

இலக்கிய வழக்கிற் பெரும்பாலும் கோட் சொல்லுவதைக் குறிக்கும் புறங்கூற்று, ஒருவரின் பதவியை அல்லது வேலையைப் பொருமையால் அல்லது தன்னலத்தால் வெளி அலைதப் பறிப்பதற்கு நிகழ்வதாயிருத்தலால், அதைக் கண்டித்தற்குப் புறங்கூறாமை வெளிகாமையின் பின் வைக்கப்பட்டது.

கஅக. அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

(இ—ரை.) ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும்—ஒருவன் அறம் என்னுஞ் சொல்லையுஞ் சொல்லாது அறமல்லாதவற்றைச் செய்யினும்; புறங்கூறான் என்றல் இனிது—ஒருவரையும் பற்றிப் புறங் கூறான் என்று உலகத்தாராற் சொல்லப்படுதல் நன்றும்.

புறங்கூறாமை அக்குற்றங்களினும் மேம்பட்டுத் தோன்றும் என்பதாம்.

கஅஉ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை

(இ—ரை.) புறன் அழீஇப் பொய்த்து நகை—ஒருவனைக்காணுவிடத்துப் பழித்துரையால் அழித்துக் கூறிக் கண்டவிடத்து அவனோடு பொய்யாகச் சிரித்து முகமலர்தல்; அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது—அறம் என்றே ஒன்றுமில்லையென அழித்துக்கூறி அறமல்லாதவற்றைச் செய்தலினுந் தீயதாம்.

அறனழித்தலினும் புறனழித்தலும் அல்லவை செய்தலினும் பொய்த்து நகையும் தீதென நிரனிறையாகக் கொள்க. பழித்துரையால் அழித்தலாவது பெயரைக் கெடுத்தல். 'அழீஇ' ஈரிடத்தும் பிறவினைப் பொருளில் வந்த சொல்லிசையளபெடை

கஅங. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லிறங்கூறு மாக்கந் தரும்.

(இ—ரை.) புறங் கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின்—ஒருவன் பிறனைக் காணுவிடத்துத் தீதாகக் கூறி அவனைக் கண்டவிடத்து

நல்லவனுக நடித்து உயிர் வாழ்தலினும்; சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும்—அங்ஙனஞ் செய்யாது இறந்து போதல் அவனுக்கு அறநூல்கள் கூறும் ஆக்கத்தைத் தரும்.

இறந்தவழிப் புறங்கூறலின்மையால் 'அறங் கூறும் ஆக்கந் தரும்' என்றார். ஆக்கம் மறுமையிற் பெறும் நன்மை. 'அறம்' ஆகு பெயர். தரும் என்னும் சொல்

''தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயி ரிடத்த.'' (இகஉ)

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி தன்மை முன்னிலையில் வராது படர்க்கையில் வந்ததினால், இடவழு வமைதியாம்.

கஅசு. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ—ரை.) கண் நின்று கண் அறச் சொல்லினும்—ஒருவனெதிரே நின்று கண்ணோட்டமின்றிக் கடுஞ்சொற்களைச் சொல்லினும்; முன் இன்று பின் நோக்காச் சொல் சொல்லற்க—அவன் எதிரில் இல்லாவிடத்துப் பின் விளையுந் தீமையை நோக்காத புறங் கூற்றுச் சொற்களைச் சொல்லா தொழிக.

'பின்' ஆகு பொருளது. சொல்வான் செயல் சொல்லின்மேலேற்றப் பட்டது. இதில் வந்துள்ளது முரணணி.

கஅடு. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(இ-ரை.) அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை—புறங் கூறுவா னொருவன் அறம் நல்ல தென்று சொல்லினும், அவன் அதை நெஞ்சாரச் சொல்கின்றனல்லன் என்னும் உண்மை; புறஞ் சொல்லும் புன்மையாற் காணப்படும்—அவன் புறஞ் சொல்லுதற்குக் காரணியமான சிறுதன்மையால் அறியப்படும்.

மனந்திருந்தாமையால் அவன் சொல் நம்பப்பெறு தென்பதாம். இனி, அறம் நல்ல தென்று ஒருவனது மனச்சான்று ஒப்புக் கொள்ளினும், வழக்கத்தினாலும் விருப்பினாலும் நெஞ்சுரமின்மையாலும் அவன் அதற்கு மாறுக ஒழுகலாமாகலின், 'அறங் கூறும் நெஞ்சத்தானன்மை' என்பதற்கு, அறத்தின் நன்மையைப் பற்றிக் கூறத் தகுதியுள்ள மனத்தானல்லாமை என்று உரைப்பினு மமையும்.

கஅஎ. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறந்தெரிந்து கூறப் படும்.

(இ—ரை.) பிறன்பழி கூறுவான்—பிறனொருவன் பழியை அவன் புறத்துக் கூறுபவன்; தன் பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும்—தன் சொந்தப் பழிகளுள்ளும் கடுமையானவை தெரிந்தெடுக்கப்பட்டு அப்பிறனுல் தன் எதிரிலேயே கூறப்படுவான்.

புறத்து என்பது அதிகாரத்தால் வந்தது. 'திறன்' வலிமை. அது இங்குத் திறனை பழிகளைக் குறித்தது; ஆதலால் ஆகுபொருளது. திறந் தெரிந்து கூறுவதற்குக் காரணியம் புறங்கூற்றைப் பற்றி அறிவிக்கப் பட்டமை அல்லது கேள்விப்பட்டமை யென்பது, கருதலளவையால் அறியப்படும். செய்யாமற் செய்த புறங் கூற்றிற்குப் பழிவாங்குஞ் செய்கையாதலாலும், 'திறந் தெரிந்து' என்னுங் குறிப்பினுலும், நேரிற் சொல்லுதலும் உய்த்துணரப்படும்.

கஅஎ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ரு தவர்.

(இ—ரை.) நகச் சொல்லி நட்பாடல் தேற்ருதவர்—மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடும் நட்பாடல் தமக்கு நன்றென்று தெளியாத புறங்கூற்ருளர்; பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்—பிளவுண்டாகுமாறு புறங்கூறித் தம் உறவினரையும் தம்மை விட்டுப் பிரியப்பண்ணுவர்.

கேளிரையும் என்னும் சிறப்பும்மை தொக்கது. நட்பாடல் என்னுங் குறிப்பால் அயலாரோடும் என்பது வருவிக்கப்பட்டது. அவ்வும்மை எச்சவும்மை. தம் கேளிர் என்னுது கேளிர் என்று மட்டுங் குறித்ததினுல், பிறரினத்தார்க்குள்ளும் புறங்கூற்ருற் பிரிவினையுண்டாக்குவர் என்பது பெறப்படும். இங்ஙனம் எல்லார்க்கும் பொல்லாதவராவர் என்பது கருத்து. தேருதவர் என்னும் தன்வினை தேற்ருதவர் என்று பிறவினை வடிவில் நின்றது, "கனவிலுந் தேற்ருதார் மாட்டு" (குறள் : ஈ0கூ) என்புழிப்போல.

கஅஅ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினர்
ரென்னை கொ லேதிலார் மாட்டு.

(இ—ரை.) துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்—தம் நெருங்கிய வுறவினர் குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றும் இயல்புடைய வன்னெஞ்சர்; ஏதிலார் மாட்டு என்னை கொல்—அயலார் செய்தியில் எத்தகையவராவார் !

'குற்றமும்' என்பது துன்னியாரை நோக்கிய சிறப்பும்மை. தூற்றுதல் என்பது களத்திற் பொலி தூற்றுதல்போலப் பலருமறியப் பரப்புதல். மிகக் கொடியவராவர் என்பது பற்றியும் அறியப்

படாமை பற்றியும் 'என்னை கொல்' என்றார். 'என்னர் கொல்' என்னும் பாடமும் ஏற்றதே. 'கொல்' ஐயம்.

கஅகூ. அறனெனக்கி யாற்றுங்கொல் வையம் புறனெனக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(இ—ரை.) புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை—பிறர் இல்லாத சமயம் பார்த்து அவரைப் பழித்துரைக்கும் புறங் கூற்றுளனது உடலைப் பொறுத்தலே; வையம் அறன்நோக்கி ஆற்றுங் கொல்—மாநிலம் தனக்கு அறமென்று கருதிச் செய்யும் போலும்!

தன்னை அகழ்வாரைத் தாங்கும் நிலத்திற்கும் புறங்கூற்றுளன் உடலைச் சுமத்தல் அரிதென்னுங் கருத்தால். 'அறனெனக்கி யாற்றுங் கொல்' என்றார். பொறை என்னும் சொல் இங்குச் சுமத்தலும் பொறுத்துக்கொள்ளுதலுமாகிய இரு பொருளையும் ஒருங்கே தழுவிய தாம். 'கொல்' ஐயங்கலந்த உய்த்துணர்வு.

கஅஙo. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(இ—ரை.) ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்—புறங்கூறுவார் தாம் காணும் பிறர் குற்றம்போல் தம்குற்றத்தையுங் காணவல்லராயின்; மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ—நிலைபெற்ற மக்களுயிர்க்கு வரக்கூடிய துன்பமுண்டோ?

அயலாரையும் பகைவரையுங் குறிக்கும் ஏதிலார் என்னும் சொல், இங்குப்பிறர் என்னும் பொருட்டாய் நின்றது. பிறர் குற்றம் போல் தம் குற்றமுங் காண்டலருமை நோக்கிக் 'காண்கிற்பின்' என்றார். கண்டவழித் தீவினை நிகழாதாதலின் அதனால் துன்பமு மிராதென்பதாம். 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. இனி, காண் கின்பின் என்று பிரிப்பினும் அமையும். உடல்நில்லா தொழியவும் உயிர் நிலைபெற்று நிற்றலால் மன்னுமுயிர் என்றார்.

அதி. உo—பயனில சொல்லாமை

அஃதாவது, வேலை செய்யாத ஓய்வு நேரத்திலும் தனக்கேனும் பிறர்க்கேனும் அறம் பொருளின் பங்களுள் ஒன்றும் பயவாத வீண் சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்னும் நால்வகைச் சொற்குற்றங்களுள், பொய் இல்லறத் தார்க்குப் பயன்படுமாறும் துறவறவியலிற் கண்டிக்கப்படுவதனாலும், கடுஞ்சொல் இனியவை கூறலானும் குறளை புறங்கூறுமையானும் விலக்கப்பட்டமையாலும், எஞ்சி நின்ற பயனில் சொல்லைக் கடிவது

இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒன்றைச் சொல்வதற்குக் கேட்பாரும் வேண்டியிருத்தலின், இருவர்க்குக் குறைந்து சொல்லாட்டு நிகழ்த்த முடியாது. இருவரோ பலரோ கூடி வீண் பேச்சுப் பேசும் போது, நகையாடி மகிழ்தற் கேனும் பிறரைப் பற்றிப் புறங்கூற்றுகப் பேச நேருமாதலின், அத்தொடர்பு பற்றி இது புறங்கூறுமையின் பின் வைக்கப்பட்டது.

கஅக. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(இ—ரை.) பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான்—அறிவுடையார் பலரும் வெறுக்குமாறு வீண் சொற்களைச் சொல்பவன்; எல்லாரும் எள்ளப்படும்—எல்லாராலும் இழிவாய் எண்ணப்படுவான்.

எல்லாரும் என்று பிற்குறித்ததனால் பல்லார்என்று முற்குறித்தது அறிவுடையாரை யென்பது உய்த்துணரப்படும். அறிவுடையார் வெறுக்கவே அவரைப் பின்பற்றி ஏனையோரும் வெறுப்பர் என்பது கருத்து. எள்ளுதல் மன்த்தின் செயல்.

கஅஉ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(இ—ரை.) பயன் இல பல்லார்முன் சொல்லல்—ஒருவன் பயனற்ற சொற்களை அறிவுடையோர் பலர்முன் சொல்லுதல்; நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது—விரும்பப்படாத செயல்களைத் தன் நண்பரிடத்துச் செய்தலினுந் தீயதாம்.

நயத்தல் விரும்புதல். நயம் விருப்பம். 'நயன்' போலி. அறிவுடையோர்க்குப் பயனில் சொல்லின் மீதுள்ள வெறுப்பின் அளவைக் கூறியவாறு.

கஅஊ. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

(இ—ரை.) பயன் இல பாரித்து உரைக்கும் உரை—ஒருவன் பயனில்லாத பொருள்களைப் பற்றி விரித்துரைக்கும் உரையே; நயன் இலன் என்பது சொல்லும்—அவன் நேர்மை (நீதி) யில்லாதவன் என்பதை அறிவிக்கும்.

அறிவித்தலும் பயனளவிற் சொல்லுதலை ஒக்குமாதலின் 'சொல்லும்' என்றார்.

கஉசி நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(இ—ரை.) பல்லாரகத்துப் பயன் சாராப் பண்பு இல்சொல்—ஒருவன் பலரிடத்தும் பயனெடு பொருந்தாத பண்பற்ற சொற்களைச் சொல்லுதல்; நயன் சாரா நன்மையின் நீக்கும்—நேர்மையொடு பொருந்தாது அவனை நற்குணத்தினின்று நீக்கும்.

சொற் பண்புகள் ஓசையினிமை, இலக்கண வழுவின்மை, பொருள் நன்மை முதலியன. சொல்லுதல் என்பது சொல்லெச்சம். 'சாரா' இரண்டனுள் முன்னது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்; பின்னது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

கஉஞ சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(இ-ரை.) நீர்மை உடையார் பயன் இல சொலின்—இனிய தன்மையுடைய உயர்ந்தோரும் பயனற்ற சொற்களைச் சொல்வாராயின்; சீர்மை சிறப்பொடு நீங்கும்—அதனால் அவருடைய உயர்வும் அது பற்றிய மதிப்பும் நீங்கிவிடும்.

'சொலின்' என்னும் நிகழ்ப்பாட்டு வினையெச்சம் சொல்லாமையை உணர்த்திற்று.

கஉகக. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

(இ-ரை.) பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்—பயனற்ற சொற்களைப் பலகாலும் விரும்பிச் சொல்பவனை மகன் (மாந்தன்) என்று சொல்லற்க; மக்கட் பதடி எனல்—மக்களுட் பதர் என்று சொல்லுக.

அல் என்னும் வியங்கோளீறு முன்பு எதிர்மறையிலும் பின்பு உடன்பாட்டிலும் வந்தது. பதர் உள்ளீடில்லாத கூல மணி. மக்கட் பதர் அறிவாகிய உள்ளீடற்றவன் அல்லது அற்றவள்.

கஉஎ நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(இ-ரை.) சான்றோர் நயன் இல சொல்லினும் சொல்லுக—அறிவுடையோர் நேர்மை யில்லாத சொற்களை என்றேனும் தப்பித் தவறிச் சொல்லினும் சொல்லுக; பயன் இல சொல்லாமை நன்று... ஆயின் எக்கரணியத்தையிட்டும் பயனில்லாத சொற்களைச் சொல்லா திருத்தலே அவர்க்கு நன்றும்.

இது நேர்மையில்லாச் சொல்லே நெருக்கடி நிலைமையிற் சொல்ல இசைவளித்ததன்று; நேர்மையில்லாச் சொல்லினும் பயனில்லாச் சொல் தீயதென்பதை உணர்த்துவதேயாம்.

கூஙஅ. அரும்பய னுயு மறிவினுர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

(இ - ரை.) அரும்பயன் ஆயும் அறிவினர்—அறிதற்கரிய பயன்களே ஆராயவல்ல அறிவுடையார்; பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார்—மிகுந்த பயனில்லாத சொற்களே ஒருபோதும் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன நாள்கோளியக்கமும் மெய்ப் பொருளியலும் வீடுபேறும் முதலியன. பெரும்பயனில்லாத சொல்லைச் சொல்லாரெனவே, சிறு பயன் தரும் சொல்லும் அவர் வாயினின்று வராதென்பது பெறப்படும். இதனுல். அரும்பயனுராயும் அறிவினுர்க்குச் சிறுபயன் சொல்லும் அறவே விலக்கப்பட்டது.

கூஙங. பொருளர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருளர்ந்த
மாசறு காட்சி யவர்.

(இ—ரை.) மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர்—மயக்கத்தி னின்று நீங்கிய குற்ற மற்ற அறிவுடையார்; பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்—பயனில்லாத சொற்களே மறந்துஞ் சொல்லார்.

மயக்கம் ஐயமுந் திரிபும். குற்ற மற்ற அறிவு மெய்யறிவு அல்லது தூய அறிவு.

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(இ—ரை.) சொல்லின் பயன் உடைய சொல்லுக—ஏதேனு மொன்றைச் சொல்லின் பயனுள்ள சொற்களேயே சொல்லுக; சொல்லில் பயனிலாச் சொல் சொல்லற்க—சொற்களிற் பயனில்லாத வற்றைச் சொல்லாதிருக்க.

ஒரே பொருளே உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் கூறியது அதை வலியுறுத்தற்காதலின், கூறியது கூறலன்று. ஒரே சொல் பொருள் மாறுது திரும்பத் திரும்ப வந்தது 'சொற்பொருட் பின்வரு நிலை' யணியாம்.

அதி. உக—தீவினையச்சம்

அஃதாவது, இம்மையிலும் மறுமையிலும் துன்பம் விளைவிக்கும் தீவினைகட்கு அஞ்சி அவற்றைச் செய்யாதிருத்தல். பயனில் சொல்லையும் தீச்சொல் என விலக்கியமையால், தீவினை விலக்கப் பட்டமை சொல்லாமலே பெறப்படும். முக்கரணத்துட் சொல்லிற் கடுத்தது செயலாதலால், இது பயனில சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.

தீச்சொல்லினும் தீச்செயல் கொடியது என்பதை வலியுறுத்தற்கு, தீவினை செய்யாமை என்னது தீவினையச்சம் என்றார்.

உ0க. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(இ—ரை.) தீவினை என்னும் செருக்கு—தீவினை என்று சொல்லப் படும் இறுமாப்பிற்கு; தீவினையார் அஞ்சார்—தீவினை செய்து பழகிய தீயோர் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்—ஆயின் அதைச் செய்தறியாத சீரியோர் அஞ்சுவர்.

தீவினைக்குக் காரணியமான இறுமாப்பு தீவினை யென்னும் கருமிய மாகச் சார்த்திக் கூறப்பட்டது. அஞ்சாமை மனச்சான்றின் மழுக்கத்தாலும் அச்சம் அதன் கூர்மையாலும் ஏற்படுவனவாம்.

உ0உ. தீயவே தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(இ—ரை) தீய தீயவே பயத்தலால்—ஒருவன் தனக்கின்பங் கருதிச் செய்யும் தீவினைகள் இம்மையிலும் மறுமையிலும் துன்பங் களையே தருதலால்; தீயவை தீயினும் அஞ்சப்படும்—அத்தீவினைகள் தீயினும் மிகுதியாக அஞ்சப்படத்தக்கனவாம்.

தீயானது தொட்டவரைச் சுடினும் எரிப்பினும், சமைத்தலும் குளிர் போக்கலும் நோய் நீக்கலும் கொடுவிலங்கு விரட்டலுமாகிய நன்மைகளையுஞ் செய்தலாலும்; தீவினையானது செய்த காலத்தில் மட்டு மன்றிப் பின்பு வேறொரு காலத்திலும் வேறோரிடத்திலும் வேறோ ருடம்பிலுஞ் சென்று சுடுதலாலும், எவ்வகை நன்மையுஞ் செய்யாமையாலும்; 'தீயவை தீயினும் அஞ்சப்படும்' என்றார். தீவினை நன்மை செய்யாமை பற்றியே 'தீயவே' என்னும் பாடம் இங்குக் கொள்ளப்பட்டது.

உ0ஙு. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(இ—ரை.) செறுவார்க்கும் தீய செய்யா விடல்—தம்மைப் பகைப்பவர்க்குந் தீமையானவற்றைச் செய்யாது விடுதலே; அறிவினுள் எல்லாம் தலை என்ப—அறிவுச் செயல்களெல்லாவற்றுள்ளும் தலையாயதென்பர் அறிவுடையோர்.

நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையுஞ் செய்வதே மக்களியல்பாதலால், தீமைக்கு நன்மை செய்வதை அல்லது தீமை செய்யாமையைச் சிறந்த அறிவுச் செயலென்றார். உம்மை இழிவு சிறப்பு. 'செய்யா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். அறிவினுள் ஒழுக்கம் பயனதலின் ஒழுக்கம் அறிவெனப்பட்டது.

உ0ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(இ—ரை.) பிறன்கேடு மறந்தும் சூழற்க—ஒருவன் பிறனுக்குக் கேடு செய்யும் தீமையை மறந்தும் எண்ணுதிருக்க; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும்—எவனேனும் எண்ணின், எண்ணினவனுக்குக் கேட்டை அறத்தெய்வமே செய்ய எண்ணும்.

தப்பாது பழிக்குப் பழிவாங்க வலிமை மிக்க அறத் தெய்வம் உடனிருத்தலால், ஒருவனுக்குத் தீங்கை எண்ணுதலும் ஆகாது என்பதாம்.

உ0டு. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகும் மற்றும் பெயர்த்து.

(இ—ரை.) இலன் என்று தீயவை செய்யற்க—எவனேனும் யான் பொருளில்லாதவன் என்று கருதி அதைப் பெறற் பொருட்டுப் பிறர்க்குத் தீமையானவற்றைச் செய்யாதிருக்க; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும்—செய்வானையின் மீண்டும் வறியனாவான்.

தீவினையான் வந்த பொருளே விரைந்து இழந்து விடுவானாதலின் மீண்டும் வறியனாவான் என்றார். 'இலன்' இரண்டில், முன்னது தன்மை யொருமைக் குறிப்பு வினைமுற்று; பின்னது படர்க்கை யாண்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். 'மற்று' அசைநிலை. உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது.

உ0ரு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

(இ—ரை.) நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான்—துன்புறுத்துந் சிறத்தனவாகிய குற்றங்கள் தன்னைப் பின் வந்து வருத்து

தலே விரும்பாதவன்; தீப்பால தான் பிறர்கண் செய்யற்க—தீமை செய்யுந் திறத்தனவாகிய வினைகளைத் தான் பிறரிடத்துச் செய்யாதிருக்க.

தன்னலம் பற்றியேனும் பிறர்க்குத் தீமை செய்யாதிருக்க என்றவாறு.

உ0ஏ. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ—ரை.) எனைப் பகை உற்றாரும் உய்வர்—எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனின்று ஒருவகையால் தப்புவர்; வினைப் பகை வீயாது பின் சென்று அடும்—ஆயின், தீவினையாகிய பகையோ நீங்காது தொடர்ந்து சென்றவிடமெல்லாஞ் சென்று வருத்தும்.

தீவினைப் பயனுக்குத் தப்ப முடியா தென்பதாம்.

உ0அ. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

(இ—ரை.) பிறர்க்குத் தீமையான வற்றைச் செய்தவர் அவற்றின் வினைவால் தப்பாது கெடுதல் எது போன்றதெனின்; நிழல் தன்னை வீயாது அடி உறைந்த அற்று—ஒருவனது நிழல் அவன் எங்குச் செல்லினும் உடன் சென்று, இருள் வந்த விடத்துக் கண்ணிற்கு மறையினும் மீண்டும் ஒளியில் தோன்றுமாறு, என்றும அவனை விட்டு நீங்காது அவன் காலடியிலேயே தங்கியதன்மையது.

மேல் 'வீயாது பின்சென் றடும்' என்றதை இங்கு உவமையால் விளக்கினார்.

உ0கூ. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(இ—ரை.) தான் தன்னைக் காதலன் ஆயின்—ஒருவன் உண்மையில் தன்னைக் காதலிப்பவனாயின்; தீவினைப் பால் எனைத்து ஒன்றும் துன்னற்க—பிறர்க்குத் தீமை செய்யும் பகுதியொடு எத்துணைச் சிறிதும் பொருந்தற்க.

பிறர்க்குச் செய்த தீவினை தப்பாது தனக்குத் துன்பம் விளைத்தலால், 'தன்னைத்தான் காதலனாயின்' என்றார். காதல் என்றது அறிவோடு கூடிய காதலை. தீவினைப் பகுதியொடு பொருந்தாமையாவது தீவினை செய்யாதிருத்தலே. ஒன்று என்னும் எண்ணுப் பெயர் இங்குச் சிற்றளவுப் பொருளினது.

உக0. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(இ—ரை.) மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின்—ஒருவன் செந்நெறியினின்றும் ஒரு பக்கமாக விலகிச் சென்று பிறர்க்குத் தீமை செய்யானாயின்; அருங்கேடன் என்பது அறிக—அவன் கேடில் லாதவன் என்பதை அறிந்து கொள்க.

அருமை இங்கு இன்மை குறித்தது. அருங் கேடன் என்பது காலில்லாதவனை இல்லாக் காலன் என்றாற் போல்வது. இது செய்யுள் வழக்கு. மருங்கோடுதல் விரைந்து விலகுதல்.

அதி. உஉ—ஒப்புரவறிதல்

அஃதாவது இல்லறத்தாருட் பெருஞ் செல்வரானவர் செல்வருள் உயர்ந்தோரான வள்ளல்களைப் பின்பற்றியொழுகுதலின் கண், "வள வனையினும் அளவறிந்தளித்துண்". என்ற நெறிமுறைப்படி தத்தம் அளவறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல். உயர்ந்தோரான வள்ளல்களை யொத்தொழுகுதலும் அவரவர்செல்வத்தின் அளவறித லும் பற்றி ஒப்புரவறிதல் எனப்பட்டது. இது பெருஞ்செல்வர்க்குரிய உலக நடையாம்.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறருஞ்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே."

என்று (புறம். கஉக). உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடி யிருத்தல் காண்க.

தீவினைக்கு எதிரானதும் அதைப் போக்க வல்லதும் நல்வினை யாதலானும், நல்வினையிற் சிறந்தது ஈகையாதலானும், ஈகையிற் சிறந்த வகையான ஒப்புரவறிதல் தீவினையச்சத்தின் பின் வைக்கப் பட்டது. தீவினையாகிய மறத்திற்கு மாறும் மாற்றும் அறம். அறத் தின் சிறந்த வகை ஈகை. "ஈதலறம்" என்றார் ஔவையாரும்.

உக8. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞாற்றுங் கொல்லோ வுலகு.

(இ - ரை.) உலகு மாரிமாட்டு என் ஆற்றும்—உலகிலுள்ள உயிர்கள் தம் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீரை யுதவுகின்ற முகிலுக்கு என்ன கைம்மாறு செய்கின்றன!; ஒன்றுமில்லையே!

கடப்பாடு கைம்மாறு வேண்டா—ஆதலால், அம்முகில் போலும் வள்ளல்கள் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு வேண்டுவனவல்ல.

'என்னுற்றும்' என்ற வினாவிற்குரிய விடை வருவித்துரைக்கப் பட்டது 'கடப்பாடு' என்னுஞ் சொல் பெருஞ் செல்வர் வறியார்க் குதவக் கடமைப்பட்டவர் என்பதை யுணர்த்தும். கடப்படுவது கடப்பாடு. இனி, வள்ளல்கள் தம் கடமையாகக் கொண்டொழுகு வது கடப்பாடு எனினுமாம்.

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே."

என்னுங் கபிலர் பாட்டு (புறம். கoள) இங்குக் கவனிக்கத் தக்கது செய்வாரது வேண்டாமை அவர் செயலின்மேல் ஏற்றப் பட்டது. 'கொல்', 'ஓ' இரண்டும் அசைநிலைகள்.

உகூ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ-ரை.) தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம்—ஒப்புரவா ளன் முயற்சி செய்து தொகுத்த செல்வம் முழுதும்; தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு—தகுதியுடையார்க்குப் பல்வகை யிலும் உதவி செய்தற் பொருட்டேயாம்.

இதனால், இடைவிடாது முயற்சி செய்து மேன்மேலும் பொரு ளீட்டாது இருந்துண்ணும் சோம்பேறித்தனமும், தகுதியில்லாதவர்க் குச் செய்யும் தவறான வேளாண்மையும் விலக்கப்பட்டன. "குந்தித் தின்றுற் குன்றுங் குன்றும்." ஆதலின், ஒப்புரவாளனுக்கு இடை விடா முயற்சி வேண்டுமென்பதாம். பொருளுள்ளவரும் தமிழைக் கெடுப்பவரும் தகுதியற்றவராவர். ஒப்புரவாளன் என்னும் எழுவாய் அதிகாரத்தால் வந்தது.

உகூ. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(இ-ரை.) ஒப்புரவின் நல்ல—ஒப்புரவு போன்ற நல்ல செயல் களோ: புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்—தேவருலகத்திலும் இவ் வுலகத்திலும் பெறுதல்; அரிதே—அரிதேயாம்.

அரிது என்னும் சொல், தேவருலகத்தை நோக்கின் இன்மைப் பொருளும், இவ்வுலகத்தை நோக்கின் அருமைப் பொருளும், தருவ

தாம். ஏனெனின், தேவருலகத்தில் ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையர்; இவ்வுலகத்தில் ஒப்புரவு செய்வார் விரல்விட்டெண்ணவும் வேண்டாத ஒரு சிலரே. ஏகாரம் தேற்றம். 'பிற' அசைநிலை.

உகர. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(இ - ரை.) ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் — ஒப்புரவு செய்வானும்செய்யாதானுமாகியஇருவகைச்செல்வருள், செய்பவனே உயிரோடு கூடி வாழ்பவனுவன்; மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்—மற்றச் செய்யாதவன் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான்.

உயிருக்குரிய அறிவுஞ் செயலுமின்மையின், நடைப்பிணமென்றுங் கருதப்படாது பிணமென்றே இழித்திடப்படுவான் என்றார்.

உகடு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(இ - ரை.) உலகு அவாம் பேரறிவாளன் திரு—உலகிலுள்ள உயிர்களையெல்லாம் விரும்பி ஒப்புரவு செய்யும் பேரறிவுடையான் செல்வம்; ஊருணி நீர்நிறைந்த அற்றே—ஊர்வாழ்நரின் குடிநீர்க் குளம் நிரம்பினாற் போன்றதே.

பாரி முல்லைக்குத் தேரும் பேகன் மயிலுக்குப் போர்வையும் உதவிய செயல்கள், ஒப்புரவாளர் அஃறிணை யுயிர்களையும் விரும்புவதை அறிவிக்கும். ஊருண்பது ஊருணி. இது பாண்டி நாட்டு வழக்கு. இல்லற நிலையிலேயே இருதிணையுயிர்களிடத்தும் அன்பு செய்பவனைப் பேரறிவாளன் என்றார். ஊருணி என்ற உவமத்தால் மாபெருஞ் செல்வம் என்பதும், ஒப்புரவாளன் வாழுங் காலமெல்லாம் எல்லார்க்கும் என்றும் எளிதில் உதவும் என்பதும் பெறப்படும். 'நீர்நிறைதல்' ஒரு சொற்றன்மையது. ஏகாரம் தேற்றம்.

உகஉ. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(இ—ரை) செல்வம் நயன் உடையான்கண் படின்—செல்வம் ஒப்புரவு செய்யும் நேர்மையாளனிடம் சேருமாயின்; பயன் மரம் உள்ளூர்ப்பழுத்த அற்று—அது பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போலும்.

ஒப்புரவு நேர்மை மிக்க செயலாதலின் அதை நயன் என்றார். நச்சு மரத்தை விலக்கப் பயன்மாம் என்றார். ஊருள் என்பது

உள்ளூர் என முறை மாறியது இலக்கணப் போலி. 'ஆல்' அசைநிலை.

உகஎ. மருந்தாகித் தப்பா மரத்தற்றூற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(இ – ரை.) செல்வம் பெருந்தகையான்கண் படின்—செல்வம் ஒப்புரவு செய்யும் பெருந்தகையாளனிடம் சேரின்; மருந்து ஆகித் தப்பா மரத்து அற்று—அது வேர்முதல் கொழுந்துவரை எல்லா வுறுப்பும் பல்வேறு நோய்க்கு மருந்தாகித் தப்பாது பயன்படும் மரத்தையொக்கும்.

மரத்தை மருந்தென்றமையால் அதன் உறுப்புக்களெல்லாம் மருந்தாதல் அறியப்படும். சில மருந்துகள் சிலருடம்பிற்கு ஏற்காமையானும் சிறிது காலம் பொறுத்து ஆற்றல் கெடுதலானும், எல்லார்க்கும் என்றும் தப்பாது குணந்தரும் என்பதை யுணர்த்தத் 'தப்பா மரம்' என்றார்.

மேற்கூறிய மூவே றுவமங்களுள் ஊருணியென்பது எல்லார்க்கும் பயன்படும் செல்வத்தையும், பழமரம் என்பது பலர்க்குப் பயன்படும் செல்வத்தையும், மருந்து மரம் என்பது சிலர்க்குப் பயன்படும் செல்வத்தையும் குறிக்குமென்று கொள்ள இடமுண்டு. இங்ஙனம் பயனளவில் வேறுபடுவது செல்வத்தின் அளவையும் ஒப்புரவாளரின் குறிக்கோளையும் பொறுத்ததாகும். 'ஆல்' அசைநிலை.

உகஅ. இடனில் பருவத்து மொப்புர விற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ-ரை.) கடன் அறி காட்சியவர்—கடப்பாட்டை யறிந்த அறிவுடையோர்; இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்—தம் செல்வம் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்.

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செண்டத்தூர் ஐயாத்துரை முதலியார் என்னும் வள்ளல், தம் செல்வம் சுருங்கிய காலத்தும் ஓரிலக்கம் உருபா கடன்கொண்டு ஒப்புரவாற்றியது, இதற்கோர் எடுத்துக்காட்டாம்.

உகக. நயனுடையானல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(இ - ரை.) நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல்—ஒப்புரவாளன் வறியவனுதலாவது; செயும்நீர செய்யாது அமைகலா வாறு

—தவிராது செய்யுந் தன்மையவான வேளாண்மைச் செயல்களைச் செய்யவியலாது அமைதியற்றிருக்கும் நிலைமையே.

அமைதியற்றிருக்கும் நிலைமையாவது வருந்துதல். ஒப்புரவுசெய்ய வியலாவாறு செல்வம் அற்றவிடத்து, பிறரை நுகர்வியாமைபற்றியே யன்றித் தான் நுகராமை பற்றி வருந்துவதில்லை யென்பதாம்.

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(இ - ரை.) ஒப்புரவினால் கேடு வரும் எனின்—ஒப்புரவினால் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமாயின்; விற்றுக்கோள் தக்கது உடைத்து—அக்கேடு ஒருவன் தன்னை விற்றுகிலும் கொள்ளத்தக்க தகுதியையுடையதாம்.

ஒப்புரவினால் வருங்கேடு, ஒருவராலும் பழிக்கப்படாமல் இவ் வுலகிற் புகழும் மறுமைக்கு அறமும் விளைத்தலால், ஒரு சிறந்த பேறேயன்றி இழப்பன்று என்பதாம். அப்பேற்றின் சிறப்பை மிகுத் துக் காட்டற்கே தன்னை விற்றுங் கொள்ளத்தக்க தென்றார்.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணமெழு சேப்ப
ஈகை யரிய இழையணி மகளிரொடு
சாயின் றென்ப வாஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுக ழொரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே."

என்னும் புறப்பாட்டு (கஉஎ) ஆய்வள்ளல் ஒப்புரவினால் அடைந்த பொருட்கேட்டைத் தெரிவிப்பதாம்.

அதி. உகூ—ஈகை

அஃதாவது, செல்வர் வறியோரான இல்லார்க் கீதலும் இரப் போர்க்கிடுதலுமாம். மூவகையான ஈதல்வகையுள், ஒப்புரவு முன் னர்க் கூறப்பட்டமையால் அடுத்த இரண்டையுந் தழுவும் ஈகை அதன்பின் இங்கு வைக்கப்பட்டது.

இல்லார் புலவர் உறவினர் முதலியோர்; இரப்போர் குருடர் மூடவர் முதலியோர்.

உஉங. வறியார்க் கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ—ரை.) வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை—பொருளில்லாத வரும் திருப்பிச் செய்ய இயலாதவருமான ஏழையர்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே ஈகை என்னும் அறச் செயலாம்; மற்று எல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து—மற்றக் கைம்மாறு கருதிய கொடுப்பெல்லாம் அளவு குறித்துக் கடன் கொடுக்கும் தன்மையதாம்.

குறியெதிர்ப்பையாவது அளவு குறித்துக் கொடுத்து அவ்வளவில் திரும்பப் பெறுங் கடன். நீரது என்பதில் அது என்பது முதனிலைப் பொருளீறு. "ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே". (கூஉ அ) என்னும் தொல்காப்பிய நெறிப்படி, ஈகை என்னும் சொல் சிறப்பாகத் தாழ்ந்தோர்க்கு ஈதலைக் குறிக்கும்.

உஉஉ. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(இ—ரை.) கொளல் நல் ஆறு எனினும் தீது—பிறரிடத்தினின்று வாங்குவது வீட்டுலகத்திற்கு நல்வழியென்று அறநூல் கூறினும் வாங்குவது தீயது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று—பிறருக்குக் கொடுப்பதால் அவ்வுலகத்தை அடைய முடியாதென்று அந்நூல் கூறினும், கொடுத்தலே நல்லது.

உம்மை ஈரிடத்தும் எதிர்மறை. கொடுத்தல் தருதல் என்னும் சொற்களினும் ஈதல் என்னும் சொல்லே இவ்வதிகாரத்திற்கு ஏற்றதாம்.

உஉங. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ—ரை.) இலன் என்னும் எவ்வம் உரையாமை—யான் ஏழையென்று இரப்போன் சொல்லும் இழிவுரையைத் தான் பிறனிடத்துச் சொல்லாமையும்; ஈதல்—அவ் விரப்போன் வேண்டிய தொன்றை இல்லையென்னாது அவனுக்கு ஈதலும்; குலன் உடையான் கண்ணே உள—ஆகிய இரண்டும் உயர்குடிப் பிறந்தான் கண்ணே உள்ளன.

எவ்வம் துன்பம். அது இங்குத் துன்பந்தரும் இழிவுரையைக் குறித்தது.

இனி, 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்னும் தொடருக்குப் பின்வருமாறும் உரைகள் கூறப் பெறும்.

(க) யான் பொருளில்லாதவன் என்று இரப்போன் தன் இளிவரவைச் சொல்லுமுன் அவன் குறிப்பறிந்து கொடுத்தல்.

(உ) அவ்விழிவுரையைப் பின்னும் இன்னொருவனிடம் சென்று உரையா வண்ணம் அவ்விரப்போனுக்கு நிரம்பக் கொடுத்தல்.

(க) ஒல்லத்தான் என்னிடம் இப்பொழுது பொருளில்லை யென்று ஈயாதார் சொல்லும் இழிவுரையைச் சொல்லாது கொடுத்தல்.

இம் மூவுரையும் எளிதாய்ப் பொருந்துவன. இனி, வலிந்து பொருத்தும் வேறுமூவுரையுமுள. அவை வருமாறு :—

(க) அவ்விரப்போனை ஒன்றுமில்லாதவனென்று பிறர் இழித்துரையா வண்ணம் கொடுத்தல்.

(உ) அவ்விரப்போனுக்கு மறுத்த இல்லறத்தான் அது பற்றிப் பின்பு வறியனானபின், தானும் (க) அவனோ டிரந்தானும் பிறரும் இலனென்னும் இனிவரவு கூறுவண்ணம் கொடுத்தல்.

இவ்வுரைகட்கெல்லாம் 'ஈதல்' என்பது கூகூ—ஆம் குறளிலுள்ள 'சொலல்' என்பது போலப் பன்மையாம். இக்குறளால், உயர்குடிப் பிறந்தோன் ஈகையாளனே யன்றிப் பிராமணனல்லன் என்பது பெறப்பட்டது.

உஉ. இன்ன திரக்கப் படுத லிரந்துவ
ரின்முகங் காணு மளவு.

(இ—ரை.) இரந்தவர் இன்முகம் காணும் அளவு—ஒருபொருளை இரந்தவர் அதைப் பெற்றதினால் மலரும் அவரது தனிய முகத்தைக் காணுமளவும்; இரக்கப்படுதல் இன்னது—இரத்தலேயன்றி இரக்கப் படுதலும் குடிப்பிறந்தானுக்குத் துன்பந்தருவதாம்

படுதலும் என்னும் எச்சவும்மையும் அளவும் என்னும் முற்றும்மையுந் தொக்கன. இன்முகங் காணுமளவுந் துன்பமென்றதனால், இரந்த பொருள்களை யெல்லாம் ஈதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆயினும், தன் மானத்திற்கு இழுக்கு நேராவாறு என்னும் வரையறை பகுத்தறிவாற் கொள்ளப்பெறும்.

உஉடு. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ—ரை.) ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்—தவத்தால் வலிமையடைந்தாரது வலிமையெல்லாம் தம்மை வருத்தும் பசியைப் பொறுத்துக் கொள்ளுதலே; அப்பசியை மாற்றுவார் ஆற்றலின்பின்—அவ்வலிமையும் அப்பொறுத்தற்கரிய பசியை ஈகையால் ஒழிப்பவரது வலிமைக்குப் பிற்பட்டதே.

தம்பசியையே மாற்ற மாட்டாதவரது வலிமையினும், தம் பசியையும் பிறர் பசியையும் ஒருங்கே மாற்றுவாரது வலிமை சிறந்த தென்பதாம்.

''யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
வூணெலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் விறுவீ றியங்கு
மிருங்கிளைச் சிறுஅர்க் காண்டுங் கண்டு
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.''

என்று (புறம். ஙஙக) சிறுகுடிகிழான் பண்ணனின் பசியாற்ற லறத்தைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சிறப்பித்துப் பாடியிருத்தல் காண்க.

உஉகூ. அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி.

(இ—ரை.) அற்ருர் அழிபசி தீர்த்தல்—வறியவரின் கடும்பசியைத் தீர்க்க; அஃது ஒருவன் பொருள் வைப்புழி பெற்ருன்—அவ்வறச் செயலால் ஒருவன் தான் தேடிய செல்வத்தை மறுமையில் தனக்குப் பயன்படுமாறு சேமித்து வைக்கும் ஏம வைப்பகத்தைப் (Savings Bank) பெற்ருனவன்.

கொல்வது போல வருத்துவதனலும், குடிப்பிறப்பு கல்வி மானம் அறிவுடைமை முதலிய பேறுகளையும் பண்புகளையும் அழிப்பதனலும், கடும்பசி அழிபசி யெனப்பட்டது. வறியவரின் பசியைத் தீர்த்தற்குச் செலவிட்ட பொருள் பின்பு தனக்கே வந்துதவுதலால், அருள் நோக்கிச் செய்யாவிடினும் தனக்குப் பயன்படும் அறம் நோக்கியேனும் அதைச்செய்க என்றவாறு.

'தீர்த்தல்' தல்லீற்று வியங்கோள். பெற்ருன் என்பது தேற்ரும் பற்றிய காலவழுவமைதி. அஃதொருவன் என்பது அதுவொருவன் என்றும் இருக்கலாம். அடுத்த அதிகார முதற் குறளில் 'வாழ்தல துவல்லது' என வருதல் காண்க.

உஉஎ. பாத்தூண் மீஇ யவனைப் பசியென்னுங்
தீப்பிணி தீண்ட லரிது.

(இ—ரை.) பாத்து ஊண் மீஇ யவனை—எப்போதும் பலரொடும் பகிர்ந்துண்டு பயின்றவனை; பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது—பசியென்று சொல்லப்படும் கொடிய நோய் தாக்குதலில்லை.

நாள்தோறும் வந்து வருத்துவதாலும், நல்லார் வல்லாருட்பட எல்லாரையுந் தாக்குவதாலும், எம்மருந்தாலும் அறவே நீக்கப் படாமையாலும், பிற நோய்கள் அழிக்காதவற்றையும் அழித்து மறுமையிலுந் துன்புற வழிகோலுவதாலும், பசி தீப்பிணி யெனப் பட்டது. ''இறைக்க ஓறும் மணற் கேணி; ஈயப் பெருகும் பெருஞ் செல்வம்.'' ஆதலின், பாத்துண்டு பயின்றவனைப் பசிப்பிணி தீண்டுவதில்லை. தீண்டுவதுமில்லை யெனவே வருத்தாமையைச் சொல்ல வேண்டுவதில்லை. 'மீஇ' (மருவி) இன்னிசையளபெடை. அரிது என்பது இங்கு இன்மைப் பொருளது.

உஉஅ. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ருமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ—ரை.) தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர்—தாம் உடைய பொருளை ஈயாது வைத்திருந்து பின்பு கள்வராலும் கொள்ளைக்காரராலும் இழக்கும் கன்னெஞ்சர்; ஈத்து உவக்கும் இன்பம் அறியார் கொல்—வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாரோ!

அறிந்தாராயின், தாம்வைத்திழந்து வருந்தாது வறியார்க்கீந்து மகிழ்ந்து மறுமையிலும் இன்புறுவர் என்பது கருத்து. 'கொல்' ஐயம்.

உஉக. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(இ - ரை.) நிரப்பிய தாமே தமியர் உணல்—தாம் ஈட்டக் கருதிய பொருட்குறையை நிரப்பவேண்டி வறியார்க் கொன்றீயாது தாமே தமித்துண்டல்; மன்ற—திண்ணமாக; இரத்தலின் இன்னாது—இரத்தலினும் தீயதாம்.

ஆசைக்கோரளவில்லை யாதலின், ஈயாத கஞ்சர் மேன்மேலும் பொருளீட்டற் பொருட்டு இடைவிடாது உடலையும் உள்ளத்தையும் வருத்தி, எத்துணைப் பொருளீட்டினும் எள்ளளவும் பொந்திகை (திருப்தி) யின்மையால் உண்மையிற் செல்வராயினும் உள்ளத்தில் வறியராய், இன்பமும் அறப்பயனும் ஒருங்கே தரும் பாத்துண்ட

லின்றி நடைப்பிணமாய் உழல்வதினும்; ஆசையுங் கவலையுமில்லாத இரப்போர் உடல் வருத்தமின்றித் தாம் பெற்றதைக் கொண்டு மகிழ்வதோடு, தாம் இரப்பெடுத்ததையும் பகிர்ந்துண்ணும் வாழ்க்கை மேலாதலின்; 'இரத்தலினின்னாது' என்றார். 'மன்ற' தேற்றப் பொருளிடைச் சொல். 'நிரப்பிய' செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்.

உங.ரு. சாதலி னின்னாது தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

(இ-ரை.) சாதலின் இன்னாதது இல்லை—ஒருவனுக்கு இறத்தலைப்போலத் துன்பந் தருவது வேறென்றுமில்லை; அதுவும் ஈதல் இயையாக்கடை இனிது—அவ்விறப்பும் வறியார்க்கொன்றீதல் இயலாவிடத்து இன்பந்தருவதாம்.

ஈகையாளனுக்கு இறப்புத் துன்பத்தினும் ஈயாத்துன்பம் பெரிய தும் பொறுத்தற்கரியது மாதலின், சாதல் அவனுக்கு இனிதென்றார். இது வெளிப்படை. இனி, ஈயாத கஞ்சர் உலகத்திலிருத்தல் தகாது என்பது குறிப்பு. ''ஈயாத புல்லரிருந்தென்ன போயென்ன எட்டிமரம்; காயாதிருந்தென்ன காய்த்துப் பலனென்ன'' என்று படிக்காசுப் புலவரும் பாடியமை காண்க. 'இனிததூஉம்' இன்னிசை யளபெடை

அதி. உச—புகழ்

அஃதாவது, ஒருவர்க்கு உலகமுள்ள அளவும் அழியாது நிற்குங் கீர்த்தி. இது ஈகையால் நிகழ்வதால் அதன்பின் வைக்கப்பட்டது

உங.க. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(இ - ரை.) ஈதல்—வறியார்க்கு வேண்டியவற்றை இயன்ற வரை ஈக; இசைபட வாழ்தல்—அதனாற் புகழுண்டாக வாழ்க; அது அல்லது உயிர்க்கு ஊதியமில்லை—அப்புகழன்றி மக்களுக்கு இவ்வுலகத்திற் பெறக்கூடிய நிலையான பேறு வேறு ஒன்றுமில்லை.

இடத்தில் வறியார்க்கு நிலமும் கருவியில் வறியார்க்குப் பொறியும் நலத்தில் வறியார்க்கு மருந்தும் அறிவில் வறியார்க்கு நூலும் காப்பில் வறியார்க்குப் பாதுகாப்பும் அளிப்பதும் ஈதல் வகைகளேயாயினும்,

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்''

என்று குடபுலவியனாரும் (புறம் : கஅ).

"உடம்பா ரழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்"

என்று திருமூலரும் (திருமந்திரம், எஉச) கூறுவதால், பொருளில் வறியார்க்கு உணவேனும் அதற்குரிய பொருளேனும் ஈதலே முன்மையும் (Priority) முதன்மையும் பெறுவதாம். 'ஈதல்', 'வாழ்தல்' இரண்டும் தல்லீற்று வியங்கோள். ஈதல் வேறுயிரினங் கட்கு இன்மையின், இங்கு உயிரென்றது மக்களுயிரை.

உஙஉ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

(இ—ரை) உரைப்பார் உரைப்பவை எல்லாம்—உலகத்தில் ஒருவரைப் பற்றிச் சிறப்பாகச் சொல்பவர் சொல்வதெல்லாம்; இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்—வறுமையால் இரப்பவர்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈவார்மேல் நிற்கும் புகழே.

உரைத்தல் உரைநடையுஞ் செய்யுளுமாகிய இருவடிவினும் நிகழுமாதலின், இங்கு உரைத்தலென்றது அவ்விருவடிவிற்கும் பொதுவாம். மேற்குறளிற் குறிப்பாகச் சொன்ன ஈதல்வகை இங்கு வெளிப்படையாகக் கூறப்பட்டது.

உஙங. ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு நிற்பதொன் றில்.

(இ—ரை.) ஒன்ரு உயர்ந்த புகழ் அல்லால்—தனக்கு இணையில்லாவாறு உயர்ந்த புகழல்லாமல்; உலகத்துப் பொன்ரு நிற்பது ஒன்று இல்—இவ்வுலகத்து அழியாது நிற்பது வேரொன்றும் இல்லை.

ஓர் உயிரைக் காத்தற்கு உணவும் பொருளும் மட்டுமன்றி உறுப்பும் உடம்பும் உதவ நேருமாதலின், இணையின்றி யுயர்ந்த புகழ் என்ருர். ஒன்ரு என்பது ஒன்றுக என்பதன் ஈறு தொகல்.

உஙச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ரு துத்தே ரூலகு.

(இ—ரை.) நிலவரை நீள்புகழ் ஆற்றின்—ஒருவன் ஈகையால் நிலவுலகத்தின்கண் நிகரியான புகழைச் செய்வானாயின்; புத்தேள் உலகு புலவரைப் போற்ரு து—தேவருலகும் அவனையன்றி அறிவால் மட்டுஞ் சிறந்தவரை விரும்பாது. இக் கொள்கையை,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்விலீ மூடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி

வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லே யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே".

என்னும் உ-ஆம் புறப்பாட்டுப் பகுதியாலும் அறிக. இதனுல் வேள்வி செய்தவர் விண்ணுல கடைவர் என்னும் ஆரியக் கொள்கை மறுக்கப் பட்டமை காண்க.

உருடு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(இ—ரை.) நத்தம் போல் கேடும்—புகழுடம்பின் கரு வளர்ச்சி யடைவது போல் (முழு வளர்ச்சியுற்ற) பூதவுடம்பு தளர்ச்சியடைவ தும்; உளது ஆகும் சாக்காடும்—அப்புகழுடம்பின் பிறப்பாகிய பூத வுடம்பின் இறப்பும்; வித்தகர்க்கு அல்லால் அரிது—திறப்பாடுடைய வர்க்கன்றி ஆகாவாம்.

பொதுவாக, ஒருவன் வாழ்க்கைப் பொறுப் பேற்ற பின்பே புகழுக் கேற்ற ஈகை வினைகளையும் தொண்டுகளையுஞ் செய்ய முடியும். அதற்குள் அவன் உடம்பு முழு வளர்ச்சி யடைந்திருக்கும். புகழ்த் தொண்டி லீடுபட்டுக் காலஞ் செல்லச் செல்ல, மூப்பினுல் உடம்பு தளர்ந்து வருகின்றது. இறுதியில் சாக்காடு நேர்கின்றது. அது வரை பொதுநலத் தொண்டைத் தொடர்ந்து செய்து வந்ததினுல், புகழும் படிப்படியாக வளர்ந்து அவன் சாக்காட்டுச் சமையத்தில் முழுவளர்ச்சி யடைந்து, பூதவுடம்பு மறைந்தபின் தானே விளங்கித் தோன்றுகின்றது.

புகழை ஓர் உடம்பாக உருவகிப்பது இலக்கிய மரபு. பூதவுடம்பு தாய்வயிற்றிற் கருவாகத் தொடங்கிப் படிப்படியாக வளர்ந்து பத்தாம் மாதம் முழுவளர்ச்சி யடைந்து குழவியாகப் பிறக்கின்றது. இந்நிலைமையைப் புகழுடம்பிற்கும் பொருத்திக் கூறியுள்ளார் ஆசிரியர் வள்ளுவனுர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பொதுநல ஊழியத்தைத் தொடங்கும்போது, புகழுடம்பு கருக்கொள் கின்றது. ஊழியம் நீட நீடப் புகழுடம்பு வளர்கின்றது. பூதவுடம்பு தளர்கின்றது. சாக்காட்டிற் புகழுடம்பு பிறக்கின்றது; பூதவுடம்பு இறக்கின்றது. இதையே 'நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்' என்றுர். போல் என்பது வளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் ஒப்புமை கூறிய உவமையுருபு. இது குழவி வளர்ந்தது போலக் கிழவி தளர்ந்தாள் என்பது போன்றது. ஆதலால், போல் என்பது பரிமேலழகர் கூறுவது போல் உரையசையன்று. நந்துதல் வளர்தல்.

நத்தம்—வளர்ச்சி; முதனிலை வலித்து ஈறுபெற்ற தொழிற் பெயர். 'அம்' முதனிலைப் பொருளீறு (பகுதிப் பொருள் விகுதி) அன்று. வாழ்நாள் முழுதும் பொதுநலத் தொண்டாற்றுவது திறப்பாடான செயலே.

உஉசு. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(இ—ரை.) தோன்றின் புகழொடு தோன்றுக—ஒருவர் இவ்வுலகத்திற் பிறக்கின் புகழ்க் கேதுவான குணத்தொடு பிறக்க; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று—அக்குண மில்லாதார் பிறத்தலி லிடப் பிறவாதிருத்தலே நல்லது.

பிறத்தலும் பிறவாமையும் இறைவன் ஏற்பாட்டின்படி அல்லது ஊழின் அமைப்புப்படியே நிகழ்வதால், அவை பிறப்பவரின் உணர்ச்சியொடு கூடியனவும் விருப்பிற்கு அடங்கியனவுமல்ல. ஆதலால், இங்குத் 'தோன்றுக', 'தோன்றற்க' என்று கூறியதல்லாம், புகழுக் கேற்ற நல்வினை செய்வானைப் பாராட்டியதும் அது செய்யாதானைப் பழித்ததுமேயன்றி வேறல்ல என அறிக. புகழ் என்பது இங்கு ஆகுபொருளது.

உஉஎ. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(இ—ரை.) புகழ்பட வாழாதார்—தமக்குப் புகழுண்டாக வாழாதவர்; தம் நோவார்—அது பற்றிப் பிறர் தம்மை யிகழ்ந்த விடத்து அதற்குக் காரணியமான தம்மையே நொந்து கொள்ளாது; தம்மை இகழ்வாரை நோவது எவன்—தம்மை யிகழ்ந்தவரை நோவது எதற்கு?

புகழ்பட வாழாமையின் தீய விளைவு இங்குக் கூறப் பட்டது.

உஉஅ. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறுஅ விடின்.

(இ—ரை.) இசை என்னும் எச்சம் பெறுவிடின்—ஒருவன் புகழைத் தனக்குப் பின் நிறுத்தாவிடின்; வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப—அது உலகத்திலுள்ள மக்கட் கெல்லாம் பழிப்பாகு மென்று கூறுவர் நல்லோர்.

புகழ் மக்களைப் போல எஞ்சி நிற்பது என்னுங் கருத்துப்பட 'எச்சம் பெறுஅ விடின்' என்றார். மக்களெல்லாரும் ஓரினத்தாராதலானும், புகழ்பட வாழ்தலே உயர்திணைப் பண்பாதலானும், ஒருவன்

பழி அவன் இனத்தையும் சாரும் என்னும் நெறிமுறை பற்றி, வையத் தார்க் கெல்லாம் வசை யென்றார். 'பெருஅ' இசைநிறை யளபெடை.

உஙக. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(இ—ரை.) இசை இலா யாக்கை பொறுத்த நிலம்—புகழைச் செய்யாத வுடம்பைச் சுமந்த நிலம்; வசை இலா வண்பயன் குன்றும்—பழிப்பில்லாத வளமுள்ள விளைச்சல் குறையும்.

உயிரோடு கூடியிருந்தும் அதனைப் பயன் பெருமையின் 'யாக்கை' என்றார். மக்களின் தன்மைக் கேற்ப அவர் வாழும் நிலமுமிருக்கும் என்பது, "எவ்வழி நல்லவ ராடவ—ரவ்வழி நல்லை வாழிய நிலனே". என்னும் (புறம். கஅஎ) ஔவையார் கூற்றினும் அறியப்படும். இனி, உடம்பு பெரும்பாலும் நிலத்தின் கூறுதலின், தன்னைப் போற் பயன்படாத தன் கூற்றைச் சுமப்பது தனக்கிழி வென்னும் வெறுப்பினுல் நிலம் தன்வளங் குன்றும், எனவும் ஒரு கருத்துத் தோன்ற நின்றது. பயன் குன்றும் என்பது பயன்படும் என்பது போல ஒரு சொற்றன்மைப் பட்டதாகும்.

உசo. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

(இ—ரை.) வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்—தமக்குப் பழிப் பில்லாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவர்; இசை ஒழிய வாழ் வாரே வாழாதவர்—புகழின்றி வாழ்பவரே உயிரோடிருந்தும் இறந் தவராவர்.

இனி, புகழொடு வாழ்பவரே சிறப்பாகவும் செழிப்பாகவும் வாழ் பவராவர்; அஃதில்லாதார் இழிவாகவும் வறுமையிலுங் காலங் கழிப்பார் போன்றவரே என்று உரைகூறினும் அமையும். கூறும் பொருள் வலியுறப் பொருட்டு உடன்பாட்டு வடிவிலும் எதிர்மறை வடிவிலும் கூறினர்.

இதனுல் இல்லற வாழ்க்கையின் சிறந்த இம்மைப் பயன் புகழே என்பது கூறப்பட்டது. இதைக் குறித்தற்கே இவ்வதிகாரமும் இல்லறவியலின் இறுதியில் வைக்கப்பட்டது. இக்குறளும் இவ்வதி காரத்தின் இறுதியதாயிற்று.

இல்லற வாழ்க்கையின் பொதுவான மறுமைப் பயன் விண் ணுலக வின்பம் என்பது, ஏற்கெனவே இப-ஆம் இஅ-ஆம் எஇ-ஆம் உகூ-ஆம் குறள்களிற் கூறப்பட்டுள்ளது.

இனி, ''அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.'' (சசு)

''இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை''. (சஎ)

''ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து'': (சஅ)

'அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை'' (சஅ)

''துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னுச்சொல் நோற்கிற் பவர்''. (சஙஎ)

''உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரின் பின்'' (சசஐ)

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
''மாற்றுவா ராற்றலின் பின்'' (உ உஙி)

என்று வள்ளுவரே கூறியிருப்பதனலும், அன்புடைமை முதல், ஈகைவரை கூறப்பட்டுள்ள பதினுறறங்களையும் கடைப்பிடித்தல் துறவறத்திற்கொப்பான தூய்மையைத் தருமாதலானும்,

''மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்'' (கூ)

''பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்'' (ச)

என்பன இல்லறம் துறவறம் என்னும் இருவகையறத்திற்கும் பொதுவாகவே இருத்தலானும், இல்லறத்தினின்றும் இறைவன் திருவடியடைந்த பலர் வரலாறுகள் கூறப்படுதலானும், வழிபாடு, ஒழுக்கம், தொண்டு, ஈகம் (தியாகம்) என்னும் நால் வாயிலால் இல்லறத்தாரும் வீட்டை யடையலாம் என்பதே வள்ளுவர் கூறும் தலைமுறைச் சிறப்பாம்; இதனல், துறவறத்தால் மட்டும் வீடுபேறுண்டா மென்பது ஆரியக் கொள்கையே என அறிக. அது அன்பிற்கும் தொண்டிற்கும் தப்பிக் கொள்ளும் சூழ்ச்சியே யன்றி வேறன்று.

இனி, நல்வினையுந் தீவினைபோற் பிறவிக் கேதுவா மென்றும் அதனல் இருவினையும் முறையே பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போலாமென்றும், கொண்முடிபு (சித்தாந்த) நூல்கள் கூறுவதும் பிற்காலக் கொள்கையே யென்று தெரிகின்றது. நல்வினையுந் தீவினையுங் கலந்து செய்தவனே நல்வினைப் பயனைத் தேவருலகத்திலும் தீவினைப் பயனைத் தியுழியிலும் நுகர்ந்து மாறிமாறிப் பிறப்பானென்பதும், தீவினையின்றி நல்வினையே செய்தவன் இறைவன்

திருவருளாற் பேரின்ப வீட்டைப் பெறுதலுங் கூடுமென்பதுமே, பண்டைத் தமிழர் கொள்கையாம். இதை,

"செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மருஅர் கசடுண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானே வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனின்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையும் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நாட்டுத்
தீதில் யாக்கை மாய்தறவத் தகலே."

என்னுங் கோப்பெருஞ் சோழன் பாட்டாலும் (புறம். உகச) இனியான்குடி மாற நாயனார் வரலாற்றாலும் அறிக.

உ. துறவறவியல்

இல்லறவின்பத்தைத் துய்த்தறியாதும் துய்த்தும், உலக வாழ்க்கையில் அல்லது பிறவித் துன்பத்தில் வெறுப்பும் வீடுபேற்றில் அல்லது பேரின்பத்துய்ப்பில் வேட்கையுங் கொண்டு, மாணிய (பிரமசாரிய)ப் பருவத்திலேனும் மனையற நிலையிலேனும் முதியன் (தபுதாரன்) நிலைமையிலேனும் மூப்பிலேனும் துறவு பூண்டு அதற்குரிய அறங்களைக் கடைப்பிடித்து, நான் எனது என்னும் இருவகைப் பற்றையும் விட்டுப் பிறவியினின்று விடுதலை பெறுதலைக் கூறும் சிறு பகுதி, துறவறவியல் எனப்பட்டது.

இல்லறத்தாலும் வீடுபேறுண்டாமேனும், அதற்குரிய பொறுப்பு மிகுதியாதலானும், அது ஆசை வளர்தற்கு இடந்தரலானும், அப் பொறுப்பைத் தாங்கவும் ஆசையை அடக்கவும் ஆற்றலில்லார் தனி வாழ்க்கையை விரும்பித் துறவறத்தை மேற்கொள்வர் என அறிக.

துறவறத்திற்குரியனவாகத் திருக்குறளிற் சொல்லப்பட்டுள்ள அறங்கள், அருளுடைமை, புலால் மறுத்தல், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, துறவு, அவாவறுத்தல் என்பனவாம்; பயிற்சிகள் தவம், மெய்யுணர்தல் என்பனவாம். இவையெல்லாம் அருள், தவம், துறவு, ஓகம் (யோகம்) என்னும் நான்கனுள் அடங்கும் ஆதலால் இவற்றை நால்வாயில் எனலாம்.

அருளுடைமை, புலால் மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை என்னும் அறங்களும் தவம் என்னும் பயிற்சியும், இல்லறத்திற்கும் ஏற்குமேனும்; அவற்றை முற்றக் கைக் கொள்வதும் நெடுகக் கடைப்பிடிப்பதும் இல்லறத்தில் இயலாமையின், அவை துறவறத்திற்கே முற்றளவாக வுரியனவும் இன்றியமையாதனவுமாகக் கொள்ளப்பட்டன.

ஊர்காவலர் மாறுகோலம் பூண்டு மறைவாகச் சென்று குற்றவாளியரைப் பிடிப்பதும், ஒற்றர் வேறு கோலத்திற் சென்று பகைவர் நிலைமையையும் மருமங்களையும் அறிவதும், அரசன் உருமாறிச் சென்று நகர நோட்டம் செய்வதும், காதலர் தொடக்க நிலையில் மறைவாக ஒழுகுவதும், தற்கொலை செய்யத் துணிந்த ஒருவர் உண்ண வைத்திருந்த நஞ்சை மறைவாக நீக்குவதும், அரசியலிலும் இல்வாழ்க்கையிலும் குற்றமாகாத களவுவினைகளாம்.

போரிற் பகைவரையும் செங்கோலாட்சியிற் கொலைஞரையும் கொல்வது, அரசனுக்குக் கடமை மட்டுமன்றி அறவினையு மாம்.

இங்ஙனமே ஏனையவற்றையும் உணர்ந்து கொள்க.

நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாத கணவன் மனைவியர் இறைவனை நோக்கித் தவங்கிடப்பினும், வாழ்நாள் முழுதும் அதைத் தொடர்வது மரபன்மை காண்க. இதை,

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."

என்னும் குறளை நோக்கி யுணர்க.

தமிழர் வாழ்க்கை முறை இல்லறம் துறவறம் என இருவகைப் பட்டதே. இல்லறம் போன்றே துறவறமும் எல்லார்க்கும் பொது வாம். அதற்குப் பருவ வரம்போ அகவை வரம்போ இல்லை. ஆயின், ஆடவனுயினும் பெண்டாயினும் தனியாகவே அல்லது தன் பாலார் இருக்குமிடத்திலேயே தங்கல் வேண்டும். ஆரியர் மனைவியொடு கூடி மேற்கொள்ளும் காடுறைவு (வானப் பிரத்தம்) என்னும் மூன்றும் நிலையும், தம்மை முனிவர் என்று கூறிக் கொண்டே இல்லற இன்பத்தை நுகர்ந்து மனைவி மக்களொடு கூடி வாழும் வீடுறைவும். தமிழரும் திரவிடருமான பழங்குடி மக்களை ஏமாற்றித் தாம் என்றும் இன்பமாய் வாழ வகுத்த சூழ்ச்சியாதலால், கூடா வொழுக்கத்தின் பாற்பட்ட போலித் துறவே யென வுணர்க.

இனி, வீடுபேறு இறைவனை வழிபட்டு அவன் திருவருளாலேயே அடையக் கூடியதாயிருப்பதால், கடவுட் கொள்கையில்லா மதத் தினர் துறவறம் ஒழுகுவது பயனில் முயற்சியும் அவர் வீடு பெறுவது கானல்நீர் குடிப்பதும் ஆகும்; (கானல் - பேய்த்தேர்).

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்." (குறள். ௧0)

என்று திருவள்ளுவரும்,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளென்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே வீட்டின்ப வீடு."

என்று ஔவையாரும் கூறியிருத்தல் காண்க.

இனி, கடவுட் கொள்கை யுடையாரும் செல்வத் தொடர்பு கொண்டவராயின் துறவியராகார்.

" மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றுர்க் குடம்பு மிகை." (குறள். கஎஞ)

செல்வத் தொடர்பால் ஊட்டம் மிகும். அது கூடா வொழுக்கத் திற்குத் தூண்டும். அதனல் ஒரு பற்றுந் துறக்க முடியாது. ஆசை யும் அருது மிகும். கூடா வொழுக்க மின்றேனும், செல்வத் தொடர் பினர் மணமிலியர் (Celibates) அல்லது மணத் துறவியரே யன்றி முழுத் துறவியராகார். ஆதலால் அடியார் அல்லது நாயனர் என்றே அழைக்கப்படற்குரியர். இனி மணவெறுப்பாளரும் (Misogamists) பெண்வெறுப்பாளரும் (Misogynists) உளர்.

முற்றத் துறந்தவரே துறவியர் என்றும் முனிவர் என்றும் அடிகள் என்றும் சொல்லப்படத் தக்கவர்.

செல்வத் தொடர் பிருந்தும் சிறிதும் பற்றின்றிச் செல்வத்தைத் திருத்தொண்டிற்கும் பொதுநலத்திற்கும் பயன்படுத்தி, தவத்திருக் குன்றக்குடி யடிகள் போல் இடையருது எழுத்தாலும் சொல்லாலும் மக்கட்கு அறிவுறுத்தி வரும் துறவியர் ஒரு சிலரே.

துவராடை யணிந்து இரந்து பிழைப்பவர் ஆண்டியரேயன்றித் துறவியராகார்.

வீடுபேறு, தீவினை யொன்றுமின்றி நல்வினையே செய்யும் இல் லறத்தாலும், கண்ணப்ப நாயனர் கண்ணப்பியது போன்ற சிறப்புப் பத்தி வினையாலும். துறவறத்தினலும், கிட்டுவதாம். அவற்றுள் இறுதியது இனி இங்குக் கூறப்பெறும்.

அதி. உஎ—அருளுடைமை

அஃதாவது, தொடர்பு கருதாது அறுவகைப்பட்ட எல்லா வுயிர் களிடத்தும் ஒப்பக் கொள்ளும் இரக்கம். இல்லறத்திற்கு அன் புடைமைபோல் துறவறத்திற்கு அருளுடைமை அடிப்படை யறமாம். அதனல் இது முதற்கண் கூறப்பட்டது. இதனல், அன்பு போன்றே அடைக்குந் தாழின்றிச் செயலாக வெளிப்படும் அருளாறம் வீடுபேற் றிற்கு இன்றியமையாத தென்பதும், அறிவு மட்டும் போதா தென் பதும், பெறப்படும்.

உசக. அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(இ - ரை.) செல்வத்துள் செல்வம் அருள் செல்வம்-செல்வங்க ளெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது அருளாகிய செல்வமே; பொருள் செல்வம் பூரியார் கண்ணும் உள—மற்றப் பொருளாகிய செல்வங்கள் கீழ் மக்களிடத்திலும் உள்ளன.

செல்வம் போன்ற பண்பைச்செல்வ மென்றார். உம்மை இழிவு சிறப்பு.

உசஉ. நல்லாற்று ணுடி யருளாள்க பல்லாற்றுற்
றேரினு மஃதே துணை.

(இ—ரை.) நல் ஆற்றுன் நாடி அருள் ஆள்க—உத்திக்குப் பொருத்தமான நல்ல அளவைகளால் ஆராய்ந்து பார்த்து அருளேமேற் கொள்க; பல் ஆற்றுல் தேரினும் அஃதே துணை—பல்வேறு சமயநெறி களால் ஆராய்ந்தாலும் இறுதியில் அவ்வருளே துணையாக முடியும்.

காட்சி, கருத்து, ஒப்பு, உரை, இன்மை, எதிர்நிலை (அருத்தா பத்தி), சார்பு (இயல்பு), உலகுரை, ஒழிபு, உண்மை என அளவை கள் மொத்தம் பத்தென்பர். அவை யாவும் முதல் நான்கனுள் அடங்கும். அன்பின் முதிர்ச்சியாகிய அருள் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த அறப்பண் பாதலானும், இம்மை மறுமை வீடாகிய மும்மைக் கும் உதவுதலானும், அஃதே துணை என்றார். உத்தியாவது பகுத்தறி விற்குப் பொருந்து முறை. உத்தல்-பொருந்துதல். உத்தி யென்பது வட மொழியில் யுக்தி எனத் திரியும்.

உசஊ. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல்.

(இ—ரை.) இருள் சேர்ந்த இன்ன உலகம் புகல்-இருள் திணிந்த துன்பவுலகமாகிய நரகத்துட் புகுதல்; அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை—அருள் நிறைந்த நெஞ்சையுடைய துறவியருக் கில்லை.

தீயுழியும் அளறும் போல இருளுலகமும் நரக வகையாம்.

உசச. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ—ரை.) மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு—மற்ற உயிர்களெல்லாம் பேணி அவற்றினிடத்து அருள் பூண்பவனுக்கு: தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப—தன்னுயிர் அஞ்சுவதற் கேது வான தீவினைகள் இரா என்று கூறுவர் அறிந்தோர்.

"தன்னுயிர் போல் மன்னுயிரையும் எண்ண வேண்டும்." என்னும் பழமொழியில், மன் என்னுஞ் சொல் மற்ற என்று பொருள்

படுதலால், அதை யொத்த இவ்விடத்தும் அப்பொருள் உரைக்கப் பட்டது. அஞ்சும் வினை தன்னதாகவும் பிறரதாகவுமிருக்கலாம். தன் வினையாயின் மறுமைத் துன்பமும் பிறர் வினையாயின் இம்மைத் துன்பமும் நோக்கிய அச்சமாகும். உயர்ந்த அருளறம் பூண்டோன் தீவினை செய்யான் என்பதும், அவனுல் அருள் செய்யப் பெற்றவனும் நன்மைக்குத் தீமை செய்யான் என்பதும், கருத்து.

உசடு. அல்ல லருளாள்வார்க் கில்லே வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ—ரை.) அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லே—அருள் பூண்டவர்க்கு இம்மையிலும் ஒரு துன்பமுமில்லே; வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி—இதற்குக் காற்று இயங்குகின்ற வளமுள்ள பெரிய மாநிலத்திலுள்ள மக்களெல்லாரும் சான்றுளராவர்.

அருளுடையார் துன்பப் பட்டதை ஒருவரும் கண்டறியா மையின், எல்லாருஞ் சான்றுளராவர் என்றார். ஞாலத்தார் சான்றுள ரெனவே, இம்மையி லென்பது பெறப்பட்டது. 'ஞாலம்' இடவாகு பெயர். ஞாலத்தின் மேற்பரப்பிற் காற்று வழங்காத இடமே யின்மையால், ஞாலம் முழுவதையுங் குறிக்க 'வளி வழங்கும்' என் னும் அடை கொடுத்தார் என்று கொள்ளலாம்.

இனி, அனந்தநாத நயினார் சமணச்சார்பாக இக் குறட்குக் கூறும் உரை வருமாறு :—

" அருளாள்வார்க்கு—அருளோயுடையவருக்கு, அல்லல்—துன் பம், இல்லே—எப்போதுமில்லே, (அதற்கு) வளி—(கனேகதி, கனவாத, தனுவாத மென்னும் மூன்று) மகா காற்றுக்களால் சூழப் பெற்று, மல்லல்—வலிபொருந்தி, வழங்கும்—நிலே பெற்றிருக்கும், மா—பெரிய, ஞாலம்—உலகம், கரி—சாகூஷி" என்பதாம்.

" இதன் கருத்து : வலிபொருந்திய மூன்று மகா காற்றுக்களின் ஆதாரங்களால் நிலே பெற்றிருக்கும் உலகத்திற்கு அபாய மில்லாதது போல, அருளோ ஆளுகின்றவருக்கு யாதொரு துன்பமுமில்லே என்ப தாம்."—திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும், பக். 43—4.

" வளிமிகின் வலியு மில்லே " (புறம். ஙக) என்று ஐயூர் முடவனார் பாடியிருப்பதனுல், சமணச் சார்பின்றியும் இத்தகைய வுரை கூறலாமென அறிக.

உசஙு. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ—ரை) அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார்—உயிர்களிடத்து அருள் செய்யாது அதற்கு மாறான கொடுமைகளைச் செய்து ஒழுகுபவர்; பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர்—முற்பிறப்பில் அறமாகிய உறுதிப்பொருளைத் தேடாது இப்பிறப்பிலும் அதை மறந்தவர் என்பர் அறிவுடையோர்.

உரை. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

(இ—ரை) பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல் ஆகிய ஆங்கு—பொருட் செல்வம் இல்லாதவர்க்கு இவ்வுலக வின்பம் இல்லாததுபோல; அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை—அருட் செல்வம் இல்லாதவர்க்கு வீட்டுலக இன்ப மில்லை.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன சேய்மையும் அண்மையும் வந்த பெயர்கள். உலகம் என்பது ஈரிடத்தும் ஆகுபெயர்.

உரை. பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்று
ரற்றூர்மற் றூத லரிது.

(இ—ரை) பொருள் அற்றூர் ஒருகால் பூப்பர்—ஏதேனும் ஒரு வகையிற் செல்வத்தை யிழந்தவர், முயற்சியால் மீண்டும் ஒருகால் அதைப் பெற்றுப் பொலிவடைவர்; அருள் அற்றூர் மற்று ஆதல் அரிது—ஆயின், அருட் பண்பை யிழந்தவரோ ஒரேயடியாய் அழிந்தவராவர்; பின்பு ஒருகாலும் ஆக்கம் பெறார்.

செல்வத்தை யிழந்தவர் மீண்டும் செல்வம் பெற்று இவ்வுலக இன்பத்தை நுகரலாம்; ஆயின், அருளைக் கைவிட்டவர் மறுமையில் வீட்டின்பம் நுகர்தற்கு மீண்டும் இம்மையில் முயற்சி செய்ய முடியாது என்பது கருத்து. 'மற்று' பின்மைப் பொருளது.

உரை. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றூற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

(இ—ரை) அருளாதான் செய்யும் அறம் தேரின்—உயிர்களிடத்து அருள் செய்யாதவன் செய்யும் அறத்தின் தன்மையை ஆராயின்; தெருளாதான் மெய்ப்பொருள் கண்ட அற்று—தெளிந்த அறிவில்லாதவன் மெய்ப்பொருள் உணர்ந்தாற்போலும்.

தெளிந்த அறிவில்லாதவன் மெய்ப்பொருளுணர முடியாது, அதுபோல் அருளில்லாதவன் அறஞ் செய்ய முடியாது என்பது கருத்து. மெய்ப்பொருள் (தத்துவம்) என்பது, என்றும் நுண்வடிவாகவேனும் பருவடிவாகவேனும் மறைந்தோ வெளிப்பட்டோ

அழியாதிருக்கும் தனிப் பொருள் அல்லது அத்தகைய பொருட் டொகுதி. இல்லறங்கட்கு அன்பு போல் துறவறங்கட்கு அருள் மூலம் என்பது கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

உடுo. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ—ரை.) தான் தன்னின் மெலியார்மேல் செல்லுமிடத்து—ஒருவன் அருளில்லாமையால் தன்னிலும் எளியவரை வருத்துமாறு அவர்மேற் செல்லும் பொழுது; வலியார் முன் தன்னை நினைக்க—தன்னிலும் வலியவர் தன்னை வருத்தவரும்போது தான் அவர் முன் அஞ்சி நிற்கும் நிலையை நினைக்க.

தன்மை பற்றி 'வலியார்' 'மெலியார்' என உயர்திணை மேல் வைத்துக் கூறியது அஃறிணையையுந் தழுவும் தன்குற்றந் தனக்குத் தோன்றுதலின், அது தோன்றுமாறும் அதனால் அருள் பிறக்குமாறும் ஒரு வழி சொல்லப்பட்டது.

அதி. உக—புலான் மறுத்தல்

அஃதாவது, அருளுடைமைக்கு மாறானதும் முரட்டுக் குணத்தை உண்டாக்குவதுமான ஊனுணவைத் தவிர்த்தல். ஊனுணவு உயிர்க் கொலையால் வருவதாலும் கொலைவினை துறவறத்திற்கு மாறான தாதலாலும் கொலையைத் தவிர்க்கக் கூடிய குணம் அருளுடைமையே யாதலாலும், இது அதன்பின் வைக்கப்பட்டது.

உடுக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுணபா
னெங்ஙன மாளு மருள்.

(இ—ரை.) தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்—தன் உடம்பைப் பெரிதாக்குவதற்காகத் தான் வேறோர் உயிரியின் உடம்பைக் கொன்று தின்பவன்; எங்ஙனம் அருள் ஆளும்—எங்ஙனந்தான் அருளைக் கையாள்பவன் ஆவன்.

உடம்பைப் பருக்க வைத்தற்குக் கொலையில்லாத வுணவு நிரம்ப விருத்தலானும், உடம்பை எங்ஙனம் பேணினும் அது அழிந்து போவதாதலாலும், ஊனுணவு பெறுதற்கு ஓர் உயிரியை எள்ளள வும் இரக்கமின்றிக் கொல்ல வேண்டியிருத்தலானும், குற்றமற்ற வுயிரிகளை மேன்மேலுங் கொல்வது கொடுமையினுங் கொடுமையாத லானும், 'எங்ஙனம் ஆளும் அருள்' என்றார். ஆளவே ஆளான் என்பது விடை. உயிருள்ளது உயிரி (பிராணி)

உஞஉ. பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ—ரை) பொருள் ஆட்சி போற்றுதார்க்கு இல்லை—பொருளைக் கையாளுதல் அதைப் பாதுகாவாதார்க்கு இல்லை; ஆங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை—அதுபோல அருளைக் கையாளுதல் ஊன் உண்பவர்க்கு இல்லை.

ஊனுண்பவர்க்கு அருளில்லை யென்பது இங்கு முடிந்த முடிபாகக் கூறப்பட்டது. இம் முடிவிற்கு முந்தின குறள் ஏதுவாம்.

உஞஙு. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

(இ—ரை) படை கொண்டார் நெஞ்சம் போல்—பகைவரைக் கொல்வதற்குக் கொலைக்கருவியைக் கையிற் கொண்டவரின் மனம் அதனைச் செய்யுங் கொலையை யன்றி அருளை நோக்காதது போல; ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது—ஓர் உயிரியின் உடலைச் சுவையாக வுண்டவர் மனம் அவ்வூனையன்றி அருளை நோக்காது.

ஊன் சுவையாயிருத்தல் காயச் சரக்கை மட்டுமன்றி உயிரியின் இனத்தையும் பொறுத்ததாம். ஊனுண்பார்க்கு அருளின்மை உவமை வாயிலாகவுங் காட்டப்பட்டது.

கதறினும் தொண்டை கீளக் கத்தினும் புள்ளும் மாவும்
பதறினும் நெஞ்சமெல்லாம் பக்கமுந் தலையுங் காலும்
உதறினும் அங்குமிங்கும் ஓடினும் அரத்தம் பீறிச்
சிதறினும் இரக்கங்கொள்ளார் சிதைத்துடல் சுவைக்க
வுண்டார்.

என்னும் செய்யுள் இங்கு நினைவுகூரத்தக்கது.

உஞச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இ—ரை) அருள் யாது எனின் கொல்லாமை—அருள் என்பது என்னது எனின் கொல்லாமை; அல்லது (யாது எனின்) கோறல்—அருளல்லாதது எதுவெனின் கொல்லுதல்; அவ்வூன் தினல் பொருள் அல்லது—ஆதலால், அக்கொல்லுதலால் வந்த ஊனைத் தின்பது கரிசு (பாவம்).

கொல்லாமை கோறல் ஆகிய கருமகங்களை (காரியங்களை) அருள் அல்லது எனக் காரணகங்களாக (காரணங்களாக)க் கூறியது சார்ச்சி (உபசார) வழக்கு. அறமும் பொருளெனப்படுவதால் அறமல்லாத

கரிசைப் பொருளல்லது என்றார். அவ்வூன் என்ற சேய்மைச் சுட்டு முன்னின்ற கோறலைத் தழுவியது. மணக்குடவர் முதலடியை நிரனிறையாகப் பகுக்காது ஆற்றெழுக்காகக் கொண்டு ''அருளல்லது யாதெனின் கொல்லாமையைச் சிந்தித்தல்'', என்று பொருள் கூறுவர்.

உருரு. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு.

(இ—ரை) உயிர்நிலை ஊன் உண்ணுமை உள்ளது—ஒருசார் உயிர்கள் உடம்பொடு கூடி நிற்றல் ஊனுண்ணுமையாகிய அறத்தால் நேர்வது; ஊன் உண்ண அளறு அண்ணுத்தல் செய்யாது—ஆதலால், ஒருவன் ஊனுண்பானுயின், அவனை விழுங்கிய நரகம் பின்பு அவனை வெளிப்படுத்தற்கு வாய் நிறவாது.

உண்ணப்படும் உயிரிவகைகள் வரவரத் தொகை குறைந்து வருவதனலும், சில காட்டுயிரிகள் நாளடைவில் அற்றும் போவதனலும், 'உண்ணுமையுள்ள துயிர்நிலை' என்றார். உயிர்களெல்லாம் நிற்றியம் என்பது கொள்கையாதலின், உண்ணப்படும் உயிரிகள் குறையின் உண்ணப்படா வுயிரிகள் கூடும் என்பதாம். ஊனுண்டவன் நீண்டகாலம் நரகத்தில் துஞ்புறுவான் என்பது 'அண்ணுத்தல் செய்யா தளறு' என்பதன் கருத்தாம். ஊன் என்பது முன்னும் பின்னுஞ் சென்றிசைதலின் தாப்பிசைப் பொருள்கோளும் இடைநிலை விளக்கணியுமாகும். நிற்றியம்—நித்ய(வ).

உருசு. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(இ—ரை) தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின்—பேதைமை அல்லது குறும்புத்தனம் பற்றியல்லது ஊன் தின்பதற்காக உலகத்தார் உயிரிகளைக் கொல்லாரெனின்; விலைப் பொருட்டு ஊன் தருவார் இல்—பொருள் பெறும் நோக்கத்தோடு ஊன் விற்பவரும் ஒருவரும் இரார்.

ஊன் தின்பதற்காக ஓர் உயிரியைக் கொன்றல், அக் கொலைக் குற்றம் அதைக் கொன்றவனைச் சாருமே யன்றி அதன் ஊனைத் தின்றவரைச் சாராது, என்னும் புத்த சமய வுறழியை (வாதியை) நோக்கிக் கூறிய கூற்றுமும் இது. விலைக்கு வாங்கி யுண்பாரும் வீட்டிற் கொன்று உண்பாரும் ஆக ஊனுண்பார் இரு திறத்தார். குற்றத்தைப் பொறுத்த அளவில் இவ்விரு திறத்தாரும் ஒரு திறத்தாரே. ஒருவன் ஓர் உண்ணப்படும் உயிரியைக் கொல்வதற்கு அதன் ஊனுண்பவரும் நேர்வகையிலும் நேரல்லா வகையிலும்

தூண்டுபவராயிருத்தலால், அக் கொலைக் குற்றம் கொன்றுண்ணியும் தின்றுரையும் ஒக்கச் சாரும் என்பது வள்ளுவர் கருத்தாகும். உலகம் என்பது இங்குப் பெரும்பான்மை பற்றிய ஆகுபெயர். 'ஆல்' ஈரிட த்தும் அசைநிலை.

உடுஎ. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

(இ—ரை) புலால் பிறிது ஒன்றன் புண்—புலால் என்பது வேறோர் உடம்பின் புண்ணே; அது உணர்வார்ப் பெறின் உண்ணுமை வேண்டும்—அவ்வுண்மையை அறியப் பெறின் அதை உண்ணுதிருத்தல் வேண்டும்.

உண்மையை உணர்தலாவது நோய்ப்பட்டதென்றும் துப்புர வற்றதென்றும் அருவருப்பானதென்றும் அறிதல். அங்ஙனம் அறி யின் உண்ணுரென்பது கருத்து. 'புலாஅல்' இசை நிறையள பெடை. அது வுணர்வார் என்பதின் வகர வுடம்படுமெய் தொக்கது.

உடுஅ. செயிரிற் றகலப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ—ரை.) செயிரின் தகலப்பிரிந்த காட்சியார் — மயக்கம் என்னும் குற்றத்திலின்று நீங்கிய தெள்ளறிவினர்; உயிரின் தலைப் பிரிந்த வூன் உண்ணுர்—ஓர் உயிரினின்று நீங்கிய வுடம்பை உண்ணுர்.

உயிரினின்று நீங்கியது பிண மென்று உணர்தலின் உண்ணு ரென்றார். 'தலைப்பிரிதல்' என்பது ஒரு சொற்றன்மைப்பட்ட கூட்டுச் சொல். மயக்கம் ஐயமுந் திரிபும்.

உடுக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று.

(இ—ரை.) அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்—தீயின்கண் நெய் முதலிய வுணவுகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலி னும்; ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுமை நன்று—ஒரு விலங்கின உயிரைப் போக்கி அதன் உடம்பைத் தின்னுமை நன்றும்.

ஆரிய வேள்விகள் கொலை வேள்விகளாதலானும், ஆயிரம் வேள்விப் பயனினும் ஒருயிரையைக் கொல்லாமையின் பயன் பெரி தென்றமையானும், அவை விலக்கப்பட்டனவாம்.

பாட வேறுபாடு :

அவிசொரிந் தாயிரம் வேட்டலன் றொன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று.

இப்பாடம், அவிசொரிந்து ஆயிரம் வேட்டலன்று ; ஒன்றன் உயிர் செகுத்துண்ணுமையே நன்று என்று பொருள் தருதல் காண்க. இதில் ஏகாரம் தொக்கது.

உசுo. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ—ரை) கொல்லான் புலாலை மறுத்தானை—ஒருயிரையுங் கொல்லாதவனுய்ப் புலாலையும் உண்ணுதவனை ; எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்—எல்லா மக்களும் கைகுவித்து வணங்குவர்.

கொல்லாதவன் புலாலுண்பவனுகவும் புலாலுண்ணுதவன் கொல்பவனுகவும் இருக்கலா மாதலால், அவற்றுல் பயனின்மை கருதி ஈறறங்களையும் உடன் கூறினர். கைகூப்பித் தொழுதல் மற்ற வுயிர்கட் கியையாமையின் மக்களுயிர் எனக் கொள்ளப்பட்டது. உயிர் என்பது சொல்லால் அஃறிணை யாதலின், பல்லோர் படர்க்கையிற் செல்லாச் செய்யுமென்னும் முற்று இங்குச் செல்வதாயிற்று. ஈறறங்களையுங்கடைப்பிடிப்பார், மறுமையில் (தேவர் நிலையில்) மட்டு மன்றி இம்மையில் மக்கள் நிலையிலும் பிறரால் தெய்வமாக மதிக்கப் படுவர் என்பது கருத்து.

அதி. உஎ —தவம்

அஃதாவது, உடம்பு கொழுத்தால் மனம் ஐம்புல வின்பத்தையே நாடுமாதலாலும், மத யானை போல் அடங்கா தாதலாலும், அதை யடக்கி இறைவன்மேற் செலுத்துவதற்குத் தோதாக உண்ணு நோன்பாலும் தட்ப வெப்பம் பொறுத்தல் முதலிய கடும் பயிற்சி களாலும் உடம்பை வாட்டுதல். உடம்பை யொடுக்கி யடக்குவதில் புலான்மறுத்தல் மென்மை யானதாகவும் தவம் வன்மை யானதாகவு மிருத்தலால், இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

தவம் என்ற சொற்கே எரித்தல் என்றுதான் பொருள். துலங்குதல் = விளங்குதல். துலங்கு—துளங்கு = திகழ் துள—தள. தளதளத்தல் = திகழ்தல். தள—தழல்—தணல். தழ—தக. தகதக வெனல் = ஒளி வீசுதல். தக—தகம்—தங்கம் = விளங்கும் பொன். தக—திக—திகழ்—திங்கள் = இரவில் ஒளி தரும் சுடர். தகம் = எரிவு. சூடு. தகம்—தவம் = உடலை எரித்தல் போல் வருத்தும் துறவறப் பயிற்சி. க—வ, போலி. ஒ. நோ : குழை—குகை. குவை—தக—தவ் (வ.). தவம்—தபஸ் (வ.). தக—தகை = தாகம். தகம்—தாகம் =

உடற்சூட்டால் உண்டாகும் நீர் வேட்கை. தக—தவ—தவி. தவித்தல்=நீர் வேட்கையுண்டாதல். தாகம்—தாஹ(வ). தவி—தப் (வ.). தவம்—தவன்=தவத்தோன். இதற்கு ஒத்த வடிவம் சமற்கிருதத்தில் இல்லை. தபஸ்வின் என்ற வடிவந்தான் உண்டு.

தவம் இல்லறத்தார்க் குரியதும் துறவறத்தார்க் குரியதும் என இரு வகைப்படும். அவற்றுள் முன்னது எண்வகை யுறுப்புக்களைக் கொண்டு தவம் அல்லது நோன்பு என்று பெயர் பெறுவது; பின்னது ஓகத்தின் (யோகத்தின்) எண்வகை யுறுப்புக்களுள் ஒன்றாகக் கொள்ளப்படுவது.

இல்லறத்தார் பிள்ளைப்பேறும் உடல்நலமும் கருதி உண்டி சுருக்கி நாடு நகரங்களிலுள்ள கோவில்களில் வழிபடுவது நோன்பு என்றும், காட்டில் தங்கிக் கடுமையாக வாழ்ந்து சிறிது காலம் வழி படுவது தவம் என்றும், சொல்லப்படும்.

கணவனும் மனைவியும் காட்டிலுள்ள முனிவரை யடுத்துத் தொண்டு செய்தபின், அவர் தந்த கனியை யுண்டு மனைவி கருவுற்றுப் பிள்ளை பெற்றதாகச் சொல்லப்படுவதெல்லாம், கூடா வொழுக்கத்தினரான ஆரியர் செய்த சூழ்ச்சிகளே என அறிக.

மறுமையில் விண்ணுலக வின்பம் நுகரும் பொருட்டு இம்மையிற் காட்டில் வாழ்ந்து செய்யும் எண்வகை யுறுப்புத் தவம்,

> "நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
> சோர்சடை தாழச் சுடரோம்பி—யூரடையார்
> கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
> வானகத் துய்க்கும் வழி."

என்னும் புறப்பொருள் வெண்பா மாலைச் செய்யுளால் (வாகை. கச) அறியப்படும். இதையே "நாலிரு வழக்கிற் றிருபதப் பக்கமும்" என்று தொல்காப்பியங் கூறும் (புறத். உ0). இது பிறவிக்குட்படுவதால் துறவற மாகாது.

கணவனை யிழந்த கற்புடை மனைவியர் நோற்கும் கைம்மை நோன்பு இல்லறத்தின் பாற்படுவதே. இறைவனல்லாச் சிறு தெய்வங்களை நோக்கிச் செய்யும் தவம் பயனில் முயற்சியாம். அத் தெய்வங்களை நோக்கித் தவஞ் செய்து பலர் பல பேறுகளைப் பெற்ற தாகக் கூறும் கதைகளெல்லாங் கட்டுக்கதைகளே. இனி, வாழ்நாளும் உழைப்பினாலுமே பெறக்கூடிய கல்வி, அரசப் பதவி முதலிய பேறுகளையும், பகைவரைக் கொல்லும் வலிமை, தெய்வத்

தையுங் கொல்லுந்திறம் முதலிய ஈவுகளோயும், தவஞ் செய்து பிறந்ததாகக் கூறுங் கதைகளும் நம்பத்தக்கன வல்ல.

துறவறத்திற்குரிய தவம், படிப்படியாக வுண்டி சுருக்கிப் பின்பு காய்கனி கிழங்குகளோயே வுண்டு இறுதியில் அவையுமின்றி உதிர்ந்த இலைகளோயே உட்கொள்வதும். கடுங் கோடையில் நண்பகல் வெயிலிலும் கூதற் காலத்திலும் பனிக் காலத்திலும் குளிர்ந்த நீர் நிலையிலும் நிற்றலும், முதலில் மரவுரி அல்லது நீர்ச்சீலையுடுத்து இறுதியில் அதுவுமின்றியிருப்பதும், உள்ளத் தூய்மையைப் பேணுவதும், ஓரறிவுயிர்க்குந்துன்பஞ் செய்யாமையும், பிறவுமாம். இதனொடு சேர்ந்த ஏனையே முறுப்புக்களும் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்திற் கூறப்படும்.

நாற்றிசையும் மூட்டிய விறகுத் தீயும் தலைக்கு மேற்பட்ட வெயில் தீயுமாகிய ஐந்தீ நாப்பண் நிற்றல், ஆரிய வழக்கமாகத் தோன்றுகின்றது.

உசுக. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

(இ—ரை.) உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே—இயற்கையாகவுஞ் செயற்கையாகவும் தமக்கு நேருந் துன்பங்களோயெல்லாம் பொறுத்துக் கொள்ளுதலும், பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்வளவே ; தவத்திற்கு உரு—தவத்தின் வடிவாம். இத்தவ விலக்கணம் தொகுத்துக் கூறல் என்னும் உத்தி பற்றியது. ஏகாரம் தேற்றம்.

உசுஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யாதிலார் மேற்கொள் வது.

(இ—ரை.) தவமும் தவம் உடையார்க்கு ஆகும்—தவப் பயனன்றித் தவ முயற்சியும் முற்பிறப்பில் தவஞ் செய்தவர்க்கே யுண்டாகும் ; அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம்—ஆதலால், அத் தவத்தை முற்பிறப்பில் ஒரளவேனுஞ் செய்யாதார் இப்பிறப்பில் முயல்வது பயனில் முயற்சியாம்.

தவம் பல பிறப்புக்களில் தொடர்ந்து செய்ய வேண்டிய அரும் பெரு முயற்சி யாதலாலும், அறிவும் ஆற்றலும் உடையவரே அதை முற்ற முடியச் செய்யத்தக்கவராதலாலும், ஒரே பிறப்பில் எல்லாரும் அதை மேற்கொள்ள முடியாதாம்.

உசுஙு. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(இ—ரை.) மற்றை யவர்கள்—துறவிய ரல்லாத மற்ற இல்லறத் தார்; துறந்தார்க்குத் துப்புரவு வேண்டித் தவம் மறந்தார் கொல்—துறவியர்க்கு ஊணுடையும் உறையுளும் மருந்தும் முதலிய கொடுத் துதவுதலே விரும்பியே, தாம் தவஞ் செய்தலே மறந்தார் போலும்!

துத்தல் உண்ணுதல் அல்லது நுகர்தல். துப்புரவு நுகரப்படும் பொருள்கள். தவம் சிறந்ததே யாயினும், எல்லாருந் துறவியரர்யின் தவஞ் செய்வார்க்கு இன்றியமையாதவற்றை உதவுவார் ஒருவரு மில்லாது போய் விடுவராதலின், அவ்வுண்மையை ஓர் ஐயந்தழுவிய தற்குறிப் பேற்ற அணியால் உணர்த்தினர். 'கொல்' ஐயம்.

உஉஅ. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(இ—ரை.) ஒன்னுர்த் தெறலும்—அறியாமையால் தமக்கு மாருக வந்த வலியோரையுந் தீயோரையும் சாவித்தலும்: உவந் தாரை ஆக்கலுங்—அறிந்ததினுல் தம்மை விரும்பித் தம் உதவி நாடி வந்த எளியோரை வாழ்வித்தலும்; எண்ணின் தவத்தான் வரும்—தவத்தோர் கருதுவாராயின் அவர் தவ வலிமையால் அவை கூடும்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்."

"குணமென் னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."

என்று ஏற்கெனவே துறவியரின் ஆக்க வழிப்பாற்றல் கூறப்பட் டிருத்தல் காண்க.

உஉடு. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ—ரை.) வேண்டிய வேண்டிய ஆங்கு எய்தலால்—தவத் தின் பயனுக மறுமையில் தாம் விரும்பிய பேறுகளையெல்லாம் விரும்பியவாறே பெறக்கூடிய நிலைமையிருத்தலால்; செய்தவம் ஈண்டு முயலப்படும்—செய்ய வேண்டிய தவம் இம்மையில் அறிவுடை யோரால் முயன்று செய்யப்படும்.

'ஈண்டு முயலப்படும்' என்றதனுல் மறுமையிற் பயன்படும் என்பது பெறப்பட்டது. 'வேண்டிய' என்றவை மண்ணின் பமும் விண்ணின் பமும் வீட்டின் பமு மாகிய மூவகை யின்பங்கள்.

இல்லறத்தாலும் இம் மூன்றையும் பெறலாம். இவ்விரு வழி களுள் ஒன்றைத் தெரிந்து கொள்வது அவரவர் ஆற்றலையும் விருப்

பத்தையும் பொறுத்தது. அன்புடைமை, விருந்தோம்பல், நடு நிலைமை, ஒப்புரவறிதல், ஈகை முதலிய அறங்கள் ஆரியர் மேற் கொள்ளுதற்கு அரியனவாகலின், அவர் துறவறத்தையே விரும்புவர். அதனாலேயே, "மேற்கதி வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா" என்றார் பரிமேலழகர். கூடா வொழுக்கமும் போலித் துறவும் பூண்டு கொண்டே ஒருவன் மெய்த்துறவிபோல் நடிக்கலாம். இந்நடிப்பு இல்லறத்தில் இயலாது.

உசூசூ. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(இ—ரை.) தவம் செய்வார் தம் கருமம் செய்வார்—உலகப் பற்றைத் துறந்து தவஞ் செய்வாரே தம் கருமத்தைச் செய்பவராவர்; அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார்—அவரல்லாதார் பிறவிக் கேதுவான பொருளின்ப ஆசை வலையுள் அகப்பட்டுத் தமக்குக் கேடு செய்பவரேயாவர்.

'கருமம்' என்றது நன்மையான. கருமத்தை, தொடக்க மிலியாக (அநாதியாக)க் கணக்கற்ற பிறவிகளிற் பிறந்திறந்துழன்று வரும் ஆதன் (ஆன்மா), அப் பிறவித் துன்பத்தினின்று விடுதலை பெற்றுப் பெயராப் பேரின்பந் துய்த்தற்கு, உடலை யொடுக்கி ஆசையை யடக்கி உள்ளத்தை யொருக்கி இறைவனெடு ஒன்று விக்கும் தவத்தை மேற்கொள்வதே தகுந்த வழியாதலின், அதைச் செய்பவரைத் 'தங்கருமஞ் செய்வார்' என்றும்; நிலையாது திடுமென்று மாய்வதும் பிணி மூப்பால் நலிவதுமாகிய உடம்பில் நின்று, பின்னல் போல் தோன்றி மறையுஞ் சிற்றின்பத்தை நுகர்தற் பொருட்டு, எல்லையில்லாது தொடர்ந்து செல்லும் பிறவித் துன்பத்திற் கேதுவான தீவினைகளைச் செய்து கொள்பவரை 'அவஞ் செய்வார்' என்றுங் கூறினார்.

ஆசைக்கோ ரளவில்லை யாதலால், தன்பொருட்டும் மனைவி மக்கள் பொருட்டும் ஆசைக் கடலுள் அழுந்தச் செய்யும் இல்லறத் தினும், தன்னந்தனியாயிருந்து தவத்தின் வாயிலாய் ஆசையறுக்கும் துறவறமே, வீடு பேற்றிற்குச் சிறந்த வழி யென்பது கருத்து.

இல்லறத்தானும் தன் கடமையை அற நூற்படி செய்வானுயின் தவஞ் செய்தவனுவான் என்றும், பகவற் கீதையில் கூறியவாறு பயன் நோக்காது தன் கடமையைச் செய்பவன் கருமவோகி என்றும், இதற்குப் பொருள் கூறுவது பொருந்தாது. தவம் ஈறறத்திற்கும் ஓரளவிற் பொதுவாகுமே யன்றி இல்லறவினை துறவறவினை யாகாது.

உசுஎ. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(இ—ரை.) சுடச் சுடரும் பொன்போல்—உருக்கப்படும் பொன் தீத் தன்னைச் சுடச்சுடத் தன் மாசு மறு நீங்கி ஒளி மிகுவது போல; நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச்சுட ஒளிவிடும்—தவஞ் செய்ய வல்லவர்க்கு அதனால் வருந்துன்பம் தம்மை வருத்த வருத்தத் தம் தீவினைத் தன்மையும், நீங்கித் தெள்ளறிவு மிகும்.

தவம் என்னும் சொல்லின் வேர்ப்பொருள் இக் குறளிலுள்ள உவமம் பொருளிரண்டிலும் விளக்கமாயிற்று. 'கில்' ஆற்ற லுணர்த்தும் இடைநிலை.

உசுஅ. தன்னுயிர் தானறப் பெற்றனை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ—ரை.) தன் உயிர் தான் அறப் பெற்றனை—தன்னுயிரைத் தனக்கு முற்றுரிமையாகப் பெற்றவனை; ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும்—அங்ஙனம் பெறுத மற்ற மக்களெல்லாம் கைகூப்பி வணங்குவர்.

முற்றுரிமையாகப் பெறுதலாவது தவத்தால் தன் ஐம்புல வாயை முற்றும் அடக்குதல். அறப் பெறுதல் முற்றும் பெறுதல். "மன்னுயிர்க் கெல்லா மினிது" (சுஅ) என்னுங் குறளடியிற் போன்றே, இங்கும் மன் என்பது மாந்தனைக் குறித்தது. உயிர் என்னும் அஃறிணை வடிவிற்கேற்பத் தொழும் என்னும் பலவின்பாற் படர்க்கை வந்தது. 'உயிர்' வகுப் பொருமை. தொழுதல் தூய்மை யும் ஆக்க வழிப்பாற்றலும் பற்றி. இரு வகைப் பற்றுந் துறத்தல் துறவதிகாரத்திற் கூறப்படுதலால், 'தானற' என்பதற்குத் 'தான் என்னும் முனைப்பற' என்று இங்குப் பொருளுரைக்கத் தேவை யில்லை.

உசுஆ. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னுற்ற றலைப்பட் டவர்க்கு.

(இ—ரை.) நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு—தவத் தால் வரும் ஆற்றலைப் பெற்றவர்க்கு; கூற்றம் குதித்தலும் கைகூடும்—கூற்றுவனை வெல்வதுங் கூடுவதாம்.

கூற்றுவனை வெல்வதாவது சாவினின்று தப்புதல். அது இங்கு ஒருவர்க்குங் கூடாமையின் உம்மை எதிர்மறை. மார்க்கண்டேயன் இன்று மண்ணுலகில் இல்லாமையாலும், வேறுலகிலுள்ளான் என்பது

உண்மைக்கும் உத்திக்கும் பொருந்தாமையாலும், அவனைப் பற்றிய கட்டுக் கதையை இங்கு எடுத்துக்காட்டுவது எள்ளளவும் ஏற்காது. வீட்டுலகிலுள்ளா னெனின் அது உரையளவையாற் பொருந்தும். ஆயின், அதற்கும், இறைவனே அவனை என்றும் பதினாருட்டை யுலக வாழ்வினனாக்கினன் என்பது தடை யாகும். இறைவன் முன்பு தீர்மானித்த தொன்றைப் பின்பு மாற்றினனெனின், அது அவன் இறைமையை நீக்கி மாந்தத் தன்மையையே ஊட்டும் 'ஆற்றல் 'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்' ஆம்.

உஅo. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(இ—ரை.) இலர் பலர் ஆகிய காரணம்—இவ்வுலகத்தி செல்வர் சிலராகவும் வறியர் பலராகவும் இருந்தற்குக் காரணியம்; நோற்பார் சிலர் நோலாதவர் பலர்—தவஞ் செய்வார் சிலராகவும் அது செய்யாதவர் பலராகவும் இருத்தலே

''கேடில் விழுச்செல்வங் கல்வி'' (எ0o) என்று ஆசிரியரே கூறுவதால், இக்குக் குறிக்கப்பட்ட செல்வ வறுமைகள் கல்வி பொருள் என்னும் இருவகைச் செல்வத்திற்கும் பொதுவாம். 'நோற்பார் சிலர்' என்னும் கரணியத்திற்குரிய கருமியம் கூறப்படாமையால் வருவித்துரைக்கப்பட்டது. இம்மை நிலைமையினின்று முன்னை வினைப்பயனுக்குக் கரணியம் உய்த்துணரப்பட்டன.

அதி. உஅ—கூடாவொழுக்கம்

அஃதாவது, துறவறத்தொடும் தவக் கோலத்தொடும் பொருந்தாத தீய வொழுக்கம். அது பெண்ணின்பத்தை மறைவாக நுகர்தலும் அதற்குத்தக ஊட்டம் மிக்க உணவுண்ணுதலுமாம். உள்ளத்தில் உரனில்லாது சுடலையுணர்ச்சியினாலும் சொற்பொழிவுணர்ச்சியினாலும் திடுமென்று தூண்டப்பட்டுத் துறவுக் கோலம் பூண்டோர், பின்பு அதைக் கடைப்பிடிக்கும் ஆற்றலின்மையால் தாம் சிறிது போழ்துவிட்ட சிற்றின்பத்தை மீண்டும் (மறைவாக) நுகர்வர். இது தவத்தொடு பொருந்தாமையின் தவத்தின்பின் வைக்கப்பட்டது.

ஊட்டம் மிக்க உணவும் உடலைக் கொழுக்க வைத்துக் கூடாவொழுக்கத்திற்குத் தூண்டுமாதலின், அதுவுந் துறவறத்திற் கடியத் தக்கதே.

உஎக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளோந்து மகத்தே நகும்.

(இ—ரை.) வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம்—பிறரை வஞ்சிக்கும் மனத்தை யுடையவனின் பொய் யொழுக்கத்தை; பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்—அவனுடம்பாய்க் கலந்துள்ள ஐம்பூதங்களும் கண்டு தம்முள்ளே எள்ளிச் சிரிக்கும்.

படிறு பொய். பிறர் காணவில்லை யென்று மறைவாகத் திருடும் திருடனின் திருட்டை, குறைந்த பக்கம் எங்கும் நிலைத்துள்ள நிலம் வளி வெளி என்னும் மூன்று பூதங்களேனும் தப்பாமற் காணும். ஆயின், கூடா வொழுக்கத்தானது மனத்தின் பொய்த் தன்மையையும் மறைந்த காமவொழுக்கத்தையும் அவனுடற் கூருகவும் ஐம் பொறிகளாகவுமுள்ள ஐம்பூதங்களும் காணுவதால், 'பூதங்களைந்தும்' என்றும், அவை அவனுக்கும் பிறர்க்கும் தெரியாமல் நகுவதால் 'அகத்தே நகும்' என்றும் கூறினர். இது மறை வொழுக்கத்திற்குத் தெய்வச்சான்றும் மனச்சான்றும் மட்டுமன்றிப் பூதச் சான்றும் உள்ள தெனக் கூறியவாறு. பிறரை ஏமாற்றுவதால் 'வஞ்சமனம்' என்றார்.

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(இ—ரை.) தன் நெஞ்சம் அறிகுற்றம் தான் படின்—தன் நெஞ்சமே குற்றமென்றறிந்ததை ஒருவன் செய்வானுயின்; வான் உயர் தோற்றம் எவன் செய்யும்-அவனது வானளாவ வுயர்ந்த தவக் கோலம் பிறரை அச்சுறுத்துவதன்றி வேறு என்ன பயன்படுவதாம்?

வானுயர்வு என்றது காட்சிப் பொருளைக் கருத்துப்பொருளாக மாற்றிய பொருள்வகை மாற்று. தனக்கு நன்மையே செய்யும் தன் சொந்த வுறுப்பு என்பது படத் 'தன்னெஞ்சம்' என்றும், நெஞ்சம் குற்ற மென்றறிந்ததை நெஞ்சமே காணச் செய்வதால். 'தானறி குற்றம்' என்றும், நெஞ்சாரக் குற்றஞ் செய்யும் துணிவுக்கடுமையும் அதற்குக் கழுவாயின்மையும் நோக்கிக் 'குற்றப்படின்' என்றுங் கூறினர்.

உஎங. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(இ—ரை.) வலி இல் நிலைமையான் வல் உருவம்—மனத்தை யடக்கும் வலிமையில்லாத இயல்பினன் வலிமை மிக்க துறவியரின் தவக் கோலத்தைப் பூண்டு கூடாவொழுக்கம் ஒழுகுதல்; பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்த அற்று—ஆவு கொல்லிக் காவலர் துய்த்தா வண்ணம் புலியின் தோலைப் போர்த்துப் பயிரை மேய்ந்தாற் போலும்.

அதிகாரத்தாலும் உவமையாலும் கூடாவொழுக்கம் என்பது வருவித்துரைக்கப்பட்டது. ஆவையுடையார் அதற்குப் புலியின்தோலைப் போர்த்துப் பிறர் கொல்லையில் மேய விடுதலும் கூடுமாதலின், இவ்வுவமை இல்பொருளுவமையாகாது. ''புலி பசித்தாலும் புல் தின்னாது.'' என்னுங் கருத்தினாலும், ''புலியடிக்கு முன் கிலியடிக்கும்.'' ஆதலாலும், புனங்காப்போர் புலியை அண்டுவதில்லை. அங்ஙனமே, தவத்தோர் தவறு செய்யார் என்னும் நம்பிக்கையினாலும், தவத்தோரை அணுகின் சாபித்து விடுவர் என்னும் அச்சத்தாலும், மக்கள் தவக்கோலத்தாரிடம் நெருங்குவதில்லை. புலித்தோற் போர்த்த பெற்றம் பிறர் புலங்களில் மறைவாக மேய்வது போல, கூடாவொழுக்கத்தானும் பிறர்க்குரிய பெண்டிரொடு கூடிக் களவாகவும் கள்ளத்தனமாகவும் இன்பம் நுகர்வான் என்பது பெறப்பட்டது.

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ—ரை.) தவம் மறைந்து அல்லவை செய்தல்—மனத்தை யடக்கும் வலிமையில்லாதவன் தவக்கோலத்தின்கண் மறைந்து நின்று கூடா வொழுக்கம் ஒழுகுதல்: வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்த அற்று—வேடன் புதரின்கண் மறைந்து நின்று பறவைகளை வலையாற் பிணித்தாற் போலும்;

'தவம்' ஆகு பொருளது.

உஎடு. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

(இ—ரை.) பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம்—பிறர் தம்மைப் பெரிதும் மதிக்குமாறு யாம் இருவகைப் பற்றும் துறந்தேம் என்று சொல்வாரின் மறைவொழுக்கம்; எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும்—பின்பு தம் தீவினைப் பயனை நுகரும்போது, அந்தோ என் செய்தேன் என் செய்தேன் என்று தனித்தனியே வருந்திப் புலம்புமாறு, அவருக்குப் பல்வகைத் துன்பங்களையும் உண்டாக்கும்.

சொல்லளவிலன்றிச் செயலளவிற் பற்றருமையின் 'பற்றற்றே மென்பார்' என்றும், தீவினைப்பயன் கடுமை நோக்கி 'எற்றெற்று' என்றும், கூறினர். தவவடிவில் மறைந்து பிறர் மகளிரொடு கூடுதல் இருமடித் தீவினையாதலின், அதன் விளைவும் மிகக் கொடிதாயிற்று. எற்று என்பது கடந்த நிலைமை நோக்கி வருந்துவதைக் குறிக்கும் இடைச் சொல். என்னது—எற்று (என் + து) = எத்தன்மைத்து.

"எற்றென் கிளவி இறந்த பொருட்டே."
என்பது தொல்காப்பியம் (இடையியல், கஞ).

உகசு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணு ரில்.

(இ—ரை.) நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின்—உள்ளத்திற் பற்றருது பற்றற்றவர்போல் நடித்துப் பிறரை யேமாற்றி வாழும் பொய்த் துறவியரைப்போல; வன்கணர் இல்—கொடியவர் இவ்வுலகத்தில் இல்லை.

கன்னியரையும் பிறர் மனைவியரையுங் கற்பழித்தலும், அடைக்கலப் பொருளைக் கவர்தலும், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தலும், கொள்ளை யடித்தலும், தம் விருப்பம் நிறைவேறும் பொருட்டு எத்துணை நல்லவரையுங் கொல்லுதலும், ஆகிய தீவினைகளிலெல்லாம் வல்லவரும், கடுகளவும் மனச்சான்று இல்லாதவருமானதனின் கூடாவொழுக்கத்தினர் போற் கொடியர் பிறரில்லையென்றார். பற்றற்றவர் போல் நடிப்பவரும் நடியாதவருமாகிய இருவகைக்கொடியோருள், நடிப்பவர் மிகக் கொடியவர் என்பது கருத்து.

உஎஎ. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ—ரை.) குன்றிப் புறம் கண்ட அனையரேனும்-வெளிக் கோலத்தில் குன்றிமணியின் பின்புறம் கண்டாற் போலச் செம்மையுடையவரேனும்; அகம் குன்றி மூக்கின் கரியார் உடைத்து—உள்ளத்தில் அதன் மூக்குப்போல இருண்டிருப்பவரை உடையது இவ்வுலகம்.

செம்மை கருமை என்பன குன்றிமணியை நோக்கின் நிறப்பண்பும், கூடா வொழுக்கத்தினரை நோக்கின் குணப்பண்பும், ஆகும். புறம் என்னுஞ் சொல் குன்றிக்கும் கூடாவொழுக்கத்தினர்க்கும் பொதுவாக முன்நின்றது. இங்ஙனம் நில்லாக்கால் பின்னர் வரும் அகம் என்னுஞ் சொற்கு முரணின்மை காண்க. 'குன்றி' ஆகுபெயர்.

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(இ—ரை.) மனத்தது மாசு ஆக—தம் மனத்தின்கண் குற்றமிருக்கவும்; மாண்டார் நீராடி—தவத்தால் மாட்சிமைப் பட்டவர் போற் பலகால் குளிர்ந்த நீரில் மூழ்கி; மறைந்து ஒழுகும் மாந்தர் பலர்—அதன்கண்ணே மறைந்தொழுகும் மாந்தர் உலகத்துப்பலர்.

'மாசு' காம வெகுளி மயக்கங்கள். நீராடியதால் உடம்பழுக்கேயன்றி உள்ளத்தழுக்கு நீங்கிற்றிலர் என்பதை யுணர்த்த 'மனத்தது

மாசாக ' என்றார். 'மாண்டார் நீராடி' என்பதற்கு "மாட்சிமைப் பட்டாரது நீர்மையை யுடையராய்" என்று மணக்குடவர் உரைத்ததும் ஓரளவு பொருத்த முடையதே. 'நீராடி' இரட்டுறல்.

உகூ. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(இ—ரை.) கணை கொடிது—அம்பு வடிவில் நேராயிருந்தாலும் செயலிற் கொடியது; யாழ் கோடு செவ்விது—யாழ் கண்டால் வளைந்ததேனும் செயலால் இனியது; ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் — அங்ஙனமே தவஞ்செய்வாருள்ளும் யார் கொடியர் யார் நேர்மையர் என்பதை, அவரவர் கோலத்தாற் கொள்ளாது செயல்வகையாலேயே அறிந்துகொள்க.

கொல்லும் அம்பு கொடியது; இசையால் இன்புறுத்தும் யாழ் இனியது அங்ஙனமே தீயவொழுக்கமுள்ளவர் கொடியவர்; நல்லொழுக்கமுள்ளவர் நேர்மையர். 'யாழ் கோடு' என்பதால் அம்பின் வடிவு நேர்மை வருவித்துரைக்கப்பட்டது. 'கொளல்' வியங்கோள்.

'யாழ் கோடு செவ்விது' என்றதை ஆராய்ச்சியில்லாரும் ஆரியப் பார்ப்பனரும் பிறழ வுணர்ந்து, இன்றுள்ள வீணை ஆரியர் கண்டதென்றும், நால் வகை யாழுட் சிறந்த செங்கோட்டியாழும் வில்யாழ் வகையைச் சேர்ந்ததே யென்றும், உரைப்பாராயினர். யாழ்க் கோட்டின் வளைவு முழுவளைவும் கடைவளைவும் என இரு திறப்படும். வில் யாழ் முழு வளைவும் செங்கோட்டியாழ் கடை வளைவும் உடையன. கடை வளைவு வணர் எனப் பெயர் பெறும். அதையே வளைவெனக் குறித்தார் திருவள்ளுவர் என அறிக.

உஅo. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(இ—ரை.) உலகம் பழித்தது ஒழித்து விடின்—உயர்ந்தோர் தவத்திற்காகாதென்று தள்ளிய ஒழுக்கத்தை விட்டுவிடின்; மழித்தலும் நீட்டலும் வேண்டா—தலைமயிரை வறண்டலும் சடையாக்கலும் வேண்டியதில்லை.

சமணர் கையாளும் பறித்தல் முறையும் மழித்தலுள் அடங்கும். மழித்தல் என்னும் வினையினுல் தலைமயிர் என்னும் செயப்படுபொருள் உணரப்படும்.

"மனத்துக்கண் மாசில னாதல் யனைத்தறன்
ஆகுல நீர பிற."

என்றதற் கேற்ப, கூடா வொழுக்க மில்லார்க்கு எவ்வகைப் புறக் கோலமும் வேண்டியதில்லை யென்பது இக்குறளாற் கூறப்பட்டது.

அதி. உகூ—கள்ளாமை

அஃதாவது, பிறர் பொருளை மறைவாகக் கவராமை. இது கவர்தலும் மறைவிற் செய்தலுமாகிய இருமடிக் குற்றம். ஒரு தீவினையை ஆசையொடு கருதுதலும் அதைச் செய்தலோ டொக்கு மாதலின், கள்ளாமை என்பது களவு செய்யாமையும் களவு செய்யக் கருதாமையும் என இருதிறப்படும். களவு செய்யாமை இல்லறத் திலும் கடியப்படுவதே. ஆயின், துறவறம் தூய்மை நிலையில் இல்லறத்தினும் உயர்ந்ததாதலின், களவு செய்யக் கருதுதலும் அதிற் குற்றமாம். இவ்விரு திறத்தையும் ஒரே யிடத்திற் கூறுவதே தக்கதாகலின், இரண்டையுங் கூறுதற்கேற்ற துறவறவியலிற் கூறினர். ஆயினும், களவு செய்யாமை ஈறத்திற்கும் பொது வாம்.

களவு செய்தலும் கூடா வொழுக்கத்தைச் சேர்ந்ததினாலும், காமம் பற்றிய கூடா வொழுக்கமும் களவாய் நிகழ்தலானும், இவ் வகை யொற்றுமை பற்றி உயர்திணைப் பொருள் பற்றிய களவை விலக்கும் கூடா வொழுக்கத்தின் பின் அஃறிணைப் பொருள் பற்றிய களவு விலக்கு வைக்கப்பட்டது.

கள் என்னும் முதனிலை முதற்காலத்திற் களவு செய்தலைக் குறித்ததே. கள்ளம், கள்ளத்தனம், கள்ளன், கள்வு, களவு என்னும் சொற்களை நோக்குக. பிற்காலத்திற் கள் என்னும் முதனிலை தன் பொருளை யிழந்தபின், தொழிற் பெயரொடு துணைவினை சேர்ந்த களவுசெய் என்னும் கூட்டுச்சொல் முதனிலை தோன்றிற்று. "கேட்குவான் பரிக்கில் சொலுவான் பரிக்கேணம்." என்னும் மலை யாளப் பழமொழியையும் நோக்குக.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ—ரை.) எள்ளாமை வேண்டுவான் என்பான்—கள்வன் என்று பிறரால் இழித்தெண்ணப் படாமையை விரும்புகின்றவன் என்று சொல்லப்படுவான்; தன் நெஞ்சு எனைத்து ஒன்றும் கள்ளாமை காக்க—தன்மனம் எவ்வகைப் பொருளையும் மறைவிற் கவரக் கருதா வகை காத்துக்கொள்க.

அறிவு போன்ற கருத்துப் பொருளும் அடங்க 'யாதொன்றும்' என்றார். நெஞ்சு கள்ளாமை காக்க என்றதனால், கள்ளுதல் இங்குக் கள்ளக் கருதுதல் என்பது பெறப்படும். என்பான் என்னும் செய் வினை வடிவுச் சொல் செயப்பாட்டுவினைப் பொருள் கொண்டது.

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(இ—ரை.) உள்ளத்தால் உள்ளலும் தீதே—தீவினைகளைத் தம் நெஞ்சாற் கருதுதலும் துறவறத்தார்க்குக் குற்றமாம்; பிறன் பொருளைக் கள்ளத்தாற் கள்வேம் எனல்—ஆதலால், பிறன் பொருள் எதையேனும் அவனறியாமற் கவர்வேம் என்று கருதற்க.

'உள்ளத்தால்' என்னும் வேண்டாச் சொல் துறவியரின் உள்ளம் தூய்மையாயிருக்க வேண்டும் என்பதை உணர்த்தி நின்றது. 'உள்ளலும்' இழிவு சிறப்பும்மை. 'அல்' இங்கு எதிர்மறை வியங் கோளீறு. இனி, கள்வேமெனல் உள்ளலுந்தீதே எனினுமாம்.

உஅஊ. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ—ரை.) களவினுல் ஆகிய ஆக்கம்—கனவினுல் உண்டான செல்வம்; ஆவது போல அளவு இறந்து கெடும்—வளர்வது போலத் தோன்றி அளவு கடந்து கெடும்.

'ஆக்கம்' தொழிலாகு பெயர். அளவிறந்து கெடுதலாவது, புது வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போவது போல், தான் ஆகும்போது முன்பிருந்த பழஞ் செலவத்தையும் தன்னெடு சேர்த்துக் கொண்டு போதலும், இம்மைக்குப் பழியையும் மறுமைக்குத் தீவினையையும் உண்டாக்குதலுமாம்.

உஅசு. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ—ரை.) களவின்கண் கன்றிய காதல்—பிறர் பொருளைக் கவர்தலின்கண் ஊன்றிய வேட்கை; விளைவின்கண் வீயா விழுமம் தரும்—அற்றைக்கு நலஞ் செய்வதுபோல் தோன்றிப் பின்பு பயன் விளையுங் காலத்தில் தீராத துன்பத்தை யுண்டாக்கும்.

களவாசை வேரூன்றியதினுல் மேன்மேலுங் களவிற் பயிற்றி, அதனுல் இம்மைக்கும் மறுமைக்கும் தீராத பழியும் தீவினையும் விளைக்குமாதலின், 'வீயா விழுமந் தரும்' என்றார்.

உஅடு. அருள்கருதீ யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(இ—ரை.) அருள் கருதி அன்பு உடையர் ஆதல்—அருளின் அருமை நோக்கிப் பிறரிடத்து அன்புடையரா யொழுகுதல்; பொருள்

கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்—பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பாரிடத்தில் உண்டாகாது.

தம் சொந்தப் பொருளைத் தீதென்று விட்டுவிட்டுத் துறவு பூண்டோர், பின்பு மீண்டும் பொருளாசை கொண்டு பிறர் பொருளைக் கவரச் சமையம் பார்ப்பாராயின், நீங்கின நோயின் மறுதாக்கு முன்னினும் வலிதாயிருத்தல்போல அவராசையும் வலிதாயிருக்கு மாதலின், அவர் கவரக் கருதும் பொருளுடையார் மீது அவர்க்கு அருளோ அன்போ பிறவாதென்பது கருத்து.

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர்.

(இ—ரை.) களவின்கண் கன்றிய காதலவர்—களவின்கண் ஊன்றிய வேட்கை யுடையவர்: அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றூர்—தமக்குரிய ஒழுக்க வரம்பின்கண் நின்று ஒழுக மாட்டார்.

அளவைகளால் உயிர்க்கு வரும் இன்பதுன்பக் கூறுகளை ஆராய்ந்தறிதல் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்திற்கே சிறப்பாக ஏற்குமாதலின், அறவுழ்கம் (தருமத்தியானம்) என்னும் ஆருகத மதக் கொள்கையைப் பரிமேலழகர் இங்குப் புகுத்துவது பொருந்தாது.

உஅள. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ—ரை.) களவு என்னும் கார் அறிவு ஆண்மை—களவாண்மை என்று சொல்லப்படும் இருண்ட அறிவுடைமை; அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்—எல்லாப் பொருள்களின் இயல்பையும் உள்ளவாறு அளந்தறியுந் திறமையை விரும்பினவரிடத்து இல்லை.

இருள் என்பது அகவிருளாகிய மயக்கம். புறவிருளின் கருமை இனம் பற்றி அகவிருட்கும் ஏற்றப்பட்டது. களவையுந் திறம்படச் செய்வதற்கு அறிவு வேண்டியிருப்பதால், அத்தீய அறிவு காரறிவெனப்பட்டது. 'என்னும்' என்பது ஈரிடத்தும் 'ஆகிய' என்னும் பொருளது. ஒளியுடன் இருள்பொருந்தாததுபோலத் துறவறத்திற்குரிய தூய அறிவொடு தீய அறிவு பொருந்தாது என்பது கருத்து.

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(இ—ரை.) அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல—பொருள்களின் இயல்பை உள்ளவாறறிந்தவரின் உள்ளத்தில் அறம் நிலைத்து நிற்றல்போல; களவு அறிந்தார் நெஞ்சில் கரவு நிற்கும்—களவையே பயின்றவரின் உள்ளத்தில் வஞ்சனை நிலைத்து நிற்கும்.

பழக்கம் நிலைத்து நிற்கும் இயல்பினதென்பதும், பொருள்களின் இயல்பை அளந்தறிதல் துறவறத்திற்கு இன்றியமையாத தென்பதும், இங்குக் கூறப்பட்டன.

உஅக. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர்.

(இ—ரை.) களவு அல்ல மற்றைய தேற்ருதவர்—களவல்லாத பிறவற்றை அறியாதவர்; அளவு அல்ல செய்து ஆங்கே வீவர்—வரம்பு கடந்த செயல்களைச் செய்து அப்பொழுதே அழிவர்.

வரம்பு கடந்த செயல்கள் பெரும் களவுகள். அப்பொழுதே அழிதல், கையும் மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அரசனாலும் மக்களாலும் தண்டனை யடைதலும் எரியுலகில் வீழ்தலும். தேற்ருதவர் என்பது தன்வினைப் பொருளில் வந்த பிறவினைச் சொல்.

உகூ. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ—ரை.) கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும்—களவு செய்வார்க்குத் தம்முடனேயே யுள்ள தம் சொந்த வுடம்பும் தவறும்; கள்ளார்க்குப் புத்தேள் உலகு தள்ளாது—அது செய்யாதார்க்கு நெடுந் தொலைவிலுள்ள தேவருலகந் தவருது கிட்டும்.

உயிர்நிற்பது உயிர்நிலை. தாம் குடியிருக்கும் வீடு போல்வது என்பதை யுணர்த்த 'உயிர்நிலை' யென்ருர். உயிர்நிலை தள்ளுதலாவது அரசனால் தண்டிக்கப்படுதல்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." (தறள். கூகூ0.)

"கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்" (சிலப். உ0- கூ இசை.)

அதி. ஈo—வாய்மை

அஃதாவது, பொய்ம்மைக்கு மறுதலையான மெய்ம்மை. கூடா வொழுக்கத்திலும் களவிலும் பொய்ம்மை கலந்திருத்தலாலும், பொய்ம்மை நீக்கப்பெறின் அவ்விரண்டும் நிகழா வாதலாலும், இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

உகூக. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ—ரை.) வாய்மை எனப்படுவது யாது எனின்—மெய்ம்மை யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்; தீமை யாது ஒன்றும் இலாத சொலல்—அது எவ்வகை யுயிர்க்கும் எவ்வகைத் தீங்கும் எட்டுணையும் விளைக்காத சொற்களைச் சொல்லுதலாம்.

வாய்மையின் இலக்கணம் பிறர்க்கும் பிற வுயிர்கட்கும் தீங்கு பயவாமையே யன்றி நிகழ்ந்தது கூறலன்று என்பது கருத்து. இது திருக்குறளை ஒப்புயர்வற்ற உலக அற நூலாக்கும் இயல்வரையறை யாம்.

உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் ஒரு பொருட்சொல் மூன்றும், முறையே, உள்ளமும் வாயும் உடம்புமாகிய முக்கரணத் தொடு தொடர்புடையனவாகச் சொல்லப்பெறும். இனி, உள்ளது உண்மை, வாய்ப்பது வாய்மை, மெய் (substance) போன்றது மெய்ம்மை எனினுமாம்.

உகூஉ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ—ரை.) புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்—குற்றமற்ற நன்மையைப் பிறர்க்கு விளைக்குமாயின்; பொய்ம்மையும் வாய்மை இடத்த—பொய்யான சொற்களும் மெய்யான சொற்களின்பாற் பட்டனவாம்.

குற்ற மற்ற நன்மையாவது, எவருக்கும் எவ்வகைத் தீங்கும் இழப்பும் விளைக்காத நற்பயன். அது, வழிச்செல்லும் சிறுரை நோக்கித் தாம் செல்லும் ஊர் மிகத் தொலைவிலிருந்தும் அணிய தென்பதும் மருத்துவன் நோயாளியை நோக்கி அவன் நோய் மிகக் கடுமையாயிருந்தும் வரவர நலமாகி வருகின்ற தென்பதும், ஒருவர்க்குத் தொடர்ந்து விக்க லெடுப்பதைத்தடுக்க அவர் திடுக் கிடத்தக்க ஒரு பொய்ச் செய்தியைச் சொல்வதும், போல்வதாம்.

இத்தகைய தீங்கற்ற பொய்யுரைகளால், ஒருவர்க்குப் பெருஞ் செல்வங் கிட்டுவித்தலும் ஒருவரைச் சாவினின்று தப்புவித்தலும் கூடும்.

நன்மை பயக்கும் பொய்யுரையும் வாய்மையின் பாற்படு மெனவே, தீமை பயக்கும் மெய்யுரையும் பொய்ம்மையின் பாற்படும் என்பதாம். ஆகவே. ஓர் உரையின் மெய்ம்மையும் பொய்ம்மையும் அதன் விளைவும் பற்றியல்லது நிகழ்ச்சி மட்டும் பற்றித் துணியப் படுவதன்றென்பது கருத்தாம்.

உகூடு. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(இ—ரை.) தன் நெஞ்சு அறிவது பொய்யற்க—ஒருவன் தன் நெஞ்சு அறிந்த தொன்றைப் பிறர் அறியவில்லை யென்று கருதிப் பொய் சொல்லா தொழிக ; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்—பொய் சொன்னுளுயின், அதனை யறிந்த தன் நெஞ்சே தான் செய்த தீவினைக்குச் சான்றாக நின்று தன்னைக் குற்றஞ் சாட்டித் துன்புறுத்தும்.

"நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை." (கொன்றை. ஙூ.) முக்கரணவினைக ளெல்லாவற்றையும் நெஞ்சு அறிவதனாலேயே அதற்கு மனச்சான்று என்று பெயர். மனச்சான்று உடனிருந் துரைக்கவும் அதை மறுத்துப் பொய் சொல்வது கொடிய தென்பதை யுணர்த்தவே, "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.' என்றார் ஔவையார். 'சுடும்' என்றதினால், மனச்சானறு குத்தி யுணர்த்தி மன நோவை யுண்டுபண்ணுவது மட்டு மன்றி, தெய்வச் சான்றாக நின்று வெளிப்படுத்தி அரசன் தண்டனையையும் அடை விக்கும் என்பது பெறப்படும்.

உகூசு. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(இ—ரை.) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்—ஒருவன் நெஞ்சாரப் பொய் சொல்லாது ஒழுகுவனுயின் ; உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்—அவன் உயர்ந்தோர் உள்ளத்திலெல் லாம் உளனுவன்.

உயர்ந்தோர் உள்ளத்தில் உளனுதலாவது அவரால் மதிக்கப் படுதலும் என்றும் நினைக்கப்படுதலுமாம். 'உள்ளத்தான்' என்பது வேற்றுமை மயக்கம்.

உகூடு. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ—ரை.) மனத்தொடு வாய்மை மொழியின்—ஒருவன் தன் உள்ளத்தொடு பொருந்த உண்மையைச் சொல்வானாயின்; தவத்தொடு தானம் செய்வாரின் தலை—அவன் தவமுந் தானமும் ஒருங்கே செய்தவரினுஞ் சிறந்தவனாவன்.

தவத்தொடு தானஞ் செய்வதினும் உளத்தொடு பொருந்த உண்மை சொல்வது அரிதாதலால், 'தவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை' என்றார்.

உகூக. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(இ—ரை.) பொய்யாமை அன்ன புகழ் இல்லை—இம்மையில் ஒருவனுக்குப் பொய் சொல்லாமை போன்ற புகழ்க் காரணகம் (காரணம்) வேறில்லை; எய்யாமை எல்லா அறமும் தரும்—உடம்பு வருந்தி எதுவுஞ் செய்யாமலே அது அவனுக்கு மறுமைக்கு வேண்டிய எல்லா அறங்களையுந் தரும்.

இல்லறத்திற் பொருளீட்டுதற்கும் துறவறத்தில் தவஞ் செய்தற்கும் உடம்பை வருத்தும் முயற்சி இன்றியமையாததாகும். அம் முயற்சி யின்றியே அவ்விருவினைப் பயனையுந் தருதலால், 'எய்யாமை யெல்லா வறமுந் தரும்' என்றார். 'புகழ்' ஆகுபெயர். எய்த்தல் உடம்பு வருந்தி யினைத்தல்.

உகூஎ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ—ரை.) பொய்யாமை பொய்யாமை ஆற்றின்—ஒருவன் வாய்மை யறத்தைத் தொடர்ந்து செய்ய வல்லவனாயின்; பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று—அவன் பிற அறங்களைச் செய்யாதிருத்தலே நன்றும்.

அடுக்குத் தொடர் இரண்டனுள் முன்னது தொடர்ச்சி பற்றியது; பின்னது தேற்றம் பற்றியது. வாய்மை யொன்றே எல்லாவறங்களின் பயனையுந் தருவதாலும், எல்லா வறங்களையும் ஒருவன் மேற் கொள்ளுதல் அரிதாதலாலும், பல வறங்களை ஒருங்கே மேற் கொள்ளின் அவற்றுட் சில தவறுவதால் ஏனையவற்றின் பயனையும்

ஏனையறங்களின் பயனையும் பெறுவதே சிறந்ததாகும் என்பதை யுணர்ந்த 'அறம்பிற செய்யாமை நன்று' என்றார்.

வாய்மையைக் கடைப்பிடிப்பவன் தான் செய்யுந் தீவினைகளை யெல்லாம் பிறருக்கு மறைக்காதிருக்க வேண்டுமாதலானும், அவை பிறரால் அறியப்படின் தான் தண்டனை யடைவது திண்ணமாத லாலும், ஒவ்வொன்றாக எல்லாத் தீவினைகளையும் விட்டுவிடுவன் என்பது கருத்து.

மணக்குடவர் ஈரடுக்குத் தொடர்களையும் தழாத் தொடராகக் கொள்ளாது தழுவு தொடராகக் கொண்டு, "பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனையின், பிற அறங்களைச் செய்தல் தன்னும் அல்லது தீதாம்." என்று இக் குறளுக்குப் பொருளுரைப்பர்.

உகூஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ—ரை.) புறம் தூய்மை நீரான் அமையும்—ஒருவனது உடம்புத்தூய்மை நீரால் உண்டாகும்; அகம் தூய்மை வாய்மை யான் காணப்படும்—உள்ளத்தூய்மை வாய்மையால் அறியப்படும்.

புறத்தூய்மை அழுக்குப் போதல்; அகத்தூய்மை குற்றம் நீங்குதல். காணப்படுதல் அறியப்படுதல் காணுதல் என்றது அகக் கண்ணுற் காணுதலை. புறத்தழுக்கும் நீரும் போல அகக் குற்றமும் வாய்மையும் காட்சிப் பொருளன்மையின், அறியப்படும் என்றார். வாய்மையால் அகத்தூய்மை உண்டாகும் வகை மேற் கூறப்பட்டது. துறவியர்க்குப் புறத்தூய்மையினும் அகத்தூய்மையே சிறந்ததென்பதாம்.

உகூக. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ—ரை.) சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல—ஆன்றவிந்தடங்கிய துறவோர்க்குப் புறவிருள் போக்கும் விளக்கு களெல்லாம் விளக்காகா, பொய்யா விளக்கே விளக்கு—அகவிருள் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காம்.

புறவிருள் போக்கும் விளக்குகள் கதிரவன், நிலா, தீ என்பன. இவை பொய்யாமைபோல் அகவிருள் போக்காமையின், 'பொய்யா விளக்கே விளக்கு' என்றார். அகவிருள் அறியாமை. 'பொய்யா' ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பொய்யாமையாகிய விளக்கு என்பது உருவக வணி.

முந்திய குறளில் வாய்மை அகத்தழுக்கைப் போக்குவதென்ற கருத்துட்கொண்டு, அதற்கேற்ப வாய்மையை விளக்காக உருவகித்தார்.

௳00. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும் வாய்மையி னல்ல பிற.

(இ—ரை.) யாம் மெய்யாக் கண்டவற்றுள்—யாம் உண்மையான அறங்களாகக் கண்டவற்றுள்; எனைத்து ஒன்றும்—எவ்வகையிலும்; வாய்மையின் நல்ல பிற இல்லை—மெய்ம்மை போலச் சிறந்த வேறு அறங்கள் இல்லை.

'மெய்யா' என்பதில் ஆக என்னும் விகுதியெச்ச வீறு 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது. வாய்மை தலைமையான அறமாகச் சொல்லப்பட்டிருப்பதால், 'வாய்மையின்' என்பதிலுள்ள ரு-ஆம் வேற்றுமையுருபு தனக்குரிய உறழ்ச்சிப் பொருளில் வராது உ-ஆம் வேற்றுமைக்குரிய ஒப்புப்பொருளில் வந்ததாகக் கொள்க.

அதி. ஙக—வெகுளாமை

அஃதாவது, ஒருவன்மேற் சினங்கொள்வதற்குக் காரணகம் (காரணம்) இருப்பினும் அதைக் கொள்ளாமை. 'உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்.'' என்னும் பழமொழிப்படி, வெகுளி பொய்ம்மை பற்றியும் நிகழ்வதால், வெகுளாமை வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

௳0ங. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக் காக்கினென் காவாக்கா லென்.

(இ—ரை.) சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான்—சினம் தாக்கக்கூடிய எளிய இடத்தில் அது எழாதவாறு அருளால் அல்லது அன்பால் தடுப்பவனே உண்மையில் அதைத் தடுப்பவனுவன்; அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என்—அல்லாத வலிய இடத்தில் அது தானே எழாது அடங்குதலால் அதைத் தடுத்தாலென், தடுக்காவிட்டாலென்? இரண்டும் ஒன்றுதானே!

'செல்லிடம்' தவத்தில் தாழ்ந்தவரும் வறியவரும் அதிகாரமில்லாதவருமாம். 'அல்லிடம்' தவத்தில் உயர்ந்தவரும் செல்வரும் அதிகாரத்திற் சிறந்தவருமாம். வலிய இடத்திற் சினங்கொள்வதால் தனககே கேடாதலாலும், அதையடக்குவது அறமன்மையாலும், 'காக்கினென் காவாக்காலென்' என்றார்.

'௳0ச. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து மில்லதனிற் றீய பிற.

(இ—ரை.) சினம் செல்லா இடத்துத் தீது—ஒருவனது சினம் அது தாக்க முடியாத வலியார் மேல் எழின் தனக்கே தீங்காம்; செல் இடத்தும் அதனின் தீய பிற இல்—அது தாக்கக்கூடிய எளியார் மேல் எழினும் அதைவிடத் தீயவை வேறில்லை.

செல்லிடத்துச் சினத்தால் விளைவது இம்மைத் துன்பமே. ஆயின், செல்லா விடத்துச் சினத்தால் விளைவன இம்மைப்பழியும் மறுமைத் துன்பமுமாம். அதனால் அதனினுந் தீயன வேறில்லை யென்றார்.

கூஅ. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(இ—ரை.) யார் மாட்டும் வெகுளியை மறத்தல்—எத்தகையோரிடத்தும் சினங்கொள்ளுதலைக் கருதுவதாஞ் செய்யற்க; அதனான் தீய பிறத்தல் வரும்—அதனால் பல்வகையான தீமைகள் உண்டாகும்.

வலியார், ஒப்பார், எளியார் என்னும் முத்திறத்தாரும் அடங்க 'யார்மாட்டும்' என்றார். உடனேயும் வெளிப்படையாகவும் தீங்கு செய்ய இயலாத எளியோரும் உள்ளத்தில் வயிரங்கொள்வின், உறக்க நிலையிலும் மயக்க நிலையிலும் தனித்த நிலையிலும் வலியார்க்குத் தீங்கு செய்யத் துணிவாராதலானும், சினங்கொள்ளுதலும் அதனால் தீயன செய்யக் கருதுதலும் தூயவுள்ளத்தராயிருக்கவேண்டிய துறவியர்க்குப் பொருந்தாமையானும், 'தீய பிறத்த லதனான் வரும்' என்றார். மறத்தல்' தல்லீற்று வியங்கோள்.

கூஆ. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(இ—ரை.) நகையும் உவகையும் கொல்லும சினத்தின்—இல்லறத்தார்க்கு அன்பாலும் துறவறத்தார்க்கு அருளாலும் முகத்தின்கண் தோன்றும் மலர்ச்சியையும் மனத்தின்கண் உண்டாகும் மகிழ்ச்சியையும் கெடுத்தொழுகின்ற சினமல்லாது; பிறபகையும் உளவோ—வேறு பகைகளும் உண்டோ? இல்லை.

சினத்தின் நீட்சியே பகையாதலானும், புறப்பகையில்லாத துறவியர்க்கும் சினம் அகப்பகையாய் அமைந்து 'பிறவித்துன்பத்தைப் பயத்தலானும், சினத்தின் வேறான பகை யில்லையாயிற்று.

கூஇ. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(இ—ரை.) தான் தன்னைக் காக்கின் சினம் காக்க—ஒருவன் தனக்குத் துன்பம் நேராமற் காக்க விரும்பினானையின் தன் மனத்திற் சினம் வராமற் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும்—காவானையின் அச்சினம் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை வருவிக்கும்.

இல்லறத்தார்க்குச் சினக்கப்பட்டவரால் தீங்கு நேர்தலாலும், துறவறத்தார்க்கு அவர் சினம் அவர் தவப்பயனைக் கெடுத்துப் பிறவித் துன்பத்தையும் அடைவித்தலாலும், 'தன்னையே கொல்லும் சினம்' என்றார். கொல்லுதல் இங்குக் கொல்லுதல்போல் துன்புறுத்துதல், "கரும்புபோற் கொல்லப் பயன்படுங்கீழ்" (குறள் கoஎஅ) என்பதிற் போல.

நo. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு மேமப் புணையைச் சுடும்.

இ—ரை.) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி—சினம் என்னும் நெருப்பு; இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும்—தன்னைச் சேர்ந்தவரை மட்டுமன்றி, அவருக்குத் துன்பக்காலத்தில் ஏமப்புணை போல் உதவும் இனத்தாராகிய தன்னைச் சேராதவரையுஞ் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி என்னும் பெயரிலுள்ள பலர்பா லீறு ஏனை நான்கு பாலையுந் தழுவும். இத்துறவறவியலிற் கூறப்பட்டுள்ள அறங்களுட் சில இருவகை யறத்திற்கும் பொதுவென்பது முன்னரே கூறப்பட்டது. அவற்றுள் வெகுளாமை என்பது ஒன்று. இருவகை யறத்தார்க்கும் இனமாக வுள்ளவர் துன்பக் காலத்தில் உதவித் தூக்கியெடுத்தலால், அவரை ஏமப்புணையாக உருவகித்தார். ஏமப் புணையாவது, நடுக்கடலிற் கப்பல் மூழ்கும்போது கலவர் ஏறித்தப்பும் ஏமப்படகு(life-boat). வாழ்க்கைக் கடலைக் கடக்கும் இல்லறத்தார்க்கு இடுக்கட் காலத்தில் உதவிக்காக்கும் இனத்தார் ஏமப்புணையார்; பிறவிக் கடலைக் கடக்கும் துறவு பயில்வார்க்குத் தவவோகங்களில் தவறுநேர்ந்து அவர் கெடும்நிலையில் அவரைத் திருத்தி ஆற்றுப்படுத்தும் முழுத்துறவியர் ஏமப்புணையார். 'சேர்ந்தாரைக் கொல்லி' தீக்கு ஒரு பெயர்.

சுடுதல் சேர்ந்தவரை வருத்துதலும் சேர்ந்தவரைச் சேர்ந்தாரைத் தாக்குதலும். கனல்தீ உடல் தொடர்பு கொண்டாரை மட்டும் வருத்த, சினத்தீ உடல் தொடர்பு கொண்டாரொடு உளத் தொடர்பு கொண்டாரையும் வருத்தும் என்பதாம். புணையையும் என்னும் எச்சவும்மை தொக்கது. வெகுளி என்னுஞ் சொல்லின் வேர்ப் பொருளே எரிவது என்பதாம். வேகு—வெகுள்—வெகுளி.

நூ0எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(இ—ரை.) சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு—சினத்தைத்தன் ஆற்றலுணர்த்தும் சிறந்த பண்பென்று பொருட்படுத்தி அதைக்கொண்டவன் கெடுதல்; நிலத்து அறைந்தான் கை பிழையாத அற்று—நிலத்தின் கண் அறைந்தவன் கை தப்பாது நோவுறுதல் போன்றதாம்.

இங்குப் பொருள் என்றதைப் ''பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்'' (எஃக) என்பதிற்போலக் கொள்க.

நூ0அ. இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(இ—ரை.) இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும்—கொத்தான நாவுகளுள்ள பெருந்தீ வந்து சுட்டாற் போன்ற தீங்குகளை ஒருவன் தொடர்ந்து செய்தானாயினும்; வெகுளாமை புணரின் நன்று - அவனைச் சினவாமை கூடுமாயின் நன்றும்.

தீமையின் மிகுதிதோன்ற 'இணரெரி' என்றும், தீவிளைப்பன்மை தோன்ற 'இன்னா' என்றும், முற்றத்துறந்தவரும் பொறுத்தலருமை தோன்றப் 'புணரின்' என்றுங் கூறினர். சினத்தீ கனல் தீயினுங் கொடிது என்பது கருத்து.

நூ0ஈ. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(இ—ரை.) உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின்—தவஞ் செய்வான் தன் மனத்தாற் சினத்தை ஒருபோதுங் கருதானெனின்; உள்ளியது எல்லாம் உடன் எய்தும்—அவன் பெறக்கருதிய பேற்றை யெல்லாம் ஒருங்கே பெறுவான்.

'உள்ளத்தால்' என்னும் மிகைச்சொல் அருள்பயின்ற வுள்ளம் என்பதை யுணர்த்தும். இம்மை மறுமை வீடென்னும் மூன்றும் அடங்க 'உள்ளிய தெல்லாம்' என்றார். சினம் கருத்து வடிவில் இல்லையெனின் சொற்செயல்வடிவிலும் இராதென்பது கருத்து.

கூகo. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(இ—ரை.) இறந்தார் இறந்தார் அனையர்—சினத்தின் கண் அளவுகடந்தவர் உயிரோடிருப்பினும் செத்தவரை யொப்பர்; சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை—சினத்தை முற்றும் விட்டவர் இருவகைப் பற்றையும் முற்றத் துறந்தா ரளவினராவர்.

'சினத்தை .....துணை' என்பதற்கு, ''சினத்தைத் துறந்தார் சாதற்றன்மையராயினும் அதனை யொழிந்தாரளவினர்.....சினத்தை விட்டார்க்குச் சாக்கா டெய்து தற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலை யாகலின் அவரை வீடு பெற்றாரோடொப்ப ரெல்றுங் கூறினர்.'' 'என்று பரிமேலழகர் உரைத் திருப்பது உயர்வாய்த்தோன்றினும் சற்று வலிந்து பொருள் கொண்டதாகும். 'சினத்தை' என்பது முன்னும் பின்னும் இசையும் தாப்பிசைப் பொருள்கோளும் இடை நிலை விளக்கணியுமாகும்.

அதி. கூஉ — இன்னாசெய்யாமை

அஃதாவது, பகைபற்றியாவது ஒரு பயனைக்கியாவது விளையாட்டாகவாவது கவனமின்மைபாலாவது ஒருயிர்க்கும் ஒரு தீங்கும் செய்யாமை. சினமில்லாத போதும் இன்னாசெய்தல் நிகழுமாயினும், பகைபற்றி நிகழ்வதே பெரும்பான்மை யாதலாலும், பகை வெகுளியின் நீட்சியாதலாலும், அதை விலக்குதற்கு இது வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

இன்னுதல் இனித்தல் அல்லது இன்பமாதல். இன்—இன்பு—இன்பம். இன்—இனி. 'இன்னா' இனிய என்பதன் எதிர்மறையான பலவின்பால் வினையாலணையும் பெயர்.

கூகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(இ—ரை.) சிறப்பு ஈனும் செல்வம் பெறினும்—சிறப்பைத் தரும் பெருஞ்செல்வம் பிறரை வருத்திப் பெறக் கூடுமாயினும்; பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள்—அதைப் பெறுதற்குப் பிறர்க்குத் தீங்கு செய்யாமை குற்றமற்ற பெரியோர் கொள்கையாம்.

இதனுற் பெரும்பய னேக்கியும் இன்னு செய்தல் விலக்கப் பட்டது.

கூகஉ. கறுத்தின்னு செய்தவக் கண்ணு மறுத்தின்னு
செய்யாமை மாசற்றூர் கோள்.

(இ—ரை.) கறுத்து இன்னு செய்த அக்கண்ணும்—ஒருவன் தம்மேற் கறுவுகொண்டு தீயவற்றைச் செய்தவிடத்தும்; மறுத்து இன்னு செய்யாமை மாசு அற்றூர் கோள்—திருப்பித்தாம் அவனுக்குத் தீயவை செய்யாமையும் குற்ற மற்ற பெரியோர் கொள்கையாம்.

இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது. இதனுற் பழிக்குப் பழி செய்யும் பகைமை பற்றி இன்னு செய்தல் விலக்கப்பட்டது.

கூகஊ. செய்யாமற் செற்றூர்க்கு மின்னுத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

(இ—ரை.) செய்யாமல் செற்றூர்க்கும் இன்னுத செய்த பின்—தான் ஒரு தீங்கும் செய்யாதிருக்கவும் தன்மேற் பகைமை கொண்டு தீங்கு செய்தவர்க்கும் துறவுபூண்டவன் தீயவற்றைச் செய்வானுயின்; உய்யா விழுமம் தரும்—அச்செயல் அவனுக்குத் தப்ப முடியாத துன்பத்தைத் தரும்.

துன்பமாவது தவமிழத்தலும் கரிசு (பாவம்) அடைதலும். துறவறத்தில் தீமைக்குத் தீமை செய்தலும் தீவினையாம்.

கூகஎ. இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ—ரை.) இன்னு செய்தாரை ஒறுத்தல்—தமக்குத்தீ பவை செய்தாரைத் துறந்தார் தண்டிக்கும் முறையாவது; அவர் நாண நல் நயம் செய்து விடல்—அவர் வெட்கமாறு அவர்க்குப் பெரு நன்மைகளைச் செய்து அவ்விரண்டையும் மறந்து விடுதலாம்.

பிறர் செய்த தீமையையும் தாம் செய்த நன்மையையும் நினைப்பின் மீண்டுந் தமர்க்கு மாதலின் முற்றும் மறக்கற் பாலன வாயின.

கூகடு. அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றுக் கடை.

(இ—ரை.) பிறிதின் நோய் தம் நோய்போல் போற்றுக்கடை —பிறிதோ ருயிர்க்கு வந்த துன்பங்களைத் தமக்கு வந்தன போலக் கருதிக் காவா விடத்து; அறிவினுள் ஆகுவது உண்டோ — உயிர்களின் இயல்பைப் பற்றி அறிந்த அறிவினுள் ஏதேனும் ஒரு பயனுண்டோ? இல்லை யென்றவாறு.

உயிர்களைப் பற்றி அறிந்த அறிவாவது; உயிர்கள் எழுவகைப் பட்டன என்பதும், அவை தொடக்கமிலியாகத் தத்தம் நல்வினை தீவினைக்கேற்ப நால்வகுப்பிற் பிறந்திறந்து துன்புற்று வருகின்றன என்பதும், அப்பிறவித் துன்பத்திற்கு இயல்பாக எல்லையில்லை யென்பதும், அத்துன்பத்தினின்று விடுதலை பெறும் வழி இறைவன் திருவருளைத்துணைக்கொண்டு இருவகை யுறங்களுள் ஒன்றைத்தூய்மையாகக் கடைப் பிடித்தலே என்பதுமாம்.

இனி, பிறவுயிர்க்குத் துன்பம் வராமற் காத்தலாவது: அஃறிணையில் இயங்கு திணையைச் சேர்ந்த நீர்வாழி, ஊரி, பறவை என்னும் மூவகையுயிர்களுள், கூர்ந்து நோக்கினுலொழியக், கண்ணிற்குப் புலனாகாத நுண்ணுயிரிகளுமிருப்பதால், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல் முதலிய நிலைகளிலும், உண்டல் பருகல் முதலிய வினைகளிலும், கருவிகள் கொண்டு செய்யும் பல்வேறு தொழில்களிலும், அந்நுண்ணுயிரிகட்குச் சேதம் நேராவாறு கவனித்து ஒழுகுதலாம். இதனற் கவன மின்மையால் நேரும் இன்ன செயல் விலக்கப் பட்டது.

பருவுடம் புள்ள பிறவுயிரிகள் தம்மைத்தாமே காத்துக்கொள்ளு மென்பதும், நுண்ணுயிரிகள் போல் எளிதாய்ச் சேதத்திற் குள்ளாகா என்பதும், கருத்தாம்.

கூக்சு. இன்ன வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(இ—ரை.) இன்ன எனத்தா னுணர்ந்தவை - இவை மக்கட்குத் தீங்கு விளைப்பன என நால்வகை அளவைகளாலும் தான் அளந்து அறிந்தவற்றை; பிறன்கண் செயல் துன்னுமை வேண்டும் —பிறனிடத்துச் செய்தலைப் பொருந்தாமை துறந்தவனுக்கு வேண்டும்.

பட்டறிவாலும் உணர்ச்சியாலும் உண்மை யென்றறிந்தவற்றை 'உணர்ந்தவை' என்றார்.

கூகஎ. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணாசெய் யாமை தலை.

(இ—ரை.) மனத்தான் ஆம் மாணா—மனத்தோடு கூடிய தீய செயல்களை; எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை—எக்காலத்தும் எவர்க்கும் எத்துணைச் சிறிதும் செய்யாதிருத்தல் தலைமையான அறமாம்.

மனத்தோடு கூடிய செயலாவது அறிந்து செய்யுஞ் செயல். மாணுதல் நன்றுதல். 'மாணு' பலவின் பால் எதிர்மறை வினையாலணையும் பெயர். வலிமையுள்ள காலத்தையும் உட்படுத்த 'எஞ்ஞான்றும்' என்றும், எளியாரையும் விலக்க 'யார்க்கும்' என்றும், "சிறு பொறி பெருந்தீ" யாதலானும், சிறுநஞ்சும் பெருந்தீங்கு செய்தலானும், சிறு வினையும் தீயது தீவினையே என்று கருதி 'எனைத்தானும்' என்றும், கூறினர்.

கூகஅ. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(இ—ரை.) தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான்—பிறர் செய்யுந் தீயவை தனக்குத் தீயனவாயிருக்குந் தன்மையைப் பட்டறிகின்றவன்; மன் உயிர்க்கு இன்னா செயல் என்கொல்—தான் மட்டும் மற்றவர்கட்குத் தீயவை செய்தல் என்ன காரணீயம் (காரணம்) பற்றியோ!

இன்ப துன்ப நுகர்ச்சித்திறம் எல்லாவுயிர்க்கும் ஒன்றே யாகலால், தன்னுயிர்க்குத் தீங்கானது மற்றவுயிர்க்கும் தீங்காகுமென்று அறிந்து அதை விலக்க வேண்டியவன் என்னும் கருத்துத்தோன்றத் 'தானறிவான்' என்றும், பகுத்தறிவுள்ள உயர்திணையைச்சேர்ந்தவன் இங்ஙனஞ் செய்வது மயக்கத்திற்கிடமானது என்பது தோன்ற 'என்கொலோ' என்றும், கூறினர். 'கொல்' ஐயம், 'ஓ' அசை நிலை; மயக்கம் எனினுமாம், 'மன்' மற்று என்னும் இடைச் சொல்லின் மூலம்; மற்ற என்னும் பொருளது.

கூகக. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

(இ—ரை.) பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின்—ஒருவர் பிறருக்குத் தீயவற்றை ஒரு பகலின் முற்பகுதியிற் செய்வாராயின்;

தமக்கு இன்னு பிற்பகல் தாமே வரும்—அதன் விளைவாகத் தமக்குத் தீயவை அப்பகலின் பிற்பகுதியில் அவர் செய்யாமல் தாமே வரும்.

பகலின் முன்பின்னைக் குறிக்கும் 'முற்பகல்' 'பிற்பகல்' என்பன, பின்முன்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத் தொகை. இலக்கணப்போலி என்பதும் இதுவே. விரைந்து வருதலை யுணர்த்தப் 'பிற்பகல்' என்றும், தீமை செய்யப் பட்டவரல்லாத பிறரிடத்தினின்றும் வருமாதலால் 'தாமே வரும்' என்றும், கூறினர். அத்தகைய வினைகளைச் செய்யற்க என்பது கருத்து.

''முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்''

என்று (சிலப். உக: கூ—சை) கண்ணகி கூற்றுக, நெடுஞ்செழியன் முடிவை இக்குறட்கு இளங்கோவடிகள் எடுத்துக் காட்டியிருத்தல் காண்க.

இனி, "தான் வெட்டின குழியில் தானே விழுவான்." என்பதற்கேற்ப, ஒருவன் பிறருக்கு முற்பகல் செய்த தீமைகளே பிற்பகலில் தனக்குத் தீமையாகத் திரும்பி வரும் என்று பொருளுரைப்பினுமாம்.

கூஉ0. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

(இ—ரை.) நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்—துன்பங்களெல்லாம் முற்பிறப்பிலும் இப்பிறப்பினும் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்தாரையே சார்வனவாம்; நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார்—ஆதலால், தம்முயிர்க்குத் துன்பம் வேண்டாதவர் பிறிதோர் உயிர்க்குந் துன்பஞ் செய்யார்.

''தன்வினை தன்னைச் சுடும்.'' ''வினை விதைத்தவன் வினையறுப்பான்.'' ஆதலால் தன்னலம் பற்றியேனும் பிறருக்குத் தீமை செய்யாதிருக்க என்று படர்க்கையில் வைத்துக் கூறினர் இதில் அமைந்துள்ள அணி சொற்பொருட் பின்வருநிலை.

அதி. கூஉ —கொல்லாமை

அஃதாவது, இல்லறத்தில் அரசன் கொலைத் தண்டனையும் போர்த் தொழிலுந்தவிர மற்ற வகைகளில் ஈரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈறாக எவ்வுயிரையுங் கொல்லாமையும், துறவறத்தில், சிறப்பாக இறுதிநிலையில், ஓரறிவுயிரையுங் கொல்லாமையும், ஆம்.

இன்னுதவற்றுள் மிகக்கொடியது கொலையாதலாலும், ஓரறிவுயிர்க்கொலை துறவறத்தின் இறுதி நிலையிலேயே ஒழிக்கக் கூடியதாதலாலும், இது இன்னு செய்யாமையின் பின் வைக்கப் பட்டது.

மரக்கறியுணவும் ஓரறிவுயிர்க்கொலையால் வருவதாலும்; முளைக்கவுந் துளிர்க்கவும் கூடிய ஒவ்வொரு விதையும் நிகேத்திணையுறுப்பும் முட்டைபோன்றிருத்தலாலும், பிறர் சமைத்த மரக்கறியுணவுண்பதும், பிறர் கொன்ற வுயிரியின் ஊனைத்தின்பது போலா மாதலாலும், துறவியர் விரும்புவது வீட்டுலக வாழ்க்கையேயன்றி இவ்வுலக வாழ்க்கையன்றுதலாலும், முற்றத் துறந்த முழு முனிவர்.

"கனியேனும் வறிய செங் காயேனு முதிர்சருகு
கந்தமூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்து"ப்

பின்பு இலை சருகுகளையேயுண்டு, இறுதியில் அதுவு மின்றி ஓகத்திலமர்ந்து உடம்பு துறப்பர் என அறிக.

நஉசு. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாம் தரும்.

(இ—ரை.) அறவினை யாது எனின் கொல்லாமை—முழுநிறைவான அறச்செயல் எதுவென்று வினவின், அது ஓருயிரையுங் கொல்லாமையாம்; கோறல் பிறவினை எல்லாம் தரும்—கொலை வினை பிறதீவினைக ளெல்லாவற்றின் பயனையும் ஒருங்கே தரும்.

கொல்லாமை எதிர்மறை யறவினை கொல்லுதல் உடன்பாட்டுத்தீவினை. இரண்டும் தன் தன் தன்மையில் முழுநிறைவானவாம். கொல்லுதல் கொல்லாமையின் மறுதலையாதலால், பிறதீவினைப் பயனையெல்லாந் தருவதொடு நல்வினைப் பயனை யெல்லாம் அழிந்து விடு மென்பதும் பெறப்படும். அ கே வே, அதனையை மாபெருங் கொடுவினையைச் செய்யற்க என்பதாம்.

நஉஉ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புதலு லோ
தொகுத்தவற்று ளெல்லாந் தலை

(இ—ரை.) பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல்—கிடைத்தவுணவை இயன்றவரை பசித்தவுயிர்கட்குப் பகுத்துக் கொடுத்துண்டு பல்வகை யுயிர்களையும் பாதுகாத்தல்; நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை—அறநூலோர் இருவகை படைத்தார்க்குந் தொகுத்த அறங்களெல்லா வற்றுள்ளும் தலையாயதாம்.

கொல்லாவறத்தைக் கடைப்பிடித்தல் கொலையை நீக்குதல். கொலை உடல் சிதைத்துக் கொல்லுதலும் உணவளியாமற் கொல்லுதலும் என இருவகை. இரண்டும் விலோவளவில் ஒன்றே. உண்ணுத வுயிரி இறக்குமாதலால் வாழ்நாள் முழுதும் உணவளித்துக் காத்தல் வேண்டுமென்பது தோன்ற 'ஓம்புதல்' என்றார். நூலோர் என்று பொதுப்படக் கூறியது இயல் நோக்கி அறநூலோரைக் குறித்தது. உணவளித்துக் காத்தல்போற் சிறந்த நன்மை வேறின்மையின் 'தலை' என்றார்.

௩௨௯. ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(இ—ரை.) ஒன்றுக நல்லது கொல்லாமை — முதற்படியாக நல்லற மாவது கொல்லாமையே; அதன் பின்சார நன்று பொய்யாமை- அதற்கு அடுத்தபடியாக நல்லது வாய்மையாம்.

கொல்லாமையைப்பற்றிக் கூறவந்த விடத்துப் பொய்யாமையை ஏன் உடன் கூறினரெனின், முன்பு வாய்மையதிகாரத்தில் ''பொய்யாமை ....தரும்.'' ''பொய்யாமை..... நன்று'', ''யாமெய்யா ..... பிற.'' என்று வாய்மையைத் தலைமையாகக் கூறியது இங்குக் கொல்லாமையைத் தலைமையாகக் கூறியதொடு முரணு மாகலின், முற்கூறியதை மட்டுப் படுத்தி இரண்டாந்தலைமையாக வரையறுத்தற்கென்க. அங்ஙனமாயின் வாய்மை யதிகாரத்திற் கூறியது பொய்யாகாதோவெனின், ஆகாது; அங்குச் சொல்வடிவான அறங்களுள் வாய்மையையும் இங்குச் செயல்வடிவான அறங்களுள் கொல்லாமையையும் தலைமையாகக்கூறி, அவ்விரண்டையும் ஒப்பு நோக்கிய விடத்து மண்ணுலகில் மக்கட்கு மட்டு முரியவாய்மையினும் அறுவகையுயிர்கட்குமுரியதும் உயிரைக்காப்பதுமான கொல்லாமையைச் சிறந்ததாகக் கண்டமையின் என்க. இனி, கொலையும் செங்கோல் தண்டனையால் நன்மையாவதால், வாய்மை என்பது நன்மை செய்யும் பொய்யையுந் தழுவுவதாலும், தீமை செய்யின் பொய்யாக மாறுவதாலும், திரிபுள்ளதென்பது பொருந்தாது.

௩௩௦. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி

(இ—ரை.) நல் ஆறு எனப்படுவது யாது எனின்— பேரின்ப வீடுபேற்றிற்கு நல்ல வழியென்று சொல்லப்படுவது எது எனவினவின்: யாது ஒன்றும் கொல்லாமை சூழும் நெறி—அது எவ்வுயிரையும் கொல்லாமையைக் கருதும் நெறியாகும்.

"யாதொன்றும்' என்றது துறந்தாரை நோக்கி ஓரறிவுயிரையும் உட்படுத்தற்கு

நஉடு. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(இ—ரை.) நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் — பிறவி நிலை மைக்கு அஞ்சி அதனின்று விடுதலை பெறும் பொருட்டு உலகப்பற் றைத் துறந்தவருளெல்லாம்; கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை—கொலைவினைக் கஞ்சிக் கொல்லா வறத்தைக் கடைப்பிடிப்ப வன் தலையாவான்.

பிறவி நிலைமையாவது, எல்லாவுயிர்களும் இருதினைப் பிறப்பி லும் எல்லையில்லாது பிறந்திறந்து, பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட் டொடு வறுமையும் பசியும் பகையும் உடல் வருத்தமும் கொண்டு வருந்துதல்.

நஉஊ. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற் செல்லா துயிருண்ணுங் கூற்று.

(இ—ரை.) கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ் நாள்மேல்—கொல்லாமையைக் கடைப்பிடித்து ஒழுகுபவனின் வாழ் நாள்மேல்; உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது—உயிரைக் கவரும் கூற்றுவன் செல்லமாட்டான்.

"இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துப்நந்தா ரீங்கில்லை'

என்பதே (நாலடி. ச) உண்மையாதலால், உயிருண்ணுங் கூற்று வாழ்நாள்மேற் செல்லாதென்பது, வாழ்நாள் நீடிக்கும் என்பதைக் குறிக்குமேயன்றி வேறன்று. வாழ்நாள் நீடிப்பதற்குக் காரணி யம் (காரணம்) மரக்கறியுணவும் மனவமைதியும் மக்கள் நல் லெண்ணமும் இருக்கை வளிநிலைப் பயிற்சியும் அறவினைப்பயனும் இறைவன் திருவருளுமாம். வாழ்நாள் நீடிப்பதனால் துறவறத்திற் குரிய மெய்ப்பொருளாராய்ச்சியும் ஒகப்பயிற்சியும் முதிர்ச்சி பெறும்.

"உடம்பா ரழியில் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.'

என்று திருமூலர் (திருமந்திரம், எஉச) கூறியதுங் காண்க.

இனி, ''நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண்ணுவர்''
என்று தாயுமானவர் கூறுதலால், காயகற்பத்தினால் வாழ்நாள் நீடித்தலுமாம்

கூஉஏ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை

(இ—ரை.) தன் உயிர் நீப்பினும்—ஓர் உயிரியைக் கொல்லாத வழித் தன்னுயிர் தன்னுடம்பினின்று நீங்கிவிடு மாயினும்; தான் பிறிது இன்னுயிர் நீக்கும்வினை செய்யற்க-தான் பிறிதோர் உயிரியின் இனியவுயிரை அதன் உடம்பினின்று நீக்கும் செயலைச் செய்யற்க.

தன்னுயிரைக் காத்தற்குப் பிறிதோ ருயிரியைக் கொல்லும் நிலைமை மூன்றும். அவை, தன்னைக் கொல்ல வந்த வுயிரியைக் கொல்லுதல், தன் நோய்க்கு மருந்தாக ஓர் உயிரியைக் கொன்று தின்னுதல் தன்னைக் கொன்றுவிடுமென்று நம்பி அதைத் தடுத்தற் பொருட்டு ஒரு பேய்த் தெய்வத்திற்குக் காவு கொடுத்தல் என்பன. இம் மூன்று நிலைமையிலுங் கொல்லாதிருக்க என்றார் திருவள்ளுவர். கொலை செய்தவழியும் உயிர் உலகத்தில் நிலையாதாகலானும், கொலையாற் கரிசும் கொல்லாமையால் அறமும் வளர்தலானும், கொல்வதினுங் கொலையுண்ணுதலே சிறந்ததென்பது கருத்து, 'பிறிதின்னுயிர்' என்றது இருதலைக்கும் பொதுவாம்.

கூஉஅ. நன்றுகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றுகு மாக்கங் கடை.

(இ—ரை.) நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும்—தேவரை நோக்கிச் செய்யும் வேள்வியிற் கொன்றுழ் இன்ப மாகுஞ் செல்வம் பெரிதாமென்று ஆரியர் கூறினும்; சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை—தமிழச் சான்றோர்க்குக் கொல்வதினால் வரும் செல்வம் மிக இழிவானதாம்.

'எனினும்' என்னுஞ் சொல்லை ''நல்லாறெனினுங் கொளல்தீது'' (குறள். ஃஃஉ) என்பதிற்போற் கொள்க. நன்றாகும் ஆக்கமாவது விண்ணுலகத்தில் தேவராகத் தோன்றி நுகரும் இன்பம். வேள்வி வேட்டல் ஆரியர் வழக்கமேயாதலாலும், அதை எதிர்ப்பவர் தமி

முரேயாதலாலும், ஆரியர் தமிழர் என்னுஞ் சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.

கடைக்கழகக் காலத்திலும் பின்பும் தமிழ வேந்தரும் ஆரிய வேள்வி வேட்டனரேயெனின், அவர் ஆரியப் பார்ப்பனரை நிலத் தேவரென்று நம்பித்தம் அறியாமையாலும் ஏமாற்றப் பட்ட நிலையிலும் செய்தமையால், அது தமிழ அறிஞரால் ஒப்புக்கொள்ளப் பட்ட தன்றென்று கூறி விடுக்க.

க.உக० கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர் புன்மை தெரிவா ரகத்து.

(இ—ரை.) கொலை வினையர் ஆகிய மாக்கள்—வேள்வியிலும் பிறவிடத்தும் கொலைத் தொழிலைச்செய்யும் பகுத்தறிவில்லா மாந்தர்; புன்மை தெரிவார் அகத்துப் புலைவினையர்—தம்மை மக்களுள் உயர்ந்தோராகச் சொல்லிக் கொள்ளினும் அத்தொழிலின் கீழ்மையை அறியும் அறிவுடையோர் நெஞ்சத்துப் புலைத்தொழிலோராவர்.

திருவள்ளுவர் கொலைத்தொழிற்கு எவ்வகைத் தவிர்ப்பும் (Exemption) கொடாமையானும், "அவிசொரிந்தா ரிமை வேட்டலின்...—நன்று." (உ५க) என்று ஆரிய வேள்வியைக் கண்டித்திருத்தலானும், இங்குக் 'கொலைவினை' என்பது வேள்வியையும் உளப்படுத்தியதே யாகும். கொலைவினையர் மக்கட் பண்பில்லாதவ ரென்று கருதி அவரை 'மாக்கள்' என்றார். பிறவிடங்கள் காளிக்கோட்டம் போன்ற கோயில்களும் பேய்த்தெய்வங் கட்குக் காவுகொடுக்கும் இடங்களும் ஆம். கொலை வினையைத் தொழிலாகக் கொண்டிருக்கும் பூசாரியரைக் 'கொலைவினையர்' என்றார்.

"உப்பிலிப் புழுக்கல் காட்டுட் புலைமக னுகுப்ப வேகக்
கைப்பலி யுண்டி யானும் வெள்ளின்மேற் கவிழ நீரும்"

என்னும் சிவகசிந்தாமணிச் செய்யுட் பகுதியின் (உ५அச) உரையில்,

"புலைமகனென்றார், புரோகிதனை; அவன் தன் குலத்திற் குரியன செய்யாது அரசன் குலத்திற்குரிய தொழில்களை மேற்கொண்டு நிற்றலின்; "புலையனேவப் புன்மேலமர்ந்துண்டு" (புறநா. உ५७) என்றும், "இழிபிறப்பினே னியப்பெற்று" (திரு உ५க) என்றும், பிறருங் கூறினர்." என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பது ஆராயத் தக்கது.

ங்ஙo. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(இ—ரை.) செயிர் உடம்பின் செல்லாத் தீ வாழ்க்கையவர்— அருவருப்பான நோயுடம்புடன் வறுமை கூர்ந்து இழிதொழில் செய்து உயிர்வாழ்பவரை; உயிர் உடம்பின் நீக்கியார் என்ப—முற் பிறப்பில் உண்ணும் பொருட்டு உயிர்களை அவை நின்ற உடம்பி னின்று நீக்கியவர் என்று சொல்வர் வினைப்பயன் அறிந்தோர்.

செல்லாமை - வாழ்க்கை நடவா வறுமை. இழிதொழில் இரந்து பிழைத்தல்.

''அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.'' (நாலடி. ஈஉக).

என்பது செயிருடம்பிற்குக் கரணியம் (காரணம்) கூறிற்று.

அதி. ங்ச — நிலையாமை

அஃதாவது, நிலவுலகத்தில் தோன்றும் அறுவகை யுயிர்களும் பிறி தோருயிராற் கொல்லப்படா விடத்தும், எப்பருவத்தும் பிணியாலும், பிணியில்லாது வாழ்நாள் நீடினும் தத்தம் இனத்திற்குரிய கால வெல்லையில் மூப்பாலும், ஒருவகையானும் தடுக்கப்பெறாது தம் முடம்பி னின்று நீங்கி நிலையாமற் போதல்.

இந்நிலையாமை நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான மறவர் போர்க்களத்திற் கொலையுண்பதால் விளங்கித் தோன்றுவதாலும், கொல்லாமையில்லாவிடத்தும் தப்பாது நிகழும் என்பதை யுணர்த் தற்கும், கொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.

துன்பமிக்க உலக வாழ்வும் நிலையாது நீங்குவதாலும், அந்நீக்க மும் நிலையாது மீண்டு மீண்டும் எல்லையில்லாது பிறவி தோன்றும் என்னும் அறிவினாலும், அப்பிறவிகளுள் கீழ்ப்பிறவியொடு எரியுல கத்துன்பமும் இடையிடும் என்னும் அச்சத்தாலும், உலகவாழ்க்கை யில் வெறுப்புற்று இறைவன் திருவடியடைந்து துன்பமற்றதும் என்று முள்ளதுமான பேரின்பத்தைப்பெறும் முயற்சியை விரைந்து செய்யத் தூண்டுவது, நிலையாமையுணர்ச்சியே.

நூஙூ. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(இ—ரை.) நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறி வாண்மை—நிலையில்லாத பொருட்களையும் நிலைமைகளையும் நிலையானவை யென்று கருதும் பேதைமை; கடை—கடைப்பட்ட அறியாமையாம்.

நாள்தொறும் **மாற்**கர் எல்லாப் பருவத்திலும் இறக்கக்கண்டும், குறிப்பிட்ட அகவைக்கு மேற்பட்டவர் ஒருவரும் உலத்தில் இல்லாமையறிந்தும், இளைஞர் முதியராகவும் செல்வர் வறியராகவும் மாறுவதைப் பார்த்தும், யாக்கையும் இளமையும் செல்வமும் தமக்கு நிலைக்குமென்று கருதுவது பேதைமை யாதலால் 'புல்லறிவாண்மை' என்றும், இறுதிவரை ஒருபோதும் அறிவுபெறுமையாற் 'கடை' யென்றுங் கூறினர்.

நூஙூ. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(இ—ரை.) பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே—ஒருவனுக்குப் பெருஞ்செல்வஞ் சேர்வது ஆடலரங்கிற்குக் காண்போர் கூட்டம் வந்து கூடுவது போன்றதே; போக்கும் அது விளிந்த அற்று—அச்செல்வங் கெடுவதும் அவ்வாடல் முடிந்தபின் அக்கூட்டங் கலைவது போன்றதே.

எத்துணைச் செல்வமும் கெடுமென்றற்குப் 'பெருஞ்செல்வம்' என்றார். 'போக்கும்' என்னும் எச்சவும்மை வருகையைத் தழுவிற்று. பல்வேறிடங்களிலிருந்து பல்வகை மக்கள் வந்து ஆடல் முடிந்தபின் போய்விடுவது போல, பல்வேறுவழிகளில் திரண்ட பல்வகைச் செல்வமும் நல்வினைப்பயன் நீங்கினவுடன் போய்விடும் என்பது. உவமைப்பொருள் விரிவாம். ஏகாரம் தேற்றம்.

நூஙூ. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ரு
லற்குப வாங்கே செயல்.

(இ—ரை.) செல்வம் அற்கா இயல்பிற்று—செல்வம் யாரிடத்தும் நிலைக்காத தன்மையுடையது; அது பெற்ரூல் அற்குப ஆங்கே செயல்—ஆதலால், அத்தகைய செல்வத்தை ஒருவன் பெற்ரூல் நிலையான பயனுள்ள அறங்களை அப்பொழுதே செய்து கொள்க.

அல்குதல் தங்குதல்; அல்லது நிலைபெறுதல். அல்கா என்பது ஓசைநயம் பற்றி வலித்தது. இவ்வதிகாரமும் ஈறறத்திற்கும் பொதுவாதலால், இல்லறத்தான் செல்வம் பெறின் தனக்கு மிஞ்சியதை விருந்தோம்பல், ஒப்புரவொழுகல் முதலிய வழிகளிலும், துறவறத்தான் செல்வம் பெறின் முழுவதையும் கோயில் வழிபாடு, இலவசக்கல்வி முதலிய வழிகளிலும், செலவிட வேண்டுமென்பது கருத்து. செல்வம் பெறுவது அரிதாதலின் 'பெறின்' என்றும், யாக்கையும் செல்வமும் நிலையாதனவாதலின் செல்வத்தை உடனே பயன் படுத்த வேண்டுமென்பார் 'ஆங்கே' யென்றும் கூறினர்.

கூகூ. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(இ—ரை.) உயிர்—உயிரானது; நாள் என ஒன்று போல் காட்டி ஈரும் வாளது—நாள் என்று அளவிடுவதாகிய ஒரு கால அளவு போல் தன்னைக் காட்டி வாழ்நாளைச் சமவளவான சிறு சிறு பகுதியாக அறுத்துச் செல்லும் வாளின் வாய்ப்பட்டிருப்பதாகத் தெரியும்; உணர்வார்ப்பெறின்—அதைக் கூர்ந்தறியும் அறிஞரிருப் பாராயின் அவருக்கு.

ஒன்றுய் நித்தமாய் மாறுதலாயிருக்கும் காலம் என்னும் கருத் துப்பொருள், தானுகவன்றிக் கதிரவன் தோற்ற மறைவுகளாலேயே நாட்கூறுபடுவதால், 'நாளென வொன்று போல்' என்றும், அதுதம் வாழ்நாளை யறுக்கும் வாளென்று உணர மாட்டாதார் நமக்கு நாள் நன்றுப்க்கழிகின்றதென்று மகிழுமாறு மயக்கலின் 'காட்டி' யென் றும், இடைவிடாது அறுத்துச் செல்லுதலின் வாளின் வாயதென் றும், அதை உணர்வார் அரியராகலின் 'பெறின்' என்றும் கூறினர்.

''வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென்—றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.''

என்னும் நாலடி வெண்பாவையும் (சச) நோக்குக.

கூகூ. நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(இ—ரை.) நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் — பேசமுடியாவாறு நாவையடக்கி விக்கல் எழுவதற்கு முன்; நல்வினை மேற் சென்று செய்யப்படும்—இல்லறத்தாரால் விண்ணிற்கும் துறவறத்தாரால் வீட்டிற்கும் ஏற்ற அற வினைகள் விரைந்து செய்யப்படல் வேண்டும்.

நாச்செற்று விக்குள்மேல் வருதல் உயிர் போதற்கடையாளமாம். அன்று செய்தலேயன்றிச் சொல்லுதலும் கூடாமையின் 'வாராமுன்' என்றும், ''ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு.'' ஆதலால் 'மேற்சென்று' என்றுங் கூறினர். நிலையாமை நோக்கி நல் வினை விரைந்து செய்யத் தூண்டியவாறு.

௩௩௰. நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(இ—ரை.) ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை—ஒருவன் நேற்றிருந்தான், இன்றில்லை; என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு—என்று சொல்லும் பெருமையை உடையது இவ்வுலகம்!

உண்மை உடம்போடிருத்தலையும் இன்மை இறத்தலையுங் குறிக்கும். இரட்டுறலால் உண்மை பிறத்தலையுங் குறிக்குமேனும், குழவிப் பருவத்திறப்பு மிகச் சிறுபான்மையாதலானும், குழவியை அஃறிணைச் சொல்லாலன்றி 'ஒருவன்' என்று உயர்திணைச் சொல்லாற் குறிப்பது மரபன்மையாலும்,

''வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீருளாள்''

என்று பட்டினத்தடிகள் பாடியது போல், ''நேற்றிருந்தான், இன்றில்லை'' என்று இளைஞரையும் முதியோரையும் பற்றிக் கூறுவதே வழக்கமாதலாலும், அவ்வுரை சிறப்புள்ளதன்றும் 'ஒருவன்' என்னும் ஆண்பால் தலைமை பற்றிப் பெண்பாலையுந் தழுவும். 'பெருமை' என்பது எதிர்ப்பொருளணி (Irony) யாதலால், 'நிலையாமை மிகுதி'' என்று கொள்ளத் தேவையில்லை.

௩௩௧. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(இ—ரை.) ஒரு பொழுதும் வாழ்வது அறியார்—ஒரு நொடிப் பொழுதேனும் தம் உடம்போடு கூடியிருத்தலை உறுதியாக அறிய

வியலாத மாந்தர்; கோடியும் அல்ல பல கருதுப—கோடிமட்டுமன்று, அதற்கு மேலும் பல எண்ணங் கொள்வர்.

'பொழுதும்' இழிவு சிறப்பும்மை. இறைவனருள் பெற்ற ஒரோ வொருவரன்றி ஏனையோர் தம் வாழ்நாளெல்லையை அறிய மாட்டா மையின், 'ஒரு பொழுதும் வாழ்வ தறியார்' என்றார். கருதுங் கோடி யின் மிக்க பல எண்ணங்களாவன: தாம் பல்வேறு வகையிற் செல் வம் ஈட்டுவதும், அச்செல்வத்தைக் கொண்டு வளமனைகள் கட்டு வதும், அவற்றின் அமைப்புவடிவுகளை எண்ணி வகுப்பதும், நன் செய் புன்செய்கள் வாங்குவதும், அவை வாங்கவேண்டிய இடங்களை யும் அவற்றில் விளைவிக்கும் பயிர்களையும் அவற்றிற்கு அமர்த்த வேண்டிய வினையாட்களையும் பற்றித் தீர்மானிப்பதும், மேன்மேலும் தம் வருவாயைப் பெருக்கும் வழிகளை வகுப்பதும், ஐம்புல இன்பங் களையும் நுகர்வதும், அறத்திற்கும் புகழுக்கும் செய்ய வேண்டியவற் றைக் கருதுவதும், மெய்காவற்கும் குற்றேவற்கும் மல்லரையும் மழ வரையும் அமர்த்துவதும், விரையூர்திகளில் ஊர்வதும், பல்வேறு நாடுகளையும் நகரங்களையுஞ் சென்று காண்பதும், தம் மக்களை உயர்நிலைக் கல்வி கற்கவைப்பதும், அவரை உயர்ந்த பதவிகளில் அமர்த்துவதும், அவருக்குச் சிறந்த குடும்பத்துப் பெண்களை மணஞ் செய்துவைப்பதும், தம் பேரப்பிள்ளைகளைக் கண்டு களிப்பதும், அவருக்குச் செய்யவேண்டிய வற்றைச் செய்வதும், பிறவுமாம். இதனாலேயே.

"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன"

என்றார் ஔவையார்.

உஉஅ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.

(இ—ரை.) உடம்பொடு உயிரிடை நட்பு - உடம்போடு உயி ருக்குள்ள உறவு; குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்த அற்றே - முன் தனியாது உடனிருந்த முட்டைக்கூடு பின்பு பிரிந்து தனித்துக் கிடக்க, அதனுள்ளிருந்த பறவைக் குஞ்சு (வெளிவந்து இறக்கை முளைத்த பின்) பறந்துபோன தன்மைத்தே.

குடம்பை என்னும் சொற்குச் சேக்கை (பறவைக்கூடு), முட் டைக்கூடு, புழுக்கூடு என மும்பொருள்கள் உள.

"வரியுடல் சூழக்குடம்பைநூல் தொற்றி" எனக்கல்லாடம் (கண பதிதுதி, உக—ஆம்வரி) புழுக்கூட்டைக்குறித்தது. "குடம்பைமுட் டையும் கூடுமாகும்." என்பது பிங்கலம் (க0· கூகூ).

குறளிலுள்ள குடம்பையென்னும் சொற்குப்பறவைக் கூடு என்று மணக்குடவ பரிதிகாலிங்கரும், முட்டைக்கூடு என்று பரிமேலழக ரும், பொருள் கொண்டனர். இவர் இங்ஙனம் வேறுபடக்கரணியம் இரண்டிற்கும் குடம்பை, கூடு என்பன பொதுப்பெயரா யிருப்பதும், உயிர் உடம்பினின்று பிரிந்துபோவதற்குப் பறவை தன் கூட்டைவிட் டுப்பிரிந்து போய்விடுவதை நாலடியார்ச்செய்யுளொன்று உவமங் கூறியிருப்பது மாம். ஆயின், திருக்குறள்மாந்தனுயிரையே சிறப்பா கக்கருதினுலும், தாய்ப்பாலுண்ணிகட் கெல்லாம் (Mammalia) பொதுவான உயிரையும் அதன் உடம்பையுமேபற்றிக் கூறியிருக்க, நாலடியார்ச்செய்யுள் மாந்தனுயிரையும் அவனுடம் பையுமேபற்றிக் கூறியதுடன், அவன் பிறந்த குடும்பத்தையுஞ்சேர்த்துக் கூறியுள் ளது. இதுவே உவமவேறுபாட்டிற்குக்கரணியமாம்.

"கேளாதே வந்து கிளைஞரா யிற்றேன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனெழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து."

என்பது அந்நாலடியார்ச் செய்யுள் (கூ0).

இதன் பொருள்: மாந்தர் ஒரு குடும்பத்தில் ஒருவரை யொருவர் கேளாமலே உறவினராக வந்து பிறந்து, பின்புதாம் இறக்கும் போதும், பறவை மரத்தில் தான் கட்டிய கூட்டை விட்டுவிட்டு அம் மரத்திற்குச் சொல்லாமலே நெடுந்தொலைவு நீங்கிச்சென்று விடுவது போல, தம் உறவினருக்குச் சொல்லாமலே தம் உடலை அவரிடம் விட்டுவிட்டுச்சென்று விடுவர், என்பதாம்.

பறவை மரத்தைக் கேளாமலே வந்து அதில் தான் முட்டையிட் டுக் குஞ்சுபொரிததற்குக் கட்டிய கூட்டை; அவ்வினை முடித்தபின் விட்டுவிட்டு அம்மரத்திற்குச் சொல்லாமலே நீங்கிப்போய் விடுவது போல, மாந்தரும் தம்பழவினையின் ஒரு பகுதியான இருவினைப் பயனை நுகர்தற்குத்தாம் எடுத்தவுடம்பை, அந்நுகர்ச்சி முடிந்தவுடன் தம் உறவினரிடம் விட்டுவிட்டு அவருக்குச் சொல்லாமலே நீங்கிவிடு வர் என்பது, உவமை விளக்கமாம். இதில், குடும்பத்திற்குமரமும்,

மாந்தன் உயிர்க்குப் பறவையும், அவனுடம்பிற்குக் கூடும், உவமமாம்.

திருவள்ளுவர் பாலுண்ணிகளின் அல்லது மாந்தரின் உயிரும் அதன் உடம்பும் உடன்தோன்றிப் பின்பு உயிர் பிரிவதையே கூறுவதால், உடம்பிற்கு முட்டைக் கூட்டை உவமங்கொள்வதே பொருத்தமாம். ஆயினும், குஞ்சு முட்டைக் கூட்டினின்று வெளிவந்தவுடன் பறவாமையால், 'வெளிவந்து இறக்கை முளைத்தபின்' என்று ஒரு தொடரை இடைச்செருக வேண்டியதாயிற்று. எங்கேனும் பொரித்தவுடன் பறந்து போகும் பறவையின மிருப்பின், அது முழுநிறைவாகப் பொருந்தும் உவமமாம்.

'தனித்தொழிய' என்றதனால், முன்பு தனியாமை பெறப்பட்டது. அதாவது, முட்டைக்கூடு முதலில் நொய்யவுறையாகவும் பின்பு சவ்வாகவும் இறுதியில் தோடாகவும் கருவொடு கூடியிருந்து, குஞ்சுபொரிக்கும் வரை அதற்கு நிலைக்களமாய் நின்றமை. அதனால், அது மாந்தனுயிர் நீங்கும் வரை அதற்கு நிலைக்களமாக உடன்நிற்கும், உடம்பிற்கு உவமமாயிற்று. முட்டைத்தோட்டிற்கும் உடம்பிற்கும், கூடு என்பது பொதுப்பெயராயிருப்பதும், உவமைக்குத் துணையாயிற்று பறவைக்குஞ்சு முட்டையினின்று வெளிவந்தபின் அதற்குள் மீளப்புகாமையால், உடம்பினின்று நீங்கினபின் அதற்குள் மீளப்புகாத உயிருக்கு உவமமாயிற்று. முட்டைப்பிறவிகளுள் மீன், ஊரி (Reptile) முதலிய பிறவினங்களுமிருப்பினும், வான்வெளியிற் செல்லும் உயிருக்கு வான்வெளியிற் பறக்கும் பறவையே சிறந்தவுவமமாகக் கொள்ளப்பட்டது. அறிவதும் உருவில்லாததும் நித்தமானதுமான உயிரும், அறியாததும் உருவுள்ளதும் நித்தமல்லாததுமான உடம்பும், ஒன்றற்கொன்று நேர்மாறுக வேறுபட்டிருப்பதனாலும், வினைவயத்தால் ஒன்று கூடியதல்லது வேறுதொடர்பொன்று மில்லாதனவாதலாலும், உயிருக்கும் உடம்பிற்கும் இடைப்பட்டவுறவை நட்பென்றது எதிர்மறைக் குறிப்பாம் (Irony). ஒழிதல் வினை ஒரேயடியாய் நீங்குதலையும், பறத்தல் வினை விரைந்து செல்லுதலையும், குறித்தன. ஏகாரம் தேற்றம்.

ங்ஙஙூ. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

(இ—ரை.) சாக்காடு உறங்குவது போலும் — ஒருவனுக்குச் சாவு வருதல் உறக்கம் வருதலை யொக்கும்; பிறப்பு உறங்கி விழிப்

பது போலும்—அதன்பின் அவன் மீண்டும் பிறத்தல் உறங்கினவன் திரும்ப விழிப்பதை யொக்கும்.

உயிர்கட்கு ஒரு தனித்த பிறவியில் உறக்கமும் விழிப்பும் மாறி மாறி வருவது போன்றே, தொடக்கமிலியாகவரும் பொது நிலைமையில் இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருவதும் இயல்பாம் என்பது கருத்து. ஆகவே வீடுபெறுத நிலையில், ஒரு பிறவியால் மட்டுமன்றிப் பலபிறவியாலும் நிலையாமை தோன்றி நிலைப்பதாம்.

உசூ. புக்கி லமைந்தின் றுகொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

(இ—ரை.) உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு—பலவேறு நோய்கட்கும் பல்வகைப் புழுக்கட்கும் வாழிடமாகிய உடம்புகளுள் நெடுகலும் ஒண்டுக்குடியிருந்தே வந்த உயிருக்கு: புக்கில் அமைந்தின்று கொல்—நிலையாக வதியத்தக்க ஓர் உறையுள் இதுகாறும் அமையவில்லை போலும்!

துஞ்சு + இல் = துச்சில் = ஒதுக்கிடம். புகு + இல் = புக்கில் = புகுந்து பின் நீங்காத நிலையான இருப்பிடம். புக்கில் அமைந்ததாயின் வெளியேறியிரா தென்பதாம். ஆகவே, உயிர் நிற்கக் கூடிய உடம்பு ஒன்று மில்லை யென்பது பெறப்பட்டது. இங்ஙனம் இவ்வதிகாரத்தில், அரிதாய்க் கிடைத்தும் நிலையாத செல்வத்தின் நிலையாமையும் குழவிப்பருவம் முதல் கிழப்பருவம் வரை எந்நொடியிலும் திடுமென இறக்கும் யாக்கையின் நிலையாமையும், இறந்த பின்பும் எல்லையில்லாது துன்பமாலை தொடரும் பிறப்பிறப்பின் நிலையாமையும் கூறித் துறவதி காரத்திற்குத் தோற்றுவாய் செய்து வைத்தார், 'ஓ' அசை நிலை.

அதி. கூ—துறவு

அஃதாவது, இளமை, செல்வம், உடல் நலம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையும் எல்லையில்லாது தொடரும் பிறவித்துன்பமும் நோக்கி, துன்பமற்ற நிலையான வீடுபெறும் பொருட்டு, புறமாகிய செல்வம் என்னும் பிறிதின் கிழமைப் பொருளின் கண்ணும் அகமாகிய உடம்பு என்னும் தற்கிழமைப் பொருளின் கண்ணும் உள்ள பற்றை விடுதல். அதிகார முறையும் இதனால் விளங்கும்.

கூசக. யாதனின் யாதனி னீங்கியா னேதெ
லதனி னதனி னிலன்.

(இ—ரை.) யாதனின் யாதனின் நீங்கியான் — ஒருவன் எவ் வெப்பொருளினின்று நீங்கினானே; அதனின் அதனின் நோதல் இலன்—அவ்வப் பொருளால் துன்பமுறுத லில்லை.

அடுக்குத் தொடர்கள் பன்மை குறித்தன. நீங்குதல் மனத்தால் நீங்குதல், அதாவது பற்று விடுதல். பொருள்களால் வரும் இம்மைத் துன்பங்கள்,

"ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம்—காத்தல்
குறைபடின் துன்பங் கெடின்துன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்" (நாலடி. உஅ0)

என்பதனாலுணர்க. மறுமைத் துன்பங்கள் ஈயாமையாலும் செல்வச் செருக்காற் செய்யும் தீவினைகளாலும் வருவன. எல்லாப் பொருள் களையும் ஒருங்கே துறக்க இயலாதார் அவற்றை ஒவ்வொன்றாகத் துறக்கலாமென்றும், அவற்றைத் துறந்ததினால் இம்மையிலும் நன்மை யுண்டென்றும் கூறியவாறு.

கூசஉ. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

(இ—ரை.) துறந்தபின் ஈண்டு இயற்பால பல — எல்லாப் பொருள்களையுந் துறந்தபின் ஒருவர்க்கு இம்மையில் உண்டாகக் கூடிய நன்மைகளும் பலவாம்; வேண்டின் உண்டாகத் துறக்க—அவற்றை விரும்பின் காலம் இருக்கும்படி விரைவில் துறக்க.

நன்மைகள் மனவமைதியும் நன்னெறிச்செலவும் முதலியன. நீண்ட காலத்திற்கு முன் துறந்தவன் நீண்டகாலம் அந்நன்மை களைப் பெறுவானாதலின், 'உண்டாகத்துறக்க' என்றார். நன்மைகள் என்பதும் காலம் என்பதும் வருவிக்கப்பட்டன. துறவால் துன்ப மின்மை மட்டுமன்றி இன்ப முண்மையும் உண்டாம் என்ற வாறு.

கூசங. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(இ—ரை.) ஐந்தன் புலத்தை அடல் வேண்டும்—வீடு பெற விரும்புகின்றவன் ஐம்புல இன்ப நுகர்ச்சியையுங் கெடுத்தல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் — அதன்பின் அந்நுகர்ச்சியின் பொருட்டுத் தான் தேடிவைத்திருந்த பொருள்களையெல்லாம் ஒருங்கே விட்டு விடுதல் வேண்டும்.

புல இன்ப நுகர்ச்சி வீடுபேற்று முயற்சியில் மனத்தைச் செலுத்துதற்குத் தடையாதலின் அதனை 'அடல் வேண்டும்' என்றும், அந்நுகர்ச்சிக் குரிய பொருள்கள் தன்னிடமிருப்பின் அதை விட்ட மனம் மீண்டும் அவற்றின் மேற்செல்லுமாதலின் 'ஒருங்கே விடல் வேண்டும்' என்றுங் கூறினர். இதனைப் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

௳௰. இயல்பாகு நோன்றிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

(இ—ரை.) ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பு ஆகும்—பற்றுவைத்தற்குரிய ஒரு பொருளுமில்லாமை வீடு பேற்றுத் தவத்திற்கு உரிய இயல்பாம்; உடைமை பெயர்த்து மயல் ஆதும்—அஃதன்றி ஏதேனும் ஒரு பொருளுடைமையும் அத்தவத்தைப்போக்கி அதனால் மீண்டும் உலக ஆசையில் மயங்குதற்கிடனும்.

'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது. 'மயல்' ஆகு பொருளது. ஒரேயொரு பொருளை மட்டும் வைத்துக்கொண்டு மற்றெல்லாப் பொருள்களையும் விட்டுவிடினும், விடாத பொருளின் தொடர்பால் விட்டபொருள்கள் மேலும் ஆசை திரும்பவுண்டாகிச் செய்த தவத்தைக் கெடுத்து மனக்கலக்க முண்டாக்கும் என்பது கருத்து. முந்தின குறளில் ஒருங்கு விடல்வேண்டும் என்றதற்குக் காரணியம் (காரணம்) கூறியவாறு.

௴௧. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

(இ—ரை.) பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை—பிறப்பு நீக்கும் முயற்சியை மேற்கொண்டவர்க்கு அதை நீக்குவரை கருவியாக நின்று உதவும் உடம்பும் அதிகப்படியாம்; மற்றும் தொடர்ப்பாடு எவன்- அங்ஙனமிருக்கவும் அதற்கு மேலும் சில வேண்டாத பொருள்களின் தொடர்பு எதற்காம்?

பிறப்பு நீக்க முயற்சிக்கு உடம்பின் துணை இன்றியமையாததேனும், அதனால் இடையறாது பல வீழ்தழிகளும் அமைதலானும்,

அவற்றுற் ைகக்கெட்டியதும் வாய்க்கெட்டாது போய்விடுமோ வென்னும் அச்சம் பிறத்தலானும்; இறுதி நிலையில் உடம்பும் துறந்தார்க்கு வேண்டாததாகத் தோன்றுவதாம். அதனாலும், விரைந்து வீடுபெறல் வேண்டுமென்னும் பேராவலினாலும் உடம்பின் மேலுள்ள பற்று முற்றும் நீக்கப்படும். இது அகப்பற்றுவிடுதலாம். 'உடம்பும்' என்ற உம்மை உயர்வு சிறப்பு. 'கொல்' அசைநிலை.

உடம்பு பருவுடம்பும் நுண்ணுடம்பும் ஆக இரு வகைப்படும். இங்கு உடம்பென்றது பருவுடம்பை. நிலம் முதலிய பூதங்கள் ஐந்தும், செவி முதலிய அறிவுப் பொறிகள் ஐந்தும், வாய் முதலிய கருமப் பொறிகள் ஐந்தும், ஆகப் பதினைந்தும் சேர்ந்தது பருவுடம்பாம். நுண்ணுடம்பு ஐம்புலனும் பதின்காற்றும் விளைவிளைவுங் கூடிய மனம்.

குசஉ. யானெனது தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(இ—ரை.) யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்—தானல்லாத வுடம்பை நானென்றும் தனக்குப் புறம்பான பொருளை எனதென்றும் கருதி அவற்றின்மேற் பற்று வைத்தற்கு ஏதுவான மயக்கத்தைக் கெடுப்பவன்; வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்—விண்ணவர்க்குங் கிட்டாது மேற்பட்ட வீட்டுலகத்தை அடைவான்.

மேற்கூறிய இருவகைப் பற்றுந் துறப்பான் பெறும் பேறு இங்குக் கூறப்பட்டது. ஒருவன் இவ்வுலகில் இன்பம் நுகர்தற்கு நுகரும் உடம்பும் நுகரப்படும் பொருள்களும் வேண்டும். உடம்பு தன்னெடு சேர்ந்திருத்தலால் அகம் என்றும், அதற்குப் புறம்பான மற்றப் பொருள்களெல்லாம் புறம் என்றும் சொல்லப்படும். இன்ப துன்ப வுணர்ச்சி யொற்றுமையாலும் ஒன்றெனக் கலந்த தோற்றத்தாலும் முக்கரணத் தொழிற் கருவியாதலாலும், ஒருவன் தன்னுடம்பைத் தானக மயங்கி நானென்று சொல்வதால் அகப்பற்று நான் என்னும் சொல்லாலும், தனக்குச் சொந்தமான பிற பொருள்களையெல்லாம் தனித்தனி எனது என்று சொல்வதால், புறப்பற்று எனது என்னும் சொல்லாலும் குறிக்கப்படும். உடம்பு மேற்கூறிய மூவகையில் உயிரோடு ஒன்றியிருப்பதுடன், உடம்பின் நீடிப்பே உயிர் வாழ்க்கையும் உடம்பின் வலிமையே உயிர் வலிமையுமாதலால், ஒருவனுக்குப் புறப்பற்றினும் அகப்பற்றே விஞ்சியிருக்கும். நிலையாமையாற் சிறிது பொழுதே நுகரும் புறப் பொருளையும் நிலையானவுடமையாகக் கருதுவதால், அதுவும் மயக்கத்தின்பாற்பட்டதே. 'வானோர்க்கும்'

என்னும் சிறப்புடைமை தொக்கது. வீட்டுலகத்தின் உயர்ச்சி பற்றியே அதை 'வரன் என்னும் வைப்பு' என்றார் முன்னும் (உ சா

உ சா. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு .

(இ—ரை.) பற்றினைப் பற்றி விடாதவர்க்கு—இருவகைப் பற்றையும் இறுகப்பற்றி விடாதவரை; இடும்பைகள் பற்றி விடா—பிறவித் துன்பங்களும் இறுகப் பற்றி விடுவதில்லை.

'விடாஅ' ஈரிடத்தும் இசைநிறையளபெடை. 'விடாஅ தவர்க்கு' வேற்றுமை மயக்கம். பற்று விடாதார்க்கு வீடில்லை யென்பதாம்.

உ சா அ. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(இ—ரை.) தீரத் துறந்தார் தலைப்பட்டார்—முற்றத்துறந்தவர் வீட்டை யடைந்து உயர்ந்தார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார்—அங்ஙனந் துறவாதவர் மயங்கிப் பிறவி வலைக்குள் அகப்பட்டார்.

மயங்குதல் நிலையாதவற்றை நிலைத்தனவாகக் கருதுதலும் ஏதேனுமொரு பொருளின்கண் சிறிதேனும் பற்றுவைத்தலும். 'மற்றையவர்' முற்றத் துறவாதாரும் சற்றுந் துறவாதாரும். தலைப்படுதல் அடைதல் அல்லது உயர்தல்.

உ சா கூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

(இ—ரை.) பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்—ஒருவனுக்கு இருவகைப் பற்றும் நீங்கியபொழுதே அப்பற்று நீக்கம் அவன் பிறப்பை ஒழிக்கும்; மற்று நிலையாமை காணப்படும்—அவை நீங்காத பொழுது அவற்றுள் மாறிமாறிப் பிறந்திறந்து வருகின்ற நிலையாமையே காணப்படும்.

காணகம் (காரணம்) நீங்கின் கருமகமும் (காரியமும்) நீங்குமாதலால் 'பற்றற்ற கண்ணே' என்றார். மற்று - மற்றப்படி.

கூ. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ—ரை.) பற்று அற்றான் பற்றினைப் பற்றுக—எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே இயல்பாகப் பற்றில்லாதவனுகிய இறைவனிடத்துப் பத்தி செய்வதை மனத்திற் கொள்க; பற்று விடற்கு—விடாது தொடர்ந்து வரும் ஆசைப் பிணிப்பு முற்றும் நீங்குதற்கு; அப்பற்றைப் பற்றுக—அவ்விறைவன் பத்தியையே ஊழ்க ஒன்றுகைகளால் (தியான சமாதிகளால்) இறுகக் கடைப் பிடிக்க.

சார்ந்ததன் வண்ணமாதல் ஆதன் (ஆன்மா) இயல்பாதலால், பற்றற்றானைப் பற்றினவன் தானும் பற்றற்றானுவன் என்பது கருத்து. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

அதி. கூசு—மெய்யுணர்தல்

அஃதாவது, கடவுள், உயிர், தளை ஆகிய மூன்றன் இயல்புகளையும், உயிருக்குக் கடவுளொடும் உலகத்தொடுமுள்ள தொடர்பு வகைகளையும், ஐம்பூதக் கூறுபாடுகளையும், உடலின் அமைப்பையும், பிறப்பும் வீடும் ஆகிய நிலைமைகளையும், இறைவன் திருவருளாலும் ஒகத்தாலும் உண்மையாக உள்ளபடி யுணர்தல். இது, சமயக் கொண்முடிபு (சித்தாந்தம்) கண்டவர் தாமாக வுணர்தலும், பிறர் அவர் உணர்ந்ததை யுணர்தலும், என இரு திறப்படும்.

ஆராய்ந்து கண்ட ஒவ்வோர் உண்மைப் பொருளும் மெய்ப் பொருள் (தத்துவம்) எனப்படும். இறைவனுண்மையை நம்பாத சாங்கியமதம், ஆத மெய்ப்பொருள் (ஆன்ம தத்துவம்) இருபத்து நாலொடு ஆதனை (புருடனை)ச் சேர்த்து, மெய்ப்பொருள் மொத்தம் இருபத்தைந்தெனக் கூறும். திருமாலியம் (வைணவம்) அவற்றொடு பரவாசுதேவன் என்னும் இறைவனைச் சேர்த்து, மெய்ப்பொருள் மொத்தம் இருபத்தாறெனக் கூறும். ஆரியச் சார்பான இற்றைச் சிவனியம், ஆதமெய்ப் பொருளொடு சிவமெய்ப் பொருளென்று ஐந்தும், அறிவுமெய்ப்பொருள் (வித்தியா தத்துவம்) என்று ஏழும் சேர்த்து, மெய்ப்பொருள் மொத்தம் முப்பத்தாறெனக் கொள்ளும். உலகிலுள்ள நம்பு (ஆத்திக) மதங்களெல்லாவற்றிற்கும் பொதுவான மெய்ப்பொருள்கள், பூத மெய்ப்பொருள்கள் இருபதுடன் உயிர் மனம் மதி இறைவன் என்னும் நான்குஞ் சேர்ந்த இருபத்து நான்

காகவே முடியும். சமணம், பவுத்தம் முதலிய நம்பா (நாத்திக) மதங்களைப் பற்றி இங்கு ஆராய்ச்சியில்லை.

திருவள்ளுவர் ஆரியர் வகுத்த முத்திருமேனி (திரிமூர்த்தி)க் கொள்கையைக் கொண்டவரல்லர். அவர் காலத்தில் அது தோன்றியிருக்கலாம். பிற்காலத்திலேயே அது வேரூன்றியதாக,

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக" (கலி. உ)

"உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்" (மணி க)

முதலிய கடைக்கழக இலக்கியச் சான்றுகளால் தெரியவருகின்றது. இறைவன் முத்தொழிலையும் முறையே பிரமன் விட்டுணு உருத்திரன் என்னும் மூவரைக் கொண்டு செய்விக்காமல், தானே செய்கின்றான் என்பதே திருவள்ளுவர் கொள்கை. இனி, இறைவனை அவர் ஐங்கூறுகப் பகுத்திருக்கவும் முடியாது. இதன் விரிவையும் விளக்கத்தையும் என் 'தமிழர் மதம்' என்னும் நூலுட் கண்டு கொள்க. சிவன் என்பதும் திருமால் (மாயோன்) என்பதும் இருசார்த் தமிழர் இறைவனுக்கு இட்ட பெயர்களே.

ஓகத்தின் (யோகத்தின்) எண்ணுறுப்புக்களாவன :—

(அ) தன்னடக்கம் (இயமம்)—பொய், கொலை, களவு, காமம், பொருளாசை ஆகிய ஐந்தையும் விடுதல்.

(ஆ) தவம் (நியமம்)—உடலை வருத்துதல், உள்ளத் தூய்மை, மெய்ப் பொருளாராய்ச்சி, பொந்திகை (திருப்தி), கடவுள் வழிபாடு ஆகியவற்றை மேற்கொள்ளல்.

(இ) இருக்கை (ஆசனம்)—மங்கலம் (சுவஸ்திக), கோமுகம் (கோமுக), தாமரை (பத்ம), மறம், (வீர), மடங்கல் (கேசரி), வீறு (பத்திர), முத்தம் (முக்த), மயில் (மயூர), ஏமம் (சுக) முதலிய கஅ இருக்கை வகைகள்.

(ஈ) வளிநிலை (பிராணயாமம்)—இழுக்கை (பூரகம்), விடுகை (இரேசகம்), நிறுத்தம் (கும்பகம்) என்னும் மூவகையால் மூச்சை யடக்கியாள்கை.

(உ) ஒருக்கம் (பிரத்தியாகாரம்)—மனத்தைப் புலன்கள் மேற் செல்லாவாறு மடக்குதல்.

(ஊ) நிறை (தாரணை)—மனத்தை ஒருவழி நிறுத்துகை.

(எ) ஊழ்கம் (தியானம்)—மனத்தை இறைவன் மேற் செலுத்துகை.

(அ) ஒன்றுகை (சமாதி)—மனம் இறைவனெடு ஒன்றுகப் பொருந்துகை.

ஒருக்கம், நிறை, ஊழ்கம் என்னும் மூன்றும் முறையே தொகை நிலை, பொறைநிலை, நிலைவு என்னும் சொல்லாலும் குறிக்கப்பெறும்.

இருவகைப் பற்றையுந் துறந்தபின் இறைவன் பற்றையே இறுகப்பற்றல் வேண்டுமாதலின், இம்மெய்யுணர்தல் துறவின் பின் வைக்கப்பட்டது. இது பற்றியே, துறவதிகாரத்தின் இறுதியிலும்'பற்றற்றான் பற்றினைப் பற்றுக' என்று இதற்குத் தோற்றுவாய் செய்யப் பட்டது.

கூடுக. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளாஞ மாணாப் பிறப்பு.

(இ—ரை.) பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான்—மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொருளென்றுணரும் மயக்கவுணர்வினால்; மாணாப் பிறப்பு ஆம்—சிறந்த வீடு பேறின்றி இழிந்த பிறவியே உண்டாம்.

மயக்கவுணர்வாவது, இறைவனில்லை யென்றும், உலகம் தானாக இயங்குகின்றதென்றும், நற்காட்சி, நல்லோகி (நன்ஞானம்) நல்லொழுக்கம் என்னும் மூன்றும் வீடுபேற்றிற்குக் காரணகம (காரணம்) என்றும், உருவம், நுகர்ச்சி, குறிப்பு, எண்ணம், அறிவு என்னும் ஐக்கந்தமும் கெடுவதே வீடுபேறென்றும், தம் மனம்போன வாறு பிறழவுணரும் திரிபுணர்ச்சியாம். வீட்டையளிப்பவன் இறைவனே யாதலின், அவனருளின்றி எவனும் வீடுபெற வியலாதென்பதாம். விடுபெருவிடத்து நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப் பிறவிவகுப்பில் முன்போலுழலுவதே திண்ணம். அப் பிறப்புத் துன்பமேயாதலின் 'மாணாப்பிறப்பு' என்றார். இதனால் திரிபுணர்ச்சி பிறப்பிற்குக் காரணகமாதல் கூறப்பட்டது.

கூடுஉ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ—ரை.) மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு—மயக்கம் நீங்கித் தூய அறிவையடைந்தோர்க்கு; இருள் நீங்கி இன்பம் பயக்கும்—அத்தூய அறிவு நரகத்துன்பத்திற் கேதுவான பிறப்பை நீக்கி வீட்டின்பத்தை நல்கும்.

மாசறுகாட்சி, தூய அறிவு, வாலறிவு, மெய்யறிவு என்பன ஒரு பொருட் சொற்கள். ஐயந்திரிபற்றது தூய அறிவு. கீழே நீண்டு கிடப்பதொன்றைச கயிறே பாம்போ என்று ஐயுறுவது ஐயம். கயிற் றைப்பாம் பென்றும் பாம்பைக் கயிறென்றும் பிறழவுணர்வது திரிபு. கயிற்றைக் கயிறென்றும் பாம்பைப் பாம்பென்றும் உள்ளவாறுணர் வது தூய அறிவு. மருள், மயக்கம், திரிபு, பொய்யறிவு என்பன ஒரு பொருட் சொற்கள். நரகத்தைக் குறிக்கும் இருள் என்னுஞ் சொல் இங்கு அதற்கேதுவான பிறட்பைக் குறித்தது. 'நீங்கி' என்பது நீங் கியபின் என்னும் பொருளது.

நடுநடு. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(இ—ரை.) ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு — பல கவர் பட்ட ஐயம் நீங்கி மெய்யறிவு பெற்றார்க்கு; வானம் நணியது உடைத்து—தாம் இருக்கும் நிலவுலகத்தினும் விட்டுலகம் நெருங்கிய தாம்.

ஐயமாவது, கடவுளும் இருவினைப்பயனும் மறுபிறப்பும் விண்ணு லக வீடுகளும் உண்டோ இல்லையோ என ஒரு வழியுந் துணிபின்றி நிற்றல். எல்லாமதங்களும் தனித்தனி பிறவற்றொடு மாறுபட்டுத்தன் தன் கொள்கையே மெய்யெனக் கூறுதலால், அவற்றுள் எதுமெய் எது பொய் யென்று ஒகப்பயிற்சியில் முதிர்ச்சி பெற்றுத் தம் பட்டறி வால் உணர்வராகலின், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தார்' என் றும், அம்மெய்யறிவு வளரவளர வீடு பேற்றுறுதி மிகுமாதலின் 'வையத்தின் வான நணிய துடைத்து' என்றுங் கூறினார். இதனால், ஐயவுணர்வு பிறப்பிற்குக் காரணமாதலுங் கூறப்பட்டது.

நடுந. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

(இ—ரை.) மெய் உணர்வு இல்லாதவர்க்கு — மெய்யறிவைப் பெறுதவர்க்கு; ஐ உணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே—புலன்களால் ஐந்தாகிய உணர்வு அவற்றை விட்டுத் திரும்பித் தமக்கு வயப்பட்ட விடத்தும், அதனால் பயனில்லையாம்.

ஐந்தாகிய வுணர்வு ஐம்புலன்மேற் செல்லும் மனம். அதை யெய்துதலாவது புலன்மேற் செல்லாதவாறு மடக்கி ஒருவழி நிறுத்தும் நிறை. சிறப்பும்மை எய்துதற் கருமையை யுணர்த்திற்று. இக் குறளாலும் மெய்யறி வுடையார்க்கே வீடு பேறென்று மெய்யறிவின் இன்றியமையாமை கூறப்பட்டது.

உடுடு. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ—ரை.) எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்—காட்சியுங் கருத்து மாகிய எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத்தோன்றினு லும்; அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு—அந்தப் பொரு ளின் உண்மையான இயல்பை அல்லது கருத்தை அறிந்து கொள் வதே மெய்யறிவாகும்.

பொருள் என்பது பொருளும் பொருளைப் பற்றிய செய்தியும் என இருவகைப்படும். அவ்விருவகைப் பொருளின் மெய்த்தன்மையும் அறியும் முறை, முறையே, மெய்ப்பொருள் முறையும் உண்மைப் பொருட்பாட்டு முறையும் என இருதிறப்படும்.

மெய்ப்பொருள் முறையாவது, ''சேலங் கல்லூரி முதல்வர் அ. இராமசாமிக் கவுண்டர்'' என்றவழி, சேலம் என்னும் ஓர் ஊர்த் தொடர்பும், கல்லூரி என்னும் ஒரு தொழில் நிலையத் தொடர்பும், முதல்வர்என்னும் ஒரு பதவித்தொடர்பும் அனுமந்தராயர்என்பவரின் மகன் என்னும் ஓர் உறவு முறைத் தொடர்பும், இராமசாமி என்னும் ஓர் இயற்பெயரும் கவுண்டர் என்னுங் ஒரு குலப்பெயரும், ஓர் உயிர் மெய்ப் பொருட்கு ஒரு பிறப்பில் ஏற்பட்ட நிலையில்லாத நிலைமை களும் சொற்களுமாதலின், அவற்றைக் கொள்ளாது, அவ்வுயிர் மெய்ப்பொருளை உயிரும் மெய்யுமாக இரண்டாகப்பகுத்து, அவ் விரண்டையும் வெவ்வேறு மெய்ப் பொருட்டொகுதி யெனவுணர்ந்து அவற்றின் மூலப்பொருள்வரை ஒன்றனுள் ஒன்றுக ஒடுக்கிக் கொண்டு சென்றால், இறுதியில் மூலமின்றிநிற்கும் பொருள்களை உணர்தலாம். 'எப்பொருள்' என்று பொதுப்படக் கூறியதால் அஃறிணைப் பொருள்களும் இவ்வாறே உணரப்படும் என அறிக.

இனி, உண்மைப்பொருட்பாட்டு முறையாவது,
''இம்மென்னு முன்னே எழுநூறு மெண்ணூறும்
அம்மென்ற லாயிரம்பாட் டாகாதா'' என்றால், மிக விரைந்து பாடமுடியு மென்றும்;

சிவன் கொக்கிறகை அணிந்தான் என்றுல், சிவ வழிபாடு செய்வானொருவன் கொக்கிறகுபோற் பூக்கும் பூவைச் சிவவுருவின் தலையிற் செருகினன் என்றும்;

ஒருவன் மாறிப் பிறந்தாலொழிய வீடுபெற முடியாதெனின், மாறிப் பிறத்தலென்பது மனமாற்றத்தையே குறிக்குமென்றும்;

தேங்காயுடைத்துத் தெய்வ வழிபாடு செய்ய வேண்டுமெனின், தேங்காய் உடைந்து நீர் சிந்தி வெண்மையாய்த் தோன்றுவது போல், வழிபடுபவன் தான் செய்த தீவினை பற்றி உள்ளமுடைந்து கண்ணீர் சிந்தித் தூய்மையாக வேண்டுமென்றும்:

"இருட்டறை மூலையி லிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே." (திருமந்திரம், ௨௭௭௮)

என்றுல், தொடக்கமிலியாக அறிவுக் கண்ணின்றி யிருந்த ஆதன் (ஆன்மா), இறைவன் திருவருளால் கண் திறக்கப்பெற்றுப் பேரின்ப வீட்டின் மாண்பையும் பிறவித் துன்பத்தின் கொடுமையையும் உணர்ந்து, இருவகைப் பற்றுந் துறந்து பிறப்பு நீங்கி இறைவன் திரு வடியை யடையும் என்றும்; உணர்தல்.

ரு0ரு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ—ரை.) ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார்—இம்மை மக்கட் பிறப்பில் மெய்ப்பொருள் நூல்களைக் கற்றும் பட்டறிவுள்ள மெய்யோதியரால் செவியறிவுறுத்தப் பெற்றும் மெய்ப்பொருளுணர்ந்தவர்; மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர்—மீண்டு இப்பிறப்பின்கண் வராத வழியைப் பெறுவர்.

உலகநூற் கல்வி போன்றே மெய்ப்பொருட் கல்வியும் பல்வேறு நிலையிற் பல்வேறு ஆசிரியர்பாற் கற்றுங் கேட்டுமறிய வேண்டியிருப்பதால் 'கற்று' என்றும், நிலவுலகிலன்றித் தேவருலகில் வீடுபேற்று முயற்சிக்கிடமின்மையால் 'ஈண்டு' என்றுங் கூறினர். 'ஈண்டு வாரா நெறி' வீட்டு நெறி. வீட்டையளிப்பது இறைவனேயாதலால் அவனை யறிவதற்கு ஆம்புடைகள் (உபாயங்கள்) கல்வி, கேள்வி, தெளிவு, உன்னம் (பாவனை) என நான்காம். கேள்வியும் கல்வியுளடங்குமாதலின் அவையிரண்டும் இங்கே ஒருங்கே கூறப்பட்டன.

உடுஎ. ஓர்த்துள்ள முள்ள துணரி னெருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ—ரை.) உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின்—மெய்யோதியர்பாற் கேட்ட செவியறிவுறுத்தப் பொருளே ஓர் ஓகியின் உள்ளம் உத்தியானும் அளவைகளானும் தெளியவாராய்ந்து உண்மைப் பொருளே யுணருமாயின்; பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா—அவனுக்கு மீண்டுப் பிறப்புள்ளதாக நினைக்க வேண்டியதில்லை. ஓதியர் = ஞானியர் (வ.) ஓகி=யோகி (வ.)

அவைகள் முன்னரே உசஉ-ஆம் குறளுரையிற் கூறப்பட்டன. இங்குத் தெளிவு கூறப்பட்டது.

உடுஅ. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(இ—ரை.) பிறப்பு என்னும் பேதைமை நீங்க—பிறப்பிற்கு முதற்காரணகமாகிய அறியாமை கெட; சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு—வீட்டிற்கு வினைமுதற் காரணகம் (நிமித்த காரணம்) ஆகிய செவ்விய பொருளே அறிவதே ஓகியர்க்கு அறிவாவது.

'பிறப்பென்னும் பேதைமை' என்றும், ''சிறப்பென்னுஞ் செம்பொருள்' என்றும் கருமகத்தைக் காரணகமாகச் சார்த்திக் கூறினர். எல்லா இன்பங்களுள்ளுஞ் சிறந்ததாகையால் வீடு 'சிறப்பு' எனப்பட்டது. எத்துணைப் பாகுபாடுமின்றி ஒன்றாய், முதலும் முடிவுமின்றி நித்தமாய், பிறிதொன்றேடும் உண்மையிற் கலவாது தூய்மையாய், ஒரு வகையிலும் ஒப்பற்ற தனிநிலையாய், எல்லாப் பொருளேயும் பற்றி நின்றும் அவற்றுள் தாக்குண்ணுததாய், எத்துணைக் காலமாகியுந் திரியாததாய், என்றும் ஒரு தன்மையதாக நிற்றல் பற்றிப் பரம்பொருளைச் 'செம்பொருள்' என்றார். எகூ-ஆம் குறளில்' மெய்ப்பொருள்' என்றும், அடுத்த குறளில் 'உள்ளது' என்றும் கூறியதும் இது பற்றியே. அப்பொருளைக் காண்கையாவது, ஆதன் தன் அறியாமை நீங்கி அதை இடைவிடாது எண்ணித் தன் உள்ளத்தால் அதனெடு இரண்டறக் கலத்தல். காண்கை யென்றது அகக்கண்ணுற் காண்டல். உயிர் உடம்பினின்று நீங்கும்போது அதன் எண்ணம் எதைப் பற்றியதோ அதுவாய் அது தோன்றுமென்பது சமய நூற்றுணிபாகலின், விடு பெறுவார்க்கு அக்காலத்துப் பிறவிக் கேதுவான எண்ணம் இல்லாமைப் பொருட்டு இறைவனையே

உன்னுதல் இன்றியமையாததாதலால், இதனை இடைவிடாது பயில வேண்டுமென்பது கருத்து. இதனால் உன்னுகை கூறப்பட்டது

ந.நி௯. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின்—வீடுபெற முயல்பவன் எல்லாப் பொருட்குஞ் சார்பான செம்பொருளை யுணர்ந்து இரு வகைப்பற்றும் நீங்க ஒழுக வல்லனாயின்; சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்தரா—அவனை முன்பு சாரக்கடவனவாய் நின்ற துன்பங் கள் அவ்வுணர்வொழுக்கங்களைக் கெடுத்துப் பின்பு சாரமாட்டா.

'சார்பு' தொழிலாகு பெயர். சாரப்படும் பொருளைச் சார்பு என்றார். சார்பு இரண்டனுள், முன்னது வீட்டிற்கேதுவாகிய நற் சார்பும், பின்னது பிறப்பிற்கேதுவாகிய தீச்சார்புமாம். ஒழுக்கம் என்றது, ஓக நெறியொழுக்கத்தின் எண்ணுறுப்புக்களுட் சிறப்பாக ஒருக்கம், நிறை, ஊக்கம், ஒன்றுகை என்னும் இறுதி நான்கையும் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள், பிறப்பு தொடக்கமிலியாய் வருதலின் உயிரால் ஈட்டப்பட்ட அளவில்லா வினைகளுள் இறந்த வுடம்புகளாலும் பிறந்தவுடம்பாலும் நுகர்ந்தன போக இனிமேல் நுகருமாறு எஞ்சிநின்றனவாம். அவை ஒளியின்முன் இருள்போல ஓக வொழுக்கத்தினாலும் இறைவன் திருவருளாலும் கெடுதலால், 'மற்றழித்துச்சார்தரா'என்றார். தீவினையொடு கலந்ததினால் நல்வினைப் பயனும் நோயெனப்பட்டது. பிறப்பு அறும்போதே அதனைடு சேர்ந்த பழந்துன்பங்களுங் கெடுதல் இதனாற் கூறப்பட்டது.

ந.நி௦. காமம் வெகுளி மயக்க மிவை மூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(இ—ரை.) காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட—ஓக வொழுக்கத்தில் முதிர்ந்தவர்க்கு விருப்பு, வெறுப்பு, அறியாமை என்னும் இக்குற்றங்கள் மூன்றும் தம் பெயருங் கூடத் தோன்றுவாறு முற்றக் கெடுதலால்: நோய்கெடும் — அவற்றின் வினைவாகிய வினைப்பயன்களும் அறவே கெடும்.

தொடக்கமிலியாகிய அறியாமையும், அது பற்றியான் எனமதிக் கும் அகப்பற்றும், அது பற்றி எனக்கிதுவேண்டு மென்னும் அவா வும், அது பற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அது பெரு வழியெழுஞ் சினமும் என வடநூலார் கூறும் குற்றம் ஐந்தனுள்,

அகப்பற்றை அறியாமைக் கண்ணும் அவாவை ஆசைக் கண்ணும் திருவள்ளுவர் அடக்கிக் காமவெகுளி மயக்கமென மூன்றாகக் கூறியதாகப் பரிமேலழகர் உரைப்பர். இது பாட்டிக்கு நூல் நூற்கப் பேர்த்தி கற்றுக் கொடுத்தாள் என்பது போன்றதே. வேள்வியொன்றே யியற்றும் ஆரியர் ஒகமுறை கற்றது தமிழரிடத்திலேயே யாதலின், தமிழ் நூலார் கூறும் முக்குற்றங்களையே வடநூலார் ஐந்தாக விரித்தார் என அறிக. வீடுபெறுவானின் முழுத்தூய்மையைக் குறிக்க 'மூன்றன் நாமங்கெட' என்றார். நாமமும் என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது. 'நோய்' என்பது வகுப்பொருமை.

'நாமம்' என்பது அச்சம் என்று பொருள்படின் தென்சொல்லும், பெயர் என்று பொருள்படின் வடசொல்லும் ஆகும். பெயர்ப் பொருள் குறிக்கவும் இங்கு வடசொல்லை யாளத்தேவையில்லை. அக்காலத்தில் மொழியாராய்ச்சியும் தென்மொழி - வடமொழிப் போராட்டமும் இன்மையால், திருவள்ளுவர் தம் கருத்தைத் தமிழ்மொழுக்கத்தின் சிறப்பை நிலைநாட்டுவதிற் செலுத்தினாரேயன்றி மொழித்தூய்மை போற்றுவதிற் செலுத்தவில்லை. மேலும், அக்காலத்தில் தமிழர் அயிர்க்குமளவு வடசொற்கள் தமிழிற் பெருவாரியாகக் கலக்கவில்லை. ஒருசில சொற்களே கலந்திருந்ததால் அவை தமிழறிஞர் கண்ணைக் கவர்ந்தில. அல்லாக்கால்,

காமம் வெகுளி மயக்க மிவற்றின்பேர்

தாமுங் கெடக்கெடு நோய்.

என்றே திருவள்ளுவர் யாத்திருப்பார்.

அதி. கூ — அவாவறுத்தல்

அஃதாவது, ''மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை.''

என்றதற்கேற்ப, காமவெகுளி மயக்கங்களைக் கெடுத்தார்க்கும் பூதவுடம்புநிற்கும் வரை முன் துறக்கப்பட்ட புலன்கள்மேற் பயிற்சிவயத்தால் ஒரோவழி நினைவு செல்லுதற்கு இடமிருத்தலால், அங்ஙனம் நேராவாறு பூதவுடம்பு நீங்கும் வரை என்றும் விழிப்பாயிருத்தற் பொருட்டு, எல்லா ஆசைகட்கும் பொது அடிப்படையாகிய அவாவை இடைவிடாது செம்பொருளுணர்வால் விலக்குதல். இது காமவெகுளி மயக்கக்கேட்டின் தொடர்ச்சியாம்.

௩௬௮. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(இ—ரை.) எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவா அப்பிறப்பு ஈனும் வித்து—எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பை விளைவிக்கும் வித்து; அவா என்ப— அவா என்று சொல்வர் மெய்ப்பொருள் நூலார்.

உடம்பு நீங்குங் காலத்து, அடுத்து நுகரவேண்டிய வினையும் அது காட்டும் பிறவி வகுப்புக் குறியும் அவ்வகுப்பின்கண் அவாவும் உயிரின் கண் முறையேதோன்றி, அவ்வுயிரை அவ்வவா, அவ்வகுப் பின்கண் கொண்டு செல்லுமாகலின், அதனைப் 'பிறப்பினும்வித்து' என்றார். எல்லாவுயிரும் என்றது விலங்கு, நரகர், மக்கள், தேவர் என்னும் நால் வகுப்புயிர்களையும்.

௩௬௯. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(இ—ரை.) வேண்டுங்கால் பிறவாமை வேண்டும்—பிறப்பெல் லாந்துன்பமாதலை யறிந்தவன் ஒன்றை விரும்பின் பிறவாமையைத் தான் விரும்புவான்; அது வேண்டாமை வேண்ட வரும்—அப்பிற வாமை ஒரு பொருளின் மேலும் ஆசைகொள்ளாமையை விரும்பி மேற்கொள்ளின் அவனுக்குத்தானே வந்து சேரும்.

தொடக்கமிலியாகப் பிறப்புப் பிணிமூப்புச் சாக்காட்டால் தொடர்ந்து துன்பமுற்று வருகின்றவனுக்கு இயல்பாகவே பிறவி நீக்கத்தின்மேல் ஆசையுண்டாகு மாதலால், பிறவாமை வேண்டும் என்றார். 'வேண்டும்' செய்யும் என்னும் வினைமுற்று. 'வேண்ட' என்றது வேண்டி மேற்கொள்ளுதலை. 'மற்று' வினைமாற்றிடைச் சொல். இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

௩௭௦. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(இ—ரை.) வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இவ்வுலகில்-ஒரு பொருளின்மேலும் ஆசை கொள்ளாமை யொத்த சிறந்த செல்வம் இம் மண்ணுலகத்தில் இல்லை: ஆண்டும் அஃது ஒப்பது இல்—இனி இதனினுஞ் சிறந்ததாகச் சொல்லப்பெறும் விண்ணுல கத்திலும் அதையொப்பது ஒன்றுமில்லை.

வேண்டாமை விட்டுலகத்தைத் தருதலின் அதனை விழுச்செல்வ மென்றார். மண்டறிந்த வுலக வுண்மை கேட்டறிந்த வுலகவுண்மை யினுந் தெளிவுதலின் முற்கூறப் பட்டது.

நகூசு. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(இ—ரை.) தூய்மை என்பது அவா இன்மை—ஒருவர்க்குத் தூயநிலைமையாகிய வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமையாம்; அது வாய்மை வேண்ட வரும்—அவ்வவா வில்லாமை மெய்யான பரம்பொருளை வேண்டத்தானே வரும்.

அறியாமையும் அவாவும் முதலிய மாசுமறுவற்றதினால் வீட்டைத்தூய்மையென்றும், கருமகத்தைக் கரணகமாக்கித் 'தூய்மை யென்பது அவாவின்மை' யென்றும், என்று முள்ள ஒரே மெய்ப் பொருள் பரம்பொருளாதலின் அதை வாய்மையென்றும், பரம்பொருளாற்பெறப்படும் சிறந்த பேரின்பத்தை நோக்கின் இழிந்த பிறவித் துன்பத்திற்கேதுவாகிய ஆசை நீங்குமாதலின் 'வாய்மைவேண்ட வரும்' என்றுங் கூறினர். 'வாய்மை' ஆகுபெயர். 'மற்று' விகாரமாற்றிடைச்சொல். 'தூஉய்மை,' 'வாஅய்மை' இரண்டும் இசைநிறையளபெடை.

நகூஙி. அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர்.

(இ—ரை.) அற்றவர் என்பார் அவா அற்றூர்—பிறவி யற்றவரென்று சொல்லப்படுவார் அதற்கேதுவாகிய அவாவற்றவரேயாவர்; மற்றையார் அற்றுக அற்றது இலர்—அவா முற்றும் அருது சில பொருள்களின் மேல் மட்டும் ஆசையற்றவர் அவற்றல்வருந் துன்பங்களற்றதல்லது பிறவியற்றவ ராகார்.

இதனுல் அவாவறுத்தலின் சிறப்பு உடன்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலுங் கூறப்பட்டது.

நகூசு. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(இ—ரை.) ஒருவனை வஞ்சிப்பது அவா—அருளுடைமை முதல் மெய்யுணர்தல் ஈறுகச் சொல்லப்பட்ட எல்லாத்துறவறங்களையுங் கடைப்பிடித்து வீடுபெறும் நிலையிலுள்ள ஒருவனையும், சோர்வு கண்டு புகுந்து மீண்டும் பிறப்பின்கண்வீழ்த்திக் கெடுக்கவல்லது அவாவாம்; அஞ்சுவதே அறன்—ஆதலால் அவ்வவாவிற்கு அஞ்சி அது நேராவாறு காத்துக்கொள்வதே இறுதியில் மேற்கொள்ள வேண்டிய அறமாம்.

தொடக்க மிலியாக வந்த அவா, முற்றத் துறந்தவன் ஒரோவழிச் செம்பொருள் காண்டலி யொழிந்து கவனக் குறைவால் தன்னைக் காவானுயின், அது வழியாக அவனறியாமற் புகுந்து மீண்டும் பிறப் பினையுண்டாக்கு மாதலான், அதனை 'வஞ்சிப்பது' என்றார். அது வராமற் காத்தலாவது இடைவிடாது உன்னத்தில் ஊன்றுதல். 'ஒரும்' ஈரிடத்தும் அசை நிலை. பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலை.

௩.கூ௭. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றுன் வரும்.

(இ—ரை.) அவாவினை ஆற்ற அறுப்பின் — ஒருவன் அவா விற்கு அஞ்சி அதை முற்றுங் கெடுக்க வல்லனுயின்; தவா வினைதான் வேண்டும் ஆற்றுன் வரும்—அவன் கெடாமைக் கேதுவாகிய வினை அவன் விரும்பியவாறே உண்டாகும்.

கெடாமை பிறவித்துன்பங்களால் அழியாமை. அதற்கேது வாகிய வினை மேற்கூறிய துறவறங்கள். 'வினை' வகுப்பொருமை. விரும்பியவாருவது துன்பமில்லாதவகை.

௩.கூ௮. அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

(இ—ரை.) அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் — அவா இல்லாதார்க்கு அதனுல் வருந்துன்பமுமில்லை; அஃது உண்டேல் தவாஅது மேல்மேல் வரும்—அது இருப்பின் (அது உள்ளவர்க்கு) அதனுல் எல்லாத்துன்பங்களும் விடாது வந்துகொண்டேயிருக்கும்.

அவாவுள்ளவர்க்கு வருவன தன்னுலும் பிறவுயிர்களாலும் தெய் வத்தாலும் வரும் மூவகைத்துன்பங்களுமாம். 'தவாஅது' இசை நிறையளபெடை.

௩.கூ௯. இன்ப மிடையரு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ—ரை.) அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் — அவா என்று சொல்லப்படும் கடுந்துன்பம் ஒருவர்க்குக் கெடுமா யின்; ஈண்டும் இன்பம் இடையரு து—அவர் வீடு பெற்றபின்பு மட்டு மன்றி அதற்கு முன்பு இங்கு உடம்போடு நின்ற விடத்தும் இன்பம் இடைவிடாது தொடரும்.

துன்பத்துள் துன்பமாவது, பிறதுன்பங்களெல்லாந் துன்பமாகத் தோன்றுவாறு பொறுக்குந்தன்மை யற்ற துன்பம். அவாவிஞலுண்டாகுந் துன்பத்தை அவாவென்னுந் துன்பமென்று காரணகாரியத்தைக் கருமகாரணமாகச்சார்த்திக் கூறினர். பரம்பொருளொடு உள்ளத்தாற் கூடுதலே பேரின்பமாகலின், அவாவறுத்து அங்ஙனஞ் செய்தார் உடம்போடு கூடிநின்றவிடத்தும் அவ்வின்பந்துய்ப்பர் என்பது இங்குக் கூறப்பட்டது.

உ.ஐ. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(இ—ரை.) ஆரா இயற்கை அவா நீப்பின்—ஒருபோதும் நிரம்பாத இயல்பையுடைய அவாவை ஒருவன் விடுவானுயின்; அந்நிலையே பேரா இயற்கை தரும்—அவ்விடுகை அப்பொழுதே அவனுக்கு ஒருகாலும் மாறுத இயல்பையுடைய பேரின்பத்தைத்தரும்.

நிரம்பாமையாவது எத்துணைப் பொருள் பெறினும், அவற்றைக்கொண்டு எத்துணைக்காலம் இன்பம் நுகரினும், மனம் பொந்திகை (திருப்தி) யடையாமை.

"ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
ஆணைசெல வேநினவ ரளகேச ரிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித் திரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவரெல்லாம்"

என்ருர் தாயுமானவர். இங்ஙனம் இயல்பாகவுள்ள நிரம்பாத்தன்மை இளமை, யாக்கை, உடல்நலம், செல்வம், உறவு முதலியவற்றின் நிலையாமையாலும் மேன்மேலும் அதிகரிப்பதாம். இனி, எண்வகையெச்சப்பிறவிகட்கும் நோயொடும் வறுமையொடும் பிறந்தார்க்கும், இன்பநிலையாமை மட்டுமன்றி வாழ்நாள் முழுதும் இன்பமின்மையும் உண்டாம். அதனுல், கடுமையாக வுழைத்தும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதும் வாய்க்கெட்டியது வயிற்றிற் கெட்டாதும், வயிற்றிற்கெட்டியது சிறிதும் பசிதணிக்காதும் போவது போன்ற உலகவின்பம் பற்றிய அவாவை, அறவே நீக்கவேண்டுமென்பது கருத்து. எள்ளளவுந் துன்பங் கலவாததாய், எல்லையில்லா இன்பந்தருவதாய்,

என்றும் ஒரே தன்மையதாயுள்ளமையால், வீட்டினைப் 'போரா வியற்கை' யென்றும், அது அவா நீத்தவுடன் பெறப்படுதல் உறுதி யாகலின் 'அந்நிலையே' தரும் என்றுங் கூறினர்.

''வாசியு மூசியும் பேசி வகையினுற்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
யாசையு மன்பு மறுமி னறுத்தபி
னீச னிருந்த விடமெளி தாமே. (திருமந். ௨௬௬௬)

''மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சின்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே.'' (திருமந். ௨௬௬௭)

என்று திருமூலர் கூறுதலுங் காண்க. இங்ஙனம் உடலோடிருந்தே வீடுபெறுவது உடலிருந்த வீடு (சீவன் முத்தி) என்றும், இறந்தபின் பெறுவது உடலிறந்த வீடு (விதேக முத்தி) என்றும் சொல்லப் பெறும்.

துறவறவியல் முற்றிற்று.

அதி. கஅ—ஊழ்

அஃதாவது, பழம்பிறப்புக்களிற் செய்யப்பட்ட இருவினைப்பயன் செய்தவனையே செய்த முறைப்படி சென்றடையும் இயற்கையொழுங்கு. இது முறைப்படி வருவதால் முறையென்றும் ஊழ் என்றும், அவரவர்க்குரிய இன்ப துன்பப்பகுதிகளை வகுப்பதால் பால் என்றும் வகுத்தான் என்றும், தெய்வ ஏற்பாடு போலிருப்பதால் தெய்வம் என்றும் பால்வரை தெய்வம் என்றும், பெயர் பெறும். இனி மாறுவியல்பாயிருப்பதால் இயற்கையென்றும் பெயர் பெறுவதாம்.

இதுஅறம் பொருளின்பம் மூன்றற்கும் பொதுவேனும், இருவினைப் பயனுயிருப்பதாலும், இனிமேலேனும் நல்லூழைத் தோற்றுவித்தற்கு இன்று முதல் நல்வினையே செய்க என்று ஏவும் வகையிலும், அறத்துப்பாலொடு சேர்க்கப்பட்டு, அதே சமையத்தில் பொருளோடிதற்குள்ள நெருங்கிய தொடர்பை யுணர்த்தற்குப் பொருட்பாலின் முன்பும் துறவற வியலின் இறுதியிலும் வைக்கப் பெற்றதென அறிக.

குறள். ஆகூழாற் ரேன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் ரேன்று மடி.

(இ—ரை.) கைப்பொருள் ஆகுஊழால் அசைவின்மை தோன்றும்—ஒருவன் கையிற் பொருள் சேர்தற்குக் கரணகமான நல்லூழால் முயற்சியுண்டாகும்; போகு ஊழால் மடி தோன்றும்—அவன் கையிலுள்ள பொருள் தீர்தற்குக்கரணகமான தீயூழாற் சோம்பலுண்டாகும்.

'ஆகூழ்,' 'போகூழ்' என்னும் வினைத்தொகைகள் கரணகப் பொருளன. அசைவு சோம்பல். ஒருவனுக்குச் செல்வம் தன்முயற்சியாலும் வரும்; முன்னோர் தேட்டாகப் பிறர் முயற்சியாலும் வரும். அங்ஙனமே ஒருவன்செல்வத்திற்கு அழிவு அவன் செயலாலும்வரும்; கள்வர் பகைவர் முதலிய பிறர் செயலாலும் வரும். ஒருவனுக்குச் செல்வத்தின் ஆக்கம் போன்றே அழிவும் பிறரால்மட்டுமன்றித் தன்னாலும் நேருமாறு, ஊழே முயற்சியையும் சோம்பலையும் தோற்று

விக்கு மென்பது இங்குக் கூறப்பட்டது. 'கைப்பொருள்' என்பது முன்னும் பின்னுஞ் சென்றியைதலால் தாப்பிசைப்பொருள்கோளும் இடை நிலை விளக்கணியுமாகும்.

கூஎஉ. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகவூ ழுற்றக் கடை.

(இ—ரை.) இழவு ஊழ் (உற்றக்கடை) பேதைப்படுக்கும்—ஒருவன் தன்செல்வத்தை இழத்தற்குக்காரணகமான தீவூழ் வந்துற்ற விடத்து, அது அவன் எத்துணைப்பேரறிஞனாயிருந்தாலும் அவனைப் பேதையாக்கும்; ஆகல்ஊழ் உற்றக்கடை அறிவு அகற்றும்—இதற்கு மாருக, அவனுக்குச் செல்வஞ் சேர்வதற்கேற்ற நல்லூழ் வந்துற்ற விடத்து, அது அவன் எத்துணைப் பேதையாயிருந்தாலும் அவனைப் பேரறிஞனாக்கும்.

செல்வம் என்பது அதிகாரத்தால் வந்தது. 'இழவூழ்', 'ஆக வூழ்' என்பன ஈ—ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. உற்றக்கடை என்பது இறுதிநிலை விளக்கணி. மேற்கூறிய முயற்சிக்கும் சோம்பற்கும் ஏதுவான நிலைமைகள் இங்குக் கூறப் பட்டன.

கூஎக. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

(இ—ரை.) நுண்ணிய பலநூல் கற்பினும்—பேதைப்படுத்தும் தீவூழுள்ள ஒருவன் நுண்ணிய பொருள்களையுணர்த்தும் பல நூல் களைக் கற்றாலும்; மற்றும் தன் உண்மை அறிவே மிகும்—அவனுக் குப் பின்னும் அவ்வூழாலாகிய பேதைமையுணர்வே மேற்படும்

பொருளின் நுண்மை நூல்மேலேற்றப்பட்டது மேற்படுதல் நுண்ணூலறிவை முற்றும் மறைத்தல் அதனால் தீவூழினர்க்கு இழப் பைத்தடுக்க நூலறிவு பயன்படா தென்பதாம்.

கூஎச. இருவேறுலகத் தியற்கை திருவே
தெள்ளிய ராதலும் வேறு.

(இ—ரை.) உலகத்து இயற்கை இருவேறு—உலகத்தில் உடைமைபற்றி ஊழினாலுண்டாகிய இயற்கை இருவேறு நிலைமைய தாம்; திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு—செல்வராதலும் வேறு; தெள்ளிய அறிஞராதலும் வேறு.

அறிவுடையோர் நல்லவராயும் உலக இன்பம் பொருளாற்பெறக் கூடியதாயு மிருத்தலால், அறிவுடையோரன்றே செல்வராயிருத்தல் வேண்டும்! அங்ஙனமன்றி அறிவுடையோர் வறியராயிருந்து துன் புறவும் அல்லாதார் செல்வராயிருந்து இன்புறவுமன்றே காண்கின் றோம்! இதற்குக் காரணகம் ஊழ்வேறுபாடே யென்பது கருத்தாம்.

அறிவுடையோர் பொதுநலங்கருதிப் பல ஒழுக்க வரம்புகளையும் நெறிமுறைகளையுங் கைக்கொண்டு நேர்மையாக வாழ்க்கை நடத்துவது பொருளீட்டு நெறிக்கு மாறுயிருப்பதால், அவர்களிடத் திற்செல்வஞ் சேர்வதில்லை. என்றுந் தன்னலமாக விருந்து எல்லார்க்கும் நல்லவராக நடித்துப் பொருளீட்டுவதையே குறிக் கோளாக் கொண்டு, நெறிமுறையொன்றுங் கடைப்பிடியாதவரி டமே செல்வஞ் சேர்வதாம். இம் மாறுபட்ட நிலைமையையே,

''பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து''

என்று நகைச் சுவைக் கரணகங் காட்டிப் பாடினர் பண்டைப் புலவ ரொருவர்.

உஎடு. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(இ—ரை.) செல்வம் செயற்கு—செல்வத்தைத்தேடுதற்கு; நல் லவை எல்லாம் தீய ஆம்—தீயூழற்ற விடத்து நல்ல நிலைமைகளெல் லாம் தீயனவாகிப் பயன்படாது போம்; தீயவும் நல்ல ஆம்—நல்லூ ழற்ற விடத்துத் தீயநிலைமைகளும் நல்லன வாகிப் பயன்படும்.

நல்லவும் தீயவுமான நிலைமைகள் காலமும் இடமும் கருவியும் முயற்சியும் துணையாட்களும் பற்றியனவாம். நல்லூழ் தீயூழ் என்பன அதிகாரத்தால் வந்தன. பொருளீட்டும் முயற்சிகுரிய துணைக்கரு ணங்களும் ஊழால் வேறுபடு மென்பது இங்குக் கூறப்பட்டது.

உஎசு. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

(இரை.) பால் அல்ல பரியினும் ஆகாவாம்—ஊழால் தமக்கு உரிய வல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும் தம்மிடத்து நில்லா

வாம்: தம உய்த்துச் சொரியினும் போகா — ஊழால் தமக்குரிய பொருள்கள் வெளியே கொண்டுபோய்க் கொட்டினும் தம்மைவிட்டு நீங்கா.

பொருள்களின் இருப்பும் போக்கும் ஊழாலன்றிக் காப்பாலும் காவாமையாலும் நிகழா என்பதாம்.

உஎஎ. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

(இ—ரை.) வகுத்தான் வகுத்த வகை அல்லால்—ஊழ்த் தெய்வம் அவரவர்க்கு இன்பதுன்பம் வகுத்த வகைப்படியல்லாமல்; கோடி தொகுத்தார்க்கும்—கோடிக்கணக்கிற் பொருளை வருந்தி யீட்டியவர்க்கும்; துய்த்தல் அரிது—அப்பொருளால் இன்பம் நுகர்தல் உண்டாகாது.

தீயூழுடையான் செல்வந்தேடுவதற்கு நல்ல நிலைமைகளும் தீயனவாக முடியுமென்று மேற்கூறினர். இனி, நல்லநிலைமைகள் நல்லனவாகவே முடிந்து செல்வஞ்சேரினும், அச்செல்வத்தை அவன் நுகரக் கொடுத்து வைக்கப்பெறான் என்று இங்குக் கூறினர். ஒருவன் தான் தேடினதைத் தான் நுகராமை நோய், மூப்பு, சாக்காடு, கருமித்தனம், களவு, கவர்வு, இயற்கைச்சேதம் முதலிய பல காரணங்களால் நேர்வதாம்.

"பால்வரை தெய்வம் விதியே பூதம்
.....
பாலிரிந் திசையா வுயர்திணை மேன." (தொல். சூஅ)
"நின்றுங் கிசைத்தல் இவணியல் பின்றே" (ஷை சூக)
"இசைத்தலு முரிய வேறிடத் தான." (ஷை சூ0)

என்னும் தொல்காப்பிய நெறிப்படி, 'வகுத்தது' என்று சொல்லால் அஃறிணையாயிருப்பது 'வகுத்தான்' என்று உயர்திணையாயிற்று. 'கோடி' என்பது பால்பகா வஃறிணைப்பெயராகக் கொள்ளப்படும். அவ்வெண் இங்குப் பொருள்களை மட்டுமன்றி உயர்ந்த காசையுங் குறிக்கும். ஒருவன் செல்வத்தைக் காசு வகையில் மதிப்பதே வழக்கமாதலாலும், காசைக் கொண்டு எல்லா நுகர் பொருள்களையும் என்றும் பெறலாமாதலாலும், பொருள்களை விலைப்போரும் தொகுப்போரும் பெறுவோரும் தம் நுகர்ச்சிக்கு மிஞ்சியவற்றைக் காசாக மாற்றிவிடுவராதலாலும், இட்டுவைக்க இடமில்லா வாறும் நாட்பட்டுக்கெடுமாறும் முன்பின் வேண்டியபொருள்களையெல்லாம் ஒருங்கே

வாங்குவாரின்மையாலும், கோடியென்பது பொருட்டொகை யென்பதினும் காசுத்தொகை யென்பதே பொருத்தமாம். கோடியென்னும் பெருந்தொகை தொகுத்தார்க்கும் என்னும் சிறப்பும்மை தொக்கது.

உஎஅ. துறப்பார்மற் றுப்புர விவ்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

(இ—ரை.) உறல் பால வூட்டா கழியும் எனின் — அடைய வேண்டிய துன்பங்களை அடைவிக்காது தீயூழ்கள் நீங்குமாயின்; துப்புரவு இல்லார் மன் துறப்பர்—நுகர்ச்சி யில்லாத வறியர் பெரும் பாலும் துறவியராவர்.

பரிமேலழகர் ஒழியிசைப் பொருளாகக் கூறுவது பாவிலேயே அடங்கியிருத்தலால், மன்னிடைச் சொற்கு மிகுதிப் பொருள் கொள்ளப்பெற்றது. துன்பங்களின் பன்மைபற்றி அவற்றை யூட்டும் வூழையும் பன்மையாகக் கொண்டார். வலிமிகாமையால் 'வூட்டா' எதிர்மறைமுற்றெச்சம். துறவுநிலை இயற்கையாக அமைந்திருந்தும் அதை வீடுபேற்றிற்குப் பயன் படுத்தாவாறு வூழ்கெடுக்குமென்பது இங்குக் கூறப்பட்டது.

உஎக. நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன்.

(இ—ரை.) நன்று ஆம்கால் நல்லவாக் காண்பவர் — நல்வினைப் பயன்களாகிய இன்பங்கள் நேருங்கால் அவற்றை நல்லவை யென்று முழுமனத்துடன்ஏற்று நுகர்பவர்; அன்று ஆம் கால் அல்லல் படுவது எவன் — மற்றத் தீவினைப் பயன்களாகிய துன்பங்கள் நேருங்கால் அவற்றையும் அவ்வாறே ஏற்று நுகராது துன்புறுவது ஏனோ?

இருவினையுந்தாமே செய்தவையாதலாலும், வினைப்பயன் எவரையும் விடாமையாலும், அவற்றுள் ஒன்றன் பயனை மட்டும் ஏற்று நுகர்ந்து விட்டு இன்னொன்றன் பயனை ஏற்காது வருந்துவது அறிவன்றென்பதாம்.

உஅ0. வூழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ—ரை.) வூழின் பெருவலி யாவுள—வூழைப்போல மிகுந்த வலிமையுள்ளவை வேறு எவையிருக்கின்றன?; மற்று ஒன்று சூழி

னும் தான் முந்து உறும் – அதை விலக்குதற்கு வேறொரு வழியை ஆய்ந்து எண்ணினும், அவ்வழியையே தனக்கும் வழியாகக்கொண்டு அது அவ்வெண்ணத்தின் முற்பட்டு வந்து நிற்கும். உறுவலி, மத வலி என்பனபோலப் பெருவலி என்பது ஆகுபெயர். சூழினும் என் பது எச்சவும்மை. 'சூழினுந்தான் முந்துறும்' என்றமையால், சூழ்ச் சியை நிறைவேற்றுதல் ஒருகாலுங் கூடா தென்பதாம். சூழ்தலாவது நாற்புறமும் வகுந்து முற்றுகையிடுதல்போலப் பகைவர் ஒருவழியா லும் தப்பமுடியாவாறு தீரஎண்ணுதல். இங்குப் பகை ஊழ்.

ஊழியல் முற்றிற்று.

அறத்துப்பால் முற்றிற்று.

உ. பொருட்பால்

இன்பமுள்ளிட்ட இல்லற வாழ்க்கைக்கும் உலகநடப்பிற்கும் இன்றியமையாததும் அறவழியில் ஈட்டப்பட வேண்டியதுமான, பொருளைப் பற்றிக் கூறும் பெரும் பகுதி பொருட்பாலாகும். அறம் பொருளின்பம் என்னும் முறைப்படியும் இது அறத்திற்கு அடுத்த தாகும்.

க. அரசியல்

பொருளீட்ட வேண்டிய மக்களெல்லாருள்ளும் அரசன் தலை சிறந்தவனாதலாலும், மக்களெல்லாரும் தத்தம் தொழில் செய்து பொருளீட்டுதற்கு அரசனது காவல் இன்றியமையாததாதலாலும் அரசாட்சி கூறவே அரசனுங் குடிகளும் பொருளீட்டுதல் அதனுள் ஒருங்கே யடங்கும்.

அரசாட்சி அரசியல், உறுப்பியல் என இருபாற்படும். அவற் றுள் அரசியலை இருபத்தைந் அதிகாரத்தாலும் எழுதிறப்பட்ட உறுப் பியலை நாற்பத்தைந் அதிகாரத்தாலும் அமைத்து, முதற்கண் அரசி யல் கூறுகின்றார்.

பரிமேலழகர் வகுத்த ஒழிபியல் என்பது குடியென்னும் உறுப்பா யடங்குவதை, போக்கியார் பெயரிலுள்ள

> ''அரசிய லியைந் தமைச்சிய லீரைந்
> துரைநா டரண்பொரு ளொவ்வொன்—றுரைசால்
> படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
> குடியெழுபான் றொக்கபொருட் கூறு''

என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுளாலறிக.

அ. கக—இறைமாட்சி

அஃதாவது, அரசாளுந் தகுதியனுகிய இறைவனுக்கு இருக்க வேண்டிய மாண்புடைய அறிவாற்றலும் நற்குண நற்செய்கைகளு மாம். இறுத்தல் (எங்கும்) தங்குதல். இறுப்பது இறை. இத்தொழிற் பெயர் ஆகுபெயராய்த்தன் நாடுமுழுதும் அதிகாரத்தால் தங்கியிருக்

கின்ற அரசனைக் குறிக்கும். இறைவன் என்பது ஆண்பாலீறு பெற்ற பெயர். இவ்விருவடிவும் எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளையுங் குறிக்கும். இப்பெயர்ப் பொதுமையால், அரசன் முதற்காலத்தில் கண்கண்ட தெய்வமாகக் கருதப்பெற்றமை அறியப்படும்.

குஅஅ. படைகுடி கூழமைச்சு நட்பர ணிறு
முடையா னரசரு ளேறு.

(இ—ரை.) படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான்—படையுங் குடியும் பொருளும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப்பட்ட ஆறுறுப்புக்களையு முடையவன்; அரசருள் ஏறு—அரசருள் ஆணரிமா போல்வான்.

நாடில்லாமற் குடியிருக்க முடியாதாகலின், இங்குக் குடியென்றது நாட்டையுஞ் சேர்த்தென அறிக. ஆகவே, இங்குக் கூறப்பட்ட வுறுப்புக்கள் உண்மையில் ஏழாம். அதனுள் நாடு என்பது ஒரு தலையுறுப்பாக எச—ஆம் அதிகாரத்திற் கூறப்பட்டிருத்தலுங் காண்க. (நாடு) குடி, பொருள், படை, அரண், அமைச்சு, நட்பு என்பதே இயற்கை முறையாயினும், செய்யுளமைப்புநோக்கி மாற்றிக் கூறப்பட்டன. 'ஆறும்' என்னும் முற்றும்மையால், அவற்றுள் ஒன்று குறையினும் அக்காலத்தரசியல் நீடித்துச் செல்லாதென்பதாம். கூழ் என்பது உணவு. அது இங்கு அதற்கு மூலமான பொருளை யுணர்த்திற்று. ஏறு போல்வானை ஏறென்றது உவமையாகுபெயர். சில விலங்கின ஆண்பாற் பொதுப்பெயரான ஏறென்பது சிறப்புப்பற்றி அரிமாவின் ஏற்றைக்குறித்தது. ஏழுறுப்புமுள்ளவனைப் பகையரசன் பெரும்பாலும் வெல்லமுடியா தென்பது கருத்து.

குஅஉ. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(இ—ரை.) வேந்தற்கு இயல்பு—அரசனுக்கு இயல்பான தன்மையாவது; அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை—அஞ்சாமையும் கொடைத்தன்மையும் அறிவும் ஊக்கமும் என்னும் இந்நான்கு குணமும் குறையாதிருத்தலாம்.

இவற்றுள் அறிவு ஏழுறுப்புக்களையும், ஈகை படையையும் குடியையும் நோக்கியனவாம். ஏனையிரண்டும் வினைக்குரியனவாம். ஊக்கம் என்பது வினைசெய்தற்கண் உண்டாகும் மனவெழுச்சி. இவற்றுள் ஒன்று குறையினும் பகையரசனும் படையினையேனும் குடியினையேனும் கேடுநேருமாகலின், 'எஞ்சாமைவேந்தற்கியல்பு' என்

குர். வள்ளுவர் காலத்தமிழகம் மூவேந்தராட்சிக் குட்பட்டதாகலின் அரசன் வேந்தன் எனப்பட்டான். முடியணியும் உரிமையுடைய சேர சோழ பாண்டியர் மூவரே வேந்தர். வேய்தல் முடியணிதல். வேய்ந்தான்—வேந்தன். உம்மை முற்றும்மை.

உஅஈ. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.

(இ—ரை.) நிலன் ஆள்பவற்கு—நாட்டையாளும் அரசனுக்கு; தூங்காமை கல்வி துணிவுடைமை இம் மூன்றும் நீங்கா—அரசக்கருமங்களை விரைந்து செய்யுந்தன்மையும் அவற்றை யறிதற்கேற்ற கல்வியறிவும் அவற்றைச் செய்து முடிக்கும் மனத்திட்பமும் என்றும் நீங்காதிருத்தல் வேண்டும்.

கல்வியறிவினால் வினை வெற்றியாக முடியும் வகை தீர்மானிக்கும் திறமும், துணிவினால் தீர்மானித்ததை நெஞ்சுரத்துடன் நிறைவேற்றுவதும், தூங்காமையால் உரியகாலத்தில் தொடங்கி முடிப்பதும், கூடும் என்பதாம். இவற்றுட் கல்வி ஏழுறுப்புக்களையும் நோக்கியது. ஏனையிரண்டும் வினைக்குரியன. உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

உஅசு. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் முடைய தரசு.

(இ—ரை.) அறன் இழுக்காது—ஆட்சித்தலைவனுக்குரிய அறவொழுக்கத்தினின்று தவறாது; அல்லவை நீக்கி—அறமல்லாதவை தன்னுட்டிற் பிறராலும் பிறவுயிர்களாலும் நிகழ்வதையும் நீக்கி; மறன் இழுக்கா மானம் உடையது—போர்மறத்திலும் மாசில்லாத பெருமையுடையவனே தகுந்த அரசனுவான்.

"அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
அதனுல் தமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையுந்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்றும்
உடையை யாகி" (புறம். ஙஙி)

என்பதனுல், அரசவறத்தின் தன்மை அறிவிக்கப்படும். பரிமேலழகர் கூறிய ஓதல், படைக்கலம்பயிறல் என்பவை அரசன் கடமைகளே

யன்றி அறமாகா. அவற்றை அறமெனக் கொள்வது ஆரிய முறையாம். மேலும் வேட்டல் என்பது தமிழரசர்க்குரிய தொழிலன்று. முதுகுடுமிப் பெருவழுதியும் பெருநற்கிள்ளியும் பல்யாணைச்செல்கெழுகுட்டுவனும் தம் பேதைமையால் ஏமாற்றப்பட்டே ஆரிய வேள்விகளை வேட்டனர் என அறிக. வேட்டலுக்குப் பகரமாக வேட்டஞ் செய்தலைக்கொள்க.

"மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலத்
தானதனுக் கிடையூறு தன்னுல்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்த்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனே."
(பெரிய. சு: கக)

என்பதனுல், அரசன் அறனிழுக்காது அல்லவை நீக்குதல் அறியப்படும். மறனிழுக்கா மானமாவது, "அழிகுநர் புறக்கொடை யயில்வாளோச்சாக் கழிதறு கண்ணை"யும் (பு. வெ. ஙக),

"ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியான்
ஆறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்"

என்பதும் (சீவக. மண்மகள். ஈஉ0),

'தானுல் விலங்கால் தனித்தால் பிறன்வரைத்தால்
யானே யெறித வினிவரவால்—யானே
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்." (பெருந். எஉ0),

என்பதுமாம். அரசனது தன்மை அரசின் மேல் சார்த்திக் கூறப்பட்டது சார்ச்சி வழக்கு.

குஅடு. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(இ—ரை.) இயற்றலும்—அரசியற்குப் பொருள் வருவாய்களை மேன்மேலமைத்தலும்; ஈட்டலும்—அவ்வருவாய்களின் வழி வந்த பொருள்களை ஓரிடத்துத் தொகுத்தலும்; காத்தலும்—தொகுத்தவற்றைப் பிறர் கவராமற் காத்தலும்; காத்த வகுத்தலும்—காத்தவற்றை அறம் பொருளின்ப வழிகளிற் செலவிடக் கூறிடுதலும்; வல்லது அரசு—வல்லவனே நல்லரசன்.

பொருள்களாவன, பொன் மணிமுதலிய இயற்கை விளை பொருள்களும், நெல் பயறு முதலிய செயற்கை விளை பொருள்களும், அணிகலம் மது முதலிய செய்பொருள்களுமாம். அவை வரும் வழி களாவன, குடிகள் செலுத்தும் வரியும், சிற்றரசர் இடும் திறையும் பகையரசரை வென்று பெறும் தண்டமும், புதையலும், நட்பரசர் தன்கொடையும் பிறவுமாம். பொருள்களைக் கவரக்கூடிய பிறர் கள் வர், கொள்ளைக்காரர், பகைவர், உறவினர், பணியாளர் முதலி யோர். கோயில்கள், துறவோர் பள்ளிகள், ஊட்டுப் புரைகள் முதலிய வற்றிற்கும் புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்குங் கொடுத்தலே அறங்கல்விப்பொருட்டாகவும்; நாற்படை, செண்டுவெளி, அரண், நீர்ணை, பாசனநீர்நிலை, பகைவர் நட்புப்பிரிப்பு, தன்னட்புச்சேர்ப்பு, படையெடுப்பு, போர், அரசியல் திணைக்களங்கள் முதலியவற்றிற்குச் செலவிடுதலைப் பொருட் பொருட்டாகவும்; நீராழி மண்டபம், தெப் பக் குளம், செய்குன்று, இளமரக்கா, உரிமைச்சுற்றம், சாக்கைக் கூத்து முதலியவற்றிற்குச் செலவிடுவதை இன்பப் பொருட்டாகவுங் கொள்க. இயற்றல் முதலிய நால்வினைக்கும் மிகுந்த சூழ்வினையும் ஆள்வினையும் வேண்டியிருத்தலின், 'வல்லது' என்றார். அரசு என் பதற்கு மேல் உரைத்தவாறுரைக்க.

உஅசு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(இ—ரை.) காட்சிக்கு எளியன்—முறைவேண்டினவர்க்கும் குறைவேண்டினவர்க்கும் காண்பதற் கெளியவனும்; கடுஞ்சொல் லன் அல்லனேல்—பகைவரல்லாத யாரிடத்தும் இன்சொற் சொல்ப வனுமிருப்பின்; மன்னன் நிலம் மீக் கூறும்—அவ்வரசனது நாட்டை ஏனை நாடுகளினுஞ் சிறந்ததாக உலகம் உயர்த்துக் கூறும்.

முறைவேண்டினவர் வலியவரால் தாக்குண்டும் இழப்புண்டும் துன்புற்றவர். குறைவேண்டினவர் வறுமையால் வருந்தியவர். காட் சிக்கெளிமையாவது அலுவல் நேரத்தில் ஓலக்க மண்டபத்திலும் நெருக்கடி நிலைமையில் அரண்மனையிலும் காணக்கூடியவனாயி ருத்தல். கடுஞ் சொல்லாவது சினத்தாலும் பொருளாலும் விளைவா லும் தீதாகிய சொல். நாட்டையுயர்த்துக் கூறுதல் அரசனையுயர்த் தலையுந்தழுவும். உலகம் என்னும் எழுவாய் தொக்கு நின்றது.

உலகம் செங்கோலரசனது நாட்டை மீக்கூறுவது,

"கோள்வல் உளியமுங் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா
அரவுஞ் சூரும் இரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே." (சிலப். கூட:சி—கூ0)

என்று கோவலன் கூற்றாக இளங்கோவடிகள் பாண்டியன் நாட்டைச் சிறப்பித்துக் கூறியது போன்றது.

கூஅஎ. இன்சொலா லீத்தளிக்கவ ல்லாற்குத் தன்சொலாற்
றுன்கண் டூணத்திவ் வுலகு.

(இ—ரை.) இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு — இனிய சொல்லுடன் வேண்டியவற்றைக் கொடுத்து அன்பாகக் காக்கவல்ல அரசனுக்கு; இவ்வுலகு தன் சொலால் தான் கண்ட' அனைத்து—இவ் வுலகம் தன்புகழோடு கூடித் தான் கருதியவாறு அமைவதாம்.

'இன்சொல்' குரலாலும் பொருளாலும் வினைவாலும் இனிய சொல். ஈதல் புலவர், பாணர், கூத்தர் முதலியவர்க்குப் பரிசும் முற்றாட்டும் அளித்தலும், கோயில்கள், துறவோர் பள்ளிகள், ஊட்டுப் புரைகள் முதலியவற்றிற்கு இறையிலியாக அறப்புறம் விடுதலும். அளித்தல் மேற்கூறிய ஐவகையாலும் தீங்கு நேராமற்காத்தல். இம் மூன்றும் ஒருங்கே யமைதல் அரிதாதலின் 'வல்லாற்கு' என்றார். இவ்வுலகம் தான் கருதியவாறு அமைதலாவது தனக்கு வயப்பட்டுத் தான் விரும்பிய வாறு பயன்படுதல்.

கூஅஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ—ரை.) முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்—நடுநிலை யாகத் தீர்ப்புச்செய்து எவ்வகையிலும் துன்பம் நேராது குடிகளைக் காக்கும் அரசன்; மக்கட்கு இறை என்று வைக்கப்படும்—பிறப்பால் மாந்தனுயினும் அவனுல் ஆளப்பெறும் மக்களாற் கடவுளென்றே கருதப்படுவான்.

முறைசெய்தலாவது, கொற்கைப் பாண்டியன் போலத் தன்னை யும் மன் (மனு) முறைகண்ட சோழன் போலத் தன் மகனையும் தண் டித்தல். காப்பாற்றுதல் தெய்வத்தால் வரும் துன்பத்தையும் வழி போடு, நோன்பு, திருவிழா முதலியவற்றுல் தடுத்துக்காத்தல். இறை'

இறைவன் என்னும் இருவடிவிலுமுள்ள கடவுட்பெயர் அரசனையுங் குறிப்பதும், கோயில் என்னும் சொல் கடவுள்வழிபாட்டு மனைக்கும் அரசனது அரண்மனைக்கும் பொதுப் பெயராயிருப்பதும், இக்குறட் கருத்தை மெய்ப்பிக்கும். திருவாய்க்கேள்வி, திருமந்திரவோலை முதலிய அரசியலதிகாரிகளின் பதவிப்பெயர்கள், திரு என்னும் அடை பெற்றிருப்பதும் இக்கருத்துப் பற்றியே.

உஅகூ. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(இ—ரை.) செவிகைப்பச் சொல் பொறுக்கும் பண்பு உடை வேந்தன்—அரசன் தீய வழியிற் செல்லும் போது அஞ்சாது இடித்துரைக்கும் நல்லமைச்சர், செவிக்கு இன்னாதனவாகச் சொல்லும் சொற்கள் பொறுக்கத் தகாதனவாயினும், அவற்றின் இனிய விளைவு நோக்கிப் பொறுத்துக்கொள்ளும் பண்புடைய அரசனது; கவிகைக் கீழ் உலகு தங்கும்—குடைநிழலில் உலகந்தங்கும்.

'செவிகைப்ப' என்பதற்கேற்ப இடித்துரைக்கும் நல்லமைச்சர் என்பது வருவித்துரைக்கப்பட்டது. கைத்தல் கசத்தல். இனித்தல் இனிமையைக் குறித்தலாற் கசத்தல் இன்னாமையைக் குறித்தது. நாவின் புலம் செவியின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது இனம் பற்றி. 'கவிகை' 'உலகு' இரண்டும் ஆகுபெயர். தங்குதல் இனிதாய். வாழ்ந்திருத்தல். சிறந்த அறிவுரைகளைக் கைக்கொள்வதால் உலகம் முழுதும் ஆள்வான் என்பதாம்.

உஅஅ. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு முடையானு மேந்தற்குக் கொளி.

(இ—ரை.) கொடை — தகுதியுடையவர்க்கு வேண்டுவன கொடுத்தலும்; அளி—யாவரிடத்தும் அன்பாயிருத்தலும், செங்கோல்—நேர்மையான ஆட்சியும்; குடி ஓம்பல்—தளர்ந்த குடிகளைப் பேணுதலும்; நான்கும் உடையான்—ஆகிய இந்நான்கு செயலையும் உடையவன்; வேந்தர்க்கு ஒளியாம் — அரசரெல்லார்க்கும் விளக்காம்.

அன்பாயிருத்தல் அகமுக மலர்ந்து இனிய கூறல். 'செங்கோல்' உவமையாகுபெயர். குடியென்று விதந்து கூறியது பஞ்சம், வெள்ளம், கொள்ளை, கொள்ளைநோய் முதலியவற்றுல் தளர்ந்த குடிகளை அவர்களைப்பேணுதலாவது வரிநீக்கலும்வேண்டிய பொருளுதவலும் விளைபோல் வழிகாட்டுதலின் ஒளி யென்றார். 'ஒளி' ஆகு பெயர். மேல்ஓ

'ஈகை' என்றது ஆட்சியும் போர்வீணையும் பற்றியதென்றும், இங்குக் 'கொடை' என்றது அறமுங்கலைவளர்ச்சியும் பற்றியதென்றும், வேறு பாடறிக.

அதி. ௬0—கல்வி.

அஃதாவது, அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல் அவை இலக்கணநூல், கணிதநூல், வனப்பியல், வரலாறு, அறநூல் அரசியல்நூல், போர்நூல் முதலியன. இவற்றுள் அரசியல் நூலும் போர்நூலுந்தவிர ஏனையவெல்லாம் எல்லார்க்கும் பொதுவாம். அரசியல் நூல் அமைச்சர்க்கும் போர்நூல் படைமறவர்க்கும் அரசர்க்குப் போன்றே சிறப்பாக வுரியனவாம்.

திருவள்ளுவர் வேத்தியலை அடிப்படையாகவைத்தே பொதுவியற்கும் பொருந்துமாறு பொருளீட்டு முறையைக் கூறுவதால், இங்குக் கல்வியென்றது எல்லார்க்கும் பொதுவாம். எல்லார்க்குமுரிய பொதுக்கல்வியும் சில தொழில்கட்குரிய சிறப்புக்கல்வியும் கற்றபின்பே நாகரிக மக்கள் பொருளீட்டுதலை மேற்கொள்ள வேண்டுமென்பது கருத்து. பொருளீட்டுதலாவது தத்தம் தொழிலைச் செய்தல். முந்தின அதிகாரத்தில் ''தூங்காமை கல்வி'' என்னுங் குறளிலுள்ள 'கல்வி' என்னுஞ்சொல்லால், இவ்வதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

௩௯௮. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(இ—ரை.) கற்பவை கசடு அறக் கற்க—ஒருவன் தான் கற்க வேண்டிய நூல்களைப் பிழையறக் கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க—அங்ஙனம் கற்றபின் அதற்கேற்ப ஒழுகுதலைக் கடைப்பிடிக்க.

'கற்பவை' என்றது பொதுக்கல்வியையும் தொழில் தொறும் வேறுபட்ட சிறப்புக்கல்வியையும் குறிக்கும். கசடறக் கற்றலாவது ஐயந்திரிபறத் தெளிவாயறிதல். நிற்றலாவது, பொதுக்கல்விக்கேற்ப அறநெறியிலொழுகுதலும் சிறப்புக்கல்விக்கேற்பச் செவ்வையாய்த் தொழில் செய்தலும் ஆம். இவ்விருவகை நடத்தையிலும் நிலைத்து நிற்க வேண்டுமென்றற்கு 'நிற்க' என்றார்.

'கற்பவை' என்பது, ஒருவர்தம் உளப்பான்மைக்கும் உடல்நிலைமைக்கும் அகக்கரண வியல்பிற்கும் ஏற்றவாறு ஒரு தொழிலைத்

தெரிந்து கொண்டு, அதற்குரியவற்றைக் கற்கவேண்டு மென்பதை உ-குறிப்பாயுணர்த்தும்.

நகூஉ. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(இ—ரை.) எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்—மாந்தர் பொதுவாக இலக்கமென்று சொல்லுவதும் மற்ற எழுத்தென்று சொல்லுவதுமான இருவகை நூற்கலைகளையும்; வாழும் உயிர்க்குக் கண் என்ப—இவ்வுலகிற் சிறப்பாக வாழவிரும்பும் மக்களுயிர்க்குக் கண்ணென்று சொல்லுவர் அறிந்தோர்.

அறம் முதலிய நாற்பொருளாயமையும் எல்லாக்கலைகளும் அறிவியல்களும், எண்ணூலும் இலக்கியமும் என இருவகுப்பாக வகுக்கப்பெறும். எண்ணூலென்பது கணக்கும் (Arithmetic) கணிதமும் (Mathematics). அதுசிறப்பாக எண்களால் அறியப்பெறும் இலக்கிய மென்பது மற்றெல்லா அறிவுத்துறைகளும் ஆம். அது பெரும்பாலும் எழுத்தை உறுப்பாகக் கொண்ட சொற்களால் அறியப்பெறும். இவ்விருவகை நூல்வகுப்புக்களும், எல்லாப்பொருள்களையும் அறிதற்குக் கண்போல் அல்லது கண்ணுடிபோல் உதவுதலாற் கண்ணெனப்பட்டன. இவை எழுதப்பட்ட வடிவிற் கட்புலன் வாயிலாகவும் எழுதப்படா வடிவிற் செவிப்புலன் வாயிலாகவும் அறியப்படும். கட்புலவடிவில் இலக்கம் (numerical figure) என்னும் வரிவடிவு எண்ணூலையும்; எழுத்து (character) என்னும் வரிவடிவு இலக்கியத்தையும், வேறுபடுத்திக்காட்டும்.

நூல்வாயிலாகப் பொருள்களை உண்மையாகக் கண்டறிவது அகக்கண்ணேயாயினும், அதற்குக் கண்ணுடிபோல் உதவுங்கருவித்தன்மை நோக்கி இருவகை நூல்களும் கண்ணெனச் சார்த்திக்கூறப்பட்டன. இதை, குருடர்க்குப் முதியோர்க்கும் கண்ணுங்காலும் போல் உதவுங்கோலைக் கண்ணுகவுங் காலாகவும் கூறியது போற்கொள்க. "கோற்கண்ண ளாகுங்குனிந்து" என்பது நாலடியார் (கஎ). "முக்காலுக் கேகாமுன்" என்ருர் காளமேகளுர்.

"ஏரண முருவம் யோகம் இசைகணக் கிரதஞ் சாலம்
.....

வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள."

என்றிரக்குவது ஒரு பழந்தனியன். ஆயின், எண்ணூல், கணக்கியல் முதலிய கணக்கு நூல்களும் ஏரம்பம் முதலிய கணிதநூல்களும் ஆரி

யரால் அழிக்கப்பட்டு விட்டன என்பதே, ஆராய்ச்சியாளர் கருத்தாம்.

'என்ப' என்னும் மூன்றனுள், முன்னையவிரண்டும் அஃறிணைப் பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப்பன்மைவினை. 'வாழ்தல்' என்பதை "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்பதிற் போலக் கொள்க. "எண்ணும் மெழுத்தும் கண்ணெனத்தகும்." (கொன்றை எ) என்பது இக்குறட் சுருக்கமே.

222. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(இ—ரை.) கண் உடையர் என்பவர் கற்றோர்—கண்ணுடைய ரென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் கற்றோரே; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர்—மற்றக் கல்லாதவரோ வெனின் தம் முகத்தில் இரண்டு கண்களையல்ல, புண்களையே உடையர்.

நெட்டிடைப் பொருள்களையும் முக்காலச் செய்திகளையும் நூல் வாயிலாக அறியும் அறிவுக்கண்ணுடைய வரைக் 'கண்ணுடையர்' என்றும், அஃதின்றி மாசுபடிந்து உறுத்துவதும் நோயுற்றுத்துன் பஞ்செய்வதுமான ஊன் கண்ணே மட்டு முடையவரைப் 'புண்ணுடையர்' என்றுங் கூறினர். கற்றார் கண்போன்றே கல்லார் கண்ணும் ஏட்டைக்கண்டும் அதிலுள்ள எழுத்தைப்படிக்கத் தெரியாமையால், அது விழிகண்குருடு போல்வது மட்டுமன்றி நோவுந்தருவ தென்று நன்மையின்மையும் தீமையுண்மையும் ஒருங்கு கூறி, கற்றாரையும் கல்லாரிழிவும் விளக்கிக் காட்டினர்.

223. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(இ—ரை.) உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே—யாரொடும், அவர் மகிழுமாறு சென்று கூடி, இனி இவரை என்று காண்பேமென்று அவர் ஏங்குமாறு நீங்குதலாகிய அத்தன்மையதே; புலவர் தொழில்—சிறந்த கல்வியுடையார் செயலாம்.

கற்றாரின் அடக்கமும் அறவொழுக்கமும் இன்சொல்லும் உறுதி பயக்கும் அறிவுரையும் எல்லாரையும் இன்புறுத்துதலால், அவரை விட்டுப் பிரிய ஒருவரும் விரும்பார் என்பதாம். ஏகாரம் தேற்றம்.

உசுரு. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர்.

(இ—ரை.) உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றூர்—செல்வர்முன் வறியர்போல் தாமும் ஆசிரியன்முன் ஆசையால் தாழ்ந்துநின்று கல்விகற்றவரே தலையானவ ராவர்; கல்லாதவர் கடையரே—அங்ஙனந் தாழ்ந்து நிற்றற்கு நாணிக் கல்லாது விட்டவர் என்றுங் கடைப்பட்டவரே.

"உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்று" என்பது, பொருளுங் கல்வியும் இருவகைச் செல்வம் என்பதை யுணர்த்தும். அதனால் ஆசிரியனுக்குப் பணிவிடையும் பொருளுதவியும் செய்வது மாணவன் கடமையென்பதும் பெறப்படும்.

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்பது பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டு. (புறம். உஉக). 'கடையர்' என்பதன் மறுதலையான தலையானவர் என்னுஞ்சொல் தொக்குநின்றது. மாணவநிலைக்கு ஏற்காத மானம் பற்றிக் கல்வியை யிழந்த கண்ணிலியர், காலமெல்லாங் கண்ணிலியரும் இன்பமுமின்றிப் பிறந்த நாட்டிலேயே பேரிடர்ப்படுவராதலால், கடையரேயென்று தேற்றேகாரங் கொடுத்துக் கூறினர்.

இனி, இக்குறளின் முதலடிக்கு,

"உடையார்—இப்பொழுது கல்வியுடையவராயிருப்பவர்; முன்—தாம் கல்வியுடையவராதற்குமுன்; இல்லார்போல் ஏக்கற்றுக் கற்றூர்—வறுமைப்பட்டவர் எவ்வாறு பலதுன்பங்களுக் குள்ளாவார்களோ அவ்வாறு வருத்தப்பட்டுக் கற்றவரே யாவர்" என்று கூறும் உரையும் ஒன்று உளது (ந. சி. கந்தையா பிள்ளை).

உசுஉ. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(இ—ரை.) மணற்கேணி தொட்ட அனைத்து ஊறும்—மணலில் தோண்டிய நீர்க்கிடங்கில் தோண்டிய அளவிற்கு நீரூறும்; மாந்தர்க்குக் கற்ற அனைத்து அறிவு ஊறும்—அதுபோல் மக்கட்குக் கல்விகற்ற அளவிற்கு அறிவூறும்.

மணற்கிடங்கு சிறிதே தோண்டினால் ஊறும் நீர் போதாது சற்று ஆழமாகத் தோண்டினாற் போதிய நீர் ஊறும். அதன்மேலும் தோண்டத் தோண்ட ஊறுமாதலால், அவரவர் தேவைக்குத் தக்க வாறு தோண்டிக் கொள்ளல்வேண்டும். அதுபோல், கல்வியும் சிறிது கற்ற அளவில் அறிவு நிரம்பாது; பேரளவு கற்றல் வேண்டிய அறிவு அமையும். அதன்மேலுங் கற்பது அவரவர் தேவையையும் விருப்பத்தையும் ஆற்றலையும் ஒப்பவையும் வாழ்நாளளவையும் பொறுத்ததாம். இக்குறளில் வந்துள்ளது எடுத்துக்காட்டுவமை.

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்." (ஙஙக)

என்னுங் குறளிற்கூறியது அறிவு பயன்படும் வகைபற்றிய தென்றும், இங்குக் கூறியது அறிவு வளரும் வகை பற்றிய தென்றும், வேறு பாடறிக.

ஙஙள. யாதானு நாடாமா லூராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(இ—ரை.) யாதானும் நாடாம் ஊராம்—நிரம்பக்கற்றவனுக்கு எந்நாடுந் தன்னாடாம், எவ்வூருந்தன்னூராம்; ஒருவன் சாம் துணை யும் கல்லாதவாறு என்—அங்ஙனமிருக்கவும், ஒருவன் தான் இறக்கு மளவும் கல்லாது காலங்கழிப்பது எதன் பொருட்டு?

நிரம்பக் கற்றவர்க்கே வேற்றுநாடும் வேற்றூரும் தன்னாடும் தன்னூருமாகுமென்பது,

"ஆற்றவுங் கற்றுர் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லே—அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினுல்
ஆற்றுணை வேண்டுவ தில்."
என்னும் பழமொழிச்செய்யுளாலும் (ச),

"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேய மல்லாற் சிறப்பில்லே கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."
என்னும் மூதுரைச்செய்யுளாலும் (உ) அறியப்படும்

'யாதானு நாடாமால்' என்றது, சிறந்த தமிழ்ப்பாவலன் வேற்று நாடு சென்று சிறப்புப் பெறுவதைக் குறித்ததேயன்றித் தமிழர் அல்லது தமிழ்ப்புலவர் வேற்று நாட்டு மொழிகளைக் கற்க வேண்டுமென்னுங் குறிப்பினதன்று. அவ்வேற்று நாடுகளும் இந்தியாவிற்குட்பட்டனவும், இலங்கையும் மலேயாவும் போல் தமிழர் குடியேற்றங் கொண்டனவுமாக இருந்திருக்குமேயன்றி எல்லாவெளி நாடுகளுமாக இருந்திருக்க முடியாது. பாவேந்தராகிய கம்பர் கி. பி. கூஉ-ஆம் நூற்றாண்டில் ஓரங்கல் (Warangal) என்னும் தெலுங்க நாடுசென்று, அதன் அரசனாகிய பிரதாபருத்திரனைப் போற்றப்பட்டார். திருவள்ளுவர் காலமாகிய கி. மு. உ-ஆம் நூற்றாண்டில், வடமொழியும் தென்மொழி யென்ற தமிழுமாகிய இருமொழிகளிலேயே பல்துறைப் புலமையிலக்கிய மிருந்ததனாலும், இறந்துபட்ட பண்டைத் தமிழிலக்கியத்தின் பெரும்பகுதி அக்காலத்திருந்ததாகத் தெரிவதனாலும், மராடமுங் குச்சரமும் பஞ்சதிரவிடங்களுள் இரண்டாகப் பண்டைக்காலத்திற் கொள்ளப்பட்டதினாலும், வங்கநாட்டுக் காளிக்கோட்டத்தில் தமிழ வணிகர் குடியேறி யிருந்ததினாலும், தமிழ்ப்பெரும் புலவர் வடஇந்தியாவரை சென்று வாழ்ந்திருக்கவோ சிறப்பிக்கப்பட்டிருக்கவோ முடியும் அல்லாக்கால்

''நந்தன் வெறுக்கை யெய்தினும்'' (அகம், உகூ),
''பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிற் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ'' (ஷை உ-கூ ஷை)

''பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே'' (புறம். உ)
என்று தமிழ்ப்புலவர் வடநாட்டுச் செய்திகளைப்பற்றிப் பாடியிருக்க முடியாது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' (புறம். கூஉ உ)

என்பதும், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (திருமந்திரம் உகூஅ),'' குலமும் ஒன்றே குடியும் ஒன்றே'' (கபிலர் அகவல்) என்பன போலத் தமிழனின் உயர்ந்த உலக வுடன்பிறப்புக் (Universal Brotherhood) கொள்கையைக் குறிக்குமேயன்றி, தமிழன், பிறநாட்டு மொழிகளைக் கற்கவேண்டு மென்னுங் கருத்தினதன்று.

தமிழை இந்தியார்க்குக் காட்டிக்கொடுப்பார் சிலர், 'யாதானும் நாடாமால்' என்பதனைப் .பிறழவுணர்ந்தோ வேண்டுமென்று

பொருள் திரித்தோ, தமிழர் இந்தியைக்கற்க வேண்டு மென்பதற்கு அதைத் தாங்கலாகக் காட்டுவர். திருவள்ளுவர் காலத்தில் இந்தியு மில்லை, இந்தியென்ற பெயருமில்லை. வடமொழியிலுள்ள இலக்கண இசை நாடக மருத்துவ கணித கணிய நூல்கட்கு மூலமான தமிழ் நூல்கள் அன்று அழியாதிருந்ததினால், வடமொழியைக் கூட அவர் கற்கச் சொல்லவில்லை. இக்காலத்தில் அவரிருந்திருப்பினும், பயனில் சொல் பாராட்டுவானைப் பதரென்று கண்டித்தவர் பயனில் மொழி யைக் கற்பவனைப் படுபதர் என்றே பழித்திருப்பார். இந்தி எங்ஙன மேனும் பயன்படுமெனின், அங்ஙனம் உலகிலுள்ள மூவாயிரம் அல்லது நாலாயிரம் மொழிகளும் பயன் படத்தான் செய்யும்.

'சாந்துணையுங் கல்லாத வாறு' என்னுந் தொடர், வாழ்நாள் முழுதுந் தொடர்ந்து கல்லாமை யென்றும், இறக்கு மட்டுங் கல்வி யைக் கடத்திவைப்பதென்றும், இருபொருள் படுவதாகும். இவற் றுள் முன்னதே சிறப்பாம். 'ஆல்' இரண்டும் அசைநிலை.

இக்குறள் மேற்கல்வியைக் குறித்தலின், கல்வித்தொழிலாள ரையும் கல்விகற்கும் ஆற்றலுள்ளாரையும் நோக்கிக் கூறியதாகக் கொள்க.

உஉஅ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(இ—ரை.) ஒருவற்கு—ஒருவனுக்கு; தான் ஒருமைகணின்கற்ற கல்வி—தான் ஒரு பிறப்பிற் கற்ற கல்வி; எழுமையும் ஏமாப்பு உடைத்து—எழுபிறப்பளவுந் தொடர்ந்து அரணாகநின்று உதவுந் தன்மையையுடையது.

கல்வியறிவு விலங்குகள் போல உயிரைப் பற்றித் தொடர்தலின், 'எழுமையும் ஏமாப்புடைத்து' என்றார். 'எழுமை' என்றது தொடர்ந்த எழுமைக்கட்பிறப்பை. அல்லாக்கால் அவ்வறிவு பயன்படாமை அறிக. ஏமாப்பு பாதுகாப்பு. உதவுதல் நல்வழியிற்செலுத்தி நலமாக வாழ்வித்தல். ஏழென்பது இங்குக் காலநீட்சி பற்றிய நிறைவெண்.

உஉக. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(இ—ரை) கற்று அறிந்தார்—சிறந்த நூல்களைக் கற்று அவற் றின் பொருளைச் செவ்வையாக அறிந்தவர்; தாம் இன்புறுவது

உலகு இன்புறக்கண்டு—தம் கல்வியால் தாம் இன்புறுவதோடு உலகமும் இன்புறுவது கண்டு; காமுறுவர்—மேன்மேலுங் கற்கவும் கற்பிக்கவும் விரும்புவர்.

தாமின்புறுதலாவது, நூல்களின் சொற்சுவை பொருட்சுவை களாலும், தாம் இம்மையிற்பெறும் புகழ் பொருள் போற்றுதலாலும், மறுமையிற்பெறும் நற்பத நம்பிக்கையாலும், இடையருது மகிழ்தல். உலகின்புறுதலாவது, இன்று செவிக்கினிய சிறந்த விருந்துண்டோ மென்றும், அறியாதபல அரும்பொருள்கள் எளிதாயறிந்தோம் என்றும், இத்தகைய சொற்பொழிவு கேட்டது எம் தவப்பேறேயென் றும், இன்னுஞ் சிலமுறை கேட்பின் யாமும் புலவராய் விடுவேமென் றும், பாராட்டி மகிழ்தல். தாமின்புறுவதை உலகுமின்புற்றுப் போற்றுவது, கரும்பு தின்னக்கைக்கூலி கொடுத்தாற்போன்று ஊக்குவதால், மேலுங் காமுறுவர் என்றார்.

இனி, இக்குறளை, கற்றறிந்தார் தாம் இன்புறுவது கண்டு உலகு இன்புறக் காமுறுவர் என்று, கொண்டு கூட்டுப் பொருள்கோள் நடையாக மாற்றின், கண்டு என்னுஞ் சொல்லொடு பொருந்தாமை யால், அது ஆசிரியர் கருத்தன்றென விடுக்க.

399. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(இ—ரை.) ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வம் கல்வி—ஒரு வனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே; மற்றையவை மாடு அல்ல—மற்றப் பொருட் செல்வங்களெல்லாம் இயற்கையாலுஞ் செயற்கையாலும் அழிந்துபோந் தன்மையன வாதலின் சிறந்த செல்வங்களாகா.

கல்வியின் கேடின்மையை,

"வெள்ளத்தாற் போகாது வெந்தழலால் வேகாது
வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொழியக்
குறைபடாது
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ மிகவெளிது
கல்வியெனும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெல்லாம் பொருள்தேடி
யுழல்வதேனே."

என்னும் பழந்தனியனுல் அறிக. கல்விச் சிறப்பு அறிவொழுக்கமும் அரசனுலும் மதிக்கப்பெறுதலும் மறுமையில் நற்பதப்பேறுமாம்.

"அறம்பொரு ளின்பமும் வீடுப் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்பது நீதிநெறி விளக்கம் (உ).

முதற்காலத்தில் ஆவுங்காளையும் எருமையும் ஆகிய மாடுகளே செல்வமாகக் கருதப்பட்டதினால், மாடு என்னும் பெயர் செல்வப் பெயராயிற்று. மேலைநாடுகளிலும் இங்ஙனமே மாடு செல்வமாகக் கொள்ளப்பெற்றது.

L. pecu—cattle, pecunia—money E. pecuniary—(consisting) of money.

அதி. சக—கல்லாமை

அஃதாவது, கல்லாதிருத்தல். இது கல்வியின்மையின் தீமையை எடுத்துக் கூறுவதால் கல்வியின் பின் வைக்கப்பட்டது. கல்விச்சிறப்பு உடன்பாட்டு முகத்தாற் கூறிய அளவில் முற்றுப் பெறுமையால், இங்கு எதிர்மறை முகத்தாலுங் கூறவேண்டிய தாயிற்று.

சூ ௦ ௬. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(இ—ரை.) நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல்—அறிவு நிரம்புவதற் கேதுவான நூல்களைக் கல்லாது ஒருவன் (அவையின் கண்) சொற்பொழிவாற்றத் தகுலப்படுதல்; அரங்கு இன்றி வட்டு ஆடிய அற்று—அறைகள் வகுக்காமலே வட்டாட்டம் ஆடுவதை யொக்கும்.

அரங்கு சதுரஞ் சதுரமாக வகுத்த கட்டம். வட்டு வட்டமான ஆட்டுக் கருவி. அரங்கு வகுத்து வட்டாடல் என்பது, சிறுவர் விளை யாடும் பாண்டி (சில்லாக்கு) என்னும் விளையாட்டிற்கும் பெரியோர் ஆடும் சூதாட்டத்திற்கும் பொதுவாம். முன்னதில் வட்டை அரங் கிற்கு உள்ளெறிவதும், பின்னதில் வெளியே உருட்டுவதும் வேறு பாடாம்.

"கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்வட் டாடும்"

என்றது (நற்றிணை, கூ) பாண்டி விளையாட்டை. கல்லியாவது ஓட்டையாவது தேய்த்து வட்டமான சில்லமைப்பதற்கு நேரஞ் செல்லுமாதலின், பக்கத்திற் கிடந்த நெல்லிக்காயை யெடுத்து வட்டாடியிருக்கின்றனர்.

''கையாடு வட்டிற் ருேன்றும்'' (அகம். கoச) என்றது சூதாட்டைக் குறித்தது. ஈராட்டிலும் அரங்கின்றி வட்டாடல் இயலாது; அதுபோற் கல்வியறிவின்றிக் கற்ருேரவையிற் பேசுதல் இயலாதென்பது கருத்து.

அரங்கு, வட்டு, கோட்டி என்னும் மூன்றும் தூயதென்சொற்கள் என அறிக. பின்னிரண்டைப் பார்க்க

அர்—அறு—அறை. அர்—அரம்=தேய்த்து அறுக்குங் கருவி. அரம்—அரமு—அரவு—அராவு. அரம்—அரம்பு—அரம்பம்=அராவியறுக்கும் வாள். அரம்பம்—ரம்பமு (தெ).

அரம்—அரங்கு—க. அறுக்கப்பட்ட கட்டிடப்பகுதி (room). உ. அறுக்கப்பட்ட விளையாட்டுக் கட்டம். கூ. சூதாட்டுக்கட்டம். ச. முதற்காலத்தில் ஆடுதற்கு வரையறுக்கப்பட்ட சதுர இடம், சு. சதுரமேடை. சு. நாடகமேடை. எ. முத்தமிழ்ப்புலவர் தத்தம் திறங்காட்டி ஒப்பம்பெறும் மேடை. அரங்கேற்றம் என்னும் வழக்கை நோக்குக.

அரங்கு—அரங்கம். 'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு Augmentative suffix). அரங்கம்=க. நாடகமேடை. உ. சூதாடுமிடம். கூ. படைக்கலம் பயிலுமிடம். ச. போர்க்களம். சு. நீரால் அறுக்கப்பட்ட ஆற்றிடைத்திட்டு. சு. திருவரங்கம்—ஸ்ரீ ரங்க (வ.). அரங்கம்—ரங்க (வ.).

காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட ஆற்றிடைக்குறை, திருமால் கோயிலையுடைமையால் திருவரங்கம் எனப்பெற்றது. 'திரு' தூய்மை அல்லது தேவியல் உணர்த்தும் முன்னொட்டு அல்லது அடைமொழி.

வடமொழியில் அரங்கு என்ற வடிவில்லை. ஆரியர் இந்தியாவிற்கும் தென்னாட்டிற்கும் வருமுன்னரே, பாண்டியர் எழுவரும் ஐவரும் முறையே முதலிரு கழகங்களிற் பாவரங்கேறியிருந்தனர்.

'அரங்கு' என்னும் வடிவிற்கும் வடமொழியில் வேரில்லை. நிறத்தை அல்லது சாயத்தைக் குறிக்கும் ரஞ்ச் (ranj) என்னுஞ்

சொல்லொடு தொடர்புபடுத்தி, தம் அறியாமையையோ அழுக்காற்றையோ காட்டுவர் வடமொழியாளர்.

தமிழிலுள்ள பொருள்களெல்லாம், அறுக்கப்பட்டது என்பதையே அடிப்படைக் கருத்தாகக் கொண்டிருத்தல்காண்க.

வள்—வட்டு (வள் + து)—வட்டம்—வருத்த(வ.) — L. Verto = turn.

கொள்ளுதல் = கற்றுக்கொள்ளுதல், கற்றல்.
கொள்வோன் = கற்போன், "கொள்வோன் கொள்வகை யறிந்தவனுளங்கொள" (நன். பொது. கூ).

கொள்ளுநன் = கற்போன்; "கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலின்" (கல்லாடம், ஙக : உக).

கோடல் = கொள்ளுதல், பாடங்கேட்டல். "கோடன் மரபே கூறுங் காலை" (நன். பொது. சo).

கோளாளன் = கொள்வோன், மாணவன். "கோளாளன் என்பான் மறவாதான்" (திரிகடுகம், கஉ). "உரைகோ ளாளற் குரைப்பது நூலே." (நன். பொது, கூவ).

கொளுத்துதல் (பி. வி (= கொள்ளச்செய்தல், அறிவுறுத்துதல் "சேணெறி செல்லக் கோணெறி கொளுத்தி" (பெருங் உஞ்சைக். (இஅ : எo), அறிவுகொளுத்துதல் என்னும் வழக்கை நோக்குக.

கொளுத்து—கொளுத்தி = கொளுத்துகை. 'இ' தொழிற்பெயரீறு. ஒ. நோ: போற்று—போற்றி = போற்றுகை.
கொளுத்தி—கோட்டி (மரூஉ). ஒ. நோ: புழைக்கை—பூட்கை. கோட்டி = அறிவுறுத்தல், சொற்பொழிவு. அவைப் பேச்சு.

"புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா னெருவ னுரைப்பவுங் கண்ணேடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து." (நாலடி. எஞ்ஞ).
உ. பேச்சு. "வீரக்கோட்டி பேசுவார்" (கம்ப. உயுத். மாயா. கக).

வடமொழியாளர் கோட்டி யென்னுஞ் சொல்லைக் கோஷ்டீ (gosth) என்று திரித்து, கோஷ்மிடும் (ஆரவாரிக்கும்) கூட்டம் என்று பொருளும் பொருட்காரணியமுங் கூறுவர். தமிழில், கோட்டிகொளல் என்பது அறிவுகொளுத்துதலை மேற்கொள்ளுதல் அல்லது அவைக் கண் உரையாற்றுதலைக் குறிக்குமேயன்றி ஆரவாரிப்புக் கூட்டத்தைக் கொள்ளுதல் என்று பொருள்படாது. அங்ஙனம் வடவர் கூறும் பொருளையே கொள்ளினும், அன்றும் அது தென்சொல்லாகுமேயன்றி வடசொல்லாகாது.

கொள்ளுதல் = க. ஒத்தல், "வண்டினம் யாழ்கொண்டகொளை" (பரிபா. ௪௯. ௧௨௫).

உ பொருந்துதல். "கொள்ளாத கொள்ளாதுலகு" (குறள் ௯௭0).

கொள்—கொள்ளை = கூட்டம். "கொள்ளையிற் பலர்கூறலும்". (கந்தபு. விண்குடி. ௧௯).

கொள்—கோள் = குலை. 'செழுங்கோள் வாழை' (புறம் ௧௪௩).

கோள்—கோடு = குலை (பிங்.). கோடு—கோடகம் = பலதெருக் கூடுமிடம் (பிங்.)

கோட்டி = க. ஒருவரோடு கூடியிருக்கை. "தன்றுணைவி கோட்டியி னீங்கி" (சீவக. ௨0௫௫). உ. கூட்டம் (பிங்.).

கோஷிப்பது என்னும் பொருளினும் கூடுவது என்னும் பொருளே கூட்டம் என்று பொருள்படும் சொற்கு ஏற்றதாயிருத்தல் காண்க. ஆரவாரிப்பது கல்லார் திரளும் கலகக் கூட்டமுமேயன்றி, ஆன்றவிந்தடங்கிய சான்றோரவையாகாது.

௮0௨. கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(இ—ரை.) கல்லாதான் சொல் காமுறுதல்—கல்வியில்லாதவன் ஓர் அவையின்கண் சொற்பொழிவாற்ற விரும்புதல்; முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்ற அற்று—இயல்பாகவே முலையிரண்டுமில்லாத பேடி பெண்டன்மையை விரும்பினற்போலும்.

"பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
.....

இவ்வென அறியும்அந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.'' (தொல் சஅஎ)
''ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே'' (ஷிசகஅஇ)

என்றவாறு, பேடிப்பெயர் பெண்பாலீறு பெற்றது. உம்மை முற்றும்மை. இருவர் காமுறுதலும் இழிநிலைப்பட்ட தென்பதாம். இனி, கல்லாதான் சொல்லைப் பிறர் காமுறுதல் முதலியரண்டுமில்லாதாள் பெண்டன்மையைப் பிறர் காமுறுதல்போலும், என்றுமாம்.

சஅஉ. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(இ—ரை) கற்றார்முன் சொல்லாது இருக்கப்பெறின் — தம் அறிவின்மையையும் தகுதியின்மையையும் உணர்ந்து, கற்றோரவையின்கண் உரைநிகழ்த்தும் வகையில் தாம் ஒன்றுஞ் சொல்லாது முழு அடக்கமாயிருப்பராயின்; கல்லாதவரும் நனி நல்லர்—கல்லாதவரும் மிக நல்லவரேயாவர்.

உம்மை இழிவுசிறப்பு;. அவையின்கண் அமைதியாயிருக்கு கல்லாதார், பிறராற் பழிக்கப்படாது தம் சிறு மதிப்பைக் காத்துக் கொண்டும், அவையோர்க்கு வெறுப்பை விளைத்து அங்குநின்றும் அகற்றப்படாது அறிஞர் உரைகேட்டு இன்புறுவதொடு அறிவடைந்தும், நல்லவராவ ராதலால் 'நனிநல்லர்' என்றார். 'நனி' உரிச்சொல்.

''கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு – மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே யிரா அ
துரைப்பினும் நாய்குரைத் தற்று.'' (நாலடி. உகிச)

சஅச. கல்லாதா னொட்பங் கழியநன் ருயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ—ரை.) கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்—கல்லாதவனுக்கு ஓரோவழி தற்செயலாகத்தோன்றும் உயரிய கருத்து மிகச் சிறந்ததாயினும்; டை அறிவுயார் கொள்ளார் — அறிவுடையார் அவனைப் பாராட்டுமளவில் அதை உபசரிக்கொள்ளார்.

உம்மை அருமை குறித்து நின்றது. ஒட்பம் = அறிவொளி. ஒள்—ஒட்பு—ஒட்பம். ஒள்—ஒளி, ஓரோவழி = ஏதேனுமொரு சமையம்,

மிக அருகி. கல்லாதவனுக்குத் தோன்றும் ஒண்கருத்து, ஏர் ல் (நத்தை) மணலில் ஊருங்கால் நேருங் கீறலில் தற்செயலாக அமையும் ஓர் எழுத்துவடிவம் போன்றதாகலின், அதை அவனது உண்மையறிவின் விளைவாகக் கருதார் என்பதாம்.

உ0நி. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(இ—ரை.) கல்லா ஒருவன் தகைமை—நூல்களைக் கல்லாத ஒருவன் தன்னை அறிவுடையவனைத் தான் மதிக்கும் மதிப்பும், அவனை அங்ஙனம் பிறர் மதிக்கும் மதிப்பும்; தலைப்பெய்து சொல்லாடச் சோர்வுபடும்—அவற்றைக் கற்றவன் அவனைக் கண்டு உரையாடும் போது கெட்டுப்போம்

கற்றவன் என்பது அவாய்நிலையான் வந்தது.

"கோணுமல் வேணதெல்லாங் கத்தலாய் மற்றேர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே—நாணுமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்காற்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி"

என்னும் பிற்காலத்து ஔவையார் ஒருவர் தனியன் இக்குறட் பொருளை விளக்குவதாகும்:

உ0கூ. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(இ—ரை,) கல்லாதவர்—நூல்களைக் கல்லாதவர்; உளர் என்னும் மாத்திரையர் அல்லால்—உடம்போடுள்ளனர் என்று பிறர் சொல்லும் அளவினராதலன்றி; பயவாக்களர் அனையர்—பிறர்க்குப் பயன் படாமையால் ஒன்றும் விளையாத உழவர்நிலத்தையே ஒப்பவராவர்.

"களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்."

என்று நாலடியார் (கூகூ) கூறுவதால், இங்குக் களர் என்னுஞ் சொற்குக் "காலாழ் களரின் நரியடும்" (இ00) என்னுங் குறளிற் போல் உளைநிலம் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். உளை நிலையான சேற்றுநிலம். கல்லாதான் பயவாமையாவது அறிவாற் பிறர்க்குதவாமை.

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று."

என்னும் நாலடிச் செய்யுள் (கூ0ச) இங்குக் கவனிக்கத்தக்கது. மாத்தல் அளத்தல். இவ்வினை இன்று வழக்கற்றது. மா என்பது பல் வேறு அளவுகுறித்த சொல். மா + அனம் = மானம் = அளவு, படி. (மேலை வடார்க்காட்டு வழக்கு). மா + திரம் = மாத்திரம் = அளவு. அவன் எனக்கு எம்மாத்திரம் என்பது நெல்லைவழக்கு. இதன் விலை எம்மாத்திரம் (எம்மாத்தம்) என்பது மேலைவடார்க்காட்டு வழக்கு. "வெளவினன் முயங்கு மாத்திரம்" (கலித் ஈள : உஉ). மா + திரை = மாத்திரை (மருந்தளவு அல்லது எழுத்தொலியளவு). அளவு—அளபு = மாத்திரை.

"மாத்திரை எழுத்தியல் அசைவகை எனஅ" (தொல். செய். க.)
"கண்ணிமை தொடியென அவ்வே மாத்திரை." (ஷொழுத். எ,

மா என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் தமிழ்க் கீழ்வா யெண்ணுப்பெயர்களுள் ஒன்று. அதன் அளவு (க/உ0) (1/ஊ0) மா (ம.), மாவு (தெ.).

அரைமா, ஒருமா, ஒருமாவரை (ஒருமாரை), இருமா, மும்மா, நான்மா, மாகாணி என்பன அவ்வளவால் ஏற்பட்ட எண்ணுப் பெயர்கள்.

ஒரு வேலியில் இருபதிலொன்றுன நில அளவு மா எனப்படும்.
"மாநிறை வில்லதும் பன்னுட் காகும்" (புறம். கஅச)-
ஓர் எடையில் இருபதிலொன்றுன நிறையும் மா எனப்படும் (தொல். கஎ0, உரை).

இங்ஙனம் பல்வேறு அளவு குறித்த மா என்னும் முதனிலைத் தொழிலாகுபெயர், ஆரியர் வருகைக்கு முற்பட்ட குமரிநாட்டு முழுத்தூய்மைத் தமிழ்ச்சொல். ஆதலால் இருக்குவேதத்தில் மா, மாத்ரா என்னும் சொற்கள் ஆளப்பட்டிருத்தல் நோக்கி மயங்கற்க. மா என்னும் முதனிலை போன்றே, அதனின்று திரிந்த மாத்திரம், மாத்திரை என்ற சொற்களும் தூய தமிழ் என அறிக. இன்றும் அது மாத்திரம், கேட்டமாத்திரத்தில், மாத்திரைக்கோல் (வரை யிட்ட அளவுகோல்) எனப்பொது வழக்காக வழங்குதல் காண்க.

அளபு, மாத்திரை என்னும் இருசொற்களும் தமிழின் சொல் வளத்தையே காட்டும். "மாத்திரையின்றி நடக்குமேல்" (நாலடி

உசஉ) என்பதனுல், மாத்திரை என்பதன் அடிப்படைப்பொருள் அளவு என்பதேயென்று அறிந்து கொள்க. மாத்திரம்—மாத்ர(வ.), மாத்திரை—மாத்ரா (வ.) metrum (L.), metron (Gk.), meter (E. metre, (E.) என்னும் மேலையாரியச்சொற்கள் mete (மதி= அளவிடு) என்னும் முதனிலையினின்று திரிந்தவை.

உ0ஏ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.

(இ—ரை.) நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம்—நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களையும் நுணுகிக் கற்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும்; மண் மாண் புனை பாவை அற்று—சுண்ணச் சாந்தினுல் மாட்சிமைப்படப் புனைந் தமைத்த படிமையின் எழுச்சியும் அழகும் போலும்.

நுண்மாண் நுழைபுலத்தின் தன்மையாவது, அறிதற்கரிய நிர டான பொருளையறிதலும் சிக்கலான செய்தியை விரைந்து விடுவித் தலுமாம். 'பாவை' ஆகு பொருளது. எண்பேரெச்சமின்றிப் பிறப்பது. போன்றே "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலுமரிது" (சீவக. முத்தி. ஈஙச). ஆயினும், கல்வியறிவில்லாதவழி அதனுற் சிறப் பில்லை யென்பதாம். "ஆடையில்லாதவன் அரை மாந்தன், கல்வி யில்லாதவன் கால்மாந்தன்," என்பது ஒரு சொலவடை.

உ0அ. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னதே
கல்லார்கட் பட்ட திரு.

(இ—ரை.) கல்லார்கண் பட்ட திரு—கல்லாதவரிடம் சேர்ந்த செல்வம்; நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னதே—கற்றவரிடம் சேர்ந்த வறுமையினும் தீயதேயாம்.

'இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னு தது.'' (குறள். கoசக).

ஆயினும், நல்லார் வறுமை அவர்க்கு மட்டுந்தீங்கு செய்ய, கல்லார் செல்வம் அவர்க்கும் பிறர்க்கும் தீங்கு செய்தலின், முன்னவர் வறுமையினும் பின்னவர் செல்வம் தீயதென்றார். ஏகாரம் தேற்றம், 'கண்பட்ட' என்னுஞ் சொல்லாட்சி செல்வமும் வறுமையும் இடமாறி நின்றமையை உணர்த்தும். நல்லார்க்குத்தீமை துன்பமும், கல்லார்க் குத் தீமை இருமைத்துன்பத்திற்கும் ஏதுவான ஓழுக்கக்கேடும்,

அவராற் பிறர்க்குத்தீமை சிலர்க்கு ஒழுக்கக்கேடும் சிலர்க்குத் துன்பமுமாக இரண்டும் என அறிக. கல்வியால் அறிவும் அறிவால் ஒழுக்கமும் பயனும் என்னுங் கொள்கை பற்றிக் கற்றூர் நல்லாரெனப்பட்டார்.

"Riches serve a wise man, but command a fool." என்பது ஓர் ஆங்கிலப்பழமொழி.

சூ0க. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றூ ரனைத்திலர் பாடு.

(இ—ரை.) கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும்—கல்லாதவர் கல்விநிலைமையும் செல்வ நிலைமையும் தொழில் நிலைமையும் அதிகார நிலைமையும் பற்றிய மேல்வகுப்புக்களிற் பிறந்தாராயினும்; கீழ்ப் பிறந்தும் கற்றூர் அனைத்துப்பாடு இலர்—அந்நால் நிலைமையும் பற்றிய கீழ்வகுப்புக்களிற் பிறந்திருந்தும் கற்றவரைப்போல அத்து ணைப் பெருமையுடையவரல்லர்.

எல்லாநாடுகளிலும், அறிவுத்தொழிலார், ஆட்சித் தொழிலார், படைத்தொழிலார், வணிகத்தொழிலார், உழவுத்தொழிலார், பெருஞ் செல்வர் ஆகியோர் மேலோராகவும்; எவலர் (Peons), வண்ணூர், மஞ்சிகர் (Barbers), பறம்பர் (Shoemakers), வீட்டுவேலைக்காரர், கூலிவேலைக்காரர் முதலியோர் கீழோராகவும்; கருதப்படுவது இயல்பே. திருவள்ளுவர் "பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்கும்" என்றும், 'ஒழுக்க முடைமை குடிமை" என்றும், கூறியிருத்தலால், மேற் பிறந்தார் கீழ்ப்பிறந்தார் என்னும் மன்பதைப் பாகுபாடு மேற்கூறிய நால்வேறு நிலைமை பற்றியதேயன்றி, பரிமேலழகர் உரைத்தது போல் ஆரிய முறைப்பட்ட பிறவிக்குலப் பிரிவினையைத் தழுவிய தாகாது. எடிசன் செய்தித்தாள் விற்போராகவும் தாயின் (Stalin) பறம்பராகவும் இருந்து, அறிவாலும் ஆட்சியாலும் மேன்மை பெற் றமை காண்க, ஆரியமுறைப்படி பறம்பன் ஆள்வோனாகமுடியாது.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே." (புறம். கஅக).

"சிறப்பின் பாலார் மக்கள், அல்லார்
மறப்பின் பாலார் மன்னர்க்கு" (மணி. உக:கக—உ).

"தோணி யியக்குவான் தொல்லே வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணுங்
அவன்றுணையா ஆறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்." (நாலடி. ஈடுக).

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்." (வெற்றி. கூஅ)

என்பன இக்குறட் கருத்தைத் தழுவியன. "உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சி" என்று ஒருவன் வாழ்நாள் முழுதும் குலம் மாறுதிருப் பதாகப் பரிமேலழகர் கூறியிருப்பது ஆரிய நச்சுக் கருத்தாகும்.

சகo. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(இ—ரை.) இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் — விளங்கிய நூல்களைக் கற்றவரொடு கூடியுள்ள மற்றக்கல்லாதவர்; மக்களொடு விலங்கு அனையர்—பகுத்தறிவுள்ள உயர்திணை மக்களொடு கூடி யுள்ள அஃறிணை விலங்குகள் போல்வர்.

இக்குறட் பொருள்கோள் எதிர்நிரனிறை.

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே." (தொல். சஅச),

"மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே," (டிடி கஅக),

"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே," (டிடி கஅக)

என்பன, கல்வியாலாகும் பண்புடைமை யுண்மையின்மைபற்றி மாந்தரை மக்களென்றும் மாக்களென்றும் இருவேறு வகுப்பாகப் பிரிக்கும். "மக்களே போல்வர் கயவர்" என்பதால், வடிவொப்புமை யால் இரு வகுப்பாரும் ஒத்த பிறப்பின ரல்லர் என்பதாம். விலங்கு, நூல், என்பன பால்பகாவஃறிணைப் பெயர்கள். இலங்கு நூலாவன அறிவுவிளக்கத்திற் கேதுவான தொல்காப்பியமும் திருக்குறளும் போல்வன. (உதிச-ஆம் நாலடிச் செய்யுளை நோக்குக) (சoக-ஆம் குறளுரை). பரிமேலழகர் இக்குறளைச் சொன்முறை மாற்றுது உள்ள வாறேகொண்டு,

"வீலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத் தீமையுடையர், விளங்கிய நூலிற் கற்றோடு நோக்கக் கல்லாதவர்." என்று பொருளுரைப்பர்.

அதி. சஉ — கேள்வி

அஃதாவது, ஓர் ஆசிரியனிடத் தமர்ந்து ஒரு நூலே அல்லது கல்வித்துறையைக் கற்றவன், அத்துறையில் தேர்ச்சி பெற்ற பேரறிஞரையடுத்துத் தான் அறியாதவற்றைக் கேட்டறிதல். இது கல்வியின் தொடர்ச்சியாதலாலும் கல்லாமையால் நேர்ந்தகுறையை நீக்குதலாலும், கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

சகக. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(இ—ரை.) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் — ஒருவனுக்குச் சிறந்த செல்வமானது கேள்வியறிவாகிய செல்வம்; அச்செல்வம் செல்வத்துள் எல்லாம்தலை—அச்செல்வம் எல்லாச் செல்வங்களுள்ளும் தலைமையான தாகலான்.

செல்வங்கள் இருவகையும் மூவகையும் எண்வகையுமாகச் சொல்லப்படுவன. கல்வியுங் கேள்வியொடு தொடர்புடையதாய் அதனுளடங்குதலின், 'செல்வத்து ளெல்லாந்தலை' என்றார். 'கேடில் விழுச்செல்வம்' கல்வியென்பதும், 'மாடல்ல மற்றையவை' என்பதும் பின்னரே கூறப்பட்டன.

சகஉ. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(இ—ரை.) செவிக்கு உணவு இல்லாத போழ்து— செவியுணவாகிய கேள்வியறிவிற்கு இடமில்லாத பொழுது; வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் — தீப்போலும் பசியால் வாட்டும் வயிற்றிற்கும் ஒரு சிறிது உணவு இடப்படும்.

கேள்வியறிவு பண்பட்ட மக்கட்குச் சுவைமிக்கதாயும் மறுமைக்கும் பயன்படுவதாயும் அருகியே வாய்ப்பதாயுமிருத்தலால், 'இல்லாத போழ்து' என்றும், பேருணவாயின் சோம்பலும் தேடற்றுன்பமும் நோயுங் காமமும் மிகுதலால் 'சிறிது' என்றும், அதுவும்,

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம். கஅ),
"உடம்பா ரழியிலி னுயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்'' (திருமந். எஉசு) ஆதலால் பின்னும் உடம்போடிருந்து கேட்டற்பொருட்டு 'ஈயப் படும்' என்று சிறிது இழிவு தோன்றவும், கூறினர். உம்மை இழிவு கலந்த இறந்தது தழுவிய எச்சவும்மை.

சகஉ. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
ஞன்ருரோ டொப்பர் நிலத்து.

(இ—ரை.) செவிஉணவின் கேள்வி உடையார் — செவியுண வாகிய கேள்வியறிவினையுடையார்: நிலத்து அவிஉணவின் ஆன்ரு ரோடு ஒப்பர் — நிலவுலகில் வாழ்வாராயினும் அவியுணவினை யுடைய விண்ணுலகத்தேவரை யொப்பர்.

செவியுணவின் கேள்வி என்பதிலுள்ள இன்சாரியை அல்வழிக் கண் வந்தது. தேவர் அறிவுடையர் என்னுங் கருத்தால் ஆன்ரோர் என்னப் பெற்ரர். கேள்வியறிவினையுடையார் துன்பமின்றி யின்பமே நுகர்தலால் தேவருக்கொப்பாகக் கூறப்பட்டார்.

சகஊ. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்ருங் துணை.

(இ—ரை.) கற்றிலன் ஆயினும் கேட்க -- ஒருவன் பொருள் நூல்களையும் உறுதிநூல்களையும் கற்றிராவிடினும், அவற்றைக்கற் றுத்தேர்ந்த பேரறிஞரிடம் கேட்டறிக; அஃது ஒருவற்கு ஒற்கத் தின் ஊற்று ஆம் துணை—அக்கேள்வியறிவு ஒருவனுக்கு உலகியல் துறையிலேனும் ஆதனியல் (Spiritual) துறையிலேனும் தளர்ச்சி நேர்ந்த விடத்து ஊன்று கோலாந் துணையாகும்

இழிவு சிறப்பின் பாற்பட்ட ஒத்துக்கொள்வு (Concessive) உம்மை, கற்றிருத்தல் வேண்டுமென்னுங் குறிப்பினது.

''கல்லாரே யாயினுங் கற்ருரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தகைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு'' (நாலடி. கஉ=).

தளர்ச்சியாவது, வறுமையாலேனும் அறியாமையாலேனும் நோயி னாலேனும் இழப்பினாலேனும் நேரும் மனத்தடுமாற்றம். 'ஊற்று' முதனிலை திரிந்த தொழிலாகுபெயர். 'அஃதொருவற்கு' என்பது 'அதுவொருவற்கு' என்றிருந்திருத்தல் வேண்டும்.

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்" (எச),

"ஈத விசைபட வாழ்த லதுவல்ல(து)" (உஙக),

'பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்(து)" (இகூக)

"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல(து)" (ஙஎo),

"கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேல்" (கசசச)

என்னும் அடிகளை நோக்குக.

சகடு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ—ரை.) ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் — ஒழுக்க முடைய பெரியோர் வாய்ச் சொற்கள்; இழுக்கல் உடைஉழி ஊற்றுக்கோல் அற்றே—வழுக்கும் சேற்று நிலத்தில் நடப்பார்க்கு ஊன்றுகோல் உதவுவது போல, உலகில் வாழ்க்கை நடத்துவோர்க்கும் ஆட்சிசெய்வோர்க்கும் துன்பக்காலத்தில் உதவுந் தன்மையவே.

ஒழுக்கமில்லாதார் கல்வியுடையாரேனும் அன்பிலராதலின், அவர்வாய்ச்சொல் பயன்படாதென்பதுதோன்ற, 'ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்றார். வாய் என்றது தீச்சொல் வந்தறியாமை யுணர்த்தி நின்றது. இனி, வாய்ச்சொல் என்பது தப்பாது பயன்படும் வாய்மைச்சொல் எனினுமாம். ஏகாரம் தேற்றம்.

முந்தின குறளிற் பொதுப்படக் குறிக்கப்பட்ட கேள்வியறிவைப் பெறுமிடம் இங்கு வரையறுக்கப்பட்டது.

சகஎ. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ—ரை.) எனைத்தானும் நல்லவை கேட்க—ஒருவன் எத்துணைச் சிறிதாயினும் நற்பொருள்களைக் கேட்டறிக; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்—அக்கேள்வியறிவு அத்துணைச் சிறிதாயினும் நிறைந்த வலிமை பெற எதுவாகும்.

எனைத்து அனைத்து என்னும் அளவுச் சொற்கள் பொருளளவுங் கால அளவும் பற்றியன. ஆனும் என்பது ஆயினும் என்பதன்மரூஉ. "பலதுளி பெருவெள்ளம்". ஆவதுபோல் பல அறிவுத்துணுக்குகள்

திரண்டு பேரறிவாவதுடன் ஒரே அறிவுக்குறிப்பு ஒரோவழி உயிரைக்காப்பதும் பெருவெற்றிதருவது முண்டு. ஆதலால், கேள்வியறிவின் சிற்றளவு பற்றி இகழக்கூடாது என்பதாம்.

சகஎ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(இ—ரை.) இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர்—பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராய்ந்தறிந்து அதன்மேலும் பல்வேறு வகையில் திரண்ட கேள்வியறிவினையுடையார்; பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார்—ஏதேனுமொரு பொருளைத் தவறுக உணர்ந்த விடத்தும், தமக்குப் பேதைமையூட்டுஞ் சொற்களைப் பிறர்க்குச் சொல்லார்.

கல்வி கேள்வி யென்னும் இருவழியாலும் அறிவுநிரம்பியவர் ஒன்றைப் பிறழவுணர்ந்த விடத்தும், பொருத்தமாகச் சொல்வர் அல்லது சொல்லாமலே விட்டு விடுவர் என்பது கருத்து. பிழைத்துணர்தல் பிழையாகவுணர்தல், 'பேதைமை' ஆகுபொருளது. மயக்க நிலையிலும் பிறழாதுரைப்பர் என்பதற்கு 'பிழைத்துணர்ந்தும்' என்னும் தொடர் இடந்தராமை காண்க.

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(இ—ரை.) கேள்வியால் தோட்கப்படாத செவி—கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள்; கேட்பினும் கேளாத் தகையவே—தம் புலனுக்கேற்ப ஓசையொலிகளைக் கேட்குமாயினும் செவிடாந் தன்மையனவே.

ஐம்பொறிகளின் சிறந்த பயன் அறிவுப்பேறுதலின், கேள்வியறிவிற்கேற்காத செவிகள் 'கேளாத்தகைய' என்றும், கேள்வியறிவு புகுதற்கு இயற்கைத்துளையினும் வேறுள நுண்டுளை வேண்டியிருத்தலின், 'கேள்வியால் தோட்கப்படாத செவி' என்றும், கூறினர். ஏகாரம் தேற்றம்.

சகக. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

(இ—ரை.) நுணங்கிய கேள்வியர் அல்லார்—நுண்ணிதாகிய கேள்வியறி வில்லாதார்; வணங்கிய வாயினர் ஆதல் அரிது—பணிவான சொற்களையுடைய ராதல் இயலாது.

பொருளின் நுண்மை கேள்விமேலும் சொல்வார் பணிவு வாயின் மேலும் ஏற்றிக் கூறப்பட்டன. கேள்வி என்பதைக் கேள்வியறி வென்று கொள்ளின் ஏற்றுரை வழக்காகாது. 'வாய்' ஆகுபெயர். கேள்வி வாயிலாக அறிவு நிரம்பாதார் செருக்கித் தற்புகழ்ச்சி செய்வர் என்பது கருத்து. 'அல்லால்' என்பது பாடவேறுபாடு.

குறள் 140. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(இ—ரை.) செவியின் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள்—மேனிலை மாந்தர்போல் செவியால் நுகரப்படும் அறிவுப் பொருள்களின் சுவைகளை யுணராது, வாயால் நுகரப்படும் உணவுப் பொருள்களின் சுவைகளைமட்டும் உணரும் கீழ்நிலை மாந்தர்; அவியினும் வாழினும் என்—சாவதினால் உலகிற்கு என்ன இழப்பு? வாழ்வதனால் அதற்கென்ன பேறு?

செவியால் நுகரப்படுஞ் சுவைகள் இசைச்சுவை, சொற்சுவை, பொருட்சுவை என மூன்றும். அவற்றுள் இசைச்சுவை சொல்லல்லாது ஓசையாக மட்டுமுள்ள கருவியிசையும் மிடற்றிசையும் என இருவகைப்படும்; சொற்சுவை தொடையும் வண்ணமும் அணியும் என மூவகைப்படும்; பொருட்சுவை மெய்ப்பாடும் அணியும் என இருவகைப்படும். மெய்ப்பாடுகள் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி, சமந்தம் (சமநிலை) எனத்தொண்டாம் (ஒன்பதாம்). இவை யெல்லாம் தொண்சுவை யென்றும், இறுதி நீங்கலாக எண்சுவை யென்றும், சொல்லப் பெறும். அணிகள் உவமை, உருவகம் முதலியனவாக அறுபதிற்கு மேற்படுவன.

இசைச்சுவை ஐவகைப்பட்ட அஃறிணையுயிர்களாலும் நுகரப் படுதலின், ஏனையிரண்டும்போல் அத்துணைச் சிறந்ததன்றும். ஆயின், சொல்லொடு கூடின் மிகச்சிறந்ததாம். சொற்சுவையினும் பொருட்சுவையே சிறந்ததென்பது சொல்லாமலே விளங்கும்.

சொற்சுவைகளுள் தொடை ஐந்து; வண்ணம் எண்ணிறந்தன. அணி வரையறைப்படாதன.

வாய்ச்சுவை கைப்பு, கார்ப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என ஆறு. வாயுணவின் என்பது பாடவேறுபாடு.

அதி.சஅ—அறிவுடைமை

அஃதாவது, கல்வி கேள்விகளாலாய தெள்ளிய அறிவும் மதியு முடைமை. அதிகார வொழுங்கும் இதனுல் விளங்கும். அறிவு என் னும் சொல், அறிதல் (perception, knowing, understanding), அறிந்தசெய்தி (knowledge), ஓதி (wisdom), மதி (intelligence) என்னும் நாற்பொருளுணர்த்தும். அவற்றின் சேர்க்கை இங்கு அறி வெனப்பட்டது.

சூஉக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

(இ—ரை.) அறிவு அற்றம் காக்கும் கருவி—நிலவுலகில் வாழ் வார்க்கு, சிறப்பாக ஆள்வார்க்கு. அறிவானது அழிவு வராமற்காக் குங் கருவியாம்; செறுவார்க்கும் அழிக்கல் ஆகா உள் அரண்— அதுவுமன்றிப் பகைவராலும் அழிக்கமுடியாத உள்ளரணும்.

காத்தல் முன்னறிந்து தடுத்தல். உள்ளரண் அகக்கரணக் கூறுகிய அரண்; உட்புகுந்தழிக்க முடியாத நுண்பொருள் வடிவினது.

சூஉஉ. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ—ரை.) சென்ற இடத்தால் செலவிடா—மனத்தை அது சென்றவிடமெல்லாஞ் செல்லவிடாது; தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு—தீயவழியை நீக்கி றல்ல வழியிற் செலுத்துவது அறிவாம்.

விடாது என்பது கடைக்குறைந்து நின்றது. செல்லுதல் என் னும் வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'ஒரீஇ' இன்னிசையளபெடை, இங்கு மனத்தைக் குதிரைபோற் கருத வைத்தது குறிப்புருவகம்.

சூஉங. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ—ரை.) எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்—எப் பொருள் எவரெவர் சொல்லக் கேட்பினும்; அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு—அப்பொருளின் உண்மையான பொரு ளைக் காணவல்லது அறிவு.

தேவிகம் (சாத்துவிகம்), மாந்திகம் (இராசதம்), பேயிகம் (தாமதம்) என்னும் முக்குணங்களும் பெரும்பாலார்க்கு மாறி மாறி வருவதால், நற்பொருள் பகைவர் வாயினும் தீப்பொருள் நண்பர் வாயினும், சிறந்த பொருள் இழிந்தோர் வாயினும் இழிந்தபொருள் சிறந்தோர் வாயினும், கேட்கப்படுதலால், 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்' என்றார். அடுக்குத்தொடர் பல்லைமபற்றிவந் தது. வாய் என்பது சொல்லும் பொருட்கு ஏற்காமையுணர நின்றது. சொல்வாரை நோக்காது சொல்லும் பொருளையே நோக்கி, கொள் ளுவது அல்லது தள்ளுவது அறிவென்பதாம்.

422. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(இ—ரை.) எண்பொருளவாகச் செலச் சொல்லி—பிறருக்குச் சொல்லும் போது அரியபொருள்களையும் எளிய பொருள்களாக அவர்க்கு விளங்குமாறு சொல்லி; தான் பிறர்வாய் நுண்பொருள் காண்பது அறிவு—தான் மட்டும் பிறர்வாய்க் கேட்கும் அருஞ்சொற் களின் நுண்பொருளை எளிதாய் அறிந்து கொள்வது அறிவாம்.

பொருளை அறிவிக்கும் வாயில் சொல்லேயாதலாலும், அரிய பொருளை எளிதாக்குவதும் எளிய பொருளை அரிதாக்குவதும் சொல் லின் தன்மையைப் பொறுத்திருத்தலாலும், 'எண்பொருள வாகச் செலச்சொல்லி' என்றார். 'வாய்' ஆருபெயர். அறிவு என்றது அறிவுடைமையை.

423. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(இ—ரை.) உலகம் தழீஇயது ஒட்பம்—உயர்ந்தோரை நட் பாகத் தழுவிக் கொள்ளுதல் நல்லறிவாம்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு—அந்நட்பொழுக்கத்தில் வளர்தலுந்தளர்தலுமின்றி ஒருநிலைப்பட்டு உறுதியாய் நிற்றல் அறிவுடைமையாம்.

கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்னும் நால்வகைப் பூக்களுள், நீர்ப்பூ ஒருவேளை மலர்வதும் ஒருவேளை குவிவதுமாக நிலை

மாறுந் தன்மையது. ஏனோமூன்றும் மலர்ந்தபின் மீண்டுங்குவியாது ஒரே நிலையின வாவன. இங்ஙனம் ஒரு நிலைப்பட்டிருப் பதையே 'மலர்தலுங் கூம்பலுமில்லது' என்றார். 'உலகம்' வரையறைப்பட்ட இடவாகுபெயர். 'தழீஇயது' இன்னிசையளபெடை. இதில் வந்துள்ளது ஒருமருங் குருவகம். மலர்தற்கும் கூம்பற்கும் செல்வ வறுமைகளும் காரணியமாகலாம்.

"கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்." (நாலடி. உகஙி).

சஉக. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(இ—ரை.) உலகம் எவ்வது உறைவது — உயர்ந்தோர் எவ் வாறு ஒழுகுகின்றாரோ; அவ்வது உலகத்தோடு உறைவது அறிவு —அவ்வாறே அவரொடு பொருந்தியொழுகுதல் அறிவுடைமையாம்.

உயர்ந்தோரைப் பின்பற்றுவது பொதுமக்கட்கு ஒழுக்கவுயர் வாம்; அரசர்க்கு அதனொடு புகழும் பதவிப்பாதுகாப்புமாம்.

சஉஎ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

(இ—ரை.) அறிவுடையார் ஆவது அறிவார்—அறிவுடையார் எதிர்காலத்தில் நிகழக் கூடியதை முன்னறிய வல்லவர்; அறிவிலார் அஃது அறிகல்லாதவர் — அறிவில்லாதவர் அதனை முன்னறியும் ஆற்றலில்லாதவர்.

முன்னறிதல் எண்ணியறிதலும் எண்ணுதறிதலும் என இரு வகை. எண்ணியறிதல் பொதுவகைப்பட்ட அறிஞர் செயல்; எண் ணுதறிதல் இறைவனுல் முற்காணியர்க்கு (Prophets) அளிக்கப் பட்ட ஈவு.

"பிற்பயக்குமது அறிவார் அறிவுடையாராவார்" என்று மணக் குடவபரிப்பெருமாளரும், "அறிவுடையவர் ஆகும் காரியம் அறி வார்." என்று பரிதியாரும், "உலகத்து அறிவுடையோர்..... தமக்கு இருமை ஆக்கமும் ஆவதனை அறிந்து ஒழுகுவாரே." என்று காளிங்கரும், உரைப்பர். தமக்கு நன்மையாவதை அறிவது தன்னல மியல்பேயன்றி அறிவுடைமையாகாது.

சஉஅ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ.
தஞ்ச லறிவார் தொழில்.

(இ—ரை.) அஞ்சுவது அஞ்சாமை பேதைமை — அஞ்ச வேண்டுவதற்கு அஞ்சாமை பேதைமையாம்; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்—அஞ்சவேண்டுவதற்கு அஞ்சுவது அறிவுடை யார் செயலாம்.

அறங்கடையும் (பாவமும்) பழியும் அழிவும் அஞ்சப்படுவன. அவற்றை 'அஞ்சுவது' என்றது வகுப்பொருமை. அஞ்சவேண்டு வதற்கு அஞ்சாமைபோன்றே, அஞ்சவேண்டாததற்கு அஞ்சுவதும் பேதைமையாம். இருட்டிடமும் நாட்டுப்போரும் அவைப்பேச்சும் அஞ்சவேண்டாதன, 'அஞ்சாமை' பொருட்படுத்தாது செய்து துன் புறுதல் அல்லது கெடுதல். 'அஞ்சல்' பொருட்படுத்தித் தவிர்ந்து இன்புறுதல். அஞ்சுவதஞ்சல் அறிஞர் இயல் பென்றற்கு 'அறிவார் தொழில்' என்றார்.

முன்பு அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப் பட்டமையால் (கூஅஉ). அதற்கு மாறான அஞ்சுவதும் அரசனுக்குண்டென்று இங்குக் கூறியவாறு.

சஉக. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

(இ—ரை) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு — எதிர்காலத் தில் வரக்கூடியதை முன்னரே யறிந்து தம்மைக் காக்கவல்ல அறி வுடையார்க்கு; அதிர வருவது ஓர் நோய் இல்லை — அவர் அஞ்சி நடுங்குமாறு வரக்கூடிய துன்பம் ஒன்று மில்லை.

நோய்செய்யும் துன்பத்தை நோயென்றார். நோவது நோய். காத்தலாவது வராமல் தடுத்தல், அல்லது தம்மைத்தாக்காதவாறு தமக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தேடிவைத்துக் கொள்ளு தல். வருமுன் காத்தல், வருங்கால் காத்தல், வந்தபின் காத்தல் என்னும் மூவகைக் காப்பினுள் முதலதே தலையாயதும் செய்ய வேண்டுவதும் எனக்கூறியவாறு.

சஉ0. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

(இ—ரை.) அறிவு உடையார் எல்லாம் உடையார் — அறிவு டையார் வேறொன்றுமிலராயினும் எல்லாம் உடையவராவர்; அறிவு இலார் என் உடையரேனும் இலர் — அறிவில்லாதவர் பிறவெல்லா முடையராயினும் ஒன்றுமில்லாதவராவர்.

எல்லாச் செல்வங்களும் அறிவாலேயே ஆக்கவுங் காக்கவும் படுதலின், அறிவுடையாரை 'எல்லா முடையார்' என்றும்; பிறசெல் வங்களெல்லாம் ஏற்கெனவே யமைந்திருப்பினும் அவற்றை அழி யாமற்காத்தற்கும், அவற்றிற்குத் தெய்வத்தால் அழிவுநேர்ந்த விடத்துப் புதிதாய்ப்படைத்தற்கும், வேண்டிய கருவியாகிய அறி வின்மையின், அறிவிலாரை 'என்னுடைய ரேனுமிலர்' என்றும், கூறினர்.

''நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பயிணத்த பெருஞ்செல்வம்''—(நாலடி. உஙச).

அதி. சசு. குற்றங்கடிதல்

அஃதாவது, ஐம்பெருங் குற்றமென்றும் அறுவகை உட்பகை யென்றும் சொல்லப்படும் குற்றங்களையெல்லாம், அரசனும் பிறரும் தங்கண், நிகழாதவாறு விலக்குதல். கொலை, களவு, பொய், வெகுளி. கடும்பற்றுள்ளம், மானம். உவகை, செருக்கு என்பன அறுவகை யுட்பகை.

வடநூலார் இவற்றைச் சிறிது வேறுபடவுங் கூறுவர். ஆயின், அவ்விருவேறு பாகுபாட்டிற்கும் மூலம் தமிழ் என்பது தேற்றம். எனினும், அரசியற்பாகுபாடு தன் துறைக்கேற்ப மதவியற் பாகு பாட்டினின்றும், சிறிது வேறுபடும்.

அறிவுடையார்க் கல்லது இக்குற்றங்களைக் கடிதல் கூடாமை யின், இது அறிவுடைமையின் பின் வைக்கப்பட்டது.

சஉக. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(இ—ரை.) செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக் கம்—அகங்கரிப்பும் வெகுளியும் கழிகாமமுமாகிய குற்றங்களில்லாத அரசரின் செல்வம்; பெருமித நீர்த்து—மேம்பாட்டுத் தன்மையை யுடைத்து.

செருக்கினுற் காவற்கடமை தவறுதலும் பெரியாரைப் பிழைத்தலும், சினத்தினுல் ஐம்பெருங்குழுவும் உறுசிச்சுற்றமும் போன்ற வற்றின் அன்பை இழத்தலும், சிறுமையினுல் பழியும் உயிர்ச்சேதமும், நேருமாதலின், அக்குற்றங்களில்லாத அரசரின் செல்வம் வீறுபெற்றதென்றார். சிறியோர் இயல்பு என்னுங் கருத்தால் அளவிறந்த காமம் 'சிறுமை' எனப்பட்டது.

சஉஒ. இவறலு மாண்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு.

(இ—ரை.) இவறலும்—செலவிடவேண்டிய வகைக்குச் செலவிடாத கடும்பற்றுள்ளமும்; மாண்பு இறந்த மானமும் — தவருன தன்மானமும்; மாணு உவகையும் — அளவிறந்த மகிழ்ச்சியும்; இறைக்கு ஏதம்—அரசனுக்குக் குற்றங்களாம்.

இவறலால் மேற்கூறிய ஈகை (கூஅஉ), வகுத்தல் (கூஅடி) கொடையளி, குடியோம்பல் முதலியன செவ்வையாய் நிகழா. மாண்பிறந்த மானமாவது, ஐங்குரவர்க்கும் அந்தணர், சான்ரோ ரருந்தவத்தோர் முதியோர்க்கும் வணக்கஞ் செய்யாமை. மாணுவுவகையாவது மகிழ்ச்சியின் மைந்துற்று இகழ்ச்சியிற் கெடுதல் (குகூ).

சஉஓ. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

(இ—ரை.) பழிநாணுவார்—பழிக்கு அஞ்சுவார்; தினைத்துணை ஆம் குற்றம் வரினும் பனைத்துணையாகக் கொள்வர்—தம்மிடம் தினை யளவு சிறிதாகக் குற்றம் நேரினும் அதைப் பனையளவு பெரிதாகக் கருதுவர்.

தினை, பனை, என்பன அளவுப்பெயர்கள்; இங்குச் சிறுமை பெருமை பற்றியே வந்தன. உம்மை இழிவு சிறப்பு. 'குற்றம் வகுப் பொருமை. கொள்ளுதல் கொண்டு நீக்குதல்.

சஉச. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருமும் பகை.

(இ—ரை.) அற்றம் தரும் பகை குற்றமே — தனக்கு அழிவை உண்டாக்கும் பகை தன்குற்றமே; குற்றமே பொருளாகக் காக்க— ஆதலால் தன்னிடத்துக் குற்றம் வராமையையே பொருட்டாகக் கொண்டு காத்துவருக.

கரணகத்தை (காரணத்தை)க் கருமகமாக (காரியமாக)ச் சார்த்திக் கூறுவது மரபாதல் பற்றி, குற்றத்தைப் பகையென்ருர். காம வெகுளி கடும்பற்றுள்ள மான வுவகை செருக்குகளே அறுபகை (காஞ்சிப்பு. திருமேற். சு) என்பது போன்றே, காமவெகுளி மயக்கங் களே முப்பகை என்று கம்பர் கூறுதல் காண்க.

"மொழிந்தன ராசிகள் முப்பகை வென்ருர்" (கம்பரா. கார்முகம் உசு). குற்றங்கள் பகைவர்போற் கொல்லும் என்பதை,
"அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடென் பது." (குறள். கசுடு).
"தன்னையே கொல்லுஞ் சினம்" (ஙி கூஅடு). என்பவற்றுல் அறியலாம்.

இங்ஙனமிருப்பவும், "இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமை யின், இவையே பகையாவன என்னும் வடநூலார் மதம்பற்றிக் 'குற்றமே யற்றந் தருஉம் பகை' யென்றும் .....கூறினர்." என்று பரிமேலழகர் தம் நச்சுக்கருத்தை இங்கும் புகுத்தினர். 'குற்றமே காக்க' என்பது "சினங்காக்க" (குறள். கூஅடு) என்பது போல் நின்றது. 'தருஉம்' இசைநிறையளபெடை.

சாடு. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(இ—ரை.) வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை—குற்றம் நேர்வதற்கு முன்பே அதையறிந்து தடுக்காத அரசனது வாழ்க்கை; எரி முன்னர் வைத்தூறுபோலக் கெடும்—அது நேர்ந்தவுடன் நெருப்பு முகத்து நின்ற வைக்கோற்போர்போல அழிந்து விடும்.

குற்றம்என்பது அதிகாரத்தால் வந்தது. முன்—முன்னம்—முன்னர். குற்றத்தை அது வருமுன் காக்கவேண்டு மென்பதும், குற்றஞ் சிறிதாயினும் அதனற் பேரிழப்பு விளைந்து நேருமென்பதும், உவமையாற் பெறப்பட்டன.

சாகூ. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

(இ—ரை) தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்—முன்பு தன் குற்றத்தைக் கண்டு அதை நீக்கிவிட்டுப் பின்பு பிறர் குற்றத்தைக்காண வல்லனுயின்; இறைக்கு ஆகும் குற்றம் என்—அரசனுக்கு வரக்கூடிய குற்றம் யாது? ஒன்று மில்லை.

இது குடிகளின் வழக்குத் தீர்த்துத் தண்டித்தல் பற்றியது. பிறர் குற்றங்கண்டு தண்டிப்பவன் முன்பு தான் அக்குற்றமில்லாத வனு யிருத்தல் வேண்டும். அரசன் தன் குற்றத்தை நீக்காது பிறர் குற்றத்திற்குத் தண்டிப்பதே குற்றமாம். அங்ஙன மன்றித்தன் குற்றத்தை நீக்கியபின் தண்டிப்பின் அது முறைசெய்தலாம். அது அவன் கடமையாதலால் 'என்குற்ற மாகும்' என்ருர். 'கில்' ஆற்ற லுணர்த்தும இடைநிலை.

சஉ. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

(இ—ரை.) செயற்பால செய்யாது இவறியான் செல்வம்—பொருளால் தனக்கும் தன் நாட்டிற்கும் ஆக்கமும் பாதுகாப்பும் பற்றிச் செய்யவேண்டியவற்றைச் செய்துகொள்ளாது, அதனிடத்துப் பற்றுள்ளம் வைத்த அரசனின் செல்வம்; உயற்பாலது அன்றிக் கெடும்—அழிவிற்குத்தப்பி எஞ்சியிருக்குந் தன்மையின்றி வீணே கெடும்.

செல்வத்தாற் செயற்பாலன அறம் பொரு ளின்பங்கள்.
"அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்ரு மைந்நிற் போற்ரு மையே," (புறம். உஅ)
என உறையூர் முதுகண்ணன் சாத்தனர் பாடியிருத்தல் காண்க.

வளமைக்காலத்தில் அறவோர்க்கும் துறவோர்க்கும் வழக்கமாக அறப்புறம் விடுவதுடன், வறட்சிக் காலத்தில் வந்தவர்க்கெல்லாம் பருப்புச்சோறு, தயிர்ச்சோறு, எலுமிச்சஞ்சோறு, ஊன்சோறு, முதலிய சோற்றுருண்டை வழங்கும் சிறுசோற்றுவிழாவும் அறத்தின் பாற் படுவதாம்.

"சிறுசோற்ருனு நனிபல கலத்தன் மன்னே" (புறம். உகஅ).
"வாயின் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே." (ஐஙகக)
"அட்டான் ருஞக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி" (ஐ ககஙக

ஒரு நாட்டிற்கு முதன்மையாகச் சிறந்தபொருள் உணவேயாதலின், உணவை விளைக்கும் உழவுத்தொழிலைப்பெருக்க நீர் நிலைகள் அமைப்பதும் வரி குறைத்தும் கடனுதவியும் உழவரை ஊக்குவதும், பொருட்பாற் படுவனவாம்.

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
.....
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே." (புறம். கஅ).

"பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
னடிபுறந் தருகுவ ரடங்கா தோரே." (ஐஞ உரு).

பொருளாற் படைதிரட்டிப் பிறநாடு கைக்கொண்டு இறையும் நிறையுமாகிய செல்வம் பெறுவது, பொருளாற் பொருள் செய்தலாம்.

"பொன்னி னுகும் பொருபடை யப்படை
தன்னி னுகுந் தரணி தரணியிற்
பின்னி யாகும் பெரும்பொரு ளப்பொருள்
துன்னுங் காலத்துன் னுதன வில்லையே." (சீவக. விமகீ.உரு)

புலவர், பாணர், கூத்தர், பொருநர் முதலியோர்க்கு நாள் தொறும் பரிசுவழங்குவது, செல்வப் பொருளாற் கல்விப் பொருள் வளர்த்தலாம்.

புதுப்புனலாட்டுவிழா, வேந்தன் (இந்திர) விழா முதலிய திரு விழாக்கள், பட்டிமண்டபம், வேட்டையாடல் முதலியவற்றிற்குச் செலவிடுவது இன்பத்தின் பாற்படுவதாம்.

கெடுதல் கள்வராலும் பகைவராலுங் கொள்ளப்படுதலும் மக்கிப்போதலும் வெள்ளத்தாலழிதலும். உயற்பாலதின்றி என்றும் பாடம்.

சஉஅ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(இ—ரை.) பற்றுள்ளம் என்னும் இவறன்மை—பொருளைச் செலவிட வேண்டிய விடத்துச் செலவிடாது தன்னுடனேயே

வைத்துக் கொள்ளுமாறு, உள்ளத்தால் அதை இறுகப்பற்றும் கஞ்சத்தன்மை; எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று—பிற குற்றங்களோடு சேர்த்தெண்ணப்படாது தனியாக வைக்க வேண்டிய ஒரு குற்றமாகும்.

கஞ்சத்தனம் எல்லா நற்குணங்களையும் அடக்கி அவற்றைப் பயன்படாவாறு செய்து விடுதலின், 'எற்றுள்ளும் எண்ணப்படுவ தொன்றன்று' என்றார். எவற்றுள்ளும் என்பது 'எற்றுள்ளும்' என இடைக்குறைந்து நின்றது.

சஉஊ வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(இ—ரை.) எஞ்ஞான்றும் தன்னை வியவற்க — அறிவாற்றல் களிலும் இடம் பொருளேவல்களிலும் தான் மிகவுயர்ந்தபோதும் தன்னை மெச்சிச் செருக்குறு தொழிக; நன்றி பயவாவினை நயவற்க— தனக்கும் தன்நாட்டிற்கும் நன்மை தராத செயல்களை மானத்திலு மேலினும் செருக்கினுமேலினும் இன்பங்கருதியேனும் விரும்பா தொழிக.

அரசன் தன்னை வியந்த விடத்து, காலம் இடம் வலிமுதலியன பற்றித் தன்னைப் பகைவருடன் ஒப்புநோக்கி ஏற்றத்தாழ்வறிய வர்ப்பின்மையானும், அறமும் பொருளும் கவனிக்கப் படாமையா னும், முற்காப்பும் விழிப்பும் இல்லாது போதலானும், 'எஞ்ஞான்றும் வியவற்க' என்றும்; தான் கருதியதை முடித்தே விடுவதென்னும் ஆணவத்தால் அறம் பொருளின்பம் பயவா வினைகளை மேற்கொள் ளின், அவற்றுற் கரிசும் (பாவமும்) பழியும் கேடுமே விளையுமாகலின் அவற்றை 'நயவற்க' என்றும் கூறினர்.

தன்னைவியந்து கெட்டவர்க்குப் பொதுவியலில் விஸ்விபுத்தி ராழ்வாரும், வேத்தியலில் அரச அதிகாரம் பூண்ட விசயநகர அமைச்சர் இராமராயரும் எடுத்துக் காட்டாவர்.

சஉ0. காதல காதல றியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(இ—ரை.) காதல காதல் அறியாமை யுய்க்கிற்பின்—ஒருவன் தான் பித்துக் கொள்வது போலும் பெருவிருப்புக்கொண்ட பொருள் களையும் துறைகளையும் தன் பகைவர்க்குத் தெரியாவாறு நுகரவும் கையாண்டின்புறவும் வல்லனையின்; ஏதிலார் நூல் ஏது இல—அப் பகைவர் தன்னை வஞ்சித்தற்குச் செய்யுஞ் சூழ்ச்சி ஏதும் பயனற்ற தாய்ப்போம்.

தான் காதலித்தவற்றைத் தன்பகைவர் அறியாவாறு மறைவாக நுகரின், அவர் தன்னைக்கெடுக்கும் வாயிலின்மையால் வஞ்சிக்கப்படான் என்பதாம். காதலிக்கப்படும் பொருள்கள் காமம், கள், வேட்டை, மதவெறி, யானைப்போர், ஏறுதழுவல் முதலியனவாம். அரசன் இவற்றுள் தன் அரண்மனைக்குள் நுகரக் கூடியவற்றை அதனுள்ளும், கூடாதவற்றை மாறுகோலம் பூண்டும் தக்க மெய்காப்போடு வெளியேறியும், நுகர்தல் வேண்டும். சூது முற்றுங் கடியப்படுங் குற்ற மாதலின் அது தனியதிகாரத்திற் கூறப்படும். பொதுமக்கட்காயின் தகர்ப்போர், சேவற்போர், காடைப்போர் முதலியனவும் காதலவாகும்.

ஏதும் தொடர் பில்லாத அயலாரைக் குறிக்கும் ஏதிலார் என்னும் சொல், இங்கு ஏதும் அன்பில்லாத பகைவரைக் குறித்தது. நூல் என்பது நூலறிவாற் செய்யப்படும சூழ்ச்சியைக் குறித்தலின் கருவியாகுபெயர். 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை.

அதி. சுரு—பெரியாரைத் துணைக்கோடல்.

அஃதாவது,

> "கொண்டபே—ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
> யேற்ற கருமஞ் செயல்." (மூதுரை, கக)

ஆதலின், ஐவகையும் அறுவகையுமான குற்றங்களைத் தன்கண் நீக்கிய அரசன், தன் ஆட்சியைக் குற்றமின்றிச் செவ்வையாக நடாத்துதற்கு, இயற்கை மதிநுட்பத்தோடு நூலறிவும் சூழ்ச்சித் திறனும் தூயவொழுக்கமு முடைய பெரியாரைத் தன் அமைச்சராகத் துணைக்கொள்ளுதல். அதிகார முறைமையும இதனால் அறியப்படும்.

பரிமேலழகர் "பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வாராமற் காத்தற் குரிய ..... புரோகிதர்" என்று இங்கும் தம் ஆரியநஞ்சு நிறைந்த நெஞ்சைக் காட்டியுள்ளார்.

சூசக. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(இ—ரை.) அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை—அறத்தின் இயல்பையறிந்து தன்னினும் மூத்த அறிவுடையாரது

நட்பை; திறன் அறிந்து தேர்ந்து கொளல்—தரம் அறிந்து ஆய்ந்து பார்த்துத் தழுவிக் கொள்க.

அறத்தின் தன்மையை நூலாலன்றி உத்தியாலும் பட்டறிவாலும் அறியவேண்டுதலின், 'அறனறிந்து' என்றார். மூத்தல் ஆண்டாலும் அறிவாலும் முதிர்தல். அறிவுடையார் அரச நயன்மையையும் (நீதியையும்) உலகியலையும் ஒருங்கே அறிந்தவர். திறனறிதல் தலையிடை கடை யென்னுந் தரமறிதல்.

உஉ. உற்றநோய் நீக்கி உருஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(இ—ரை.) உற்ற நோய் நீக்கி—தெய்வத்தால் அல்லது மக்களால் நேர்ந்த துன்பங்களை முறைப்படி நீக்கி; உருமை முன் காக்கும் பெற்றியார்—அத்தகையன பின்பு நேராவண்ணம் முன்னறிந்து காக்க வல்ல தன்மையுடையாரை; பேணிக் கொளல்—அவர் மகிழ்வன செய்து அவர் துணையைப் போற்றிக் கொள்க.

தெய்வத்தால் வருந்துன்பங்கள் மழையின்மை, மிகுமழை, கடுங்காற்று, கொள்ளைநோய், நிலநடுக்கம், கடல்கோள் முதலியன. அவை இறைவனை நோக்கிச் செய்யும் விழாக்களாலும் வேண்டுதல்களாலும் நோன்பினாலும் நீக்கப்படும். மக்களால் வருந்துன்பங்கள் பகைவர் செய்யும் போர், கள்வர் செய்யுங்களவு, கொள்ளைக்காரர் செய்யுங் கொள்ளையடிப்பும் ஆறலைத்தலும், சுற்றத்தாரும் வினைசெய்வாரும் செய்யும் களவுங் கொடுமையும் முதலியன. அவை இன்சொல் (சாமம்) பிரிவினை (பேதம்) கொடை தண்டம் ஆகிய நால்வகை ஆம்புடையுள் (உபாயத்துள்) ஏற்ற ஒன்றால் அல்லது பலவற்றால் நீக்கப்படும். முற்காத்தலாவது, தெய்வத்தால் வருபவற்றைத் தீக்குறிகளால் அறிந்து விழவு நோன்பு முதலிய சமந்தியால் (சாந்தியால்) தடுத்தலும், மக்களால் வருபவற்றை அவர் குணம், குறிப்பு (இங்கிதம்), தோற்றம் (ஆகாரம்), செயல், சொல் முதலிய வற்றாலறிந்து நால்வகை ஆம்புடைகளுள் ஒன்றால் தடுத்தலும், ஆம். குறிப்பு உறுப்பின் தொழில்; தோற்றம் உடம்பின் பார்வை வேறுபாடு. மகிழ்வன செய்தலாவது, முற்றூட்டும் பட்டமுமளித்தலும் கண்ணியமாக நடத்துதலும் கூறிய அறிவுரையைக் கடைப்பிடித்தலுமாம்.

"கடவுளரையுந் தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்தி"
என்று சிறுதெய்வ வணக்கத்தையும், "ஆகவே,
புரோகிதரையும்.....கூறியவாறுயிற்று."

என்று பிராமணப்பூசாரியரையும், பரிமேலழகர் இங்குக் குறித்திருப்பது தவறும்.

தானம் என்னுஞ் சொல் தமிழேயாயினும், அது அறப்புறக்கட்குக் கொடுப்பதையே சிறப்பாய்க் குறித்தலின் இங்கு விலக்கப்பட்டது. 'உருஅமை' இசைநிறையளபெடை.

சசஙு. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(இ—ரை.) பெரியாரைப் பேணித் தமராக் கொளல்— அறிவிலும் சூழ்வினையிலும் பெரியோரைப் போற்றித் தமக்குச் சுற்றமாகக் கொள்ளுதல்; அரியவற்றுள் எல்லாம் அரிதே—அரசர் பெறக்கூடிய அரும்பேறுக ளெல்லாவற்றுள்ளும் அரியதாம்.

ஏகாரம் தேற்றம்.

சசச. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(இ—ரை.) தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்—அறிவு முதலியவற்றுல் தம்மினும் பெரியவர் தமக்குத் துணைவராமாறு அவர் வழிநின் றொழுகுதல்; வன்மையுள் எல்லாம் தலை—அரசர்க்குரிய வலிமைக ளெல்லாவற்றுள்ளுந் தலையானதாம்.

படை, அரண், பொருள், நட்பு முதலிய வலிமைகளால் நீக்கப்படாத தெய்வத்துன்பங்களை நீக்குதற்கும், அடையப்பெறுத வெற்றியை அடைதற்கும், உதவும் பெரியார் துணை அவ்வலிமைகளினுஞ் சிறந்தது என்பதாம்.

சசஞ. சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(இ—ரை.) சூழ்வார் கண்ணுக ஒழுகலால் — மந்திரிமாரைக் கண்ணுறக் கொண்டு அரசியல் நடத்தலால்; மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்—அரசன் மந்திர வினைஞரை ஆராய்ந்து அவருட் சிறந்தவரைத் தனக்குத் துணையாகக் கொள்க.

அரசரெல்லார்க்கும் சூழ்வினைத்திறம் இன்மையானும், அத்திறமுள்ளவர்க்கும் பல் வேறு தொழிற்சுமை வந்தழுத்துதலானும்,

அரசர்க்கு இயல்பாகவுள்ள போர்த்திறம் சூழ்வினைத்திறத்தை மறைத்தலானும், மந்திரித்தொழிற்கென்றே பிறந்தவரும் அஃதொன்றையே தொழிலாகக் கொண்டவருமான மந்திரிமாரின் றிப் பொதுவாக எவ்வரசும் இனிது நடைபெறுமையின், அவரைக் கண்ணுகக் கூறினர். ஆராய்தலென்றது, திருக்குறள் போலும் முப்பால் அற நூல்களுள் அல்லது அரசியலொன்றே கூறும் பொருள் நூல்களுள், அமைச்சியலிற் சொல்லப்படும் அமைச்சிலக் கணங்களை. மன்னவன் என்னும் குறுநில அரசன் பெயர் இங்குப் பெருநிலவரசனையுங் குறித்து நின்றது.

சசக. தக்கா ரினத்தனுய்த் தானெழுக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில்.

(இ—ரை.) தக்கார் இனத்தனுய்த் தான் ஒழுக வல்லானை — தக்க அமைச்சரைச் சுற்றமாகவுடையனுய்த் தானும் அறிந்தொழுக வல்ல அரசனை; செற்றூர் செயக்கிடந்தது இல்—பகைத்தவர் செய்யக்கூடிய தீங்கு ஒன்று மில்லை.

தக்கார் அமைச்சுத் தொழிலுக்குத் தகுதியுடையார். நட்புப்பிரித்தல், பகைபெருக்குதல், உட்பகை விளைத்தல், பொருதல், வஞ்சித்தல், முதலிய பல்வேறு வலக்காரங்களை (தந்திரங்களை)ப் பகைவர் கையாளினும், தகுந்த அமைச்சர் துணைகொண்டு தானும் அறிந்தொழுக வல்லானுக்கு ஒரு தீங்குஞ் செய்ய முடியா தென்பார், 'செற்றூர் செயக்கிடந்த தில்' என்றார்.

சசஎ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்

(இ—ரை.) இடிக்கும் துணையாரை ஆள்வாரை—குற்றங்கண்டவிடத்து வன்மையாய்க் கடிந்து கூறும் உண்மைத்துணையாளரைத் தமக்குச் சிறந்தவராகக் கொண்டொழுகும் அரசரை; கெடுக்கும் தகைமையவர் யாரே—கெடுக்குந் திறமையுடைய பகைவர் உலகத்தில் யார்தான் ?

குற்றங்கள் அறங்கடையும் (பாவமும்) அரசநேர்பாடு (நீதி) அல்லனவும். உண்மைத்துணையாவது அக்குற்ற மின்மையும் அரசன் கண் அன்புடைமையும். அத்தகையார் அரச நெறியினின்று நீங்க விடாமையின். அவரைத்துணைக் கொண்டவர் ஒருவராலுங் கெடுக்கப்படார் என்பதாம். இடிக்குந்துணையார் என்பதற்கு நெருங்கிச் சொல்லுமளவிலேனர் என்று உரைக்கும் உரை சிறந்ததன்று.

ரூசுஅ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

(இ—ரை.) இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்—குற்றங் கண்டவிடத்துக் கடிந்துரைத்தற் குரியாரைத் தனக்குத்துணையாகக் கொள்ளாத காப்பற்ற அரசன்; கெடுப்பார் இலானும் கெடும்—தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லையாயினும் தானே கெடுவான்.

'இல்லாத ஏமரா' என்னும் பெயரெச்ச வடுக்கு கரணிய (காரண) கருமிய (காரிய)ப் பொருளது. ஏ+மரு(வு)=ஏமரு. ஏமருதல் காப்புறுதல். உம்மை எதிர்மறை குறித்த வைத்துக்கொள்வுப் பொருளது. தானே கெடுதல், ஓட்டுநன் இல்லாத வண்டியிழுக்குங் காளை நெறியல்லா நெறிச்சென்று பள்ளத்தில் விழுந்து கெடுவது போன்றது.

ரூசுஆ - முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

(இ—ரை.) முதல் இலார்க்கு ஊதியம் இல்லை—முதற்பொருளில்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியமும் (இலாபமும்) இல்லை; மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை—அது போல, தம்மொடு சேர்ந்து தம்அரசை, முட்டுக்கொடுத்துத் தாங்கும் துணையில்லாத அரசர்க்கு அதனால் ஏற்படும் நிலைபேறும் இல்லை.

ஊதியப் பேற்றிற்கு முதலீடு போல அரசு நிலைபேற்றிற்கு அமைச்சுத்துணை இன்றியமையாததென்பதாம். இதில் வந்துள்ளது எடுத்துக் காட்டுவமை யணி. பொருளாக வந்த தொடர் ஒருமருங்குருவகம். ஆகவே, இணையணியாம்.

ரூடுo. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

(இ—ரை.) நல்லார் தொடர் கைவிடல்—அரசன் நற்குணச் செல்வரான பெரியாரொடு நட்பை விட்டு விடுதல்; பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்தே—தான் ஒருவனுகநின்று பலரொடு பகை கொள்வதினும் பதின்மடங்கு தீமை விளைப்பதே.

ஒருவன் பகைவர் பலராயினும், அவரைப் பிரித்தல், ஒருவரோடொருவரை மோதுவித்தல், சிலரைத் தனக்கு நட்பாக்கல் முதலிய வலக்காரங்களைக் கையாண்டு கேட்டிற்குத் தப்புதல்கூடும்.

ஆயின், நல்லார் தொடர்பை விடுபவரோ ஒருவகையாலும் தப்ப வழியின்மையின். இது அதனினும் மிகத்தீது என்பதாம், ஏகாரம் தேற்றம்.

அதி. சகூ—சிற்றினஞ் சேராமை

அஃதாவது, சிறியோர் கூட்டத்தொடு கூடாமை. சிறியோராவார், கயவரும் ஐங்குற்றவாளியரும் (காமுகரும் கட்குடியரும் கவருடுவோரும் கரவடரும் கொலைஞரும்) தன்னலக்காரரும் கல்வி நிரம்பாதவரும் உயர்ந்தோர் உண்டென்பதை இல்லையென மறுப்போருமாவர். சிறியோர் சேர்க்கையால் அறிவும் ஒழுக்கமும்திரிந்து இம்மையும் மறுமையுங் கெடுவதால், பெரியார்துணை இல்லாதுபோகுமென்பதையும், இருப்பினும் பயன்படா தென்பதையும், உணர்த்தற்கு இது பெரியாரைத் துணைக்கோடல் என்பதன் பின் வைக்கப்பட்டது.

ஈடுக. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(இ—ரை.) பெருமை சிற்றினம் அஞ்சும்—பெரியோர் சிறியோர் கூட்டத்திற்கு அஞ்சுவர்; சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்துவிடும்—சிறியோரோ அக்கூட்டத்தைக் கண்டவுடன் அதைத் தமக்குச் சுற்றமாக எண்ணித் தழுவிக்கொள்வர்.

சிறியோர் சேர்க்கையால் தம் அறிவும் ஒழுக்கமும் கெடுவதும் அதனால் இருமையுந் துன்பம் நேர்வதும் நோக்கி, பெரியோர் அதனின்று விலகித்தம்மை முற்படக் காத்துக்கொள்வர். அஞ்சுதல் அஞ்சிவிலகுதல். "இனத்தை இனம் தழுவும்." "இனம்இனத் தோடே." ஆதலால் சிறியோரொடு சிறியோர் சேர்ந்து கொள்வர். பண்பியின் தொழில் பண்பின்மேல் ஏற்றப்பட்டது. சுற்றியிருப்பது சுற்றம் சூழ்தல் அச்சுற்றத்திற்கு இனமாக வினைதல்.

ஈடுஉ. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(இ—ரை.) நீர் நிலத்து இயல்பான் திரிந்து அற்று ஆகும்—நீரானது தான் சேர்ந்த நிலத்தின் வகையினால் தன் தன்மை வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையதாம்; மாந்தர்க்கு அறிவு இனத்து இயல்பு அது ஆகும்—அதுபோல, மாந்தரது அறிவும் அவர் சேர்ந்த இனத்தின் வகையால் தன் தன்மை வேறுபட்டு அவ்வினத்தின் தன்மையதாம்.

இனி, மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும், என ஒரே தொடராக்கினும் அமையும். இப் பொருள்கோட்கு, 'அறிவு' எழுவாய்; 'அற்றாகும்' பயனிலை. இரண்டாம் 'ஆகும்' பெயரெச்சம். அணி உவமை.

இரு தொடராக அல்லது சொல்லியமாக (வாக்கியமாக)க் கொள்ளின் எடுத்துக்காட்டுவமை. மழைபெய்யுமுன் வானத்தின் கண் நின்றநிலையில் தன்னியல்பிலிருந்த நீர், நிலத்தொடு சேர்ந்த விடத்துத்தன் நிறமும் சுவையும் மணமும் ஆற்றலும் நிலத்திற் கேற்ப வேறுபட்டாற்போல், மாந்தன் அறிவும் அவன் தனித்து நின்றவழித் தன்னியல்பிலிருத்து, ஓர் இனத்தொடு கூடியவழி அவ் வினத்திற்கேற்ப நேர்க்குந் தன்மையும் வேறுபடும் என்பதாம். அன்னது—அற்று (அன்+து); "மலரோடு (பூவோடு) சேர்ந்த நாரும் மணம்பெறும்" என்பது நல்லினத்தோடு சேர்வதன் விளைவையும். "பன்றியொடு சேர்ந்த கன்றும் பன்றி தின்னும்," என்பது தீயினத்தோடு சேர்வதன் விளைவையும், நுவலாது நுவலுதல் காண்க. நுவலுதல் நுணித்துச் சொல்லுதல்.

சுடுக. மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்ன னெனப்படுஞ் சொல்.

(இ—ரை.) மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம்—மாந்தர்க்கு இயற்கையாகிய அறிவு அவரவர் மனம் கரணமாக உண்டாகும்; இன்னன் எனப்படும் சொல் இனத்தான் ஆம் — ஆயின், இவன் இத்தன்மையனென்று பிறரால் சிறப்பாகச் சுட்டிச் சொல்லப்படுஞ் சொல் இனம் கரணியமாக உண்டாகும்.

கரணம் கருவி. இயல்பாக ஒரேதன்மையிலுள்ள மழைநீர் நன்னீ ரென்றும் உவர் நீரென்றும் வேறுபடுத்திச் சொல்லப் படுவதற்கு, அது சேர்ந்துள்ள நிலமே கரணியமாவதுபோல், இயல்பாக ஒரே தன்மையரான மாந்தரும் நல்லவரென்றும் தீயவரென்றும் வேறு படுத்திச் சொல்லப்படுவதற்கு, அவர் சேர்ந்த இனமே கரணிய மென்பது கருத்து.

சுஎ. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

(இ—ரை) அறிவு—மேற்கூறிய சிறப்பறிவு; ஒருவற்கு மனத்து உளது போலக் காட்டி—ஒருவனுக்கு அவன் மனத்தின் கண்ணே

யுள தாவதுபோல் தன்னைத் தோற்றுவித்து; இனத்து உளது ஆகும் —உண்மையில் அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உண்டா வதாம்.

மனத்துண்டாவது போலத் தோன்றுதல் வெளித்தோற்றமே யன்றி உண்மையான தன்றென்பதைக் குறிக்கக் 'காட்டி' என்ருர். அதனையும் இறந்த காலத்திற் குறித்தது அது அங்ஙனந் தோன்றி யது ஆராய்ந்து பார்க்குமுன் என்பதை உணர்த்தற்கே. ஒருவர் எவ்வினத்தொடுங் கூடாமல் தனிவாழ்க்கையே மேற்கொண்டிருப் பினும், அவர் நல்லவர் அல்லது கெட்டவர் என்று சொல்லப்படு வதற்கு, ஏற்கெனவே பிள்ளைப்பருவத்திலிருந்து பெற்ருேரும் உற் ருேரும் மற்ருேருமாகப் பற்பலர் தம் சொல்லாஞ்ஞ் செயலாஞ்ஞ் அவர் உணர்வைச் சிறிதுசிறிதாக மாற்றியிருப்பதே காரணியம் என அறிக.

சருஞ. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

(இ—ரை.) மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்— ஒருவனை நல்லவனென்று சொல்லுதற் கேதுவான உளத்தூய்மை யும் செயல் தூய்மையும் ஆகிய இரண்டும்; இனம் தூய்மை தூவா வரும்—இனத் தூய்மையைப் பற்றுக் கோடாகக் கொண்டு தோன் றும்.

மனத்தூய்மையாவது தனக்குத் தீதென்று தோன்றுவதைப் பிறர்க்குச் செய்யாமைக்கும், நன்றென்று கண்டதை அவர்க்குச் செய்தற்கும், ஏதுவான அறப்பான்மை, அல்லது அன்புநிலை. மனத் தூய்மையால் வினைத்தூய்மையுந்தானுக அமையுமேனும், பட்டறி வில்லாதவர்க்கு வினைசெய்யும் முறை தெரியாமையின், அவரை அதிற் பயிற்று வதற்கும் இனத்தூய்மை வேண்டியதாயிற்று, இரு தலைப்பட்ட மனத்தையும் வினையையுங் குறிக்கவே இடைப்பட்ட சொல்லும் அடங்கிற்று. இனி, மனத்தைப் பொறியாகக்கொண்டு, வினை என்பது முக்கரணவினை என்று கூறினும் பொருந்தும். 'செய்வினை' என்பது செய்யும் வினையெல்லாம் என்று பொருள்பட நின்றது. ஆரும் வேற்றுமைத் தொகையாக வந்து வலிமிக்குப்புணர வேண்டிய தொடர்கள், இன்னிசை பற்றி எழுவாய்த் தொடராக மாறி மெலிமிக்கும் இயல்பாகப் புணர்ந்தும் நின்றன.

சருகூ. மனந்தூயார்க் கெச்சநன் ருகு மினந்தூயார்க்
கில்லாநன் ருகா வினை.

(இ—ரை.) மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும் — தூய மனத்தார்க்கு நன்மக்கட்பேறு உண்டாகும்; இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை—தூய இனத்தையுடையார்க்கு எல்லா வினையும் கைகூடும்.

பெற்றோரைப்போற் பிள்ளைகளிருப்பதே பெரும் பான்மையாதலால் 'எச்சம் நன்றாகும்' என்றும், நல்லினத்தோடெண்ணிச் செய்யும் வினை நன்றாய் முடியுமாதலால் 'இல்லை நன்றாகா வினை' என்றும் கூறினார்.

இங்கு 'எச்சம்' என்பதற்குப் புகழ் என்றும் உரைகொள்வர், அடுத்த குறள் ''இனநலம் எல்லாப் புகழுந் தரும்'' என்று கூறுவதால், அவ்வுரை பொருந்துவதன்றும்.

ஈடுள. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

(இ—ரை.) மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம்—மாந்தருக்கு மனநன்மை ஒரு செல்வமாம்: இனநலம் எல்லாப் புகழும் தரும்—இன நன்மை எல்லா வகையிலும் புகழை உண்டாக்கும்.

மன் என்னும் சொல் மன்பதை என்பதிற்போல் மாந்தனைக் குறித்தது. இச்சொல்லின் வரலாறு முன்னரே கூறப்பட்டது. ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'' (குறள். கூசு) என்றும், ''அறத்தினூஉங் காக்கமுமில்லை'' (ஷெ உஉ) என்றும் முன்னரே கூறியிருத்தலால், ''மனநலமன்னுயிர்க் காக்கம்'' என்றும், இனநலமுடையார்க்குப் புகழ்க்கேதுவான செயலெல்லாம் வெற்றியாய் முடிதலின் 'எல்லாப் புகழுந்தரும்' என்றும், கூறினார். இதனாலும் இருவகைத் தூய்மையின் பயன்களும் கூறப்பட்டன.

ஈடுஅ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(இ—ரை.) மனநலம் நன்கு உடையராயினும் — மனநன்மையை இயற்கையாகவே மிகுதியாக வுடையராயினும்; சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து—அறிவு நிறைந்தோர்க்கு இனநன்மை அரணுகுந் தன்மையுடையது.

மனநலம் பிறப்பிலேயே அமையினும் அது முன்னோரிடமிருந்து பெற்ற மரபுரிமையாயிருக்கலா மாதலால், அதுவும் ஒருவகையில் இனநலத்தால் அமைவதே இயற்கையான மனநலத்தையும் இனநலம் வளர்த்து உறுதிப்படுத்துவதால், அதற்கு 'ஏமாப்புடைத்து' என்றார். உம்மை இயற்கை மனநலத்தின் அருமையை உணர்த்திற்று. இது மறுதலைக் கொள்கையை ஒருமருங்கு தழுவியதாகும்.

'நன்கு' என்பதற்கு ''நல்வினையால்'' என்று பொருள்கொண்டார் பரிமேலழகர். அது பொருந்துமேனும் அதுவே திட்டமான ஆசிரியர் கருத்தென்பதற்குக் குறளில் ஒரு குறிப்புமில்லை. அதுவே அவர் கருத்தாயின், மனநல நல்வினைப்பேருயினும் என்றோ, மனநல மூழான் மருவினும் என்றோ யாத்திருப்பர். எனினும் மரபுரிமைப் பேருகவோ நல்வினைப் பேருகவோ திருவருட்பேருகவோ அவர் கொண்டிருக்கலாமென்று கருத இடமுண்டு.

சருகூ. மனநலத்தி னுகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து,

(இ—ரை) மனநலத்தின் மறுமை ஆகும்—ஒருவனுக்கு மனநன்மையால் மறுமையின்பம் உண்டாகும்: அஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து—அதுவும் இனநன்மையால் வலியுறுதலையுடையதாம்.

மேல் அரிதாய் நிகழ்வதாக ஒப்புக்கொண்ட மனநலத்தின் பயனைக் கூறியவர், அதற்கும் இனநலம் துணை செய்யும் எனத்தன் கொள்கையையும் விட்டுக் கொடாது நின்றார். ஏதேனுமொரு சமையத்துக் காமவெகுளி மயக்கங்களால் மனநலங் குன்றினும் அதை உடுக்கையிழந்தவன் கைபோல இனநலம் உடனே திருத்துமென்பது கருத்து. 'மற்று' அசைநிலை. மனநலம் மட்டுமன்றி அதன் மறுமைப்பயனும் என்று பொருள்படுதலால், உம்மை இறந்தது தழுவிய எச்சம். இவ்வைந்து குறளாலும், சிற்றினஞ் சேர்தலின் தீமை நல்லினஞ் சேர்தலின் நன்மையாகிய எதிர்மறை முகத்தாற் கூறப்பட்டது.

சகூ. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(இ—ரை.) நல் இனத்தின் ஊங்குத் துணையும் இல்லை — ஒருவனுக்கு நல்லினத்தினுஞ் சிறந்த துணையுமில்லை; தீ இனத்தின் (ஊங்கு) அல்லல் படுப்பதும் இல்—தீயினத்தினும் மிகுதியாகத் துன்புறுத்துவதும் இல்லை.

நல்வழியிற் செலுத்தி இன்புறச் செய்வதால் நல்லினத்தைத் துணையென்றும், தீய வழியிற்போக்கித் துன்புறச் செய்வதால் தீயினத்தைப் பகை யென்றும், கூறினார். அல்லற்படுத்துவது பகையே. ஐந்தனுருபுகள் தமக்குரிய உறழ்பொருவின் கண் வந்தன. உம்மை பிரித்துக் கூட்டப் பட்டது. 'படுப்பதூஉம்' இன்னிசையள பெடை.

அதி: ஙஅ —தெரிந்துசெயல்வகை

அஃதாவது, அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம். அது பெரியாரைத் துணைக்கொண்டும் சிற்றினஞ் சேராதும் செய்யப்படுவதாகலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.

ஙகூக. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(இ—ரை.) அழிவதும்—வினைமேற்கொள்ளும் போது அன்று அதனுல் அழிவதையும்; ஆவதும்—அழிந்தாற்பின் ஆவதையும்; ஆகி வழிபயக்கும் ஊதியமும்—வினை முடிந்தபின் தொடர்ந்து வரும் ஊதியத்தையும்; சூழ்ந்து செயல்—ஒப்பு நோக்கி ஆராய்ந்து தக்க தாயின் செய்க, தகாததாயின் விட்டு விடுக.

தக்கதாவது, அற்றைச் செலவினும் வரவுமிக்குப் பிற்றை வரவு முள்ளது; அல்லது அற்றை வரவு செலவொத்துப் பிற்றை வரவுள்ளது; அல்லது அற்றை வரவினுஞ் செலவுமிக்குப் பிற்றைப் பெருவரவுள்ளது; அல்லது பிற்றை வரவின்றி அற்றைச் செலவினும்வரவுமிக்கிருப்பது. தகாததாவது, பிற்றை வரவின்றி அற்றை வரவு செலவொத்தோ வரவினுஞ் செலவுமிக்கோ இருப்பது; அல்லது அற்றை வரவினுஞ் செலவுமிக்குப் பிற்றைச் சிறுவரவுள்ளது. 'அழிவதூஉம்,' 'ஆவதூஉம்' இன்னிசை யளபெடைகள்.

ஙகூஉ. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

(இ—ரை) தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு—தாம் தெரிந்தெடுத்த சூழ்ச்சித்துணையினத்தோடு கூடிச் செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தாமும் தனிப்பட எண்ணிச் செய்ய வல்ல அரசர்க்கு; அரும்பொருள் யாது ஒன்றும் இல்—முடித்தற் குரிய வினை எதுவும் இல்லை.

'தெரிந்த இனம்' என்பது வினைகளையெல்லாஞ் செய்யுந்திற மறிந்த இனம் என்றுமாம். வினையாவன போரும் நால்வகை ஆம் படைகளைப் பயன் படுத்துமாறும் சந்து செய்தலும் பிறவுமாம். வெற்றிக்கேற்ற கருவிகளும் வழிகளும் குறைவின்றிக் கையாளப் பெறுதலால், அரிய வினைகளும் எளிதாகக் கைகூடப் பெறுவர் என் பதாம்.

சகூஉ. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(இ—ரை.) ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை—உறுதி யற்ற எதிர்கால ஊதியத்தை நோக்கி இருப்பிலுள்ள முதலையும் இழத்தற்கேதுவான முயற்சியை; அறிவு உடையார் ஊக்கார் — அறிவுடையோர் மேற்கொள்ளார்.

ஊதியத்தையன்றி முதலையும் இழக்கும் செய்வினை, வலியுங் காலமும் இடமு மறியாது பிறன் நாட்டைக் கைப்பற்றச் சென்று தன் நாட்டையும் இழத்தல் போல்வது. 'செய்வினை' செய்தறிந்த வினை அல்லது செய்யத் தொடங்கிய வினை. பின்னைப் பொருட்கு ஊக்குதல் மேலுஞ் செய்யத்துணிதல். எச்ச வும்மை செய்யுளால் தொக்கது.

சகூஅ. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(இ—ரை.) இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர்—தமக்கு இழிவு என்னும் குற்றம் உண்டாதற்கு அஞ்சும் மானியர்; தெளிவு இலதனைத் தொடங்கார் — வெற்றியாகும் என்னும் உறுதியில்லாத வினையைச் செய்யத் தொடங்கார்.

தொடங்கின் இடையில் மடங்கவும் தோல்வியடையவும் நேரு மாதலின் 'தொடங்கார்' என்றார். இழிவு தோல்வியடைந்து கெடு வதுடன் உலகோர் கூறும் பழியால் நேர்வது.

சகூஇ. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(இ—ரை.) வகை அறச் சூழாது எழுதல்—அரசன் தன் பகை வரை வெல்லுதற்கேற்ற வழிகளையெல்லாம் தீர எண்ணாது, அரை குறையாய் எண்ணிய வளவில் அவர்மேற் படையெடுத்துச் செல்லு

தல்; பகைவரைப் பாத்திப்படுப்பது ஓர் ஆறு—அவரைப்பாதுகாப் பான நிலைமையிலிருத்தி மேலும் வலியுறச் செய்வதொரு நெறியாம்.

வெல்வதற் கேற்ற வழிகளாவன; வலியிடங் காலம் முதலிய வற்றொடு பொருந்த வெட்சி தும்பை யுழிஞை யென்னும் மூவகைப் போர் முறைகளும், படைவகுப்பு வகைகளும், தாக்குங் காலமும், பகைவர் எதிர்த்துப்பொரினும் தற்காத்து நிற்பினும் தான் செய்ய வேண்டிய வினைகளும் கையாளும் வலக்காரங்களும், படைத்தலை வர் தொடரும் வரிசையும், வெற்றியால் வினையும் பயனும் முதலா யின. இவற்றுள் ஒன்று குறையினும் வினைகெடுமாதலின், வகை யறச் சூழ்தல் வேண்டு மென்றார்.

'பாத்திப்படுப்பது' என்பது குறிப்புருவகம். வினைத்திறங்களை யெல்லாம் முற்றவெண்ணுது சென்று பொருது தோல்வியுறுவது பகைவரை வலுப்படுத்தவே செய்யுமாதலால், அது மேற்கொண்டு செழித்து வளர முடியாவாறு அடர்ந்திருக்கும் நாற்றுக்களைப்பறித் துப் பாத்தியுள் இடைவிட்டு நட்டு, நன்றாய் வளரச் செய்தலை யொக் கும் என்றார்.

சகூ. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(இ—ரை.) செய்தக்க அல்ல செயக் கெடும்—அரசன் தன் வினைக்குச் செய்யத்தகாதன வற்றைச் செய்யின் கெடுவான். செய்தக்க செய்யாமையானும் கெடும்—இனி, அதற்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாண்மை யானுங் கெடுவான்.

செய்யத்தகாதன வாவன; ஆகா வினையும் பயனில் வினையும் சிறுபயன் வினையும் தெளிவில் வினையும் துயர்தருவினையும் கெடு தல் வினையுமாம். செய்யத்தக்கன இவற்றின் மறுதலையாம். இவ் விருவகை வினைகளையும் முறையே செய்தல் செய்யாமையால், அறிவு ஆண்மை படை அரண்பொருள் ஆகிய ஐவகை ஆற்றல் களுள் இறுதி மூன்றும் ஒடுங்கிப் பகைவர்க் கெளியனாவனாதலால், இரண்டுங் கேட்டிற்கேதுவாம். செய்யத்தக்க என்பது செய்தக்க எனக்குறைந்து நின்றது. இனி, "பெருஞ்செய் யாடவர்" (நெடுநல். களக) என்பதிற்போலச் செய் என்பது செய்கை என்று பொருள் படும் தொழிற்பெயர் என்றுமாம்.

சகூ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(இ—ரை.) கருமம் எண்ணித் துணிக — செய்யத்தக்க வினையையும் வெற்றியாக முடிக்கும் வழிவகைகளை ஆராய்ந்து தொடங்குக; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு—தொடங்கியபின் எண்ணுவோ மென்று கடத்திவைப்பது குற்றமாம்.

துணிதல் தீர்மானித்துத் தொடங்குதல். அரசர்க்குரிய தொழில்கள் ஆறு. அவையாவன:—

"ஓதல் பொருதல் உலகு புரத்தல்
ஈதல் வேட்டல் படைபயிறல் அறுதொழில்," (பிங். இ:சஉ).
"ஓதலே வேட்ட லீத லுலகோம்பல் படைப யிற்றல்
மேதகு போர்செய் தீட்டல் வேந்தர்செய் தொழில்க ளாறே."
(சூடா. கஉ:கூஉ).

இவற்றுள் வேட்டல் என்பது வேட்டையாடல். பிற்காலத்தில் ஆரியர் இதற்கு வேள்வி செய்தல் என்று பொருள் கூறிவிட்டனர். அரசர் தொழில் ஆறுயிருக்கவும், "ஐவகை மரபின் அரசர் பக்கமும்" (புறத். உ0) என்று தொல்காப்பியங் கூறுவது ஆராயத்தக்கது. அறுதொழில்களுள் எதைத் தொல்காப்பியர் நீக்கினர் என்பது திட்டமாய்த் தெரியவில்லை. ஆயின், இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் அரசர்க்குச் சிறப்பாகவுரிய போர்த்தொழிலை நீக்கி உரை வரைந்துள்ளனர். "நுண்ணிய கருமமும் எண்ணித்துணி." என்று ஔவையார் கூறியதுபோல், எல்லாவினைகளையும் எண்ணியே செய்யவேண்டுமாயினும், மிகுதியாக எண்ணுவதை வேண்டுவது போர்வினையே. அதனுல் வாழ்வுஞ்சாவும் தேர்தலின், இயன்றவரை அதனைவிலக்கி இன்றியமையாத விடத்தே அதை மேற்கொள்ளுமாறு நால்வகை ஆம்புடைகள் வகுக்கப் பட்டுள்ளன. வலிய பகைவன் தாக்கவரின் கொடை அல்லது திறையாலும்; ஒத்த பகைவன் வரின் இன்சொல், பிரிப்பு, கொடை என்னும் மூன்றனுள் ஒன்றாலும் போரைவிலக்கி, எளிய பகைவனுயின் போரால் ஒறுத்தல் வேண்டுமென்பது, பொதுவான கருத்து. துணைவலி சேர்வதால் எளியவன் வலியவனுவதும், அது தீர்வதால் வலியவன் எளியனுவதும், இயல்பு பகைவர் பலராயின் பிரிப்பு ஒன்றே கையாளத்தக்க சிறந்தவழியாம். வலிய பகைவனையும் ஒத்த பகைவனையும் மகட்கொடையாலும் நட்பாக்கலாம். இவையெல்லாவற்றையும் போர் தொடங்கு முன்னரே எண்ணவேண்டுமென்பதும், தொடங்கியபின் எண்ணுவது குதிரைகளவுபோனபின் கொட்டகையைப் பூட்டுவதும் வாசல் நிலையில் முட்டிவிட்டு வணங்கிக் குனிவதும் போன்ற குற்றமாகு மென்றும், இங்குக் கூறப்பட்டன. 'கருமம்' தென் சொல்லே, இதன் விளக்கத்தைப் பின்னிணைப்பிற் காண்க.

சசுஅ. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(இ—ரை.) ஆற்றின் வருந்தா வருத்தம்—தக்க வழியாற் கரு மத்தை முயலாத முயற்சி; பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் —பின்பு பலர் துணை நின்று கருமங்கெடாமற் காப்பினும் கெட்டுப் போகும்.

தக்கவழியால் முயலுவதாவது, இன்சொல்லே நேர்மையாளன், ஆண்மையில்லாதவன், முதுகிழவன், உலகவுவர்ப்புற்றேன் முதலி யோரிடத்தும்: பொருட்கொடையைப் பொருளாசைக்காரனிடத் தும், மகட்கொடையைக் காமுகனிடத்தும். பிரிப்பைத்தன்னெடு பொருந்தாதவனிடத்தும்; தண்டித்தலேக் கயவனை எளியவனி டத்தும், பயன் படுத்துதல். பொத்துப்படுதல் துணைவிழுதல் அல்லது ஓட்டையாதல். அது இங்கு அணிவகைப்பொருளிற் கருமக்கேட் டைக் குறித்தது. வருந்திச் செய்யும் முயற்சி வருத்தம் எனப்பட் டது தொழிலாகுபெயர்.

இனி, வலிய படைக்கலங்களும் தகுந்ததலைவனும் நல் வானிலே யும் (Weather) நிலநலமும் உணவு நிறைவும், அவ்வப்போது இட மும் வினையும் மாறும் பயிற்சியும் போர்வலக்காரமும் இன்றிக் குருட்டுத்தனமாக மிகப் பாடுபட்டுப் போர்செய்யும் படை எவ்வளவு பெரிதாயினும், வெற்றியின்றி மடியும் என்றுமாம்.

சசுஆ. நன்ருற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(இ—ரை.) அவர் அவர் பண்பு அறிந்து ஆற்றுக்கடை—அவ ரவர் சிறப்புக்குணங்களே ஆராய்ந்தறிந்து அவற்றிற்கேற்பச்செய்யா விடின்; நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு—வேற்றரசரிடத்து நல்ல ஆம்புடைகளேக் கையாளுமிடத்தும் குற்ற முண்டாம்.

இன்சொல்லுங் கொடையும், ஏதும் வருத்தத்திற்கும் இழப்பிற் கும் இடமின்றி, எல்லார்க்கும் ஏற்றதும் இன்பந்தருவது மாயிருத்த லின், நல்லாம்புடைகளாம். அவற்றை அவரவர் பண்பறிந்தாற்று மையாவது, அவற்றிற்கு உரியாரல்லாதாரிடத்துக் கையாளுதல். 'தவறு' அவ்வினை முடியாமை அல்லது முடிந்தும் பயனின்மை.

சஎ0. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(இ—ரை.) தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது—அரசர் தம் வினைசெய்தற்கண், தம் நிலைமையொடு பொருந்தாத ஆம்புடைகளை வேற்றரசரிடத்துக் கையாளுவாராயின், உயர்ந்தோர் அவற்றை நல்லனவென்று ஒப்புக்கொள்ளார்; எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்—ஆதலால், அவ்வுயர்ந்தோர் இழிவென்று கருதாதவற்றை எண்ணியறிந்து செய்தல் வேண்டும்.

தம் நிலைமையொடு பொருந்தாத ஆம்புடைகளைச் செய்தலாவது, தாம் வலியாராயிருந்தும் மெலியார் கையாளவேண்டிய இன்சொல் கொடை பிரிப்பைக் கையாளுதலும், மெலியாராயிருந்தும் வலியார் கையாள வேண்டிய தண்டனையைக் கையாளுதலுமாம். இவ்விரண்டும் அரசிய லறிவிலார் செயலாதலின், உலகு கொள்ளாதென்றார். 'தம்' என்பது ஆகுபொருளது. எள்ளாதன செய்தலாவது இயன்றவரை தமக்கு இழிவும் இழப்பும் முயற்சியு மில்லாதவற்றைச் செய்தல் முந்தின குறளிரண்டும் ஆம்புடை செயப்படுவார் திறத்தையும், இது அதனைச் செய்வார் திறத்தையும் பற்றியன, 'உலகு' வரையறுத்த இடவாகுபெயர்.

அதி. சஅ—வலியறிதல்

அஃதாவது, ஆம்புடை நான்கனுள் தண்டமாகிய போரையே துணிந்த அரசன், வினை வலி முதலிய நால்வகை வலியையும் ஒப்பு நோக்கி அளந்தறிதல். அதிகார முறையும் இதனுல் விளங்கும்.

சஎக வினைவலியுந் தன்வலியு மாற்றுன் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(இ—ரை.) வினைவலியும்—தான் செய்யத்துணிந்த வினைவலியையும்; தன்வலியும்—அதைச் செய்தற்கிருக்கும் தன் வலியையும்; மாற்றுன் வலியும்—அதை எதிர்க்க வரும் பகைவன் வலியையும்; துணைவலியும்—இருவர்க்குந் துணையாக வருவார் வலியையும்; தூக்கிச்செயல்—ஆராய்ந்து பார்த்துத் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச்செய்க.

இந்நால்வகை வலியுள், வினைவலி படையெடுத்துச் செல்லுதலும் தாக்குதலும் அரண் முற்றுதலும் அதைப்பற்றுதலும் ஆகிய வினைகளாலும், ஏனை மூன்றும் ஐவகை யாற்றல்களாலும் அளந்தாராயப்படும். அதன் முடிபாகத் தன்வலி மிகுந்து தோன்றுமாயின் வினை

செய்வதென்று தீர்மானிக்கப்படும். அஃதன்றிக் குறைந்து தோன்றுமாயின் தோல்வியுறுதியென்றும், ஒத்துத்தோன்றுமாயின் வெற்றி ஐயுறவான தென்றும், தெரிந்து விலக்கைவிடப்படும்.

சஎஉ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

(இ—ரை.) ஒல்வது அறிவது அறிந்து—தம்மாற் செய்தற்கியலும் வினையையும் அதன் தொடர்பாக அறியவேண்டிய தெல்லாவற்றையும் அறிந்து; அதன்கண் தங்கிச் செல்வார்க்கு—அம்முயற்சியில் உறுதியாக மனத்தையூன்றிப் பகைமேற்செல்லும் அரசர்க்கு; செல்லாதது இல்—முடியாதது ஒன்றும் இல்லை.

'ஒல்வது' எனவே நால்வகை வலியும் அடங்குதலின், 'அறிவது' என்றது மேற்கொண்டு ஒற்றர் வாயிலாகப் பகைவர் நிலைமையைப் பற்றி அறியக்கூடிய புதுச்செய்திகளாகும். 'செல்லாதில்' எனவே வெற்றி உறுதி என்பதாம்.

சஎங. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(இ—ரை.) தம் உடை வலி அறியார்—தம்முடைய உண்மையான வலியளவைச் சரியாக அளந்தறியாது; ஊக்கத்தின் ஊக்கி—தம் மனவெழுச்சி மிகையால் தம்மினும் வலியாரொடு போர்செய்ய முயன்று; இடைக்கண் முரிந்தார் பலர்—அவர் தாக்குதலைப்பொறுக்கும் ஆற்றலின்றி இடையே கெட்டுப்போன அரசர் உலகத்திற்பலராவர்.

ஆரும் வேற்றுமைச் சொல்லுருபாகவரும் உடைய என்னும் குறிப்புப் பெயரெச்சம், உடை என்று குறுகி முன்பின்னாக முறைமாறிநின்றது. இனி, இடம் மாற்றாது உள்ளவாறே கொண்டு, (தாம்) உடையதம் என்று பொருள் கொள்ளினுமாம். உடைய என்னும் குறிப்புப் பெயரெச்சம் ஒரு தொடர்ச் சொல்லின் நிலைமொழியாகவும் வரும் என்பதை, உடைய நம்பி. உடைய பிள்ளையார், உடைய வரசு என்னும் வழக்கு நோக்கி யறிக. 'முரிந்தார் பலர்' என்பது உலகத்தில் அறிவுடையார் சிலர் என்பதை உணர்த்தும். முரிதல் என்னுஞ்சொல் முறிதல் என்னும் வடிவும் கொள்ளும்.

சஎச. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(இ—ரை.) அமைந்து ஆங்கு ஒழுகான் — வேற்றரசரோடு பொருந்தி அதற்கேற்ப நடந்துகொள்ளாமலும்; அளவு அறியான்—தன் வலியளவை அறியாமலும்; தன்னோ டியந்தான்—தன்னை உயர்வாக மதித்து அவரொடு பகைகொண்ட வரசன்; விரைந்து கெடும்—விரைந்து கெடுவான்.

பகையின்றியே வேற்று நாட்டின்மேற் படையெடுத்துச்சென்று அதைக் கைப்பற்றுவது, அக்காலத்திற் புகழ்விளையாகவும் சிறந்த அரசன் கடமையாகவும் கொள்ளப்பட்டதினால், ஓர் அரசன் தன் வலியறிந்து, அடுத்துள்ள நாட்டு அரசர் தன்னினும் வலியராயிருப்பின் அவரொடு நட்புக்கொள்ளவேண்டும்; மெலியராயிருப்பின் அவர் துணைவலியறிந்து பகை கொள்ளலாம். இவ்விரண்டும் செய்யாதவன் அமைதியாயிருந்தாலே கேடுண்டாம். அங்ஙனமிருக்க, தான் மெலியானாயிருந்தும் தன்வலியறியாது வலியான்மேற்செல்லின் விரைந்து கெடுவான் என்பதாம். 'ஒழுகான்,' 'அறியான்' என்பன எதிர்மறை முற்றெச்சங்கள். 'வியத்தல்' அதன் விளைவான பகைத்தலைக் குறித்தது.

உஎடு. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(இ—ரை.) பீலிபெய் சாகாடும் அச்சு இறும்—வைக்கோலினும் நொய்ய மயில்தோகை யேற்றிய வண்டியும் அச்சு முறியும்; அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்—அப்பொருளை வண்டிதாங்கும் அளவிற்கு மிஞ்சி யேற்றின்.

மயில்தோகையும் அளவுக்கு மிஞ்சி வண்டியிலேற்றின் அச்சொடியும் என்பது, பகைவர் தனித்தனி மிகச்சிறியாராயினும் மிகப் பலர் ஒன்று கூடின், தனிப்பட்ட பகைவன் எவ்வளவு வலியவனாயினும் அவனை வென்று விடுவர் என்னும் பொருள்பட நிற்றலால், பிரிதுமொழிதல் என்னும் அணியாம். இது நுவலாநுவற்சியென்றும் ஒட்டு என்றுஞ் சொல்லப்படும். பகைவர் சிறியராயினும் மிகப் பலரை ஒருங்கே பகைக்கக் கூடாதென்பதும், பகைவர் வலியைத் தனித்தனி அறியாது தொகுத்தறிதல் வேண்டுமென்பதும், இதனாற் கூறப்பட்டன. உம்மை இழிவு சிறப்பு. சாகாடு என்பது சகடம் என்னும் சொல்லின் பல்வடிவுகளுள் ஒன்றும். இதுவுந்தென்சொல்லே. 'இறும்' என்னும் துணைவினை முதல்மேல் நின்றது, 'காலொடிந்தான்' என்பதில்'ஒடிந்தான்' என்பது போல. 'சாலமிகுத்து'மீமிசைச்சொல்.

சஎக. நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்ச்சகிறுதி யாகி விடும்.

(இ—ரை.) நுனிக் கொம்பர் ஏறினர் அஃது இறந்து ஊக்கின் —ஒரு மரத்தின் உச்சிக்கிளையில் ஏறிநின்றவர் தம் ஊக்கத்தினல் அதன் மேலும் ஏற முயல்வாராயின்; உயிர்க்கு இறுதி ஆகி விடும்—அம்முயற்சியால் அவர் உயிர்க்கு முடிவு நேர்ந்து விடும்.

நுனிக்கொம்பர் என்றது உச்சாணிக் கொம்பை. 'நுனி' இங்கு மரத்தின் நுனி; கிளையின் நுனியன்று. தாழ்ந்த கிளை நுனியாயின் ஒருவர் சாவிற்குத்தப்பலாம். உச்சிக்கிளையினின்று விழுந்தவர் தப்ப முடியாது. பகைமேற் சென்று முற்றுகையிட்டவன் பல அரண் களைக் கடந்து தான் செல்லுமளவு சென்றதோடமையாது, மேலும் புகுந்து கைப்பற்றற்கரிய உள்ளரணை யடைவானுயின், அவன் கொலையுண்டிறப்பது திண்ணம் என்னும் பொருள் தோன்ற நின்ற மையின், இதுவும் பிறிதுமொழித லணியாம். 'அர்' ஓர் இலக்கியச் சொல்வளர்ச்சியீறு. விளைவலி யறியாமையின தீங்கு இங்குக் கூறப் பட்டது.

சஎஎ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

(இ—ரை.) ஆற்றின் அளவு அறிந்து ஈக—ஈகை நெறிப்படி தன் செல்வத்தின் அளவறிந்து அதற்குத் தக்கவாறு அளவாக ஈக; அது பொருள்போற்றி வழங்கும் நெறி — அதுவே செல்வத்தைப் பேணிக்காத்து ஈந்தொழுகும் வழியாம்.

மேல் 'ஈகை' என்றும் (கூஅஉ), 'வருத்தலும்' (கூஅடு) என்றும் 'கொடை' (கூகo) என்றும், சொல்லப்பட்ட ஈகைவகைகட்குச் செல விடவேண்டிய பொருளளவு இங்குக் கூறப்பட்டது. "வருவாயுட் கால் வழங்கி வாழ்தல்" (திரிகடுகம், உச) என்பதால், அரசன் தன் மொத்த வருமானத்தில் அரைப்பகுதியை ஆட்சிச் செலவிற்கும், காற்பகுதியை எதிர்பாராவாறு இயற்கையாகவும் செயற்கையாக வும் நிகழக் கூடிய இடர் வந்த விடத்து அதை நீக்கும் ஏமவைப் பிற்கும், ஒதுக்கி, எஞ்சிய காற்பகுதியை ஈகைக்குப் பயன்படுத்த வேண்டுமென்பது பெறப்படும். இங்ஙனஞ் செய்யின், செலவிடும் பொருளின் அளவீட்டினலும் செய்யும் அறத்தின் பயனலும் செல் வம் பேணிக்காக்கப்படுமாதலின், அதைப் 'பொருள் போற்றிவழங்கு நெறி' என்றார். இங்ஙனமன்றி, வந்ததையெல்லாம் வழங்கிக்கொண்

டிருப்பின், வித்துக்குற்றுண்பவன் போலும் வலியறியாது போர்க்குச் செல்வான்போலும் விரைந்து கெடுவான் என்பது கருத்து. "வளவ னுயினும் அளவறிந் தளித்துண்." என்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

சஎஅ. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லீ
போகா றகலாக் கடை.

(இ—ரை.) ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும்—அரசர்க்குப் பொருள் வருவாயின் அளவு சிறிதாயினும்; போகு ஆறு அகலாக்கடை—செல்வாயின அளவு அதினும் மிகாதவிடத்து; கேடு இல்லீ—கெடுதல் இல்லீ.

இது சிச்கனத்தின் நன்மையை எளிய கணக்கு முறையால் விளக்குவது. அளவு என்பது பின்னுங் கூட்டியுரைக்கப் பட்டது. 'அகலாக்கடை' என்றதனால், வரவுஞ்செலவும் ஒத்திருப்பினுங் கேடில்லீ யென்பதாம்.

ஒரு குளத்திற்குள் நீர்வந்து விழும் வாய்க்காலினும் அதினின்று நீர்வெளியேறும் வாய்க்கால் அகன்றிராவிடின் அக்குளநீர் குன்றுது என்பதே, பிறிதுமொழிதற் குறிப்புக்கொண்ட இக்குறட்பொருள்.

சஎக. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும்

(இ—ரை.) அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை — தன் செல்வத்தின் அளவறிந்து அதற்கேற்ப வாழாதவனின் வாழ்க்கை யில்; உளபோல இல் ஆகித்தோன்றுக் கெடும்—அவன் பல்வகைப் பட்ட பொருள்களும் உள்ளனபோலத்தோன்றி உண்மையில் இல் லாதனவாய்ப் பின்பு அப்பொய்த்தோற்றமும் இல்லாது அழியும்.

அளவறிந்து வாழ்தலாவது, செலவை வரவிற்குச் சுருக்காவிடி னும் அதற்கு ஒப்பவாவது செய்து ஈந்தும் நுகர்ந்தும் வாழ்தல். தொடக்கத்திற்கேடு வெளிப்பட்டுத் தோன்றுமைபின் 'உளபோல இல்லாகி' என்றார்.

"முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே." (புறம். ஙஙo)

என்பது ஒருவாறு இக்குறட்கு எடுத்துக்காட்டாம்.

சஅ0. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

(இ—ரை.) உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை — தனக்குள்ள ஈகைவலியளவை நோக்காது செய்யும் ஒப்புரவொழுகலால்; வள வரை வல்லைக்கெடும்—ஒருவனது செல்வத்தின் அளவு விரைந்து கெடும்.

ஈகை வலியளவெனினும் ஈயப்படும் பொருளளவெனினும் ஒன்றே.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணமெடு சேப்ப
ஈகை யரிய விழையணி மகளிரொடு
சாயின் றென்ப ஆஅய் கோயில்" (புறம். கூஎ)

என்பது இக்குறட்கு எடுத்துக் காட்டாம். ஆயினும்,

"ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவன்
வீற்றுக்கோட் டக்க துடைத்து," (உஉ0)
"சாதலின் இன்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை" (உக0)

என்று ஆசிரியரும்,

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
றூடிழந் ததனினு நனியின் னுதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்" (புறம். கசுஇ)

என்று பெருந்தலைச்சாத்தனரும்,

"சாயின் றென்ப ஆஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
யுரைசா லோங்குபுக ழொரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே" (புறம். கஉஎ)

என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும் பாடியிருத்தலால், தனிப்பட்ட பெருஞ்செல்வர்க்கு ஒப்புரவு தகுமென்றும், பொறுப்பு, வாய்ந்த பெருநிலவரசர்க்கு அளவறிந்து வாழ்வதே கடமை யென்றும், முடிபு செய்யலாம். இந்நான்கு குறளாலும் பொருள்வலியறியுந்திறங் கூறப்பட்டது.

அதி. சகூ—கால மறிதல்

அஃதாவது வலிமிக்கவனுய்ப் பகைமேற் செல்லும் அரசன், அச்செலவிற்கும் போருக்கும் ஏற்ற காலத்தை அறிதல். அதிகார வொழுங்கும் இதனுல் விளங்கும்.

சஅக. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(இ—ரை.) காக்கை கூகையைப் பகல் வெல்லும் — காகம் தன்னினும் வலிய கோட்டாணை அதற்குக் கண்தெரியாத பகல் வேளையில் வென்று விடும்; இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும்—அது போலப் பகைவரைப் போரில் வெல்லக்கருதும் அரசர்க்கும் அதற்கேற்ற காலம் வேண்டும்.

காலம் ஏற்காவிடின் வலியாற் பயனில்லை யென்பது கருத்து. ஏற்ற காலமாவது, வெம்மையுங் குளிரும் மிகாது நச்சுக்காற்று வீசாது தண்ணீரும் உணவும் தாராளமாய்க்கிடைத்து நால்வகைப் படையும் நலமாகச் செல்வதாயிருப்பது. இதில் வந்துள்ளது எடுத்துக்காட்டுவமை.

சஅஉ. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

(இ—ரை) பருவத்தோடு ஒட்ட ஒழுகல் — காலத்தொடு பொருந்த அரசன் வினைசெய்தொழுகுதல்; திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு—நிலையில்லாத செல்வத்தைத் தன்னிடத்தினின்று நீங்காவண்ணங் கட்டிவைக்கும் கயிறும்.

காலத்தொடு பொருந்துதல் காலந்தவருமற் செய்தல். 'தீராமை' என்றதனுல் தீருந்தன்மைய தென்பது பெறப்படும். வினைகள் தொடர்ந்து வெற்றியாய் முடிதலால் செல்வம் ஒரு போதும் நீங்கா தென்பது கருத்து.

சஅங. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(இ—ரை.) கருவியான் காலம் அறிந்து செயின் — சிறந்த கருவியொடு தகுந்த காலமறிந்து செய்வாராயின்; அருவினை என்ப உளவோ—அரசர்க்கு முடித்தற்கரிய வினைகளென்று சொல்லப்படுவன உளவோ? இல்லை.

கருவிகள் ஐவகையாற்றலும் நால்வகை ஆம்புடைகளுமாம். அவற்றொடு காலமும் வேண்டுமென்பதற்குக் 'கருவியான்' என்றார். 'உளவோ' என்னும் வினை எதிர்மறை விடையை அவாவுவது.

சஅச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(இ—ரை.) ஞாலம் கருதினும் கைகூடும்—ஒருவன் உலகம் முழுவதையுங் கைப்பற்றக் கருதினாலும் கைகூடும்; காலம் கருதி இடத்தான் செயின்—அதற்குரிய வினையை அவன் தகுந்த காலமறிந்து இடத்தொடு பொருந்தச் செய்வானாயின்.

வினை பெரிதாதலின் இடமும் வேண்டியதாயிற்று. உம்மை உயர்வு சிறப்பு.

சஅடு. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(இ—ரை.) ஞாலம் கருதுபவர்—உலகம் முழுவதையுங் கைப்பற்றக் கருதும் அரசர்; கலங்காது—மனக்கலக்கமின்றி; காலம் கருதி இருப்பர்—தமக்கு வலிமிக்கிருப்பினும் தம் வினைக்கேற்ற காலத்தையே சிறப்பாகக் கருதி, அது வருமட்டும் அமைதியாகவும் பொறுமையுடனும் காத்திருப்பர்.

'கலங்காது' என்பது வலிமிகுதியையும் அதனால் ஏற்படும் நம்பிக்கையையும் உணர்த்தும். நட்பாக்கல், பகையாக்கல், பிரித்தல், கூட்டல், மேற் செல்லல், இருத்தல் என்னும் அரசர் அறுவகைச் செயல்களுள், இருத்தல் என்பது மேற்செல்லலின் மறுதலை, "காலஞ்செய்வது ஞாலஞ் செய்யாது." என்பராதலின், 'காலங் கருதியிருப்பர்' என்றார்.

சஅக. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

(இ—ரை.) ஊக்கம் உடையான் ஒடுக்கம் — வலிமிகுந்த அரசன் ஊக்க முள்ளவனுயினும் பகைமேற் செல்லாது காலம் பார்த்து ஒடுங்கியிருக்கின்ற இருப்பு; பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து—சண்டையிடும் செம்மறிக்கடா தன்பகையை வலிமையாய்த் தாக்குதற்குப் பின் வாங்கும் தன்மையது.

ஒடுக்கம் சோம்பலால் ஏற்பட்டதன்றென்பதறகு 'ஊக்க முடையான்' என்றார். ஒடுக்கத்தின் தேவையும் சிறப்பும் தகர்பின் வாங்குதல் என்னும் உவமையால் விளங்கும்.

சஅள. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

(இ—ரை.) ஒள்ளியவர்—தெளிந்த அறிவுடைய அரசர்; ஆங்கே பொள்ளெனப் புறம் வேரார்—தம் பகைவர் அவர் பகை மையைக் காட்டின வுடனேயே அவரறிய வெளிப்படையாகச் சினங்கொள்ளார்; காலம் பார்த்து உள்வேர்ப்பர்—அவரை வெல்லு தற்கேற்ற காலம் வரும் வரை தம் சினத்தை உள்ளே அடக்கி வைப்பர்,

'பொள்ளென' என்பது விரைவுக் குறிப்பிடைச்சொல். வேர்த் தல் சினத்தாற் புழுங்குதல். அது இங்குச் சினத்தைக் குறித்தலால் காரணியம் (காரணம்) கருமியமாக (காரியமாக)ச் சார்த்திக் கூறப் பட்டது. வெளிப்படையாய்ச் சினங்கொள்ளின் பகைவர் தம்மைக் காத்துக் கொள்வராதலாலும், துணைவலியொடு திடுமெனவந்து தாக் கலாமாதலாலும், 'புறம்வேரார்' என்றும், சினம் அடியோடு தணி யின் போருக்கு வட்டங்கூட்டுதல் (ஆயத்தஞ் செய்தல்) நிகழா தாதலின் 'உள்வேர்ப்பர்' என்றும் கூறினர்.

சஅஅ. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(இ—ரை.) செறுநரைக் காணின் சுமக்க—அரசர் தம்மினும் வலிய பகைவரைக் காணநேர்ந்தால் அவருக்கு நற்காலம் உள்ள வரை அவருக்குத் தாழ்ந்து பணிக; இறுவரை காணின்தலை கிழக்கு ஆம்—அவர்க்கு முடிவுக்காலம் வரின் தலைகீழாக விழுந்து மாய்வர்

பகைவரின் பகைமை யொழியும் வகை அவரைத்தலைமேற் சுமந்தாற்போல் மிகவுந் தாழ்ந்து பணிகவென்பார் 'சுமக்க' என்றும், அதனால் அவர் தம்மைக் காவாது நெருங்கிப்பழகுவராதலாற் கால

மறிந்து தாக்கின் அவர் தப்பாது கெடுவரென்பார் 'கிழக்காந்தலை' என்றும் கூறினார். பணிதலைத் தலைமேற் சுமத்தலாகக் குறித்தமையால், பணியாது கொல்லுதலைத் தலைகீழாக விழுந்து சாகுமாறு தலையினின்று தள்ளுதலாகக் குறித்தார். இவ்விரு குறள்களாலும் காலம் வரும்வரை பகைமை தோன்றுமலிருக்குமாறு கூறப்பட்டது. கீழ்—கீழ்க்கு—கிழக்கு.

சஅகூ. எய்தற் கரிய தியைந்தக்கா லங்நிலையே
செய்தற் கரிய செயல்.

(இ—ரை.) எய்தற்கு அரியது இயைந்தக்கால் — பகைவரை வெல்லக் கருதும் அரசன் தனக்கு வாய்த்தற்கரிய சமையம் வந்து சேரின்; அந்நிலையே—அப்போதே; செய்தற்கு அரிய செயல் —அது வரை செய்தற்கு அரிதாயிருந்த வினைகளைச் செய்துவிடுக.

காலுக நேர்ந்தாலொழிய எவ்வகையாலும் பெறப்படாமையின் 'எய்தற்கரியது' என்றும், அதுநேர்வது அரிதாகலின் 'இயைந்தக்கால்' என்றும், அது நீடித்து நில்லாமையின் 'அந்நிலையே' என்றும், அது நேராதவிடத்துச் செய்தற் கியலாமையின் 'செய்தற் கரிய' என்றும், கூறினார். ஏகாரம் பிரிநிலை.

சகூ. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(இ—ரை.) கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க—வினைமேல் செல்லாதிருக்குங் காலத்து மீன்தேடுங் கொக்குப்போல் ஒடுங்கியிருக்க; மற்றுச் சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க—மற்றுச் செல்லுங்காலம் வாய்த்த விடத்து அக்கொக்கு விரைந்து மீனைக்கொத்துவதுபோல் விரைந்து பகைவனைத் தாக்குக.

கூம்புதல் குவிதல். குவிதல் ஒடுங்குதல். மனத்தின் ஒடுக்கம் அரசரின் வினையொடுக்கத்திற்கு உவமமாயிற்று. "ஒடுமீனோடியுறு மீன் வருமளவும்-வாடியிருக்குமாங் கொக்கு" (மூதுரை,கக). தனக் கேற்ற மீன்வரும்வரை அது முன்னறிந்து தப்பாமைப் பொருட்டுத் தவஞ்செய்வான் போல் அசைவற்று நிற்றலும், அது வந்தவுடனே திடுமென்று கொத்துதலும், அரசன் காலம் வரும்வரை பகைவர் ஐயுறுவாறு அமைந்திருத்தற்கும் அது வந்தவுடன் விரைந்து வினை முடித்தற்கும். சிறந்த வுவமமாயின. இதனால் இருப்பு வினைகளின் இயல்பும் விளக்கமாயின.

அதி. நூ०—இடனறிதல்

அஃதாவது, வலியுங் காலமுமறிந்து பகைமேற் செல்லும் அரசன் தான் வெல்லுதற் கேற்ற இடத்தை யறிதல். அதிகார முறையும் இதனுல் விளங்கும். இடம்—இடன். அது நிலமாகவோ அரணுகவோ இருக்கலாம்.

சூகூக. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(இ—ரை.) முற்றும் இடம் கண்டபின் அல்லது—பகைவரை முற்றுகை செய்வதற்கேற்ற இடம் பெற்ற பின்னல்லது; எவ்வினையும் தொடங்கற்க—அவருக்கு மாருக எவ்வினையையுந் தொடங்காதிருக்க; எள்ளற்க—அவரைச் சிறியரென்று இகழாதிருக்க.

முற்றுதல் வளைதல். அதற்கேற்ற இடமாவது, பெருவாயில்களாலும் திட்டிவாசல்களாலும் சுருங்கைகளாலும் பகைவர்க்குப் புகலும் போக்குமில்லாவாறு அவர் நகரரணைச் சூழ்ந்து, நால்வகைப்படைகளும் அவற்றின் நடுவே பாதுகாப்பாக அரசனும் தங்கியிருத்தற்குப் போதியதும், உண்ணீர் அண்மையிலுள்ளதும், சதுப்பல்லாததும், படமாடங்களும் பாசனைகளும் ஒரேபகலில் அமைக்கக் கூடியதுமான நிலப்பரப்பாம்.

சூகூஉ. முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கு மரண்சேர்ந்த
மாக்கம் பலவுந் தரும்.

(இ—ரை.) முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் — மாறுபாட்டோடு கூடிய வலிமையோர்க்கும்; அரண்சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும்—அரணைச் சேர்ந்ததனுலுண்டாகும் மேம்பாடு பல நலங்களையும் தரும்.

மாறுபாடாவது மாநிலம் எல்லார்க்கும் பொதுவென்னும் பகைவர் சொல்லைப் பொருத அரசர் மனத்திலெழும் வயிரம். மாறுபாடும் வலியும் ஒருங்கே கூறியதனுல், இது பகைமேற்சென்ற வல்லரசர் செயலாயிற்று. உம்மை உயர்வு சிறப்பு. அரண், ஆறும் மலையும் போல் இயற்கையும், அகழியும் மதிலும் போற் செயற்கையும் ஆக இருவகைப்படும். ஆக்கம் வலிமேம்பாடு. அது தரும் நலங்கள் பகைவரால் தமக்குத் தாக்குதலின்மையும் தாம் நிலையூன்றி அவரைத்தாக்கி வெல்லுதலுமாம்.

சகூங. ஆற்ருரு மாற்றி யடுப விடனறிந்து
போற்ருர்கட் போற்றிச் செயின்.

(இ—ரை.) இடன் அறிந்து போற்றி—தக்க இடத்தைத்தெரிந்து தம்மைக் காத்துக் கொண்டு, போற்ருர்கண் செயின்—பகைவரொடு போர்வினை செய்வராயின்; ஆற்ருரும் ஆற்றி அடுப—வலிமையில் லாதவரும் வலிமையராகி வெல்வர்.

தம்மைக் காத்தல், பகைவரால் துன்பம் தோல்வி கேடுகள் வாராமல் அரணுலும் படையாலும் தம்மைக் காத்துக் கொளுதல். தம்மை எனபதும் போர்வினை என்பதும் அவர்ப் நிலையான் வந்தன. உம்மை இழிவு சிறப்பு.

சகூச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(இ—ரை.) இடன் அறிந்து துன்னியார்—தாம் வினைசெய் தற்கேற்ற அரணுன இடத்தை யறிந்து அங்குச் சென்று தங்கிய அரசர்; துன்னிச் செயின்—அவ்விடத்தொடு பொருந்திநின்று வினை செய்வாராயின்; எண்ணியார் எண்ணம் இழப்பர்—அவரை முன்பு வெல்ல எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தையும் இழப்பர்.

துன்னிச் செய்தல் தாம் வெற்றிபெறுமளவும் தம் இடத்தை விட்டு அகலாது நின்று பொருதல். 'எண்ணம்' என்றது தாம் வெல்ல வகுத்ததிட்டத்தை. முழுக்கவனமும் முயற்சியும் தற்காப் புப்பற்றியே யிருத்தலால், வெற்றியை யிழப்பது மட்டுமன்றி வெல்ல வகுத்த திட்டத்தையும் அடியோடு மறப்பர் என்பார் 'எண்ணமிழப்பர்' என்ருர்.

இந்நான்கு குறளாலும், பகைவரரணின் புறத்து நின்று பொரும் உழிஞைப்போரரசர் அதற்கான இடமறிதல் கூறப் பட்டது.

சகூடு. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனினப் பிற.

(இ—ரை.) முதலை நெடும்புனலுள் (பிற) வெல்லும் — முதலை தன் வாழிடமாகிய ஆழநீர் நிலையுள் யானையுட்படப் பிறவுயிரினை யெல்லாம் வென்று விடும்; புனலின் நீங்கின் அதனைப் பிற அடும்

—அந்நீர் நிலையினின்று நீங்கின் அதனின் வலிகுன்றிய உயிரிகளும் அதனை வென்றுவிடும்.

நிலத்தில் வாழும் பிறவுயிரிகட்கெல்லாம் நிலைக்கும் நீரில் எளிதாய் இயங்கவும் நிலைக்கா நீரில் நிற்கவும் இயலாமையின், அவற்றையெல்லாம், ஆழநீரில் இயற்கையாய் வாழ்வதும், எளிதாய் நீந்துவதும், முப்பதடிவரை நீண்டு வளர்வதும், கரடுமுரடான பாறை போன்ற முதுகுள்ளதும், யானைக்காலையும் எளிதாய்க்கௌவு மாறு அகன்று விரியும் கூர்ம்பல் அலகுகள் வாய்ந்ததும், வலிமை மிக்க வாலுடையதுமான முதலை எளிதாய் நீர்க்குள் இழுத்தமிழ்த்திக் கொன்றுவிடும். ஆயின், அத்தகைய முதலை ஈரிடவாழி (Amphibian) எனப்படினும். அதற்கு நிலத்தில் எளிதாய் இயங்கும் வலிமையுள்ள கால்களின்மையால், அதனிலும் வலிகுன்றிய நில வாழிகள் அதனை நிலத்தின்கண் எளிதாய் வென்றுவிடும்.

இது, மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்கலாற்ற இடஞ் சென்று பொருவராயின் அவரை வெல்வரென்பதும், தாம் நிற்க லாற்ற இடஞ்சென்று பொரின் அவரால் வெல்லப்படுவர் என்பதும், உணர்த்துகின்றமையின் பிறிதுமொழிதலணியாம். ''தன்னூர்க்கு யானை, அயலூர்க்குப் பூனை,'' என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. பகைவர்க்கு ஊற்றமில்லாத இடஞ்சென்று பொருக என்பது கருத்து. பிற என்பது முன்னுங் கூட்டப்பட்டது.

நாகூ. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(இ—ரை.) வல்கால் நெடுந்தேர் கடல் ஓடா—நிலத்தின்கண் ஓடும் வலிய சக்கரங்களுள்ள நெடுந்தேர்கள் கடலின்கண் ஓட மாட்டா; கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா—கடலின்கண் ஓடும் மரக்கலங்களும் நிலத்தின்கண் ஓடமாட்டா.

'கால்வல் நெடுந்தேர்' என்பது, வலிய சக்கரங்களும் நெடிய உயரமு முடைய வாயினும் என்பது படநின்றது. ஏழ்தட்டுக்கள் உடையது முழுத்தேர் என்றும், ஐந்தட்டுக்கள் உடையது முக்கால் தேர் என்றும், மூத்தட்டுக்கள் உடையது அரைத்தேர் என்றும், கூறுவர். நெடுந்தேர் என்றது முழுத்தேரை, தேர்க்குக்கால்போன் றிருத்தலாற் சக்கரம் காலெனப்பட்டது.

முதலை நிலத்தில் மெள்ள மெள்ளவேனும் இயங்கும். மக்களும் விலங்கு பறவைகளும் நிலைக்கும் நீரில் மெள்ள மெள்ளவேனும்

இயங்க முடியும். ஆயின், தேர் கடலிலும் கப்பல் நிலத்திலும் இயங்கவே இயங்கா. ஆதலால், இக்குறளிலுள்ள பிறிதுமொழிதல் மேலேயதினும் வேறுபட்டதாம்.

வேற்றரசர் புகமுடியாத காவல் மிகுதியும் அரண் சிறப்பும் பொருள்வளமும் நிலப்பரப்பு முள்ள வல்லரசர் நாடுகளும் உள. அவற்றை உட்பகைத் துணைகொண்டல்லது தம் சொந்தப்படையாலும் திறமையாலும் அயலார் கைப்பற்ற முடியாது என்பதே இக்குறளின் உட்கருத்தாம். ஆகவே, தேர்ந்த ஒற்றர் வாயிலாக அருமறைகளேயெல்லாம் அறிந்து, உடனிருந்து காட்டிக்கொடுக்கும் உட்பகைவரைத் துணைக்கொண்டே மேற்செல்க என்பதாம். 'தேர்,' 'நாவாய்' என்பன பால்பகா அஃறிணைப் பெயர்கள். உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

சகஎ. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(இ—ரை.) எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின்—அரசர் பகையிடத்திற் செய்யும் வினைத்திறங்களே யெல்லாம் குறைவற எண்ணி அவற்றை இடத்தொடு பொருந்தச் செய்வாராயின்; அஞ்சாமை அல்லால் துணை வேண்டா—வெல்வதற்குந் திடாரிக்கம் ஒன்றிருந்தாற்போதும், வேறுதுணை வேண்டியதில்லை.

மனத்திண்மையில்லாவிடத்து, இடமும் பிறவும் வாய்த்தும் பயனின்மையின், அஞ்சாமையை இன்றியமையாத பெருந்துணையாகக் கூறினார்.

சகஅ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

(இ—ரை.) சிறு படையான் செல் இடம் சேரின்—சிறுபடையரசன் தனக்குப் பாதுகாப்பான புகலிடம் சென்று சேரின்; உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்—அவனை வெல்லக் கருதிச் சென்ற பெரும்படையரசன் அவனை வெல்லும் வழியின்மையால் தன் ஊக்கங் கெட்டு வினையொழிந்து திரும்புவான்.

விடுதல் விட்டு நீங்குதல். வினைக்கு இடமின்மையால் 'விடும்' என்றார். இது, உடும்பு முயல் முதலியவற்றைத் துரத்திச் சென்ற நாய், அவை வளைக்குள் நுழைந்தபின் திரும்பி வருவது போன்றது. சிறுபடையான் புகுந்த இடத்திற்குச் செல்லும் வழி பெரும்படை

செல்ல முடியாவாறு மிக ஒடுங்கியிருக்குமாதலாலும், ஒவ்வொரு வராகவோ சிற்சிலராகவோ செல்லத்துணியின் மேலிருந்தோ ஒரு கோடியில் நின்றே சிறுபடை பெரும்படை முழுவதையும் வெட்டி வீழ்த்திவிடுமாதலாலும், மலைவழியும் மரமடர்ந்த காட்டுவழியுமா யின் பெரும்படை வழிதெரியாது மயங்கி இடர்ப்பட நேருமாதலா லும், 'ஊக்கம் மழிந்து விடும்' என்றார். கஅசக—ஆம் ஆண்டு நிகழ்ந்த முதலாம் ஆபுகானியப் போரில், இந்தியப்படை முழுவ தும் கைபர்க்கணவாயிற் சுட்டுக் கொல்லப்பட்டது இங்கு நினைக் கத்தக்கது. 'உறு' உரிச்சொல்.

சகூஉ. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

(இ—ரை.) சிறைநலனும் சீரும் இலர் எனினும்—அழித்தற் கரிய அரண்சிறப்பும் பெரும்படையும் பெரும்பொருளுமாகிய பிற பெருமையும் இல்லாதவராயினும்; மாந்தர் உறைநிலத்தோடு ஒட் டல் அரிது—போர் வினைக்குச் சிறந்த மாந்தரை அவர் நிலையாக வதியும் இடத்திற்குச் சென்று அவரைத் தாக்குதல் அரிதாம்.

ஒட்டல் பொருந்துதல்; இங்குப் பொருந்திப் பொருதல். ஆத லால், பரிமேலழகர் குறித்தவாறு வேற்றுமை மயக்கம் அன்றும். அரிமாவும் வரிமாவும்போற் பொரும் ஆண்மை யுடையாரை தொகைச் சிறுமை நோக்கி யிகழ்ந்து அவரிருப்பிடஞ் சென்று தாக்கின், அவர் மறமிகுதியானும் வேறிடமின்மையானும் உயிரைப் பொருட்படுத்தாது ஊன்றிப்பொருவர். அதனாற் பெரும்படையும் அவர்க்கு உடையும் என்பதாம். "ஊக்கம் ஒன்பது ஆளை அடிக் கும்" என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

நூo. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

(இ—ரை.) கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு—பாகர்க் கும் யானை மறவர்க்கும் அடங்காதனவாய்ப் போர்க்களத்தில் வேல் மறவரைக் கோட்டாற் குத்திக்கோத்த மதயானைகளையும்; கால் ஆழ் களரின் நரி அடும்—அவை காலமிழும் சேற்று நிலத்தில் அகப்பட்ட விடத்து மிகச் சிறிய நரிகளும் அவற்றைக் கொன்று விடும்.

''வேலாழ் முகத்த'' என்று மணக்குடவர் பாடங்கொள்வர். வேல் பதிந்த முகத்தனவாயின், அவை மேலும் வலிகுன்றி நரி கொல்வதற்கேதுவாக முடியுமாதலின், அது பாடமன்றும். முகம் ஆகுபொருளது. களிறு மதங்கொண்ட ஆண்யானை. கள்—களி—களிறு. களி. கள்வெறி போன்றயானைமதம். இழிவு சிறப்பும்மையும் உயர்வு சிறப்பும்மையும் செய்யுளால் தொக்கன. பெரும்படையுடைய பேரரசரும் தமக்கேற்காத இடத்துச் சென்று பொரின், மிக எளிய வராலும் வெல்லவுங் கொல்லவும் படுவர் என்னும் உட்பொருள் தோன்ற நின்றமையின், இதுவும் பிறிதுமொழிதல் அணி. இம் மூன்று குறளாலும், பகைமேற்சென்று தாக்கலாகா இடங்களும் தாக்கின் நேருந்தீங்கும் கூறப்பட்டன. இவை நொச்சிப்போர் வெற்றியாம்.

அதி. நுக—தெரிந்து தெளிதல்

அஃதாவது, அரசன் தன் ஆட்சி பற்றிய எல்லா வினைகளிலும் சிறப்பாகப் போர்வினையில், தனக்கு உதவி செய்யும் பொருட்டு அமைச்சர் படைத்தலைவர் தூதர் முதலிய துணையதிகாரிகளை அவர் குடிப்பிறப்புக் குணம் அறிவாற்றல் செயல் பற்றி, காட்சி கருத்து உரை ஆகிய அளவைகளாலும் நூலுத்தி பட்டறிவாலும் ஆராய்ந்து தெளிதல். அதிகார முறையும் இதனால் விளங்கும்.

நுoக. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

(இ—ரை.) அறம் பொருள் இன்பம் உயிரச்சம்—அரசனால் ஆட்சித்துணையதிகாரியாக அமர்த்தப்படுபவன் அறமும் பொருளும் இன்பமும் உயிர்க்கேடு பற்றிய அச்சமும் ஆகிய; நான்கின் திறம் தெரிந்து தேறப்படும்—நான்கு தேர்திறத்தால் மனப்பான்மை ஆராய்ந்து தெளியப்படுவான்.

நால்வகைத் தேர்திறத்துள் அறத்தேர்திறமாவது: அரசன் குருக்களையும் அறவோரையும் ஆராயப்படுவானிடம் மறைவாக அனுப்பி 'நம் அரசன் அறவோனன்மையின் அவனை நீக்கிவிட்டு அவனிடத்திற்கு அறவாணனை வேருருவனை அமர்த்தத் தீர்மானித்துள்ளோம். இது அனைவர்க்கும் உடன்பாடே. இது பற்றி உன் கருத்தென்ன?'' என்று அவன் கருத்தைச் சூழ்ச்சமாகத் தெரிவிக்கச் செய்தல்.

பொருள் தேர்திறமாவது: அரசன் படைத்தலைவனையும் படை மறவரையும் ஆராயப்படுவானிடம் மறைவாக அனுப்பி, ''நம் அரசன் கஞ்சனும் கையழுத்தக்காரனுமா யிருத்தலின் அவனை நீக்கிவிட்டு அவனிடத்திற்குக் கொடையாளியான வேறொருவனை அமர்த்தத் தீர்மானித்துள்ளோம். இது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததே. இது பற்றி உன்கருத்தென்ன?'' என்று அவன் கருத்தைச் சூளுறவோடு தெரிவிக்கச் செய்தல்.

இன்பத்தேர்திறமாவது: அரசன் தன்னுடைய உரிமைச் சுற்றமான மகளிர் கூட்டத்தொடு தொன்றுதொட்டுப் பழகிய ஒருதவ மூதாட்டியை ஆராயப்படுவானிடம் மறைவாக அனுப்பி, ''அரசனது உரிமைச் சுற்றத்துள் இன்னாள் உன்னைக் கண்டு கரைகடந்த காதல் கொண்டு உன்னைக் கூட்டுவிக்குமாறு என்னை விடுத்தாள் அவளொடு கூடுவையாயின், உனக்குப் பேரின்பமும் பெருஞ்செல்வமுங் கிட்டும்.'' என்று சொல்லி அவன் விருப்பத்தைச் சூளுறவோடு தெரிவிக்கச் செய்தல்.

உயிரச்சத்தேர்திறமாவது: அரசன் ஆராயப்படுவான் வீட்டிற்கு ஓர் அமைச்சனைக் கொண்டு ஏதேனுமொரு பொருட்டின் (நிமித்தத்தின்) மேலிட்டுப் பலரை வருவித்து, ஆராயப்படுவானுள்ளிட்ட அனைவரையும் அரசனுக்குக் கேடு சூழக்கூடினரென்று சிறை செய்து, அவருள் ஒருவனைக்கொண்டு ''இவ்வரசன் நம்மைக் கொல்லச் சூழ்கின்றமையால் நாம் அதற்குமுன் அவனைக்கொன்று விட்டு நமக்கேற்ற வேறொருவனை அரசனுக்கிக் கொள்வோம். இது இங்குள்ள எல்லார்க்கும் இயைந்ததே. இது பற்றி உன்கருத்தென்ன?'' என்று அவன் கருத்தைச் சூளுறவோடு தெரிவிக்கச் சொல்லுதல். இந்நான்கு தேர்விலும் திரியாது தேறினானுயின் எதிர்காலத்திலும் திரியானென்று தெளியப்படுவான் என்பதாம். தெளிதல் வினைக்கமர்த்தத் தீர்மானித்தல். தேர்திறத்தைத் தேர்வையெனினும் ஒக்கும்.

''இவ்வடநூற் பொருண்மையை யுட்கொண்டு இவரோதியதறியாது, பிறரெல்லாம் இதனை உயிரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத்தோன்றிய வாறேயுரைத்தார்'' என்றுபரிமேலழகர். இங்குந்தம் நஞ்சைக் கக்கியிருக்கின்றார். மூவேந்தராட்சி படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வருவதென்று இவரே வேறோரிடத்திற் கூறியிருந்தும், பாட்டி பேர்த்தியிடமிருந்து நூல்நூற்கக் கற்றுக்கொண்டாள் என்பது போல, தமிழவேந்தர் பிற்காலத்தாரியரிடம் அரசியல், திறங்களை அறிந்து கொண்டார் என்பது தன்முரணனதே. இத்தேர்திறம் வடமொழியில் உபதா (upadha) எனப்படும். அதற்கு மேலிடு

தல் என்பதே மூலப்பொருள். இப்பிற்காலக் குறியீடு காமந்தகீய நீதிசாரம், பட்டி காவியம், சிசுபாலவதம் முதலிய நூல்களில் வந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது. சென்னை நாட்டு வேத்தவை வடமொழிப்புலவராயிருந்த ஒருவர், வடநூல்களில் விளங்காதிருந்த உபதா என்னும் செய்தி, திருக்குறளைப் படித்தபின்புதான் தமக்கு விளங்கினதாகச் சேலங்கல்லூரியில் ஒரு முறை தாம் ஆற்றிய சொற்பொழிவிற் கூறினர். பண்டைத் தமிழ்ப் பொருள்நூல்களெல் லாம் அழிக்கப்பட்டு விட்டதனாலும், உரையாசிரியர் மரபு ஆரிய இனமாக மாறியதினாலுமே, தமிழர் பழந்தமிழ் நாகரிகத்தைச் செவ் வையாய் அறியக் கூடாது போயிற்றென அறிக.

குஅ0. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(இ—ரை.) குடிப் பிறந்து—ஒழுக்கத்தால் உயர்ந்த குடும்பத் திற் பிறந்து; குற்றத்தின் நீங்கி—நடுநிலையின்மை, விரைமதியின்மை, அன்பின்மை, மடி, மறதி முதலியவற்றொடு ஐவகையும் அறுவகையு மான குற்றங்களினின்றும் நீங்கி; வடுப்பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு—தமக்குப் பழிவந்து விடுமோ என்று அஞ்சும் நாணுடையவனிடத்ததே அரசனது தெளிவு.

குடிப்பிறந்தார் வடுப்பரிதலே,
''அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றேரு மொப்பர்மன்—திங்கள்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.'' (நாலடி. கஞக)

என்பதாலறிக. நாண் இழிதொழில் பற்றிய நன்மக்கள் அருவருப்பு. ''கருமத்தா ஞணுத ஞணு'' (குறள். கoகக) என்றமை காண்க. ஏகாரம் தேற்றம். கண்ணது—கட்டு (கண் + து), 'குற்றத்தினீங்கி வடுப்பரியு நாண்' உண்மையுமின்மையும் நால்வகைத் தேர்விலும் வெளிப்பட்டுவிடும். குடிப்பிறப்பு தக்கார் உரையாலும் உறவினரா லும் அறியப்படும்.

குஅ0. அரியகற் ருசற்ருர் கண்ணுங் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(இ—ரை.) அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும்—அரும் பொருள் கூறும் சிறந்த நூல்களைக் கற்று ஐவகையும் அறுவகையு மாகிய குற்றங்கள் நீங்கியவரிடத்தும்; தெரியுங்கால் வெளிறு

இன்மை அரிதே—நுட்பமாக ஆராயும்பொழுது அறியாமை அல்லது குற்றம் அறவுமில்லாமை காண்பது அரிதே.

பிறரிடத்துள்ள குற்றம் போல் விளங்கித் தோன்றுமல் மிகச் சிற்றளவாயிருப்பதால் 'தெரியுங்கால்' என்றார். எல்லாமறிந்தவரும் எக்குற்றமுமில்லாதவரும் இவ்வுலகத் தின்மையால், குற்றமற்ற வனையே விரைக்கமர்த்தவேண்டு மென்று மேன்மேலும் ஆராய்ந்து கொண்டிருப்பின், இது எல்லையின்றியோடி ஒரு முடிவிற்கும் வர இடந்தராததாதலால், ஓரிரு சிறு குற்றங் குறைகளிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது இன்றியமையாத திறமுங் குணமுமுடைய வரை அமர்த்திவிடுக என்பதாம். உள்ளீடில்லாத வெறுமைபோலிருத்தலால் அறியாமையும், விளையாத வெண்மரம் போலிருத்தலாற் குற்றமும், வெளிறெனப்பட்டன, உம்மை உயர்வு சிறப்பு; ஏகாரம் தேற்றம். வெள்—வெளி—வெளில்—வெளிறு.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." (குறள். ஏஎ),

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்." (குறள். ஈஉஈ)

என்று ஆசிரியர் கூறியிருப்பதால், குடி என்பது இங்குப்பிறப்பொடு தொடர்புள்ள ஆரியக் குலப்பிரிவினை பற்றிய சிறு வகுப்பன்று. மேலும், சோழனொருவன் மந்திரிப் பதவிக்குத் தக்கவன் நால்வகுப் பாருள் எவ்வகுப்பான் என்று வினவியதற்குப் பிற்காலத்து ஔவையார் ஒருவர்.

"நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்
அந்த வரசே யரசு."

என்று விடையிறுத்ததும் கவனிக்கத்தக்கது. இம் முடிபுப்படியே குன்றத்தூர்ச் சேக்கிழார் குடியைச் சேர்ந்த அருண்மொழித்தேவர் இரண்டாங் குலோத்துங்கச் சோழனின் தலைமை யமைச்சராக அமர்த்தப் பெற்றார் போலும்!

நூசு. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(இ—ரை.) குணம் நாடி—குணமுங் குற்றமு மாகிய இரண்டு முடையாரே உலகத்திலிருத்தலால், ஒருவன் குணங்களை முதலில் ஆராய்ந்து; குற்றமும் நாடி—அதன்பின் அவன் குற்றங்களையும் ஆராய்ந்து; அவற்றுள் மிகை நாடி—அவ்விரு பகுதிகளுள்ளும் அளவில் மிகுந்ததை ஆராய்ந்து; மிக்க கொளல்—மிகுந்ததை அளவையாகக் கொண்டு அவன் தகுதியுண்மை யின்மையைத் துணிக.

ஒருவனுடைய குற்றங்கள் ஒன்றிற்கு மேற்பட்டனவாகவும் விளங்கித் தோன்றுவனவாகவு மிருந்து, அவனை எங்ஙனந் தெளிவ தென்று மயக்கம் நேரின், அம்மயக்கத்தைத் தெளிவிப்பது இக்குறள். குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து, குணம் மிகின் வினைக் குரியவனென்றும், குற்றம் மிகின் அல்லனென்றும், தீர்மானிக்க என்றார். மிகையுடையது மிகையெனப்பட்டது. மிகை பன்மை பற்றி அல்லது தலைமை பற்றித் தீர்மானிக்கப்படுவது.

நூடு. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(இ—ரை.) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக்கல் —மக்கள் அறிவாற்றல் குணங் கல்வி பொருள் ஆகியவற்றுல் அடையும் மேன்மைக்கும் மற்றக் கீழ்மைக்கும் உரைகல்லாயிருப்பது; தம்தம் கருமமே — அவரவர் செய்யும் வினையே யன்றி வேறொன்று மன்று.

கையூட்டினலும் இனவுணர்ச்சியினலும் கண்ணோட்டத்தாலும் கவர்வினலும் சிலர் மேன்மையடையினும், உண்மையான உயர்விற்கு ஏதுவாயிருப்பது வினைமுயற்சியே என்பது ஆசிரியர் கருத்து. ஆகவே, வினைத்திறமையுள்ளவனையே வினைக்கமர்த்துக என்பதாம். ''பெருமையுஞ் சிறுமையுந் தானன்ற வருமே,'' என்னும் அதிவீரராம பாண்டியன் கூற்று இக்குறட் சுருக்கமாகும். கருமத்தைக் கட்டளைக் கல்லாக உருவகித்துப் பெருமை சிறுமைகளை மாழை (உலோக) வகைகளாக உருவகியாது விட்டது ஒருமருங்குருவகம். ஏகாரம் தேற்றம். ஒருவனுக்கு அறிவாற்றல் மிக்கிருப்பினும் அவற்றைப் பயன்படுத்தும் வினைத்திறமின்றேல் அவற்றுற் பயனில்லை யென்பதாம். பரிமேலழகர் பெருமை சிறுமைக்குக் காரணியமாகப் பிறப்பையுங் குறித்துள்ளார்.

நூஙு. அற்ருரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

(இ—ரை.) அற்ருரைத் தேறுதல் ஒம்புக—மகப்பேறும் உறவினரும் இல்லாதவரை வினைத்தலைவராகத் தெளிதலை விட்டு விடுக: அவர் மற்றுப் பற்று இலர்—அவர் வேறு தொடர்பில்லாதவராதலால்; பழிநாணுர்—பழிக்கு அஞ்சார்.

பிள்ளைகளைப் பெருதவர்க்குப் பிறரிடத்து அன்புண்டாகாதென்பதும், உற்ருருறவினரில்லாதவர்க்குப் பழிபளகு (பாவம்) பற்றிய அச்சமிராதென்பதும், பொதுவான உலக நம்பிக்கை. ஆதலால் அத்தகையோரை வினைக்கமர்த்தின், குடிகள் கெடுவதொடு பொறுப்பற்ற வினையால் அரசுங் கெடும் என்பதாம். 'பற்றிலர்' என்பதனுல் உறவினர் என்பது வருவிக்கப்பட்டது. ஒர்புதல் காத்தல்: இங்கு நிகழாவாறு காத்தல்.

நுoஅ. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாங் தரும்.

(இ—ரை.) காதன்மை கத்தா—பேரன்புடைமையைப் பற்றுக் கோடாகக் கொண்டு; அறிவு அறியார்த் தேறுதல்—தம் வினைக்கு அறியவேண்டியவற்றை அறியாதாரைத் தெளிந்து அமர்த்துதல்; பேதைமை எல்லாம் தரும்—அரசனுக்கு அறியாமையால் வினையுந் தீங்குகள் பலவற்றையும் உண்டாக்கும்.

அறிவிலாரைத் தனக்கு மவர்க்குமிடைப்பட்ட பேரன்பு பற்றிக் கண்ணுேடி அரசன் வினைத்தலைவராக்கின், அவரால் வினை அடியோடு கெடும். அதனுல், அரசன் கெடுவதுடன் வினையறியாதவன், வினைக்குரியாரை அறியாதவன், தன்னுக்கம் அறியாதவன், குடிகள் நலமறியாதவன் எனப்பல அறியாமைப் பட்டங்களும் பெற நேரும். ஆக என்னும் குறிப்புவினையெச்சவீறு 'ஆ' எனக்கடைக்குறைந்து நின்றது. 'பேதைமை' ஆகு பொருளது.

நுoஆ. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(இ—ரை.) பிறனைத் தேரான் தெளிந்தான்—தன்னெடு தொடர்பற்ற ஒருவனை ஒருவழியாலும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு; வழிமுறை தீரா இடும்பை தரும்—அத்தெளிவு அவன் வழியினர்க்கும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்

தொடர்பு தன் குடியோடியைந்த உறவு. தெளிதல் வினைத்தலைவனுக்குதல். அவன் வினைக்கேட்டால் அரசனும் அவன் வழியின

ரும் அழிவர் என்பதாம். நான்காம் வேற்றுமையுருபும் எச்சவும்மை யும் தொக்கன, 'தேரான்' எதிர்மறை முற்றெச்சம்.

நிoகூ. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

(இ—ரை.) யாரையும் தேராது தேறற்க—எத்துணைச் சிறந்த வரையும் எவ்வினைக்கும் ஆராயாது தெளியற்க; தேர்ந்தபின் தேறும் பொருள்தேறுக—ஆராய்ந்து ஒருவரைத் தெளிந்தபின் அவரைநம்பி அவரிடம் ஒப்படைக்கக்கூடிய வினைகளைப்பற்றி ஐயுறற்க.

உம்மை சிறப்பின்பாற் பட்டது. வினை வகையில், 'தேறற்க' என்றது பொதுத்தேர்வும் 'தேறுக' என்றது சிறப்புத்தேர்வும் பற்றி யனவாகும். 'பொருள்' ஆகுபொருளது.

நிகo. தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(இ—ரை.) தேரான் தெளிவும்—அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும்; தெளிந்தான்கண் ஐயுறவும்—ஒருவனை ஆராய்ந்து தெளிந்தபின் அவனைப்பற்றி ஐயுறுதலும் ஆகிய இவ்விரண்டும்; தீரா இடும்பை தரும்—அவனுக்கு நீங்காத துன்பத்தை விளைக்கும்.

'தேரான்தெளிவு' செய்யுங்கேடு முன்னரே (நிoஅ) கூறப்பட் டது. ஒருவனை ஒரு வினைக்கமர்த்தினபின் அவனிடம் ஒரு குற்ற முங் காணுவிடத்தும் அவனை ஐயுறின், இனி இப்பதவி நமக்கு நிலை யானதும் உயிர்க்காப்பானது மன்றென்று கருதி, பணியாற்று வதில் நெகிழ்வதொடு பகைவராற் பிரிக்கவும் படுவான். ஆதலால் 'தேரான் தெளிவு' போன்றே 'தெளிந்தான்கண் ஐயுறவும்' தீங்கு விளைப்பதாம். ஆகவே இவ்விரண்டுஞ் செய்யற்க வென்பதாம்.

ஆதி. நிஉ — தெரிந்து வினையாடல்

அஃதாவது, ஆராய்ந்து தெளியப்பட்ட வினைத்தகைவரை, அவரவர் திறமறிந்து அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட வினைகளை ஆற்று வதன்கண் அவரை ஆண்டு நடத்துதல். அதிகார முறையும் இத னால் விளங்கும்.

நிகக. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளப் படும்.

(இ—ரை.) நன்மையும் தீமையும் நாடி — அரசன் முதற்கண் தனக்கிட்ட பணியில் அரசனுக்கு நல்லனவும் தீயனவு மானவற்றை ஆராய்ந்து; நலம் புரிந்த தன்மையான்—அவற்றுள் நல்லனவற் றையே விருப்பிய இயல்பையுடையான்; ஆளப்படும்—பின் அரச னால் உண்மையானவன் என்று அறியப்பட்டுச் சிறந்தவினைகளில் ஆளப்படுவான்.

நொதுமலாகவோ பகையாகவோ வுள்ள வேற்றரசனிடம் தூது போன விடத்துத் தன்னரசனுக்கு நன்மையாகவே வினைமுடித்த வன், பின்னும் அவ்வியல்பினனாகவே யிருப்பானென்று நம்பப் பட்டு, அத்துறையிலும் அதுபோன்று பொறுப்பு வாய்ந்தனவும் உயிர்நாடியானவுமான பிறதுறைகளிலும் ஆளப்படுவான். இங்ங னமே, விசயநகர வேந்தரான கிருட்டிண தேவராயருக்கு நாகம நாயக்கன் இருந்தது போலன்றி, அவன் மகன் விசுவநாத நாயக் கன் இருந்ததுபோல் உண்மையான படைத்தலைவனே நிலையான படைத்தலைமைக்கு அமர்த்தப்படுவான். 'புரிந்த' என்னும் இறந்த காலப் பெயரெச்சத்தால், வினைக்குரியதகுதி யறிதற் பொருட்டு முன்னிட்ட பணியென்பது அறியப்படும்.

நிகூ. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

(இ—ரை.) வாரி பெருக்கி—பொருள் வருவாய்களை விரிவாக்கி யும் பல்குவித்தும் பெருகச் செய்து; வளம் படுத்து — அவற்றுற் செல்வத்தை வளர்த்து; உற்றவை ஆராய்வான் — அவற்றிற்கு நேர்ந்த இடையூறுகளை நாள்தோறும் ஆராய்ந்து நீக்கவல்லவனே; வினை செய்க—அரசனுக்குத் தலைமை யமைச்சனாக விருந்து பணி யாற்றுக.

வருவாய்கள் அரசிறை (புரவுவரி), திறை, தண்டம், புதையல், உழவு, கால்நடைவளர்ப்பு, கைத்தொழில், வாணிகம் முதலியன. செல்வங்கள் அவற்றுல் வருவனவும், அரசனுக்கும் குடிகட்கும் இன்பநுகர்ச்சிப்பொருட்டு அமைக்கப்படுவனவுமாம். இடையூறு கள் அரசியல் வினைஞர், அரசன் சுற்றத்தார், பகைவர், கள்வர், கொள்ளைக்காரர், அஃறிணையுயிரிகள், இயற்கை, தெய்வம் என்றி வரால் வரும் நலிவும் இழப்பும். அஃறிணையுயிரிகள் பூச்சிபுழுக்களும் காட்டு விலங்குகளும் போல்வன. இயற்கையால் நேர்வன வெள் ளப்பாழ் புயற்சேதம் முதலியன. தெய்வத்தால் வருவன கொள்ளை நோய், பஞ்சம் முதலியன. இயற்கை யென்பது இயல்பாக நிகழ்

வதன் மிகையென்றும், தெய்வம் என்பது இயற்கைக்கும் மக்கள் தடுப்பிற்கும் அப்பாற்பட்ட தென்றும், வேறுபா டறிக.

நிகஙூ. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(இ—ரை.) அன்பு—அரசனிடத்தன்பும்; அறிவு—அரசனுக்கு ஆவனவற்றையும் வினைக்கு வேண்டிய வற்றையும் அறியும் அறிவும்; தேற்றம்—வினைசெய்தற்கண் கலங்காமையும்; அவாவின்மை—பொருள் கைசேர்ந்தவழியும் தீயவழியாற் பொருள் வருமிடத்தும் அதன்மேல் ஆசையின்மையும் ஆகிய; இந்நான்கும் நன்கு உடையான் கட்டே தெளிவு—இந்நாற்குணங்களையும் உறுதியாகவுடைய வன் மேலதே அரசன் வினையை விட்டிருக்குந் தெளிவாம்.

இந்நாற்குணமும் நன்கு உடையான் வினைக்கண் திறம்பா னென்று அரசன் கருதுவனகலின், அவனிடத்ததே தெளிவென்று இடவரிமைப்படுத்திக் கூறினர். கண்ணது—கட்டு (கண்+து). ஏகாரம் தேற்றம்.

நிகச. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகு மாந்தர் பலர்.

(இ—ரை.) எனை வகையான் தேறியக் கண்ணும்—எத்தனை வகையால் ஆராய்ந்து தெளிந்து வினைக்கு அமர்த்திய பின்பும்; வினை வகையான் வேறு ஆகும் மாந்தர் பலர்—அவ்வினையின் தன்மையால் தன்மை வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலராவர்.

ஒரு தனிப்பட்ட கொள்கையுடைய அரசியற் கட்சித்தலைவர் ஆளுநராக அமர்த்தப்பெறின், அக்கட்சிக் கொள்கையை விட்டு விடுவதும், நேர்மையானவரென்று கருதப் பெற்றவர் வணிகத் துறையதிகாரியானபின் கையூட்டு வாங்குவதும், தலைமையமைச்ச ராகவும் படைத்தலைவராகவும் அரசனுல் அமர்த்தப் பெற்றவர் அதி காரத்தைக் கைப்பற்றியபின் அரசனைக் கவிழ்த்து விட்டுத் தாம் அரசராவதும், இன்று நிகழ்வது போன்றே அன்றும் நிகழ்ந்தமை யின், 'வினைவகையான் வேருகு மாந்தர் பலர்' என்றார். தேனை வழித்தவன் புறங்கையை நாவால் வழிப்பது போல, பொருளின் அதிகாரச்சுவை கண்டபின் அதன் ஆசையால் இழுப்புண்டு மனந்திரிவது பெரும்பால் மாந்த ரியல்பாதலால், எல்லாவகையா லும் ஆராய்ந்து தெளிந்து அமர்த்திய வினைத்தலைவர் வினையையும்

இறுதிவரையில் விழிப்பாக மேற்பார்த்து வருவதும், சிறிது வேறு பட்டவிடத்தும் அவரை வினையினின்று விலக்கிவிடுவதும், இன்றியமையாதன வென்பதாம்.

நிகடு. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(இ—ரை.) வினைதான்—எவ்வினையுந்தான்; அறிந்து ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால்—செய்யும் வழிகளை யறிந்து செயலாலும் இடையூறுகளாலும் வருந்துன்பங்களைப் பொறுத்துச் செய்து முடிக்க வல்லானையல்லது; சிறந்தான் என்று ஏவல் பாற்று அன்று—இவன் நம்மிடத்துச் சிறந்த அன்புடையவனென்று வேறு எவனையும் ஏவத்தக்கதன்று.

'செய்கிற்பாற்கு' என்பது வேற்றுமை மயக்கம். 'கில்' ஆற்றல் உணர்த்தும் இடைநிலை. பாலது—பாற்று (பால்+து). அறிவாற்றல் பொறையூக்கங்களாலன்றி அன்பினால் மட்டும் எவ்வினையும் முடியாதென்பது கருத்து.

நிகஉ. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(இ—ரை). செய்வானை நாடி—செய்வானது தன்மையை முதற்கண் ஆராய்ந்து; வினைநாடி—பின்பு அவனுற் செய்யப்படும் செயலின் தன்மையை ஆராய்ந்து; காலத்தோடு எய்த உணர்ந்து—அதன்பின் அவன் தன்மையும் அவன் செயலின் தன்மையும் காலத்தொடு பொருந்துமா றறிந்து; செயல்—அவை பொருந்துமாயின் அவனை அவ்வினையின்கண் அரசன் ஆளுதலைச் செய்க.

செய்வானது இலக்கணம் இவ்வதிகாரத்தின் முதல் முக்குறள்களிலும், வினையின் இயல்பு இதற்கு முந்திய குறளிலும், கூறப்பட்டன. காலத்தோடெய்தவுணர்தலாவது, இத்தன்மையன் இவ்வினையை இக்காலத்து இவ்வகையிற் செய்யின் இவ்வாறு முடியும் என்று கூட்டி நோக்கி உய்த்துணர்தல்.

நிகஎ. இதனை யிதனு லிவன்முடிக்கு மென்றுய்ந்
ததனை யவன்கண் விடல்.

(இ—ரை.) இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து—இவ்வினையை இக்கருவிகொண்டு இவ்வாற்றலுள்ள இவன்

செய்து முடிப்பான் என்று கூறுபடுத்தி யாராய்ந்து; அதனை அவன் கண் விடல்—மூன்றும் பொருந்திய விடத்து அவ்வினையை அக்கருவியும் அவ்வாற்றலு முள்ள அவனிடம் ஒப்படைக்க.

கருவியாவன: முதற்கருவி, துணைக்கருவி, பொருள், துணைவர் முதலியன. மூன்றும் பொருந்துதலாவது, வினைசெய்வானெடு வினைக்குரிய ஆற்றலும் கருவியும் சேர்தல், 'அவன்கண் விடல்' அவனை வினைக்குரியவனைக்குதல்.

திகஅ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

(இ—ரை.) வினைக்கு உரிமை நாடிய பின்றை—அரசன் ஒருவனை ஒருவினை செய்தற்குரியவனாக ஆராய்ந்து துணிந்தபின்; அவனை அதற்கு உரியன் ஆகச் செயல்—அவனை அவ்வினைக்கு முழு வுரிமையும் உடையவனாகச் செய்க.

'வினைக்குரிமை நாடிய பின்றை' என்றது வினைவகையான் வேருகு மாந்தனன்மை யறிந்தபின் என்பதாம். 'அதற்குரியனாகச் செயல்' என்றது அரசன் அதில் தலையிடாதிருத்தலை. தலைசிறந்த ஆற்றலும் தன்மானமுமுள்ள வினைத்தலைவரின் வினையில் தலையிடுவது, 'தெளிந்தான்கண் ஐயுறவு' போல் தீங்கு விளைக்கு மாதலின், அது தகாதென்றார். அரசன் ஒருவனது வினையை மறைவாகக் கவனித்து வருவதுவேறு; அதில் வெளிப்படையாகத் தலையிடுவது வேறு. ஒரு தகுந்த வினைத்தலைவனது வினையில் அரசன் தலையிடாது முழுப்பொறுப்பையும் அவனிடம் விட்டு விட்டால், அவன் மகிழ்ச்சியும் பெருமையும் ஊக்கமுங் கொண்டு அதை முழுவெற்றியாகச்செய்து முடிப்பான் என்பது கருத்து.

திகக. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ருக
நினைப்பானை நீங்குந் திரு.

(இ—ரை.) வினைக்கண் வினை உடையான் கேண்மை—தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வினையை முழுநேரமும் முழுமுயற்சியுடன் செய்து வருபவன் அவ்வுரிமை பற்றி அரசனெடு உறவுபோல் ஒழுகுவதை; வேருக நினைப்பானைத் திரு நீங்கும்—பொருமைக் காரர் கோட்சொல்லைக்கேட்டு அரசன் வேறுபடக் கருதுவானாயின், திருமகள் அவனைவிட்டு நீங்குவாள்.

உறவுபோல் ஒழுகுதலாவது அரசன் குடும்பவினைகளிற் கலந்து கொள்ளுதல். அதை மதிப்புக் கேடாகக் கொண்டு அரசன் அவனைத் தண்டிக்கக் கருதுவானுயின், அவன்போல் முழுப்பொறுப்பேற்று உண்மையாக வுழைப்பவர் வேருெருவரு மின்மையால், அரசன் செல்வங்கெடு மென்பதாம். 'திரு' ஆகுபெயர்.

நூ0. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

(இ—ரை.) வினைசெய்வான் கோடாமை உலகு கோடாது — அரசியல் வினைசெய்வான் நெறிதவருவிடின் நாடு கெடாது; மன்னன் நாள்தோறும் நாடுக—ஆதலால், அரசன் நாள்தோறும் அவனை ஆராய்க.

ஆராய்க என்று பொதுப்படச் சொல்லினும், திறமையும் அன்மையும் ஒருங்கே யுடையாரை மறைவாகவும், அவையில்லாதாரை வெளிப்படையாகவும், ஆராய்தல் வேண்டுமென்பது அறியப்படும். அரசன் எப்போதும் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமுமாகிய வினைசெய்வாரைக்கொண்டே ஆட்சி நடாத்துதலால், 'வினைசெய்வான் கோடாமை கோடாதுலகு' என்ருர். 'மன்னன்' இங்குக் குறுநில மன்னன் என்னும் சிறப்புப் பொருள் குறியாது, அரசன் என்னும் பொதுப்பொருள் குறித்தது. 'வினைசெய்வான்' வகுப் பொருமை. 'உலகு' உலகின் பகுதியாகிய நாட்டைக் குறித்தலால் முதலாகுபெயர்.

அதி. நிஉ—சுற்றந் தழால்

அஃதாவது, அரசன் தன் உறவினரைத் தன்னினின்று நீங்காமல் அணைத்துக் கொள்ளுதல். வினைச்சுற்றத்திற்கு அடுத்து இனச் சுற்றமும் அரசன் ஆட்சிக்கும் வாழ்விற்கும் உதவுதலின், இது தெரிந்து வினையாடலின் பின்வைக்கப்பட்டது. சுற்றியிருப்பது சுற்றம். தழுவல் தழால். 'ஆல்' தொழிற் பெயரீறு. ''செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.'' (வெற்றி. உ). செல்வருட் செல்வன் அரசன்.

நூஉ. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(இ—ரை.) பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்—ஒருவன் செல்வம் அல்லது அதிகாரம் தொலைந்து வறியனனதின்

விகோவாகத் தொடர்பு நீங்கிய விடத்தும், அவனெடு தமக்கிருந்த பழையவுறவைச் சொல்லிப்பாராட்டும் இயல்புகள்; சுற்றத்தார் கண்ணே உள—உறவினரிடத்திலேயே உள்ளன.

'பழைமை' பழைய இன உறவாட்டு; ஆகுபெயர். நண்பரும் வறியாரும் நன்மை பெற்றிருப்பராதலின், இங்குப் பழைமையென்றது பழைய இனவுறவுநிகழ்ச்சிகளையே. உண்மை இறந்தது தழுவிய எச்சம்; சிறப்பன்று. ஏகாரம் பிரிநிலை; தேற்றமன்று. பற்றருத போதுமட்டுமன்றிப் பற்றற்ற போதும் என்றும், சுற்றத்தாரிடத்திலேயே என்றும், பொருள்படுவதை நோக்கி யுணர்க.

ருஉ. விருப்பருச் சுற்ற மியையி னருப்பரு
வாக்கம் பலவுந் தரும்.

(இ—ரை.) விருப்பு அருச் சுற்றம் இயையின்—அன்பு நீங்காத உறவினம் ஒருவனுக்கு வாய்க்குமாயின்; அருப்பு அரு ஆக்கம் பலவும் தரும்—அது அவனுக்கு மேன்மேலுங் கிளரும் பல்வகைச் செல்வத்தை உண்டாக்கும்.

அன்பார்ந்த உறவினர் பல்வகைச் செல்வத்தையுங் காத்து வளர்ப்பராதலின், 'ஆக்கம் பலவுந் தரும்' என்றார். ''உற்றேரெல்லாம் உறவின ரல்லர்.'' ஆதலின், 'விருப்பருச் சுற்றம்' என்றும், மேன்மேற் கிளைத்து வளருஞ் செல்வத்தை 'அருப்பரு வாக்கம்' என்றும், கூறினார். 'இயையின்' என்பது இயைதலின் அருமை குறித்து நின்றது. அரும்புதல்—தோன்றுதல். விரும்பு—விருப்பு. அரும்பு—அருப்பு. 'ஆக்கம்' தொழிலாகுபெயர்.

ருஉங. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

(இ—ரை.) அளவளாவு இல்லாதான் வாழ்க்கை—உறவினத் தொடு உள்ளக் கலப்பில்லாதவன் செல்வவாழ்க்கை; குளவளாக் கோடு இன்றி நீர் நிறைந்த அற்று-குளப்பரப்புக் கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போலும்.

கரையில்லாத குளத்துநீர் காப்பின்றி வெளிச்சென்று விடுவது போல, உறவின மில்லாதவன் செல்வமுங் காப்பாரின்றிப் பிறர் கைப்பட்டு விடும் என்பதாம். உறவினத்தொடு என்பது அதிகாரத் தால் வந்தது. அளவுதல்—கலத்தல் அல்லது கலந்துபேசுதல். 'அளாவு' அளவு என்பதன் நீட்டம். அளவளாவு(தல்) என்பது அளப்பள(த்தல்) என்பது போல் பெயரும் விகோயுஞ் சேர்ந்த

கூட்டுச்சொல். அது இங்கு முதனிலைத் தொழிற்பெயராக நின்றது. வாழ்க்கை யென்றது செல்வத்தோடு கூடிய நல்வாழ்வை, நிறை தல் என்பது குளத்திற்கும் நீர்க்கும் பொதுவினையாதலின், 'நீர் நிறைந்தற்று,' என்பது நீரால் நிறைந்தற்று என்னும் பொருள் படநின்றது. 'ஆன்ருேர் அறிவுநிறைந்தோர்' என்னுந்தொடரமை தியை இதனெடு ஒப்புநோக்குக.

நுஉச. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(இ—ரை.) செல்வம் பெற்றத்தான் பெற்ற பயன்—ஒருவன் செல்வம் பெற்றதனாற் பெற்ற பயனுவது; சுற்றத்தால் தான் சுற்றப் பட ஒழுகல்—தன் உறவினத்தால் தான் சூழப்படும் வகை அதைத் தழுவி யொழுகுதலாம்.

சுற்றத்தாற் பெறும் பயன் செல்வமென்று மேற்கூறியவர், இங் குச் செல்வத்தாற் பெறும்பயன் சுற்றமென்று மறுதலை நயம்படக் கூறினர். அரசனுக்குச் சுற்றத்தாற் செல்வம் மட்டு மன்றிப் பாது காப்பும் ஆட்சித்துணையும் ஏற்படுவதால், அரசன் சுற்றந்தழுவுவ தாற் சுற்றத்திற் குண்டாகும் நன்மையினும் அரசனுக்குண்டாகும் நன்மை பெரிதென்பதாம். பெற்றது—பெற்றதால்—பெற்றத்தால். பெற்றதால் என்பது எதுகைநோக்கி விரிந்தது. அது-அத்து.

"பெற்ற" வென்பதனுள் அகரமும், அதனனென்பதனுள் அன் சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற் ருெக்கன." என்பர் பரிமேலழகர்!

நுஉடு. கொடுத்தலு மின்சொலு மாற்றி னெடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

(இ—ரை.) கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின்—ஒருவன் தன் உறவினத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் ஆற்ற வல்லனுயின்; அடுக்கிய சுற்றத்தான் சுற்றப் படும்—அவன் ஒன்ருெடொன்ருகத் தொடர்ந்த பல்வகை யுறவினத் தாற் சூழப்படுவான்.

இரண்டும் ஒருங்கே யாற்றுதல் அரிதென்பது தோன்ற ஆற்றின்' என்ருர். அடுக்கிய சுற்றமாவது சுற்றத்தின் சுற்றமும் அதனது சுற்றமுமாகத் தொடர்ந்து படர்ந்து செல்வது. கொடை யும் இன்சொலும் தமிழவேந்தர் ஆரியரிடத்தினின்று கற்றதுபோல்'

"இவ்வுபாயங்களோ வடநூலார் தானமுஞ் சாமமுமென்ப." என்பர் பரிமேலழகர்.

நூஉசு. பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(இ—ரை.) பெருங்கொடையான் வெகுளி பேணுன்—ஒருவன் பெருங்கொடையாளியும் சினத்தை வெறுப்பவனுமாயிருப்பின்; அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல்—அவன் போலச் சுற்றத்தையுடையார் இவ்வுலகத்தில் இல்லை.

பெருங்கொடை வறுமை நீங்குமளவு கொடுப்பது. சினத்தொடு கொடுப்பின் கொடைத்தன்மை கெடுமாதலின், 'வெகுளிபேணுன்' என்றார்.

நூஉஎ. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

(இ—ரை.) காக்கை கரவா கரைந்து உண்ணும்—காகங்கள் தமக்கு இரையான பொருள் கண்டவிடத்து அதனை மறையாது தம் இனத்தைக் கரைந்தழைத்து அதனொடு கூடவுண்ணும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள—சுற்றத்தோடு கூடி நுகருஞ் செல்வங்களும் அத்தன்மையார்க்கே உண்டாம்.

சுற்றத்தோடு நுகருஞ் செல்வங்கள் பேரளவின; பல்வகையின; பொதுவுடைமை போல்வன. காக்கைத் தன்மைகள் அன்பு, ஒற்றுமை, கூட்டுறவு முதலியன. 'காக்கை,' 'ஆக்கம்' பால்பகாவஃறிணைப் பெயர்கள். ஏகாரம் பிரிநிலை.

நூஉஅ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

(இ—ரை.) வேந்தன் பொது நோக்கான் வரிசையா நோக்கின்—அரசன் எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அவரவர் தகுதிக்கேற்ப நோக்குவானுயின்; அது நோக்கி வாழ்வார் பலர்—அச்சிறப்பு நோக்கி அவனை விடாது வாழும் உறவினர் பலராவர்.

எல்லாவகையிலும் மக்கள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றோ கீழையாயார் இடையாயார் கடையாயார் என்றோ, முதல்வகுப்பினர் இரண்டாம் வகுப்பினர் எனப்பல வகுப்பினராகவோ, இயற்கையாகவும் செயற்கையாகவும் பாகுபட்டிருத்தலால், தன் மானமுள்ள மேலோர் நீங்காவாறு பொது நோக்கை விலக்கி'

'எல்லாரையும் தழுவுமாறு வரிசைநோக்கை நெறியிட்டார். 'வேந்தன்' என்பது இங்குத் தன் சிறப்புப் பொருள் குறியாது அரசன் என்னும் பொருள் குறித்து நின்றது.

நிஉகூ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(இ—ரை.) தமர் ஆகித் தன் துறந்தார் சுற்றம்—முன்பு அன்பான வுறவினராயிருந்து ஏதேனுமொரு தக்க காரணியம் பற்றித் தன்னைவிட்டுப் பிரிந்து போனவர் மீண்டும் வந்து அன்பாக வுறவாடல்; அமராமைக் காரணம் இன்றி வரும்—இடையில் அன்பாற் பொருந்தாமைக்கு ஏதுவாயிருந்த நிலைமை நீங்கின் தானே சேர்வதாம்.

அரசனது தவற்றொழுக்கத்தினாலோ அவன் தமக்கு ஏற்காதன செய்ததனாலோ அவனை விட்டுப் பிரிந்துபோன மெய்யன்பரான உறவினர், அக்குற்றங்கள் நீங்கின், தாமாகத் திரும்பவந்து சேர்ந்து கொள்வராதலால், அதற்கு ஒரு முயற்சியும் வேண்டியதில்லை யென்பது கருத்து. அமர்தல் பொருந்துதல் அல்லது அன்பு கூர்தல். 'அமராமைக் காரணமின்றி' என்பதால், முன்பு அது நேர்ந்தமை அறியப்படும். 'சுற்றம்' என்றது சுற்றமாயொழுகுதலை.

நிஉ0. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(இ—ரை.) உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை—கரணிய மின்றித் தன்னிடத்தினின்று பிரிந்துபோய்ப் பின்பு ஒரு பயன் நோக்கித் திரும்பிவந்த உறவினனை; வேந்தன் இழைத்திருந்து எண்ணிக் கொளல் — அரசன் அப்பயனைச் செய்து வைத்து ஆராய்ந்து தழுவிக்கொள்க.

'உழைப்பிரிந்து' என்று வெறிதாய்க் கூறினதினாலும், 'காரணத்தின் வந்தானை' என்று விதந்ததினாலும், பிரிதற்குக் காரணமின்மை வெளியாம். கருதிவந்த பயனைச் செய்யாதவழிப் பின்னும் பிரிந்து போய்ப் பகையோடு கூடுவானுதலின் 'இழைத்திருந்து' என்றும், அன்பின்றிப் பிரிந்துபோய்ப் பின்னும் பயன் நோக்கி வந்தமையின் 'எண்ணிக் கொளல்' என்றுங் கூறினர். முதற்காலத்தில் தமிழக அரசர் மூவேந்தராகவே யிருந்ததினால், அரசன் வேந்தனெனப் பெற்றான். முந்தின குறளில், தீமை செய்யப் பிரிந்துபோய் அது

நீங்கியவழித் திரும்பிவந்த உறவினனையும், இக்குறளில், கரணிய மின்றிப் பிரிந்துபோய் ஒரு பயன் நோக்கித் திரும்பிவந்த உறவினனையும், தழுவிக்கொள்ளும் முறைகள் கூறப்பட்டன எனவேறு பாடறிக.

அதி. நிசு — பொச்சாவாமை

அஃதாவது, அறிவாற்றல் படையரண் பொருள் புகழ் முதலிய வற்றுல் மகிழ்ந்து, நாடுகாத்தல், பகையழித்தல் முதலிய கடமைகளை மறந்து சோர்ந்திராமை. பொச்சாப்பினுற் சுற்றந்தழுவுதல் கூடாமையின், இது சுற்றந்தழாலின் பின் வைக்கப்பட்டது.

நிஉக. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(இ—ரை.) சிறந்த உவகை மகிழ்ச்சியில் சோர்வு—மிகுந்த இன்பக்களிப்பால் வரும் மறதி; இறந்த வெகுளியின் தீது—அரசனுக்கு அளவிறந்த எரிசினத்திலும் தீயதாம்.

சிறந்தவுவகை பெருஞ்செல்வம், இடைவிடா இன்ப நுகர்ச்சி, பெரும்புகழ் முதலியவற்றுல் நேர்வது. அளவான வெகுளி பகைவரை யொடுக்குதற்கும் கொடியோரைத் தண்டித்தற்கும் வேண்டுவதாம். அளவிறந்த வெகுளி ஒருகால் கடும்பகைவரைக் கொல்ல உதவலாம். ஆயின், வினைச் சோர்வு தன்னையே கொல்லுதலால் அதனினுந் தீயதாயிற்று.

நிஉஉ. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

(இ—ரை.) நிச்சநிரப்பு அறிவினைக் கொன்ற ஆங்கு—நிகிலயான வறுமை அறிவைக் கெடுப்பதுபோல, பொச்சாப்பு புகழைக் கொல்லும்—மறதி ஒருவனது புகழைக் கெடுக்கும்.

நிச்சநிரப்பாவது நாள்தோறும் வருந்தி இரந்துண்ணும் நிகிலமை. "அன்ன மொடுங்கினுல் அஞ்சு மொடுங்கும்." ஆதலாலும்,

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்." (குறள். கூஅசு)

ஆதலாலும், நிகிலயான வறுமை ஒருவனது அறிவைக் கெடுக்கும்.

அதுபோல் மறவியும் தற்காப்பின்மையாலும் கருமக்கேட்டாலும் அரசனது புகழை அழிக்கும். வறுமையை நிரப்பென்பது மங்கல வழக்கான எதிர்மறைக் குறிப்பு.

நிகூ. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு நூலோர்க்குந் துணிவு.

(இ—ரை.) பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை—கடமை மறந்தொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை; அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு — அவ்வின்மைக்கருத்து அற நூலார்க்கு மட்டு மன்றி உலகத்திலுள்ள எவ்வகை நூலார்க்கும் ஒப்ப முடிந்த முடிபாம்.

இந்நெறிமை (விதி) அரசர்க்கு மட்டு மன்றி எல்லாத்தொழிலாளர்க்கும் ஒப்ப வுரியதாயிருத்தலால், 'உலகத்தெப்பாலு நூலோர்க்குந் துணிவு' என்றார். இங்கு உலகம் என்றது தமிழகத்தை. எப்பால் நூலென்றதும் தமிழிலக்கியத் துறைகளையே. இன்றிறந்துபட்டுள்ள பண்டைத் தமிழிலக்கியத்திற் பெரும்பகுதி திருவள்ளுவர் காலத்தில் இறவாதிருந்தது. வடநூலார்க்குந் துணிவு என்று கூறுமையை நோக்குக.

நிகூ. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(இ—ரை.) அச்சம் உடையார்க்கு அரண் இல்லை—உள்ளத்தில் அச்சமுடையவர்க்கு மதில் காடு மலை முதலிய அரண்களிருப்பினும் அவற்றுற் பயனில்லை; ஆங்கு—அதுபோல; பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை—மறவியுடையார்க்குப் படை செல்வம் முதலிய நலங்களிருந்தும் அவற்றுற் பயனில்லை.

அச்ச முடையார்க்கு அழிவு நேர்வது போல் மறவியுடையார்க்கும் நேர்வது உறுதி என்பது கருத்து. நன்மைக்கேது வானது நன்கு. நல்—நன்—நன்கு.

நிகூ. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்

(இ—ரை.) முன் உறக் காவாது இழுக்கியான் — தன்னுல் தடுக்கப்படவேண்டிய துன்பங்களை அவை வருமுன்பே யறிந்து தன்னைக்காவாது மறந்திருந்தவன்; பின் ஊறு தன் பிழை இரங்கி

விடும்—பின்பு அவை நேர்ந்த பொழுது தடுக்க லாகாமையின் தன் தவற்றையெண்ணி வருந்தியழிவான்.

காக்கவேண்டிய துன்பங்கள்: பகைவர் சோர்வு பார்த்துச் செய்வனவும் பஞ்சம் வெள்ளம் முதலியனவுமாம். ஊற்றின்கண் என்பது உருபுஞ் சாரியையும் உடன்தொக்கு நின்றது. விடுதல் நீங்குதல்; இங்கு அழிதல்.

குஙூ. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

(இ—ரை.) இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின்—அரசர்க்கு மறதியின்மை எவரிடத்தும் எப்போதும் தப்பாது வாய்க்குமாயின்; அது ஒப்பது இல்-அது போன்ற நன்மை வேறென்று மில்லை.

செய்ய வேண்டிய வினைகளை உறவினரிடத்தும் பிறரிடத்தும் ஒப்பச் செய்யவேண்டுமாதலின் 'யார்மாட்டும்' என்றும், பெருகிய நிலையிலும் சுருங்கிய நிலையிலும் ஒருதன்மையாகச் செய்ய வேண்டுதலின் 'என்றும்' என்றும், எல்லா வினைகளிலும் தப்பாது கையாள வேண்டுதலின் 'வழுக்காமை' என்றும், கூறினார். 'வாய்' என்னும் வினை "வாய்ந்தன ரென்ப" (தொல். கரிஅஉ), "வாய்ந்தமலையும்" (குறள். எகூஎ) என்று மெலிந்தும் புடைபெயர்தலாலும், செயப்படு பொருள் குன்றிய வினையாதலாலும், "வாயி' னென்பது முதனிலைத் தொழிற்பெயரடியாக வந்த வினை யெச்சம்" என்னும் பரிமேலழகர் கூற்றுப் பொருந்தாது.

குஙஎ. அரியவென் ருகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(இ—ரை.) பொச்சாவாக் கருவியான் போற்றிச் செயின்—மறவாத மனத்தினால் எண்ணிச் செய்தால்; அரிய என்று ஆகாத இல்லை—செய்தற்கரியன என்று சொல்லப்பட்டு ஒருவருக்கு முடியாத கருமங்கள் இல்லை.

இது பரிமேலழகர் கல்வியாரவார உரையைத்தழுவியது. மனத்திற்கு அகக்கரணம் என்று பெயரிருத்தலால், 'கருவி' என்பதற்கு அவர் மனம் என்று பொருள் கொண்டார், கரணம் கருவி. இப் பொருட்குப் 'பொச்சாவா' சுருகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

'பொச்சாவாக் கருவி' என்னுந் தொடரைப் பொச்சாவாமையாகிய கருவி என்று இருபெயரொட்டாகக் கொள்வதே இயற்கையான முறையாம். இப்பொருட்குப் 'பொச்சாவா' ஈறுகெட்ட எதிர்மறைத் தொழிற் பெயர் போல்வதாம். இடைவிடா முயற்சியும் சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதில் முடியும் என்பதாம்.

நிஅ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

(இ—ரை.) புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்—அரசர்க்குச் சிறந்தவை யென்று அறநூலாரும் சான்றோரும் உயர்த்துக் கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும்; செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்—அவற்றைச் செய்யாது மறந்தவர்க்கு எழுபிறப்பிலும் நன்மையில்லை.

அரசர்க்குரிய சிறந்த செயல்கள்: வரலாற்றிற் கெட்டாத பண்டைக்காலத்திற் பெருங்கடலில் நாவாய்ப் படை செலுத்திச் சாலித்தீவைக் கைப்பற்றியமை, தூங்கெயிலெறிந்தமை, முக்கழகம் நிறுவியமை, மகதம் முறை செய்தமை, சீன நாட்டினின்று கரும்பைக் கொணர்ந்து பயிரிட்டமை, பாரதப்போர்ப்படை யிரண்டிற்கும் பதினெண்ணுளும் பெருஞ்சோறு வழங்கியமை, ஓரிகோதன் இருபெருவேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்றமை, முரசு கட்டிலில் துயின்ற புலவனுக்குக் கவரி வீசியமை, பரிசிலனுக்குத் தகுயீந்தமை, காவிரியணைகட்டியமை, பேரேரியுங் கிணையாறும் வெட்டியமை, தமிழ்வேந்தரை யிகழ்ந்த வடநாட்டாசரை வென்று பத்தினிக்குப் படிமை நிறுவியமை, வானளாவுங் கோபுரம் எடுத்தமை, துறைநகரமைத்துக் கடல் வாணிகம் பெருக்கியமை போன்றனவும் பிறவுமாம். 'எழுமை' தொகைக் குறிப்பு, "சாதிதரு மாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது நிரயத்துன்பமே" என்று பரிமேலழகர் கூறிய ஆரியக்குறிப்பு இங்கு ஏற்காது.

நிஆ. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(இ—ரை.) தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து—அரசர் தம் மகிழ்ச்சியால் மயங்கும் போது; இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக—முன்பு அத்தகைய மயக்கத்தாற் தம் கடமையை மறந்து கெட்டவரை நினைத்துப் பார்க்க.

கெட்டாரை நினைக்கவே தமக்கும் வருங்கேட்டிற் கஞ்சித் திருந்துவர் என்பது கருத்து. திருந்துதல் மறவாது கடமையைச் செய்தல். 'இகழ்ச்சியிற் கெட்டாரை எண்ணுக' என்று பாடமோதுவர் மணக்குடவர்.

நிஅo. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

(இ—ரை.) மன் தான் உள்ளியது எய்தல் எளிது — அரசன் தான் கருதிய பொருளைத் தான் கருதியவாறே பெறுதல் எளிதாம்; உள்ளியது மற்றும் உள்ளப் பெறின்—தான் எண்ணியதைப் பின்னும் விடாது எண்ணக் கூடுமாயின்.

உள்ளியதை யுள்ளுதலாவது தான் கருதியதைப் பெறும் வரை மறவாது அது பற்றி முயற்சி செய்தல். 'மற்று' பின்மைப் பொருளில் வந்தது. 'மன்' என்பதை இடைச் சொல்லாகக் கொண்டு, "அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது." என்னும் பரிமேலழகர் இலக்கணக் குறிப்பு இவ்விடத்திற்கு ஏற்காமை யுணர்க.

அதி. நிநி—செங்கோன்மை

அஃதாவது, அரசனுற் கையாளப்பெறும் நேர்மையான ஆட்சி முறை. நேர்மையான ஆட்சி நேரான கோல்போலிருத்தலால் செங்கோல் எனப் பட்டது. குடிகள் ஆக்கள் போலவும் அரசன் ஆயன் போலவுமிருத்தலால், அரசன் கோன் எனப்பட்டான். கோ = ஆ (பசு). கோவன் = (க) ஆயன்.

"கோவனிரை மீட்டனன்" (சீவக. ⁻திநி).
(உ) அரசன், "கோவனும் மக்களும்" (சீவக. கஅசஉ).

கோவன்—கோன்—கோ = அரசன். கோன் = ஆயன், அரசன், தலைவன். அரசன் கையிலுள்ள கோல் ஆடுமாடு மேய்க்கும் இடையன் கையிலுள்ள கோல் போன்றது. அச்சின்னத்தின் பெயர் அரசனையாவது அவனுட்சியையாவது குறிக்கும் போது சின்னவாகுபெயராம். கோலின் தன்மை கோன்மை. செங்கோலின் தன்மை செங்கோன்மை. செம்மை = நேர்மை. கோணுமை, நெறியினின்றும் விலகாமை.

"வடநூலாரும் தண்டமென்றார்," என்றார் பரிமேலழகர். வடநூலில் தண்டம் என்பது தண்டிக்கும் அதிகாரத்தைக் குறிக்குமே

யன்றி, தமிழிற்போல் அரசாட்சியைக் குறிக்காது. மேலும், அச் சொல்லும் தென்சொல்லே.

செங்கோன்மை சோர்வில்லாத அரசனுலேயே கையாளப் படத் தக்கதாதலின், இது பொச்சாவாமையின் பின் வைக்கப் பட்டது.

நூசுஉ. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(இ—ரை.) ஓர்ந்து — தன் குடிகள் செய்த குற்றங்களை ஆராய்ந்து; யார்மாட்டும் கண்ணோடாது—எவரிடத்தும் சிறப்பாக அன்பு கொள்ளாது; இறை புரிந்து—நடுநிலை பொருந்தி; தேர்ந்து —அக்குற்றங்கட்கேற்ற தண்டனைகளை அறநூலறிஞரொடு நூலுத்தி பட்டறிவொடு பொருந்தத் தீர்மானித்து; செய்வஃதே முறை— அவற்றை நிறைவேற்றுவதே செங்கோல் முறையாம்.

நடுநிலை இறைக்கு (அரசனுக்கு) இன்றியமையாத குணமாத லின் அதை 'இறை' யென்றும், உயிரினுஞ் சிறந்தாரிடத்தும் கண் ணோட்டம் தகாதென்பார் 'யார் மாட்டும்' என்றும், கூறினர். இறைமை யென்பது இறையெனக் குறைந்தும், செய்வது என்பது செய்வஃது என விரிந்தும் நின்றன, செய்யுளமைதி நோக்கி. இதனுல் செங்கோன்மை யிலக்கணங் கூறப்பட்டது.

நூசுஉ. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(இ—ரை.) உலகு எல்லாம் வான் நோக்கி வாழும்—உலகத் திலுள்ள உயிர்களெல்லாம் மழையை எதிர்பார்த்து அது பெய்வ தால் வாழும்; குடி மன்னவன் கோல் நோக்கி வாழும்—ஆயினும், குடிகளெல்லாரும் அரசனது செங்கோலை எதிர்பார்த்து அது நடப் பதால் வாழ்வர்

நோக்கி வாழ்தல் இன்றியமையாததாகக் கொண்டு வாழ்தல். வானுல் நீரும் உணவும் கிடைப்பது போல், செங்கோலால் உயிர்ப் பாதுகாப்பும், பொருட்காப்பும் கிட்டுவதால், வான்போன்றே செங்கோலும் மக்கள் உயிர்வாழ்விற்கு இன்றியமையாததென்பதும், செங்கோலின்றி வானிருந்தும் பயனில்லை யென்பதும், பெறப்படும். உலகு, கோல் என்பன ஆகுபெயர்கள். கோலென்றது செங்கோலை.

'குடி' தொகுதிப்பெயர். வானின் தண்பு உயிர்கட்கு இன்பஞ் செய்வது போல் கோனின் அன்பும் குடிகட்கு இன்பந்தருவதாம்.

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே." (கஉசு)

சன்னும் புறப்பாட்டு இங்குக் கவனிக்கத் தக்கது.

நிசுகூ. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(இ—ரை.) அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது—ஐயரும் பார்ப்பாருமான இருவகைத் தமிழ அந்தணரும் இயற்றிய பல்துறை நூல்கட்கும் மக்களின் அறவொழுக்கத்திற்கும் அடிமலையாயிருப்பது; மன்னவன் கோல் — அரசனின் செங்கோலே.

பரிசாலும் முற்றூட்டாலும் நூலாசிரியரைப் போற்றுவதும் அவர்நூல் வழங்குமாறு அரங்கேற்றுவிப்பதும் அரசன் தொழிலாதலின் 'ஆதி' என்றார். "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்." என்று பிராமணரை விலக்கியதால், இங்கு அந்தண ரென்றது தமிழ அறிஞரையே. அந்தணர் என்பது சிறப்பாகத் துறவியரையே குறிக்குமேனும், சிறுபான்மை இல்லறத்தாரையுந் தழுவும்.

"விலையி னீங்கி விளங்கிய அறிவின்
முனிவன் கண்டது முதனூ லாகும்." (தொல். கஙசுச)

என்றதனால், முதற்காலத்து முதனூல்களெல்லாம் முனிவராலேயே இயற்றப்பட்டதாகத் தெரிகின்றது. அதன் பின்பே இல்லறத்தாரான பார்ப்பாரும் நூலியற்றினர். நூல்களைப் பார்ப்பவர் பார்ப்பார். முனிவர் ஐயர் எனவும் படுவர். கடைக்கழகக் காலத்திலும் இளங்கோவடிகள் என்னும் தமிழ அந்தணர், இயைபுவனப் பியற்றியமை காண்க. அந்தணர் நூற்கு அரசியல் அடிப்படையாயிருந்தமைக்கு முக்கழக நடவடிக்கைகளே போதிய சான்றும். ஒழுக்கத்திற்கு அது தூண்டு கோலாயிருந்தது. "அச்சமே கீழ்கள தாசாரம்" (குறள். கoஅஇ) என்பதனாலும், "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" (புறம். கூகூஉ) என்பதனாலும், அறியப்படும். நூற்கும்

அறத்திற்கும் முந்தியே யிருந்ததனாலும் நிலைபெற்றதனாலும் 'நின்றது' என்றார்.

''அந்தணர்க் குரித்தாய வேதத்திற்கும் அதனாற் சொல்லப் பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது.. .....செங்கோல்'' ''அரசர் வணிக ரென்னு மேனோர்க்கு முரித்தாயினும், தலைமை பற்றி அந்தணர் நூலென்றார்'' என்பன பரிமேலழகரின் ஆரியப் பிதற்றல்கள். நூலென்றது மறைநூலை மட்டுமன்று. அங்ஙனங் கொள்ளினும் அது கடவுள் வழிபாட்டை அறவே அறியாத ஆரிய வேதத்தையன்று; தமிழ் மறையையே குறிக்கும்.

''மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்''

என்று மாணிக்க வாசகர் பாடியிருத்தல் காண்க.

இன்னும் தமிழிலுள்ள பண்டை மறை (மந்திர) நூல்களும் மருத்துவ நூல்களும் சித்தர் என்னும் முனிவர் இயற்றியவையே.

குசச. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

(இ—ரை.) குடி தழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன் அடி—தன் குடிகளை அன்னத்துக் கொண்டு செங்கோல் செலுத்தும் பெருநில வேந்தனுடைய அடிகளை; உலகு தழீஇ நிற்கும்—நாடு முழுதும் விடாது பற்றி நிற்கும்.

அன்பாக அரவணைத்துக் காக்கும் அரசனைக் குடிகளும் அன் பாகப் போற்றிநிற்பர் என்பது கருத்து.

அன்னத்தல் இன்சொற் சொல்லுதலும் தளர்ந்த விடத்து வேண்டுவன கொடுத்துத் தாங்குதலும். மாநில மன்னன் மூவேந் தருள் ஒருவனை பெருநில வரசன். குறு நில மன்னர், பெருநில மன்னர் என அரசர் இருதிறத்தினராதலால், வேந்தனை மாநில மன்னன் என்றார். கோல், உலகு என்பன ஆகுபெயர். கோல் என்ற தற்கேற்பச் சிறப்பாக ஆளுதலை ஓச்சுதல் என்றார். ஓச்சுதல் உயர்த் துதல். குடி என்றது தளர்ந்த குடிகளை, 'தழீஇ' இன்னிசையள பெடை.

நிசடு. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

(இ—ரை.) பெயலும் விளையுளும் தொக்கு—பருவமழையும் சூன்றுத விளைவும் ஒருங்கு திரண்டு; இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட—முறைப்படி செங்கோலாட்சி செய்யும் அரசனது நாட்டில் உள்ளனவாம்.

'கோலோச்சும்,' 'மன்னவன்' என்பவற்றிற்கு முன்பு உரைத்தவாறு உரைக்க. செங்கோலரசன் மண்ணுலகில் இறைவனின் படிநிகராளியா யிருத்தலால், இயற்கையும் அவனுக்கு அடங்கி நடக்கும் என்பதாம்.

நிசசு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

(இ—ரை.) மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல்—அரசனுக்குப் போரின்கண் வெற்றியைக் கொடுப்பது வேற்படையன்று, அவன் அரசாட்சியே; அதுவும் கோடாது எனின்—அவ்வரசாட்சியும் அங்ஙனஞ் செய்வது அறநெறிதவருதிருந்த பொழுதே.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்னும் மதுரை மருதனிளநாகனார் (புறம். இஎ). வெற்றிதருவது வேலன்று கோல் என்னும் எதுகை நயமும், எறியும் வேலன்று ஏந்தும் கோலே யென்னும்முரண்நயமும், கவனிக்கத்தக்கன. 'அதூஉம்இன்னிசையளபெடை. மணக்குடவர் 'கோடா னெனின்' என்று பாடங் கொள்வர். அப்பாடத்திற்கு, கருவியின் வினை சினைவினை போல முதல் வினைமேல் நின்றதாகக் கொள்க.

'கோல் அதூஉம்' என்பது பேரன்றே 'இல்வாழ்க்கை அஃதும்' (சக) என்னும் தொடரும் அமைந்திருத்தலை, ஒப்புநோக்கி யுணர்க.

நிசஎ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

(இ—ரை.) வையகம் எல்லாம் இறை காக்கும்—உலகம் முழுவதையும் அரசன் காப்பான்; முட்டாச் செயின் அவனை முறை காக்கும்—முட்டுப்பாடு நேர்ந்த விடத்தும் முட்டில்லாது ஆட்சி செய்வானுயின், அவனை அவன் செங்கோலே காக்கும்.

முட்டில்லாமற் செய்தல் மனு முறைச் சோழன் தன்மகனை முறை செய்ததும், கொற்கைப் பாண்டியன் தன்கை குறைத்ததும், போல்வதாம். இனி, சிக்கலான வழக்குக்களைத் தீர்க்கும் வழியை இறை

வனிடம் மன்றுடிக் கேட்டறிந்ததும், முட்டாது செய்தவின் பாற் படும். 'வையகம்' முதலாகுபெயர். 'முட்டா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

நிசஅ. எண்பதத்தா னேரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் ருனே கெடும்.

(இ—ரை.) எண்பத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்—முறை (நியாயம்) வேண்டினவர்க்குக் காட்சிக் கெளியனுயிருந்து, அவர் சொல்லியவற்றை அறநூலறிஞருடன் ஆராய்ந்து, உண்மைக் கேற்பத் தீர்ப்புச் செய்யாத அரசன்; தண்பதத்தான் தானேகெடும் —தாழ்ந்த நிலையில் நின்று தானே கெடுவான்.

''அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் ருவதூஉம்'' (சிலப்பதி காரப் பதிகம், ருஅ) என்றதற் கேற்ப, முறை செய்யா அரசன் பகைவரின்றியுந் தானே கெடுவான் என்பதாம். பதம் நிலைமை. எண்மை எளிமை. 'எண்பதத்தான்' குறிப்பு முற்றெச்சம். 'ஓரா' செய்யா என்னும் வாய்பாட்டு (இறந்தகால வுடன்பாட்டு) வினை யெச்சம். 'செய்யா' ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். 'தண்பதம்' பழியும் பளகும் (பாவமும்) அடைந்து நிற்கும் நிலை. ஏகாரம் பிரிநிலை.

நிசஉ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் ருழில்.

(இ—ரை.) குடி புறங்காத்து ஓம்பிக்குற்றம் கடிதல்—தன்குடி களைப் பிறர் வருத்தாமற் காத்துத் தானும் வருத்தாது பேணி, அவர் குற்றஞ் செய்யின் அதைத் தண்டனையால் நீக்குதல்; வேந்தன் வடு அன்று தொழில்—அரசனின் குற்றமன்று, அவன் கடமையாம்.

'குடிபுறங் காத்தோம்பி' என்றதனுல், சில தீயோரின் குற்றங் கடிதலும் நல்லோரான குடிகளைப் பாதுகாத்தற் பொருட்டே யென் பது பெறப்படும். அரசன் குற்றவாளிகளைத் தண்டிக்கும் முறை மன்றுபாடு, தண்டா, குற்றம் என மூவகைப்படும். மன்றுபாடென் பது பணத்தண்டனை; தண்டா என்பது துன்பத்தண்டனையும் உறுப்பறைத்தண்டனையும் கொலைத் தண்டனையும்; குற்றம் என்பது கோயில் விளக்கெரித்தல் போன்ற திருக்கடமைத் தண்டனை. துன் பத்தண்டனை பொதுவும் இடந்தொறும் வேறுபடுவதும் என இரு திறத்ததாம். அவை மீண்டும் மானக்கேட்டொடு கூடியதும் கூடாததுமென இருவகையனவாம். 'குற்றங் கடிதல்' என்றதனுல்;

இங்குத் தழுவப்பட்ட தண்டனை வகைகள் கொலையொழிந்த எல்லா மாகும்.

நிரூ0. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனெடு நேர்.

(இ—ரை.) வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்—அரசன் கொடியவரைக் கொலையால் தண்டித்து நல்லோரைக் காத்தல்; பைங்கூழ் களை கட்ட தனெடுநேர்—உழவன் களைகளைக் களைந்து பசும்பயிர்களைக் காத்தலோ டொக்கும்.

கொடியராவார் உணராது கொலை செய்வார், ஊரில் தீவைப் பார், குடிநீர்நிலையில் நஞ்சிடுவார், வழிப்பறிப்பார், கொள்ளையிடு வார், கோயிற் சொத்தைக் களவு செய்வார், வெளிப்படையாகப் பிறனில் விழைவார், அரசனுக்கும் அஞ்சாதார், முதலியோர். இத் தகைய பொல்லாரை அரசன் கொல்லாவிடின் நல்லோர் வாழ முடியாதாதலின், அவரைக் கொல்வது 'பைங்கூழ் களைகட்டத் னெடு நேர்' என்றார். வேந்தன் என்பது வேந்து எனக் குறைந்து நின்றது.

அதி. நிகு — கொடுங் கோன்மை

அஃதாவது, அரசனுற் கையாளப்படும் நேர்மை யில்லா ஆட்சி முறைமை. நேர்மையில்லா ஆட்சி வளர்ந்த கோல் போலி ருத்தலால் கொடுங்கோல் எனப்பட்டது. கொடுங்கோலின் தன்மை கொடுங் கோன்மை. இது செங்கோன்மைக்கு மாறுகலின், அது கூடாதென்பதற்கு அதன்பின் வைக்கப்பட்டது.

நிருக. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து.

(இ—ரை.) அலை மேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து—பொருளாசையாற் குடிகளை வருத்துந் தொழிலை மேற் கொண்டு முறையல்லாதவற்றைச் செய்தொழுகும் வேந்தன்; கொலை மேற்கொண்டாரின் கொடிதே — பகைமையினுற் கொல்லு தல் தொழிலை மேற்கொண் டொழுகுவாரினுங் கொடியனேயாவன்.

சிறிது பொழுதே செய்யுங்கொலைத்துன்பத்தினும் எப்பொழுதும் செய்யும் அலைத்துன்பங் கொடிது என்பதாம். 'வேந்து' பொருளால்

உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலின் அஃறிணை முடிபு கொண்டது. ஏகாரம் தேற்றம்.

நடுஉ. வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு.

(இ—ரை.) கோலொடு நின்ருன் இரவு—கொலைவரைத்தண்டிக்கும் அதிகாரத்தைத் தாங்கிய ஆட்சியொடு கூடிய அரசன் குடிகளிடம் பொருள் வேண்டுதல்; வேலொடு நின்ருன் இடு என்றது போலும்—கொல்லும் வேலை ஏந்திநின்ற வழிப்பறிக்கள்வன் வழிச்செல்வானை நோக்கி உன்கைப்பொருளைக் கீழே வை என்று சொல்வதனை ஒக்கும்.

அரசன் குடிகளிடம் அச்சுறுத்திக் கோளாவிடினும், குடிகள் கொடாவிடின் தப்பாது தண்டிக்கப்படுவர் என்னும் குறிப்பிருத்தலால், அவன் இரப்பதும் வழிப்பறிக்கள்வன் ஏவல் போன்றதே யென்ருர். 'வேலொடு நின்ருன்' என்பதால் வழிப்பறிக்கள்வன் தனியன் என்பதும், 'இடு' என்னும் ஏவலொருமையால் வழிச்செல்வோன் ஒன்றியென்பதும், 'இரவு' என்றதனால் கொடுங்கோல் அரசன் இரப்பது குடிகள் முறைப்படி செலுத்தவேண்டிய புரவு வரியன்றென்பதும் பெறப்படும்.

நடுஙு. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

(இ—ரை.) நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்—தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்கேற்ப முறை செய்யாத அரசன்; நாள்தொறும் நாடு கெடும்—நாள்தோறும் நாடிழப்பான்.

நாள்தொறும் நாடிழத்தலாவது,
"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய வியனிலம்
.....

"நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்து"வதால்.(சிலப்.கக:கூ0-கூஙி) வரவர வளங்குன்றுதலும், குடிகளின் அரசப்பற்றுக் குறைதலும், பகைவரால் அல்லது அருள்பூண்ட செங்கோலரசரால் சிறிது சிறிதாக நிலங்கைப்பற்றப் பெறுதலுமாம். நாடு அரசிற்கு உறுப்பாகலின், சினைவினை முதல்மேல் நின்றது.

"குற்றமும் குணமும் நாடோறும் ஆராய்ந்து, அதற்குத் தக முறைசெய்யாத அரசன் நாடு நாடோறும் கெடும் என்றவாறு," என்பது மணக்குடவருரை.

நுநுச. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

(இ—ரை.) சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு—தன்குடி கட்கு நன்மையையும் தன்தவற்றுல் மேல் விளைவதையும் எண் ணுது கொடுங்கோலாட்சி செய்யும் அரசன்; கூழும் குடியும் ஒருங்கு இழக்கும்—தன் செல்வத்தையும் குடிகளையும் ஒருசேர இழப்பான்.

வறட்சிக்காலத்து மக்கள் வானை ஆவலாக எதிர்நோக்குவது போல், கொடுங்கோலரசன் குடிகளும் செங்கோலரசனொருவன் வரவை எதிர்பார்ப்பராதலின், அத்தகைய அரசன் அக்கொடுங் கோலனை எளிதில் வென்று அவன் நாட்டைக் கைப்பற்றுவன் என்பதாம். கூழ் என்றது தன் முன்னோருந்தானும் தேடிய பொருளை. குடியை இழப்பதனால், அவரிடத்தினின்று இனிப் பெறக்கூடிய பொருளைமட்டு மன்றி அவரையாளும் ஆட்சியையே இழந்துவிடு பவனவன்.

நுநுடு. அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(இ—ரை.) அல்லல் பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் அன்றே—குடிகள் அரசனது கொடுங்கோலாட்சியால் துன்பப்பட்டு அதைப் பொறுக்க முடியாது அழுத கண்ணீரன்ருே; செல்வத்தைத் தேய்க் கும் படை—அவ்வரசனின் ஆட்சிச் செல்வத்தை அழிக்கும் படைக் கலம்

கொடுங்கோலரசன் கொடுமையைக் குடிகளின் ஆற்ருெணாத் துயரநெஞ்சே போக்கிவிடும். அதற்கு வேற்றரசன் விளைவேண் டியதில்லை 'யென்பது கருத்து. செல்வத்தை யழிப்பது துயரநெஞ் சேயாயினும், அதை வெளிப்படையாகத் தெரிவிப்பது கண்ணீரா தலால், அழிப்புவினை கண்ணீரின்மே லேற்றப்பட்டது. செல் வத்தை மரமாக உருவகியாமையின் இது ஒருமருங் குருவகம். ஏகாரம் வினை. "எளியோரை வலியோர் வாட்டினுல் வலியோரைத் தெய்வம் வாட்டும்." ஆதலால், கொடுங்கோலரசனை இறைவனே அழித்து விடுவான் என்பது கருத்து.

நிருக. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

(இ—ரை.) மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை—அரசர்க்குப் புகழ் நிலைபெறுதல் செங்கோலாட்சியினாலேயே; அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னுவாம்—அச்செங்கோலாட்சியில்லாவிடின் அவர்க்கு இம்மையிலும் பெயரும் மதிப்பும் இல்லாமற் போம்.

ஒளி யென்பது ஒருவன் தான் வாழுநாளில் எல்லாராலும் மதிக்கப்படும் மதிப்பு. அது பெரும்பாலும் வாய்ச்சொல்லாக நிகழ்வது. புகழ் என்பது ஒருவன் இறந்த பின்பு எல்லாராலும் உயர்த்துச் சொல்லப்படும் உயர்வு. அது பெரும்பாலும் உரைநடையுஞ் செய்யுளுமாகிய இலக்கிய வடிவில் நிகழ்வது.

"உண்ணுன் ஒளிநிருன் ஓங்கு புகழ்செய்யான்" என்னும் நாலடிச் செய்யுளை (க) நோக்குக. மன்னுதல் இரண்டனுள் முன்னது நிலைபெறுதல்; பின்னது பொருந்துதல். கல்வி, கொடை வெற்றி முதலியனவாக ஏதுக்கள் பலவாதலின், அவற்றினால் வரும் ஒளி புகழ்களும் பலவாயின. 'மன்னுவாம்' என்பதிலுள்ள ஆக்கச்சொல் முன்னுஞ் சென்று இயையும். செங்கோன்மையாலே என்னும் மூன்றும் வேற்றுமையுருபும் ஒளியும் என்னும் எச்சவும்மையும் தொக்கன. நிலைபெறுதல் (மன்னுதல்) என்றது புகழ்நிலை பெறுதலை.

நிருஎ. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

(இ—ரை.) துளியின்மை ஞாலத்திற்கு எற்று — மழையில்லாமை உலகத்திலுள்ள உயிர்கட்கு விளைக்கும் துன்பம் எத்தகையதோ; அற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு—அத்தகையதே அரசனின் அருளின்மை அவன் நாட்டு வாழும் குடிகட்கு விளைக்குந் துன்பமும் ஆகும்.

"வானேக்கி வாழு முலகெல்லாம்" என்னுங் குறள் (இசஉ) இங்கு எதிர்மறை முகத்தால் ஒரு புது வலிமை பெறக் கூறப்பட்டது. இலை யென்பது சிறப்பாக வாழையிலையைக் குறித்தல் போல், துளி யென்பது இங்கு மழைத்துளியைக் குறித்து மழையென்னும் பொருளில் ஆகுபெயராக நின்றது. உயிர் என்றது இங்குக் குடிகளை.

'ஞாலம்' ஆகுபெயர். என்னது—எற்று. (என் + து). அன்னது—அற்று. (அன் + து). ஏகாரம் தேற்றம்,

நடுஅ. இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

(இ—ரை.) முறை செய்யா மன்னவன் கோற்கீழ்ப்படின் — முறை (நீதி) செய்யாத அரசனின் கொடுங்கோலாட்சியின் கீழ் வாழின்; உடைமை இன்மையின் இன்னாது—இன்பந்தரவேண்டிய செல்வநிலை துன்பந்தரும் இயல்புள்ள வறுமையினும் துன்பமான தாம்.

உடல் வருந்தப் பாடுபட்டுத் தேடிய செல்வத்தைக் கொடுங் கோலரசன் எளிதாய்க் கேட்டமட்டிற் கொடாவிடின், சிறைகாவற் கும் நையப்புடைப்பிற்கும் மட்டு மன்றிக் கொலைத் தண்டத்திற்கும் ஆளாக நேருமாதலின், இன்னுமையில் தன்னேரில்லா இன்மையும் கொடுங்கோல் நாட்டில் உடைமையின் இனிய தென்றார்.

நடுக. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(இ—ரை.) மன்னவன் முறைகோடிச் செய்யின் — அரசன் முறைதவறி ஆட்சி செய்வானாயின்; உறைகோடி வானம் பெயல் ஒல்லாது—அவன் நாட்டிற் பருவமழை தவறுவதால் வானம்பொழி தலைச் செய்யாது.

உறைகோடுதலாவது மழை இயற்கையாகப் பெய்யவேண்டிய காலத்துப் பெய்யாமை. 'வானம் பெயல்' என்பது "வானம் பெய் கிறது, வையகம் (பூமி) விளைகிறது." என்னும் வழக்கைத் தழு வியது. உறைத்துப் பெய்யும் மழை உறை.

"இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு" (குறள். நிசஅ)

என்றதனால்,

இயல்புளிக் கோலோச்சா மன்னவ னாட்டிற்
பெயலும் விளையுளு மில்.

என்பது தானே வெளியாம்.

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னு யிரில்லை"

மணிமேகலை (எ : அ—கஅ).

நிகூ0, ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

(இ—ரை.) காவலன் காவான் எனின்—காத்தற்குரிய அரசன் குடிகளையும் அவர்கட்குப் பயன்படும் உயிரிகளையும் காவானாயின்; ஆபயன் குன்றும்—அவன் நாட்டு ஆக்களும் பால் குன்றும்; அறு தொழிலோர் நூன்மறப்பர் — அறுவகைத் தொழில் செய்வோரும் தத்தமக்குரிய நூல் கற்பதை அல்லது பார்ப்பதை விட்டுவிடுவர்.

முந்தின குறளில் கொடுங்கோலரசன் நாட்டில் மழைபெய்யாமை கூறப்பட்டது.

"விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றூங்கே
பசும்புற் றலைகாண் பரிது". (குறள். ஙக)

ஆதலால் மேய்ச்சற் புல்லின்றி ஆக்களும் பால்தரா. அதனால் தொடக்கந் தொட்டுப் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்னும் ஐவகையில் மாந்தரெல்லார்க்கும் பயன்பட்டுவரும் இன்றியமையாத இயற்கையுணவு இல்லாமற்போம். குடிப்பாகவும் உணவாகவும் பயன்படும் பாலும், உடற்சூட்டைத் தணிக்கும் மோரும், மூளைவளர்ச்சிக் கேற்ற நெய்யும் கல்வி கற்போருக்கு மிகத் தேவையானவை. கல்வி, நூற்கல்வியும் தொழிற்கல்வியும் என இருதிறப்படும். நூற்கல்வியும் பல தொழிலாகவும் தொழிற் கல்வியும் பல நூற்றுறையாகவு மிருத்தலால், இருவகைக் கல்வியையும் அறுவகைத் தொழிலாக வகுத்தனர் முன்னோர்.

"உழவு தொழிலே வரைவு வாணிகம்
விச்சை சிற்பம் என்றத் திறத்தது
தொழில்கற்ப நடையது கருமபூமி."

என்பது திவாகரம். உழவு என்பது நெசவொழிந்த பதினெண் கைத்தொழிலையும் தன்னுள் அடக்கும். தொழில் என்று விதந்தது நெசவை. அது பிற்காலத்தில் உழவிற்குத் துணையான பதினெண் பக்கத்தொழில்களுள் ஒன்றாயிற்று.

"செய்யுந் தொழிலெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லே"—மெய்யது போல்
வள்ளுவன் வண்டமிழின் மானங்காத் துப்பெருமை
கொள்ளவே செய்தான் குறள்.

வரைவு ஓவியம். விச்சை கல்வி. வீழி—(விடி)—L, Vide—வித்(வ.)—வித்யா—வித்தை—விச்சை. சிற்பம் என்றது ஐவகைக் கொல்லத்தொழிலை. குயத்தொழில் ஐவகைக் கொல்லுள் ஒன்றுமிய கன்னத்தொழிலுள் அடங்கும். கருமம் 'பூமி' என்றது பண்டை ஞாலத்துட் சிறந்த நாவலந்தீவை. தொழிற்குரிய மண்ணுலகத்தைக் கருமநிலம் என்றும், தொய்யாவுலகமாகிய விண்ணுலகத்தை இன்பநிலம் என்றும், கொண்டனர். அறுவகைத் தொழிற்கும் பண்டைத் தமிழகமாகிய குமரி நாட்டில் நூல்களிருந்தன.

'ஆபயன் குன்றும்' என்பது, மழையின்மையால் நிலத்தில் விளையும் உணவு மட்டுமன்றி ஆவிற்சுரக்கும் பாலுமிரா தென்பதாம். அதனால் அறுதொழிலும் நடைபெரு என்றவாறு. முற்றும்மை தொக்கது.

பரிமேலழகர் அறுதொழிலோரைப் பிராமணராகக் கொண்டு, அவ்வழுவை இருமடியாக்க அவரை அந்தணர் என்னுஞ் சொல்லாற் குறித்து, ''அறுதொழிலாவன; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலென விவை. பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங் கற்பமென்ன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே வானம் பெயலொல்லா தென்பதாயிற்று.'' என்று தம் ஆரியநஞ்சை வெளிப்படுத்தியுள்ளார். திருவள்ளுவர் தமிழறத்தையே இங்கு எடுத்துக் கூறுதலானும் ஆரிய முறையைக் கண்டித்தலானும், பிராமணர் வேதமோதுதலையும் வேள்விவளர்த்தலையும் பருவமழைக்குக் காரணியமாகக் கூறினரென்பது பச்சைப் பொய்யாம்.

''இயல்புளி.....தொக்கு''. (இசஇ) என்றும்,
''முறைகோடி.....பெயல். (இகிக) என்றும்,

செங்கோலாட்சியே பருவமழைக்குக் காரணியமென்று ஆசிரியர் தெளிவாகக் கூறியிருக்கவும், அதை மறுத்து ஆரிய வேதவேள்வியே அதற்குக் காரணியமென்று பரிமேலழகர் உரைக்க இடந்தந்தது தமிழர் அடிமைத்தனமேயன்றி வேறன்று. பிராமணரை அறுதொழிலோர், என்பது ஆரிய ஏற்பாடேயன்றித் தமிழர் கொள்கையன்று. பரிமேலழகர் கருத்தே வள்ளுவரதாயின்,

'இயல்புளி வேள்வி யியற்றுவா னூட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.' என்றே,
'மறைகோடி வேள்வி மறப்பி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.' என்றே பாடியிருப்பர்.

கொடுங்கோலால் மழைபெய்யாமையும் மழை பெய்யாமையால்

ஆபயன் குன்றலும் ஆபயன் குன்றலால் அறு தொழில் நடவாமை யும் ஆக ஆசிரியராற் கூறப்பட்ட நிகழ்ச்சித் தொடரை, பரிமேல ழகர் தலைகீழாக மாற்றி ஆபயன் குன்றலால் வேள்வி நடவாமை யும் வேள்வி நடவாமையால் மழைபெய்யாமையும் என வலிந்து கூறியிருத்தல் காண்க.

பேரா. கா. சுப்பிரமணியப் பிள்ளையார் 'அறிதொழிலோர்' என்று பாடங்கொண்டு, "காவலன் காவான் எனின்—அரசன் (உயிர்களைக்) காப்பாற்றானெயின்; ஆபயன் குன்றும்—முயற்சி செய் வார்க்கு அம் முயற்சியாலுண்டாகும் இயல்பான பயன் இல்லாமற் போகும்; அறிதொழிலோர் நூல் மறப்பர்—அறியுந் தொழிலையுடைய கலைஞர் தாங்கற்றற் குரிய நூல்களைக் கற்பதைக் கைவிடுவர்." என்று பொருள் கூறுவர்.

அதி. நிஎ—வெருவந்த செய்யாமை

அஃதாவது, குடிகளும் வினைச் சுற்றமும் தானும் அஞ்சத்தக்க செயல்களைச்செய்யாமை. வெரு- அச்சம். வெருவருதல்—அஞ்சுதல். வெருவந்த செய்தல் கொடுங்கோன்மையின் பாற்படுதலின், இது அதன்பின் வைக்கப்பட்டது.

நிகூ. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(இ—ரை.) தக்காங்கு நாடி—ஒருவன் பிறனுக்கு அல்லது பிறருக்குச் செய்த தீங்கைத் தகுந்த முறையில் நடுநின்றாராய்ந்து; தலைச்செல்லா வண்ணத்தால்—அவன் மேலும் அதைச் செய்யா திருத்தற் பொருட்டு; ஒத்தாங்கு ஒறுப்பது—அவன் குற்றத்திற் கேற்ப அவனைத் தண்டிப்பவனே; வேந்து—நல்லரசனுவன்.

தக்காங்கு நாடுதலாவது, குற்றஞ்சாட்டியும் குற்றஞ்சாடியும் ஆகிய இருவர் சொல்லையும் எழுதரங்கேட்டு, சான்றியங்களையும் சான்றுகளையும் காய்த லுவத்தலின்றி நடுநிலையாய் ஆராய்ந்து குற்றவாளி யாரென்று காணுதல். ஒத்தாங்கொறுத்தலாவது கண் ணோட்டமுங் கண்ணறவுமின்றிக் குற்றத்திற்குத் தக்கதண்டனை செய்தல். தக்காங்கு நாடாமையுங் கடுந்தண்டமும் வெருவந்த செய்தலாம். தக்க ஆங்கு தக்காங்கு (தக்கவாறு). ஒத்த ஆங்கு ஒத்தாங்கு (ஒத்தவாறு).

நிகூஉ. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

(இ—ரை.) ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் — ஆட்சிச் செல்வம் தங்களிடம் நெடுங்காலம் நிற்றலே விரும்பும் அரசர்; கடிது ஓச்சி—குற்றவாளியைத் தண்டிக்கும்போது தண்ட னையைக் கடுமையாகக் காட்டி; மெல்ல எறிக—மென்மையாகச் செய்க.

கல்லே அல்லது வேலே எறிபவன் கையை மிகவுயர்த்திப் பின்பு தாழ்த்தி மெல்ல எறிவதுபோல, தண்டனையை அளவிறந்து செய் வது போற்காட்டுவது குற்றவாளி அஞ்சுதற் பொருட்டும், அளவா கச் செய்வது குடிகள் அஞ்சாமைப் பொருட்டும், வேண்டுமென் பதாம்.

நிகூஊ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னெருவந்த மொல்லைக் கெடும்.

(இ—ரை.) வெருவந்த செய்து ஒழுகும் வெம் கோலன் ஆயின் —அரசன் குடிகள் அஞ்சுதற் கேதுவான செயல்களைச் செய்து வாழுங் கொடுங்கோலனாயின், ஒருவந்தம் ஒல்லைக் கெடும்—உறுதி யாக விரைந்து கெடுவான். ஒரு வந்தம் —ஒரு தலை.

நிகூசு. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்:

(இ—ரை.) இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்—நம் அரசன் கொடியவன் என்று குடிகளாற் சொல்லப் படும் துன்பந்தருஞ் சொல்லைத் தோற்றுவிக்கும் அரசன்; உறை கடுகி ஒல்லைக் கெடும்—வாழ்நாள் குறைந்து தன் செல்வத்தையும் விரைந்திழப்பான்.

இன்னாச்சொல் உளம் நொந்து உரைக்கும் சொல். 'உறை' முதனிலைத் தொழிலாகு பெயர். உறைதல் —தங்குதல் அல்லது குடியிருத்தல்.

நிகூஎ. அருஞ்செல்வ மென்ன முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

(இ—ரை.) அருஞ் செவ்வி இன்னு முகத்தான் பெருஞ்செல்வம்—காண விரும்பிய குடிகட்கு எளிதாய்க் காணப்படாதவனுகவும் அரிதிற் கண்டவர்க்கும் சுடு முகத்தனுகவுமிருக்கும் அரசனின் பெருஞ்செல்வம்; பேய்கண்ட அன்னது உடைத்து—பூதங் காத்தாற் போன்ற தன்மையை உடையது.

அரசன் செல்வம் குடிகட்குப் பயன் படாமையாலும் அண்டு தற்கிடமின்மையாலும் பேய்காத்தாற் போன்றதென்றார். செவ்வி-பார்க்கத்தக்க செவ்வையானநிலை. அருமை- எளிதாய்க்கிட்டாமை. 'பேஎய்' இசைநிறை யளபெடை. செவ்வியருமையை அருஞ் செவ்வி யென்றது செய்யுள் நடை.

நிகூசு. கடுஞ்சொல்லன் கண்ணிலனு யினெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(இ—ரை.) கடுஞ்சொல்லன் கண் இலன் ஆயின்—அரசன் கடுஞ்சொற் சொல்பவனும் கண்ணேட்ட மில்லாதவனுமாயின்; நெடுஞ்செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும்—அவனது பெருஞ் செல்வம் நீடித்த லின்றி அப்பொழுதே கெடும்.

கடுஞ்சொல்லும் கண்ணேட்டமின்மையும் குடிகட்கு அச்சத்தை விளைத்தலின், வெருவந்த செயல்களாயின. 'கண்' ஆகு பெயர். விரைந்தழியத்தகாத பெருஞ் செல்வமாயினும் என்பார்—'நெடுஞ்செல்வம்' என்றார். இனி, நீண்டகாலமாகத் தொகுக்கப் பெற்ற முன்னோர் செல்வம் எனினுமாம். ஏகாரம் பிரிநிலை. இது காறும் நாற்குறள்களால் குடிகளஞ்சும் வினைகளும் அவற்றின் தீய விளைவுகளும் கூறப்பட்டன.

நிகூஎ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

(இ—ரை.) கடுமொழியும் கை இகந்த தண்டமும்—பொறுக்கத்தகாத கடுஞ்சொல்லும் குற்றத்தின் அளவிற்கு மிஞ்சிய தண்டனையும்; வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்—அரசனது பகைமையை வெல்லுதற்கேற்ற வலிமையாகிய இரும்பைத் தேய்த்தழிக்கும் அரமாம்.

கடுஞ்சொல்லாலும் கரைகடந்த தண்டத்தாலும், குடிகளும் வினை செய்வாரும் அன்பு குன்றி அரசனது வலிமை சுருங்கிவருமாதலால், அவ்விரண்டையும் அரமாகவுருவகித்து, 'அடுமுரண்'

எவ்வளவு வலியதாயினும் அழிந்துபோம் என்பதை, திண்ணிய இரும்பையும் அரம்தேய்த்துவிடும் என்னும் உவமையாற் பெறவைத் தார். கடுமொழியையுங் கையிகந்த தண்டத்தையும் ஈரமாகவோ, இருபுறமும் அராவும் ஓரமாகவோ கொள்க. இக்குறளால் குடி களும் வினைசெய்வாரும் அஞ்சும் வினைகள் கூறப்பட்டன. அடு முரணை இரும்பாக வுருவகிக்காமையால் இதில் வந்துள்ளது ஒரு மருங்குருவகம்.

நிகூஅ. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச் சீறிற் சிறுகுந் திரு.

(இ—ரை.) இனத்து ஆற்றி எண்ணுத வேந்தன்—செய்ய வேண்டிய கருமத்தைப்பற்றி அமைச்சரொடு கலந்து எண்ணிச் செய்யாத அரசன்; சினத்து ஆற்றிச் சீறின்—அக்கருமந்தப்பிய வழிச் சினத்தின் வயப்பட்டு அவர்மேற் சீறின்; திருச்சிறுகும்— அவன் செல்வம் நாள்தோறும் சுருங்கி வரும்.

அரசியல் வினையாற்றும் ஒப்புமையானும், உடன் கூட்டத் தைச் சுற்றமென்னும் வழக்குண்மையானும், அமைச்சரை இன மென்றும்; தன் தவற்றை அவர்மேலேற்றிச் சீறின், அவர் நீங்கிய பின் அரசப்பொறையை உடன் தாங்குவாரின்றி அரசன் கெடு வான் என்பது நோக்கி, திருச்சிறுகும் என்றும் கூறினர். இதனால் வினைச்சுற்றம் அஞ்சுவதும் அதனால் வினையுங் கேடுங் கூறப்பட்டன.

நிகூக. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன் வெருவந்து வெய்து கெடும்.

(இ—ரை.) சிறை செய்யா வேந்தன்—போர் வருவதற்கு முன்பே தனக்குப் புகலாக ஓர் அரண் செய்து கொள்ளாத அரசன்; செருவந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும்—போர் வந்த போது தனக்குப் பாதுகாப்பின்மையால் அஞ்சி விரைந்து கெடு வான்.

படைமறவர் அஞ்சித் தன்னை விட்டு நீங்குதலாற் பகைவராற் பிடிக்கப்பட்டு, 'நாடோ செல்வமோ உயிரோ அம் மூன்றுமோ இழக்க நேருமாதலின், 'வெருவந்து வெய்து கெடும்' என்றார். 'வெய்து' என்பது கடுந்துன்புற்று என்றுமாம். இதனால் அரசன் தானே அஞ்சும் வினையும் அதன் தீங்கும் கூறப்பட்டன.

நிஎ. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

(இ—ரை.) கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும்—கொடுங்கோ லரசன் அறநூலும் அரசியல் நூலுங் கல்லாதாரைத் தனக்கு ஆள் வினைத்துணைவராகச் சேர்த்துக்கொள்வான்; அது அல்லது நிலக் குப் பொறை இல்லை—அக்கூட்டமல்லாது நிலத்திற்கு வேறு கன மான பொறை (பாரம்) இல்லை.

கொடுங்கோலன் செயல் அவனுட்சியின்மே லேற்றிக் கூறப் பட்டது. கற்றோர் கடுங்கோலனெடு கூடாமையிற் 'கல்லார்ப் பிணிக்கும்' என்றும், ஏனையோரைப்பொறுக்கும் பொறை இயல் பாகவிருந்து பொறையாகத் தோன்றுமையின் 'அதுவல்லதில்லை நிலக்குப் பொறை' என்றுங் கூறினர். 'நிலக்கு' என்பதில் அத்துச் சாரியை தொக்கது. இதனால் நிலமும் அஞ்சும் வினை கூறப்பட்டது.

அதி. நி அ—கண்ணோட்டம்

அஃதாவது, தன் உறவினரும் நண்பரும் தன்னெடு பழகிய வரும் தன்னெடு தொடர்புடையவரும் தனக்கு உதவினவரும் எளியவரும் ஆனவர்க்கு நன்மை செய்வதை மறுக்க முடியாத அன்பு. இது அவரைக் கண்டவுடன் அவர் மீது மனம் விரைந் தோடுவது பற்றிக் கண்ணோட்டம் எனப்பட்டது. வெருவந்த செய் தற்கு நேர்மாறான பண்பாதலின், இது வெருவந்த செய்யாமை யின்பின் வைக்கப் பட்டது.

கண்ணோட்டம் நடுநிலை திறம்பியதும் திறம்பாததும் என இரு வகைத்தாம். ''ஓர்ந்துகண்ணோடாது'' (குறள். இசக) என்பதிற் சொல்லப்பட்டது திறம்பியது; இங்குச்சொல்லப்படுவது திறம்பாதது.

நிஎ. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

(இ—ரை.) கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை உண் மையான்—கண்ணோட்டம் என்று சொல்லப்படும் மிகச் சிறந்த அழகு பண்புடையாரிடத்தில் இருப்பதனாலேயே; இவ்வுலகு உண்டு—இவ்வுலகம் அழியாது இருந்து வருகின்றது.

கண்ணோட்டம் மக்களெல்லாரிடத்திலும் இருக்கவேண்டிய பண்பேனும், அரசருக்கு இன்றியமையாது வேண்டுவதாம். நாடு

முழுதும் அரசன் கையிலிருத்தலால், அவனிடத்திற் கண்ணோட்ட முண்மை குடிகள் இன்பமாக வாழ்வதற்கும், இன்மை ஏமமின்றி மாள்வதற்கும் ஏதுவாம். அகத்தழகு புறத்தழகு என அழகு இரு கைத்தாதலின், கண்ணோட்டம் காரிகையெனப்பட்டது. மேலும் அதன் சிறப்பு நோக்கி 'கழிபெரு' என ஈரடையுங் கொடுக்கப் பெற்றது. இது மீமிசைச்சீசால். "கண்ணோட்டம் ..உண்டிவ்வுலகு." என்பது, "உண்டாலம்ம விவ்வுலகம்.....பிறர்க்கென முயலுந ருண்மை யானே." (புறம். கஅ.) என்பது போன்றது.

நிஎ. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

(இ—ரை.) உலகியல் கண்ணோட்டத்து உள்ளது—உலக நடை கண்ணோட்டத்தினால் நடைபெற்று வருகின்றது; அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை—ஆதலால், அக்கண்ணோட்டம் இல்லாதார் இவ்வுலகத்திலிருப்பது மாநிலத்திற்கு வீண் சுமையேயன்றி ஒரு பயனுமில்லாததாம்.

உலகியல் என்பது ஒப்புர வொழுகல். அது செய்யாதவன் மக்கட்பிறப்படைந்தும் அதனாற் பயன்பெறுதலின், 'நிலக்குப் பொறை' என்றார். நிலக்கு என்பதில் அத்துச்சாரியை தொக்கது. இம்மையிற்பிறர்க்கும் மறுமையில் தமக்கும் பயன் படுமாறு நடந்து கொள்ளாதவர், இவ்வுலகில் இருப்பதினும் தாம் நுகர்வனவற்றைப் பிறர்க்குப் பயன்படும்படி நுகராவிட்டு விட்டு இறப்பதே மேல் என்பது கருத்து.

நிஅ. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

(இ—ரை.) பாடற்கு இயைபு இன்றேல் பண் என் ஆம்—பாடுதற்குப் பொருத்தமில்லையெனின் பண்ணால் என்ன பயனும்?; கண்ணோட்டம் இல்லாத கண் கண் என் ஆம்—அதுபோலக் கண்ணோட்டமில்லாத விடத்துக் கண்ணால் என்ன பயனும்?

கண்பார்வையின் சிறந்த பயன் கண்ணோட்டமே என்பது கருத்து. பண் என்பது இசைவகை. அது பாலையாழ் முதலிய நாற் பெருந் தண்ணின் வகையான நூற்று மூன்று பண்களின் விரியாக "இப்படைவா லுரைக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றெல்லுகிய ஆதியிசைகள்." (சிலப். அரங். கனி, அருஞ்சொல்லுரை) அவை ஏழும் ஆறும் ஐந்தும் நான்கும்

ஆக முரல் (சுரம்) உடைமைபற்றி, பண் (சம்பூரணம்), பண்ணியல் (ஷாடவம்), திறம் (ஔடவம்), திறத்திறம் (சுராந்தியம்) என நால்வகைப் பாகுபாடுடையன. பாடற்றெழில்கள்:

"சிச்சிலி பூனை குடமுழக்குஞ் செம்மைத்தா
முச்சிமலை நீர்விழுக்கா டொண்பருந்து—பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கா னிழற்பறவை
யேயுங்கா லோசை யியம்பு."

"உள்ளாளம் விந்து வுடலுத மொலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்தல் தான்படுத்தல்—மெள்ளக்
கருதி நலிதல் கம்பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை." (இசைமரபு)

"கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்று பற்றெரியா—எண்ணரிய
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்திருவ
ருள்ளாளப் பாட லுரை." (ஷை) என்பவற்றுல் அறியப்படும்.

நாதம்-அரவம். கம்பிதம்-நடுக்கம்.

இசைக்கருவிகளுள் தலை சமயான யாழை இயக்கும் முறைகள் பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், நெடுவரல், செலவு, வினையாட்டு, கைபூழ், குறும்போக்கு என்னும் எண்வகை இசையெழாலும்; வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் எண்வகைக் கரணமுமாம். கண் கண்டவழி நிகழ்தலாற் கண்ணேட்டத்தைக் கண்ணின் பண்பாகக் கூறினர். இறுதியிலுள்ள 'கண்' காலங் குறித்து வந்த இடப் பெயர். பண் பாடற்கியையின்மை, ஆளத்தி (ஆலாபனை) செய்ய முடியாவாறும் இன்பந்தராவாறும் ஆரோசை அமரோசைகளில் (ஆரோகண அவரோகணங்களில்) பகைமுரல் கலப்பதால் நேர்வதாம்.

நெ. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினைத்
கண்ணேட்ட மில்லாத கண்.

(இ—ரை.) ஆளவினல் கண்ணேட்டம் இல்லாத கண்—தகுந்த அளவிற்குக் கண்ணேட்ட மில்லாத கண்கள்; முகத்து உளபோல் எவன் செய்யும்—முகத்தில் உள்ளனபோல் தோன்றுவதல்லது வேறென்ன பயன்தரும்?

குருட்டுக் கண்ணிற்கும் கண்ணேட்ட மில்லாத கண்ணிற்கும் வேறுபாடில்லை. 'எவன் செய்யும்?' என் னும் வினா எதிர்மறை விடையை நோக்கிற்று. போதா அ ள வி னின் று நீக்குதற்கு 'அளவினன்' என்றார்.

நெடு. கண்ணிற் கணிகலங் கண்ணேட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

(இ—ரை.) கண்ணிற்கு அணிகலம் கண்ணேட்டம்—ஒருவர் கண்ணிற்கு அணிகலம் போல் அழகு செய்வது கண்ணேட்டமே; அஃது இன்றேல் புண் என்று உணரப்படும்—அவ்வணிகலமின்றேல் அது அறிவுடையோராற் புண்ணென்றே கருதப்படும்.

மையூட்டும் பெண்டிர் கண்ணிற்கும் மையூட்டா ஆடவர் கண்ணிற்கும், செல்வர் போன்றே வறியாரும் அணியக்கூடிய சிறந்த அணிகலம் கண்ணேட்டம். அஃதன்றி இவ்வுறுப்பிற்கு வேறு அணிகலமுமில்லை. ஆதலால், அவ்வணிகல மில்லாதார் கண் அழகிழப்பதுடன் பல்வேறு வகையில் நோவுதரும் உறுப்பாயிருப்பது பற்றி, 'புண்ணென்றுணரப் படும்' என்றார். பல்வேறு வகை நோவாவன கண்ணேயும் தூசியுறுத்துதலும் தீய ஆசையுண்டாக்குதலுமாம்.

நெகூ. மண்ணே டியைந்த மரத்தனையர் கண்ணே
டியைந்துகண் ணேடா தவர்.

(இ—ரை.) கண்ணேடு இயைந்து கண்ணேடாதவர்—கண்ணேடு பொருந்தியிருந்தும் கண்ணேடாத வன்னெஞ்சர்; மண்ணேடு இயைந்த மரத்து அனையர்—இயங்குதிணையராயினும் நிலத்திணையைச் சேர்ந்ததும் மண்ணேடு பொருந்தியதுமான மரத்தைப் போல்வர்.

மரமுங் கண்ணேடியைந்து கண்ணேடாமையின் கண்ணேடாதவர்க்குச் சிறந்த உவமமாயிற்று. இது விகாயுவமை. மரக்கண்ணுவது அதன் கணு. "மரக்கண்ணே மண்ணுள்வார் கண்" (முத்தொள்.'கூகூ). கணுக்கணுவாயிருப்பதால் மூங்கிலுங் கண்ணெனப்படும். புறக்கண் கண்டவழி ஓடுவது அகக்கண்ணேயாயினும், வழியாயிருத்தல் பற்றியும் பெயரொப்புமை பற்றியும் பின்னதன் விகாய முன்னதன்மேல் ஏற்றிக்கூறப்பட்டது. கண்ணேடுதல் என்பது ஒரு சொற்றன்மைப்பட்டு முதல் விகாயாய் நின்றது. 'மரம்' வகுப்பொருமை. மண்ணேடியைந்த மரம் என்பதற்குச் "சுதை மண்ணேடு கூடச்செய்த மரப்பாவை" என்று மணக்குட

வரும் பரிப்பெருமாளும் உரைத்திருப்பது ஒரு சிறிதும் பொருந்தாது.

௫௭௯. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்

(இ—ரை.) கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்—கண் ணோட்ட மில்லாதவர் கண்ணில்லாதவரே யாவர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்—கண்ணுடையவர் எப்போதே னும் என்ன கருணையம் பற்றியும் கண்ணோட்ட மில்லாதவராகவும் இரார்.

காட்சியினுற் கொள்ளும் சிறந்த பயன் இன்மையால் 'கண் ணோட்ட மில்லவர் கண்ணிலர்' என்றார். அதை வற்புறுத்தவும் குறள் நிரம்பவும் பின்னும் அதை எதிர்மறை முகத்தாற் கூறினர். உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

௫௭௰. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(இ—ரை). கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு—நடுநிலையாக முறை செய்யவேண்டிய தம் கடமை தவறாமல் கண் ணோட வல்ல அரசர்க்கு; இவ்வுலகு உரிமை உடைத்து—இவ்வுல கம் நிலையான உரிமையாகுந் தன்மை யுடையதாம்.

'கருமஞ்சிதையாமல்' என்பதால் இவ்வதிகாரத்திற் கூறப்பட் டது நெறிதவறுத நற்கண்ணோட்டமே என்பது அறியப்படும். முறை தவறுமிடத்துக் கண்ணோடாமையும் தவருமிடத்துக் கண் ணோடுதலும் அமைவது அருமையாதலின், 'கண்ணோட வல்லார்க்கு என்றார். தவறுமிடமாவது கண்ணன்ன கேளிர் குற்றஞ் செய்யின் தண்டிக்க விரும்பாமை. தவருமிடமாவது தன்னல் வெறுக்கப்படு பவன் குற்றஞ் செய்யா விடினுந் தண்டிக்கவும் சிறு குற்றஞ்செய்யி னும் பெருந் தண்டனை யிடவும் விரும்புதல். இவ்விரண்டு மின்றி நடு நிலை முறையும் நற்கண்ணோட்டமும் செய்வார்க்குக் குடிகளெல் லாரும் என்றும் அன்புடன் அடங்கி நடப்பாராகலின், 'உரிமை யுடைத்திவ் வுலகு' என்றார். 'உலகு' அதன் பகுதியாகிய நாட் டைக் குறித்தலின் முதலாகு பெயர்.

௫௭௱. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(இ—ரை.) ஒறுத்து ஆற்றும் பண்பினர் கண்ணும்—தம்மை வருத்தியொழுகும் இயல்புடையாரிடத்தும்; கண்ணேறிடிப்பொறுத்து ஆற்றும் பண்பே தலை—பழைய நட்புக்கருதிக் கண்ணேறிட்ட முடையராய் அவர் குற்றத்தைப் பொறுத்தொழுகும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது.

இப்பொருட்கு, இந்தியா சீனுவின் வரம்பு கடந்த நடத்தையைப் பொறுத்துக் கொண்டு போவதை எடுத்துக் காட்டாகக் கொள்க. 'பண்பினர்' என்பது அவர் வழக்கத்தை யுணர்த்திற்று. உம்மை எச்சமும் இழிவுங் கலந்தது.

(உ) ஒறுத்து ஆற்றும் பண்பினர் கண்ணும்—தம்மால் தண்டித்து அடக்கப்பட வேண்டிய குற்ற முடையாரிடத்தும்; கண்ணேறிடிப் பொறுத்து ஆற்றும் பண்பே தலை—கண்ணேறிட்டஞ் செய்து அவர் குற்றத்தைப் பொறுத்து அமையும் இயல்பே தலைசிறந்ததாம்

இப்பொருட்கு, இந்தியா பாக்கித்தான் தாக்குதலைப் பொறுத்துக் கொண்டமைவதை எடுத்துக்காட்டாகக் கொள்க. 'பண்பினர்' என்பதும் உம்மையும் மேலனவே.

இங்ஙனம் இக்குறட்கு இருவகையாய் உரைப்பதற்குக் காரணியம், ஒறுத்தல் என்னும் சொல் தண்டித்தல் என்றும் வருத்துதல் என்றும் இருபொருள் தருவதே.

நிஅ0 பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(இ—ரை.) நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்—எல்லாராலும் விரும்பப்படத்தக்க நாகரிகப் பண்பாகிய கண்ணேறிட்டத்தை வேண்டுபவர்; நஞ்சு பெயக்கண்டும் உண்டு அமைவர்—தம் நண்பர் தமக்குத் தம் கண்முன் நஞ்சிடக் கண்டும் அதை மறுக்காது உண்டு பின்னும் அவரொடு அன்பாகப் பொருந்துவர்.

'நயத்தக்க நாகரிகம்' என்றதனாலும், 'அமைவர்' என்றதனாலும், நஞ்சிட்டவர் நண்பர் என்பது உய்த்துணரப்படும். திருவள்ளுவர் தம் நூலில் எல்லார்க்கும் பொதுவாக இயற்றியதனால், இப்பொருட்பாலில் அரசர்க்குரியவற்றோடே ஏனோயர்க் குரியவற்றையுஞ் சேர்த்தே கூறியுள்ளாரென்றும், இவ்வதிகாரத்தின் இவ்விறுதிக் குறள் தனிப்பட்ட சான்றோர் ஒழுக்கம் பற்றிய தென்றும், அறிந்து கொள்க. நண்பரிட்ட வுணவாதலால் அது அவர் அறியா

திட்ட நஞ்சென்றும், நட்புப்பற்றிய கண்ணோட்டத்தாலேயே அது உண்ணப் பெறுமென்றும், அதுவும் இயற்கைக்கு மிஞ்சியதாதலால் 'நயத்தக்க' என்னும் அடைபெற்றதென்றும், அறியப்படும். அறிந்திட்ட நஞ்சாயின் அது நண்பர் செயலாகாமை அறிக. நயத்தகுதல் பகைவராலும் பாராட்டப் பெறுதல்.

நாகரிகம் என்றது இங்கு அகநாகரிகமான பண்பாட்டை. கண்ணோட்டம் பண்பாட்டுக் குணமாதலின் நாகரிகமெனப் பட்டது.

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்."

என்பது நற்றிணை (கூநுந). பெய்தும் என்னுது 'கண்டும்' என்றதனால், உம்மை உயர்வு கலந்த எச்சமாம்.

அதி. நிகூ—ஒற்றுடல்

அஃதாவது, அரசன் தன் நாட்டிலும் தன் நாட்டைச் சூழ்ந்த பிறநாடுகளிலும் தனக்கு நட்பாகவோ பகையாகவோ வுள்ள சேய்மைநாடுகளிலும், பகை, நட்பு, நொதுமல் என்னும் முத்திறத் தாரிடத்தும் நிகழ்பவற்றை மறைவாக அறிதற்கு ஒற்றரை ஆளுதல். ஒற்றராவார், அவ்வக்காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுகோலம் பூண்டு பகையரசர் உவளகமும் புகுந்து, பிறர் ஐயுறுவாறு அங்குள்ள அருமறைகளையும் மருமங்களையும் திறமையாக அறிந்து, ஐயுற்றும் அறிந்தும் பகைவராற் கைப்பற்றப் பட்டு உயிர்க்கிறுதி நேரினும் வாய் சோர்ந்து உண்மை வெளியிடாதவராய், செய்திகளையெல்லாம் உடனுடன் அரசனுக்கு மறைவாக வந்து உரைக்கும் மாபெருந் திறவோரும் மறவோரும் ஆவர். ஒற்று, வேய் என்பன ஒருபொருட் சொற்கள்: கக—ஆம் அதிகாரம் முதல் இதுவரை கூறப்பட்டுள்ள இலக்கணங்களையெல்லாங் கொண்ட அரசன், தன் நாடு காவற்கும் வேற்று நாடு கைப்பற்றற்கும் ஒற்றுடல் இன்றியமையாததாதலின், இது அவற்றின் பின் வைக்கப்பட்டது.

இஅக. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுங்
தெற்றென்க மன்னவன் கண்.

(இ—ரை.) ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும்—

ஒற்றும் புகழமைந்த அரசியல் நூலும் ஆகிய இவ்விரண்டையும்; மன்னவன் கண் தெற்று என்க—அரசன் தன் இரு கண்களாகத் தெளிக.

ஒற்றுத்தன் கண் செல்லாத இடமெல்லாஞ்சென்று அங்கு நிகழ்ந்தவற்றை அறிவித்தலானும், நூல் தன் அறிவிற்கெட்டாத வினைகளையுஞ் சூழ்ச்சிகளையுந் தெரிவித்தலானும், இவ்விரண்டையும் அரசன் முறையே தன் புறக்கண்ணுகவும் அகக்கண்ணுகவும் கொண்டு ஒழுகுக என்றார். அரசனை அரசு என்பது போல் ஒற்றனை ஒற்று என்றார். தெற்றெனல் தெளிதல் அல்லது தெளிவாதல்.

குஅஉ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

(இ—ரை.) எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல்—எல்லாரிடத்தும் நிகழ்பவை யெல்லா வற்றையும் எப்போதும் ஒற்றுல் விரைந்து அறிதல்; வேந்தன் தொழில்—அரசன் கடமையாம்.

'எல்லார்க்கும்' என்றது முத்திறத்தாரையும். இது நான்காம் வேற்றுமை ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம். 'எல்லாம்' என்றது சொல் செயல் பொருள் மூன்றையும் குறிக்கும். இடையருது நிகழ்தலால் 'எஞ்ஞான்றும்' என்றும், உடனுடன் நட்போ பகையோ பூணவும் கொடையோ தண்டமோ நிகழ்த்தவும் விரைந்து செய்திகளை யறியவேண்டுமாதலின் 'வல்லறிதல்' என்றும் கூறினர். ஒற்றுல் என்பது அதிகாரத்தால் வந்தது.

குஅஊ. ஒற்றினு னெற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(இ—ரை.) ஒற்றினுன் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன்—ஒற்றரால் எல்லார் செய்திகளையும் மறைவாக அறிந்து வரச்செய்து அவற்றுல் வினையும் பயனை ஆராய்ந்தறியா அரசன்; கொற்றம் கொளக்கிடந்தது இல்—வெற்றியடையக் கூடிய வேறு வழியில்லை.

நிகழ்ந்த செய்திகளையும் அவற்றின் வினைவையும் அறியாத அரசன், திடுமென்று பகைவரால் தாக்கப்படின் வெற்றியடைதற்கு வழியில்லை யாதலின், 'கொற்றங்கொளக் கிடந்ததில்' என்றார். இதைக் கொளக்கிடந்தது கொற்றமில்லை எனச் சொன்முறைமாற்றி

தோல்வியன்றிக் கொள்ளக்கிடந்ததொரு வெற்றியில்லை என்றுரைப்பினு மமையும்.

குஅச. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றுங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(இ—ரை.) வினைசெய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய்வது—அரசியல் வினைஞர், அரசரின் உறவின் முறையார், பகைவர் என்று சொல்லப்படும் எல்லாரையும் சொற் செயல் பொருள்களால் மறைவாக ஆராய்வானே; ஒற்று—சரியான ஒற்றனுவான்.

வினைசெய்வார் முதலிய மூவகுப்பாரும் அரசனுக்குத் தெரியாமலே தன்னுட்டொடும் பகை நாட்டொடும் தொடர்பு கொள்ளக் கூடுமாதலின், அவரனைவரையும் மறைவாக ஆராயவேண்டு மென்றார். 'ஆங்கு' அசைநிலை.

குஅடு. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

(இ—ரை.) கடாஅ உருவொடு — ஒற்றப்பட்டார் கண்டால் அயிர்க்கப்படாத வடிவொடு பொருந்தி; கண் அஞ்சாது—அவர் ஒருகால் அயிர்த்து நோக்கி ஆராயத்தொடங்கின், அவர் சினந்து நோக்கும் நோக்கிற்கு அஞ்சாது நின்று; யாண்டும் உகாமை வல்லதே—எவ்விடத்திலும் எவ்வழியைக் கையாளினும் உள்ளத்திலுள்ளதை வெளிவிடாமை வல்லவனே; ஒற்று—சிறந்த ஒற்றனுவன்.

கடுத்தல், அயிர்த்தல் என்பன பகைவன் அல்லது ஒற்றன் என்று ஐயுறுதல். கடாத (கடுக்காத) வடிவாவன: துறவியர், வணிகர், வழிப்போக்கர், இரப்போர் முதலியோர் தோற்றம்: உகுத்தல் சிந்துதல். அது இங்கு மறைவெளியிடுதலைக் குறித்தது, 'கடா' கடு என்னும் வினையடிப்பிறந்த ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'கடா அ', 'உகாஅமை' இசைநிறை யளபெடைகள். ஏகாரம் தேற்றம். 'ஒற்று' வடிவால் அஃறிணையாதலின் அஃறிணை முடிவு கொண்டது.

குஅஉ. துறந்தார் படிவத்த ராகி யிறத்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

(இ—ரை.) துறந்தார் படிவத்தர் ஆகி—முற்றத்துறந்த முனிவரின் கோலம்பூண்டு; இறந்து ஆராய்ந்து-புகுதற்கரிய விடமெல்லாம் கோடிவரை உட்புகுந்து ஆராயவேண்டியவற்றை யெல்லாம் ஆராய்ந்தறிந்து; என் செயினும் சோர்வு இலது—அங்குள்ளவர் அயிர்த்துப் பற்றி நுண்சிதைப்புச் (சிந்திரவதை) செய்யினும் வாய் சோர்ந்து தம்மை வெளிப்படுத்தாதவரே, ஒற்று—சிறந்த ஒற்றராவர். 'துறந்தார்' என்பது ஒப்புமைபற்றித் திருநீராட்டுச் செலவினரையுங் குறிக்கும். 'என் செயினும் என்றது நோவுறுத்தலின் கடுமையை விளக்கி நின்றது. பரிமேலழகர் 'துறந்தார் படிவத்தர்' என்பதை ஆரும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளாது உம்மைத் தொகையாகக் கொண்டு, ''முற்றத் துறந்தாராயும் விரதவொழுக்கினராயும்'' என்று பொருள் கூறி, ''இதனுட் 'படிவ' மென்றதனை வேடமாக்கித் துறந்தார் வேடத்தராகி யென்றுரைப்பாரு முளர்.'' என்று, மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் ஆகிய நால்வரையும் பழிப்பர். ஒற்றர் துறவியரின் கோலத்தராக வன்றி உண்மையான துறவியராக இருக்க முடியாது; இருப்பின் ஒற்றராக முடியாது. பரிமேலழகர் 'துறந்தாராயும் விரதவொழுக்கினராயும்'' என்று கூறியது பிராமணரை நோக்கிப்போலும்! 'துறந்தார் படிவத்தராகி' என்று தொடங்கியதால், 'ஒற்று' என்பது பன்மை குறித்த வருப்பொருமையாம். அது தன் அறிஞை வடிவிற்கேற்ப அத்திஞை முடிபுகொண்டது.

இஅள. மறைந்தவை கேட்கவற் றுகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

(இ—ரை.) மறைந்தவை கேட்க வற்று ஆகி—ஒற்றப்பட்டார் மறைவாகச் செய்த செயல்களையும் அவர்க்கு உள்ளாளரைக் கேட்டறிய வல்லவராகி; அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று—தான் கேட்டறிந்த செய்திகளை ஐயப்படாமல் துணியும் ஆற்றலுள்ளவனே சிறந்த ஒற்றனவன்.

'மறைந்தவை' சொல்வாரைத்தப்பாது அறிந்து அவரிடம் சென்று, அவர் தாமே அம்மறை பொருள்களைச் சொல்லுமாறு குரங்கெறிவிளங்காயாகச் சில சொற்களைச் சொல்லியும் சில வினைகளைச் செய்தும், அம்மறைபொருள்களை அவர் வாயினின்று கேட்கும் போதும் அவர் தன்னை எள்ளளவும் அயிராவாறு அச்செய்தியில் தான் முற்றும் பற்றற்றவன் போல் நடித்து, அவர் சொல்வதனைத்தையுங் கேட்க வேண்டியிருத்தலின் 'கேட்க வற்றுகி' யென்றும், கேட்டவற்றைத் தானே ஐயுற்று வந்து சொல்லின் அரசன் இவற்

றிற் கேற்ற வினைசெய்ய முடியாமற் போவதுடன் கலக்கமுங் கொள்ள நேருமாதலின் 'ஐயப்பாடில்லதே' யென்றும், கூறினர். வல்லது—வற்று (வல் + து). ஏகாரம் தேற்றம். 'ஒற்று' பொருளால் உயர் திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலின், அஃறிணை முடிபு கொண்டது. இந்நான்கு குறளாலும் ஒற்றின் இலக்கணங் கூறப்பட்டது.

நுஅஅ. ஒற்றிரொற்றித் தந்த பொருளோயு மற்றுமோ
சொற்றினு லொற்றிக் கொளல்.

(இ—ரை.) ஒற்று ஒற்றித் தந்த பொருளோயும்—ஓர் ஒற்றன் ஒற்றிவந்து அறிவித்த செய்திகளோயும்; மற்றும் ஓர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்—வேறும் ஓரொற்றனல் ஒற்றுவித்து ஒப்பு நோக்கி உண்மை யறிந்து கொள்க.

பகைவரோ டொத்து நின்று உண்மைக்கு மாருகக் கூறும் ஒற்றருமிருப்பராதலின், ஓரொற்றன் கூற்றைக்கேட்ட மட்டில் நம்பி விடக் கூடாதென்றும், ஒற்றர் பலரையுந் தனித்தனி மறைவாகக் கேட்டு அவர் கூற்றுக்கள் ஒத்துவந்த வழியே நம்பவேண்டு மென்றும், பாதுகாப்புக் கூறினர். ஒற்றுதல் மறைவாகப் பொருந்தியறிதல். உம்மை யிரண்டனுள் முன்னது உயர்வு சிறப்புக் கலந்த எச்சம்; பின்னது இறந்தது தழுவிய எச்சம். இதனால் ஒற்றரை ஆளும் வகை கூறப்பட்டது.

நுஅக. ஒற்றிரொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றிருக்க தேறப் படும்

(இ—ரை.) ஒற்று ஒற்று உணராமை ஆள்க—ஒற்றரையாளுமிடத்து ஒருவனே யொருவன் உய்த்துணர்வாலும் அறியாதவாறு தனித்தனி ஆள்க; உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும்—அங்ஙனம் ஆளப்பெற்ற ஒற்றர் மூவர் கூற்று ஒத்துவரின் அதையே உண்மை யென்று தெளிதல் வேண்டும்.

அரசன் ஒற்றரை ஒருவனே யொருவன் அறியாவாறு ஆண்டாலும், பகைவர் நாட்டில் இறந்தாராயவும் மறைந்தவை கேட்கவும் வல்லவரான ஒற்றர் தம் நாட்டு ஒற்றரை அரசனுக்குத் தெரியாமலே அறிந்து கொள்ளக் கூடுமாதலானும், அவருட்சிலர் தம்முள் இசைந்து ஒப்பக்கூறலாமாதலானும், எல்லாரையும் அரசன் நம்பாமலிருக்கவும் முடியாதாதலானும், மூவர் சொல் ஒத்துவந்தவழி நம்புக என்று வெளிப்படையாகவும், அங்ஙனம் வராவிடின் மேற்

கொண்டும் பிறர் வாயிலாக ஆராய்ந்து உண்மைகாண்க வென்று குறிப்பாகவும், கூறினர். 'படும்' என்னும் துணைவினை "செய்யப் படும்" (குறள். கூகூ) என்பதிற்போல் வேண்டும் என்னும் பொருளதாம். இதனால் ஒற்றர் கூற்றுக்களை ஆராயும் வகை கூறப் பட்டது.

இகூ0. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

(இ—ரை.) ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க—அறிதற் கரிய மறைபொருள்களை யறிந்து வந்து கூறிய ஒற்றனுக்குச் செய்யும் சிறப்பை, அரசன் பிறரறியச் செய்யா தொழிக; செய்யின் மறை புறப்படுத்தான் ஆகும்—செய்தானுயின் தன் உள்ளத்தித் போற்றிக் காக்கவேண்டிய மருமச் செய்தியைத் தானே எல்லார்க்கும் வெளிப்படுத்தினவன் ஆவன்.

ஒற்றனுக்குப் பிறரறியச் சிறப்புச் செய்யின், இவன் யாரென்றும் அவன் சிறப்புப் பெறக் காரணியம் என்ன வென்றும் பிறரால் வினவியறியப்படுதலின், 'புறப்படுத்தானாகும் மறை' என்றார். மறை யாவது அவன் ஒற்றன் என்பதும், அவன் ஒற்றியறிந்து கூறிய செய்தியுமாகும். அம்மறை வெளிப்படின், அதனைப் பயனின்றிப் போவதுடன் அவ்வொற்றனையும் அதன்பின் ஆளமுடியாதாம். இதனால் ஒற்றனுக்குச் சிறப்புச் செய்யும் வகை கூறப்பட்டது.

அதி. கூ0—ஊக்க முடைமை

அஃதாவது, வினைசெய்வதில் தளர்ச்சியின்றி மேன்மேலுங் கிளர்ச்சி பெறுதல். ஒற்றரால் நிகழ்ந்தவற்றை யறிந்து அவற்றிற் கேற்ப வினைசெய்யும் அரசனுக்கு இது இன்றியமையாமையின், ஒற்றுடலின் பின் வைக்கப்பட்டது. ஊ—ஊங்கு=முன். ஊங்கு தல்=முன்செல்லுதல். ஊக்குதல்=முற்செலுத்துதல், உள்ளத்தை வினையில் முன்செல்லத் தூண்டுதல். ஊங்கு—ஊக்கு—ஊக்கம்.

இகூக. உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடையது உடையரோ மற்று.

(இ—ரை.) உடையர் எனப்படுவது ஊக்கம் — ஒருவரைச் செல்வமுடையர் என்று சொல்லச் சிறந்த காரணியமாயிருப்பது மனவெழுச்சியுள்ளம்; அஃது இல்லார் மற்று உடையது உடையரோ—

அம்முயற்சியுள்ளம் இல்லாதார் வேறேதேனும் உடையராயினும் உடையராவரோ? ஆகார்.

வேறுடையது என்றது முதுசொம் எனப்படும் முன்னோர் தேட்டை. காக்கும் ஆற்றலின்மையால் அதையும் இழப்பர் என்ப தாம். எச்சவும்மை தொக்கது.

குகூஉ. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(இ—ரை.) உள்ளம் உடைமை உடைமை — முயற்சியுள்ள மூடைமையே ஒருவனுக்கு நிலையான உடைமையாவது; பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும்—மற்றப் பொருளுடைமை எவ்வளவு பெரிதேனும் தன்னிடம் நில்லாது நீங்கிவிடும்.

ஊக்கத்தினுற் புதுச்செல்வம் உண்டாக்கப்படுவதுடன் பழஞ் செல்வமும் பாதுகாக்கப்படும். "குந்தித் தின்றுற் குன்றுங் குன் றும்." ஊக்கம் உள்ளப்பண்பாதலின் அதை ஒருவரும கவரமுடி யாது. செல்வம் இயற்கையினுலும் செயற்கையினுலும் பல்வேறு வகையில் அழிந்துபோம் ஆதலால் உண் மையான வுடைமை ஊக்கமே என்பதாம். 'உள்ளம்' ஆகுபெயர் அன்று. அது ஊக்கம் என்பதன் ஒருபொருள் மறுசொல். உள்— உய்—உயல்—உயற்று—உளுற்று=முயற்சி. ஒ. நோ: முயல்— முயற்று. உள்ளுதல் முன்தள்ளுதல். உள்—உள்ளம். மனத் தைக் குறிக்கும் உள்ளம் என்னும் சொல் உள்ளிருப்பது என்று பொருள்படுதலால் அது வேரும்.

குகூ. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ருக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(இ—ரை.) ஊக்கம் ஒருவந்தம் கைத்து உடையார்—ஊக் கத்தை நிலையாகக் கைப்பொருளாகக் கொண்டவர்; ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார்—தம் செல்வத்தை யிழந்தாராயினும் அதை யிழந்தேம் என்று துன்புரார்.

ஊக்கத்தினுல் வேறு பொருள் புதிதாகத்தேடிக் கொள்ளலா மாதலின், 'அல்லாவார்' என்றார். ஒருவந்தம் நிலைபேறு. அது இங்கு நிலைபேருக என்று பொருள் படுதலாற் குறிப்பு விஞையெச் சம். பெயரெச்சமாயின் ஒருவந்தக் கைத்து என ஈறுகெட்டுப் புணர்ந்திருக்கும். கையிலுள்ள பொருள் கைத்து. கையது—கைத்து

(கை+து). ஆக்கத்தை உண்டாக்குவது ஆக்கம்; ஆகுபெயர். ஆதல் வளர்தல், மேம்படுதல். ஆ—ஆகு—ஆக்கம். செல்வம் நிலையான கைத்தன்மை ''கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ் செய்மின் ''(நாலடி. ககூ) என்பதனுல் அறியப்படும்.

நுகூச ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

(இ—ரை.) ஆக்கம்—செல்வம்; அசைவு இலா ஊக்கம் உடையான் உழை—தளர்வில்லாத ஊக்க முள்ளவனிடத்திற்கு; அதர் வினுய்ச் செல்லும்—தானுகவே வழி வினவிக்கொண்டு செல்லும்.

ஊக்க முள்ளவனுக்கு ஆக்கம் எளிதாய்க்கிட்டும் என்பது கருத்து. அசைவின்மை இடுக்கண், மெய்வருத்தம் முதலிய வற்றுல் தளராமை. இந்நான்கு குறளாலும், இருக்கின்ற செல்வத்தினும் அதற்கு ஏதுவான ஊக்கம் சிறந்த தென்பது கூறப்பட்டது.

நுகூடு. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு.

(இ—ரை.) மலர் நீட்டம் வெள்ளத்து அனைய—நீர்ப்பூக்களின் காம்பின் நீளம் அவை நிற்கும் நீரின் அளவாகும்; உயர்வு மாந்தர்தம் உள்ளத்து அனையது—அதுபோல மாந்தரின் வாழ்வுயர்ச்சி அவருடைய ஊக்கத்தின் அளவாகும்.

உயர்வு அரசர்க்கு நாடு பொருள் படைகளும் பிறர்க்குச் செல்வம் பதவி வினைஞரும் மிகுதலாம். சில மலர்க் காம்புகள் நீர் மட்டத்திற்கு மேலும் நிற்றலால், நீரளவாய் நிற்பனவே இங்கு உவமையாவன என அறிக. 'மலர்' ஆகுபொருளது. நீரை வெள்ளம் என்பது மலையாள நாட்டு வழக்காதலால், திருவள்ளுவர் பண்டைச் சேரநாட்டொடு பழகியிருந்தமை உய்த்துணரப்படும். இதை ''இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇயற்று'' (குறள். சுசுக) என்னும் உவமமும் வலியுறுத்தும். இக்குறளில் வந்துள்ள அணி எடுத்துக்காட்டுவமை.

நுகூசு. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(இ—ரை.) உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்—அரசராயினும் பிறராயினும் தாம் கருதுவதெல்லாம் தம் உயர்ச்சிபற்றிய

கருத்தாகவே யிருக்க; மற்று—பின்பு; அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து—அவ்வுயர்ச்சி ஊழ்வலியால் தவறினும் தவருத தன்மை யதே.

உயர்வு தவறினும், உள்ளினவரின் உயரிய நோக்கத்தையும் அவர் செய்த பெருமுயற்சியையும் அறிவுடையோர் பாராட்டுவரா தலானும்.

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்." (குறள். கூ0) ஆதலானும்,

'தள்ளாமை நீர்த்து' என்றார். உம்மை தள்ளுவதன் அருமை குறித்து நின்றது.

நூகூ. சிதைவிடத் தோல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டேன்றுங் களிறு.

(இ—ரை.) களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும்—போர்யானை தன் உடம்பில் ஆழப்பதிந்த அம்பினைப் புண்பட்ட விடத்துந் தளராது தன் பெருமையை நிலை நிறுத்தும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார்—அதுபோல ஊக்க முடையோர் தாம் கருதிய வெற்றிக்குத் தடையாகத் துன்பம் நேர்ந்த விடத்தும் தள ராது தம் பெருமையை நிலைநாட்டுவர்.

உவமமும் பொருளுங் கொண்ட அடைகள் இரண்டிற்கும் பொதுவாதலின், ஒல்காமை களிற்றுடனும் பாடுன்றுதல் உரவோ ருடனுஞ் சென்றியைந்தன. தாம் மேற்கோண்ட வினைக்குத் தடை யாகப் பேரிடுக்கண் நேரினும், தளராது தாம் கருதியதை முடிப்பர் என்பது, உவமத்தாற் பெறப்படும். முந்தின குறள் ஊழால் தடைப் படும் வினையையும், இக்குறள் இடையூற்றால் தடைப்பட்டு விடா முயற்சியால் வெல்லப்படும் வினையையும், குறித்தன வென வேறு பாடறிக.

நூகூஅ. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(இ—ரை.) உள்ளம் இலாதவர் — ஊக்கமில்லாத அரசரும் பெருஞ்செல்வரும்; உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் —இவ்வுலகத்தில் யாமே வண்மையுடையேம் என்று மகிழ்வொடு கருதும் பெருமிதம் பெறார்.

ஊக்கமில்லாதவர்க்கு அதனலுண்டாகும் முயற்சியும், முயற்சியாலுண்டாகும் பொருளும், பொருளாலுண்டாகும் கொடையும், கொடையாலுண்டாகும் செருக்கும் இல்லையாதலின், வள்ளிய தீயதுமான இருவகைச் செருக்குள், இங்குக் குறித்தது நல்லது என அறிக.

''கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.''

என்பது தொல்காப்பியம் (மெய்ப்பாட்டியல், கூ).

டுகூகூ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(இ—ரை.) யானை பரியது கூர்ங்கோட்டது ஆயினும்—யானை விலங்குகளெல்லாவற்றுள்ளும் உருவத்திற் பெரியதும், அதோடு கூரிய கொம்புள்ளதுமாயினும்: புலி தாக்குறின் வெருவும்—உருவப் பருமையுங் கொம்புமில்லாத புலி தன்னைத்தாக்கின், அஞ்சி எதிர்க்காது அதனற் கொல்லப்படும்.

பருத்தவுடம்பு வலிமிகுதி குறிக்கும். யானை மெய்வலிமை மிக்கதும் குத்தும் உறுப்புடையது மாயிருந்தும், ஊக்கமின்மையால், அதனையுடைய சிற்றுடம்பு மோழைத்தலைப்புலியாற் கொல்லப்படும் என்பது, ஊக்கமில்லாத அரசர் படைப் பெருமையுங் கருவிச்சிறப்பும் உடையவராயினும், அவை குன்றியிருந்தும் ஊக்கஞ் சிறந்த சிற்றரசரால் வெல்லப்படுவர் என்பதை உணர்த்துதலால், இது பிறிது மொழிதல் அணியாம். உம்மை உயர்வு சிறப்பு. 'வெரூஉம்' இன்னிசையளபெடை

கூ00. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(இ—ரை.) ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை—ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே: அஃது இலார் மரம்—அவ்வூக்க மிகுதியில்லாதார் மக்களாகார், மரங்களாவர்; மக்கள் ஆதலே வேறு—மக்கள் வடிவிலிருப்பதே இம் மரங்களுக்குக் குலமரங்களொடு வேற்றுமையாம்.

உயர்விற்கும் நன்மைக்கும் ஏதுவான வினைமுயற்சியின்மையின், அதை இயங்காமையாகக் கொண்டு 'மரம்' என்றார். உள்ளத்

தால் இயங்காது காலால் மட்டும் இயங்குவது மக்களியக்க மன் றென்பது கருத்து. மரங்கள் இயங்காவிடினும், அவற்றுள் ஒரு சாரன வேர் முதல் விதை வரை இருதிணையுயிரிகட்கும் உணவா கவும் மருந்தாகவும் பயன்படுவனவாம். இவ்விருவகையிலும் பயன் படாதனவும் காய்ந்தால் விறகாகவேனும் உதவாமற்போகா. இப் பயன்பாடு ஊக்கமில்லா மாந்தர்க்கின்மை, 'மக்களாதலேவேறு' என்று குறித்த வடிவு வேறுபாட்டாற் குறிப்பாகப் பெறப்பட்டதாம். 'மரம்' வகுப்பொருமை. ஏகாரம் பிரிநிலை.

அதி, சுக—மடியின்மை

அஃதாவது, வினைமுயற்சியிற் சோம்புதலின்மை. ஊக்க முடையார்க்கும் வெப்பம் மிக்க வானிலையாலேனும், உணவின் தன்மையாலேனும், சோம்பேறிகளின் கூட்டுறவாலேனும், நெஞ்சு சுரக்குறைவினாலேனும், சிற்றின்ப ஈடுபாட்டாலேனும், ஒவ்வொரு சமையத்தில் மடிநேர்தலின், அதை விலக்குதற்கு இது ஊக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.

கோ௦க குடியென்னுங் குன்ரு விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

(இ—ரை.) குடி என்னும் குன்ரு விளக்கம்—தான் பிறந்த குடியாகிய நந்தா விளக்கு; மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் —சோம்பல் என்னும் தூசி அடைவதால் ஒளிமழுங்கிக் கெடும்.

அரண்மனைப் பள்ளியறைகளிலும் கோயில்களின் உண்ணு ழிகைகளிலும் இரவும் பகலும் ஒளியிருத்தற்பொருட்டு, நுந்தா விளக்கும் நந்தா விளக்கும் வைப்பது பண்டை வழக்கம். நுந்தா விளக்கு என்பது தூண்டா விளக்கு. அது தீண்டாவிளக்கு எனவும் படும். தீண்டுவது திரியை. திரி எரிவது எண்ணெயால். ஆகவே, நுந்தா விளக்கு அல்லது தீண்டாவிளக்கு என்பது கோழிமுட்டை அல்லது எலுமிச்சம்பழ அளவாக விருந்து பேரொளிவிடும் பெறற் கருமணியாம். அது மணி விளக்கு எனவும்படும். நுந்துதல் தூண்டு தல் (தீண்டுதல்). நுந்தா விளக்கு என்பது நந்தா விளக்கு என் றும் திரியும்.

கோயில்களில் இரவும் பகலும் எரிவது நெய்விளக்கு. அதன் திரி அடிக்கடி தீண்டப்படுவதாயினும் அவியாது எப்போ தும் எரிந்து கொண்டிருப்பதால், நந்தா விளக்கு எனப்படும். இதில் நந்துதல் கெடுதல் (அவிதல்).

'மாசூர' என்றதினால், இங்குக் குன்று விளக்கம் என்றது நுந்தா விளக்கை. மாசு தூசி. தூளி—தூசி.

"நெரிந்தன மாசுண நெற்றியே" (தக்கயாகப். கூஉச).
தூசி மேற்புறம் முழுதும் படிந்து விட்டால் மணி ஒளி தராது. மாசி லாமணி என்னும் வழக்கை நோக்குக. மாசு புறக்குற்றம்; மறு அகக்குற்றம்.

"மண்ணி அறிப மணிநலம்" (நான்மணி. கூ).
"மண்ணுறு மணியின்" (புறம். கசஎ).

குடி யென்றது இங்குச் சேரசோழ பாண்டியர் குடிகள் போல தொன்றுதொட்டுத் தொடர்ந்து வந்து தன்னுட் பிறந்தவரை விளக்கும் தொல்வரவுக் குடும்பத்தை. இருளுக்கு ஒளியை மாய்க்கும் ஆற்றலின்மையின், 'இருளடர நந்திப்போம்' என்று பரிமேல ழகர் கூறியது பொருந்தாது. இக்குறளில் வந்துள்ளது உருவகவணி.

உண்ணுழிகை என்பது தெய்வப் படிமையிருக்குங் கருவறை. கருப்பக்கிருகம் என்னும் வடசொல் வழக்கூன்றவே, இச்சொல் வழக்கு வீழ்ந்தது.

கூ0உ. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

(இ—ரை.) குடியைக் குடியாக வேண்டுபவர் — தாம்பிறந்த குடியை மேன்மேலுயரும் நற் குடியாகச்செய்தலே விரும்புபவர்; மடியை மடியாக ஒழுகல் — முயற்சியின்மையில் முயற்சியின்மை கொண்டு ஒழுகுக.

வெளிப்படையுங் குறிப்புமான எதிர்மறையின் எதிர்மறை உடன்பாடாதல் பற்றி, இன்மையின் இன்மைவேண்டும், அல்லது வறுமையின் வறுமை வேண்டும் என்று சொல்வது போல், 'மடியை மடியாக வொழுகல்' என்றார். அது இடைவிடாது முயற்சி செய்க என்று பொருள் படுவதே. முயற்சியால் தாம் உயரவே, தம் குடியு யரும் என்பது கருத்து.

மணக்குடவர் 'மடியா' என்பதைச் செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சமாகக் கொண்டு, "மடிசெய்தலே மடித்தொழுக" எனவுரைப்பர். அதுவும் பொருள் கெடாமையின் குற்ற மன்றும்.

கூ0ஙூ. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து

(இ—ரை.) மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி—அழிக்கும் இயல்புள்ள சோம்பலீத் தன்னிடங்கொண்டொழுகும் அறிவிலி பிறந்தகுடி; தன்னினும் முந்து மடியும்—அவனினும் முற்பட அழிந்து போம்.

அழிவு தருவதை உடன்கொண்டொழுகலாற் 'பேதை' என்றும், அவனுற் காக்கப்படாமையால் அவனினும் முந்துற வழியும் என்றும், கூறினர். முந்துற வழிதலாவது அவனெடு தொடர்பின்றி மறைதல்.

கூ0ச. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(இ—ரை.) மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு—சோம்பலில் வீழ்ந்து சிறந்த முயற்சி யில்லாதவராய் வாழ்வார்க்கு—குடி மடிந்து குற்றம் பெருகும்—குடியுங் கெட்டுக் குற்றமும் பெருகும்.

'உஞற்று' என்னும் சொல்வரலாறு இகூஉ-ஆம் குறளுரையிற் கூறப்பட்டது. குற்றம் மேற் கூறப்படும்.

கூ0டு. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

(இ—ரை.) நெடுநீர் மடி மறவி துயில் நான்கும் — நீட்டிக்குந் தன்மை, சோம்பல், மறதி, தூக்கம் என்னும் நான்குர்; கெடும் நீரார் காமக் கலன்—இறக்கும் நாள் நெருங்கியவர் விரும்பியேறும் மரக்கலங்களாம்.

நெடுநீர் என்பது விரைந்து செய்யக் கூடியதை நீட்டித்துச்செய்யும் இயல்பு. மடி என்பது முயற்சிசெய்யாது சும்மாயிருக்குஞ் சோம்பல். மறவி என்பது செய்ய வேண்டியதை மறந்து விடுதல். துயில் என்பது பகலுந்தூங்குதல் அல்லது தூக்க நிலையிலிருத்தல். இந் நான்கும் ஊக்க மின்மையின் வகைகளாதலின் உடனெண்ணப்பட்டன. நெடுநீர் என்னுங் காலநீட்சிபற்றிய பண்புப்பெயர் அக்காலத்தில் நிகழும் செயல்மேல் நின்றது. கெடுநீர்-இறப்பு நெருங்கிய தன்மை. நெடுநீர் முதலிய நான்கும் ஊக்கமில்லார்க்கு இன்பந்தருவனபோற் காட்டிப் பின்பு மீளாத் துன்பமாகிய அழிவைத்தருவ

தால், அவை வாழ்நாளெல்லை யடுத்தவர்க்கு இன்ப நீர்ச்செலவு நிகழ்த்துவதுபோற் காட்டி, அவர் விரும்பி ஏறியபின் அவரை நடுக்கடலில் வீழ்த்திவிடும் மரக்கலங்களுக்கு ஒப்பாகும் என்றார். 'காமக்கலன்' என்பதால் விரும்பியேறுதல் பெறப்படும். இத் தொடர்க்கு விரும்பிப்பூணும் அணிகலன்கள் என்று உரைப்பது பொருந்தாது. பொருந்த வேண்டுமாயின், எரிமருந்து கலந்த அணிகள் என்று கொள்ள வேண்டும். இக்குறளில் அமைந் துள்ளது உயர்வகவணியாம்.

கூ0கூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

(இ—ரை.) மடி உடையார்—சோம்பேறிகள்; படி உடையார் பற்று அமைந்தக் கண்ணும்—மாநிலம் முழுதுமாளும் மாபெருவேந் தரின் துணை கிட்டியவிடத்தும்; மாண் பயன் எய்தல் அரிது—அது னுற் சிறந்த பயனடைதல் இல்லை.

முயற்சியின்மையால் மாநிலமுழுதாளியரின் துணையாலும் பயனடையார் என்பதாம். உம்மை உயர்வுசிறப்பு. 'மாண்பய னெய்த லரிது' என்பதால், சிறுபயனடைதல் பெறப்படும். அதுவும் ஆவ்வேந்தரின் துணையாலேயே வருவது என்பதும் உய்த்துண ரப்படும்.

இக்குறட்குப் பரிமேலழகர் உரை வருமாறு:—
"படி உடையார் பற்று அமைந்தக் கண்ணும் — நிலமுழுது மாண்டாரது செல்வந்தானே வந்தெய்திய விடத்தும்; மடி உடை யார் மாண் பயன் எய்தல் அரிது—மடியுடையார் அதனான் மாண்ட பயனை எய்துதலில்லை.

"உம்மை எய்தாமை விளக்கிநின்றது, 'மாண் பயன்' பேரின் பம்....."

இவ்வுரை, நிலமுழுது மாண்ட அரசனின் செல்வம், அவன் இறந்தபின் சோம்பேறியான அவன் மகனுக்குப் பழவிறல் தாயமாக வந்ததைக் குறித்ததாயின் பொருந்துவதே. ஆயின், "உம்மை எய் தாமை விளக்கிநின்றது." என்று அவரே தம் உரைப் பொருத்தத் தைக் கெடுத்துக் கொண்டார்.

"மூத்தோர் மூத்தோர்க் கூற்ற மூய்த்தெனப்
பாற்ற வந்த பழவிறல் தாயம்

எய்தின மாயின் எய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே.''

என்பது (புறம். எங) இங்குக் கவனிக்கத் தக்கது.

கூ0எ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

(இ—ரை.) மடி புரிந்து மாண்ட உஞற்று இலவர்—சோம்பலை விரும்பிச் சிறந்த முயற்சி ஒன்றும் மேற்கொள்ளாத அரசர்; இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர்—அமைச்சர் கண்டித்து அறிவுரை கூறியும் அதைக்கேளாமையாற் பின்பு அவர் இகழ்ந்து கூறும் சொல்லைக் கேட்பர்.

சிறந்த முயற்சியே யன்றிச் சிறு முயற்சி பயன் படாதென்பார் 'மாண்ட உஞற்று' என்றார்.

இடி என்பது முதனிலைத் தொழிற்பெயர். 'புரிதல்' இரண்டனுள், முன்னது செய்தல்; பின்னது விரும்புதல். தன்னிடத்திற் குற்ற முண்மையால் எதிர்த்துப்பேச வாயின்மை பற்றி, 'எள்ளுஞ் சொற் கேட்பர்' என்றார். எள்ளுதல் உள்ளத் தொழிலேயாயினும், 'எள்ளுஞ்சொல்' என்றமையால் இங்கு இகழ்தலாகிய வாய்த்தொழிலைக் குறித்தது. சோம்பலால் உயர்வை யிழத்தலோடு இகழ்ச்சிச் சொற்கேட்கும் இழிவையும் அடைவர் என்பது இங்குக் கூறப்பட்டது.

''அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.'' (குறள். கூகஅ)

ஆதலின், ''இடி' யென்னும் முதனிலைத் தொழிற்பெயரான், நட்டாரென்பது பெற்றும்.'' என்னும் பரிமேலழகர் சிறப்புரைக் குறிப்புப் பொருந்துவ தன்றும். அவர் கருத்துப்படி, கழறுதலைச் செய்வாரெல்லாம் நட்டாரேயெனின், அது அமைச்சர் இன்மையையோ அவர் கடமை தவறுதலையோ உணர்த்துதல் காண்க.

கூ0அ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞென்ஞர்க்
கடிமை புகுத்தி விடும்.

(இ—ரை.) மடிமை குடிமைக்கண் தங்கின் — சோம்பல் தன்மை குடிசெய்வானிடம் அமையின்; தன் ஒன்ஞர்க்கு அடிமை

புகுத்தி விடும்—அது அவனினத்தன் பகைவர்க்கு அடிமையாக்கி விடும்.

மடிமை என்றது இங்கு அதன் விளைவாகிய கருமக்கேட்டை. குடிமை குடிசெய்யுந்தன்மை. அது இங்கு அதனையுடைய அரசனைக் குறித்தமை, 'தன்னென்னர்க்கு' என்பதனால் அறியப்படும். குடிசெய்தல் தன் குடியைச் செல்வம், இன்பம், அறிவு, ஒழுக்கம், ஆட்சி, வலிமை முதலிய எல்லாவகையிலும் மேம்படச்செய்தல். பகைவர்க்கு அடிமையாதலாவது சிறைபுகுதல் அல்லது திறை செலுத்துஞ் சிற்றரசனாதல்.

கூ0கூ. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

(இ—ரை.) ஒருவன் மடியாண்மை மாற்ற — ஓர் அரசன் தன் சோம்பல் தன்மையை நீக்கவே; குடி ஆண்மையுள்வந்த குற்றம் கெடும்—அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்களும் அவற்றுல் விளைந்த கேடுகளும் நீங்கும்.

இஃது ஓரரசன் குற்றமுந் திருத்தமும். மடியாண்மை மடியை ஆளுந்தன்மை. 'குடியாண்மை' உம்மைத்தொகை. இனி,

'குடி ஆண்மையுள் வந்த குற்றம் — நெடுங்கால மாகத் தொடர்ந்து வரும் ஒரு குடியுள்ளும் அதன் தலைவரின் ஆண்மையுள்ளும் நேர்ந்த குற்றங்களால் விளைந்த கேடுகள்; மடியாண்மை—அவற்றிற்குக் காரணியமாயிருந்த சோம்பல் தன்மையை; ஒருவன் மாற்றக் கெடும்—ஊக்கமும் பெருமுயற்சியு முள்ள ஒரு தலைவன் நீக்கியவுடன் நீங்கும்'. என்றுமாம்.

இதற்குக் கி. பி. கூ — ஆம் நூற்றாண்டு முதல் கூ—ஆம் நூற்றாண்டுவரை பல்லவர்க்கு அடங்கியிருந்த சோழர்குடியில் தோன்றிய விசயாலயன், கி. பி. அஙo போல் தஞ்சையைக் கைப்பற்றி மீண்டும் தன் குடியுயர்வை நிலைநிறுத்தியமை, நல்லெடுத்துக் காட்டாம். குடிமைக் குற்றம் ஒற்றுமையின்மையும் உட்பகையும் சேரபாண்டியரொடு சேராமையும். ஆண்மைக் குற்றம் போர் முயற்சியின்மை. இஃது ஒரு குடியின் குற்றமுந் திருத்தமும்.

கூகo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
ருஅய தெல்லா மொருங்கு.

(இ—ரை.) மடி இலா மன்னவன்—சோம்பலில்லாத அரசன்; அடி அளந்தான் தாயது எல்லாம்—கதிரவன் மூவெட்டாற் கடந்த மாநிலம் முழுவதையும்; ஒருங்கு எய்தும்—ஒருமிக்க அடைவான்.

திருமால் தன் குறள் தோற்றரவில் (வாமனவதாரத்தில்) மூவுல கத்தையும் அளந்ததாகச் சொல்லப்படுவதால், அவற்றை ஊக்க முள்ள அரசன் ஒருங்கே அடைவான் என்பது பொருந்தாது. கதிர வன் இயக்கம் கீழிருந்து மேலும் மேலிருந்து மேற்கும் மீண்டும் மேலிருந்து கீழும் ஆக மூவெட்டுப்போற் புறக்கண்ணிற்குத் தோன்றுவதால், அது மூவெட்டால் ஞால முழுவதையும் கடப்ப தாகச் சொல்லப்பட்டது. வேத ஆரியர் கதிரவனை விண்டு (விஷ்ணு) என அழைத்ததால், திருமால் மூவடியால் உலகமுழு வதையும் அளந்தான் என்றொரு கதையெழுந்தது. இதுவே, குறள் தோற்றரவுக் கதைக்கு மூலம். இதன் விளக்கத்தை என் 'தமிழர் மதம்' என்னும் நூலிற் கண்டுகொள்க. கதிரவன் நாள்தோறும் அளந்தாலும், முன்னை நிகழ்ச்சி பற்றி, 'அடியளந்தான்' என்று இறந்தகால வினையாலணையும் பெயராற் குறிக்கப்பெற்றது. உழி ஞைக்கொடி முடக்கொற்றன் (முடங்கொன்றன்) என்றும் சுடு காடு மீட்டான் என்றும் பெயர்பெற்றிருத்தல் காண்க. 'தாஅய' இசைநிறை யளபெடை. தா—தாய்—தாய. ஒ. நோ: ஆ—ஆய்—ஆய.

அதி. ௬௨—ஆள்வினையுடைமை

அஃதாவது, இடைவிடாது கருமத்தை ஆண்டு நடத்துந்திறம். இது மடியின்மையால் நேர்வதாகலின் அதன் பின் வைக்கப்பட்டது.

௬௬௧. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(இ—ரை.) அருமை உடைத்து என்று அசாவாமை வேண் டும்—ஒரு வினை செய்யுமுன் தம்மைச்சிறியவராகக் கருதி அவ்வினை தம்மாற் செய்தற்கு அரிதென்று தளராமை வேண்டும்; முயற்சி பெருமை தரும்—முயற்சியே அவ்வினையைச் செய்து முடித்தற் கேற்ற பெருமையைத் தமக்கு உண்டாக்கும்.

சிறியவராகக் கருதி யென்பது பெருமை தரும் என்பதால் வரு விக்கப்பட்டது. வினை செய்தல் என்பது அதிகாரத்தால் வந்தது. விடா முயற்சியால் அரிய வினையும் எளியவினையாம். ஆகவே, வினை

முடிப்பிற்கு ஏதுவாக மட்டு மன்றி அதன் விளைவாகவும் பெருமை உண்டாகுமென்பதாம்

கூகஉ. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(இ—ரை.) வினைக்குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தது—இன்றியமையாத வினையைச் செய்யாது விட்டவரை உலகம் போற்றாது விட்டது; வினைக்கண் வினைகெடல் ஓம்பல்—ஆதலால், எடுத்துக் கொண்ட நன்முயற்சியில் தொடர்ந்து வினை செய்யா தீருத்தலை ஒழிக.

நிறை என்பதன் மறுதலையான குறையென்னுஞ்சொல், ஒரு பொருள் அல்லது உறுப்பு இல்லாக் குறையை முதலிற் குறித்து, பின்பு அக்குறையால் ஏற்படும் தேவையையும் தேவையான பொருளையும் ஆகுபெயராக வுணர்த்திற்று. 'ஓம்பல்' என்றது நேராவாறு காத்தலை. தீர்ந்தன்று என்பது செய்தன்று என்னும் வாய்பாட்டு வினைமுற்று. செய்தனது—செய்தன்று (ஒருமை),செய்தன (பன்மை). 'உலகு' ஆகுபெயர்.

கூகந. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(இ—ரை.) வேளாண்மை என்னும் செருக்கு—எல்லார்க்கும் நன்றிசெய்தல் என்னும் பெருமிதம்; தாளாண்மை என்னும் தகைமைக் கண்ணே தங்கிற்று—விடா முயற்சி என்று சொல்லப் படும் உயர்ந்த பண்பையே நிலைக்களமாகக் கொண்டதாம்.

வெறுங்கையால் வேளாண்மை செய்தல் கூடாமையின், வேளாண்மைக்கு இன்றியமையாத பொருள் தாளாண்மையா லேயே வருதல் பற்றி, 'தகைமைக்கட்டங்கிற்றே' என்றார். பிரிநிலை யேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

கூகச. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

(இ—ரை.) தாளாண்மை இல்லாதான் வேளாண்மை—விடா முயற்சியில்லாதவன் எல்லார்க்கும் நன்றிசெய்தலை மேற்கொள்ளு தல்; பேடிகை வாள்ஆண்மை போலக் கெடும்—போருக்கு அஞ்சும்

பேடி போர்க்களத்தில் தன் கையிலுள்ளவாளைப் பயன்படுத்தல் போல் இல்செயலாம்.

பேடிக்கு வாளாண்மை இல்லாதது போல, விடா முயற்சியில்லானுக்குத் தாளாண்மையில்லை யென்பதாம். ஆண்மை ஆளுந் தன்மை. ஆளுதல் பயன்படுத்துதல். 'வாளாண்மை' யென்பதற்கு வாளாற் செய்யும் ஆண்மையென்று சிலர் உரைத்திருப்பதாகத் தெரிகின்றது. அது வேறு ஆண்மையுண்மையைக் குறிப்பதால், அது உரையன்மை அறிக. பெள்—பெண்—பேண்—பேடு—பேடன், பேடி. ஆண்டன்மையை விரும்பும் பெண் பேடன்; பெண்டன்மையை விரும்பும் ஆண் பேடி. இப்பாகுபாடு பாலுறவு பற்றியதேயன்றிப் போர்மறம் பற்றிய தன்று. பேடியருள் போர்மறம் உள்ளவரும் உளர்; இல்லாதவரும் உளர். இங்குக் குறிக்கப்பட்ட பேடி அஃதில்லாத வகையென அறிக. பேடிக்கு வாளைப்போரிலாள விருப்ப மிருப்பினும் அச்சத்தாற் கூடாமை போல, விடா முயற்சி யில்லானுக்கு வேளாண்மைமேல் விருப்பிருப்பினும் வறுமையாற் கூடா தென்பதை யுணர்த்தற்கு, இல்லை யென்னாது 'கெடும்' என்றார்.

குறள். இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(இ—ரை.) இன்பம் விழையான் வினை விழைவான் றன்கேளிர்—தனக்கு இன்பத்தை விரும்பாதவனும் வினை முடித்தலிலேயே விரும்புகின்றவன்; தன் கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண்—தன் சுற்றமாகிய பொறையின் (பாரத்தின்) வறுமையைப்போக்கி அதைத் தாங்கும் தூணாவன்.

விடா முயற்சியுடையான் மெய்வருத்தம் பாராதலின் 'இன்பம் விழையான்' என்றும், தன்னலங் கருதாது முயற்சியால் வினை முடித்துப் பெரும்பொருள் பெற்றவன் தன் கிளைஞரைப் பேணுவாதலின், 'தன்கேளிர்.....தூண்' என்றும், கூறினர்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்;
எவ்வெவர் திமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்." (நீதிநெறி. இடை).

"செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்." (வெ. வே. கூ).
என்பதால், கிளைஞரைத் தூண்போல் தாங்குதல் செல்வர் கடமை

யென்பது பெறப்படும். 'துடைத்து' என்பது வறுமையை அறவே நீக்குதலையும், 'ஊன்றுந் தூண்' என்பது நிலையாகத் தாங்குதலையும், குறிக்கும். இல்லறத்தான் ஒம்பவேண்டிய ஐம்புலத்துள் ஒக்கலும் ஒன்றுதல் காண்க (குறள். சுகூ). கேளிரைப் பொறையாக வுருவகியாமையால் இதில் வந்துள்ள அணி ஒருமருங்குருவகம்.

சுகசு. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

(இ—ரை.) முயற்சி திருவினை ஆக்கும்—விடாமுயற்சி செல்வத்தை உண்டாக்கவும் வளர்க்கவுஞ் செய்யும்; முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும்—அம்முயற்சியில்லாமை ஒருவனை வறுமைக்குட் செலுத்தி விடும்.

அரசனுக்குப் படைகுடி கூழமைச்சு நட்பரண்களும் நாடும் சிற்றரசும் செல்வமாகக் கருதப்பெறும். வறுமை அவற்றின் குறைவும் அரசிழப்புமாகும்.

சுகஎ. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
ருளுளா டாமரையி ளுள்.

(இ—ரை.) மாமுகடி மடி உளாள்—கரிய மூதேவி ஒருவனது சோம்பலின்கண் தங்குவாள்; தாமரையினுள் மடி இலான் தாள் உளாள்—திருமகள் தாளாளனின் முயற்சிக்கண் தங்குவாள்; என்ப—என்று சொல்லுவர் அறிந்தோர்.

கூரை முகட்டில் தங்குவதாகக் கருதப்படுவதால் மூதேவி முகடி எனப்பட்டாள். இனி முகடு என்னுஞ் சொற்குப்பாழ் என்னும் பொருளிருப்பதால், பாழான நிலைமையுண்டு பண்ணுபவள் முகடி யென்றுமாம். அவளது பேய்த்தன்மையாலும் வறுமையின் பஞ்சத்தன்மையாலும், அவளுக்குக் கருமை நிறம் கொள்ளப் பட்டது. திருமகள் செந்தாமரை மலர்மேல் தங்கியிருப்பதாகச் சொல்லப்படுவதால், தாமரையினுள் எனப்பட்டாள். தாமரை யென்னும் செந்தாமரைப்பெயர் இன்றுதன் சிறப்புப் பொருளிழந்து வழங்குகின்றது. வறுமையும் செல்வமும் அமைவதை, அணிவகைபற்றி, அவற்றிற்குரிய தெய்வங்கள் தங்குவதாகக் கூறினர். அக்கூற்றிலும் பண்பியின் நிலைமை பண்பின்மேல் ஏற்றப்பட்டது. முகடி சோம்பேறியின் மடியிலும், திருமகள் தாளாளனின் காலிலும் தங்குவர் என்று, வேறும் ஒரு போலிப்பொருள் தோன்றுமாறுஞ் செய்தார்.

௬௬அ. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(இ—ரை.) பொறி இன்மை யார்க்கும் பழி அன்று — மேன்மைக்கு ஏதுவாகிய ஊழின்மை ஒருவர்க்கும் குற்றமாகாது, அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி—அறியவேண்டியவற்றை யறிந்து செய்யவேண்டிய வினைகளை விடாமுயற்சியொடு செய்யாமையே குற்றமாவது

அறியவேண்டுவன நால்வகைவலி, காலம், இடம் முதலியன. ஒருவன் முற்பிறப்பிற் செய்தவினை செய்தவனுலும் அறியப்படாமையாலும், பெரும்பாலும் நல்லோர் வறியநிலையிலும் தீயோர் செல்வ நிலையிலும் இருப்பதாலும், சிலவினைகட்கு ஒரே முயற்சியும் சில வினைகட்குப் பலமுயற்சியும் சிலவினைகட்கு விடாமுயறசியும வேண்டியிருப்பதனுலும், ஊழ்பற்றியன்றி வினைபற்றியே மக்கட்குப் புகழும் பழியும் உண்டாம் என்பதாம்.

௬௬ஆ. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(இ—ரை.) தெய்வத்தான் ஆகாது எனினும் — ஒருவன் எடுத்துக்கொண்ட முயற்சி தெய்வஏற்படாகிய ஊழ்வலியால்வெற்றி பெறுது போயினும்; முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும்—அம் முயற்சிக்கு உடம்பு பட்ட பாட்டின் அளவு பயன்தரும், தராமற் போகாது.

ஒரு முயற்சியை ஒருவன் தன் வாழ்நாள் முழுதுந் தொடர்ந்தும் வெற்றிபெறுது போயின், அன்று அது தெய்வத்தானாக வில்லை யென்று துணியப்படும். ஆயினும், அது வரை அவன் பட்ட பாட்டிற் கேற்ற பயனை அடைந்தே யிருப்பான். முயற்சி வெற்றி பெற்றிருந்தால், அம்மெய்வருத்தக் கூலியோடு பெரும்பயன் அடைந்திருப்பான். ஆதலால் எவ்வகையிலும் கேடில்லை, ஆகவே, விடாமுயற்சியைக் கைவிடக் கூடாது என்பது கருத்து.

௬௬இ. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ—ரை.) உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர்—தளர்ச்சியின்றித் தாழ்வற விடாது முயல்பவர்; ஊழையும் உப்பக்கங் காண்பர்—வெல்வதற்கரிய ஊழையும் வென்றுவிடுவர்.

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.'' (குறள். கூஅ0)

என்று முன்னரே திட்டவட்டமாகச் சொல்லிவிட்டமையால், இங்கு 'ஊழையும் உப்பக்கங் காண்பர்' என்பது எதிர்மறையும்மை கொண்டதே; அல்லது ஊழென்று தவருக மக்களாற் கருதப்பட்டதை வெல்வதே. இதனால், திருவள்ளுவர் முன்னுக்குப் பின் முரண்படக் கூறினரென்று இம்மியுங் கருதற்க. முந்தின குறளையே சற்று வலியுறுத்தி விடாமுயற்சியாளரை ஊக்கினதாகவே கொள்க.

உப்பக்கம் பின்பக்கம் அல்லது முதுகு. உப்பக்கங்காணுதல் புறங்காணுதல், அதாவது வெல்லுதல். தாழ்வறுதலாவது சூழ்ச்சியிலும் வலிமுதலியன வறிதலிலும் வினைசெய்வதிலுங் குற்றங் குறையின்மை. பல முறை தவறியபின் ஒரு வினையில் வெற்றி பெறுவதும் உயிரொடுங்கியிருந்தவர் இடுகாட்டிற் புதைக்கும் போது உட்செலுத்திய மருந்தால் மீண்டும் எழுந்து இயங்குவதும், தவருகக் கணிக்கப்பட்ட பிறப்பியத்தில் (சாதகத்தில்) குறித்த காலங் கடந்து ஒருவர் வாழ்வதும், விடாமுயற்சியின் வினைவும் அறியாமையின் நீக்கமுமேயன்றி ஊழைவென்றதாகா. ஊழை ஒருவரும் வெல்ல முடியாது. வெல்லப்படுவது ஊழாகாது. ''பணத்தைக் கண்டாற் பிணமும் வாயைத்திறக்கும்.'' என்னும் பழமொழி பணத்தின் பெருமையை உணர்த்துவது போன்றே, ''ஊழையும்..... உஞற்றுபவர்.'' என்னுங் குறளும் விடாமுயற்சியின் வலிமையை உணர்த்துகின்றதென அறிக. ஈரிடத்தும் உம்மை எதிர்மறையென்றும் அறிக.

'சாத்தன் வருதற்கு முரியன்' என்பது 'வராமைக்கும் உரியன்' என்று பொருள்படுவது போன்றே, 'சாத்தன் வராமைக்கும் உரியன்' என்பது 'வருதற்கும் உரியன்' என்று பொருள்படுவதால், இவ்விரண்டும் எச்சவும்மைகளேயன்றி எதிர்மறையும்மையும் உடன்பாட்டும்மையும் என்றுகா. 'பிணமும் வாயைத்திறக்கும்.' 'ஊழையும் உப்பக்கங் காண்பர்' என மேற்காட்டியனவே உண்மையான எதிர்மறையென வுணர்க. இவை எச்சப் பொருளீ அடிப்படையாகக் கொண்டனவேனும், பிணம் வாயைத்திறக்காது, ஊழை உப்பக்கங் காண முடியாது, என்னுங் குறிப்பினவாதலால், ''பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்'' (புறம், உ) என்பவைபோல எதிர்மறையும்மையேயாம். ''எதிர்மறை யெச்சம் எதிர்மறை முடிபின'' (தொல். எச். கூக) என்றது ஏகார வேற்காரங்கட்கேயன்றி உம்மைக்கன்று.

ஊழ் என்பதும் தெய்வ ஏற்பாடு என்பதும் ஒன்றேயாதலின், மாந்தன் முன்பு தவறு செய்து பின்பு திருத்திக் கொள்வது போல் இயற்கையான முற்றறிவுள்ள இறைவனுஞ் செய்யானென்றும், அவன் அங்ஙனஞ் செய்ததாகக் கூறுவதெல்லாம் மாந்தன் கட்டுக் கதையும் தற்குறிப்பேற்றமுமே யென்றும், அறிந்து கொள்க.

"அன்றெழுதினவன் அழித்தெழுதான்." என்னும் பழமொழியும்,

"உறற்பால நீக்கல் உறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவும் அன்னவாம் மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனுள்
சிறப்பிற் றணிப்பாரு மில்."

என்னும் நாலடிச் செய்யுளும் (கo சு) இங்கு நோக்கத்தக்கன.

அதி. கூஙு—இடுக்கணழியாமை

அஃதாவது, ஆள்வினையில் ஈடுபட்டவன், இயற்கையாலேனும் தெய்வத்தாலேனும் இருவகைப்பகைவராலேனும் வினைக்கு இடையூறுகத் துன்பங்கள் நேர்ந்த விடத்து, அவற்றுல் மனங் கலங் காமை. அதிகார முறையும் இதனுல் விளங்கும்.

கூஉக. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(இ—ரை.) இடுக்கண் வருங்கால் நகுக—ஒருவன் வினையாற் றும் போது இடையில் தடைபோலத் துன்பம் வரின் அதற்கு வருந் தாது அதை எள்ளி நகையாடுக; அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்—அதனை மேன்மேல் நெருங்கி மேற்கொள்வதற்கு அது போன்ற வழி வேறென்றுமில்லை.

வினை வெற்றிக்கு அஞ்சாமையொடு கூடிய மனவுறுதி இன்றி யமையாததாதலின், எதிர்த்து வரும் பகைவினை எள்ளி நகையாடு வது போன்றே வினைக்கு இடையூறுக வரும் துன்பத்தையும் பொருட் படுத்தற்க என்பார் 'நகுக' என்றார். அதனுல் முயற்சிக் குத் தடையின்மையால், வினை வெற்றியாக முடியும் என்பதாம். அடுத்தூர்தல் என்பது, ஓர் அடங்காக் குதிரையை நெருங்கி யேறி யடக்குதல் போல்வதாம்.

கூஉஉ. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

(இ—ரை.) வெள்ளத்து அனைய இடும்பை—வெள்ளம்போல் ஏராளமாக வந்த துன்பங்களெல்லாம்; அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்—அறிவுடையவன் அவற்றுல் ஒன்று மில்லை யென்று தன் மனத்தில் நினைத்த மட்டில் நீங்கி விடும்.

இன்பமும் துன்பமும் அவரவர் எண்ணத்தைப் பொறுத்தன வென்றும், ஒரு துன்பத்தை இன்பமென்றெண்ணின் அதனுல் ஒரு தொல்லையுமில்லை யென்றும், உண்மை யறிந்தவனை 'அறிவுடையான்' என்றும், அவன் துன்பத்தை வெல்லும் விரகு (உபாயம்) ஒரு நொடிநேர நினைவே யென்பார் 'உள்ளக்கெடும்' என்றும், கூறினர்.

கூஉந. இடும்பைக் கிடும்பை படுப்ப திடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(இ—ரை.) இடும்பைக்கு இடும்பை படாதவர்—துன்பம் வருங்கால் துன்பப் படாதவர்; இடும்பைக்கு இடும்பை படுப்பர்—அத்துன்பத்திற்கே துன்பஞ் செய்வர்.

துன்பத்தின் நோக்கமே வருத்துதலாதலின், அத்துன்பத்திற்கு வருந்தாதவர் அதன் நோக்கத்தைத் தோற்கடித்தலால் அத்துன்பத்தையே வருத்துவர் என்றார். இதனுல் துன்பத்தால் தடையுறுத வினை இனிது முடியும் என்பதாம். இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வரு நிலையணி. வருகின்ற இரு குறளிலும் துன்பம் துன்பப்படும் என்பதற்கு இவ்வாறே உரைக்க.

கூஉச. மடுத்த வாயெல்லாம் பகடன்ன ருற்ற
விடுக்கண் ணிடர்ப்பா டுடைத்து.

(இ—ரை.) மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னன்—தடை ஏற்பட்ட விடமெல்லாம் பொறைவண்டி யழுந்தாது அதை இழுத்துச் செல்லும் எருதுபோல் எடுத்துக் கொண்ட வினையை விடா முயற்சியுடன் வெற்றியுறச் செய்து முடிக்க வல்லவனை; உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து—அடைந்த துன்பம் தானே துன்பப் படுதலை யுடையதாம்.

'மடுத்தவாயெல்லாம்' என்பன மேடு, பள்ளம், மணல், சேறு முதலியனவாம். பகட்டின் தொழிலை

''நிரம்பாத நீர்யாற் நிடுமணலு ளாழ்ந்து
பெரும்பார வாடவர்போற் பெய்பண்டந் தாங்கி
மருங்கொற்றி முக்கூன்றி தாடவழ்ந்து வாங்கி''

என்பதனாலும் (சீவக. உஎஅச), பகடன்னான் இயல்பை.

''கழியுப்பு முகந்து கன்னுடு மடுக்கும்
ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்''

என்பதனாலும் (புறம். கூ), அறிக.

கூஉரு. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(இ—ரை.) அடுக்கி வரினும்—இடைவிடாது துன்பங்கள் மேன்மேல் தொடர்ந்து வரினும்; அழிவு இலான்—மனம் கலங்காதவன்; உற்ற இடுக்கண் இடுக்கண் படும்—அடைந்த துன்பங்களே துன்பப்பட்டுப்போம்.

துன்பம் துன்பப்படும் என்பதில் ஆட்படையணி குறிப்பாக அமைந்துள்ளது. அடுக்குதல் என்பது ஒருவகைத் துன்பமும் பல வகைத்துன்பமும் தழுவும்.

கூஉகூ. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
ரும்புத றேற்ரு தவர்.

(இ—ரை.) பெற்றேம் என்று ஓம்புதல் தேற்ருதவர்—செல்வக் காலத்தில் யாம் இது பெற்றேமென்று மகிழ்ந்து கையழுத்தம் கொண்டு அதைக் காத்துக் கொள்ளுதலே அறியாதார்; அற்றேம் என்று அல்லல் படுபவோ—வறுமைக் காலத்தில் யாம் செல்வத்தை யிழந்தேமென்று துயரப்படுவரோ? படார்.

''அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்'' (நாலடி. உ)

இவ்வுலகத்தில், இன்பமுந் துன்பமும் ஒப்பக் கொள்பவர் செல்வக் காலத்தில் மகிழ்ந்து அதை இறுகப் பற்றுமையால், வறுமைக்காலத்தில் வருந்துவதும் செல்வமின்மையை உணர்வதும் இல்லை யென்ரூர். 'தேற்றுதவர்' தன்வினைப்பொருளில் வந்த பிறவினைச்சொல். தேற்றுதல் தெளிந்தறிதல்.

கூஉஎ. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாரூக் கொள்ளாதா மேல்.

(இ—ரை.) மேல்—மேலோர்; உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று—இவ்வுலகத்தில் இருதிணை யுயிரோடு கூடிய உடம்புகளும் துன்பம் என்னும் வேலுக்கு இலக்கென்று தெளிந்து; கலக்கத்தைக் கையாருக் கொள்ளாது—தமக்குத் துன்பம் வந்த விடத்து மனங் கலங்குவதை ஒழுக்க நெறியாகக் கொள்ளார்.

இலக்கு—குறி. இலக்கு—இலக்கம். போர்மறவர் வேலெறிந்து பழகுவதற்குக் குறிமரமாக நிறுத்தப்படும் கம்பம் இலக்கம் எனப் படும்.

"..... வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம்————"

என்பது புறம் (கக). உடம்பு துன்பத்திற்கு இத்தகைய இலக்கம் என்றது அதன் இயல்பு நோக்கி. 'உடம்பு' வகுப்பொருமை. 'மேல்' ஆகுபொருளது; சொல்லால் அஃறிணையாதலால் அத்திணைமுடிபு கொண்டது. 'ஆம்' அசைநிலை. 'கலக்கத்தைக்——கொள்ளாது' என்றது இயல்பென்றறிந்து கலங்காது என்பதாம். இடும்பையை வேலென்று உருவகியாமையால் இங்குள்ளது ஒரு மருங்குருவகம்.

கூஉஅ. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

(இ—ரை.) இன்பம் விழையான் — இன்பத்தைச் சிறப்பாக விரும்பாது; இடும்பை இயல்பு என்பான்—இவ்வுலக வாழ்விலும் வினை முயற்சியிலும் துன்பம் நேர்வது இயல்பென்று தெளிந்திருப் பவன்; துன்பம் உறுதல் இலன்—துன்பம் வந்தவிடத்துத் துன்ப முறுத லில்லை.

இன்பத்தைச் சிறப்பாக வீரும்பாமையால் இன்பம் இல்லாவிடத் தும், ஆள்வினைஞன் துன்பமுறுதல் இல்லை யென்றார்.

கூஉக. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

(இ—ரை.) இன்பத்துள் இன்பம் விழையாதான்—இயற்கை யாகவோ தன் முயற்சியாலோ தனக்கு இன்பம் வந்த விடத்து அதை நுகர்ந்தும் உள்ளத்தால் இன்புறுதவன்; துன்பத்துள் துன்

பம் உறுதல் இல்ன—அவ்விரு வழியிலும் தனக்குத் துன்பம் வந்த விடத்து அதை நுகர்ந்தும் மனத்தால் துன்பமுறுவதில்லை.

இன்பமுந் துன்பமும் ஒன்றாகக் கொள்பவன் இன்பத்தால் இன்புறுதலும் துன்பத்தால் துன்புறுதலும் இல்லை என்பதாம்.

௬௨௦. இன்னுமை யின்ப மெனக்கொளி னுகுந்தன்
னென்னுர் விழையுஞ் சிறப்பு.

(இ—ரை.) இன்னுமை இன்பம் எனக்கொளின்—ஒருவன் தன் வினைமுயற்சியால் வருந்துன்பத்தைத் தனக்கு இன்பமாகக் கருதுவானுயின்; தன் ஒன்னுர் விழையும் சிறப்பு ஆகும்—அதனுல் அவன் பகைவரும் அதனை விரும்பத்தக்க சிறப்பு உண்டாகும்.

இறைவனுல் தடுக்கப்படாத எல்லா வினைக்கும் துன்பம் ஒன்றே தடையாதலின், அத்துன்பத்தை இன்பமாகக் கொள்பவன் தொடங்கிய வினை யெல்லாம் வெற்றியாக முடியும் என்பது கருத்து. ஒன்னுர் விழைதலாவது பாராட்டிப்பகை தீர்தல். 'கொளின்' என்பது கொள்வதன் அருமை யுணர்த்திநின்றது, துன்பத்தை இன்பமாகக் கொள்வது ஒகத்தால் ஒதி (ஞானம்) பெற்ற துறவியர் இயல்பாதலின், அவ்வுயர்நிலை யடைந்தமை பற்றி 'ஒன்னுர் விழையுஞ் சிறப்பு' உண்டாகும் எனினுமாம்.

அரசியல் முற்றிற்று.

2. உறுப்பியல்

இது காறும் அரசன் இலக்கணங்களையும் கடமைகளையும் வினை செய்யும் முறைகளையும் கூறியவர், இனி அரசியலின் ஏழுறுப்புக் களையும் சதி அதிகாரத்தால் கூறுமாறு எடுத்துக்கொண்டு, அவற் றுள் ஆட்சிக்கு இன்றியமையாத் துணையும் அரசனுக்கு அடுத்தபடி யாகச் சிறப்பு வாய்ந்தவனுமான அமைச்சன் இயலையுஞ் செயலை யும் பத்ததிகாரத்தாற் கூறத் தொடங்கி, முதற்கண் அமைச்சிலக் கணங் கூறுகின்றார்.

அதி. கூசு — அமைச்சு

அஃதாவது, அமைச்சனின் இலக்கணமுங் கடமையும்.

கூஙக. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினை யுமாண்ட தமைச்சு.

(இ—ரை.) கருவியும்—வினைக்கு வேண்டுங் கருவிகளும்; கால மும்—அதற்கேற்ற காலமும், செய்கையும்—அதைச் செய்யும் வகை யும்; செய்யும் அருவினையும்—அவ்வகையிற் செய்யும் அரிய வினை யும்; மாண்டது அமைச்சு — வெற்றிபெற எண்ணும் ஆற்றலிற் சிறந்தவனே அமைச்சனுவான்.

'கருவிகள்' படையும் படைக்கலமும் பொருளும் துணையும். 'காலம்' தொடங்கி முடிக்குங் காலங்கள். 'செய்கை' நால்வகை ஆம்புடையும் (உபாயமும்), தொடங்கும் வகையும், கையாளும் விரகும் (தந்திரமும்), இடையூறு நீக்கும் வழியும் ஆம். பெரும் பயன் தரும் சிறந்த வினையென்பார் 'அருவினை' என்றார். 'அமைச்சு' சொல்லால் அஃறினையாதலின் அத்தினை முடிபு கொண்டது. இதை பின்னுங் கொள்க.

"இவை யைந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கங்க மென்ப." என்று பரிமேலழகர் கூறுவதால், வடநூலுக்குத் தமிழ்நூல் முதனூ லானமைதெளிவாம். இக்குறளிற் கூறப்பட்டவை நான்கேயன்றி ஐந் தல்ல. செய்கையைத் தொடக்கமும் முடிவும் என இரண்டாக வட நூலார் பிரித்தது வீணை பிற்கால விரிவுபாடாகும். திருக்குறளை வட நூல் வழியதாகக் காட்டல் வேண்டியே, "செய்கை' எனவே, அது தொடங்கு முபாயமும் இடையூறு நீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின." என்று பரிமேலழகர் தம் நச்சுக் கருத்தை வெளியிட் டுள்ளார் என்க.

கூங.உ. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினை யோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(இ—ரை.) வன்கண்—மனவுறுதியும்; குடி—நற்குடிப் பிறப்பும்; காத்தல்—குடிகளைக் காத்தலும்; கற்றறிதல்—அறநூல்களையும் அரசியல் நூல்களையும் கற்று வேண்டுவன விலக்குவன அறிதலும்; ஆள்வினை யோடு—முயற்சி யோடுகூடிய; ஐந்து உடன் மாண்டது அமைச்சு — ஐங்கூறுகளும் ஒருங்கே சிறப்பாக அமைந்தவனே அமைச்சனுவான்.

'குடி' யென்றது வேளாண்குடியை, இதை,
''நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்
அந்த வரசே யரசு.'' (ஔவையார் தனிப்பாடல்)

என்பதனுல் அறிக. 'குடிகாத்தல்' என்பதனை ஒன்றுக்கிக் 'கற்றறிதல்' என்பதைக் கற்றலும் அறிதலும் என இரண்டாகப் பகுத்தல் ஒரு சிறிதும் பொருந்தாது. கற்றலே அறிதலாதலின், அது இரண்டாகாமை அறிக. 'ஐந்தும்' என்னும் முற்றும்மை தொக்கது. ஆள்வினையோடு கூடி என எச்சமாக்கின், இவ்வைந்தும் எனச்சுட்டு வருவிக்க.

பரிமேலழகர் முந்தின குறளில் நாற்கூற்றை ஐங்கூருக்கிய குற்றத்தை நிலைநிறுத்தவே, இக்குறளில் ஐங்கூற்றை நாற்கூருக்கிக், ''குடிகாத்தல்—குடிகளைக் காத்தலும்'' என்று உரை கூறினார் மேலும், மேற்குறளிற்கும் இதற்கும் முடிபோட்டு, ''மேற்சொல்லிய அவ்வங்கங்களைந்துடனே திருந்தவுடையானே அமைச்சனுவான்' என்றும், ''ஆவ்வைந்தெனச் சுட்டு வருவிக்க. இந்நான்களையும் மேற் கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையுமிவற்றோடு கூடியே மாட்சிமைப் படவேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னும் தொகை பெறுதற்கும்.'' என்றும், ''ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்.'' என்னும் பழமொழியை மெய்ப்பித்தார். மேற்குறள் ஒழுங்காக எண்ணும்மை பெற்றுத் தனியாக முடிந்து நிற்பதையும், இவ்வதிகாரத்தின் முதலைந்து குறள்களும் அமைச்சனின் வெவ்வே றிலக்கணத்தைக் கூறித் தனித்தனி முடிந்து நிற்பதையும் நோக்குக.

கூங.ங. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

(இ—ரை.) பிரித்தலும்—போர் வந்தவிடத்துப் பகைவரின் துணைவரை அவரினின்று பிரித்தலும்; பேணிக்கொளலும் — தம் துணைவரைத் தம்மினின்று பிரியாவாறு இன்சொல்லாலும் கொடையாலும் பேணிக்கொள்ளுதலும்; பிரிந்தார்ப் பொருத்தலும் — முன்பு தம்மினின்றும் தம் துணைவரினின்றும் பிரிந்து போனவரைத்தேவையாயின் திரும்பவும் சேர்த்துக் கொள்ளுதலும்; வல்லது அமைச்சு—வல்லவனே அமைச்சனுவான்

பிரித்தலுள், பகைவரின் துணைவரை ஒருவரோடொருவர் கூடாவாறு வேறுபடுத்தலும்; பேணிக்கொளலுள், புதிதாகத் தமக்கு நட்பாக வருபவரைப் போற்றிக் கொள்ளுதலும்; பிரிந்தார்ப் பொருத்தலுள், உண்மை யன்பில்லாதவரிடத்தில் தாமும் அன்புள்ளவர் போல் நடித்தலும்; அடங்கும். இனி, இரசியமும் சீனமும் போலப் பகைவர் தாமாகப் பிரிந்துபோம் போது அப்பிரிவினையை ஊக்குதலும், பிரித்தலுள் அடங்கும். இங்ஙனம் அவ்வப்பொழுதை நிலைக்கேற்றவாறும், சிலவற்றை மறைவாகவும் சில வற்றைவெளிப் படையாகவும், செய்யவேண்டியிருத்தலின், 'வல்லது' என்றார்.

கூஙூச. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(இ—ரை.) தெரிதலும்—ஒரு வினையைச் செய்யும் வகைபலவாகத் தோன்றின் அவற்றுட் சிறந்ததை அல்லது முழுவாய்ப்பாகவுள்ளதை ஆராய்ந்து அறிதலும்; தேர்ந்து செயலும்—அங்ஙனம் அறிந்தபடி செய்யுங்கால் வெற்றிக் கேதுவான வழிகளைக் கையாளுதலும்; ஒருதலையாச் சொல்லலும்—சிலரைப் பிரித்தல் பேணுதல் பொருத்தல் பற்றி இன்னதே செய்யத்தக்க தென்று திட்டவட்டமாகச் சொல்லுதலும்; வல்லது அமைச்சு—வல்லவனே அமைச்சனுவான்.

ஐயுறவாகவும் கவர்படவும் சொல்லின் வெற்றியின்மையொடு கேடாகவும் முடியுமாதலின், 'ஒருதலையா' என்றார்.

கூஙஎ. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

(இ—ரை.) அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான்—அரசியலறங்களை யறிந்து தனக்குரிய கல்விநிறைந்து அடங்கிய சொல்லையுடையவனுய்; எஞ்ஞான்றும் திறன் அறிந்தான்—எக்காலத்திற் கேற்பவும் வினைசெய்யுந் திறங்களை அறிந்தவன், தேர்ச்சித் துணை—அரசனுக்குச் சூழ்ச்சித் துணையாவான்.

இயற்கையால் தட்பவெப்பநிலை வேறுபட்டகாலங்களும், அரசனது செல்வநிலை வேறுபட்ட காலங்களும், பகையரசன் முன்னறிவிப்பின்றித் திடுமென்று வந்து தாக்குங்காலமும் உட்பட, 'எஞ்ஞான்றும்' என்றார். 'சொல்லான்' என்பதன் ஈற்றை ஒடுவுருபின் பொருளதாகிய ஆனுருபாகக் கொண்டு உரைப்பினும் பொருள் சிதையாதாம்.

கூகூசூ. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

(இ—ரை.) மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு—இயற்கையான நுண்மதியைச் செயற்கையான நூலறிவோடு உடைய அமைச்சர்க்கு; அதிநுட்பம் முன் நிற்பவையா உள—சூழ்ச்சிக் கெட்டாத மிக நுண்ணிய செய்திகளாக எதிர்நிற்பவை எவை உள? எதுவுமில்லை.

மதிநுட்பம் இயற்கைப் பேரறிவின் முற்கூறப்பட்டது. நுண்மதியும் பரந்த நூலறிவு முடையார்க்குச் சூழ்ச்சியால் வெல்ல முடியாத சிக்கலான நிலைமை எதுவுமில்லை யென்பது கருத்து. 'நூல்,' 'அதிநுட்பம்' என்பன ஆகு பொருளன. 'அதினுட்பம்' என்று பாடங்கொண்டு, ''அதனினும் நுண்ணியவாய் மாற்றாரால் எண்ணப்பட்டு எதிர்நிற்கும் வினைகள் யாவுள?'' என்றுரைப்பர் மணக்குடவர்.

கூகூஎ. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

(இ—ரை.) செயற்கை அறிந்தக் கடைத்தும் — நூலறிவால் வினை செய்யுந் திறங்களை அறிந்த விடத்தும்; உலகத்து இயற்கை அறிந்து செயல்—உலகியலை—அறிந்து அதனொடு பொருந்தச் செய்க.

பலசெய்திகளில் உலகியலும் நூலியலும் வேறு பட்டிருப்பதால், உலகியலொடு பொருந்தாதவற்றைச் செய்யற்க; செய்யின் உலகம் பழிக்கும் என்பதாம். 'கடைத்து' என்பதில் 'து' முதனிலைப் பொருளீறு (பகுதிப்பொருள் விகுதி). ''பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது.'' என்னும் பழமொழியும்,

''உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.'' (கசஅ)

என்னுங் குறளும், இங்குக் கவனிக்கத் தக்கன.

கூஙூஅ. அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(இ—ரை.) அறிகொன்று அறியான் எனினும்—அரசன் தன் அமைச்சர் அறிந்து கூறியவற்றை அழித்துத்தானும் அறியாதவனே யாயினும்; உறுதி கூறல் உழையிருந்தான் கடன் — அக்குற்றம் நோக்கி அவனை அவன் விருப்பம் போல் விட்டு விடாது அவனுக்கு நன்மையான வற்றை எடுத்துச் சொல்லுதல் அமைச்சன் கடமை யாம்.

அரசனது வெறுப்பைத் தேடிக் கொள்வதாயிருப்பினும், அவனுக்கு ஆக்கமானதைச் சொல்வதே அமைச்சன் கடமை என்பதாம். 'அறி' முதனிலைத்தொழிலாகுபெயர். அறிகொல்லுதலாவது, அறிவுரையைக் கொள்ளாததுடன் பழித்துங் கூறுதல். அரசனருகிலிருப்பதால் அமைச்சன் 'உழையிருந்தான்' எனப்பட்டான். அமைச்சன் உறுதி கூருவிடின் அரசன் இறுதியடைவதற்கு அமைச்சனையே உலகம் பொறுப்பாளியாகக் கொள்ளுமாதலின், 'கூறல் கடன்' என்றார்.

'''உழையிருந்தான்' எனப் பெயர் கொடுத்தார், அமாத்தியர் என்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின்.'' என்றார் பரிமேலழகர். அமைச்சன், உழையிருந்தான் என்னும் இருபெயரும் தமிழ்ச்சொல்லே யென்பதைப் பின்னிணைப்பிற்காண்க.

கூஙூகூ. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

(இ—ரை.) பழுது எண்ணும் மந்திரியில்—நன்மை செய்கிறவன்போல் அருகிலிருந்து கொண்டு தீமையை எண்ணும் அமைச்சன் ஒருவனில்; பக்கத்துள் ஓர் எழுபது கோடி தெவ் உறும்—அரசனுக்குப் பக்கமாகவே எழுபது கோடிப் பகைவர் அமைவர்.

புறப்பகைவர் பலராயினும் அவருக்குத் தப்பமுடியும். அகப் பகைவராயின், அவருள்ளும் சூழ்ச்சித்துணையாயிருக்கும் அமைச்சனே விழ்ச்சித்துணையாயிருப்பின், ஒருவனே யாயினும் தப்ப முடியாதாம். ஆதலால் 'பக்கத்துள்தெவ் எழுபது கோடியுறும்' என்றார். ஏழு என்பது நிறைவான எண்ணும் கோடி என்பது

பேரெண்ணுமாதலால், எழுபது கோடி யென்றது உண்மையில் அதனினும் மிகப் பெரிய தொகையையே. அதனால் அழிவிற்குத் தப்ப முடியாது என்னும் உண்மையைக் குறித்தார். அமைச்சன் என்றும் அரசனுக்குப் பக்கமாகவே யிருப்பவனுதலாலும், பழு தென்னும் மந்திரியால் வருங்கேட்டிற்குத் தப்பமுடியா தென் பதையே ஆசிரியர் வலியுறுத்த விரும்புவதாலும், 'பக்கத்துள்தெவ்' என்றே குறளிற் சொற்றொடர் நிற்றலாலும், 'பக்கத்துள்' என்னுஞ் சொல் 'தெவ்' என்பதையே தழுவுவதாம். பகைவர் மாபெருந் தொகையராயினும், சேய்மையில் நிற்பவரினும் அண்மையில் நிற்ப வரால் அழிவு உறுதியாதலே எண்ணிக் காண்க. இதனால், அரசன் விழிப்பாயிருந்து ஒற்றர் வாயிலாக உண்மை யறிந்து, ஐயுறவிற்கிட மான அமைச்சனை உடனே விலக்கவேண்டு மென்பது கூறப்பட் டது.

'எழுபது கோடியுறும்' என்பதற்கு எழுபது கோடிமடங்கு நல்ல ரென்றுரைப்பது பொருந்தாது. இனி, ''எழுபது கோடி தலை'' என் றும் ''எழுபது கூறு தலை'' என்றும், பண்டை யுரையாசிரியன்மார் கொண்ட பாடமும் பொருந்துவன வாகா.

௯௱0. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(இ—ரை.) திறப்பாடு இலாதவர்—வினையைச் செய்து முடிக் கும் திறமையில்லாதவர்; முறைப்படச் சூழ்ந்தும்—செய்யவேண்டிய வினைகளை ஒழுங்குபட எண்ணிவைத்தும்; முடிவிலவே செய்வர்— செய்யுங்கால் முற்றுப் பெருதனவாகவே விடுவர்.

திறப்பாடாவது, வந்த வந்த இடையூற்றை உடனுடன் விலக் குதலும் ஆள் வினையில் உறுதியாயிருத்தலுமாம். 'இலாஅ' இசை நிறையளபெடை. திறப்பாடிலாதவர் பழுதெண்ணுவாரைப்போல் தண்டனைக்குரியவ ரல்லரேனும் விலக்கப் படவேண்டியவரே என் பது கருத்தாம்.

அதி. ௯௬—சொல்வன்மை

அஃதாவது, அமைச்சன் தன் சூழ்ச்சியை,அரசனுக்கு எடுத்துச் சொல்வதில் வல்லவனுதல். மேற்கூறிய அமைச்சிலக்கணங்களுள் ஒன்றான 'ஒருதலையாச் சொல்லலும் வல்லது' (௬௫) என்றதனை விரித்துக் கூறுவதால், இது அமைச்சின் பின் வைக்கப் பட்டது.

கூசூந. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

(இ—ரை.) நாநலம் என்னும் நலன் உடைமை — நாநலம் என்று அறிவுடையோரால் உயர்வாகச் சொல்லப்படும் நன்மை அமைச்சர்க்குச் செல்வம் ஆவதாம்; அந்நலம் யா நலத்து உள்ள தூஉம் அன்று—அந்நன்மை வேறு எவ்வகை நற்பேறுகளுள்ளும் அடங்காது தனிப்பட்டதாம்.

நாவின் நலம் நாநலம். அது நாவின் நன்மையும் வன்மையுங் கலந்ததாம். நன்மை பிறருக்கு நன்மை செய்வதும் வன்மை பிறரை வயப்படுத்துவது மாகும். இப்பேறு தனிப்பட்டதாதலின், 'யாநலத்துள்ளதூஉமன்று' என்றார். 'உள்ளதூஉம்' இன்னிசையள பெடை.

கூசூஉ. ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(இ—ரை.) ஆக்கமும் கேடும் அதனுல் வருதலான்—தன் அரசனுக்கும் அவன் அரசுறுப்புக்கட்கும் மேம்பாடும் அழிவும் தன் சொல்லால் வருமாதலால்; சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் —அமைச்சன் தன் சொல்லில் தவறு நேராவாறு போற்றிக்காக்க.

"முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே."
(தொல். கிளவி. கூக)

என்பதால், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சொல்தவறுபோலாது அமைச்சன் சொல்தவறு நாடு முழுவதற்கும் கேடு விளைக்குமாதலால், 'காத்தோம்பல் சொல்லின்கட்சோர்வு' என்றார். "ஒருசொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்." "நாவில் பிறக்கும் நன்மையும் தீமையும்." என்பன பழமொழிகள்.

கூசூந. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(இ—ரை.) கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் — நண்பராயிருந்து தாம் சொன்னதை ஏற்றுக்கொண்டவர் பின்பு தம்மைவிட்டுப் பிரியாவாறு வயப்படுத்தும் தன்மைகளை விரும்பித்தழுவி; கேளாரும் வேட்ப மொழிவது—பகைவராயிருந்து தம் சொல்லை ஏற்றுக் கொள்ளாதவரும் பின்பு அப்பகைமை நீங்கி நட்பை விரும்பும் வண்ணம் சொல்வதே; சொல்லாம்—அமைச்சர்க்குரிய சொன் முறையாம்.

கேட்டார்ப் பிணிக்குந் தகைகள்,
''சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகமிலி யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல்————எனும் பத்தே.'' (நன். பொதுப்பாயிரம், கூ)

அவாவுதல் கேட்பாருள்ளத்தை இறுகப் பிணிக்க வேண்டுமென்னும் நோக்கத்தைச் சிறப்பாகக் கொள்ளுதல். கேட்டல் என்னும் வினை ஏற்றுக் கொள்ளற் பொருள் கொள்வதை, சொன்ன சொற் கேளாதவன் என்னும் வழக்கு நோக்கி யுணர்க. 'அவாய்..... மொழிவது' என்று முடியும். 'கேட்டார்,' 'கேளார்' என்பவற்றிற்கு, வினாவினார் வினாவாதார் என்று மணக்குடவரும் பரிப்பெருமாளும்; நூல் கேட்டார் கேளாதார் என்று காலிங்கரும்; உரைப்பர். ''கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார் எனினும் அமையும்; சொல்லக் கேட்டார் எனினும் அமையும்,'' என்றும் உரைப்பர் பரிப்பெருமாளர். 'தகையவாய்' என்பதற்கு, தகுதியையுடையவாய் என்றும், பண்புகளை யுடையவாய் என்றும், இயல்பினை யுடையவாய் என்றும் உரைப்பின், 'மொழிவன' என்னும் பாடங்கொள்க. 'கேளாரும்' இறந்தது தழுவிய எச்சவும்மை. 'ஆம்' பிரித்துக் கூட்டப்பட்டது

கூசூ. திறனறிந்து சொல்லுக சொல்லி யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

(இ—ரை.) சொல்லுந்திறன் அறிந்து சொல்லுக — சொல்ல வேண்டியதைச் சொல்லும் பொழுது தம் நிலைமையும் கேட்போர் நிலைமையும் செய்தியின் நிலைமையும் அறிந்து அவற்றிற் கேற்பச் சொல்லுக; அதனின் வேறு அறனும் பொருளும் இல்—அங்ஙனஞ் சொல்வதினுஞ் சிறந்த அறவினையும் பொருள்வினையும் இல்லை.

அறியவேண்டிய திறங்களாவன: குடிப்பிறப்பு, இயல்பு, கல்வி, அறிவு, ஒழுக்கம், செல்வம், அகவை (வயது), மனப்பான்மை முதலியவற்றுள் ஏற்படுந் தகுதி வேறு பாடுகள். அவற்றை யறிந்து சொல்லுதலாவது, அவற்றுள் தமக்கும் கேட்போர்க்குமுள்ள ஏற்றத்தாழ்வுகளையும் வேற்றுமைகளையும் அறிந்து அவற்றிற்குரிய மரபுப்படி சொல்லுதல். அது உலகத்தோடொட்ட வொழுகலையும் கேட்போர்க் கினிமையையும் பயத்தலால் அறவினையாயிற்று; கேட்போர்கு வினாவகி வினை முடிவதாற் பொருள்வினையாயிற்று. அறனும் பொருளுமாகிய வினைவுகள் அவற்றை வினைக்கும் வினையின் மேல் நின்றன. 'அதனினூஉங்கு' இன்னிசை யளபெடை.

கூசிடு. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(இ—ரை.) சொல்லைப் பிறிது ஓர் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து—தாம் சொல்லக் கருதிய சொல்லை வெல்லக்கூடிய வேறொரு சொல்லில்லாமை யறிந்து; அச்சொல்லைச் சொல்லுக—பின்பு அச்சொல்லைச் சொல்லுக.

'பிறிதோர் சொல்' பகைவரின் மறுப்புச்சொல். சொல் என்பது தனிச்சொல்லிற்கும் கூற்றிற்கும் பொதுவாம். வெல்லுதல் உண்மை யுணர்த்துவதிலும் ஏதுக்கள் கூடிய ஏரணவலிமையிலும் மிகுந்து, எதிரிகள் கூற்றைப் பொருளற்ற தெனக்காட்டுதல். இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி. இனி, பிறிதோர் சொல்லும் வெல்லுஞ்சொல்லும் என இரண்டாகக் கொண்டு, ''ஒத்தசொல்லும் மிக்க சொல்லு முளவாகாமற் சொல்லுக.' என்றுரைப்பதுபொருந்தாதாம்.

கூசகூ. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்.

(இ—ரை.) வேட்பத்தாம் சொல்லி—தாம் பிறர்க்கு ஒன்றைச் சொல்லும்போது அவர் பின்னுங் கேட்க விரும்புமாறு இனிதாகவும் தெளிவாகவும் சொல்லி; பிறர் சொல் பயன் கோடல்—பிறர் சொல்லைத்தாம் கேட்கும்போதுமட்டும், அதிற் சொல்லினிமையும் பொருள் விளக்கமும் இலக்கண வொழுங்கும் இல்லா திருப்பினும், அதன் பொருளை உள்ளவாறு அறிந்து கொள்ளுதல்; மாட்சியின் மாசு அற்றார் கோள்—குற்ற மற்ற சிறப்புடைய அமைச்சரின் இயல்பாம்.

பிறர்க்கு மேலும்மேலுங் கேட்க விருப்ப மூண்டாகுமாறு எதையும் இன்பமாக எடுத்துக்கூறும் ஆற்றல், எல்லார்க்கும் இயற்கையாகவோ செயற்கையாகவோ அமையாமையானும், பிறர் சொல்வதன் பொருளை உணர்ந்து கொள்வதே தம் கருமவெற்றிக்கு வேண்டியதாதலானும், ''வேட்ப.....கோள்'' என்றார்.

கூசஎ. சொலல்வல்லன் சோர்விலனஞ் சானவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

(இ—ரை.) சொலல் வல்லன்—தான் சொல்லக் கருதியவற்றைப் பிறர்க்கேற்பச் சொல்லுதல் வல்லவனும்; சோர்வு இலன்—அவை மிகப்பலவாயினும் எதையும் மறந்து விட்டு விடாதவனும்; அஞ்சான் அவனை—அவைக்கு அஞ்சாதவனுமிருப்பவனை; இகல் வெல்லல் யார்க்கும் அரிது—தருக்கத்திலும் மாறுபாட்டிலும் வெல்லுதல் எவருக்கும் அரியதாம்.

ஏற்பச்சொல்லுதலாவது, கேட்பார்க்கு நன்மையல்லாவிடினும் மறுக்காது ஒத்துக்கொள்ளுமாறு சொல்லுதல். சோர்வுபடச் சொல்லுவதில் முறைபிறழச் சொல்லுதலும் தனக்குக் கேடாகச் சொல்லுதலும் அடங்கும். மாறுபாட்டில் வெல்லுதல், பிரித்தல் பொருத்தல் முதலிய வலக்காரங்களால் (தந்திரங்களால்) மேற்கொள்ளுதல். தருக்கம் சொல்லும், மாறுபாடு செயலும் ஆகும்

௬௮அ. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(இ—ரை.) நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்—சொல்ல வேண்டிய செய்திகளை ஒழுங்கான வரிசைப்படுத்தி இனிதாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால்; ஞாலம் விரைந்து தொழில் கேட்கும்—உலகம் விரைந்து அவர் ஏவல்கேட்டு நடக்கும்.

தொழில்கேட்டல் என்பது இப்பொருளதாதலை, ''தொன்று மொழிந்து தொழில் கேட்ப'' (மதுரைக். எஉ) என்பதனால் அறிக. 'ஞாலம்' இடவாகுபெயர். நிரத்தல் முன்பின் முறைதவறாது அமைத்தல். 'பெறின்' என்பது சொல்வன்மையாளரின் அருமையுணர்த்தி நின்றது.

''ஆர்த்தசபை நூற்றிருவர் ஆயிரத்தொன் றும்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.''

என்பது பிற்காலத்து ஔவையார் ஒருவர் தனிப்பாடல். ''சொல்லுதல் வல்லான் நூறுயிரவருளொருவன் என்ற வடமொழிபற்றிப் 'பெறின்' என்றார்.'' என்று, இங்கும் பரிமேலழகர் சிறிது நஞ்சைத்தம் உள்ளத்தினின்று வீழ்த்தியுள்ளார்.

௬௮ஆ. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

(இ—ரை.) மாசு அற்ற சில சொல்லல் தேற்றாதவர்—தாம் கருதியவற்றைக் குற்றமில்லாத சில சொற்களால் தெளிவாகவும் சுருக்கமாகவும் சொல்லத் தெரியாதவர்; மன்ற—தேற்றமாக (நிச்சயமாக); பல சொல்லக்காமுறுவர்—வீணுக்குப் பல சொற்களால் விரித்துக் கூற விரும்புவர்.

குற்றங்களாவன:

''குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழுஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றென்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை.'' (நன். பொதுப் பாயிரம், கூஉ).

'மன்ற' தேற்றப்பொரு ளிடைச் சொல்.

''மன்றஎன் கிளவி தேற்றஞ் செய்யும்.'' (தொல். இடை. கூஎ)

கூருo. இணரூழ்த்து நாரு மலரீனயர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(இ—ரை.) கற்றது உணர விரித்து உரையாதார்—தாம் கற்று வைத்த நூற்பொருளைப் பிறர் தெளிவாக அறியும் வண்ணம் விளக்கிச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்; இணர் ஊழ்த்தும் நாரு மலர் அனையர்—கொத்தாக மலர்ந்திருந்தும் மணந்தராத பூவையொப்பர்.

நன்றாக விரிந்திருந்தும் மணமில்லாத பூப் பயன்படாததுபோல் விரிவாகக் கற்றிருந்தும் விளக்கிச் சொல்லும் திறமையில்லார் பிறர்க்குப் பயன்படார் என்பதாம். இணரூழ்த்தல் என்ற உவம அடை பல்துறைக்கல்வி யாகிய பொருளியல்பை யுணர்த்தும். மண மில்லா மலர்க்கு முருக்கம் (முள்முருங்கைப்)பூவை எடுத்துக்காட்டி னர் பரிதியார். நாறுதல் என்னும் பொதுப்பொருள் விளைச்சல், செய்யுள் வழக்கில் நறுநாற்றத்தையும் உலக வழக்கில் தீநாற்றத் தையும் உணர்த்தும். உம்மை எச்சம்.

''எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனின் என்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.'' (நீதிநெறி. ஙி)

என்பது சொல்வன்மையின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

அதி. கூகூ—வினைத்தூய்மை

அஃதாவது, அறநூல் முறையிலும் அரசியல் முறையிலும் அமைச்சர் செயல் குற்றமில்லாததாயிருத்தல். சொல்வன்மை போன்றே செயல் நன்மையும் அமைச்சர்க்கு இருத்தல் வேண்டு மென்பதுபற்றி, இது சொல்வன்மையின் பின் வைக்கப்பட்டது.

கூறுக. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

(இ—ரை.) துணைநலம் ஆக்கம் தரும்—ஒருவனுக்குத்துணையின் நன்மை செல்வம் ஒன்றையே தரும்; வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்—ஆயின், வினையின் நன்மையோ செல்வம் உட்பட ஒருவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் தரும்.

'வேண்டிய வெல்லாம்' என்பன, இம்மையில் அறம் பொருளின்பமும் மறுமையில் புகழ் விண்ணின்பம் வீட்டின்பமும் மாம். பிறர் துணையினுந் தூய்மை சிறந்ததென வினைத்தூய்மையின் சிறப்புக் கூறப்பட்டது. 'தருஉம்' இசைநிறையளபெடை.

கூறுஉ. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

(இ—ரை.) புகழொடு நன்றி பயவா வினை—தம் அரசனுக்கும் தமக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் பொதுவாக உரிய அறமும் மறுமைக்குச் சிறப்பாகவுரிய புகழும் விளைக்காத வினைகளை; என்றும் ஒருவுதல் வேண்டும்—எக்காலத்தும் அமைச்சர் செய்யாது விட்டுவிடுதல் வேண்டும்.

துன்பநிலைமையும் நெருக்கிடை நிலைமையும் உட்பட 'என்றும்' என்றார். இறப்பின் பின்னரே புகழ் சிறந்து தோன்றும் என்பதை,

"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது." (குறள். உகஇ)

என்பதனால் அறிக.

கூறுங. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

(இ—ரை.) ஆதும் என்னும் அவர்—யாம் மேன்மேல் உயர்வேம் என்னும் உயர்வெண்ணங் கொண்டவர்; ஒளி மாழ்கும் செய்வினை ஓதல் வேண்டும்-தம் மதிப்புக் கெடுவதற் கேதுவான வினைகளைச் செய்யாது விட்டுவிடுதல் வேண்டும்.

மதிப்புக் கெடுவதற் கேதுவான வினைகளைச் செய்பவர் மேன்மேலுயர முடியாது என்பது கருத்து. ஓவுதல் என்பது ஓதல் எனக்

குறைந்து நின்றது. 'ஒளிமாழ்குஞ் செய்வினை' ஒளி மாழ்குவதற்கேதுவாகச் செய்யும் வினை என்க. 'ஓதல்', 'ஆகுதும்', என்பன இசைநிறை யளபெடைகள். ஒளியென்பது உடலோடு கூடி வாழும் நாளில் உளதாகும் நன்மதிப்பு.

கூடுசு. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

(இ—ரை.) நடுக்கு அற்ற காட்சியவர் — அசைவில்லாத தெளிந்த அறிவினையுடையார்; இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்—தாம் துன்பத்துள் அகப்பட்டாலும் அத்துன்பந் தீர்தற் பொருட்டுத் தமக்கு இழிவு தரும் வினைகளைச் செய்யமாட்டார்.

இன்பமுந்துன்பமுங் கலந்ததே இவ்வுலகவாழ் வென்றும், வருவது வந்தே தீருமென்றும், இழிவினைகளைச் செய்வதால் இம்மையிற் பழியும் மறுமையில் துன்பமுமே உண்டாகு மென்றும், அறவழியாற் போக்க முடியாத துன்பத்தை அமைதியாக நுகர்ந்தேயாக வேண்டு மென்றும், தெள்ளத்தெளிவாக அறிந்தவராதலின் 'நடுக்கற்ற காட்சியவர்' என்றும், 'இளிவந்த செய்யார்' என்றும் கூறினர்.

கூடுஞ. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

(இ—ரை.) எற்று என்று இரங்குவ செய்யற்க—ஐயோ! எத்தன்மையான தவற்றை எண்ணுது செய்து விட்டேன் என்று பின்பு வருந்துவதற் கேதுவான வினைகளை ஒருபோதுஞ் செய்யாதிருக்க; செய்வானேல்—ஒருகால் தப்பித்தவறிச்செய்ய நேர்ந்து விடின்; மற்று அன்ன செய்யாமை நன்று—அதன்பின்பாகிலும் அத்தகைய வினைகளைச் செய்யாதிருப்பது நல்லது.

தவறு செய்வது மாந்தன் இயற்கையே. ஆயின், ஒரு முறை தவறியபின் திருந்திவிடல் வேண்டும். மறுமுறையும் அதே தவறு செய்வது பகுத்தறிவுள்ள மாந்தன் இயல்பிற்கு ஏற்காது. இதையே 'மற்றன்ன செய்யாமை நன்று' என்பதாற் குறித்தார்.

"துணியப்பட்ட தென்று பின் இரங்கப்படும் வினையைச் செய்யாதொழிக; வினை செய்வான் ஆயின், அவை போல்வனவும் செய்யாமையே நல்லது." என்னும் மணக்குடவர் உரை பொருந்துவதே.

பரிமேலழகர் பின்னடிக்குப் "பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாதொழிதல் நன்று." என்று பொருள் கூறி, "பிற்றொடருக்குச்

செய்வானுயின் அவை போல்வனவுஞ் செய்யாமை நன்றெனப்பிற ரெல்லாம் இயைபற வுரைத்தார்.'' என்னும் பழித்தைச் 'சான்றோன் றிரங்குவ' என்பதே பின்னிரங்குவதை எதிர் நோக்கலால், இரங் காமை நன்றென்பது மூலத்தொடு முரண்படுவதென அறிக. என் னது—எற்று (என்+து).

கூடுகூ. ஈன்ருள் பசிகாண்பா ஞயினுஞ் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை.

(இ—ரை.) ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் — தன்னைப் பெற்ற தாயின் பசியைக்கண்டு வருந்தும் வறியஞயினும்; சான் ருேர் பழிக்கும் வினை செய்யற்க—அத் தாயின் பசியைத் தணித்தற் பொருட்டு அறிவுடையோர் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யா தொழிக.

''ஈன்ருளின் என்ன கடவுளும்இல்,''என்பது நான்மணிக்கடிகை. (இச). 'ஈன்ருள் பசிகாண்பா ஞயினும்' என்பது, பசித்தவள் ஈன்ருளே யாயினும் என்று பொருள் படுவதால், உம்மை உயர்வு சிறப்பாம்.

''இறந்த மூப்பினராய இருமுது குரவருங் கற்புடை மனைவியுங் குழவியும் பசியான் வருந்து மெல்லைக்கண், தீயன பலவுஞ் செய் தாயினும் புறந்தருக வென்னும் அறநூற் பொது விதி, பொருணூல் வழி யொழுகுதலும் அரசர் தொழிற்குரிய ராதலும் நன்கு மதிக்கற் பாடு முடைய அமைச்சர்க் கெய்தாமை பற்றி இவ்வாறு கூறினுர்.'' என்று பரிமேலழகரே கூறியிருத்தலால், ஆரிய அறத்தினும் தமிழ அறம் நனிதவச் சிறந்த தென்பதை அவர் வாய் ஒப்புக்கொள்ளா விடினும் உள்ளம் ஒப்புக்கொள்கின்ற தென்பதும், ''அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலு மாம்.'' என்று அவர் தம் உரைமுகத்திற் கூறியிருப்பது இதனால் அடிபடுகின்ற தென்பதும் அறியப்படும்.

கூடுஎ. பழிமலிந் தெய்திய வாக்கத்திற் சான்ருேர்
கழிநல் குரவே தலை.

(இ—ரை.) பழிமலிந்து எய்திய ஆக்கத்தின்—அறிவிலாதார் தீவினைகளைச் செய்து அவற்றுற் பழியைத் தம்தலையேல் ஏற்றுக் கொண்டு பெற்ற செல்வத்தைவிட; சான்ருேர் கழிநல்குரவேதலை— அப்பழியை மேற்கொள்ளாத அறிவுடையோரின் கடுவறுமையே சிறந்ததாம்.

சான்றோர் அறிவு அல்லது நற்குணம் நிறைந்தோர். தீயோர் செல்வம் இம்மைக்குப் பழியும் மறுமைக்குத் துன்பமும் பயத்தலால், அவ்விரண்டு மில்லாத நல்லோர் வறுமை அதனினுஞ் சிறந்தது என்றார். கொடிய வறுமை யாயினும் என்பார் 'கழிநல்குரவு' என்றார். கொடிய வறுமையாவது, நாள்முழுதும் வருந்தியுழைத்தும் வருவது ஒருவேளையுணவிற்கும் பற்றுமை. ஏகாரம் பிரிநிலை.

கூடுஅ. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(இ—ரை.) கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு — அறநூலார் விலக்கிய வினைகளைத் தாமும் விலக்கி விட்டுவிடாமல் பொருள் நோக்கிச்செய்த அமைச்சர்க்கு; அவைதாம் முடிந்தாலும் பீழை தரும்—அவ்வினைகள் ஒருகால் முடிந்தாலும் அவை தூயவல்லாமையால் பின்பு துன்பத்தையே விளைக்கும்.

முடிதல் வெற்றியாய் முடிந்து கருதிய பொருள் தருதல். ஒருவார் என்பது ஒரார் எனக்குறைந்து நின்றது. 'முடிந்தாலும்' ஐயவும்மை. பீழைதருவன வினையும் வினையால் வந்த பொருளும்.

கூடுஆ. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(இ—ரை.) அழக்கொண்ட எல்லாம் அழப்போம்—ஒருவன் தீய வினைகளைச் செய்து பிறரை வருத்திப் பெற்ற செல்வ மெல்லாம் இம்மையிலேயே தான் அங்ஙனம் வருந்து மாறு தன்னை விட்டு நீங்கிப்போம்; நல் பாலவை இழப்பினும் பின் பயக்கும்—தூய வினைகளால் வந்த பொருள்களோ முன்பு இழக்கப்படினும் பின்பு வந்து பயன் தரும்.

தீயவழிச் செல்வம் வருவது போற் போவது மட்டுமன்றி, வந்த வகையிலேயே போமென்பதை யுணர்த்தற்கு 'அழப்போம்' என்றார். 'இழப்பினும்' ஐயவும்மை. 'பின்' என்றது இம்மைக்கும் மறுமைக்கும் பொதுவாம்.

கூகூஇ. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(இ—ரை.) சலத்தான் பொருள் செய்து ஏமார்த்தல்—அமைச்சன் வஞ்சனையாற் பொருளீட்டி அதனால் அரசனுக்குப் பாதுகாப்

புச் செய்தல்; பசுமண் கலத்துள் நீர் பெய்து இரீஇய அற்று—ஈரம் புலராத பச்சைமட் கலத்துள் நீரை வார்த்து அதற்குப் பாதுகாப் புச் செய்ததனை டொக்கும்.

நீரோடு பசுமட்கலங் கெடுவது போல் வஞ்சனைப் பொருளோடு அரசன் கெடுவான் என்பதாம். ஆக்கஞ் செய்வது போல் முன் தோன்றிப் பின்பு அழிவைச் செய்வதால் 'சலத்தால்' என்றார். 'சலம்' வடசொல். ஏமமார்த்தல் என்பது ஏமாத்தல் என ரகரங் கெட்டு நின்றது. ஏமம்-பாதுகாப்பு. ஆர்தல்-பொருந்துதல், ஆர்த் தல்-பொருத்துதல். 'இரீஇ' இருத்தி யென்று பொருள்படும் சொல் விசையளபெடை. இருத்துதல் நீண்டகாலம் இருக்கச் செய்தல்.

அதி. கூஎ—வினைத்திட்பம்

அஃதாவது, தூயவினை செய்வானுக்கு வேண்டிய மனத் திண்மை. அதிகார முறையும் இதனுல் விளங்கும். திண்—திண்பு—திட்பு—திட்பம். திண்மை திணுக்கத்தால் (செறிவால்) ஏற்படும் உறுதி.

கூகூக. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

(இ—ரை.) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்—வினை செய்வதில் திண்மை என்பது அதைச் செய்பவனின் மனத் திண்மையே; மற்றைய எல்லாம் பிற—அஃதல்லாத பிறவெல்லாம் அதைப்போன்ற திண்மையாகா.

மற்றைய பிற வாவன குடி, படை, அரண், நட்பு என்பவற்றின் திண்மைகள். அவையும் வேண்டுமாயினும், செய்வானின் மனத் திண்மை யில்லாவிடத்து அவை பயன்படாவாதலின் 'மற்றைய வெல்லாம் பிற' என்றார்.

கூகூஉ. ஊருறூரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னூறென்ப ராய்ந்தவர் கோள்.

(இ—ரை.) ஆய்ந்தவர் கோள்—வினைத்திட்பத்தை ஆராய்ந் தறிந்த அமைச்சருடைய கொள்கை; ஊறு ஒரால் உற்றபின் ஒல் காமை இவ்விரண்டின் ஆறு—கேடு தரக்கூடிய வினைகளைச் செய் யாமையும் வினை செய்யுங்கால் தெய்வத்தால் நேர்ந்த இடையூற் றிற்குத் தளராமையும் ஆகிய இவ்விரண்டின் வழி; என்ப — என்று கூறுவர் அரசியல் நூலார்.

வினைத்திட்பம் என்பது அதிகாரத்தால் வந்தது. அமைச்சியலே உள்ளடக்கும் நூல் அரசியல்நூல் அல்லது பொருள்நூலாகவே பிருக்கமுடியும். முப்பால் நூலாகிய இத்திருக்குறள் அரசியலையும் அமைச்சியலையும் பொருட்பாவில் தழுவினும், அரசியலை அல்லது பொருளியலை மட்டுங் கூறும் தனிநூல் போல் விரிவாக இருத்தல் இயலாததே. சாணக்கியனுரின் வடமொழிப் பொருள்நூலுக்கு மூலமாக விருந்த பண்டைத் தமிழ்ப் பொருள்நூல்க ளெல்லாம் ''வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள,'' என்பதினும். ஆரியம் அழித்த தந்தோ அவற்றொடு பெயரும் மாள என்பதே உண்மையானதாம். ஒருவல் என்பது ஓரால் என நின்றது.

திருவள்ளுவர் தமிழ்மரபுப்படியே தம் நூலைச் செய்திருப்பதால், 'ஆய்ந்தவர் கோள்' என்பதற்கு ''முன் நீதியாராய்ந்த அமைச்சரது துணிபு'' என்றும்; ''தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப்பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினர்.'' என்றும்; பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாதென்க. ஆய்ந்தவர் கொள்கை இவ்விரண்டின் வழி என்பதை, இவ்விரண்டும் ஆய்ந்தவர் கொள்கை என்பதாகவே கொள்க.

இனி, இக்குறட்கு ''யாதானும் ஒரு வினை செய்யும் இடத்து அதற்கு இடையூறு வருவதும் வந்துற்றதுமாய் இருக்கும். அவற்றுள் வருவதாகிய இடையூறு முன்கோலிக் கழியுமாறு செய்தலும், அது அன்றி ஒன்று உற்றதாயின் அதற்கு மனம் தளராமையும் அவ்விரண்டினது நெறி என்று சொல்லுப, ஆராய்ந்து அமைந்த அமைச்சராலேஞ் வினையினது கோட்பாட்டினை என்றவாறு.'' என்னும் காளிங்கர் உரையும் பொருந்துவதே யாம்.

கூகூடு. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்ரு விழுமந் தரும்.

(இ—ரை.) கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை= மறைத்துச் செய்ய வேண்டிய வினைகளை முடிந்த பின்னரே வெளிப்படுமாறு கமுக்கமாய்ச் செய்வதே வினைத்திட்பமாம்; இடைக் கொட்கின் எற்ரு விழுமம் தரும்—அங்ஙன மன்றி அத்தகைய மருமவினைகள் இடையில் வெளிப்படுமாயின், நீக்க முடியாத் துன்பந் தருவனவாம்

மறைவாகச் செய்யவேண்டியவை படையெடுப்பிற்கு வட்டங் கூட்டுதல் (ஆயத்தஞ் செய்தல்), பெரியாரைத் துணைக் கோடல்.

வல்லரசனைடு மணவுறவு கொள்ளுதல், பெரும் புதையலைக் கைப் பற்றுதல் முதலியன. மறைவு வெளிப்படும் வகைகள், செயலும் சொல்லும் உடையும் வடிவும் குறிப்பும் பொருளும் கருவியும் பிறவு மாம். வினைத்திட்பம் ஆண்மைக் குணமாதலின் ஆண்மையெனப் பட்டது. "ஒருவரறிந்தது உலகறிந்தது." ஆதலின், இயன்றவரை பிறருக்குத் தெரியாது வினை முடித்தல் வேண்டு மென்பதும், தெரி யின் பின்பு ஒருகாலும் திருத்த முடியாவாறு பகைவர் தடுப்பால் வினை கெட்டுவிடு மென்பதும், அதனாற் பெருந்துன்பம் விளையுமென் பதும், உணர்த்தற்கு 'இடைக்கொட்கின் எற்ரு விழுமந்தரும்' என்ரார்.

எடுத்த வினையை இறுதிவரை செய்து முடிப்பதே ஆண்மை யென்றும், இடையில் விட்டுவிடுவது பெருந்துன்பம் தரும் என்றும், மணக்குடவரும் பரிப்பெருமாளும் பரிதியாரும் காலிங்கரும் உரைத் திருப்பது சிறந்ததன்று. 'கடைக்கொட்பின்' என்பது காலிங்கர் பாடம். இவருள் முன்னிருவரும் வெளிப்படையாகவும் பின்னிரு வரும் குறிப்பாகவும், கொட்குதல் என்னும் வினைக்குச் சுழலுதல் என்று பொருள் கொண்டனர்.

ஈஈ. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(இ—ரை.) சொல்லுதல் யார்க்கும் எளிய—ஒரு வினையை இன்ன கருவியால் இன்னவாறு செய்து முடிக்கலாம் என்று வழி சொல்வது எவருக்கும் எளிதாம்; சொல்லிய வண்ணம் செயல் அரிய ஆம்—ஆனால், சொன்னவாறு அதைச் செய்து முடிப்பது பெரும்பாலார்க்கு அரிதாம்.

சொல்லுதலும் செய்தலும் சொல்வார் செய்வார் பண்மைபற்றிப் பன்மையாகிப் பன்மைவினை கொண்டன. ஏற்புழிக்கோடல் என் னும் உத்தியால், அரிது என்பது ஒரு சிலர் அரும்பாடு பட்டுச் செய்து முடித்தலையும், பெரும்பாலார் எப்பாடு பட்டும் செய்ய முடி யாமையையும் உணர்த்தும் என்று கொள்ளப் பெறும். இனி, எதிர் நிலை (அருத்தாபத்தி) யளவையால், ஒரோ ஒருவர்க்கு அது எளிதாக முடியும் என்பதும் அறியப்படும்.

ஈஈடு வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்.

(இ—ரை.) வீறு எய்திமாண்டார் வினைத்திட்பம்— சூழ்வினையால் மேம்பட்டுப் பிறவிலக்கணங்களாலும் மாட்சிமைப் பட்ட அமைச்சரின் வினைத்திண்மை; வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப் படும்—பயனளவில் அரசனையடைதலால் அவனாலும் பிறராலும் மதிப்பொடு கருதப்பெறும்.

பிறவிலக்கணங்கள் கக—ஆம் அதிகாரத்தில் முதல் ஆறு குறள்களிலுஞ் சொல்லப்பட்டனவாம். 'வேந்தன்க ணூறெய்தல்' வினைத்திட்பத்தால் வினைந்த செல்வமும் புகழும் அரசனையடைதல். ஊறெய்தல் உறுதல். உறுவது ஊறு. உறுதல் அடைதல்.

கூகூஈ. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(இ—ரை.) எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்— பொருள்களைப் பெற எண்ணியவர் அவற்றைப் பெறுவதற்கு வழியாகிய வினையில் திண்மையுள்ளவராக இருப்பாராயின்; எண்ணிய எண்ணிய ஆங்கு எய்துப—தாம் பெற எண்ணிய பொருள்களை யெல்லாம் தாம் எண்ணியவாறே பெறுவர்.

கருதிய பொருள்களை யெல்லாம் எளிதிற் பெறுவ ரென்பார் 'எண்ணிய எண்ணியாங் கெய்துப' என்றார். அமைச்சரின் சூழ்வினை போன்றே செய்வினையும் திண்ணியதாயிருப்பின், அவர் கருதிய பொருள் பெறுதல் எளிதென்பதாம். மந்திரம் மன்னும் திறம். மன்னுதல் எண்ணுதல். முன் (னு)—மன் (னு).

கூகூஉ. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து.

(இ—ரை.) உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னர் உடைத்து—உருண்டோடுகின்ற பெரிய தேர்க்கு இன்றியமையாத சிறிய அச்சாணிபோல, வினைத்திறம் மிக்க சிற்றுடம்பினரை இவ்வுலகம் கொண்டுள்ளது; உருவு கண்டு எள்ளாமை வேண்டும்—ஆதலால், அத்தகையோரை வடிவின் சிறுமை நோக்கித் தாழ்வாக எண்ண வேண்டா.

உருவின் சிறுமை'எள்ளாமை வேண்டும் என்பதனாலும் உவமத்தாலும் பெறப்பட்டது. உருளுதல் தேர்ச்சக்கரத்தின் தொழில். வினைவினை முதல்வினையாக நின்றது. பெருந்தேர் ஏழுதட்டுக்களைக் கொண்ட முழுத்தேர். அச்சு சக்கரங் கோத்த குறுக்கு உத்தரம்.

அச்சாணி சக்கரங் கழலாதவாறு அச்சின் கடைசியிற் செருகும் ஆணி. அதனுற் கடையாணி யெனவும்படும். அச்சாணி சிறிதாயிருந்தும் பெரிய கோயில் தேரையும் தாங்குவதும் அதன் இயக்கத்திற்கு இன்றியமையாததுமான சிறப்புடையது. "அச்சாணியில்லாத தேர் முச்சாணும் ஓடாது." பெருந்தேர் ஓட்டத்திற்கு இன்றியமையாத சிறிய அச்சாணிபோல், பெருநாட் டாட்சிக்கும் இன்றியமையாத சிற்றுருவப் பேராற்ற லமைச்சர் உளர். அவரை வடிவு பற்றி இகழாது, அவர் மதிநுட்பமும் வினைத்திட்பமும் நோக்கி ஆட்சித் துணையாக அரசன் அமர்த்திக் கொள்க என்பதாம்.

ஈஈஅ. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(இ—ரை.) கலங்காது கண்ட வினைக்கண்—தெளிவாக எண்ணித்துணிந்த வினை முயற்சியில்; துளங்காது தூக்கம் கடிந்து செயல்—பின்பு மன அசைவில்லாதும் காலந்தாழ்க்காதும் விரைந்து ஊக்கமாகச் செய்க.

தப்பாது பயன் படுமென்றும் வெற்றியாக முடியுமென்றும் தெளிவாக ஆராய்ந்தறிந்த வினையைக் 'கலங்காது கண்ட வினை' யென்றும், மனத்தளர்ச்சியும் உடற்சோம்பலும் வினையைக் கெடுக்குமாதலின் 'துளங்காது தூக்கங் கடிந்து செயல்' என்றும், கூறினர்.

ஈஈஆ. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

(இ—ரை.) துன்பம் உறவரினும்—வினைசெய்யுங்கால் தமக்குத் துன்பம் மிகுதியாக வருமாயினும்; இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றிச் செய்க—அது பற்றித் தளராமல் முடிவில் இன்பந்தரும் வினையை மனத்திண்மையுடன் செய்க.

துன்பம் வருங்காலம் குறிக்கப்படாமையின், வினையின் முதலிடை கடையில் மட்டுமன்றி முழுமையுந் துன்பம் வரினும் பொறுக்க வேண்டு மென்பதாம். பிள்ளை பெறுபவளின் துன்பம் பிள்ளை பெற்ற பின் இன்பமாக மாறுவது போல், முயற்சித் துன்பமும் வெற்றிப் பேற்றுல் இன்பமாக மாறு மென்பார், 'இன்பம் பயக்கும் வினை' என்றார். 'உற' உரிச்சொல்.

ஈஎ0. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

(இ—ரை.) வினைத்திட்பம் வேண்டாரை—வினை செய்வதில் உறுதியை விரும்பாத அமைச்சரை; எனைத்திட்பம் எய்தியக் கண்ணும்—வேறு எத்தகைய உறுதி யுடையவரா யிருப்பினும்; உலகு வேண்டாது—உயர்ந்தோர் விரும்பார்.

மனத்திண்மை, மதித்திண்மை, அறிவுத்திண்மை, உடல் திண்மை, வினைத்திண்மை என அகத்திண்மை பல வகைப்படும். கருவித்திண்மை, இடத்திண்மை, காலத்திண்மை, படைத்திண்மை முதலியன புறத்திண்மையாம். இவை யெல்லா மிருந்தும் மெய்ம் முயற்சியாகிய வினைத்திண்மை யில்லாவிடத்துப் பயன்படாமை யின், 'வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாதுலகு' என்றார். 'உலகு' ஆகுபெயர்.

அதி. கூஅ—வினைசெயல்வகை

அஃதாவது, வினைத்திண்மையுடைய அமைச்சன் வினை செய்யும் வகை. அதிகார முறையும் இதனால் விளங்கும்.

கூஎக. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத லீது.

(இ—ரை.) சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்—ஒன்றைப்பற்றி ஆராய்ந் தெண்ணுவதன் இறுதியாவது, இதை இன்னவாறு செய்ய வேண்டும் என்னும் தீர்மானத்தைக் கொள்ளுதலே; அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது—அத் தீர்மானத்தை உடனே நிறை வேற்றாது காலங்கடத்துவது குற்றமாகும்.

சூழ்ச்சி எதிர்ப்பும் தற்காப்பும் பற்றியதாயின், இதை எங்ஙனஞ் செய்வதென்பதே ஆராயப்படுவதாம். தாக்குதல் பற்றியதாயின், செய்வதா விடுவதா என்பதே முதற்கண்ணும், செய்வதாயின் அதை எங்ஙனஞ் செய்வதென்பது அதன் பின்னும், ஆராயப்படு வனவாம். ஆகவே, உடன்பாட்டுத்தீர்மானமே 'தாழ்ச்சியுள் தங்கு தல்தீது' என்பது அறியப்படும். 'சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்' எனவே, துணிவெய்தும் வரை சூழவேண்டு மென்பதும், துணிவில் முடியாதவாறும் துணிவு காலந்தாழ்க்குமாறும் சூழ்வது தீங்குவிளக் குமென்பதும், பெறப்படும். துணிந்த வினையை உடனே தொடங்கா விடின், தகுந்த காலந்தப்புதலாலும் ஊக்கங் குன்றுதலாலும் பகை வர் அறிந்தழித்தலாலும் வினைகெடுமாதலான், 'தாழ்ச்சியுள் தங்கு தல் தீது' என்றார்.

கூஎஉ. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

(இ—ரை.) தூங்கிச் செயல் பால தூங்குக—மெள்ளச் செய்ய வேண்டிய வினைகளை மெள்ளச் செய்க; தூங்காது செய்யும் வினை தூங்கற்க—விரைந்து செய்ய வேண்டிய வினைகளை விரைந்து செய்க.

மெள்ளச் செய்தல் காலந்தாழ்த்துச் செய்தலும் காலம் நீடச் செய்தலும் என இருவகை. இவற்றுள் முன்னது வினை தொடங்கலையும் பின்னது வினைசெயல் முழுவதையும் பற்றியனவாம். மெள்ளச் செய்ய வேண்டியதை விரைந்தும் விரைந்து செய்ய வேண்டியதை மெள்ளவும் செய்யின், அவற்றுள் தீமையே விளையும் என்பது கருத்து. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

கூஎங. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

(இ—ரை.) ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்றே—இயலுமிட மெல்லாம் போரால் வினைசெய்தல் நல்லதே; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல்—அது இயலாவிடத்து ஏனை மூன்று ஆம்புடைகளுள்ளும் ஒன்றும் பலவும் ஏற்ற வற்றை எண்ணிச் செய்க.

வினையென்றது இங்குத் தண்டத்தை. எளிய பகைவரை அடக்குவதும் விரைந்து பொருள் தருவதும் போரேயாகலின், அதை நன்றென்றார். இயலுமிடம் தான் வலியனை காலம்; இயலாவிடம் தான் மெலியனை காலம்; இயல்வது ஐயுறவான இடம் தான் ஒத்தோனை காலம். இயலாக் காலத்தும் ஐயுறவுக் காலத்தும் இன்சொல், பிரிப்பு, கொடை என்னும் ஏனை மூன்று ஆம்புடைகளுள் ஒன்றும் பலவும் ஏற்ற வகையிற் கையாள்க என்றார். ஏகாரம் தேற்றம்.

கூஎச. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(இ—ரை.) நினையுங்கால்—ஆராய்ந்து பார்க்குமிடத்து; வினை பகை என்ற இரண்டின் எச்சம்—செய்யத் தொடங்கிய வினை, ஒழிக்கத் தொடங்கிய பகை ஆகிய இரண்டினும் விட்டு வைத்த குறை; தீ எச்சம் போலத் தெறும்—அவிக்காது விட்டு வைத்த

தீயின் குறை போலப் பின் வளர்ந்து தம்மை விட்டுவைத்தவரை அழித்து விடும்.

பல பெரும் பகைவரை அடக்கியதொடு பொந்திகை (திருப்தி) யடைந்து ஒரு சிறு பகைவனை விட்டுவைப்பது பகை யெச்சமாம். பகையொடு சேர்த்துக் கூறியதாலும், 'தீயெச்சம் போலத்தெறும்' என்றதனாலும், வினை யென்றது கேட்டை நீக்கும் வினையை என் பது அறியப்படும். வெள்ளக் காலத்திற் பெருங்குளக்கரை யுடைப் பையெல்லாம் அடைத்தவர் ஒரு சிறு கசிவை விட்டுவைப்பதும், கொடிய நோய்க்கு மருத்துவம் செய்து கொள்பவன் ஒரு சிறு பகுதி யைப் புறக்கணிப்பதும், வினையின் எச்சத்திற்கு எடுத்துக் காட் டாம். இனி இக்குறை என்ன செய்யும் என்றிகழாது முடியச் செய்க என்பதாம். இது வலியனுக்குரிய வினை. இனி, வினையெச் சம் எனபது தோற்றோடிய பகைவனைத் தொடராது விட்டுவிடும் போர்வினை யெச்சம் எனலுமாம்.

கூஎடு. பொருள்கருவி காலம் வினையிடனெ டைந்து
மிருமூர வெண்ணிச் செயல்.

(இ—ரை.) பொருள் கருவி காலம் வினை இடனெடு ஐந்தும் —போர் செய்யுமுன் பொருள், கருவி, காலம், செயல், இடம் என் னும் ஐவகையிலும்; இருமூ றீர எண்ணிச் செயல்—தனக்கும் தன் பகைவர்க்கு முள்ள நிலைமைகளை மயக்கமற எண்ணி, தன்வலி மிக் கிருப்பின் அதன்பின் போர் செய்க.

தன் நிலைமையைப் பகைவர் நிலைமையொடு ஒப்பு நோக்கியே வினை துணியவேண்டியிருத்தலின், கருவி முதலிய ஐந்தும் இரு சார்க்கும் பொதுவாம். 'பொருள்' தன்பொருளும் பகைவர் பொரு ளும் தனக்கு அழியும் பொருளும் ஆகும் பொருளுமாம். 'கருவி' தன் படையும் அதன் கருவியும் பகைவர் படையும் அதன் கருவியுமாம். 'காலம்' தனக் கேற்ற காலமும் தன் பகைவர்க்கு ஏற்காத கால முமாம். 'வினை' தன்படைப் போர்த்திறமும் பகைவர் படைப் போர்த்திறமு மாம். 'இடம்' தான் வெல்லு மிடமும் தன் பகைவர் தோற்கும் இடமுமாம்.

"என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்று வழி யுடைய எண்ணினுட் பிரிந்தே-" (இடை. ஃஅ)

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி, 'ஒடு' எண்ணுப் பொருளில் வந்து ஏனையிடத்தொடும் இயைந்ததாகக் கொள்ளப் பெறும். இக் கால வழக்கில் அஃதின்றியும் பொருள் நிரம்பும்.

௯௫௫. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(இ—ரை.) முடிவும்—வினை முடிதற்கு வேண்டிய முயற்சியும்; இடையூறும்—அதற்குத் தடையாக இடையில் வரும் துன்பங்களும்; முற்றிய ஆங்கு எய்தும் படுபயனும்—தடை நீங்கி வினை வெற்றியாக முடிந்தால் தான் அடையும் பெரும் பயனும்; பார்த்துச் செயல்—ஆராய்ந்து பார்த்து வினைசெய்க.

பெரும்பயன் எனவே சிறுபயன் வினை விலக்கப் பட்டதாம். 'படு' என்னும் சொல் பெருமை அல்லது மிகுதிப்பொருள் தருவதைப் படுகுழி, படுதண்டம், படுபொய், படுமோசம் என்னும் வழக்கு நோக்கி யுணர்க. 'முடிவு' ஆகுபெயர். முற்றியாங்கு (முற்றிய ஆங்கு)—முற்றியபோது.

௯௫௬. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

(இ—ரை.) செய்வினை செய்வான் செயன் முறை—மேற்கூறியவாறு செய்யப்பட வேண்டிய வினையைச் செய்யுமாறு மேற்கொண்டவன் செய்யவேண்டிய முறையாவது; அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல்—அவ்வினையை ஏற்கெனவே செய்து அதன் உள் மருமங்களை அறிந்தவனது கருத்தையறிந்து அதன்படி செய்தலாம்.

மேற் கூறியவாறென்றது பொருள் முதலிய ஐந்தையும் எண்ணுதலையும் முடிவு முதலிய மூன்றையும் ஆராய்தலையும். 'உள்' ஆகுபெயர். 'உள்ளம்' செயன்முறை பற்றிய கருத்து. அது பிறர்க்குத் தெரியாது அவனுள்ளத்திலிருத்தலால் உள்ளம் எனப்பட்டது. அது வினை வெற்றிக்குக் கையாள வேண்டிய வழிவகை. அதை அறியவே, தானும் அவ்வாறு செய்து வெற்றிபெறுவன் என்பதாம். இம்முக்குறளாலும் ஒத்தோன் வினைசெய்யுந் திறம் கூறப்பட்டது.

௯௫௭. வினையான் வினையாக்கிக் கோட னினைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(இ—ரை.) வினையால் வினை ஆக்கிக் கோடல்—ஒரு வினையைச் செய்யும் பொழுதே அதனால் வேறுமொரு வினையை முடித்துக் கொள்ளுதல்; நினைகவுள் யானையால் யானை யாத்த அற்று—மதத்தால் நனைந்த கன்னத்தையுடைய யானையால் வேறுமொரு யானையைப் பிடித்துக் கட்டிய தொக்கும்.

உவமம் பெருவினை எளிதில் முடிவதைக் காட்டும். 'நனைகவுள்' என்பது 'வினையால்' என்பதற்கு எதுகை யாகவே வந்ததனால், 'நனைகவுள் யானை' என்பது களிறு என்னும் அளவாய் நின்றது. அல்லாக்கால், மதயானை பெண்யானையாலன்றி ஒருவகையிலும் அடக்கப்படாததாயும் ஒரு வினைக்கும் பயன்படாததாயும் இருக்குமாதலின், 'யானையால்யானை யாத்தற்று' என்னும் உவமை பொருந்தாதென்க. ஒரு கல்லில் இரு குருவியை வீழ்த்துவதும், ஒரு குண்டில் இரு புருவைச் சுடுவதும் போல், ஒரு முயற்சியால் இரு வினையை முடிக்கும் வகை இதனுற் சொல்லப்பட்டது. அதற்கேற்ப எண்ணிச் செய்க என்பது கருத்து.

கூஎஞ. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

(இ—ரை.) ஒட்டாரை ஒட்டிக் கொளல்—வினைதொடங்குமுன் தன் பகைவரொடு பொருந்தாதவரைத் தனக்கு நட்பாக்கிக்கொள்ளுதல்; நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே—தன் நண்பருக்கு இனியன செய்தலினும் விரைந்து செய்யப்பட வேண்டியதே.

உண்மையானவரும் பழகியவருமான நண்பர் தன்னை விட்டு நீங்காராதலானும், அவருக்குச் செய்ய வேண்டிய சிறப்பைச் சற்றுக்காலந்தாழ்த்துச் செய்யினும் பொறுத்திருப்பராதலானும், பகைவருடன் பொருந்தாதவரை உடனே தன்னெடு சேர்த்துக் கொள்ளாவிடின் பகைவர் அவர் விரும்பியதைக் கொடுத்துத் தம்வயப்படுத்திக் கொள்வராதலானும், 'நட்டார்க்கு நட்ட செயலின் விரைந்ததே' என்றார். இனி, இதுவரை தன்னெடு ஒட்டாரை ஒட்டிக் கொளல் எனினுமாம். ஏகாரம் தேற்றம். இக்குறளிரண்டும் மெலியன் செயல் கூறின.

கூஅ0. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

(இ—ரை.) உறைசிறியார்—சிறிய ஆள்நிலத்தை யுடைய அமைச்சர்; உள் நடுங்கல் அஞ்சி—வலிய பகைவர் வந்து தம்மைத் தாக்கிய விடத்துத் தம் நாட்டிலுள்ள குடிகள் நடுங்குவது கண்டு அஞ்சி; குறைபெறின்—பகைவருடன் ஏதேனுமொரு வகையில் உடன்படிக்கை செய்துகொள்ள வாய்க்குமாயின்; பெரியார்ப் பணிந்து கொள்வர்—அவ்வலிய பகைவர்க்குத் தாழ்ந்து அவர் கூறுங் கட்டுத்திட்டங்களை ஏற்றுக் கொள்வர்.

இது மிகுமெலியன் செயல். வேறு வழியின்மையால் பகைவருக்கு அடங்க வேண்டியதாயிற்று. 'உறை' முதனிலைத் தொழிலாகுபெயர். உறையும் இடம் உறை. அது நாடும் அரணுமாம். 'உள்' இடவாகு பெயர். கொடுங்கோல் மன்னர் நாட்டைக் கைப்பற்ற விரும்புவதாலின், குறைபெறும் அருமை நோக்கிப் 'பெறின்' என்றார். வலிய வனுக்குப் பணிந்து திறைகொடாவிடின் அரசு மட்டுமன்றி உயிரையும் இழக்கநேரு மாதலின், பெருங்கேட்டினும் சிற்றிழப்பு நன்றென்றார். ஆயினும், பகைவர்க்குப் பணிதல் தன்மானக் கேடாதலின், அதை எதிர்முக ஏவலாகக் கூறாது படர்க்கை வினையாக உலகியல் மேல் வைத்துக் கூறினார். 'உறைசிறியார்' என்றது,

> ''உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
> அதனெடு சார்த்தின் அத்திணை முடிபின.'' (நன். கூஎஎ)

என்னும் நெறியிட்டைத் தழுவியதாம்.

அதி. கூகூ — தூது

அஃதாவது, அரசரைப் பொருத்தலும் பிரித்தலும் பேணலும் பற்றி வேற்றரசரிடம் அரசரும் அமைச்சரும் முனிவரும் புலவரும் சென்று கூறும் செய்தி. அமைச்சர் செல்வதே பெரும்பான்மை. புலவர் சென்றதற்கு, ஔவையார் அதிகமான் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றதை எடுத்துக் காட்டாகக் கொள்க.

தூது என்னும் சொல் தூதுச் செய்தியையும் அதனைச் சொல் வாரையுங் குறிக்கும். வகுத்துரைப்பார், வழியுரைப்பார் எனத் தூதர் இருவகையர். வேற்றரசன் வினைக்கட் கெல்லாம விடை யிறுக்கும் அறிவாற்றலும் உரிமையும் பெற்றவர் வகுத்துரைப்பார்; அவ்வாற்றலின்றிச் சொல்லிவிடுத்த செய்தியை மட்டுஞ் சொல்பவர் வழியுரைப்பார்.

பிரித்தல் பொருத்தல் பேணல் முதலிய சூழ்ச்சிவன்மையும், அவற்றிற்கேற்ற சொல்வன்மையும் உடைய அமைச்சர்க்கும், அவர் போன்ற பிறருக்கும், தூதுரைத்தல் பொதுவினையாதலின், இது அமைச்சர்க்குரிய வினைசெயல் வகையின் பின் வைக்கப்பட்டது.

காதல் வாழ்க்கையில், தலைவனுந் தலைவியும் ஒருவர்க் கொரு வர் தூது விடுப்பது, இன்பத்துப்பாற் கன்றிப் பொருட்பாற் குரிய தன்றென அதிக.

கூஅக. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(இ—ரை.) அன்பு உடைமை—மக்களிடத்து அன்பாயிருத்தலும்; ஆன்ற குடிப்பிறத்தல்—ஆட்சித் தொழிற்கேனும் அமைச்சுத் தொழிற்கேனும் ஆசிரியத் தொழிற்கேனும் ஏற்ற வகுப்பிலும் குடும்பத்திலும் பிறந்திருத்தலும்; வேந்து அவாம் பண்பு உடைமை—அரசர் விரும்பத்தக்க சிறந்த தன்மைகளுடையனாயிருத்தலும்; தூது உரைப்பான் பண்பு—தூது சொல்வானுக்கு உரிய இலக்கணங்களாம்.

நாட்டிற்கு நன்மையை நாடவேண்டுமாதலின் 'அன்புடைமை' யென்றும், குலத்தொழிலறிவு கல்லாமற் பாதியமையுமாதலின் 'ஆன்ற குடிப்பிறத்தல்' என்றும், அரசருள்ளத்தைக் கவருந்தன்மைகளுடையவன் கூறும் தூதை அவர் விரும்பிக் கேட்பராதலின் 'வேந்தவாம் பண்புடைமை' என்றும், கூறினர். குடியென்றது இங்குத் தொல்வரவான அரசர் குடும்பத்தையும் சேக்கிழார் குடிபோலும் வேளாண் சரவடியையுமாம். அவாவும் என்பது அவாம் எனக்குறைந்து நின்றது. இக்குறளால் இருவகைத் தூதர்க்கும் பொது விலக்கணம் கூறப்பட்டது.

கூஅஉ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

(இ—ரை.) அன்பு—தம் அரசனிடத்து அன்புடைமையும்; அறிவு—தம் வினைக்கு அறிய வேண்டியவற்றை அறிந்திருத்தலும்; ஆராய்ந்த சொல் வன்மை—செவிக்கும் உள்ளத்திற்கும் இனியனவும் பொருட் கொழுமையுள்ளனவும் தகுந்தனவுமான சொற்களை ஆராய்ந்தமைத்துக் கூறும் நாவன்மையும்; தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று—தூது சொல்வார்க்கு இன்றியமையாத மூன்று திறங்களாம்.

'இன்றியமையாத மூன்று' எனவே, முன்பு அமைச்சர்க்குக்கூறப்பட்ட பிறவிலக்கணங்களும் வேண்டுமென்பது பெறப்பட்டது.

கூஅஎ. தூலாரு ணூல்வல்ல ருகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(இ—ரை.) வேலாருள் வென்றிவினையுரைப்பான் பண்பு—வேற்படையுடைய வேற்றரசரிடஞ் சென்று தன் அரசனுக்கு வெற்றி

தரும் வினையைச் சொல்வானுக்கு இலக்கணமாவது; நூலாருள் நூல்வல்லன் ஆகுதல்—அரசியல் நூலை அறிந்தவருள் தான் அந் நூலறிவிற் சிறந்தவனாயிருத்தலாம்.

கொல்லுந் திறத்தினர் என்பது தோன்ற 'வேலார்' என்றும், இருவகைத்தூது வினையும் அடங்க 'வென்றிவினை' என்றும், கூறினர். 'வல்லனாகுதல்' அந்நூற் செய்தியெல்லாவற்றையும் தெளிவாக அறிந்திருத்தலும், தவருகச் சொன்னவிடத்து அதைத் திருத்துதலுமாம்.

கூஅச. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

(இ—ரை.) அறிவு—இயற்கையான அறிவும்; உரு—கண்டார் மதிக்குந் தோற்றப் பொலிவும்; ஆராய்ந்த கல்வி—ஆராய்ச்சியோடு கூடிய கல்வியும்; இம் மூன்றன் செறிவு உடையான்—ஆகிய இம் மூன்றும் நிறைந்தவன்; வினைக்குச் செல்க—வேற்றரசரிடம் தூதனுகச் செல்க.

இம் மூன்றும் நிறைந்தவன் செல்வின், தூதுவினை சிறப்பாக முடியுமென்பது கருத்து. பல நூல்களையும் அவற்றின் வேறுபட்ட வுரைகளையுங் கற்று உலகியலொடு பொருந்தத் தானும் ஆராய்ந்ததை, 'ஆராய்ந்த கல்வி' என்றார்.

கூஅடு. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

(இ—ரை.) தொகச் சொல்லி — வேற்றரசரிடம் பல செய்திகளைச் சொல்லவேண்டியிருக்கும்போது, மூலவகையாலும் ஒப்புமை வகையாலும் சுருக்கவகையாலும் தொகுத்துச் சொல்லியும்; தூவாத நீக்கி நகச்சொல்லி—வெறுப்பான செய்திகளைச் சொல்லும்போது கடுஞ் சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனமகிழச் சொல்லியும்; நன்றி பயப்பது தூது ஆம்—தன் அரசனுக்கு நன்மை விளைப்பவனே நல்ல தூதனாவன்.

பல செய்திகளை ஒவ்வொன்றாக வேறுபடச்சொல்லின், அவற்றின் பண்மைபற்றியும் நெடுநேரங் கேட்குஞ் சலிப்புப் பற்றியும் அவற்றிற்கு இசையார். ஆயின், அவற்றைத்தொகுத்து ஒரே செய்தியாய்ச்சொல்லின் சுருக்கம்பற்றியும் விளைவறியாதும் இசைவர் என்பதாம். வேற்றரசன் மகளைத் தன்னரசனுக்குப் பெண்கேட்

பதும், வேற்று நாட்டில் தன்னுட்டு வணிகக்குழுப்பு ஒன்று தங்கி வணிகஞ் செய்ய இடங்கேட்பதும், போன்றவை மூலவகையில் தொகுத்துக் கூறலுக்கும்; சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் வெட்டுதல், சுரங்கைகள் குடைதல் முதலியவற்றைப் போக்கு வரத்து வாயிலமைப்பு என்று குறிப்பது, ஒப்புமை வகையில் தொகுத்துக் கூறலுக்கும்; கோமுட்டி ஒருவன் தனக்குத் தெய்வங்கொடுத்த ஒரே ஈவைக் கேட்கும் போது, "என் கொட்பேரன் எழுநிலை மாடத்திலிருந்து பொற் கலத்திற் பாற்சோறுண்பதை நான் பார்க்க வேண்டும்." என்று சொன்னதாகக் கதை கூறுவது போன்றது சுருக்க வகையில் தொகுத்துக் கூறலுக்கும்; எடுத்துக் காட்டாம். இன்சொற்குப் பெரும்பாலார் வயப்படுதல் பற்றியே அது நால் வகை ஆம்புடைகளுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. 'ஆம்' பிரித்துக் கூட்டப்பட்டது.

கூஅகூ. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

(இ—ரை.) கற்று—அறநூல்களையும் அரசியல் நூல்களையுங் கற்று; கண் அஞ்சான்—பகையரசரின் சினப்பார்வைக்கு அஞ்சாது; செலச்சொல்லி—அவர் மனத்திற் பதியுமாறு செய்திகளைச் சொல்லி; காலத்தால் தக்கது அறிவது தூது ஆம—காலத்திற் கேற்பத் தகுந்த வழிகளைக் கையாள்பவனே நல்ல தூதனாவன்.

நூற்கல்வி பயன்படாவிடத்துத் தன் மதிநுட்பத்தாலும் உலகியல் அறிவாலும் சமையத்திற் கேற்றவாறு தக்க வழிகளைக் கையாண்டு, வினைமுடிக்க வேண்டியிருத்தலின், 'தக்கதறிவதாந் தூது' என்றார். 'ஆம்' இங்கும் பிரித்துக் கூட்டப்பட்டது.

கூஅஎ. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(இ—ரை.) கடன் அறிந்து—வேற்றரசரிடம் தான் நடந்து கொள்ளவேண்டிய முறைமையை அறிந்து; காலம் கருதி—அவரை நல்ல மனநிலையிற் காணுதற் கேற்ற சமையம் பார்த்து; இடன் அறிந்து—தான் வந்த செய்தியைச் சொல்லுதற்கேற்ற இடமும் அறிந்து; எண்ணி—தான் சொல்ல வேண்டியவற்றை முன்னமே தன் மனத்தில் ஒழுங்காக எண்ணிவைத்து; உரைப்பான் தலை—அவ்வாறு சொல்பவன் தலையாய தூதனாவான்.

நடந்துகொள்ளும் முறைமையாவது, அவர் நிலைமையும் அவர் நாட்டு வழக்கமும் தன்னரசன் நிலைமையும் தன் நிலைமையும் நோக்கி, அவற்றிற்கேற்பக் காணும் முறைமையும் நிற்கும் முறைமையும் சொல்லும் முறைமையுமாம். காலம் என்றது, தட்பவெப்பம் பிறர்த நாளிற் பசியுங் கோப்பும் சினமும் வருத்தமும் கவலையுமின்றி மனம் மகிழ்ந்து அல்லது அமைந்து இருக்கும் சமையம். இடம் என்றது, தனக்குப் பகையானவரன்றித் துணையானவர் உடனிருக்குமிடம். எண்ணுதலுள், அரசன் வினவக்கூடிய வினாக்களும் சொல்லக் கூடிய உத்தரவுகளும், தான்மேற்கொண்டு கூறும் மறுமாற்றங்களும் அடங்கும்.

"வடநூலார் இவ்விருவகையாருடன் ஓலைகொடுத்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை என்று வகுத்துக் கூறினராகலின். அவர் மதமுந் தோன்றத் 'தலை' யென்றார்." என்று பரிமேலழகர் இங்கும் தம் தன்மையைச் சிறிது காட்டியுள்ளார். 'தலை' யென்றது சிறந்தவன் என்றே பொருள்படுவதாம். ஓலையை மட்டும் நீட்டிநிற்பவன் தூதனுகான்; ஓலையாளாகவேயிருப்பான். அத்தகைய வோலை நட்புத்திருமுகமாகவோ பேராசன் கட்டளையாகவோ தான் இருக்கமுடியும். தூதன் என்பது அதிகாரத்தான் வந்தது. இவ்வறு குறளாலும் வகுத்துக்கூறுவான் திறம் கூறப்பட்டது.

கூஅஅ. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(இ—ரை.) தூய்மை—மண் பெண் பொன் என்னும் மூவகையாசையுமின்றித் தூயவனையிருத்தலும்; துணைமை—வேற்றரசரின் அமைச்சரைத் துணையாகவுடைமையும்; துணிவுடைமை—சொல்ல வேண்டிய செய்தியை அஞ்சாது சொல்லும் திடாரிக்கமும்; இம்மூன்றின் வாய்மையும்—இம்மூன்றொடு கூடிய மெய்ம்மையும்; வழி உரைப்பான் பண்பு—தன் அரசன் சொல்லி விடுத்த செய்தியை அவன் சொன்னவாறே வேற்றரசரிடம் சென்று கூறும் தூதனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளாம்.

மூவகை யாசைபற்றிச் செய்தியை வேறுபடக் கூறுமைப் பொருட்டுத் தூய்மையும், வேற்றரசன் சினத்தைத் தடுப்பதற்கும் தன் விரோதக்குச் சார்பாயிருத்தற்கும் துணைமையும், வெறுக்கத்தக்க செய்தியிருப்பினும் விடாமற் சொல்லுதற் பொருட்டுத் துணிவும், எல்லாராலும் நம்பப்படும் பொருட்டு மெய்ம்மையும், வேண்டுமென்றார். 'இன்' இங்கு 'ஒடு'ப்பொருளது. இனி, 'இன்' ஈரச்சாரியையாகக் கொண்டு ஒடுவுறுபு தொக்கதெனினுமாம்.

கூஅஅ. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

(இ—ரை.) விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான்—தன் அரசன் சொல்லி விடுத்த செய்தியை வேற்றரசரிடம் சென்று கூறுபவன்; வடுமாற்றம் வாய்சோரா வன்கணவன்—தனக்கு நேரக் கூடிய தீங்கிற்கு அஞ்சி வாய்தவறியும் தாழ்வான சொற்களைச் சொல்லாத திண்ணிய நெஞ்சனுயிருத்தல் வேண்டும்.

வடு-குற்றம். தாழ்வான சொற்களைச் சொல்லுதல் தன் தகுதிக் கேற்காத குற்றமாதலின், 'வடுமாற்றம்' என் ருர். வாய் சோராமைக்கு ஏதுவான வன்கண் என்க.

கூகூ0. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(இ—ரை.) இறுதி பயப்பினும்—தான் கூறுஞ்செய்தியால் தன் உயிரிழக்க நேரினும்; எஞ்சாது—அஞ்சி விட்டு விடாது; இறைவற்கு உறுதி பயப்பது—தன் அரசன் சொல்லியவாறே வேற்றரசரிடம் செய்தியைச் சொல்லித் தன் அரசனுக்கு நன்மை விளைப்பவனே; தூது ஆம்—சரியான தூதனுவன்.

உம்மை உயர்வு சிறப்பு. 'ஆம்' பிரித்துக் கூட்டப்பட்டது. அதிகமானுக்குத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் வகுத்துரைப்பார் வகையினராயினும், இறுதிபயப்பினும் உறுதி பயக்கும் தூதிற்கு, அவர் பாடிய

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கல் தகைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே." (புறம். கூஙு)

என்னும் பாட்டுச் சிறந்த எடுத்துக் காட்டாம்.

அதி. ஙக—மன்னரைச் சேர்ந்தொழுகல்

அஃதாவது, அமைச்சர், குருக்கள், படைத்தலைவர், தூதர், ஒற்றர் ஆகிய ஐம்பெருங் குழுவினர் அரசனையடுத்து ஒழுகும் முறை. முந்தின அதிகார முதற்குறளில் 'வேந்தவாம் பண்புடைமை' யென்று குறிக்கப்பட்டது இதுவேயாதலின், இது தூதின்பின் வைக்கப் பட்டது.

கூகூக. அகலா தணுகாது தீக்காய்வார் போலக
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்

(இ—ரை.) இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்—வலிமை யுள்ள அரசரை அடுத்தொழுகும் அமைச்சர் முதலியோர்: அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க—அவரிடமின்று மிக நீங்காமலும் அவரொடு மிக நெருங்காமலும் தீயருகே குளிர்காய்வார் போல இடைப்பட்ட இடத்தில் நிற்பதும் இருப்பதும் செய்க.

''அரசன் அன்று கொல்லும்: தெய்வம் நின்று கொல்லும்.

''அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ.'' (சீவக. உ ஈள)

''தீண்டி னுர்தமைத் தீச்சுடும் பன்னர்தீ
ஈண்டு தங்கினோ யோடுமெ ரித்திடும்
வேண்டி னின்னமிர் துந்நஞ்சு மாதலான்'' (மே உ ஙஐ)

'இகல் வேந்தர்' என்றும், 'அகலா தணுகாது தீக்காய்வார் போல்க' என்றும் கூறினர். அமைச்சர் முதலியோர் மிக நெருங்கின் மதியா மைக் குற்றம்பற்றித் தண்டிப்பவரும், மிக நீங்கின் மந்திரச் சூழ்வினைக்குப் பயன்படாத நிலைமையினருமான அரசர்க்கு: குளிர் காய்வார் மிக நெருங்கின் சுடுவதும் மிக நீங்கின் குளிர்போக்காதது மான தீயை, உவமித்தது மிகப் பொருத்தமான இன்னுவமையாம்.

கூகூஉ. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

(இ—ரை.) மன்னர் விழைப விழையாமை—தம்மால் அடுக்கப் பட்ட அரசர் தம் பதவிக்கேற்பச் சிறப்பாக விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதிருத்தல்; மன்னரான் மன்னிய ஆக்கம் தரும்—அவ்

வரசர் வாயிலாகவே அமைச்சர் முதலியோரான தமக்கு நிகேபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

'மன்னர் விழைப' என்றது, உண்டி, ஆடையணி, உறையுள், ஊர்தி, பெண்ணின்பம் முதலியவற்றுட் சிறந்த வகைகளையும்; கண்ணியம், புகழ் முதலியவற்றில் ஒப்புயர்வின்மையையும்; அரசனுக் கென்றே ஒதுக்கப் பெற்ற ஆடிடம், நீர்நிகே முதலியவற்றையும். அரசனுக்கு ஒப்பாதல் அஞ்சி இவற்றை விரும்பாதொழியவே, அரசனே அவ் வச்சத்திற்கு மகிழ்ந்து பலவகைச் செல்வத்தையும் நிகேயாக நுகரத் தருவன் என்பதாம்.

கூகூகூ. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(இ—ரை.) போற்றின் அரியவை போற்றல்—அமைச்சர் தம்மைக் காக்க விரும்பின் கடும்பிழைகள் தம்மேல் வராமற் காத்துக் கொள்க; கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது—அவற்றை நிகழ்ந்தனவாகக் கேள்விப்பட்டு அரசர் ஐயுற்றபின் அவரைத் தெளிவித்தல் எத்துணைச் சிறந்தவர்க்கும் அரிதாம்.

கடும்பிழைகள் பகைவராற் கீழறுக்கப் படுதல், அரசர்க்கேயுரிய உரிமை மகளிரொடு பழகுதல், அரசன் உத்தரவின்றி அவனறைக்குட் புகுதல், அரும்பொருள் கவர்தல் முதலியன. கீழறுக்கப் படுதலாவது பகைவரிடம் பொருள் பெற்றுக்கொண்டு அவருக்குத் துணையாயிருக்க உடன்படுதல் இது அறைபோதல் எனவும்படும். இத்தகைய குற்றங்கள் வராமற் காத்தலாவது, யாரேனும் இவை நிகழ்ந்ததாக அரசனிடம் சொல்லினும், அதை அவன் கடுகளவும் நம்பாதவாறு தூய்மையாக ஒழுகுதல். ஒருமுறை ஐயுற்றபின், அதை ஒருவகையால் தெளிவித்தாலும், அவர் உள்ளத்தில் அது என்றும் நிகேத்திருக்குமாதலின், 'யார்க்கு மரிது' என்றார். உம்மை உயர்வுசிறப்பு.

கூகூச. செவிச்சொல்லுஞ் சோர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

(இ—ரை.) ஆன்ற பெரியாரகத்து—வலிமை நிறைந்த அரசரு கில் இருக்கும்போது; செவிச்சொல்லும் சோர்ந்த நகையும் அவித்து ஒழுகல்—அவர் காண ஒருவர் காதிற்குள் மெதுவாகச் சொல்லுதலையும் ஒருவர் முகம் நோக்கிச் சிரித்தலையும் அடியோடு விட்டுவிடுக.

'சோர்ந்த நகை' என்றதனுள் பிறரொடு கூடிச் சிரித்தலும் அடங்கும். 'செவிச் சொல்லும் சோர்ந்த நகையும்' தம்மைப்பற்றியே

நிகழ்ந்தனவாகக் கருதிக் கடுஞ்சினங் கொள்ளின் அன்றே அழித்து விடும் ஆற்றலராதலின், 'ஆன்ற பெரியார்' என்றும் 'அவித் தொழுகல்' என்றும், கூறினர்.

ஈஉடு. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளோ
விட்டக்காற் கேட்க மறை.

(இ—ரை.) மறை—அரசனுக்குப் பிறரோடு ஒரு மறைபொருள் பற்றிப் பேச்சு நிகழும்போது; எப்பொருளும் ஓரார்—அதில் எந்தப் பொருளையும் செவிசாய்த்து உற்றுக் கேளாமலும்; தொடரார்—அவனை அணுகி வினவாமலும் இருந்து; மற்று அப்பொருளை விட்டக் கால் கேட்க—பின் அம்மறை பொருளை அடக்கிவையாது அவனே வலியச் சொன்னால் அமைச்சர் முதலியோர் கேட்டறிக.

தம்மைப் பற்றியதாயினும் என்பார் 'எப்பொருளும்' என்றார். 'ஓரார்,' 'தொடரார்' என்பன எதிர்மறை முற்றெச்சம். 'மற்று' பின்மைப் பொருளில் வந்தது; வினைமாற்றின்கண் வந்ததன்று.

ஈஉஊ. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

(இ—ரை.) குறிப்பு அறிந்து—அமைச்சர் முதலியோர் அரசனுக்குச் செய்தி சொல்லுங்கால் அவன் உள்ளக் குறிப்பையறிந்து; காலம் கருதி—சொல்லுதற் கேற்ற காலத்தையும் நோக்கி; வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொலல்—அவனுக்கு வெறுப் பில்லாதவற்றையும் வேண்டியவற்றையும் அவன் கேட்க விரும்பும் வகை சொல்க.

கோப்பெருந்தேவி ஊடியிருக்கும்போது காமம் பற்றிய அவலமும், பகையரசர் இகழ்ந்து ஓலைவிடுத்தபோது வெகுளியும் பிறந்து, வேறு செய்தி சொல்வாரிடத்து வெறுப்பையும் சினத்தையும் விளக்குமாதலின், 'குறிப்பறிந்து' என்றும்; வேட்டையாடவும் உரிமை மகளிரொடு விளையாடவும் கருதிய போது, போர்தவிர வேறெச் செய்தியிலும் மனம் பதியாதாகலின். 'காலங்கருதி' என்றும், கூறினர். அரண்மனைப் பொற்கொல்லன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனை அவன் தேவி ஊடிய காலத்துக்கண்டதும், அவ்வூடல் நீங்குதற் கேதுவான செய்தியுடைமை பற்றியே.

"அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்" (கூகஅ)

என்றமையால், இங்கு 'வெறுப்பில' என்றது வினைக்குரியன அல்லாத வற்றை யென அறிக. அரசர் தெய்வத் தன்மை யுடையவராதலின், இன்பமாகச் சுருக்கியும் விளக்கியும் சொல்லுக வென்பார் 'வேட்பச் சொலல்' என்றார்.

கூஉள. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றும்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(இ—ரை.) வேட்பன சொல்லி—பெரும்பயன் படுவனவும் அரசன் விரும்புவனவுமான செய்திகளை அவன் கேட்டிலனாயினும் சொல்லி; எஞ்ஞான்றும் வினை இல கேட்பினும் சொல்லாவிடல்—எப்போதும் வினைக்குதவாத வீண் செய்திகளை அவன் கேட்பினும் சொல்லாது விடுக.

இதனால், ''சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.'' (உ ஙஙு)

என்பது வற்புறுத்தப் பெற்றது. 'வினையில' என்பதனுள் வினையுள என்பதும், 'கேட்பினும்' என்பதனுள் கேளாவிடினும் என்பதும், மறைபடுசொற்களாக வருவிக்கப்பட்டன. வினை யென்றது பயன் பாட்டை, 'கேட்டல்' சொல்லச் சொல்லுதலும் செவிகொடுத்தலும் ஆகிய இரு செயலும் பற்றியதாம். 'கேட்பினும்' எச்சவும்மை. 'சொல்லா' ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம்.

கூஉஅ. இனைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்''.

(இ—ரை.) இனையர் இனமுறையர் என்று இகழார்—இவர் எமக்கு இனையவர் என்றும், எமக்கு இன்ன முறையினர் என்றும், மதிப்புக் குறைவாகக் கருதாது; நின்ற ஒளியோடு ஒழுகப்படும்—அரசரிடத்து அமைந்துள்ள தெய்வத் தன்மையொடு பொருந்த ஒழுகுதல் வேண்டும்.

முன்னறி தெய்வங்களான பெற்றோர் தவிர, வேறெந்த உறவின ரும் இனமுறைபற்றி எளிமையாகக் கருதாது, மற்றக் குடிகள் போன்றே அரசரைத் தெய்வமாகப் போற்றவேண்டு மென்பது, தொன்று தொட்ட தமிழ்மரபு. ஆயின், கணவன் உயிர்வாழ்ந்திருக் கும் போது மனைவி அரசாளுதல் தமிழ்மரபன்றுதலின், மேனாட்டு முடி சூட்டு விழாவிற்போல் கணவன் மனைவிக்குமுன் மண்டியிட்டுநின்ற வொளியோ டொழுகல் தமிழகத்தில் இல்லை. ஐம்பூதங்களுள்

உறுப்பியல்—அமைச்சு—மன்னரைச் சேர்ந்தொழுகல் கூறுநி

ஒன்றுன தீ தெய்வத்தன்மையுள்ளதென்று கருதப்பட்டதனாலும், அரசன் துன்பவிருளையும் அகவிருளையும் போக்குவனுதலாலும், அரசனின் தெய்வத்தன்மையை 'ஒளி' என்றார்.

"உறங்கு மாயினும் மன்னவன் றன்னெளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்
தறங்கள் வௌவ வதன்புறங் காக்கலார்."

என்று திருத்தக்க தேவரும் கூறுதல் காண்க (சீவக. உசஉ).

அரசன் அன்று கொல்லுந் தெய்வமாதலின், அரசரைப்போற்று தவர் அன்றே அழிக்கப்படுவர் என்பதாம். 'படும்' என்பது இங்கு கூடு—ஆம் குறளிற்போல் 'வேண்டும்' என்னும் பொருளதாம்.

'இகழார்' எதிர்மறை முற்றெச்சம்.

கூகூ. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார் துளக்கற்ற காட்சி யவர்.

(இ—ரை.) துளக்கு அற்ற காட்சியவர்—நிலைத்த உறுதியான அறிவினையுடையார்; கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செய்யார்—யாம் அரசனுல் மதிப்பாக ஏற்றுக்கொள்ளப் பட்டேம் என்று கருதித் தம் நிலைமையொடு பொருந்தாதவற்றைச் செய்யார்.

நிலைமை யுயர்ந்தபின் தம் பழைய நிலைமையை நினைத்து முன் போன்றே தாழ்மையாய் ஒழுகாது, "நன்னிக்குப் பதவி வந்தால் நள்ளிரவிற் குடைபிடிப்பான்." என்பதற் கிணங்கத் தலைகால் தெரியாது நடப்பவரே உலகத்துப் பலராதலின், என்றும் ஒரு தன்மையராக விருந்து மன்னர் விழைப விழையாது அவரிடத்து நின்ற வொளியோ டொழுகுபவரைத் 'துளக்கற்ற காட்சியர்' என்றார். காட்சி என்றது அகக்காட்சியை.

ஹூ. பழைய மெனக் கருதிப் பண்பல்ல செய்யுஞ் கெழுதகைமை கேடு தரும்

(இ—ரை.) பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை—அரசனுடு இளமையிலிருந்தே யாம் பழகினேம் என்று கருதித் தமக்குத் தகாதவற்றைச் செய்யும் தவருன நட்புரிமை; கேடுதரும்—அமைச்சர் முதலியோர்க்கு அழிவைத்தரும்.

பழைமையாவது வினையாட்டுத் தோழமையும் கல்வித் தோழமையும். அரசப் பதவியேற்ற பின்பும் பழைய தோழமைபற்றிச் சமநிலை கொண்டாடிக் குற்றஞ் செய்யின், அரசர்பொருது தண்டிப்பராதலின், 'கெழுதகைமை கேடுதரும்' என்றார். இம்முக்குறளாலும், இளமையும் நெருங்கிய தொடர்பும் பற்றி அரசர் வெறுப்பன செய்யற்க என்பது கூறப்பட்டது.

அதி. எக — குறிப்பறிதல்

அஃதாவது, அமைச்சர் முதலியோர் அரசரது உள்ளக்குறிப்பை அவர் முகக் குறிப்பால் அறிந்துகொள்ளுதல், இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாத தாதலின், அதன் பின் வைக்கப் பட்டது. இதனால், அமைச்சர் முகக்குறிநூலும் (Physiognomy) கற்றிருக்கவேண்டுமென்பது குறிப்பாய்ப் பெறப்படும்.

701. கூருமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாருநீர் வையக் கணி

(இ—ரை.) குறிப்புக் கூருமை நோக்கி அறிவான்—அரசன் கருதிய கருமத்தை அவன் கூருமலே அவன் முகத்தை நோக்கி அறியவல்ல அமைச்சன்; எஞ்ஞான்றும் மாருநீர் வையக்கு அணி—உலகுள்ள அளவும் ஒருபோதும் வற்றுத கடலைத் தன்னுட்கொண்ட ஞாலத்தில் வாழ்வார்க்கு ஓர் அணிகலமாம்.

குறிப்பு உள்ளத்திற் குறித்தது. நோக்குதல் நுணித்துப் பார்த்தல். முகம் என்பது முகத்திலுள்ள கண், கன்னம், மீசை, உதடு, பல், நா முதலிய வுறுப்புக்களைக் குறிக்கும். இவற்றுள் முதன்மையானது கண். உலகம் முத்தொழிற்படுதலின் 'உலகுள்ள அளவும்' என்றும்; ஞாலம் நீராற் சூழப்படாமல் அதைத் தன்னுள் ஒரு கூருகக் கொண்டிருப்பதனாலும், நீராற் சூழப்பட்ட நிலப்பகுதி பலவாயிருப்பதனாலும், 'தன்னுட்கொண்ட ஞாலம்' என்றும்; கூறப் பட்டது. உலக முழுவதையுங் குறித்தற்கு 'மாருநீர் வையம்' என்றார். கடலை 'மாருநீர்' என்றது எதுகை நோக்கி. 'வையத்திற்கு' என்பதன் அத்துச் சாரியை தொக்கது. 'வையம்' என்பது மக்கள் வைகும் நிலப் பகுதிகளைமட்டுங் குறிப்பின், "நீராற் சூழப்பட்ட" என்று பரிமேலழகர் கூறியதும் பொருந்தும். 'குறிப்பு', 'வையம்' என்பன ஆகுபெயர். ஒண்மையும் நுண்மையுமுள்ள மதியினால் மன்பதை முழுவதற்கும் அழகு செய்தலின், 'வையக் கணி' என்றார்.

702. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(இ—ரை.) அகத்தது ஐயப்படாது உணர்வானை—ஒருவனது மனத்தின்கண் உள்ளதனை ஒருதலையாக உணரவல்லவனை; தெய்வத்தோடு ஒப்பக் கொளல்—வடிவால் மாந்தனையினும் மதிநுட்பத்தால் தெய்வம்போன்றவனென்று கருதி, அதற்கேற்ப மதித்துப் போற்றுக.

உணர்தல் உள்ளத்தால் நுணுகியறிதல் மாந்தன் மாந்தனே யாதலின் 'தெய்வமாக' என்னாது 'தெய்வத்தோ டொப்ப' என்றார். 'படாஅ' இசைநிறை யளபெடை.

703. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

(இ—ரை.) குறிப்பின் குறிப்பு உணர்வாரை—ஒருவரது முகக் குறிப்பினுள் அவரது உள்ளக் குறிப்பை அறியவல்ல அமைச்சரை; உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்—அரசர் தம் பத்துறுப்புக்களுள் எதை அவர் வேண்டினுங் கொடுத்தும் தமக்குத் துணையாகக் கொள்க.

'குறிப்பிற் குறிப்புணர்வாரை' என்பதற்கு, "தங்குறிப்பு நிகழு மாறறிந்து அதனுற்பிறர் குறிப்பறியுந் தன்மையாரை" என்று பொரு ளுரைத்து, "முகக் குறிப்பினுலே உள்ளக்கருத்தை அறியுமவர்களை" என்று உரைத்த மணக்குடவரையும், "அரசரது முகங்கொண்ட குறிப்பினுன் அவர் யாதானும் ஒரு கருமத்தை அவர் உள்ளம் கொண்ட குறிப்பினை அறிவார் யாவர் மற்று அவர்தம்மை" என்று உரைத்த காலிங்கரையும், பரிமேலழகர் பழித்தது பொருந்தாது. குறிப்பு எல்லார்க்கும் ஒத்து நிகழாமையின். நாடு, ஊர், ஆறு, மலை, யானை, குதிரை, தேர், முரசு, மாலை, கொடி என்பன அரசரின் பத்துறுப்புக்கள் (திவா., பிங்.).

704. குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

(இ—ரை.) குறித்தது கூறுமைக் கொள்வாரோடு—ஒருவர் தம் மனத்திற் கருதியதை அவர் கூறுமலே அறியவல்லவரோடு; ஏனை உறுப்பு ஓர் அனையர்—மற்றவர் உறுப்பான் ஒருதன்மையராக ஓபபா ரேனும்; வேறு—மதித்திறனுலும் அறிவாலும் வேறுபட்டவராவர்.

எனினும் (ஏனும்) என்பது அவாய் நிலையால் வந்தது. ஆரும் அறிவில்லாத மாக்கள் நிலையினர் என்னும் கருத்தால் 'வேறு' என்றார். 'ஆல்' அசைநிலை.

701. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.

(இ—ரை.) குறிப்பின் குறிப்பு உணராவாயின்—பிறர் முகத்தி லும் முகவுறுப்புக்களிலுமுள்ள குறிப்புக்களைக் கண்டும் அவற்றால் அவர் உள்ளக் குறிப்புக்களைக் காணமாட்டாதனவாயின்; உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ—ஒவ்வொரு புலனுக்கும் ஒவ்வொன்றாக வுள்ள ஐம்புல வுறுப்புக்களுள், காட்சியையே தம் புலனாகக் கொண்ட கண்கள் வேறென்ன பயன்படுவனவாம்?

'குறிப்பு' இரண்டனுள், முன்னது தோற்றமாகிய புறக்குறிப்பு; பின்னது கருத்தாகிய அகக்குறிப்பு. இரண்டும் தொழிலாகு பெயர். குறிப்பறிதற்கு இன்றியமையாத கருவியாதல்பற்றி, அறிவான் உணர்வு அவன் கண்ணுகிய உறுப்பின்மேல் ஏற்றப்பட்டது. என்ன பயத்தவோ என்னும் வினை, ஒரு பயனுமில்லை யென்னும் விடையை வேண்டி நின்றது. இவ்விரு குறளாலும் குறிப்பறியமாட்டாதது இழிவு கூறப்பட்டது.

702. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(இ-ரை.) அடுத்தது காட்டும் பளிங்குபோல்—தன்னையடுத்த பொருளின் வடிவத்தையும் நிறத்தையும் தன்னுட் காட்டும் கண்ணாடி போல; நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும்—ஒருவர் மனத்தில் தோன்றிய கருத்தை அவர் முகமே காட்டிவிடும்.

'அடுத்தது' ஆகு பொருளது. ஒரு கருத்து ஒருவர் உள்ளத் தில் முன்னில்லாது புதிதாய்த் தோன்றிய மிகையாதலின், 'கடுத்தது' எனப்பட்டது. 'கடுத்தல் மிகுதல். இவ்வுவமையில், தொடர்பினால் ஒன்றையொன்று காட்டுதல் பொதுத்தன்மையாம். பளிங்கு புறப் பொருளை அகத்திற் காட்டுவது; முகம் அகப்பொருளைப் புறத்திற் காட்டுவது.

703. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

(இ—ரை.) உவப்பினும் காயினும் தான் முந்து உறும்—ஒருவர் இன்னொருவரை விரும்பி மகிழ்ந்தாலும், வெறுத்துச் சினந்தாலும், தான் அவற்றை முன்னறிந்து அவற்றைப் பிறர்க்கு அறிவிப்பதில் வாயினும் முற்பட்டு நிற்றலால்; முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ—முகத்தைப்போல் அறிவுமிக்க வேறு வுறுப்பு ஏதேனும் உண்டோ? இல்லை.

ஒருவரின் விருப்பு வெறுப்புக்களை அவர் வாய்திறந்து சொல்லு முன், அவர் முகமே முறையே மலர்ந்தும் சுருங்கியும் தெரிவித்து விடுதலால், 'முகத்தின் முதுக் குறைந்ததுண்டோ' என்றார். இங்கு முந்துறுதற் போட்டி முகத்திற்கும் வாய்க்கும் இடைப்பட்டதாம். முது = முதுமையால் உண்டாகும் அறிவு, அறிவு. முது—முதுக்கு. ஒ. நோ: மெது—மெதுக்கு. முதுக்கு உறைதல்= அறிவு தங்குதல், அறிவடைதல். உவப்பான் காய்வான் இயல்புகள் அவர் முகத்தின் மேல் ஏற்றப்பட்டன. உணர்வான் செயல் அவன் கண்ணின்மேல் ஏற்றப்பட்டதுபோல் (௭0கி.)

௭0அ. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(இ—ரை.) இதற்கு ஈருரைகள் உள.

(க) அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின்—புறக் குறிப்புக்களைக் கருவியாகக் கொண்டு அரசனின் உள்ளத்தை நோக்கி அதிலுள்ள கருத்தை அறியவல்ல அமைச்சரை ஆட்சித் துணையாகப் பெற்றால்; முகம் நோக்கி நிற்க அமையும்—அரசன் அவ்வமைச்சரின் முகத்தை நோக்கி எதிரே நின்றாற் போதும்; தன் வாய்திறந்து ஒன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. அவர் தாமாகச் செய்தியை அறிந்து கொள்வர்.

(உ) அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின்—குறை வேண்டுவான், தன் மனத்தைக் குறிப்பால் அறிந்து தான் உற்ற குறையை யுணர்ந்து அதைத் தீர்ப்பாரைப் பெறின்; முகம் நோக்கி நிற்க அமையும்—அவர்தன் முகம்நோக்கும் எல்லையில் தானும் அவர் முகம் நோக்கி நின்றாற்போதும்.

இது பரிமேலழகருரையைத் தழுவியது. இவ்வதிகாரம் அரசரைச் சார்ந்து ஒழுகுபவர் அவர் குறிப்பறிதலைப் பற்றியதாதலாலும், குறையுறுவான் செய்தி 'இரவு' அதிகாரத்திற்கே ஏற்றதாதலாலும், இப்பொருட்கு 'உணர்வார்' என்னுஞ் சொற்கு வழிநிலை வினைப்

பொருள்கொள்ள வேண்டியிருப்பதனாலும், இவ்வுரை முன்னது போற் சிறந்ததன்றும்.

இம் மூன்று குறளாலும் குறிப்பறிதற்கு முகங் கருவியென்பது கூறப்பட்டது.

705. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

(இ—ரை.) கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின்—அரசரின் பார்வை வேறுபாடுகளை அறியவல்ல அமைச்சரைப் பெற்றால்; பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்—அவ்வரசர்க்குப் பிறரோடுள்ள பகைமையையும் நட்பையும் அவர் கண்களே தெரிவிக்கும்.

பார்வை வேறுபாடுகள் எண்சுவையொடு சமந்தமும் (சாந்தமும்) சேர்ந்த தொண்சுவை (நவரசம்) பற்றியன; பகைமை பற்றிய சினநோக்கு கண் சிவப்பாலும், நட்புப்பற்றிய மகிழ்நோக்கு கட் பொலிவாலும், அறியப்படும். 'கண்' இரண்டிட் பின்னது ஆகுபெயர்.

706. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

(இ—ரை.) நுண்ணியம் என்பார் அளக்கும் கோல்—யாம் நுணுமறிவுடையேம் என்று தம்மைக் கருதும் அமைச்சர் அரசரின் கருத்தை அளக்குங் கோலாவது; காணுங்கால் கண் அல்லது பிற இல்லை—ஆராயுமிடத்து அவ்வரசர் கண்ணன்றி வேறில்லை.

நோக்கு, வடிவு, சொல், செயல், கூட்டுறவு, பொருள், பிறர் கூற்று முதலியனவாக, ஒருவர் மற்றொருவர் கருத்தை அளந்தறியும் வழிகள் பலவாயினும், அவற்றுள் நோக்கு வேறுபாட்டைக் கொள்ளும் கண்ணே, அகக் கண்ணுகிய மனத்தொடு தொருங்கிய தொடர்புடையதாய், அடுத்தது காட்டும் பளிங்குபோல் உள்ளக் கருத்தை உடன் காட்டுவதாயும் எளிதில் மறைக்கக் கூடாததாயும், நோக்கல் லாத பிறவெல்லாம் மனத்தொடு தொடர்பற்றனவாயும் எளிதில் மறைக்கக் கூடியனவாயும், இருத்தலால், கண்ணைப் பிரித்துக் கூறினர். நோக்கு குறிப்புள் ஒரு கூறாய் அடங்கும். குறிப்பு உடல் முழுவதையுந் தழுவுமேனும், முகக் குறிப்புச் சிறந்ததும் அதன் ஒரு கூறான கட்குறிப்புத் தலைசிறந்ததுமாகும் வடிவில் ஆடையணியும்

அடங்கும். அறிவின் நுண்மை அறிவையுடையார்மேல் ஏற்றப்பட்டது. 'கண்' ஆகுபெயர்.

"இனி, அஃகுக்குங் கோலென்று பாடமோதி, நுண்ணியமென்றிருக்கும் அமைச்சரை அரசரஃகுக்குங் கோலாவது கண்ணெனவுரைத்து, தன் வெகுளி நோக்கால் அவர் வெகுடற் குறிப்பறிகவென்பது கருத்தாக்குவாரு முளர்" என்று பரிமேலழகர் கூறியிருப்பதால், 'அஃகுக்குங்கோல்' என்றும் பாடவேறுபாடிருந்தமை அறியப்படும். இவ்வேறுபாடு மணக்குடவ பரிப்பெருமாள் பரிதி காலிங்கர் உரைகளிற் காணப்படாமையால், அவரல்லாத பிறரதாகும். இவ்விரு குறளாலும் குறிப்பறிதற்கு முகத்திற் சிறந்த வுறுப்பு கண்ணென்பது கூறப்பட்டது.

அதி. ௭௨.—அவையறிதல்

அதாவது, அமைச்சரும் தூதரும் அரசனுடனிருக்கும் அவையின் இயல்பை அறிதல். தம் அரசனுடனுள்ள அவையை ஏற்கெனவே அறிந்திருப்பராதலால், இது சிறப்பாக வேற்றரசரின் அவையியல்பை அறிதலைப் பற்றியதாம்.

அவையினர் ஒற்றரல்லாத ஐம்பெருங் குழுவினரும் புலவரும் நண்பருமாவர். நல்லவை அல்லது நிறையவை யென்றும், புல்லவை அல்லது குறையவை யென்றும், அவை இருதிறப்படும். அவற்றுள் முன்னது பேரறிஞர் கூட்டமும் பின்னது சிற்றறிஞர் கூட்டமுமாகும். நல்லவைக்கு வல்லவை, நுண்ணவை என்றும் பெயர். இனி, சொல்வாரொடு ஒப்புநோக்கி உயர்வு, ஒப்பு, தாழ்வு எனவும் அவை முத்திறப்படும்

வேற்றரசனிடத்தில் ஒன்றைச் சொல்வோர்க்கு அவன் குறிப்பறிதலேயன்றி அவன் அவையின் இயல்பை அறிதலும் வேண்டுதலின், இது குறிப்பறிதலின் பின் வைக்கப்பட்டது.

௭௧. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர்.

(இ—ரை.) சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர்—சொல்லின் தொகுதியை அறிந்த தூய நடையினர்; அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக—தாம் ஒன்றை அரசனிடம் சொல்லும்போது, அவனுடனிருந்த அவையின் திறத்தை அறிந்து அதற்கேற்ப ஆராய்ந்து சொல்லுக.

சொல்லின் தொகை யென்றது அமைச்சர்க்கும் தூதர்க்கும் தெரிந்திருக்கவேண்டிய சொற்றொகுதியை (Vocabulary). தூய்மை யென்றது, பிறமொழிச் சொல்லும் கொச்சைச் சொல்லும் வழூஉச் சொல்லும் இடக்கர்ச் (Vulgar) சொல்லும் அவையல் (Unparliamentary) கிளவியும் திசைச் (Provincial) சொல்லுங் கலவாது, இயன்ற வரை எல்லார்க்கும் விளங்குமாறு பேசும் தூய இலக்கண நடையை. அவையறிந்து சொல்லுதலாவது, அதன் திறத்திற்கேற்ப நடையை உயர்த்தியும் தாழ்த்தியும இடைநிகர்த்தாகவும் பேசுதல். ஆராய்ந்து சொல்லுதலாவது, இரட்டுறலும் கவர்படலும் இடத்திற்கேற்காச் சொல்லும் குறிப்புச் சொல்லும் நீக்கி, வெளிப்படையாகவும் விளக்க மாகவும் கோவைபடச் சொல்லுதல். ஓரிடத்து நற்சொல் மற்ஹோ ரிடத்தில் இடக்கர்ச் சொல்லாக விலக்கப்படுதலால், இடத்திற்கேற் பவும் சொற்களோ ஆளவேண்டிய நிலைமையுளதாம்.

செஞ்சொல் ஆகுபொருட் சொல் (இலக்கணச் சொல்), குறிப்புச்சொல் என்பன சொல்லின் வகையேயன்றித் தொகையாகா.

திருவள்ளுவர் வேத்தியலொடு பொதுவியலிலுஞ் சேர்த்தே கூறுவதால், பிற அவைகளிற் சொற்பொழிவாற்றும் அறிஞர்க்கும் இதுவே நெறியாகக் கொள்க.

ஏகஉ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி னடைதெரிந்த நன்மை யவர்.

(இ—ரை.) சொல்லின் நடைதெரிந்த நன்மையவர்—சொற்க ளின் வழக்காற்றை யறிந்த நல்லறிஞர்; இடைதெரிந்து—அவை யிற் பேசுஞ் சமையத்தை நோக்கி; நன்கு உணர்ந்து சொல்லுக—அவையினரின் மனநிலையைத் தெளிவாக அறிந்து அதற்கேற்ப ஒரு பொருளைப் பற்றிச் சொல்க.

சொல்லின் நடையாவது; உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இருவகை இடவழக்கிலும், இயல்பு வழக்கு திரிபு வழக்கு என்னும் இருவகை ஆட்சி வழக்கிலும், செஞ்சொல் ஆகுபொருட் சொல் குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொல்லும், முறையே, செம்பொருளும் ஆகுபொருளும் குறிப்புப் பொருளும் உணர்த்தும் முறை. இடைதெரிதலாவது கண் வேலையும் உறக்க வேலையும் நீண்டநேரம் கேட்டுச் சலித்தவேலையும் வேலூர் இடத்திற்குச் செல்லும்வேலையும் அறிதலாம். நன்கு உணர்ந்து சொல்லுதலாவது அவையினர்க்கு விருப்பமான பொருளை இனிதாகவும் ஒருக்கமாக வும் விளக்கலையுஞ் சொல்லுதல்.

கஅஉ. அவையறியார் சொல்லன்மேற் கொண்பவர் சொல்லின் வகையறியார் வல்லதூஉ மில்.

(இ—ரை) அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர்—தாம் பேசும் அவையின் திறத்தை யறியாது அதன் முன் ஒன்று சொல்லு தலை ஏற்றுக்கொண்டவர்; சொல்லின் வகை அறியார்—சொல்லுத லின் கூறுபாட்டை அறியாதவராவர்; வல்லதும் இல்—அதோடு, அவர் கற்றுத் தேர்ந்த கலையும் அவர் கல்லாததாகக் கருதப்படும்.

கற்றோரவையில் உயர்ந்த நடையில் உயர்ந்த பொருள் பற்றியும், கல்லாரவையில் எளிய நடையில் எளிய பொருள் பற்றியும், பேசுதல் என்றிச் செற்பொழிவாற் பயனின்மையின், 'சொல்லின் வகையறி யார்' என்றும்; அவைக்கு ஏற்காதவாறு பேசுவாரைப் பற்றி "இதை யறியாதவர் வேறு எதையும் அறியார்," என்னும் கருத்துண்டாத லின், "வல்லதூஉம் இல்" என்றும் கூறினார். 'சொல்லின் வகை' யாவது,

"உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவை னுளம்கொளச்"

சொல்லுதல். 'வல்லதூஉம்' இன்னிசை யளபெடை.

கஉச. ஒளியார்முன் னெள்ளிய ராதல் வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்.

(இ—ரை.) ஒளியார் முன் ஒள்ளியன் ஆதல்—அறிவால் வினாங் குவார்முன் தாமும் அறிவுச்சுடராக வினாக்குக; வெளியார் முன் வான்சுதை வண்ணம் கொளல்—அறிவில்லாத வெண்ணீர்முன் வெள்ளையான சுண்ணச்சாந்தின் நிறத்தைத் கொள்க.

'ஒளியார்' என்றது சொற்பொழிவும் அறிஞரின் மிக்காரையும் ஒத்தாரையும் 'ஒளியார்' ஒள்ளியார் என்பதன் தொகுத்தல். இனி, அகவொளியாகிய அறிவுடையார் எனினுமாம். ஒள்ளியராதல் மதி நுட்பமும் நூற்கல்வியும் உலகியறிவும் சொல்வன்மையும் தோன்ற விளக்கியுரைத்தல. 'வெளியார்' வெள்ளியார் என்பதன் தொகுத் தல். அறிவில்லாதவரை வெளியார் என்றது, வயிரமில்லாத மரத்தை வெள்ளையென்றும் வெளிறென்றும் சொல்லும் வழக்குப் பற்றி. அறிஞருக்கு அறிவு விளங்கித் தோன்றுவதுபோல் அறிவிலி கட்கு அறியாமையே விளங்கித் தோன்றுமாதலின், 'வான்சுதை வண்ணங் கொளல்' என்றார். அறியாமையின் இழிவுபற்றிக் கருத்துப்

பொருள் வெண்மையைக் காட்சிப்பொருள் வெண்மையோ டிணைத்துக் கூறினர். அறிவிலிகட்கு அறிவிலியாகுக என்பது, சிறுபிள்ளைகட்குச் சிறுபிள்ளையாகுக என்பது போன்றதாம்.

எகடி. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

(இ—ரை.) முதுவருள் முந்து கிளவாச் செறிவு—அறிவால் தம்மினும் மிக்கோ ரவையின்கண் அவரினும் முற்பட்டு ஒன்றைச் சொல்லாதிருக்கும் அடக்கம்; நன்று என்றவற்றுள்ளும் நன்றே—அவையிற் பேசுவார்க்கு நல்லதென்று சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நல்லதே.

முதுவரின் அறிவுமிகையும் தம் அறிவுக் குறைவும், முந்துகிளத்தலால் நேரும் அடக்கமின்மையும் வழுப்படலுமாகிய இருமடிக் குற்றமும், முந்து கிளவாமையாலுண்டாகும் அடக்கமும் வழுப்படாமையும் ஆகிய இருமடி நன்மையும், எண்ணியடங்கும் அடக்கம் அறிவோடு கூடியதாதலின், அதை 'நன்றென்றவற்றுள்ளும் நன்றே' என்றார். முன்கிளத்தலே விலக்கியமையாலும், உடன் கிளத்தல் அவையோர்க்குப் பயன்படாமையுஞ் சேர்ந்து மும்மடிக் குற்றந் தங்குமாதலாலும், பின்கிளத்தலே, அதுவும் அவையோர்க்குப் பயன்படினே, நன்றுகும் என்பதாம். ஏகாரம் தேற்றம்.

எகக. ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

(இ—ரை.) வியன் புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு—பரந்த நூற்பொருள்களை உள்ளத்திற் கொண்டு அவற்றின் உண்மையை உணரும் உயர்ந்த அறிஞரவையில் வல்லாரொருவன் வழுப்படல்; ஆற்றின் நிலேதளர்ந்த அற்றே—வீடு பேற்றின் பொருட்டுத் துறவுநெறிக்கண் நெடிது ஒழுகினவன் அந்நெறியினின்றும் தவறி வீழ்ந்ததை யொக்கும்.

ஆற்றின் நிலேதளர்தலாவது, அருள்மேற்கொண்டு கொலை தவிர்ந்து கடுந்தவஞ்செய்து ஐம்புலனு மடக்கியவன் கூடாவொழுக்கத்துட்படுதல். அத்துணைக் கேடானதே நல்லவையில் வல்லான் வழுப்படல், "ஆனைக்கும் அடிசறுக்கும்." என்பது, நாப்பிசகைக் காக்குமே யன்றி அறிவுப் பிசகைக் காவாது. கூடாவொழுக்கத்தான் பயனிழந்து இழுப்படுவது போன்றே, வழுப்பட்ட வல்லானும் பதவி யிழந்து இழுப்படுவான் என்பதாம். ஏகாரம் தேற்றம்.

எகஎ. கற்றறிந்தார் கல்வி விளங்குங கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

(இ—ரை.) கசடு அறச் சொல் தெரிதல் வல்லாரகத்து—வழுவின்றிச் சொற்பொழிவுகளை ஆராய வல்ல அறிஞரவைக்கண் உரை நிகழ்த்தின்; கற்று அறிந்தார் கல்வி விளங்கும்—பலநூல்களும் புங் கற்று அவற்றின் பொருளை அறிந்தவரின் கல்வி விளங்கித்தோன்றும்.

சொல் என்றது சொற்பொழிவை. உரை நிகழ்த்தின் என்பது அவாய் நிலையால் வந்தது.

''புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்.'' (பழமொழி, ஈ).

எகஅ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

(இ—ரை.) உணர்வது உடையார்முன் சொல்லல்—பிறர் உணர்த்த வேண்டாது தாமே பொருள்களை யுணரவல்ல ஆறிவுடையாரவைக்கண் கற்றுர் ஒன்றைச் சொல்லுதல்; வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்த அற்று—தானுக வளரும் பயிர் பின்ன பாத்திக்குள் நீரை வார்த்தாற் போலும்.

தானே வளரும் அறிவு மிக விரைந்து வளரும் என்பதாம். இவ் விரு குறளாலும், ஒத்காரவைக்கண் கற்றோர் தமக்குரிய இலக்கிய நடையிற் பேசுக என்பது கூறப்பட்டது.

எகக. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(இ—ரை.) நல் அவையுள் நன்கு செலச் சொல்லுவார்—நல்ல அறிஞரவைக்கண் நல்ல பொருள்களை அவர் மனங்கொள்ளச் சொல்ல வல்லார்; புல் அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க—அறிஞரில்லாச் சிறியோரவைக்கண் அவற்றை மறந்துஞ் சொல்லாதிருக்க.

சொல்வின், பன்றிக்குமுன் முத்தைப் போடுதலென்று நல்லவையும், பொருள் விளங்காமையிற் புல்லவையும் பழிக்கலால், இருசாரார்க்கும் ஆகாமை கருதிப் 'பொச்சாந்துஞ் சொல்லற்க' என்றார்.

குஉ0. அங்கணத்து ளுக்க வமிழ்தற்ருற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(இ—ரை.) தம் கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல்—அறிஞராவார் அறிவால் தம் இனத்தவரல்லாதா ரவைக்கண் நிகழ்த்தும் அரும்பொருட் சொற்பொழிவு; அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று—சாய்கடைக்குள் ஊற்றிய பாலிப்போலும்.

இனி, தம் கணத்தர் அல்லார்முன் கோட்டிகொளல்—அறிஞராவார் அறிவால் தம் இனத்தவ ரல்லாதா ரவைக்கண் அரும்பொருட் சொற்பொழிவு நிகழ்த்தற்க; அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று—நிகழ்த்துவது சாய்கடைக்குள் ஊற்றிய பாலிப்போலும், என்றுமாம். இப்பொருள்கோட்குக் 'கொளல்' 'அல்'லீற்று எதிர்மறை வியங்கோள். நிகழ்த்துவது என்பது அவாய் நிலையால் வந்தது. நிகழ்த்துவது என்றது நிகழ்த்தும் சொற்பொழிவை. இது பரிமேலழகர் கொண்ட பொருள்கோளைத் தழுவியது.

இவ்விருவகைப் பொருள்கோளுள்ளும் முன்னதே இயற்கையானதாம். 'ஆல்' அசைநிலை.

"பிறரெல்லாங் 'கொள' லென்பதனைத் தொழிற் பெயராக்கி யுரைத்தார்; அவர் அத்தொழில் 'அமிழ்'தென்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர்." என்ருர் பரிமேலழகர். உவமத்தையும் பொருளையும் இணைக்குங்கால், பெயரொடு பெயரும் வினையொடு வினையும் இயையவேண்டுமென்பது சரியே. ஆயின், சொன்முறை செய்யுளின் யாப்பிற்கும் தொடைக்கும் ஏற்றவாறு ஆற்ருெழுக்கினின்றும் சிறுபான்மை வேறுபட்டிருக்குமாதலால், உரையாசிரியர் அதை உரைநடை முறைப்படி மாற்றிக்கொள்ளல் வேண்டும். ஆகலால், 'உக்க அமிழ்தற்று' என்பதை அமிழ்து உக்க அற்று என்று மாற்றிக்கொள்வதே தக்கதாம். இனி, அங்ஙனமன்றி, 'கோட்டி கொளல்' என்பதற்குக் கோட்டி கொள்ளும் சொல் அல்லது சொற்பொழிவு என்று பொருள்கொள்ளினும் பொருந்துவதாம். குறளின் போக்கையும் ஓசையையும் நோக்குமிடத்து.

"சூடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. (கூகஅ)

"குன்றேறி யானைப்போர் கண்டற்ருற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை" (எடிஅ)

என்பவற்றிற்போல், உவமம் முன்னும் பொருள் பின்னுமாக ஒரே சொல்லியமாய் (வாக்கியமாய்) அமைந்திருப்பது விளங்கித் தோன்

றுதல் காண்க. பரிமேலழகர் கருத்தே ஆசிரியர்க்கு இருந்திருக்கு மாயின்,

அங்கணத்து ளுக்க வமிழ்ததனுற் றங்கணத்
ரல்லார்முற் கோட்டி கொளல்.

என்றிரு,

தங்கணத்த ரல்லார்முன் சொல்லல் சொலினஃதாம்
அங்கணத்து ளுக்க வமிழ்து.

என்றிரு, தெளிவாக யாத்திருப்பர். மேலும், ஒக்குறகீ இருசொல் லியமாகக் கொள்வது, 'சொல்லின் அது' அல்லது 'கொள்ளின் அது' என்னும் இருசொற்களீ அவரவி நிற்றலும், அவையின் றேறல் உவமம் பொருளின்றித் தனித்து நிற்றலும், காண்க.

இனி, அங்கணத்தை வடமொழிப் பொருட்படி, முற்றம் ஏன்றுர் பரிமேலழகர். அது தென்சொல்லென்பதும் அதன் முதற்பொருள் சாய்கடை (சாலகம்) என்பதும், அவர் அறிந்திலர். சாய்கடை (சாக்கடை) வாட்டஞ் சாட்டமாக இருந்தாலன்றி அழுக்குநீர் அதன் வழியாக விரைந்தோடும். அல்லாக்கால், உள்முற்றத்தின் கோடியிலும் வீட்டோரத்திலும் தேங்கி நிற்கும். அங்கணம் என்னும் சொல்லும் சாய்தல் என்னும் வேர்ப்பொருளதே.

வணங்கு - வாங்கு - வங்கு - அங்கு. இந்நாற் சொல்லும் வளைதற் பொருளவாம். அங்கு + அணம் (தொழிற் பெயரீறு) = அங்கணம் (சாய்கடை).

"ஊரங் கணநீ ருரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து."

என்னும் நாலடிச் செய்யுளில் (கஎஅ), அங்கணம் என்னுஞ் சொல் சாய்கடை (சலதாரை) யென்றே பொருள்படுதல் காண்க

வளமனைகளிலும் மாளிகைகளிலும் உள்முற்றம், கற்பாவியும் சாந்து பூசியும் துப்புரவாயிருக்குமாதலால், அதிற் கொட்டிய பாலை நாயும் இரப்போனும் நக்கியும் உறிஞ்சியுங் குடிக்க முடியும். ஆயின், சாய்கடையில் ணற்றிய பால் ஒரு வனுகரும் ஒன்றிற்கும் உதவாது.

உள்முற்றத்தின் கோடியிலேயே சாய்கடை தொடங்குமாதலால், வடவர் அங்கணம் என்னுஞ் சொற்கு முற்றம் என்னும் வழிப்பொருள் கொண்டனர்.

இனி, **அமிழ்தம்** என்பது இக்குறளில் இவ்வுலகத்திலுள்ள பாலைக் குறிக்குமேயன்றித் தேவருலகத்திலுள்ளதாகக் கருதப்படும் எவ்வுணவையுங் குறிக்காது. பாலும் சாவா மருந்தே. இவ்விரு குறளாலும் தாழ்ந்தோரையைக்கண் உயர்ந்த பொருள்களைச் சொல்லற்க என்பது கூறப்பட்டது.

அதி. எஉ—அவையஞ்சாமை

அஃதாவது, அவையின் திறத்தையறிந்து அதற்கேற்ப ஒன்றைச் சொல்லுங்கால், அதற்கு (அவ்வவைக்கு) அஞ்சாமை. அஞ்சினுற் சொற்பொழிவாற்றல் இயலாதாதலின், அதை விலக்குதற்கு இது அவையறிதலின் பின் வைக்கப்பட்டது.

எஉக. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர்.

(இ—ரை.) சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர்—சொல்லின் தொகுதியை யறிந்த தூய மொழிநடையார்; வகை அறிந்து வல்அவை வாய் சோரார்—கற்றோர் கூடிய வல்லவை, அல்லவை என்னும் இருவகை அவைகளை அறிந்து, வல்லவைக்கண் ஒன்றைச் சொல்லுங்கால் அச்சத்தினால் மனந்தடுமாறியும் வாய் தவறியும் வழுப்படச் சொல்லார்.

வல்லவர் கூட்டமாதலால் வல்லவை எனப்பட்டது. அவையைக் குறிக்குஞ்சொல் இக்குறளில் வேறின்மையால், 'வல்லவை' என்பதற்குத் தாங் கற்றுவல்ல நூற்பொருள்களை என்று உரைப்பது பொருந்தாது. அச்சத்தினாலென்பது அதிகாரத்தால் வந்தது. 'சொல்லின் ருகை' 'தூய்மை' என்பவற்றிற்கு எகக—ஆம் குறளில் உரைத்தவாறுரைக்க.

எஉஉ கற்ருருட் கற்ரு ரெனப்படுவர் கற்ஞர்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(இ—ரை.) கற்ற கற்ருர்முன் செலச் சொல்லுவார்—தாம் கற்றவற்றைக் கற்ருரவைக்கண் அவர் உளங் கொள்ளும்வகை சொல்ல வல்லவர்: கற்ருருள் கற்ருர் எனப்படுவர்—கற்று ருெல்லாருள்ளும் நன்கு கற்றவரென்று கற்ருரால் உயர்த்துச் சொல்லப்படுவர்:

" புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க

பூம்புன லூர! பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்." (பழமொழி, எ).

கற்றுர் என்னும் சொல் பன்முறை வந்தது சொற்பொருட் பின் வருநிலே யணியாம்.

எஉங பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்

(இ—ரை.) பகையகத்துச் சாவார் எளியர்—போர்க்களத்துள் அஞ்சாது புகுந்து பகைவரொடு பொருது மறத்தொடு சாகவல்லவர் உலகத்துப் பலர்; அவையகத்து அஞ்சாதவர் அரியர்—ஆயின், ஓர் அவையிடத்துப் புகுந்து அஞ்சாது நின்று உரை நிகழ்த்த வல்ல வர் சிலரே.

இது பகையஞ்சார்க்கும் அவையஞ்சார்க்குமுள்ள தொகைவேற் றுமை கூறிற்று. அமர்க்கள மறத்தினும் அவைக்கள மறமே சிறந்த தென்பது கருத்து. ஒப்புமை கூறும் உவமையிற் போன்றே ஒவ் வாமை கூறும் வேற்றுமையிலும் உள்ள இரு கூறுகளுள், ஒன்றன் அடை இன்ருென்றைச் சாருமாதலின், அஞ்சாமை 'சாவார்' என்பத னெடு கூட்டப்பட்டது. பொருட்கேற்பப் பொருதல் சொல்லுதல் என் னும் இரு சாரார் வினைகளும் வருவித்துரைக்கப்பட்டன. எளிமை யும் அருமையும் பெரும்பான்மை சிறுபான்மையொடு தாழ்வுயர்வும் உணர்த்தி நின்றன. இம் முக்குறளாலும் அவையஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது

எஉச கற்றுர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(இ—ரை.) கற்ற கற்றுர்முன் செலச்சொல்லி—தாம் கற்ற வற்றை அவையல்லாத வேறு நூல்களே அல்லது தம்மினுங் குறை வாகக் கற்றேரவைக்கண், அவர் மனத்திற் பதியுமாறு எடுத்துச் சொல்லி; தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல்—தாம் கற்றவற்றி னும் மிகுந்தவற்றைத் தம்மினும் மிகுதியாகக் கற்றவரிடத்து அறிந்து கொள்க.

'மிக்காருள் மிக்க கொளல்' என்பதனுல், 'கற்றுர் முன்' என்ப தற்குத் தம்மினுங் குறைவாகக் கற்றேரவைக்கண் என்று பொருள் கூறப்பட்டது. 'மிக்க' என்றது, ஒரு துறைப்பட்ட உயர்ந்த பொருள் களேயும் பிறதுறைப்பட்ட வேறு பொருள்களேயுமாம். பல்துறைக்

கல்வியுடையார் ஒரே அவையினராயும் வெவ்வேறு அவையினராயு மிருக்கலாம். வெவ்வேறு துறைக்கல்வி கற்றவர் ஒருவருக்கொருவர் இருதலைப் பரிமாற்றஞ் செய்து கொள்ளலாமென்பது, இக் குறட் கருத்து.

எஉடு. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

(இ—ரை.) அவை அஞ்சா மாற்றம் கொடுத்தல் பொயிட்டு—வேற்றரசர் அவையிடத்து அவர் வினவியதற்கு விடையும் சொன்ன தற்கு மறுமொழியும் அஞ்சாது சொல்லுதற் பொருட்டு; ஆற்றின் அளவு அறிந்து கற்க—முறைப்படி அளவை நூலைத் தெளியக் கற்க.

'அமைச்சர்க்குத் தம் அரசரின் அவையிடத்துப் பொதுவாகவும் இயல்பாகவும் அச்சமிராதாகையாலும், பெரும்பாலும் தம் சூழ்வினை களை 'அரசரோடேயே நிகழ்த்துவராதலாலும், இங்கு வேற்றரசர் அவையெனக் கூறப்பட்டது. முறைப்படி கற்றலாவது இலக்கண நூல் கற்ற பின்னரே அளவை நூலைக் கற்றல். அளவென்றது நான்கு முதற் பத்து வகையாகச் சொல்லப்பெறும் அளவை வகைகளை. அவை முன்னரே கூறப்பட்டன.

காட்சியுங் கருத்துமாகிய இருவகைப் பொருள்களின் இயல்பை யும் அளந்தறிதற்குக் கருவியாகவுள்ள நெறிமுறைகளை, அளவை யென்றது தொழிலாகுபெயர். அளவைநூல் தருக்கநூலென்றும் ஏரணநூலென்றும் பெயர்பெறும். அது சிறப்பு (வைசேடிகம்) முறை (நியாயம்) என இரு திறப்படும். இவையிரண்டும், முறையே கணாத முனிவராலும் அக்கபாதரென்னும் கோதம முனிவராலும் இயற்றப்பட்ட ஆரிய முதனூல்களாக இன்று சொல்லப்படினும், இவற்றுள் முன்னது தமிழர் கண்டதென்றும், அது ஏரணம் என்றே பெயர் பெறுமென்றும், பின்னதே அதன் வழிப்பட்ட ஆரியநூலென் றும், அறிதல் வேண்டும். சிறப்பென்னும் வைசேடிகத்திற்குத் தமிழ் ஏரணமே முதனூலென்பதை, அகத்தியத் தருக்க நூற்பாக்களை நோக்கிக் காண்க. அறிந்துகற்றலாவது, நேர்நெறிப்பட்ட தருக்க உறழ்களோடு (வாதங்களோடு), கோணெறிப்பட்ட விசியுழி (செற்பம்), ஒட்டாரம் (விதண்டை), திரிப்பு (சலம்) முதலிய உறழ் களையும் ஆய்ந்தறிதல். இவ்விருகுறளாலும் அவையஞ்சாதார் செய்யவேண்டிய செயல் கூறப்பட்டது.

எஉசு. வாளொடென் வன்கண்ணர் ஏல்லார்க்கு நூலொடெ
ஞ்ண்ணவை யஞ்சு பவர்க்கு.

(இ—ரை.) வன்கண்ணர் அல்லார்க்கு வாளொடு என்—மற முடையாரல்லாதார்க்கு வாளோடு என்ன தொடர்புண்டு?; நுண் அவை அஞ்சுபவர்க்கு நூலொடு என்—அதுபோல, நுண்ணறிஞ ரவைக்கு அஞ்சுவார்க்கு நூலோடு என்ன தொடர்புண்டு?

"எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே."
என்று தொல்காப்பியமும் (சொல். கிளவி. ஈக).

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே."
என்று நன்னூலும் (பொது. எ) கூறியவாறு, வாள் என்பது வில் வேல் முதலிய பிற படைக்கலங்களையுந் தழுவும். 'என்' என்னும் வினா வரிடத்தும் எதிர்மறை விடையை அவாவி நின்றது. நுண்ணிய அறிஞர் கூட்டம் நுண்ணவை. இதில் வந்துள்ளது எடுத்துக் காட்டுவமை.

"அவையஞ்சி மெய்வித்திர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணுர் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று."
என்பது நீதிநெறி விளக்கம் (சு)

ஏஉ பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

(இ—ரை.) அவையகத்து அஞ்சும் அவன் கற்ற நூல்—அவைக்கு முன்நின்று அதற்கு அஞ்சி நடுங்குபவன் கற்ற நூல்: பகையகத்துப் பேடிகை ஒள்வாள்—போர்க்களத்தில் நின்று போருக் கஞ்சும் கோழையன் பிடித்த கூர்வாளோ யொக்கும்.

இயற்கைப் பேடியரும் செயற்கைப் பேடியரும் எனப் பேடியர் இருவகையர். செயற்கைப் பேடியர் உவளகக் காவற்கும் பேடிமைக் கும் பேடியராக்கப்பட்ட ஆடவராதலின், அவருள் மறவருமுளர். ஆதலால், பேடி என்பதற்குக் கோழையன் என்று பொருள் கூறப் பட்டது. அமர்க்கோழை வாளும் அவைக் கோழை நூலும் பயன் படாவென்பது கருத்து.

ஏஉஅ. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(இ—ரை.) நல் அவையுள் நன்கு செலச் சொல்லாதார்—தாம் கற்ற நல்ல பொருள்களை நல்லறிஞர் இருந்த அவைக்கண் தாம்

கொண்ட அச்சத்தினால் அவர்க்கு விளங்குமாறு எடுத்துச் சொல்லும் ஆற்றலில்லாதார்; பல்லவை கற்றும் பயம் இலரே—பல நூல்களைக் கற்றிருந்தாலும் உலகிற்குப் பயன்படாதவரே யாவர்.

கற்றோர் கல்வியைக் கற்றோரே அறிவராதலின், கற்றோர்முன் சொல்லாத கல்வி தமக்கேயன்றிப் பிறர்க்குப் பயன்படா தென்ப தாம். உம்மை உயர்வுசிறப்பு. ஏகாரம் தேற்றம்.

எஉ. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(இ—ரை.) கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார்—நூல் களைக் கற்று அவற்றின் பயனை அறிந்திருந்தும், நல்ல அறிஞரவைக்கு அஞ்சி அங்கு அவற்றை எடுத்துக் கூற மாட்டாதார்; கல்லாதவரின் கடை என்ப—கல்லாதவரினும் கடைப்பட்டவர் என்பர் அறிஞர்.

கற்றோர் தம் கல்வியைப் பிறர்க்கு எடுத்துச் சொல்வதனாற் பொருள்வகையாலும் புகழ்வகையாலும் தாமும் பயன்பெறுவாதலின், அதைச் சொல்லாமையால் தாமும் பயன்பெறாது பிறரையும் பயன்பெறுவிக்காது தம் கல்வி முயற்சியை வீணுக்குவதால், கல்லாதவரினும் கடைப்பட்டவ ரென்று உலகம் பழிக்கும் என்றார். 'நல்லார்' என்பது நன்மை செய்வார் என்பதைக் குறிப்பாய் உணர்த்தி நின்றது

எக. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(இ—ரை.) கற்ற களன் அஞ்சிச் செலச்சொல்லாதார்—தாம் கற்றவற்றை அவைக்கஞ்சி அதற்கேற்பச் சொல்ல மாட்டாதார்; உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர்—உடலோடு கூடியுள்ளாரெனி னும் உயர்ந்தோர் கருத்தில் இறந்தாரோ டொப்பர்.

களம் என்பது அவையையும் அவையிருந்த இடத்தையுங் குறிக்கும். ஆதலால், "ஈண்டுக் களனென்றது ஆண்டிருந்தாரை" என்னும் பரிமேலழகர் கூற்று வேண்டியதில்லை. இவ்வைங்குறளா லும் அவையஞ்சுவாரது இழிவு கூறப்பட்டது.

உறுப்பியலின் முதற்பகுதியான அமைச்சியல் (அதி. ஈச—எக) முற்றும்.

அதி. எட — நாடு

அஃதாவது, அரசனும் அமைச்சருள்ளிட்ட குடிகளும் இருந்து வாழ்வதற்கு இன்றியமையாத ஆள்நிலத்தைப்பற்றிக் கூறுவது.

எங்க. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

(இ—ரை.) தள்ளா விளையுளும்—குறையாத விளைபொருளும்; தக்காரும்—தகுதியுள்ள பெரியோரும்; தாழ்வு இல்லாச் செல்வரும்—கேடில்லாத செல்வமுடையோரும்; சேர்வது நாடு—முன்கூறப்பட்ட செங்கோலரசனேடும் சிறந்த அமைச்சனேடும் பொருந்தியிருப்பதே நல்ல நாடாவது.

தள்ளாவிளையுள் என்பது தாழ்ந்த வகையினதாகத் தள்ளப்படாத விளையுள் என்றுமாம். விளையுள் என்பது உழவரையும் ஒரு மருங்கு குறிக்குமேனும், இயற்கையுஞ் செயற்கையுமாகிய இருவகை விளையுள் இருப்பதனாலும், 'சேர்வது' என்பது கூடி அல்லது பொருந்தியிருப்பது என்றே பொருள்படுதலாலும், ''பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்'' (தொல். கிளவி. நிக) வழுவன்மையானும், ''மற்றை யுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற் றெழிலோடும் இயையாமையின், விளையுளென்பது உழவர்மேனின்றது.'' என்று பரிமேலழகர் கூறுவது பொருந்தாது. தக்காராவார் புலவரும் அடியாரும் முனிவரும். தாழ்விலாச் செல்வரென்றது காவிலுங் கலத்திலும் பொருளீட்டும் இருவகை வணிகரை. செல்வத்திற்குத் தாழ்வின்மை வழங்குத் தொலையாமையும் வருவாய் குன்றுமையும் பல் துறைப்பட்டிருத்தலும். செங்கோலரசனேடும் சிறந்த அமைச்சனேடும் என்பது பாலால் வந்தது. ஆகவே, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகுப்பாராலும் விளையும், அறிவு காவல் செல்வம் உணவு ஆகிய நாவல்வகைப் பொருளும் சிறந்தது நன்னாடு என்பதாம்.

எங்உ. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(இ—ரை.) பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி—பல்வகைப் பொருள் வளமிகுதியாற் பிற நாட்டாராலும் விரும்பப்படுவதாய்; அருங்கேட்டால்—கேடில்லாமையோடுகூடி; ஆற்ற விளைவது நாடு—நாலிலச்செல்வமும் மிகுதியாக விளைவதே வழுவமை யில்லாத நாடாவது.

பெருமை பொருளின் அளவையும் வகைகளையும் தழுவிநின்றது. கேடாவன மிகுமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, பகை யரசண்மை என ஆறென்றும்; வெட்டில், கிளி, யானை, காட்டுப் பன்றி, தொட்டியர் கள்வர், பெரும்புயல் என ஏழென்றும்; விட்டில், கிளி, யானை, தன்னரசு (Autocracy), வேற்றரசு, மழையின்மை, கடுமழை, கடுங்காற்று என எட்டென்றும்; மூவகையிற் சொல்லப் படும்.

"மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி
யக்கணர சண்மையோ டாறு."

"வெட்டில் கிளியே நாவா யேனம்
தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்புயல்
நட்டம் நாட்டேழ் குற்ற மாகும்." (பிங். கூ : எ)

"விட்டில் கிளிநால்வாய் தன்னரசு வேற்றரசு
நட்டம் கடும்புனல்கா லெட்டு."

கேடருமை யென்பது 'அருங்கேடு' எனச் செய்யுளில் முறைமாறி நின்றது. கேடுகளுள் இயற்கையாய் வருவன செங்கோலாலும் இறைவழிபாட்டாலும், யானையால் வருவது வேட்டையாலும், அரச ரால் வருவது குடிகளின் எதிர்ப்பாலும் போராலும், நீக்கப்படும். நானிலச் செல்வமான, நாடுபடு செல்வமும் காடுபடு செல்வமும் மலைபடு செல்வமும் அலை (கடல்) படுசெல்வமுமாம்.

எஎ. பொறையொருங்கு மேல்வருங்காற் ருங்கி யிறைவற் கிறையொருங்கு நேர்வது நாடு.

(இ—ரை.) பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி—பிற நாடுகள் தாங்கிய மக்களும் கால்நடையுமாகிய பொறை யெல்லாம் தன்னிடத்து வந்து தங்கினும் அவற்றைத் தாங்கி; இறைவற்கு இறை ஒருங்கு நேர்வதுநாடு—அதனால், தன் அரசனுக்குச் செலுத்த வேண்டிய பூரவுவரி சிறிதுங் குறையாது முன்போன்றே முழுதும் விரும்பிச் செலுத்துவதே (பண்பாட்டிற்கேற்ற) நல்ல நாடாவது.

பிறநாட்டு மக்கள் கால் நடையுடன் வந்து குடிபுகுவதற்குக் காரணியம். பஞ்சம், கொடுங்கோல், பகையரசு புகுதல், வெள்ளம் முதலியவற்றுள் முன்றும் 'தாங்குதல்' சொந்த நாடுபோல் உண வளித்துக் காத்தல். அது நில விரிவாலும் விளைவுப் பெருக்கத் தாலும் மக்கள் பண்பாட்டாலும் ஆட்சிச் செம்மையாலும் நேர்வதாம். குடிகள் வருவாய் குன்றுமையால் வரிகொடுப்பதுங் குன்றுதாயிற்று. நாட்டார் செயல் நாட்டின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

எஉ. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

(இ—ரை.) உறுபசியும்—கடும்பசியும்; ஓவாப் பிணியும்—தீரா நோயும்; செறு பகையும்—அழிக்கும் பகையும்; சேராது இயல்வது நாடு—இல்லாது இனிது நடப்பதே (வாழ்க்கைக் கேகற்ற) நல்ல நாடாம்.

'உறுபசி' உழவரின்மையாலும் நீர் வளம் நிலவளமின்மையாலும் நேர்வது. 'ஓவாப்பிணி' நிலக்கேட்டாலும் நச்சுக்காற்றாலும் தட்ப வெப்ப மிகையாலும் நுகர்ச்சிப் பொருள் தீமையாலும் நேர்வது. 'செறுபகை' அரசனுற்றலும் நல்லமைச்சும் படைவலியும் அரண்வலியும் துணைவலியும் இன்மையால் நேர்வது. இக்குறைகளும் கேடுகளும் இன்றேல் அவற்றால் வினையும் தீங்குகளும் இல்லை என்பதாம்

எஊ. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

(இ—ரை.) பல்குழுவும்—நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் பல்வேறு மாறுபாட்டுக் கூட்டங்களும்; பாழ்செய்யும் உட்பகையும்—அரசன் குடும்பத்துள்ளும் குடிகளுள்ளுமிருந்து நாட்டைப் பகைவர்க்குக் காட்டிக்கொடுத்துக் கேடுசெய்யும் அகப்பகைவரும்; வேந்து அஞ்சும் கொல் குறும்பும்—நாட்டிற்குள்ளிருந்து சமயம் வாய்க்கும் போதெல்லாம் போராலும் கொள்ளையாலும் அரசனையும் குடிகளையுந் துன்புறுத்தும் அடங்காச் சிற்றரண் தலைவரும்; இல்லது நாடு—இல்லாததே (அமைதிக் கேற்ற) நல்ல நாடாவது.

பல்குழுக்களாவன: அரச அரியணையேறற்குரிய பழவிறல் தாயம் பற்றிய பல்வேறு பிரிவினைக் கூட்டங்களும் குலவியலும் மதவியலும் பற்றிய பல்வேறு பகை வகுப்புக்களுமாம். உட்பகையாவார் தந்நலம் பற்றித் தாமாக நாட்டைக்காட்டிக் கொடுப்பாரும் பகைவராற்கீழ்ப்படுவாருமாம். குறும்பர் காட்டரணும் மலையரணுங்கொண்ட சிற்றரசர் போன்ற கொள்ளைத்தலைவர். குறும்பு-சிற்றரண்.

"குறும்படைத்த வரண்கடந்து" (புறம். எக).
'உட்பகை', 'குறும்பு' என்பன ஆகுபெயர்.

ஆறலைப்பார், கள்வர், குறுநில மன்னர் முதலிய மாந்தர் குடிகளைச் சேர்ந்த குற்றவாளிகளேயன்றி உட்பகைவராகார். மேலும், அவர் மாக்களே யன்றி மக்களுமாவர். பன்றி இறைச்சியும், புலி தோலும்,

கரடி கம்பளியும், உதவுவதாலும்; அவையும் அவை போன்ற காட்டு விலங்குகளும், விலங்கினச்சாலைக்கும் (zoo) மறவட்டக் (Circus) காட்சிக்கும் விலங்குநூற் (Zoology) கல்விக்கும் பயன்படுவதாலும் அவற்றுள் யானை பல்வேறு வகையில் மாந்தனுக்குப் பணி செய்வ தாலும்; காட்டுவிலங்குகள் மிக்க விடத்து அவற்றை வேட்டையாடிக் கொல்ல முடியுமாதலாலும்; அவற்றையெல்லாம் உட்பகையென்று கொள்வது பொருந்தாதென்றும், அவற்றினுங் கொடியவை சூர மண்டலம், நண்டுத்தெறுக்கள், நச்சுப்பாம்பு, கடந்தை (கதண்டு), வெறிநாய் முதலிய பிறவென்றும், அறிந்துகொள்க.

எஉ. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்ரு
நாடென்ப நாட்டிற் றலை.

(இ—ரை.) கேடு அறியா—புயல், வெள்ளம், நிலநடுக்கம், எரி மலை முதலிய இயற்கையாலும், பகைவரும் கொள்ளைக்காரருமாகிய மாந்தராலும், கெடுதலறியாததாய்; கெட்டவிடத்தும் வளம் குன்ரு நாடு—என்றேனும் ஒரு கால் அரிதிற் கெட்டதாயினும் வளங் குறை யாத நாடே; நாட்டில் தலை என்ப—எல்லா நாடுகளுள்ளும் தலையாய தென்று கூறுவர் அறிஞர்.

நாடு கேடறியாமை கடவுள் வழிபாட்டாலும் அறவொழுக்கத் தாலும் அரசனுற்றலாலும் செங்கோலாட்சியாலும் ஆவதாம். வளம் நால்வகை நிலத்தும் இயற்கையாகவும் செயற்கையாகவும் விளையும் உணவும் பிறவுமாகிய பொருள் மிகுதி. குன்ருமையாவது, நீர்வள நிலவள முண்ணுமையால் முன்போன்றே விளைதல். நாட்டில் விளைவன நெல், வாழை, கரும்பு, மஞ்சள், இஞ்சி, வெற்றிலை, பாக்கு முதலியன; காட்டில் விளைவன எள், பயறு, தேன், அரக்கு, சந்தனம், புனுகு காசறை (கஸ்தூரி) முதலியன; மலையில் விளைவன ஏலம், மிளகு, அகில், மருப்பு (தந்தம்), மரம், பொன், மணி முதலியன. கடலில் விளைவன உப்பு, மீன், இரு, சங்கு, முத்து, பவழம், ஓர்க்கோலை முதலியன. 'அறியா' 'குன்ரு' என்பன ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

எஊ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(இ—ரை.) இருபுனலும்—மேல்நீர் கீழ்நீர் எனப்பட்ட இருவகை நீர்வளமும்; வாய்ந்த மலையும்—பலவகையிலும் பயன்படுவதற்கேற்ற தாய் வாய்ந்த மலையும்; வருபுனலும்—அதனின்று வரும் ஆறும்

வல் அரணும்—இயற்கையுஞ் செயற்கையுமாகிய இருவகை வலிய அரணும்; நாட்டிற்கு உறுப்பு—சிறந்த நாட்டிற்குரிய உறுப்புக்களாம்.

நிலத்தின் மேலுள்ள ஆற்று நீரும் குளத்து (ஏரி) நீரும் மேல்நீர்; நிலத்தின் கீழுள்ள கிணற்று நீரும் துரவு நீரும் கீழ்நீர். துரவு பெருங் கிணறு. நாட்டிற்கு எல்லையாகவும் அரணுகவும் வளநிலையமாகவும் உதவும் மலையை 'வாய்ந்த மலை' என்றார்.

"அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே."

(நன். பொதுப்பா. உஅ)

காடும் மலையும் ஆறும் கடலும் இயற்கை யரணும், கோட்டையும் அகழியும் செயற்கையரணும்.

எஉஅ. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(இ—ரை.) பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ் வைந்து—நோயின்மை, செல்வம், விளையுள், இன்ப முண்மை, பாது காப்பு ஆகிய இவ்வைந்தும்; நாட்டிற்கு அணி என்ப-ஒரு நாட்டிற்கு அழகு என்று சொல்வர் அறிஞர்.

'பிணியின்மை' நிலநலம், நீர்நலம், உணவுநலம், தட்பவெப்பச் சமநிலை முதலியவற்றுல் வருவது. 'செல்வம்' நிலமும் வீடும், தட்டு முட்டுக்களும், பொன்னும் வெள்ளியும் மணியும், ஊர்தியும் கால்நடை யும், பன்னூட்டு விளைபொருளும் செய்பொருளுமாகிய பொருட் செல்வ மும்; கல்விச் செல்வமுமாம். 'விளைவு' மேற்கூறிய நானில விளையுள். 'இன்பம்' நாடக நடிப்பு, அழகிய இயற்கைக் காட்சி, திருவிழா, இசையரங்கு, சொற்பொழிவு, நால்வகை அறுசுவையுண்டி, நன் காற்று, இனிய இல்லற வாழ்வு, தட்பவெப்பச் சமநிலை; நிலவிளை யாட்டு, நீர் விளையாட்டு, வேலை வாய்ப்பு, வரிப்பளுவின்மை, செங் கோலாட்சி முதலியவற்றுல் நேர்வது. 'ஏமம்' செங்கோலாட்சி, படைவலிமை, அரண் சிறப்பு, பகையின்மை ஆகியவற்றுல் ஏற்படு வது. இத்தகைய நாடு மண்ணுலகில் விண்ணுலகம் போன்ற தென்பது கருத்து.

எஉக. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(இ—ரை.) நாடு என்ப நாடா வளத்தன—நாடென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன பிறநாட்டுப் பொருள்களின் தேவையின்றித் தமக்கு வேண்டிய பொருள் வளமெல்லாம் தம்மகத்தே கொண்டன; நாட வளம் தரு நாடு நாடு அல்ல—இங்ஙனமன்றிப் பிறநாட்டுப் பொருள்களை நாடிப்பெற்று அதனால் வளம் பெறும் நாடுகள் நாடுகளாகா.

இனி, 'நாட வளந்தரு நாடு' என்பதற்கு, பிறநாட்டுப் பொருள்களை நாடுமாறு குன்றிய வளந்தரு நாடுகள் என்றுரைப்பினுமாம். எல்லா வகையிலும் தன்னிறைவானதே தலைசிறந்த நாடென்பது கருத்து.

இக்குறட்குத் ''தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர் பாற்றானே வந்தடையுஞ்செல்வத்தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர்; ஆதலாற்றேடிவருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா.'' என்று உரைத்து, ''நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது.'' என்று சிறப்புரையுங் கூறினர் பரிமேலழகர். தேடி வருந்தாமல்தானே வந்தடையுஞ் செல்வமுள்ள நாடு இவ்வுலகில் எங்குமின்மையாலும், இயற்கை விளைபொருளையும் விளையுமிடஞ் சென்று தொகுக்க வேண்டியிருப்பதனாலும், மெய் வருத்தமில்லா வாழ்வு சோம்பலையும் நோயையும் விளைக்குமாதலாலும், அது உரையன்மையறிக. ''பாடில்லாற் பயனில்லை.'' என்னும் பழமொழியையும்

> ''வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
> வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
> தாழ்க்கு மடிகோ விலராய் வருந்தாதார்
> வாழ்க்கை திருந்துத லின்று.''

என்னும் பழமொழிச் செய்யுளையும் (கஙிக) நோக்குக.

எசஅ. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(இ—ரை.) வேந்து அமைவு இல்லாத நாடு—அரசனொடு பொருந்துதலில்லாத நாடு; ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே—மேற் கூறியவாறு எல்லா நலங்களும் அமைந்திருந்தாயினும் அவற்றுற் பயனில்லாததே யாகும்.

'வேந்தமைவு' என்பது குடிகள் அரசனொடு பொருந்துதலும் அரசன் குடிகளொடு பொருந்துதலுமாகிய இருதலையன்பையுங் குறிக்கும். இனி, 'வேந்தமைவில்லாத' என்பதற்கு நல்லரசன் வாய்த்

தலில்லாத என்றுரைப்பினுமாம். தந்தைக்கும் மக்கட்கும் நேர்த்த மில்லாத குடும்பம் கெடுவதுபோல, அரசனுக்கும் குடிகட்கும் நேர்த்த மில்லாத நாடு கெடும் என்பது கருத்து. இவ்விரு குறள்களாலும் நாட்டின் குற்றங் கூறப்பட்டது. உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் தேற்றம்.

உறுப்பியலின் உ-ஆம் பகுதியான நாட்டியல் முற்றும்.

அதி. எரி—அரண்

அஃதாவது, பகைவராற் கைப்பற்றப்படாவாறும் கொள்ளையடிக கப்படாவாறும் அழிக்கப்படாவாறும், நாட்டிற்கும் தலைநகருக்கும் அரசனுக்கும் பாதுகாப்பளிக்கும் இயற்கையும் செயற்கையுமாகிய இருவகையமைப்பு. இது நாட்டின் சிறந்த வுறுப்புக்களுள் ஒன்றுதலாலும், 'வல்லரணும் நாட்டிற் குறுப்பு' என்று முந்தின அதிகாரத்தில் தோற்றுவாய் செய்யப்பட்டதினாலும், நாட்டின் பின் வைக்கப் பட்டது.

௭௪. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

(இ—ரை.) அரண் — இருவகைப்பட்ட பாதுகாப்பமைப்பு; ஆற்றுபவர்க்கும் பொருள்—மூவகை யாற்றலு முடையராய்ப் பிறர் நாட்டின்மேற் படையெடுத்துச்சென்று போர் செய்வார்க்கும் சிறந்த செல்வம்; அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் பொருள்—அவ்வாற்ற லின்றித் தம் பகைவர்க்கஞ்சித் தற்காப்புச் செய்வார்க்கும் சிறந்த செல்வம்.

மூவகையாற்றல் அறிவு, ஆண்மை, கருவி என்பன. அவற்றுட் கருவி படை, படைக்கலம், பொருள் என முந்நிறப்படுவது. ஆற்ற லுள்ளவர் பிறர்மேற் சென்ற விடத்து, அவர் கருவூலத்தையும் மகளி ரையும் காத்தற்கு அரண்வேண்டியிருத்தலானும்; ஆற்றலில்லாதவர் வேட்டைநாயால் துரத்தப்பட்ட முயல் குழிக்குட் புகுந்து தப்புவது போல், தம் பகைவர்க்குத் தப்பிப் பதுங்குவதற்கு அரண் இன்றியமை யாததாதலாலும்; தாக்குவார்க்கும் தற்காப்பார்க்கும் ஒப்ப 'அரண் பொருள்' என்றார். வலியார்க்கும் அரண் வேண்டியிருத்தலை யுணர்த்த அவரை முற்கூறினார். ஆயினும், பத்தினித்தெய்வத்திற்குப் படிமைக்கல் எடுக்கவும் கனக விசயரின் கொங்கடக்கவும், வட நாடு சென்ற சேரன் செங்குட்டுவன் முப்பத்திரு மாதம் நிலையிருந் தும், தென்னுட்டிற் குழப்பமில்லா திருந்தமை அவனது அனைத்தின்

தியத் தகுமையையே உணர்த்தும். உம்மையிரண்டுள் முன்னது உயர்வு சிறப்பு; பின்னது இறந்தது தழுவிய எச்சம்.

செஉ. மணிநீரு மண்ணு மகலியு மணிநிழற்
காடு முடைய தரண்.

(இ—ரை.) மணிநீரும் — (மதிகிலியடுத்த) நீலமணிபோலும் நிறத்தையுடைய அகழிநீரும்; மண்ணும்—அதனையடுத்த வெறு நிலமும்; அணிநிழல் காடும்—அதனையடுத்த குளிர்ந்த நிழலுள்ள அழகிய காடும்; மகிலியும்—அதனையடுத்த பல நீள் மகிலியும்; உடையது அரண்—தனக்கு முன்னுக முறையே உடையதே சிறந்த மதிலரணு வது.

மதிலரண், நீரரண், காட்டரண், மகிலியரண் என அரண் நால் வகையாகச் சொல்லப்படினும், இங்கு ஆசிரியர் சிறப்பாக அர ணென்று எடுத்துக்கொண்டது மதிலரணையே. இதை, 'உடையது அரண்' என்று மணிநீர் முதலிய நான்கையும் அரணுறுப்பாகச் சொல்லியிருப்பதனாலும், அடுத்த குறளாலும் அறிக.

அகழிநீர் ஆழமாகவும் என்றும் வற்றுததாகவும் இருந்து கடல்நீரின் நிறத்தைக் கொண்டிருக்குமாதலால் 'மணிநீர்' என்றார். மணி என்பது தொண்வகை ஒளிக்கற்கட்கும் பொதுப்பெயராயினும், சிறப்பாக நீல மணியைக் குறிப்பதை மணிமிடற்றோன் (சிவன்) மணிவண்ணன் (திருமால்) முதலிய பெயர்களால் அறிக.

அகழியையடுத்து வெள்ளிடை நிலம் இருப்பது பகைவர் வந்ததை அறிதற் பொருட்டும், அவர் மீது மதில்மிசை மறவர் அம்பெய்தற் பொருட்டும். அதையடுத்த 'அணிநிழற்காடு' பகைவர் தனித் தனியாகவன்றிப் படையாகத் திரண்டு வருவதைத் தடுத்தற் பொருட்டும், பகைவரின் வரவு பார்க்கும் காவல் மறவர் துன்ப மின்றிக் காத்தற் பொருட்டும். இக்காடே மிகையென்றும் காவற் காடென்றும் பெயர் பெறுவது. முல்லைக்கு அப்பாற்பட்டதே குறிஞ்சி. செய்யுளிற் பொழிப்பு மோகை நோக்கி 'மகிலி' முன்னின்றது. மகிலி நெய்த லல்லாத் திசையில் நீண்டகன்றுயர்ந்திருப்பன. இவை மேலிருந்து காவல் செய்யவும், கணவாய்களின் வழிவரும் பகைவ ரைத் தடுக்கவும் கொல்லவும், உதவுவன. வெறுநிலத்தை மருநில மென்றார் பரிமேலழகர். மரு என்பது மணல் வெளியையும் பாலை நிலத்தையுங் குறிக்கும் வடசொல்லாதலின், இவ்விடத்திற்குப் பொருந்தாது.

ஏசூ. உயர்வகலந் திண்மை யருமையிந நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

(இ—ரை.) உயர்வு அகலம் திண்மை அருமை—உயர்ச்சியும் அகலமும் திணுக்கமும் அருமையும்; இந்நான்கின் அமைவு—ஆகிய இந்நான்கு திறமும் அமைந்திருப்பதே; அரண் என்று நூல் உரைக்கும்—சிறந்த மதிலரண் என்று அரசியல் பற்றிய பொருள் நூல் கூறும்.

பாம்புரியோடு கூடிய கோட்டைமதில் அகழியை அடுத்தி தென்பதை,

"கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேரார்தார்
போர்முற்றிரென் றறியாத புரிசைசூழ் புனலூரன்."

என்பதனாலும் (கலி. ஈஎ),

"அன்னமு மகன்றிலு மணிந்து தாமரைப்
பன்மலர்க் கிடங்குசூழ் பசும்பொற் பாம்புரிக்
கன்னிரூ தெயில்கட லுடுத்த காரிகை
பொன்னணிந் திருந்தெனப் பொலிந்து தோன்றுமே."

என்பதனாலும் (சீவக. கூடிஅ), அறிக. இதனால் "மதிற் புறத்து மருநிலம் பகைவர் அரண்பற்றுமைப் பொருட்டு." என்னும் பரி மேலழகர் கூற்றுப் பொருந்தாமை காண்க. பாம்புரி மதிலைச்சுற்றி யமைந்த படிக்கட்டு.

'உயர்வு' அமைந்தது மரவேணியும் நூலேணியுங்கொண்டு ஏற முடியாத மதில். இது உவளகம் (உவணகம்) எனப்படும். உவள் = உவண் (உயர்ச்சி).

"வன்சிறை யுவளகம் ஆரையும் வரையார்." (சிவா. இ). 'அகலம்' அமைந்தது உழிஞையார் துளக்க முடியாத அடியகலமும் நொச்சியார் நின்று அம்பெய்யக்கூடிய தகுதியகலமு முள்ள மதில். இது எயில் (எய்இல்) எனப்படும். 'திண்மை' அமைந்தது செம்பை யுருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங்கல்லாற் கட்டிய மதில்.

இது இஞ்சி எனப்படும். இஞ்சுதல் இறுகுதல்.
"செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை" (புறம். உஅக)
செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி"
(கம்பரா. கும்ப கூஅ.)

'அருமை' அமைந்தது பல்வகைப் பொறிகள் கொண்டதாய்ப் பகைவர் அணுகமுடியாத மதில். இது சோ எனப்படும்.

"சோ வரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த"
(சிலப். கள : கூஙு).

மதிற்பொறிகளாவன :

"..... வலிவிற் பொறியும்
கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பகீயும்
எழுவுஞ் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்."

(சிலப். கரு : உ0எ—உகசு).

இவற்றுள் 'பிற' என்றவை நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப் பொறி, குடப் பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி முதலியன (டி உரை). 'அமைவு' ஆகுபெயர். நூலோர் செயல் நூலின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

எசச. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

(இ—ரை.) சிறு காப்பின் பெரு இடத்தது ஆகி—காவல் செய்ய வேண்டிய இடம் சிறிதாய், வாழ்தற்கேற்ற உள்ளிடம் அகன்ற தாய்; உறுபகை ஊக்கம் அழிப்பது—தன்னை வந்து முற்றுகையிட்ட பகைவரின் மனவெழுச்சியைக் கெடுப்பதே; அரண்—சிறந்த கோட்டையரணுவது.

நாற்புறத்து வாயில்கள் தவிர, மற்ற இடமெல்லாம் தகர்க்க முடியாத திண்ணிய மதிலாகவும் அணுகமுடியாத பொறிகளேற்றப் பட்டதாகவும் இருத்தலின், 'சிறுகாப்பின்' என்றும்; அரசனும் படையும் நகரமக்களும் ஏந்தாக (வசதியாக) வாழ்தற்கேற்ப அகன்றிருத்தல் பற்றிப் 'பேரிடத்ததாகி' என்றும்; தம் ஆற்றலும் ஊக்கமும் நோக்கி, இன்றே யழித்துவிடுவோம் என்னும் பூட்கை மறத்துடன் வந்த பகைவர், மதிலேக்கண்டவுடன் ஊக்கமழிதலின் 'ஊக்கம்

அழிப்பது' என்றும்; கூறினர். பேரிடத்தைக் கோட்டையுள்ளிடம் என்று கொள்ளாது நாடுமுழுதுமென்று கொண்டு, "வாயிலும் வழியு மொழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலை யென்றிவற்றுள் ஏற்பன வுடைத்தாதல் பற்றிச் 'சிறுகாப்பின்' என்று கூறியதாக வுரைத்தார் பரிமேலழகர். முதலிரு குறள்கள் தவிரப் பிறவெல்லாம் மதிலரணைப் பற்றியே சிறப்பாகக் கூறுவதைக் கூர்ந்து நோக்கிக் காண்க. அகழி மதிலைச் சேர்ந்திருப்பதனால், அது மதிலொடு சேர்த்தே கருதப் பெறும்.

எசடு. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்களிதா நீர தரண்.

(இ—ரை.) கொளற்கு அரிதாய்—உழிஞையாராற் கைப்பற்று வதற்கு அரிதாய்; கொண்ட கூழ்த்து ஆகி—உள்ளிருப்பார்க்கு வேண்டிய பலவகை நுகர்ச்சிப் பொருள்களையும் உடைமைதாய்; அகத்தார் நிலைக்கு எளிது ஆம் நீரது—நொச்சிமறவரின் போர் நிலைக்கு எளிதான நிலைமையுடையதே; அரண்—சிறந்த கோட்டை யரணுவது.

உழிஞையாராவார் உழிஞை மலைசூடி நகரை முற்றுகையிடும் பகைவரான புறத்தார். நொச்சியாராவார் நொச்சிமலைசூடி முற்றுகையிடப்பட்ட நகரைக் காக்கும் மறவரான அகத்தார். கொளற்கருமை, மராமரந்த காவற்காட்டாலும் ஆழ்ந்து முதலைகள் பல கொண்ட அகழியாலும் அணுகுதற்கரிய மதிற்பொறிகளாலும் நேர்வதாம். கூழ் என்றது உணவும் நுகர்ச்சிப்பொருளும் செல்வமு மாகிய பல்வேறு பயன்பாட்டுப் பொருள்களை. நிலைக்களிய நீர்மை யாவது, நொச்சியார் விடுத்த படைக்கலங்கள் உழிஞையாரை எளிதாய்த் தாக்குமாறும் உழிஞையார் விடுத்தவை நொச்சியாரைத் தாக்கா வாறும், மதிலுயர்வும் மறைவிடங்களும் பதணப் பரப்பு மூடைமை. பதணம் மதிலின் மேற்றளம் அல்லது மதிலுண்மேடை.

எசஉ. எல்லாப் பொருளு மூடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

(இ—ரை.) எல்லாப் பொருளும் உடைத்தாய்—அரசனும் படைமறவரும் குடிகளுமாகிய அகத்தாரெல்லார்க்கும் வேண்டிய பொருள்களை யெல்லாம் உள்ளே கொண்டதாய்; இடத்து உதவும் நல் ஆள் உடையது—நொச்சிமறவர் புண்பட்டும் மடிந்தும் விழவிழ உடனுடன் அவர் நின்ற இடத்திற்கு வந்து பொருதுதவும் நன் மறவரை யுடையதே; அரண்—சிறந்த கோட்டையரணுவது.

அரசப்பத்தியும் நாட்டுப்பற்றும் மறமும் மானமும் ஊக்கமும் ஒருங்கேயுடைய மறவரை 'நல்லாள்' என்றார். எல்லாப் பொருளு முடைமையால் நெடுநாள் முற்றுகையைத் தாங்குதலும், இடத்துத வும் நல்லாளுடைமையால் தோல்வியுறுது வெற்றிபெறுதலும், கூடு மென்பது கருத்து.

எசஎ. முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

(இ—ரை.) முற்றியும்—வெளிப்போக்கிற்கும் உட்புகவிற்கும் இடமில்லாவாறு நெருங்கி மதிலைச் சூழ்ந்தும்; முற்றுது எறிந்தும்—அங்ஙனம் சூழாது மதிலின் இளந்த இடம்நோக்கி ஒன்றுதிரண்டு முகிழ்ந்து பொருதும்; அறைப்படுத்தும்—அமைச்சரையும் படைத் தலைவரையும் அவர்க்கு வேண்டியவரை விடுத்துப் பெரும் பொருள் கொடுத்து வயப்படுத்திக் கோட்டைவாயிலைத் திறக்கச் செய்தும்; பற்றற்கு அரியது—உழிஞையாராற் கைப்பற்ற முடியாததே; அரண் —சிறந்த கோட்டை யரணுவது.

இம்மூன்று போர்வலக்காரங்களுள்ளும், முதலது மதிற்சிறப் பாலும், இரண்டாவது நல்லாளாலும், மூன்றுவது அதிகாரிகளின் நேர்மையாலும், வாயாவாம். அறைப் படுத்தலெனினும் அறைபோக் குதலெனினும் கீழறுத்தலெனினும் ஒன்றே, கையூட்டாற் காட்டிக் கொடுக்கச் செய்தல் என்பது இவற்றின் பொருள்.

எசஅ. முற்றுற்றி முற்றி யவரையும் பற்றுற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

(இ—ரை.) முற்று ஆற்றி முற்றியவரையும்—படைப்பெருமை யால் வளைதல் வல்லவராய் வந்து வளைந்த உழிஞையாரையும்; பற்றி யார் பற்று ஆற்றி வெல்வது—மதிலரணைப் பற்றிநின்ற நொச்சியார் சிறுபடையினராயினும் தாம் பற்றிய விடத்தைவிட்டு அகலாது நின்று பொருது வெல்வதற்கு இடமானதே; அரண்—சிறந்த கோட்டையரணும்.

முற்றியவரையும் என்னும் சிறப்பும்மையால் படைப்பெருமை பெறப்பட்டது. அதனால், அதற்கு மறுதலையாகச் சிறியபடையின ராயினும் என்பது வருவித்துரைக்கப்பட்டது. ஒரு மாநகர் முழு வதையும் வளைதற்கு மாபெரும்படை வேண்டும். பற்றுற்றுதல் பற்றிய விடத்தில் நின்று பொருதல்; இடவேற்றுமைத்தொகை. 'பற்று' ஆகுபெயர். அரண்சிறப்பால் சிறுபடையும் பெரும்படையை வெல்லும் என்பது கருத்து.

"நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
வவ்வவ றொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே."

என்னும் தொல்காப்பிய நெறிமொழிப் படியும் (சொல். கூஎ), உலக வழக்குப்படியும், பெயரெச்சம் இடத்தையும் தழுவுமாதலால், "வெல்வ'தென உடையார் தொழில் அரண்மேனின்றது". என்று கொள்ளத் தேவையில்லை. வெல்லும் அது—வெல்லுமது—வெல்லுவது—வெல்வது. இவ்வெழுகுறளாலும் நல்லரணின் இலக்கணங் கூறப்பட்டது.

எசஉ. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

(இ—ரை.) முனைமுகத்து மாற்றலர் சாய—போர்த் தொடக்கத்திலேயே பகைவர் புண்பட்டு விழுமாறு; வினைமுகத்துவீறு எய்தி—நொச்சியாரின் வினைவேறுபாடுகளாற் சிறப்புப் பெற்று; மாண்டது அரண்—பல்வேறு உறுப்புக்களாலும் மாட்சிமைப்பட்டதே சிறந்த கோட்டையரணுவது.

பகைவர் அகழியை அடுத்தவுடனே பட்டுவிழுமாறு, மதில் மேலிருந்து கல்லும் அம்பும் விட்டேறும் சோனைமாரியாய்ச் சொரிதலால், 'முனைமுகத்து மாற்றலர் சாய' என்றார். தொடக்கத்திலேயே பெருந்தொகையினர் சாய்தலால், பின்னும் தாக்குப்பிடித்து நிற்றலும் பொருதலும் கூடாது பின்வாங்கியோடுவர் என்பதாம். வினை வேறுபாடுகளாவன; அகழியைக் கடக்குமுன் எய்தலும் எறிதலும் வீசுதலும்; மதிலேறப்பற்றியபின், கடித்தலும் உமிழ்தலும் இறைத்தலும் எறிதலும் கோத்து வலித்தலும் கட்டுதலும் பூட்டி முறுக்குதலும், கொத்துதலும் நெட்டித் தள்ளுதலும் குத்துதலும் பொதுக்குதலும் கிழித்தலும் அடித்தலுமாகிய பொறிவினைகளும்; குத்துதலும் வெட்டுதலும் பிளத்தலுமாகிய படைவினைகளுமாம். அரண் மாண்பிற் கேற்ற பிற வுறுப்புக்கள், மதில்மேலுள்ள பதணம், ஏப்புழை, சூட்டு, ஞாயில் (ஏவறை), கொத்தளம் (காவற்கோபுரம்) முதலியனவும்; பகைவர்க்குத் தெரியாது நகர்க்கு வெளியே சென்றுவர நிலத்தின் கீழமைத்த சுருங்கை முதலியனவுமாம்.

எடுo. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

(இ—ரை.) அரண்—கோட்டையரணமைப்பு; எனை மாட்சித்து ஆகியக் கண்ணும்; மேற்சொல்லப்பட்ட வுறுப்புக்களெல்லா

வற்றேடுங்கூடி எத்துணை மாட்சிமைப் பட்டதாயிருப்பினும்; வினை மாட்சி இல்லார் கண் இல்லது—போர்வினைச் சிறப்பில்லாதவரிடத்துப் பயன்படாததாம்

வினைமாட்சியாவது வெற்றிக்கேதுவான பல்வேறு வினைத் திறமை. வினைமாட்சியின்மை கூறவே, குறைவினையோடு வினையின்மையும் மிகைவினையும் தகாவினையும் கடியப்பட்டனவாம். இருந்தும் பயன்படாமை அல்லது பயன்படுத்தப்படாமை இல்லாமையோ டொக்குமாதலின், 'இல்லதரண்' என்றார். உம்மை உயர்வு சிறப்பு. இவ்விரு குறளாலும் வினைமாட்சியின்றி அரண் மாட்சி பயன்படாமை கூறப்பட்டது. 'இல்லையரண்' என்பது மணக்குடவர் கொண்ட பாடம்.

உறுப்பியலின் மூன்றும் பகுதியான அரணியல் முற்றும்.

அதி. எசு—பொருள்செயல் வகை

அஃதாவது, அரசன் அமைச்சரோடு கூடித் தன் நாட்டை அரணுற் காத்து, தனக்கும் தன் ஆட்சிக்கும் இன்றியமையாத பொருளைத் தன் குடிகளிடத்தும் பகைவரிடத்தும் நண்பரிடத்தும் தேடும் வழிகள். இவற்றுள், அரசன் பாதுகாப்பின் கீழ்க் குடிகள் பல்வேறு தொழில் செய்து பொருளீட்டுதலும் அடங்கும்.

எடுசு. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

(இ—ரை.) பொருள் அல்லவரை—பிறரால் ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும்; பொருளாகச் செய்யும் பொருள் அல்லது—மதிக்கப்படச் செய்யும் செல்வத்தையல்லாமல்; பொருள் இல்லை—சிறந்த பொருளொன்று இவ்வுலகத்தில் இல்லை.

மதிக்கப்படாதவர் கல்லாதார், இழிதொழிலார், உறுப்பறையர், ஒழுக்கமில்லார், நோயாளியர், இளஞ்சிறார் முதலியோர். மதிக்கப் படுவாராகச் செய்தலாவது கற்றேரும் அரசனுட்பட்ட அதிகாரிகளும் அவருதவியை நாடச்செய்தல். இழிவு சிறப்பும்மை தொக்கது. இதில் வந்துள்ள அணி சொற்பொருட் பின்வருநிலை. பொருட் பின்வருநிலை வரையறைப்பட்டது.

எடுஅ. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(இ—ரை.) இல்லாரை எல்லாரும் எள்ளுவர்—மற்றெல்லா நலமுமுடையராயினும் செல்வமில்லாதவரைத் தாயுட்பட எல்லாரும் தாழ்வாகக் கருதுவர்; செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர்—வேறெருரு நலமும் இல்லாதவராயினும் செல்வ முடையாரை அரசனுட்பட எல்லாரும் மதித்துப் போற்றுவர்.

எள்ளுதலாவது பார்த்தலும் உரையாடுதலுஞ் செய்யாமை. சிறப்புச் செய்தலாவது அரசன் பட்டமளித்தலும், அரசனும் பெற்றேருந் தவிரப் பிறரெல்லாம் கை கூப்புதலும் மதிப்பான இருக்கை யளித்தலும், எல்லாரும் அவர் வேண்டுகோளை நிறை வேற்றலுமாம். எள்ளுதல் என்னும் உளவினை, இகழ்தலாகிய வாய்வினையையும் புறக்கணித்தலாகிய மெய்வினையையுந் தழுவும். செல்வத்தின் சிறப்பை வலியுறுத்தும் பொருட்டு இருவகையாலுங் கூறினர்.

> ''கல்லாமே யானலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
> எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானே
> இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
> செல்லா தவன்வாயிற் சொல்.'' (நல்வழி, உஎ).

எடுத். பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(இ—ரை.) பொருள் என்னும் பொய்யா விளக்கம்—செல்வம் என்று எல்லாராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்பெறும் நந்தாவிளக்கு; எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும்—தன்னை உடை யவர்க்கு அவர் கருதிய தேயத்துச் சென்று பகையென்னும் இருளைப் போக்கும்.

எக்காலத்தும் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையாதலாலும் எல்லாரையும் விளங்கச் செய்தலாலும், 'பொய்யா விளக்கம்' என்றும்; ஏனை விளக்கொடு வேற்றுமை தோன்ற 'எண்ணிய தேயத்துச் சென்று' என்றும், பகையை விரைந்தழித்தல் பற்றி 'இருளறுக்கும்' என்றும், கூறினர். பகையென்னும் இருள் என்னுமையால் இது ஒருமருங் குருவகம். இம்மூன்று குறளாலும் செல்வத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

எடுச. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

(இ—ரை.) திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள்—முறை யறிந்து ஈட்டப்பட்டு ஒருவருக்குந் தீங்கு செய்யாது நேர்மையாக

வந்த செல்வம்; அறன் ஈனும் இன்பமும் ஈனும்—அதை யீட்டிய வனுக்கு அறத்தையும் விளைவிக்கும், இன்பத்தையும் விளைவிக்கும்.

ஈட்டுந் திறமாவது அவரவர் தத்தம் தொழில் துறையில் அறிவாலும் உழைப்பாலும் நேர்மையாக ஈட்டுதல். அரசன் பொருளீட்டுந் திறம் உழவரிடம் ஆறிலொரு பங்கு விளைபொருளும் பிறதொழிலாளரிடம் குறிப்பிட்ட வரிப்பணமும் வாங்குதலும், பொருள் வருவாய்களை மேன்மேலும் பெருக்குதலுமாம். இரப்போர்க் கீதலும் துறவியர்ப் பேணலும் விருந்தோம்பலும் கடவுட் பூசையும் நிகழ்தற் குதவுதலின், 'அறனீனும்' என்றும், வாழ்நாள் முழுதும் ஐம்புலனின்பமும் நுகர்தற்கேதுவாதலின் 'இன்பமும் ஈனும்' என்றும், கூறினார். இன்று (இல்லாது) என்பது இன்றி எனத் திரிந்தது.

பண்டைத் தமிழகத்தில் குடிகளால் அரசனுக்குச் செலுத்தப் பட்ட செலுத்தங்களெல்லாம் பொதுவாக இறையென்றும், புரவு என்றும், கடமையென்றும் வரியென்றும், பெயர் பெற்றிருந்தன. ஒவ்வொரு வரியும், பயன்படுத்தும் பொருள் அல்லது கருவி பற்றியும், தொழிற்குலம் பற்றியும், நிகழ்ச்சி பற்றியும், வெவ்வேறு சிறப்புப் பெயரும் பெற்றிருந்தது. புரவு என்பது பிற்காலத்தில் புரவு வரி என்னப்பட்டது.

உழவர் செலுத்திய நிலவரி பகுதி (ஆறிலொரு பகுதி) என்றும் காணிக்கடன் என்றும் பெயர் பெற்றிருந்தது. தங்கட்கு வேண்டிய அளவே நெல் விளைவித்தவரும் புன்செய்ப்பயிர் விளைவித்தவரும் பொன்னுகவும் காசாகவும் செலுத்திய வரியுங் காணிக்கடன். பிறவரிகள் குசக்காணம், தறிக்கடமை, தட்டாரப் பாட்டம், இடைப்பூட்சி, செக்கிறை, வண்ணரப்பாறை, தரகு பாட்டம், ஓடக்கூலி, நல்லா, நல்லெருது முதலியன. கலியாணக் காணம் என்பது மணமக்கள் செலுத்திய வரி. அது இக்காலத் துப்பதிவுமணக் கட்டணம் போல்வது. கள்ளிறக்குவார் செலுத்திய வரி மேனிப்பொன் என்னப்பட்டது. ஈழநாட்டினின்று ஈழவர் வந்த பின்னரே அது ஈழம்பூட்சி எனப்பெயர் மாறிற்று. தென்னையும் பனையும் தொன்று தொட்டுத் தமிழகத்திலிருந்து வருகின்றன. ஏழ்தெங்கநாடும் ஏழ்குறும்பனைநாடும் பழம்பாண்டிநாடான குமரி நாட்டுப் பகுதிகள். நாடுகாவல் (பாடிகாவல்), நீராணி (நீர்க்கூலி) முதலிய சில வரிகள் ஹரவையாரால் வாங்கப்பட்டனவாகும்.

எடுத்து: அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

(இ—ரை.) அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்—குடிகளிடத்துத் தாம் கொள்ளும் அருளோடும் தம்மிடத்து அவர் கொள்ளும் அன்போடும் பொருந்தி வராத செல்வத்தின் தேட்டத்தை; புல்லார் புரள விடல்—அரசர் மனத்தாலும் பொருந்தாமல் தானே நீங்க விடுக.

'அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்' குடிகளை வருத்தி அளவிறந்து கவர்வது.

''குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொளலு மாண்பே'' (நீதி. உக)

குடிகளை வருத்தி அளவிறந்து கவர்வதால், குடிகள் கெடுவதோடு அரசனும் பயனடையான்.

''அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோரடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னுகி லைகளும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணுன் உலகமுங் கெடுமே.'' (புறம். கஅச)

இனி, அமைச்சன் தன் அரசனுக்குத் தீயவழியிற் பொருள் தேடினாலும், பசுமட்கலமும் நீரும்போல அவ்வரசனும் பொருளும் ஒருங்கு கெடுவதாக ஆசிரியர் கூறினமையின், அரசன் தானே தீயவழியிற் பொருள் தேடின் அழிவது திண்ணம் என்பது சொல்லாமலே பெறப்படும். அதனால் 'புல்லார்' என்றதனோடமையாது 'புரளவிடல்' என்றுங் கூறினர்.

'அருளொடும் அன்பொடும்' என்று பொதுப்படச் சொல்லியிருப்பதால், அரசனுங் குடிகளும் போன்றே பண்ணையாரும் பண்ணையாட்களும், தொழிற்சாலைத்தலைவரும் தொழிலாளிகளும், முறையே அருளொடும் அன்பொடும் நடந்து கொள்ள வேண்டுமென்பதும் பெறப்படும். தொழில் தலைவர் அருள் கூலிகொடுத்தலிலும், தொழிலாளர் அன்பு பணிசெய்தலிலும், வெளிப்படும். இங்ஙனமே பிறதுறைகளிலும். 'புல்லார்' எதிர்மறை முற்றெச்சம்.

எடுஉ. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னென்னுமித்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(இ—ரை.) உறுபொருளும் — உடையோரின்மையாலும் எதிர் பாராதவாறும் தானுக வந்து சேர்ந்த பொருளும்; உல்குபொருளும்— நிலவாணிகத்தில் வண்டிகளிலும் நீர்வாணிகத்தில் மரக்கலங்களி லும் வரும் பண்டங்கட்கு வாங்கும் ஆயமும்; தன் ஒன்னர்த்தெறு பொருளும்—தன் பகைவரைப் போரில் வென்றபின் அவரிடம் தண்டமாகவும் திறையாகவும் வாங்கும் பொருளும்; வேந்தன் பொருள் — அரசிறையல்லாத பிறவழிகளில் அரசன் பெறும் பொருள்களாம்.

உடையோரின்மையால் வருவன பழம்புதையலும் உரிமை யோரில்லாச் சொத்துமாம். எதிர்பாராது வருவன குடிகள் காணிக்கையும் நண்பர் நன்கொடையுமாம் குன்றக் குறவர் செங் குட்டுவனுக்குமுன் படைத்தவை போன்றவை காணிக்கை அவந்தி வேந்தன் கரிகால் வளவனுக்கு உவந்தளித்த தோரண வாயில்நீபோன்றது நன்கொடை. தோற்ருேடும் பகைவர் போர்க் களத்தில் விட்டுவிட்டுப்போன பொருள்களும் தெறுபொருளுள் அடங்கும். இம்முக்குறளாலும் அரசன் பொருளீட்டும் வழிகள் கூறப்பட்டன.

எடுஎ. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

(இ—ரை.) அன்பு ஈன் அருள் என்னும் குழவி—அன்பு என்னும் நற்ருயினுற் பெறப்பட்ட அருள் என்னும் பிள்ளே; பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு—பொருள் என்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தையுடைய வளர்ப்புத்தாயாலேயே பிழைக்கும்.

உயர்திணை மேலுள்ள அன்பு முதிர்ந்த விடத்தே அஃறிணை மீது அருள் பிறத்தல்போல், தொடர்புள்ள வலியார் மேலும் ஒத்தார் மேலுமுள்ள அன்பு முதிர்ந்த பின்பே தொடர்பில்லாத எளியார் மீது அருள் பிறத்தலால், அதை 'அன்பின் குழவி' என்றும் அது எளியார்க்குப் பயன்படுவது பொருளுள்ள விடத்தேயாதலால் பொருளே அதற்குச் 'செவிலி' என்றும், அது நற்ருயிடம்பொருள் பெற்று வளர்க்கும் உலகியற் செவிலி போலாதுதானே எல்லாப் பொருளும் உதவி வளர்த்தலால் 'செல்வச் செவிலி' என்றும், கூறினர். வளரும் என்னுது 'உண்டு' என்றே கூறினமையால், பாலூட்டப் பெருத குழவி பிழைக்காததுபோலப் பொருளொடு கூடாத அருளும் இருந்தும் இல்லாதது போல்வதால் இறக்கும் என்பதாம். அன்பை நற்ருயென்று உருவகியாமையால் இது ஒருமருங் குருவகம்.

எடுஅ. குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

(இ—ரை.) தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை—தன் கையிற் பொருளை வைத்துக்கொண்டு ஒரு வினையை மேற் கொண்டவன் அதைச் செய்தல்; குன்று ஏறி யானைப்போர் கண்ட அற்று—ஒருவன் மலைமேலேறியிருந்து அடிவாரத்தில் நடக்கும் யானைப்போரைக் கண்டாற் போலும்.

செய்வான் என்னும் வினையால், 'ஒன்று' என்பது அதன் செயப்படுபொருளான வினை யென்பது பெறப்பட்டது. மலைமேலேறி யிருந்தான் சிறிதும் அச்சமும் வருத்தமுமின்றிக் கீழ் நடக்கும் யானைப் போரைக் கண்டு களித்தாற்போல, நிரம்பச் செல்வ முள்ளவனும் சிறிதும் அச்சமும் வருத்தமுமின்றித் தக்காரைக் கொண்டு ஒரு பெருவினையைச் செய்து முடித்து மகிழ்வான் என்பதாம்.

பொது மக்கள் சேவற்போரும் தகர்ப்போரும் கண்டு களித்தது போன்றே, பண்டையரசரும் யானைப்போர் கண்டு களித்தமை,

> "கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட
> குஞ்சரம் வென்ற கொடிலவேழம்—துஞ்சா
> துழலியும் பாய்ந்திறுத் தோடாது தான்றன்
> நிழலியுந் தான்சுளிக்கும் நின்று."

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளால் (கூகo) அறியப்படும்.

எடுக. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.

(இ—ரை.) பொருளைச் செய்க—வெற்றிபெறும் வினைவிய மேற்கொள்ள விரும்பும் அரசர் செல்வத்தை நிரம்ப ஈட்டுக; செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு அதனின் கூரியது இல்—அவர்தம் பகைவரின் விருப்பை அறுத்தொழிக்கும் படைக்கலம் அதனைப் போற் கூரியது வேறொன்றுமில்லை.

பொருள் பெருகவே படையும் நட்பும் பெருகும். அதுகண்டு பகைவர் தாமே அடங்குவர். அல்லது பெரும்படை கொண்டு போரால் அடக்கப்படுவர் என்பது கருத்து. 'எஃகு' உருக்கு. அது இங்கு உருக்கினாற் செய்யப்பட்ட படைக்கலத்தைக் குறித்தலால்

ஆகுபெயர். பொருள் வலிய பகையையும் அழிக்க வல்லதாதலால், அதனை வலிய பொருளையும் அறுக்கும் அரமாக அல்லது ஈர்வாளாக உருவகித்தார். பொருளைப்போற் பகையழிக்க வல்லது வேறொன்று மின்மையின், 'அதனிற் கூரியது இல்' என்றார். இது செருக்கை மரமாக அல்லது இரும்பாக உருவகியாமையால் ஒருமருங் குருவகம்.

எசுஎ. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

(இ—ரை.) ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு—நல்வழியில் வரும் செல்வத்தை நிரம்ப ஈட்டியவர்க்கு; ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள்—அதனொடு சேர்த்தெண்ணப் பெறும் மற்ற இரு பொருள்களாகிய அறமும் இன்பமும் ஒரு சேர எளிதாய்க் கிட்டும்.

ஒண்மை நன்மை அல்லது ஒழுங்கு. காழ்ப்பு முதிர்வு. அது இங்கு மிகுதியைக் குறித்தது. அறம் பொருளின்பம் மூன்றும் முப்பொருள் அல்லது முப்பால் எனப்படுவதால், அறவின்பங்களை 'ஏனையிரண்டும்' என்றார். அறமும் இன்பமும் பொருளின் பயனாதலாலும், நல்வழியில் வந்த பெரும் பொருள் அவற்றைத் தப்பாது பயக்குமாதலாலும், அதுவும் எளிதாய் ஒருங்கு நிகழுமாதலாலும், 'ஒண்பொருள்' என்றும், 'எண்பொருள் ஏனையிரண்டு மொருங்கு' என்றும், கூறினார். இந்நான்கு குறளாலும் பொருளின் பயன் கூறப்பட்டது.

''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதா னெய்தும் உலப்பெய்
தடுவது போலுந் துயர்.'' (நாலடியார், சகச)

உறுப்பியலின் நான்காம் பகுதியான பொருளியல் முற்றும்.

அதி. எஎ—படைமாட்சி

அஃதாவது, அரசன் நல்வழியில் ஈட்டிய பொருளைக்கொண்டு அமைப்பதும், அவனுட்சிக்கும் பகைவரினின்று நாட்டைக் காத்தற்கும் இன்றியமையாததுமான, படையின் சிறப்பு.

எசுசு. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(இ—ரை.) உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை—தேர், யானை, குதிரை, காலாள் ஆகிய நால்வகை யுறுப்புக்களும் பொருந்திப் போரின்கண் புண்படுவதற்கும் சாதற்கும் அஞ்சாது பொருது பகைவரை வெல்லத் தக்க படை; வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை—அரசனின் செல்வங்க ளெல்லாவற்றுள்ளுந் தலையாயதாம்.

இங்குப் படை யென்றது கரிபரிதேர்கால் என்னும் நான்கின் தொகுதியை. அது பஞ்சிலம் எனப்படும். ''சூரனுக்குச் சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு'' ஆதலாலும், ஊறஞ்சியவிடத்து வெல்லுதல் கூடாமையாலும், 'ஊறஞ்சா' என்றும்; பகைவரை வெல்லுதற்கு மட்டுமன்றி ஆட்சி செய்தற்கும், நட்பு நிங்கலாக ஏனைய சுறுப்புக் களையெல்லாம் காத்தற்கும், இன்றியமையாததாகலின் 'வெறுக்கையு ளெல்லாந் தலை' என்றும்; கூறினர். வகுப்பு, கை, அணி ஆன்ப காலாட்படைப் பிரிவுகளின் பெயர்.

இனி, 'உறுப்பமைந்து' என்று பொதுப்படச் சொன்னதினால், 'படை' என்றது மேற்கூறிய நால்வகை நிலப்படையையே யன்றிக் கலப்படையாகிய நீர்ப்படையையும் தழுவும். மூவேந்தர்க்கும் கடன் மேற் செல்லும் நாவாய்ப் படையும் தொன்றுதொட்டு இருந்து வந்தது. தலைக்கழகக் காலத்திற் கடற்படை செலுத்திச் சாவித் (Java) தீவைக் கைப்பற்றி, ''அடியில் தன்னள வரசர்க் குணர்த்திய'' வடிம்பலம்பநின்ற பாண்டியன் வேறு; ''வடிவே லெறிந்த'' பாண்டியன் வேறு; ''வான்பகை''யில்லாத ''முந்நீர் விழவி னெடியோன்'' ஆன பாண்டியனும் வேறு.

கடைக் கழகக் காலத்துக் கரிகால்வளவனை,

''நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக''

என்று வெண்ணிக் குயத்தியார் பாடியிருப்பதால் (புறம். ஈக), வளி தொழி லாண்ட சோழன் இடைக் கழகக் காலத்தவனாயிருந்திருக்க லாம் ''வாத ராசனை வலிந்துபணி கொண்ட வவனும்'' என்று கலிங்கத்துப்பரணி (இராச. கசு) குறித்தது அவனையே.

''வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீரோட்டிக் கடம்பறுத்து'' (அகம். கூஎ),

''உடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்'' (பதிற். நக)

என்பன, கடைக் கழகக் காலத்தில் (கி.பி. உ ஆம். நூற்.) இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவன் மகன் செங்குட்டுவனும் கலப் படை கொண்டிருந்தமையைக் காட்டும்.

கி. பி. கo—ஆம் நூற்றாண்டினனான முதலாம் அரசவரசன் (இராசராசன்) மெய்க்கீர்த்தி, ''காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி'' என்று கூறுவதால், சோழனுக்கும் சேரனுக்கும் கலப்படையிருந்த மையை ஒருங்கே தெரிவிக்கும்.

ஙூஉ. உலவிடத் தூறஞ்சா வன்கண் டொலவிடத்துத்
தொல்படைக கல்லா லரிது.

(இ—ரை.) தொலவிடத்து உலவிடத்து ஊறு அஞ்சா வன்கண்—நீண்ட நேரம் பொருது களைத்த விடத்தும், தோல்வி நேர்ந்தால் மேல் நேரக்கூடியவற்றிற்கெல்லாம் அஞ்சாது நின்று பொரும் கடுமறம்; தொல் படைக்கு அல்லால் அரிது—அரசர்க்கு வழி வழியாகத் தொடர்ந்து வரும் நிலைப்படைக்கு அல்லாமல் வேறு வகைப் படைக்கு உண்டாகாது.

நிலைப்படை கூலிப்படை யென்றும், நாட்டுப்படை காட்டுப் படை யென்றும், துணைப்படை பகைப்படை யென்றும் படைகள் மூவேறு வகையில் இவ்விரண்டாக வகுக்கப்படும். கூலிப்படை போர்ச்சமையத்திற்கு மட்டும் கூலிக்கு அமர்த்திக் கொள்வது. நாட்டுப்படை செங்குந்தர் கைக்கிளையர் படை போல்வது. காட்டுப் படை கள்ளர் மறவர் படை போல்வது. நிலைப்படை என்றும் நாட்டுப் படையாகவே யிருக்கும். அது மூலப்படையெனவும் படும். மூலம் என்னும் தென்சொல்லின் திரிபே மௌலம் என்னும் வட சொல்லும். துணைப்படை என்பது தனித்தவிடத்து நட்பரசர் படை யையும் போர்க்களத்தில் பகைப்படையல்லாத தன்படைத் தொகுதி யையுங் குறிக்கும். வழிமுறைப் பண்பு வரவர வளர்ந்தும் இயற்கை யாக அமைந்தும் இருக்குமாதலாலும், வாழ்நாள் முழுவதும் உணவளித்துக் காத்த அரசனுக்கு நன்றியறிவாகச் செஞ்சோற்றுக் கடன் கழித்தல் மறவரியல்பாதலாலும், 'தொல்படைக் கல்லா லரிது' என்றார்.

''சிறந்த திதுவென்னச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளமர் ரென்னும்—பிறங்கழலுள்
ஆருயி ரென்னும் அவிவேட்டார் ஆங்கஃதால்
வீரியரெய் தற்பால வீடு.'' (பு.வெ.அ: கo)

''வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும்-கொல் களிறும் மாவும்'' கொடுத்துத் தொல்படையைப் போற்றுக என்பது குறிப்பு.

இழிவு சிறப்பும்மை தொக்கது.

எசுஉ. ஒலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(இ—ரை.) எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என் ஆம்—எலி யாகிய பகை பெருந்திரளாகக் கூடிக் கடல் போல் ஆரவாரித்தாலும் பாம்பிற்கு என்ன தீங்கு நேரும்!; நாகம் உயிர்ப்பக் கெடும்—அப் பாம்பு மூச்சு விட்ட அளவிலேயே அப்பகை ஒருங்கே அழிந்துபோம்.

மறங்குன்றிய பகைவர் பலர் திரண்டு முழக்கஞ் செய்தாலும் மறமிஞ்சியவன் அஞ்சான். அவன் கிளர்ந்தெழுந்த துணையானே அவர் கெட்டொழிவர் என்பது பட நின்றமையின், இது பிறிது மொழி தலணியாம். தொல்படையுள்ளும் பெருமறவன் சிறந்தவன் என்பது கருத்து. உவரியொலித்தக்கால் உவமைத் தொகை. உவரி யொலித்தல் என்னும் வினையுவமத்தால் திரட்சி பெறப்பட்டது. பெருமறவனுக்குப் பெருஞ் சிறப்புச் செய்க என்பது குறிப்பு.

எசுஎ. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

(இ—ரை.) அழிவு இன்று—போரின் கண் தோல்வியடை தலின்றி; அறை போகா தாகி—பகைவரால் எங்ஙனமுங் கீழறுக்கப் படாததாய்; வழிவந்த வன்கணதுவே—தொன்று தொட்டுத் தலை முறை தலைமுறையாக வளர்ந்து வந்த வன்மறத்தை யுடையதே; படை—சிறந்த படையாவது.

மற வலிமையால் அழிவின்மையும் அரசன்மீ தன்பும் நாட்டுப் பற்றும் தன்மானமும், உயர்ந்த வொழுக்க முடைமையால் அறை போகாமையும் விளைந்தன.

''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனு ளுற்ற செருவிற்கி வடன்னே
யானே யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற்கிவள் கொழுதன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே

இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று முயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.''

என்னும் புறப்பாட்டும் (உஎக),

''கன்னின்று னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னீயர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
யெய்போற் கிடந்தானென் னேறு.''

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளும், வழிவந்த வன்கண்மைத் திறத்தை விளக்கும். அது என்னும் சுட்டுப் பெயர் ஈறுபின்பும் தனித்து நின்றதுபோல் வகரவுடம்படுமெய் பெற்றது.

எகூடு. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

(இ—ரை). கூற்று உடன்று மேல் வரினும்—இறப்புத் தெய்வ மாகிய கூற்றுவனே சினந்து வந்து தாக்கினும்; கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே—கலங்காது எதிர்த்து நின்று பொரும் வலிமை யுடையதே; படை-சிறந்த படையாவது.

''எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னுன் நல்குர வறியான்
தீயா ரென்னுன் செல்வரென் றுன்னுன்
தரியா னொருகணந் தறுக ணுளன்.''(கபி. அக.உஇ-சக)

ஆதலின், உம்மை உயர்வு சிறப்பு. சாவின் ஆட்படுத்தமை (Personification) கூற்றுவனையினும், அத்தகைய சிறுதேவன் உண் டென்பதும், அவன் கடவுட்கு அடுத்தபடியாக மறம் நிறைந்தவன் என்பதும், பல பழ மதங்களின் பொதுக் கருத்தாம். ஆற்றல் உடல் வலியும் உளவலியும்.

எகூசு. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(இ—ரை.)மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே—தறுகண்மை, தன்மானம், பண்டை வயவர் (வீரர்) ஒழுகிய நல்வழியில் ஒழுகுதல், அரசனுல் நம்பப்படுதல் ஆகிய நான்கே; படைக்கு ஏமம்— படைக்கு அரணுன பண்புகளாம்.

தறுகண்மையாவது சாவிற்கும் கொடிய நோவிற்கும் சிறிதும் அஞ்சாமை. மறம் முதலிய நான்கினுலும், முறையே பகை வரைத் தப்பாது வெல்லுதலும், தமக்கும் தம் அரசனுக்குந் தாழ்வு வராமற் காத்தலும், தோற்றேடுவார் மீது படைக்கலந் தொடுதலும் பெண்டிர் கற்பழித்தலும் அரசனது ஏவலின்றிக் கொள்ளையடித்தலும் செய்யாமையும், அறை போகாமையும் பெறப்பட்டன. அரண் போற் பாதுகாப்புச் செய்யும் பண்புகளே அரணென்றார்.

கூஎ. தார்தாங்கிச் செல்வது தானே தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. ஃ

(இ—ரை.) தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து—பகை வரால் வருக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகையறிந்து, அதற்கேற்பத் தன்னை வகுத்துக்கொண்டு; தார் தாங்கிச் செல்வது—பகைவர் தூசிப்படையைத் தன்மேல் வராமல் தடுத்துத் தான் அதன்மேற் சென்று தாக்குவதே; தானை—சிறந்த படையாவது.

படை வகுப்பு இடத்திற்கேற்பத் தண்டம், மண்டலம், சக்கரம், சகடம் (தேர்), தாமரை முதலிய பல்வேறு வடிவில் அமைக்கப் பெறுவதாகும். படையுறுப்புக்கள் நெற்றி, தார் (தூசி), கை, பேரணி, கூழை என ஐந்தாம்.

"தூசியுங் கூழையு நெற்றியுங் கையும்
அணியு மென்ப தப்படைக் குறுப்பே." (சஅக)

"கூழை யென்பது பேரணி யாகும்." (சஅஃ)

"தாரே முன்செல் கொடிப்படை யாகும்." (சஅஙி)

என்பன பிங்கலம். நெற்றியென்பது தாரின் முற்பகுதியும், கை என்பது படைவகுப்பின் இருபக்கமும், கூழை யென்பது பேரணியின் பிற்பகுதியும், போலும்!

"படை வகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை யுறுப்பிற்ருய், வகையானுன்காய், விரியான் முப்பதாம். உறுப்பேழாவன உரு முதற் கோடியீருயின. வகை நான்காவன தண்டம், மண்டலம்,

அசங்கதம், போகமெனவிவை. விரிமுப்பதாவன தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கத விரியாறும், போக விரி ஐந்து மெனவிவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற் பெருகும். அவையெல்லாம் வடநூல்களுட் கண்டு கொள்க.'' என்று பரிமேலழகர், பண்டைத் தமிழ் மறநூல்கள் இறந்துபட்டபின், அவற்றின் விரிபுந் திரிபுமான வடநூன் முறையைத் தென்னுட்டிற் குரியதாகக் கூறியிருப்பது பெருந்தவறும்.

எகூஅ. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

(இ—ரை.) தானை—படை; அடல்தகையும் ஆற்றலும் இல் எனினும்—பகைவர்மேற் சென்று கொல்லும் மறத்திறமும் அவர் தன்னூர்வந்து தாக்கினுல் தாங்கும் வலிமையும் தனக்கில்லாவிடினும்; படைத்தகையால் பாடு பெறும்—தன் தோற்றப்பொலிவாலும் வடிவு வகுப்புச் சிறப்பாலும் பெருமை பெறும்.

'இல்லெனினும்' என்னும் இழிவுசிறப் பும்மை அவற்றின் இன்றியமையாமையைக் காட்டிற்று. தோற்றப் பொலிவாவது, சுவடிக்கப்பட்ட தேர்களும் படாம்போர்த்த யானைகளும் அணி பூட்டிய குதிரைகளும், குடை கொடி பதாகை முதலிய கண்கவர் எடுபிடிகளும், பல்லியமும் காள வகைகளும் செய்யும் ஓசை முழக்கமும், கூடிய ஆரவாரம். படை வகுப்பு, மேற் கூறப்பட்டது. 'பாடு' பார்த்தவுடன் பகைவர் அஞ்சும் பெருமை. தென்னூலி யிராமனின் 'எட்சண் டெருமைத்தோல்' (திலகாஷ்ட மகிஷ பந்தனம்) கண்டோடிய வடநாட்டுப் புலவன்போல், வெளியார வாரத்தைக் கண்டு வெருளும் படையும் உலகத்திலிருப்பதால், படைத்தகையாலும் பகைவரை மருட்டலாம் என்றார். பதாகை-பெருங்கொடி.

எகூஆ. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

(இ—ரை.) சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின்—வரவரச் சிறுத்தலும் மனத்தை விட்டு நீங்காத வெறுப்பும் ஏழைமையும் தனக்கில்லாவிடின்; படை வெல்லும்—படை பகைவரை வெல்லும்.

'சிறுத்தல் படை மறவர் விலகுவதால் நேர்வது. இச்சிறுமையும் வறுமையும் அரசன் பொருள் கொடாமையால் வருவன. 'செல்லாத்

துனி' பெண்டிரை அரசன் கைப்பற்றுவதாலும் பிற இழிசெயல்கள் செய்வதாலும் ஏற்படுவது. இம் மூன்றும் உள்ளவிடத்து அரசன் மீது அன்பு கொண்டு ஊக்கமாய்ப் பொரா ராதலால், இல்லாயின் வெல்லும்' என்றார்.

எஎ. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தாஇன
தலைமக்க ளில்வழி யில்.

(இ—ரை.) நிலை மக்கள் சால உடைத்து எனினும்—போரிற் பின்வாங்காது நிலைத்து நிற்கும் மறவரை மிகுதியாகக் கொண்டிருப் பினும்; தலைமக்கள் இல்வழித்தாஇன இல்—தனக்குத் தலைவராகிய வயவர் (வீரர்) இல்லாவிடத்துப் படை நிற்காது.

படையைப் பயிற்றவும் போருக்கு நடத்திச் செல்லவும் போர்க் களத்தில் ஏவிப் போர் செய்விக்கவும், தலைவர் இன்றியமையாமை யால், 'தலைமக்க ளில்வழி யில்' என்றார். இதனால், படைத்தலை வரின் தனிச்சிறப்புக் கூறப்பட்டது. தலைவனில்லாப்படை தலை யில்லாவுடம்பு போன்ற தென்பது கருத்து.

அதி. எஅ—படைச்செருக்கு

அஃதாவது, படையின் மறமிகுதி. அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

எஎ. என்னோமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னோ
முன்னின்று கன்னின் றவர்.

(இ—ரை.) தெவ்விர்—பகைவீர்!; என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர்—இதற்கு முன்பு என் தலைவனது வலிமையறியாது அவனுக்கு எதிர் நின்று போரேற்று அவன் வேலாற் கொல்லப்பட்டு பின்பு நடுகல்லில் நின்ற மறவர் பலராவர்; என் ஐ முன் நில்லன் மின்—ஆதலால், நீவிரும் அவ்வாறு நடுகல்லில் நில்லாது உம் உடலோடு நிற்க விரும்பின், என் தலைவனெதிரே போரேற்று நிற்றலைத் தவிர்க.

இது ஒரு மறவன் தன் தலைவன்மேல் வைத்த அன்புப் பெருக் கால், தன் மறத்தையும் தான் சேர்ந்த படையின் மறத்தையும் அவன் மேலேற்றிக் கூறியவாறு. படையின் வெற்றி படைத்தலைவன் வெற்றியாகக் கூறப்படுவது மரபாதலால்,' இங்ஙனங் கூறினான் என்க. போரில் இறந்த மறவனுக்குக் கல்நட்டு, அதில் அவன் பெயரும் பெருமையும் பொறிப்பது பண்டை முறை. அச்செய்தி

பொருளிலக்கணத்தில் வெட்சி என்னும் புறத் திணையின் பிற்பகுதி யாகிய கரந்தையைச் சேர்ந்த துறையாகும். (தொல், பொருள் புறத். கூ)

அரசனும் தலைமைப் படைத்தலைவனுகப் போருக்குச் செல்வது பண்டை வழக்கமாதலால், இங்கு 'ஐ' என்றது அங்ஙனஞ் சென்ற அரசனையுங் குறிக்கும்.

ஒரு மறவன் தன்திறத்தை மிகுத்துக் கூறுவது நெடுமொழி யெனப்படும். இதை வெட்சித் திணைக் கரந்தைப் பகுதித் துறை யாகத் 'தலைத்தாள் நெடுமொழி தன்னெடு புணர்த்தல்' என்பர் தொல்காப்பியர் (தொல். பொருள், புறத், கூ). ஐயனரிதனர் இதை 'நெடுமொழி கூறல்' என்று கரந்தைப் படலத்துள்ளும், 'நெடுமொழி வஞ்சி' என்று வஞ்சிப் படலத்துள்ளும் அமைப்பார். இவற்றுள் முன்னது தன் அரசனை நோக்கியது; பின்னது தன் பகைவனை நோக்கியது. 'மாராயம் பெற்ற நெடுமொழி' என்னும் தொல்காப்பிய வஞ்சித்துறை சிறிது வேறுபட்டது

இக்குறள், ஒருமறவன் தன் தலைவனை உயர்த்துக் கூறும் கூற்றுயிருப்பதால், நெடுமொழியாகாது அதன் வகையே யாகும். கo—ஆம் புறப்பாட்டுப்போல் அரச வாகையாயின் படைச் செருக்காகாது.

எஎ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

(இ—ரை.) கான முயல் எய்த அம்பினில்—காட்டிலோடும் முயலின்மேல் தப்பாது எய்த அம்பை ஏந்துவதிலும்; யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது—திறந்த வெளியில் நின்ற யானைமே லெறிந்து தப்பிய வேலைப் பிடித்திருத்தல் பெருமை தருவதாம்.

இது, பகைவருள் ஒரு காலாட்படை மறவனைக் கொல்வதினும், ஓர் அரசனை அல்லது படைத்தலைவனை வெல்ல முயலும் முயற்சி சிறந்ததென்று கருதும் மறவன் கூற்று. மரஞ்செடி கொடியடர்ந்த 'கானம்' என்றதனால் திறந்த வெளி யென்பதும், 'பிழைத்த' என்றதனால் தப்பாது என்பதும், சிறு விலங்கிற்கேற்ப 'எய்த' என்றதனால் பெருவிலங்கிற்கேற்ப எறிதல் என்பதும், மறுதலைச் சொற்களாக வருவிக்கப்பட்டன.

எஅ. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
ஸ்ராண்மை மற்றத னெஃகு.

(இ—ரை.) தறுகண் பேராண்மை என்ப — அஞ்சாதும் இரக்கமின்றியும் பகைவரொடு பொரும் கடுமறத்தைச் சிறந்த ஆண்டன்மை என்று சொலவர்; ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப)— ஆயினும், அப்பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்தவிடத்து இரங்கி அதை நீக்குதற் பொருட்டு அவர்க்கு உதவி செய்தலே, அவ்வாண்டன்மைக்குக் கூர்மையென்று சொல்வர் மற நூலார்.

இராவணன் முதல் நாட்போரில் தன்படையும் படைக்கலமுந் தேருமிழந்து தன்னந்தனியனாய் நின்றபோது, இராமன் இரங்கி ''இன்றுபோய் நாளைப் படையொடுவா.'' என்று கூறிவிடுத்ததாக வுள்ள கம்ப விராமாயணச் செய்தி, ஊராண்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாம்.

''ஆனை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூனை யாயின கண்டனை, யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வானை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''

(யுத்த உஉஅ)

இங்ஙனம் போர்க்களத்தில் தனித்து நின்ற பகைவர்க்குதவு தலும், புறங்கொடுத்தார் மீதும் அடைக்கலம் வேண்டினர் மீதும் படைக்கலம் தொடாமையுமான ஊராண்மையைத் 'தழிஞ்சி' என்னும் வஞ்சித்துறையாகப் புறப்பொருள் வெண்பாமாலை (க : உ0) கூறும் இரு கூற்றும் ஒரே சாராருடையதாகையால், 'என்ப' என்பது பின்னும் இயைந்தது. எஃது ஆகுபெயர்.

எஅ. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

(இ—ரை.) கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்—தன் கையிலிருந்த வேலைத் தன்மேல் வந்த போர்யானையைக் கொல்லு மாறு எறிந்துவிட்டு, அடுத்து வந்த வேறொரு போர் யானையைக் கொல்ல வேல் தேடித் திரும்பி வருகின்ற யானைகொல்லி மறவன்; மெய்வேல் பறியா நகும்—தன் மார்பில் தைத்திருந்த வேலைக்கண்டு பறித்து மகிழ்ச்சியடைவான்.

'களிற்றொடு போக்கி' என்றதனால் யானைகளைக் கொல்வதையே குறிக்கோளாகக் கொண்ட மறவன் என்பது பெறப்படும். களிற் றொடு போக்குதலாவது களிற்றின் உயிரைப்போக்குமாறு வேலைப்

போக்குதல். 'மெய் வேல்பறியா நகும்' என்றதனால், தன் மார்பில் பகைவர் வேல் தைத்ததையும் மறமிகுதியால் உணரவில்லை யென்பதும், மேன்மேலும் போர் விருப்பினன் என்பதும், அறியப் படும். இங்ஙனம் மெய்வேல் பறித்தெறிதலை 'நூழிலாட்டு' என்னும் தும்பைத் துறையென்பர் ஐயனரிதனார். (பு. வெ. எ:கசு).

எஎடு. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னேட்டன்ரே வன்க ணவர்க்கு.

(இ—ரை.) விழித்தகண்—பகைவரைச் சினந்து நோக்கி விரிவாகத் திறந்தகண்; வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின்—அவர் ஒளிவீசும் வேலைப் பளிச்சென் றெறிய, அதற்குக் கூசி முன்னை நிலைக்கு மாறுக இமை கொட்டின்; வன்கணவர்க்கு ஓட்டு அன்ரே—அதுவும் உண்மை மறவர்க்குப் புறங்கொடுத்தலாகு மன்ரோ!

'அழித்து' என்பது 'அழித்தழுதாள்' குறள் (கஉகஎ) என்பதிற் போல நின்றது. 'ஓட்டு' தோற்றோடல். இங்கு ஓட்டென்றது ஓட்டாகக் கருதப்படுதலை. சிறந்த மறவர் தம் கண்ணோட்டத்தினால் முறுத்த நோக்கும் மறுத்து நோக்கார் என்பதாம்.

எஎக. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.

(இ—ரை.) தன் நாளை எடுத்து—கடந்துபோன தன் வாழ் நாட்களையெல்லாம் எடுத்தெண்ணி; விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும்—அவற்றுள், போரிற் சிறந்த புண் படாத நாட்களையெல்லாம் வீணைகக் கழிந்த நாட்களோடு சேர்ப் பான் தூய பொருநன்.

விழுப்புண் மார்பிலும் முகத்திலும் பட்ட பெரும் புண். முதுகிற் பட்டது பழிப்புண். பொருநாளாயினும் விழுப்புண் பெருநாள் வெறுநாளாகக் கருதுவான் என்பதாம். பொருநன் போர்மறவன். விழுப்புண் பெருநாள் வீணாளாகவே, பெற்றநாள் மாணான் என்ப தாம்.

எஎஎ. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(இ—ரை.) சுழலும் இசை வேண்டி—விண்ணகத்திற்குத் தம்முடன் வராது மண்ணகத்தையே சூழ்ந்து நிற்கும் புகழை

விரும்பி; வேண்டா உயிரார்—இங்கு, உடலோடு கூடி உயிர்வாழ விரும்பாத மறவர்; கழல்யாப்புக் காரிகை நீர்த்து—தம் காலில் மறக் கழலைக் கட்டிக் கொள்ளுதல் ஒரு தனியழகு பெறுந்தன்மையதாம்.

'சுழலும்' எனவே, அதற்குரிய செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் பார் முழுதும் பரவுதல். உருண்டையான தென்று பொருள்படும் உலகம் என்னும் பெயருக்கேற்பச் 'சுழலும்' என்றார். பிற அணிகள் பெண்டிர்க்குப்போல் ஆடவர்க்கு அழகு செய்யாமையின், ஆடவர்க்குச் சிறப்பாக வுரிய மறக் கழலணியைக் 'காரிகை நீர்த்து' என்றார். 'உயிர்' ஆகுபெயர். உயிர்வேண்டார் என்பதை 'வேண்டா வுயிரார்' என்றது செய்யுள் நடை. மறக்கழலே வெண்டையம் என்பது உலக வழக்கு.

எஅ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(இ—ரை.) உறின் உயிர் அஞ்சா மறவர்—போர்வரின் இறப்பிற்கஞ்சாது மகிழ்ந்து போர்க்களத்திற்குச் செல்லும் மறவர்; இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்—தம் அரசன் அதுவேண்டா மென்று தடுப்பினும் தம் மறந்தளர்தல் இல்லை.

நாள்தொறும் வருந்தியுழைக்கும் உழைப்பாளிகள் வேலை செய்யாது சோம்பியிருத்தலை வெறுத்தல் போல, போருக்கேற்ற மறமும் உடல் திறமும் பயிற்சியும் பெற்ற மறவர் போரின்றியிருத்தலை வெறுத்தல் இயல்பே. இதை.

''போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வே மல்லே மென்னுர்.'' (புறம். ஙக)

''உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேவா னுகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப'' (ஹி சுஅ)

''மண்டமர் நசையொடு கண்படை பெறுஅது'' • (முல்லை : சுஎ)

என்பவற்றுல் அறிக.

எக. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

(இ—ரை.) இழைத்தது இகவாமைச் சாவாரை—தாம் கூறின வஞ்சினம் தப்பாதவாறு, தம் குறிக்கோள் நிறைவேறுதவழிச் சாக

வல்ல மறவரை; பிழைத்தது ஒறுக்கிற்பவர் யாரே—அவர் தோல்வியைச் சொல்லி இகழ்தற்குரியார் இவ்வுலகத்தில் யார்தான்!

'இழைத்தல்' வஞ்சினங் கூறுதல். அது இன்னது செய்யேனு யின் இன்னேனுகுக எனச் சூளுறுதல். இன்னேனுகுக என்பது என்பகைவருக்கு அடிமையாவேனுக என்பதும், என் மீசையைக் கீழ்ந்து பெண்மைத் தோற்றத்தை மேற்கொள்வேனுக என்பதும், என் உடமை முழுவதையும் ஒருங்கே இழப்பேனுக என்பதும், துறவு பூண்டு காட்டில் வதிவேனுக என்பதும், என் உயிரை விட்டு விடுவேனுக என்பதுமாகப் பலதிறப்படுவதாம். அவற்றுள் இறுதி யதே இக்குறளிற் குறிக்கப்பட்டதென அறிக. ஒரு மறவன் தன் குறிக்கோளை நிறைவேற்றுது தோல்வியுறினும், தன் வஞ்சினத்தை நிறைவேற்றி விடின் அது அவன் தோல்வியை வெற்றியாக மாற்றி விடுமாதலால், அவனை எவருங்குறை கூறுதற்கு இடமில்லையென்ப தாம். சொல்லி யென்பது அவாய்நிலையால் வந்தது.

எஅ0 புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(இ—ரை.) புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின்—படைமறவர் நீண்ட காலமாகத் தமக்கும் தம் குடும்பத்திற்கும் வாழ்வளித்துக் காத்த அரசரின் கண்களில் நீர் பெருகுமாறு, போர்க்களத்திற் சாகப்பெறின்; சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து—அச்சாவு இரந்தாயினும் பெற்றுக்கொள்ளும் தகுதியுடையதாம்.

பொதுவகையான சாவாயின், உறவினரே அழுவர்; விண்ண கப்பேறுங் கிட்டாது. செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் போர் மறவர் சாவாயின், அரசன் கண்ணீர் வடிப்பதும், நாட்டிற்காக உயிர் துறந்தாரென்று நாட்டார் புகழ்வதும், விண்ணுலகத்தில் தேவராய்த் தோன்றி யின்புறுவதும், நடுகல் தோன்றி நீணாவுச் சின்னமாக விளங்குவதும், அரத்தக் காணிசுகை என்னும் இறையிலிக் கொடை யேற்படுவதும், சிறந்த பெருமையும் பயனுமாதலின். இரந்தாயினுங் கொள்ளத்தக்க தென்றார். 'நீர்மல்க' என்பதில், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. இனி, நீர்மல்கு என் னும் கூட்டுச்சொல் ஒரு சொற்றன்மைப்பட்ட தெனினுமாம். 'சாகிற்பின்' என்பது அதன் அருமை நோக்கி நின்றது. இரத்த லின் இழிவான தொன்றுமில்லை யெனினும், அதுவும் இச்சாவின் பெருமைநோக்கித் தக்கதென்பதாம். இந்நான்கு குறளாலும் படை மறவர் உயிரோம்பாமை கூறப்பட்டது.

அதி. எஅ—நட்பு

அஃதாவது, படைபோல அரசனுக்கு வினையிடத்துதவும் நட்பரசர் துணையும், குடிகட்குத் துன்பக்காலத்தில் உதவும் நண்பர் உறவும்.

ஆசிரியர் இதை நட்பும் பகையும் என்றும் அவைபோன்ற குணங்களும் செயல்களும் நிலைமைகளும் என்றும் இரண்டாக வகுத்துக்கொண்டு, வெளிப்படையாகவுள்ள முன்னதை ஐயதிகாரங்களாலும் குறிப்பாகவுள்ள பின்னதைப் பன்னீரதிகாரங்களாலுங் கூறுகின்றார்.

வெளிப்படையான முற்பகுதியில் முதலதிகாரமான நட்பு என்பது இவ்வதிகாரம்

எஅக. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

(இ—ரை.; நட்பின் செயற்கு அரிய யா உள—நட்பைப்போல அமைத்துக்கொள்வதற்கு அரிய உறவுகள் வேறு எவை உள்ளன?; அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள—அதை அமைத்துக் கொண்டால், எடுத்துக்கொண்ட வினைமுயற்சிக்குப் பகைவரால் கேடுவராமற் காத்தற்கு அதைப்போல் அருமையான காவல்கள் வேறு எவை உள்ளன?

நாகரிக நிலையிலேனும் அநாகரிக நிலையிலேனும் ஒருவன் பிறருறவின்றி வாழ்தல் அரிது அவ்வுறவு இயற்கை, செயற்கை என இருதிறப்படும். இயற்கையுறவு அரத்தக் கலப்பாலான இனவுறவு; செயற்கையுறவு மணவுறவு, தொழிலுறவு, கத்துறவு, உதவிப்பேற்றுறவு, பழக்கவுறவு, நட்புறவு எனப் பலவகைப்படும். அவற்றுள், நட்புறவென்பது உண்மையானதாகவும் வலிமையுள்ளதாகவும் வாய்த்துவிடின், இனவுறவினுஞ் சிறந்ததாகும். அத்தகைய உறவைத் தேடிக் கண்டுபிடிப்பதும் பெறுவதும் பேணிக் கொள்வதும் அரிதாதலால், 'செயற்கரிய யாவுள நட்பின்' என்றார். உண்மையான நண்பர் துன்பக்காலத்தில் உயிரையும் உதவிக்காப்பாதலின், அதுபோல் 'வினைக்கரிய யாவுள காப்பு' என்றார்.

"A father is a treasure, a brother a comfort, but a friend is both". என்னும் ஆங்கிலப் பழமொழி இங்குக் கவனிக்கத் தக்கது. இருவகை யுறவும் தனிப்பட்ட மாந்தர்க்குப் போன்றே, அரசுகட்கும்

இன்றியமையாதனவாம். இயற்கை யுறவு 'சுற்றந்தழால்' (உக) என்னும் அதிகாரத்திற் கூறப்பட்டது. செயற்கை யுறவாகிய நட்பு இவ்வதிகாரத்திற் கூறப்படுகின்றது.

காலத்திற்கேற்பக் கட்சிமாறும் துணைவலி தொழில் பற்றிய கூட்டுறவேயன்றி நட்பன்மை யானும், அத்துணைவலியும் 'வலியறிதல்' (சுஅ) என்னும் அதிகாரத்தின் முதற்குறளில் பெயரளவிலேயே குறிக்கப்பட்டிருத்தலானும், உண்மை நட்பு உதவி பெறுதும் தோன்றுமாதலானும், "அவற்றுள், இயற்கை பிறப்பு முறையானுயதூஉம் தேயமுறையானுயதூஉமென இருவகைப்படும். அவற்றுள் முன்னீயது சுற்றமாகலின் அது சுற்றந்தழாலினடங்கிற்று; ஏனீயது பகையிடையிட்ட தேயத்ததாகலின், அது துணைவலியென வலியறிதலு ளடங்கிற்று. இனி, ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த வுதவி பற்றிவருஞ் செயற்கை யாகலின், அதன் சிறப்பு இதனுற் கூறப்பட்டது." என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாமை காண்க. 'அரிய' இரண்டனுள், முன்னது எளிதாய் இயலாமையையும், பின்னது பெருஞ் சிறப்பையும், உணர்த்தின.

எஅ நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

(இ—ரை.) நீரவர் கேண்மை பிறை நிறை நீர—அறிவுடைய மேலோர் நட்புக்கள் வளர்பிறைத் தன்மையுடையனவாய் மேன்மேலும் வளர்ந்து வருவனவாம்; பேதையார் நட்பு மதிப்பின் நீர—அறிவில்லாத கீழோர் நட்புக்கள் தேய்பிறைத் தன்மையுடையனவாய் வரவரத் தேய்ந்து வருவனவாம்.

நீர்மையுடையார் நீரவர். நீர்மை சிறந்த தன்மை; "நீர்மையுடையார் சொலின்" (குறள். ககடு) என்பதிற்போல. நட்பைக் 'கேண்மை' யென்றதினுல், அது இனவுறவுபோற் சிறந்ததென்பது பெறப்படும். மேலோர் நட்பு வரவர வளர்தற்கும் கீழோர் நட்பு வரவரத் தளர்தற்கும், அவரிடத்திற் பண்பாடு உண்மையும் இன்மையுமே காரணியம். 'நட்பு' ஈரிடத்தும் பால்பகா வஃறிணைப்பெயர். நட்டார் பன்மையால் நட்பும் பலவாயின.

எஆ. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

(இ—ரை.) பண்பு உடையாளர் தொடர்பு—பண்பட்ட மேலோர் தம்முட் செய்யும் நட்பு; பயில்தொறும்—பழகப்பழக; நூல்

நவில்தொறும் நயம் போலும்—சிறந்த நூல் கற்கக்கற்கக் கற்றார்க்கு இன்பந்தருவதுபோல் இன்பஞ் செய்வதாம்.

நயத்தல் விரும்புதல் அல்லது மகிழ்தல். நயக்கப்படுவது நய மெனப்பட்டது. மேன்மேல் வளரும் நட்பின் தன்மை இங்குக் கூறப் பட்டது.

எஅசு. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(இ—ரை.) நட்டல் நகுதல் பொருட்டு அன்று—ஒருவரோ டொருவர் நட்புச்செய்வது தாம் கூடிப்பேசிச் சிரித்து மகிழ்வதற் கன்று; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு—இருவருள் ஒருவர் தம் அறிவுக்குறைவால் ஏதேனும் வரம்பிறந்த செயல் செய் வராயின், அவரை அறிவுநிறைந்த இன்னொருவர் முற்பட்டுக் கடிந்து திருத்தற்பொருட்டே.

ஒழுக்க வரம்பிற்கு மிஞ்சியதை 'மிகுதி' யென்றும், அதனைக் கெடுமுன் அல்லது தண்டனையடையுமுன் திருந்தவேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இன்சொற்கு வயப்படாமையின் 'இடித்தற் பொருட்டு' என்றும், கூறினர். இதனால் நட்பின் நோக்கம் கூறப் பட்டது.

எஅடு. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

(இ—ரை.) புணர்ச்சி பழகுதல் வேண்டா—ஒருவரோடொரு வர் நட்புச்செய்தற்கு ஓரிடத்திற் கூடுதலும் பலகாற் கண்டும் பேசியும் உறவாடுதலும் வேண்டியதில்லை; உணர்ச்சிதான் நட்பு ஆம் கிழமை தரும்—இருவர்க்கும் ஒத்த வுணர்ச்சியே நண்பராதற் குரிய உரிமையைத்தரும்.

புணர்ச்சி யென்பது ''ஒருதேயத்தாராதல்'' மட்டுமன்று. ''இன்றே போல்கநும் புணர்ச்சி'' (புறம். ஙஅ: உஅ) என்பதற்கு, ''இன்றுபோல்க நுமது கூட்டம்'' என்றே இன்றுள்ள பழையவுரை பொருள்கூறுதல் காண்க. ஓரடையுமின்றி உணர்ச்சி என்று மட்டுங் கூறினமையால், நெட்டிடைப்பட்டு ஒருவரையொருவர் காணாதிருந்தும், ஒருவராலொருவர்க்கு ஒரு பயனுமில்லாதிருந்தும், கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் போல உள்ளம் ஒன்று கலந்த வடிவில் உடனுயிர் துறக்கும் உயரிய உண்மை நண்பராதல் கூடுமென்பது, அறியப்படும். நட்பிற்கு ஏதுவான புணர்ச்சி,

பழகுதல், உணர்ச்சியொத்தல் ஆகிய மூன்றனுள், இறுதியதே தலைசிறந்ததென்பதாம்.

"கேட்டன் மாத்திரை யல்ல தியாவதுங்
காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றறையங் கொள்ளன்மின் ஆரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வருஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
யின்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னெழிக்கவவற் கிடமே."

என்ற கோப்பெருஞ்சோழன் பாட்டும் (புறம் உகக)

"நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
யெனைப்பெருஞ் சிறப்பினே டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனுட்டுத்
தோற்றஞ் சான்ற சான்ரோன் போற்றி
யிசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யிங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே."

என்ற பொத்தியார் பாட்டும் (புறம். உகஎ), மாந்தன் வரலாற்றில் ஈடிணையற்றதும், தமிழ்ப் பண்பாட்டின் தலைமையைக் காட்டுவதுமான, ஓர் அரும்பெரு நிகழ்ச்சி பற்றியனவாம்.

எஅக. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

(இ—ரை.) முகம் நக நட்பது நட்பு அன்று—கண்டவிடத்து அகமன்றி முகம் மட்டும் மலர நட்பது நட்பாகாது; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு—அன்பால் உள்ளமும் மலருமாறு நட்பதே உண்மையான நட்பாவது.

இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது. அகமும் முகமும் ஒருங்கே மலர்வதே நட்பென்றவாறு.

எஅள. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(இ—ரை.) அழிவினவை நீக்கி—நண்பன் கேடுதரும் தீய வழிகளில் ஒழுகுங்கால் அவற்றினின்று விலக்கி; ஆறு உய்த்து—நல்வழிகளில ஒழுகாக்கால் அவற்றிற் செலுத்தி; அழிவின்கண் அல்லல் உழப்பது—தெய்வத்தாற் கேடு வந்தவிடத்து அதை நீக்க முடியாமையின், அத்துன்பத்தைத் தானும் உடன் நுகர்ந்து வருந்துவதே; நட்பு—ஒருவனுக்கு நட்பாவது

ஆறு என்னும் பொதுப்பெயர் நெறி, வழி என்பனபோல நல்லாற்றைக் குறித்தது. 'ஆறுய்த்து' என்றதனால், 'அழிவினவை நீக்கி' என்பதில் 'அழிவினவை' தீயநெறிகளைக் குறித்தமை அறியப்படும்.

''இனி, நவையென்று பாடமோதி, அதற்குப் போரழிவினுஞ் செல்வ வழிவினும் வந்த துன்பங்களென்றும், 'அழிவின்க'ணென் பதற்கு யாக்கையழிவினகணென்றும் உரைப்பாருமுளர்.' என்று பரிமேலழகர் கூறியுள்ளது நன்மறுப்பாகும்.

எஅஅ. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

(இ—ரை.) உடுக்கை இழந்தவன் கைபோல—அவையிடை ஆடையவிழ்ந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று திருத்தி அம் மானக் கேட்டை நீக்குவதுபோல; ஆங்கே இடுக்கண் களைவது நட்பு ஆம்—நண்பனுக்குத் துன்பம் வந்தவிடத்து அப்பொழுதே சென்றுதவி அதை நீக்குவதே ஒருவனுக்கு உண்மையான நட்பாகும்.

'ஆங்கே' என்பது உடுக்கை திருத்தற்கும் இடுக்கண் களை தற்கும் பொதுவாக இடையில் நின்றது. விரைந்து நீக்குவதென்பது இவ்வுவமையின் பொதுத்தன்மை. மானங் காத்தற்கண் ஒருவன் கை தன் மனத்தினும் முற்படுமென்னும் பரிமேலழகர் கூற்று, உள நூற்கு ஒத்ததன்று. 'உடுக்கை' தொழிலாகுபெயர்.

எஅக. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

(இ—ரை.) நட்பிற்கு வீற்று இருக்கை யாது எனின்—நட்பிற் குச் சிறந்த நிலை எதுவென்றால்; கொட்பு இன்றி ஒல்லுமீவாய்

ஊன்றும் நிலை—ஒருபோதும் வேறுபடாது இயன்ற வழியெல்லாம் தன் நண்பனுக்குதவி அவன் எவ்வகையிலுந் தளராதவாறு தாங்கும் உறுதியாம்.

அரியகிணையில் அரசிருக்கையாகிய வீற்றிருக்கை மக்கட்குள் சிறந்த நிலையைக் காட்டுதலால், நட்பின் சிறந்த நிலை இங்கு வீற்றிருக்கை யெனப்பட்டது. 'நிலை' என்பது "நீக்கமும் நிலையும்" (திருவாசகம், கடவுள்) என்பதிற்போல உறுதியென்னும் பொருள் கொண்டது.

எஅ0. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

(இ—ரை.) இவர் எமக்கு இனையர்—இவர் எமக்கு இத்துணையன்பினர்; யாம் இன்னம்—யாம் இவர்க்கு இத்தன்மையேம்; என்று புனையினும்—என்று சொல்லி ஒருவரையொருவர் பாராட்டினும்; நட்புப் புல்லென்னும்—நட்புத்தன் பொலிவிழக்கும்.

இருவர் வேற்றுமையின்றிக் கலந்து நட்டபின், ஒருவரையொருவர் பாராட்டும் போது யாம் இவர் என்று வேறுபடச் சுட்டிக் கூறினும், அது வேற்றுமை காட்டுதலால், நட்புத் தன் அழகிழக்கும் என்றார் இவ்வுயர்ந்த நிலை கோப்பெருஞ்சோழ பிசிராந்தையார் நட்பிற்கே ஏற்குமென்பது,

"தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னும்"
"பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே"

என்னும் கோப்பெருஞ்சோழன் கூற்றுக்களால் அறியப்படும்.

இனி, "நேசனைக்கா ணுவிடத்தில் நெஞ்சார வேதுதித்தல்" என்று ஔவையார் கூறியதற்கேற்ப, இரு நண்பர் உடனிருந்து ஒருவரையொருவர் பிறரிடம் புகழ்ந்து கூறினும், அவர் நட்பின் சிறப்புக் குன்றும் எனினுமாம். உயரிய நட்பிற்கு ஒருவரையொருவர் உடனிருந்து புனைந்துரைத்தல் ஒவ்வாதென்பது கருத்து. இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது.

அதி. அ0—நட்பாராய்தல்

அஃதாவது, நட்பிற்குத் தகுந்தவரை ஆராய்ந்தறிதல். மணவுறவு போன்று நட்புறவும் வாழ்நாள் முழுதும் நீடிப்பதாகையாலும்,

மெய்ந்நட்பால் ஆக்கமும் தீநட்பால் அழிவும் நேர்வதாலும், மலர்ந்த முகத்தையும் இனிய சொல்லையுமே சான்றாகக்கொண்டு எவரையும் நம்பிவிடாமல், எல்லா வகையாலும் ஆராய்ந்து பார்த்து உண்மையான அன்பரையே நண்பராகக் கொள்ளவேண்டுமென்று கூறியவாறும். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

எகூக. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(இ—ரை.) நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை—நட்பை நிலையாகக் கைக்கொள்ள விரும்பியவர்க்கும் வேண்டியவர்க்கும், ஒருவரோடு நட்புச்செய்தபின் அவரைவிட்டு விலகுதல் இயலாது; நாடாது நட்டபின் கேடு இல்லை—ஆதலால், ஆராயாது நட்புச்செய்தல் போலக் கேடுதருவது வேறொன்றும் இல்லை.

சிலர் ஒருவரோடு நட்புக்கொண்டபின், அவரை வீட்டுவிலக விரும்பாமல் அல்லது துணிவில்லாமல் இருக்கலாம். சிலர் தொழிற் கூட்டுப்பற்றி ஒருவரோடு நட்புக்கொண்டு, ஒருகாலும் விலக முடியாவாறு வாழ்நாள் ஒப்பந்தஞ்செய்திருக்கலாம்; அல்லது கயவரோடு தொடர்புகொண்டு அவர் பிடிக்குள் அகப்பட்டு விலக முடியாதவராயிருக்கலாம். இவ்விருசாராரையும் நோக்கியே 'நட்டபின் வீடில்லை' என்றார். இம்மைக்குரிய பொருளின்ப விழுப்பு மட்டுமன்றி, மறுமைக்குரிய அறவிழுப்பும் நேருமாதலால், 'நட்டலிற் கேடிலதில்லை' என்றார். 'நாடுதல்' குணங்களையுஞ் செயல்களையும் நேரடியாகவும் பிறர் வாயிலாகவும் ஆராய்தல். 'கேடு' ஆகு பொருளி.

எகூஉ. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(இ—ரை.) ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை—ஒருவனுடைய குணங்களையும் செயல்களையும் நல்லனவாவென்று பலமுறையும் பலவகையாலும் ஆராய்ந்து பாராது அவரொடு செய்துகொள்ளும் நட்பு; கடைமுறை—இறுதியில்; தான் சாம் துயரம் தரும்—தான் சாதற்கேதுவான துன்பத்தையுண்டாக்கும்.

தீயவனைநீ நட்புக்கொள்ளின், அவன் பட்ட கடனெல்லாம் தன் தலைமேற் சுமருதலானும், அவன் செய்த குற்றங்கட்குரிய தண்டனைகளைத் தானும் அடைதலானும், அவன் பகையெல்லாந் தன்னையுந் தாக்குதலானும், இறுதியிற் சாதல் அல்லது சாதற்

கேற்ற நோதல்தான் விளையும் என்பதாம். 'ஆய்ந்தாய்ந்து' என்னும் அடுக்குப் பன்மை அல்லது தொடர்ச்சி பற்றியது

எஙஉ. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
வினனு மறிந்தியாக்க நட்பு.

(இ—ரை.) குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு இனனும் அறிந்து—ஒருவனுடைய குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறைவற்ற சுற்றத்தையும் ஆராய்ந்தறிந்து; நட்பு யாக்க—நல்லதென்று காணின் அவனெடு நட்புச்செய்க

குணம் என்றது நற்குணத்தை. குடியென்றது சேக்கிழார் குடி போலும் குடும்பப் பிறப்பை. குற்றம் என்றது தீக்குணத்தை.

"குணநாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்." (குறள். ஙிஐச)

என்றமையால், குற்றம் பொறுக்கத்தக்க சிற்றளவாயின் பொருட்படுத்தக்கூடாதென்பது கருத்து.

சுற்றத் தொடர்புகொண்டவன் நட்புத் தொடர்பிற்கும் ஏற்ற வனுயிருப்பனுதலின், இன முடைமையும் வேண்டப்பட்டது. "ஒரு மரமுந் தோப்பன்று, ஒரு மகவும் மகவன்று." என்னும் நெறிமுறை பற்றிக் 'குன்ரு வினனும்' என்ருர். இதனல் ஆராயும்வகை கூறப் பட்டது.

எஙச. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(இ—ரை.) குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானை—உயர் குடியிற் பிறந்து தன்னேப்பற்றி உலகங்கூறும் பழிக்கு அஞ்சுபவனை; கொடுத்தும் நட்புக்கொளல் வேண்டும்—அவன் விரும்பிய பொருளைக் கொடுத்தாயினும் நண்பனுகக் கொள்ளுதல் வேண்டும்.

பல தலைமுறையாகப் பண்பட்டுவந்த குடியிற் பிறந்தவன், அக்குடிப் பண்பாட்டைக் காப்பவனுகவும் தன் குற்றத்தால் அக் குடிக்கு நேரும் பழிக்கு அஞ்சுபவனுகவும் இருப்பனுதலால், 'கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு' என்ருர். நட்புத் தகுதிக்குக் குடிப்பிறப்புச் சிறந்ததென்பது இதனற் கூறப்பட்டது.

எஙடி. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(இ—ரை.) அல்லது இடித்து அழச்சொல்லி—நன்மையல்லாதது செய்தவிடத்துக் கண்டித்து மனம் வருந்துமாறு அறிவுரை கூறி; வழக்கு அறிய வல்லார்—உலக நடையறிந்து அதன்படி நடப்பிக்கும் திறமையுடையவரை; ஆய்ந்து—ஆராய்ந்து கண்டு; நட்புக்கொளல்—அவரொடு நட்புக் கொள்க.

'அல்லது' நல்லதல்லாத தீவினை. இச்சொல் இப்பொருட்டாதலை "அல்லது கெடுப்பவனருள்கொண்ட முகம்போல" ("கலித். கசஅ) என்பதனால் அறிக. நீண்டகாலமாக வழங்கிவருவது வழக்கு. அது இங்கு உயர்ந்தோர் ஒழுக்க வழக்கைக் குறித்தது. உலக நடையறிதல் அரிதாகலின் 'அறியவல்லார்' என்றார். "அழ அழச்சொல்லுவார் தமர், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர்" என்னும் பழமொழி இங்குக் கவனிக்கத்தக்கது.

எகூ. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(இ—ரை.) கேட்டினும் ஓர் உறுதி உண்டு—தீமையாக எல்லாராலுங் கருதப்படும் கேட்டிலும் ஒரு நன்மை யுண்டாம்; கிளைஞரை நீட்டி அளப்பது ஓர் கோல்—அது என்னவெனின், அக்கேடே தன் நண்பரல்லாரின் அன்பையும் நன்றாக அளந்தறிய வுதவும் ஓர் அளவுகோல் என்பதாம்.

ஆக்கக் காலத்தில் எல்லா நண்பரும் ஒரு சரியான அன்பராகத் தோன்றுவதால், அவரன்பை அளந்தறிவகை ஒன்றுமின்மையாலும்; கேட்டுக்காலத்திலேயே மெய்யன்பர் ஒட்டியும் பொய்யன்பர் விலகியும் நிற்பதால், நண்பரின் அன்பளவை அளந்தறியும் நிலைமை ஏற்படுவதாலும்; 'கேட்டினு முண்டோருறுதி' யென்றும், அதைத்தவிர வேறு அளவு கோலின்மையால் 'ஓர்கோல்' என்றும் கூறினர்.

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வான்றது
மேலாடு மீனிற் பலராவர்— ஏலா
இடரொருவ ருற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்." (நாலடி. ஃகக),

"தண்டுகொண் டோட்டினும் போகாமல் நம்மைத் தரிசிக்கவே
பண்டுவந் தோரின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்தும்
திண்டுமிண் டுஞ்சொல்லி வாரா திருந்தனர் செய்கையெல்லாம்
கண்டுகொண் டோமினித் தொண்டுகொண் டோம்நம்
கடவுளுக்கே."
(வேதநாயகம்பிள்ளை தனிப்பாடல்)

என்பவை இங்குக் கவனிக்கத் தக்கன. உம்மை இழிவு சிறப்பு. 'இனஞர்' ஆகுபொருளி. நண்பரன்பை நிலமாக வுருவகி யாமையால் இது ஒருமருங் குருவகம். இம்மூன்று குறளாலும் நட்கப்படத்தக்கார் யார் யாரென்பது கூறப்பட்டது.

எஙஎ. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

(இ—ரை.) ஒருவற்கு ஊதியம் என்பது—ஒருவனுக்கு வரவுப் பேறு என்று சொல்லப்படுவது; பேதையார் கேண்மை ஒரீஇ விடல்—அறிவிலாதாரோடு தெரியாமற் செய்துகொண்ட நட்பை விட்டுவிட்டு, அவரிடத்தினின்று நீங்கிக்கொள்ளுதலாம்.

அறிவிலாதார் தொடர்பு தீங்கே விளைத்தலால் 'ஒரீஇ' என்றும்; அவர் தொடர்பை விட்டவிடத்தும் அருகிலிருந்தால், மூங்கிலிற் சார்ந்த சந்தனமரமும் வேதல்போலப் பின்னுந் தீங்குவருதலால் 'விடல்' என்றும்; அவரைவிட்டு நீங்கியபின் தீங்கொழிதலோடு இருமை யின்பத்திற்கும் வழியேற்படுதலால் அதனைப் 'பேறு' என்றும்; கூறினார். 'ஒரீஇ' இன்னிசை யளபெடை.

எஙஅ. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்கு ணூற்றறுப்பார் நட்பு.

(இ—ரை.) உள்ளம் சிறுகுவ உள்ளற்க—தம் ஊக்கங் குறைதற்குக் காரணியமான வினைகளைச் செய்யக் கருதா திருக்க; அல்லற் கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொள்ளற்க—துன்பக் காலத்திற் கைவிடுவார் நட்பைக் கொள்ளாதிருக்க.

ஊக்கந் தளர்தற்குக் காரணியமாவன, தம் ஆற்றலுக்கு மிஞ்சிய வினைகளை மேற்கொள்ளுதலும் பயனில செய்தலுமாம். அவற்றை அறவே விடவேண்டுமென்பார் கருதலுஞ் செய்யாதிருக்க என்றார். 'ஆற்று' ஆற்றல்; முதனிலைத் தொழிலாகுபெயர். ஆற்றல் வலிமை ஆற்றறுத்தல்—வலியறுத்தல், அஃதாவது கைவிடுதல். துன்பக் காலத்திற் கைவிடுவார் தொடர்புகொள்வதும் ஊக்கங் குறைக்கும் செயலாதலால், இங்கு உவமைக் கருத்துக்கொள்ளத் தேவையில்லை.

எஙக. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

(இ—ரை.) கெடும் காலைக் கைவிடுவார் கேண்மை—ஒருவனுக்குக் கேடு நேர்ந்த காலத்து அவனை விட்டு நீங்குவார் முன்பு

அவனோடு செய்த பொய்ந்நட்பு; அடும் காலை உள்ளினும் உள்ளம் சுடும்—அவன் தன்னைக்கூற்றுவன் கொல்லுங் காலத்து நினைப்பினும் அவன் உள்ளத்தைத் தீப்போற் சுடும்.

கைவிட்டார் என்னுது 'கைவிடுவார்' என்றே பொதுப்படவும் பன்மையிலும் கூறியிருத்தலால், அடுங்காலையுள்ளுதலைக் கைவிடப் பட்டவன் செயலாகக் கொள்ளாது பிறனெருவன் செயலாகக் கொண்டார் பரிமேலழகர். இது "ஒருவ னினைப்பினும்" என்னும் அவர் உரையாலும், "நினைத்த துணையானே இயைபில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதாமெனக் கைவீடெண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு.' என்னும் அவர் சிறப்புரையாலும் அறியப்படும் சொல்லமைதிக்குப் பொருத்தமானதும், கைவிடுவார் கொடுமை மிகுதியை எடுத்துக் காட்டுவதுமான இவ்வுரை, போற்றத்தக்கதே ஆயினும், 'கைவிடுவார் கேண்மை' என்பது கைவிடுதலை வழக்கமாகக்கொண்ட பலரின் நட்பைக் குறிக்குமாயின் அடுங்காலையுள்ளுதலைக் கைவிடப்பட்டவன் செயலாகக் கொள்ளு தற்கும் ஏற்குமாம். இம்மூன்று குறளாலும் நட்கப்படத் தகாத இருவகையார் யார் என்பது கூறப்பட்டது.

அ00. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வோப்பிலார் நட்பு.

(இ—ரை.) மாசு அற்றார் கேண்மை மருவுக—மேற்கூறிய குற்றமொன்றும் இல்லாதவருடைய நட்பையே பயிலுக; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக—அறியாமை காரணமாக உள்ளத்தால் பொருந்தாதவரொடு செய்துகொண்ட நட்பை அவர் விரும்பிய தொன்றைக் கொடுத்தாயினும் விட்டுவிடுக.

மாசற்றார் கேண்மை இருமையின்பமும் பயத்தலால் 'மருவுக' என்றும், மாசுற்றார் கேண்மை இருமைத் துன்பமும் விளைத்தலால் 'ஒருவுக' என்றும், கூறினர். சிற்றிழப்பாற் பேரிழப்பைத் தடுப்பது அறிவுடைமையேயாதலால், 'ஒன்றீத்து மொருவுக' என்றார். இதனால் கொள்ளுவதும் தள்ளுவதுமான இருவகை நட்புங் கூறப்பட்டன.

அதி. அக—பழைமை

அஃதாவது, பழைமையான நட்பின் சிறப்புரிமை. அது நட்டா ரின் பழைமை பற்றி அவர் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுதல். இடம் நோக்கிக் குறிப்பாற்றல் கொண்டு தலைப்புக் குறுகி நின்றது. குற்றமே யில்லா முற்றுந் தூயார் உலகிலொருவரும் இல்லாமையாலும், பொறையுடைமையும் ஒருவர் கடைப்பிடிக்க

வேண்டிய அறமாதலானும், நீண்ட காலமாகப் பழகிய நண்பர் அப்பழக்கம் பற்றி ஏதேனும் பொறுக்கக்கூடிய தவறு செய்யின் அதை மகிழ்ச்சியுடன் பொறுத்துக்கொள்வதும் நண்பர் கடமையென் பதை அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.

அ0க. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

(இ—ரை.) பழைமை எனப்படுவது யாது எனின்—பழைமை யென்று சொல்லப்படுவது என்னது என்று வினவின்; கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு—அது பழைமையான நண்பர் தாம் விரும்பியவாறு செய்தற்குரிய உரிமையைச் சிறிதும் கெடுக்காத பொற்றநட்பாம்.

உரிமையால் விரும்பியவாறு செய்வன : கீழ்மகனாயிருந்து கருமஞ் செய்யுங்காற் கேளாது செய்தல், கேடாகச் செய்யினும் மனம் வருந்தாமை, தமக்கு வேண்டியவற்றைத் தாமே யெடுத்துக் கொள்ளுதல், பணிவும் அச்சமுமின்மை, வீட்டிற்குள் வந்து தாராளமாகப் பழகுதல் முதலியன. இத்தகைய வரம்பு கடந்த நடத்தையைப் பொறுத்துக் கொள்வதே பழைமை என்றவாறு. ''ஒருவர் பொறையிருவர் நட்பு.'' (நாலடி. உஉக) என்றதும் இது பற்றியே. 'பழைமை' ஆகுபெயர்.

அ0உ. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

(இ—ரை.) நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை—நட்பிற்கு உறுப்பாவது விரும்பியன செய்தற்குரிய உரிமை; அதற்கு உப்பு ஆதல் சான்றோர் கடன்—அதனால் அவ்வுரிமைக்குச் சுவையூட்டு வதுபோல் துணையாதல் அறிவுடையோர் கடமையாம்.

உரிமை, கிழமை, கெழுதகைமை என்பன ஒருபொருட் சொற்கள். 'நட்பிற் குறுப்பு' என்றமையால், கெழுதகைமை யில்லா நட்பு உறுப்பறைபோல நிறைவில்லாத தென்பதாம். இவ்வுண் மையை அறியாதார் கெழுதகைமைக்கு உடம்படாவிடினும், அறிந்தார் உடம்பட வேண்டுமென்றற்குச் 'சான்றோர் கடன்' என்றார். 'மற்று' அசைநிலை.

அ0ங. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

(இ—ரை.) கெழுதகைமை செய்த ஆங்கு அமையாக்கடை—நெடுங்கால நண்பர் தம் நட்புரிமையாற் செய்தவற்றிற்குத் தாமே அவற்றைச் செய்தாற்போல உடம்படாவிடின்; பழகிய நட்பு எவன் செய்யும்—பழைமையாக அவருடன் வந்த நட்பு என்ன பயன் படுவதாம்?

செய்தாற்போல வுடம்படுதலாவது தம்மையும் அவரையும் வேறுபடக் கருதாமை.

அ07. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(இ—ரை.) நட்டார் கெழுதகையால் கேளாது செயின்—பழைமையான நண்பர் தம்மைக் கேட்டுச் செய்ய வேண்டிய ஒரு வினையைத் தம் உரிமையாற் கேளாது செய்தாராயின்; விழைதகையான் வேண்டியிருப்பர்—அறிவுடையார் அதன் விரும்பப்படுந் தன்மை பற்றி அவரைத் தமக்கு வேண்டியவராகக் கொள்வார்.

தம் ஏவலாற் செய்யப்படுவதான ஒரு கருமத்தைத் தம் ஏவலின்றியே செவ்வையாய்ச் செய்து முடித்தாராயின், செய்தவரை "ஏவா மக்கள் மூவா மருந்து," என்று அறிவுடையார் பாராட்டுவ தல்லது வேறுவகையாகக் கருதி வெறுக்கார் என்பதாம். செய்தற் குரிய செயப்படு பொருளும் வேண்டியிருத்தற்குரிய வினைமுதலும் வருவிக்கப்பட்டன.

அ08. பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(இ—ரை.) நட்டார் நோதக்க செயின்—பழைமையான நண்பர் தாம் வருந்தத்தக்கவற்றைச் செய்தாராயின்: பேதைமை ஒன்றே பெருங்கிழமை என்று உணர்க—அதற்குக் காரணியும் அவரது அறியாமை மட்டுமன்றி அவர் கொண்ட பேருரிமையுமாகும் என்று அறிந்து பொறுத்துக்கொள்க.

நுண்ணிய நூல்பல கற்றுர்க்கும் பேதைப்படுக்கும் இழவூழால் இடையிடை பேதைமை தோன்றுதலின், அதனைச் செய்யப்படும் தீச்செயலே அவர் விரும்பிச் செய்யும் பகைவினையாகக் கொள்ளற்க என்பதாம். 'ஒன்றே' என்பது ஒன்றுதானே என்னும் பொருள தாம்; ஆதலாற் பரிமேலழகர் கருதியவாறு 'நண்பினைச் சொல் லன்று. 'செயின்' என்பது இயல்பாற் செய்யாமையை உணர்த் திற்று. இது வருகின்றவற்றிற்கும் ஒக்கும். 'நோதக்க' என்றதனால்

நட்டார் தீச்செயற்கு அவரது இழவுழன்றித் தமது இழவுழும் கரணியமாகும் என்று கருதுக என்பது குறிப்பாற் பெறப்படுவதாம். பேதைமை யொன்றே போதிய கரணியமாயிருக்கவும், அதனொடு பெருங்கிழமையுங் கூடிக்கொண்டதனால், நட்டார் தீச்செயல் பற்றி அவரை எள்ளளவும் வெறுக்கற்க என்பது கருத்து.

"செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டுடார்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு." (நாலடி. உஉ)

அ0கூ. எல்லைக்க ணின்ருர் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்ருர் தொடர்பு.

(இ—ரை.) எல்லைக்கண் நின்ருர்—நட்புவரம்பு கடவாது அதன் எல்லைக்குள் நிலைத்து நின்றவர்; தொல்லைக்கண் நின்ருர் தொடர்பு—பழைமையாகத் தம்மோடு பழகிவந்து துன்பில் திரியாது நின்றவரின் நட்பை; தொலைவிடத்தும் துறவார்—அவரால் தமக்குக் கேடுவந்தவிடத்தும் விடார்.

'தொல்லை' ஆகுபொருளி. 'தொலைவு' பொருட்கேடும் போர்த் தோல்வியும்.

அ0எ அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்

(இ—ரை.) அன்பின் வழிவந்த கேண்மையவர்—அன்போடு கூடிப் பழைமையாக வந்த நட்பையுடையார்; அழிவந்த செய்யினும் அன்பு அருர்—தம் நண்பர் தமக்கு அழிவு தருவனவற்றைச் செய்தாராயினும் அவர்பால் அன்பு நீங்கார்.

'அழி' முதனிலைத் தொழிற்பெயர். 'அழிவா' முதனிலை. உம்மை இழிவு சிறப்பு.

"இன்னு செயினும் விடுதற் கரியாரைத்
துன்னுர் துறத்தல் தகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை."

அ0அ. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

இ—ரை.) கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு—பழைமையான நண்பர் செய்த தவற்றைத் தாமாகவன்றிப் பிறர் சொன்னலும் பொருட்படுத்தாத நட்புரிமையறிய வல்லார்க்கு; நட்டார் இழுக்கம் செயின் நாள்—அந்நண்பர் தவறு செய்யின் அந்நாள் நன்னாளாம்.

'கேள்' வகுப்பொருமை. தவறுகள் இவ்வதிகார முதற்குறளுரையிற் கூறப்பட்டன. கேட்டல் கேட்டு அதற்குத்தக்கனே செய்தல். 'கெழுதகைமை வல்லார்' ஒரு சொற்றன்மைப்பட்ட கூட்டுப்பெயர். தவறு செய்யுந்நாள் நட்புரிமையை வெளிப்படுத்துதலின், அறிவுடையன்பர் கண்ணோட்டம் பற்றி அதை மகிழ்ச்சி மனப்பான்மையோடு நோக்குவர் என்பதாம்.

அ0கூ. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு

(இ—ரை.) கெடா வழிவந்த கேண்மையார் கேண்மை—உரிமை கெடாது பழைமையாக வந்த நட்பையுடையாரின் உறவை; விடார்—அவர் செய்த தவறு பற்றி விடாதவரை; உலகு விழையும்—உலகம் விரும்பும்.

கேண்மையை விடுதற்கு இருக்கக்கூடிய கரணியம் வருவித்துரைக்கப்பட்டது. உலகம் விரும்புதலாவது புகழ்ந்து போற்றுதலும் அவரோடு நட்புக் கொள்ளுதலும். 'கெடா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். 'கெடாஅ', 'விடாஅர்' இசைநிறையள பெடைகள். 'கெடாஅர்' என்பது மணக்குடவ காலிங்க பரிப் பெருமாளர் கொண்ட பாடம். 'நட்பிற் கெடாராய்' என்பது மணக்குடவர் உரை. காலிங்கர் 'விடாஅர்' என்பதையும் இங்ஙனமே முற்றெச்சமாக்கி "ஒருகால் ஒழியாதே" என்று பொருளுரைப்பர். 'உலகு' ஆகுபெயர்.

அ0ஐ விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(இ—ரை.) பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார்—பழைமையான நண்பர் தவறு செய்தாராயினும் அவரிடத்துத் தம் நட்புத் தன்மையினின்றும் மாறுபடாதவர்; விழையார் விழையப்படுப—பகைவராலும் விரும்பப்படுவர்.

பண்பாவது நட்பிற் பிழைபொறுத்தல். மூன்றும் வேற்றுமையுருபும் எச்சவும்மையும் தொக்கன.

அதி. அஉ—தீ நட்பு

அஃதாவது, பொறுக்கப்படாத குற்றமுள்ளதாயும் எப்போதும் தீமையே செய்வதாயுமுள்ள தீயோர் நட்பு. நட்பாராய்தலில் 'பேதையார் கேண்மை' என்றும், 'அல்லற்க ணூற்றறுப்பார் நட்பு' என்றும், 'கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை' என்றும், 'ஒப்பிலார் நட்பு' என்றும், பொதுப்படவும் சுருக்கமாகவுஞ் சொல்லிய தீநட்பைச் சிறப்பாகவும் விரிவாகவும் விளக்கமாகவுங் கூறவேண்டியிருத்தலின், இது பொறுக்கப்படும் குற்றமுள்ள பழைமையின் பின் வைக்கப்பட்டது.

அகக. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

(இ—ரை.) பருகுவார் போலினும் — காதல் மிகுதியால் விழுங்கி விடுவார்போல் தோன்றினும்; பண்பு இலார் கேண்மை—நற்குணமில்லார் நட்பு; பெருகலின் குன்றல் இனிது—வளர்தலினுந் தேய்ந்து போதல் நல்லது.

குன்றல்—வரவரச் சுருங்கி இறுதியிற் சிறிதும் இல்லாமற் போதல். தீயார் நட்பு வளர்தலும் தேய்தலும் தீமை வளர்தலுந் தேய்தலும் போன்றதே யென்பது கருத்து. உம்மை உயர்வு சிறப்பு.

பருகுவார் போலுதல் என்னும் திருக்குறள் வழக்காறு, பிற் காலத்துப் புலவரால் வழிவழி ஆளப்பட்டு வந்துள்ளது. ''பருகுவன்ன காதலுள்ளமொடு'' (அகம். கூகக) ''பருகு வன்ன வேட்கை'' (புறம். உ0எ), ''பருகு வன்ன வருகா நோக்கமொடு'' (பொருந. எஎ), ''பருகு வன்ன நோக்மொடு'' (பெருங். உ. எ:அ0), ''பருகிய நோக்கெனும்'' (கம்ப. க. ககக: கூஎ), ''பருகுவான் போல நோக்கும்'' (பாக. ச. கூ: கூஇ), ''பருகுவான் போல நோக்கி'' (கூர்ம. திருக்கல். கூக).

அகஉ. உறினட் டறிஞரு மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

(இ—ரை.) உறின் நட்டு அறின் ஒருவும் — தமக்கொரு பயனுள்ள விடத்து நட்புச்செய்து அஃதில்லாத விடத்து நீங்கிவிடும்; ஒப்புஇலார் கேண்மை—உள்ளத்தாற் பொருந்தாதவரது நட்பை; பெறினும் இழப்பினும் என்—பெற்றலும் பெற்றபின் இழந்தாலும் இரண்டிற்கும் என்ன வேறுபாடுண்டு? ஒன்றுமில்லை.

தந்நலமே கருதுபவர் உள்ளத்தாற் பொருந்தாராதலின் ஒப்பிலார் என்றும், அவர் நட்பு இருப்பின் ஆக்கமும் இல்லாவிடின் கேடும் இன்மையால் 'பெறினும் இழப்பினு மென்' என்றும், கூறினர். ஒத்தல் உள்ளம் ஒன்றுதல். 'ஒரூஉம்' இன்னிசையளபெடை.

அந. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

(இ—ரை.) உறுவது சீர்தூக்கும் நட்பும்—நட்கப்படுவாரின் நலத்தையும் அருமையையும் நோக்காது அவரால் தமக்கு வரும் பயனே மட்டும் அளந்து பார்க்கும் தந்நல நண்பரும்: பெறுவது கொள்வாரும்—கொடுப்பவரை உள்ளத்திற் கொள்ளாது அவர் கொடுக்கும் பொருளே மட்டும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் விலை மகளிரும்; கள்வரும்--பிறர்கேட்டையும் அவர் படுந்துன்பத்தையும் நோக்காது தமக்குக் கிடைக்கும் பொருளே மட்டும் நோக்கிக் களவு செய்வாரும்; நேர்—தம்முள் ஒத்தவராவர்.

தந்நலமே கருதிப் பிறர்பொருளே வஞ்சித்துப் பெறுதலில் மூவரும் ஒத்தலின் 'நேர்' என்றார். 'நட்பு' ஆகு பொருளி.

அந. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

(இ—ரை.) அமர் அகத்து ஆற்று அறுக்கும் கல்லாமா அன்னார்—போர்வரு முன்பெல்லாம் தன்னே எந்நிலைமையிலும் தாங்குவது போன்றிருந்து, அது வந்தபின் போர்க்களத்தில் தன்னைக் கீழே தள்ளிவிட்டு ஓடிப்போகும் பயிற்சியில்லாக் குதிரையை ஒத்தவரின்; தமரின் தனிமை தலை—நட்போடிருத்தலினுந் தனித்திருத்தல் சிறந்ததாம்.

தீய நண்பர் துன்பம் வருமுன்பெல்லாம் நிகரியான துணையாவார் போன்றிருந்துவிட்டு, அது வந்தபின் நீங்கிவிடுவரென்பது, உவமத்தாற் பெறப்பட்டது. ஆற்றறுத்தல் என்பதற்கு எகஅ-ஆம் குறளுரையில் உரைத்தது போல் உரைக்க. கல்லாமை போர்ப்பயிற்சியில்லாமை.

''ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையுங்
கந்து மறமுங் கறங்குமா''

என்பதனுல் (பு. வெ. உஙஎ) குதிரையின் போர்ப் பயிற்சி அறியப்படும். மல்லம், மயில், குரங்கு, வல்லியம் (புலி) அம்பு எனச் செலவு (கதி) ஐவகை. சாரியை மண்டலம் என்னும் சுற்றுவரவு. 'கந்து'

(வ.) தாண்டு. மறம்-போர்முரண். தமர்-தமர்மை; ஆகுபொருளி. 'தனிமை' ஏமாற்றமின்மைக்கும் அழிவின்மைக்கும் ஏதுவாகலின் அதைத் 'தகீ' என்றார்.

அகடு. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(இ—ரை.) செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை—பாதுகாப்புத் தருமென்று கருதிச் செய்துவைத்தாலும் பாதுகாப்பாகாத கீழோரது தீநட்பு; எய்தலின் எய்தாமை நன்று—பெற்றிருப்பதினும் பெற்றிராமையே நல்லது.

'எய்தலினெய்தாமை நன்று' என்பதைத் 'தமரிற் றனிமை தகீ' என்பதுபோற் கொள்க. 'சாரா' என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் 'புன்கேண்மை' என்னும் பெயரைத் தழுவிற்று. 'சிறியவர்' இடைப்பிறிதுவரல். சிறப்பும்மை தொக்கது.

அக. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

(இ—ரை.) பேதை பெருங் கெழீஇ நட்பின்—அறிவிலானது மிக நெருங்கிய நட்பினும்; அறிவுடையார் ஏதின்மை கோடி உறும்—அறிவுடையானின் பகைமை கோடி மடங்கு நல்லதாம்.

பேதை நட்பு பல்வகைத் தீங்கை விளைத்தலானும், அறிவுடையான் பகை ஒரு தீங்கும் விளைக்காமையானும், 'கோடியுறும்' என்றார். பன்மை உயர்வு பற்றி வந்தது. ஏதின்மை' இங்கு ஏதும் அன்பின்மை. கெழி நட்பு. "ஒருவன் கெழியின்மை கேட்டா லறிக" என்பது நான்மணிக் கடிகை (கூக). கெழீஇ என்பது கெழி என்பதன் அளபெடை வடிவம். பகைவனைக் கெழீஇயிலி என்பது இலக்கிய வழக்கு (தொல். சொல். இள, இளம். உரை). பெருங் கெழீஇ நட்பு என்பது பேருழுவலன்பு என்பது போன்ற பல்சொற் றொடர். "பெருங்கழிநட்டென்று பாடமோதுவாருமுளர்." என்றார் பரிமேலழகர். அது பெருங்கெழி நட்பு என்றுமிருந்திருக்கலாம். "கெழீஇய வென்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது". என்று கொள்ளத் தேவையில்லை.

அஎ. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்.

(இ—ரை.) நகை வகையர் ஆகிய நட்பின்—தாம் அறிவடையும் வகையினராகாது சிரித்து மகிழும் வகையினராதற்கு ஏதுவாகிய

நட்பால் வரும் இன்பத்தினும்; பகைவரால் பத்து அடுத்த கோடி உறும்—பகைவரால் வருந்துன்பம் பத்துக்கோடி மடங்கு நல்லதாம்.

நகை வகையராக்குவார் பிறருக்கு அறிவூட்டாது அவரைச் சிரித்து மகிழவைப்பதையே தொழிலாகக்கொண்டு பொருள்பெறும் குறும்பர், காமுகர், நகை வேழம்பர் (கோமாளிக் கூத்தர்) முதலியோர். அவர் நட்பு மிகத்தீயது என்பது கருத்து. 'பத்தடுத்த கோடியுறும்' என்பது வலியுறுத்தல் பற்றிவந்த உயர்வு நவிற்சி. ஆகியநட்பு ஆதற்கேதுவான நட்பு 'நட்பு' ஆகுபொருளி. 'வருந் துன்பம்' என்பது அவாய்நிலையால் வந்தது.

அஃஅ ஒல்லுங் கருமம் முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

(இ—ரை.) ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை—ஆகும் செயலியும் ஆகாததாக்கிக் கெடுப்பவரின் நட்பை; சொல்லாடார் சோரவிடல்—அவருக்குச் சொல்லாமலே மெல்ல மெல்லத் தளர விடுக.

இனி, 'ஒல்லும் கருமம் உடற்றுபவர்' என்பதற்கு,. தம்மால் இயலுங் கருமத்தையும் இயலாததாகக்காட்டி நடிப்பவர் என்று உரைப்பினுமாம். சோரவிடலைத் தெரிவிப்பின் ஏதேனுஞ் சூழ்ச்சி செய்து அதைத் தடுப்பராதலின், 'சொல்லாடார்' என்றும், நீண்ட காலத்தின்பின் தாமே அறிந்துகொள்ளுமாறு மெல்ல மெல்லத் தளர விடுக என்பார் 'சோரவிடல்' என்றும், கூறினர். 'சொல்லாடார்' எதிர்மறை முற்றெச்சம். எச்சவும்மை தொக்கது.

அஃகூ. கனவினு மின்னாது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(இ—ரை.) சொல்வேறு வினைவேறு பட்டார் தொடர்பு—சொல்லொன்றுஞ் செயலொன்றுமா யிருப்பவரின் நட்பு—கனவினும் இன்னாது-நனவில் மட்டுமன்றிக் கனவில் நினைப்பினும் துன்பந்தருவ தாம்

சொல்வேறு வினைவேறு படுதலாவது சொல்லளவில் நண்பராக வும் செயலளவிற் பகைவராகவுமிருத்தல். மதியொடும் மனச் சான் றொடும் கூடாத தூக்கநிலையிலும் துன்பந்தருமென்று, அதன் கொடுமை கூறியவாறு. எச்சவும்மை தொக்கது. 'மன்', 'ஓ' அசை நிலைகள்.

அ2ெ. எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(இ—ரை.) மனைக் கெழீஇ மன்றில் பழிப்பார் தொடர்பு—இல்லத்தில் தனியே யிருக்கும்போது அன்பர்போல் நட்பாடி, அம்பலத்திற் பலரோடு கூடியிருக்கும்போது பகைவர்போற் பழிகூறுவார் நட்பு; எனைத்தும் குறுகுதல் ஓம்பல்—எள்ளளவுந் தம்மை அணுகாதபடி காத்துக்கொள்க.

தனித்திருக்கும்போது பழிப்பினும் பிறரோடு கூடியிருக்கும்போது புகழ்வதே நல்ல நண்பர் செயலாம். அதற்கு மாறுக விருப்பதொடு கண்முன் துணிந்து முரண்படுவதால், அவர் பகைவரொடு கூடி அழிவுண்டாக்காதவாறு முழுவிழிப்புடன் முற்காப்பாக விருக்க வேண்டுமென்பார் 'எனைத்துங் குறுகுதல் ஓம்பல்' என்றார். 'கெழீஇ' இன்னிசை யளபெடை.

அதி. அஉ—கூடாநட்பு

அஃதாவது, உண்மையிற் பகைவராயிருந்து தமக்கேற்றகாலம் வரும்வரை நண்பர்போல் நடிக்கும் பொய்ந்நட்பு. இது புறத்திற் கூடியிருந்தும் அகத்திற் கூடாதிருத்தலால் கூடாநட்பெனப்பட்டது. இது தீநட்பின் மற்றொரு வகையாதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

அ2ஙி. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(இ—ரை.) நேரா நிரந்தவர் நட்பு—அகத்திற் கலவாது புறத்திற் கலந்தொழுகுவாரின் நட்பு; சீர் இடம் காணின் எறிதற்குப் பட்டடை—சிறந்த சமையம் வாய்ப்பின் தாக்குவதற்குப் பட்டடைபோல் உதவுவதாம்.

தக்க சமையம் வரும்வரை உதவி செய்யும் நண்பர்போல் இருந்துவிட்டு அது வந்தவுடன் தாக்குவாரின் நட்பு. அடிப்பதற்கு முன்பெல்லாம் ஒரு கனிபோ (உலோக)ப் பொருளைத் தாங்குவதுபோலிருந்து பின்பு அதை ஓங்கியுறைத்தடித்தற்கு உதவும் பட்டடைபோன்றிருத்தலால், அதைப்பட்டடை யென்றே சார்த்திக் கூறினார். தீர்விடமென்று பாடமோதி முடியுமிடமென்று மணக்குடவர் உரைப்பது சரியன்று. பட்டுதல் அடித்தல். பட்டுதற்கு அடை பட்டடை.

அ2உ. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

(இ—ரை.) இனம் போன்று இனம் அல்லார் கேண்மை—இனத்தார் போன்றிருந்து உண்மையில் இனத்தார்க்குரிய அன்பில்லாத கரந்த பகைவர் நட்பு; மகளிர் மனம்போல வேறுபடும்—விலைமகளிர் மனம்போல வேறுபடும்.

நட்பு வேறுபடுதலாவது கரந்த பகை வெளிப்படையாதல். மகளிர் என்னும் பொதுச்சொல் இடத்திற்கேற்ப விலைமகளிரைக் குறித்தது. விலைமகளிர் காதல் போலக் கரந்த பகைவர் நட்பு வேறுபடுமென்பதாம். முன்னவர் பன்முறையும் பின்னவர் ஒருமுறையும் வேறுபடுவதே வேற்றுமை.

அஉங. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணர்க் கரிது.

(இ—ரை.) பல நல்ல கற்றக் கடைத்தும்—பல நல்லநூல்களைக் கற்றபோதிலும்; மாணர்க்கு—சிறவாத பகைவர்க்கு; மனம் நல்லர் ஆகுதல் அரிது-மனந்திருந்தி உண்மை நண்பராகும் தன்மையில்லை.

நல்ல நூல்கள் அறிவைப் பெருக்கி மனக்கோட்டந் தீர்க்கும் இலங்கு நூல்கள்.

"உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூல் மாண்பு"

(நன். பொதுப்பா. உஅ).

கற்றபின்பும் என்று பொருள்படுதலால் எச்சவும்மை. 'மன நல்லர்' எனச் சினைவினை முதல்வினைமேல் நின்றது. நல்லராகுதல் பகைமை நீங்குதல். இனநலமும் கல்விநலமும் மிகப் பெற்ற விடத்தும் தீய பிறவிக்குணம் நீங்காதவர் உலகிலிருத்தலால், 'மன நல்லராகுதல் மாணர்க் கரிது' என்றார்.

அஉச. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சரை யஞ்சப் படும்

(இ—ரை.) முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னு வஞ்சரை—காணும் போதெல்லாம் முகத்தில் இனிதாகச் சிரித்து உள்ளத்தில் எப்போதும் தீயவராகிய வஞ்சகருக்கு; அஞ்சப்படும்-அஞ்சி விலகிக் கொள்ளல் வேண்டும்.

சிரிப்பின் மகிழ்ச்சி பற்றி இனிய' என்றும், அகத்திற் பகை யிருக்கவும் புறத்தில் நட்புக்காட்டலின் 'வஞ்சர்' என்றும், பகை யைக் குறிப்பாற் காட்டக் கூடிய முகமும் அதை அறிய முடியாவாறு மலர்ச்சிகொள்ளுதலின் 'அஞ்சப்படும்' என்றும், கூறினர். நகும் நேரங்களின் பன்மைபற்றி 'இனிய' என்று பன்மையிற் குறித்தார். 'நகா அ' இசைநிறையளபெடை.

அஉடு. மனத்தி னமையா தவரை யெனத்தொன்றுஞ்
சொல்லினுற் றேறற்பாற் றன்று.

(இ—ரை.) மனத்தின் அமையாதவரை—உள்ளத்தால் தம் மோடு பொருந்தாதவரை; எனைத்து ஒன்றும்—எத்தகைய வினையி லும்; சொல்லினுல் தேறற்பாற்று அன்று—அவர் சொல்லைக்கொண்டு அவரை நம்பத்தக்க முறைமைத்தன்று அரசியல் நூல்.

'எனைத்தொன்றும்' என்பதற்கு, எத்துணைச் சிற்றளவும் என்று உரைப்பினும் அமையும். அன்மைச் சொல் அரசியல் நூல் என்பதை அவாவி நின்றது. பகைமையை மறைத்துச் சொல்லும் வஞ்சனைச் சொல்லை மெய்யென்று கொண்டு, அவரை எவ்வினைக்கும் நம்புவது அரசியல்நூல் முறைமையன் றென்பதாம்.

அஉக. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

(இ—ரை.) நட்டார்போல் நல்லவை சொல்லினும்—உண்மை நண்பர்போல் நன்மை பயக்கக் கூடியவற்றைச் சொன்னரேனும்; ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும்—பகைவர் சொற்கள் நன்மை பயவாமை விரைந்து அறியப்படும்.

எதிர்மறையுன்மை ஒத்துக்கொள்வுப் பொருளது (Concession). கூட்டா நட்பினர் சொல்லளவில் நல்லவற்றையே சொல்வராதலின், எதிர்மறைப் பொருள் வினைவையே தழுவும். ஒல்லையுணரப்படுத லாவது நல்லவை தீயவையாக விரைந்து வெளிப்படல்.

அஉஎ. சொல்வணக்க மொன்னுர்கட் கொள்ளற்க
தீங்கு குறித்தமை யான். [வில்வணக்கந்

(இ—ரை.) வில் வணக்கம் தீங்கு குறித்தமையான்—வில்லின் வினைவாகிய வணக்கம் அதை ஏற்றவர்க்குத் தீமை செய்தலைக் குறித்தலால்; ஒன்னுர்கண் சொல்வணக்கம் கொள்ளற்க—பகைவ

நிடத்துத் தோன்றும் பொய்யான பணிவுவணக்கம் தீமையன்றி நன்மை செய்தலைக் குறித்ததென்று கருதற்க.

உள்ளத்தொடு பொருந்தாமற் சொல்லொடு மட்டும் கூடிய வணக்கமாதலால், பொய் வணக்கத்தைச் 'சொல்வணக்கம்' என்றும், வில் அறிவில்லாப் பொருளும் பிறன்வினை கொண்டதுமாயினும், வினைகலந்து தீங்குசெய்தலுமாகிய வினையொப்புமையால் அதன் குறிப்பை யேதுவாக்கியும், கூறினர். வில்லியின் தீய குறிப்பு வில் வினைவின்மேல் நிற்றல்போல் பகைவரின்தீய குறிப்பும் அவர் உடல் வினைவின்மேல் நிற்றலால், அஞ்சிக் காத்துக்கொள்க என்பதாம்.

அஉஅ. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னு
ரழுதகண் ணீரு மனைத்து.

(இ—ரை) ஒன்னுர் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்—பகைவரின் குறிப்புணர வல்லார்க்கு அவர் குறிப்பிட்ட கைக்குள்ளும் கொல்படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து—அவர் அழுது வடித்த கண்ணீர்க்குள்ளும் அங்ஙனமே மறைந்திருக்கும்.

கொல்லுதற்குப் பின்பு எடுக்க விருக்கும் படைக்கலம் முன்பு கை குவிப்பாலும் கண்ணீர் வடிப்பாலும் மறைக்கப்படுவதால் அவற்றிற் குள் 'படையொடுங்கும்' என்றார். தம் இளக்கங்காட்டி அழுகையும் தொழுகையும், அவர் செயலானன்றிக் குறிப்பாலேயே அவரியல்பை யறிந்து காத்துக்கொள்க வென்பதாம்.

அஉக. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(இ—ரை.) மிகச்செய்து தம் எள்ளுவாரை — பகைமை தோன்றுவாறு புறத்தில் அளவிறந்து நட்புச்செய்து அகத்தில் தம்மை இழிவாயெண்ணும் பகைவரை; நட்பினுள் நகச்செய்து—தாமும் புறத்தே நட்பாடி அவர் மகிழும் வண்ணம் செய்து; சாப்புல்லல் பாற்று—அகத்தே அந்நட்புச் சாகும் வண்ணம் பொருந்தும் தன்மையுடையது அரசியன் முறை.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்." (குறள். கஅஅ)

என்றும்,

"இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (குறள். உஅக)

என்றும், முற்கூறிய ஆசிரியரே இங்கு உள்ளொன்று புறம்பொன்றுகப் பேசி நடிப்பவரைப் பிறரும் பின்பற்ற வேண்டுமென்று கூறிய தென்னையெனின், முற்கூறியது பொதுவியலீச் சார்ந்த இல்லறத்திலுந் துறவறத்திலும் தனிப்பட்டவர் வாழ்க்கைக் குரியதென்றும், இங்குக் கூறியது நாடு முழுவதையுந் தழுவிய வேத்தியற்குரிய தென்றும், வேத்தியலிலும் பொதுவியலறத்தைக் கடைப்பிடிப்பின் உலகம் நடைபெறுதென்றும், இங்ஙனம் ஆவியியன்மையையும் (Spiritualism) பொருளியன்மையையும் (Materialism) இணைத்து நடைமுறைக்கேற்ற வாழ்க்கைச் சட்டவியல் வகுத்தவர் திருவள்ளுவரேயென்றும், அறிந்துகொள்க. சாவ என்பதன் ஈறுகெட்டது மரூஉப்புணர்ச்சித் திரிபு.

"சாவ வென்னுஞ் செயவென் னெச்சத்து
இறுதி வகரங் கெடுதலு முரித்தே."

என்பது தொல்காப்பியம் (எழுத். உயிர். எ).

"கோட்டின்வாய்ச் சாக்குத்தி" (கலித். ஈ0கி).

'பாற்று' என்னும் குறிப்பு வினைமுற்று அரசியன் முறை என்னும் வினைமுதலீ அவாவிநின்றது.

அஃ0. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

(இ—ரை.) பகை நட்பு ஆம் காலம் வருங்கால்—தம் பகைவர் தமக்கு நண்பரா யொழுகுங் காலம் வரின்; முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ விடல்—தாமும் அவர்போல் முகத்தால் நட்புச் செய்து அகத்தில் அதைவிட்டு நீங்கிப் பின்பு வேண்டாதபோது புறநட்பையும் விட்டு விடுக.

பகை நட்பாங் காலமாவது பகைவரை வெளிப்படையாக நீக்க முடியாத காலம். இதனால், வேண்டும்போது பகைவரோடும் புறத்தளவில் தொடர்பு கொள்க என்பது கூறப்பட்டது. 'ஒரீஇ' இன்னிசையளபெடை.

அதி. அசு—பேதைமை

இனி, நட்பும் அதன் மறுதலையாகிய பகையும் அவை போன்ற குணங்களும் செயல்களும் நிலைமைகளும் பற்றிப் பன்னீரதிகாரங்களாற் கூறத்தொடங்கி, முதற்கண் தற்பகையாகிய பேதைமையைப் பற்றிக் கூறுகின்றார். பேதைமை பேதையின் தன்மை. பேதை

நல்லதை விட்டுத் தீயதைத் தெரிந்துகொள்பவனும் அறிவிலாதும் அறியாதவனுமாகிய அறிவிலி.

"பூத்தாலுங் காயா மரமுள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் பாத்தி
விதைத்தாலும் நாருத வித்துள பேதைக்
குரைத்தாலுந் தோன்று துணர்வு." (பழமொழி. சுக)

அஉக. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம் போக விடல்

(இ—ரை.) பேதைமை என்பது ஒன்று யாது எனின்—பேதைமை என்று சொல்லப்படும் ஒரு குற்றம் என்னது என்று வினவின்; ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்—தனக்குக் கேடு தருவனவற்றைக் கைக்கொண்டு ஆக்கந் தருவனவற்றை விட்டு விடல்.

கேடுதருவன வறுமை, நோய், அறங்கடை (பாவம்) பழி, அறியாமை, பகை முதலியன. ஆக்கந் தருவன செல்வம், உடல் நலம், அறம், புகழ், அறிவு, நட்பு முதலியன. ஆகவே, பேதைமை யென்பது தானே இருமையின்பமும் புறக்கணித்தல் என்பதாம்.

அஉஉ. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

(இ—ரை.) பேதைமையுள் எல்லாம் பேதைமை—பேதைமைக் குற்றங்களெல்லாவற்றுள்ளும் கொடியதாவது; கை அல்லதன்கண் காதல் செயல்—ஒருவன் தனக்குத்தகாத ஒழுக்கத்திற் பெரு விருப்பங் கொள்ளுதல்.

கையல்லது செய்தல், இருமைக்கும் ஆகாதென்று அறநூலாற் கடியப் பட்டனவும், தன் நிலைமைக்கு ஏற்காதனவுமான தீய செயல்களைச் செய்தொழுகுதல். 'கை' ஒழுக்கம்; ஆகுபெயர்.

அஉஊ. நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

(இ—ரை.) நாணுமை — வெட்கப்படவேண்டிய செயல்கட்கு வெட்கப்படாமையும்; நாடாமை—ஆய்ந்து பார்க்க வேண்டிய வற்றை ஆய்ந்துபாராமையும்; நாரின்மை—ஈவரிடத்தும் அன்பின் மையும்; யாது ஒன்றும் பேணுமை—பேணிக்காக்க வேண்டிய எதை யும் காவாவையும்; பேதை தொழில்—பேதை செயல்களாம்.

வெட்கப்பட வேண்டியவை பழிகரிசுகள் (பாவங்கள்). ஆராய வேண்டியவை நல்லனவும் தீயனவும் வேண்டுவனவும் வேண்டாதனவும். பேணவேண்டியவை குடிப்பிறப்பு, தன்மானம், ஒழுக்கம், கல்வி, நல்நட்பு முதலியன. இயற்கைக் குணம் அல்லது வழக்கச் செயல் என்பது பற்றித் 'தொழில்' என்றார். 'பேதை' இருபாற் பொது.

அஅ. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(இ—ரை.) ஓதியுணர்ந்தும்—அடங்கியொழுகுதற் கேதுவான அறநூல்களைக் கற்று அவற்றின் பொருளையும் பயனையும் தெளிவாக அறிந்தும்; பிறர்க்கு உரைத்தும்—அவற்றைப் பிறர்க்கு விளங்க எடுத்துச் சொல்லியும்; தான் அடங்காப் பேதையின்—தான் அவற்றின்படி அடங்கியொழுகாத பேதைபோல; பேதையார் இல்—பேதையார் உலகத்தில் இல்லை.

பேதையார் இயல்பாக நல்லதையறியும் ஆற்றலில்லாதார். அறிவு நூல்களைக்கற்று அவற்றுள் நல்லதையுணர்ந்ததொடு, அதைப் பிறர்க்கு எடுத்துரைத்தும் தான் அதைக் கடைப்பிடிக்காதவன் இருமடிப்பேதையாதலின், அறியாப் பேதையினும் அறிந்த பேதை கடைப்பட்டவன் என்பதை யுணர்த்தற்குப் 'பேதையிற் பேதையாரில்' என்றார்.

அங. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

(இ—ரை.) பேதை—பேதையானவன்; எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு—எழுபிறப்பளவும் தான் அழுந்திக்கிடந்து வருந்தும் நரகத்துன்பத்தை; ஒருமைச் செயல் ஆற்றும்—இவ்வொருபிறப்புள்ளேயே தேடிக்கொள்ள வல்லவனும்.

''வரும்பிறவிகளிலெல்லாந் தான்புக்கழுந்தும் நிரயத்தினை'' என்றும், ''முடிவில் காலமெல்லாம் தான் நிரயத் துன்பமுழுத்தற் கேதுவாங் கொடுவினைகளை'' என்றும், பரிமேலழகர் கூறியிருப்பது மிக வரையிறந்திருப்பதனாலும், எழுவகைப் பிறப்பிலும் அழுந்தும் நரகென்பது உத்திக்குப் பொருந்தாமையானும், இங்கு 'எழுமைச்' சொற்குத்தொகைப் பொருளேயன்றி வகைப்பொருள் கொள்ளப்படவில்லை. 'எழுமை' நிறைவு குறித்த மரபெண்களுள் ஒன்று. அது இங்கு நீண்ட காலத்தை யுணர்த்திற்று. 'அளறு' என்னும் பெயருக்கேற்ப 'அழுந்தும்' என்றார். ஆற்றுதல் செய்ய மாட்டுதல். பேதை

தனக்கு நெடுங்காலக் கேட்டைத் தானே தேடிக்கொள்வான் என்பதாம்.

அஉக. பொய்படு மொன்ரோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

(இ—ரை) கை அறியாப் பேதை வினைமேற்கொளின்—செய்யும் வகை யறியாத பேதை ஒரு கருமத்தை யேற்றுச் செய்யின்; பொய்படும் ஒன்ரோ—அதிற் புரைவிழுதல் மட்டுமோ; புனைபூணும்—அவன் குற்றப்பட்டு விலங்கு பூணுதலும் நிகழும்.

'புரைவிழுதல்' துளைபடுதல் போல் உள்ளழிதல். 'புனை' முதனிலைத் தொழிலாகுபெயர். பேதை வினைசெய்யின் வினையுங் கெட்டுத் தானும் கெடுவான் என்பதாம். பொள்—பொய்.

அஉஎ. ஏதிலா ராரத் தமர்பசிப்பப் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

(இ—ரை.) பேதை பெருஞ்செல்வம் உற்றக்கடை—பேதையானவன் ஊழ்வயத்தாற் பெருஞ்செல்வம் பெற்றவிடத்து, ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்—தன்னோடு ஒருதொடர்பு மில்லாத அயலார் நிரம்ப வுண்ணத் தன் குடும்பத்தாரும் நெருங்கிய உறவினரும் உண்ணுதற்கின்றிப் பசியோடிருப்பர்.

எல்லா நுகர்ச்சியும் பெறுதற்கேற்றதென்பது தோன்ற 'பெருஞ்செல்வம்' என்றும், அது சொந்தத் தேட்டன்றித் தெய்வத்தால் வந்ததென்பது தோன்ற 'உற்றக்கடை' என்றும், எல்லாவகையிலும் இன்பம் நுகர்தல் தோன்ற 'ஆர' என்றும், உறவினர் உணவுமின்றி வருந்துதல் தோன்றப் 'பசிப்பர்' என்றும், கூறினார். ''ஊரெங்கும் பேர், வீடு பட்டினி'', ''தமக்கை கிண்ணிப் பிச்சையெடுக்கத் தம்பி கும்பகோணத்திற் கோதானம் பண்ணுகின்ருன்.'' என்னும் பழமொழிகள் இங்குக் கருதத்தக்கன. இக்குறளால், பேதை பெற்ற செல்வம் தமர்க்கன்றிப் பிறர்க்கே பயன்படுமென்பது கூறப்பட்டது.

அஉஅ. மைய லொருவன் களித்தற்ருற் பேதைதன்
கையொன் ருடைமை பெறின்.

(இ—ரை.) பேதை தன்கை ஒன்று உடைமை பெறின்—பேதையானவன் தன் கையில் ஒரு சிறந்தபொருளே உடைமையாகப்

பெற்றிருந்தால்; மையல் ஒருவன் களித்த அற்று—அது ஏற்கெனவே பித்துக் கொள்ளியான ஒருவன் அதன் மேலுங் கள்ளுண்டு மயங்கினாற்போலும்.

'பெறின்' எனவே, அது சொந்தத் தேட்டன்றித் தெய்வத்தினால் வந்தமை பெறப்பட்டது. பேதைமையும் செல்வமயக்கும் ஒருங்கே யுடையவன் பித்தமும் கள்வெறியும் ஒருங்கே கொண்டவன்போல், தலைகால் தெரியாமல் தடுமாறிக் கெடுவன் என்பதாம். இக்குறளால் பேதை பெற்ற செல்வம் அவன் பேதைமையையே மிகுக்கு மென்பது கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

அடுகூ. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(இ—ரை.) பேதையார் கேண்மை பெரிது இனிது—பேதையானவரின் நட்பு மிக இனியதாம்; பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல்—எங்ஙனமெனின், அவரை விட்டுப் பிரியும்போது ஒரு துன்பமுந் தருவதில்லை.

"பேயொடுங் கூடிப் பிரிதலோ வரிதே".
"பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னு
மரீஇப் பின்னைப் பிரிவு." (நாலடி. ஒ ம ம).

ஆதலால், பழகினவரை விட்டுப் பிரிதல்லன்பது பொதுவாகத் துன்பந் தருவதே, ஆயின், பேதையார் நட்பு வரவரத் தேய்ந்து வருதலாலும் யாதொரு நன்மையுஞ் செய்யாமையாலும், அவரை விட்டுப் பிரிதல் எள்ளளவுந் துன்பந் தராததாம். இதனால். அறிவுடையோர் நட்பாயின் அவர் பிரிவின்கண் பெரிதுந் துன்பந் தருமென்பது, எதிர்நிலை யளவையாற் பெறப்படும். பேதையாரைப் புகழ்வதுபோற் பழித்தலால், இது வஞ்சப் புகழ்ச்சி யென்னும் அணியாம்.

அசூ. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றுற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

(இ—ரை.) பேதை சான்றோர் குழாத்துப் புகல்—பேதையானவன் அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியோர் அவையின்கண் புகுதல்; கழாக்கால் பள்ளியுள் வைத்த அற்று—கழுவித் துப்புரவு செய்யாத காலைத் தெய்வ நிலையமான கோவிற்குள் வைத்தாற் போலும்.

இக்குறளிலுள்ள உவமக் கூற்றில் 'பள்ளி' என்பது பலபொருளொருசொல். பிறரெல்லாம் படுக்கை அல்லது படுக்கையறை

யென்றே பொருள் கொண்டனர். பரிமேலழகர் அமளியென்னுஞ் சொல்லியாண்டார். மணக்குடவ பரிப்பெருமாளர் பள்ளியென்னும் மூலச் சொல்லையே ஆண்டனர். ''தூய வல்ல மிதித்த காலி இன்பந் தரும் அமளிக்கண்ணே வைத்தாற்போலும்.'' என்னும் பரிமேலழகர் உவமவுரை பொருத்தமாகத் தோன்றுவதே. ஆயின், முழுப் பொருத்தமாகத் தோன்றவில்லை. 'இன்பந்தரும் அமளி' என்பது சான்றோரையின் இன்பத்தன்மையையும் துப்புரவுத் தன்மையையும் குறிக்குமேயன்றி, அதன் சிறப்பியல்பான தெய்வத்தன்மையை எடுத்துக் காட்டாது.

> ''அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்
> திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்—திங்கள்
> மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
> தேய்வ ரொருமா சுறின்.'' (நாலடி. சஞ்சி).

என்பதனுல் சான்றோரின் தெய்வத்தன்மை உணரப்படும். 'கழாக் கால்' என்பது, அழுக்குந் தூசியும் நீராற்போக்கப்படாத காலியும். வெளிச் சென்று கழுவாத காலியும், நரகலி மிதித்துக் கழுவாதகாலியுங் குறிக்கும். அத்தகைய துப்புரவற்ற காலிப் படுக்கையறையில் வைத்தாலும், சமையலறை, ஊணறை, சரக்கறை, இருக்கையறை, அலுவலறை முதலிய பிறவிடங்களில் வைத்தாலும், ஏறத்தாழ ஒன்றே. ஆதலால், இங்குப் பள்ளி யென்பது, அருகிலுள்ள திருக் குளத்திற் குளித்தோ குளியாதோ காலி நீரால் துப்புரவாக்கியல்லது புகக்கூடாத, தேவகமாகிய கோவிலைக் குறித்ததாகக் கொள்வதே சிறப்புடையதாம். 'உள்' என்னும் இடவேற்றுமையுருபு கோவிற் கன்றி அமளிக் கேற்காமையையும் நோக்குக. வீட்டிலும் வேறிடத்திலும் குளித்து வருவார்க்கும் வரும்வழியிற் காலிற் படிந்த மாசைப் போக்குவதற்கே, கோயில்தொறும் திருக்குளமும் அருகிலுள்ளது. இதனுல், 'கோயில் குளம்' என்பது ஓர் இணைச் சொல்லாகவும் வழங்கி வருகின்றது. எப்பொருளதாயினும், பள்ளி யென்பது தூய தமிழ்ச்சொல் லென்பதைப் பின்னிணைப்பிற் கண்டு தெளிக.

கழாக்கால் என்பது வெளிச்சென்று கழுவாத காலிக் குறிப்பின் இடக்கரடக்கல். 'கழா அ', 'குழா அத்து' இசைநிறையளபெடைகள். 'ஆல்' அசைநிலை.

அதி. அறி - புல்லறிவாண்மை

அஃதாவது, சிற்றறிவுடையராயிருந்து அதை ஆளுந்தன்மை. ஆளுதல் பயன்படுத்துதல். பேதைமைபோல இதுவும் ஒரு தற்பகைக் குணமாதலின், பேதைமையின் பின் வைக்கப்பட்டது.

அசக. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

(இ—ரை.) இன்மையுள் இன்மை அறிவு இன்மை--ஒருவனுக்கு வறுமைக ளெல்லாவற்றுள்ளும் மிகக்கொடியது அறிவில்லாமை; பிறிது இன்மை உலகு இன்மையா வையாது—மற்றச் செல்வமின்மையை உயர்ந்தோ வறுமையாகக் கருதார்.

அறிவு என்னும் பொதுப்பெயர் இங்கு வழக்குப்பற்றி நல்லறிவைக் குறித்தது. அறிவில்லார் செல்வம் பெற்றவிடத்தும் அதனாற் பெறக்கூடிய இம்மை மறுமைப் பேறுகளைப் பெருமையின், அதை 'இன்மையு ளின்மை' என்றும், அறிவாளர் வறியவராயிருந்தவிடத்தும் இருமைப் பேறுகளையும் பெறுதலால் அதை 'இன்மையா வையாது' என்றும், கூறினர். 'இன்மைச் சொல் பின்னும் பின்னும் வந்தது ஸிசாற்பொருட் பின்வருநிலையணி' 'ஆக' என்னும் விகீன யெச்சவீறு கடைக்குறைந்து, நின்றது. 'உலகு' ஆகுபெயர்.

அசஉ. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

(இ—ரை.) அறிவு இலான் நெஞ்சு உவந்து ஈதல்—புல்லறிவாளன் ஒருவனுக்கு ஒருபொருளை மனமகிழ்ந்து கொடுத்தல் நேரின்; பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை—அதற்குக் காரணியம் பெறுகின்றவன் செய்த முன்னை நல்விளையே யன்றி வேருென்று மன்று.

புல்லறிவாளரும் ஏதேனுமொரு சமையம் பிறர்க்கு நெஞ்சாரக் கொடுத்துதவுகின்றனரே யெனின், அவ்வுதவி பெறுகின்றவர் அவ்வுதவியைத் தம்முன்னை நல்விளைப் பயனுகக் கண்டெடுத்த பொருள் போற் பெறுகின்றனரேயன்றி, அப்புல்லறிவாளர் இயல்பான ஈகைத்தன்மையாலாவது இம்மைப் புகழும் மறுமை நல்வாழ்வும் நோக்கிய அறிவினையாகவாவது அவ்வுதவியைச் செய்கின்றாரல்லர் எனக் காரணியங் காட்டியவாறு. நேரின், அதற்குக் காரணியம் என்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன.

அசஙு. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

(இ—ரை.) அறிவு இலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை—புல்லறியாளர் தாமே தம்மைத் துன்புறுத்திக் கொள்ளும் துன்பம்; செறுவார்க்கும் செய்தல் அரிது — அதைச்செய்தற்குரிய பகைவராலுஞ் செய்தற் கியலாதாம்.

இயலாமை அளவும் வகையும் கடுமையும் பற்றியதாகும். பகைவர் தம்மாலியன்ற தீங்கைமட்டும் காலமும் இடமும் அறிந்து நால்வகை வலியும் ஒப்புநோக்கித தீர எண்ணிச் செய்வர். புல்லறிவாளரோ வறுமை, நோய், கரிசு (பாவம்), பழி முதலிய பலவகைத் துன்பங்களையும் எச்சமையத்தும் தாமே தேடிக்கொள்ளுதலின் செறுவார்க்குஞ் செய்தலரிது என்றார். உம்மை இழிவு சிறப்பு.

அதஎ. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

(இ—ரை.) வெண்மை எனப்படுவது யாது எனின்—புல்லறிவுடைமை யென்று சொல்லப்படுவது, என்னது என்று வினவின்; யாம் ஒண்மை உடையம் என்னுஞ் செருக்கு—அது யாம் விளங்கிய அறிவுடையேம் என்று தாமே தம்மை உயர்வாக மதிக்கும் மடம் பட்ட ஆணவம்.

'வெண்மை' என்பது இங்கு விளையா மரம் போன்ற முதிரா அறிவு; பண்பாகுபெயர். ஒப்புமைபற்றிக் காட்சிப் பொருளின் தன்மையாகச் சார்த்திக் கூறப்பட்டது. ஒண்மை ஒளியுடைமை; அதாவது விளங்கிய அல்லது தெளிந்த அறிவுடைமை. புறக் கண்ணிற்குப் பொருளை விளக்கும் ஒளிபோல் அகக் கண்ணிற்குப் பொருளை விளக்கும் அறிவு, புறவொளிக்கு இனமான அகவொளி யாகக் கொள்ளப்பட்டது. செருக்கு உண்மையொடு கூடியதும் கூடாததும் என இருவகைப்படும். ஒரு நல்லறிவாளன் தன்னை உயர்வாக மதிப்பது உண்மையொடு கூடியது; ஒரு புல்லறிவாளன் அங்ஙனம் தன்னை மதிப்பது உண்மையொடு கூடாதது. இரண்டுங் குற்றமே. ஆயின், பின்னது இருமடிக் குற்றமாம்.

மேலையாரியர், சிறப்பாக அமெரிக்கர், யாம் அறிவியலைக் கண்டு வளர்த்தேமென்றும், திங்களை யடைந்தேமென்றும், எல்லாத்துறை யும் வல்லேமென்றும், தருக்கியும் செருக்கியும் வரலாற்று மொழி நூலைப் புறக்கணித்து, ஆரிய அடிப்படையில் வண்ணனை மொழி நூலை வளர்த்து வருவதும் வெண்மையின்பாற் பட்டதே.

அதஅ. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

(இ—ரை.) கல்லாத மேற்கொண்டு ஒழுகல்—புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையுங் கற்றதாகக் காட்டிக்கொண்டு ஒழுகுதல்; கசடு அற வல்லதும் ஐயம் தரும்—அவர் பிழையின்றிக்

கற்றுத் தேர்ந்த நூலறிவு பற்றியும் பிறர்க்கு ஐயுறவை யுண்டு பண்ணும்.

'கசடு' ஐயந்திரிபு குறைவுகள். குறைவாவது, பாம்பைப் பாம்பென்றறிந்தும் உயிருள்ளதா செத்ததா என்றும், நச்சுப்பாம்பா நற்பாம்பா என்றும், பிறவாறும் நிறைவுற அறியாமை. 'ஐயம்' இவர் தேர்ச்சி பெற்றதாகச் சொல்லப்பெறும் துறையறிவும் இத் தகையதுதானே எனக் கருதுதல். 'வல்லதூஉம்' இன்னிசை யளபெடை. உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

அசுசு. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

(இ—ரை.) தம் வயின் குற்றம் மறையாவழி—புல்லறிவாளர் தம்மிடத்துள்ள குற்றங்களை நீக்காவிடத்து; அற்றம் மறைத்தலோ புல் அறிவு—தம் மருமவுறுப்புக்களை மட்டும் ஆடையால் மறைத்துக் கொள்ளுதல் சிற்றறிவாம்.

'அற்றம்' ஆடையற்ற நிலை. மறைத்தல் இரண்டனுள் முன்னது, கண்ணிற்குத் தோன்றுதவாறு செய்தல்; பின்னது இல்லாதவாறு செய்தல். அற்றம் மறைத்தலினும் குற்றம் மறைத்தலே உயர்திணை மாந்தனுக்கு இன்றியமையாத தென்பது கருத்து. ஓகாரம் பிரிநிலை.

அசுஎ அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(இ—ரை.) அருமறை சோரும் அறிவு இலான் — பிறரிடம் சொல்லக் கூடாத உயிர்நாடியான மருமச் செய்திகளைத் தன் வாய் காவாது வெளிவிட்டுவிடும் புல்லறிவாளன்; தானே தனக்குப் பெருமிறை செய்யும்—தானே தனக்குப்பெருங்கேட்டை வருவித்துக் கொள்வான்.

இக்குறட்கு, 'பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றுலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன், அவ்வுறுதி யறியாமை யாற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும்." என்று தொடருரையும், "இனி 'அருமறை சோரு'மென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய் சோர்ந்து பிறர்க்குரைக்கு மென்றுரைத்தார்; அது பேணுமை யென்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை யறிக." என்று

சிறப்புரையும் வரைந்தார் பரிமேலழகர். சமய குரவன் செவியறி வுறுத்தும் மந்திரப் பொருளைப் பண்பட்ட மாணவன் பெறுதல் அறத்துப்பாலில் துறவறவியலில் 'மெய்யுணர்தல்' என்னும் அதி காரத்திற்கு ஏற்குமேயன்றி, பொருளீட்டுதலே பற்றிய பொருட் பாலில் எவ்வதிகாரத்திற்கும் ஏற்காது. சமயத்துறையும் மெய்ப் பொருளியலும் பற்றியவுரையே சாலச்சிறந்ததென்பது, பரிமேலழகர் கடைப்பிடித்த நெறிமுறையாகத் தெரிகின்றது. அஉஙா—ஆம் குறளுரையில், ''பேணவேண்டுமவை; குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. ''என்று அவரே உரைத்தார். அவை வெளிப்படை யாகப் பேணவேண்டிய பண்பாட்டுக் கூறுகளே யன்றி, மறைவாக மனத்துள் வைத்துக் காக்கும் மருமச் செய்திகளல்ல. ஒருகால் மறை என்பதை மறைநூற் பொருளென்று பரிமேலழகர் கொண்டார் போலும்.

''அறைபறை யன்னார் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.'' (குறள். ஃ0எஃ)

என்பதிற் குறித்தது பிறரைப் பற்றிய மறையென்றும், இங்குக் குறித்தது தன்னைப் பற்றிய மறையென்றும், வேறுபாடறிக.

வெளிப்படின் பதவியும் செல்வமும் உயிரும் இழத்தற்குக் காரணியமாகும் மறைவுச் செய்திகளையே 'அருமறை என்றார். அவை சிமிசோன் தன் மதவலிக்குக் காரணியமான பிறவிச்சடை நீலமையைத் தெலீலாள் என்னும் பொதுமகளிடம் வெளிப்படுத் தியது போல்வன. 'அருமறை சோரும்' என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது இனி, ஒரு சொற் றன்மைப்பட்ட கூட்டுச்சொல் எனினுமாம். அருமறை சோர்தல் அறிந்து சோர்வதும் அறியாது சோர்வதும் என இருவகைப்படும். சிமிசோன் அறிந்து சோர்ந்தான்.

அஅஅ. ஏவவுஞ் செய்கலான் ருன்றேறு னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

(இ—ரை.) ஏவவுஞ் செய்கலான்—புல்லறிவாளன் தனக்கு நன்மையானவற்றை அறிவுடையார் செய்யச்சொல்லினுஞ் செய்வ தில்லை; தான் தேருன்—தானுகவும் தனக்கு நன்மையானவற்றை அறிந்துகொள்வதில்லை; அவ்வுயிர்போம் அளவும் ஓர் நோய்—அத் தகையவன் உயிர் உடம்பினின்று நீங்குமளவும் அவனைத்தாங்கும் உறவினர்க்கெல்லாம் ஒப்பற்ற கொடிய நோயாம்.

தன்மதியும் சொன்மதியும் இல்லாதவன் அஃறிணைத் தன்மைப் பட்டு நிற்றலின் 'அவ்வுயிர்' என்றும், அவனுல் வருந்தொல்லை வாழ்நாள் முழுதுந்தொடர்தலின் 'போஒமளவும்' என்றும், நோய் போல் துன்பந்தருதலின் 'நோய்' என்றும், கூறினர். உம்மை எச்சம். 'போஒம்' இசைநிறையளபெடை.

அசஉ. காணுதாற் காட்டுவான் ருன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

(இ—ரை.) காணுதாற் காட்டுவான் தான் காணுன்—தன்னைப் பேரறிவாளனுகக் கருதுவதால் பிறர்வாயிலாக ஒன்றறியுந் தன்மையில்லாத புல்லறிவாளனுக்கு அறிவு புகட்டப் புகுந்தவன், அவனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியாதவன் என்னும் நிலைமையையே அடைவன்; காணுதான் தான் கண்டவாறு கண்டான் ஆம்—அவ்வறியாந்தன்மை இல்லாதவனே, தான் அறிந்தவகையே சரியென்று நம்புவதால், இறுதியில் தான் முன்பு அறிந்தவாறே அறிந்தவனுக முடியும்.

புல்லறிவாளனுக்கு நல்லறிவு கொளுத்தும் வகை இல்லையென்ற வாறு. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

அடுo. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(இ—ரை.) உலகத்தார் உண்டு என்பது இல் என்பான்—உயர்ந்தோ ரெல்லாரும் உண்டென்று சொல்லும் பொருளை இல்லையென்று மறுக்கும் புல்லறிவாளன்; வையத்து அலகையா வைக்கப் படும்—மண்ணுலகத்தில் மாந்தன் வடிவில் வாழும் பேயாகக் கருதப்படுவான்.

உயர்ந்தோர் உண்டென்ப கடவுள், மறுபிறப்பு, இருவினைப் பயன், வீடு, தீயுழி (நரகம்) முதலியன.

"ஒன்றறி கிளவி தறட வுர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்."

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி (சொல். கிளவி, அ) உண்டு என்பது ஒன்றன்பாற் சொல்லாதலால், 'உண்டென்பது' வகுப்பொருமை. "வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன." என்னும் கக—ஆம் நூற்றுண்டை நன்னூல் நூற்பா (கஉக) பிற்காலத்ததாம். தேவிகம் (சாத்துவிகம்), மாந்திகம் (இராசதம்),

பேயிகம் (தாமதம்) என்னும் மூவகை மாந்தத் தன்மையுள் முதலிரண்டும் இல்லாதவனே 'அலகை' என்றார்.

அதி. அசு — இகல்

அஃதாவது, இருவர் ஒரு பொருள் பற்றி அல்லது அன்பின்மை காரணியமாகத் தம்முட் பொருது அல்லது போராடித் தோற்றற்கும் அழிதற்கும் ஏதுவான மாறுபாடு. பேதைமையும் புல்லறிவாண்மையும் ஆகிய தற்பகைக் குணங்களின் பின் மற்பகைக் குணத்தைக் கூறுகின்றாராதலின், இது புல்லறிவாண்மையின்பின் வைக்கப் பட்டது. மன்—மற்ற. மற்பகை பிறரைப் பகைத்தல். "தன்னுயிர் போல் மன்னுயிரையும் நினைக்க வேண்டும்" என்னும் பழமொழியை நோக்குக.

மக்களெல்லாரும் ஒற்றுமையாய் அன்புற்றும் இன்புற்றும் வாழவேண்டுமென்பது ஆசிரியர் நோக்கமாதலின், அதற்குத் தடையாயுள்ள பகைமைக் குணத்தை இங்குக் கண்டிக்கின்றார். இங்கு இகல் என்றது தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் பொதுவான மாறுபாட்டுக் குணத்தை என அறிக. ஒருவன் இன்புற்று வாழ்தற்கு இன்றியமையாத பொருளை அமைதியாய் ஈட்டுதற்கு இகல் தடையாயிருத்தலின், இது இப்பொருட்பாலில் வ்லக்கப் பட்டது.

அறிக. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

(இ—ரை.) இகல்—மாறுபாடு; எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய்—இயங்குதிணைப்பட்ட எல்லாவுயிர்கட்கும் இனத்தொடு கூடி வாழாமைக்கு ஏதுவான, பிரிவினை யென்னும் தீய குணத்தை வளர்க்கும் மனநோய்; என்ப,—என்று கூறுவர் அறநூலார்.

சேக்கையும் உணவும் இணைவிழைச்சும் பற்றி அஃறிணையுயிரினங்கட்குள்ளும் இகல் விளைதலின், 'எல்லாவுயிர்க்கும்' என்றும், ஒன்றுபட்டிருக்க வேண்டிய இனத்தைப் பல்வேறு பிரிவாகப் பகுத்தலால் 'பகல்' என்றும், கூறினர். சேக்கை தங்குமிடம். இகலென்னுந் தீக்குணமுடைய மாந்தர் உயர்திணையாகாது அஃறிணைப்பாற்படுவர் என்பது தோன்றப் 'பண்பின்மை பாரிக்கு நோய்' என்றார்.

அடுஉ. பகல்கருதிப் பற்ரு செயினு மிகல்கருதி
யின்னுசெய் யாமை தலை.

(இ—ரை.) பகல் கருதிப் பற்ரு செயினும்—ஒருவன் தன்னெடு கூடி வாழாமை கருதி வெறுப்பன செய்தானுயினும்; இகல் கருதி இன்னு செய்யாமை தலை—அவனெடு மாறுபாடு கொண்டு அவனுக்குத் தீயவற்றைச் செய்யாதிருத்தல் சிறந்ததாம்.

தீயன செய்யச் செய்யப் பகைமை மேன்மேல் வளர்தலாலும், அதனுல் மனநோவும் உடல்நலக்கேடும் வாழ்நாட்குறைவும் மக்கள் அமைதிக் குலேவும் ஏற்படுதலாலும், அவற்றைச் செய்யாவிடின் அன்பும் அமைதியும் நிலவி இன்பும் பண்பாடும் வளர்ந்து வாழ்நாள் பெருகுதலாலும், 'இன்னு செய்யாமை தலை' என்ருர். 'பற்ரு', 'இன்னு' எதிர்மறைவிணையாலணையும் பெயர்கள். உம்மை இழிவு.

அடுங. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

(இ—ரை.) இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின்—மாறுபாடு என்று சொல்லப்படும் துன்பந்தரு நோயை ஒருவன் தன் மனத்தினின்று நீக்குவானுயின்; தவல் இல்லாத் தா இல் விளக்கம் தரும்—அது அவனுக்கு அழியாத குற்றமற்ற புகழைத் தரும்.

உலகுள்ள அளவும் நிலேத்து நிற்றலால் 'தவலில்லார்' என்றும், எல்லாராலும் புகழப்படுவதாலும் பெயரை விளங்கச் செய்வதாலும் 'தாவில் விளக்கம்' என்றும், கூறினர்.

அடுச. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்

(இ—ரை.) இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின்—மாறுபாடு என்று சொல்லப்படும் தலேயாய துன்பம் ஒருவனுக்கு இல்லேயாயின்; இன்பத்துள் இன்பம் பயக்கும்—அவ்வில்லாமை அவனுக்குத் தலேயாய இன்பத்தை விளேக்கும்.

'துன்பத்துள் துன்பம்' எல்லார்க்கும் பொல்லாதவனுய் எங்கும் எப்போதும் துன்புறுதல். 'இன்பத்துள் இன்பம்' எல்லார்க்கும் நல்லவனுய் எங்கும் எப்போதும் இன்புறுதல்.

அடுடு. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

(இ—ரை.) இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை — தன் உள்ளத்தில் தோன்றும் மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளாது அதன் எதிரே வெள்ளத்து நாணல்போற் சாய்ந்தொழுக வல்லாரை, மிகல் ஊக்கும் தன்மையவர் யாரே—வெல்ல முனையுந்தன்மையுடையார் யார்தான் ?

இகலெதிர் சாய்ந்தொழுகுதல் பொதுவாக எல்லார்க்கும், சிறப்பாக அரசர்க்கு, அரிதாகலின் 'வல்லாரை' என்றும், எல்லார்க்கும் நண்பராகின் வெல்லக் கருதுவார் இராராதலின் 'யாரே மிகலூக்குந் தன்மையவர்' என்றும், கூறினார். இம்மூன்று குறளாலும் இகலில்லார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. ஏகாரம் பிரிநிலை. மாந்தன் உள்ளத்தில் இயல்பானே தீக்கூறும் அதை எதிர்க்கும் நற்கூறும் இருத்தலின், இகலும் எதிர்சாய்தலும் இயல்வனவாம்.

அடுகை. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

(இ—ரை.) இகலில் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை—பிறரொடு மாறுபடுவதில் மிகுதல் தனக்கு நல்லதென்று அதனை மேற்கொள்வானது உயிர்வாழ்க்கை; தவலும் கெடலும் நணித்து—நிலைதாழ்தலும் அதன்பின் முடிதலும் மிகநெருங்கியனவாம்.

மிகுதல் மேன்மேல் முனைதல். இனிதாதல் வெற்றிதருதல். 'தவல்' பொருட்கேடும் 'கெடல்' உயிர்க்கேடுமாம். 'நணித்து' என்பதனைத் 'தவலும் நணித்து', 'கெடலும் நணித்து' எனத் தனித்தனி இரண்டற்கும் பயனிலை யாக்குக. தவ்வல் தாழ்தல்.

அடுஉ. மிகல்மே வென்மெய்ப்பொருள் காணு ரிகன்மேவ
லின்னு வழிவி னவர்.

(இ—ரை.) இகல் மேவல் இன்னு அறிவினவர்—மாறுபாட்டை விரும்புகின்ற தீய அறிவினையுடையார்; மிகல் மேவல் மெய்ப்பொருள் காணுர்—வெற்றியொடு பொருந்தும் அரசியலுண்மைகளை அறியமாட்டார்.

'மெய்ப்பொருள்' தப்பாது வாய்க்கும் நெறிமுறைகள். 'இன்னு அறிவு' தமக்கும் தம்மைச் சார்ந்தவர்க்கும் தீங்கு விளைக்கும் அறிவு. இகலால் அகக்கண் மங்குதலால் 'காணுர்' என்றார். இவ்விரு குறளாலும் இகலினர்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

அநிஅ. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனீ
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(இ—ரை.) இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்—தன் உள்ளத்தி லெழும் மாறுபாட்டை ஏற்காது விடுதல் ஒருவனுக்கு ஆக்கந் தருவதாம்; அதனீ மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம்—அங்ஙன மன்றி அதில் மேற்படுவதில் முனையின், கேடும் அவனிடத்து வருவ தில் முனையும்.

எதிர்சாய்தல் முன்விலகுதல் ஆக்கந்தருவதை ஆக்கமென்று கரணியத்தைக் கருமியமாகச் சார்த்திக் கூறினர். 'மிகலூக்கல்' ஒருசொற் றன்மைப்பட்ட செயப்படுபொருள் குன்றுவினீ.

அநிக. இகல்காணு னூக்கம் வருங்கா லதனீ
மிகல்காணுங் கேடு தரற்கு.

(இ—ரை.) ஆக்கம் வருங்கால் இகல் காணுன்—ஒருவன் தனக்கு ஆக்கம் வருங்காலத்தில் மாறுபாடு கொள்ளுதற்குக் கரணியம் ஏற்படினும் அதைக் கொள்ளக் கருதான்; கேடுதரற்கு அதனீ மிகல் காணும்—தனக்குக் கேட்டை வருவித்தற்குக் கரணிய மின்றியும் அம்மாறுபாட்டில் மேற்படுதலைக் கருதுவான்.

ஆக்கம் ஊழால் வருவது தோன்ற 'வருங்கால்' என்றும், கேடும் அதனுல் தானே வருவிதல் தோன்றத் 'தரற்கு' என்றும், கூறினர். 'மிகல்காணும்' என்பதும் 'மிகலூக்கின்' என்பதுபோல ஒரு சொற்றன்மைப்பட்ட செயப்படுபொருள் குன்றுவினீயாம்.

அஈ0. இகலான மின்னாத வெல்லா நகலான
நன்னய மென்னுஞ் செருக்கு.

(இ—ரை.) இகலான் இன்னாத எல்லாம் ஆம்—ஒருவனுக்கு மாறுபாடொன்றினாலேயே தீயனவெல்லாம் உண்டாகும்; நகலான் நல்நயம் என்னும் செருக்கு ஆம்—அதற்கு மறுதலையான நட்பினுல் நல்ல நேர்பாடு (நீதி) என்னும் செல்வம் உண்டாகும்.

'இன்னாத' வறுமை, உறுப்பறை, பழி, பளகம் (பாவம்) முதலியன. 'நகல்' 'செருக்கு' என்பன அவற்றிற்குக் கரணியமான நட்பையுஞ் செல்வத்தையுங் குறித்தன. நேர்பாடு இங்கு ஒரு செல்வமாகக் கொள்ளப் பெற்றது. இனி, 'நன்னய மென்னும் செருக்கு' என்பது பெருநன்மையாகிய செல்வம் எனினுமாம். இதில் வந்துள்ளது வேற்றுமையணி.

அதி. அள—பகைமாட்சி

அஃதாவது, அறிவின்மை, சூழ்ந்து செய்யாமை, சுற்றந்தழுவாமை, துணையின்மை முதலிய குற்றங்குறைகளாற் பகையைச் சிறப்பித்தல், அஃதாவது மிகுதிப்படுத்தல். சிறப்பெய்பது இங்கு மிகுதி. முன்பு பொதுவகையால் விலக்கப்பட்ட இகலே இங்குச் சிறப்புவகையால் மேற்கொள்ளுமாறு ஏவுகின்றாராதலின், இது அதன்பின் வைக்கப்பட்டது.

அகூக. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(இ—ரை.) வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக — தம்மினும் வலியார்க்குப் பகையாயெதிர்த்தலைத் தவிர்க; மெலியார்மேல் பகை ஓம்பா மேக—மற்ற மெலியார்க்குப்பகையாதலைத் தவிராது விரும்புக.

துணைவலியுடைமையால் மெலியார் வலியாராதலும் அஃதின்மையால் வலியார் மெலியாராதலும் உண்மையால், மெலியார் என்னுமிடத்துத் துணைவலியின்மையுங் கொள்ளப்படும்.

இது பொருட்பாலாதலாலும், "வினையே ஆடவர்க்குயிரே" (குறுந். கூடுஙி) என்பதாலும், வணிகர் பெருளீட்டும் வினை போன்றே அரசர் பிறநாடுகளைக் கைப்பற்றச் செய்யும் போர் வினையும் அவர் கடமையாகப் பண்டைக் காலத்திற் கருதப்பட்ட தினாலும், "மெலியார் மேல் மேக பகை" என்றார். மேலும், இங்ஙனம் வலியப் போர்க்குச் செல்லுதலோடு,

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே."
(தொல். கஅஅச)

"மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப" (மெ கஅகூ)

என்ற முறைப்படி வந்த போரை விடாமையும் அவர் கடமையாயிற்று.

அகூஉ. அன்பில னுன்ற துணையிலன் ருன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(இ—ரை) அன்பு இலன்—தன் சுற்றத்தின்மேல் அன்பில்லாதவனும்; ஆன்ற துணை இலன்—சிறந்த துணையில்லாதவனும்,

தான் துவ்வான்—அவற்றேடுதானும் வலிமையில்லாதவனுகவும் உள்ள ஒருவன்; ஏதிலான் துப்பு என்பரியும்—தன்மேல்வந்த பகைவன் வலிமையை எங்ஙனந் தொலிப்பான்?

இம்மூன்று நிலைமையும் ஒருங்கே யுடையவன் எளிதாய் வெல்லப்படுவான் என்பதாம். ஆனுதல் நிறைதல் அல்லது போதியதாதல். துத்தல் வலியுறுதல். 'துப்பு' தொழிற்பெயரடிப் பண்புப் பெயர்.

அசுஉ. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

(இ—ரை.) அஞ்சும்—போருக்கு அஞ்சுபவனுகவும்; அறியான்—அறிய வேண்டியவற்றை அறியாதவனுகவும்; ஈகலான்—ஈகைத்தன்மையில்லாதவனுகவும் இருப்பவன்; பகைக்குத் தஞ்சம் எளியன்—தன்பகைவர்க்கு மிக எளியனுவன்.

இந்நான்கு நிலைமைகளுள் ஒன்றிருப்பினும் தோல்விக் கேதுவாயிருக்க, நாலும் ஒன்று சேரின் தோல்வியுறுதல் முழுவுறுதியும் மிக எளிதாய் நேர்வதுமாதலின் 'தஞ்சமெளியன்' என்றார். 'தஞ்சம்' எளிமைப் பொருளிடைச்சொல்.

"தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே." (தொல். எஙக). 'தஞ்சமெளியன்' மீமிசைச்சொல். எளியனுதல் எளிதாய் வெல்லப்படுதல்.

அசுச. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கனும் யார்க்கு மெளிது.

(இ—ரை.) வெகுளி நீங்கான்—சினத்தை விடாதவனுகவும்; நிறை இலன்—அடக்கமில்லாதவனுகவு மிருப்பவன்மேற் செல்லுதல்; எஞ்ஞான்றும் யாங்கனும் யார்க்கும் எளிது—எக்காலத்தும் எவர்க்கும் எளிதாம்.

'நிறை' மறை பிறரறியாவாறு மனத்தில் நிறுத்துதல் "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை" (கலித். கூகூ). சினத்தன்மையனுகவும் மறைவெளிப்படுத்துபவனுகவு மிருத்தலால், அவன்மேற் சென்று பொருது வெல்லுதற்குக் காலமும் இடமும் வலியுமறிந்து செல்லுதல் வேண்டாதாயிற்று. "இனி, இனிதென்று பாடமோதி அவர் பகைமை இனிதென்றுரைப்பாரு முளர்." என்று பரிமேலழகர் ஒரு பாடவேறுபாடு காட்டுவர்.

அசுடு. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

(இ—ரை.) வழிநோக்கான் — வினைகளைச் செய்யும் வழிகளை ஆய்ந்தறியாதவனுகவும்; வாய்ப்பன செய்யான்—தப்பாது வாய்க்கும் வினைகளை மேற்கொள்ளாதவனுகவும்; பழிநோக்கான்—தீயன செய்யின் தனக்கு வரும் பழியைக் கருதாதவனுகவும்; பண்பு இலன் — பிறரியல்பையறிந்து அதற்கேற்ப நடக்கும் நற்குணமில்லாதவனுகவும் இருப்பவனது பகை; பற்றார்க்கு இனிது—அவன் பகைவர்க்கு இனிதாகும்.

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்." (கலித். கஉக). வெல்வது எளிதாகவும் வெற்றியால் வரும் பொருள் பெரிதாகவும் இருத்தலால் 'பற்றார்க்கினிது' என்றார்.

அசுசு. காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும்.

(இ—ரை.) காணுச் சினத்தான்—செய்திகளின் உண்மையையும் பிறர் அருமை பெருமைகளையும் பாராமைக் கேதுவான கடுஞ் சினத்தனுகவும்; கழிபெருங் காமத்தான்—கரை கடந்த பெண்ணுசையனுகவும் இருப்பவனது; பேணுமை பேணப்படும்—பகைமை விரும்பிக் கொள்ளப்படும்.

காணுச் சினத்தாற் கண்ணன்ன கேளிரையும் மாபெரு வலியரையும் பகைத்துக் கொள்ளுதலாலும், கழிபெருங் காமத்தாற் பெண்ணின் வாயிலாக எளிதாய்க் கொல்லப்படுதலாலும், இவ்விருகுணங்களையுமுடையான் தானே தன் அழிவைத் தேடிக் கொள்ளுதல் பற்றிப் 'பேணுமை பேணப்படும்' என்றார். 'காணு' ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

அசுஎ. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

(இ—ரை.) அடுத்து இருந்து மாணுத செய்வான் பகை—போரைத் தொடங்கி அண்மையிலிருந்துகொண்டு தனக்குத்தானே மாருனவற்றைச் செய்வான் பகையை; கொடுத்தும் மன்ற கொளல் வேண்டும்—அவன் விரும்பிய பொருளை விலையாகக்கொடுத்தாயினும் உறுதி யாகப் பெறல் வேண்டும்.

அடுத்திருந்து தனக்குக் கேட்டை வருவித்துக் கொள்பவனது நாட்டைக் கைப்பற்றுதலோ, அவனிடமிருந்து பெரும்பொருள் பெறுதலோ, கூடுமாதலின், 'கொடுத்துங் கொளல் வேண்டும் மன்ற' என்றார். அப்பகை அத்துணைப் பயன்படுவ தென்பது கருத்து. 'மன்ற' தேற்றப் பொருளிடைச்சொல். ''மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.'' (தொல். இடை. கள). உம்மை எச்சம். மாணுத செய்தலாவன, மெலியனுயிருந்து பொருதலும் தோற்றலும் வலியனுயிருந்து பொராதிருத்தலும் பொருள்களை விட்டுவிட்டுப் பின்வாங்கிப்போதலும். இவ்வாறு குறளாலும் பகைமாட்சி வகை களும் அவற்றின் விளைவும் கூறப்பட்டன

அகஅ. குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்ருர்க்
கினனிலனு மேமாப் புடைத்து.

(இ—ரை.) குணன் இலனுய்க் குற்றம் பல ஆயின் இனன் இலன் ஆம்—ஒருவன் குணமொன்று மில்லாதவனுய் அவனிடத் துள்ள குற்றங்கள் மட்டும் பலவாயிருப்பின் அவன் துணையில்லாதவ னுவன்; மாற்ருர்க்கு ஏமாப்பு உடைத்து—அந்நிலைமை அவன் பகை வர்க்கு அரணுதலையுடைத்து.

இனி, 'ஆம்' என்பதனை முற்ருக்காது எச்சமாக்கி, இனனிலனும் ஏமாப்பு என்று இயைப்பினும் ஏற்கும். 'குணம்' இறைமாட்சியுட் சொல்லப்பட்டன. 'குற்றம் இவ்வதிகாரத்துள்ளும் பிறவற்றுள்ளுஞ் சொல்லப்பட்டன. குணம் என்னும் பொதுப்பெயர் ஆட்சியும் வழக்கும் பற்றி நற்குணத்தைக் குறித்தது. துணை சுற்றமும் நட்பும் படையுங் குடியும். ஒருவனது எளிமையும் துணையின்மையும் அவன் பகைவனுக்கு வலிமையாதலின் 'ஏமாப்புடைத்து' என்ருர். 'ஆய்' என்னும் விளையெச்சம் தொக்குநின்ற உள்ள என்னும் குறிப்புப் பெயரெச்சங்கொண்டு முடிந்தது.

அகஉ. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(இ—ரை.) அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின்—அரசி யல் அறிவில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்ருல்; செறுவார்க்கு இன்பம் சேண் இகவா—அவரை வெறுத்துப் பொருவார்க்கு வெற்றி யின்பங்கள் தொலைவில் நீங்கி நில்லா.

ஆம்புடை யறிதலும் அறிந்தாற் செய்து முடிக்கும் மனத் திண்மையுங் ஒருங்கேயில்லாத பகைவரைப் பெறுதல் அரிதாதலின்

'பெறின்' என்றும், அவரைச் செறுவார்க்கு வெற்றி நெருங்கி நிற்றலின் 'சேணிகவா' என்றும் கூறினர். பரிமேலழகர் சேணின்பம் எனக்கூட்டி 'உயர்ந்த இன்பங்கள்' எனப் பொருளுரைப்பர். அதுவும் பொருந்துவதே. ஆயின், ஆசிரியர் கருத்துவாயின் 'செறுவார்க்குச் சேணின்பம் நீங்கா' என்று யாத்திருக்கலாம். 'அறிவிலா அஞ்சும்' பெயரெச்ச வடுக்கு. 'இன்பம்' பால்பகா வஃறிணைப் பெயர். வெற்றி, பொருட்பேறு, வலிமிகை, பாடாண் புகழ் முதலியன பல்வேறு இன்பங்களாம்

அள0. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானே யொல்லா தொளி.

(இ—ரை.) கல்லான் வெகுளும் சிறு பொருள் ஒல்லானே—அரசியல் நூல் அறியாதவனைப் பகைத்தலால் வரும் ஏளியாவழிப் பொருளொடு பொருந்தாதவனே; எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது—ஒரு போதும் புகழ் பொருந்தாது.

'சிறு பொருள்' சிறுமுயற்சியால் வரும் பொருள். சிறு முயற்சியே செய்யமாட்டாதவன் ஒருகாலும் பெருமுயற்சி மேற்கொள்ளானாகலின் 'எஞ்ஞான்றும்.....ஒல்லா தொளி' என்றார். ஒளி என்பது வாழ்நாட் காலத்து இசை

அதி. அஅ—பகைத்திறந் தெரிதல்

அஃதாவது, பகைபற்றிய பல்வேறு கூறுகளையும் ஆராய்ந்தறிதல். அவை பகையின் இயல்பும், பகைக்கப்படத்தக்கவர் யாரென்பதும், பகைக்கும் நிலைமையும், பகையையும் நட்பாக்குந் திறனும், பகைவரிடத்து நடந்துகொள்ளும் முறையும், பகைகளைய வேண்டிய பருவமும் பிறவுமாம் பகைபற்றி இகலிலும் பகைமாட்சியிலுங் கூறப்படாத பல்வேறு செய்திகளைக் கூறுதலின், இது அவற்றின்பின் வைக்கப்பட்டது

அள1. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று

(இ—ரை.) பகை என்னும் பண்பு இலதனை—பகையென்று சொல்லப்படும் தீயகுணத்தை; ஒருவன் நகையேயும் வேண்டற் பாற்று அன்று—ஒருவன் விளையாட்டிற்கேனும் விரும்பத்தக்கதாக அரசியல் நூலாற் கொள்ளப்படுவதன்று.

இது "இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்."

என்று இகலைக் கண்டித்தது போன்று பகையைப் பொதுப்படக் கண்டித்ததாகும். அன்பு என்னும் பண்பாட்டுக் குணத்திற்கு மறு தலையாகலின் 'பண்பிலதனை' என்றும், விளையாட்டே விளையாகவும் முடியுமாதலின் 'நலகையையும்' என்றும், வேண்டாமை தொல்லா சிரியர் துணிபென்பார் நூலின்மேல் வைத்தும், கூறினர் 'இலதனை' என்னும் இரண்டாம் வேற்றுமை அரசியல் நூல் என்னும் பெயரை அவாவி நின்றது. இராமன் பையற் பருவத்தில் விளையாட்டாக மந்தரை கூன்மீது மண்ணுண்டை யடித்தது, பின்பு காளைப் பருவத்தில் நாடுவிட்டுக் காடு செல்லக் கரணிய மாயிற்று என்னுங் கதை, "விளையாட்டா யிருந்தது விளையாய் முடிந்தது." என்னும் பழமொழிக்குச்சிறந்த எடுத்துக்காட்டாம். ஏகாரம் பிரிநிலை. உம்மை இழிவு சிறப்பு.

அஎஉ வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேர் உழவா பகை.

(இ—ரை.) வில் ஏர் உழவர் பகை கொளினும்—வில்லே ஏராகக் கொண்ட உழவராகிய பொருநரொடு பகை கொண்டாலும்; சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க—சொல்லே ஏராகக் கொண்ட உழவராகிய அறிஞரொடு பகைகொள்ளா திருக்க.

பொருநர்—போர்மறவர். சொல்லேருழவர்—புலவரும் அரசிய லறிஞரான அமைச்சரும். பொருநர் உடல்வலிமையாற் செய்யுங் கேடு ஒரு சிலரையே தாக்கும். ஆயின், அறிஞர் சூழ்ச்சிவலியாற் செய்யுங்கேடு பல பெருநாடுகளையுந் தாக்கிவிடும் உம்மை எதிர் மறை. "தாயைப் பழித்தாலுந் தண்ணீரைப் பழிக்கக் கூடாது." என்பது போன்றது இக்குறள். ஆதலால், இருசாராரையும் பகைத் துக்கொள்ளற்க என்பதே கருத்தாம். உழவே முதன்முதல் தோன்றிய மாந்தன் கைத்தொழிலாதலால், ஏனைத் தொழிலாளரை யும் உழவராகவும் அவர் தொழிற்கருவியை ஏராகவும் உருவகித் தார். தோண்டுதற் பொருள் கொண்ட தொள் என்னும் வினையடிப் பிறந்து பயிர்த்தொழிலை முதலிற்குறித்த தொழில் என்னும் சொல், இன்று தொழிற் பொதுப்பெயராக வழங்கி வருவது கவனிக்கத் தக்கது.

"The pen is mightier than the sword." என்னும் ஆங்கிலப் பழமொழி இக்குறட் கருத்தையே. காளமேகம் திருமலைராயன் பட்டினத்தில் மண்மாரி பெய்வித்தது, நிறைமொழி மாந்தர் மறை

மொழி போன்றதாம். ஆயின், அமைச்சர் தம் சூழ்ச்சியால் விளை விக்கும் கேடு, வில்லேருழவரான மறவர் வாயிலாக நிகழ்த்துவதே என வேறுபாடறிக ஆகவே, அத்தகைய அமைச்சரைத் துணைக் கொண்ட அரசர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழி யனும் கரிகால்வளவனும் சேரன்செங்குட்டுவனும் போன்றாராயின் இருமடி வலியராதலால், அவரொடு பகை எக்காரணியத்தையிட்டும் கொள்ளத்தக்க தன்றென்பது சொல்லாமலே பெறப்படும்.

அஉ. ஏமுற் றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

(இ—ரை.) தமியனுய்ப் பல்லார் பகை கொள்பவன்—தான் துணையின்றித் தனியனு யிருந்துகொண்டே பலரொடு பகைகொள் பவன்; ஏமுற்றவரினும் ஏழை—பித்தம் பிடித்தவரினும் பேதை யனுவன்.

தனிமை நட்பின்மை. அறிவின் திரிவால் இருவரும் ஒப்பாரா யினும், பித்தன் பொதுவாக ஒருவரையும் பகையாமையானும் அதனுல் அவனுக்குப்பிறரால் கேடின்மையானும், துணையோடு கூடிய வழியும் பகைவரை வெல்லுதல் உறுதியில்லாதிருக்க, அஃ தில்லாதவன் ஒரே சமையத்திற் பலரொடு பொரின் தான் உடனே அழிதல் முழுவுறுதியென்பதை அறியாமையானும், பலர்பகை கொண்ட தனியனே 'ஏமுற்றவரினும் ஏழை' என்றார். இவ்விரு குறளாலும் பகைகொள்ளுதல் சிறப்பு வகையால் விலக்கப்பட்டது.

அஊ. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு.

(இ—ரை.) பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்பு உடை யாளன் தகைமைக்கண்—இயலுமாயின் பகையையும் நட்பாக மாற்றிக்கொண்டு அமைதியுடன் ஒழுகும் பண்பாடுள்ள அரசனது பெருமையின்கீழ்; உலகு தங்கிற்று—இவ்வுலகம் அடங்கி நிற்கும்.

பொருட்கேற்ப 'இயலுமாயின்' என்பது வருவிக்கப்பட்டது. 'வேண்டிய வழி என்னுஞ்சொல்லே வருவித்தார் பரிமேலழகர். அது

'பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்'' (குறள், அகூ0)

என்பதிற் கூறியவாறு கூடாநட்பொடு கூடிவாழும் வலக்கார, நிலை மைக்கு ஏறகுமேயன்றி, பகையை நிலையான உண்மை நட்பாக்

மாற்றியொழுகும் பண்பாட்டு நிலைமைக்கு ஏற்காதென அறிக. பெருமை என்றது பொருள், படை, பண்பாடு முதலியவற்றுல் ஏற்பட்ட தகைமை. பகையும் நட்பாக மாறியபின் உலக முழுதும் வயப்பட்டிருக்குமாதலின் 'தகைமைக்கட் டங்கிற் றுலகு' என்ருர். தேற்றமும் நிலைபேறும் பற்றித் 'தங்கிற்று' என இறந்தகாலத்தாற் கூறினர்.

அஎடு தன்றுணை யின்ருற் பகையிரண்டாற் ருெருவ
னின்றுணையாக் கொள்கவற்றி ஞென்று

(இ—ரை.) தன் துணை இன்று—தனக்குதவுந் துணையொன்று மில்லாமலும்; பகை இரண்டு—தன்னைக் கெடுக்கக் கூடிய பகை இரண்டுடையனுகவும்; தான் ஒருவன்—தான் தனியனுகவும் இருப்பவன்; அவற்றின் ஒன்று இன்துணையாக்கொள்க—அப்பகையிரண்டனுள் தனக்கிசைந்த தொன்றை அப்பொழுதைக்கேனும் நிலையாகவேனும் நல்ல துணையாக அமைத்துக்கொள்க.

தனக்கிசைந்தது தன்னெடு சேரக்கூடியதும் இன்னெரு பகையை வெல்லுதற் கேற்றதுமாகும். உண்மையான துணையாகச் செய்து கொள்க வென்பார் இன்றுணையா என்ருர் 'ஆல்' இரண்டும் அசைநிலை. 'ஆக' என்னும் வினையெச்ச வீறு 'ஆ' எனக் கடைக் குறைந்து நின்றது. 'கொள்கவற்றின்' என்பதில் அகரந்தொக்கது. இவ்விரு குறளாலும் நட்பாக்கக் கூடியபகை கூறப்பட்டது.

அஎஊ தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேருன் பகாஅன் விடல்.

(இ—ரை.) அழிவின்கண் — இருபகைவருள் ஒருவனுல் தோல்வி நேர்ந்த விடத்து; தேறினும் தேருவிடினும்—இன்னெரு பகைவனைத் தெளிந்தானுயினும்; தெளிந்திலனுயினும், தேருன் பகான் விடல்—அவனெடு சேராமலும் அவனைவிட்டு நீங்காமலும் இடைநிலையில் நின்றுகொள்க.

முன் தெளிந்தானுயினும் அப்பொழுது கூடாதிருக்க என்றது உடனின்று கெடுக்காதிருத்தற் பொருட்டு. தெளிந்திலனுயினும் அப்பொழுது நீங்காதிருக்க என்றது, வெளிப்படைப் பகையால் மேலுந் தனக்குக் கேடு வராதிருத்தற்பொருட்டு. 'தேருன்', 'பகான்' எதிர்மறை முற்றெச்சங்கள். 'பகாஅன்' இசைநிறையள பெடை. இக்குறளால் பகையை நொதுமலாக்கல் கூறப்பட்டது.

அஎ. நோவற்க நோந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து

(இ—ரை.) நொந்தது அறியார்க்கு நோவற்க—தான் துன் புற்றதை அறியாத நண்பர்க்குத் தன் துன்பத்தைச் சொல்லற்க; பகைவரகத்து மென்மை மேவற்க—வலியின்மைபார்த்திருக்கும் தன் பகைவரிடம் தன் வலியின்மையை மேலிட்டுக்கொள்ளற்க

நோதல்வினை இங்கு நோதலைச் சொல்லுதலைக் குறித்தது, சொல்லும்போதும் உள்ளத்தில் நோதல் தோன்றுதலின். அரசியல் வாழ்க்கையில் நட்புப் பெரும்பாலும் நிலையில்லாததும் உண்மை யற்றதுமாதலின், பகைவரிடம் வெளிப்படுத்தக் கூடாததைச் சொல்லும்போதே, நண்பரிடம் சொல்லக்கூடாததையும் உடன் கூறினர்.

அஅ வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

(இ—ரை.) வகை அறிந்து தற்செய்து தற்காப்ப—வினை செய்யும் வகையறிந்து அதற்கேற்பத் தன்னை வலிமைப் படுத்தித் தற்காப்புஞ் செய்துகொள்ளின்: பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் —பகைவரிடத்துள்ள இறுமாப்புத்தானே நீங்கிவிடும்.

வினைசெய்யும் வகைகள் நால்வகை ஆம்புடைகளும், பிரித்தல் பொருத்தல் பேணல் முதலிய வலக்காரங்களும், காலவிட வலி களறிந்து சூழ்தலும், தும்பை யுழிஞை முதலிய போர்புரிதலும் முதலாயின. வலிமைப் படுத்தலாவது, பொருள் படைதுணைகளைப் பெருக்குதல். தற்காத்தலாவது பல்வகையரணும் அமைத்துக் கொள்ளுதல். இறுமாப்புத்தம்மை யெவரும் வெல்ல முடியா தென்றும் தாம்பிறரை எளிதாய் வெல்ல முடியுமென்றும் மகிழ்ந் திருத்தல். இக்குறளாற் போர் செய்யாமலே பகைவரை விலக்கும் வகை கூறப்பட்டது.

அக. இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(இ—ரை.) முள்மரம் இளைதாகக் கொல்க—களையவேண்டிய முள்மரத்தைக் கையினால் எளிதாகப் பிடுங்கியெறியும் கன்றும் பருவத்தே களையாவிடினும், இளமரமாயிருக்கும் போதேனும் வெட்டி

விடுக ; காழ்த்த விடத்துக்கொல்யுநர் கைகொல்லும்—அங்ஙனமன்றி அது முதிர்ந்தபின் கொயின், அது தன்னைப் பலர்கூடி வெட்டினும் அவர் கைகளைப் பொறுத்தற்கரிய அளவு வருத்தும்.

கொய வேண்டிய பகையை அது மெலிதாயிருக்குந் தொடக்க நிலையிலேயே கொன்றுவிடுக அங்ஙனமன்றி அது வலுத்தபின் அதைப் பலர் கூடித்தாக்கினும் அது தாக்குவாரைத் தாக்கும் என்னும் பொருள்தோன்ற நிற்பதால், இதுபிறிது மொழிதல் என்னும் அணியாம். இதனைப் பகையைக்கொயும் பருவம் கூறப்பட்டது.

அஅ0. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்

(இ—ரை.) செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார்—தம்மைப் பகைப்பவரின் செருக்கை அடக்கும் நிலைமை யிருந்தும் இகழ்ச்சி யால் அதைச் செய்யாது விட்டுவிட்டவர் ; மன்ற உயிர்ப்ப உளர் அல்லர்—பின்பு, உறுதியாக மூச்சுவிடும் அளவிற்கும் உயிர் வாழ்பவ ராகார்.

முன்பு மெலியராயிருந்த பகைவர் பின்பு வலியராகித் தம்மை வேரொடு கொதல் திண்ணமாதலின், 'உயிர்ப்பவுளரல்லர் மன்ற' என்றார் ''எலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்'' என்பதுபோல், அவர் உயிர்த்த அளவிலேயே இறந்து விடுவர் என்று உரைப்பினும் அமையும். 'மன்ற' என்னுஞ் சொற்கு முன்பு உரைத்தது போல் உரைக்க. இக்குறளால் பகையை முளையிற்கொயாவழி நேருங் கேடு கூறப்பட்டது. முந்தின குறளும் இதுவும் பகை முதிர்ச்சியே பற்றிக் கூறினும், அது ''கைகொல்லும்'' முதிர்ச்சியும் இது மெய் கொல்லும் முதிர்ச்சியும் பற்றியன என வேறுபாடறிக.

அதி. அக—உட்பகை

அஃதாவது, அகத்தாரே தன்னலம் நோக்கியும் கலாம் பற்றியும் தம் இனத்தாரைப் புறத்தாரான பகைவர்க்குக் காட்டிக்கொடுத்தல். இதுவும் ஒரு படைத்திறமாதலின், பகைத்திறந் தெரிதலின் பின் வைக்கப்பட்டது.

அஅக. நிழனீரு மின்னுத வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

(இ—ரை.) நிழல் நீரும் இன்னுத இன்னு—மக்கள் இன்பமாக நுகரும் நிழலும் நீரும் பின்பு நோய் செய்வனவாயின் தீயனவேயாம்;

தமர் நீரும் இன்னு செயின் இன்னு ஆம்-அதுபோலத் தமக்குத்துணை யாயிருக்க வேண்டிய தம்மைச் சேர்ந்தவர் இயல்புகளும் நன்மை செய்வனபோல் தோன்றித் தீமை செய்யின் தீயனவே யாம்.

தீய நிழலால் வரும் நோய் தலைவலி, காய்ச்சல் முதலாயின தீய நீரால் வரும்நோய், யானைக்கால், பெருவயிறு (டீகோதரம்) முதலாயின. தமர் என்பார் தம் குடும்பத்தாரும், தம் உறவினரும் தம் வகுப்பாரும், தம் கூட்டத்தாரும் தம் ஊராரும், தம் நாட்டாரும் தம் மொழியாரும் எனப் பல திறத்தார். முன் தோற்றத்தாலன்றிப் பின்விளைவாலேயே, பொருள்களும் மக்களும் முறையே நல்லனவுந் தீயனவும் நல்லவருந் தீயவருமாதல் அறியப்படும் என்பதாம் இக்குறளால் உட்பகையின் இயலபு கூறப்பட்டது.

அஅஉ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(இ—ரை.) வாள்போல் பகைவரை அஞ்சற்க—கொல்லும் வாள்போல வெளிப்படையாகப் பகைக்கும் பகைவர்க்கு அவ்வளவு அஞ்ச வேண்டுவதில்லை; கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக—ஆனால், உறவினர் போலிருந்து மறைவாகப் பகைக்கும் உட்பகைவரின் போலியுறவிற்கு மிகுதியாக அஞ்சுக.

'வாள்போல் பகைவரை யஞ்சற்க' என்றது, உட்பகைவர்க்கு அஞ்ச வேண்டிய அளவு வெளிப்பகைவர்க்கு அஞ்ச வேண்டா மென்னுங் கருத்தினதேயன்றி, அஞ்சவே வேண்டாமென்னுங் கருத்தினதன்று வெளிப்பகை முன்னறிந்து தடுக்கவும் தற்காக்கவும் ஏதுவாயிருத்தலானும், உட்பகை அங்ஙனம் முன்னறியவும் தப்பிக் கொள்ளவும் இடமின்றி அழிவைத் தருதல் உறுதியாதலானும், முன்னதற்கு 'அஞ்சற்க' என்றும், பின்னதற்கு 'அஞ்சுக' என்றும், கூறினார். வெளிப்பகையினும் உட்பகை மிகக் கொடிது எப்போது கருத்து. 'பகைவர்' இரண்டனுள் முன்னது ஆருர்பாருளது. இக்குறளால் உட்பகையினின்று விலகுதல் கூறப்பட்டது.

அஅஊ. உட்பகை அஞ்சித் தற்காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

(இ—ரை.) உட்பகை அஞ்சித் தற்காக்க — உட்பகைவர்க்கு அஞ்சித் தன்னைக் காத்துக்கொள்க; உலைவிடத்து மட்பகையின் மாணத்தெறும்—ஏனெனில், அங்ஙனங் காவாவிடின், தலைக்குத் தளர்ச்சி வந்த விடத்து, அவர் பகை குயவன் மட்கலத்தை

யறுக்குங் கருவி அதனை யறுப்பதினும் மிகுதியான அளவு தன்னைக் கெடுத்துவிடும்.

'காத்தல்' அவரொடும் அவரொடு சேர்ந்தாரொடும் எவ்வகைத் தொடர்புமின்றியிருத்தல். மண்ணைப் பகுக்குங்கருவி 'மட்பகை'. அறியப்படாது உள்ளிருந்தே கெடுத்தலால் கேட்டினின்று தப்ப முடியா தென்பதாம்

'மட்பகையின் மாணத்தெறும்' என்பதற்கு "கரை படக்கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம்போல், இதுவும் தன் குடி முழுதும் குலைத்து எறிந்துவிடும் என்றவாறு.....மண்பகை என்பது நீர் வெள்ளம் எனறது." என்பது காலிங்கர் உரை.

அஅச. மனமாணு வுட்பகை தோன்றி னினமாணு
வேதம் பலவுந் தரும்.

(இ—ரை.) மனம் மாணு உட்பகை தோன்றின்—புறத்தில் திருந்தியதுபோல் தோன்றி அகத்தில் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமாயின்; இனம்மாணு ஏதம் பலவும் தரும்—அது அவனுக்குச் சுற்றம் துணையாகாமைக் கேதுவாகிய பல குற்றத்தையும் உண்டுபண்ணும்.

'இன மாணு ஏதம்' சுற்றத்தாரை உள்ளாக நின்று வேறுபடுத்தலும் அவர்வேறு படுதலும் அதனால் அவர்துணை இல்லாமற் போதலுமாம்.

அஅடு. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்.

(இ—ரை.) உறல் முறையான் உட்பகை தோன்றின்—புறம்பாக உறவு முறையொடு கூடிய உட்பகை ஒருவனுக்கு, சிறப்பாக அரசனுக்கு, உண்டாகுமாயின்; இறல் முறையான் ஏதம் பலவும் தரும்—அது அவனுக்கு இறக்குந் தன்மையான பல குற்றத்தையும் உண்டுபண்ணும்.

உட்பகையுற்றவன் அரசனுயின், புறப்பகைக்குத் துணையாய் நின்று காட்டிக் கொடுத்தலும் தானேகொல்லுதலும் அமைச்சு முதலிய உறுப்புக்களைக் கெடுத்தலும், உட்பகையால் வரும் ஏதங்களாம்.

அஅசூ. ஒன்ருமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்ருமை யொன்ற லரிது.

(இ—ரை.) ஒன் றி யா ர் கண் ஒன்ருமைபடின்—தனக்கு உள்ளானவரிடத்திலேயே பகைமை தோன்றுமாயின்; பொன்ருமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது—ஒருவனுக்கு இறவாமை கூடுதல் எக்காலத்திலும் அரிதாம்.

அரசனுயின் பொருள் படை நாடு நட்பு முதலியவற்ருலும், பிறனுயின் பொருள் சுற்றம் ஏவல் முதலியவற்ருலும், பெரியவனுன காலத்தும் என்பார் 'எஞ்ஞான்றும்' என்ருர். 'ஒன்ருமை யொன்றி யார்' உள்முரண் (Oxymoron) இந்நான்கு குறளாலும் உட்பகை யால் நனிப்பட்டவனுக்கும் ஒரு குடும்பத்தலைவனுக்கும் அரசனுக்கும் வருந்தீங்கு கூறப்பட்டது.

அஅஎ. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

(இ—ரை.) உட்பகை உற்ற குடி—உட்பகை யுண்டான குடியார்; செப்பின் புணர்ச்சிபோல் கூடினும்—செப்பும் அதன் மூடியும் பொருந்தினற்போல வேற்றுமை தெரியாது புறத்திற் கூடினுராயினும்; கூடாதே—அகத்தில் தம்முட் கூடாதவரேயாவர்.

"உட்பகையால் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்று வீற்ருவரென்பதாம். குடி கூடாதென்பதனுல் நாடு வந்த தென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்ற குடியோடு கூடா தென்றும், உட்பகையுண்டாய குடி அப்பகையோடு கூடாதென்றும் உரைப்பாரு முளர்." என்று பரிமேலழகர் கூறியிருப்பதினின்று, அவர் இங்கு உட்பகையை ஒற்றுமையின்மையெனக்கொண்டதாகத் தெரிகின்றது. பகைவருக்குத் தம் குடும்பத்தை அல்லது இனத் தைக் காட்டிக் கொடுக்கும் உட்பகைவேறு; அங்ஙனம் காட்டிக் கொடாது தமக்குள்ளேயே கருத்துவேறுபாட்டால் ஒற்றுமையின்றி யிருக்கும் பிளவுநிலை அல்லது பிரிவினை வேறு. உட்பகையுற்ற குடிக்கு உவமமாகக் கூறப்பட்டுள்ள செப்பின் புணர்ச்சியிற் செப்பும் மூடியுமாக இரு பகுதிகளிருப்பதையும், இவ்வதிகார முகவுரையில், "புறப்பகைக்கு இடனுக்கிக் கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளாய் நிற்கும் பகை." என்று பரிமேலழகரே உட்பகைக்கு இயல்வரையறை கூறியிருப்பதையும், நோக்குக. ஏகாரம் தேற்றம் பேராயக்கட்சித் தமிழர் பொதுவிழாக்களில் நேர்பாட்டுக் கட்சித்

தமிழரொடு கூடிக்கொள்ளினும், இந்தியார்க்குத் தம் இனத்தைக் காட்டிக் கொடுப்பதிலேயே முனைந்திருப்பது, இக்குறட்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

அஅஅ. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(இ—ரை.) உட்பகை யுற்ற குடி—உட்பகை யுண்டான குடி; அரம் பொருத பொன்போலப் பொருது உரம் தேயும்—அரத்தால் அராவப்பட்ட இரும்புபோல உட்பகையால் அராவப்பட்டு வலிமை குன்றும்.

பொருது என்னும் வினையெச்சம் தேயும் என்னும் வினைமுற்றுக் கொண்டு முடிந்தது. உட்பகை பொருதுதேயும் என்பது புலியடித்துச் செத்தான் என்பது போன்ற வழக்கு, குடி யுரந்தேயும் என்பதில் சினைவினை முதல் வினையாக நின்றது. இவ்விரு குறளாலும் ஒரு குடும்பம் அல்லது உறவுத் தொகுதி உட்பகையாற் கெடுவது கூறப் பட்டது. 'பொன்' இங்கு இனம்பற்றி இரும்பைக் குறித்தது.

அஅக. 'எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(இ—ரை.) உட்பகை எள் பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்—உட்பகை சிறிய கூலப் பொருளான எள்ளின் பகுதிபோன்ற சிற்றளவினதேயாயினும்; கேடு உள்ளது ஆம்—வலிமைமிக்க தனிப் பட்டவனையும் குடும்பம் அல்லது இனத்தையும் அரசையும் அழிக்க வல்லதாம்.

நஞ்சு சிறுதுளியளவினதாயினும் பெரிய யானையையுங் கொன்று விடுவதுபோல, உட்பகை எத்துணைச் சிற்றளவினதேனும் பெரிய குடியையும அரசையும் அழித்துவிட வல்லதாதலால், அதன் சிறுமைபற்றி இகழக் கூடாதென்பதாம். ஏகாரம் தேற்றம். உம்மை இழிவு சிறப்பு.

அகஅ. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

(இ—ரை.) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை—மனப்பொருத்த மில்லாதவரோடு கூடி வாழும் வாழ்க்கை; குடங்கருள் பாம்போடு

உடன் உறைந்த அற்று—ஒரு குடிசையுள் ஒருவன் பாம்போடு கூடி வதிந்தாற்போலும்.

இடச்சிறுமையாலும் உடனுறைவாலும் பாம்பாற் கொல்லப் படுதல் போல், உட்பகையால் அழிவுறுதல் திண்ணமாதலால் அதனொடு கூடி வாழற்க என்பதாம். உடம்பாடின்மை யென்பது இங்கு அன்பின்மையோடு பகைவர்க்குக் காட்டிக் கொடுத்தலையுந் தழுவிய தென்பது, அதிகாரத்தாற் கொள்ளப்படும், ''குடங்க மென்னும் வடசொற் றிரிந்து நின்றது,'' என்றார் பரிமேலழகர். அது தென்சொல்லே யென்பதைப் பின்னிணைப்பிற் காண்க.

அதி. கூ—பெரியாரைப் பிழையாமை

அஃதாவது, அறிவாலும் ஆற்றலாலும் பெரியாரை இகழ்ந்து தவறு செய்யாமை—அறிவாற் பெரியார் பெரும் புலவர்; ஆற்றலாற் பெரியார் பேரரையர்; இரண்டிலும் பெரியார் முற்றத் துறந்த முழு முனிவர். புலவராற்றல் சூழ்ச்சி வலிமை யென்றும், அரையராற்றல் படைவலிமை யென்றும், முனிவராற்றல் தவவலிமை யென்றும், வேறுபாடறிக. பெரியார் பகை பிறர் பகையினும் கொடியதாதலால், அது நேராமற் காத்தல் பிறபகைகளின் பின் வைக்கப்பட்டது.

அகூக. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

(இ—ரை.) ஆற்றுவார் ஆற்றல் இகழாமை—எடுத்துக் கொண்ட வினைமுயற்சிகளை யெல்லாம் வெற்றியாக முடிக்கவல்லவரின் வல்லமையைத் தாழ்வாக மதியாமை; போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை—தமக்குக் கேடுவராமற் காத்துக்கொள்வார் செய்யுங் காவல்க ளெல்லாவற்றுள்ளும் தலைமையானதாம்.

'ஆற்றல்' என்பது ஆக்கற்கும் அழித்தற்கும் ஏதுவான பல்வன்க வலிமைகள். இகழ்ந்தவிடத்து அழித்துவிடுவார் என்பது தோன்ற 'ஆற்றுவார்' என்றும், படை, அரண், நட்பு, முதலிய பிறகாவல்கள் அவரால் அழிக்கப்பட்டு விடுமாதலின் 'தலை' என்றும், கூறினார். இதனால் பெரியாரைப் பிழையாமையின் இன்றியமையாமை கூறப் பட்டது.

அகூஉ. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்.

(இ—ரை.) பெரியாரைப் பேணுது ஒழுகின்—அறிவாற்றல் மிக்க பெரியாரை அரசர் நன்கு மதித்துப் போற்றாது ஒழுகுவராயின்; பெரியாரால் பேரா இடும்பை தரும்—அது அப்பெரியாரால் அவர்க்கு எப்போதும் நீங்காத துன்பங்களை உண்டாக்கும்.

துன்பங்கள் இருமையிலும் தம்மாலும் பிறவுயிர்களாலும் தெய்வத்தாலும் இடையருது நேர்வன. அவை தாமே தேடிக்கொண்டவை யென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் கூறினர். இதனாற் பெரியாரைப் பிழைத்தலின் தீமை பொதுவகையாற் கூறப்பட்டது.

அகூங. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு.

(இ—ரை.) கெடல் வேண்டின்—ஒருவன் தான் கேடடைவதை விரும்பினானாயின்; அடல்வேண்டின் ஆற்றுபவர் கண் இழுக்கு—பிறரைக் கொல்ல விரும்பின் அப்பொழுதே கொல்லவல்ல பெரியாரிடத்துத் தவற்றை; கேளாது செய்க—தன் அமைச்சரின் அல்லது துணைவரின் அறிவுரையைப் பொருட்படுத்தாது செய்க.

"காலனுங் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடுஉம் வெல்போர் வேந்தே" (புறம். சக),

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது." (குறள். உகூ)

என்பவற்றுள். அடல்வேண்டி னாற்றும் இருவகைப் பெரியாரையும் அறிந்துகொள்க.

அகூச. கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க்
காற்றுதா ரின்ன செயல்.

(இ—ரை.) ஆற்றுவார்க்கு ஆற்றுதார் இன்ன செயல்—தாம் கருதியதை உடனே முடிக்கும் ஆற்றலுடைய பெரியார்க்கு, அஃதில்லாத சிறியார் தாம் முற்பட்டுத் தீமை செய்தல்; கூற்றத்தைக் கையால் விளித்த அற்று—குறித்த காலத்தில் தானே தப்பாது வரக்கடவனாகிய கூற்றுவனை, அதற்கு முன்பே வலியக் கைதட்டி அழைத்தாற்போலும்.

கையால் விளித்தல் தொலிவிலிருப்பவரை உடனே வருவித்தற் குறிப்பினது. இவ்விரு குறளாலும் பெரியாரைப் பிழைப்பவர் தம் கேட்டைத் தாமே விரைந்து வருவித்துக் கொள்ளுதல் கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

அஅஉடு. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

(இ—ரை.) வெம் துப்பின் வேந்து செறப்பட்டவர்—கடுவலிமை யுள்ள பேரரையனுற் சினக்கப்பட்டவர்; யாண்டுச் சென்று யாண்டும் உளர் ஆகார்—அவனுக்குத் தப்பி எங்குச் செல்லினும் எங்கும் உயிரோடிரார்.

வெம்மை தீப்போல அழித்துவிடும் கடுமை. வெந்துப்பின் வேந்தனுக்குப் பன்னெட்டிலும் அதிகாரமோ அச்சீப்பாடோ சாய்காலோ இருக்குமாதலானும், அவனுக்குத் தப்பியோடியவர் எந்நாட்டுட புகுந்தாலும் அந்நாட்டரசனுல் கொல்லப்படுவதோ வேந்தனிடம் ஒப்புவிக்கப்படுவதோ உறுதியாதலானும், 'யாண்டுச் சென்றியாண்டு முளராகார்' என்ருர். 'சென்றும்' என்னும் எச்ச வும்மை தொக்கது. 'வேந்து' வேந்தன் என்பதன் மரூஉ. உம்மை முற்றும்மை.

அஅஉஎ எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

(இ—ரை.) எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம்—ஒருவன் வீடு பற்றி வேகும்போது அல்லது விளக்குத் தன்மேல் பட்டபோது தீயாற் சுடப்பட்டானுயினும், எண்ணெயாலும் மருந்தாலும் ஒரு கால் சாவினின்று தப்புதல் கூடும்; பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உய்யார்—ஆயின், தவத்தாற் பெரியார்க்குத் தவருக நடந்தவர் ஒருவகையாலும் தப்பார்.

தீச்சுட்ட புண் சிறிதாயிற் கேடில்லை. உடம்பு முழுதுமாயின் ஓரிரு நாளிற் சாவுண்டாம். இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலைமை யாயின் பண்டுவத்தாற் பிழைத்தலுங் கூடும். ஆயின், 'குணமென் னுங் குன்றேறி நின்ருர் வெகுளி' நொடிநேரமுந் தடுக்க முடியாத தாதலின், 'உய்யார்' என்ருர். உம்மை உயர்வுசிறப்பு. மாதவர் சினத்திற்கு ஆளாகாது காத்துக் கொள்க என்பது கருத்து.

அகூஎ. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின்.

(இ—ரை.) தகைமாண்ட தக்கார் செறின்—ஆக்க வழிப்பிற் கேதுவாகிய ஆற்றல் மாட்சிமைப்பட்ட மாதவர் அரசரை வெகுள் வாராயின், வகை மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என் ஆம்—ஆறுறுப்புக்களும் மாட்சிமைப்பட்ட அவர் அரச வாழ்வும் அவர் தமக்குச் சொந்தமாக ஈட்டிவைத்த பெருஞ் செல்வமும் என்ன ஆகும்! ஒரு நொடியுள் வெந்து சாம்பராய் விடுமே!

படை, குடி, நாடு, கூழ், அமைச்சு, அரண் என்பன ஆறுறுப் புக்கள். நட்பு என்பது அரசனின் வலிமையை மிகுப்பதேயன்றி நாட்டுறுப்பன்று,

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்." (குறள். கூடுஅ)

என்று இல்லறத்திற்கும்,

"இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை." (ஷெ. கூகo)

"இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (ஷெ கூகசை)

என்று துறவறத்திற்குங் கூறியிருப்பதால், 'செறின்' என்பது முற்றத் துறந்த முழு முனிவர் செருமை தோன்ற நின்றது. 'வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னும்' என்றது, அருந்தவரின் பெருந்திறலை யுணர்த்தி அரசர் தம் செல்வச் செருக்கால் அவருக்குத் தவறு செய்யாவாறு எச்சரித்ததே யன்றி வேறன்றென வுணர்க.

அகூஅ. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

(இ—ரை.) குன்று அன்னார்—மலைபோலும் மாதவர்; நிலத்து நின்ற அன்னார் குன்ற மதிப்பின்—இந்நில வுலகத்தில் அழிவின்றி நிலைபெற்றவர்போல் தோன்றும் பெருஞ்செல்வப் பேரரசர் கெடக் கருதுவராயின்; குடியொடு மாய்வர்—அவர் தம் இனத்தொடும் அழிந்து போவர்.

தட்பவெப்பத்தையும் பிறர் செய்த தீங்கையும் பொறுத்துக் கொள்ளுதலும், சூழ்வளி வீசினும் பெருந்துன்பம் நேரினும்

உடலுளம் அசையாமையும், ஒழுக்க நெறியில் நிலைத்து நிற்றலும், இம்மை மறுமை வீடென்னும் மும்மையும் பற்றிய அறிவுப் பொருள் வளமும், ஆவிவளர்ச்சிப்பெருமையும், நெடுந்தொலைவுந் தோன்றுஞ் சீர்த்தியும் உடைமையால், 'குன்றன்னார்' என்றார். ''மல்லன் மலையனைய மாதவரை'' என்று சிந்தாமணி கூறுவதும் (முத்தி. ககக) இக்கருத்துப் பற்றியே. குன்றென்னுஞ் சொல் இங்குத்தன் சிறப்புப் பொருளைக் குறியாது மலையென்னும் பொதுப்பொருள் குறித்து நின்றது. 'மதிப்பின்' என்பதற்கும் 'குடியொடு மாய்வர்' என்பதற்கும், முந்திய குறளில் 'செறின்' என்பதற்கும் 'வகை மாண்ட ...என்னும்' என்பதற்கும் உரைத்தவாறுரைக்க.

அகக. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(இ—ரை.) ஏந்திய கொள்கையார் சீறின்—உயர்ந்த நோன்பு களைக் கடைப்பிடித்த அருந்தவர் சீற்றங்கொள்ளின்; வேந்தனும் இடை முரிந்து வேந்து கெடும்—தேவருலக அரசனும் இடையே தன் பதவியிழந்து கெடுவான்.

''வேந்தன் மேய தீம்புன லுலகமும்''
என்பது தொல்காப்பியம் (பொருள். அகம். கு). நல்வினை செய்த இல்லறத்தாருள் பொது மக்கள் தேவராகவும் மூவேந்தரான அரசர் தேவர்க்கரசராகவும், மறுமையில் தேவருலகத்தில் தோன்றுவர் என்பதும், விண்ணுலக வேந்தனை நல்வினையால் வென்றமண்ணுலக வேந்தன் மறுமையில் விண்ணுலக வேந்தனுவனென்பதும் பண்டைத் தமிழர் கொள்கை. போர்க்களத்திற் பின்வாங்காது, மறத்தொடு பொருதிறப்பதும் நல்வினை போன்றே விண்ணுலகத் தகுதியாகக் கொள்ளப்பட்டது. பிராமணர்க்கு விருந்தோம்பல் முதலிய நல்வினைத்தகுதியும் போர் செய்திறக்கும் மறவினைத் தகுதி யும் இன்மையால், வேள்விசெய்தலையே விண்ணுலக வேந்தன் தகுதியாகத் தம் தருமசாத்திரம் என்னும் அல்லற நூல்களில் வரைந்து கொண்டனர். இந்திரன் என்னும் வடசொல்லும் அரசன் என்றே பொருள் படுவதையும். தேவேந்திரன், நரேந்திரன் கவீந்திரன, மிருகேந்திரன், கசேந்திரன் எனப் பொதுச் சொல்லா யும் வழங்குவதையும், கிறித்துவிற்குமுன் தமிழகம் முழுதும் மூவேந்தர் ஆட்சிக்குட்பட்டே யிருந்தமையையும், வேந்தனும் இந்திரனும் மழைத்தெய்வமாகவே வணங்கப்பட்டமையையும் வேந்தன் விழாவே இந்திர விழாவென வடநாட்டில் வழங்கியமை யையும், ஆரியர் தென்னாடு வந்தபின் அவ்வடநாட்டு வழக்கே

தமிழகத்திலும் புகுத்தப்பட்ட மையையும், நோக்குக நகுடன் அகத்தியனால் வெகுளப்பட்டுத் தன் இந்திரப்பதவியை இழந்தா னென்று, பரிமேலழகர் கூறியிருக்கும் ஆரியக்கட்டுக் கதை இங்கு எடுத்துக்காட்டாகாது. உம்மை உயர்வு சிறப்பு. இக்குறளால் விண்ணுலக வேந்தனும் முனிவர் வெகுளிக்குத் தப்ப முடியாமை, கூறப்பட்டது.

கூ 00. உறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

(இ—ரை.) சிறந்து அமைந்த சீரார் செறின்—மாபெருந் தவ முனிவர் வெகுள்வாராயின்; இறந்து அமைந்த சார்பு உடையரா யினும் உய்யார்—அவரால் வெகுளப்பட்டவர் தலைசிறந்த துணையை யுடையவராயினும் தப்பிப் பிழையார்.

சீருடைய தவவலிமை 'சீர்' எனப்பட்டது. 'இறந்தமைந்த சார்பு'கள் சோவரண். மாபெருந் தொல்படை, பேரரையர் நட்பு முதலியன. 'செறின்' என்பதற்கு அகல-ஆம் குறளில் உரைத்த வாறுரைக்க. இவ்வைந்து குறளாலும் முனிவரைப் பிழைத்தலின் தீமை கூறப்பட்டது. உம்மை உயர்வு சிறப்பு.

அதி. கக—பெண்வழிச் சேறல்

அஃதாவது, காமவின்பக் கழிபேராசைபற்றி, தனக்கு அடங்கி நடக்க வேண்டிய தன் மனைவிக்குத் தான் அடங்கி நடத்தல். இதனாற் கடமை தவறுதலும் அறஞ்செய்யாமையும் வீண் செலவுந் தீவினையுஞ் செய்தலும் நேர்தலால், இது பகையோடொத்ததாகவும் பெரியாரைப் பிழைத்தற்கு இடந்தருவதாகவும் இருத்தல்பற்றி, 'பெரியாரைப் பிழைத்தலின்பின் வைக்கப்பட்டது. சேறல் செல்லு தல். அஃது இங்கு நடத்தலைக் குறித்தது.

"ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே." என்னும் பழமொழிக்கேற்ப, பெண்டிருள் நல்லமைச்சர் போன்றவரும் தீயமைச்சர் போன்றவரு மிருப்பினும், ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால், இங்குப் பெண் என்றது தீயமைச்சர் போன்ற பெண்டிரையே என அறிந்துகொள்க.

கூ0க மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

(இ—ரை.) மனை விழைவார் மாண்பயன் எய்தார்—இன்பம் பற்றி மனைவியை அளவிறந்து காதலித்து அவள் விருப்பப்படி நடப் பவர் சிறந்த பயன்தரும் அறத்தினைச் செய்யார்; மனைவிழைவார் வேண்டாப் பொருளும் அது—இனி இன்பத்திற்கும் அறத்திற்குமேது வான பொருளீட்டுதலே விரும்பி மேற்கொள்வார், அதற்குத் தடை யென்று கருதி விரும்பாத செய்தியும் மனைவிக்கு அடிமையாக்கும் அப்பெண்ணின்பப் பித்தமே

'மனை' ஆகுபெயர். 'விழைதல்' ஆகுபெயர் போன்ற ஆகுவினை. 'பயன்' என்றது அறப்பயனை. இம்மைக்கேயுரிய பெண்ணின்பத் தினும் மும்மைக்கு முரிய அறப்பயன் சிறந்ததாதலின், அதனை 'மாண்பயன்' என்றார். வினை யென்பது பலவாற் பொருளிட்டும் வினையைக் குறித்தது. முப்பொருள்களுள் ஏனையிரண்டும் பெறு தற்குக் கருவியாயிருக்கும் பொருட் பொருளே யிட்டுற்றுத் தடையா யிருத்தலின், மனைவி விருப்பப்படியொழுகுதல் கூடாதென்பதாம். உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

கூoஉ. பேணுது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும்.

(இ—ரை.) பேணுது பெண்விழைவான் ஆக்கம்—தன் ஆண்மை மேம்பாட்டைக் காவாது தன் மனைவிக்கு அடிமையாகு மளவு அவளைக் காதலிப்பவன் பெற்ற செல்வம்; பெரியது ஓர் நாணுக நாணுத் தரும்—தன்பாலார்க்கெல்லாம் மிகுந்த நாண முண்டாகு மாறு தனக்கு வெட்கக் கேட்டை விளைவிக்கும்.

'ஆக்கம்' என்று அடைகொடாமற் கூறியது, முதுசொம் என்னும் முன்னோர் தேட்டாகவோ மனைவிவழிச் சொத்தாகவோ பெறப் பட்டதென்று குறித்தற்கு. பெண்வழிச் செல்வானுக்குப் பொரு ளீட்டும் ஆற்றலிராதென்பது கருத்து. செல்வத்தை நுகர்ந்தும் ஈந்தும் பயன்படுத்துபவள் மனையியாதலின், ஆண்மைத் தன்மை அவளிடத்தும் பெண்மைத் தன்மை கணவனிடத்தும் உள்ளன வென்று ஆடவர் நாணிக் கடிந்துரைத்தபின், அவரை மீண்டும் பார்த்தற்கு அவன் நாணுதலால், 'நாணுக நாணுத் தரும்' என்றார்.

கூoங. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

(இ—ரை.) இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை—ஒருவன் தன் மனைவிக்குப் பணியும் ஆண்மையின்மை; எஞ்ஞான்றும்

நல்லாருள் நாணுத்தரும்—எப்போதும், அஃதில்லாத நல்லாட வருடன் பழகும்போது அவனுக்கு நாணத்தைப் பிறப்பிக்கும்.

ஆடவனுக்கு ஆண்மை இயல்பாதலின், அஃதின்மை இயல்பின் மையாயிற்று. அண்ணுளன் என்றும் பெண்ணிற்கடங்கி யென்றும் பிறர் பழிப்பதாலும், அதற்கேதுவான ஆண்மையின்மை ஒரு காலும் நீங்காமையாலும், 'எஞ்ஞான்றும் நாணுத்தரும்' என்றார்.

கூoச. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(இ—ரை.) மனையாளை அஞ்சும் மறுமை இலாளன்—தன் மனைவிக்கு அஞ்சி நடக்கும் மறுமைப்பயன் இல்லாதவனது; வினை ஆண்மை வீறு எய்தல் இன்று—வினைமுயற்சி வெற்றிபெறுவதில்லை.

இல்லறஞ்செய்தற் குரிய உரிமையின்மையின் 'மறுமையிலாளன்' என்றும், ஆண்மையின்மையின் 'வீறெய்தலின்று' என்றும், கூறினார்.

கூoடு. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(இ—ரை.) இல்லாளை அஞ்சுவான்—தன் மனைவிக்கு அஞ்சி நடப்பவன்; நல்லார்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும்—தான் தேடிய பொருளைக்கொண்டும் நல்லவர்க்கு நல்லவை செய்ய எப் போதும் அஞ்சுவான்.

நல்லார் : அரசனெழிந்த ஐங்குரவர், சான்றோர், அருந்தவர், நல்விருந்தினர் முதலியோர். நல்லவை செய்தல் விருந்தோம்பலும் வேளாண்மை செய்தலும். விழாநாளிலும் மனைவி மகிழ்ந்திருக்கும் போதும் என்பார் 'எஞ்ஞான்றும்' என்றார்.

> "இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்றநெஞ்சிற்
> புல்லாளை நீக" என்பது சிந்தாமணி (உகக).

> "இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
> விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
> ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தாற்
> சாடினா ளோடோடத் தான்."

என்னும் பிற்காலத் தெளவையா ரொருவர் தனிப்பாடல் கடைப் பட்ட பெண்ணஞ்சி நிலைமையைக் குறிக்கும்.

கூ0சு. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(இ—ரை.) இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர்—தம் மனைவியின் பசுமூங்கில் போலும் தோளிற்கு அஞ்சுபவர்: இமையாரின் வாழினும் பாடு இலரே — போர்மறத்தால் விண்ணுலகடைந்த தேவர்போல் இவ்வுலகத்தில் வாழ்ந்தாராயினும் உயர்ந்தோராற் பாராட்டப்பெறும் பெருமை யில்லாதவரே.

இமைகொட்டாதவர் இமையார், தேவர்க்குக் கண் இமைக்கா தென்பது கொள்கை.

''கண்ணிமைத்த லானடிகள் காசினியிற் றேய்தலால்
... ...
அறிந்தாள் நளன்றன்னை யாங்கு''

என்று நளவெண்பா (கஙஉ) கூறுதல் காண்க. தேவர்போல் வாழ்தலாவது ஆண்டகை யென்று அரசராலும் மதிக்கப்பட்டு வாழ்தல். பெண்ணிற் கஞ்சி அங்ஙனம் வாழ்தல் கூடாமையின், 'வாழினும்' என்பது எதிர்மறையும்மை. மூங்கில் பசுமையும் வழு வழுப்பும் உருட்சிதிரட்சியும் பற்றிப் பெண்டிர் தோளுக்கு உவமம். முயக்கவின்பம் பற்றித் தோள் சிறப்பித்துக் கூறப்பட்டது. இல்லாள் தோளிற் கஞ்சுதல் என்னுங் கூற்று, விண்ணுலகடையும் போர் மறவர் தம் பகைவரான மறவரின் தோள்வலிக் கஞ்சாமைக் கருத்தைக் குறிப்பாய் உணர்த்திற்று. 'அமையார் தோள்' என்பது சிறிதும் அஞ்சத்தக்க தன்றென்னுங் குறிப்பினது. ஏகாரம் தேற்றம். 'ஆர்' உவமையுருபு. பெண்ணிற் கஞ்சும் ஆடவர்க்குப் பெருமையில்லை யென்பது கருத்து.

கூ0எ. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

(இ—ரை.) பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின்—நாணமின்றித் தன் மனைவிக்கு ஏவல் தொழில் செய்து வாழ்பவனின் ஆண்டன்மையை விட; நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து—நாணமுள்ள ஒரு பெண்ணின் பெண்டன்மையே மேன்மை யுடையது.

உறழ்ந்து கூறப்பட்ட ஆண் பெண் இருவருள் பெண்ணிற்கு 'நாணுடை' என்று அடை கொடுத்ததால், ஆணிற்கு நாணின்மை

பெறப்பட்டது. நாணமின்றியும் தன் ஆண்மையைக் காவாதும் இருப்பவனின் ஆண்பான்மையினும், நாணத்தொடு கூடியும் தன் பெண்மையைக் காத்துக்கொண்டும் இருப்பவளின் பெண்பான்மை மேம்பட்டதென்பதாம். நாணஞ் சிறந்த பெண் தன் கணவனை ஏவல்கொள்ள விரும்பாளாதலின், இங்குப் பெண் என்றது பெண் வழிச் செல்வானின் மனையியல்லாத பெண்ணென்று கொள்வதே சிறந்ததாம். 'ஏவல்' ஆகுபெயர். 'பெண்' ஆகுபொருளது. ஏகாரம் பிரிநிலை. ஆண்மை மறத்தொடு கூடிய ஆளுந்தன்மை; பெண்மை—விரும்பப்படுந் தன்மையொடு கூடிய அமைதித்தன்மை.

கூoஅ. நட்டார் குறைமுடியார் நன்ருற்ரூர் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

(இ—�ை.) நல் நுதலாள் பெட்ட ஆங்கு ஒழுகுபவர்—தாம் விரும்பிய வாறன்றி அழகிய நெற்றியையுடைய தம் மனைவி விரும்பிய வாறே நடப்பவர்; நட்டார் குறை முடியார் — தம் நண்பருக்குத் தேவையானவற்றைச் செய்து தீர்க்க மாட்டார்; நன்று ஆற்ரூர்—அதோடு மறுமைக்குத் தமக்குத் துணையான அறமுஞ் செய்ய மாட்டார்.

மனைவியின் விருப்பப்படி யொழுகுதற்குக் காரணியமான நெற்றி யழகுபற்றியும், அங்ஙனம் ஒழுகாவிடின் செய்யும் நெற்றி நெறிப்புப் (browbeating) பற்றியும், 'நன்னுதலாள்' என்ரூர். நட்டார் குறை முடித்தலையும் நன்ருற்றலையும் மனைவியுஞ் செய்யாமையின் இரு மைக்கும் வேண்டுவன செய்யப்படா என்பதாம்.

கூoக. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

(இ—ை.) அறவினையும்—அறச்செயலும்; ஆன்ற பொருளும் —அதைச் செய்தற்கு வேண்டிய பொருள் முயற்சியும்; பிறவினை யும்—அவ்விரண்டின் வேருன இன்ப நுகர்ச்சிகளும்; பெண் ஏவல் செய்வார்கண் இல்—தம் மனைவிக்கு அடங்கி நடப்பவரிடம் இல்லனவாம்.

பெண்ணின்பம் நோக்கி அறத்தையும் பொருளையுங் கைவிட்ட வர்க்குப் பின்பு மனைவியே ஏவல் கொள்ளும் தலைவியாதலின், அவளாற் பெறக்கூடிய இன்பமும் இல்லாமற்போம் என்பதாம். முப்பொருள்களுள் அறத்தையும் பொருளையுங் கிளந்து கூறி விட்டதனல், 'பிறவினை' என்றது இன்பவினைகளை யென்பது

அறியப்படும். புலன் ஐந்தாதலால் இன்பவினைகளும் ஐந்தாதல் பற்றிப் 'பிறவினை' யெனப் பன்மையாற் கூறினர்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள." (குறள். ககoக)

என்று ஆசிரியரே கூறுதல் காண்க. பெண்ணேவல் செய்வார்க்கு முப்பொருட்பேறும் இல்லையென்பது இதனாற் கூறப்பட்டது.

கூக்o. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான் றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

(இ—ரை.) எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு—வினைச் சூழ்ச்சித் திறனுடைய உள்ளத்தையும் அதினாலுண்டான செல்வத்தையும் உடையவர்க்கு; பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல்—மனைவியொடு கூடுதலாலேற்படும் பேதைமை ஒருகாலத்தும் உண்டாகாது.

இவ்வுலகில் வாழ்வதற்கு எல்லாவகையிலும் இடந்தருவதால் செல்வம் இடனெனப்பட்டது. "இடனில் பருவத்தும்" (குறள் உகஅ) என்று ஆசிரியர் வேறிடத்தும் கூறுதல் காண்க. இளமைக் காலத்தையும் உள்ளடக்குமாறு 'எஞ்ஞான்றும்' என்றார். பேதை மையாவது விழைதல், தாழ்தல், அஞ்சுதல், ஏவல் செய்தல், அறம் பொருள் கைவிடுதல் ஆகியவற்றிற்கு ஏதுவான அறியாமை, பெண் வழிச் சேறலால் ஏற்படுங் கேடுகளெல்லாம் இக்குறளால் தொகுத்துக் கூறப்பட்டன.

அதி. கூக—வரைவின் மகளிர்

அஃதாவது, இல்லறம் புகாதும், கற்பைக் காவாதும், அழகு, துப்பரவு, பூனவு, முத்தமிழ்க் கலை முதலியவற்றுள் ஆடவரை மயக்கி, வெளிப்படையான கொடிய நோயும், துப்புரவில்லாது தீநாற்றம் வீசும் அருவருப்பான தோற்றமு மில்லாத ஆடவர்க் கெல்லாம், குலமத பருவ நிலைமை வேறுபாடின்றித் தம் நலத்தைப் பொருட்கு விற்கும் பொது மகளிர் தொடர்பு. பலரொடும் வரையாது கூடுதலால் வரைவின் மகளிர் எனப்பட்டனர். இத்தொடர்பும் பொருளீட்டுதற்குத் தடையாய்ப் பகைபோல்வதாலும், மணந்த மனைவிக்கு அடங்கி நடப்பதினுங் கேடு விளைத்தலாலும், பெண்வழிச் சேறலின் பின்வைக்கப்பட்டது.

கூகக அன்பின் விழையார் பொருள்விழைவு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

(இ—ரை.) அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடி யார்—ஒருவனே அன்புபற்றி விரும்பாமற் பொருள் பற்றி விரும்பும் அழகிய வனையலணிந்த விலைமகளிர்; இன்சொல்—தாம் கருதிய பொருள் பெறுமட்டும் தாம் அன்பு கனிந்தவராகக் கூறும் இனிய சொல்; இழுக்குத் தரும்—அன்று இன்பந்தருவதுபோல் தோன்றி னும் பின்பு துன்பத்தையே விளைவிக்கும்.

'ஆய்தொடி', 'இன்சொல்' என்பன ஆடவருள்ளத்தைக் கவரும் கருவிகளுள் இரண்டைக் குறித்தன. 'பொருள்விழையும்' ஐந்தாம் வேற்றுமைத்தொகை. ஆய்தொடி ஆராய்ந்தெடுத்த தொடி; வினைத்தொகை.

கூகஉ. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(இ—ரை.) பயன்தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர்—ஒருவனிடமிருந்து பெறக்கூடிய பொருளின் அளவை ஆராய்ந்தறிந்து அதைப்பெறும் பொருட்டுத் தாம் அன்புடைய வராகச் சொல்லும் அன்பில்லா விலைமகளிரின்; நயன் தூக்கி நள்ளா விடல்—ஒழுக்க வகையை ஆராய்ந்தறிந்து அவரொடு கூடாது விடுக.

பண்பு சொல்லளவாக வாயிலல்லது உண்மையாக உள்ளத்தி லில்லாமையால் 'பண்பின் மகளிர்' என்றும், அது அவர் குலவியல் பாதலை உரையளவையால் மட்டுமன்றிக் காட்சியளவையாலும் அறிதல் கூடுமாதலின் 'நயன்றூக்கி' யென்றும், பின்பு பார்த்தலு மின்றி வரையறவாக விட்டுவிலக வேண்டுமென்பார் 'விடல்' என்றும், கூறினார். 'நள்ளா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

கூகஙு. பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

(இ—ரை.) பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்—பொருள் கொடுப்பாரை விரும்பாது அவர் கொடுக்கும் பொருளையே விரும்பும் விலைமகளிரின் பொய்யான தழுவல்; இருட்டு அறையில் ஏது இல் பிணம் தழீஇய அற்று—கூலிக்கு அமர்த்தப்பட்டவன் இருட்டறை

யில் யாதொரு தொடர்புமில்லாத கன்னிப் பெண்ணின் பிணவு டம்பைப் பொருளாசை கருதித் தழுவினுற் போலும்.

இதிலுள்ள உவமத் தொடருக்கு, "பிணமெடுப்பார் இருட் டறைக் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினுற் போலும்." என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாது. 'முயக்கம்', 'தழிஇ' இரண்டும் இடக்கரடக்கல். பிணமெடுத்தலையே ஆசிரியர் கருதியிருப்பின், பிணமெடுத்தற்று என்றே பிணந்தூக்கியற்று என்றே யாத்திருப்பார். மேலும், உயிர்போனபின் பேய் வந்து அண்டும் என்று கருதி விளக்கேற்றி வைப்பது தமிழர் வழக்கமே யன்றி, இருட்டறையிற் சவத்தையிட்டு வைப்பதன்று. இங்கு முயக்கம் கூட்டத்தைக் குறிப்பதால், அதற்கு உவமமான தழுவலும் அதனையே குறித்தல் வேண்டும். தொடுதல் அல்லது தூக்குதல் மட்டும் முயக்கத்திற்கு உவமமாகாது. உவமையைக் கூர்ந்து நோக்கின், பொருளாசையும் உள்ளத்தொடு பொருந்தாத கூட்டமும் பொதுத்தன்மை யென்பது பெறப்படும். இத்தகைய பிணந்தழுவும் வழக்கம் தமிழரல்லாத வேற்றினத்தாரிடையே ஆசிரியர் தம் காலத்தில் இருந்தது கண்டு, அதை உவமமாக அமைத்திருத்தல் வேண்டும்.

கஅ—ஆம் நூற்றாண்டிற்கும் கக—ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் (1792—1823) தென்னாட்டில் வாழ்ந்த பிரெஞ்சுக் கிறித்தவ சமயக்குரவராகிய அப்பர் தூபாயிசு, தம் தாய் மொழியில் எழுதிய 'இந்துப் பழக்க வழக்கங்களும் சடங்குகளும்' என்னும் பொத்தகத்திற் கீழ்வருவாறு வரைந்திருக்கிறார்.

"இதே மக்களிடை, இனி, அருவருப்பானதும் வெறுப்புண்டு பண்ணுவதுமான ஒரு வழக்கத்தைக் கொண்ட நம்பூதிரி என்னும் ஒரு தனிக்குலமும் உள்ளது. இக்குலப் பெண்கள் வழக்கமாகப் பூப்படையுமுன் மணஞ் செய்து வைக்கப்படுகின்றனர்; ஆயின், பூப்புக் குறிகள் வெளிப் படையாகத் தோன்றும் பருவத்தை யடைந்த பெண் ஆடவனொடு கூடுமுன் இறக்க நேரின், அவள் சவவுடம்பைப் பேய்த் தன்மையான புணர்ச்சிக் குட்படுத்த வேண்டுமென்பது கண்டிப்பான குலமரபாம். இதன் பொருட்டு அப் பெண்ணின் பெற்றோர் அத்தகைய அருவருப்பான மணவகையை முற்றுவித்தற்கு இசையும் ஒரு வெங்கப் பயலைப் பணப்பரிசு கொடுத்து அமர்த்த வேண்டியுள்ளது. எனெனின், அம்மணம் முற்றுவிக்கப்பெறுவிடின், அக்குடும்பம் தன் மானத்தை இழந்து விட்டதாகக் கருதிக் கொள்ளும்." (மூன்றும் பதிப்பு, பக். கூ-எ.)

இதுபற்றி கஎ-ஆம் பக்கத்தில் பதிப்பாசிரியர் வரைந்துள்ள அடிக்குறிப்பு வருமாறு:—

"அந்த அப்பர் (Abber) காலத்தில் செய்தி எவ்வாருயிருந் திருப்பினும், இக்காலத்தில் இவ்வழக்கங்கள் இல்லை. இது பற்றித் திரு. உலோகன் (W. Logan) தம் 'மலபார்க் கைப் பொத்தகம்' (Manual of Malabar) என்னும் நூலிற் பின் வருமாறு வரைகின்றார். 'மணவாதிறக்கும் பெண்டிர்க்குப் பிந்திய சிற்றீடு — இத்தகைய பெயர் அது பெறத் தகுந்ததாயின் — செய்தற்கு, (ஐரோப்பிய மணவாழிக் கொத்த இந்துச் சின்னமாகிய) தாலி ஈமத்தின் மேற் கிடத்தப்பட்டிருக்கும் சவத்தின் கழுத்தில் முறைகாரனை ஓர் உறவினனுற் கட்டப்படும் வரை, அதை எரிக்க முடியாதென்று சொல்லப்படுகின்றது. நம்பூதிரிமார் தம் இழவுச்சடங்குகளும் கைக் கொள்வுகளும் பற்றி அளவிறந்து வாய்வாளாமை மேற்கொள் கின்றனர். இத்தனியியப்பான ஈம மரபுத்தைச் சேர்ந்த பிற கைக் கொள்வுகள் பற்றித் தமக்குச் சொல்லப்பட்டதை அப்பர் தூபாயிசு வரைந்திருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது." நம்பூதிரிக் குழுகத் தலைமக்களையும் மலபாரத்தில் நம்பூதிரி வழக்கங்களை நெருங்கிப் பழகியறிந்த பிறரையும் உசாவிய கவனமான உசாக் களால், அந்த அப்பர் இங்கு வரைந்திருக்கும் பழக்கத்தைப்பற்றி அவருக்குச் சொன்னவன் கூற்றை அவர் தவருக உணர்ந்திருக்க வேண்டுமென்று எனக்குத் தெரிகின்றது. அத்தகைய நிகழ்ச்சியிற் செய்யப்படுவதென்னவென்றால், இந்துத் திருமணங்களில் வழக்க மாகச் செய்யப்படும் மதவியற் சடங்குகளை, இறந்த பெண்ணின் உடம்பைச் சுட்டெரிக்குமுன் அதன் மிசை நிகழ்த்துவதே. இங்கு மணமென்பது திருமணச் சின்னமாகிய தாலியைக் கட்டுவதேயன்றி மணமுற்றுவிப்பு விழையன்று."

பதிப்பாசிரியர் இங்ஙனம் மறுத்திருப்பினும், அப்பர் தூபாயிசு கூற்று வலியிழந்து விடாது. கீழ்க்காணும் ஏதுக்குறிப்புக்கள் கவனிக்கத் தக்கன.

(க) இந்திய ஆரியப் பூசாரியர் முதற்காலத்திற் பல அருவருப் பான சடங்குகளை ஆற்றி வந்தமை, சென்ற நூற்றாண்டில் மார்க்க சகாய ஆச்சாரியார் வெளியிட்ட 'சித்தூர் அதாலத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு' என்னுஞ் சுவடியினின்று தெரிய வருகின்றது.

(உ) திருவள்ளுவர் காலம் கி. மு. உ-ஆம் நூற்றாண்டாதலால், அப்பழங் கால நம்பூதிரி வழக்கம் ஆங்கில நாகரிகம் தென்னாட்டிற் புகும்வரை தொடர்ந்திருக்கலாம்.

(கூ) அப்பர் தூபாயிசு தம் நூலை எழுதி முடித்த ஆண்டு கஅ0கூ (1806) அந்நூலின் கூ-ஆம் பதிப்பு வெளிவந்த ஆண்டு கக0ஙு (1905). ஆதலால், பதிப்பாசிரியர் காலத்திற் பண்டை வழக்கம் நின்று போயிருக்கலாம். நம்பூதிரிக் குல முதியோர் நினைவிலிருந்திருப்பினும், இழிவுபற்றி அவரால் மறைக்கவும் மறுக்கவும் பட்டிருக்கலாம்.

(சு) அப்பர் தூபாயிசு மதிநுட்பமும் உண்மையும் நடுவுநிலை மையும் உடைய துறவியராதலாலும், தென்னாடு வந்து தமிழ வாழ்வு வாழ்ந்து பதினைலாண்டு எல்லா மக்களொடும் நெருங்கிப் பழகிய பின் தம் நூலை எழுதினமையாலும், அவர் பிறன் கூற்றைப் பிறழ வுணர்ந்தோ பொறாப்பற்ற தனமாகவோ எழுதியிருக்க முடியாது.

(டு) முறைகாரன் தாலிகட்டற்கும் உறவினனல்லாத ஒரு பரமபஞ்சை பணம் பெற்றுத் தழுவற்கும் பெரு வேறுபாடிருப்பதால், ஒன்றை யின்னொன்றுக் பிறழவுணரவோ உணருமாறு கூறவோ முடியாது.

(சூ) மணமென்பது உண்மையிற் கூட்டமேயாதலால், பூப் படைந்து மணமாகாத அல்லது மணச்சடங்கு மட்டும் நடந்து கூட்டம் நிகழாத பெண் இறந்தபின் அவள் ஆவியைப் பொந்திகைப் படுத்தற்குச் செய்யும் சடங்கு, முதற்காலத்திற் கூட்டமாகவே யிருந்திருத்தல் வேண்டும். நாகரிகமடைந்த பிற்காலத்திலேயே, அது 'கொடும்பாவிகட்டியிழுத்தல்' போல அடையாளச் சடங்காக மாறியிருத்தல் வேண்டும். (பொந்திகை = திருப்தி (வ.).)

(எ) "நம்பூதிரிமார் தம் இழவுச் சடங்குகளும் கைக் கொள்வு களும் பற்றி அளவிறந்த வாய்வாளாமை மேற்கொள்கின்றனர்." என்று திரு. உலோகன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

(அ) "இருட்டறையில் ஏதில் பிணந்தழி இயற்று" என்னும் திருக்குறள் உவமத்திற்கு, அப்பர் தூபாயிசு கூற்றே சிறந்த விளக்க மாகப் பொருந்துகின்றது.

(கூ) பூப்படையுமுன் பெண்ணிற்கு மணஞ்செய்து வைப்பதும், மணந்தபின் மணமக்கள் கூட்டத்தைத் தள்ளிவைப்பதும், பூப் படைந்த பெண் கூட்டத்திற்குமுன் இறப்பின் அவள் சவவுடம்பின் கழுத்தில் தாலி கட்டுவதும், பண்டைத் தமிழர் வழக்கமல்ல.

(கo) திருவள்ளுவர் சேரநாடு சென்றிருக்க வேண்டுமென்பது முன்னரே "வெள்ளத்தனைய மலர் நீட்டம்" என்னும் குறளுரையில் (டுகஙி) கூறப்பட்டது.

'தழிஇ' இன்னிசையளபெடை.

கூகரு. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்.

(இ—ரை.) அருட்பொருள் ஆயும் அறிவினவர்—அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்து ஈட்டும் அறிவினையுடையார்; பொருட் பொருளார் புல் நலம் தோயார்—அறத்தையும் இன்பத்தையும் நோக்காது பொருளையே பொருளாகக் கொண்ட விலைமகளிராற் பெறும் இழிந்த சிறிய இன்பத்திற்படியார்.

காட்சியுங் கருத்துமாகிய எல்லாப்பொருள் கட்கும் பொருள் என்பது பொதுப்பெயராதலின், 'பொருட் பொருள்' என இருபெயரொட்டாக்கினர். புன்மை தன்மையிலும் அளவிலுஞ் சிறுமை. தோய்தல் தொடுதல் அல்லது படிதல். "தாடோய் தடக்கை" (புறம். 14), "கானிலந் தோயாக் கடவுளை" (நாலடி. கடவுள் வாழ்த்து) என்பன காண்க. முழுகுதல் என்னும் பொருளும் உள்ளதேனும், அது இங்கு ஆழ்ந்து ஈடுபடுதலைக் குறிக்குமாதலின் விலக்கப்பட்டது. அறவழியில் ஈட்டும் பொருளை 'அருட்பொருள்' என்றும், அதற்குத் தடையாயிருத்தலால் 'புன்னலந்தோயார்' என்றும், கூறினர்.

கூகடு. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

(இ—ரை.) மதி நலத்தின் மாண்ட அறிவினவர்—இயற்கை யான மதி நுட்பத்தால் மாட்சிமைப்பட்ட செயற்கையான கல்வியறி வினையுடையார்; பொதுநலத்தார் புல் நலம் தோயார்—பொருள் கொடுத்தாரெல்லாரும் பொதுவாக நுகர்தற்குரிய விலைமகளிராற் பெறும் இழிந்த சிறிய இன்பத்திற்படியார்.

இயற்கையான மதிநலம் முற்பிறப்புக்களிற் செய்த நல்வினை களாலும் கற்ற கல்வியாலும் அமைவது. மதிநலத்தாலேயே கல்வி யறிவு மாட்சிமைப் படுதலால் 'மதிநலத்தின் மாண்ட அறிவினவர்' என்றும், மாட்சிமைப்பட்ட அறிவினர்க்கு விலைமகளிர் நலத்தின் பொதுமையும் புன்மையும் விளங்கித் தோன்றுதலால் 'தோயார்' என்றும், கூறினர்.

கூகஎ. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

(இ—ரை.) தம் நலம் பாரிப்பார்—கல்வியறிவாலும் நற்குணநற் செய்கையாலும் தம் புகழை உலகத்திற் பரவச்செய்யும் உயர்ந்தோர்; தகை செருக்கிப் புல் நலம் பாரிப்பார் தோள் தோயார்—ஆடல், பாடல், ஒப்பனை முதலியவற்றுல் தம் திறத்தை மிகுத்துத் தம்மால் ஆடவர் பெறும் இன்பத்தைப் பொருள் கொடுப்பாரிடத் தெல்லாம் பரப்பும் விலைமகளிரின் தோளைத் தீண்டார்.

தகை அழகு. தோயின் புணர்ச்சிகெடுமாதலின் 'தோயார்' என்றார். 'தந்நலம்' என்பதில் 'நலம்' ஆகுபொருளது. இம்மூன்று குறளாலும் உயர்ந்தோர் விலைமகளிரைத் தீண்டாமை கூறப்பட்டது.

கூகஎ. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

(இ—ரை.) நிறைநெஞ்சம் இல்லவர் தீயவழியிற் செல்லாத வாறு மனத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலில்லாத ஆடவர்; நெஞ்சில் பிற பேணிப் புணர்பவர் தோள் தோய்வர்—காதலாலும் மதிப்பாலும் உள்ளத்திற் கூடாமல் பொருளையும் அதனாற் பெறுவன வற்றையுமே விரும்பி உடம்பால் மட்டும் கூடும் விலைமகளிர் தோள் களைத் தழுவுவர்.

உள்ளத்தாற் கூடாமற் பொருளாசை பற்றி உடம்பால் மட்டும் கூடும் விலைமகளிர், பொருள் கொடுத்தால் அன்று மட்டும் தரும் இன்பத்தின் பொதுமை சிறுமை பொய்ம்மை நோய்மைகளை அறிந்து தம் மனத்தை அடக்கியவர் தோயாராதலின், அவரல்லாதவர் தோய்வர் என்றார்.

கூகஅ. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

(இ—ரை.) மாய மகளிர் முயக்கு—அழகு, ஒப்பனை, நளினம், தளுக்கு, ஆடல், பாடல் முதலியவற்றுல் ஆடவரை, சிறப்பாக இளைஞரை, மயக்கி வஞ்சிக்கும் விலை மகளிரின் தழுவலை; ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப — அவ்வஞ்சனையை ஆராய்ந்தறியும் அறிவில்லார்க்குக் காமினிப்பேய் தாக்கு என்பர் அறிஞர்.

அணங்கென்றது அணங்குதாக்கை. அணங்கு காமவழியால் ஆடவர் உயிரைக் கவரும் அழகிய பெண்பேய்; தாக்குத் தழுவல். முன் இன்பஞ் செய்வதுபோல் தோன்றிப் பின் வறுமையாலும்

நோயாலும் வாழ்நாளைக் குறுக்கும் விலைமகளிர் முயக்கத்திற்கு, முன் இன்பமாகத் தோன்றிப்பின் உயிர் கவரும் காமினிப் பேயின் தழுவலே உவமங் கூறினர். அணங்குதல் வருத்துதல். அணங்கும் பெண்பேயை அணங்கென்றது முதனிலைத் தொழிலாகுபெயர். 'அணங்கு' இங்கு அணங்குதாக்கைக் குறித்தலால் ஆகுபொருளி. 'அணங்கென்ப' என்பது அணங்குதாக்குப் போல்வதென்பர் என்றே பொருள்படுதலால், உவமையாவதன்றி உருவகமாகாது. இதை "மாத ரடிக்கு நெருஞ்சிப் பழம்" என்பதுபோற் கொள்க.

கூகூ. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

(இ—ரை.) வரைவு இலா மாண் இழையார் மெல்தோள்—உயர்ந்தோள் இழிந்தோர் என்னும் வேறுபாடு பற்றி ஒருவரையும் விலக்காது பொருள் கொடுத்தார் யாவரையுந்தழுவும் விலைமகளிரின் மெல்லிய தோள்கள் ; புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு—அக் குற்றத்தை யறியும் உயர்வில்லாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகம்.

'மாணிழையார்' சிறந்த அணிகல மணிந்த பெண்டிர். இதனால் ஒப்பனையும் 'மென்றோள்' என்பதனால் உருவ அழகும் அறியப்படும். 'புரையுயர் வாகும்" (தொல். உஅஙி). அளறு போல் துன்பந் தருவதை 'அளறு' என்றும், விலைமகளிரோடு கூடின கீழ்மக்கள் அவரை ஒருகாலும் விடார் என்பது தோன்ற 'ஆழும்' என்றும், கூறினர்.

கூஉ0. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(இ—ரை.) இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்—இரு வேறுபட்ட மனத்தையுடைய விலைமகளிரும் கள்ளும் சூதும் ; திருநீக்கப்பட்டார் தொடர்பு — திருமகளால் நீக்கப்பட்டவரின் உறவாம்.

பொருள்மேல் விருப்பும் ஆள்மேல் விருப்பின்மையுமாக உடம் பாற் கூடுதலும் உள்ளத்தாற் கூடாமையும் ஒருங்கே யுடையார் மனத்தை 'இருமனம்' என்றார். வரைவின் மகளிர்போன்றே கள்ளுஞ் சூதும் பெருட் பகையாதலின், உடன் கூறப்பட்டன. இதனுல் அடுத்துவரும் ஈரதிகாரங்கட்கும் தோற்றுவாய் செய்யப் பட்டது.

''பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.'' (தொல். கஉச)

என்றவாறு, இங்கு இருதிணையும் விரவிவந்த எழுவாய்கள் 'தொடர்பு' என்னும் அஃறிணை முடிபு கொண்டன. 'திரு' ஆகு பெயர். மூவகையுறவுகளுள் ஏதேனுமொன்றிருப்பினும், புதிதாகப் பொருள் சேராமையோடு இருந்த பொருளும் போய்விடும் என்ப தாம். இந்நான்கு குறளாலும் விலைமகளிரொடு கூடுவோர் இழிந் தோர் என்பது கூறப்பட்டது.

அதி. கஉ—கள்ளுண்ணுமை

அஃதாவது, நீராகவோ கட்டியாகவோ புகையாகவோ இருந்து வெறியினல் உணர்வை மறைக்கும் பொருள்களை யுண்ணுமை. கள்ளுதல் மறைத்தல். இவ்வினை இன்று வழக் கற்றது. கள்—கள்ளம்=மறைப்பு. கள்—களவு=மறைப்பு.

கள் என்னும் பெயர் முந்நிலைப் பொருட்கும் பொதுவேனும், பெருவழக்குப் பற்றி நீர்வடிவான பொருளையே குறிக்கும். அது இயற்கையுஞ் செயற்கையும் என இரு வகைத்து; முன்னது பனை தென்னை முதலிய மரங்களினின்று இறக்குவது; பின்னது அரிசி காய்கனி முதலியவற்றைப் புளிக்கவைத்தும் காய்ச்சியும் எடுப்பது.

விலைமகளிர் கூட்டம் போன்றே கட்குடியும் பொருளீட்டற்குத் துடையாயும் வினைவளவிற் பகை போன்றும் இருத்தலால், விலக்கப் பட்டு வரைவின் மகளிரின் பின் வைக்கப்பட்டது.

கஉக. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

(இ—ரை.) கள் காதல் கொண்டு ஒழுகுவார்—கள்ளின் மேற் பெருவிருப்பங்கொண்டு நடப்பவர்; எஞ்ஞான்றும் உட்கப்படார்—ஒருபோதும் பகைவரால் அஞ்சப்படார்; ஒளி இழப்பர்—அதுவேயு மன்றித் தாம் பெற்றிருந்த நற்பெயரையும் இழப்பர்.

பேரரசராயினும் கள்ளுண்டு வெறித்த விடத்துச் சிறுபிள்ளை யாலும் எளிதாய்க்கொல்லப் படுவராதலாலும், அந்நிலைமையடையு மாறு எவ்வேளையிலும் உட்பகைவராற் கள்ளுட்டப்படுவராதலாலும், எஞ்ஞான்றும் 'உட்கப்படார்' என்றும், ஒழுக்கக்கேடும் மானக் கேடும் பற்றி இகழப்படுவராதலால் 'ஒளியிழப்பர்' என்றும் கூறினர். 'படாஅர்' இசைநிறையளபெடை.

கூஉஉ. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்ரோரா
னெண்ணப் படவேண்டா தார்.

(இ—ரை.) கள்ளை உண்ணற்க—உயிரையும் மதிப்பையுங் காத்துக்கொள்ள விரும்புபவர் கள்ளை உண்ணுதிருக்க; உணில் சான்ரோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க—அங்ஙனமன்றி உண்ணவே விரும்பின், அறிவுடையோரால் மக்களாகக் கருதப் படுதலை விரும்பாதவர் உண்க.

ஆறறிவிற்குரிய மக்கட்பிறப்பையும் அதனற் பெறக்கூடிய கல்வியறிவையும் பெற்றும், கட்குடியால் அவற்றை யிழந்துவிடுத லால், இயற்கையாகவே அவையில்லாத அஃறிணையினுங் கீழாகிப் பொதுவான உயிரினத்திலும் சேர்க்கப்படார் என்னுங் கருத்துத் தோன்ற, 'எண்ணப்பட வேண்டாதார்' என்ரார்.

கூஉங. ஈன்ருண் முகத்தேயு மின்னுதா லென்மற்றுச்
சான்ரோர் முகத்துக் களி.

(இ—ரை.) ஈன்ருள் முகத்தேயும் களி இன்னாது—மக்கள் எக்குற்றஞ் செய்யினும் பொறுத்துக் கொள்ளும் மட்டற்ற அன்புள்ள தாய் முன்பும் கள்ளுண்டு வெறித்தல் துன்பந் தருவதாம்; மற்றுச் சான்ரோர் முகத்து என்—பின்பு; எக்குற்றமும் பொருத அறிவுடை யோர் முன் அது எத்தகையதாம்?

ஐம்புலனு மடங்கி அடியோடு உணர்விழத்தலும், வாய்காவாது மறைவெளிப்படுத்தலும் பித்தர்போற் பிதற்றலும், ஆடை விலகலும் அற்றம் மறையாமையும், தீநாற்றம் வீசுதலும், வாய் நுரைதள்ளு தலும், வழியிற் கிடத்தலும், வழிப்போக்கர் பழித்தலும், ஈமொய்த் தலும், இளஞ்சிரூர் சிரித்தலும், கண்ணுரக் காணின், பெற்றதாயும் பொருது கண்டனஞ் செய்வளாதலின், கள்ளைக் கண்ணுலுங் காணப் பொருது நெடுந்தொலைவில் நீங்கும் தூயவொழுக்கமுள்ள சான்ரோர்க்கு, அக்காட்சி அளவிறந்த அருவருப்பையும் வெறுப்பை யும் விளைக்கும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை யென்பதாம். உம்மை உயர்வு சிறப்பு. 'மற்று' பின்மைப்பொருளது. 'ஆல்' அசைநிலை.

கூஉச நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு.

(இ—ரை.) கள் என்னும் பேணுப் பெருங் குற்றத்தார்க்கு—கள்ளுண்டல் ஆகிய பழித்தற்குரிய பெருங் குற்றத்தைச் செய்தவர்க்கு; நாண் என்னும் நல்லாள் புறம் கொடுக்கும்—நாணம் என்று சொல்லப்படும் பெண் தெய்வம் முகத்தில் விழிக்கவும் அருவருத்துப் புறங்காட்டி நிற்பாள்.

பெற்ற தாய்க்கும் வெறுப்பை விளைத்தலின் 'பேணு' என்றும், ஒழுக்கக் கேட்டை மட்டுமன்றி உயிர்க்கே டையும் உண்டாக்குதலின் 'பெருங்குற்றம்' என்றும், கள்வெறியர் மானத்தை அறவே இழந்து விடுதலின் 'நாண்..... புறங்கொடுக்கும்' என்றும், கூறினார். 'நல்லாள்' என்பது அழகுபற்றிப் பெண்ணிற் கொருபெயர். 'நல்ல பிள்ளை' என்னும் உலக வழக்கையும், ''மைப்படு மழைக்கண்ணல்லார்'' (சீவக. உஅஅக) என்னும் செய்யுள் வழக்கையும், நோக்குக. நாண் மென்மைக் குணமாதலின் பெண்ணுக்குருவகித்தார். ''பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி'' என்பது பரிமேலழகர் நச்சுக் கூற்று. 'கள்' ஆகுபொருளது. இம்மூன்று குறளாலும் கள்ளுண்டல் ஒளியிழத்தற்குக் காரணியமென்று கூறப்பட்டது.

கூஉடு. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து மெய்யறி யாமை கொளல்

(இ—ரை.) பொருள் கொடுத்து மெய்அறியாமை கொளல்—ஒருவன் விலைப்பொருள் கொடுத்துக்கள்ளால் வரும் மெய்ம்மறதியை வாங்குதல்; கை அறியாமை உடைத்தே—செய்யும் முறைமையறியாமையைக் காரணியமாக வுடையதே.

'கை' செய்கை, கருவியாகுபெயர். கையறுதல் செயலறுதல். கையறியாமை செய்கை அல்லது செய்யும் முறைமை யறியாமை. ''கையறியாப் பேதை'' என்று ஆசிரியர் வேறிடத்துங் கூறுதல் காண்க. (குறள். அகூசு) உலகத்தார் எங்கும் என்றும் நல்ல பொருளையே விலை கொடுத்து வாங்குவது இயற்கை. பொதுவாக மெய்ம்மறதி மயக்கம் என்னும் நோயால் உண்டாவது. நோய் நீக்கும் மருந்தையன்றி நோயை விலைக்கு வாங்கார். கள்ளை விலை கொடுத்து வாங்கி அதனால் மயக்கத்தைப் பெறுவது, நோயை விலைக்கு வாங்குவது போன்றதே. இது அறிவில்லாத சிறுவரும் அறிவுதிரிந்த பித்தரும் செய்யுஞ் செயல்போன் றிருத்தலால், 'கையறியாமை யுடைத்தே' என்றார். இதற்குப் பழவினையைக் காரணியமாகக் காட்டுவர் பரிமேலழகர். ஏகாரம் தேற்றம்.

கூஉசு. துஞ்சினுர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுணபா கள்ளுண பவா

(இ—ரை.) துஞ்சினுர் செத்தாரின் வேறு அல்லர்—உறங்கு பவர் உயிருடையரேனும் அறிவும் மனவுணர்வும் அந்நிலையின்மை யால் இறந்தாரை யொப்பர்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார்—அதுபோல், கள்ளுண்பவர் இறவாதிருப் பினும் அறிவை யும் உடல்நலத்தையும் என்றுமிழத்தலால் நாள்தோறும் நஞ்சுண் பவரை யொப்பர்.

"இதனை நிரனிறை யாக்கி, தீரிக்கப்படுதலால் உறங்குஞரும் நஞ்சுண்பாரு மொப்பர்; கைவிடப் படுதலால் செத்தாருங் கள்ளுண்பாரு மொப்ப ரென்றுரைப்பாரு முளர். அதிகாரப் பொருள் பிணைதாயிருக்க யாது மியையில்லாத நஞ்சுண்பார்க்கு உவமை யுணர்த்து ஈண்டுக் கூறல் பயனின்மையானும், சொற் கிடக்கை நிரனிறைக் கேலாமையானும், அஃதுரையன்மை யறிக". என்று ஒருசாராருரையைப் பரிமேலழகர் மறுத்திருப்பது முற்றும் சரியே. இக்குறளில் வந்துள்ளது எடுத்துக்காட்டுவமை. 'துஞ்சினுர்', செத்தார் என்பன இங்குச் சிறப்புப்பொருள் குறித்தன வல்ல.

கூஉஎ. உள்ளொற்றி யுள்ளூர நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(இ—ரை.) கள் ஒற்றிக் கண்சாய்பவர்—கள்லை மறைந்துண்டு அதனுல் வெறியேறி அறிவு தளர்பவர்; உள் ஊர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர்—உள்ளூராரால் உள்ளத்திலுள்ள மறை பொருள்கள் உய்த்துணரப்பட்டு எப்போதும் நகையாடப்படுவர்.

கள்வெறியினுல் உணர் விழந்தவர், பொருள் விளங்காத தொடர்களை மட்டுமன்றி, நனவுக் காலத்தில் தம் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தனவும் தமக்கு மாறுனவும் தம்மைத் தாழ்த்து வனவுமான செய்திகளையும் வெளிவிடுவராதலின், 'உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர் என்றார். "கள்லைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்." "கள்லைக் கொடுத்துக் கருமத்தை (காரியத்தை) அறி." என்பன பழமொழிகள். 'உள்ளூர்' இலக்கணப்போலி. 'ஊர்', 'கண்' ஆகுபெயர்கள். 'உண்டு' என்பது அவாய்நிலையான் வந்தது.

கூஉஅ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(இ—ரை.) களித்து அறியேன் என்பது கைவிடுக—கள்ளை மறைவாக உண்டுவருபவன், அதை யுண்ணுத வேளையில், "நான் கள்ளுண்டறியேன்." என்று தன்னை ஒழுக்கமுள்ளவனைக் காட்டிக் கொள்வதை விட்டுவிடுக; நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும்—பிறரறியின் இழிவென்று முன்பு தன் மனத்தில் மறைத்து வைத்திருந்த குற்றமும், மறுமுறை யுண்டபொழுதே முன்னினும் அதிகமாக வெளிப்பட்டுத் தோன்றும்.

களித்தல் கள்ளுண்டல் அல்லது கள்ளுண்டு வெறித்தல் வெறிக்கா விடினும் வாய்நாற்றமே கள்ளுண்டதைக் காட்டிவிடுதலால், 'ஒளித்ததூஉ மாங்கே மிகும்' என்றார். 'ஒளித்ததூஉம்' இன்னிசையளபெடை. ஏகாரம் பிரிநிலை. இவ்விரு குறளாலும் கள்ளுண்டல் மறைக்கப்படாமை கூறப்பட்டது.

கூஉகூ. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீக்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

(இ—ரை.) களித்தானைக் காரணம் காட்டுதல் — கள்ளுண்டு வெறித்தவனை இது தகாதென்று ஏதுக்களைக் காட்டித் தெளிவித்தல்; நீர்க்கீழ்க் குளித்தானைத் தீத்துரீஇய அற்று—நீர்க்குள் முழுகினவனை விளக்கொளியால் தேடிப்பார்த்தலை யொக்கும்.

விளக்கொளி நீருட் செல்லாதது போன்று ஏதுரை கட்குடியன் மனத்துட் செல்லா தென்பதாம். களித்தானைக்காட்டுதல் என்பது களித்தானுக்குக் காட்டுதல் என்று பொருள்கொள்ளின் வேற்றுமை மயக்கமும், களித்தானைக் காணச் செய்தல் என்று பொருள் கொள்ளின் வேற்றுமையியல்பும், ஆம். இங்ஙனமே "அவனைக் காட்டென்றனனே" என்னுங் கலித்தொகைத் தொடருங் கொள்ளப்படும் (எ.உ). 'கீழ்நீர்' இலக்கணப்போலி. 'துரீஇ' இன்னிசையளபெடை. இக்குறளால் அடிப்பட்ட கட்குடியனைத் திருத்த முடியாமை கூறப்பட்டது.

கூஉ0. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு

(இ—ரை). கள் உண்ணாப் போழ்தில்—கள்ளுண்பா னொருவன் தான் அதை உண்ணுது தெளிந்திருக்கும் வேளையில்; களித்தானைக் காணுங்கால்—கள்ளுண்டு வெறித்த பிறனைக்காணும்போது; உண்டதன் சோர்வு உள்ளான் கொல்—தான் உண்டபொழுது தனக்கிருந்த மயக்கத்தையும் உவமையளவையாலறிந்து, அதுவும் இத்தகையதே யென்று கருதான் போலும்!

கள்ளுண்டு வெறித்த நிலையின் இழிவை, உவமையளவையா லும் கருத்தளவையாலும் அறிந்தபின்னும் திருந்தாத கட்குடியன் நிலைமை நோக்கி, ஆசிரியர் வருந்திக் கூறியவாறு. 'கொல்' ஐயம்.

அதி. கூசா—சூது

அஃதாவது, கள்ளுண் போன்றே அறம் பொரு ளின்பங்கட்குத் தடையாய் நின்று பகைபோல் தீங்கு விளைக்கும் கவருட்டு. சூது என்பது ஒருவகைக்காய். அதன் பெயர் இங்கு அதைக் கருவியாகக் கொண்டு ஆடும் கவருட்டைக் குறித்தது ஆகுபெயர். கள்ளுண் போல் சூ தா ட் ட மு ம் விலக்கப்படுவதாதலின், இவ்வதிகாரம் கள்ளுண்ணுமையின் பின் வைக்கப்பட்டது.

கூஙக. ' வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(இ—ரை.) வென்றிடினும் சூதினை வேண்டற்க — தான் வெல்லுந் திறமையும் வாய்ப்பும் உடையனெனினும் சூதாட்டை விரும் பற்க; வென்றதூஉம் தூண்டில் பொன் மீன் விழுங்கிய அற்று— வென்று பொருள் பெற்றதும் இரையால் மறைக்கப்பட்ட தூண்டில் முள்ளை இரையென்று கருதி மீன் விழுங்கினாற் போன்றதே.

வெல்லுதல் உறுதியன்மையின் 'வென்றிடினும்' என்றும், தீயவழியிற் பொருள் வருதலான் 'வேண்டற்க' என்றும், கூறினார். தொடக்கத்தில் வென்ற பொருள் சூதாட்டை விட்டு ஒருபோதும் நீங்காதவாறு பிணிக்கும் பொறியென்பதும், அதனாற் பின்பு பொருளெல்லாம் இழந்து உயிரும் துறக்க நேருமென்பதும், உவமை யாற் பெறப்படும். சூதாட்டின் தன்மையுள்ள சீட்டாட்டும் சூதாட்டே. சூதாட்டின் தன்மைகள்: வெற்றி உறுதியின்றிக் குருட்டு வாய்ப்பாயிருத்தல், சில வலக்காரங்கள் கையாளப் பெறுதல், தோற்றார் வைத்த பணந்திரும்பாமை, ஒருவன் உழைப் பின்றி விரைந்து பிறர் பணத்தாற் செல்வனுதல், இழக்குந்தொறும் ஆசையுண்டாகி மேன்மேலும் வறுமை மிகுதல், வென்றார் மீது பொறுமையுண்டாதற் கிடமாதல், உழைப்பில் வி ரு ப் ப ஞ் செல்லாமை என்பனவாம். சீட்டின் விலை மிகக்குறைந்தும் பரிசுத் தொகை மிகவுயர்ந்தும் பரிசுகள் பகிரப்பல்கியும் இருப்பது, தூண்டில் முள்ளை மறைக்கும் இரைபோற் கவர்ச்சிக்குரியதாம். செல்வரது பொருளாலன்றி வறியவரது பொருளால் ஒருவன் செல்வனுதல், திருவள்ளுவர் அறநெறிக்கும் பொருள்நூற் கொள்கைக்கும் முற்று; மாறும். 'வென்றதூஉம்' இன்னிசை யளபெடை. 'பொன்' ஆகு பெயர். இங்குப் பொன்னென்றது கரும்பொன்னாகிய இரும்பை.

கூஉஉ. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(இ—ரை.) ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும்—தூண்டில் முள்ளைப் பொதிந்த இரையைப் பெற்றுப் பின்பு உயிரை யிழக்கும் மீன் போல, முதலாட்டத்தில் வென்று ஒரு தொகையைப் பெற்றுப் பின்பு இன்னும் பெறுவோம் என்னும் ஆசையால் மேலும் மேலும் ஆடி, முன்பு பெற்றதுபோல் நூறு மடங்கு இழந்து வறியராகி வாழ்நாள் குன்றியிறக்கும் சூதாடிகட்கும்; நன்று எய்தி வாழ்வது ஓர் ஆறு உண்டாம் கொல்—அறமும் இன்பமும் பெற்று நன்முக வாழ்வதொரு வழியும் உண்டாகுமோ? உண்டாகாது.

பொருளைச் சூதாட்டிலேயே தொடர்ந்து செலவழிப்பதாலும் வரவரப் பொருள் குன்றி வருவதாலும், நன்றெய்தி வாழும் வழியில்லை யென்றார். 'ஒன்று', 'நூறு' என்பன பொருள் குறியாது அளவு குறித்தன. 'நூறு' என்பது இங்குப் பேரெண்ணைக் குறித்தது. உம்மை இழிவு சிறப்பு. 'கொல்' வினா.

கூஉக. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

(இ—ரை.) உருள் ஆயம் ஓவாது கூறின்—ஒருவன் உருள் கின்ற கவற்றெடு சேர்ந்த பணையத்தை இடைவிடாது சொல்லிச் சூதாடுவானாயின்; பொருள் ஆயம் போய்ப் புறமே படும்—அவன் தேடிய செல்வமும் பொருள்வருவாயும் அவனை விட்டு நீங்கி எதிரி களிடம் போய்ச் சேரும்.

'ஆயம்' இரண்டனுள் முன்னது சூதாட்டைக் குறித்தது; தாயம் என்னும் சொல்லின் திரிபு: பின்னது வருவாயைக் குறித் தது; வா என்னும் சொல்லினின்று திரிந்தது. 'உருளாயம்' வினைத் தொகை. 'பொருளாயம்' உம்மைத் தொகை. ஆயம் என்னும் சூதாட்டுப் பெயர் உருள் என்னும் அடையால் சூதாட்டுக் கருவியை யும், கூறின் என்னும் வினையால் பணையத்தையும், குறித்து இருமடி யாகு பெயராயிற்று. பணையம் பந்தயப் பெருள்; வட்டினை யென்றும் பெயர்பெறும். ஒவ்வொரு சூதாட்டத்திலும் பணையங் கூறிய பின்னரே காய்களைப் பாய்ச்சுதலால், அக் கூற்றுக் கருவி யொடு சார்த்திக் கூறப்பட்டது. 'போஒய்' இசைநிறையளபெடை. பொருள்களையெல்லாம் பணையமாக வைத்துத் தோற்றபின், அவற்றின் வருவாய்களையும் வைப்பது வழக்கமாதலின், 'பொருளா யம்.....புறமே படும்' என்றார். ''ஆயம்' வடமொழித் திரிசொல்.'' என்பது பரிமேலழகர் நச்சுக் கூற்று. ஏகாரம் பிரிநிலை.

கூஙச. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(இ—ரை.) பல சிறுமை செய்து சீர் அழிக்கும் சூதின்—பல் வேறு இழிவுதருந் துன்பங்களைச்செய்து உள்ள பெருமையையுங் கெடுக்கும் சூதாட்டைப்போல; வறுமை தருவது ஒன்று இல்—கொடிய வறுமையைத் தரக்கூடியது வேறொன்றுமில்லை.

நளன்போல் மக்களிவிட்டுப் பிரிவதும், காதல் மனைவியைக் காட்டில் விட்டு நீங்குவதும்; பாண்டவர்போல் மனைவியையும் பணையமாக வைத்திழப்பதும், பகைவர் அவள் கூந்தலைப்பிடித்து அம்பலத்திற்கிழுத்து வந்து மானக்கேடாய்ப் பேசித் துகிலுரியப் பார்த்திருப்பதும், வென்றவர்க்கு அடிமையராகி மேலாடையைக் களைவதும், பல்வகைச் சிறுமைகளாம். சூது ஐம்பெருங் குற்றங் களுள் ஒன்றுதலாலும், அதையாடுவோர் தீயோரொடு சேர்த்து எண்ணப்படுவதாலும், தோற்றவர் நாட்டையும் செல்வத்தையும் இழத்தலாலும், 'சீரழிக்கும்' என்றார்.

கூஙடு. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

(இ—ரை.) கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார்—சூதாட்டும் சூதாடுகளமும் கவறுருட்டுங் கைத்திறமும் பற்றிப் பெருமை பாராட்டிப் பற்றுள்ளங்கொண்டு ஆடியவரும்; இல்லா கியார்—தம் எல்லாச் செல்வமும் இழந்தவராயினர்.

"கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்." (நள. சூ).

என்றவாறு, இது பண்டு சூதாடித் தம் பொருள் முற்றுமிழந்த அரசரையுஞ் செல்வரையும் நோக்கிப் பொதுப்படக் கூறியதாகும். கைத்திறமாவது வேண்டிய வாறெல்லாம் கவறுருட்டும் தேர்ச்சி. அத்தகைத் திறவோரும் தோற்பரென்பது புட்கரனும் சகுனியும் இறுதியில் தவறியதால் அறியப்படும். சிறப்பும்மை தொக்கது. 'கவறு', 'கை' என்பன ஆகுபெயர். பலர் கூடுங் கூட்டத்தைக் குறிக்கும் கழகம் என்னுஞ் சொல், அம்பலம், மன்றம் என்னுஞ் சொற்கள்போல் இங்குக் கூடுமிடத்தைக் குறித்தது. கல—கள—(களகு) — கழகு—கழகம். தருக்குதலும் இவறுதலும் கைத்திறமை யின் விளைவாகும். பாண்டவர்க்குச் சூதாடும் வழக்கமும் விருப்பமும் இருந்ததில்லையென்பதும், அதற்கு மாறாக அதன்மேல் வெறுப்பே யிருந்ததென்பதும்,

"அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு
மழகும் வென்றியுந் தந்தங்
குடியு மானமுஞ் செல்வமும் பெருமையுங்
குலமு மின்பமுந் தேசும்
படியு மாமறை யொழுக்கமும் புகழுமுன்
பயின்ற கல்வியுஞ் சேர
மடியு மான்மதி யுணர்ந்தவர் சூதின்மேல்
வைப்ப ரோமனம் வையார்."

என்று (வில்லி. பார. சபா. சூது. கஎ) தருமன் விதுரனிடங் கூறியதினின்று அறியப்படும். ஆதலால், "அவ் விவறுதலாற் பாண்டவர் தம்மரசுவிட்டு வனந்தினைப்போய் ஆண்டு மறைந் தொழுகினரென அனுபவங் காட்டியவாறு." என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாதென்க. பாண்டவர் சூதாகச் சூதில் ஈடுபடுத்தப்பட்டாரேயன்றித் தாமாக விரும்பியாடினரல்லர்.

கூஙஉ. அகடாரா ரல்ல லுழப்பர் சூதெனனு
முகடியான் மூடப்பட் டார்.

(இ—ரை.) சூது என்னும் முகடியான் மூடப்பட்டார்—சூதாட்டு என்னும் மூதேவியால் ஆட்கொள்ளப்பட்டவர்; அகடு, ஆரார் அல்லல் உழப்பர்—இம்மையில் வயிறார உண்ணப்பெறார்; மறுமையில் நரகத்துன்பத்தால் வருந்துவர்.

பொருளீட்டும் முயற்சியைக் கெடுத்து வறுமையைக் கொடுத் தலால் 'முகடி' யென்றும், புதிதாகப் பொருளிட்டாது பழம் பொருளையும் பகுணயமாக வைத்திழத்தலால் 'அகடாரார்' என்றும், பொய்யும் வஞ்சனையுங் களவும் பழகுதலால் 'அல்லலுழப்பர்' என்றும், கூறினர். வயிறு நிரம்பாமை சொல்லவே, பிற புலன் நுகர்ச்சியில்லாமை சொல்லாமலே பெறப்படும். வீட்டு முகட்டு வளையில் தங்குகின்றவள் என்னும் கருத்துப்பற்றி முகடியென்னப் பட்டாள் போலும்!

கூஙஎ. பழகிய செல்வமும் பணபுங் கெடுகுங்
கழகத்துக் காலை புகின்.

(இ—ரை.) காலை கழகத்துப் புகின்—ஒருவன் அறம் பொரு ளின்பங்கட்குச் செலவிட வேண்டிய காலத்தில் சூதாடுகளம் புகுந்து ஆடுவானாயின்; பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்—அது தொல்வரவாகிய பழஞ் செல்வத்தையும் நற்குணங்களையும் நீக்கும்.

களம் என்றே பொருள்படும் கழகம் என்னும் பொதுச்சொல், இங்கு இடம்பற்றிச் சூதாடு களத்தைக் குறித்தது. 'பழகிய' என்னும் அடை பண்பையுந் தழுவும். ஆதலால், பண்பென்றது இங்கு வழிமுறைப் பண்பை. முன்னோர் தேட்டு முதுசொம் எனப் படும். தான் புதிதாகச் செய்துகொள்ளும் அறம்பொருளே யன்றி முன்னோரிடமிருந்து வழிவழி வந்த செல்வமும் நற்பண்பும் இல்லா மற்போ மென்பதாம்.

கூடுஅ. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

(இ—ரை.) சூது—சூதாட்டு; பொருள் கெடுத்து—தன்னைப் பயில்கின்றவன் தோல்வியால் அவன் செல்வத்தைக் கெடுத்து, பொய் மேற்கொளீஇ—வெற்றி பெறும் பொருட்டுப் பொய்யை மேற்கொள்ளப் பண்ணி; அருள் கெடுத்து—தோல்வி வருத்தத் தாலும் வென்றவன்மீது கொள்ளும் பொருமையாலும் எழும் சினத்தால் அருள் நோக்கைக் கெடுத்து; அல்லல் உழப்பிக்கும்—இங்ஙனம் இருமையிலும் துன்புற்று வருந்தச் செய்யும்.

மூவகைத் தீங்குகளுள், முன்னதன் விளைவு இம்மையிலும் பின்னவற்றின் விளைவு மறுமையிலும் நிகழ்வனவாம். "பொருள் கொடுத்து என்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு மேற் கொளீஇ என்புழி மேற்கோடலாகிய விளைமுதல்வினை" என்னும் பரிமேலழகர் உரை பொருந்துவதே. 'கொளீஇ' இன்னிசையள பெடை.

கூடுக. உடைசெல்வ மூஞ்ஞெளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

(இ—ரை.) ஆயம் கொளின்—ஒருவன் சூதாட்டைப் பொழுது போக்காகவோ பொருளீட்டும் வழியாகவோ மேற்கொள்ளின்; ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐந்தும் அடையாவாம்—அவனைப் பெயர் விளங்கலும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் ஆகிய ஐந்தும் சேராவாம்.

அகவுடமையும் புறவுடமையுமாகிய எல்லாப் பொருள்களும் இல்லாதவனுவான் என்பதாம். சூதாட்டிலேயே காலங்கழிப்ப வனுக்குப் புதுப்பொருள் வராமையாலும் பழம்பொருள் போய் விடுதலாலும், 'ஐந்தும் அடையாவாம்' என்றார். அரசனுயின், அவன் செல்வம் படை, குடி, நாடு, கூழ், அரண், கருவூலம்,

உரிமைச்சுற்றம் முதலியனவாம். 'ஒளி', 'கல்வி' முதலியன செய்யுள் நடைநோக்கி முறைமாறி நின்றன. ஆயம் சூதாட்டு. 'ஐந்தும்' முற்றும்மை. சூதாட்டிலேயே காலங்கழிப்பவனுக்குக் கல்வி கற்க நேரமின்மையாலும், ஏற்கெனவே கற்றதும் ''நூறுநாள் ஓதி ஆறு நாள் விடத்தீரும்.'' என்ற பழமொழிப்படி மறந்து போமாதலாலும், மறவாத ஒழுக்க நெறிமுறைகளும் கைக்கொள்ளப்படாவாதலாலும், அடையாப் பொருள்களுள் கல்வியும் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. ஊண்போல் உடையும் இல்லாமற் போவானென்றது பொதுப்பட வறுமை குறித்ததேயன்றி, நளன் நாடிழந்து காடடைந்தபின் ஓரிமத்தை (அன்னத்தை) வளைத்து ஆடையிழந்ததையும், பாண்டவர் தம்மைப் பகையாக வைத்தாடித் தோற்றுத் தம் மேலாடையிழந்ததையும், குறித்ததன்று.

கூசை. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப,
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

(இ—ரை.) இழத்தொறும் காதலிக்கும் சூதேபோல்—பகையம் வைத்த பொருள்களே இழக்குந்தோறும் அவற்றை மீட்டற் பொருட்டும் மேற்கொண்டு ஈட்டற்பொருட்டும் சூதின் மேற்பற்று வைக்குஞ் சூதன்போன்றே; உயிர் துன்பம் உழத்தொறும் காதற்று—ஆதன் (ஆன்மா) உடம்பால் மூவழித் துன்பங்களையும் பட்டு வருந் துந்தோறும் அதன்மேற் பற்றுவைக்குந் தன்மையதாம்.

உயிர்வினையை உவமமாகவும் சூதன் வினையைப் பொருளாகவும் கூறுவதே அதிகார முறையாயினும், முன்னதன் முதன்மை பற்றி மாற்றிக் கூறினர். இங்ஙனம் இருவகைக் காதலையுங் கூறியது பெரும்பான்மைபற்றியாகலின், உடம்பை வெறுத்துத் துறவுபூணுவதும் சூதை வெறுத்து நல்வழிப்படுவதும் சிறுபான்மை யுண்டென வறிக. துன்பப்படுந்தொறும் உடம்பின்மேற் பற்றுவைப்பது, எதிர்காலத்திலேனும் இன்பநுகரலாம் என்னும் நம்பாசைபற்றி. 'தொறூஉம்' ஈரிடத்தும் இன்னிசையளபெடை. 'சூது' ஆகுபொருளது; உயிருக்கொத்தவன் சூதனேயாதலின். சூதன் சூதாடுவோன். ஏகாரம் பிரிநிலை.

அதி. கூடி—மருந்து

அஃதாவது, அறம்பொருளின்பத்திற்குத் தடையாய்ப்பகை போல் நின்று வருத்தும் பல்வகை நோய்களையுந் தடுப்பனவும் தீர்ப்பனவுமான பல்வேறு நலப்பொருள் தொகுதி.

நோய் வரும் வழிகள் அல்லது காரணியங்கள் பழவினை, முன்னோர் தொடர்பு, இயற்கை, ஒட்டுவாரொட்டு, ஊண், உடை, நஞ்சு, உறுப்பறை, வறுமை, பஞ்சம், செய்வினை, அச்சம், போர், இறைவன் முதலியன. தாக்கும் பகுதிபற்றி அகக்காரண நோய், புறக்காரணநோய் என நோய்கள் இருபாற்படும்.

நோய்நீக்கும் மருத்துவ முறைகள் உட்கொள்வு, முகர்வு, பூச்சு, அணிவு, சுடுகை, ஒத்துகை, வேர்பிடிப்பு, குளிப்பு, அறுப்பு, மந்திரம், மந்திரத்தாக்கம் (Hypnotism), வழிபாடு, இறும்பூது (miracle), நம்பகம் (Faith) முதலியனவாகப் பல திறப்படும். பழவினையால் வந்த நோய்க்கு மருந்தில்லையென்பர். இறைவனால் வந்தநோய் இறைவழி பாட்டால் நீங்கும். இவ்விரு வகையுமல்லாத பிறவகை நோய்ப் பண்டுவமே (Treatment) இவ் வதிகாரத்தில் ஆசிரியராற் கூறப்பட்டுள்ளது.

மருந்து இயற்கை மருந்து செயற்கை மருந்து என இரு வகைப்படும். வேருந் தழையும் போல்வன இயற்கை; மாத்திரையும் பாம்புணிக் கருங்கல்லும் போல்வன செயற்கை, தமிழ மருத்துவத்தில் இயற்கை மருந்துகளே பெரும்பான்மையாம். "வேர் பார், தழைபார், மெல்ல மெல்லச் செந்தூர நீறு (பற்பம்) பார்.' என்பது தமிழ மருத்துவப் பழமொழி. மருத்துவ வேருந்தழையும் அவற்றுற்செய்யப்பட்ட கலவைகளும், பொதுவாகச் சிறப்பான நறுமணமுடைமையால் மருந்து எனப் பெயர் பெற்றன. மரு என்பது நன்மணம். மருக்கொழுந்து என்னும் உலக வழக்கையும் "மருவார் கொன்றை" (தேவா. நகூ0, க) என்னும் செய்யுள் வழக்கையும் நோக்குக. மரு—மருந்து. சிறந்த மருந்துத் தழைகளெல்லாம் மலைகளிலிருப்பதாலும், மலைகளில் வாழும் சித்தரே அவற்றைப் பற்றிய அறிவில் தேர்ச்சி பெற்றிருந்ததினாலும், தமிழக மருத்துவ அகர முதலி மலையகராதியென்றும், தமிழ மருத்துவம் சித்த மருத்துவம் என்றும், பெயர்பெற்றன.

பெரியாரைப் பிழைத்தல், கள்ளுண்டல் என்னும் பகைகள் பெரியாரைப் பிழையாமையென்றும், கள்ளுண்ணாமையென்றும் எதிர் மறைவடிவிற் கூறப்பட்டதுபோன்றே, நோய் என்னும் பகையும் இங்கு மருந்து என்னும் மாற்றுப்பெயராற் கூறப்பட்டதென்க. மற்றப் பகைகளைப் போலாது இஃது அம்மை யிம்மை யும்மையென்னும் மும்மையுந் தழுவுவதால், இறுதியில் வைக்கப்பட்டது.

கூசக. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(இ—ரை.) நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று—மருத்துவ நூலார் ஊதை (வாதம்) முதலாக எண்ணிய முக்கூறுகளும்; மிகினும் குறையினும் நோய் செய்யும்—தாம் இருக்க வேண்டிய அளவிற்குக் கூடினாலும் குறைந்தாலும் உடம்பிற் பல் வேறு நோய்களே உண்டுபண்ணும்.

'வளிமுதலா வெண்ணிய மூன்று' ஊதை பித்தங் கோழை (சிலேட்டுமம்) என்பன. ஐ அல்லது ஐயம் என்பதும் கோழைக் கொருபெயர். இம் மூன்றும் உடம்பிலிருந்து வெவ்வேறு நற்றொழில் செய்யும் இன்றியமையாக் கூறுகளேயன்றி, நோய்களல்ல. மூச்சும் பேச்சும் உட்பொருளிடமாற்றமும் வெளியேற்றமும் , தலைத்தும் பிறதாதுக்களோடு கூடியும் நிகழ்த்துவது ஊதையின் தொழில்கள்; உண்டதன் செரிமானத்திற்கு உதவுவது பித்தநீர்; தசைநார்களின் மழமழப்பான இயக்கத்திற்கு உயவுநெய்போற் பயன்படுவது கோழை. இவை உணவுடை செயல்களின் ஒவ்வாமையாலும் இயற்கை வேறுபட்டாலும் மிகுதலுங் குறைத்தலும் நேரும் பொழுதே, அவற்றின் விளைவாக நோய்கள் உண்டாகும் என அறிக. இதற்கு மாறாக, மிகுதல் குறைதல்களே உணவு செயல்களின் தொழிலாகவுரைத்துள்ளார் பரிமேலழகர். உணவொவ்வாமையாவது, சுவை மணம் ஆற்றல்களால் உடற்கூற்றெடும் காலவிடங்களொடும் பொருந்தாமை. உடையொவ்வாமையாவது காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்காமை. செயலொவ்வாமை மிகையுந் தகாமையும், முற்றும்மை தொக்கது. ஆக என்னும் வினையெச்சவீறு 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது. 'நூலோர்' என்பதற்கு ஆயுள்வேத முடையோர் என்று பரிமேலழகர் உரைத்ததும் நச்சுக் கூற்றே. சித்த மருத்துவத்தின் வடநாட்டு வேறு பாடே ஆயுர்வேதம் என அறிக.

மேலையர் ஊதை முதலிய முக்கூறுகளோயும் அரத்தம் (blood) கோழை (phlegm), பித்தம் (choler), கரும்பித்தம் (melancholy) என நால்வகை நீரங்களாகப் (humours) பகுப்பர்.

கூசஉ. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

(இ—ரை.) அருந்தியது அற்றது போற்றி உணின்—ஒருவன் தான் முன்னுண்டது செரித்ததைக் குறிகளால் தெளிவாக அறிந்து

அதன்பின் உண்பானுயின்; யாக்கைக்கு மருந்து என வேண்டா வாம்—அவனுடம்பிற்கு மருந்தென்றே ஒன்றுந் தேவையில்லை.

பெரும்பாலும் நோய்களெல்லாம் செரியாவுணவாலும் பொருந் தாவுணவாலும் மிகையுணவாலுமே நேர்வதால், இது முதல் ஆறு குறள்களில் ஆசிரியர் உணவு நெறிபற்றியே கூறுகின்றார். செரி மானத்தை யறியுங் குறிகள் வயிற்றிற் கனமின்மை, ஏப்பத்தின் செம்மை, இருவகைக் கரணங்களும் தொழில் செய்யத்தகுதியா யிருத்தல், பசியுண்டாதல், உண்டு ஐந்து மணி நேரத்திற்கு மேலாயிருத்தல், என்பன. 'யாக்கை' ஆகுபெயர். எழுவகைத் தாதுக்களால் யாக்கப்பட்டது யாக்கை. யாத்தல் கட்டுதல், 'உணின்' என்பது அதன் அருமையையும் நிலைப்பாட்டையும் உணர்த்திற்று. இக்குறளால் உண்டது செரித்தபின் உண்டால் நோய்வராதென்பது கூறப்பட்டது.

தமிழகத்து உணவு தொன்றுதொட்டு மருத்துவ முறையிற் சமைக்கப்பட்டு வருகின்றது. பச்சரிசி சூடுண்டாக்குமாதலால் வெப்பநாட்டிற் கேற்காதென்று புழுங்கலரிசி யாக்கப்படுகின்றது. அதைச் சரிதண்ணீர் வைத்துச் சமைத்தல் வேண்டும். சுவை மிகுத்தற்குத் தீட்டும்போது நீக்குந் தவிட்டைத் தனியாகக் கொழுக்கட்டை பிடித்துத் தின்பது வழக்கம். வாழைக்காய் வளி மிகுப்பதென்று பிஞ்சு நிலையிற் சமைக்கப்படும். சீனியவரையென் னுங் கொத்தவரை பித்தமிகுப்பதென்று முதலில் அவித்து இறுக் கப்படும். காறலுண்டாக்குங் காய்கட்குப் புளி சேர்க்கப்படும். காயச்சரக்காகக் கூட்டுவனவற்றுள்: மஞ்சள் நெஞ்சுச் சளியை முறிக்கும்; கொத்துமல்லி பித்தத்தை யடிக்கும்; சீரகம் வயிற்றுச் சூட்டைத் தணிக்கும்; மிளகு தொண்டைக்கட்டைத் தொலைக்கும்; பூண்டு வளியகற்றி வயிற்றூளைச்சலை நிறுத்திப் பசி மிகுக்கும்; வெங்காயம் குளிர்ச்சியுண்டாக்கிக் குருதியைத் தூய்மைபடுத்தும்; பெருங்காயம் வளியை வெளியேற்றும்; இஞ்சி பித்தத்தை யொடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும்; தேங்காய் நீர்க்கோவை யென்னுந் தடுமத்தை (மூக்குச்சளியை) நீக்கும்; கறிவேப்பிலை மணமூட்டி உணவு விருப்பையுண்டாக்கும்; கடுகு வயிற்றுவலி வராமற் காக்கும்; நல்லெண்ணெய் கண்குளிர்ச்சியும் மதித்தெளி வும் உண்டாக்கும். இவையெல்லாஞ் சேர்த்த துவரம்பருப்புக் குழம்பும், சீரகம் பூண்டு கலந்த மிளகு நீரும், சூட்டைத்தணித் துச் செரிமான ஆற்றலை மிகுக்கும் மோரும், கூடிய முப்படையற் சோற்றைக் கொழுமைப்படுத்திக் குடற்புண்ணுற்றும் நெய்யொடும் உடலுக்குரஞ்செய்து கழிமாசுக்கட்டை (மலபந்தத்தை) நீக்கும்

கீரையொடும், குளிர்ச்சிதந்து பித்தம்போக்கும் எலுமிச்சை யூறு காயொடும், அறுசுவைப்பட வுண்ட தமிழன் 'அற்றது போற்றி யுணின்' நோயண்டாதாகலின், 'மருந்தென வேண்டாவாம், எற்றுர். 'யாக்கைக்கு' என்றது உடம்பைப் பொறுத்தமட்டில் என்றவாறு. உள்ளத்தைத் தாக்கும் நோய் வேறுவகைப் பட்ட தாகலின், அதைப் பின்னர்க் கூறுவார்.

கூசுக. அற்ருல் அளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு.

(இ—ரை. அற்ருல் அளவு அறிந்து உண்க—முன்னுண்டது செரித்துவிட்டால் பின்னுண்பதைச் செரிமான ஆற்றல், பசி, பருவம், உழைப்பு, உணவுவலிமை முதலியவற்றின் அளவறிந்து, உடல்நிலைக்கும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப அளவாக உண்ணுக; அஃது உடம்பு பெற்ருன் நெடிது உய்க்கும் ஆறு— அங்ஙனம் உண்பதே பெறற்கரிய மாந்தனுடம்பைப் பெற்றவன் அதை நெடுங்காலங் கொண்டுசெலுத்தும் வழியாகும்.

இம்மை மறுமை வீடென்னும் மும்மையின்பத்திற்கும் வேண்டிய முயற்சி செய்யக் கூடியது மாந்தப் பிறப்பொன்றேயாதலின் 'உடம்பு பெற்ருன்' என்றும், அவ்வுடம்பு நீடுநிற்பின் அம் முயற்சியும் அதன் விளைவான இன்பமும் பெருகுமாதலின் 'நெடிதுய்க்கு மாறு' என்றும் கூறினர்.

"அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே." (தனிப்பாடல்)

"உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே."
(திருமந்திரம், எ2ஈ)

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யுள்ளிருந் தோம்புகின் றேனே." (ஷி எஉஇ)

உடம்பானது வாழ்க்கை நெறியிற் செலுத்தும் சகடம் போன்றிருத்தலால், உடம்போடுகூடி வாழ்தலே உய்த்தல் என்றார். உடம்பைச் செலுத்துவது அல்லது இயக்குவது என்னும் பொருட்கரணியம் பற்றியே உயிர் என்ற சொல்லும் எழுந்தது. உய்—உயிர். 'பெற்றால்' என்னும் பாடவேறுபாடு பொருந்துவதன்று. பிறரெல்லாம் 'உண்க' என்றே பாடமோதினர். அப்பாடத்திற்கு இயற்சீர் வெண்டளை தட்டுதலின் அது பாடமன்மை யறிக. தமிழை ஆரிய அடிப்படையிற் கற்றவர், ஆய்தத்தை வடமொழி விசர்க்கம் போற் கெண்டு அது சிலவிடத்து ஒரு மாத்திரை கொண்ட உயிர்மெய்யாகவும் ஒலிக்கும் என்பர். அவர் அறியார்.

"மெய்யின் அளபே அரையென மொழிப." (கக)
"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே." (கஉ)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க. "குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூப்பாற் புள்ளியும்" (உ) ஏனை மூன்றும். ஆய்தம் ஒரோவழி காலமாத்திரையாகக் குறுகுமன்றி ஒருபோதும் ஒருமாத்திரையாக நீளாது.

'உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான." (சஅ)

என்னும் தொல்காப்பிய நூற்பாவை நோக்குக. சொல்வான் என்னும் சொல் ககக—ஆம் குறளிற் சொல்லுவான் என்னும், 'சொல்க' என்னும் சொல் ககக—ஆம் குறளிற் சொல்லுக என்றும், தலைக்கேற்ப விரிந்தவடிவில் நிற்றல் போன்றே, உண்க என்னும் சொல்லும் உண்ணுக என விரிந்து நின்றதென்க.

அற்றேல், "அற்று ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றுன் பொருள்வைப் புழி" (உஉசு)

"கற்றில னுயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை." (சகச)

"இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது." (ககஅசு)

என்னுங் குறள்களின் முதலடியில் இயற்சீரான மூன்றும் சீரும்

''வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்'' (கூசுகூ)

என்னுங் குறளின் ஈற்றடியின் முதற் சீரும் எங்ஙனந் தட்குமெனின், அவற்றிலெல்லாம் அடுத்துவரும் அஃது என்னுஞ்சொல் அது' என்றே, முதலில் இருந்திருக்கவேண்டுமென்றும் பிற்காலத்தில் வடநூல்வழித் தமிழ்ப்புலவரோ ஏட்டைக்கெடுத்த எழுத்தாளரோ அதை ஆய்தச் சொல்லாக மாற்றியிருத்தல் வேண்டுமென்றும் அறிந்து கொள்க. அல்லாக்கால்,

''அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு.'' (எச)
''ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.'' (உகக)
''கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை,'' (இஎ0)

என்னுங் குறள்களில் 'அது' என்னுஞ்சொல் நின்றிரா தென்க. மேலும்.

''வீழ்நாள் படாஅமை நன்றுற்றி னஃதொருவன்'' (கூஅ)
''அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்'' (சக)
''அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு'' (அ0),
''அழுக்கற் றகன்ற மில்லியஃ தில்லார்'' (கஎ0)
''ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்'' (ஊ0),
''தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்'' (உக)
''அவா வில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்'' (கூஅ),
''மனநலத்தி னாகு மறுமைமற் றஃதும்'' (சகஇ),
''மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்'' (இஇசு),
''கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்'' (இஎஉ),
''கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேல்'' (இஎஇ),
''உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லார்'' (இஇக),
''உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்'' (இப0)

என்னு மிடங்களிலெல்லாம் ஆய்தம் அரைமாத்திரையே கொண்டிருத்தலையும் நோக்குக.

இக்குறளால் அளவறிந்துண்ணவேண்டுமென்பது கூறப்பட்டது.

கூசஎ. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

(இ—ரை.) அற்றது அறிந்து—முன்னுண்டது செரித்த நிலைமையை அறிந்து; துவரப் பசித்து—முற்றப் பசிதபின்; மாறு

அல்ல கடைப்பிடித்துத் துய்க்க—உடற்கூறு பருவம் விருப்பம் காலம் இடம் முதலியவற்றொடு மாறுகொள்ளாதனவும், மணஞ்சுவை வலிமைகளால் மாறுகொள்ளாதனவுமான, உணவுகளைக் குறிக் கொண்டு உண்க.

'அற்றது போற்றி' (கூசஉ) என்றும், 'அற்றுளவறிந்து (கூசஈ) என்றும், முன்பு இருமுறை கூறியதோ டமையாது மீண்டும் இங்கு 'அற்ற தறிந்து' என்றது, செரிமானத்தின் இன்றியமை யாமையை வலியுறுத்தற் பொருட்டாம். ஆசிரியர் இதை முதன்மை யாகக் கொண்டதினாலேயே, இன்பத்துப்பாலில் உலகிற் சிறந்த இன்பத்தைக் கூறுமிடத்தும்,

''உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது.'' (கஉஉச)

என உவமமாகக் கூறியிருத்தல் காண்க. உண்டது செரித்த பின்பும் அதன் சுவையும் மணமும் சற்று நேரம் நிற்குமாதலின், 'துவரப்பசித்து' என்றார். பசித்தல் என்னுஞ் சினைவினை இங்கு முதல் வினையாக நின்றது. ஊதை பித்த கோழைகளை மிகுப்பனவும் குறைப்பனவுமாக உணவுகள் உடற் கூற்றொடும், இளமைக்குரிய வுணவுகளை முதுமையிலுண்பது பருவத்தொடும், அருவருப்பான தோற்றமும் நாற்றமுமுள்ள வுணவுகள் விருப்பத்தொடும், கோடைக் குரிய வுணவை மாரிநாளிலும் காலைக்குரிய வுணவை மாலையிலும் உண்பது பெரும்பொழுதும் சிறு பொழுதுமான காலத்தொடும், வெப்பநாட்டிற்குரிய வுணவைக் குளிர்நாட்டிலுண்பது இடத் தொடும், மாறுகொள்வனவாம். தேனும் நெய்யும் தம்முள் அள வொத்து நஞ்சாதல் போல்வன சுவை வலிமைகளால் மாறு கொள்வனவாம்.

அறுசுவைகளுள், துவர்ப்பையும் புளிப்பையும் ஊதைக் கூற் றொடும், உவர்ப்பையும் கைப்பையும் பித்தக் கூற்றொடும், இனிப்பை யும் கார்ப்பையும் கோழைக் கூற்றொடும், தொடர்புபடுத்திக் கூறுவர் மருத்துவர். ஒரே சுவையுள்ள காய்கனிகள் நேர்மாறான குணஞ் செய்வதாலும்; ஒரே கனி வேறுபட்ட வளர்ச்சி நிலையிலும் வேறு பட்ட நிலத்தாலும் வேறுபட்ட காலத்தாலும் சுவை வேறுபடுதலா லும், சுவையை மட்டும் நோக்காது பொருளையும் நோக்கி, ஏற்பதும் ஏற்காததும் அறிந்து கொள்வதுந் தள்ளுவதுஞ் செய்தல் வேண்டும். அயலிடங்களில் உடற்கூறு முதலியவற்றொடு மாறுகொள்ளும் உணவுகளை உண்ண நேரினும், அவற்றிற்குரிய மாற்றுக்களை உடனே உண்டுவிடுவது நோய் வராமல் தடுக்கும் முற்காப்பாம். ஒவ்வோருணவுப் பொருளிலும் சிற்றளவாகவோ பேரளவாகவோ

ஒவ்வொரு குற்றமிருந்தாலும், ஒருவ ருற்கொத்தது இன்னொருவ ருடற் கொவ்வாமையாலும், பித்தத்தையுங் காய்ச்சலையும் நீக்கி னும் தாது வளர்ச்சியைக் குறைக்கும் இஞ்சி சுக்குபோல ஒன்றிற் காவது இன்னொன்றிற் காகாமையானும், அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாதலாலும், எல்லாவற்றின் இயல்பையும் உரையள வையால் அல்லது பட்டறிவாலறிந்து, எல்லா நிலைமைக்கும் ஏற்ப உடம்பிற்கொத்த வுணவை அளவாகவுண்டு நோயின்றி இன்புறுக என்பார். 'கடைப் பிடித்து மாறல்ல துய்க்க' என்றார். இக்குற ளால் ஒத்த வுணவை நன்றுய்ப் பசித்த பின்னரே யுண்ணவேண்டு மென்பது கூறப்பட்டது.

கூசடு. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

(இ—ரை.) மாறுபாடு இல்லாத உண்டி-உடற்கூறு முதலிய வற்றோடு மாறுகொள்ளாத உணவை; மறுத்து உண்ணின்—ஒருவன் தன் விருப்பத்திற்கு இடங்கொடாது மேலும் இரு கவளத்திற்கு வயிற் றில் இடமிருக்குமளவு குறைத்து உண்பானாயின்; உயிர்க்கு ஊறுபாடு இல்லை—அவனுயிர்க்கு நோயினால் துன்பமுறுதல் இராது.

செரிமானத்தைப்போன்றே ஒத்த வுணவை யுண்பதும் இன்றி யமையாத தாதலின், 'மாறல்ல' என்று மேற்கூறியதையே இங்கு 'மாறுபாடில்லாத வுண்டி' என்று வழிமொழிந்தார். மறுத்தலென் பது நிரம்பவுண்ணை வேண்டுமென்னும் ஆசைக்கிணங்காமை. 'உண் ணின்' என்பது அதன் அருமை தோன்ற நின்றது. கூகூ—ஆம் குறளில் 'அளவறிந் துண்க' என்றதனை இங்கு 'மறுத்துண்க' என வரையறுத்தார். ஊறு என்பது நேர்ச்சி. அது இங்கு வழக்குப் பற்றித் துன்பநேர்ச்சியைக் குறித்தது. இங்குக் குறித்த துன்பம் நோய். உறுவது ஊறு; படுவது பாடு என்பது போல. துன்ப முறுவது உயிரேயாதலின் அதன்மேல் வைத்துக் கூறப்பட்டது. ஒத்த வுணவையும் ஒரு சிறிது குறைத் துண்டல் நன்றென்பதாம்.

கூசஊ இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

(இ—ரை.) இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல்—குறைத்துண்பதன் நன்மையைப் பட்டறிவாலறிந்து அம்முறையை நெடுகலும் கடைப்பிடிப்பவனிடத்து இன்பம் நிலைத்து நிற்பதுபோல்; கழிபெரு இரையான்கண் நோய்நிற்கும்—மிகப்பேரளவாக வுண்பவ னிடத்து நோய் நிலைத்து நிற்கும்.

இழிவென்றது இன்றியமையாத அளவிற்கு மேற்பட்டதின் நீக்கத்தையே. இன்பமாவது உணவுச்சுவை மிகுதலும், எளிதாயியங்கி வினை செய்தலும், ஊதை பித்த கோழைகள் தத்தம் அளவில் நிற்றலால் ஒருவகை நோயுமின்மையும், ஏனையின்பங்களையும் நுகர்தலும், மனமகிழ்ச்சியுமாம். 'கழிபெரு' மீமிசைச் சொல். 'இரை' யென்பது விலங்கினுந் தாழ்ந்த பறவை யூரிகளின் உணவைக் குறிக்குஞ் சொல்லாதலால், இங்கு இழிவு குறித்து நின்றது. 'கழிபேரிரையான்' என்பதை மிடாவிழுங்கி என்பது போலக் கொள்க. 'நோய்' வகுப்பொருமை. அளவுணின் நன்மையும் மிகையூணின் தீமையும் இங்கு ஒருங்கு கூறப்பட்டன. மிகையூண் என்பது அளவு மிகுதியையன்றி வேளை மிகுதியையுங் குறிக்கும்.

ஒருபொழு துண்பானே லகியொரு நாளில்
இருபொழு துண்பான்நன் ருகி—வருபொழுது
மும்பொழு துண்பானேல் நோகியாம் நாற்பொழுது
கப்புவான் சாகி கடிது.

குசை. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னேயள வின்றிப் படும்.

(இ—ரை.) தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின்—ஒருவன் தன் உடற்கூற்றையும் அதற்கேற்ற வுணவையும் அதையுண்ணுங் காலத்தையும் அறியாது, தான் விரும்பிய வுணவுகளையெல்லாம் விரும்பியபொழுதெல்லாம் தன் பசியளவிற்கு அல்லது செரிமான ஆற்றலுக்கு மேற்பட்டுப் பேரளவாக உண்பானாயின்; நோய் அளவு இன்றிப்படும்—அவனிடத்துப் பல்வகை நோயும் தோன்றி வளரும்.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள் மேற்குறள்களிற் கூறப்பட்டவை. பசியெடுத்தல் தீயெரிதல் போன்றும் உண்டது செரித்தல் தீயால் எரிக்கப் படுதல் போன்றும் இருத்தலால், பசி அல்லது செரிமான ஆற்றல் வயிற்றுத்தீ யெனப்படும். அவ்வழக்கு நோக்கித் 'தீயளவன்றி' என்றார். ''வயிற்றுத் தீத் தணிய'' (என்பதுங் காண்க.)

''கனல்வாதை வந்தெய்தின்'' (தாயு—சச்சிதா. இ) என்று தாயுமானவரும் கூறுதல் காண்க. 'நோய்' வகுப்பொருமை. இக்குறளால் செரிமான ஆற்றலளவிற்குத் தக்கவாறு உண்ணவேண்டுமென்பது கூறப்பட்டது. 'தெரியான்' எதிர்மறை முற்றெச்சம்.

கூசஅ. நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

நோய்நாடி—மருத்துவன் நோயாளியின் சொல்லினாலும் நாடியினாலும் பிற வுடற்குறிகளாலும் சிறுநீர் கழிபொருள்களின் இயல்பினாலும் நோய் இன்னதென்று ஆய்ந்து துணிந்து; நோய் முதல் நாடி—பின்பு அது உண்டான காரணியத்தை ஆராய்ந்தறிந்து; அது தணிக்கும் வாய்நாடி—அதன்பின் அந்நோயைப் படிப்படியாக நீக்கும் வழியை ஆய்ந்துகொண்டு; வாய்ப்பச் செயல்—அது வெற்றியாக நிறைவேறுமாறு கையாள்க.

இவ்வதிகாரத்தின் முதற்குறளில் மூவகை உடற்கூறும் பற்றிய நோய்கள் உண்டாகும் வகையைப் பொதுப்படச்சொல்லி, அதன்பின் உணவுவகையில் நோய் வாராமல் தடுக்கும் முற்காப்பை ஆறு குறள்களாற் கூறி, பின்பு எஞ்சிய முக்குறள்களில், உணவுத் தவற்றாலும் பிறவகையாலும் நோய் வந்தவிடத்து மருத்துவன் செய்யும் பண்டுவ முறையைப் பற்றிக் கூறுகின்றார்.

சித்த மருத்துவத்தில் நோய்நாடும் சிறந்தமுறை நாடி பார்த்தலே. அது தமிழராலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடத்தினின்றே ஆரிய மருத்துவரும் ஏனை மருத்துவரும் அதைக் கற்றுக் கொண்டனர். அதை இங்கு வெளிப்படையாகக் கூறுவிடினும் 'நோய்நாடி', 'நோய் முதல் நாடி', 'வாய்நாடி' என்று மும்முறை 'நாடி' என்னுஞ் சொல்லை ஆள்வதால் முந்நாடியும் சிறப்பாகவுணர்த்தினர் என்றே கொள்ளல் வேண்டும். இது உடம்பொடுபுணர்த்தல் என்னும் உத்திவகையாம். நாடி பேசும் வேளையும் நேரமும் வருமாறு:

நாடி	வேளை	நேரம்	
வாதை (வளி)	பகலும் இரவும்	ஈ—ச	மணி
பித்தம்	,,	ச—உ	,,
கோழை (ஐ)	,,	உ—க	,,

இம்மூன்றும் இம்முறையில் நடப்பதனாலேயே "வளி முதலா எண்ணிய மூன்று" என்றார் ஆசிரியர். இவற்றின் ஒப்புநோக்கிய அளவு முறையே ஒன்றும் அரையும் காலும் ஆகும்.

மேலை மருத்துவம் நூற்கல்வியாலும் கருவித் துணைகொண்டும் செய்யப்படுவதால், அது பலராலும் பயிலப்படுவது. நாடி பார்த்தல் தெய்வத்தன்மையான நுண்ணருங்கலையாதலால், சித்த மருத்துவம்

அதற்கென்று இறைவனுற் படைக்கப்பெற்ற ஒரு சிலராலேயே பயிலப்படும் என வேறுபாடறிக.

நோய்க்காரணியம் உணவு, உடை, செயல், தொழில், வாழ் நிலம், வானிலை (weather) நச்சுக்கடி முதலியனவாகப் பலவகைப் படும். அவற்றை ஆய்வதால் நோயும் அதை நீக்கும் வாயும் அறியப்படும். நோய் நீக்கும் வகைகள் உண்பித்தல், முகர்வித்தல், பூசுவித்தல், அணிவித்தல், குளிப்பித்தல், அரத்தங்கழிதல், அறுத்தல், சுடுதல், நம்பக முறுத்துதல், ஆசை தீர்த்தல் முதலியன வாகப் பல திறத்தன. மருத்துவப் பண்டுவத்தோடு அறுவைப் பண்டுவமும் தமிழ் மருத்துவத்திலுண்மை, கண்ணப்ப நாயனார் காளத்தி நம்பி படிமைக்குக் கண்ணிடந் தப்பியதினுலும்,

"உடலிடைத் தோன்றிற் றொன்றை யறுத்தது னுதிர மூற்றிச்
சுடலுறச் சுட்டு வேரோர் மருந்தினுல் துயரம் தீர்வர்"
(கம்பரா. கும்ப. கசசு)

"ஆரார் தலைவணங்கார் ஆரார்தாம் கையெடார்
ஆரார்தாம் சத்திரத்தில் ஆறுதார்—சீராரும்
தென்புலியூர் மேவும் சிவனருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்." (கம்பர் தனிப்பாடல்,
"கருவியிட் டாற்றுவார்—புண்வைத்து மூடார் பொதிந்து"
(நீதிநெறி. சுடு) என்பனவற்றுலும் அறியப்படும். "ஊனுக்கு ஊனிடுக" என்னும் மருத்துவ நெறிமுறையால், பண்டைத் தமிழ் மருத்துவத்தில் ஒட்டறுவை (Plastic Surgery) இருந்தமையும் அறியப்படும்.

உணவு வகைபற்றித் தமிழ மருத்துவம் மரக்கறி மருத்துவமும் புலால் மருத்துவமும் என இருதிறப்படுமேனும், திருவள்ளுவர் தழுவியது மரக்கறி மருத்துவமே. புலாலுணவில் மரக்கறியுணவுங் கலந்திருத்தல்போல், புலால் மருத்துவத்தில் மரக்கறி மருத்துவமுங் கலந்துள்ளதென்பதை அறிதல் வேண்டும்.

நம்பக மருத்துவம் (Faith Cure) மந்திரித்தல், குழையடித்தல், மந்திரம்போல் ஏதேனுமொரு சொல்லை வாய்க்குட் பன்முறை சொல்லுதல், இறைவனை வேண்டல், ஏதேனுமொன்றை உண்பித் தல், ஏதேனுமொன்றைப் பூசுதல் அல்லது அணிவித்தல், ஏதேனு மொன்றைச் சொல்வித்தல் அல்லது நினைப்பித்தல், ஏதேனுமொன் றைச் செய்வித்தல், ஏதேனுமோரிடத்திற்குச் செல்வித்தல், ஏதேனு மொரு பொருளைக் காணச் செய்தல் முதலிய பல்வேறு வழிகளால் நோயாளிக்கு நோய் நீங்கிவிடுமென்னும் நம்பிக்கை யூட்டுதலாம்.

"மணிமந்திர மாதியாம் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்க விலீயோ"

என்ருர் தாயுமான அடிகளும்.

நோய்களெல்லாம் உடல்நோய், உளநோய் என இருபாற் படும். தீவினைக் கேதுவான தீயவுள்ள மல்லாத தூயவுள்ள நிலை யில் நேரக்கூடிய உளநோய்களுள், சூடு முற்றிய பித்தத்தினலும் அளவிற்கு மிஞ்சிய மூளையுழைப்பினலும் அளவிறந்த காதலாலும் உண்டாகும் கோட்டி அல்லது கிறுக்கு என்னும் பித்தியம், மருத்து வத்தினல் நீக்கப்படும்; ஆயின், பெற்றதாயை விட்டுப் பிரிந்த பிள்ளையின் ஏக்கமும், ஒரு குமரியின்மேல் ஒரு குமரன் கொண்ட உண்மையான ஆழ்ந்த காதலும், அவற்றிற்குரிய ஆசைப்பொருளை அடைந்தாலன்றி நீங்கா. "தூங்கின பிள்ளை பிழைத்தாலும் ஏங்கின பிள்ளை பிழைக்காது."

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து." (குறள். ௧௧0உ)

ஒரு பெண்ணின்மேல் வைத்த ஆசையால் நலிவுற்று நாள் தோறும் மெலிவுற்ற ஓர் இளைஞனின் காதலியை, ஒரு மருத்துவன் பின்வருமாறு நாடிபார்த்துக் கண்டுபிடித்தான். அவ்விளைஞன் வாழ்ந்த நகரப்பகுதிகளின் பெயர்களை ஒவ்வொன்ருகச் சொல்லி வருங்கால் அவன் காதலி குடியிருந்த பகுதியைச் சொல்லும் போதும், அப்பகுதியிலுள்ள தெருப்பெயர்களைச் சொல்லிவருங்கால் அவள் குடியிருந்த தெருப்பெயரைச் சொல்லும்போதும், அத்தெருவி லுள்ள வீட்டு எண்களைச் சொல்லிவருங்கால் அவள் குடியிருந்த வீட்டு எண்ணைச் சொல்லும் போதும், அவ்வீட்டிலுள்ள ஆட்களின் பெயர்களைச் சொல்லிவருங்கால் அவள் பெயரைச் சொல்லும் போதும், அவன் நாடி அதிகமாய்த் துடித்தது.

இங்ஙனம் பல்வேறு வழிகளெல்லாம் அடங்குதற்கு, 'அது தணிகும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்ருர் பல்வேறு நஞ்சு களை மாற்றும் அல்லது வெளியேற்றும் நஞ்சு மருத்துவமும், பேய்க் கோளாறுகளை நீக்கும் பேய் மருத்துவமும் தனிப்பட்ட மருத்துவத் துறைகளாம்.

௧0௨. உற்ருர் உளவும் பிணியளவுங் காலமும்
கற்ருன் கருதிச் செயல்.

(இ—ரை.) கற்ருன்—சித்த மருத்துவத்தைக் கற்றவன்; உற்ருன் உளவும் பிணி அளவும் காலமும் கருதிச்செயல்—நோயா

ளியின் அளவையும் அவனது நோயின் அளவையும் காலத்தின் நிலைமையையும் நோக்கி, அவற்றிற் கேற்றவாறு தன் நூலறிவையும் பட்டறிவையும் பயன்படுத்தி மருத்துவஞ் செய்க.

'உற்றான்' என்றது பிணியுற்றவனை. பின்னுற் பிணியென்று வருகின்றமையின் உற்றானென்று கூறியொழிந்தார். நோயாளியளவு: உடற்கூறு, பருவம், உடல்வலிமை, உளவலிமை ஆகியவற்றின் அளவு. நோயளவு: வன்மை மென்மை யென்னும் தாக்கல் வேறுபாடும், தொடக்கம் இடை முதிர்ச்சி என்னும் நிலை வேறுபாடும், இயல்வது இயலாதது ஐயுறவானது என்னும் நிலைமை வேறுபாடும் முதலியன. காலம்: கோடை மாரி முதலிய பெரும் பொழுது வேறுபாடும், காலை மாலை முதலிய சிறுபொழுது வேறுபாடும், பகல் இரவு என்னும் நாட்பகுதி வேறுபாடும், இயல் திரிவு என்னும் வானிலை வேறுபாடுமாம். இவையெல்லாவற்றையும் எண்ணிச்சமையுத்திற்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு செய்க என்பார் 'கருதிச் செயல்' என்றார்.

'கற்றான்' என்பதற்கு ஆயுள்வேதத்தினைக் கற்ற மருத்துவன் என்றுரைத்ததும், நோயாளியை ஆதுரன் என்றதும், நோய்க்குச் சாத்தியம் அசாத்தியம் யாப்பியம் என்று சாதிவேறுபாடு கூறியதும், பரிமேலழகரின் ஆரியக் குறும்புத் தனத்தையும் வடமொழி வெறியையுங் காட்டுவனவாம்.

கூடுo. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலைந் கூற்றே மருந்து.

(இ—ரை.) மருந்து—நோய்க்குச் செய்யும் மருத்துவம்; உற்றவன்—நோயாளி; தீர்ப்பான்—மருத்துவன்; மருந்து—அவனுக்குக் கருவியாகிய மருந்து அல்லது மருத்துவமுறை; உழைச்செல்வான்—அவனுக்குத் துணைவனையிருந்து நோயாளியிடம் சென்று மருந்து கொடுப்பவன்; என்று அப்பால் நால் கூற்றே—என்று அப்பகுதிப் பட்ட நான்கு திறத்ததே.

உற்றவன் திறமாவன: நோய்நிலை யுணர்த்தல், மருத்துவன் சொற்கடைப்பிடித்தல், பொருளீதல், மருத்துவத்துன்பம் பொறுத்தல் என்பன. நோய் தீர்ப்பான் திறமாவன; நோயாளியிடத் தீரக்க முடைமை, நோய் நீக்குங் குறிக்கோளுடைமை, பரந்த மருத்துவக் கல்வி, மதிநுட்பம், நீடிய பட்டறிவு, பேராசையின்மை என்பன. இவற்றுள் பட்டறிவின் இன்றியமையாமை "இளங்கணியன் முது மருத்துவன்," ("வாலிப சோதிடன் வயோதிக வைத்தியன்.")

"ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை மருத்துவன்" "ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை மருத்துவன்" என்பவற்றால் அறியப்படும். ஆயிரம் வேர் என்றது வேரின் வகைபலவு யன்றித் தொகையை யன்று, "நோயாளி ஊழாளி (விதியாளி) யாலல் மருத்துவன் (பரிகாரி) பேராளி." ஆதலால், ஆயிரம்பேரைக் கொன்றவன் என்பதாற் பெரிதும் இழுக்கும் இழிவும் இல்லையென்க மருந்தின் திறமாவன: உடற் கூற்றோடொத்தல், ஊறு செய்யாமை, ஆற்றலுடைமை, எளிதிற் பெறப்படுதல் என்பன. உழைச்செல்வான் திறமாவன: மருத்துவன் சொன்ன வண்ணஞ் செய்யுந் திறமை, நோயாளியிடத் தன்புடைமை, இன்சொலனாயிருத்தல், உண்மையுடைமை என்பன. இவையெல்லாங் கூடியவழி யல்லது நோய் தீராமையின், 'அப்பானுற் கூற்றே மருந்து' என்று தேற்றேகாரங் கொடுத்துக் கூறினர். 'உற்றவன்' 'தீர்ப்பான்' என்னும் இரண்டிற்கு முரிய செயப்படு பொருள் முந்திய குறளினின்று வந்ததும் உழைச்செல்வான் மருந்து கொடுப்பவனை மட்டுமன்றிச் செய்பவனுகவுமிருந்தால், மேலை முறை மருத்துவமனையிலுள்ள கலக்குநரினும் (Compounder) மருத்துவ அறிவாற்றலிற் சிறந்தவனுவன்.

'அப்பானுற் கூற்று' என்பதற்கு "நானகு பகுதியையுடைய நான்கு திறத்தது." என்று உரையும், "நான்கென்னு மெண் வருகின்றமையின், அது நோக்கி 'அப்பா' லென்றெழுந்தார்." என்று சிறப்பும் கூறினர் பரிமேலழகர். அது பொருந்தாமை,

"அவற்றுள்
அ இ உ எ ஒ என்னும்
அப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப." (கூ)

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்
அப்பா லேழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத்தென்ப," (ஈ)

என்னும் தொல்காப்பிய நூற்பா யாப்பை நோக்கி யுணர்க. இனி, இவ்வதிகாரம் முழுதும் ஆயுள்வேதம் என்னும் ஆரிய மருத்துவ நூன்முறையைத் தழுவியதாகப் பரிமேலழகர் ஆங்காங்கு உரைத்திருப்பது, உண்மைக்கு நேர்மாறும்: ஆரியர் வருமுன் வடநாவலத்திலும் பனிமலைவரை தமிழரும் திரவிடருமே மிகுதியாய்ப் பரவியிருந்தனரென்றும், வடநாட்டுச் சித்த மருத்துவமே பிற்காலத்தில் ஆயுள்வேதமெனப் பெயர் மாற்றப்பட்ட தென்றும், இது பழந்தமிழசையே இன்று பாகுபாடும் குறியீடுகளும் மாற்றப்பட்டுக் கருநாடக சங்கீதம் என வழங்குவது போன்ற தென்றும், அறிந்துகொள்க.

உறுப்பியல் நட்புப் பகுதி முற்றிற்று

உறுப்பியல்—குடி

இனி, அரசியலுறுப்புக்கள் ஏழுள் இறுதியான குடியைப்பற்றிப் பதின்மூன்றதிகாரங்களாற் கூறத் தொடங்கி; முதற்கண் குடிமை கூறுகின்றார்.

அதி. கூசு—குடிமை

அஃதாவது, அரசனுடைய குடிகளுள் அறிவாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்த சரவடியில் அல்லது குடும்பத்திற் பிறந்தாரது தன்மை. 'சிறப்புடைப் பொருளை மூற்படக் கிளத்தல்' என்னும் முறைமையாலும், பிறருங் கண்டு பின்பற்றற் பொருட்டும், இது முன் வைக்கப்பட்டது.

"உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாததாகலின், அச்சிறப்புப் பற்றி இது முன்வைக்கப்பட்டது. என்று வேண்டாதும் முரண்படவும் கூறியுள்ளார் பரிமேலழகர். ஆரியக் குலப்பாகுபாடு தமிழ்ப் பாகுபாட்டின் திரிப்பேயாயினும், நிறத்தை அடிப்படையாகக் கொண்டதும் ஏற்றத்தாழ்வுறுத்தப்பட்டதுமாகும். ஆதலால் உயர்குடிப்பிறப்பு நாலாம் வருணத்தானை சூத்திரனுக்கு இருக்க முடியாது. தமிழ்க் குலப்பாகுபாடு கல்வி, காவல், வணிகம், உழவு என்னும் பரந்த தொழிற்பகுப்புப் பற்றிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெரும்பால் அல்லது வகுப்பே யாகும் "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்' என்று (புறம். கஅக) ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் கூறியது இக்கருத்துப்பற்றியே.

"கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே."

என்று கூறியதும், செல்வத்தாலும் அதிகாரத்தாலும் உயர்ந்த அரசனும் அவற்றில் தாழ்ந்த அல்லது அவையில்லாத வேளாளன் அல்லது தொழிலாளி மகனுன புலவனிடம் அல்லது ஆசிரியனிடம் கற்பது பற்றியே. "தோணி யியக்குவான்" என்னும் நாலடியார்ச் செய்யுளையும் (கூக) நோக்குக.

கூடுக. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(இ—ரை.) செப்பமும் நாணும் ஒருங்கு—ஒழுக்க நேர்மையும் பழிக்கு நாணுதலும் ஒருசேர; இல் பிறந்தார்கண் அல்லது இயல்பாக

இல்லை—குடிப்பிறந்தாரிடத் தல்லது பிறரிடத்து இயற்கையாக வாகா.

இங்கு இல் என்றது சேக்கிழார் குடிபோலுஞ் சரவடியை அல்லது சேர சோழபாண்டியர் குடிபோலுங் கொடிவழியை.

" நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி" (தொல். கள. உக)

என்பதில் 'இல்' கொடிவழியையும் 'குடி' சரவடியையும், 'பிறப்பு' குடும்பத்தையும், 'சிறப்பு' அரசாளற்குரிமையையும் குறிக்கும். செப்பமாவது கருத்து சொல் செயலாகிய முக்காரணமும் தம்முள் முரணுத செம்மை. நாணென்பது பழிபளகம் (பாவம்) பற்றிய அச்சமும் அருவருப்பும் கொண்ட வெட்கம். இவை நல்ல குடிப் பிறந்தார்க்கு இயற்கையாக அமையும். பிறர்க்கு எத்துணைக் கற்பிப் பினும் அமையா.

கூடுஉ. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(இ—ரை.) குடிப்பிறந்தார்—நல்ல குடியிற் பிறந்தவர்; ஒழுக் கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார்—ஒழுக்கம் மெய்ம்மை பழிநாணல் ஆகிய முத்திறத்தும் ஒருபோதும் தவறார்.

ஒழுக்கம் முதலிய மூன்றும், முறையே, மெய் மொழி மனம் என்னும் முக்காரணம் பற்றியன.

கூடுஊ. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(இ—ரை.) வாய்மைக் குடிக்கு—எக்காலத்துந் திரிபில்லாது ஒரே சரியாய் ஒழுகும் உயர்குடிப் பிறந்தார்க்கு; நகை ஈகை இன் சொல் இகழாமை நான்கும்—இரவலரும் இரப்போரும் வறிய வுற வினரும் தம்மையடைந்தபோது, முகம் மலர்தலும் இயன்றன கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் தாழ்வாகக் கருதாமையும் ஆகிய நான்கு குணமும்; வகை என்ப—இயல்பாக வுரிய கூறென்பர் அறிந்தோர்.

எக்காலத்தும் தவறாது ஒழுகுதலும் வழங்குதலும் பற்றி வைகையைப் "பொய்யாக் குலக்குடி" (சிலப். புறஞ்சேரி கஎ0) என்றதுபோல, நற்குடியை 'வாய்மைக்குடி' என்றும், இல்லாரை இல்லாளும் ஈன்றாளும் உட்பட எல்லாரும் எள்ளுவராகலின்,

இகழாமையைக் குடிப்பிறந்தார்க்குச் சிறப்பாக்கியும்; கூறினூர். 'குடி' ஆகுபெயர். இரவலராவார் புலவர் பாணர் கூத்தர் முதலியோர். "நான்கின் வகையென்பது பாடமாயின், வாய்மைக் குடிப் பிறந் தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்கான் உளதாமென்றுரைக்க" என்று பரிமேலழகர் கூறியிருப்பது பொருத்தமே இம்மூன்று குறளாலும் குடிப்பிறந்தாரது இயல்பு கூறப்பட்டது.

கூடுஅ. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

(இ—ரை.) குடிப்பிறந்தார்—உயர்குடிப் பிறந்தவர் அடுக்கிய கோடி பெறினும்—பலவாக அடுக்கிய கோடிக்கணக்கான பொன் னைப் பெறுவதாயிருப்பினும்; குனறுவ செய்தல் இலர்—தம் ஒழுக்கங் குன்றுவதற் கேதுவான இழிசெயல்களைச் செய்யார்.

செல்வம் பொதுவாகக் காசளவில் மதிக்கப்படுவதனாலும், நன்கொடையாவும் கையூட்டாகவும் கொடுக்கப்பெறுவது பெரும் பாலுங் காசேயாதலாலும், காசுகளில் உயர்ந்தது பொற்காசாத லாலும், இங்குக் கோடி என்பதற்குக் கோடிப் பொன் என்று உரைக்கப்பட்டது. பொன் என்றது உயர்ந்த பொற்காசை. 'கோடி', 'பொன்' என்பன ஆகுபெயர்கள். 'அடுக்கிய கோடி' என்று பொதுப்படச் சொன்னதனால், தாமரை (கோடா கோடி), சங்கம் (பத்துக் கோடா கோடி) பதும (இலக்கங் கோடிக் கோடா கோடி) முதலிய மாபேரெண்களெல்லாம் தழுவப்பெறும் உம்மை உயர்வு சிறப்போடு கூடிய எச்சம்.

கூடுடு. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

(இ—ரை) பழங்குடி—தொன்று தொட்டு வருகின்ற நற்குடி யிற் பிறந்தார்; வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும்—தாம் கொடுக் கும் பொருள் சுருங்கிப்போன விடத்தும்; பண்பின் தலைப்பிரிதல் இன்று—தம் கொடுக்குந் தன்மையினின்று நீங்குதல் இல்லை.

கொடைத்தன்மை தலைமுறை தோறும் ஆழவேரூன்றுதலால், பழங்குடிக்கு அது நீங்காத பிறவிக் குணமாய்ப் போய்விடுமென்பது கருத்து. உம்மை இறந்தது தழுவிய எச்சம். "தொன்று தொட்டு வருதல் சேரசோழபாண்டிய ரென்னுற்போலப் படைப்புக்காலந் தொ ங்கி மேம்பட்டு வருதல்" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பாராட்டத்தக்கது.

‘ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளும்
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றதொரு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலுலும்
இல்லை யெனமாட்டா ரிசைந்து.’’ (நல்வழி ஊ)

கூடுகூ. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்றூ
குலம்பற்றி வாழ்துமென் பார்.

(இ—ரை.) மாசு அற்ற குலம்பற்றி வாழ்தும் எண்பார்—வசை யற்று வருகின்ற எங்குடி மரபோ டொத்து ஒழுகக் கடவேம் என்னும் ஊட்கை கொண்டவர்; சலம்பற்றிச் சால்பு இல செய்யார்—வறுமை வந்தவிடத்தும் வஞ்சனையைக் கையாண்டு சான்றாண்மையொடு பொருந்தாத செயல்களைச் செய்யார்.

ஊட்கை ஊணுங்கொள்கை. இம்மூன்று குறளாலும் குடிப்பிறந் தார் வறுமையுற்றபோதும் தங்குடிப் பண்பிற் குன்றாரென்பது கூறப் பட்டது.

கூடுள. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து

(இ—ரை.) குடிப் பிறந்தார்கண் குற்றம்—உயர்குடிப் பிறந்தவ ரிடத்துள்ள குற்றம்; விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும்—வானத்தின்கண் வெண்ணிலாவிலுள்ள களங்கம்போல் எல்லார்க்குந் தெரியுமாறு உயர்ந்து விளங்கித் தோன்றும்.

விசும்பு மதி மறு என்னும் மூன்றும், முறையே, குடி குடிப்பிறந் தார் குற்றம் என்னும் மூன்றற்கும் உவமமாம். குடியின் உயர்விஞ லும், வெண்ணிலாப் போன்ற குடிப் பண்பொடு பொருந்தாமை யாலும், கறைபோலுங் குற்றம் உலகெங்கும் விளங்கித் தோன்று மென்பதாம்.

கூடுஅ. நலத்தின்க ணூரின்மை தோன்றி னவனெக
குலத்தின்க ணேயப படும்.

(இ—ரை.) நலத்தின்கண் நார் இன்மை தோன்றின்—குடிச் சிறப்புடையவனுய்ப் பிறந்தவனிடத்தில் அன்பின்மை காணப்படின்; அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்—உலகம் அவனை அக்குடிப் பிறப்புப் பற்றி ஐயுறவு கொள்ளும்.

நாரின்மையாவது ''நகையீகையின்சொ லிகழாமை நான்கும்' இன்மை 'தோன்றின்' என்பது உண்மையான உயர்குடிப் பிறப்பில் நாரின்மை பெரும்பாலுந் தோன்றுமையைக் காட்டி நின்றது. நிற்கவே, நாரின்மைத் தோற்றம் உயர்குடிப் பிறப்பின்கண் ஐயுறவை யுண்டுபண்ணுவதும் இயல்பாயிற்று. நலம், குலம் என்பன ஆகுபொருளன. உலகம் என்னும் எழுவாய் அவாய்நிலை யால் வந்தது. 'ஐயப்படல்' என்பது பாடமாயின் ஐயப்படுக என ஏவலாக்கி யுரைக்க. இவ்விரு குறளாலும் குடிப்பிறந்தாரின் தன்மை திரிந்தவிடத்து உண்டாகும் இழிவு கூறப்பட்டது.

கூடுகூ. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(இ—ரை.) நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்—நிலத்தின் இயல்பை அதில் முளைத்த விதையின் முளை தெரிவிக்கும்; குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல் காட்டும்—அதுபோல குலத்தின் இயல்பை அதிற் பிறந்தவர் உரைக்குஞ் சொல் தெரிவிக்கும்.

''விளையும் பயிர் முளையில் தெரியும்''. அதனால் அது நன்னிலத் தில் முளைத்தமை அறியப்படும். முளை நலமே விளை நலத்தைத் தெரிவித்தல்போல், மக்களின் சொன்னலமே அவர் செயல்நலத் தையும் தெரிவிக்கும். ''மாற்றமுரைக்கும் வினைநலம்.'' (நான் மணி. சஅ) 'கிடந்தமை' இருந்த நிலைமை. நிலம், குலம், கால், சொல் என்று பொதுப்படச் சொன்னமையால், முளை நலமின்மை நிலத்தின் புன்மையையும் சொன்னலமின்மை குலத்தின் இழிவை யும் காட்டும் என்பதும். பெறப்படும். ''குலத்தளவே யாகுங் குணம்'' என்றார் ஔவையார். குலத்தின் இயல்பை என்பது அவாய் நிலையால் வந்தது. இக்குறளில் உள்ள அணி எடுத்துக் காட்டுவமை.

கூகூ. நலம்வேண்டி ஞணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

(இ—ரை.) நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும்—ஒருவன் தனக்கு இம்மை மறுமை நன்மைகளை வேண்டுவானுயின், தான் நாணமுடையவனு யிருத்தல் வேண்டும்; குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக—தன் உயர்குடிப் பிறப்பைக் காத்துக் கொள்ள விரும்புவானுயின், பெரிய செல்லாரிடத்தும் பணிவுடைய வனுயிருத்தல் வேண்டும்.

இம்மை நன்மை புகழும், மறுமை நன்மை அறப்பயனுமாம். 'வேண்டும்' என்பது கட்டாயம் பற்றிய நெறியிடு (விதி). 'நாண்' என்றது கருமத்தால் நாணுதலை (குறள். ஈபகக). ஐங்குரவர், அந்தணர், சான்றோர், அடியார் முதலிய அனைவரும் அடங்க 'யார்க்கும்' என்றார். 'பணிவு' இருக்கை விட்டெழுதலும் எதிர் செலவும் கை குவிப்பும் முதலியன. இவ்விரு குறளாலும் உயர் குடிப் பிறப்பைக் காத்துக் கொள்ளும் வகை கூறப்பட்டது.

அதி. கூஎ—மானம்

அஃதாவது, உயர்குடிப் பிறப்பிற்குரிய பண்புகளுள் ஒன்றான தன் மதிப்பு. அது ஒருபோதுந் தன் நிலைமையினின்று தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்தவிடத்து வாழாமையுமாம். இது உயர் குடிப் பண்புகட்கு அடிப்படையாதலின் முற்கூறப்பட்டது.

கூகூக. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

(இ—ரை.) இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்—செய்யாத விடத்துத் தாம் வாழமுடியாத அளவு முதன்மை வாய்ந்தன வெனினும்; குன்ற வருப விடல்—தம் குடிப் பிறப்புத் தாழ்வதற் கேதுவான இழி செயல்களைச் செய்யா தொழிக.

அமையாமை உயிரொடு பொருந்தாமை; அஃதாவது இறத்தல். குடிப்பிறப்பு என்பது அதிகார முறையால் வந்தது. "இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க வென்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி, அவை செய்யற்க வென்பதாம்" என்று பரி மேலழகர் இங்குக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதாம். அந்த அளவிற்கு வள்ளுவர் தமிழவறம் வடவர் ஆரிய வறத்தை வென்றிருப்பது கவனிக்கத் தக்கது. உம்மை உயர்வு சிறப்பு.

கூகூஉ சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

(இ—ரை.) சீரொடு பேராண்மை வேண்டுபவர்—புகழொடு மானத்தை நிலைநிறுத்துதலை விரும்புபவர், சீரினும் சீர் அல்ல செய்யார்—புகழைச் செய்யுமிடத்தும் தம் குடிப்பிறப்பிற் கொவ்வாத இழி செயல்களைச் செய்யமாட்டார். ஏகாரம் தேற்றம்.

எந்நிலைமையிலும் தளராத மனத்திண்மை யுடைமையால் மானம் பேராண்மை யெனப் பட்டது. சீரினுஞ் சீரல்ல செய்தல் அன்முறையாய்க்கொள்ளையடித்து அறச்சாலை நிறுவுதல் போல்வது.

கூசுஉ. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

(இ—ரை.) பெருக்கத்துப் பணிதல் வேண்டும்—குடிப் பிறந் தார்க்கும் தன்மானியர்க்கும் பெருமை நிறைதற்கேற்ற செல்வக் காலத்தில் யாவரிடத்தும் தாழ்மையாயிருத்தல் வேண்டும்; சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும்—பெருமை குறைதற் கேதுவான வறுமைக காலத்தில், அக்குறையை நிறைத்தற் பொருட்டுத் தாழ்மை யில்லாதிருத்தல் வேண்டும்

"எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து." (குறள். கூஉநி)

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்." (ஷெ கூஅசசு)

ஆதலால், செல்வக் காலத்தில் தாழ்மையும் மேன்மையைத் தருதலை யும் வறுமைக் காலத்தில் தாழ்மை தாழ்வையே தருதலையும் நோக்கி, பெருக்கத்துப் பணிவும் சுருக்கத்து உயர்வும் வேண்டும் என்றார். இங்குப் பணியாமை யென்றது செருக்கற்ற தன்மான நிலையை. தன் மானியார் என்று தனிப்படக் குறித்தது குடிப்பிறப் பின்றியும் கல்வி யொழுக்கங்களால் மேம்பட்டுத் தன்மானங் காப்பவரை. இம் மூன்று குறளாலும் மானங்காக்கும் வழிகள் கூறப்பட்டன.

கூசுஊ. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(இ—ரை.) மாந்தர்—குடிப்பிறந்த மக்கள்; நிலையின் இழிந்தக் கடை—தம் உயர்ந்த நிலையினின்றும் ஒழுக்கக் கேட்டால் தாழ்ந்த விடத்து; தலையின் இழிந்த மயிர் அனையர்—தலையினின்று கழிந்த மயிரை யொப்பர்.

குடிப் பிறந்தார் தம் பிறப்பிற்குரிய பண்பாட்டு நிலையில் நின்ற விடத்து மதிக்கப்படுதலும், அதினின்று தவறியவிடத்து அவமதிக் கப்படுதலும், உவமத்தாற் பெறப்பட்டன. இழிதல் என்னும் சொல் கீழ் விழுதலையும் இழிவடைதலையும் இங்கு ஒருங்கே உணர்த்தும்.

நூஉடு. குன்றி னனை யாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(இ—ரை.) குன்றின் அனையாரும்—குடிப்பிறப்பால் மலை போல் உயர்ந்தோரும்; குன்றுவ குன்றி அனைய செயின்—தாம் தாழ்தற் கேதுவான இழி செயல்களை ஒரு குன்றிமணியளவே செய்வாராயினும்! குன்றுவர்—தம் நிலையினின்றுந் தாழ்வர்.

குன்று என்னும் சொல் இங்குத் தன் சிறப்புப் பொருளை யுணர்த்தாது பொதுப் பொருளை யுணர்த்திற்று. குன்றியனைய செயினும் என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது இங்குள்ள அணி சொற்பின் வருநிலை.

நூஉஅ. புகழின்ருற் புத்தேளுட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(இ—ரை.) இகழ்வார்பின் சென்று நிலை—ஒருவன் தன்மானமின்றித் தன்னை அவமதிப்பார் பின்னே சென்று நிற்கின்ற நிலை: புகழ் இன்று—இவ்வுலகத்து நிற்கும் புகழைத் தராது; புத்தேள் நாட்டு உய்யாது—மறுமையில் தேவருலகத்திற்குச் செலுத்தாது; மற்று என்—இனி அது அவனுக்கு வேறு என்ன பயனைச் செய்யும்?

'மற்று' பிரிநிலைச் சொல். 'ஆல்' ஈரிடத்தும் அசை நிலை. இம் மூன்று குறளாலும் மானம் பேணுமையின் இழிபு கூறப்பட்டது.

நூஉஎ. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

(இ—ரை.) ஒருவன் ஒட்டார் பின் சென்று வாழ்தலின்—ஒருவன் தன்னை யிகழ்வார் பின் சென்று அவர் தரும் பொருள் பெற்று அதனால் உயிர் வாழ்தலினும்; அந் நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று—தான் பொருளற்ற அப்பொழுதே உயிர் துறந்தான் அல்லது இறந்தான் என்று சொல்லப்படுவது அவனுக்கு நன்றாகும்.

ஒட்டுதல் உள்ளத்தாற் பொருந்துதல். அந்நிலை யென்றது ஒட்டார் பின் செலலாத முன்னை நிலையை. ஏகாரம் பிரிநிலை. புகழும் புத்தேளுலகும் பெறுவிடினும் பொருள்பெற்று வாழலாமே யெனின், அங்ஙனம் மானங் கெட்டு வாழ்வதினும் மானங்காத்து மாள்வதே சிறந்த தென்று கூறியவாறு.

கூகூஅ. மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

(இ—ரை.) பெருந்தகைமை பீடு அழிய வந்த விடத்து—உயர் குடிப் பிறப்புத் தன்பெருமித மாகிய மானங் கெட வந்த விடத்து; ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ.

(இ—ரை.) பெருந்தகைமை பீடு அழிய வந்த விடத்து—உயர் குடிப்பிறப்புத் தன் பெருமிதமாகிய மானங்கெட வந்தவிடத்து; ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ—இறவாது நின்று இகழ்வாரை வேண்டிப் பொருள் பெற்று இழிந்தவுடம்பைக் காக்கும் வாழ்க்கை பின்பும் இறவாமலிருத்தற்கு மருந்தாகுமோ! ஆகாதே!

உயர் குணங்கட்கு இடமாதல்பற்றி உயர்குடிப்பிறப்பைப் 'பெருந்தகைமை' யென்றும், அப்பிறப்பிற்குப் பெருமிதத்தைத் தரும் 'மானத்தைப் 'பீடு' 'என்றும், அஃதழிந்தபின் உடம்பைப் பேணுதல் இழிந்ததாதலின் அதனை 'ஊனோம்பும் வாழ்க்கை' யென்றும், பின்னும், இறத்தல் உறுதியாதலின் 'மருந்தோ' என்றும் கூறினர். 'மற்று' பின்மைப் பொருளிடைச்சொல்.

கூகூக. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்.

(இ—ரை.) மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்—தனக்குச் சிறப்பாகக் கருதும் மயிர்த்தொகுதியில் ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவை யொத்த மானியர்; மானம் வரின்—தமக்குச் சிறப்பாகக் கருதும் மானம் என்னும் உயிர்நாடிப் பண்பு கெடும் நிலை வரின்; உயிர் நீப்பர்—அப்பண்பைக் காத்தற் பொருட்டு வேறொன்றுங் கருதாது உடனே தம் உயிரை விட்டு விடுவர்.

இங்கு 'மானம்' என்றது மானங் கெடு நிலையை. கவரிமா மயிர் நீப்பின் வாழாது தன் மானத்தைக் காத்துக்கொள்வதால் மானமா எனப்பெறும். மானமாக்கள் போன்றே மானமக்களும் தம் மானங் கெடவரின் உடனே உயிர் நீத்து அதைக் காத்துக்கொள்வர். இந்து, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கோவலனைக் கொல்வித்ததால் தன் கோல் கோடியபோது, தன் உயிர் துறந்து அதை நேராக்கியது போல்வதாம்.

"கடமா தொலைச்சிய காணுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணு திறக்கும்—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்." (நாலடி. கூ00)

கூஎ0. இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு.

(வி—ரை.) இளிவரின் வாழாத மானம் உடையார் ஒளி—தமக்கோ நிழிவுவந்தவிடத்து அதைத் தாங்காது உடனே உயிர் நீத்த மானியரின் புகழுடம்பை; உலகு தொழுது ஏத்தும்—உலகத்தார் கும்பிட்டு வழுத்துவர்.

இம்மைப் புகழை ஒளி யென்னும் வழக்குப்பற்றி மானங்காக்க உயிர் நீத்தவரின் புகழுடம்பை 'ஒளி' என்றார். மறத்துறையிலும் மதத்துறையிலும் போன்றே, பண்பாட்டுத் துறையிலும் தம் கொள்கைபற்றி உயிர் நீத்தவர் தெய்வமாகத் தொழப்பெறுவர் என்பது கருத்து. தொழுதேத்துதல் என்னும் வினைக்கேற்ப, ஒளி என்பது ஒளிவடிவு (புகழுடம்பு) என உரைக்கப்பட்டது. 'உலகு' இடவாகு பெயர். இந்நான்கு குறளாலும் மானங்காக்க உயிர் நீத்தலின் சிறப்புக் கூறப்பட்டது.

அதி. கூஅ—பெருமை.

அஃதாவது, அறிவாற்ற லொழுக்கங்களால் மக்கள் தீல்லது குடிகள் அடையக்கூடிய உயர்வு. படிப்படியாக மேன்மேலுயரக் கூடிய நிலைமை மானத்தின் வழிப்பட்டதாகையால், இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

கூஎக ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

(இ—ரை.) ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை—ஒருவனைச் சிறப்பித்து அவன் பெயரை விளங்கச் செய்யும் பெருமை, பிறராற் செயற்கரிய செய்வேம் என்னும் ஊக்க மிகுதியால் ஏற்படுவதே; ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல்—ஒருவனுக்கு இழிவாவது, அவ்வருஞ்செயலும் அதற்கேதுவான ஊக்கமுமின்றி எளிதாய் வாழக்கடவேம் என்றெண்ணுவதே.

ஒருவன் பெயரை விளங்கச் செய்வதால் அவன் பெருமையை 'ஒளி' என்றும், அப்பெருமைக்குக் காரணியமாகிய அருஞ்செயற்கு ஏதுவான ஊக்கமிகுதியை அதன் மும்மடிக் காரியமாகிய ஒளியொடு சார்த்தியும் கூறினர். ஒளி, இளி என்பன இங்கு ஒன்றிற்கொன்று எதிராகவந்த சொற்கள் "செயற்கரிய" என்று முற்கூறியது (குறள் ஈக) துறவுபற்றிய தென்றும், இங்குக் கொள்வது புறவு பற்றிய தென்

றும், வேறுபாடறிக. வெறுக்கை—செல்வம். அது இங்கு மிகுதியைக் குறித்தது. வெறுத்தல் செறிதல், புரவு பற்றிய அருவினைகள் ஈகையும் ஒப்பரவும், 'வாழ்தும்' என்னும் பன்மை நெஞ்சொடு கிளத்தல்பற்றிய எண் வழுவமைதி, இக்குறளாற் பெருமைக்கு ஏது கூறப்பட்டது.

நூஎ. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(இ—ரை.) எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்—மாந்தரெல்லார்க்கும் தாய்வயிற்றுப் பிறத்தலாகிய பிறப்புமுறை ஒரு தன்மையதே; செய்தொழில் வேற்றுமையான் சிறப்பு ஒவ்வா—ஆயின், அவரவர் செய்யுந் தொழில்களின் வேறுபாட்டால் ஏற்படும் சிறப்பு நிலைமைகள் ஒரு நிகரானவல்ல.

தொழில் வேறுபாடுகள்; அதிகாரமுள்ளது, அதிகாரமில்லது; வருமானம் மிக்கது, வருமானங் குறைந்தது; தற்சார்பானது, மற்சார்பானது; நிழலிற் செய்வது, வெயிலிற் செய்வது; மனவுழைப்புள்ளது; உடலுழைப்புள்ளது; துப்புரவானது, துப்புரவற்றது; ஒழுக்கக் கேட்டிற் கிடமுள்ளது, ஒழுக்கக் கேட்டிற் கிடமில்லது; இன்றியமையாதது. இன்றியமையாத தல்லாதது; பிறரை இன்புறுத்துவது; பிறரை இன்புறுத்தாதது; நல்லது தீயது என்பன. இவற்றுள் ஒவ்வோரிணைக்கும் இடைப்பட்ட நிலைமையுமுண்டு. தொழில்வேறுபாட்டால் ஏற்படும் சிறப்பு நிலைமைகள் உயர்வு, தாழ்வு, இடைநிகர்வு, மிகவுயர்வு, மிகத்தாழ்வு என்பன.

''வினைவயத்தாற் பஞ்சபூத பரிணமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதின் பயனனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கு மொத்தலிற் பிறப்பொக்கு மென்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கை தோறும் வேறுபடுதலிற் 'சிறப்பொவ்வா' வென்றும் கூறினார்.'' என்பது பரிமேலழகரின் ஆரியச்சார்புச் சிறப்புரை.

நூஏ. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(இ—ரை.) மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர்—பிறப்பொடு தொடர்புள்ள ஆரியக் குலப் பிரிவினையால் ஏற்பட்ட கூழுகாயப் படிமுறை யொழுங்கில், பிராமணர் என்னும் ஆரியப் பார்ப்பனர் உச்சியிலிருந்தும், ஒழுக்கங் கெட்டவராயின் உயர்ந்தோரல்லர்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார்—உண்மையாகத்

தாழ்ந்தவ ரல்லாத தென்னாட்டுத் தொல்குடித் தமிழர், பிராமணரால் தாழ்த்தப்பட்டிருப்பினும் தாழ்ந்தவராகார்.

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

என்று முன்பும் (குறள். கஉச),

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று இங்கும் ஆசிரியர் கூறியிருப்பதால், "செயற்கரிய செய்கலாது சிறியராயினர், உயர்ந்த வமளி முதலியவற்றின் மிசையிருந்தாராயினும், பெரியராகார்; அவை செய்து பெரியராயினர் தாழ்ந்த வறுநிலத்திலிருந்தாராயினும், சிறியராகார்.

"மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வ நல்குரவுகளும் கருதப்பட்டன" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாது. இதிலுள்ள அணிசொற்பொருட் பின்வருநிலை. இவ்விரு குறளாலும் பிறப்பாற் சிறப்பில்லை யென்பது கூறப்பட்டது.

கூஎச. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னோத்தான் கொண்டொழுகி னுண்டு.

(இ—ரை.) ஒருமை மகளிரே போல—ஒரே கணவனைக் காதலித்துத் தம் கற்பைக் காத்துக் கொள்ளும் குல மகளிர்போல; தன்னோத் தான் கொண்டொழுகின்—ஓர் ஆடவனும் ஒரே மனைவியைக், காதலித்துத் தன் கற்பைக் காத்துக்கொண்ட போதே; பெருமையும் உண்டு—பெருமைக் குணமும் அவனிடத்தில் உளதாகும்.

இதனால் கற்பென்பது இருபாற்கும் பொதுவென்பதும், அது பெருமை பெறும் பெண்பாற்குப் போன்றே ஆண்பாற்கும் இன்றியமையாத தென்பதும், பெறப்பட்டன. இன்பத்தைச் சிறப்பாகீக் கொண்ட அகப்பொருள் (இலக்கண) நூலார்க்கும் அறத்தைச் சிறப்பாகக் கொண்ட அறநூலார்க்கும் உள்ள கருத்து வேறுபாடும் இதனால் அறியப்படும். உம்மை எச்சவும்மை

"அடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னெடு பொருது மென்ப வவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்ப்புறங் காணே னுயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக"

என்னும் பூதப்பாண்டியன் வஞ்சினமும் (புறம். எக)

"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை."
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே." (புறம். உசசு)

என்னும் அவன் தேவியின் பாலை நிலைக் கூற்றும், இங்குக் கவனிக்கத் தக்கன. இக்குறளாற் பெருமைக் கின்றியமையாத துணைப் பண்பு கூறப்பட்டது.

கூஎடு. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

(இ—ரை.) பெருமை உடையவர்—பெருமைக் கேதுவான பண்பை இயற்கையாக வுடையவர்; அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார்—பிறராற் செயற்கரிய நற்செயல்களை நெறிப்படி செய்து முடிப்பர்.

".....பெருமையுடைய ராயினுந் தாம் வரிய ராய வழியும் பிறராற் செயற்கரியவாய தஞ் செயல்களை விடாது அவை செய்யு நெறியாற் கடைபோகச் செய்தலே வல்லராவர்.

"வரியராய வழியு மென்பது, முன்பு செய்து போந்தமை தோன்றப் 'பெருமையுடையவ' ரென்றதனாலும், 'ஆற்றுவா' ரென்றதனாலும் பெற்றும்" என்பது பரிமேலழகருரை, இக்குறளாற் பெருமையின் வெளிப்பாடு கூறப்பட்டது.

கூஎஉ. சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(இ—ரை.) பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு—கல்வியறி வாற்ற லொழுக்கங்களாற் பெரியாரைப் போற்றி அவரைப் பின்பற்றுவோம் என்னும் குறிக்கோள்; சிறியார் உணர்ச்சியுள் இல்லை—அந்நால்வகையிலும் சிறியவரா யிருப்பவரின் உள்ளத்தில் தோன்றுவதில்லை.

இம்மனப்பான்மை அறியாமை, செருக்கு, தன்னலம் ஆகிய வற்றால் உண்டாவது. மறைமலையடிகள் காலத்தில் அவர்களைத் தமிழர் போற்றிருந்ததே இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாம்

கூஎஎ. இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

(இ—ரை.) சிறப்பும்தான்—பெருமையைத் தரும்செல்வம், கல்வி அதிகாரம், மதிநுட்பம் முதலியவற்றின் மிகுதிதானும்; சீர் அல்லவர் கண் படின்—தன்னைக் கொண்டிருத்தற்குத் தகுதியில்லாத சிறியோரிடம் சேரின்; இறப்பே புரிந்த தொழிற்றும்— அடக்கமின்றிச் செருக்கே மிகுந்த செயல்களைச் செய்யும் இயல்பினதாம்.

"உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த ஞகி—நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்."

இவ்விரு குறளாலும் சிறியோரியல்பு கூறப்பட்டது.

கூஎஅ. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து.

(இ—ரை.) பெருமை என்றும் பணியும்—பெருமையுடையார் எக்காலத்துஞ் செருக்கின்றி அடங்கியொழுகுவர்; சிறுமை (என்றும்) தன்னை வியந்து அணியும்—மற்றச் சிறுமையுடையார் எக்காலத்துந் தம்மை மெச்சி உயர்வுபடுத்திக் கூறுவர்.

மாந்தரின் செயல்கள் அவர் பண்பின்மேல் ஏற்றிக் கூறப்பட்டன. 'என்றும்' என்பது இரு தொடருக்கும் பொதுவாய் நின்றது. 'ஆம்' ஈரிடத்தும் அசைநிலை.

கூஎக. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

(இ—ரை..) பெருமை பெருமித மின்மை - பெருமைக் குணமாவது பெருமிதத்திற் கேற்ற சிறப்பிருந்தும் அதை யியல்பெனக் கொண்டு அமைந்திருத்தல்; சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல்—சிறுமைக் குணமாவது ஒரு சிறப்பும் இல்லாதிருந்தும் அதைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு செருக்கின் எல்லைவரை சென்றுவிடுதல்.

இங்கும் மாந்தர் செயல்கள் அவர் பண்பின்மேல் ஏற்றிக் கூறப்பட்டன. 'ஊர்ந்து விடல்' மூடிவிடம்வரை ஏறிச்செல்லுதல்; குறிப்புருவகம், 'விடும்' என்பது மணக்குடவ காலிங்கர் பாடம்.

கூஅ0. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(இ—ரை.) பெருமை அற்றம் மறைக்கும்—பெருமையுடையார் பிறர் மானச் செய்திகளையே கூறி அவமானச் செய்திகளை மறைத்து விடுவர்; சிறுமை குற்றமே கூறிவிடும்—மற்றச் சிறுமை யுடையாரோ பிறர் குணத்தையெல்லாம் மறைத்துக் குற்றங்களையே கூறி விடுவர்.

இங்கும் மாத்தர் செயல்கள் அவர் பண்பின்மேல் ஏற்றிக் கூறப் பட்டன. மறைத்தலும் கூறுதலும் ஏனையிடத்தும் இயைந்தன. 'தான்' அசைநிலை. ஏகாரம் பிரிநிலை, இம்மூன்று குறளும் வேற்றுமையணிகொண்டு இருசாராரின் செயலையும் ஒருங்கு கூறின.

அதி. கஉ—சான்றாண்மை

அஃதாவது பல நற்குணங்களாலும் நிறைந்து அவற்றை யாளுந் தன்மை, சால்புதல் நிறைதல்; பல நற்குணங்களாலும் என்பது அவாய்நிலையால் வந்தது. ஆண்மை ஆளுதல், அவற்றை என்னும் செயப்படு பொருட் சுட்டுப்பெயரும் அவாய்நிலையால் வந்ததே, மானமும் பெருமையும் அல்லாத நற்குணங்கள் பலவற்றையும் தொகுத்துக்கொண்டு நிற்றலால், இது அவற்றின்பின் வைக்கப்பட்டது. சான்றாண்மை சால்பு எனவும் படும்.

கூஅக. கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

(இ—ரை.) கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு—இது நமது கடமையென் றறிந்து சான்றாண்மையை மேற்கொண் டொழுகுவார்க்கு; நல்லவை எல்லாம் கடன் என்ப—நல்வினை களெல்லாம் செய்யப்பட வேண்டிய கடமையாகும் என்று கூறுவர் அறிஞர்.

சான்றாண்மை நற்குணத் தொகுதியாதலின் அதை மேற்கொண்டவர்க்கு நல்வினையெல்லாங் கடமை யென்பது கருத்து.

கூஅஉ. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

(இ—ரை.) சான்ரோர் நலன் குணநலமே—சான்ரோர் நலமாவது குணங்களாலான நலமே; பிற நலம் எந்நலத்து உள்ளதும் அன்று—மற்ற உறுப்பு நலம் ஒரு நலத்தோடும் கூட்டன்று.

குடிப்பிறப்பு, கல்வி முதலியனவாக நூலோரால் வகுக்கப் பெறும் எந்நலத்தோடும் சேர்த்தெண்ணப் படாமையால், உறுப்பு நலத்தை 'எந்நலத் துள்ளதூஉ மன்று' என்ரார். 'உள்ள தூஉம்' இன்னிசை யளபெடை, ஏகாரம் பிரிநிலை.

கூஅந. அன்புநா ணெஞ்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

(இ—ரை.) அன்பு—எல்லார் மேலுமுள்ள அன்பும், நாண்—பழி தீவினைகள் செய்யப் பின்வாங்கும் நாணமும், ஒப்புரவு—வேளாண்மையும்; கண்ணோட்டம்—எளியார்க்கும் சட்ட நெறியறியார்க்கும் காட்டுஞ் சிறப்பிரக்கமும்; வாய்மையொடு—உண்மை யுடைமையும் என; சால்பு ஊன்றிய தூண் ஐந்து—சான்ருண்மை யென்னும் மண்டபத்தைத் தாங்குந் தூண்கள் ஐந்தாம்.

"என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே,"

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி (எஎக), எண்ணெடு முன்னவற்ரெடும் ஒன்றியது, இவ்வைங்குணமும் இல்லாவிடத்துச் சால்பு நில்லாமையின், இவற்றைத் தூணென வுருவகித்தார். சால்பை மண்டபமென வுருவகியாமையின், இது ஒருமருங்குருவகம். இங்கு எளியார் என்றது செல்வம், கல்வி, உடல்வலிமை, அகவை முதலிய பலவகையிலுந் தாழ்ந்தவரை.

கூஅச. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(இ—ரை.) நோன்மை கொல்லாமையைத் தனக்குரிய அறங்களுள் சிறப்பாகக் கொண்டுள்ளது; சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது—அதுபோலச் சான்ருண்மை பிறர் குற்றத்தைச் சொல்லாமையைத் தனக்குரிய குணங்களுள் சிறப்பாகக் கொண்டுள்ளது.

'நலம்' ஆகுபொருளது. இக்குறள் எடுத்துக்காட்டுவமை.

கூஅடு. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்ரோர்
மாற்ருரை மாற்றும் படை.

(இ—ரை.) ஆற்றுவார் ஆற்றல் பணிதல்— ஒரு கருமத்தை வெற்றிபெறச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது, அக்கருமத்திறகுத் துணையாவாரைத் தாழ்ந்து வேண்டித் தம்மொடு சேர்த்துக்கொள்ளுதல்; சான்ரோர் மாற்ருரை மாற்றும் படை அது—இனி, சால்புடையார் தம் பகைவரைத் தம் துணைவராக மாற்றுதற்குக் கையாளுங் கருவியும் அதுவேயாம்.

'ஆற்றல்' ஒன்றைச் செய்து முடிக்கும் திறமை. இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது.

''பகைசேரு மெண்ணுன்கு பற்கொண்டே நன்னு
வகைசேர் சுவையருந்து மாப்பால்—தொகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுதல் நல்லோர் தொழில்.

என்னும் செய்யுள் (நீதிவெண்பா, கு) இங்குக் கவனிக்கத் தக்கது.

கூஅசு சால்பிற்குக் கட்டளை யாதெனிற் ருேல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.

(இ—ரை) சால்பிற்குக் கட்டளை யாது எனின்—சான்ருண்மையென்னும் பொன்னின் மாற்றை யறியதற்கு உரைகல்லாகிய செயல் எதுவெனின்; துலை அல்லார்கண்ணும் தோல்வி கொளல்—தம்மினும் வலியாரிடத்துத் தாம் அடையுந் தோல்வியைத் தம்மினும் மெலியாரிடத்துமே விரும்பி ஏற்றுக் கொள்ளுதல்.

துலை ஒப்பு. 'துலையல்லார்' என்னும் பகைவர்நிலையாலும் 'கொளல்' என்னும் வினையினுலும், தாமே விட்டுக் கொடுத்து வேண்டுமென்றே தோல்வியடைந்து கொள்ளுதல்பெறப்பட்டது. இது. வளர்ந்தவனெருவன் ஒருகுழந்தை தன்னை அடிக்கும்பொழுது, அதைப் பொறுத்துக் கொள்வது அல்லது விரும்பியேற்றுக்கொள்வது போல்வது. வலியொத்த பகைவர் வெல்வதற்கு இடமிருத்தலின், அவரிடம் ஏற்றுக்கொள்ளும் தோல்வியாற் சால்பு வெளிப்படாமை நோக்கித் 'துலையல்லார்கண்' என்ருர். உம்மை இழிவு கலந்த எச்சம்.

கூஅள. இன்ன செய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

(இ—ரை) இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்—தமக்குத் தீயன செய்தவர்க்கும் நல்லனவே செய்யாவிடின்; சால்பு என்ன பயத்தது—ஒருவரின் சான்ருண்மையால் என்ன பயனும்?

வினை எதிர்மறைப் பொருளது, 'ஒ' இரக்கங் குறித்த அசைநிலை. உம்மை இழிவு சிறப்பு. ஏகாரம் பிரிநிலை. சால்பில்லார் போன்றே சால்புடையாரும் நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையுஞ் செய்வராயின், அவர் சால்பினால் ஒரு பயனுமில்லை யென்பதாம். இவ்வைங் குறளாலும் சால்பின் தன்மை சிறப்புவகையாற் கூறப் பட்டது.

கூஅஅ. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுத்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ—ரை.) சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்—சாண்ருண்மை யென்று சொல்லப்படும் உரம் வாய்ந்திருப்பின்; ஒருவற்கு; இன்மை இளிவு அன்று—ஒருவனுக்கு வறுமை இழிவாகாது.

உள்ளத்திற்கு உறுதியுண்டாக்குதலின், சால்பு உரமீயிற்று. இன்மை பொருளின்மை, 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே'' (மூதுரை. ச), என்பதாம்.

கூஅகூ. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழி யெனப்படு வார்.

(இ—ரை.) சான்ருண்மைக்கு ஆழி எனப்படுவார்—சால்பு என்னும் கடலிற்குக் கரையாகச் சொல்லப்படுவார்; ஊழிபெயரினும் —ஊழிமுடிந்து உவர்க்கடல் கரைகடப்பினும்; தாம் பெயரார்—நாம் தம் சால்பெல்லை கடவார்.

சால்பின் பெருமை பற்றி அதனைக் கடலாக்கியும், அதன் எல்லையில் நிற்றலின் அதை யுடையாரை அதன் கரையாக்கியும், கூறினார்.

கூகூ0. சான்றவர் சான்ருண்மை குன்றி னிருநிலந்தான்
ருங்காது மன்னே பொறை.

(இ—ரை.) சான்றவர்சான்ருண்மை குன்றின்—நற்குணங்கள் பலவும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவராயின்; இரு நிலம்தான் பொறை தாங்காது—ஞாலமும் (பூமியும்) தன் பொறையைத் தாங் காததாய் முடியும்.

தானும் என்னும் எச்சவும்மை தொக்கது. ''அவர்க்கது குன்ரு மையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவை யெஞ்ஞான்று

முளவாகா வென்பது தோன்ற நின்றமையின், 'மன்' ஒழியிசைக் கண் வந்தது. ஓகாரம் அசை.'' என்னும் பரிமேலழகர் இலக்கணக் குறிப்புரை உரையாசிரியரின் உரைமரபு தழுவியது. 'மன்னே' (அரசே!)என்பது மகடூஉ முன்னிலையாகவும், 'மாதோ'(பெண்ணே) என்பது ஆடூஉ முன்னிலையாகவும், முதற்காலத்தில் வழங்கிப் பின்பு பொருள் மறைந்து இவ்வீரசைநிலைகளாகப் பிரிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இக்குறளின் தலைமைச் சொற்றொடர்க்கு, ''இரு நிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாக வருதலான், அதுவும் அது தாங்க லாற்றாது,'' என்றிருரை யிருந்ததாகப் பரிமேலழக ருரையால் தெரிய வருகின்றது.

இம்முக்குறளாலும் சால்புடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

அதி. கஂஂ—பண்புடைமை

அஃதாவது, சான்றாண்மையை மேற்கொண்டு நின்றே அவரவர்பண் பறிந்து அறிதற்கேற்றவாறு ஒழுகுதல், ''பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்.'' என்றார் நல்லந்துவனார் (கலித். கூஉக). அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

கூஉந. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ—ரை.) யார்மாட்டும் எண்பதத்தால்— எல்லாரிடத்தும் எளிய செவ்வியராயிருத்தலால்; பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப—பண்புடையராய் ஒழுகும் நெறியை எளிதா யடையலாமென்று கூறுவர் அறநூலார்.

நற்குணங்கள் நிறைந்து எளிய செவ்வியராகவு மிருப்பின், பண் புடைமைதானே யுண்டாகுமாதலின், 'எண்பதத்தா லெய்த லெளி தென்ப' என்றார். எளிய செவ்வியாவது, எளிதாய்க் கண்டுரையாடற் கேற்ற நிலைமை. 'என்ப' என்றதனால், திருக்குறட்கு முன்பும் தமிழற நூல்கள் இருந்தமை யறியப்படும்.

கூஉஉ. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(இ—ரை.) அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண் டும்—எல்லார்மேலும் அன்புடைமையும் எல்லா நல்வினைக்கமும்

அமைந்த குடியிற் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும்; பண்புடைமை என்னும் வழக்கு — பண்புடைமையென்னும் ஒழுக்கத்திற்கு இன்றியமையாத இயல்களாம்.

அமைதல் நிறைதல். உம்மை முற்றும்மை, வழக்கிற்குக் காரணிய மானவற்றை வழக்கென்றே கருமியமாகச் சார்த்திக் கூறினர். இவ் விரு குறளாலும் பண்புடைமைக்கு ஏதுவான நிலைமைகள் கூறப் பட்டன.

௯௯௯. உறுப்பொத்தன் மக்களொப் பன்ருல் வெறுத்தக்க
பணபொத்த லொப்பதா மொப்பு.

(இ—ரை.) உறப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று—உயிரொடு பொருந்தாத முகவுறுப்பால் அல்லது முழுவுடம்பால் ஒத்தீருப்பது ஒருவனுக்கு நன்மக்களை ஒக்கும் ஒப்பாகாது; வெறுத்தக்க பண்பு ஒத்தல் ஒப்பது ஆம் ஒப்பு—உயிரொடு பொருந்தத்தக்க பண்பினுல் ஒத்தலே உண்மையாக ஒக்கும் ஒப்பாம், 'ஆல்' அசைநிலை.

மக்கள் என்னும் சொல், தொல்காப்பியக் கொள்கைப் படியும் ஆசிரியர் கருத்துப்படியும், மாந்தருள் உயர்ந்தோரையே இங்குக் குறித்தது. மாந்தருடம்பை ஒப்புநோக்குவது பெரும்பாலும் முகமும் முகவுறுப்புங்கொண்டே யாதலால், 'உறுப்பொத்தல்' என்றார். வெறுத்தல் செறிதல் அல்லது பொருந்துதல். உடம்பும் உறுப்பும் போலாது, உயிரும் உள்ளமும் அவற்றின் பண்பும் ஒருவரிடத்தும் பலரிடத்தும் ஒன்றிப் பொருந்தும் தன்மையனவாதலால், 'வெறுத் தக்க பண்பு' என்றார். உறுப்பும் உடம்பும் உயிரின் வேருயிருத்த லொடு. பிறப்பில், இயற்கையாய் அமைந்தனவும் வாழ்நாள் முழு தும் மாருதனவும், சேதப்படத்தக்கனவும், அறிவில்லாதனவும், உயிர்நீங்கியபின் மண்ணுக மாறுவனவுமா யிருத்தலின், அவற்று லொத்தலால் ஒரு சிறப்பும் பயனுமின்றும். ஆகவே மக்களைப் பின் பற்றிப் பண்பாலேயே அவரையொத்துப் பிறரும் மக்களாக வேண்டு மென்பது கருத்து. இக்குறளில் உள்ளது சொற்பொருட் பின்வருநிலை "வடநூலார் அங்கமென்றமையின் உறுப்பென்றார்." என்னும் பரிமேலழகர் கூற்று ஆரியக் குறும்பே.

௯௯௰. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

(இ—ரை.) நயனெடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு—நேர்பாட்டையும் (நீதியையும்) நல்வினையையும் விரும்புதலாற்

பிறர்க்குப் பயன்படும் நல்லோர் பண்பை; உல்கு பாராட்டும்—உலகத்தார் போற்றிப் புகழ்வர்.

'புரிந்த' என்னும் பெயரெச்சம் கரணியப்பொருளது, நயனெடு நன்றிபுரிந்த பயனுடையார்' உலகிற்குப் பயன் படுதலாலும் ஒரு சிலரேயாதலாலும்' உலகுபாராட்டும் என் ரூர். உலகு ஆகுபெயர்.

கூகூஙி. நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

(இ—ரை.) நகையுள்ளும் இகழ்ச்சி இன்னாது—வினையாட்டாகவேனும் ஒருவரைப் பழித்தல் அவருக்குத் துன்பந்தருவதாம்; பாடு அறிவார் மாட்டுப் பகையுள்ளும் பண்பு உள—ஆதலாற் பாடறிந் தொழுகுவாரிடத்திற் பகைமையுள்ள போதும் இனிய பண்புகளே உண்டாவன.

பாடறிந்தொழுகுவார் பிறருக்குத் துன்பந் தருவதை விலக்குவ ராதலின், பகைவருக்கும் நன்மையே செய்வார் என்பது கருத்து. உம்மைகள், இழிவு சிறப்பு.

கூகூசு. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(இ—ரை.) உலகம் பண்பு உடையார்ப் பட்டு உண்டு—உலக நடப்பு பண்புடையாரிடத்துப் படுதலால் இடையருது தொடர்ந்து வருகின்றது; இன்றேல் அது மண்புக்கு மாய்வது—அங்ஙனமில்லாக் கால் அது மண்ணுட் புகுந்து மறைந்து போவதாம்.

' இது ''உண்டா லம்மவிவ் வுலகம்.....பிறர்க்கென முயலுந ருண்மையானே.'' என்னும் புறப்பாட்டின் (கஅஉ) கருத்தை யொத் தது. படுதல் அமைதல். 'உலகு' ஆகுபெயர். பண்பிலார் சார் பின்மையால் அது மண்புக்கு மாயவில்லை என்னுங் கருத்துப்பட நின்றமையின், 'மன்' ஒழியிசையிடைச்சொல். இந்நான்கு குறளா லும் பண்புடையார் உயர்வு கூறப்பட்டது.

கூகூஎ. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

(இ—ரை.) மக்கட் பண்பு இல்லாதவர்—நன்மாந்தர்க்குரிய பண்பில்லாதவர்; அரம்போலும் கூர்மையரேனும்—அரத்தின் கூர்மை போலுங் கூரிய மதியுடையரேனும்; மரம்போல்வர்—அறுக்குங் கூர்மையில்லாத மரத்தையே ஒப்பர்.

கூர்மையிரண்டனுள், முன்னது பருப்பொருளாகிய முட் கூர்மை; பின்னது நுண்பொருளாகிய மதிக் கூர்மை உவமம் இரண்டனுள், முன்னது அறுக்குங் கூர்மை பற்றியது; பின்னது அறுக்குங் கூர்மையின்மை பற்றியது. மதிநுட்பமிருந்தும் அதற்குரிய மக்கட் பண்பின்மையால், அரம்போற் கூரியதாயிருந்தும் அறுக்கும் வன்மையில்லாத மரம்போல்வர் என்றார்.

மக்கட்குரிய ஆறறிவில்லாத உயிரினங்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐவகைப்பட்டிருத்தலின், மக்கட் பண்பில்லாதவரை ஓரறிவுயிர்க்கே ஒப்பாகக் கூறுவது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. எனினும், பரிமேலழகர் உரையையும் கீழ்க் காண்க.

"தன்மக்கட்கே யுரிய பண்பில்லாதவர், அரத்தின் கூர்மை போலும் கூர்மையை யுடையரே யாயினும் ஓரறிவிற்குரிய மரத்தினை யொப்பர்.

"'அரம்' ஆகுபெயர். ஓரறிவு ஊற்றினையறிதல். உவமையிரண்டனுள் முன்னதுதான் மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது. ஏனையது விசேடவறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ்விசேடவறிவிற்குப் பயனாக மக்கட் பண்பின்மையின், அதுதானுமில்லையென்பதாயிற்று" உம்மை உயர்வு சிறப்பு.

கூகூஅ. நண்பாற்ரு ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ரு ராதல் கடை.

(இ—ரை.) நண்பு ஆற்ருராகி நயம் இல செய்வார்க்கும்—தம்மொடு நட்புக்கொள்ளாது தமக்குத் தீமையே செய்தொழுகுவாரிடத்தும்; பண்பு ஆற்ருர் ஆதல் கடை—தாம் பண்புடையராயொழுகாமை அறிவுடையார்க்குக் கடைப்பட்ட குற்றமாம்.

தாமும் அவர் தன்மையராதலால் 'கடை' என்ருர். உம்மை இழிவு சிறப்பு.

கூகூகூ. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(இ—ரை.) நகல்வல்லர் அல்லார்க்கு—பண்பின்மையால் ஒருவ ரோடுங் கலந்துரையாடி மகிழுந் திறமில்லாதவர்க்கு; மா இரு ஞாலம் பகலும் இருட்பாற் பட்டன்று—மிகப்பெரிய இவ்வுலகம் பட் டப் பகலிலும் இருள்நிறைந்திருப்பதாகும்.

ஒருவரோடுங் கலந்தறியப் பெறுத பண்பிலிகட்கு உலகியல் முற்றும் தெரியாதென்பது கருத்து. பட்டன்று என்பது உடன் பாட்டுச் சொல்லாதலின், 'பாழ் பட்டன்றிருள்' என்று பாடமோதி, 'இருள் நீங்கிற்றன்று' என்றுரைப்பது பொருள்கெடாவிடினும் பொருந்தாது. 'மாயிரு' மீமிசைச்சொல்.

கூ000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(இ—ரை.) பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம்—பண்பில் லாதவன் பழம் பிறப்பிற் செய்த நல்வினையின் பயனுக அடைந்த பெருஞ்செல்வம், ஒருவற்கும் பயன்படாது கெடுதல்; நல் பால் கலம் தீமையால் திரிந்து அற்று—நல்ல ஆவின்பால் வார்த்த கலத் தின் குற்றத்தாற் களிம்பேறிக் கெட்டாற்போலும்.

கலத்தீமை என்பது இன்னுரை பற்றிக் கலந்தீமை யென மெலிந்தது. வினையுவமையாதலின், பொருளின்கண் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது முன்னை நல்வினை பயன் என்பது தோன்றப் 'பண்பிலான்' என்றும், ஈட்டும் ஆற்றலிலன் என்பது தோன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப் பயனும் பெறுதற்கேற்றது என்பது தோன்றப் 'பெருஞ்செல்வம்' என்றும், உடையவனுக்கும் பயன் படாமை தோன்றத் 'திரிந்தற்று' என்றும், கூறினார். இதனால் வரு கின்ற அதிகாரத்திற்குந் தோற்றுவாய் செய்யப்பட்டது. இந்நான்கு குறளாலும் பண்பிலாரின் இழிவு கூறப்பட்டது.

அதி. கo க—நன்றியில் செல்வம்

அஃதாவது, ஈட்டியவனுக்கும் பிறருக்கும் பயன்படாத செல்வத் தின் தன்மை உடையவனது குற்றம் உடமையின் மேலேற்றப்பட்டது. 'பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வம்' என்று மேலதிகார ஈற்றில் இதற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டதே, இதன் அதிகார முறை வைப்பைக் காட்டும்.

கூ00க. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணுன்
செத்தான் செயக்கிடந்த தில்.

(இ—ரை.) வாய்சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணுன்—தன் மனையிட மெல்லாம் நிறைதற்கேதுவான பெருஞ் செல்வத்தை ஈட்டிவைத்தும், கஞ்சத்தனத்தால் அதை நுகராதவன், செத்தான் உடம்போ டுளனுயினும் செத்தவனுவன்; செயக் கிடந்தது இல்—அதைக்கொண்டு அவன் செய்யக் கிடந்ததொரு செயலுமில்லை.

செல்வமிருந்தும் அதை நுகராமையால், செத்தவனுக்கு ஒப்பா வன் என்பது கருத்து. 'வைத்தான்' முற்றெச்சம்.

"உண்ணு ளெளிநிரு ணெங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களீயான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்." (நாலடி. க)

கூ00உ. பொருளாஞ மெல்லாமென் றீயா தீவறு
மருளாஞ மாணப் பிறப்பு.

(இ—ரை.) பொருளான் எல்லாம் ஆம் என்று—செல்வ மொன்று மட்டுமிருந்தால் அதனுல் எல்லாக் கருமமும் ஆகுமென்று கருதி; ஈயாது இவறும் மருளான்—அதைப் பிறர்க்கீயாது இறுகப் பற்றும் மயக்கத்தினுல்; மாணப் பிறப்பு ஆம்—இழிவான பிறப்பு உண்டாம்.

இம்மைக்கும் மறுமைக்கு முரிய வினையின்பங்கள் யாவும் அடங்க 'எல்லாம்' என்றுர். மருளாவது செல்வம் நிலையானதென் றும், பிறர்க்கு ஈவதாற் குறைந்துவிடுமென்றும் கருதுதலும்; "செல்வம் சகடக்கால்போல வரும்" என்றும் (நாலடி. உ), "செல் வத்துப் பயனே ஈதல்" (புறம். கஅக) என்றும், "இகழ்ந்தக்க ஆறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ் செல்வம்" என்றும், "இம்மைச் செய்தது மறுமைக் காம்" (புறம். ககூச) என்றும் அறியாமையுமாம். மாணப் பிறப்பாவன.

"சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
கூனும் குறளு மூமஞ் செவிடும்
மாவும் மருளும்" (புறம். உச)

என்னும் எண்பேரெச்சமும் அலியுமாம். இனி, வீணைப் புதையலிக் காக்கும் பேயும் பூதமும் எனினுமாம்.

600. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(இ—ரை.) ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற் றம்—பிறரொடு போட்டியிட்டுப் பெரும்பொரு ளீட்டுவதையே பெருவிருப்பக் குறிக்கோளாகக் கொண்டு, அதன் பயனுகிய புகழை விரும்பாத ஆண்மக்களின் பிறப்பு; நிலக்குப் பொறை— இந்நிலவுலகிற்குச் சுமையாவதன்றி ஒரு பயனும் படுவதன்று.

" உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்." (ஷி உகூ உ)

" ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு." (குறள். உகூ க)

" வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெருஅ விடின்." (ஷி உகூ அ)

" வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்." (ஷி உகூ க)

என்று முன்னரே கூறியுள்ளமையால், 'நிலக்குப் பொறை' என்று அதை இங்கு நினைவுறுத்தினர். வெளியூரும் வெளிநாடுஞ் சென்று பெரும்பொருளீட்டுவது வணிகருள் ஆண்மக்கள் செயலாதலின் 'ஆடவர்' என்றார். "வினையே ஆடவர்க் குயிரே" (குறுந். ககூ) "முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை." (தொல். கூஅ0). 'தோற்றம்' என்றது தோன்றிய வுடம்பை. 'நிலக்கு' அத்துச்சாரியை தொக்கது.

601. எச்சமென் றெண்ணெணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

(இ—ரை.) ஒருவரால் நச்சப்படாதவன்—ஒரு பொருளும் ஈந்தறியாமையால் ஒருவராலும் விரும்பப்படாதவன்; எச்சம் என்று என் எண்ணுங்கொல்—தனக்குப் பின் தன்னை மகிழ்ச்சியுடன் நினைப்பிக்குமாறு எஞ்சிநிற்பதாக எதனைக் கருதுவானோ?

மக்கள், பொருள், புகழ் என்னும் மூவகை யெச்சங்களுள், புகழே சிறந்ததாதலின், "என்னெண்ணுவ் கொல்லோ' என்றார். ஓகாரம் ஆசைநிலை. 'கொல்' ஐயப் பொருளிடைச் சொல். 'படா அ' இசைநிறை யளபெடை. இழிவு சிறப்பும்மை தொக்கது.

குறள் 1009. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

(இ—ரை.) கொடுப்பதும் துய்ப்பதும் இல்லார்க்கு—பிறருக்கீவதும் தாம் நுகர்வதுமாகிய இரண்டுமில்லாதவருக்கு; அடுக்கிய கோடி உண்டாயினும் இல்—கோடிக் கணக்கான செல்வமிருப்பினும் அது செல்வமிருப்பதாகாது.

செல்வத்தின் இரு பயனுமின்மையால் 'இல்' என்றார். இன்பத்தினும் அறஞ் சிறந்தமையால் முற்கூறப்பட்டது. 'கோடி' அளவையாகு பெயர். 'கொடுப்பதூஉம்', 'துய்ப்பதூஉம்' இன்னிசை யளபெடைகள். உம்மை உயர்வு சிறப்பு.

"எனதென தென்றிருக்கு மேழை பொருளீ
எனதென தென்றிருப்பன் யானும்—தனதாயின்
தானு மதனீ வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனீ யது." (நாலடி. உளை)

என்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

குறள் 1010. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்.

(இ—ரை.) தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பு இலாதான்—தகுதியுடையவர்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈயும் இயல்பில்லாதவனுய்; தான்துவ்வான்—அதன்மேல் தானும் நுகராதவனுமிருப்பவன்; பெருஞ் செல்வம் ஏதம்—அவ்விரண்டுஞ் செய்தற் கேற்ற தன் பெருஞ் செல்வத்திற்கு ஒரு நோயாவன்.

செல்வத்தின் பயன்படுந் தன்மையை நோய் போற் கெடுத்தலின், 'நோய்' என்றார். 'தக்கார்' அந்தணர், அடியார், புலவர் முதலியோர். 'தக்கார்' என்றதனால், தகுதியில்லார்க்கு ஈதல் தவறென்பது பெறப்படும். 'ஏதம்' ஆகுபெயர், எச்சவும்மை தொக்கது. இனி, அவ்விரு பயனும் கொள்ளாதவனது பெருஞ் செல்வம் துன்பமே தரும் என்பது அத்துணைச் சிறந்த தன்று.

குறள் 1011. அற்றார்க்கொன் றுற்றுதான் செல்வ மிகநலம்
பெற்ற டமியள்மூத் தற்று.

(இ—ரை.) அற்றார்க்கு ஒன்று ஆற்றுதான் செல்வம்—ஒரு பொருளு மில்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடாத

வனது செல்வம் வீணுய்க்கழிதல், மிக நலம் பெற்றுள் தமியள் மூத்த அற்று-குணத்திற்சிறந்த கட்டழகி யொருத்தி மணஞ்செய்து கொடுப் பாரின்மையால் கணவனின்றித் தனித்தவளாய் மூத்த தன்மைத்து.

இதில் வந்துள்ள உவமம் பெண்ணின் உரிமையின்மையைக் காட்டுதலால், பெரும்பாலும் பண்டைக் காலத்திற்கே ஏற்றதாம். எனினும், இக் காலத்திலும் இது நிகழக் கூடிய தாதலால் உவம மாதற்கு எள்ளளவும் இழுக்கில்லை யென்க. 'நலம்' அகத்தழகு புறத்தழகு என்னும் இரண்டையுங் குறிக்கும். 'பெற்றுள்' என்பது இரண்டையும் ஒருங்கே பெறுதலின் அருமையை உணர்த்தும். பயன்படாமை செல்வத்திற்கும் பெண்ணிற்கும் பொதுவேனும், செல்வம் நுகர்ச்சிப் பொருளாகவே யிருப்பதென்றும், பெண் கண வ'னை நோக்க நுகர்ச்சிப் பொருளாகவும் தன்'னை நோக்க நுகர்வாளா கவும் இருப்பவள் என்றும், வேறு பாடறிதல் வேண்டும். இதனுல் தன் விருப்பப்படியே இறுதிவரை மணஞ் செய்யாதிருக்கும் குண மணிக் கட்டழகி, இக்குறட் கேற்ற உவமமாகாள் என்பதையும் அறிந்து கொள்க.

கூ00அ. 'நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

(இ—ரை.) நச்சப் படாதவன் செல்வம்—வறியவர்க்கு அருகி லிருந்தும் ஒன்றுங் கொடாமையின் அவரால் விரும்பப் படாதவன் செல்வ முடையவனுயிருத்தல்; நடு ஊருள் நச்சுமரம் பழுத்த அற்று—ஊர் நடுவில் எட்டிமரம் பழுத்தாற் போலும்.

இரண்டும் அருகிலிருந்தும் பயனில்லை யென்பதாம். 'நடுவூர்' என்பது 'புறநகர்' என்பது போன்ற இலக்கணப் போலி.

கூ00கூ. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

(இ—ரை.) அன்பு ஒரீஇ—ஒருவன் தன் கஞ்சத் தன்மத்தினுல்; உறவினரிடத்தும் நண்பரிடத்தும் அன்புசெய்தலை யொழிந்து; தற் செற்று—தனக்கு வேண்டியவற்றை நுகராது தன்'னையுங் கெடுத்து; அறம் நோக்காது—வறியார்க்கு ஈதலாகிய அறத்தைக் கருதவுஞ் செய்யாது; ஈட்டிய ஒண் பொருள் பிறர் கொள்வார்—வருந்தித் தேடிய சிறந்த பொருளைக் கள்வரும் கொள்ளைக்காரரு மாகிய பிறரே கவர்ந்து பயன் பெறுவர்.

'ஈட்டிய' என்பதால் சிறிது சிறிதாக நீண்ட காலம் வருந்தித் தொகுத்த தென்பதும், ஒண்பொருள் என்பதால் நன்முயற்சி பயன் படக் கூடிய தென்பதும், 'பிறர்' என்பதால் சிறிதும் தொடர்பற்றவை யென்பதும், பெறப்படும். 'ஒரீஇ' இன்னிசையளபெடை.

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்."

என்று இரட்டுறலாகக் கூறினார் ஔவையார் (கொ. வே. ஈ) ஈயார் = ஈயாதவர், ஈக்கள். தேட்டு = தேடிய சொத்து, தேன். தீயார் = கொடியவர், தீப்பந்தத்தை யுடைய குறவர்.

கஅகக. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(இ—ரை.) சீர் உடைச் செல்வர் சிறுதுனி—ஈகையாற் புகழ் பெற்ற செல்வர் குறுங்கால வறுமை யடைதல்; மாரி வறம் கூர்ந்த அனையது உடைத்து—உலகத்தை வழங்கிவரச் செய்வதாகிய முகில் (மேகம்) சிற்றிடைக்காலம் பெய்யாது வறட்சி மிகுந்தாற்போன்ற தன்மை யுடையது.

எல்லார்க்கும் இல்லையென்னது வழங்கும் செல்வர் அதனால் வறுமையடைந்த பின்பும், சிறிது காலம் பொறுத்து மீண்டுஞ் செல்வராகி முன்போற் பயன்படுவ ரென்பது உவமத்தாற் பெறப்பட்டது. இதனால், நன்றியில் செல்வம் இடையருதிருந்தும் எக்காலும் பயன் படாதென்பதும் எதிர்மறை யளவையாற் பெறப்பட்டதாம். "இதற்குச் சீருடைச் செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங்கூர்ந்தனைய தன்மையை யுடைத்தென, அதி காரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர் பொருட் டொடர்பு படாம லுரைப்பாருமுளர்." என்னும் பரிமேலழகர் மறுப்புரை மிகப் பொருத் தமானதே. துனி—வெறுப்பு; அதனை வினைத்தலால் வறுமை துனி யெனப்பட்டது, முனியத்தக்க தாழ்வு முனிவு எனப்பட்டது போன்று (புறம். கஉஉ). இந்நான்கு குறளாலும் பயனில், செல்வத்தின் குற்றங் கூறப்பட்டது.

அதி. கஅஉ—நாணுடைமை

அஃதாவது உயர்குடிப்பிறந்து மானம் பெருமை சால்பு பண்பு ஆகிய குணங்களையுடையோர் தமக்குப் பொருந்தாத கருமங்களைச் செய்ய நாணுந்தன்மை. அதிகார முறைமையும் இதனால் விளங்கும்

கூகூக. கருமத்தா ஞணுத ஞணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

(இ—ரை.) நாணுக் கருமத்தால் நாணுதல்—நன் மக்கள் நாணுவது தீய வினைகள் செய்ய வெட்கிப் பின் வாங்குதல்; பிற திருநுதல் நல்லவர் நாணு—அஃதன்றித் தனித்து வெளிச் செல்லுதல், அறியாத வரும் முறைகாரருமான ஆடவரொடு உரையாடல், ஆடவருள்ள அவையிற் பேசுதல் முதலிய பிறவற்றிற்கு வெட்கப்படுதலும் கூச்சப்படுதலும், அழகிய நெற்றியையுடைய குலமகளிர்க்கே யுரிய நாண்களாம்.

'திருநுதல் நல்லவர்' என்பது பாராட்டுப் பற்றிய புகழ்ச்சிச் சொல். பிற 'திருநுதல் நல்லவர் நாணு' என்றதனால் ஏனையது நன்மக்கள் நாண் என்பதும், 'நாணுதல்' என்றதனால் கருமத்தின் இழிவும் பெறப்பட்டன. நாணும் வினைப்பன்மை பற்றிப் 'பிற' என்றார் இக்குறளின் பிற்பகுதிக்கு, "அஃதல்லாத நாணம் அழகிய நுதலினுலே நல்லாராகிய கணிகையர் நாணத்தோடு ஒக்கும் என்றவாறு." என்றுரைத்தார் மணக்குடவர். "இனி அற்றமறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணே டொக்குமென்றுரைப்பாரு முளர். அவர்க்கு நாண் கேடு பயக்குமென விலக்கப்பட்டமையானும், அவர் பெயராற் கூறப்படாமையானும், அஃதுரையன்மை அறிக." என்று பரிமேலழகர் கூறியிருப்பது சரியே. இதனால் நாணின் இலக்கணங் கூறப்பட்டது.

கூ0கூ. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(இ—ரை.) ஊண் உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல—உணவும் உடையும் அவை யொழிந்த பிறவும் மக்களுயிர்க்கெல்லாம் பொதுவாக வுரியனவாம்; நாண் உடைமை மாந்தர் சிறப்பு—ஆயின், நாணுடைமையோ நன்மக்கட்கே சிறப்பாக வுரியதாம்.

ஊணுடையொழிந்தன அணி மனை பேச்சு கல்வி முதலியன. 'அச்சம்' என்னும் பாடம் சரியானதன்று.

கூ0கங. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(இ—ரை.) உயிர் எல்லாம் ஊனைக் குறித்த—எல்லா வுயிர்களும் உடம்பைத் தமக்கு நிலைக்களமாகக் கொண்டு அதனைப்பற்

றும்; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது—அதுபோலச் சான்றாண்மை நாண் என்னும் நற்குணத்தைத் தனக்கு நிலைக்களமாகக் கொண்டு அதனைப் பற்றும்.

உயிர் உடம்பொடு கூடியல்லது வாழாதது போல, சால்பு நாணோடு கூடியல்லது நடவாது என்பதாம். 'ஊன்' ஆகுபெயர். 'உடம்பு' வகுப்பொருமை. 'நன்மை' ஆகுபொருளது. 'ஊனே' என்று பாடங் கொள்வர் மணக்குடவ காலிங்க பரிப்பெருமாளர்.

கoக்ச. அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றே பீடு நடை.

(இ—ரை.) சான்றோர்க்கு நாண் உடைமை அணி அன்றே—அறிவு நிறைந்தோர்க்கு நாணுடைமை ஓர் அணிகலமே; அஃது இன்றேல் பீடுநடை பிணி அன்றே—அவ்வணிகல மில்லையாயின் அவரது பெருமித நடை அவருக்கொரு நோயேயாம்.

அணிசெய்வதை 'அணி' யென்றும், இயல்பிற்கு மாறுனதைப் 'பிணி' யென்றும், கூறினர்; எதிர்மறையடுத்த ஒகார வினுக்கள் ஓசை வேறுபட்டால் உடன்பாட்டுப் பொருள் தந்து அதைத் தேற்றஞ் செய்தன. இக்குறளின் பிற்பகுதிக்கு, "அவ்வாபரண மில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.. ..... பொறுத்தற் கருமையிற் 'பிணி'யென்றுங் கூறினர்." என்பது பரி மேலழகருரை. இம் முக்குறளாலும் நாணுடைமையின் சிறப்புக் கூறப்பட்டது.

கoகரு. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

(இ—ரை.) பிறர் பழியும் தம் பழியும் நாணுவார்—பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒப்ப மதித்து அவ்விரண்டிற்கும் நாணுவாரை; உலகு நாணுக்கு உறைபதி என்னும்—உலகத்தார் நாணிற் குறைவிடமென்று சொல்வர்.

ஒப்ப மதித்தலாவது பிறர் பழியையும் தம் பழிபோற் கருதுதல், 'உலகு' ஆகுபெயர்.

கoகக. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

(இ—ரை.) மேலாயவர்—உயர்ந்தோர்; வேலி நாண் கொள்ளாது—தமக்குப் பாதுகாப்பாகிய நாணினைக் கொள்வதன்றி; வியன் ஞாலம் பேணலர்—பரந்த ஞாலத்தைக் கைப்பற்ற விரும்பார்.

நாணும் ஞாலமுமாகிய இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை நேர்ந்த விடத்து, ஞாலத்தையே தெரிந்து கொள்வர் என்பதாம். பழி பளகு, நேராமற் காத்தலின் நாணை 'வேலி' என்றார். "மன்னும் ஓவும் அசை." என்றார் பரிமேலழகர். முற்காலத்தில் 'மன்னே' என்பது ஆடூஉ முன்னிலையாயிருந்தமை முன்னரே கூ0—ஆம் குறளுரையிற் கூறப்பட்டது. நாணுகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பார் என்னும் உரை, முரண்பாடு கொள்ளுதலின் பொருந்தாது.

கூ0கஎ. நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணெண்டுறவார் நாணுள் பவர்.

(இ—ரை.) நாண் ஆள்பவர்—நாணை உயிர்நாடிப் பண்பாகக் கொள்பவர்; நாணுல் உயிரைத் துறப்பர்—நாணும் உயிரும் தம்முள் மாருனவிடத்து நாணைக் காத்ததற் பொருட்டு உயிரைநீப்பர்; உயிர்ப் பொருட்டு நாண் துறவார்—உயிரைக் காத்தற்பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண் சிறந்ததென்பது கருத்து. "உயிரினுஞ் சிறந்தன்று நாணே." (தொல், களவு. உ). இவ்விரு குறளாலும் நாணுடையார் செயல் கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

கூ0கஅ. பிறர்நாணத் தக்கது தானுஞ் ஞயி
னறநாணத் தக்க துடைத்து

(இ—ரை.) பிறர் நாணத் தக்கது தான் நாணுனையின்—கண்டாருங் கேட்டாருமாகிய பிறர் நாணத்தக்க பழியை ஒருவன்தான் நாணுது செய்வானுயின்; அறம் நாணத் தக்கது உடைத்து—அந் நாணுமை அறம் 'நாணி' அவனைவிட்டு நீங்கத் தக்க குற்றத்தை யுடையதாம்.

நாணில்லாதவனை அறஞ்சாராது என்பது ஆட்படையணி. நாணின்றி அறமில்லை யென்பது கருத்து.

கூ0கக. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னிலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

(இ—ரை.) கொள்கை பிழைப்பின் குலம் சுடும்—ஒருவன் தன் கொள்கை தவறியொழுகின், அத் தவறு அவன் குடிப்பிறப்பை மட்டும் கெடுக்கும்; நாண் இன்மை நின்றக்கடை நலம் சுடும்—ஆயின், ஒருவனிடத்து நாணின்மை நிலைத்து நின்றவிடத்தோ, அந்நிலைப்பு அவன் நலம் எல்லாவற்றையுங் கெடுத்துவிடும்.

கொள்கையாவது குடியுயர்வைப் பேணும் நெறிமுறை. 'நலம்.' வகுப்பொருமை. நலவகைகள்பிறப்பு, இயற்கையறிவு, கல்வி, பண்பு செயல் முதலியன. ஒழுக்கமின்மையினும் நாணின்மை மிகத் தீயது என்பதாம்.

கo2o. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று.

(இ—ரை.) அகத்து நாண் இல்லார் இயக்கம்— தம் மனத்தில் நாணில்லாத மாந்தர் நாணுடையார் போன்றே நடமாடும் நடமாட்டம்; மரப்பாவை நாணுல் உயிர் மருட்டிய அற்று—மரத்தினாற் செய்த சிறு படிமை, தன்னை யாட்டும் பொறிக்கயிற்ரு லேற்பட்ட தன் ஆட்டத்தினால், தான் உயிருள்ளதுபோல் தோன்ருமாறு பார்ப்பவர் கண்களை மயக்கினாற் போலும்.

நாணில்லாதவன் செத்தவனை யொத்தவன் என்பது கருத்து. 'உயிர் மருட்டி யற்று' என்பதால், பாவையின் அழகும் உயிரோவிய வேலைப்பாடும் அக்காலத் தமிழரின் படிமைக் கலைத் தேர்ச்சியும் உணரப்படும். இம்மூன்று குறளாலும் நாணில்லாரின் இழிவு கூறப்பட்டது.

ஆதி. கoஉ—குடிசெயல்வகை

அஃதாவது, ஒருவன்தான் பிறந்த குடியை மேன்மே லுயரச் செய்தலின் திறம். இது காழ்வு பற்றி நாணுடையார்க்கே உள்ளதாதலின், நாணுடைமையின் பின் வைக்கப்பட்டது.

இங்குக் குடியென்றது சேரசோழ பாண்டியர் குடிகளும் சேக்கிழார் குடியும் போலக் கொடிவழியையுஞ் சரவடியையுமேயன்றி, இற்றைத் குலங்களை யன்று.

ஆரியத்தால் தாழ்த்தப்பட்ட தமிழ இனத்தை முன்னேற்றிய நயன்மைக்கட்சி (Justice party) யாட்சியும், அதன் வழிப்பட்ட இற்றைத் திராவிடர் முன்னேற்றக் கழக ஆட்சி, விரிவுபட்ட குடிசெய்ல்

வகைகளே. ஆயின், தமிழ இனத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதும், ஆரியவழி நின்று குலத்தைப் பிறப்பொடு தொடர்பு படுத்துவதுமான; சில தமிழ வகுப்புக்களின் தனித்தனி முன்னேற்ற முயற்சி திருவள்ளுவர் போலும் அறிஞர் போற்றத்தக்கதன்று.

பரந்த நோக்கொடு விரிந்தவகையில் குடிசெயல் தொண்டாற்றிய தனிப்பட்ட தமிழத் தலைவர் திருவள்ளுவர் ஒருவரே.

கூ0உ. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

(இ—ரை.) கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின்—தான் பிறந்தகுடியை மேன்மேலும் முன்னேற்றும் முயற்சியைக் கைவிடேன் என்னும் பெருமைபோல; பீடு ஒருவன் உடையது இல்—சிறந்த பெருமை ஒருவனுக்கு வேறொன்று மில்லை.

குடிசெய்தற்கு என்பது அதிகாரத்தால் வந்தது. குடி என்பது குடும்பம் முதல் நாட்டினம் (Nation) வரை பல்வேறு அளவுள்ள மக்கள் வகுப்புக்களைக் குறித்தாலும், குடிசெயல் என்பது அரசியல் போலக் காத்தலை மட்டுஞ் செய்யாது மேன்மேலுயர்த்துதலையும் மேற்கொள்ளுதலாலும், 'பெருமையிற் பீடுடைய தில்.' என்றார். ''குடிசெய்தற் கருமமே நடத்தலால்' தன் கருமஞ் செய்யவென்று முரைப்பாரு முளர்; தன் கருமமும் அதுவே யாகலானும், பிறரேல் செய்தல் தகுமையன்மையானும், அவையுரையன்மை அறிக.'' என்னும் பரிமேலழகர் மறுப்புக் கொள்ளத்தக்கதாம்.

கூ0உ. ஆள்வினை யுமான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினை யா னீளுங் குடி.

(இ—ரை.) ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினையான்—முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்படும் இரண்டினையுமுடைய இடையறுத செயலால்; குடிநீளும்—ஒருவனது குடி உயரும்.

ஆள்வினை ஆண்டு நடத்துஞ் செயல். ஆளுதல்—நிறைதல். அறிவுநிறைதலாவது இயற்கை யறிவொடு செயற்கையறிவுஞ் சேர்தல். ஆள்வினை சோம்பலை நீக்கற்கும் ஆன்றவறிவு வெற்றிபெறச் சூழ்தற்கும் வேண்டியனவாம். 'நீள்வினை' விடாமுயற்சி. குடிநீள்தல் தொடர்தலும் உயர்தலும்.

கஅஉங. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(இ—ரை.) குடிசெய்வல் என்னும் ஒருவற்கு—என் குடியை மேன்மேலுயர்த்துக் கடவேன் என்னும் பூட்கைகொண்டு, அதற் கேற்ற முயற்சியைச் செய்யும் ஒருவனுக்கு; தெய்வம் மடி தற்றுத் தான் முந்து உறும்—உதவி செய்யும் பொருட்டுத் தெய்வமும் தன் ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு அவனுக்கு முன் வந்து நிற்கும்.

சொல்லுதல் செயலையுந் தழுவிற்று. கறுதல் இறுகவுடுத்தல். ஒன்றைத் தப்பாது செய்து முடிப்பதாக உள்ளத்திற் பூணுதல் பூட்கை. குடிசெய்தல் வினை இறைவனுக்கும் இசைந்ததென்பது கருத்து.

கஅஉச. சூழாமற் ரூனே முடிவெய்துந் தங்குடியைத
தாழா துளூற்று பவர்க்கு.

(இ—ரை.) தம் குடியைத் தாழாது உளூற்றுபவர்க்கு—தம் குடியை யுயர்த்துதற்கேற்ற வினையைத் தவக்கமின்றி முயல்வார்க்கு; சூழாமல்தானே முடிவு எய்தும்—அம்முயற்சி அதற்கேற்ற சூழ்வினை வேண்டாது தானுகவே வெற்றியாக முடியும்.

தெய்வத்துணை யிருத்தலால், விரைந்த முயற்சி மட்டுமிருப்பின் எளிதாய் முடியும் என்பதாம். 'குடி' ஆகுபொருளது.

கஅஉடு. குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு

(இ—ரை.) குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்வானை—ஒரு குற்றமுஞ் செய்யாது தன் குடியை யுயரச் செய்தொழுகுவானை; உலகு சுற்றமாச் சுற்றும்—அவன் குடியைச் சேர்ந்தார் அனைவரும், அவனுக்குச் சுற்றமாயிருத்தலே விரும்பித் தாமே சென்று அவனைச் சூழ்வர்.

குற்றங்கள் அறநயன் (நீதி) முறை (நியாயம்) நடுநிலைகட்கு மாருன செயல்கள். சுற்றம் உறவினராகச் சுற்றியிருக்கும் கூட்டம். உலகு' வரையறுத்த ஆகுபெயர்.

கஅஉசு. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(இ—ரை.) ஒருவற்கு நல் ஆண்மை என்பது—ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது; தான் பிறந்த இல் ஆண்மை ஆக்கிக் கொளல்—தான் பிறந்த குடியை ஆளுந் தன்மையைத் தனக்கு உண்டாக்கிக் கொள்ளுதல். குடி யாளுந் தன்மையாவது குடியிலுள்ள வரை முன்னேற்றித் தன் வயப்படுத்துதல். போராண்மையினின்று வேறுபடுத்தற்கு 'நல்லாண்மை' யென்றார். இவ்விரு குறளாலும் குடிசெய்வாரின் தகுதிமை கூறப்பட்டது.

கஉஎ. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

(இ—ை.) அமர் அகத்து வன்கண்ணர் போல—போர்க்களத் திற்குச் சென்றார் பலராயினும், போரைத் தாங்கும் பொறுப்பு ஒரு சில கடுமறவர் மேலேயே இருத்தல்போல; தமர் அகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே—ஒரு குடியிற் பிறந்தார் பலராயினும், அதை முன்னேற்றும் பொறுப்பு அதைச் செய்யவல்ல ஒரு சிலர் மேலேயே உள்ளதாம்.

விளக்கம்பற்றி உவமத்திற்கும் பொருட்கும் வேண்டிய சொற்கள் வருவிக்கப்பட்டன. உம்மை இறந்தது தழுவிய எச்சம். ஏகாரம் பிரிநிலை. இக்குறளால் குடிசெய்வாரின் பொறுப்புக் கூறப்பட்டது.

கஉஅ. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

(இ—ரை.) மடிசெய்து மானம் கருதக் கெடும்—தங்குடியை முன்னேற்றுவார், அத்தொண்டைக் கவனியாது காலநிலைமை நோக்கிச் சோம்பியிருந்து கொண்டு தன்மானத்தையும் பெரிதாய்க் கருதுவராயின், அவர் குடிகெடும். குடிசெய்வார்க்குப் பருவம் இல்லை—ஆதலால், குடிசெயல் தொண்டர்க்குக் காலவரம்பில்லை.

காலத்தை நோக்கிச் சோம்பியிருத்தலாவது, வெயில் மழை பனிக்காலங்கள் கழிந்தபின் செய்வோமென்று கடத்தி வைத்தல். தன்மானங் கருதுதலாவது, இக்குடியிலுள்ள ஏனையோரெல்லாம் இன்புற்றிருக்க நான் மட்டும் ஏன் துன்புற வேண்டுமென்று எண்ணு வதும், முன்னேற்றப் பகைவரின் கல்லடிகளையுஞ் சொல்லடிகளையும் பொறுத்துக் கொள்ளாமையு மாம். முன்பு காலமறிதல் என்னும் அதிகாரத்தில் "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்று கூறியதனால், குடிசெய்வார்க்குங் காலம் வேண்டுமோ

என்று கருதுவாரை நோக்கி, அது வேண்டியதில்லையென்று ஐயமகற்றியவாறு.

கஅ2கூ. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு

(இ—ரை.) குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு—அடிமைத்தனம், அறியாமை, வறுமை என்னும் மூவகை நிலைமையாலும் தன்குடிக்கு வருந்துன்பங்களை நீக்கப் பாடுபடும் குடிசெயல் தலைவனது உடம்பு; இடும்பைக்கே கொள்கலங் கொல்—துன்பத்தையே இட்டு நிறைத்துவைத்தற்கு ஏற்பட்டதொரு ஏனமோ!

மூவகைத் துன்பநிலைமையாலும் முட்டுண்டு வருந்துங் குடியை முன்னேற்ற முயலுந் தலைவன், வாழ்நாள் முழுதும் அல்லும் பகலும் ஓயாது படும் மெய்வருத்தத்திற்கு அளவின்மையால், அவன் உடம்பு இடும்பையே இடும்பையோ என்று ஓர் அறிஞன் இரங்கிக் கூறியவாறு. ஏகாரம் பிரிநிலை. 'கொல்' விஞவிடைச்சொல். ஓகாரம் இரங்கலிடைச் சொல். மறைத்தல் தடுத்தலும் நீக்குதலும். 'குற்றம்' வகுப்பொருமை. இவ்விரு குறளாலும் குடிசெய்யும் வகை கூறப்பட்டது.

கஅ3ஏ. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

(இ—ரை.) அடுத்து ஊன்றும் நல் ஆள் இலாத குடி—பக்கத்தில் ஊன்றும் விழுதுபோல் முட்டுக் கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய ஆலமரம்; இடுக்கண்கால் கொன்றிட வீழும்—துன்பமாகிய சிதல் (கறையான்) தன் அடியை அரித்துத் தின்றுவிட ஒரு தாங்கலுமின்றி விழுந்துவிடும்.

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு
குதலைமை தந்தைகண் தோன்றின்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்." (நாலடி, ஈஈஎ)

"தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன
வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல் கடன்....." (சீவக. காந்தருவ. ஊ

பரிமேலழகர் குடியைப் பொதுமரம் போன்றதாகக் கொண்டு 'துன்பமாகிய நஞ்சியம் புகுந்து தன் முதலை வெட்டிச் சாய்க்க ஒரு

பற்றின்றி வீழாநிற்கும்; அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல வாண்மகன் பிறவாத குடியாகிற மரம்.'' என்று உரைத்தார். நவியம் முதலே வெட்டிச் சாய்க்கும்போது மரத்தைப் பற்றுக்கொடுத்துத் தாங்கினும் பயனின்மையின், அது உரையன்மை அறிக. மேலும், 'இடுக்கண் கால் கொன்றிட' என்னுந் தொடருக்குக் கோடரி வெட்டிச் சாய்க்க என்னும் பொருளினும் கறையான் அரிக்க என்னும் பொருளும்; 'அடுத்தூன்றும்' என்னும் தொடருக்குப் பற்றுக்கொடுத்துத் தாங்கும் என்னும் பொருளினும் பக்கத்தில் ஊன்றும் விழுதுபோல் தாங்கும் என்னும் பொருளும்; சிறப்பாகப் பொருந்துதலையும் நோக்குக. ''தூங்குசிறை வாவலுறை தொன் மரங்களன்ன'' என்னும் மேற்கோளைப் பரிமேலழகரும் எடுத்துக் காட்டியும், அதை ஆலமரமென்று அவர் அறியாமற்போனது சற்று மருளற் குரியதே. வீழும் அடுத்தூன்றும் 'நல்லா ளிலாத குடி' எனவே, வீழாது அடுத்தூன்றும் நல்லாள் உள்ள குடி என்பது பெறப்படும். இதற்குக் கோடரி வெட்டும் மரத்தை முட்டுக் கொடுத்துத் தாங்குதல் என்பது உவமமாகாமை அறிக. மரத்தை வீழ்தாங்குவதிலும் குடியை ஆள் தாங்குவதிலும் தாங்குதல் தன் வினையென்பதையும், மரத்தை ஒருவன் முட்டுக்கொடுத்துத் தாங்குவதில் தாங்குதல் பிறிதின்வினை யென்பதையும் அறிதல் வேண்டும். முட்டுக் கொடுப்பினுங் கொடாவிடினும், கோடரி வெட்டும் மரம் விழுந்தே தீரும். முட்டுச் செய்யக் கூடியதெல்லாம் திடுமென விழுவதை மெள்ள விழச்செய்வதே. இதனால், வெட்டுண்டு விழுந்த மரம் மீள அடியொடு பொருந்தித் தளிர்க்காது. நல்லாள் அடுத்தூன்றிய குடியோ இடுக்கண் நீங்கி மீளத் தழைத்தோங்கும். தொன்மரம் என்பது ஆலமரத்திற்கொரு பெயர். ஆலமரம் பழுத்தால் வாவல்கள் வந்து தங்கும். இக்குறள் குறிப்புருவகம். இதனால் குடிசெய்வார் இல்லாத குடியின் கேடு கூறப்பட்டது.

அதி. ௨௦—உழவு

அஃதாவது அரசனுக்கும் அவனுடைய குடிகட்கும் அல்லது ஒரு நாட்டு மாந்தர்க்கெல்லாம் இன்றியமையாத உணவை விளைப்பதும், கைத்தொழிற்கும் வாணிகத்திற்கும் ஓரளவு கரணியமாயிருப்பதும், அரசியல் நடத்தற்கு வேண்டும் இறையிற் பெரும் பகுதியை நல்குவதும், குடிகளுட் சிறந்த வேளாளர் என்னும் வகுப்பார்க் குரியதும், ஆன பயிர்த்தொழில். அது உழுதலாகிய அதன் முதல் வினை பற்றி உழவு எனப்பட்டது. உழவுத் தொழிலைப் பாண்டியம் என்பது இலக்கிய வழக்கு. பாண்டி—எருது. பாண்டியின் துணையாற் செய்யப்படுவது பாண்டியம். ''பகடு நடந்த கூழ்'' என்று நாலடியார்

(உ) கூறுதல் காண்க. அரசர்குடி உட்பட எல்லாக்குடிகளும் வாழ்வதற்கும் முன்னேறுவதற்கும் இன்றியமையாததனின், இது குடிசெயல் வகையின்பின் வைக்கப்பட்டது.

"சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு முரித்தாய உழுதற்றொழில் செய்விக்குங்கால் ஏனையோர்க்கு முரித்து, இது மேற்குடியுயர்தற் கேதுவென்ற ஆள்வினை வகையாததனின், குடிசெயல் வகையின் பின் வைக்கப்பட்டது" என்னும் பரிமேலழகர் அதிகாரப் பாயிரம், ஆரிய முறை தழுவியதும் பொருளொடு பொருந்தாதது மாதலின், ஈண்டைக்கு ஏற்கா தென்க.

கஅக. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
ழுழந்து முழுவே தலை.

(இ—ரை.) சுழன்றும் உலகம் ஏர்ப் பின்னது—உழவுத் தொழிலால் உண்டாகும் உடல் வருத்தம் நோக்கி வேறு பல்வகைத் தொழில்களைச் செய்து திரிந்தாலும், அதன் பின்னும் வேளாளரல்லாத உலகத்தா ரெல்லாரும் உழவுத் தொழிலின் வழிப்பட்டவரே; அதனால் உழந்தும் உழவே தலை—ஆதலால், எல்லா வருத்தமுமுற்றும் உழவுத் தொழிலே உலகில் தலையாயதாம்.

பிற தொழில்களாற் பொருள் தேடிய பின்பும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவின் பொருட்டு உழவரிடமே செல்ல வேண்டியிருத்தலின், 'சுழன்று மேர்ப் பின்ன துலகம்' என்றும், பிற தொழில்கள் வருத்தமின்றிச் செய்வன வேனும் கடைப்பட்டனவையென்பது தோன்ற 'உழவே தலை' என்றும் கூறினார். 'ஏர்' ஆகுபெயர். 'உலகம்' வரையறுத்த ஆகுபெயர். ஏகாரம் பிரிநிலை உம்மை யிரண்டனுள், முன்னது எச்சத்தின் பாற்பட்ட பின்னை; பின்னது இழிவின் பாற்பட்ட ஒத்துக்கொள்வு.

கஅஉ. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றாது
தொழுவாரை யெல்லாம் பொறுத்து.

(இ—ரை.) உழுவார் உலகத்தார்க்கு ஆணி—உழவுத் தொழிலைச் செய்வார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர்; அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து—அத்தொழிலைச் செய்யும் வலிமையின்றிப் பிற தொழில்களை மேற்கொள்வாரை யெல்லாம் தாங்குதலால்.

தேரோட்டத்திற்கு அச்சாணி போல உலக நடப்பிற்கு உழவர் இன்றியமையாதவராதலின் 'ஆணி' யென்றார். தொழில் பற்றிய நால்

வகுப்பாருள், உழுவராகிய வேளாளரும் ஏனை வகுப்பார் போன்றே இருபிரிவார். அவர் சிறுநிலமே யுடைமையால் தாமே உழுதுண் பாரும் பெருநில முடைமையாற் பிறரைக் கொண்டு உழுவித்துண் பாரும் ஆவர். அவ்விருபிரிவாரும் முறையே கருங்களமர் அல்லது காராளர் என்றும், வெண்களமர் அல்லது வெள்ளாளர் என்றும், பெயர் பெறுவர். வேளாளர் என்பது அவ்விரு பிரிவார்க்கும் பொதுப் டெயராம். விருந்தோம்பி வேளாண்மை செய்பவர் வேளாளர். 'உலகத்தார்' என்றது இங்கு உழவரல்லாதாரை. உலகத்தாரைத் தேரென்ஞமையால் இங்குள்ளது ஒரு மருங் குருவகம்.

மணக்குடவ காலிங்க பரிதி பரிப்பெருமாளர் நால்வரும், 'அஃதார்ருர் தொழுவாரே யெல்லாம் பொறுத்து,' என்று பாடங் கொண்டுள்ளனர். அதற்கு "அதனைச் செய்யாதாரே (செய்யாதவர்) பிறர் பெருமிதத்தினுல் செய்வன வெல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பார்." என்பது மணக்குடவ பரிப்பெருமாளர் உரை. ஏனையிருவ ருரையும் இதையொத்ததே.

1046. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(இ—ரை) உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்—ஏல்லாரும் உண்ணும் வகை உழவுத் தொழிலைச் செய்து அதனுல் தாமும் உண்டு வாழ்பவரே, உரிமையுடன் வாழ்பவராவர்; மற்று எல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர்—மற்றேரெல்லாம் பிறரை வணங்கி அதனுல் உண்டு அவர்பின் செல்லும் அடிமையரே.

உழவர் தம் விருப்பப்படியும் பிறர் விருப்பப்படியும் தொழில் செய்பவர் என்பது கருத்து. இது மக்கள் தொகை மிக்க இக்காலத் திற்கு ஏற்காது. தொல்காப்பியர் காலத்தில் அம்பிணையைக் குறித்த எல்லாம் என்னும் சொல் திருவள்ளுவர் காலத்தில் உயர்திணையை யுங் குறித்தது வழக்குப்பற்றிய திணை வழுவமைதி. ஏகாரம் பிரிநிலை.

1047. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(இ—ரை.) அலகு உடை நீழலவர்—நெல்லை விளைக்கும் ஈர நெஞ்சத்தாரான உழவர்; பல குடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர்—பல வேற்றரசரின் குடை நிழலின்கீழுள்ள நாடுகளையும் தம் அரசன் குடைக்கீழ்க் கொண்டுவருவர்.

அரசனுக்கு ஆறிலொரு கடமை யிறுப்பதனாலும் போர்க் காலத்திற் படைமறவராகச் சென்று பொருது வெற்றி விளைத்தலா லும், 'பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்' என்றார்.

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி." (கஇஅக)

"வேந்துவிடு தொழிலின் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே." (கஇஅஉ)

என்பன தொல்காப்பியம்.

"பொருபடை தருஉங் கொற்றமு முழுபடை
ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே"

என்றார் வெள்ளைக்குடி நாகனார். (புறம். கூஇ)

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்....."

என்றார் இளங்கோவடிகள் (சிலப். கo : கசகூ—ஙo). அலகு கதிர். அது இங்கு ஆகுபெயராய் நெல்லைக் குறித்தது. உடைய என்பது உடை எனக் குறைந்து நின்றது. 'நீழலவர்' என்றது இரப்போர்க் கெல்லாம் ஈயும் தண்ணளிபற்றி. 'குடை நீழல்' (நாடு) 'குடை' (ஆட்சி) என்பன ஆகுபெயர்கள். 'தங்குடை' என்றது ஒற்றுமை யும் அன்பும் பற்றி, மணக்குடவரும் பரிப்பெருமாளரும் அலகு டை என்று பகுத்து, 'குடையில்லா' என்றும் 'குடையல்லாத' என்றும் முறையே பொருள் கூறுவர்.

கoகடு. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(இ—ரை.) கை செய்து ஊண் மாலையவர் இரவார்—தம் கையால் உழுதுண்டலே இயல்பாக வுடைய உழவர் பிறரிடம் தாம் ஒன்றையும் இரவார்; இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர்—தம்மை யிரப்பவர்க்கெல்லாம் அவர் வேண்டியதொன்றை இல்லையென்னாது ஈவர்.

'கை செய்து' என்னும் மூன்றும் வேற்றுமைத் தொகைக்கு, உழவு என்னும் செய்பொருள் அதிகாரத்தால் வந்தது. 'கைசெய் தூண் மாலை யவர்' என்பது, ஒரு காலும் வற்றாத வருவாயுடையவ ரென்னும் ஏதுவைக் குறிப்பாய் உணர்த்தி நின்றது. "மாலை யியல்பே." என்றார் தொல்காப்பியர் (சொல். உரி. கத). அது இன்று மானே என்று நெல்லை நாட்டில் உலகவழக்காக வழங்கு கின்றது.

கஅ0ஈ. உழவினுர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

(இ—ரை.) உழவினுர் கை மடங்கின்—உழவுத்தொழிலைச் செய்வாரின் கை அதைச் செய்யாது ஓய்ந்திருக்குமாயின்; விழைவதும் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை—மாந்தராற் சிறப்பாக விரும்பப்படும் பெண்ணின்பத்தையுந் துறந்தோம் என்று பெருமை கூறிக்கொள்ளும் துறவியர்க்கும், அவர் அறத்தில் நிற்பது இல்லாமற்போம்.

உழவுத் தொழில் நிகழாதாயின் உணவில்லை. உணவில்லையெனின் இல்லறம் துறவறம் ஆகிய ஈரறமும் நிகழா என்பதாம். "யாவரும் விழையுமுணவும் யாந்துறந்தே மென்பார்க்கு அவ்வறத்தின்கணிற்றலுமுளவாகா." என்றுரைப்பர் பரிமேலழகர். உணவும் யாந்துறந்தே மென்பார்க்கு உணவின்மையால் யாதொரு கேடுமிராதாதலின், அவ்வுரை தன்முரணுயிருத்தல் காண்க. இனி, "யாதொரு பொருளின் கண்ணும் விரும்புவதனையும் விட்டேம் என்பார்க்கு அந்நிலையின்கண் நிற்றல் இல்லை." என்னும் மணக்குடவருரையும், அங்ஙனமே தன் முரணுயிருத்தலாற் பொருந்தாதாம். 'விழைவதூஉம்' இன்னிசை யளபெடை. என்பார்க்கும் என்னும் எச்சவும்மை தொக்கது. இவ்வைந்து குறளாலும் உழவரது சிறப்புக் கூறப்பட்டது.

கஅ0உ. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

(இ—ரை.) தொடிப்புழுதி கஃசா உணக்கின்—ஒரு நிலத்தை யுழுதவன் ஒருபலப் புழுதி காற்பலம் ஆகும் வண்ணம் அவ்வுழவடிப் புழுதியைக் காயவிடுவானுயின்; பிடித்து எருவும் வேண்டாது சாலப் படும்—அந்நிலத்திற் செய்த பயிர் கைப்பிடியெருவுந் தேவையின்றிச் செழித்து வளரும்.

பிடித்து ஒருபிடிக்குள் அடங்கியது. உம்மை இழிவு சிறப்பு. 'புழுதி' என்றமையால் உழுதபின் கட்டியடித்தலும் பரம்படித்தலும் பெறப்படும்.

கஅ0ஊ. ஏரினு நன்ரு லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

ஏரினும் எரு இடுதல் நன்று—பயிர் செய்யவேண்டிய நிலத்தை ஆழவுழுவதினும், அதற்கு வளமான உரமிடுதல் நல்லதாம்; கட்ட பின்—அந்நிலத்தில் விதைத்து முளைத்து அல்லது நாற்று நட்டுப் பயிர் வளரும்போது முற்றுங் களையெடுத்தபின்; நீரினும் அதன் காப்பு நன்று— உரியநாள் முறைப்படி நீர் பாய்ச்சுவதினும், அப் பயிர் விளைந்து கதிரறுத்துப் போரடித்துக் கூலம் வீடு வந்து சேரும் வரை தக்க காவல் செய்தல் மிக நல்லதாம்.

'ஏர்' ஆகுபொருளது. காத்தல் பட்டிமாடு பறவைகள் திருடர் பகைவர் முதலியவற்றுல் அழிவும் இழப்பும் நேராவாறு காவல் செய் தல். உழுதல், உரமிடுதல், களையெடுத்தல், நீர்பாய்ச்சுதல், காவல் செய்தல் ஆகிய முதன்மையான வினைகளை முறைப்படி குறிக்கும் போதே அவற்றை ஒப்புநோக்கிச் சிறந்தவற்றை விதந்து கூறினர். 'ஆல்' அசைநிலை.

கஅஉ. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

(இ—ரை.) கிழவன் செல்லான் இருப்பின்—நிலத்திற்குரிய உழவன் நாள்தோறும் சென்று அதற்கு வேண்டியவற்றைச் செய் யாது வீட்டிற் சோம்பியிருப்பின்' நிலம், இல்லாளிற் புலந்து ஊடி விடும்—அவன் நன்செய் அல்லது புன்செய், அவனுற் பேணப்படாத மனைவி போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்பு வெளிப்படையாகச் சடைத்துக் கொள்ளும்.

செல்லுதல் ஆகுவினை; அஃதாவது சென்று கவனித்துச் செய்ய வேண்டியவற்றைச் செய்தல். அவை முற்கூறியவற்றொடு, பூச்சி புழு நோய்கட்கு மருந்து தெளித்தல், வெள்ளத்தாலுடைந்த வரப்புத் திருத்துதல், வரப்புத்திறந்து மிகை நீரை வெளியேற்றுதல், பள்ளம் விழுந்த இடங்கட்கு மண்கொட்டுதல், காற்றுலும் மழையாலுஞ் சாய்ந்த கதிர்களை நிமிர்த்திக் கட்டுதல் முதலியன. ''உடையவன் போகா வேலி ஒருமுழங்கட்டை.'' யாதலால், நில முடையான் தானே செல்லவேண்டுமென்பதற்குக் 'கிழவன்' என்றார். தன்னி டத்துவந்து தன்னைப்பேணுத கணவனொடு மனைவி ஊடுவதுபோல் தன்னிடத்துவந்து நாள்தோறும் தன்னைக் கவனியாத நிலக்கிழவ னொடு நிலம் ஊடிவிடும் என்றது, விளையுளின்மையால் அவன் நுகர்ச்சியழித்தல் நோக்கி, 'அலகுடை நீழலவர்' என்று தெய்வத்தைப் போரை விதந்து கூறியமையால், 'இல்லாளி னூடிவிடும்' என்பது. மனைவி ஊடுதல் மருதநிலத்திற்குச் சிறந்ததென்னும் அகப்பொரு ளிலக்கணக் கொள்கையைக் குறிப்பாக வுணர்த்தும். இம்மூன்று குறளாலும் உழவுத்தொழில் செய்யும் வகை கூறப்பட்டது.

கoசo. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(இ—ரை.) இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்—யாம் பொருளில்லேம் என்று மனந்தளர்ந்து சோம்பியிருப்பாரைக் கண்டால்; நிலம் என்னும் நல்லாள் நகும்—நிலமகள் என்னுந் தாய் தனக்குள் சிரிப்பாள்.

வறியவரெல்லாரும் நிலத்தை யுழுது பயிர்விளைத்தால், உணவு பெறுவதோடு அவர் வறுமையும் நீங்கும் என்பது கருத்து. நிலமகள் மாந்தரெல்லாருக்குந் தாயாயிருப்பதனாலும், அவளிடம் போதிய அளவு நிலமிருப்பதனாலும், உழவுத்தொழிலை மேற்கொள்ளாத ஏழைச் சோம்பேறிகளைக் கண்டு அவள் எள்ளி நகையாடுவதாகக் கூறினார். நல்லாள் என்பது கண்ணிற்கு நன்மையாகிய அழகுபற்றிப் பெண்ணிற்கு ஏற்பட்டதொரு பெயர். அச்சொல் இங்குப் பெண்பாலாகிய தாயைக் குறித்தது. 'அசைஇ' சொல்லிசை யளபெடை. 'இரப்பாரை' என்பது மணக்குடவ காலிங்க பரிப்பெருமாளர் கொண்ட பாடம். உழவுத்தொழில் செய்யாதவர் வறுமையடைவர் என்பதால், அடுத்த அதிகாரத்திற்கு இங்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

பண்டைக் காலத்தில் மக்கள்தொகை மிகாது விளைநிலம் மிக்கிருந்ததனால் ''இலமென்றசைஇ.....நல்லா ணகும்,'' என்று கூறினார் ஆசிரியர். இந்நிலைமையையே.

''வித்துமேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.''

என்னும் வெற்றிவேற்கைச் செய்யுளும் (கூஅ) குறிக்கும். ஆயின் இக்கூற்று, மக்கள்தொகை வரம்பிறந்தோடி எண்ணிலா வுழவர் அங்கைநிலமு மின்றி அங்கலாய்க்கும் இக்காலத்திற்கு, எள்ளளவும் ஏற்காது.

அதி. கoடு—நல்குரவு

அஃதாவது, நுகர்வன யாவு மில்லாமை. நல்கூர்வது நல்குரவு. நல் நன்மை; கூர்தல் மிகுதல். நன்மையின்மையை நன்மை மிகுதி என்றது மங்கல வழக்கு, வெறுமையாகிய வறுமை நிரப்பு என்றது போல். இனி, நல்கு + ஊர்தல் என்று பகுத்து, பிறர் கொடுப்பதன் மேல் ஊர்ந்து செல்லுதல் என்று கூறினுமாம். உழவுத்தொழிலின் றேல் சோம்பேறிகள் மட்டுமின்றி ஒருநாடும் வறுமையடையும் என்னும் கருத்துப்பற்றி, இது உழவின்பின் வைக்கப்பட்டது.

நல்குரவுண்டாகும் வழிகள்; முன்னோர் தேட்டின்மை, பெற்றோரின்மை, உழைப்பின்மை, மதிநுட்பமின்மை, பொருளாசையின்மை, தாயத்தாருங் கள்வருங் கொள்ளுங் காரருங் கவர்தல், குடியுஞ் சூதும் விலைமகளிருறவுமாகிய தீயவொழுக்கம். இடர்க்கைப்பேராழிவு, நேர்மை என்பனவாம்.

கூ0ச க. இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னு தது.

(இ—ரை.) இன்மையின் இன்னாதது யாது எனின் — ஒருவனுக்கு வறுமையைப் போலத் துன்பந்தருவது எதுவென்று வினவின், இன்மையின் இன்னாதது இன்மையே வறுமையைப் போலத் துன்பந்தருவது வறுமையே, வேறொன்றுமில்லை.

ஒப்பதின்மை மிக்க தின்மையையும் உடனுணர்த்திற்று. இதில் வந்துள்ள சொல்லணி சொற்பொருட் பின் வருநிலை; பொருளணி தன்னுவமை.

கூ0ச உ. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

(இ—ரை.) இன்மை என ஒரு பாவி—வறுமையென்று சொல்லப்படுவ தொரு கொடியாள; இம்மையும் மறுமையும் இன்றி வரும்—ஒருவனிடத்து வருங்கால் அவனுக்கு இம்மையின்பமும் மறுமையின்பமும் இல்லாவாறு வருவான்.

நுகராமையால் இம்மையின்பமும் ஈயாமையால் மறுமையின்பமும் இல்லையென்பதாம். இம்மை, மறுமை என்பன ஆகுபெயர். பாவம்(வ) செய்தவன் பாவி (வ.); கரிசு (பாவம்), கரிசன் (பாவி) —ஆண்பால்; கரிசி (பாவி-பெண்பால்) என்பன தென்சொற்கள். கொடியவளையே இங்குப் 'பாவி' என்றார். 'இன்றிவரும்' என்பது மணக்குடவ பரிப்பெருமாளர் கொண்ட பாடம்; வறுமையைக் கொடியாள் என்று ஓர் ஆளாக உருவகித்தது ஆட்படையுணி.

கூ0ச ந. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

(இ—ரை.) நல்குரவு என்னும் நசை—வறுமையென்று சொல்லப்படும் ஆசை; தொல்வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும்—தன்னைக் கொண்டவனுடைய பழமையான குடிப்பண்பையும் அக் குடிப்புகழையும் ஒருங்கே கெடுக்கும்.

வறுமையினுல் பல பொருள்கள் மேலும் ஆசையுண்டாவதாலு லும், அவ்வாசை பல இழி தொழில்களைச் செய்யத் தூண்டுதலாலும் நல்குரவை நசையாக்கி அந்நசை தொல்வரவையுந் தோலையுங் கெடுக்குமென்றார். தோலைப் பரிமேலழகர் பழைய குடிவரவிற் கூற்ற சொல் என்றார். தோல் என்னும் சொல்லை.

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்."

என்னும் தொல்காப்பிய நூற்பா (பொருள். செய், கஉக), ஒருவகை வனப்பு என்னும் பனுவலின் பெயராகக் குறித்தலால், ஒருவரின் பொதுவகையான சொற்களைக் குறிக்குமாறு அதை ஆள்வது அத் துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும், அடுத்த குறள் இளிவந்தசொல்லைப் பற்றிக் கூறுதலால், அதன்கண் கூறியது கூறல் என்னுங் குற்றமுந் தங்கும். ஆகவே, ஆசிரியர் குறித்த பொருள் தெளிவாகவுந் திட்பமாகவுந் தெரியாதபோது, புகழ் என்னும் பொருள்கொள்வதே பொருத்தமாம். மணக்குடவ பரிப்பெருமாளர் வடிவழகு என்னும் பொருள் கொண்டனர். பரிதியார் உடம்பு என்று கொண்டார். காலிங்கர் வலி என்றார். "குடிப்பிறப்பழிக்கும் விழுப் பங் கொல்லும்" என்னும் மணிமேகலைத் தொடர் (கக:எசு) குடிப் பண்பும் புகழும் என்று கொள்ளவே இடந்தரும்.

கoசஅ. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(இ—ரை.) இன்மை—வறுமை; இற்பிறந்தார் கண்ணேயும்—தொன்று தொட்டுப் பண்பட்டு வந்த நற்குடியிற் பிறந்தவர் வாயி லும்; இளிவந்த சொல்பிறக்கும் சோர்வு தரும்—இழிவுதரும் சொல் கூடத் தோற்றுவித்தற் கேதுவான தளர்ச்சியை உண்டு பண்ணும்.

உயர்வு சிறப்பும்மை இளிவந்த சொல் பெரும்பாலும் பிறவாமை தோன்ற நின்றது. இளிவந்த சொல் ஒருவரிடம் சென்று ஈயென இரத்தல். "ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே." (தொல். கூஅ) "ஈயென இரத்தல் இழிந்தன்று" (புறம். உoச) சோர்வு துன்பமிகுதி பற்றித் தம் பிறப்பை மறந்து இளிவந்த சொல் சொல்ல நினைக்கும் மனத்தளர்ச்சி.

கoசஆ. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

(இ—ரை.) நல்குரவு என்னும் இடும்பையுள்—வறுமையென்று சொல்லப்படும் ஒரு துன்பத்துள்ளே ; பல் குரைத் துன்பங்கள் சென்று படும்—பல பெருந்துன்பங்கள் வந்து சேரும்.

பொருளில்லார்க் கிவ்வுலக மில்லியாதலால் வறுமையே துன்ப நிலைமையாம். நுகர்ச்சிப் பொருள்களின்மை யாகிய துன்பத்தினுல், பெற்றதாயும் விரும்பாமை, மனைவியின் சுடுசொல், மக்கள் உண வின்றிப் படுந்துன்பம், வெயிற்கும் மழைக்கும் பாதுகாப்பின்மை, உறவும் நட்புமின்மை, கற்ற கல்வி பயன்படாமை, ஈயென இரத்தல், இரந்தும் பெருமை, பெற்றும் போதாமை, ஈவாரைத் தேடியலைதல், கவலை கரைகடத்தல் முதலிய பல்வேறு பெருந்துன்பங்கள் விளைவ தால், 'பல்குரைத் துன்பங்கள் சென்று படும்' என்றார். சென்று படுதல் தாமே வந்து சேர்தல். குரை—பெருமை.

"ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப."

என்று தொல்காப்பியங் கூறுவதால் (சொல். இடை. உரி), பரிமே லழகர் "குரை இசைநிறை." என்றார்.

கoசு. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

(இ—ரை.) நல்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும்—சிறந்த நூற்பொருளைத் தெளிவாக அறிந்து விளக்கமாகவும் இனி தாகவும் எடுத்துச் சொன்னாராயினும் ; நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடும்—வறியவர் சொல்லுஞ் சொல் தன் பொருட் சிறப்பை இழந்துவிடும்.

பொருட் சிறப்பிழத்தல், கேட்பாரின் இகழ்ச்சியினுலும் பொருளு தவி வேண்டுவாரென்னும் அச்சத்தினுலுமாம்.

"நொய்தாந் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்
நொய்தாம் இரப்போன் நுவலுங்கால்—நொய்யசிறு
பஞ்சுதனின் நொய்யானைப் பற்றுதோ காற்றினின்
அஞ்சும்அவன் கேட்ப தறிந்து"

என்னும் நீதிவெண்பாச் செய்யுள் இங்கு நினைக்கத்தக்கது. உம்மை உயர்வு சிறப்பு.

கoசஎ. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

(இ—ரை.) அறம் சாரா நல்குரவு—அறத்தோடு பொருந்தாத வறுமையை யுடையவன்; ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப் படும்—தன்னைப் பெற்று வளர்த்த தாயாலும் அயலான்போலப் புறக்கணிக்கப்படுவான்.

அறஞ்சாராமை யாவது, முற்பிறப்பில் அறஞ்செய்யாமையால் கரணியத் தொடர்பும், இப்பிறப்பில் அறஞ்செய்ய முடியாமையால் கருமியத் தொடர்பும் இன்மை. 'நல்குரவு' ஆகு பொருளது. உயர்வு சிறப்பும்மை பெற்றதாயின் இயற்கையான அன்புச் சிறப் பைக் காட்டி நின்றது. கொள்வதொன்று மின்மையோடு கொடுக் கவும் நேர்தல் பற்றி, வறியவர்போ உறவினரெல்லாரும் துறப்பர் என்பதாம்.

கoசீ. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

(இ—ரை.) நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு—நேற்றும் வந்து என்னைக் கொன்றதுபோலும் துன்புறுத்திய வறுமை; இன்றும் வருவது கொல்—இன்றும் வருமோ? வந்தால் ஐயோ! நான் என் செய்வேன்!

இது முந்தின நாள் அரும்பாடுபட்டுத் தன் வயிற்றை நிரப்பிய ஓர் இரப்போனின் இரங்கற் கூற்று. உம்மைகள் முறையே இறந் தும் எதிரும் தழுவிய எச்சம். 'கொல்' ஐயம். 'ஓ' இரங்க லிடைச்சொல். 'நிரப்பு' மங்கல வழக்கு.

கoசஉ. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

(இ—ரை.) நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்—ஒருவன் மந்திர மருந்துகளால் நெருப்பினுள் கிடந்து உறங்குதலும் கூடும்; நிரப் பினுள் யாது ஒன்றும் கண்பாடு அரிது—ஆயின், வறுமையிலிருந்து கொண்டு எவ்வகையிலுங் கண்மூடித் தூங்கவே முடியாது

நெருப்பினும் வறுமை கொடிது என்றவாறு. இதுவும் அவன் துயரக் கூற்று. உம்மை யிரண்டனுள் முன்னது அருமை; பின்னது முற்று. இனி, 'யாதொன்றும்' என்பது ஒரு சிறிதும் எனினுமாம். இவ்வும்மை இழிவு சிறப்பு. இத்தொன்பது (ஒன்பது) குறளாலும் வறுமையின் கொடுமை கூறப்பட்டது. 'நிரப்பு' மேற் கூறியதே.

கஅடு. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(இ—ரை.) துப்புரவு இல்லார் துவரத் துறவாமை—நுகர்ச்சிப் பொருள்களில்லாதார் உலகப் பற்றை முற்றத் துறக்கும் நிலைமையிருந்தும் அங்ஙனஞ் செய்யாதிருத்தல்; உப்பிற்கும் காடிக்கும் கூற்று—பிறர் மனைகளிலுள்ள உப்பையும் புளித்த பழங்கஞ்சியையும் உண்டொழித்தற்கேயாம்.

நுகர்ச்சிப் பொருள் ஒன்றுமில்லாதவர் மானமுள்ளவராயின் செய்யத் தக்கது உலகப்பற்றை முற்றத் துறத்தலே. ஏற்கனவே உலகப் பொருளும் உறவினரும் இல்லாமையால், அவர் துறத்தற்கு எஞ்சி நிற்பது உடம்பொன்றே. ஆதலால், புறப்பற்றுத் தானாக நீங்கிய அவருக்கு அகப்பற்றை நீக்கும் துறவுநெறிச் செலவு எளிதாக இயலும். அதனால், இம்மையில் மானத்தைக் காத்தலொடு மறுமையிற் பெறற்கரிய வீடுபேறும் உண்டாம். அங்ஙனமிருந்தும், அதைச் செய்யாது பிறர் வீடுதொறும் சென்றிரந்து, வாயிற்கு வெளியே அளிடும் பழங் கஞ்சியை நாய்போலருந்தித் திரிவது எத்துணை மடமையும் மானக்கேடுமான செயலாம் என்று ஆசிரியர் இரங்கிக் கூறியவாறு. கூற்றுவன் உயிர்கவர்தலே உயிருண்ணல் (குறள். கூஉக) என்னும் வழக்குண்மையின், பழங் கஞ்சியுண்ணும் இரப்போரை அதற்குக் கூற்று என்றார். "முற்றத் துறவாமையாவது துப்புரவில்லாமையின் ஒருவாற்றுற் றுறந்தாராயினுள் பின்னவற்றை மனத்தாற் றுறவாமை" என்றுரைப்பது பொருந்தாது, துறவென்பது மனத்தால் துறத்தலேயாதலின்.

அதி. கஅக—இரவு

அஃதாவது, உழைக்க இயலாதவரும் கலைகண் இல்லாதவருமான குருடர், கூனர், சப்பாணியர், நொண்டியர், முடவர், நோயாளியர், முதியர் முதலியோர் இரந்துண்டல். இது முன்னோர் தேட்டும் உறவினருதவியும் இல்லாத வறுமையால் நேர்தலின், நல்குரவின் பின் வைக்கப்பட்டது.

எச்சப் பிறவியரும் இறைவனாற் படைக்கப்பட்டுக் குடிகளாயிருத்தலாலும் அவரையும் நோயாளியரையும் முதியோரையும் கொல்லுதல் கொலையாதலாலும். அவருக்கு வாழ்க்கை வழி இரத்தலேயென்று அறநூலார் நெறி வகுத்துள்ளனர். இது மானந் தீரா இரவு. இது இக்காலத்தில் பின்தங்கிய நாடுகள் முன்னேறிய நாடுகளிடம் உதவிபெறுவது போல்வது.

கoடுக. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

(இ—ரை.) இரத்தக்கார்க் காணின் இரக்க—இரப்போர் இரக்கத்தக்க ஈகையாளரைக் காணின் அவரிடம் இரக்க; கரப்பின் அவர்பழி தம்பழி அன்று—அவர் இல்லையென்று கரந்தாராயின், அது அவர் குற்றமேயன்றி இரந்தவர் குற்றமன்று.

பழி என்பது இழிவு என்றுமாம். இரத்தலே இழிந்ததும் துன்பந்தருவதுமாயிருத்தலின், அதன் மேலும் இழிவும் மனவருத்தமும் நேராமைப்பொருட்டு, 'இரக்க இரக்கத்தக்கார்க காணின்' என்றார். இரக்கத் தக்கார் வாய்திறந்து இரக்குமுன்பே குறிப்பறிந்து அன்போடு ஈயும் இயல்புடையார். அவர் ஒரு சிலரேயாதலின் 'காணின்' என்றும், அவரிடத்தில் இரத்தல் துன்பந்தராமையின் 'இரக்க' என்றும், அவர் கரத்தல் அருமையாதலின் 'கரப்பின்' என்றும், அவர் கரத்தல் அவருக்கே பேரிழிவைத் தருதலின் 'அவர் பழி' என்றும், உழைக்கும் நிலைமையில்லார் இரந்தே பிழைக்க வேண்டியிருத்தலின் 'தம்பழியன்று' என்றும், கூறினார்.

"ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று." (புறம். உoச)

'இர' முதனிலைத் தொழிற்பெயர்.
'இரத்தக்கார்' நாலாம் வேற்றுமைத்தொகை.

கoடுஉ. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறுஅ வரின்.

(இ—ரை.) இரந்தவை துன்பம் உருவரின்—இரந்த பொருள்கள் ஈவாரது பண்பாட்டினுல் வாய் திறக்கு முன்பே விரைந்து மகிழ்ச்சியொடு கிடைக்குமாயின்; ஒருவற்கு இரத்தல் இன்பம்—ஒருவனுக்கு இரத்தலும் இன்பந்தருவதாம்.

துன்பம் காலமறிந்து செல்லுதல், காத்திருத்தல், ஈவார் மனநெகிழக் கெஞ்சுதல், அவர் முகந்திரிந்து நோக்குதலும் கடுஞ்சொற் சொல்லுதலும் மறுத்தலும் முதலியவற்றுல் வருவது. 'இன்பம்' ஆகுபொருளது. 'உறு' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். 'உறுஅ' இசைநிறை யளபெடை. "இரந்தவர் துன்பமுறு வரி" னென்று பாடமோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்றுற் றுன்புறுது எதிர்வந்தீவாராயி னென்றுரைப்பாரு முளர்." என்று பரிமேலழகர் கூறுவர். இதற்கு

"என்று முகமனியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றேர்."

என்னும் நன்னெறியடிகள் மேற்கோளாம். இரத்தலும் என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது.

கoடுங. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேர் உடைத்து.

(இ—ரை.) கரப்பு இலா நெஞ்சின் கடன் அறிவார் முன் நின்று இரப்பும்—கரத்த லில்லா நெஞ்சினையுடைய கடமையறிவார் முன்நின்று அவரிடத்து இரத்தலும்; ஓர் ஏர் உடைத்து—இரப் போர்க்கு ஓர் அழகுடையதாம்.

கடனறிவார் இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்காத கடமையுணர்ச்சியாளர். உம்மை இழிவு சிறப்பு. 'ஏர்' இசை நிறையளபெடை சுருங்கிய கண்ணும் மழுங்கிய முகமும் ஒடுங்கிய வுடலும் வளைந்த முதுகும் தளர்ந்த நிலையும் இளிவந்த சொல்லு மின்றி, விளிர்ந்த கண்ணும் மலர்ந்த முகமுங் கொண்டு ஏக்கழுத்த மாய் எக்களித்து நிற்கும் நிலையை 'ஏர்' என்றார்.

கoடுச. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

(இ—ரை.) கனவிலும் கரத்தல் தேற்றாதார் மாட்டு—தம்மிடத் துள்ள பொருளைக் கனவிலுங் கரத்தலறியாதவரிடத்து; இரத்தலும் ஈதலே போலும்—ஒன்றை யிரத்தலும் வறியார்க் கொன்றீதலே போலும்!

இரந்த பொருள் இழிவுந் துன்பமுமின்றி வருதலாலும், ஈவோனுக்குப் புகழைக் கொடுத்தலாலும், 'இரத்தலும் ஈதலே போலும்' என்றார். உம்மை யிரண்டனுள் முன்னது இழிவு சிறப்பு; பின்னது எச்சம். ஏகாரம் ஈற்றசை.

கoடுடு. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

(இ—ரை.) கண்நின்று இரப்பவர் மேற்கொள்வது—வாய் திறந்து இளிவந்த சொல்லைச் சொல்லமாட்டாது ஒருவருக்கு முன் நிற்கும் நிலையினாலேயே இரக்கும் மாளியர், தம் உயிரோம்பும்

பொருட்டு இரத்தலே மேற்கொள்வது; கரப்பு இலார் வையகத்து உண்மையான்—தம்மிடத்துள்ள பொருளைக் கரவாது ஈயும் ஒருசிலர் உலகத்து இருப்பதனாலேயே.

அத்தகையார் இல்லையெனின், தன்மானமுள்ள இரப்போரும் இறப்பர் என்பதாம்.

கoடுக. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

(இ—ரை.) கரப்பு இடும்பை இல்லாரைக் காணின்—தம்மிடத்துள்ளதைக் கரத்தலாகிய நோயில்லாதவரைக் கண்டால்; நிரப்பு இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்—தன்மானத்தை விடாது இரப்போருக்கு வறுமையால் வருந்துன்பமெல்லாம் ஒருசேரத் தொலையும்.

கரத்தல் மறுமை யின்பத்திற் கேதுவான மன நலத்தைக் கெடுத்தலால், அதை நோய் என்றார். நோய் இடும்பைவகைகளுள் ஒன்றுதலின், இடும்பை இங்கு நோய் எனப்பட்டது. கரவாதவரைக் கண்டமட்டில் மகிழ்ச்சி பொங்குதலால் 'எல்லாம் ஒருங்கு கெடும்.' என்றார். காலிங்கர் 'முழுதுங் கெடும்' என்னும் பாடங் கொள்வர்.

கoடுஎ. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

(இ—ரை.) இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின்—தம்மை யவமதித்துப் பேசாதும் இழிவாகக் கருதாதும் விரும்பிய பொருளைக் கொடுப்பாரைக் கண்டால்; உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து—தன்மானமுள்ள இரப்போரின் உள்ளம் மகிழ்ச்சியாற் பொங்கி மேன்மேலும் உள்ளுற இன்புறுந் தன்மையதாம்.

எள்ளுதல் உள்ளத்தின் தொழில்; கருத்தளவாய் நிற்பது; இகழ்தல் வாயின் தொழில்; சொல்வடிவில் வெளிப்படுவது; புகழ்தலுக்கு எதிர் இகழ்தல். 'இகழ்ந் தெள்ளாது' எனவே நன்கு மதித்தலும் இன்சொற் சொல்லுதலும் பெறப்படும். கரவாமையோடு இகழாமையும் சேரவே, மானமுள்ள இரப்போர்க்குப் பெரு மகிழ்ச்சி விளைக்கும் என்பதாம். இவ்வாறு குறளாலும் இரக்கத்தக்காரது இயல்பு கூறப்பட்டது.

கoடுஅ. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

(இ—ரை.) இரப்பார் இல் ஆயின்—வறுமையுற்றுங் கீழ்கண் இன்றியும் இரப்பவர் இல்லாவிடின்; ஈர்ங் கண் ஞாலம்—குளிர்ந்த இடத்தையுடைய பெரிய மாநிலத்துள்ளார் செலவு வரவுகள்; மரப்பாவை சென்று வந்த அற்று—மரத்தினாற் செய்யப் பட்ட உயிரில்லாத பாவை தன்னை இயக்கும் பொறிக்கயிற்றாற் சென்று வந்தாற் போலும்.

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு." (குறள். உகூ)

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்." (கூடி உ ஈ0)

என்றமையால், ஈந்து புகழும் அறப்பயனும் பெறுதார் உயிருடைய ரல்லர் என்பதாம்.

"ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவர்."

என்பதால், 'ஈர்ங்கண்' என்னும் சிறப்படை, ஈரமுள்ள நெஞ் சத்தையுங் குறிப்பாகவுணர்த்தி ஞாலத்தின் சிறப்பைக் காட்டும். 'ஞாலம்' வரையறுத்த ஆகுபெயர். உவமத்தோ டொத்த தொழில் பொருட்கு வருவிக்கப்பட்டது. ஐகாரம் அசைநிலை. இரப்பவர் என்னும் பாடம் தொடை நயம் நிரம்பிய தன்று. காலிங்கர் ஈன் கண்மா ஞாலம் என்று பாடமோதி, இனிது இடம் உடைத்தாகிய பெரிய உலகம் என்று பொருளுரைப்பர்.

ஈ0டு. ஈவார்க ளென்னுண்டாங் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை.

(இ—ரை.) இரந்துகோள் மேவார் இலாக்கடை—ஒருவரிடம் சென்று ஒரு பொருளீயிரந்து பெறுதலை விரும்புவார் இல்லாவிடத்து, ஈவார்கண் என் தோற்றம் உண்டாம்—அப்பொருளைக் கொடுப் பார்க்கு என்ன புகழுண்டாம்? ஒன்றுமில்லையே!

கொள்வாரின்றிக் கொடுப்பாரில்லை. இரப்பாரின்றி ஈவாரில்லை. ஈகையின்றிப் புகழில்லை. ஆதலால், ஈவாரின் புகழுக்கு இரப்பாரே காரணியம் என்பதாம். 'தோற்றம்' ஆகுபொருளது; 'மேதல்' விகுதி உலக வழக்கில் மேவுதல் என வழங்கும். 'இலாஅ' இசைநிறை யளபெடை. இவ்விரு குறளாலும் மக்கட் பண்பு வெளிப்பாட்டிற்கு இரப்பாரின் இன்றியமையாமை கூறப்பட்டது.

கூ0கூ0. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

(இ—ரை.) இரப்பான் வெகுளாமை வேண்டும்—இரக்கப் பட்டவன் இரந்த பொருளை ஈயாதவிடத்து இரந்தவன் சினங் கொள்ளாதிருத்தல் வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் சாலும் கரி—முற்பிறப்பில் தானும் தன்னை இரந்தார்க்கு ஈயவில்லை என்பதற் குத் தன் வறுமைத் துன்பமே போதிய சான்றும்.

தான் அளந்த அளவே தனக்கும், ஆதலாற் சினத்திற் கிடமில்லை யென்பது கருத்து. ஈயாத கஞ்சர் செல்வத்தைக் கள்வர் கவர்வதால் அவர் வறுமையடைவதும், அறநூற் கூற்றும், பிற சான்றுகளாம்.

"ஏதிலார் குற்றம்போற் தன்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு." (குறள். கூ0)

என்பதாம். ஏகாரம் பிரிநிலை; உம்மை எச்சவும்மை. கரி=சான்று (evidence). சான்றாளன் (witness).

அதி. கூ0எ—இரவச்சம்

அஃதாவது, உளைக்கக் கூடியவர் மானந்தீர வரும் இரப்பிற்கு அஞ்சுதல். வேண்டியதாதல். அதிகார முறைமையும் இதனுல் விளங்கும்.

கூ0கூகூ. கரவா துவந்தீயுங் கண்ணன்னர் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

(இ—ரை.) கரவாது உவந்து ஈயும் கண் அன்னர் கண்ணும் இரவாமை—தம்மிட முள்ளதை ஒளிக்காது; அரும்பெறலுறவினர் வந்தாரேயென்று அகமகிழ்ந்து கொடுக்குங் கண்போலச் சிறந்தாரிடத்தும் இரவாது வறுமை கூர்ந்திறத்தல்; கோடி உறும்—அவரிடம் இரந்து நுகர்ச்சிப் பொருளும் செல்வமும் பெறுவதினும் கோடி மடங்கு நன்றும்.

மானங் கெட இரந்துண்பதினும், அது கெடாது இயன்றவரை யுழைத்து வறுமையிற் செம்மையாய் வாழ்தலும் அது இயலாவிடத்து உயிர் துறத்தலும், மேல் என்பதாம். உம்மை உயர்வு சிறப்பு. 'கோடி' ஆகுபொருளது. இக்குறளால் இரத்தலின் இழிவு கூறப் பட்டது.

கoகூஉ. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(இ—ரை.) உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்—இவ்வுலகத்தைப் படைத்த இறைவன் இதில் வாழ்வார்க்கு உழைத்துயிர் வாழ்கலேயன்றி இரந்துயிர்வாழ்தலையும் விரும்பி வகுத்தானுயின்; பரந்து கெடுக—அக்கொடியோனும் அவரைப்போன்றே நிலையில்லாது எங்கும் அலைந்துதிரிந்து கெடுவானுக.

அக்காலத்தில் மக்கள் தொகை மிகாது நிலவளமும் நீர்வளமும் மிக்கு எவருக்கும் அவர் விரும்பிய வேலைவாய்ப்பு எப்போதும் இருந்ததனால், உழைக்க விருப்பமுள்ள யாரும் வறுமையால் வாடவோ இரந்துண்ணவோ எள்ளளவும் ஏதுவில்லை. ஆயினும், சில மானமில்லாச் சோம்பேறிகள் "இது எம் தலையெழுத்து." என்றும், "அன்றெழுதினவன் அழித்தெழுதான்," என்றும், சொல்லிக்கொண்டு இரப்பு வாழ்க்கையை மேற்கொண்டு, பாராத இடங்களைப் பார்த்தும் கிடையாத வுணவுகளை யுண்டும் அங்குமிங்குந் திரிந்தனர். அவரை நோக்கியே இது ஆசிரியர் கூறியதாகும். ஊணும் உடையும் ஏராளமாயிருந்ததனால், பெரும்பாலும் "பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே," என்ற முறையிலேயே அக்காலத்து இரப்போர்க்கு அவ்விரண்டும் அளிக்கப்பட்டன. ஆதலால், பொருளாட்சித்துறைப்படி அதனுல் கேடில்லை. ஆயினும், பண்பாட்டுத் துறைப்படி அது மாபெருங்கேடாம். அதனுலேயே ஆசிரியர் அதை அச்சோம்பேறிகள் கூற்றை யொப்புக் கொள்வதுபோல், இறைவன்மேல் வைத்து வன்மையாய்க் கண்டித்தார். 'வேண்டின்' என்பது வேண்டாமையைத் தெளிவாகக் காட்டி நின்றது உம்மை இழிவு சிறப்பு.

மக்கள் தொகையும் வளக்குறைவும் பொருள்முடையும் வேலையில்லாத் திண்டாட்டமும் மிக்க இக்காலத்தும், உடம்பாலும் உள்ளத்தாலும் உழைக்க விரும்பும் ஒருவனுக்குப் பொருள்பெறும் வேலை வாய்ப்பில்லையெனின், அது நாட்டையாளும் அரசின் குற்றமேயன்றி இறைவன் ஏற்பாடன்று.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை." (குறள். கூஉஉ)

என்று ஆசிரியர் அக்காலத்தே கூறிப்போந்தமை காண்க. இக்குறளால் இரவு இறைவன் ஏற்பாடன்மை கூறப்பட்டது.

கoகூஉ. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ—ரை.) இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின்—வறுமைத் துன்பத்தை உழைப்பால் நீக்குவோமென்று கருதாது இரப்பால் நீக்குவோமென்று கருதும் வன்மையைப்போல்; வன்பாட்டதுஇல்—வன்மைப்பாடுள்ளது வேறொன்றுமில்லை.

முதலாவது; பிறரிடம் ஒன்று ஏற்பதே இகழ்ச்சி; அதையும் இரந்து பெறுதலோ மிக இழிந்தது. மதிப்பாக வுழைத்து மானத்தோடு வாழ இறைவன் கைகால் முதலிய உறுப்புக்களைத் தந்திருக்கவும். அவற்றைப் பயன்படுத்தாது இரத்தலை மேற்கொண்டு ஒரே இல்லத்திற் பெரும்து தெருத்தெருவாகவும் வீடுவீடாகவும் சென்று, சிறிது சிறிதாகவும் ஒன்றேடொன்றொவ்வாது பல்வேறு வகைப்பட்டன வாகவும், புதியனவும் பழையனவும் சுவையுள்ளனவும்இல்லனவுமாகவும், சில மனைகளில் மறுக்கப்பட்டும் சில மனைகளில் வெறுக்கப்பட்டும், தொல்லைப்பட்டு மானங்கெட்டுத் தொகுத்த மிச்சிலும் எச்சிலுமான வுணவையுண்டு உடம்பு தாங்கி, நாய்போல் திரிய மனங் கொள்வது ஆறறிவு படைத்த மாந்தப் பிறப்பிற்கு எவ்வகையிலும் ஏற்காத மாபெரு வன் செயலாதலின், 'வன்மையின் வன்பாட்ட தில்' என்றார். இதனால் வறுமை நீக்கும் வழி இரவன்றென்பது கூறப்பட்டது.

கoகூஅ. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

(இ—ரை.) இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு—ஒரு சிறிதும் பொருளில்லாக் காலத்தும் பிறரிடம் சென்று இரத்தலை யுடம்படாத குணநிறைவு; இடம் எல்லாம் கொள்ளாத் தகைத்தே—உலகங்களெல்லாம் ஒன்றுகக் கூடினும் அவற்றில் இட்டுவைக்கும் இடமெல்லாங் கொள்ளாத பெருமையை யுடையதாம்.

மானமும் பெருமையும் நாணும் சால்பின் உறுப்புக்களாதலின், அவை இரவை அறவே தடுக்குமென்பதாம். இடம் உலகில்வாழ இடந்தரும் செல்வம். இடம்—இடன், கடைப்போலி. "இடனில் பருவத்தும்" (குறள். உகஅ) என்றமை காண்க. ஏகாரம் தேற்றம், உம்மை இழிவு சிறப்பு.

கoகூடு. தெண்ணீ ரடுபுற்கை யாயினும் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

(இ—ரை.) தெள்நீர் அடு புற்கை யாயினும்—தெளிந்த நீர் போல் தெடுதெடுவென்றிருக்குமாறு சமைத்த கூழாயினும்: தாள் தந்தது உண்ணலின் ஊங்கு இனியதுஇல்—தன் உழைப்பினல் வந்த வுணவை உண்ணுவதிலும் மிக இனியது ஒன்றுமில்லை.

நொந்து சுமந்து பெற்ற பிள்ளை காக்கைக் குஞ்சுபோற் கருத்திருப்பினும், தாய்க்குத் தன்பிள்ளை நன்பிள்ளையாதல்போல, உழைப் பாளிக்குத்தான் வருந்தியுழைத்த வுழைப்பால் வந்த வுணவு, கேழ் வரகு மாவினுற் காய்ச்சிய தெண்கூழாயினும் தேவரமுதாம். உம்மை இழிவு சிறப்பு.

கo கூ. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

(இ—ரை.) ஆவிற்கு நீர் என்று இரப்பினும்—வேட்கை தணிக்கத் தண்ணீரின்றி இறக்கும் நிலைமையிலுள்ள ஓர் ஆவினுக்காக, ஒருவன் தண்ணீர் தருகவென்று அறம் நோக்கி யிரந்து கேட்கும் போதும்; நாவிற்கு இரவின் இளிவந்தது இல்—அவன் நாவிற்கு அவ்விரவைப்போல இழிவு தருவது வேருென்றுமில்லை.

உணவை விலைக்கும் உழவுத்தொழிற்கு இன்றியமையாத துணை யாகிய காளையும், தாய்ப்பாலில்லாத குழந்தையின் உயிர்வாழ்க் கைக்கு இன்றியமையாத பாலுதவும் ஆவும், தொன்று தொட்டுத் தமிழரால் மக்கள்போற் பேணப்பட்டு வந்துள்ளன. இதற்கு, சாத் தன் சாத்தி, கொற்றன் கொற்றி, மருதன் மருதி என்னும் மக்கள் பெயர் அவற்றிற்கு இடப்பட்டு வந்ததே போதிய சான்றும். வெட் சித் துறையான ஆகந்தோம்பலும் (தொல். கoo கூ) இதற்குச் சான்று பகரும். பொதுவாகப் பெண்பால் மென்பாலாதலாலும், அஃறிணையுள் ஆவானது அமைதிக்குச் சிறந்தமையாலும் பிறவினத் தினுந் தூய்மையாயிருப்பதனாலும், ஆவைக் காப்பது பேரறம் என் னும் கொள்கையெழுந்தது. ஆயினும், அதன் பொருட்டும் இரப் பது இழிவென்பது தோன்ற 'ஆவிற்கு' என்றும். இரக்கும் பொருள் விலைகொடுத்துப் பெற வேண்டாத எளிமையதாகவின் 'நீர்' என்றும் இரக்குஞ்செயல் அதனைச் செய்யும் உறுப்பிற்கும் இழிவென்பதுபட 'நாவிற்கு' என்றும், இழிவுகட்குள் தலைமையான தாதலின் 'இளிவந் ததில்' என்றும், கூறினர். இதனால் அறத்தின் பொருட்டும் இரத்தல் இழிவென்பது கூறப்பட்டது. இக்கொள்கை இன்று முற்றுந் தளர்ந் துள்ளது.

கo்ஙஎ. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

(இ—ரை.) இரப்பின் — இன்றியமையாமை பற்றி இரக்க நேரின்; கரப்பார் இரவன்மின் என்று—தம்மிடமுள்ளதை யில்லை யென்று ஒளிப்பாரை மட்டும் இரக்கவே வேண்டாமென்று; இரப் பாரை எல்லாம் இரப்பன்—இவ்வுலகில் இரப்பாரையெல்லாம் நான் இரந்து வேண்டிக்கொள்கின்றேன்.

இது ஆசிரியர் கூற்று. இதனுல் மேற்கூறிய நெறியின் கடுமை யைத் தளர்த்தித் தம்மை நடைமுறைக்கேற்ற வழிகாட்டியாகக் காட்டியுள்ளார். 'கரப்பாரிரவன்மின்' செய்யுள் நடைபற்றிய இரண்ட டாம் வேற்றுமைத்தொகை. இதில வந்துள்ளது சொற்பொருட் பின் வருநிலை. இதனுல் மானந்தீர வரும் இரவு விலக்கப்பட்டது.

கo்ஙஅ. இரவென்னு மேமாப்பி ரேணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்

(இ—ரை.) இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி—வறுமை யென்னுங் கடலைக் கடப்பதற்கு ஒருவன் ஏறிய இரப்பு என்னும் பாதுகாப்பில்லாத தோணி; கரவுஎன்னும் பார்தாக்கப் பக்குவிடும்— வழியிலுள்ள கரத்தல் என்னும் பாறையால் தாக்கப்படும்போது பிளந்துபோம்.

உழைப்பாற் கடக்கவேண்டிய கடலை இரப்பாற் கடக்கத் தொடங்கியவன், சேதமின்றித் தன் தோணியைச் செலுத்த முடி யாமையால், 'ஏமாப்பி ரேணி' என்றார். இது வறுமையென்னுங் கடலைப்பற்றிக் கூறுது அக்கடலிலுள்ள தோணியையும் பாறையை யுமே கூறியதனுல், சிறீயுருவகம்.

கருகூஙூ. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(இ—ரை.) இரவு உள்ள உள்ளம் உருகும்—செல்வமுண்மை யின்மையால் வேறுபட்டிருப்பினும், மாந்தப்பிறப்பினுலும் உடலுறுப் பமைதியினுலும் முற்றும் ஒத்திருக்கும் இருவருள், ஒருவன் இன் னொருவன்முன் சென்று நின்று,

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென் பதனை வீட்டி"

இரக்கும் நிலையின் கொடுமையை நினைந்தால் எம் உள்ளமெல்லாம் நீராய் உருகியோடும்; கரவுஉள்ள உள்ளதும் இன்றிக் கெடும்—இனி, இரக்கப்பட்டவன் அந்நிலையைக் கண்ணுரக் கண்டும் இல்லையென்று மறுத்தலின் கொடுமையை நினைந்தாலோ, அவ்வுருகுநிலைதானும் இல்லாது முற்றும் இறந்துபோம்.

இது சான்றோரான கண்டார் கூற்று.

"கரவாத தின்னன்பின் கண்ணன்னர் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு." (நாலடி., கூ0இ),

இரவு கொடிது; கரவு அதினுங்கொடிது என்பதாம். உம்மை எச்சம். 'உள்ளதூஉம்' இன்னிசை யளபெடை.

கூ0ஏ0. கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

(இ—ரை.) சொல்லாட இரப்பவர் உயிர் போம்—கரப்பவர் இல்லையென்று சொல்லிய அளவிலேயே இரப்பவர்க்கு " உயிர்போய் விடும்; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல்—இனி, அவ் வில்லை யென்னுஞ் சொல்லையே வாய்திறந்து சொன்னவர்க்கு அதனுல் உயிர் போகாமலிருப்பதால், அது எப்புரைக்குட் புகுந்து ஒளிந்து நிற்குமோ! அறிகிலம்.

கேட்டாரைக் கொல்லவல்லதாகிய சொல் சொல்வாரைக்கொல் லுதல் எளிதேனும், அங்ஙனஞ் செய்யாதிருத்தல் மருட்சியைத் தரு கின்றது என்பதாம். இரப்பார்க்கு உயிர்போதலாவது, இனி என் செய்வேமென் றேங்கிச் செயலறும் மனநிலை.

"புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
நல்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
ஈயாய் எனக்கென் நிரப்பானேல் அந்நிலையே
மாயாஞே மாற்றி விடின்." (நாலடி., கூ0அ)

'கொல்' ஐயம், 'ஓ' இரக்கம். 'போஒம்' இசைநிறை யளபெடை

"வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம். ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்காற் போகாதெங்கே யொளித்துநிற்கும்';

இரண்டானும் போமேயன்றேவென இரவஞ்சினு ணெருவன் கூற் றுக்கி யுரைப்பாரு முளர்.'' என்பது பரிமேலழகர் கூற்றுல் தெரிய வருகின்றது. இம்மூன்று குறளாலும் இரவின் குற்றமுங் கரவின் குற்ற மும் ஒருங்கே கூறப்பட்டன.

அதி. கஂஅ—கயமை

அஃதாவது, குடிகளுள்கடைப்பட்டவரும்ஐம்பெருங் குற்றங்களை யும் துணிந்து செய்பவரும் தண்டிக்கும் அரசனுக்கன்றி வேறு யார்க் கும் அஞ்சாதவருமான கீழ்மக்களின் தன்மை. அதனுல், இது இறுதி யிற் கூறப்பட்டது.

கஂகூ. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

((இ—ரை.) கயவர் மக்களே போல்வர்—கீழ்மக்கள் வடிவால் முற்றும் மேன்மக்களை ஒத்திருப்பர்; அவர் அன்ன ஒப்பாரியாம் கண் டது இல்—அவர் மேன்மக்களை யொத்திருத்தற் போன்ற வொப்பை வேறெந்த ஈரினத்திடையும்யாம் கண்டதில்லை.

மக்கள்* என்றது மக்கட் பண்புள்ள மேலோரை. கயவரென் றது அஃதில்லாத கீழோரை. மாந்த இனத்தைச் சேர்ந்த இவ்விரு வகுப்பாரும் இருவேறினம் போன்றே ஆசிரியராற் கொள்ளப்பட்டி ருப்பதை வேறிடத்துங்காண்க (குறள். சகஂ, சஉஂ). அறிவிலிகளான கல்லா மாந்தரும் கயவரான பொல்லா மாந்தரும் மாக்கள் எனப்படு வர். அறிவும் ஒழுக்கமும் ஒருங்குடையாரே மக்கள் எனப்பெறுவர், மக்களும் மாக்களுமாகிய இருமாந்தவகுப்பாரும் பண்புண்மை யின்மையாலன்றி வடிவால்மட்டும் வேறுபாடறியப் படாமையின், அவரவர் தன்மையறிந்து மக்களென உறவாடுவதும் விலங்கெனப் பயன்படுத்துவதுஞ் செய்க என்பதாம்.

இனி, இக்குறட்கு, கயவர் மக்களைவடிவால் ஒப்பர். ஆனல்' கயவரை வடிவாலும் குணத்தாலும் ஒப்பார் பிறரில்லை யென்றும் உரைப்பர்.

அவர் என்றது அவரிடைப்பட்ட ஒப்புமையை. ஏகாரம் தேற்றம். ஒப்பாரி ஒப்பு. 'ஆரி' ஓர் ஈறு. இனி,

''தன்ஞெழி மெய்ம்முன் யவ்வரின் இகரந்
துன்னு மென்று துணிநரும் உளரே.''

என்று பவணந்தியார் (உ0சு) கூறியுள்ளவாறு, ஒப்பார் + யாம் = ஒப்பாரியாம் என்று புணர்ப்பினுமாம்.

கo0உ. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

(இ—ரை.) நன்று அறிவாரின் கயவர் திரு உடையர்—தமக்கும் பிறர்க்கும் நன்மையானவற்றை யறியும் மேன்மக்களினும் அவற்றை யறியாத கீழ்மக்கள் பேறுபெற்றவராவர்; நெஞ்சத்து அவலம் இலர்—எங்ஙனமெனின் அவை பற்றி அவர்போலத் தம் நெஞ்சத்திற் கவலைப்பட்டு வருந்துவதில்லை.

இளமை, உடல்நலம் முதலியவற்றின் நிலையாமையுணர்ந்து இம்மையில் எய்ப்பில் வைப்பிற்கும், பிறப்பின் இயல்பறிந்து மறுமையில் நற்பிறப்பு விண்ணின்ப வீடுகட்கும், ஏற்ற முயற்சி செய்வது தமக்கும்; மக்களின் வறுமை பசி பிணி பஞ்சம் முதலியவற்றை நீக்கவுந் தடுக்கவும் திட்டங்கள் வகுத்து அவற்றை நிறைவேற்றுவதும், வேற்றரசாலும் வேற்றினத்தாலும் நாட்டு மொழி, கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றிற்குக் கேடும், நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையும்,, நேரும்போது கிளர்ச்சி செய்து அவற்றைத் தடுப்பதும், தம்மொடு பிறர்க்கும்; செய்யும் நன்றுகளாம். இவைபற்றிய கவலையும் முயற்சியும் உழைப்பும் வருத்தமும் இழப்பும் கயவருக்கின்மையால், 'திரு உடையர்' என்றார். இக்குறளணி வஞ்சகப்புகழ்ச்சி. 'நன்று' வகுப்பொருமை.

கo0ஊ. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

(இ—சை.) கயவர் தேவர் அனையர்—கயவர்தேவரையொத்தவர்; அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான்—அவரும் தேவரைப் போல முழுவுரிமையுடையவராய்த் தாம் விரும்பியவற்றை யெல்லாம் செய்து முடித்தலால்.

தேவர்க்குங் கயவர்க்குமுள்ள ஒப்புமை விகாரவியல்பு பற்றியது அதன் முடிப்புப் பற்றியதாம். இதுவும் வஞ்சகப்புகழ்ச்சி உம்மை எச்சம்.

கo0எ. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(இ—ரை.) கீழ்—கீழ்மகன்; அகப்பட்டி ஆவாரைக் காணின்—பட்டித்தன்மையில் தன்னினுங் குறைந்தவரைக் கண்டாலுயின்; அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும்—அவ்வொழுக்கத்தில் அவரினும் மேம்பட்டுத் தன் மிகுதிகாட்டி யிறுமாந்து நிற்பான்.

அகப்பட்டி தனக்கு உட்பட்ட அல்லது உள்ளடங்கிய பட்டி. பட்டியென்பது பட்டிமாடு. பட்டிமாடுபோற் கட்டுக் காவலின்றித் திரிபவனைப் பட்டியென்றது உவமவாகுபெயர். "நோதக்க செய்யுஞ் சிறுபட்டி" (கலித். கக). 'கீழ்' பண்பாகுபெயர்.

கoஎடு. அச்சமே கீழ்களத தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

(இ—ரை.) கீழ்களது ஆசாரம் அச்சமே—கீழ்மக்களது ஒழுக்கமெல்லாம் தீயொழுக்கங் கண்டுபிடிக்கப்படின் அரசனுல் தண்டனைவரும் என்று அஞ்சும் அச்சத்தினுல் ஏற்படுவதே; எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம்—அச்சமில்லாத வழியில், தம்மால் விரும்பப்படும் பயன் விளையுமாயின் அதனைற் சிறிது ஒழுக்க முண்டாம்.

கீழ்மக்களின் ஒழுக்கம் பெரும்பாலும் அச்சமும் சிறுபான்மை தன்னலமும் பற்றியன்றி, இயல்பாக ஏற்படாதென்பதாம். ஆசாரத்தின் காரணியத்தை 'ஆசாரம்' என்றும், அவாப்படுவதை 'அவா' என்றும், சார்த்திக் கூறினர். 'கீழ்கள்' ஆகுபெயர். 'எச்சம்' இடப்பொருளுருபு தொக்கது.

கoஎக. அறைபறை யன்னார் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(இ—ரை.) தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்கலான்—தாம் தம் காதாற்கேட்ட மருமச் செய்திகளைக் கொண்டு சென்று பிறர்க்கெல்லாஞ் சொல்லுதலால்; கயவர் அறை பறை அன்னர்—கீழ்மக்கள் விளம்பரஞ் செய்தற்குக் கொட்டப்படும் பேரிகையொப்பர்.

வெளிப்படிற் குற்றமாகுமென்று ஒருவன் மறைத்துச்சொன்ன செய்தி மறை. மறைக்கப்பட்டவர் 'பிறர்'. உய்த்தல் பொறையை ஏற்றிக் கடத்துதல். கீழ்மக்கட்கு மருமச் செய்திகளைப் பிறர்க்குச் சொல்லும்வரை அவற்றை உள்ளத்திற் கொண்டிருத்தல் ஒரு பொறை (பாரம்) போலத் தோன்றுதலால், 'உய்த்து' என்றார்.

'பறையன்னர்' என்றாரேனும், பறையறைந்து சொல்லுதலையே குறித்தலால் இது விகாயுவமை. இக்குறளால் கயவர்க்கு மறை யடக்க மின்மை கூறப்பட்டது.

கூ0ஸ. ஈர்ங்கை விதிரார் கயவர் கோடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

(இ—ரை) கொடிறு உடைக்கும் கூன்கையர் அல்லாதவர்க்கு—தம் அலகைப் பெயர்த்தற்கு வளைத்த கையினையுடையா ரல்லா தார்க்கு; கயவர் ஈர்ங்கை விதிரார்—கீழ்மக்கள் தாம் உண்ட எச்சிற் கையில் ஒட்டிய இரண்டொரு பருக்கையையும் உதறி வீழ்த்தார்.

கயவர் வலியார்க்கன்றி மெலியார்க்கு இம்மியுங் கொடார் என்பது, இக்குறளால் கூறப்பட்டது.

கூ0ஹ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங்கீழ்

(இ—ரை.) சான்றோர் கொல்லப் பயன்படுவர்—மேன்மக்கள் வலியாரும் மெலியாரும் சென்று தமக்கு வேண்டிய தொன்றைக் கேட்டவளவிற் கொடுத்துதவுவர்; கீழ் கரும்பு போல் கொல்லப் பயன்படும்—ஆனால், கீழ்மக்களோ: வலியார் சென்று கரும்பை ஆலையில் வைத்து நெறித்துப் பிழிந்தாற்போல, வருத்தி நெருக்கிய போதே ஒன்றை வருந்திக் கொடுப்பர்.

கீழ் மக்களின் இழிவு விளங்கித் தோன்றுமாறு மேன்மக்கள் இயல்பும் உடன் கூறினர். இது வேற்றுமையணி. 'கீழ்' ஆகுபெயர். வலியாரும் வருத்தினாலன்றிக் கயவர் கொடார் என்பது இக்குறளாற் கூறப்பட்டது.

கூ0ஙு உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

(இ—ரை.) உடுப்பதும் உண்பதும் கீழ் காணின்—பிறர்தம் செல்வத்தின் பயனாக ஓவியப்பூம் பட்டாடையணிதலையும் அறுசுவை நெய்யுண்டி யுண்டலையும் கீழ்மகன் காணுமாயின்; பிறர் மேல் வடுக்காண வற்று ஆகும்—அவற்றைப் பொருது அவரிடத்துக் குற்றமில்லாதிருக்கவும் ஒரு குற்றத்தைப் பற்றத் துக்கூற வல்லவனும்.

'உடுப்பது,' 'உண்பது' தொழிற்பெயர்கள். இவற்றைத் தகுமை பற்றிக் கூறியமையால், அணிதல், பூணுதல், பருகுதல், ஊர்தல் முதலிய பிற செல்வவினைகளுங் கொள்ளப்படும். கண்டவளவிற் பொருமை கொள்ளுதலால் 'காணின்' என்றும், பொருந்தப் பொய்த்தல் வல்லமை தோன்ற 'வற்றுகும்' என்றும், கூறினர். வல்லது—வற்று (வல்+து), 'உடுப்பதூஉம்,' 'உண்பதூஉம்' இன்னிசையளபெடைகள். 'கீழ்' ஆகுபெயர். இக்குறளால் கீழ்மகன் பிறர் செல்வங் கண்டு பொருமைப் படுதல் கூறப்பட்டது.

கoஅo. ஏற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(இ—ரை.) கயவர் ஏற்றிற்கு உரியர்—கீழ்மக்கள் எத்தொழிற்குத்தான் உரியராவர்?: ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர்—ஏதேனுமொரு துன்பம்நேர்ந்தவிடத்து அதைச்சாக்கிட்டுத் தம்மை விரைந்து பிறருக்கு விற்றற்கே யுரியர்.

'ஒன்று' என்றது, பணந்தேவையான ஏதேனு மோர் அமையம் அல்லது பதவியைக் காத்துக்கொள்ளப் பிறர்க்கு அடிமைப்படும் நிலைமை கொள்பவர் தம் கயமையறிந்து வேண்டாமென்னுமுன் தம்மை விற்று விடுதலும், தன்மானமும் உரிமையுணர்ச்சியும் ஒரு சிறிதும் இல்லாதவர் என்பதும் தோன்ற, 'விரைந்து' என்றார். கீழ்மக்கள் ஒன்றிற்கும் உதவார் என்பது கருத்து. இக்குறளால் அவரின் அடிமை மனப்பான்மை கூறப்பட்டது.

உறுப்பியல்—குடிப்பகுதி முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

கo. இன்பத்துப்பால்

அறவழியி லீட்டப்பெற்ற பொருளைக்கொண்டு இன்பந்துய்க்கும் வகையைப்பற்றிக் கூறும் பெரும்பகுதி இன்பத்துப்பாலாம். இது அகப்பொருளிலக்கணத்திற் சொல்லப்பட்ட 'மூன்றன் பகுதி'யின் (தொல். அகத். சக) முடிவுநிலை பற்றியதாம் அறம்பொருளின்பம் (வீடு) என்று கூறுவதே மரபாதலானும், இப்பொருட் பாகுபாடு தமிழர் கண்டதே யாதலானும், இப்பகுதிக்கு இன்பத்துப்பால் எ.ன் பதே ஆசிரியர் இட்டபெயராம்.

"அறம்பொரு லின்பம்வீ டென்னுமந் நான்கின்
நிறந்தெரிந்து செப்பிய தேவை"

"வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து மூன்றொன்றாழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்"

"இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்"

"அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய"

"அறத்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு"

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
நிறனறிந்தேம் வீடு தெளிந்தேம்"

எனத் திருவள்ளுவமாலையுள் ஆறு இன்பம் அல்லது இன்பு என்றே குறித்தலையும். இரண்டே எதுகை நோக்கிக் காமம் என்னுஞ் சொல்லை ஆளுதலையுங் காண்க. பரிமேலழகர் காமம் என்னுஞ் சொல்லை ஆண்டதற்கு அவரது வடமொழி வெறியே காரணியம் என்பதையும் அறிக. ஆயினும், அச்சொல்லுந் தென்சோல்லே யென்பதை அவர் அறியார். காமம் ஆசையாகிய காரணியம்; இன்பம் அதன் விளைவாகிய துய்ப்பு.

உலக இன்பங்களுள் தலை சிறந்ததும் ஐம்புல இன்பங்களையும் ஒருங்கே கொண்டதும் பெண்ணின்பமே. அவ்வின்பம் ஆடவர்க்குப் போன்றே பெண்டிர்க்கும் ஐம்புல வின்பந் தருவதால் இருபாற் பொதுவாம். ஆயினும், ஆண்பாலின் வலிமை மேம்பாடும் உரிமைச் சிறப்பும் வலியத் துய்ப்பும் துய்ப்பாற்றலும் அடக்கக் குறைவும்பற்றி ஆண்பாலின்பமாகவே பொதுவாகக் கருதவுஞ் சொல்லவும்படும்.

களவியல்

மாந்தருள் இருபாலுங் கூடி இன்பந் துய்த்து அறஞ்செய்து ஒழுகும் இல்லற வாழ்க்கை, களவாகத் தொடங்குவதும் கற்பென்னும் வெளிப்படையாகத் தொடங்குவதும் என இருவகைப்படும். கூடி இன்பந்துய்க்கும் பருவமடைந்த ஓர் இளைஞனும், ஓர் இளைஞியும் பிறர் இல்லாதஇடத்தில்தற்செயலாகத்தலைக்கூடிக்காதலொருமித்துப் புணர்ந்து, பின்பு வெளிப்படையாகக் கூடி வாழத் தொடங்கும்வரை, குறித்த இடத்திற் சிறிதுகாலம் பெற்றோர்க்கும் மற்றோர்க்குந் தெரி

யாது நாள்தொறும் அல்லது அடிக்கடி மறைவாகக் கூடியொழுகும் ஒழுக்கம் களவாம்; அதன்பின் வெளிப்படையாகக் கூடிவாழும் வாழ்க்கை கற்பாம்.

ஆணும்பெண்ணும் பிறர்க்குத் தெரியாது மறைவாகக் கூடிப் புணர்தல் பலவகையில் நிகழுமேனும், மணமாகாத எதிர்ப்பா ளிளந் தையர் இருவர், தெய்வ ஏற்பாட்டின்படி தமியராக ஒருவரையொரு வர் கண்டவுடன் காதலித்து மெய்ம்மறந்து புணர்ந்து, அன்றே நிலையான வாழ்க்கைத் துணையராவதும், அடுத்தோ சிறிதுகாலம் இடையிட்டோ கற்பாக மாறுவதும், அதற்குத் தடையேற்படின் இருவரும் உயிர் துறப்பதுமான உயரிய மறைவொழுக்கமே, தமிழ் நூல்களிற் களவெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதாம். களவென் பது மறைவு. களவாக வொழுகும் ஒழுக்கம் களவெனப்பட்டது; ஆதலால் யாதொரு தீதுமற்றதாம். இத்தகைய வொழுக்கம் ஒரோ வோரிடத்து ஒரோவொரு சமையத்து ஒரோவோரிணையரிடத்தன்றி, எவ்விடத்தும் எக்காலும் எல்லாரிடத்தும் நிகழ்வதன்று. ஆதலாற் கோவைப் பனுவல்களிலும் இத்திருக்குறளின் பத்துப் பாலிலும் களவுங் கற்பும் ஒரே தொடர்ச்சியாகக் கூறப்பட்டிருப்பது பற்றி, கற்பெல்லாங் களவொடு தொடங்குவனவாகக் கருதற்க.

மாந்தனீ பெறக்கூடிய பேறுகள் என்னும் வகையில் எல்லாப் பொருள்களையும் அறம் பொருளின்பம் வீடென நான்காக வகுத்து, அவற்றை மீண்டும் உள்ளத்தொடு நெருக்க மும்மையும் இம்மையும் பற்றி அகம் (இன்பம்) புறம் (அறமும் பொருளும் வீடும்) என இரண்டாகப் பகுத்து, அவ்விரண்டையும் எவ்வேழுதிணையாக விரித்து, அகத்திணைகளை மூவகைக் காதலாகப் பிரித்து அவற்றுள் ஒன்றுக ஐந்திணைகளைத் தொகுத்து, அவ்வைந் திணையைக் களவு கற்பென இருவகைக் கைகோட்படுத்தி அவற் றைப் பல்வேறு பகுதிகளாகவும் பதிற்றுக்கணக்கான கிளவிக் கொத்துகளாகவும் நூற்றுக்கணக்கான துறைகளாகவும் பாகுபாடு செய்தும் கூறுபடுத்தியும், மேலையர் திங்களையுஞ் செவ்வாயையும் அடையும் இக்காலத்தும் ஏனை மொழியெதிலுமில்லாத பொருளிலக் கணத்தை, குமரிநாட்டுத் தலைக்கழகக் காலத்திலேயே தமிழ முனி வர் தமிழில் அறிவியல் முறையில் அமைத்திருக்கவும், ''இது (காம வின்பம்) புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். ஏனை இருத்தல் இரங்கல் ஊடலென்பன வோவெனின், இவர் பொருட்பாகு பாட்டினை அறம்பொருளின்பமென வடநூல் வழக்குப்பற்றி யோது தலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்கணடக்கினரென்க.'' என்று பரிமேலழகர் வரைந்திருப்பது, எத்துணைப் பொய்யும் புரட் டுமானீ செய்தியாகும்! புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்,

ஊடல் என்னும் ஐந்தும் ஒன்றனுளொன்று அடங்காத தனித்தனி யுரிப்பொருளென்றும், அவற்றுள் ஊடலொழிந்த ஏனை நான்கும் இரு கைகோட்கும் பொதுவென்றும், அவர் அறிந்திலர் போலும்!

தமிழரின் இன்ப வாழ்க்கை தொன்றுதொட்டுக் களவு கற்பு என்றே பிரிக்கப் பட்டிருந்தமையை, திருக்குறட்கு ஐந்நூற்றாண்டு கட்கு முன்பே தோன்றிய தொல்காப்பியம் என்னும் சார்பிற் சார்பு நூலில் உள்ள களவியல் கற்பியல் என்னும் ஈரியல்களைக் கண்டு தெளிக.

இக்களவியலை ஆசிரியர் ஏழதிகாரத்தாற் கூறத்தொடங்கி, முதற்கண் தகையணங் குறுத்துதல் கூறுகின்றார்.

அதி. கo—தகையணங்குறுத்தல்

அஃதாவது, மருத நிலத்தினின்று குறிஞ்சி நிலத்திற்கு வேட்டையாடச் சென்ற இளவரசனை தலைமகன், தன் பக்கத்துணைவரினின்றும் நீங்கித் தனியனாய் ஒரு மானைத் துரத்திச் சென்றவிடத்து அங்குச் சோலை விளையாட்டிற்குத் தன் தோழியர் கூட்டத்துடன் வந்து தற்செயலாய் அவரினின்று நீங்கித் தனிதது நின்ற, அம்மலை நாட்டரசன் மகளாகிய கன்னிகையைக் கண்டு, அவள் கழிபெருங் கட்டழகு தன்னைத் துன்புறுத்தலைச் சொல்லுதல். இது கண்டவுடன் நிகழ்தலால், இத்துறை இப்பெயர் பெற்றது. இதிற் காட்சி ஐயம், தெளிதல் என்னும் மூன்றும் அடங்கும். குறிப்பறிதலுங் கருதப் பெறும். ஆதலால், இது ஆசிரியரே அமைத்துக்கொண்ட கல்வைத் துறையாம்.

உலகிற் காமவின்பத்தை உயர்ந்த அளவில் நுகர்தற்கு, அவ்வவ் விடத்தில் ஒப்புயர்வற்ற பதவியும் மாபெருஞ்செல்வமும் கழிபெருங் கட்டழகும் வேண்டியிருத்தலின், இலக்கண நூலார் கிழவன், வேள், மன்னன், கோ, வேந்தன் என்று ஏறுவரிசையில் ஐவகைப்பட்ட அரசவகுப்பாருள் ஒருவனையும் ஒருத்தியையுமே காதலனும் காதலியுமாகக் கொண்டிருக்கின்றனர். இது கிழவன் கிழத்தி, தலைவன் தலைவி, தலைமகன் தலைமகள் என்று காதலரைக் குறித்தலாலும்; ஊர, (குறும்பொறை) நாட, வெற்ப, துறைவ, தோன்றல் என்று தலைவனை விளித்தலாலும்; காதலர் தேரும் யானையும் குதிரையும் ஊர்வதாகச் சொல்லப்படுவதாலும், அறியப்படும். இங்ஙனம் உயர்ந்தோரையே காதலராகக் கொண்டாலும், உலகியற்கொத்த உண்மைத்தன்மையும் ஊட்டுவதற்குத் தாழ்ந்தோர்க்குரிய செய்திகளும் இடையிடை விரவிக் கூறப்படும். இது,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

எனப்படும் (தொல். அகத். ஙக),

இனி, காதல காதலியர் இருவரும் குடியுங் குணமும் உருவுந் திருவும் அன்பும் அறிவும் ஒத்திருப்பதும், இன்பச்சிறப்பிற்கும் நீடிப்பிற்கும் வேண்டப்படும். ஆயினும், காதலனுக்குப் பதினாருட்டைப்பருவமும் காதலிக்குப் பன்னீராட்டைப் பருவமுமாக, அகவையில் மட்டும் ஒவ்வாமை கொள்வர். உருவுங் குணமும் அன்பு மொழிந்த மற்றவகைகளிலும் காதலன் உயர்ந்தவனாயிருக்கலாம். இவையும் புலனெறி வழக்கம்.

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே" (தொல். கள.உ)

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே." (ஷை மெய்ப். உடு)

கo அக. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

[தலைமகளுருவு முதலியன முன்கண்டறிந்தவற்றினுஞ் சிறந்தமையின், அவளைத் தலைமகன் ஐயுற்றுக் கூறியது]

(இ—ரை.) கனங்குழை—இங்குத் தோன்றும் கண்ணியம் மிக்க காதணியுடையாள்; அணங்குகொல்—இச்சோலையில் வதியும் தெய்வ மகளோ; ஆய்மயில் கொல்—அன்றேல், இறைவன் ஆய்ந்து படைத்த ஒரு சிறப்பான மயில்வகையோ; மாதர் கொல்—அன்றேல் அழகிற் சிறந்த ஒரு மாந்தப்பெண்தானோ; என்நெஞ்சு மாலும்—என் மனம் இவளை இன்னளென்று அறியாது மயங்குகின்றது.

இலக்கண நூலார் புலனெறி வழக்கப்படி பல செய்திகளைக்கூறினாலும், அகப்பொருளியலிற் கூறிய காதலர் வாழ்வு உண்மையானதும் உலகியற் கொத்ததுமே யாகும். ஒரு காலத்து ஓரிடத்து ஓரிணையர் மாட்டு நிகழ்ந்த உயரிய வாழ்க்கையை, அளவைப் படுத்தியதேயன்றி வேறன்று. ஆதலால், "பிணிமூப் பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொரு தன்மையராய்..... புணர்ந்து வருவது." என்று பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாது. சேரசோழ பாண்டியர் போலும் ஓர் அரசிக் குடும்பத்திற் பிறந்து நாகரிகமாகவும் மேனாத்தாகவும் வளர்ந்து, இயற்கையழகொடு செயற்கையழகும்

நிரம்பிப் பொன்மை கலந்த வெண்ணிறம் மின்னும் ஒரு கன்னி கையை, இயற்கை வளம் பொலிந்த ஒரு கண்கவர் கவின் காவில் மகிழ்ச்சிநிலையிற் கண்டபோது, 'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ' என்று ஓர் இளவரசனும் வியந்தது என் வியப்பாம்?

அணங்குதல் வருத்துதல். அணங்கு வருத்துந் தெய்வப்பெண். குறிஞ்சி நிலத்தில் நிற்றலும் அழகால் தன்னை வருத்துதலும் பற்றி 'அணங்குகொல்' என்றும், சாயலும் சோலையில் நிற்றலும் பற்றி 'ஆய்மயில்கொல்' என்றும்,

> ''வண்டே இழையே வள்ளி பூவே
> கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்
> றன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
> நின்றவை கிளையுங் கருவி யென்ப.''

என்றவாறு (தொல். கள. கூ), வண்டு மூசுதல், அணிகல னணிந் திருத்தல், தோளில் தொய்யிற்கொடி யெழுதப்பட்டிருத்தல், மாலை வாடுதல், கண்ணிமைத்தல், கால்நிலந்தோய்தல், ஆடையசைதல் முதலியவற்றுள் 'மாதர் கொல்' என்றும், கூறினன். 'கொல்' மூவிடத்தும் ஐயம். 'ஓ' அசைநிலை. கணங்குழை யென்பது காவிற்கார் கொண்ட பாடம். 'கனங்குழை' அன்மொழித்தொகை. ''கணங் குழை யென்று பாடமோதிப் பலவாய்த் திரண்ட குழையென்றுரைப் பாரு முளர்.'' என்றார் பரிமேலழகர். பாம்படம், தண்டொட்டி, அரிசித்தழுப்பு, பூச்சிக்கூடு ஆகிய பாண்டிநாட்டுக் காதணிகளைக் குறிப்பின், அப்பாடமும் பொருந்துவதே. மாது—மாதர். 'அர்' மேலீறு, இனி வருமிடத்தும் இச்சொற்கு இங்ஙனமே உரைக்க.

கo அ. நோக்கினு ணோக்கெதிர் நோக்குத லுக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

(மாந்தப் பெண்ணுதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினு லான வருத்தங் கூறியது.)

(இ—ரை.) நோக்கினுள் நோக்கு எதிர் நோக்குதல்—இத் தகைய அழகிய தோற்ற முடையாள் என் நோக்கிற்கு எதிர்நோக் குதல்; தாக்கு அணங்குதானைக் கொண்ட அன்னது உடைத்து—தானே தானே தாக்கி வருத்தும் ஒரு தெய்வப்பெண், தனக்குத் துணையாக ஒரு படையையுஞ் சேர்த்துக் கொண்டாற் போலும் தன்மையை யுடையதாம்.

அழகால் தன்னை வருத்துதல் மேலும். காதல் தோன்றுத எதிர் நோக்கால் தன்னை வருத்துதல் கூறியவாறு. தாக்கணங்கு சூர மகள். 'தாக்கிக்கொண்டு' எதுகை நோக்கி வலி மிக்கது.

கo அ. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு

இதுவுமது

(இ—ரை.) கூற்று என்பதனைப் பண்டு அறியேன்—காலன் என்று சொல்லப்படுவதை இதற்கு முன்பு கேட்டறிந்த தல்லது கண்டறியேன்; இனி அறிந்தேன்—இப்போது கண்டறிந்தேன்; பெண் தகையால் பேர் அமர்க்கட்டு—அது பெண்டன்மையுடன் பெரிய அமர்த்த கண்களையுடையது.

பெண்டன்மை செயல்களாற் குறிப்பா லறியப்பட்ட அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்பன. அமர்த்தல் போர் செய்தல் 'ஆல்' உடனிகழ்ச்சிப் பொருளது. அழகும் காதல் தோன்றுத எதிர் நோக்கும் அளவிறந்து துன்புறுத்துவதால், கூற்றுக்கிக் கூறினான்.

கo அ. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

இதுவுமது

(இ—ரை.) பெண்தகைப் பேதைக்குக் கண்—பெண்டன்மை யுடைய இப்பேதைமையாளுக் குள்ள கண்கள்; கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன—தம்மைக் கண்டவரைக் கொல்லும் தோற்றத்துடன் கூடிக் கொடியனவா யிருந்தன.

இனி அமர்த்தல் மாறுபடுதல் என்றுகொண்டு கண்கள் பெண்டன்மையொடும் பேதைன்மையொடும் பொருந்தாது மாறு பட்டிருந்தன எனினுமாம். 'கண்' பால்பகா அஃறிணைப்பெயர் பேதையென்னுஞ்சொல் இங்குப் பருவங்குறியாது இளமை குறித்து நின்றது.

கo அடு. கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து.

(இதுவுமது)

(இ—ரை.) கூற்றமோ—என்னைக் கொல்வதுபோல வருத்துவதாற் காலனே; பிணையோ—இடையிடை மருண்டு பார்ப்பதாற் பெண்மானே; கண்ணே—இவ்விரு தன்மையும் இல்லாது சில வேளைகளிலிருப்பதால் இயல்பான மாந்தக்கண்தானே; மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து — இப்பெண்ணின் பார்வை இம்மூவகைத்தன்மையும் உடையதாயிருக்கின்றது.

மேற்கூறிய கொல்லுந் தன்மையோடு வேறிரு தன்மைகளும் உடைமை இங்குக் கூறப்பட்டது. 'கூற்றம்' 'கண்' 'பிணை' என்னும் மூன்றும் ஆகு பொருளன. 'மடவரல்' ஆகுபெயர். இதில் வந்துள்ள அணி ஐயவுவமை.

௧0அ௯. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்குஞர்
செய்யல மன்னிவள் கண்.

(இதுவுமது)

(இ—ரை.) கொடும்புருவம் கோடா மறைப்பின்—அருகிலுள்ளவரைந்த புருவங்கள் நேராக விருந்து மறைக்குமாயின்; இவள் கண் நடுங்க அஞர்செய்யல—இவள் கண்கள் நான் நடுங்குதற்கேதுவான துன்பத்தைச் செய்யமாட்டா.

இயல்பாகக் கொடிய புருவங்கள் தம் நேர்மையில்லாத் தன்மையால், தமக்கருகிலுள்ள கண்கள் எனக்குக் கடுந்துன்பஞ் செய்வதைத் தடுக்காதுபோயின, என்பதுபடநின்றமையின், 'மன்' ஒழியிசைப்பொருளது 'புருவம்'; 'கண்' பால்பகாவஃறிணைப் பெயர்கள்.

௧0அ௭. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

(அவள் முலைகளினுலான வருத்தங் கூறியது.)

(இ—ரை.) மாதர் படாமுலைமேல் துகில்—இப்பெண்ணின் சரியாத முலைகளின்மேல்—அமைந்த கச்சு; கடாக் களிற்றின்மேற் கண்படாம்—மதயானையின்மேல் இருமத்தகங்களையும் மறைக்குமாறு போர்த்த முகபடாத்தையொக்கும்.

முலைக்கச்சு மதயானையின் முகபடாத்தையொப்பது, தோற்றப் பொலிவும் அஞ்சத்தக்கதும் எல்லாரும் தொடமுடியாததுமான இடத்

திலிருப்பதும் பற்றியாம். மாந்தருள் பாகன் தவிர வேறெருவரும் முக படாத்தைத் தொடமுடியாததுபோல, ஆடவருட் காதலன் தவிர வேறெருவரும் முலைக்கச்சைத் தொடமுடியாமை நோக்குக. இரு முலைபோல் இருமத்தகமிருப்பதும் உவமைக்குத் துணையாம். ஆடவர் கைபடாக் கன்னி முலையாதலின், அதன் விடைப்புங் கட்டமைப்புந் தோன்றப் 'படாஅமுலை' என்றார். 'கடாஅ' 'படாஅ' இசைநிறையள பெடைகள். மாதர் என்னுஞ் சொற்கு முன்னுரைத்தாங் குரைக்க (குறள் கoஅக). முலைக்கச்சை நாணுடை மகளிர் மார்பை மறைத்த துகில் என்று, மார்யாப்புச் சேலையாக பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாது.

கoஅஅ. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு.

[அவள் நெற்றியினுலான வருத்தங் கூறியது.]

(இ—ரை.) ஞாட்பினுள் நண்ணுரும் உட்கும் என் பீடு—போர்க் களத்திற்கு வந்து என்வலிமையை அறியாத பகைவரும் வந்தறிந்தார் வாய்க் கேட்டு அஞ்சுதற்கேதுவான என் பெருவலிமை; ஒள்ளுதற்கு ஓ உடைந்ததே—இப்பெண்ணின் ஒளிபொருந்திய சிறு நெற்றி யொன்றிற்கே ஐயோ! அழிந்துவிட்டதே!

பெண் என்பது அதிகாரத்தால் வந்தது. பீடு என்பது பெருமை பேர் முதலியவற்றையுந் தழுவும். 'ஓ' கழிவிரக்கம் பற்றிவந்தது. 'ஓஒ' இசைநிறையளபெடை, உம்மை எச்சம், ஏகாரம் தேற்றம், "பெருமையும் உரனும் ஆடூஉமேன" (தொல். கள. எ) என்று கூறிக்கொள்ளும் பெருமையெல்லாம் பெண்ணிடத்துச் செல்லா தென்று, காமத்தின் இயல்பு கூறியவாறு.

"கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லிச்சிவன்ரு
ளாம்பொற் றடமலர் சூடுமென் ஞற்ற லகற்றியதே."

என்னுந் திருக்கோவைச்செய்யுள் (உக) ஈங்குக் கவனிக்கத்தக்க தாம்.

கoஅகூ. பிணையோர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனே வேதில தந்து.

(இ—ரை.) பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு—புறத்துப் பெண்மாணெத்த பார்வையழகையும் அகத்து நாணழகையும் உடைய இவளுக்கு; ஏதில தந்து அணி எவனே—இயற்கையும் தற்கிழமைச்சார்புமான இவ்வணிகளே அமைந்திருக்க, செயற்கையும் பிறிதின் கிழமைச் சார்புமான பிற அணிகளைக்கொண்டு வந்து அணிதல் எதற்காம்.

மடநோக்கு அழகிய பார்வை, இயற்கையழகை மறைத்தலும் இவளுக்கு வீண் சுமையாதலும் எனக்குத் துன்பந்தருதலுமன்றி. இப்புறவணிகளால் ஒருபயனுமில்லை யென்பது தலைமகன் கருத்து,

கoகo. உண்டார்க ணல்ல தடுநருக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

[தலைமகள் குறிப்பறிதலுற்றுன் சொல்லியது]

(இ—ரை.) அடுநரு—காய்ச்சப்படும் இனிய மது; உண்டார் கண் அல்லது—தன்னைப் பருகினவருக்கன்றி; காமம்போல் கண்டார் மகிழ் செய்தல் இன்று—காதலிக்கப்பட்ட பெண்போலத் தன்னைப் பார்த்தவருக்கும் மகிழ்ச்சி தருதலில்லை.

அடுநரு, சுவையும் மணமும் மிக்கனவும் உடம்பிற்கு உரஞ்செய்வனவும் சிறிது மயக்கந்தருவனவுமாக, கூலங்களினின்றும் கனிகளினின்றும் காயச்சரக்குகள் சேர்த்துக் காய்ச்சி யிறக்கப்படும் மட்டு வகைகள். மகிழ் என்பது, களி என்னுஞ்சொற்போல இன்பத்தையும் மயக்கத்தையும் உணர்த்தும். காமம் என்றது இங்கு அதை நுகர்தற்கு இடமானவரை. அவர் ஆடவர்க்குப் பெண்டிரும் பெண்டிர்க்கு ஆடவருமாவர். கண்டார்கண் என்பதிற் கண்ணென்னும் இடப்பொருளுருபு தொக்கது. இவள் காதற் குறிப்பை இன்னும் அறியாமையால் கண்டாரின்பமே யன்றி உண்டாரின்பம் யான் பெற்றிலேன் என்பது குறிப்பெச்சம்.

அதி. ககo—குறிப்பறிதல்

அஃதாவது, தலைமகன் தலைமகளின் காதற்குறிப்பை அவள் பார்வையினின்றும் செயல்களினின்றும் உய்த்துணர்தல். இயற்கைப் புணர்ச்சிக்குமுன் நிகழ்வதும் நிகழக்கூடியதும் இஃதொன்றேயாயினும், பொருளொப்புமை பற்றியும் சுருக்கம் பற்றியும், பாங்கியிற் கூடுதற்குமுன் தலைமகன் தோழிகுறிப்பினையறிதலும், அவள் தலைமகளிருவர் குறிப்பினையுமறிதலும், இங்குச் சேர்த்துக் கூறப்பட்டுள என அறிக.

தகையணங்குற்ற தலைமகன் தலைமகளைக் கூடுதற்கு அவள் குறிப்பறிதல் இன்றியமையாததாதலின், இது தகையணங்குறுத்தலின் பின்னும் இயற்கைப்புணர்ச்சிக்கு முன்னும் வைக்கப்பட்டது.

கoகக. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

[தலைமகன் தலைமகள் காதற்குறிப்பை அவள் நோக்கினுல் அறிந்தது]

(இ—ரை.) இவள் உண்கண் இருநோக்கு உள்ளது—இவளுடைய மையூட்டிய கண்கள் என்மீது இருவகையான நோக்குகள் கொண்டுள்ளன; ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து — அவற்றுள் ஒன்று என்னிடத்து நோயைச் செய்வது, இன்னொன்று அந்நோய்க்கு மருந்தாவது.

அழகிற்காகவும் குளிர்ச்சிக்காகவும் தமிழ்ப்பெண்டிர் கண்ணிற்கு மையிடும் பண்டை வழக்குப்பற்றி 'உண்கண்' என்றார். நோய்நோக்கு தலைமகன்மேற் காதற்குறிப்பை வெளிப்படுத்தாத பொதுநோக்கு; மருந்து நோக்கு அதைவெளிப்படுத்தும் சிறப்பு. இதுவரை ஒருதலைக்காதலாகிய கைக்கிளையாயிருந்த காமநிலை, இன்று இருதலைக்காதலாகிய ஐந்திணையாகப் பெயரத்தொடங்கியமை, இதனுற் கூறப்பட்டது. கண்டே மகிழும் காதலன் இனி உண்டு மகிழும் வாய்ப்பையுங் கண்டான்.

கoகஉ. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

[இதுவுமது]

(இ—ரை.) கண் களவு கொள்ளும் சிறுநோக்கம்—இவள் கண்கள் எனக்குத் தெரியாமல் என்னை மறைவாகப் பார்க்கும் இடுகிய பார்வை; காமத்தில் செம்பாகம் அன்று பெரிது—மெய்யுறு புணர்ச்சியில் சரிபாதியன்று, அதற்கும் மேற்பட்டதாம்.

தான் நோக்குங்கால் கவிழ்ந்து நிலம் நோக்கியும் தான் நோக்காக்கால் தன்னை நேர் நோக்கியும் வருதலாற் 'களவுகொள்ளும்' என்றும், தன்னை நோக்குவது இடுகியும் நேரங்குறுகியுமிருத்தலால் 'சிறுநோக்கம்' என்றும், அச்சிறுநோக்கம் தன்மேற் காதலை யுணர்த்துதலால் இனிப் புணர்த்த லுறுதிபற்றிச் 'செம்பாகமன்று பெரிது' என்றுங் கூறினன்.

கoகங. நோக்கினு நோக்கி யிறைஞ்சினு ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

(தலைமகள் காதலை நோக்கினாலும் நாணினாலும் அறிந்தது.)

(இ—ரை) நோக்கினுள்—நான் நோக்காதபோது அவள் என்னை அன்புடன் நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்—அங்ஙனம் நோக்கினவள் உடனே ஒன்றைக் கருதி நாணங்கொண்டு என்னை வணங்குவாள் போலத் தலைகுனிந்தாள்; அஃது அவள் யாப்பினுள் அட்டிய நீர்—அச்செயல் எம் மிருவேமையும் பிணிக்கும் காதற்பயிர் வளர அவள் வார்த்த நீராகும்.

யாக்கும் அன்பை யாப்பென்றார். யாப்பைப் பயிராக வுருவகியாமையின் இது ஒரு மருங்குருவகம்.

கoகச. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.

(தலைமகள் காதலை நாணினாலும் மகிழ்ச்சியினாலும் அறிந்தது.)

(இ—ரை) யான் நோக்கும் காலை நிலன் நோக்கும்—நான் அவளை நோக்கும்போது அவள் எதிர்நோக்காது நாணித் தலை குனிந்து நிலத்தை நோக்குவாள்; நோக்காக்கால் தான்நோக்கி மெல்ல நகும்-அதைக் கண்டு நான் அவளை நோக்காதபோது அவள் என்னை நோக்கித் தனக்குள் மகிழ்ந்து புன்னகை கொள்வாள்.

மென்னகையாற் புணர்ச்சி விருப்பம் வெளியாயிற்று.

கoகஙு. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லெருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

(இதுவுமது)

(இ—ரை.) குறிக்கொண்டு நோக்காமை அல்லால்—என்னை முகநோக்கி உற்றுப்பார்க்காத தன்மையே யன்றி; ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும்—ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்த்தாற் போல என்னை நோக்கிப் பின் தனக்குள்ளே மகிழ்வாள்.

சிறங்கணித்தாள் என்பது எதுகைநோக்கி வலித்தது. சிறங்கணித்தல் வெளிப்படையாய் நிகழாமையாற் 'போல' என்றார். நோக்கி என்பது சொல்லெச்சம். இனி இவளை யடைதல் உறுதி யென்பது குறிப்பெச்சம்.

இதுவரை கூறப்பட்டது தலைமகன் தலைமகள் குறிப்பினை யறிதல். இனிக் கூறப்படுவன தலைமகன் தோழி குறிப்பினை யறிதலும் தோழி அவ்விருவர் குறிப்பினையு மறிதலுமாம்.

கoகூ. உருஅ தவர்போற் சொலினுஞ் செருஅர்சொ
லொல்லை யுணரப் படும்.

(தோழி சேட்படுத்தியவழி அவள் குறிப்பறிந்த தலைவன் தன்னுள்ளே சொல்லியது.)

(இ—ரை.) உருதவர் போல் சொலினும்—புறத்தில் அயலார் போல் அன்பில்லாத சொற்களைச் சொன்னராயினும்; செருர் சொல் ஒல்லை உணரப்படும்—அகத்திற் பகையில்லாதவர் சொல் பின்பயன் படுதல் குறைவேண்டியவரால் விரைந் தறியப்படும்.

சேட்படுத்தலாவது, தலைமகன் தலைமகள் ஆகிய இருவரின் காதல் நிலைமைகளையும் முற்றுந் தெளிவாக அறிதற் பொருட்டும், தலைமகளை அருமைப்படுத்தற் பொருட்டும், தோழி தலைமகனை நெருங்க வொட்டாது சில நாள் நீக்கிவைத்தல். அங்ஙனம் சேட்படுக்கும்போது, எம் உறவினர் கடுங்கண் மறவர் என்றும், இவ்விடம் காவன் மிகுதியுடைமையால் நீர் வரத்தகாது என்றும், அன்பிலாதவர்போலக் கடுஞ்சொற்களைச் சொல்லுதல் மரபு. ஆயினும், தலைமகன் அறிவுடையனுதலின், அத்தகைய சொற்களால் தளராது, தன் குறை முடிக்கக் கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பாலறிந்து, உலகியல்மேல் வைத்துக் கூறியதாகும் இக்குறட் கூற்று. இது வருகின்ற குறட்கும் ஒக்கும். 'செருர்' எனவே அன்புடைமை பெறப்படும். 'உருஅ(தவர்),' 'செருஅர்' என்பன இசைநிறை யளபெடைகள். 'போல்' என்பது உண்மையில் உருதவரன்மையைக் காட்டும். உம்மை எதிர்மறை.

கoகூ. செருஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னேக்கு
முருஅர்போன் றுற்றார் குறிப்பு.

(இதுவுமது)

(இ—ரை.) செருச் சிறுசொல்லும்—உண்மையாக வெறுப்புக் கொள்ளாத போலிக்கடுஞ்சொல்லும்; செற்றார்போல் நோக்கும்—அகத்திற் பகையாதிருந்தே புறத்திற் பகைத்தார் போற் பார்க்குஞ் சினப்பார்வையும்; உரூர்போன்று உற்றார் குறிப்பு—அயலார்போல் நடித்து அன்பராயிருப்பவரிடம் ஒரு கருத்துப்பற்றி நிகழ்வனவாம்.

இவை இயல்பல்லாது உள்ளத்துட் குறித்த ஒரு பயன்நோக்கிச் செய்கின்றன வாதலின், இவற்றுற் கலங்கவேண்டிய தின்று என்ப தாம். 'குறிப்பு' ஆகுபெயர். 'செருஅர்'. 'உரு அர்' இசை நிறையள பெடைகள்

கoகூஅ. அசையியற் குண்டாண்டோ ரேளாயா னேக்கப்
பசையினள் பைய நகும்.

(தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.)

(இ—ரை.) யான் நோக்கப் பசையினள் பைய நகும்—தோழி என்னைச் சேட்படுத்துரைக்குஞ் சொற்காற்றாது யான் இரந்து நோக்கிய விடத்து, அஃதறிந்து அன்பால் நெகிழ்ந்து மெல்ல நகுவாள்; அசையியற்கு ஆண்டு ஓர் ஏர் உண்டு—ஆதலால், அசையும் மெல்லியலாளாகிய என் காதலிக்கு அந்நகையின்கண் ஓர் அழகிய குறிப்புளது.

அக்குறிப்பால் என் வேணவா நிறைவேறும் என்று மகிழ்ந்தான் என்பதாம். 'அசையியல்' அன்மொழித்தொகை. ஏளர்' இசை நிறையளபெடை. 'ஏர்' ஆகுபெயர்.

கoகூஆ. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல
காதலார் கண்ணே யுள.

(மதியுடம்பட்ட தோழி தன்னுள்ளே சொல்லியது

(இ—ரை.) ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்—முன்னறியாதார் போல ஒருவரையொருவர் பொது நோக்கால் நோக்குதல்; காதலார் கண்ணே உள—இவ்விரு காதலரிடத்தேயே உள்ளன.

பொது நோக்கு யாவரையும் ஒரு தன்மைத்தாய் நோக்கும் நோக்கு. நோக்குவார் பன்மையாலும் நோக்க நுண்வேறுபாட் டாலும் நோக்குப் பலவாயிற்று. 'நோக்குதல்' பால்பகாவஃறிணைப் பெயர் இருவரும் உள்ளத்துள் மகிழ்தலைத் தன் நுண்மதியாற் கண்டாளாதலின் 'காதலார்' என்றும், அதை வெளிப்படையாய்க் காட்டாமையால் 'ஏதிலார் போல்' என்றும், கூறினாள். ஏகாரம் பிரிநிலை.

"ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
நரந்தங் கண்ணி யிவனே டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் நாணுவர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுவ கண்ணி னனே." (இறை. கள. அ—ஆம் நூற்பாவுரை)

சுகூ. கண்ணிணை கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில.

(இ—ரை.) கண்ணிணை கண்ணிணை நோக்கு ஒக்கின்—காதலர் இருவருள் ஒருவர் கண்களோடு மற்றொருவர் கண்கள் சிறப்புப் பார்வையால் ஒன்றுபடின்; வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல—அவர் வாய்மை போற் சொல்லுஞ்சொற்கள் ஒரு பொருளும் உடை யன வாகா.

நோக்கொத்தல் காதல் நோக்கின வாதல். வாய்ச்சொற்கள் மனத்தொடு பொருந்தாது வாயளவில் தோன்றுஞ் சொற்கள். இரு வரிடத்துச் சிறப்பாக நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பொதுப்படுத்தி உல கின்மேல் வைத்துக் கூறியவாறு. சிறப்பு நிகழ்ச்சியாவது, காதலன் வேட்டையாடுதல் மேலும் காதலி புனங்காவல் மேலும் கருத்தூன்றி யிருந்ததாகச் சொன்ன செய்தி. அவர் சொன்னவை பொய்யாத லின் பொருளற்றவை யென்பதாம். இவை புணர்தல் ஏது (நிமித்தம்)

மற்றொருரை

கண்ணிணை கண்ணிணை நோக்கு ஒக்கின்—ஓர் இளைஞனும் ஓர் இளைஞியுமாகிய இருவர் கண்ணிணைகளும் பார்வையா லொன்றிக் காதலைச் செய்யுமாயின்; வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல—அதன்மேற்பட்டு வாயினால் சொல்லுஞ் சொற்கள் சிறப்பாக ஒரு பயனும் படாதவையாதலின், முற்றுந் தேவையற்றனவாம்.

காதற்குக் கண்ணைக் கொன்றே போதும் என்றவாறு. வாய்ச் சொற்கள் என்பது எழுத்துச் சொற்களையும் உளப்படுத்தும்.

அதி. ககக—புணர்ச்சி மகிழ்தல்

அஃதாவது, தலைமகள் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் கழிபெரு மகிழ்ச்சியுற்று அப்புணர்ச்சி யின்பத்திலே யெடுத்துக் கூறல். அதி காரமுறைமையும் இதனுள் விளங்கும்.

இஃது இயற்கைப் புணர்ச்சி. கொடுப்பாரும் அடுப்பாருமின்றியும் முன்னறிவும் முயற்சியுமின்றியும், காதலிருவரும் தாமே தமியராய் எதிர்ப்பட்டு இயற்கையாகப் புணரும் புணர்ச்சியாதலின், இப்பெயர் பெற்றது. இது தெய்வத்தாலேற்படுவதால் தெய்வப் புணர்ச்சி யென்றும், காதலால் நிகழ்வதாற் காமப் புணர்ச்சி யென்றும், முதன் முதலாகப் புணர்தலால் முன்னுறு புணர்ச்சியென்றும் பெயர்பெறும்

நாகரிகம் முதிர்ந்த நிலையில் நிகழ்ந்த இப்பேரின்பக்கள வொழுக்கத்தை, பிறழவுணர்ந்த புல்லறிவாளரும், காசினை வெள்ளி தென்னுங் காட்டிக் கொடுக்கியரும், கட்டுப் பாடாகத் தமிழைப் பழிக்குங் கடும்பகைவரும். மேனாட்டுக்காகத் தமிழைக் கற்ற மேலை யறிஞரும். இல்லற வாழ்க்கை யேற்படாத தொன்மைக்காலத்தில் அநாகரிக மாந்தர் ஆடுமாடுகள் போற் கண்டகண்ட விடத்திற் காமத்தாற் புணர்ந்து திரிந்ததாகக் கருதுவர். அரையாடையுமின்றி அடவியில் தன்னந்தனியாய்த் திரிபவன், கூர்வேலினருகர் ஆயி ரவர் புடைசூழத் தேரூர்ந்து செல்வனுக்கு? தன்னுணவிற்குந்தானே இயற்கைவினைவைத் தேடித் திரிபவள், நற்றாயொடு செவிலித்தாயும் பேண ஆயிழைத் தோழியர் ஆயிரவரொடு கூடி வாழ்வளோ? கண் ணிற்கினிய வண்ணமும் வடிவுமின்றிக் கருங்காலிக் கட்டைபோல் தோன்றுங் காட்டுப் பெண்ணையுங் கண்டவன், அணங்குகொல்! ஆய்மயில் கொல்! என்று வியப்பனோ? களவொழுக்கம் கற்பாக மாறுவதும், கற்பு வாழ்க்கையிற் கணவர் காவலுந் தூதும் போரும் வாணிகமும் பற்றி, காலினுங் கலத்தினும் சேணெடுந்தேயமும் செல் லுதல் அநாகரிகக் காலத்திலுண்டோ? இனி அகப்பொருள் பற்றிய தனித்துறைச் செய்யுட்களும் கோவைப் பனுவல்களும், காதல் வாழ்க்கையைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் அறிவியல் முறை யிலும் அழகிய பாவடிவிலுங் கூறுவதும், அநாகரிக நிலையைக் காட் டுமோ? இத்தகைய மடமைக் கருத்துக்கள் இக்காலத்தும் எழுந்து பரவற்கு, இற்றைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரே முதற் காரணி யம் என அறிக.

இனி, தமிழக் களவிற்கும் ஆரியக் காந்தருவத்திற்கு முள்ள மறைவென்னும் ஒருபுடை யொப்புமைபற்றி,

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே."

என்று தொல்காப்பியர் (கள. க) கூறியுள்ளது கொண்டு, தமிழ் நூற் காதல் முறைகளே ஆரியநூல் மண முறைகளொடு தொடர்பு படுத்தி, களவொழுக்கமும் காந்தருவமும் ஒன்றென்று கூறுவர் உரையாசிரியன்மார். கந்தருவரை வானவர் வகையினரென்று வடநூல்கள் குறிப்பதனாலும் "கந்தருவர்க்குக் கற்பின்றியமையமும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே யமையாது." (தொல். கள. க. உரை) என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பதனாலும், காந்தருவ வொழுக்கம் நெறிப்படாததும் காமவின்ப மொன்றையே கருதியதும் மக்கள் ஐந்திணைக் களவொழுக்கத்தினின்றும் வேறுபட்டது மாகுமென்று துணியப்படும். வெம்பாவியிலும் (mist) மஞ்சிலும் தோன்றும் நகர நிழலை (mirage)க் கந்தருப்ப நகரம் என்பதனாலும், காந்தருவ வொழுக்கத்தின் கருதியற்றன்மை அறியப்படும்.

கக0க. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

(இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கண் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்—கண்ணுற் கண்டும் காதாற் கேட்டும் நாவாற் சுவைத்தும் மூக்கால் முகர்ந்தும் உடம்பால் தீண்டியும் நுகரப்படும் ஐம்புல வின்பங்களும், ஒண்டொடி கண்ணே உள—இவ்வொளிபொருந்திய வளையல் அணிந்தாளிடத்தேயே ஒருங்கமைந்திருக்கின்றன.

வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருளால் நுகரப்படும் ஐம்புல வின்பமும், ஒரே காலத்து இவளிடம் நுகரப்பட்டன என்று பாராட்டிக் கூறியவாறு. இது சிற்றின்பத்திற் பெண்ணின்ப மொழிந்த பிறவின்பங்களுமுண்டே யென்று சொல்வாரை யுட்கொண்டு கூறியதாகும். கேடலின்பம் இன்குரற் பேச்சால் மட்டுமின்றிப் பாட்டாலும் நிகழ்வதாம். உம்மை முற்றும்மை. 'ஒண்டொடி' அன்மொழித்தொகை. ஏகாரம் பிரிநிலை. "வடநூலார் இடக்கர்ப் பெருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டடக்கிக் கூறப்பட்டன." என்று பரிமேலழகர் ஆரிய அநாகரிகத்தை ஒப்புக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கதே.

௬௬02. பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னெய்க்குத் தானே மருந்து.

(தலைமகன் இடந்தலைப் பாட்டின்கட் சொல்லியது.)

(இ—ரை.) பிணிக்கு மருந்து மன் பிற—ஊதை (வாதம்) முதலிய நோய்கட்கு மருந்தாவன, பெரும்பாலும் அவற்றிற்கு மாறுன இயல்புள்ள பிற பொருள்களாம்; அணியிழை தன் நோய்க்கு மருந்து தானே—ஆனால், இவ்வழகிய கலன்களே யணிந்தவளோ, தன்னலுண்டான நோய்க்கு மருந்து தானே யாயினள். இஃதொரு வியப்பே!

சேடா என்னும் சலங்கைப்பூரான் கடித்தால், அதன் விளை வைத்தடுக்க, அப்பூரானையே கொன்று உலர்த்தித் தூளாக்கி வெற்றிலையில் மடித்துண்ணக்கொடுப்பர். இங்ஙனம் சில நோய்கட்கு நோயுண்டாக்கிய பொருள்களையே மருந்தாகக் கொடுப்பது வழக்கம். ஆதலால், 'மன்' பெரும்பான்மை குறித்த இடைச்சொல்லாகும். 'அணியிழை' அன்மொழித்தொகை; ஏகாரம் பிரிநிலை. இடந்தலைப்பாடாவது, இயற்கைப் புணர்ச்சிக்கு மறுநாளும் தலைமகன் தானே சென்று முன்கூடிய இடத்தில் தலை மகளைக் கூடியது.

௬௬0ங. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
ருமரைக் கண்ணு னுலகு.

(நிலையான பேரின்பத்தைப் பெறற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இங்ஙனம் நைவது தகாதென்று கழறிய பாங்கற்குச் சொல்லியது.)

(இ—ரை.) தாமரைக் கண்ணன் உலகு—நீ மிகச் சிறந்ததாக வுயர்த்திக் கூறும் செங்கண்மாலின் வீட்டுலகம்; தாம் வீழ்வார் மெல் தோள் துயிலின் இனிதுகொல்--ஐம்புல வின்பம் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் தோளிடத்துத் துய்க்கும் துயில்போல இன்பஞ் சிறந்ததோ?

இஃது ஒரு பெண்ணின்பப் பித்தன் கூற்று;

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி." (நாலடி. ஙகஎ)

என்னும் போங்கில் அமைந்தது. ஐம்புல வின்பம் நுகர்வார் என்னும் பெயர் ''கண்டுகேட் டுண்டுயிர்த்து'' என்னுங் குறளினின் றமைக்கப்பட்டது. தாமரைக்கண்ணு னுலகை ''இந்திரனது சுவர்க்கம்'' என்பர் மணக்குடவ பரிப்பெருமாளர். இந்திரனுக்குத் தாமரைக் கண்ணன் என்னும் பெயரின்மையானும்; திருவள்ளுவர் சிவனுந்திருமாலும் ஒன்றென்னும் கடவுண் மதத்தாராதலின், சிவ னடியார்க்கும் திருமாலடியார்க்கும் பொதுவாக ஒரே வீட்டுலகங் கொண்டாராதலானும்; பெண்ணின்பச் சிறப்பை உயர்வு நவிற்சி யாகக் கூறுதற்கு வீட்டுலகத் தின்பத்தோ டுறழ்வதே யேற்குமாத லானும்; அவ்வுரை பொருந்தாதென்க. இனி, இதனுலே, சிவ வீட் டுலகமும் திருமால் வீட்டுலகமும் வெவ்வேறென்று கொண்டு ஏற்றத் தாழ்வு கூறும், குறுநோக்காளர் கூற்றும் பொருந்தாமை காண்க. இனி, 'ஆரியச் சூழ்ச்சியான முத்திருமேனிக் கொள்கையையும் நூன்முகன்' என்னும் படைப்புத் தெய்வத்தையும் தமிழ வறிஞர் ஏற்காமையால், ''ஆயிரம் வேள்வியின் எய்துவாராக அருமறை கூறும் அயனுலகு'' என்றும், ''தாமரைக் கண்ணுன் என்பது தாமரையிடத்தான் என்றது.'' என்றும், காலிங்கர் கூறியதும் பெருந் தவரும். இனி, 'இனிது' என்பதற்கு 'எளிது' என்று பரிமேலழகர் பொருள் கொண்டதும் தவரும். 'தோட்டுயில்' என்பது இடக்கர டக்கல். 'மிகால்' விஞவிடைச் சொல். திருமாலுக்குத் தாமரைக் கண்ணன் என்னும் பெயர் கண்ணன் தோற்றரவினின்று தோன்றியதாகும்.

கூ0ஓ. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுங்
தீயாண்டுப் பெற்ரு ளிவள்.

(தலைமகன் பாங்கற் கூட்டத் திறுதிக்கட் சொல்லியது.)

(இ—ரை.) நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும் தீ—தன்னைவிட்டு அகன்ருற் சுடுவதும் தனக்கு நெருங்கினுற் குளிர் வதுமான புதுமைத் தீயை; இவள் யாண்டுப் பெற்ருள்—இவள் எங்கிருந்து பெற்ருள் ?

பாங்கற் கூட்டமாவது, மூன்ரும் நாள் தலைமகள் இருக்குமிடத் தைத் தலைமகன் தோழன் வாயிலாக அறிந்து சென்று கூடியது. கூடு முன்னும் பிரியும்போதும் துன்புறுதலால் 'நீங்கிற் றெறூஉம்' என்றும், நெருங்கும்போதும் கூடும்போதும் இன்புறுதலாற் 'குறு குங்காற் றண்ணென்னும்' என்றும், இத்தகைய தீ உலகத்திலில்லை யாதலால் 'யாண்டுப்' பெற்ருள்' என்றும் கூறினன்.

கக0டு. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள்.

[தலைமகன் பாங்கியிற் கூட்டத் திறுதிக்கண் சொல்லியது.]

(இ—ரை.) தோடு ஆர் கதுப்பினுள் தோள்—அழகிய இதழுள்ள பூவையணிந்த கூந்தலையாகிய இவள் தோள்கள்; வேட்ட பொழுதின் அவை அவை போலுமே—விரும்பிய போதெல்லாம் ஆசைப்பட்ட அரும்பொருள்கள் தாமே வந்து சேர்ந்து இன்பஞ் செய்தாற்போல, நான் வேண்டிய போதெல்லாம் எனக்கு எளிதாகக் கிடைத்து இன்பஞ் செய்தன.

பாங்கியிற் கூட்டமாவது, முந்தின முந்நாளும்போல் நாலாம் நாள் தலைமகள் தனிதிராது தோழிமாரொடு கூடியிருந்ததினும், தலைமைத தோழியைத் துணைக்கொண்டு தலைமகன் தலைமகளைக் குறித்த இடததிற் கூடியது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் ஆகிய நால்வகைக் கூட்டங்களாலும், தலைமகன் தொடர்ந்து இன்பம பெற்றமையால் 'வேட்ட பொழுதி னவையவை போலுமே' யென்றான். 'தோடு' ஆகுபெயர். ஏகாரம் தேற்றம. 'தோள்' இடக்கரடக்கல். உவமம் இன்பஞ் செய்தல் பற்றியதாதலின் விளையுவமை.

கக0கூ. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

(இ—ரை.) உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால்—நான் இவளைத் தழுவும் போதெல்லாம் என் உயிர் தழைக்குமாறு தீண்டுதலால்; பேதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன — இவ்விளம் பெண்ணிற்குத் தோள்கள் அமிழ்தினால் அமைக்கப் பெற்றனவா யிருக்கின்றன.

மென்மையுந் தண்மையும் இன்பமும் பற்றி 'அமிழ்தி னியன்றன' என்றான். பேதை என்னுஞ் சொல் பருவங் குறியாது இளமை குறித்து நின்றது. 'தோள்' பால்பகாவஃறிணைப் பெயர். தழைத்தல் கிளர்ச்சியும் உரமும் பெறுதல்.

கக0எ. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.

[நீ இவளை வரைந்து கொண்டு தம்மில்லிருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தில் ஈடுபடல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.]

(இ—ரை.) அம்மா அரிவை முயக்கு—அழகிய மாநிறத்தையுடைய இப்பெண்ணின் தழுவல்; தம் இல் இருந்து தமது பாத்து உண்ட அற்று—தமக்குரிய தனி மனையிற் குடியிருந்து, தம் முயற்சியாற் பெற்ற பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலரசுகட்குப் பகுத்து, எஞ்சியதைத் தாம் உண்டாற்போல்வதே.

இல்லறஞ்செய்தார் பெறும் விண்ணின்பம் போன்ற இன்பத்தை இக்களவொழுக்கத்தாலேயே பெறுகின்றே னென்று, தலைமகன் வரைவுடம்படாது கூறியவாறு. வரைவாவது இல்லறம் தொடங்கும் கற்புச் சடங்கு. "எவ்வளையுந் தனிவளை, தனிவளையுந் தன்வளை." என்னும் உரிமையுணர்ச்சி பற்றித் 'தம் இல்' என்றும், "தாள்தந்த தண்ணிலை னுங்கினிய தில்" (குறள். ஈ0சுஞ) என்பது பற்றித் தமது' என்றும், "ஐம்புலத்தா ரோம்பல்" (குறள். சுகூ) பற்றிப் 'பாத்து' என்றும், வரைவாற் சிறந்த பேறில்லை யென்பது தோன்ற 'அற்று' என்றும், கூறினன். 'ஆல்' அசைநிலை. 'அரிவை' என்பது இங்குப் பருவங் குறியாது பெண்மை மட்டுங் குறித்து நின்றது.

சுசo அ. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

[இருவர்க்கும் இடையீடு படாத முயக்கு இல்லறத்திலேயே இயலுமென்று வரைவுகடாவின தோழிக்குச் சொல்லியது.]

(இ—ரை.) (நீ சொல்வ தொக்கும்;) வளி இடை போழப் படா முயக்கு—ஒருடம் பென்னுமாறு இறுக ஒன்றியமையால் காற்று ஊடையறுக்கப்படாத தழுவல்; வீழும் இருவர்க்கு இனிதே—ஒருவரை யொருவர் விழையும் இருவர்க்கும் இன்பந் தருவதே.

தோழி நாளிடையீடு குறித்துச் சொன்னதற்கு மாறுகத் தலைமகன் காற்றிடையீடு குறித்துச் சொல்லியும், அவள் உடம்பு பற்றி இருவர் எனக் கொண்டதை அவன் காதல் பற்றி உயிரால் ஒருவர் எனக் கொண்டு மறுத்தும் கோணை யுறழ் (வாதம்) செய்தவாறு. இதனால் வரைவுடம்படாமை தெரிவித்தான். முற்றும்மைசெய்யுளால் தொக்கது. ஏகாரம் தேற்றம். 'படாஅ' இசைநிறையளபெடை. வரைவு கடாதலாவது வெளிப்படையான காரணச்சடங்கொடு இல்லற வாழ்க்கை தொடங்குமாறு வேண்டுதல்.

ககoகூ. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

[மறைத்தல் வேண்டாமையின் அச்சமின்றியும் நாள்தோறுங் கூடுங் கூட்டமே இன்பஞ் சிறக்குமென வரைவுகடாவியவட்குச் சொல்லியது]

(இ—ரை.) ஊடல் உணர்தல் புணர்தல் இவை—பழகப் பழகப் பாலும் புளித்தல்போல நாளடைவில் இன்பங் குன்றிய புணர்ச்சி யினிதாதற் பொருட்டு வேண்டியதான ஊடலும், அது முதிர்ந்து உள்ளதையுங் கெடுக்காவாறு அளவறிந்து நீக்கலும், அதன்பின் கூடலும் ஆகிய இவையன்றே, காமம் கூடியார் பெற்ற பயன்—வரைந்து கொண்டு காமவின்பஞ் சிறந்தவர் பெற்ற பயன்கள்'.

ஆடவர் தத்தம் தொழில்பற்றிப் பிரிந்துபோதலும், அவர் வரவு குறித்த காலங் கடந்த விடத்துப் பெண்டிர் வருந்துதலும், வந்த பின்பும் ஏதேனுமொன்று கருதிக்கொண்டு ஊடுதலும், அதைக் கணவர் பல்வேறு வகையில் நீக்குதலும், அதன்பின் கணவன் மனைவியர் கூடுதலும் ஆகிய இவைதானே, வரைந்து கொண்ட கற்பொழுக்கத்தார் பெற்ற பயன்! வரையாமையால் , அருமைப் படுவதும், மறைவால் இன்பஞ் சிறப்பதும், மேன்மேலும் ஆராமை மீதூர்ந்து இரண்டறக் கலப்பதுமான, இக்களவொழுக்கப் பேரின் பத்திற்கு அக்கற்பொழுக்க வூடலின்பம் எவ்வகையிலும் ஈடாகுமோ? அதை நான் வேண்டேன் என்று அதை இகழ்ந்தவாறு.

ககக0. அறிதோ றறியாமை கண்டற்றூற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

[உடன்போக்கில் தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.]

(இ—ரை.) சேயிழை மாட்டுச் செறிதோறும் காமம்—இச் செம்மையான அணிகலன்களையுடையாளொடு கூடுந்தோறும் நான் பெறுங் காமவின்பம்; அறிதோறு அறியாமை கண்ட அற்று—நூல்களாலும் நுண்மதியாலும் பொருள்களை அறியவறிய முன்னை யறியாமை விளங்கித் தோன்றினற்போலத் தோன்றுகின்றது.

உடன்போக்காவது; தலைமகள் பெற்றோர் அவளைத்தர இசை யாதபோது, தலைமகன் அவளைக் கூட்டிக் கொண்டு தன்னூர்க் கேனும் வேற்றூர்க்கேனுஞ் செல்லுதல். அறிவிற்கெல்லையின்மையின் மேன்மேலறிய வறிய முன்னை யறியாமை மிகுந்து தோன்றுவது,

போல, இன்பத்திற்கும் எல்லையின்மையின் தன் காதலியொடு மேன் மேற் கூடக்கூட முன்னையின்ப நுகர்ச்சிக்குறைவு விளங்கித்தோன்று கின்றதென்று, அவள் சிறப்புக் கூறியவாறு. களவொழுக்கத்திற் பல்வேறு தடைகளால் பன்னூள் தலைமகளைக் கூடப்பெறாது துன்புற்ற தலைமகன், இன்று அத்தடைகள் முற்றும் நீங்கியமை தோன்றச் 'செறிதோறும்' என்றான். 'சேயிழை' அன்மொழித்தொகை. 'ஆல்' அசைநிலை. இப்புணர்ச்சி மகிழ்தல் தலைமகட்குமுண்டேனும், அது அவள் நாணம் பற்றிக் குறிப்பாக நிகழ்வதல்லது கூற்றாக நிகழா தென அறிக.

அதி. ககஉ—தலைப்பெயனீர்த்துரைத்தல்

அஃதாவது, தலைமகன் தலைமகள் அழகைப் பாராட்டிக் கூறுதல். இது புணர்ச்சியின்பம் பெற்ற பின்பு அளவில்லா மகிழ்ச்சியொடும் அடக்க வொண்ணா வுணர்ச்சியொடும் நிகழ்வதாகலின், புணர்ச்சி மகிழ்தலின் பின் வைக்கப்பட்டது.

ககக. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

[இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.]

(இ—ரை.) அனிச்சமே நன்னீரை—அனிச்சப் பூவே! நீ மோப்பக் குழையும் நாணமுடைமையால் மற்றெல்லாப் பூவினும் நல்ல தன்மையை யுடையை; வாழி — ஆதலால் நீ நீடுவாழ்க!; யாம் வீழ்பவள் நின்னினும் மெல்நீராள்—ஆனால், எம்மால் விரும்பப் பட்டவளோ உன்னைவிட மெல்லிய தன்மையுடையவள். இதை இன்றறிந்துகொள்.

இது காமவின்ப மகிழ்ச்சி மயக்கத்தால், கேட்குந போலவுங் கிளக்குந போலவும் அஃறிணை மருங்கின் அறைந்தது. இதுபோற் பின் வருவனவற்றிற்கும் ஈதொக்கும். 'அனிச்சம்' ஆகுபெயர். இவ்வுலகில் யானே மென்மையிற் சிறந்தேன் என்னும் செருக்கை யினி யொழிவாயாக என்பது குறிப்பு. தழுவலால் ஊற்றினிமையைச் சற்று முன்பு அறிந்தாளாகலின், அதைப் பாராட்டினாள். இன்னீரள் என்னும் பாடம் சிறந்ததன்று.

ககஉ. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

(இடந்தலைப் பாட்டின்கட் சொல்லியது)

(இ—ரை.) நெஞ்சே — என் நெஞ்சமே! ; மலர்காணின்— தாமரை, குவளை முதலிய மலர்களை நீ கண்டால்; இவள் கண்—யான் ஒருவனே காணப்பெற்ற இவள் கண்களை; பலர் காணும் பூ ஒக்கும் என்று மையாத்தி—எல்லாராலும் எளிதாய்க் காணப்படும் பொது வகையான அப்பூக்கள் ஒக்குமென்று கருதி மயங்கி நிற்கின்றாய், உன் அறிவிருந்தவாறு என்னே!

இது நெஞ்சொடு கிளத்தல், இயற்கைப் புணர்ச்சியின் பின் தலைமகள் கண்களை ஒருபுடையொத்த மலர்களைக் காணும்போதெல் லாம் அவற்றின்கண் காதல் செய்துவந்த தலைமகன், இதுபோது அவள் கண்களை மீண்டும் கண்டு அவற்றின் அழகைச் செவ்வையா யறிந்தானுதலின், அம்மலர்களின் ஒவ்வாமை கண்டு ஒத்தனவாகக் கருதிய நெஞ்சை யிகழ்ந்து கூறியவாறு. மை—மயக்கம். யாத்தல்— பொருந்துதல்.

கக.கூ. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

(கூட்டுதற் குடம்பட்ட பாங்கற்குத் தலைமகன் தலைமகளதியல்பு கூறியது.)

(இ—ரை.) வேய்த்தோளவட்கு — பசுமூங்கில் போலுந் தோளினையுடையவட்கு; மேனி முறி—உடம்பு மாந்தளிர் நிறமாயி ருக்கும்; முறுவல் முத்தம்—பல் வெண்முத்துப் போன்றிருக்கும்; நாற்றம் வெறி—இயல்பான மணம் நறுமணமாயிருக்கும்; உண்கண் வேல்—மையூட்டிய கண்கள் வேல்போற் கூராயிருக்கும்.

பெயராலும் ஓர் இயல்பு கூறப்பட்டது. 'முறி' 'முறுவல்' ஆகு பெயர்கள். உவமைகள் உருவக வடிவிற் கூறப்பட்டன. இத்துறை உன்னுற் கருதப்பட்டவளை அறியேனென்று சேட்படுத்திய தோழிக் குத் தலைமகன் சொன்னதுமாம்.

கக.கூ. காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று.

(பாங்கற் கூட்டத்துச் சென்று சார்வான் கூறியது.)

(இ—ரை.) குவளை—குவளைப் பூக்கள் தாம்; காணின்—காணுந் தொழிலையுடையனவாயின்; மாண் இழை கண் ஒவ்வேம் என்று—விளைத்திறத்தால் மாட்சிமைப்பட்ட அணிகலன்களையுடைய இவள் கண்களை யாம் ஒவ்வேமென்று கருதி; கவிழ்ந்து நிலன் நோக்கும்—அந்நாணத்தினுற் குனிந்து நிலத்தை நோக்கும்.

பண்பாலன்றித் தொழிலாலும் ஒவ்வாமையாற் 'காணின்' என்றும். கண்டால் நாணும் என்பது தோன்றக் 'கவிழ்ந்து' என்றும். கூறினான். காட்சியும் நாணமுமின்மையாற் செம்மாந்து மேல் நோக்கின என்பது தற்குறிப்பேற்றம். 'மாணிழை' அன்மொழித் தொகை.

குகுகநி. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ளுயுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

(பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது.)

(இ—ரை.) அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்—இவள் தன் இடை மென்மையை நோக்காது அனிச்சப்பூவைக் காம்பு கிள்ளாமல் தன் தலைக்கணிந்தாள்; நுசுப்பிற்கு நல்ல பறை படா—ஆதலால், இனி இவளிடைக்கு மங்கலப் பறைகள் முழங்கா, அமங்கலப் பறைகளே முழங்கும்.

அக் காம்பின் கனத்தைத் தாங்கமாட்டாமல் இவள் கொடியிடை ஒடியும்; ஒடிந்தாற் சாவுநேரும்; அன்று அமங்கலப்பறை தான் முழங்கும், சாவு இடை முறிவால் நேர்வதால், சாப்பறை முழக்கம் இடையை நோக்கியதாகச் சொல்லப்பட்டது. இடையொடுக்கத்தை மிகுத்துக் காட்டியதால் இஃது உயர்வு நவிற்சியணி. 'படாஅ' இசை நிறையளபெடை. 'பறை' பால்பகா வஃறிணைப் பெயர். பகற்குறியாவது பாங்கியிற் கூட்டக் காலத்திற் பகல் வேளையில் தலைமகனுந் தலைமகளுங் கூடுதற்குக் குறித்த இடம்.

குகுகசு. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

(இரவுக் குறிக்கண் நிலாவைக் கண்டு சொல்லியது)

(இ—ரை.) மீன்—விண்மீன்கள்; மதியும் மடந்தை முகனும் அறியா—தம் தலைமைச் சுடராகிய மதிக்கும் எம் காதலி முகத்திற்கும் வேறுபாடு பெரிதாயிருந்தும் அதனை அறிய மாட்டாது; பதியின்

கலங்கிய—மயங்கித் தம் நிலையினின்றும் பெயர்ந்து அங்குமிங்குந் திரிகின்றன.

இரவுக்குறியாவது, பாங்கியிற் கூட்டக் காலத்தில் தலைமகனுந் தலைமகளும் இரவிற் கூடுதற்குக் குறித்த இடம். ஓரிடத்து நிலைத்து நில்லாது எப்போதும் இயங்குதல்பற்றிப் 'பதியிற் கலங்கிய' என்றார். இதற்கு மதிமுக வேறுபாடறியாமைக் காரணியங் காட்டியது தற்குறிப் பேற்றம். இக்குறட்கு "இனி இரண்டனையும் பதியிற்கலங்காத மீன்களறியு மல்லது கலங்கின மீன்களறியாவென்றுரைப்பினு மமையும்." என்று பரிமேலழகர் கூறிய மற்றேருரை அத்துணைச் சிறந்ததன்று.

ககக. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

(இதுவுமது)

(இ—ரை.) அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல—முன் குறைந்தவிடம் நிரம்பிய விளங்கும் மதியத்திற்குப்போல; மாதர் முகத்து மறு உண்டோ—இப்பெண்ணின் முகத்தில் ஏதேனுங் களங்க முண்டோ? இல்லையே! அங்ஙனமிருந்தும் அவ்விண்மீன்கள் வேறுபாடறியாது கலங்கித் திரிவானேன்?

அறுவாய் கருப்பக்கம், மதியம் முழுநிலா, தேய்தலும் வளர் தலுந் தோன்ற 'அறுவாய் நிறைந்த' என்றார். தேய்வுவளர்ச்சி களும் மறுவுடைமையும் வேறுபாடறிவிக்கவும், அறிந்திலை என இகழ்ந்து கூறியவாறு.

ககக. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலே வாழி மதி.

(இதுவுமது)

(இ—ரை.) மதி—வெண்ணிலாவே! மாதர் முகம்போல் ஒளி விட வல்லையேல்—இப்பெண்ணின் முகம்போலத் தேய்தல் வளர் தலின்றியும் களங்கமின்றியும் என்றும் ஒரு தன்மைத்தாய் விளங்க உனக்கு இயலுமாயின்; வாழி—நீ நீடு வாழ்வாயாக!; காதலே—அன்று நீயும் என் காதலியுடையையா யிருப்பாய்.

நீ அங்ஙனம் விளங்கமாட்டாயாதலின், என் வாழ்த்திற்கும் காதற்கும் உரியை யல்லை யென்பதாம்.

ககக. மலரன்ன கண்ணுண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.

(இதுவுமது)

(இ—ரை.) மதி—திங்களே! ; மலர் அன்ன கண்ணுள் முகம் ஒத்தியாயின்—இத்தாமரை மலர் போலுங் கண்ணையுடையாளின் முகத்தை யொக்க நீ விரும்பு வாயானால்; பலர் காணத்தோன்றல்—இனியாகிலும் எல்லாருங் காணத்தோன்றுதே, நான் மட்டுங் காணத்தோன்று.

ஏற்கெனவேயுள்ள வடிவு நிலையின்மையுங் களங்கமுமாகிய குற்றங்களுடன், பொதுமகள் முகம்போலப் பலருங்கண் டின்புறுதற் கேதுவான பரத்தைமையுங் கூறியவாறு. பலர் காணத்தோன்றுமை கூடாமையின் முகமொத்த வில்லையென்பதாம்.

ககஉ0. 'அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

(உடன் போக்குரைத்த தோழிக்கு அதனருமை கூறிமறுத்தது.)

(இ—ரை.) அனிச்சமும் அன்னத்தின் தூவியும்—அறிஞரால் மென்மைக்குச் சிறந்ததாகக் கொள்ளப்பெற்ற அனிச்சமலரும் ஓதி மத்தின் நொய்ய துய்முடியும் கூட ; மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்—என் காதலியின் மெல்லிய உள்ளங்கால்களோ முற்றிய நெருஞ்சி முட்போற் குத்தித் துன்புறுத்துமே.

இத்தகைய மென் பாதத்தினள் கூர்ம் பருக்கைக் கற்களும் நீள் வேல் முள்ளும் நெடுகலும் பரவிக்கிடக்கும் வெஞ்சுரத்தை எங்ஙனங் கடப்பாள்? ஆதலால் அக்கருத்தை விட்டுவிடு என்பது குறிப்பு. இது உடன்போக்கு மறுத்தலாயினும், தலைமகளின் அடிநலத்தை யெடுத்துக் கூறுதலால், இதுவும் நலம் புனைந்துரைத்தலேயாம். பெருநெருஞ்சி முதிர்ந்த நிலையில் நெல்லிக் கனிபோலப் பசுமஞ்சள் நிறங்கொள்ளுமாதலின் 'பழம்' என்றார். இக்குறளிலுள்ள அணி உயர்வுநவிற்சி.

அதி. ககஙூ—காதற் சிறப்புரைத்தல்

அஃதாவது, தலைமகன் தன்காதன் மிகுதி கூறுதலும், தலைமகள் தன் காதன் மிகுதி கூறுதலுமாம். இது புணர்ச்சியும் உறுப்பு நலனும் பற்றி நிகழ்வதாகலின் புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந் துரைத்தல் என்பவற்றின் பின் வைக்கப்பட்டது. இவ்வதிகாரக் குறள்களுள் முன்னைந்தும் தலைமகன் கூற்றும் பின்னைந்தும் தலை மகள் கூற்றுமாகும்.

௧௧௨௧. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

(இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கண் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் — இம்மென் மொழியாளின் வெண்பல்லில் ஊறிய நீர்; பாலொடு தேன் கலந்தது அற்று—பாலுந் தேனுங்கலந்த கலவை போலும்.

பருகக் கூடிய பாலின் குறைந்த இனிமையும், பருகக்கூடாத தேனின் நிறைந்த இனிமையும் கலந்தாற் பருகக் கூடிய சிறந்த இனிமை பெறப்படுதலின் அதை 'வாலெயிற்று நீர்க்கு' உவமமாக்கினன். கலந்ததற்று என்பது கலந்தற்று எனத்தொக்கது. ஏகாரம் தேற்றம், 'பணிமொழி' அன்மொழித்தொகை. 'எயிறூறிய' இடவேற்றுமைத் தொகை

௧௧௨௨. உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

(பிரிவச்சந் தவிர்த்தது.)

(இ—ரை.) உடம்பொடு உயிர் இடை என்ன— உடம்போடு உயிருக்குள்ள தொடர்புகள் எத்தன்மையன; அன்ன மடந்தை யொடு எம் இடை நட்பு—அத்தன்மையனவே இப்பெண்ணோடு எனக்குள்ள தொடர்புகளும்.

தொடர்புகளாவன; தொன்று தொட்டு வேற்றுமையின்றிக் கலந்து வருதல், பிரிந்து கூடல், இன்பத்துன்பங்கள் ஒக்க நுகர்தல், ஒன்றை (ஒருவரை) விட்டு ஒன்று (ஒருவர்) இன்றியமையாமை என்பன. தெய்வப் புணர்ச்சியால் மயங்கியிருந்த தலைமகள் பின்பு தெளிவுபெற்று. இவன் யாவனோவெனவும்; இன்று பிரிகின்றவன் மீண்டும் வருவனோவெனவும், இன்னும் இவனொடு கூடுதல் வாய்க்குமோவெனவும் பலவாறெண்ணிக் கவல்வாள். அதைக் குறிப்பாலறிந்த தலைமகன், உன்னிற் பிரியேன்; பிரியின் உயிர்தாங்கேன் என்னுங் கருத்துப் படக் கூறித் தேற்றியவாறு, 'உடம்பு,' 'நட்பு' என்பன வகுப்பொருமை. பலபிறவிகளில் தொடர்ந்து வந்த உழுவலன்பால் ஏற்பட்ட தொடர்பாதலின். வாழ்நாள் முழுதுந் தொடரும் என்பதாம். என்னோ யென்பது காலங்கர் பாடம்.

௧௧௨௩. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் நீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

(இடந்தலைப் பாட்டின்கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது.)

(இ—ரை.) திருமணியில் பாவாய்—என் கண்ணின் கருமணியின்கண் தங்கும் பாவையே! ; நீ போதாய்—நீ அவ்விடத்தை விட்டுப் போவாயாக; யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை—ஏனெனின், எம்மால் விரும்பப்படும் அழகிய நெற்றியை யுடையாட்கு இருக்க வேறிடமில்லை.

யான் இவளைக் காணுதிருத்தல் கூடாமையின், என்றும் என் கண்ணிற்குள்ளேயே இருக்கத் தக்காள். அதற்குள் இருவர் இருக்க இடமின்மையின், உன்னினுஞ் சிறந்த இவட்கு அவ்விடத்தைக் கொடுத்துவிட்டு நீ வெளியேறிவிடுவாயாக என்று, தன் மறவாக் காதலைத் தெரிவித்த வாறும். 'யாம்' பெருமிதப் பன்மை அல்லது அரசப்பன்மை. 'திருநுதல்' அன்மொழித்தொகை.

கசஉச. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

(பகற்குறிக்கட் புணர்ந்து நீங்குவான் சொல்லியது.)

(இ—ரை.) ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள்—ஆய்ந்தெடுத்த அணிகலன்களை யுடையாள் என்னோடு கூடுமிடத்து எனக்கு உயிருக்கு உடம்போடு கூடி வாழ்தல் போலும்; நீங்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள்—என்னை விட்டுப் பிரியுமிடத்து அதற்கு அதினின்று நீங்கிச் சாதல் போலும்.

வாழ்தலின் இனியதும் சாதலின் இன்னாததும் இல்லையாதலின், கூடுதல் வாழ்தலும் நீங்குதல் சாதலும் போல்வன என்றான். கூடுமிடத்து என்பதும் எனக்கு என்பதும் அவாய்நிலையான் வந்தன. 'ஆயிழை' அன்மொழித்தொகை.

கதஉடு. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னெள்ளமர்க் கண்ணுள் குணம்

(ஒருவழித் தணந்துவந்த தலைமகன், நீயிர் தணந்த ஞான்று எம்மை நினைத்தீரோ என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) ஒள் அமர்க் கண்ணுள் குணம் யான் மறப்பின் உள்ளுவன்—ஒளிபொருந்தியவாய் செய்யுங் கண்ணையுடையாளின் குணங்களை யான் என்றேனும் மறந்தேனையின் நினைத்திருப்பேன்; மறப்பு அறியேன்—ஆயின், யான் ஒருபோதும் மறந்ததில்லை ஆதலால் நினைத்ததுமில்லை.

குணங்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அன்பு, கற்பு என்பன. 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. இதுவரையுந் தலைமகன் கூற்று; இனிவருவன தலைமகள் கூற்று. ஒருவழித் தணத்தலாவது, இரவுக்குறிக் காலத்திறுதியில் அலரெழுந்தபின் அது அடங்கும்வரை தலைமகன் சிலநாள் தன் ஊரின்கண் தங்கியிருத்தல்.

சுசுஉசூ. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

(ஒருவழித் தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிப் பாளென்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.)

(இ—ரை.) எம் காதலர் கண்ணுள்ளின் போகார்—எம்முடைய காதலர் ஒருபோதும் கண்ணகத்து நின்றும் நீங்கார்; இமைப்பின் பருவரார்—யாம் அதை மறந்து ஒருகால் இமைத்தோமாயினும் அதனால் வருத்தமுறார். நுண்ணியர்— அத்துணைக் கட்புலனுகாத நுண்மை யுடையவர் அவர்.

தாம் காணுமை பற்றிச் சேய்மைக்கண் சென்றாரெனக் கருதுவார் கருதுக; ஆயின், யான் இடைவிடாது காணுதலின் அங்ஙனங் கருதேன் என்றவாறு. இடையருத நினைவு முதிர்ச்சியால் என்றுங் கண்முன் நிற்றல்போல் தோன்றலாற் 'கண்ணுள்ளிற் போகார்' என்றும், இமைத்த போதும் அது நீங்காமையால் 'இமைப்பிற் பருவரார்' என்றும், கூறினாள்.

சுசுஉஎ. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

(இ—ரை.) காதலர் கண் உள்ளாராக—எம் காதலர் எப்போதும் எம் கண்ணுள் ளிருக்கின்றாராதலால்; கரப்பாக்கு அறிந்து—அவர் மறைவலையறிந்து; கண்ணும் எழுதேம்—கண்ணிற்கு மையிடுதலுஞ் செய்யேம்.

இடைவிடாது காணப்படுகின்றவரைப் பிரிந்தாரென்று கருதுவது எங்ஙனந் தகும் என்பதாம். 'கரப்பாக்கு' தொழிற்பெயர். 'பாக்கு' தொழிற்பெயரீறு. இழிவு சிறப்புமை இடமாற்றப்பட்டது.

சுசுஉஅ. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

(இ—ரை.) காதலவர் நெஞ்சத்தாராக—எம் காதலர் எப்போதும் எம் நெஞ்சினுள் ளிருக்கின்ருராதலால்; வேபாக்கு அறிந்து—அவர் சூடுறுதலீ யறிந்து: வெய்துஉண்டல் அஞ்சுதும்—வெம்மையாக வுண்ணுவதற்கு அஞ்சுகின்றேம்

எப்போதும் எம்நெஞ்சிலிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுவதென்னீ என்பது குறிப்பெச்சம். 'வேபாக்கு' தொழிற்பெயர்; 'பாக்கு' தொழிற்பெயரீறு.

ககஉக. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

(வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலீமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலீமகனீ இயற்பழித்தவிடத்து, அவள் இயற்பட மொழிந்தது.)

(இ—ரை.) இமைப்பின் கரப்பாக்கு அறிவல்— என் கண் இமைக்குமாயின் உள்ளிருக்குங் காதலர் மறைவதை யறிந்து சிறிது நேரம் இமையாதே யிருப்பேன்; அனீத்திற்கே ஏதிலர் என்னும் இவ்வூர்—அவ்வளவிற்கே, என் காதலர் அன்பிலரென்றும், என்னீத் துயிலா நோயுறுத்தினரென்றும், பழிதூற்றும் இவ்வூர்.

தன் கருத்தறியாமை பற்றித் தோழியொடு புலந்து கூறுகின்ருளாதலின், அவனீ வேறுபடுத்து 'இவ்வூர்' என்ருள். ஒருபோதும் உள்ளத்திற் பிரியாதவரைப் பிரிந்தாரென்று நீ பழித்தல் தகாது என்பதாம். 'ஊர்' வரையறுத்த ஆகுபெயர்.

ககஙூ. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.

(இ—ரை.) என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர்—என் காதலர் எப்போதும் என் உள்ளத்துள் மகிழ்ந்து வதிகின்ருர்; ஏதிலர் இகந்து உறைவர் என்னும் இவ்வூர்—இதனீ யறியாது. அவர் அன்பிலரென்றும், பிரிந்து வேறிடத்து வதிகின்ருரென்றும், பழித்துரைக்கும் இவ்வூர்.

அதி. ககச—நாணுத்துறவுரைத்தல்

அஃதாவது, சேட்படுத்தப்பட்டு ஆற்ருனுகிய தலீமகன்தோழிக்குத் தன் நாண்டுறவுரைத்தலும், தோழியை அறத்தொடுநிற்பிக்கலுற்ற

தலைமகள் அவளுக்குத் தன் நாண்டுறவுரைத்தலுமாம். இது காதல் மிகுந்த விடத்து நிகழ்வதாகலின், காதற் சிறப்புரைத்தலின் பின் வைக்கப்பட்டது. இவ்வதிகாரத்தின் முதலேழ் குறளும் தலைமகன் கூற்று; இறுதி மூன்றும் தலைமகள் கூற்று.

அறத்தொடு நிற்றலாவது, களவொழுக்கம் தடைப்பட்டவிடத்தும், தலைமகளின் காமநோயை அவள் பெற்றோர் பிறழுவுணர்ந்து வேலன் வெறியாட்டு நிகழ்த்து மிடத்தும், மணம் பேச வந்த தலைமகன் பெற்றோர்க்கு மகட்கொடை மறுத்த விடத்தும், தலைமகள் தோழிக்கும் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தந்தைக்குமாக, தலைமக்கள் காதலொழுக்கம் பற்றி நடந்த வுண்மையைக் குறிப்பாகக் கூறுதல். கற்பாகிய அறத்தைக் காத்து நிற்றலால் இது அறத்தொடு நிற்றல் எனப் பெயர்பெற்றது.

௬௬௬. காம முழந்து வருந்தினூர்க் கேம
மடலல்ல தில்லை வலி.

(சேட்படுக்கப்பட்டு ஆற்றுணுகிய தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) காமம் உழந்து வருந்தினூர்க்கு—பெறற்கரிய மகளிரொடு காமவின்பம் நுகர்ந்து பின்பு அது பெருது துன்புற்ற ஆடவர்க்கு; ஏம மடல் அல்லது வலி இல்லை—தொன்று தொட்டுக் காப்பாக இருந்துவருகின்ற மடலேற்றமன்றி வேறெரு வலிமையு மில்லை.

ஏமமாதல் அத்துன்பம் நீங்குமாறு அந்நுகர்ச்சியை மீளத்தரு தல். பண்டைநாளிலும் என்போன்ற ஆடவர் இம்முறையே கையாண்டு வந்திருக்கவும், நான் உன்னை நம்பி அதைப் புறக்கணித்தேன். இன்று நீ எனக்குத் துணையல்லாமையை அறிந்தேனுதலின், அவ்வழியையே கடைப்பிடித்து இன்பம் நுகரக் கருதுகின்றேன் என்றவாறு. 'வலி' ஆகு பொருளது.

மடலேறும் வகை வருமாறு;—

தன் காதலியைப் பெருத காதலன் ஆடைகளைந்து நீர்ச்சீலையணிந்து, உடம்பெல்லாம் சாம்பரைப் பூசி, எருக்கமாலையணிந்து, தன் காதலியின் உருவம் எழுதிய படத்தைக் கையிலேந்திக் கொண்டு, அதையே நோக்கி, அவளிருக்கும் ஊர் நடுவே எல்லாருங் காணத் தவநிலையிலிருப்பன். அவ்வூர்த்தலைவர் அவனைக் கண்டு காதலாய்விற்கு அவன் உடம்பட்டபின், அவனைப் பனங்கருக்கு மட்டையாற் செய்த குதிரைமேலேற்றிப் பெருந் தெருவுடிழுத்துச் செல்வர். கருக்குப் பட்டவிடமெல்லாம் அரத்தந் தோன்றுது விந்து நீர் தோன்றின், அவன் காதலியை அவனெடு கூட்டிவைப்பர்;

இன்றேல் வையார். இது அநாகரிகமும் பேதைமையும் மிக்க முந்து கால வழக்காதலின், தமிழிலக்கியத்திற் குறித்திருப்பதெல்லாம் அதை நினைவுறுத்தலேயன்றி வேறன்றென்க.

கஙஙஉ. நோனு வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

(நாணுடைய நுமக்கு அது முடியாதென மடல்விலக்கிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) நோனு உடம்பும் உயிரும் மடல் ஏறும்—அத் துன்பத்தைப் பொருது வுடம்பும் உயிரும் தமக்குக் காப்பான மடற் குதிரையை ஏறக் கருதுகின்றன; நாணினை நீக்கி நிறுத்து—அதற் குத் தடையான நாணத்தை நீக்கி வைத்து.

அறிவு நிறை யோர்ப்புக் கடைப்பிடி யென்னும் ஆண்மைக் குணம் நான்கும் முன்னரே நீங்கிவிட்டன. எஞ்சியிருக்கும் நாணம் என்னும் இருபாற் பொதுக் குணமும், மடலேற்றத்தின் பொருட்டு நீக்கப்பட்டுவிடும். அல்லாக்கால் உயிரும் உடம்பும் துன்பம் பொறுத்துக்கொண்டு உடனிற்கு மாறில்லை யென்பான். 'நோனு வுடம்பு முயிரும் மடலேறும்' என்றான். 'உழந்து வருந்தினுர்க்கு' என மேற்குறளில் வந்தமையின், இங்கு 'நோனு' என்று மட்டுங் கூறினர். 'மடலேறும்' என்றது தோழி தன் ஆற்றுமை யறிந்து விரைந்து குறைமுடிப்பாள் என்று கருதி. 'மடல்' ஆகுபெயர்.

கஙஙங. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடை
காமுற்று ரேறு மடல். [யேன்

(நாண் மட்டுமின்றி நல்லாண்மையு முடையையாதலின் மட லேற முடியாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) நாணெடு நல் ஆண்மை பண்டு உடையேன்—நாணும் சிறந்த ஆண்டகைமையும் பண்டை நாளிற் கொண்டுதா னிருந்தேன்; காமுற்றார் ஏறும் மடல் இன்று உடையேன்—ஆயின் அவை காமத்தால் நீங்கிவிட்டமையால், காமம் மிக்கார் ஏறும் மடலி னையே இன்று உடையவனுயிருக்கின்றேன்.

என் உயிர் உடலோடு நிற்கவேண்டுமாயின் மடலேறுவதல்லது வேறுவழியில்லை யென்றனும். நாண் என்பது இழிசெயலைத் தடுக்கும் மானம். ஆண்மையென்பது ஒன்றற்குந் தளராத உரம்.

ஙஙஙச. காமக் கடும்புன லுய்க்குமே நாணெனுந்
நல்லாண்மை யென்னும் புணை

(நாணும் நல்லாண்மையுங் காம வெள்ளத்திற்குப் புணையாகின், அதனுல் அவை நீங்குவனவல்ல என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) நாணெனு நல் ஆண்மை என்னும் புணை—நான் தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை; காமக் கடும்புனல் உய்க்குமே—காமமாகிய பெரு வெள்ளம் அடித்துக்கொண்டு போகின்றதே! நான் என்செய்வேன்!

புணையென்றது மிதவையும் கட்டுமரமும் பரிசலுந் தெப்பமும் போன்ற கடத்தக் கருவிகளை. அவற்றை என்னெனு 'அடித்துக் கொண்டு போகுமளவு வெள்ளம் பெருக்கும் வேகமுங் கொண்ட தென்பது தோன்றக் 'கடும்புனல்' என்றுன். ஏகாரம் இரங்கற் பொருட்டு.

ஙஙஙஞ. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

(இவ்வாற்றுமையும் மடலேறுங் கருத்தும் நுமக்கெவ்வாறு வந்தன என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) மாலை உழக்கும் துயர் மடலொடு—நான் மாலை வேளையிற் படுங்காமத் துயரினையும் அதற்கு மருந்தாகிய மடலேற்றம் பற்றிய எண்ணத்தையும்; தொடலைக் குறுந் தொடி தந்தாள்—மாலை போல் கையை வளைந்த சிறு வளையல்களையுடைய உன் தலைவி தந்தாள்.

காமநோய் ஏனைவேளைகளிலு முளதேனும் மாலைக் காலத்திலேயே மிகுதியாகத் தாக்குவதால், 'மாலையுழக்குந் துயர்' என்றும், அந்நோயின் முதிர்ச்சி பற்றியே மடலேற்றத் துணிவும் வந்ததனால் 'மடலொடு' என்றும், நோயைத் தணிக்கும் ஆற்றலுள்ளவளாயிருந்தும் அதைத் தானுகச் செய்யத்தக்க பருவமும் உரிமையும் இல்லாத இளமையள் என்பது தோன்ற 'தொடலைக் குறுந்தொடி' என்றும்; கூறினுன். அவள் நின் பொறுப்பிலும் ஆட்சியிலும் உள்ளமையால், நீயே என் துயரை நீக்கவேண்டுமென்பது கருத்து. 'குறுந்தொடி: அன்மொழித் தொகை.

ஙஙஙட. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்

(மடலூரும் நேரம் இன்றைக்குக் கழிந்துவிட்டதென்ற தோழிக்குச்சொல்லியது.)

(இ—ரை.) பேதைக்கு என் கண் படல் ஒல்லா—பேதைத் தன்மையுள்ள உன் தலைவி கரணியமாக எனக்கு இராமுழுதுங் கண்ணைடைப்பதேயில்லை; யாமத்தும் மடல் ஊர்தல் உள்ளுவேன் மன்ற—அதனால் எல்லாரும் உறங்கும் நள்ளிரவிலும் நான் மடலேறக் கருதுவது உறுதி.

இனி, நாளைக் குறைமுடிப்பே னென்று கடத்தி வைக்க வேண்டாமென்பதாம். 'பேதை' யென்பது இங்குப் பருவங்குறியாது இளமையும் மடமையுங் குறித்து நின்றது. 'மன்ற' தேற்றப் பொருளிடைச்சொல்.

ஙஙஈ. கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

(அறிவிலராய மகளிரினும் அதனையுடைய ஆடவரன்றே காம நோயால் வருந் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளற்பாலர் என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) கடல் அன்ன காமம் உழந்தும்—கடல் போலக் கரையற்ற காமநோயால் வருந்தியும், மடல் ஏறுப் பெண்ணின் பெருந்தக்கது இல்—அதை நீக்குதற்கு மடலேறுது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப் போலப் பெருந்தகுதியுடைய பிறப்பு இவ்வுலகத்தில் வேறொன்றுமில்லை.

அத்தகுதி ஆடவர்க்கு இயற்கையாக இன்மையை நீ அறிந்திலை போலும் என்பதாம். இதுவரையுந் தலைமகன் கூற்று. உம்மை உயர்வு சிறப்பு.

ஙஙஉ. நிறையரியர் மன்னளிய ரென்னாது காம
மறையிறந்து மன்று படும்.

(காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகிய வழித் தலைமகள் சொல்லியது.)

(இ—ரை.) நிறை அரியர் (என்னாது)—இவர் நிறை யென்னும் அடக்கப் பண்புடைமையால் இவரை நாம் மேற்கொள்வது அரிது என்று அஞ்சுதல் செய்யாது; மன் அளியர் என்னாது—மிகவும்

அளிக்கத்தக்கார் என்று இரங்குதலுஞ் செய்யாது; காமம் மறை இறந்து மன்று படும்—மகளிர் காமமும் அவர் மறைத்தலிலக் கடந்து அம்பலத்திற்கு வருவதாயிற்று.

உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள் போன்று, தன் காமம் பெருகியவாறும் இனி அறத்தொடு நிற்றல் வேண்டு மென்பதும் குறிப்பாற் கூறியவாறு. 'என்னது' என்பது முன்னும் கூட்டி மகளிர் என்பது வருவித்துரைக்கப்பட்டது. இது அம் பலின் பிற்பட்ட போதுநிலை, காப்புச்சிறையாவது, தலைமகள்மீது ஐயுற்ற செவிலியும் நற்றாயும் அவளை வீட்டைவிட்டு வெளியேறுவாறு காவல் செய்தல்.

கூகூகூ. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

(இதுவுமது)

(இ—ரை.) என் காமம்—எனது காமம்; எல்லாரும் அறிகிலார் என்று—யான் இதுவரை அடங்கி நின்றதால் எல்லாரும் என்னை அறிந்திலர், இனிமேல் அவ்வாறிராது நானே வெளிப்பட்டறிவிப் பேனென்று எண்ணி; மறுகில் மருண்டு மறுகும்—இவ்வூர்ப் பெருந் தெருவெல்லாம் மயங்கிச் சுழலும்.

மயங்குதல் அலரத் தொடங்குதல்; மறுகுதல் அலராதல். இனி அறத்தொடு நிற்றல் வேண்டும் என்பது குறிப்பு. அறிவிலார் என்பதும் பாடம்.

கூகூ0. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

(செவிலிக் கறத்தொடு நின்றுவைத்து, யான் அறத்தொடு நிற்கு மாறு எங்ஙனமென்று நகையாடிய தோழியொடு புலந்து, தலைமகள் சொல்லியது.)

(இ—ரை.) அறிவு இல்லார்—அறிவிலாதார்; யாம்பட்ட தாம் படா ஆறு—யாம் பட்ட நோய்களைத் தாம்பட்டு அறியாமையால்; யாம் கண்ணின் காண நகுப—யாம் காதாற் கேட்குமாறு மட்டுமன் றிக் கண்ணாலுங் காணுமாறு எம்மை நகையாடுவர்.

தோழி அறத்தொடு நின்றமையை அறியாது புலக்கின்றாளா தலின், அவளை அயலாளாக்கிக் கூறினாள். 'கண்ணிற்காண' என்றது முன் கண்டறியாமை யுணர்த்தி நின்றது. இது சேட்படுத்தி

நகையாடிய தோழிக்குத் தலைமகன் கூறியதாகவுங் கொள்வர். தலைமகன் கூற்று முன்னரே ஏழாங் குறளொடு முடிந்துவிட்டமையாலும், தோழியின் துணையை இன்றியமையாததாகக் கொண்ட தலைமகன் அவளை அறிவில்லாளென்று பழித்தல் இயல்பன்மையானும், அது பொருந்தாதென்க.

அதி. ககடு—அலரறிவுறுத்தல்

அஃதாவது, களவொழுக்கத்தை விரும்பிய தலைமகன் பிறர் கூறும் அலர் தனக்கு நன்மையாக முடிவதைத் தோழிக்கு அறிவுறுத்தலும் வரைவேனும் உடன்போக்கேனும் வேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரைத் தலைமகனுக்கு அறிவுறுத்தலுமாம். இது நாணுத் துறந்த விடத்து நிகழ்வதாகலின் நாணுத்துறவுரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

ககசக. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

(அல்லகுறிப்பட்ட பின்வந்த தலைமகனைத் தோழி அலரறிவுறுத்தி வரைவு கடாயவிடத்து, அவன் சொல்லியது.)

(இ—ரை.) அலர் எழ ஆருயிர் நிற்கும்—என் காதலியோடு எனக்குள்ள தொடர்பு அலராயெழுகின்றதனால், அவளைப் பெறுதல் வருந்தும் என் அருமையான வுயிர் அவளைப் பெற்றது போன்று மகிழ்ந்து நிலை பெறும்; அதனைப் பாக்கியத்தாற் பலர் அறியார்—அவ்வுண்மையை என் நற்பேற்றினால் அலர் கூறும் பலரும் அறியார்.

அல்லகுறிப்படுதலாவது, இரவுக்குறிக் காலத்தில் தலைமகன் வரவறிவிக்குங்குறி தற் செயலாக நிகழ்ந்து, தோழியுந் தலைமகளுஞ் சென்று தலைமகனைக் காணுது திரும்புதல்

உயிரினுஞ் சிறந்ததொன் றின்மையான் 'ஆருயிர்' என்றும்; தன் காதலியைப் பெறுமையால் அவ்வாருயிர் மிகத் துன்புற்று நீங்கும் நிலையிலிருந்தபோது, அலரெழுந்து பெறற்கரியவளை எளியளாக்கி அவளைப் பெறுதற்குத் துணையாக நின்றமையின், 'அலரெழ வாருயிர் நிற்கும்' என்றும்; அதை அலர்கூறுவார் அறிந்திருப்பின் அது கூறாதலானும், அதனால் உயிர் போமாதலானும், அங்ஙனம் போகாது தடுக்கின்ற அவரறியாமை தனக்கு நற்பேருக (Blessing in disguise) வாய்த்தென்றும்; கூறினன். முற்றுவமை செய்யுளால் தொக்கது.

நகசஉ. மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

(இதுவுமது)

(இ—ரை.) மலர் அன்ன கண்ணுள் அருமை அறியாது—குவளைமலர் போலுங் கண்ணையுடையாளைப் பெறுதற் கருமையை அறியாது; இவ்வூர் எமக்கு அலர் ஈந்தது—இவ்வூரார் அவளை எளியளாக்கி என்னெடு தொடர்பு படுத்தும் அலரை எனக்கு அளித்துதவினர்.

'அருமை' அல்ல குறிப்பாட்டாலும் பல்வேறு இடையீடுகளாலும் தடைகளாலும் நேர்ந்தது. ஆருயிரளித்த பேருதவிபற்றி 'ஈந்தது' என்றுன். 'ஊர்' வரையறுத்த ஆகுபெயர்.

நகசஙு. உருஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து.

(இதுவுமது)

(இ—ரை.) ஊர் அறிந்த கௌவை உருதோ—யானும் என் காதலியுமாகிய எங்கட்குக் கூட்டமுண்மை இவ்வூரார் அறிதலால் விளைந்த அலர் எனக்கு ஏற்ற தொன்றன்றே!; அதனைப் பெருது பெற்ற அன்ன நீர்த்து—அதைக் கேட்ட நான், அக் கூட்டத்தை இன்று பெருதிருந்தும், பெற்றாற்போல இன்புறுதற் கேதுவான தன்மையை அவ்வலர் உடைத்தாகலான்.

கௌவை நீர்த்து என இசையும். பரிமேலழகர் போல் மனமென்னும் வினைமுதலை வருவிக்கத் தேவையில்லை. 'உரு அதோ' 'பெரு அது' இசைநிறையளபெடைகள்.

நகசஙூ. கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

(இதுவுமது)

(இ—ரை.) காமம் கவ்வையால் கவ்விது—என் காமம் இவ்வூரார் எடுத்த அலராலே அலர்தலைக் கொண்டுள்ளது; அது இன்றேல் தன்மையிழந்து தவ்வென்னும்—அவ்வலரில்லையாயின் சுவையிழந்து சப்பென்றிருக்கும்.

கவை—கவ்வை = பிளப்பு, பிரிவு, மலர்வு, அலர். கவ்வை—கவ்விது. அலர்தல் அலர்க் கூற்றுப் பரவுதலும் காமம் வளர்தலும்;

'தன்மை' இன்பம் பயத்தல். தவ்வுதல்—தாழ்தல். ஏதேனுமொரு பாடத்துறையில் மாணவர் தாழ்வாயிருப்பதைத் தவ்வல் என்பது நெல்லை நாட்டு வழக்கு.

சுசசடு. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

(இதுவுமது)

(இ—ரை.) களித்தொறும் கள் உண்டல் வேட்ட அற்று—கட் குடியர்க்குக் கள்ளுண்டு வெறிக்குந்தோறும் அக்கள் விருப்ப மாதல் போல; காமம் வெளிப்படுந்தோறும் இனிது—காம வின் பர்க்கு அலர் பரவுந்தோறும் அக்காமம் இனிதாகின்றது.

வேட்டற்று என்பது வேட்கப்பட்டற்று என்னும் செயப் பாட்டு விகீப் பொருளது. 'ஆல்' அசை நிலை. காமமிகுதியால் அலரும் இன்பந்தருகின்றது என்பதாம்.

சுசசக. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

[அல்ல குறியாலும் இடையீடுகளாலும் தலைமகனைத் தலைக் கூடப் பெறுத தலைமகள், அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறுத்தி வரைவு கடாயது.]

(இ—ரை.) கண்டது ஒரு நாள்—யான் என் காதலரைக் கண் ணுறப் பெற்றது ஒரு வேளையே; அலர் திங்களைப் பாம்பு கொண்ட அற்று—ஆனால் அதனால் உண்டான அலரோ, நிலாவைக் கரும் பாம்பு கௌவின செய்திபோல, உலக மெங்கும் பரவியுள்ளது.

காட்சிக்கும் இடமில்லாதபோது இங்ஙனம் வீணாக அலர் பரவும் இக்களவொழுக்கத்தை உடனே விட்டுவிட்டு, வரைந்து கொள்ளு தல் வேண்டுமென்பதாம். 'பாம்பு கொண்டற்று' எனக் கருமியத் தைக் கரணியமாகச் சார்த்திக் கூறினள். கதிரவன் மறைவைக் கேது என்னும் செம்பாம்பு கௌவலாகவும், திங்கள் மறைவை இராகு என்னும் கரும்பாம்பு கௌவலாகவும், கருதியது பண்டைக் குருட்டு நம்பிக்கை. சே—சேது—கேது. இர்—இரா—இராவு—இராகு. மன்னும் உம்மும் ஈரிடத்தும் அசை நிலை யென்பர். இடை யீடுகள் நிலா வெளிப்படுதலும் நாய் குரைத்தலும் ஊரார் விழாக் கொண்டாடுதலும் போல் வனவற்றால் நிகழ்வன. சிறைப்புறம் வேலிக்கு வெளிப்பக்கம்.

கக்ஷ. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்.

[தலைமகன் சிறைப்புறத்தா னுதலறிந்த தோழி, வரைவு காலந் தாழ்த்தலை ஆற்றுளான தலைமகளிடம் ஊரார் அலரும் அன்னை சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டுமென்று சொன்ன விடத்து, அவள் சொல்லியது.]

(இ—ரை.) இந் நோய்—இக்காம நோயாகிய பயிர்; ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல் நீராக நீளும்...இவ்வூர் மகளிர் எடுக்கின்ற அலரை எருவாகவும், அது கேட்டு அன்னை கடிந்து கூறும் வெஞ் சொல்லை நீராகவும் கொண்டு, வளர்கின்றது..

நோயைத் தணிக்க வேண்டிய ஏதுக்கள் அதை வளர்த்தே வருகின்றன என்பதாம். தலைமகன் விரைந்து வரைவானுதல் கருதிய பயன். 'ஊரவர்' இங்கு ஆணெழி பொதுச் சொல். நோயைப் பயிரென்று உருவகியாமையால் இது ஒரு மருங்குருவகம்.

கக்ஷஅ நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றுற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்.

(இதுவுமது)

(இ—ரை.) கௌவையால் காமம் நுதுப்பேம் எனல்—அயலாரும் பகைவரும் எடுக்கின்ற அலரால் நாம் காமத்தை அவித்து விடுவோமென்று கருதுதல்; நெய்யால் எரிநுதுப்பேம் என்ற அற்று—நெய்யை வார்த்து நெருப்பை அவிப்போமென்று கருதுவதை யொக்கும்.

வளர்க்குங் கரணம் தளர்க்குங் கரணமாகாது என்பதாம். 'ஆல்' அசைநிலை.

கக்ஷஆ. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றூர்
பலர்நாண நீத்தக் கடை.

[வரைவிடை வைத்துப் பிரிவின்க ணூற்றுளாகிய தலைமகள் அவன் வந்து சிறைப்புறத்தானுதல றிந்து, அலரஞ்சியாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ—ரை.) அஞ்சல் ஓம்பு என்னூர் பலர் நாண நீத்தக்கடை—தலை நாளில் தம்மை எதிர்ப்பட்ட போதே, நான் உன்னை விட்டு ஒருபோதும் பிரியேன்; ஆதலால் நீ அஞ்சுதலை விட்டுவிடு என்று தேற்றியவர் தாமே, இன்று கண்டார் பலரும் நாணும் வகை நம்மைத் துறந்தபின்; அலர்நாண ஒல்வதோ—அயலார் கூறும் அலருக்கு நாம் நாணக் கூடுமோ? கூடாதே!

கண்டார் நாணும் நிலைமையிலுள்ள நாம் நாணுதற்கு வழியேது என்பதாம்.

கஉடு. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டு
மெளவை யெடுசகுமிவ் வூர்.

(தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லு வாளாய் அலரறிவுறுத்தி, அவன் வரைந்து கொள்ளவேனும் உடன் போக்கு உடம்படவேனும் சொல்லியது.)

(இ—ரை.) யாம் வேண்டும் மெளவை இவ்வூர் எடுக்கும்—வரைவிற்கு அல்லது, உடன்போக்கிற்கு ஏதுவாதல் நோக்கி நாம் முன்பே விரும்பிய அலரை இவ்வூர் இன்று தானே எடுத்துள்ளது; காதலர் தாம் 'வேண்டின் நல்குவர்—இனி நாம் நம் காதலரை 'வேண்டின், அவரும் வரைந்து கொள்ளவேனும் உடன் கொண்டு செல்லவேனும் மகிழ்ந்து உடன்படுவர்.

நம்பாற் காதலுடைமையின் மருர் என்பது தோன்றக் 'காதலர்' என்றார். எச்சவும்மை செய்யுள் நடையால் தொக்கது. 'ஊர்' 'ஆகுபெயர். இதனைற் கற்பொழுக்க வாழ்க்கைக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

நள்ளிரவில் தலைமகன் தன்னந்தனியாகக் காட்டு வழியாய்த் தலைமகளூர்க்கு வந்துமீள்தல் பல்வகையில் உயிரச்ச முடையதாத லாலும், தற்செயலாக நேரும் பல்வேறு தடைகளால் கூட்டம் நிகழாது துன்பம் மிகுதலாலும், ஆடவன் வினைசெய்யாது நீண்ட காலம் காமவின்பத்திலேயே கழித்தல் இயலாதாகையாலும், பெண் ணின் கருப்பையிற் கருவுற்றுவிடின் உதை, மறைத்தல் கூடாமையா லும், அலரெழுந்து, பரவுவதைத் தடுக்க முடியாதாகையாலும், கள வொழுக்கக் காலம் சிற்றெல்லை ஒருநாளும் பேரெல்லை (பகற்குறி ஒருமாதமும் இரவுக்குறி ஒருமாதமுமாக) இரு மாதமுமாகவேயிருக்க முடியும். அதன் முடிவில் தலைமகன் தன் பெற்றோரைக் கொண்டு

மணம் பேசுவித்துத் தன் காதலியை வரைந்துகொள்வன். அதற்கு அவள் பெற்றோர் இசையாவிடின் அவளை உடன்கொண்டு சென்று மணப்பன். இது அவ்விருவர்க்கும் கற்பறமாம். இதுவே தமிழப் பண்பாடு.

" வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தி ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக ளெருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னு ரிருவரைக் காணீரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர் ;
....
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கணியளே ;
எனவாங்கு,
இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானே வழிபடூஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே." •(கலி. அ)

என்னுஞ் செய்யுளினின்று தமிழக் கற்பின் தன்மையை அறிந்து கொள்க.

ஒருமணமணமே (Monogamy) தமிழர் பண்பாடாதலானும், களவுக்கூட்டம் எத்துணை யின்பஞ்சிறப்பினும் பின்னர்க் கற்பாக மாறவேண்டியிருத்தலானும், நெடுகலுங் களவைக் கையாளக் கூடாமை பற்றியே "களவுங் கற்று மற," என்னும் பழமொழியும் எழுந்ததென்க.

களவியல் முற்றிற்று.

உ. கற்பியல்

கற்பியலாவது, களவொழுக்கம் ஒழுகிய மெய்யுறு புணர்ச்சி யரும் அஃதில்லா உள்ளப் புணர்ச்சியரும், வெளிப்படையாகக் கூடி வாழும் இல்லற வாழ்க்கையைப் பற்றிக் கூறும் பாற்பகுதி. கற்பா வது ஒருவரையுங் காதலியாரையும் காதலிப்பின் எதிர்ப்பாலருள் ஒருவரையே காதலிப்பதும் ஆகும். அது கற்போல் திண்ணிய பண்பாதலின் கற்பெனப்பட்டது.

"கற்பென்னுந்—திண்மையுண்டாகப்
பெறின்" (குறள். இசை)

"கல்லொடு தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற்
கண்டதுண்டோ" (கம்ப. சுந்தர. நிந்தனை. கூகு)

"கற்பு றுத்திய கற்புடை யாடனை" (சி அயோத்தி. நகர்நீங்கு. கசு)

என்று கம்பர் கூறுதல் காண்க. கற்பென்பது இருபாற்கும் பொதுவாதலாலும் மணஞ்செய்யு முன்பே அமைந்திருத்தலாலும், "கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுது குரவர் கற்பித்தலானும், 'அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்' 'ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்' (தொல். பொ. கசசு) ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்தலாலுங் கற்பாயிற்று. இனித் தலைவனுங் களவின்கண் ஓரையும் நாளுந் தீதென்றதனைத் துறந்தொழுகினுற்போல ஒழுகாது ஒத்தினுங் காரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று." (தொ. கற், க, உரை) என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பது ஆரியக் கருத்தேயன்றித் தமிழக்கருத்தன்று. மணமகளுக்குப் பணிவிடை பற்றிக் கற்பிப்பதெல்லாம் அறிவுரையேயன்றிக் கற்புரை யன்று. இல்லறத்தாரெல்லாரும் இறுதியில் துறவறஞ் செல்லவேண்டுமென்பதும் தமிழர்க்குரியதன்று.

கற்பொழுக்கம் என்னும் இல்லற வாழ்க்கை களவின்வழிப்பட்டதும் வழிப்படாததும் எனும் இருதிறத்தது. களவின் வழிப்பட்டதும், காதலியை வரைந்து கொண்டதும் உடன் கொண்டு சென்றதும் என இருவகைத்து. வரைந்து கொண்டதும், வெளிப்படு முன் வரைந்ததும் வெளிப்பட்டபின் வரைந்ததும் என இரு நிலைமைத்து, இனி, இல்லற வாழ்க்கையும், கரணம் என்னும் ஒப்பந்த அல்லது வாழ்த்துச்சடங்கொடு தொடங்குவதும் அஃதின்றித் தொடங்குவதும் என இரு மரபினதாம். கரணச்சடங்கு அவரவர் பொருளாட்சி நிலைமைக்கேற்ப விழாவொடு கூடியதும் கூடாததுமாக விருக்கும். இவற்றுள் முன்னது கொட்டித் திருமணம் என்றும், பின்னது கட்டுத்தாலி யென்றும் சொல்லப்பெறும்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"
(தொல், கற். க).

"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான." (தொல். கற். உ)

திருவள்ளுவர் சொற்களை மட்டுமன்றிப் பொருள்களையுஞ் சுருங்கச் சொல்கின்றாராதலின், பெற்றோர்க்குச் சிறிதுகாலம் பெருந்துயர் விளைக்கும் உடன்போக்கையும், இடை வகுப்பார்க்கும் எளியார்க்கும் கைக்கு மிஞ்சிய செலவையுங் கடனையும் நேர்விக்குங் கரண விழாவையும், ஆங்காங்குக் குறிப்பாகவன்றி வெளிப்படையாகச் சொல்லியிலர்.

இனி, தமிழக் களவுமணம் ஆரியக் காந்தருவத்தை யொக்குமென்று தொல்காப்பியர் கூறியதைப் பற்றுக் கோடாகக் கொண்டு,

"முன்னிய மூன்றுங் கைக்கிளைக் குரிப்பே
பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" (தொல். கள. கச)

என்னுந் தொல்காப்பிய நூற்பாவிற் குறிக்கப்பட்டுள்ள 'முன்னிய மூன்றும்' அசுரம் இராக்கதம் பைசாசம் என்றும், 'பின்னர் நான்கும்' பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்றும், உரையாசிரியரெல்லாரும் மயங்கியுரைப்பாராயினர். அசுரம் என்பது கைக்கிளையாகத் தொடங்கினும் இருதலைக்காமமாகவும் மாறலாமாதலானும், இராக்கதமும் பைசாசமும் பெருந்திணையாதலானும், பிரமம் முதலிய நான்கும் கைக்கிளையாகவோ இருதலைக் காமமாகவோதானிருக்க முடியுமாதலின் ஒரு வகையினும் பெருந்திணையாகாமையானும், தமிழ மணமுறையை ஆரியமணமுறையொடு ஒப்புநோக்குவது ஒரு சிறிதும் பொருந்தாதெனக் கூறி விடுக்க.

இக்கற்பியலை ஆசிரியர் பதினெண்ணதிகாரத்தாற் கூறத் தொடங்கி, முதற்கண் பிரிவாற்றுமை கூறுகின்றார்.

அதி. ககசு—பிரிவாற்றுமை

அஃதாவது, காதலன் காதலியை வரைந்துகொண்ட பின், தலைமகள் இல்லத்திலிருக்கத் தலைமகன் அறம்பொருள் பற்றித் தன் தொழிற்கேற்ப ஒரு வினைமேற்கொண்டு ஆயிடையுஞ் சேயிடையும் பிரிந்து செல்லுங்கால், அவள் அப்பிரிவைப் பொறுத்திருத்தல், அது பிரிவுணர்த்திய தலைமகனுக்குத் தோழிகூறல், அவளுக்குந் தலைமகள் தானே அவன் குறிப்பறிந்து கூறல், பிரிவுணர்த்திய விடத்துக் கூறல். பின் ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக்கூறல் என நால்வகையாற் கூறப்படும்.

இஃது அறநூலாதலால், இலக்கண நூல்களிலுங் கோவைகளிலுங் கூறப்படும் பரத்தையிற் பிரிவு இங்கு விலக்கப்பட்டதாம். இதையறியாது "அறம் பொருளின்பங்களின் பொருட்டு" என இன்பத்தையுஞ் சேர்த்துக் கூறினர் பரிமேலழகர். கற்பொடு பொருந்தாத பிறனில் விழைதல் அறத்துப்பாலிலும், வரைவின் மகளிர் தொடர்பு பொருட்பாலிலும், கூறி விலக்கப்பட்டமை காண்க. புலவியுதலிய மூன்றதிகாரங்களிலுங் கூறப்பட்டுள்ள பரத்தைமைக் குறிப்புக்களெல்லாம், தலைமகள் தன் மடமையால் தலைமகன்மீது ஏற்றிக்கூறிய இட்டேற்றமேயன்றி வேறல்லவென்க.

பிரிவு: தூது, போர், சந்துசெய்தல், நாடுகாவல், பொருளீட்டல் என நோக்கம்பற்றிப் பலதிறப்படும். ஆரிய வேதமும் அதன் வழிப்பட்ட நூல்களுங் கற்கச்செல்லும் ஓதற்பிரிவு தமிழருக்குரியதன்று. 'வேந்தற்குற்றுழி' என்னும் வேளாண் தலைவர் வேளிர் பிரிவும், 'வேந்துவிடுதொழில்' என்னும் வேளாளர் பிரிவும், போருள் அடங்கும்.

ககஙக. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

(பிரிந்து கடிதில் வருவேனென்ற தலைமகனுக்குத் தோழி சொல்லியது.)

(இ—ரை.) செல்லாமை உண்டேல் எனக்கு உரை —தலைவ! நீ எம்மைவிட்டுப் பிரியாமை யுண்டாயின் அதை மட்டும் சொல்; மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை — இனி, நீ பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வாயாயின், அதை நீ வரும்வரை ஆற்றியிருந்து உயிர்வாழ்வார்க்குச் சொல்.

தலைமகள் நீ திரும்பி வரும்வரை ஆற்றியிருப்பவளல்லள், நீ பிரிந்த பொழுதே இறந்துவிடுவாள் என்பதாம். இதனுற் செலவழுங்குவித்தல் பயன். அஃதாவது தலைமகளை யாற்றுவித்து ஓரிரு நாள் கழித்துப் பிரியச்செய்தல். தலைமகளொடு தனக்குத் தான் அவள் என்னும் வேற்றுமையின்மையால் 'எனக்கு' என்றாள். இது இல்லறத்தில் முதன் முதல் நிகழ்ந்த பிரிவாதலால், தலைமகளின் மென்மை நோக்கி நேர்முகமாய்க் கூறுவாயினன். இது தலைமகள் தோழிக்குக் கூறிய கூற்றாகவுரைப்பர் மணக்குடவர் காலிங்கர் பரிதியார்' பெருமாளர். இது முன்ன விலக்கு.

கருடுஉ. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு

(தலைமகனது குறிப்பாற் பிரிவுணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) அவர் பார்வல் இன்கண் உடைத்து—களவொழுக்கக் காலத்தில் நம் காதலர் தழையுங் கண்ணியுங் கொண்டு வந்து நம்மைக் குறையிரந்த பொழுது, அவர் பார்வை கூடப் புணர்ச்சி குறித்தமையால் நமக்கு இன்பந் தருவதாயிருந்தது; புணர்வு பிரிவு அஞ்சும் புன்கண் உடைத்து—ஆதலால் இன்று அப்புணர்ச்சியே நிகழ்ந்து வரவும், அது பிரிவர் என்னும் அச்சத்தைத் தருவதாகவுள்ளது. என்னே காமவின்பத்தின் நிலைமாற்றம்!

'பார்வல்' என்றதனால் பாங்கியிற் கூட்டத்திற்குமுன்பு இரந்து பின்னின்ற நிலையென்பது பெறப்பட்டது. புன்கண் துன்பம் அது இங்கு அதனால் விளையும் அச்சத்தைக் குறித்தது, அச்சத்தையுடைத்தாதலாவது முன்னினுஞ் சிறப்பாக அன்பு பாராட்டிப் பிரிவுக் குறிப்பைக் காட்டுதல். அது.

"முள்ளுறழ் முள்ளெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்
கள்ளினு மகிழ்செய்யு மெனவுரைத்து மையாரென்
னெள்ளிழை திருத்தும்."

என்ருற் போல்வது (கலித். கூ). 'ஆல்' அசைநிலை.

கருடுஊ. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

(இ—ரை.) அறிவு உடையார் கண்ணும்—உன்னிற் பிரியேனென்று தாம் உரைத்த சொல்லை மறவாதும், நம் பிரிவாற்றுத்தன்மையை நன்ருக அறிந்துமுள்ள காதலரிடத்தும்; ஓர் இடத்துப் பிரிவு உண்மையான்—ஒரொரு சமையத்துப் பிரிவு நிகழ்தலால்; தேற்றம் அரிது—அவர் இன்சொல்லும் பேரன்புச் செய்ஞ்ஞன்றி, நம்பாற் பிரியாத அன்புடையரெனத் தெளியும் உறுதி அரிதாயிருந்தது.

'அரோ' அசைநிலை. உம்மை உயர்வு சிறப்பு.

கருடுரு. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

(இ—ரை.) அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின்—தலைநாளில் எதிர்ப்பட்டபோதே பேரன்பு செய்து, நின்னிற் பிரியேன், அஞ்சேல் என்று தேற்றியவர் தாமே பின் மாறுகப் பிரிவராயின்; தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ—அவரிடத்தன்றி அவர் தெளிவித்த சொல்லே மெய்யென்று நம்பியவரிடத்துக் குற்ற முண்டோ?

சொன்னதை நிறைவேற்றுமைக் குற்றம் அவரிடத்துத் தங்காவாறு செலவழுங்குவி என்பது கருத்து. 'தேறியார்' என்பது தன்னைப் பிறர் போற் கூறிய தன்மைப் படர்க்கை. ஓகாரவினை எதிர்மறைக் குறிப்பினது.

கக்டுடு. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

(இ—ரை.) ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல்—தோழீ! நீ என்னுயிரைப் பேணிக்காப்பாயாயின், அதற்கு இன்றியமையாத் துணைவராக அமைந்தவரின் பிரிவு நேராமற் காப்பாராக; மற்று அவர் நீங்கின் புணர்வு அரிது—பின்பு அவர் செலவழுவ்வுவித்துச் சென்று விடினோ, என் உயிருஞ் சென்றுவிடும்; அதன்பின் அவரைக் கூடுதல் எனக்கு அரிதாம்.

'அமைந்தார்' என்னுஞ்சொல் இறைவன் ஏற்பாட்டின்படி அமைந்தவர் என்னுங் குறிப்பினது. (ஒ. நோ: "marriages are made in heaven.") 'மற்று' பின்மை அல்லது வினைமாற்றுப் பொருளில் வந்தது.

கக்டுஙூ. பிரிவுரைக்கும் வனகண்ணை ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை.

(தலைமகன் பிரிவுணர்த்தியதைத் தெரிவித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

(இ—ரை.) அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணை ராயிற்—என் காதற்பெருக்கையுங் கவவுக்கை யிறுக்கையும் கண்டறிந்த தலைவர் தாமே, நம் முன்நின்று தம் பிரிவை யுணர்த்தும் வன்னெஞ்சராயின்; நல்குவர் என்னும் நசை அரிது—அத்தன்மையர் பின்பு நம் ஆற்றுமையறிந்து வந்து பேரன்பு செய்வரென்னும் ஆசையை விட்டுவிட வேண்டியதுதான்.

இது தலைமகள் தன் இளமையினுலும் இல்லறத் தொடக்கநிலை யினுலும், பொருளின் இன்றியமையாமையையும் ஆடவர் கடமையை யும் உணராது காதலொன்றையே கருதிக்கூறியு கூற்றாகும். அருமை பெரும்பாலும் நிறைவேறுமை, செலவழுங்குவித்தல் பயன்.

கக்டுஎ துறைவன் றுறந்தமை தூற்றுகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை.

(இதுவுமது)

(இ—ரை.) துறைவன் துறந்தமை— தலைவன் என்னைவிட்டுப் பிரிந்தமையை; முன்கை இறை இறவா நின்றவளை தூற்றுகொல்— அவனுணர்த்தாமல் தானே யுணர்ந்து என் முன்கையின் • வளைவி னின்று கழன்று நின்ற வளையல்களே எனக்கு அறிவியாவோ? நீ அவன் வாய்ச்சொல்லால் அறிவிக்க அறிந்து வந்து எனக்கு அறி விக்க வேண்டுமோ?

பிரிந்து செல்ல முன்னமே தீர்மானித்து விட்டமையால் 'துறந் தமை' யென்றும், குறிப்பாலறிந்து வாடிய வாட்டத்தால் வளை கழன்றமையால் 'இறவா நின்ற வளை' யென்றும், பலரறிய வெளிப் படையாய் நிகழ்ந்தமையால் 'தூற்றுகொல்' என்றுங் கூறினுள். செலவழுங்குவித்து எனக்குத் துணையாயிராது, செலவு நிகழ்ந்ததைக் கூறிக் துன்பஞ் செய்தாய் என்று புலந்து கூறியவாறு 'வளை' பால்பகா அஃறிணைப்பெயர்.

கக்டுஅ. இன்னு தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னு தினியார்ப் பிரிவு.

(இ—ரை.) இனன் இல்லா ஊர் வாழ்தல் இன்னாது—மகளிர்க் குக் குறிப்பறிந்து துதவும் உறவினர் போன்ற தோழியர் இல்லாத வேற் றூரில் வாழ்தல் துன்பந்தருவதாம்; இனியார்ப் பிரிவு அதனினும் இன்னாது—இனி, தமக்கு இனிய காதலரை விட்டுப் பிரிவதோ, அதனினும் மிகத் துன்பந் தருவதாம்.

தலைவனைச் செலவழுங்குவியாது செலவுடம்பட்டு வந்தமை பறிந்து தோழியொடு புலக்கின்றுளாதலின், 'இனனில்லூர்' என்றுள். இருவகைத் துன்பமுந் தனக்குண்மையை உலகியல்மேல் வைத்துக் கூறியவாறு.

கக்டுஉ. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

(காமம் தீபோன்று தான் நின்ற விடத்தைச் சுடுமாதலால் நீ ஆற்றல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) தீத் தொடிற் சுடின் அல்லது—தீத் தன்னைத் தொட்டாற் சுடுமே யல்லது; காம நோய் போல விடின் சுடல் ஆற்றுமோ—காமநோய் போலத் தன்னை விட்டு நீங்கினுஞ் சுடவல் லதோ? இல்லையே!

பரிமேலழகர் ''தீத் தொடிற் சுடிற் சுடலல்லது'' எனச் சுடல் என்பதை முன்னுங் கூட்டி, ''தீத் தன்னைத் தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது'' என்று உரையும், ''சுடுமாயி னென்பது மந்திர மருந்துகளாற் றம்பிக்கப்படாதாயி னென்றவாறு. காமத்திற் கதுவு மில்லையென் பாள் வாளா 'சுடல்' என்றுள்.'' என்று சிறப்புங் கூறினர். தீவலிகட்டல் செயற்கையாதலானும், காம நோயையும் ஒகத்துயி லால் (யோக நித்திரையால்) கட்டலாமாதலானும், அது அத் துணைச் சிறந்ததன்று. விடுதல் கருதாமை. தீயினுங் கொடியதை எங்ஙனம் ஆற்றவொண்ணு மென்பதாம்.

ɐɐɐo. அரிதாற்றி யல்லனெய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

(பிரிவாற்றியிருக்குந் தலைவியரும் பலருளர், நீ அது செய்கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) (ஆம். நீ சொல்லுவ துண்மைதான்.) அரிது ஆற்றி—பிரிவுணர்த்திய போது அதற்குடம்பட்டு; அல்லல் நோய் நீக்கி—பிரியுங்கால் நிகழும் துன்ப நோயைப் பொருட்படுத்தாது; பிரிவு ஆற்றி—பிரிவு நிகழ்ந்தால் அப்பிரிவையும் பொறுத்துக் கொண்டு; பின் இருந்து வாழ்வார் பலர்—அதன் பின்னும் உயிர் வாழும் மகளிர் உலகத்துப் பலராவர்!

முன்னும் பன்மடங்கு சிறப்பாகத் தலைமகன் பேரன்பு செய்யும் நிலைமைக்கண், அதையிழந்து துன்புறுதற் குடம்படுதல் அரிய தொன்றுகவின், 'அரிதாற்றி' என்றும்; செல்லும் வழியிலும் நாட் டிலும் தலைவருக்கு என்ன தீங்குநேருமோ வென்றும், அவர் வருமள வும் யாம் ஆற்றியிருப்ப தெவ்வாறென்றும், அவ்வரவுதான் என்று நிகழுமோ வென்றும், மனத்திலெழுங் கவலை நீங்காதாகலின் 'அல்ல னெய் நீக்கி' யென்றும்; பிரிந்தபின் வருமளவும் உள்ளத்து நிகழுங் காமநோயையும், அதை வளர்க்கும் யாழிசை வெண்ணிலா தென் றல் பீச்சு முதலியவற்றையும். தாங்குதல் அரிதாகலின் 'பிரிவாற்றி'

யென்றும்; தம் காதலரை யின்றியமையா மகளிருள், இவற்றையெல் லாம் பொறுத்துக்கொண்டு பின்னுமிருந்து உயிர்வாழ்வார் ஒருவரு மிரார் என்பது தோன்றப் பகடிக் குறிப்பாகப் பின்னிருந்து வாழ் வார் பலர் என்றுங் கூறினுள். 'ஆற்றி,' 'நீக்கி,' 'ஆற்றி' என்னும் எச்சங்கள், துன்பத் தொடர் நீட்சியையும் அதன் கடுமையையும் உணர்த்தி நின்றன. சிறப்பும்மையும் எச்சவும்மையும் செய்யுள் நடையால் தொக்கன.

அதி. ககஎ—படர்மெலிந்திரங்கல்

அஃதாவது, பிரிவாற்றுளாகிய தலைமகள், தானுறுகின்ற துன்பத்தை இடைவிடாது நினைத்துக் கொண்டிருத்தலால் மெலிந்து வருந்துதல். படர்தல் - உள்ளுதல்.

"படரே யுள்ளல் செலவு மாகும்" (தொல். உரி. ?உ)

ககஎக. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவாக்
கூற்றுநீர் போல் மிகும்

(காமநோயை வெளிப்படுத்தல் நின் நாணுக்குத் தகாதென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) நோயை யான் மறைப்பேன்—இக்காம நோயைப் பிறர் அறியாவாறு யான் மறைப்பேன்; இஃதோ இறைபவர்க்கு ஊற்றுநீர் போல மிகும்—ஆயின், இதுவோ நான் மறைக்க மறைக்க என் நாண்வரை நில்லாது இறைப்பவர் இறைக்க இறைக்க வூறும் ஊற்று நீர்போல மிகுந்து வெளிப்படும.

இனி அதற்குத் தக்கது நீ செய்தல் வேண்டும் என்பதாம். 'இஃதோ' என்பது சுட்டுப்பெயர் ஈதுதிரிந்தது அன்று. மறைத்து என்ன பயன் என்பது பட நின்றமையின் 'மன்' ஒழியிசை 'இஃதோர் நோயை' என்னும் பாடம் சரியானதன்று.

ககஎஉ. கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.

(அண்டையார் அறியாமல் மறைத்தல், ஆண்டையார்க்குத் தூது விடல் என்னும் இரண்டனுள் ஒன்று செய்யவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) இந்நோயைக் கரத்தலும் ஆற்றேன்—இக்காம நோயை அக்கம்பக்கத்தார் அறியாவாறு மறைக்கவும் என்னால் முடியவில்லை; நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத்தரும்—இனி, இந்நோயை நீக்குமாறு இதைத் தந்த காதலர்க்கு அறிவிக்கவும் வெட்கமாயிருக்கின்றது. என் செய்வேன்!

நோய் மேன்மேலும் மிகுதலாற் 'கரத்தலு மாற்றேன்' என்றும். பிரிந்துபோனது அண்மைக் காலமே யாதலானும் இன்பவாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளிட்டுதலைத் தடைசெய்வது அறிவுடைமையாகாமையானும் 'நாணுத்தரும்' என்றும், கூறினாள்.

குக்கூஉ. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனு வுடம்பி னகத்து.

(இதுவுமது)

(இ—ரை.) காமமும் நாணும்—என் காமநோயும் அதை யுண்டாக்கியவர்க்கு உரைப்பதைத் தடுக்கும் நாணமும்; நோனு என் உடம்பின் அகத்து—அவற்றைத் தாங்காது வருந்தும் என் உடம்பினிடத்து: உயிர் காவாத் தூங்கும்—என் உயிரைக் காவட்டுத் தண்டாகக் கொண்டு அதன் இரு கடையிலுந் தொங்குகின்றன.

காமமும் நாணமும் ஒத்த இருதலைச் சுமைகளாக வருத்துவது தோன்றக் 'காவாத்தூங்கும்' என்றும் உயிரிருப்பதனாலேயே காமமும் நாணமுந் தோன்றுவதால் 'உயிர் காவா' என்றும், காவாட்டுச் சுமையைத் தாங்கும் வலிமை நோயால் மெலிந்துள்ள உடம்பிற்கின்மையால் 'நோனுவுடம்பினகத்து' என்றும், கூறினாள். நோயும் நீங்காது நோய்நீக்கும் வழித்தடையும் நீக்காது இருதலைக் கொள்ளி யெறும்புபோல் இடர்ப்படுகின்றேன் என்பதாம். உடம்பைக் காவுவோனுக்கு உருவகியாமையால் இது ஒரு மருங்குருவகம்.

குக்கூச. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

(தலைவியர் காமக்கடற்படார்; படினும் அதனைத் தக்க புணையால் நீந்திக்கடப்பர் என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) காமக் கடல் உண்டே—காமக்கடல் எனக்கு இருக்கவே யிருக்கின்றது: அது நீந்தும் ஏமப்புணை இல்—ஆனால், அதை நீந்திக் கடக்கும் பாதுகாப்பான மரக்கலந்தான் எனக்கில்லை.

தூதுவிடுத்து எனக்குத் துணையாதற் குரிய நீயும் ஆனையல்லை யென்பதாம். 'மன்', 'உம்' ஈரிடத்தும் அசைநிலை. இனி, மிகுதிப் பொருள எனினுமாம். இதில் வந்துளது உருவகவணி.

ககசுடு. துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.

(தூதுவிடாமை பற்றித் தோழியொடு புலந்து சொல்லியது.)

(இ—ரை.) நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் — இன்பந் தருதற்குரிய நட்புநிலைமையிலேயே துன்புறுதலை வருவிப்பவர் துப்பின் எவன் ஆவர்கொல்—துன்பமே தருதற்குரிய பகைமை நிலைமையில் எத்தகைய ராவரோ! தெரிகிலது.

துயர்வரவை நீக்கலாபிருச்சவும் அது செய்கின்றிலையெனத் தோழியொடு புலக்கின்றமையின், அவனைத் துயர் வரவுசெய்தா ளாக்கியும் பிறத்தியாக்கியுங் கூறினள். துப்பு என்பது வலிய பகை. "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேபமையன்" (புறம். கூஅ) 'எவன்' அஃறிணைச் சொல். 'மன்' அசைநிலை. 'கொல்' ஐயம்.

ககசுசு. இன்பங் கடன்மற்று காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

(காமத்தால் இன்பம் நுகர்ந்தவர் அதனால் வருந்துன்பத்தையும் பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) காமம் இன்பம் கடல்—காமம் புணர்வால் இன்பஞ் செய்யும்போது, அவ்வின்பம் கடல்போற் பெரிதாம்; மற்று அஃது அடுங்கால் துன்பம் அதனிற் பெரிது—பின்பு அதுதானே பிரிவால் துன்பஞ் செய்யும்பொது, அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம்.

காமத்தால் வரும் இன்பமுந் துன்பமும் அளவொத்திருப்பின் ஆற்றலாம். துன்பம் இன்பத்தினும் மிகுந்திருப்பதால் ஆற்று மாறில்லை யென்பதாம். 'மற்று' விகுமாற்று அல்லது பின்மைப் பொருளில் வந்தது. 'அடுங்கால்' என்று பின்னொடரில் வந்தமை யால், அதன் மறுதலை யெச்சம் முன்னொடர்க்கு வருவிக்கப்பட்டது.

ககசுஎ காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

(காமக்கடலே நிறைபுணையாக நீந்தல் கூடுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்—காமம் என்னுங் கடலே நிறைபுணையாக நான் நீந்தாம லில்லே, நீந்தத் தான் செய்தேன், நீந்தியுங் கரைகாணவில்லே; யாமத்தும் யானே உளேன்—அதனால் மற்றெல்லாருந் தூங்கும் நள்ளிரவிலும் நடுக் கடலில் நானே தன்னந் தனியாகவிருந்து அலேசடிப்படுகின்றேன்.

நிறைப்புணை காமப் பெருங்கடலேக் கடத்தற்குப் போதிய வலிமையுள்ளதாயில்லே யென்பது கருத்து. 'யானேயுளேன்' என்பது நீ துணேயாயில்லே யென்னுங் குறிப்பினது. கடுமை இங்கு மிகுதி குறித்து நின்றது. எச்சவும்மை முன்னுங் கூட்டப்பட்டது. புணே குறிக்கப்படாமையால் இஃது ஒரு மருங்குருவகம்.

குகூஅ. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லே துணே.

(இரவின் கொடுமை கூறி வருந்தியது.)

(இ—ரை.) இரா அளித்து—இவ்விரவு இரங்கத்தக்கதாயிருந் தது; மன் உயிர் எல்லாம் துயிற்றி என் ஆகிய துணே இல்லே—இவ்வுலகத்து மற்றெல்லா வுயிர்களேயுந் தூங்கவைத்து விட்டதனுல், இராமுழுதுந் தூங்காத என்னேத்தவிர வேறெரு துணேயும் இல்லா திருந்தது.

நிலேபெற்ற வுயிர் ஒன்றும் இவ்வுலகத்தின்மையாலும், மாந்தரே யன்றி மற்றவுயிர்களும் இரவில் தூங்குவதாலும், மன் என்னுஞ் சொற்கு மற்றுப் பொருள் இங்குக் கொள்ளப்பட்டது. ஆயினும், சில வுயிரினங்கள், இரவிலேயே வழங்குவதனுலும், சில மாந்தர் இரவிலேயே அல்லது இரவிலுந் தொழில் செய்வதனுலும், எல்லாம் என்னுஞ் சொல் பெரும்பான்மை பற்றியதென்று கொள்ளப்படும். பொதுவாக இராக்காலமே தூங்கும் வேளேயாதலாலும், பகலுழைப் பாளிகட்கு இரவில் தானுகத் தூக்கம் வந்துவிடுவதனுலும், இரவே தூங்கவைப்பதாகச் சொல்லப்பட்டது. துணேயொடு கூடி இன் புறும் உயிர்களேயெல்லாந் தூங்கவைத்துவிட்டு, துணேயின்றி வருந் தும் என்னேமட்டும் தூங்கவையாது தனக்குத் துணேயாகக் கொண் டது, இக்கொடிய இரா என்னுங் கருத்தினளாதலால், 'அளித்து' எதிர்மறைக் குறிப்பாம்.

கக்கூ. கொடியார் கொடுமையிற் ருங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

(இதுவுமது)

(இ—ரை.) இரா இந்நாள் நெடிய கழியும்—முன்பு நம் காதல ரொடு கூடி யின்புற்ற நாட்களிலெல்லாம் குறிய வாயிருந்த இரவுகள், இன்று அவரினின்று பிரிந்து துன்புறுங் காலத்தில் மிக நீண்டு செல் கின்றனவா யுள்ளன; கொடியார் கொடுமையின் தாம் கொடிய— ஆதலால், அக்கொடியார் கொடுமையினும் மிஞ்சிய கொடுமை செய்வனவாகும்.

தன் ஆற்றுமை கருதாது பிரிந்தமையின் 'கொடியார்' என்றும், வரவு நீட்டித்தமையின் 'கொடுமை' என்றும், தன் துன்பங்கண் டிரங்காமையானும் முன்னினும் நெடியவாய்க் கழிந்தமையானும் 'கொடுமையிற்ருங்கொடிய' என்றும், கூறினள்

கஞ0. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

(நின்கண்களின் பேரழகு கெடுகின்றமையின் அழத்தகாதென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) உள்ளம் போன்று உள்வழிச் செல்கிற்பின்—என் அகக்கண் போன்றே காதலருள்ள நாட்டிற்குக் கடுகிச் செல்ல வல்லனவாயின்; என் கண் வெள்ளநீர் நீந்தல—என் புறககண்கள் இங்ஙனம் வெள்ளம்போலக் கண்ணீர் வடித்து அதில் நீந்தா.

அகக் கண்ணிற்குச செலவு உள்ளுதலே யாதலின் 'உள்ளம்' என்றும், புறக்கண்கள் அங்ஙனஞ் செல்ல வியலாமையின் 'செல்கிற் பின்' என்றும், கூறினள். 'மன்னோ' பிற்காலத்து ஈரசைநிலைகளும் (மன், ஓ) முற்காலத்து ஆடூஉ முன்னிலையும் (அரசே!) ஆகும். "அது (செல்வது) மாட்டாமையின், இனி அவற்றிற்கு நீந்துதலே யுள்ள தென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது, என்பர் பரிமேலழகர். 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. இக் குறளால் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப் பட்டது.

அதி. ககஅ—கண்விதுப்பழிதல்

அஃதாவது, தலைமகளின் கண்கள் தலைமகனை விரைந்து காணும் விருப்பத்தால் வருந்துதல், விதுப்புக் காண்டற்கு விரைதல். இது இடைவிடாது நினைத்து மெலிந்த விடத்து நிகழ்வதாகலின், படர் மெலிந்திரங்கலின் பின் வைக்கப்பட்டது.

ககஎக. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

(நின் கண்கள் கலங்கித் தம் அழகிழக்கின்றன. ஆதலால் நீ அழுதல் கூடாதென்ற தோழிக்குச் சொல்லியது)

(இ—ரை.) தாம்காட்ட தண்டாநோய் யாம் கண்டது—தாம் அன்று எம் காதலரை எமக்கு வலியக் காட்டினதினாலன்றே இத் தணியா நோயை யாம் அடைந்தது; கண் தாம் கலுழ்வது எவன் கொல்—அங்ஙனமிருக்கவும், இன்று தடிக்கு அவரைக் காட்டச் சொல்லி என் கண்கள் என்னை வேண்டி யழுவது என்ன கருத்தொடு? எமக்குத் தெரியவில்லையே!

இன்றும் அன்றுபோல் தாமே காட்டுவதல்லது யாம் காட்டுவது எங்ஙனம் என்பதாம். 'காட்ட' என்பதற்குரிய செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'கொல்' ஐயம். 'ஓ' அசைநிலை.

ககஎஉ. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன்.

(இதுவுமது)

(இ—ரை.) தெரிந்து உணரா நோக்கிய உண்கண்—மேல் விளைவதை ஆராய்ந்தறியாது அன்று காதலரைக் காதலொடு நோக்கிநின்ற என் மையுண்ட கண்கள்; பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன்—இன்று இது நம்மால் வந்ததுதானே! ஆதலாற் பொறுத்துக்கொள்ளல் வேண்டுமென்று அன்போடு கூறுபடுத்துணராது, துன்புற்று வருந்துவது ஏன்?

துன்பம் வருமுன் காவாதார் அது வந்தபின் வருந்துவது வீண் மடச்செய்கை யென்பதாம். மேல் விளைவாவது பிரிவினால் நேரும் ஆற்றுமைத் துன்பம்.

கஙஙு. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

(இதுவுமது)

(இ—ரை.) தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது—இக்கண்கள் அன்று எண்ணிப்பாராது தாமே காதலரைத் திடு மென்று நோக்கிவிட்டு, இன்றும் அவரைக் காணவில்லையென்று தாமே யிருந்தழகின்ற செய்தி; நகத்தக்கது உடைத்து—சிரிக்கத் தக்க தன்மையை யுடையது.

தாம் ஒன்றை விரும்பிச் செய்துவிட்டுத் தாமே அதன் விளைவு பற்றி யழுவது பகுத்தறிவாளர் நகையாடத் தக்க செய்தியாதலின், 'நகத்தக்க துடைத்து' என்றுள். கண்கள் என்பது அதிகாரத்தால் வந்தது. ஏகாரம் பிரிநிலை.

கஙஙசு. பெயலாற்று நீருலந்த வுண்க ணுயலாற்று
வுய்விலே யென்க ணிறுத்து.

(இதுவுமது)

(இ—ரை.) உண்கண்—என் மையுண்ட கண்கள்; உயல் ஆற்று உய்வு இல்நோய் என்கண் நிறுத்து—நான் தப்பமுடியாமைக் கேதுவான ஒழியாத காமநோயை என்னிடம் நிறுத்திவிட்டு; பெயல் ஆற்றுநீர் உலந்த—தாமும் தொடர்ந்து அழமுடியாவண்ணம் நீர் வற்றிவிட்டன.

உய்வில் நோய் நிறுத்தலாவது, பிரிதலும் பின் விரைந்து கூடாமையு முடையாரைக் காட்டி, அதனானுண்டாகும் ஆற்றுமை நோயை நீடுநிற்கச் செய்தல். என்னை நெடிது வருந்தச்செய்த தீவினையால் தாமும் வற்றி வறண்டுபோயின என்பதாம்.

கஙஙஞ. படலாற்று பைத லுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண்.

(இதுவுமது)

(இ—ரை.) கடல் ஆற்றுக் காமநோய் செய்த என் கண்—கடலுஞ் சிறிதாம் வண்ணம் பேரளவுள்ள காமநோயை எனக்குச் செய்த என் கண்கள்; படல் ஆற்று பைதல் உழக்கும்—அத்தீவினையால் தாமும் தூக்கம் பெறுதனவாய்த் துன்பப்படுகின்றன.

வினைவிதைத்தவன் வினையறுப்பானதலால், என்னைத் துன் புறுத்திய கண்கள் தாமும் துன்புறுகின்றன என்றாள்; காமநோய் காட்சியால் வந்ததனால், கண்ணே அந்நோயைத் தந்ததாகக் கூறினாள். கண் துன்புறுதலாவது அழுதலும் எரிச்சல் கொள்ளு தலும்.

கூகஅ. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

(இதுவுமது)

(இ—ரை.) எமக்கு இந்நோய் செய்தகண் தாம் இதற்பட் டது—எமக்கு இக்காமநோயை வருவித்த கண்கள் தாமும் இத் துன்பத்துள் அகப்பட்டுக் கொண்டது; ஓ ஒ இனிதே—மிகவும் இனிதாவதே.

துன்பமென்றது தூங்கா தழுதலே. எம்மைத் துன்புறுத்தினுர் துன்புறுவது எம துன்பந் தீர்ந்தார் போல்வதென்பதாம். 'ஓ' மிகுதிப்பொருட் குறிப்புச்சொல். 'ஒ ஒ' 'தா அம்' இசைநிறை யளபெடைகள். ஏகாரம் தேற்றம்.

கூகஆ. உழந்துழந் துணணீ ரறுக விழைந்திழைந்து
வேணடி யவர்க்கண்ட கண்.

(இதுவுமது)

(இ—ரை) விழைந்து இழைந்து வேண்டி அவர்க்கண்ட கண்—அன்று விரும்பி உண்ணெகிழ்ந்து மேன்மேலுங் காதலித்து அவரைக் கண்ட கண்கள்; உழந்து உழந்து உள்நீர் அறுக—இன்று தூக்கமின்றி யழுந்துன்பத்தால் வருந்தி வருந்தி அம்மகத்துள்ள நீரெல்லாம் வற்றிடபோக!

அடுக்கு இடைவிடாமை பற்றி வந்தது. சினைவினை முதல்மேல் நின்றதுபோல, அறுதலாகிய இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

கூகஇ. பேணுது பெட்டா ருளர்மன்னே மற்றவர்க்
காணு தமைவில கண்.

(காதலர் பிரிந்து போனுரல்லர், அவர் உடலால் ஆங்கிருப்பி னும் உள்ளத்தால் ஈங்குளர். அவரைக் காணுமளவும் ஆற்றியிரு என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) பேணுது பெட்டார் உளர்—(ஆம். நீ சொல்வது உண்மைதான்.) நெஞ்சத்தில் நேயங்கொள்ளாது வாய்ச்சொல் லால் மட்டும் நம்மை விரும்பியவர் இங்கே யுள்ளார்; மற்று அவர்க் காணுது கண் அமைவு இல—ஆயின் அவ்வுண்மைக்கு மாறுக, என் கண்கள் அவரைக் காணுமையால் அமைதியில்லா திருக்கின்றன.

பிரிவாற்றுமை யறிந்தும் பிரிந்துபோனமையாற் 'பேணுது' என்றும், முன்னர் நலம் பாராட்டிப் ''பிரியேன், அஞ்சேல்'' என்று வன்புறையுங் கூறினராகலின் 'பெட்டார்' என்றும் கூறினள். யான் ஆற்றியிருக்கவும் என் கண்கள் அவரைக் காணும் வேட்கை மிகுதி யால் ஆற்றுதிருக்கின்றன என்பதாம். 'மன்' ஒழியிசைக் கண் வந்தது என்றும் 'ஓகாரம்' அசைநிலை யென்றுங் கூறுவர். அவர் உண்மையில் இங்கிருந்தால் என் கண்கள் அவரைக் கண்டு அமைதி யுற்றிருக்கும் என்பதை ஒழியிசையாகக் கொள்க. 'மற்று' மாற்றுப் பொருளில் வந்தது. 'கொண்கனீ' என்பது காலிங்கர் கொண்ட பாடம்.

'' இளிக் கொண்கனீ யென்று பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணு தமைகின்ற கொண்கனீத் தாங்காணுதமைகின்றன வில்லை. இவ்வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத்துளரோ வென் றுரைக்க.'' என்னும் பரிமேலழக ருரை கொள்ளத்தக்கதே. இதற்கு 'மன்' அசைநிலை யென்பர் அவர்.

நகலே. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

(நீயும் ஆற்றி நின் கண்களுந் தூங்குதல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) வாராக்கால் துஞ்சா - காதலர் வராதிருக்கும்போது அவர் வரவுநோக்கி வழிமேல் விழிவைத்துத் தூங்கா; வரின் துஞ்சா—அவர் வந்த பின்போ மீண்டும் பிரிதலஞ்சித் தூங்கா; ஆயிடைக் கண் ஆரஞர் உற்றன—இங்ஙனம் அவ்விரு நிலைமையி லும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தை யடைகின்றன.

என் கண்கள் ஒருபோதும் தூங்கும் நிலைமையில்லை யென்பதாம்

நகஅ0 மறைபெற லூரார்க் கரிதன்ரு லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து.

(காதலரை இவ்வூர் இயற்பழியாவாறு அவர் குற்றத்தை மறைக்க வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) எம் போல் அறை பறை கண்ணுர் அகத்து மறை பெறல்—எம்மைப் போலப் பறையறையுங் கண்ணையுடையார் தம் நெஞ்சிலடக்கிய மறைபொருளை யறிதல்; ஊரார்க்கு அரிது அன்று—இவ்வூர் வாழ்நர்க்கு எளிதாகும்.

யான் மறைக்கவும் என் கண்கள் வெளிப்படுத்தலின் மறைத்துப் பயனில்லை யென்பதாம். மறைக்கப்படும் பொருள் மறை; ஆகு பெயர். பறையறைந் தறிவித்தாற் போலப் பலர்க்குந் தெரிவித்தலின் 'அறைபறை கண்' என்றுள். "இங்ஙனஞ் செய்யுள் விகாரமாக்காது, அறைபறை கண்ணுரென்று பாடமோது வாருமுளர்." என்றுர் பரிமேலழகர். இனி, 'எம்போற் பறையறை கண்ணுர்' என்று பாடமோதின், எதுகை கெடாதும் இன்னேசை குன்றுதும் மரபு திரியாதும் இலக்கணம் வழாதும் இருத்தல் காண்க. மோனை கெடுமேயெனின், அதனைவிழுக்கில்லையென்றும், மோனையில்லா ஈற்றடியே திருக்குறளிற் பெருவழக்கென்றும், கூறிவிடுக்க 'ஆல்' அசைநிலை.

அதி. ககக—பசப்புறு பருவரல்

அஃதாவது, பிரிவாற்றுமையால் தலைமகளின் மேனியிற் பசலை யென்னும் நிறவேறுபாடு தோன்றற் கேதுவாகிய வருத்தம். இது தலைமகனை நீண்ட நாளாகக் காணப்பெருவிடத்து நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின் பின் வைக்கப்பட்டது.

பசப்பு அல்லது பசலை யென்பது பைம்பொன்னைத்த பசுமஞ்சள் நிறம் கொண்டது. அது சுணங்கு, தேமல் என்றும் பெயர் பெறும். மேனியழகிலுலும் தேமல் படர்வதுண்டு. அது அழகு தேமல் எனப்படும்.

ககஅக. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

(முன்பு பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.)

(இ—ரை.) நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்—என்னை விரும்பியவர்க்கு அன்று பிரிவையுடம்பட்ட நான்; பசந்த என்

பண்பு யார்க்கு உரைக்கோ—அதனை ஆற்றாது இன்று பசந்த என் இயல்பை யார்க்கு எடுத்துச் சொல்வேன்!

உடம்பாடு பெற்றே பிரிந்தமையின் 'நயந்தவர்' என்றும், பிரிவுக் காலத்திற் கூடுதலில்லையாதலின் 'நல்காமை' யென்றும், முன்னருடம் பட்டமையும் பின்னர் ஆற்றாது பசந்தமையும் தன் செயலே யென்பாள் 'பசந்த வென் பண்பு' என்றும், தன் குற்றத்தை எவரிடமுங் கூறி முறையிட முடியாதாகலின் 'யார்க்குரைக்கோ' என்றும். கூறினாள். 'உரைக்கு' செய்கு என்னும் வாய்பாட்டுத் தன்மை யொருமை யெதிர்கால வினைமுற்று. 'ஓ,' 'பிற' அசைநிலைகள்.

ககஅஉ அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

(ஆற்றுளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.)

(இ—ரை.) (யான் ஆற்றியிருக்கவும்) பசப்பு—இப்பசலைதான்; தந்தார் அவர் என்னும் தகையால்—என்னை யுருவாக்கினவர் அவர் (காதலர்) என்னும் பெருமிதத்தால்; என் மேனிமேல் இவர்தந்து ஊரும்—என் உடம்பின்மேல் ஏறி என்னைச் செலுத்துகின்றது.

இப்பசலை தன்னை என் தலைவர் தோற்றுவித்தார் என்னும் உரிமை பற்றி என்மீது ஊர்கின்றது. இதற்கு நீ கவல வேண்டேன் என்பதாம். ஊர்தல் பசலை படர்தல். இப்படர்ச்சி குதிரையேற்றம் போற் கூறப்பட்டிருப்பது குறிப்புருவகம்.

ககஅங. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

(அழகும் நாணும் அழியாமல் நீயாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) நோயும் பசலையும் கைம்மாறுத் தந்து—நம் காதலர் நம்மைவிட்டுப் பிரியும் போதே இக்காம நோயையும் பசலையையும் எதிரீடாகத் தந்துவிட்டு; சாயலும் நாணும் அவர்கொண்டார்—என் மேனியழகையும் நாணையும் தம்முடன் கொண்டு போய் விட்டார்.

அவர் திரும்பி வந்தாலொழிய என் மேனியழகும் நாணும் திரும்பா வென்பதாம். சாயலுக்குப் பசலையும் நாணுக்கு நோயும் ஈடாதலால் எதிர்நிரனிறை.

ககஅசு. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

(காதலர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் அறியாதலின் அவர் வரும்வரை ஆற்றியிரு என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை) யான் மன் உள்ளுவன்—காதலர் சொற்களை யான் மிகுதியும் நினைப்பேன்; உரைப்பது அவர் திறம்—யாரிடத்திலும் சொல்லுவதும் அவர் நற்றிறங்களையே; பசப்புக் கள்ளம்—அங்ஙன மிருந்தும் எப்படியோ இப்பசலை கள்ளத்தனமாக வந்துள்ளது.

முக்கரணங்களுள் மெய் ஏனையிரண்டின் வழிப்பட்டதாகவின், நினைவு சொல் வழியாக வராது நேரே மெய்வழியாக வந்தது மாய மாயுள்ளது என்பதாம். 'ஆல்,' 'பிற,' 'ஓ' அசைநிலைகள்.

ககஅடு. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.

(காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை யென்ற தோழிக்கு முன் சிகழ்ந்தது கூறியது.)

(இ—ரை.) எம் காதலர் உவக்காண் செல்வார்—முன்புறம் காதலர் உதோ உந்த இடத்திற்குத்தான் செல்வார்; இவக்காண் என் மேனி பசப்பு ஊர்வது—அதற்குள் இங்கே என் உடம்பெல்லாம் பசலை படர்ந்துவிடும்.

இங்ஙனம் ஒரு சில அடித்தொலைவே நம் காதலர் நடந்து செல்லினும், அடுத்ததுகாட்டும் பளிங்குபோலப் பளிச்சென்று பசலைபடரும் என் மேனி, அவர் பல நாள்வழி அல்லது நாழிகை வழித் தொலைவிலேயே இருப்பினும், ஆற்றியிருக்குமோ என்றவாறும். 'உவ்', 'இவ' சுட்டிடைச் சொற்கள். 'காண்' முன்னிலையசை 'உவ' என்றது ஒருசில அடித்தொலைவே யுள்ள முன்னிலையிடத்தை. இம்முன்மைச் சுட்டு இற்றைத் தமிழகத்தில் வழக்கிறந்தது.

௬௬அ௬. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

(இதுவுமது)

((இ—ரை.) விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல்—விளக்கின் அவிவு பார்த்து உடனேவரக் காத்திருக்கும் இருளைப்போலவே; கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு—தலைவரின் தழுவல் நெகிழ்வு பார்த்து உடனேவரக் காத்திருக்கும் இப்பசலை.

காதலர் உடனிருந்து தழுவல் நெகிழினும் உடனே வரும் பசலை அவர் பிரிந்து தொலைவிற்குச் சென்றபின் வராதிருக்குமோ என்ற வாரும். பார்த்தல் பார்த்து வருதல். கொண்கன் தொண்டவன் கொள்—கொண்கு—கொண்கன். ஏகாரம் பிரிநிலை.

௬௬அ௭. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

(இதுவுமது)

(இ—ரை.) புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன்—முன் பொருநாள் காதலரைத் தழுவிக் கிடந்த நான் அறியாது ஒரு சிறிது தள்ளிப்படுத்தேன்; அவ்வளவில் பசப்பு அள்ளிக் கொள்வு அற்று—அங்ஙனம் படுத்த அளவில் அள்ளிக்கொள்ளும் அளவாகப் பசலை வந்து திரண்டுவிட்டது.

அப்புடை பெயர்ச்சிக்கே அவ்வாறான பசலை, இப்பிரிவின் கண், எவ்வாறாகுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ என்பதாம். ஏகாரம் தேற்றம்.

௬௬அ௮. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

(நீயிங்ஙனம் பசத்தல் கூடாதென்ற தோழியொடு புலந்து சொல்லியது.)

(இ—ரை.) இவள் பசந்தாள் என்பது அல்லால்—இவள் காதலர் வரும்வரை ஆற்றியிராது பசலை கொண்டாள் என்று என்னைப் பழிப்பதல்லது; இவளை அவர் துறந்தார் என்பார் இல்—இவளை அவர் கைவிட்டுவிட்டுப் போய்விட்டாரென்று அவரைக் குறை கூறுவார் இவ்வுலகத்து ஒருவருமில்லை.

தன்னையே கடிதல் பற்றிப் புலக்கின்றுளாதலின், 'என்பார்' என அயன்மைப்படுத்திக் கூறினுள்.

கக்அகூ. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்.

(இதுவுமது)

(இ—ரை.) நயப்பித்தார் நல் நிலையர் ஆவர் எனின்—இப்பிரி விற்கு யான் உடம்படும்வகை பசப்பியவர் இன்று உன் கருத்துப்படி குற்றமற்றவராயின்; என்மேனி பட்ட ஆங்கு பசக்க— என் மேனி இன்று பசந்தபடியே பசக்க.

இப்பிரிவின் கொடுமையை இதற்குமுன் பட்டறியாத என்னை இதற்குடன்படுத்திப் பிரிந்தவர், எவ்வகையிலுங் குற்றமற்றவரென்று நாட்டுவதுதானே உன் விருப்பம்! அங்ஙனமாயின், என் மேனியை யும் பசலையையுங் கவனிப்பானேன்? அவை எங்ஙனமிருந்தால் தானென்ன என்பது பட நின்றமையின் 'மன்' ஒழியிசை பற்றி வந்தது

கக்கூ0. பசப்பெனப் போர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றுரெனின்.

(தலைமகளை யாற்றுவித்தற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற் பழித்தவிடத்து அவள் இயற்பட மொழிந்தது.)

(இ—ரை.) நயப்பித்தார் நல்காமை தூற்றுர் எனின்—பிரி விற்கு உடம்படச்செய்த காதலர் இன்றுவந்து கூடாமையை நட் டோர் பழியாராயின்; பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே—பசலை யடைந்தாள் என்று வேற்றுமைப்படச் சொல்லப்படாது, பசலையே யானுள் என்று ஒற்றுமைப்படச் சொல்லப்பெறுதலும் நல்லதேயாம்.

பசலையடைதல் மேனிமட்டும் பசப்பு நிறம்பெறுதல். பசலை யாதல் உடம்பு முழுவதும் பசப்பாக மாறுதல். நட்டோர் என்பது அவாய்நிலையரல் வந்தது; இகழ்ச்சிக் குறிப்பு. ஏகாரம் தேற்றம்.

அதி. கூ0—தனிப்படர் மிகுதி

அஃதாவது, பிரிவின்கண் தனித்திருந்து நினைதல் மிகுதியைத் தலை மகள் தன்கண்ணதேயாகக் கூறுதல். தலைமகன் அறமும் பொரு ளும் நோக்கிப் பிரிதலின், அவன்கண் அஃது இல்லாதாயிற்று. இது பசப்புற்று வருந்தியவட் குரியதாதலின் பசப்புறுபருவரலின் பின் வைக்கப்பட்டது.

ககக்கக. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்ருரே
காமத்துக் காழில் கனி.

(காதலரும் ஆற்ருராய்க் கடிதின் வருவர். நீ அவரொடு பேரின்பந் துய்ப்பாய் என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர்—தம்மாற் காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர்; பெற்ருரே காமத்துக் காழ் இல் கனி—பெற்ருரன்ருே கொட்டையில்லா நறுமண இன் சுவைச் செழுஞ்சதைக் காமவின்பக்கனி நுகர்ச்சி!

பெறுதலருமை நோக்கிப் 'பெற்றவர்' என்றும், பேரின்பமாதல் பற்றிக் 'காழில் கனி' என்றும், கூறினுள். நம் காதலர் பிரிந்துபோன தொடு திரும்பிவராமலுமிருத்தலின், யாம் அக்கனியைப் பெற்றிலேம் என்பதாம். காமம் என்பதை மரத்தின் பெயராகக் கொள்ளின், அத்துச்சாரியை வேற்றுமை வழியில் வந்ததேயாம். ஏகாரம் தேற்றம்.

ககக்உ. வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி.

(இதுவுமது)

(இ—ரை.) வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி—அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்துபோன கணவர் தம்மையின்றியமையாத மகளிர்க்கு, காலமறிந்து வந்து இன்புறுத்தும் பேரன்புக் கூட்டம்; வாழ்வார்க்கு வானம் பயந்த அற்று—தன்னையே நோக்கி வாழும் மாந்தருக்கு முகில் காலம் அறிந்து பெருமழை பொழிந்தாற் போலும்.

நம் காதலர் நம்மீது அன்புகொள்ளாமையால் அவர் வந்து கூடப்பெறுது, மழையின்றி வாடும் மாந்தர் போல வாடுகின்ருேம் என்பதாம். 'ஆல்' அசைநிலை.

ககக்ஙு. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு.

(இதுவுமது)

(இ—ரை.) வாழுநம் என்னும் செருக்கு—நம் காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து விரைந்து வருவர், அதன்பின் இன்புற்று வாழ்வோ மென்னும் மிடுக்கு; வீழுநர் வீழப்படுவார்க்கே அமையும்—தாம் காதலிக்குங் கணவராற் காதலிக்கப் பெறும் மகளிர்க்கே அமைவதாம்.

நாம் அவராற் காதலிக்கப் பெருமையின் நமக்கு அஃதில்லை யென்பதாம். ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

கஙகூஏ வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

(காதலரை யியற்பழித்த லஞ்சி அவரது அருளின்மையை மறைத்த நீ தெய்வக் கற்பினை யாதலின், கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப்படுவாய் என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) வீழப்படுவார்—கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுவாரும்; தாம் வீழ்வார் வீழப்படார் எனின் கெழீஇயிலர்-தாம் காதலிக்குங் கணவராற் காதலிக்கப்படாராயின் தீவினையாட்டியரே.

தீவினையேற்கு அந்நன்குமதிப்பாற் பயனில்லை யென்பதாம். கெழீஇயின்மை நல்வினையின்மை. 'கெழீஇ' இன்னிசையளபெடை 'படாஅர்' இசைநிறை யளபெடை சிறப்பும்மை தொக்கது.

கஙகூநி. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை

(அவர்மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந்தாற்றினாய் என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) நாம் காதல் கொண்டார்—நம்மாற் காதல் செய்யப் பட்டவர்; தாம் காதல் கொள்ளாக்கடை—அவ்வாறே தாமும் நம்மிடத்துக் காதல் செய்யாவிடத்து; நமக்கு எவன் செய்ப—நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர்?

அக்காதலால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம். எச்ச வும்மை தொக்கது. 'ஓ' அசைநிலை.

கஙகூசூ. ஒருதலையா னின்னுது காமங்காப் போல
இருதலை யானு மினிது.

(இதுவுமது)

(இ—ரை.) காமம் ஒருதலையான் இன்னாது—ஆடவன் பெண்டு என்னும் இருபாலுள் காதல் ஒருதலைக்கண் மட்டுமிருப்பின் அது துன்பந்தருவதேயாம்; காப்போல இருதலையானும் இனிது—காவூர்ட்டுச் சுமைபோலே இருதலையும் அது ஒத்திருந்த விடத்தே இன்பந்தருவதாம்.

என்னிடத்துள்ள காதல் அவரிடத்து மிருப்பின் இவ்வாறு துன் புறேன் என்பதாம். மூன்றும் வேற்றுமை ஆனுருபுகள் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது வேற்றுமை மயக்கம்.

ககூஎ. பருவரலும் பைதலுங் காணுன்கொல் காம
னெருவர்க ணின்றெழுகு வான்.

(இதுவுமது)

(இ—ரை.) காமன் ஒருவர்கண் நின்று ஒழுகுவான்—காமத தேவன் காமவின்பம் நுகர்தற்குரிய இருபாலாரிடத்தும் ஒப்பதில் லாது, பெண்பாலாரிடத்து மட்டும் நின்று காதலி யுய்ப்பண்ணு வான்; பருவரலும் பைதலும் காணுன் கொல்—அவர் பசலையுற்றும் படர்மிகுந்தும் துன்புறுதலையும் மனம் நோதலையும் கண்டறியானே?

எல்லாரிடத்தும் ஒப்பநின்று ஒழுகவேண்டியவன் நடுநிலை திறம்பியும், காம வீனைக்குத் தலைமை பூண்டவன் காம நுகர்ச்சிக் குரிய இருவரிடத்து மன்றி ஒருவரிடத்து மட்டும் காதலியுண்டுபண் ணிக் கடமை தவறியும் வினையறியாதும், ஆடவரை விட்டுவிட்டு மெல்லியலாரையே இரக்கமின்றி வருத்தியும், கொடுமை செய்து திரிபவனும் ஒரு தெய்வமோ? மாந்தரும் தெய்வமும் ஒரு சேரக் கைவிட்டபின் நான் உய்யுமாறென்னே யென்பதாம்.

ககூஅ. வீழ்வாரி னின்சொற் பெருஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணு ரில்.

(தலைமகனிடத்தினின்று தூதுவராமைபற்றித் தலைமகள் வருந் தியது.)

(இ—ரை) வீழ்வாரின் இன்சொல் பெருது வாழ்வாரின்—தம்மால் விரும்பப்படும் காதலரிடத்து நின்றும் ஓரின் சொல்லளவும் வரப்பெருதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல; வன்கண ணர் உலகத்து இல்—வன்னெஞ்சர் இவ்வுலகத்தில் வேறெருவரு மில்லை. தலைவியிடத்தினின்று வருந் தூதெல்லாம் இக்காலத் தஞ்சல் போலப் பொதுவாக இன்பம் பயக்குமாதலின் 'இன்சொல்' என்றும், பிரிவாற்றுதலோடு தூநின்மை யாற்றுதலுஞ் செய்தலால் 'வாழ்வாரின் வன்கணரில்' என்றுங் கூறினள். 'பெரு அ' இசைநிறை யளபெடை. இழிவு சிறப்பும்மை தொக்கது.

ககூஉ. நசைஇயார் நல்கா ரெனினு மவராட்
டிசையு மினிய செவிக்கு.

(இதுவுமது)

(இ—ரை.) நசைஇயார் நல்கார் எனினும்—என்னுல் விரும்பப் பட்ட காதலர் என்பால் அன்பில்லாதவரே யாயினும்; அவர் மாட்டு இசையும் செவிக்கு இனிய—அவரிடத்தினின்று வரும் எத்தகைச் செய்திகளும் என் செவிக்கு இன்பந்தருவனவாம்.

இழிவு சிறப்பும்மை, அவர் அண்மையில் வருகின்றிலர் என்னும் செய்தியாயினும் என்பது படநின்றது, அதுவும் பெற்றிலேன் என்பது கருத்து. 'ந சை இ' சொல்லிசையளபெடை. 'இசை' ஆகுபெயர்.

நஉ00. உருஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செருஅஅய் வாழிய நெஞ்சு.

(தலைமகன் தூதுவரப்பெறுது தான் தூதுவிடக் கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.)

(இ—ரை.) உரு அர்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு—உன்னோடு உறவுகொள்ளாதார்க்கு நீ உற்ற நோயைச் சொல்லக்கருதும் நெஞ்சே!; கடலைச்செருய்—அவ்வருஞ் செயலை விட்டுவிட்டு உனக்குத் துயர் விளைக்குங் கடலைத் தூர்க்க முயல்வாயாக. அது உனக்கு எளிது; வாழிய—நீ நீடுவாழ்க!

நீ சொல்லக் கருதிய செய்தி நீள்பெரு நோயாதலானும், அதைக் கேட்பார் உறவிலராதலானும் உன்தூது செயற்கரியதும் பயனில் முயற்சியுமாகும். ஆதலால், அதை விட்டுவிட்டுப் பயனுள்ள வேறு வினை ஏதேனும் மேற்கொள்க என்பதாம். நீடுவாழும் நிலைமையில்லாததாகக் கருதி 'வாழிய' என வாழ்த்தினுள். 'உருஅர்' 'செருஅஅய்' இசைநிறை யளபெடைகள்.

ஆசிரியர் வாழ்நாள் முழுதும் பிரியாத ஒரு மனைவி வாழ்க்கையையே இங்கெடுத்துக் கூறுவதாலும், கற்பியலை ஊடலுவகையில் முடிப்பதாலும், இவ்வதிகாரத்திற் கணவனை அன்பிலியாகக் கூறியிருப்பதெல்லாம், பெண்பாவின் மென்மையும் மடமையும் பற்றிய உயர்வுநவிற்சியே என அறிந்துகொள்க.

அதி. கஉக—நினைந்தவர் புலம்பல்

அஃதாவது, முன் கூடிப்பெற்ற இன்பத்தால் ஒருவரையொருவர் நினைந்து தலைமகள் தன் இல்லத்திலும் தலைமகன் தொலைவான

அயலிடத்திலும் தனித்தனி கூற்று நிகழ்த்துதல். இஃது இருவர்க்கும் பொதுவாதலாற் பலர்பாலாற் கூறப்பட்டது; தலைமகள் தன் கண்ணதாகக்கருதிய படர்மிகுதியின் தொடர்ச்சியாதலின், தனிப்படர் மிகுதியின் பின் வைக்கப்பட்டது.

கூ௦க. உள்ளினுங் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

(தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்—முன்பு கூடி நுகர்ந்த இன்பத்தைப் பின்பு பிரிந்தவிடத்து நினைத்தாலும், அன்றே பெற்றுற்போல நீங்காத பெருமகிழ்ச்சியைத் தருதலால்; கள்ளினும் காமம் இனிது—உண்ட விடத்தல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினுங் காமம் இன்பந்தருவதாயுள்ளது.

தலைமகனை மறவாமை கூறியவாறு. முன்பு கண்டார் மகிழ் செய்யும் (குறள். ௧௦௯௦) என்ற காமம் இங்குக் கருதினாலும் மகிழ் செய்யும் என்று கூறப்பட்டது.

கூ௦௨. எனைத்தொன் றினிதேகாண் காந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

(இதுவுமது)

(இ—ரை.) தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல்—தம்மாற்காதலிக்கப்படுவாரைப் பிரிவின்கண் நினைத்தால் அந்நினைத்தவர்க்குப் பிரிவினால் வரக்கூடிய துன்பமொன்றும் இல்லாமற் போய்விடுகின்றது; காமம் எனைத்து இனிது ஒன்றே காண்—அதனால் காமம் எத்துணையேனும் இன்பந் தருவதொன்றே காண்.

புணர்ந்தவிடத்தும் பிரிந்தவிடத்தும் ஒப்ப வினிதென்பான்—எனைத்து மினிதென்றான், தான் ஆற்றிய வகை கூறியவாறு. ஏகாரம் தேற்றம். காண் முன்னிலை யசை.

கூ௦௩. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.

(தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) தும்மல் சினைப்பது போன்று கெடும்—எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றி அடங்கி விடுகின்றது; நினைப்

பவர் போன்று நினையார் கொல்—ஆதலால், காதலர் என்னை நினைப் பவர் போலிருந்து நினையாது விட்டுவிடுகின்றார் போலும்!

வேற்றிடத்திலுள்ள அன்புகெழுமிய உறவினரால் நினைக்கப் பட்டவர்க்குத் தும்மலெழு மென்பது, பொதுவான உலகியற் கொள்கை. கணவன் மனைவியாரினுஞ் சிறந்த வுறவின்மையால், வினை பற்றிப் பிரிந்து வேற்று நாடுசென்ற கணவன் தன் மனைவியை நினைப்பது இயல்பே. ஆயின், இடைவிடாது வினை கெடுமாதலின், வினை முடிந்த பின்னரே மனைவியை நினைத்து மீளுவதாகக் கூறுவது புலனெறி வழக்கம். அதற்கேற்ப, தலைமகள் தனக்குத் தும்மல் தோன்றி யடங்கியதினின்று, தலைமகன் மேற்கொண்ட வினை முடி வது போன்று தோன்றி முடியாமையை யுணர்ந்தாளாகக் கொள்ளப் பெறும். சினைத்தல்—அரும்புதல். 'கொல்' ஐயம்.

கூ0ச். யாழு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.

(இதுவுமது)

(இ—ரை.) எம் நெஞ்சத்து அவர் ஓஒ உளரே—எம்முடைய உள்ளத்தில் அவர் எப்போதும் இருக்கின்றாரே!; அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல்—அதுபோல யாமும் அவர் உள்ளத்தில் இருக் கின்றேமோ, இல்லேமோ? தெரியவில்லையே!

யாம் அவர் உள்ளத்திலிருந்தும் வினை முடியாமையால் வர வில்லையோ, அல்லது அது முடிந்தும் யாம் அவர் உள்ளத்தில் இல் லாமையால் வரவில்லையோ, என்பது கருத்து. ஓகாரம் ஈண்டுச் சிறப்புப் பற்றி இடைவிடாமை யுணர்த்தி நின்றது. இனி, வியப்புக் குறிப்பினது என்றுமாம். 'ஓஒ' இசைநிறை யளபெடை. 'கொல்' ஐயம். ஏகாரம் தேற்றம்.

கூ0ஞ். தங்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர்கொ
லெங்நெஞ்சத் தோவா வரல்.

(இதுவுமது.)

(இ—ரை.) தம் நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார்—தம் முடைய உள்ளத்தின்கண் எம்மைச் செல்லவிடாது அதைக் காவல் செய்துகொண்ட காதலர்; எம் நெஞ்சத்து ஓவாவரல் நாணுர் கொல்—தாம் மட்டும் எம்முடைய உள்ளத்தின்கண் இடைவிடாது வருதற்கு நாணுரோ?

ஒருவரைத் தம்மிடத்திற்கு ஒருபோதும் வரவிடாது தடுத்து விட்டுத் தாம் மட்டும் அவரிடத்திற்கு ஓயாது செல்லுதல், நாணுடையார் செயலன்மையின் 'நாணுர்கொல்' என்ருள். 'கடி' காவலுணர்த்தும் உரிச்சொல; இனி, விலக்குப் பொருளது எனினுமாம். 'கொல்' ஐயம்.

நஉ0ஈ. மற்றியா னென்னுளேன் மன்னே வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

(அவரொடு கூடி துகர்ந்தகாலே யின்பத்தை நினைந்து இறந்து படுநிலே யடைகின்ருய். அதை மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) யான் அவரோடு உற்ற நாள் உள்ள உளேன்—யான் அவரோடு கூடிய காலே யின்பத்தை இடைவிடாது நினைத்தலாலேயே இன்று இறந்து படாதிருக்கின்றேன்; மற்று யான் என் உளேன்—வேறு எவ்வகையில் நான் உயிர்வாழ முடியும்?

நான் உயிர்வாழ்தற்குக் காதலர் தூது வருதல், நம் தூது அவரிடம் சேர்தல் முதலிய பிறவழிகளும் உளவேனும், யான் அவை பெற்றிலேன் என்பதுபட நின்றமையின் 'மன்' ஒழியிசைக்கண் வந்தது என்பர் பரிமேலழகர். 'நாள்' ஆகுபொருள்.

நஉ0எ. மறப்பி னெவனுவன் மற்கோன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.

(இதுவுமது)

(இ—ரை.) மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும்—அக் கூட்டக்காலே யின்பத்தை ஒருபோதும் மறத்தலறியேனுய் இன்று அதை நினைக்கும்போது கூட, பிரிவுத் துன்பம் என் உள்ளத்தைச் சுடுகின்றதே! மறப்பின் எவன் ஆவன்—இனி, அதை அடியோடு மறந்துவிடின் நான் என்ன நிலேமையடைவேனே! இறைவன்தான் அறிவான்.

மறத்தற்கும் உள்ளுதற்கும் செயப்படுபொருள் அதிகாரத்தாலும் மேற்குறளினின்றும் வந்தது. 'மன்' நான் உயிர்வாழ வேறெருவழியும் பெற்றிலேன் என்பது பட நின்றமையின் ஒழியிசைக்கண் வந்தது. 'கொல்' அசைநிலே.

கஉ0அ. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு.

(இப்பிரிவுத் துன்பமறிந்து வந்து காதலர் உனக்குச் சிறந்த இன்பஞ் செய்வர் என்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) எனைத்து நினைப்பினும் காயார்—யான் தம்மை எவ்வளவு நினைத்தாலும் அது பற்றிச் சினங்கொள்ளார்; அனைத்து அன்றே காதலர் செய்யும் சிறப்பு—அவ்வளவு பெரிதன்றே காதலர் எனக்குச் செய்யுஞ் சிறந்த இன்பம்!

தனக்கு அற்றை நிலையில் அந்நினைப்பினும் சிறந்த இன்பமின்மையின் அதனைச் 'சிறப்பு' என்றுள்,காயாமை அந்நினைவிற் குடம்பட்டு நெஞ்சின்கண் நிற்றல். தோழி கூற்றைக் குறிப்பாற் பழித்துப் பகடிசெய்தவர்று. 'காதலர் நம் மாட்டருள்' என்றும், 'செய்யுங் குணம்' என்றும் ஓதும் பாடவேறுபாடுகள் சிறந்தன வல்ல.

கஉ0ஆ. விளியுமென் னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து.

(தலைமகன் தூதுவரக் காணாது வருந்துந் தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து—முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவாரின் அன்பின்மையை மிகவும் நினைந்து; என் இன்னுயிர் விளியும்—எனது இனிய வுயிர் இன்று என் உடம்பை விட்டுப் பெயர்கின்றது.

காதலர் தப்பாது வருவர். ஆதலால் வருந்தாதேகொள் என்று வற்புறுத்திய தோழிக்கு, என்னுயிர் கழிகின்றது பிரிவினுலன்று; அவரன்பின்மை பற்றியே யென்று எதிரழிந்து கூறியவாறு. 'அளியின்மை' பிரிதலும் பிரிந்துவரவு நீடலும் தூதுவிடாமையுமாம்.

கஉ0இ. விடாஅது சென்ருரைக் கண்ணினுற் காணப்
படாஅதி வாழி மதி.

வன்புறை யெதிரழிந்த தலைமகளின் காமமிக்க கழிபடர் கிளவி.

(இ—ரை.) மதி—நிலாவே! ; விடாது சென்ருரைக் கண்ணினுல் காணப் படாதி—என் நெஞ்சில் இடைவிடாதிருந்தே விட்டுப்

போன என்காதலரை நான் என் கண்ணளவாலாயினும் தலைக் கூடும் வகை, நீ மேற்றிசையில் மறையா திருப்பாயாக; வாழி— நீ (அங்ஙனஞ் செய்யின்) நீடு வாழ்க!

கண்ணளவால் தலைக்கூடுதலாவது, மதி இருவராலும் நோக்கப் படும்போது இருவர் கண்ணும் அதன்கண் சேர்தல். முதலொடு சினைக் கொற்றுமை யுண்மையால் 'சென்ருரைக் கண்ணினுற் காண' என்றும், குறையிரக்கின்ருளாதலின் 'வாழி' என்றும், கூறினுள். 'விடா அது,' 'படா அதி' இசைநிறை யளபெடைகள்.

இனிப் படாது என்பது பாடமாயின் காதலரைக் கனவிற் 'கண் ணுற் காணுமாறு மதிபடுகின்றதில்லையென, அதனுல் தூக்கம்பெறுது வருந்தும் தலைமகள் கூற்ருகக் கொள்ளப்படும்.

அதி. கஉஉ—கனவுநிலை யுரைத்தல்

அஃதாவது, தலைமகள் தலைமகனைப்பற்றித் தான் கண்ட கனவுகளைத் தோழிக்குச் சொல்லுதல். கனவு பொதுவாக நனவின் கண் நிகழும் நிகழ்வுமிகுதியாற் காண்பதாகலின், இது நினைந்தவர் புலம்பலின் பின் வைக்கப்பட்டது.

கஉகக காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து

(தலைமகனிடமிருந்து தூதுவரக் கண்டாள் சொல்லியது.)

(இ—ரை.) காதலர் தூதொடு வந்த கனவினுக்கு—யான் வருந்துதலறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதைக் கொண்டு வந்து காட்டிய கனவிற்கு; விருந்து யாது செய்வேன்—விருந்தாக நான் எதனைச் செய்வேன்! விருந்து என்னுஞ்சொல் விருந்தாளரையும் விருந்துணவையுங் குறிக்கும். இங்கு விருந்தென்றது விருந்திற்குப் படைக்குஞ் சிறப்புணவை. கனவிற்குப் படைப்பதொன்றின்மை யின், 'யாது செய்வேன்' என்ருள். 'கொல்' அசைநிலை.

கஉகஉ. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

(தூதுவிடக் கருதியாள் சொல்லியது.)

(இ—ரை.) கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின்—தூக்கம் பெறுது வருந்துகின்ற என் கயல் மீன்பேரலும் மையுண்ட கண்

கள் யான் வேண்டிக்கொண்டால் தூங்குமாயின்: கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன்—காதலரைக் கனவிற் கண்டு நான் பிரிவாற்றக் கூடிய தன்மையைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் எடுத்துச் சொல்வேன்.

தூதரிடம் சொல்லக் கூடாத மருமச் செய்திகள் உட்பட, எல்லாவற்றையும் பறைசாற்றினுற்போலத் தெளியச் சொல்வேன் என்னும் கருத்தினுற் 'சாற்றுவேன்' என்ருள் என் கண்களுந் தூங்கா சாற்றலுங் கூடாது என்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசை. முன்னுங் கண்ட பட்டறிவாற் சொன்னமையின், கனவுநிலையுரைத்த தாயிற்று. 'கையுண்கண்' என்ருள் தன் கணவனைடு கூடியிருந்த காலத்து நலம் அழிந்தமைக்கிரங்கி. கயல் என்பது சேல்கெண்டை. 'உயல்' இறந்து படாமை

கஉகந. நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலி னுண்டென் னுயிர்.

(ஆற்ருளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவேன் என்பது படச் சொல்லியது.)

(இ—ரை.) நனவினுன் நல்காதவரை — நன்வின்கண் வந்து கூடி யின்பந்தராதவரை கனவினுற்காண்டலின் என் உயிர் உண்டு—யான் கனவின்கட் கண்ட காட்சியால் என் உயிர் தழைக்கின்றது.

அக்காட்சியால் யான் ஆற்றியுள்ளேன். நீ கவல வேண்டிய தில்லை என்பதாம். மூன்றும் வேற்றுமைப் பொருளில் வந்து மயங்கின.

கஉகச. கனவினு னுண்டாகுங் காம நனவினு
" னல்காரை நாடித் தரற்கு.

(இதுவுமது)

(இ—ரை.) நனவினுன் நல்காரை நாடித் தரற்கு—நனவின் கண் வந்து கூடி யின்பந்தராதவரை இருக்கு மிடந்தேடிச் சென்று தூதர் அழைத்து வரற்கு; காமம் கனவினுன் உண்டாகும்—ஏதுவான இன்ப நிகழ்ச்சிகள் கனவின்கண் நிகழ்கின்றன.

'காமம்' ஆகுபெயர்.

கூகடு. நனவினுற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

(இதுவுமது)

(இ—ரை.) நனவினுற் கண்டதும் ஆங்கே (இனிது)—முன்பு நனவின்கண் காதலரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் அப்பொழுதே இனிதாயிருந்தது; கனவும் தான் கண்டபொழுதே இனிது—இன்று கனவின்கண் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் அக்கண்ட பொழுதே இனிதாயிருந்தது. ஆதலால் இரண்டும் எனக்கு ஒத்தனவே.

முன்னும் யான் பெற்ற இன்பம் இவ்வளவே. அதை இன்னும் இங்ஙனமே பெற்று ஆற்றுவேன் என்பதாம். 'கண்டதூஉம்' இன்னிசையளபெடை. ஏகாரங்கள் பிரிநிலை. 'கனவு' ஆகுபொருளி. 'இனிது' முன்னுங் கூட்டப்பட்டது. மூன்றும் வேற்றுமை ஆனுருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் மயங்கிற்று.

கூகஈ. நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன்.

(இதுவுமது)

(இ—ரை.) நனவு என ஒன்று இல்லையாயின்—நனவென்று சொல்லப்படுகின்ற ஒரு காலவேறுபாடு இல்லையாயின்; கனவினுற் காதலர் நீங்கலர்—கனவின்கண் வந்து கூடுங் காதலர் என்னைவிட்டு ஒருபோதும் பிரியார்.

இடைவிடாது கனவு காணலாமாதலின் 'நீங்கார்' என்றுள். 'ஒன்று' என்பது வேறுபாடு விளக்கி நின்றது. 'மன்' அந்நிலைமையில்லை யென்பதுபட நிற்றலின் ஒழியிசை.

கூகஎ. நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது.

(விழித்தபோது காதலரைக் காணாது கனவிற் கூட்டநினைந்து ஆற்றுளாய்ச் சொல்லியது;)

(இ—ரை.) நனவினுன் நல்காக் கொடியார்—பிரிவுக் காலத்தில் ஒருபோதும் நனவின்கண் வந்து கூடி இன்பந்தராத கொடியவர்; கனவினுன் எம்மைப் பீழிப்பது என்—கனவின்கண் மட்டும் வந்து நம்மை வருத்துவது ஏன்?

பிரிதலும் பிரிந்தபின் விரைந்து வராமையும் நோக்கிக் 'கொடியார்' என்றும், கனவில் உடனிருந்து இன்புறுத்திக்கொண்டிருக்கும் போதே விழிப்பால் திடுமென மறைதல் பெருந்துன்பந் தருதலின் 'பீழிப்பது' என்றும், கூறினாள். இங்கும் மூன்றும் வேற்றுமை யுருபுகள் இடப்பொருளனவே.

கஉகஅ. துஞ்சுங்காற் ரோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

(தானுற்றுதற் பொருட்டுத் தலைமகனே யியற்பழித்த தோழிக்கு இயற்படமொழிந்தது.)

(இ—ரை.) துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி—என் உள்ளத்தில் இடைவிடா துறைகின்ற காதலர், யான் தூங்கும் பொழுது என் தோள்மேலமர்ந்திருந்து; விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தர் ஆவர்—பின்பு விழிச்சும்போது விரைந்து பழையபடி என் உள்ளத்திற் புகுவர்.

நாள்தோறும் கனவில் வந்து கூடுபவரை நீங்கினரென்று பழித்தல் தகாது என்பதாம். 'தோள்மேலராகி' இடக்கரடக்கல். விழிப்பின் திடுமைபற்றி 'விரைந்து' என்றாள்.

கஉகக. நனவினு னல்காரை நோவர் கனவினுற்
காதலர்க் காணு தவர்.

(இதுவுமது)

(இ—ரை.) கனவினுற் காதலர்க் காணுதவர்—தமக்கொரு காதலரின்மையால் அவரைக் கனவிற் கண்டறியாத மகளிர்; நனவினுன் நல்காரை நோவர்—நனவின்கண் தாம் அறியவந்து கூடியின்பந்தராத நம் காதலரை அன்பிலரென்று பழித்து நொந்து கொள்வர்.

இயற்பழித்தது பொருது புலக்கின்ரு ளாதலின், தோழியை அயன்மை தோன்றக் கூறினாள். இங்கும் மூன்றும் வேற்றுமை யுருபுகள் மேற்கூறியனவே.

கஉஉ0. நனவினு னங்நீத்தா ரென்பர் கனவினுற்
காணுர்கொ லிவ்வூ ரவர்.

(இதுவுமது)

(இ—ரை.) இவ்வூரவர் நனவினுல் நந்நீத்தார் என்பர்—இவ் வூர் மகளிர் நனவின்கண நம் காதலர் நம்மைக் கைவிட்டாரென்று கொடுமை கூறுவர்; கனவினுற் காணுர்—ஆனுல், அவர் கனவின் கண் தப்பாது வருதலே என்போலக் கண்டறியார்.

தன்னெடு தோழிக்குப் பிறசெய்திகளிற் கருத்து வேற்றுமை யின்றேனும், அவள் தலேமகணேப் பழித்தலேச் சற்றும் பொருளாத லின், 'இவ்வூரவர்' என அயன்மைப்படுத்திக் கூறினுள். 'கொல்' அசைநிலே. மூன்றனுருபுகள் முற்கூறியனவே.

அதி. உகக—பொழுதுகண்டிரங்கல்

அஃதாவது, மாலேப் பொழுது வந்தவிடத்து அது துணேயில்லா மகளிர்க்குத் துன்பந் தருவது கண்டு வருந்துதல். மாலே என்பது இரவின் முதறபத்து நாழிகை, கணவரைப் பிரிந்த மகளிர்க்குப் பிரிவுத் துன்பம் இருவேளேக்கும் பொதுவேனும், பகலிற்போற் பல பொருள்களேக் கண்டும் பல வினேகளேச் செய்தும் பலரொடு பேசியும் காலம்போக்கும் வாய்ப்பு இரவிலின்மையானும், மக்களேப்போன்றே விலங்குபறவைகளும் அடங்கித் துணேயொடு கண்படை கொள்ளுங் காட்சி துன்பந்தருதலானும், ஆயர் புல்லாங்குழலிசை அத்துன் பத்தை மிகுத்தலானும், மாலேப் பொழுது வருந்துவதற்கிடமாயிற்று. காதலரைப் பிரிந்த மகளிர்க்குப் பொதுவாக இரவில் தூக்கம் வராமையானும், அரிதில் வருந் தூக்கத்திற் காணுங்கனவும் மெய் யான இன்பந்தராமையானும், அப்போலியின்பக் கனவும் இடை விழிப்பால் துன்பத்தை மிகுத்தலானும், கனவுநிலேயால் நீண்ட காலம் பிரிவாற்றியிருக்க இயலாமையானும், அவற்றின் விளேவான பொழுதுகண்டிரங்கல் கனவுநிலேயுரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

உஉக. மாலேயோ வல்லே மணந்தா ருயிருண்ணும்
வேலேநீ வாழி பொழுது.

(பொழுதொடு புலந்தது)

(இ—ரை.) பொழுது — மாலேப்பொழுதே!; நீ மாலேயோ அல்லே—நீ முன்னுட்களில் வந்த மாலேப்பொழுதே யல்லே; மணந் தார் உயிர் உண்ணும் வேலே—காதலரை மணந்து பிரிந்த மகளிரைக் கொல்லும் இறுதிக் காலமாகவே யிருக்கின்றுய், இந்நாள்.

முன்னுள் காதலரொடு கூடியிருந்தநாள். தன்னைப் போற் காதலரைப் பிரிந்த பிறரையும் உளப்படுத்தி 'மணந்தார்' என்றாள். 'வாழி' யென்பது எதிர்மறைக் குறிப்பு. வேலை எல்லை; இங்கு வாழ்நாளெல்லையைக் குறித்தது. வேலையென்பதற்கு வேலாயிருந்தாய் என்றுரைப்பர் மணக்குடவ பரிதி பரிப்பெருமாளர்.

கூஉஉ. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை.

(தன் செயலறவை அதன்மேலேற்றிச் சொல்லியது)

(இ—ரை.) மருள்மாலை—மயங்கும் மாலையே!; புன்கண்ணை—நீயும் என்னைப்போலத் துன்பமுடையையாயிருக்கின்றாய்: நின் துணை எம் கேள்போல் வன்கண்ணதோ—உன்னுடைய துணையும் என்னுடைய துணைபோல; அன்பற்றதோ? சொல்வாயாக

மருளுதல் அல்லது மயங்குதல் பகலும் இரவும் தம்முட்கலத்தல். அவை கலங்குதற் பொருளும் உணர்த்தும். புன்கண் அழகின்மையும் துன்பமும். மாலைப் பொழுது ஒளியின்றிப் பொலிவிழத்தலாலும், மயங்குதற் பொருட்சொல்லைப் பெயராகக கொண்டிருப்பதாலும், தலைமகள் தன் செயலற்ற நிலையை அதன்மேலும் ஏற்றிக் கூறினாள். எமக்குத் துன்பஞ்செய்தாய்; அதனால், நீயுங் கலங்கிப் பொலிவிழந்தாய் என்னுங் குறிப்பால் 'வாழி' என்றாள்.

கூஉஉ. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

(ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) பனி அரும்பிப் பைதல் கொள் மாலை—காதலரோடு கூடியிருந்த நாளெல்லாம் குளிர்ச்சி தோன்றிப் பசந்துவந்த மாலை, துனி அரும்பித் துன்பம் வளர வரும்—இந்நாளில் எனக்கு உயிர் வாழ்க்கையில் வெறுப்புத்தோன்றித் துன்பம் மேன்மேலும் வளருமாறு வருகின்றது,

'பனியரும்பிப் பைதல்கொள்' என்னுந் தொடர், நடுக்கங் கொண்டு துன்பப்பட என்றெரு குறிப்புப் பொருளுந் தோன்றநின்றது.

கூஉஉ. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

(இதுவுமது)

(இ—ரை.) மாலை—காதலர் உடனிருந்த நாளெல்லாம் என் உயிர் தளிர்ப்புற வந்தமாலை, காதலர் இல்வழி—அவர் நீங்கிய விடத்து; கொலைக்களத்து ஏதிலர் போல வரும்—கொலைக்களத்திற் கொலைஞர் வருவது போல என்னுயிரைக் கவர வரும்.

இதனுல் நான் ஆற்றுமா றெங்ஙனம் என்பது குறிப்பெச்சம். ஏதிலர் ஏதும் அன்பிலாதவர்.

௬௨௩. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான் மாலைக்குச் செய்த பகை

(இதுவுமது)

(இ—ரை.) (காலையும் மாலையும் காதலர் உடனிருந்த நாள் போலாது இன்று நேர்மாருன இயல்பு கொண்டுள்ளன. அவற்றுள்) யான் காலைக்குச் செய்த நன்று என்—நான் காலைப் பொழுதிற்குச் செய்த நன்கு யாது?; மாலைக்குச் செய்த பகை எவன்—மாலைப் பொழுதிற்குச் செய்த தீங்கு யாது?.

முன் பெல்லாம் நடுங்கத்தக்க பிரிவச்சம் உண்டு பண்ணிய காலை, இன்று அஃதொழிந்து, இரா வென்னும் துன்பக் கடலைக் கடந்தேறும் கரையாக மாறிற்று என்னுங் கருத்தால் 'நன்றென் கொல்' என்றும், முன்னளில் எல்லை யில்லா இன்பஞ் செய்து வந்த மாலை இன்று இறந்து படுமளவு துன்பஞ் செய்கின்ற தென்னுங் கருத்தால் 'பகை யெவன் கொல்' என்றும் கூறினுள். 'கொல்' ஈரிடத்தும் அசை நிலை. 'பகை' ஆகுபொருளி.

௬௨௪. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத காலை யறிந்த திலேன்.

[இன்று இங்ஙன மாகின்ற நீ அவர் பிரிவிற் குடம்பட்ட தெங்ஙனம் என்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ—ரை.) மாலை நோய் செய்தல்—முன்பெல்லாம் எனக்கு இன்பஞ் செய்து வந்த மாலை, அதற்கு நேர்மாருக இன்று துன்பஞ் செய்யு மென்பதை; மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன்—காதலர் பிரிவிற்கு முன் நான் அறியவே யில்லை.

அறிந்திருந்தேனையின் அவர் பிரிவிற்கு உடம்பட் டிரேன் என்பதாம்.

கஉஉஎ. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

[மாலைப் பொழுதில் நீ இங்ஙன மாதற்குக் காரணியம் என்ன என்ற தோழிக்குச் சொல்லியது.]

(இ—ரை.) இந் நோய்—இக்காம நோயாகிய பூ; காலை அரும்பி—காலைப் பொழுதில் மொக்கு விட்டு; பகல் எல்லாம் போது ஆகி—பகற்கால மெல்லாம் பேரரும்பாக முதிர்ந்து; மாலை மலரும்—மாலைப் பொழுதில் மலராக விரியும்.

படுக்கை விட்டெழுந்த பொழுதாகலின் கனவில் நிகழ்ந்த கூட்டம் நினைந்தாற்றுதல் பற்றிக் 'காலை யரும்பி' யென்றும், பின்பு பொழுது செல்லச் செல்ல அதை மறந்து பிரிவை நினைத்து ஆற்றுளாதல் பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' யென்றும், பகல் முடிவில் மக்களும் விலங்கு பறவைகளும் தத்தம் துணையொடு அல்லது துணையை நினைந்து உறைவிடம் திரும்புவது கண்டு, முன்பு தான் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றுமை மிகுதலின் 'மாலை மலரும்' என்றும், கூறினாள். நோயைப் பூவாக உருவகியாமையின் ஒருமருங் குருவகம்.

கஉஉஅ. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

[இதுவுமது]

(இ—ரை) ஆயன் குழல்—முன்னெல்லாம் இனிதாய் ஒலித்த இடையன் புல்லாங் குழல்; அழல் போலும் மாலைக்குத் தூதாகி—இதுபோது தீப் போலச் சுடும் மாலைப் பொழுதிற்கு முன் தூதாக வந்து; கொல்லும் படை—என்னைக் கொல்வது போலத் துன்புறுத்தும் படைக்கலமு மாயிற்று.

முன்னரே வருகை யுணர்த்தலின் முன் தூதாயிற்று; கொல்லுந் தொழிலாற் படைக்கலமாயிற்று. தானே எரிக்கவல்ல மாலை இத் துணைக் கருவிகளையும் பெற்றுல் என்னதான் செய்யா தென்பதாம். பின் னின்ற 'போலும்' உரையசை.

இனி, ஆயன் குழல் போலுங் கொல்லும் படை மாலைக்குத் தூதாகி அழல் போலும் என்றுமாம்.

கஉஉசு. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

(இதுவுமது)

(இ—ரை.) (இதற்கு முன்பு நானே மதிமயங்கி நோய்த்துன் புற்றேன்.) மதி மருண்டு மாலை படர் தரும் போழ்து—இன்று, கண் டாரெல்லாரும் மதிமயங்கும் வகை மாலை வரும் பொழுது; பதி மருண்டு பைதல் உழக்கும்—இந்நகர் முழுதும் மயங்கி நோய்த் துன் புறும்.

மதி மருள என்பது 'மதி மருண்டு' எனத் திரிந்து நின்றது. பதி முழுதும் துன்புறுவதால் யான் இறந்து படுவேன் என்பதாம். மாலை மயங்கி வரும் போழ்து என் பதி நிலை கலங்கி நோயுழக்கும் என்று ரைப்பார் மணக்குடவ பரிப்பெருமாளர்.

கஉஉ0. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்

(இதுவுமது)

(இ—ரை.) மாயா என் உயிர்—இதுவரை காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடா திருந்த என் உயிர்; பொருள் மாலையாளரை உள்ளி மருள் மாலை மாயும்—இன்று பொருளியல்பையே தமக்கு இயல்பாக வுடையவரை நினைந்து இம் மயங்கும் மாலைப் பொழுதில் இறந்து படுவதாகும்.

குறித்த பருவங் கடந்தும் பொருண் முடிவு கருதி வராமையின், சொன்ன சொல்லை நிறைவேற்றுந் தம்மியல் பொழிந்து பொருளியல் பையே தம்மியல்பாகக் கொண்டவரை நினைந்து இனியாற்றிப் பய னில்லை. ஆதலால், இனி நீ ஒன்றுஞ் சொல்ல வேண்டுவதில்லை யென்பதாம்.

அதி. கஉச—உறுப்பு நலனழிதல்

அஃதாவது, பிரிவாற்றுத தலைமகளின் கண்ணும் தோளும் நெற் றியும் முதலிய உறுப்புக்கள் தம் அழகிழத்தல். இது மன வருத்தம்

மிக்க விடத்து நிகழ்வ தாகலின், பொழுதுகண் டிரங்கலின் பின் வைக்கப் பட்டது.

கஉஙக. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண்.

(ஆற்றுமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.)

(இ—ரை.) சிறுமை நமக்கு ஒழியச் சேண்சென்றார் உள்ளி—இவ்வாற்றுமை நம்மிடத்து நிற்கத் தாம் தொழிலிற்குச் சென்ற காதலரை நினைத்து நீ யழுதலால்; கண் நறுமலர் நாணின—உன் கண்கள் ஒளியும் அழகும் இழந்து, முன் தமக்கு நாணிய நன்மண மலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன.

இவை கண்டார் காதலரைக் கொடுமை கூறுவர். ஆதலால் நீ யாற்றல்வேண்டு மென்பது கருத்து. நீ யுள்ளிக் கண் நாணின என்பது தனிநிலைமுடிபாம் (absolute construction.)

கஉஙஉ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

(இதுவுமது)

(இ—ரை.) பசந்து பனிவாரும் கண்—பசலையடைதல் மேலும் நீர்வடியும் உன் கண்கள்; நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்—நம்மால் விரும்பப்பட்டவர் அன்பு செய்யாமையைப் பிறருக்குச் சொல்வன போலாகின்றன. ஆதலால் நீ ஆற்றல் வேண்டும்.

சொல்லுவ போலுதல் அதனை அவருய்த் துணருமாறு நிலைமை கெடுதல். நயந்தவர்க்கு என்று பாடமோதுவாரு முளர்.

கஉஙங. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்

(இதுவுமது)

(இ—ரை.) மணந்தநாள் வீங்கிய தோள்—காதலர் மணந்த நாளில் மகிழ்ச்சி மிகுதியாற் பூரித்த உன் தோள்கள்; தணந்தமை சால அறிவிப்ப போலும்—இன்று அவர் பிரிந்தமையை விளக்க மாகப் பிறர்க்கு உணர்த்துவன போல் மெலிவடைகின்றன. இது கூடாது.

அன்று பூரித்ததும் இன்று மெலிந்ததும் ஆகிய இரண்டையும் கண்டவர், உண்மையுணர்ந்து தகுமகனைக் குறை கூறுவர் என்பதாம்.

கஉஙஈ. பணிநீங்கிப் பைந்தொடி சோருந் துணிநீங்கித
தொல்கவின் வாடிய தோள்.

(இதுவுமது)

(இ—ரை.) துணி நீங்கித் தொல் கவின் வாடிய தோள்—தம் துணைவர் நீங்கியதனால் அவராற்பெற்ற செயற்கை யழகேயன்றிப் பழைய இயற்கை யழகு மிழந்த இத்தோள்கள்; பணி நீங்கிப் பைந்தொடி சோரும்—தம் பருமை குன்றியதனாற் பசும்பொன் வளையல்கள் கழலச் செய்யும்.

'சோரும்' என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. முதலொடு சினைக்குள்ள ஒற்றுமைபற்றித் 'துணை நீங்கி' என்றுள். அன்று அவர் பிரிந்தாரென்று அவரது அன்பின் மையை உணர்த்தின; இன்று அவர் குறித்த பருவத்து வந்திலரென்று அவரது பொய்ம்மையை உணர்த்துகின்றன. இங்ஙனம் அவர் மேற் குறைகூறுதற்கு அவரே இடந்தந்துள்ளாரீ என்பதாம்.

கஉஙஉ. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

(இதுவுமது)

(இ—ரை.) தொடியொடு தொல் கவின் வாடிய தோள்—வளையல்களுங் கழன்று பழைய இயற்கையழகையுமிழந்த இத்தோள்கள்; கொடியார் கொடுமை உரைக்கும்—கட்டியணைத்த கை சற்று நெகிழினும் ஆற்றுதலவள் இத்துணைக் கால நீட்டியது என்னவாறென்று எண்ணுதல், கொடியவரின் கொடுமையைத் தாமே சொல்கின்றன.

அவரொடு கலந்த தோள்களே சொல்லுமாயின், கலவாத அயலார் சொல்வதைச் சொல்ல வேண்டுவதில்லை யென்பதாம். உரைத்தல் உரைப்பது போலத் தெரிவித்தல். 'ஒடு' வேறுவினைக் கண் வந்த உடனிகழ்ச்சி.

கஉஙஊ. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக
கொடிய ரெனக்கூற லெஞ்சு.

[தாளுற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்த தோழிக்குச் சொல்லியது.]

(இ—ரை.) தொடியொடு தோள்நெகிழ—யான் ஆற்றியிருக்கவும் என்வயப்படாது கடகங்கள் கழலுமாறு தோள்கள் மெலிய; அவரைக் கொடியர் எனக் கூறல் நொந்து நோவல்—நீ அவற்றைக் கண்டவளவில் காதலரைக் கொடியர் எனக் கூறுதலைப் பொருது உள்ளே நோகின்றேன்.

யான் ஆற்றேனாகின்றது காதலர் வராததிற்கன்று; நீ அவரைக் குறைகூறுகின்றதற்கே யென்பதாம். 'ஒடு' மேற்கூறியதே.

கஉங. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூசல் உரைத்து.

[அவ்வியற்பழிப்புப் பொருது தன்நெஞ்சிற்குச் சொல்லியது.]

(இ—ரை) நெஞ்சே—என் உள்ளமே!; கொடியார்க்கு என் வாடு தோள் பூசல் உரைத்து—இவள் கொடியா ரென்கிறவரிடம் நீ சென்று என் மெலிகின்ற தோள்களினால் ஏற்படும் ஆரவாரத்தைச் சொல்லி; பாடு பெறுதியோ—ஒரு மேம்பாடு பெறுவாயோ? பெறின் அதைப் போற் சிறந்ததொன்றில்லை.

'பாடுபெறுதியோ' என்னும் ஆர்வவினா பெறுதல் கூடாமையை யுணர்த்தி நின்றது. 'கொடியார்' என்றது இங்கு எதிர்மறைக் குறிப்பு. 'வாடுதோள்' என்பது அவை தாமே வாடுகின்றன என்பது தோன்ற நின்றது. 'பூசல்' என்றது தோழி இயற்பழித்தலும் தலைமகள் அதை மறுத்துரைத்தலும் முதலியவற்றை.

கஉஙஅ. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

[வினைமுடித்து மீளுந் தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

(இ—ரை.) முயங்கிய கைகளை ஊக்க—தன்னை யிறுகக்கட்டித் தழுவிய கைகளை இவட்கு நோமென்று கருதி ஒரு சிறிது தளர்த்தலைக; பைந்தொடிப் பேதை நுதல் பசந்தது—அதற்குள், அச் சிறு தளர்ச்சியையும் பொறாது, பசும்பொன் வளையல்களை யணிந்த என் இளங்காதலியின் நெற்றி பசலை பாய்ந்துவிட்டது. அத்தகைய மெல்லியல் நெற்றி இப்பிரிவிற்கு யாதாகுமோ!

இனிக் கடுகிச் செல்லவேண்டுமென்பது கருத்து.

கஉங. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

(இதுவுமது)

(இ—ரை.) முயக்கிடைத் தண்வளி போழ—அங்ஙனம் கைகளைத் தளர்த்த போது எம் இருவர்க்குமிடையே ஒரு சிறுதென்றற் போத்து நுழைந்ததாக; பேதை பெருமழைக் கண் பசப்பு உற்ற—அத் துணைச் சிற்றிடையீடும் பொறாது, என் இளங் காதலியின் பெரிய குளிர்ந்த கண்கள் பசலையடைந்து விட்டன. அத்தகைய கண்கள் நாடுங் காடும் ஆறும் மலையுமாகிய மாபேரிடையீடுகளையெல்லாம் எங்ஙனம் பொறுத்தனவோ!

'போழ' என்றது இருவருடம்பும் ஒன்றென ஒன்றியிருந்தமை தோன்ற நின்றது.

கஉச0. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு.

(இதுவுமது)

(இ—ரை.) கண்ணின் பசப்போ—தென்றற் காற்று இடையிற் புகுந்ததனால் வந்த கண்ணின் பசலையோ; ஒள் நுதல் செய்தது கண்டு—தனக்கு அயலிலுள்ள ஒளிபொருந்திய நெற்றி பசந்தது கண்டு; பருவரல் எய்தின்று—துன்பமடைந்தது.

பொருள்களைக் காணுந் தன்மையில்லாத நெற்றி கைகளைத் தளர்த்த வளவிற் பசந்துவிட்டது. ஆனால், அத்தன்மையுள்ள நானே கைகளைத் தளர்த்த பின் சிறுகாற்று ஊடறுக்கு மளவுப் பசவாது வெறுமனே கண்டுகொண்டிருந்தேன், எனத் தன் மென்மைக்கேலாத வன்மையையும் அதன் வன்மைக் கேலாத மென்மையையும் ஒப்புநோக்கி வெட்கிப் போயிற்றென்பதாம். இங்ஙனம் அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும். ஆதலால் யாம் விரைந்து சென்று அவளை யடைதல்வேண்டுமென்பது கருத்து

அநி. கஉநி—நெஞ்சொடு கிளத்தல்

அஃதாவது, ஆற்றுமை மீதூரத் தனக்கொரு பற்றுக்கோடு காணுத தலைமகள், செய்வ தறியாது தன் நெஞ்சொடு பலவாறு

சொல்லுதல். இது உறுப்புக்கள் தம் அழகிழந்த விடத்து நிகழ்வ தாகலின், உறுப்பு நலனழிதலின் பின் வைக்கப்பட்டது.

கஉசக. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்
மெவ்வநோய் தீர்க்கு மருந்து. [தொன்று

[தன் ஆற்றுமை தீருந் திறம் நாடியது.]

(இ—ரை.) நெஞ்சே—என் உள்ளமே!; எவ்வ நோய் தீர்க் கும் மருந்து ஒன்று—இத்துன்ப நோயைத் தீர்க்கும் மருந்தாவ தொன்றை; எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல்லாயோ—எத் தன்மைய தாயினும் ஒரு முறையை எண்ணி எனக்குச் சொல்ல மாட்டாயோ?

' பொதுவான மருந்தினுல் தீரும் உடல்நோயன்றென்பாள் 'எவ்வநோய்' என்றும், கற்புத்தவிர எதையும் இழக்கும் மருத்துவ முறையாயினும் என்பாள் 'எனைத்தொன்றும்' என்றும்; கூறினுள்.

கஉசஉ. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

[தலைமகனைக் காணும் வேட்கை மிகுதியாற் சொல்லியது.]

(இ—ரை.) என் நெஞ்சு வாழி — என் உள்ளமே நீ வாழ் வாயாக: அவர் காதல் இலராக நீ நோவது—அவர் நம்பாற் காத லில்லாதவராகவும் நீ யவர் வரவு நோக்கி வருந்துவது பேதைமை—உன் பேதைமையின் விளைவேயன்றிப் பிறிதன்று.

விரைந்து மீளாமையானும் நம்பால் தூதுவிடாமையானும் அவர் நம்மை நினையாமை வெளியாகின்றது. இந்நிலையில் நீ அவர்பாற் செல்லாது அவர் வரவு நோக்கி வருந்துகின்றாய். இது உன் அறி யாமை என்னுங் கருத்தாற் 'பேதைமை' யென்றாள். 'வாழி' இகழ்ச் சிக் குறிப்பு.

கஉசங. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனெய் செய்தார்க ணில்.

(இதுவுமது)

(இ—ரை.) நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என்—என் உள்ளமே! நீ அவர்பாற் செல்வதுஞ் செய்யாது இறந்துபடுவதுஞ் செய்யாது, இங்கிருந்து கொண்டு அவர் வரவு நினைந்து வீணாக

வருந்துவது ஏன்? ; பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல்—இத்துன்ப நோயை உண்டாக்கியவரிடத்துத்தான் நம்மை அன்பாக நினைந்து நம்மிடம் வரக் கருதுதல் இல்லையே!

நம்பால் அருளிலராகவின் தாமாக வரார். இனி, நாம்தான் அவரிடத்துச் செல்லவேண்டும் என்பதாம்.

கூஉசஅ. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று.

(இதுவுமது.)

(இ—ரை) நெஞ்சே கண்ணும் கொளச் சேறி—என் உள்ளமே நீ என் காதலர் பாற் செல்லலுற்றாயின், இக்கண்களையும் உடன் கொண்டுசெல்; இவை அவர்க் காணல் உற்று என்னைத் தின்னும்—ஏனெனின்; நீ தனியாய்ச் செல்வாயாயின், இவை அவரைக் காண வேண்டுமென்னும் பேராவலினால், அவரைக் காட்டச் சொல்லி. என்னைப் பிய்த்துத் தின்றுவிடும்.

தின்னுதல் என்பது தின்பதுபோலத் தொந்தரவு செய்தல்; ஆகுவினை. கொண்டு என்பது 'கொள்' எனத் திரிந்து நின்றது. காதலரிருக்குமிடஞ் சென்று அவரை ஆசை தீரக் காணவேண்டுமென்பதாம்.

கூஉசடு. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா லுறுஅ தவர்.

(இதுவுமது)

(இ—ரை.) நெஞ்சே—என் உள்ளமே! ; யாம் உற்றால் உறு தவர்—யாம் அவர்பால் அன்புகொண்டாலும் தாம் எம்பால் அன்பு கொள்ளாத நம் காதலரை; செற்றார் எனக் கைவிடல் உண்டோ—வெறுத்தாரென்று நாம் அவரை விட்டு விலகுதல் நமக்குத் தகுமோ? தகாதே!

உறுதல் அன்பாற் பொருந்துதல். அவர்பாற் செல்லுவதே நமக்குத் தகும் என்பதாம்.

கூஉசக. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு.

(தலைமகன் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது.)

(இ—ரை.) என் நெஞ்சு—என் உள்ளமே! : கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்து உணராய்—யான் தம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலவியின்பங் காட்டி நீக்க வல்ல காதலரைக் காணும்போது, வெளித் தோற்றத்திற் காகவேனும் சற்றுப் புலந்து பின்பு அது நீங்கமாட்டாய்; பொய்க் காய்வு காய்தி—அது செய்ய மாட்டாத நீ இன்று அவரைக் கொடியவர் எனக் கூறி வெறுப்பது போல நடிக்கின்றாய், இந் நடிப்பை விட்டுவிட்டு அவரிடஞ் செல்லத் துணிவாயாக.

கலந்துணர்த்தலென்றது கலவியின்ப ஆசை காட்டி அதனாற் புலவியை நீக்குதலே. பொய்க் காய்வு நிலையில்லாத வெறுப்பு. கண்டால் வெறுக்க முடியாது காணுதவிடத்தில் மட்டும் வெறுப்பதாற் பயனில்லை யென்பதாம்.

குஉஎ. காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே
யாமே பொறேனிவ் விரண்டு.

(நாண் தடுத்தலின் காதலரிடம் செலவொழிவாள் சொல்லியது.)

(இ—ரை.) நல் நெஞ்சே—என் நன்மனமே! ? ஒன்று காமம் விடு—காமம் நாண் என்னும் இரண்டனுள் ஒன்று காமத்தை விட்டுவிடு, நாண் விடு — அல்லாவிட்டால் நாணைவிட்டுவிடு, இவ்விரண்டு யானே பொறேன்—இவ்விரண்டையும் நீ வைத்துக் கொள்ள விரும் பின், அவ்விரண்டையும் தாங்கும் ஆற்றலோ எனக் கில்லை.

'நன்னெஞ்சே' என்றது, இன்பத்தையும் பெண்மையையும் ஒருங்கே நிலைபெறுத்தலால் நீ நல்லையென்று பாராட்டியவாறும். இது நன்றே யெனினும், இவ்விரண்டையும் ஒருங்கே தாங்குதல் உயிருக்கு இயலாமையின், உயிரைக் காக்க வேண்டின் இவ்விரண்டுள் ஒன்றை விட்டுவிடுதல் வேண்டும். இவற்றுள் நாணே சிறந்த தாதலின், காதலர் வரும்வரை ஆற்றியிருத்தலே தக்கதென்பதாம். 'ஒன்றே.— ஓகாரம் அசை நிலை. யானே—ஓகாரம் பிரிநிலை. முற்றும்மை தொக்கது.

குஉஅ. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாப் பேதையென் நெஞ்சு.

(இதுவுமது)

(இ—ரை.) என் நெஞ்சு—என் உள்ளமே! அவர் பிரிந்து நல்கார் என்று—அவர் இவ்வாற்றுமையை அறியாமையின் இரங்கி வந்து இன்பந் தாரார் என்று கருதி, பிரிந்தவர் பின் ஏங்கிச் செல்வாய்—அதை அறிவித்தற்பொருட்டு நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்பின் ஏக்கங்கொண்டு செல்கின்றாய்; பேதை நீ என்ன பேதையாயிருக்கின்றாய்!

ஆற்றுமையைக் கண்ணுறக் கண்டும் இரங்காது பிரிந்துபோனவர் இதைச் சென்றறிவித்தவுடன் திரும்பி வந்து இன்பந்தருவாரென்று கருதினமையின், 'பேதை' என்றாள்.

௧௩௰. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் நெஞ்சு.

(இதுவுமது.)

(இ—ரை.) என் நெஞ்சு—என் மனமே!; காதலவர் உள்ளத்தாராக—காதலர் உன்னகத்தாராயிருக்கவும்; நீ உள்ளி யாருழைச் சேறி—நீ அவரைத் தேடி யாரிடத்துச் செல்கின்றாய்?

உனக்குள்ளேயே யிருக்கின்றவரை நீ வெளியே தேடிச்செல்லுதல், ஒருவர் தன் இல்லத்திற்குள் ளிருப்பவரைத் தேடி வேறேரில்லம் செல்வது போலும் எள்ளி நகையாடத் தக்க செய்தியென்பதாம்.

"உள்ள மென்புழி அம்முப் பகுதிப் பொருள் விகுதி." என்றார் பரிமேலழகர். நெஞ்சும் உள்ளமும் ஒன்றேயாதலின், உள் என்றிருக்க வேண்டிய இடப்பொருட்சொல் 'அம்' என்னும் முதனிலைப் பொருளீறு பெற்றதென்று அவர் கொண்டது சரியே.

௧௩௱. துன்னுத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

(அவரை மறந்தாற்றல் வேண்டுமென்பது படச் சொல்லியது.)

(இ—ரை.) துன்னுத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா—எம்மைக் கூடாவண்ணம் பிரிந்து போனவரை எம் உள்ளத்து உடையேமாக; இன்னும் கவின் இழத்தும்—முன்னிழந்த புறவழகேயன்றி எஞ்சி நின்ற அகவழகும் இழப்பேம்,

அவர் நம்மைக் கூடாவாறு பிரிந்து போனமையாலும், நாம் அவரை மறக்க முடியாமையாலும், போன மேனியழகேயன்றி நின்ற நிறையும் இழப்பேம். ஆதலால், அவரை மறந்தாற்றுதலே நன்றென்பதாம்.

அதி. கஉசு—நிறையழிதல்

அஃதாவது, தலைமகள் தன் மனத்து அடக்கவேண்டிய பல செய்திகளைத் தன் வேட்கை மிகுதியால் வெளிவிட்டுச்சொல்லுதல். "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை." என்றார் நல்லந்துவனார் (கலி. கஉக). நிறையழிதற்குக் காரணியம் மேலதிகார ஈற்றுக் குறளிற் கூறப்பட்டதனால், இது நெஞ்சொடு கிளத்தலின் பின் வைக்கப்பட்டது.

கஉடுக. காமக் கணிச்சி யுடைககு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

(நாணு நிறையு மழியாமை நீ யாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை,) நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னுங் கதவு—நாணுகிய தாழிட்டுப் பூட்டிய நிறையென்னுங் கதவை; காமக் கணிச்சி உடைக்கும்—காமவேட்கையாகிய கோடரி வெட்டிப் பிளக்கும்.

நாணுள்ள வரையும் நிறை அழியாதாகலின் அதைத் தாழாக்கியும், அகத்துள்ளவற்றைப் பிறர் கவராமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலிமையுள்ள இவ்விரு பண்புகளையும் ஒருங்கே நீக்கலின் காமவேட்கையைக் கோடரியாக்கியும், கூறினள். இஃது உருவக வணி.

கஉடுஉ. காம மெனவொன்றே கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.

(நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சாலடக்கப் படுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) காமம் என ஒன்று கண் இன்று— காமமென்று சொல்லப்படுகின்ற ஒன்று கண்ணேட்ட மில்லதாயிருந்தது; யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும்—எல்லாருந் தொழில் நீங்கித் தூங்கும் நள்ளிரவிலும் என் உள்ளத்தை ஏவல் கொள்ளும்.

தன்னைத் தோற்றுவித்ததனால் தாய்போலுள்ள நெஞ்சத்தையே ஏவல் கொள்ளும் துணிவுடைமை பற்றிக் 'காமமெனவொன்று என்றும், தகாதநேரத்திலும் வேலைவாங்குதலால் 'கண்ணின்று' என்றுங் கூறினாள்; தொழிலாளுதலாவது தலைமகன்கண் செல விடுத்தல். 'ஓ' இரக்கக் குறிப்பு.

௬௬௩. மறைப்பேன்மற் காமத்தை யாரே குறிப்பின்றித்
தும்மல்போற் ரோன்றிவிடும்.

[மகளிர் காமம் மறைக்கப்படுமென்ற தோழிக்குச் சொல்லியது]

(இ—ரை.) யான் காமத்தை மறைப்பேன்—யான் இக்கா மத்தை என்னுள்ளே அடக்கிவைக்கக் கருதுவேன்; குறிப்பு இன் றித் தும்மல்போல் தோன்றிவிடும்—ஆனால், அது என் கருத்துவழி நிற்காமல் தும்மல் போலத் திடுமென்று வெளிப்பட்டு விடுகின்றது.

தும்மல்போலக் காமமும் அடங்குகின்றதில்லை யென்பதாம் 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரக்கக் குறிப்பு.

௬௬௪. நிறையுடையே னென்பேன்மன் யாரெவென் காம
மறையிறந்து மன்று படும்.

(இதுவுமது)

(இ—ரை.) யான் நிறையுடையேன் என்பேன்—இதற்கு முன் பெல்லாம் யான் என்னை நிறையுடையேன் என்று கருதியிருந்தேன்; என் காமம் மறை இறந்து மன்றுபடும்—ஆனால், இன்று என் காமம் கட்டிற்கடங்காது அம்பலப்பட்டுவிட்டது.

இனி என் வயத்ததன்று என்பதாம். 'மன்' ஒழியிசைக் கண் வந்தது. ஓகாரம் இரக்கக் குறிப்பு. மன்று படுதல் பலருமறிதல்.

௬௬௫. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றார றிவதொன் றன்று.

(நம்மை மறந்தாரை நாமும் மறத்தற்குரியோம் என்ற தோழிக் குச் சொல்லியது.)

(இ—ரை.) செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை—தம்மைத் துன்புறுத்திப் பிரிந்துசென்றார் பின் செல்லாது தாமும் நீங்கி நிற்கும் நிறையுடைமை; காம நோய் உற்றார் அறிவது ஒன்று அன்று,—

காமநோய்ப் படாதவர் அறிவதொன்றே யன்றி அந்நோய்ப்பட்டவர் அறிவ தொன்றன்று.

காம நோய்ப்பட்டவர் மானமுடையவரல்லர். ஆதலால் 'செற்ருர் பின் செல்லாப் பெருந்தகைமை' அவர்க்கில்லை யென்பதாம். இன்பக் காலத்தைத் துன்பக்காலமாக மாற்றியதால் 'செற்ருர்' என்ருள். பின் செல்லுதல் மனத்தால் இடைவிடாது நினைத்தல். 'பெருந்தகைமை' இங்கு ஆகுபொருளி.

கஉடுசு. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

(இதுவுமது)

(இ—ரை.) செற்றவர் பின்சேறல் வேண்டி—என்னைத் துன் புறுத்திப் பிரிந்துசென்றவர் பின்னே யான் செல்லுதலை வேண்டுத லான்; என்னை உற்ற துயர் எற்று—என்னை யடைந்துள்ள காம நோய் எத்தகையது!; அளித்து—ஐயோ! இரங்கத்தக்கது!

இக்காம நோய் என்னை அளவிறந்து இழிவுபடுத்துவதால் மிகக் கொடிது என்பதாம். 'செற்றவர்' என்றது மேற்குறளிற் 'செற்ருர்' என்றது போன்றதே. 'அளித்து' எதிர்மறைக் குறிப்பு. 'அரோ' அசைநிலை.

கஉடுஎ. நாணென வொன்ரு வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்.

பரத்தையிற் பிரிந்துவந்தவனைக் கருதப்பட்ட தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகளை, நோக்கி நீ புலவாமைக்குக் கரணியம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) பேணியார் காமத்தால் பெட்ப செயின்—நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய் யும்போது; நாண் என ஒன்ரு அறியலம்—நாண் என்று ஒன்றை அறியமாட்டாதிருந்தேம்.

ஆசிரியர் ஒருயானை(வி)மனத்தையே இவ்வின்பத்துப் பாலிற் கூறுவதாலும், இது தலைசிறந்த தமிழறநூலாதலாலும், கோவை களிற்போலப் பரத்தை கூற்றுக இங்கு ஒன்றுங் கூறப்படாமையா லும், "பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு" என்று பரிமேலழகர்

கொளுவிற் கூறியிருப்பது பொருந்தாது. 'ஒன்று' என்பது ஒரு தனிப்பொருள் என்னும் பொருட்டு. ஒகாரம் பிரிநிலை. 'அறியலம்' என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாயின், தன் குற்றத்தைக் குறைத்தற்குத் தோழியையும் உளப்படுத்திக் கொண்டதாகக் கொள்க. செயப்பாட்டு வினைமுதல் 'பேணியார்' எனச் செய்வினை முதல் வடிவில் நின்றது. 'நாண்' பரத்தையர் தோய்ந்ததாகக் கருதப்பட்ட மார்பைத் தோய்தற்கு நாணுதல். 'பெட்ப' வேட்கை மிகுதியாற் கருதியிருந்த கலவிவினைகள். 'அறியலர்', 'பெட்பச் செயின்' என்பன மணக்குடவ பரிப்பெருமாளர் கொண்ட பாடம்.

கஉடுஅ. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

(இதுவுமது)

(இ—ரை.) நம் பெண்மை உடைக்கும் படை—நம் நிறையாகிய அரணை யழிக்கும் படைக்கலம்; பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றே—பல நடிப்புச் செயல்களில் வல்ல கள்வராகிய நம் காதலரின் தாழ்மையான பேச்சன்றே?

வந்தாற் புலக்கவேண்டுமென்றும், அப்புலவியை நீக்க அவர் சொல்லுஞ்சொற்களையும் செய்யுஞ்செயல்களையும் பொருட்படுத்தக் கூடாதென்றும் நான் கொண்டிருந்த தீர்மானத்தை அடியோடு மறந்து, கலவிக்கண் அவரினும் முற்படும் வகை பசப்பி மயக்கிவிட்டார் என்பாள் 'பன்மாயக் கள்வன்' என்றாள். 'பணிமொழி' எத்துணைக் கடுஞ்சினத்தையும் எளிதில் தணிக்கும் இனிமையும் தாழ்மையுங் கலந்த வசியச் சொற்கள். அத்தகைத் திறமையொடு அத்தகைச் சொற்களைச் சொல்லும்போது, என்நிறை யழியாது வேறென் செய்யும் என்பதாம். 'பெண்மை' இங்குத் தலைமைபற்றி நிறைமேல் நின்றது.

கஉடுக. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

(இதுவுமது)

(இ—ரை.) புலப்பல் எனச் சென்றேன்—அவர் வந்தபொழுது உரையாடாது ஊடவேண்டுமென்று கருதி அவர் முன்நில்லாது வேறோரிடத்திற்குப் போனேன்; நெஞ்சம் கலத்தல் உறுவதுகண்டு புல்லினேன்—அங்ஙனம் போய்த்தான் என்ன? என் உள்ளம் நிறையில் நில்லாது அறைபோய் அவரோடு கலத்தல்தொடங்குதலை யறிந்து, இனி இவ்வூடல் பயன்படாதென்று அவரைத் தழுவினேன்.

நிறையழிந்தவர்க்குக் கூடலே யன்றி ஊடலில்லை யென்பதாம்.

கூஉஅ. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினர்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

(இதுவுமது)

(இ—ரை.) நிணம் தீயில் இட்டு அன்ன நெஞ்சினர்க்கு—கொழுப்பைத் தீயிலிட்டால் உருகுவதுபோலக் காதலரைக் கண்டவுடன் நிறையழிந்துருகும் உள்ளத்தையுடைய மகளிர்க்கு; புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ—அவர் அணுகி நிற்க யாம் ஊடி அந்நிலையிலேயே நிற்கக் கடவேம் என்று கருதுதல் உளதோ? இல்லையே!

யான் அத்தன்மையேனுகலின் அந்நிலைமையில்லை யென்பதாம் புணர்தல் தலைக்கூடி நிற்றல். அவர் புணர்ந்து, யாம் ஊடி நிற்பேம் என்பது, மணியடித்து வண்டி புறப்பட்டது என்றாற்போன்ற தனிநிலைக் கிளவியச் (absolute clause) சொல்லியமாம் (sentence).

அதி. கூஉ—அவர்வயின் விதுப்பல்

அஃதாவது, தொலைவிடைப் பிரிவின்கண் தலைமகனுந் தலைமகளும் வேட்கைமிகுதியினுல் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். இதனுள் தலைமகள் கூற்று நிறையழிவால் நிகழ்ந்ததாகலின், நிறையழிதலின் பின் வைக்கப்பட்டது.

"தலைமகன் பிரிவும் தலைமகளாற்றுமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இருவரையுஞ் சுட்டிப் பொதுவாகிய பன்மைப் பாலாற் கூறினர். பிறரெல்லாம் இதனைத் தலைமகனை நினைந்து தலைமகள் விதுப்புற லென்றார். சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடிய பொருளுணர்த்துவ தல்லது தானென்றற்குப் பெயராகாமையானும், கவிகூற்றுய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற் பன்மையாற் கூறப்படாமையானும், அஃதுரையன்மை யறிக." என்று பரிமேலழகர் இவ்வதிகார முகவுரையிற் கூறியது சரியே. "பிறர்" என்றது மணக்குடவ பரிப்பெருமாளரை. 'அவர்வயின் விருப்பல்' என்பது காலிங்கர் கொண்ட பாடம்.

கூஉஆ. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

(தலைமகள் காண்டல் விதுப்பினுற் சொல்லியது)

(இ—ரை.) அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த—அவர் எம்மைவிட்டுப் பிரிந்துபோன நாட்களைச் சுவரிற்குறித்த குறிகளைத் தொட்டுத் தொட்டு எண்ணுதலால், என் விரல்கள் தேய்ந்து போயின. கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற—அதுவுமன்றி என் கண்களும் அவர்வரும் வழியைப் பார்த்துப்பார்த்து ஒளியிழந்து பூத்துப்போயின. இவ்வாருயும் இன்னும் அவர் வரக்காணேன்.

இனி அவரைக் காணுமாறுண்டோ வென்பதாம். 'வாள்' உரிச்சொல். புற்கென்னுதல் பொலிவற்று நுண்பொருள்களைக் காணமுடியாமை. 'நாள்' ஆகு பொருளி. நாளெண்ணுதலும் வழி பார்த்தலும் இடைவிடாது நிகழ்தலின் விதும்பலாயிற்று.

கூகூஉ. இலங்கிழா யின்று மறப்பினெண் ரேண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.

ஆற்றுமை மிகுதலின் இடையருது நினைத்தல் தகாது. (சிறிது மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) இலங்கு இழாய்—விளங்குகின்ற அணிகளை யணிந்த தோழியே!; இன்று மறப்பின்—காதலரை இன்று மறப் பேனுயின்; காரிகை நீத்து—என் அழகு நீங்கி; என் தோள் மேல், கலங் கழியும்—என் தோள்களின் மேலுள்ள கடகங்கள் கழன்று விடும்.

'இலங்கிழாய்' என்பது உன் அணிகள் போன்றனவல்ல என் அணிகள் என்னுங் குறிப்பினது. பரிமேலழகர் 'நீத்து' என்பதை நீப்ப எனத் திரித்தும், 'மேல்' என்பதைக் காரிகை' என்னுஞ் சொற்கு முன் நிறுத்தியும், "காதலரை யானிறந்து படுகின்ற இன்று மறப்பேனுயின் மறு பிறப்பினும், காரிகை யென்னை நீப்ப என் ரேள்கள் வளை கழல்வனவாம். இவ்வெல்லைக்கண் நினைந் தால் மறுமைக்கண் அவரை யெய்தி யின்புறலாம்; அதனுன் மறக் கற் பாலேனல்லேன்." என்று உரை கூறுவர். இங்ஙனம் வலிந் தும் நலிந்தும் கூறும் கொண்டு கூட்டுப் பொருட்கோளுரை அத்துணைச் சிறந்த தன்று.

கூகூசு. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்ருர்
வரனசைஇ யின்னு முளேன்.

(இதுவுமது)

(இ—ரை.) உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்ருர்—இன்ப நுகர்ச்சியை விரும்பாது வலிமையாற் பெறும் போர் வெற்றியை விரும்பி, நம்மைத் துணையாகக் கொள்வதை யிகழ்ந்து ஊக்கத்தைத் துணையாகக் கொண்டு போனவர்; வரல் நசைஇ இன்னும் உளேன்—திரும்பி வருதலே விரும்புதலால் இன்றும் உயிர் வாழ்ந்திருக்கின்றேன்.

அவ்விருப்பம் இல்லையாயின் இதற்குள் இறந்து பட்டிருப்பேன் என்பதாம். 'உரன்' ஆகுபொருளி. 'நசைஇ' சொல்லிசை யளபெடை.

கூஉசூ. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு.

(இதுவுமது)

(இ—ரை.) பிரிந்தார் கூடிய காமம் வரவு உள்ளி—காமம் நீங்கியவராய் நம்மை விட்டுப் பிரிந்து சென்ற நம் காதலர் காமங் கூடியவராய் நம்மிடம் திரும்பி வருதலே நினைந்து; என் நெஞ்சு கோடு கொடு ஏறும்—என் உள்ளம் வருத்தம் நீங்கி மேன்மேற் பணைத் தெழுகின்றது.

அந் நினைவின்றேல் இறந்து படுவேன் என்பதாம். வினை வயிற் பிரியு மிடத்து அதற்குத் தடையாக வுள்ள காமத்தை நோக்காது வினையையே நோக்குதலும், வினை முடிந்த விடத்துக் காமத்தையே மிகுதியாக நோக்குதலும், தலைமகனுக் கியல்பாதலின் 'கூடிய காமம்' என்ருள். இதில் ஒடு வுருபு தொக்கது. கூடிய காமத்தொடு என விரியும். கோடு கிளை. கோடு கொண்டேறுதல் மேன்மேற் கிளைத் தெழுதல். மரத்தின் தொழில் நெஞ்சின்மே லேற்றப்பட்டது. 'கொடு' கொண்டு என்பதன் தொகுத்தல் இக் குறட்கு.

"கூடுதற்கு அரிய காமத்தைக் கூடப் பெற்றும் பிரிந்தவர் வருவாராக நினைந்தே, என்னெஞ்சம் மரத்தின்மேலேறிப் பாராநின்றது." என்பது மணக்குடவ பரிப்பெருமாளர் உரை;

"கூடிப் பிரிந்த நாயகர் வரும் வழி பார்த்து ஆசை என்னும் மலையில் என் நெஞ்சு ஏறிப் பார்க்கும்." என்பது பரிதியார் உரை. கோடு மலை. குவடு—கோடு.

கஉ௬டு. காண்கமற் கொண்கனைக் கண்ணுரைக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

(தலைமகன் வரவு கூறி, ஆற்றுயாய்ப் பசக்கற் பாலை யல்லை யென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) கண் ஆரக் கொண்கனைக் காண்க—என் கண்கள் நிறைவு பெறும் வகை என் காதலரை நான் காண்பேனுக; கண்ட பின் என் மெல் தோள் பசப்பு நீங்கும்—அங்ஙனங் கண்ட பின் என் மெல்லிய தோளின்கண் உள்ள பசலை தானே நீங்கி விடும்.

நிறைவுபெறும் வகை காணுதலாவது ஆசை தீரக் கர்ண்டல். காண்க என்னும் வியங்கோள் ஆர்வமிகுதி பற்றியது. 'மன்' அது, இன்றியமையாததென்னும் பொருள்பட நின்றமையின் ஒழியிசை. காதலர் வரவைக் கண்ணுற் கண்டாலன்றிக் காதாற் கேட்டதினுல் மட்டும் பசலை நீங்கா தென்பதாம்.

கஉ௬க. வருகமற் கொண்க னெருநாட் பருகுவன்
பைதனை யெல்லாங் கெட.

(இதுவுமது)

(இ—ரை.) கொண்கன் ஒருநாள் வருக—நீண்டநாளாக வராத என்காதலர் ஒரு நாள் தப்பாது என்னிடம் வருவாராக; பைதல் நோய் எல்லாம் கெடப் பருகுவன்—வந்தால், 'எனக்குத் துன்பஞ் செய்கின்ற இக்காம நோய் அடியோடு நீங்குமாறு, அவருடம்பாகிய அமிழ்தத்தை என் ஐம்புலனுலும் ஆசைதீரப் பருகி யின்புறுவேன்.

காதலர் வரின் இன்றுள்ள நோயும் இனிவரும் நோயும் ஒரே வேளையில் முற்றும் நீங்கிவிடும் என்பதாம். 'வருக', 'மன்' என்பவற் றிற்கு மேலுரைத்தவா றுரைக்க.

கஉ௬எ. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ
கண்ணன்ன கேளிர் வரின் [கலப்பேன்கொல்

(இதுவுமது.)

(இ—ரை.) கண் அன்ன கேளிர் வரின்—என் கண்போற் சிறந்த காதலர் வருவாராயின்; புலப்பேன் கொல்—அவர் வரவு நீட்

டித்தமைபற்றி ஊடுகேனே; புல்லுவேன்கொல்—அல்லது, என் ஆற்றுமைபற்றி அவரைத் தழுவுவேனே: கலப்பேன் கொல்—அல்லது, அவ்விரண்டும் வேண்டுதலால் இருசெயல்களையும் விரவுவேனே, இம்மூன்றுள் எது செய்யக்கடவேன்?

கலத்தலாவது முன் சற்று ஊடிப் பின் தழுவுதல். ஊடல், புலவி, துனி என்னும் மூவகைச் சடைவுகளும் முறையே, தகுமகனுல் தீர்வதும் வாயிலால் தீர்வதும் ஒருவகையாலும் தீராததுமாதலின், இங்குப் புலத்தலென்றது ஊடலையே என அறிக. வருமுன்பே புல்லுதலையுங் கலத்தலையுங் கருதியமையின் விதுப்பாயிற்று. ''இனிக் கலப்பேன்கொ லென்பதற்கு ஒரு புதுமை செய்யாது பிரியாத நாட் போலக் கலந்தொழுகுவேனே வென்றுரைப்பாரு முளர்.'' என்பது பரிமேலழகருரை. 'கொல்' ஐயம். 'ஓ' அசைநிலை. 'ஊடல்' முதலிய முச்சொல்லும் நுண்பொருள் வேறுபாடின்றியும் வழங்கப்படும்.

கஉசுஅ வினைகலந்து வென்றீ கவேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

(வேந்தற் குற்றுழிப் பிரிந்த தகுமகன் வினைமுடிவு நீட்டித்த விடத்துத் தகுமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.)

(இ—ரை.) வேந்தன் வினை கலந்து வென்றீக—நம் வேந்தன் முனைந்து போர் புரிந்து வெல்வானுக; மனைகலந்து மாலை விருந்து அயர்கம்—யாமும் ஊர் சென்று மனைவியொடுகூடி அற்றை மாலைப் பொழுதின்கண் விருந்துண்டு மகிழ்வேம்.

வேந்தற் குற்றுழிப் பிரிவாவது, குறுநில வரசராகிய வேளிரும் மன்னரும் நம் தகுவரராகிய வேந்தரென்னும் பெருநிலவரசர்க்குப் போர்வினை வந்த விடத்து, அவருக்குத் துணையாகச் செல்லுதல். 'மனை' ஆகுபெயர். வினைமுடியுமுன் கூறிய கூற்றுதலின் விதும்பலாயிற்று. ''பிறரெல்லாம் இதனைத் தகுமகள் கூற்றுக்கி யுரைத்தார். தகுமகனைக் கூறுது வேந்தன் வெல்க வென்றும், மனைகலந்தென்றும் மாலைப்பொழுதின் கண் விருந்தயர்க மென்றும், வந்த அவ்வுரை தானே அது கூடாமைக்குக் காரியாயிற்று.'' என்று பரிமேலழகர் கூறியிருப்பது சரியே. 'பிறரெல்லாம்' என்றது மணக்குடவ பரிதி காலிங்க பரிப்பெருமாளரை.

கஉசுக. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றூர்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

(இதுவுமது.)

(இ—ரை) சேண் சென்ருர் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு—நெடுந்தொலைவு சென்ற தம் காதலர் திரும்பி வருவதாகக் குறித்த நாளை மனத்துட்கொண்டு, அது வருமளவும் ஏக்கம் பிடித்து வருந்தும் மகளிர்க்கு; ஒருநாள் எழு நாள் போல் செல்லும்—ஒரு நாளே பலநாள் போல் நெடிதாகத் தோன்றும்.

ஏழு என்னும் நிறைவெண் இங்குக் கழிபன்மை யுணர்த்தி நின்றது. முன்பு தலைமகள் பட்டறிவையறிந்த தலைமகன் அதைப் பொதுப்படுத்திக் கூறியவாறு. இருநாளென்று பாடமோதுவாரும் இருந்தமை பரிமேலழகர் உரையால் தெரியவருகின்றது.

கஉ೧. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால்.

(இதுவுமது.)

(இ—ரை.) உள்ளம் உடைந்து உக்கக்கால்—காதலி நம் பிரிவையாற்றாது உள்ள முடைந்து இறந்து பட்டபின்; பெறின் என் ஆம்—நம்மைத் தப்பாது பெறக்கூடிய நிலைமையளாஞல்தான் என்ன பயன்? பெற்றக்கால் என் ஆம்—அதற்குமேல், உண்மையில் நம்மைப் பெற்றுலுந்தான் என்ன பயன்?: உறின் என் ஆம்—இனி, அதற்கும் மேல், நம்மொடு உடம்பொன்றிக் கலந்தாலுந்தான் என்ன பயன்? இவையொன்ருலும் ஒரு பயனுமில்லையே!

அதற்குமுன் யான் விரைந்து செல்லவேண்டுமென்பது கருத்தாதலின், விதும்பலாயிற்று. "இது தலைமகள்கூற்ருயவழி இரங்கலாவதல்லது விதுப்பாகாமையறிக." என்னும் பரிமேலழகர் மறுப்புப் பொருத்தமானதே. 'ஆம்' ஆகும் என்பதன் தொகுத்தல்.

அதி. கஉ—குறிப்பறிவுறுத்தல்

அஃதாவது, தலைமகன், தலைமகள், தோழியாகிய மூவரும் ஒருவர் குறிப்பை யொருவர்க்குச் சொல்லுதல். இது பிரிந்துபோன தலைமகன் திரும்பி வந்தவிடத்து நிகழ்வதாகலின்; அவர்வயின் விதும்பலின் பின் வைக்கப்பட்டது.

கஉ೨. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு.

(பிரிந்து கூடிய தலைமகன் வேட்கை மிகுதியினுற் புதுவது பன்னுளும் பாராட்டத் தலைமகள் இது வொன்றுடைத்தென அஞ்சிய வழி, அதை யவள் குறிப்பாலறிந்து அவன் அவட்குச் சொல்லியது.)

(இ—ரை.) கரப்பினும்—நீ சொல்லாது மறைத்தாலும், ஒல்லாகை இகந்து—அதற்குடம்படாது உன்கட்டை மீறி, நின் உண் கண் உரைக்கல் உறுவது ஒன்று உண்டு—உன் மையுண்ட கண்கள் எனக்குக் குறிப்பாகச் சொல்லுவதொரு செய்தியுள்ளது. இனி அதை நீயே வெளிப்படையாகச் சொல்வாயாக.

தலைமகனின் வரையிறந்த பாராட்டில் மீண்டும் பிரிதற் குறிப்புள்ளதாகத் தலைமகள் கருதி வேறுபட்டதை, அவட்கெடுத்துச் சொல்லித் தன் பிரியாமையை யுணர்த்தியவாறு. கரத்தல் நாணுலடக்குதல்.

கஉஎஉ. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

(நாணுல் அவள் அது சொல்லாதவிடத்து, அவன் தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோள் பேதைக்கு—என் கண்ணிற்கு நிறைந்த அழகையும் பச்சை மூங்கிலொத்த தோளையு முடைய என் இளங்காதலிக்குப் பெண் நிறைந்த நீர்மை பெரிது—பெண்மை நிறைந்த இயல்பு மிகுதியாகவுள்ளது.

பெண்ணிறைந்த நீர்மை யென்றது அச்ச மட நாணங்களோ மீண்டும் பிரிவுண்டென்று அஞ்சியதால் அச்சமும், இல்லாத பிரிவை ஏற்றிக்கொண்டதால் மடமையும், அதை வெளிவிட்டுச் சொல்லாமையால் நாணமும் வெளிப்பட்டன.

கஉஎங. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

(இதுவு மது)

(இ—ரை.) மணியில் திகழ்தரும் நூல் போல்—கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்து விளங்கித் தோன்றும் நூல்போல; மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு—இப் பெண்ணின் அழககத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்ற தொரு குறிப்பு முண்டு.

அணி கலவியாலான அழகு. அதனகத்துக் கிடத்தலாவது அதனுடன் தோன்றுதல்.

கூஎச. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

(இதுவு மது)

(இ—ரை.) முகை மொக்குள் உள்ளது நாற்றம் போல்—மொட்டின் முகப்பிற்குள் அடங்கிக் கிடந்து வெளியிற் பரவாத மணம் போல; பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு—என் இளங்காதலியின் நகை யரும்பும் முறுவலுக்குள் உள்ளதாய் வெளியில் தோன்றுத தொரு குறிப்புண்டு.

நகை புணர்ச்சி யின்பத்தால் தோன்றும் மகிழ்ச்சி வெளிப்பாடு.

கூஎடு. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

(இதுவு மது)

(இ—ரை.) செறிதொடி செய்து இறந்த கள்ளம்—நெருங்கிய வளையல்களை யணிந்த என் காதலி, என்னிடத்தில்லாத தொன்றைக் கருதிக் கொண்டு அது கரணியமாக எனக்குமறைத்து வைத்த குறிப்பு; உறு துயர் தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து—என் பெருந்துயரைத் தீர்க்கும் மருந்தாவ தொன்றை உடையதா யிருக்கின்றது.

இல்லாததொன்று பிரிவு. 'கள்ளம்' ஆகுபெயர். மறைத்து வைத்தது உடன்போக் குட்கொண்டது. 'உறுதுயர்' பெருமகிழ் வுறுத்தற்குச் செய்த பாராட்டு வினைகளை பிரிவுக்குறிப்பாகக் கொண்டு அஞ்சியதால் உண்டான மன வருத்தம். 'உறு' உரிச்சொல் மருந்தாவது பிரிவின்மை தோழியால் தெரிவித்தல். அதை உடனே செய்தல் வேண்டு மென்பதாம். 'செறி தொடி' அன்மொழித் தொகை.

கூஎகூ. பெரிதாற்றிப் பெட்பக சலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

(தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக் கறிவுறுத்தது.)

(இ—ரை.) பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல்—காதலர் வந்து தம் பிரிவினுலான துன்பத்தை மிகவும் ஆற்றி நாம் மகிழும் வண்ணங் கலக்கின்ற கலவி; அரிது ஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து—இருந்த நிலைமையை நோக்கின், மீண்டும் அத் துன்பத்தை நீண்டகாலம் அரிதாக ஆற்றியிருந்து, அவரது அன்பின்மையையே நினைக்குந் தன்மையை யுடையதாகும்.

செய்யும் இன்பம் பிரிதற்குறிப்பொடு கூடியதாயிருத்தலின், முடிவில் துன்ப மாகவே முடியும் என்பதாம்.

கூஉஎ. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

(இதுவு மது)

(இ—ரை.) தண்ணந் துறைவன் தணந்தமை—குளிர்ந்த துறையை யுடையவர் நம்மை உடம்பாற் கூடியிருந்தே உளத்தாற் பிரிந்தமையை: நம்மினும் முன்னம் வளை உணர்ந்த—அவர் குறிப்பாலறியக் கூடிய நம்மினும் முற்பட்டு இவ் வளையல்கள் நுணுகியறிந்தன.

'தணந்தமை' என்று இறந்த காலத்திற் கூறியது கருத்து நிகழ்வு பற்றியும் தேற்றம் பற்றியும் வந்த காலவழுவமைதி. மனநோவால்-தோள் மெலிவும் தோள் மெலிவால் வளை கழல்வும் நிகழ்ந்திருக்கவும், மனத்திற்கு முன்னம் வளைகள் அறிந்து கழன்றன வென்று அவற்றை அறிவுஞ் செயலு முடையனவாகக் கூறியிருப்பது, துயர் மடமையின் (Pathetic fallacy) பாற்படும்.

கூஉஅ. நெருநற்றுச் சென்ருரேங காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.

(இதுவு மது)

(இ—ரை.) எம் காதலர் நெருநற்றுச் சென்ருர்—எம் காதலர் நேற்றுத்தான் பிரிந்து போனர்; யாமும்மேனி பசந்து எழுநாளேம்—அப்பிரிவிற்கு யாமும் மேனி பசலை யடைந்து எழுநாட் கழிந்த நிலையில் இருக்கின்றேம்.

நேற்றுச் செய்த பேரின்பக் கூட்டத்தால் பிரிவு துணியப் பட்டதென்பாள் 'நெருநற்றுச் சென்ருர்' என்றும், அதனை எழு நாட்கு முன்பே ஐயுற்றதனல் அன்றே மேனி பசந்த தென்பாள் 'மேனி

பசந்தெழு நாளேம்' என்றும், கூறினள். இதனால் தலைமகன் பிரிதற் குறிப் புணர்த்தப் பட்டது.

கூஉகூ. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

(தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகற் கறி வித்தது.)

(இ—ரை.) (யானது தெளிவித்த வழித் தெளியாது) தொடி நோக்கி— அவர் பிரிந்து செல்ல நான் இங்கிருப்பின் இவை நில்லா வென்னுங் குறிப்பில்தன் தோட்கடகங்களை நோக்கி; மெல் தோளும் நோக்கி—அதற் கேதுவாக இவை மெலியு மென்னுங் குறிப்பில் தன் மெல்லிய தோள்களையும் நோக்கி; அடி நோக்கி—அதன்பின், இவ் விரண்டும் நிகழாமல் நீங்கள் காதலருடன் நடந்து சென்று காத்தல் வேண்டு மென்னுங் குறிப் பில் தன் பாதங்களையும் நோக்கி; அஃது ஆண்டு அவள் செய்தது — இங்ஙனம் உடன்போக்குக் குறித்த அச் செயலையே அன்று அவள் செய்தாள்.

பிரிவுக் குறிப் புண் டா யின் செலவழுங்குவித்தல் இதன் பயனும்.

கூஉ0. பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுற்
காமநோய் சொல்லி யிரவு.

(தலைமகன் பிரியாமைக் குறிப்பைத் தோழிக்கறிவுறுத்தது.)

(இ—ரை.) காமநோய் கண்ணினுல் சொல்லி இரவு—மகளிர் தம் காமநோயைத் தம் உயிர்த்தோழியர்க்கும் வாய் விட்டுச் சொல் லாது, கண்ணினுற் குறிப்பாக வுணர்த்தி அதைத் தீர்க்க வேண்டு மென்று இரப்பது; பெண்ணினுல் பெண்மை யுடைத்து என்ப— தமக்கு இயல்பாகவுள்ள பெண்டன்மை மேலும் ஒரு பெண்டன்மை யுடைமையாகும் என்பர் அறிந்தோர்.

'கண்ணினுற் காமநோய் சொல்லியிரவு' என்பதே மூலமாதலால் 'இரவு' என்பதற்கு ''உடன் போதல் குறித்துத் தம் அடியினை யிரத் தல்'' என்று பரிமேலழகர் உரைத்திருப்பது மிகையே யாம். தலை மகன் தன் பிரிவின்மைக் குறிப்பை அறிவுறுப்பான், தலைமகளின் நாணச் சிறப்பை வியந்து அதைப் பொதுப்படுத்திக் கூறியவாறு.

அதி. கஉக—புணர்ச்சி விதும்பல்

அஃதாவது, தலைமகனும் தலைமகளும் கலவிக்கண் விரைதல். தலைமகள் பிரிவாற்றாது உடன்போக் குடம்பாட்டுக் குறிப்புணர்த்தலும் தலைமகன் பிரிவின்மைக் குறிப்புணர்த்தலும் புணர்ச்சிக் கேதுவாதலின், குறிப்பறி வுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

கஉஅந. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

(பிரிதற் குறிப்பினனாகிய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) உள்ளக் களித்தலும்—நினைத்தவளவிலேயே உள்ளங் கிளர்தலும்; காண மகிழ்தலும்—கண்ட வளவிலேயே இன்புறுதலும்; காமத்திற்கு உண்டு கள்ளுக்கு இல்—காம நுகர்ச்சிக்குரிய காதலன் (அல்லது காதலி) பற்றி யுண்டாகும், குடிப்பிற்குரிய கள் பற்றி யுண்டாகா.

ஆதலாற் காதலன் முன்பு புலப்ப தெங்ஙனம் என்பதாம். களித்தல் கள்ளுண்டு மகிழ்ச்சியடைதல்; மகிழ்தல் கள்ளுண்டு வெறித்து இன்புறுதல். இவ்விரண்டும் உண்டாலன்றி யின்மையின் 'கள்ளுக்கில்' என்றாள். 'உண்டு' என்பது முன்னுஞ் சென்றியைதலால் இறுதி விளக்கு. இதை ஓர் அணியாகக் கொள்வர்.

கஉஅஉ. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்.

(இதுவு மது)

(இ—ரை.) காமம் பனைத் துணையும் நிறைய வரின்—மகளிர்க்குக் காமம் பனையளவாகவும் நிரம்ப வுண்டாகு மாயின்; தினைத் துணையும் ஊடாதமை வேண்டும்—அவர் தம் காதலரொடு தினையளவும் ஊடுதலே மேற் கொள்ளா திருத்தல் வேண்டும்.

ஊடின் புணர்ச்சி தடைப் பட்டுக் காம நோய் அள விறந்த துன்பந்தரு மென்று, பிறர்க்கு நல்லது சொல்வாள் போன்று தன் விதுப்புக் கூறியவாறு. தினை பனை யென்னும் அளவுப் பெயர்கள் முறையே சிற்றளவும் பேரளவும் உணர்த்தி நின்றன. உம்மை இரண்டனுள் முன்னது இழிவு சிறப்பு; பின்னது உயர்வு சிறப்பு.

கஉஅங. பேணுது பெட்பவே செய்யினுங கொண்கனைக்
காணு தமையல் கண்.

(இதுவுமது)

(இ—ரை) பேணுது பெட்பவே செய்யினும்—நம்மைப் புறக் கணித்துத் தாம் விரும்பியவற்றையே செய்வாராயினும்; கொண் கனைக் காணுது கண் அமையல--காதலரைக் காணுது என் கண் கள் அமைகின்றன வல்ல.

அத்தகைய கண்களை வைத்துக்கொண்டு நான் புலப்பதெங் ஙனம் என்பதாம். தன்விதுப்புக்கண்மே லேற்றப்பட்டது. ஏகாரம் பிரிநிலை. எதிர்மறையும்மை ஒத்துக்கொள்வுப் பொருளது.

கஉஅச. ஊடற்கட் சென்றேன்மற் றேழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

(இதுவுமது)

(இ—ரை.) தோழி—தோழீ! ; ஊடற்கண் சென்றேன்—காத லரைக் காணுமுன் அவர் செய்த தவற்றை நினைந்து அவரோடு ஊடுதலை மேற்கொண்டேன்; என்நெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது—ஆனால், அவரைக் கண்டவுடன் என் உள்ளமோ அதை மறந்து அவரோடு கூடுதலை மேற்கொண்டு விட்டது.

அவரைக் கண்டவுடனேயே என் நெஞ்சு அறைபோனமையின் என் தீர்மானம் நிறைவேறவில்லை யென்பதாம் ஊடற்கண் சென்ற தனால் என்ன பயன் என்பதுபட நின்றமையின் 'மன்' ஒழியிசை. ஊடற்கண் சென்றதும் நெஞ்சேயாதலின் 'அது மறந்து' என்றாள்.

கஉஅடு. எழுதுங்காற்கோல்காணுக் கண்ணேபோற்கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

(இதுவுமது)

(இ—ரை.) எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல்—மற்ற நேரமெல்லாங் காணக்கூடியதாயிருந்தும், கண்ணிற்கு மைதீட் டும்போது மட்டும் தீட்டுக் கோலைக் காணமுடியாத கண்ணேபோல; கண்டவிடத்துக் கொண்கன் பழிகாணேன்—கனவரைக் காணுத விடத்தெல்லாம் அவர் தவற்றைக் கண்டிருந்து. அவரைக் கண்ட விடத்து மட்டும் அதைக் காணவியலாது போகின்றேன்.

கஉஅசு. காணுங்காற் காணேன் றவருய காணுக்காற்
காணேன் றவறல் லவை.

(இதுவுமது)

(இ—ரை.) காணுங்கால் தவருய காணேன்—கணவரை யான் காணும்பொழுது அவர் தவறுகளை ஒரு சிறிதுங் காண்கின்றிலேன்; காணுக்கால் தவறு அல்லவை காணேன்—அவரைக் காணுத பொழுதோ அத்தவறுகளையல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்.

முன்பு நான் சொன்ன அவருடைய தவறுகளை இதுபோது காணுமையாற் புலந்திலேன் என்பதாம். கொண்கனை என்னுஞ் செயப்படுபொருள் அதிகாரத்தால் வந்தது.

கூஉஅஎ. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தேன் புலந்து.

(இதுவுமது)

(இ—ரை.) உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல்—தம்மை யிழுத்துக்கொண்டு போகுமென்பதை அறிந்திருந்தும் வேகமா யோடுகின்ற வெள்ளத்திற் பாய்வார்போல்; பொய்த்தல் அறிந்து புலந்து என்—ஊடல் நீடு நில்லாமை யறிந்திருந்தும் கணவரோடு ஊடி என்ன பயன்?

புலத்தலால் துன்பமே யன்றி யின்பமில்லை யென்பதாம். பாய்வார்போற் புலந்து என இசையும். "பொய்த்தலறிந்தே னென்பது பாடமாயின், உய்த்தலறிய ஓடு நீருட் பாய்வார்போல முடிவறியப் பண்டொருகாற் புலந்து முடியாமை யறிந்தேன்; இனி அது செய்தற் பாற் றன்றென வுரைக்க" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருத்தமே. ஏகாரம் பிரிநிலை.

கூஉஅஅ. இளித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்ளநின் மார்பு.

(தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.)

(இ—ரை.) கள்ள—மாயக்காரரே!; நின் மார்பு—எங்கட்கு உம்முடைய மார்பு; களித்தார்க்கு இளித்தக்க இன்ன செயினும் கள் அற்றே—தன்னையுண்டு மகிழ்ந்தவர்க்கு இழிவுதரத்தக்க தீய வற்றைச் செய்யினும், அவரால் மேன்மேலும் விரும்பப்படுவதாகிய கள்ளுப் போன்றதே.

இன்னுதவை நாணின்மை, நிறையின்மை, உணர்வின்மை, ஒழுக்கமின்மை, துப்புரவின்மை முதலியன. எங்கட்கு நாணின்மை முதலியவற்றை நீர் செய்யினும், எங்களால் மேன்மேலும் நீர் விரும்பப்படுவது வியப்பானதே யென்பதாம். அத்தகைய விருப்பமுண்டாமாறு மாயத்தொழில் வல்லீர் என்பாள் 'கள்வ' என்றாள். ஏகாரம் தேற்றம்.

ஃஉஅஃ. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) காமம் மலரினும் மெல்லிது—காமவின்பம் மலரினும் மெல்லியதாகும்; அதன் செவ்வி தலைப்படுவார் சிலர்—அதை யறிந்து அதன் மென்மை கெடாது நுண்ணிதாக நுகர்பவர் உலகத்துச் சிலரே.

காலமும் இடமும் அறிந்து, குறிப்பும் வேட்கையும் உடல்நிலையும் நோக்கி, கலவிவினைகட்கேற்ற துணைக்கருவிகளுடன் நூன்முறைப்படி நுகரவேண்டுதலின் சிலரதன் செவ்வி தலைப்படுவார் என்றும், இவற்றுள் ஒன்று குறையினும் இன்பங் கெடுமாதலின் 'மலரினும் மெல்லிது காமம்' என்றும், கூறினான். தொடின் வாடுவதும் மோப்பக் குழைவதுமான எல்லாம் உட்பட 'மலர்' என்றான். உம்மை உயர்வு சிறப்பு. குறிப்பொவ்வாமையால் நான் காமச்செவ்வி பெற்றிலேன் என்பதாம். தலைமகள் ஊடல் தீர்தல் இதன் பயன்.

ஃஉஉ0 கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

(இதுவுமது.)

(இ—ரை.) கண்ணின் துனித்தே—முன்னொருநாள் தழுவல் விதுப்பினாற் சென்ற என்னை நெடுங்கண்ணாவாகவே மட்டும் காதலியூடி; என்னினும் தான் புல்லுதல் விதுப்புற்றுக் கலங்கினாள்—என்னினும் தான் தழுவல் விதுப்புற்றதினால் அக் கண்ணளவூடலையும் மறந்து அப்பொழுதே கூடிவிட்டாள். அதனால், யான் இத்தன்மையேனாய் ஏங்கிநிற்கவும் விதுப்பின்றி யூடிநிற்கின்ற இவள் அவளல்லள்.

கண்ணளவாக வூடுதல் சொல் நிகழ்ச்சியின்றிக் கண்சிவத்தல். அவளாயின் ஊடற்கண் நீடாமை பயன். ஏகாரம் பிரிநிலை.

அதி. கஙo—நெஞ்சொடு புலத்தல்

அஃதாவது, கரணிய முண்டாய விடத்தும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்பும் நெஞ்சுடன் தலைமகன் புலத்தலும் தலைமகள் புலத்தலுமாம். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

கஉகூக. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

(தலைமகன்கண் தவறுண்டாய விடத்தும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)

(இ—ரை.) நெஞ்சே—என் உள்ளமே!; அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும்—அவருடைய உள்ளம் நம்மை நினையாது அவருக்கே யுதவுதல் கண்டபின்பும்; நீ எமக்கு ஆகாதது எவன்—நீ எமக்கு உதவாது அவரையே நினைத்தற்குக் கரணியம் யாது?

பிறர் நமக்குதவாது எப்போதுந் தன்னலமாகவே யிருக்கும் போது, நீ மட்டும் ஏன் தன்னலம் பேணுது பிறர் நலத்தையே நோக்குகின்றாய் என்பதாம். அவர்க்காதல் அவர் கருதியதற் குடம்படுதல். 'எமக்காகாதது' என்றது புலவிக் குடம்படாமையை.

கஉகூஉ. உருஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செருஅரெனச் சேறியென் னெஞ்சு.

(இதுவுமது.)

(இ—ரை.) என் நெஞ்சு—என் உள்ளமே!; உருதவர்க் கண்ட கண்ணும்—கணவர் இன்று நம்மாட்டு அன்பில்லாதவர் என்று அறிந்த பின்பும்; செருர் என அவரைச் சேறி—நாம் அவரிடஞ் சென்று ல் சினவாமற் சேர்த்துக்கொள்வாரென்று கருதி அவர்பாற் செல்லுகின்றாய்; இதுபோலும் மடமை வேறுண்டோ!

பழங்காதல் நோக்கிச் செல்கின்றாய். நீ கருதியது நிறை வேறுமோ வென்பதாம். 'அவரை' வேற்றுமை மயக்கம்; இரண்டாவது ஏழாவதில் மயங்கிற்று. 'உருஅ' இசைநிறை யளபெடை. செருஅர்' எதுகை பற்றி வந்த இன்னிசை யளபெடை.

கஉகூந. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

(இதுவுமது)

(இ—ரை.) நெஞ்சே—என் உள்ளமே! ; நீ பெட்டாங்கு அவர் பின் செலல்—என்னிடத்து நில்லாது நீ விரும்பியவாறே அவரிடஞ் செல்லுதற்குக் காரணியம்; கெட்டார்க்கு நட்டார் இல் என்பதோ—நொடித்தவர்க்கு உறவில்லை என்னும் உலக நடப்போ, வேறு? சொல்வாயாக.

என் கட்டிற் கடங்காது செல்கின்ற யென்பாள் 'பெட்டாங்கு' என்றும், தான் மான மிழந்தமையின் 'கெட்டார்க்கு' என்றும், தன் வயமின்றிப் பிறர் வயப்படுதல் அடிமைத்தனம் என்பாள் 'பின் செலல்' என்றும், கூறினாள். உடன் பிறந்து உடன் வாழும் உள்ளமும் உதவாதநிலையில் உள்ளேன் என்பதாம். பெட்டாங்கு பெட்டாங்கு.

கூ0கூ. இனியன்ன நின்னெஞ்சு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

(இதுவுமது)

(இ—ரை.) நெஞ்சே— என் உள்ளமே! ; துனிசெய்து மற்றுத் துவ்வாய்—கணவரைக் கண்டால் அவர் தவறு நோக்கி முன்பு ஊடி அதை அளவறிந்து நீக்கி அதன் பின்பு கூடக் கருதாய். கண்டவுடன் இன்பம் நுகரக் கருதுகின்றாய்; இனி அன்ன நின்னெஞ்சு யார் சூழ்வார் — ஆதலால், இனி அத்தகைய செய்திகளை உன்னெஞ்சு கூடி யார் எண்ணுவார்? நான் இனி எண்ணேன்.

முன்னெல்லாம் புலப்பதாக விருந்து இன்று புணர்ச்சி விதும்பு தலின் இவ்வாறு கூறினாள். 'அன்ன' என்றது ஊடும் அல்லது புலக்குந் திறங்களை, 'காண்' உரையசை. 'மற்று' பின்மைப் பொருளது.

கூ0கூடு. பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மருஅ விடும்பைத்தென் நெஞ்சு.

(வாயிலாகச் சென்ற தோழிகேட்பத் தலைமகள் சொல்லியது.)

(இ—ரை.) பெருமை அஞ்சும்—காதலரைப் பெறுதபோது அப்பெருமைக்கு அஞ்சுகின்றது; பெறின் பிரிவு அஞ்சும்—பெற்ற போதோ எதிர்காலத்தில் நேரக் கூடிய பிரிவைக் கருதிக்கொண்டு அதற்கு அஞ்சுகின்றது; என் நெஞ்சு அரு இடும்பைத்து—இங்ஙனம் என் உள்ளம் தீராத துன்பத்தையுடையதா யிருக்கின்றது.

பெருதபோது கலவியின்மை பற்றியும் பெற்றபோது கலவி தொடராமை பற்றியும் அச்சம் உண்டாவதால், என் வாழ்க்கை எப் போதும் துன்பவாழ்க்கையே என்பதாம். அஞ்சுதல் அஞ்சி வருந்து தல். 'பெருஅமை,' 'அருஅ' இசைநிறை யளபெடைகள்.

கஉகூசு. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.

(இதுவுமது)

(இ—ரை.) தனியே இருந்து நினைத்தக்கால்— காதலரைப் பிரிந்திருந்து அவர் செய்த கொடுமைகளை யான் தன்னெடு நினைத் தக்கால்; என்னைத் தினிய என் நெஞ்சு இருந்தது—என்னைப் பிய்த் துத் தின்பதுபோல் துன்பஞ் செய்தற்கே என்உள்ளம் என்னெடுகூட இருந்தது.

என் நெஞ்சு என்னைடிருந்தது. அவர் செய்த கொடுமைகளை எண்ணி எனக்கு ஆற்றுமைமேலுந் துன்பஞ் செய்தற்கேயன்றி, இன்று அவை நோக்கி அவரொடு புலத்தற்கன் றென்பதாம்.

கஉகூஎ. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு.

(இதுவுமது)

(இ—ரை.) அவர் மறக்கல்லா என் மாணு மடநெஞ்சிற் பட்டு—தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லா மடநெஞ்சின் சேர்க்கையினால்; நாணும்மறந்தேன் —என் உயிரினுஞ் சிறந்த நாணையும் மறந்துவிட்டேன்.

மாணுமை மானத்தைக் காத்துக்கொள்ளாமை. மடமை, கண்ட போது நினைத்துக் காணுதபோது மறக்கவேண்டிய தவற்றைக் காணுதபோது நினைத்துக் கண்டபோது மறத்தல். நாண், பல் லாண்டு கூடியொழுகிய பின்பும் அன்று கண்டாற்போல் உள்ளமும் உடம்பும் ஒடுங்குதல்.

"எஞ்ஞான்று மெங்கணவ ரென்தோள்மேற் சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்" (நாலடி. கஅடி)

கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலால் 'நாணும் மறந்தேன்' என்றாள். உம்மை உயர்வு சிறப்பு.

கஉகூஅ. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளூ முயிர்க்காத னெஞ்சு.

(இதுவுமது.)

(இ—ரை.) உயிர்க் காதல் நெஞ்சு—உயிர்மேற் காதலை யுடைய என் உள்ளம்; எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி—நம்மைப் பொருட்படுத்தாது சென்றுரென்று நம் கணவரை நாமும் பொருட்படுத்தாதிருப் போமாயின் பின் நமக்கு இழிவாம் என்று கருதி; அவர் திறம் உள்ளும்—அவர் பக்கமே நினைக்கும்.

எள்ளுதல் வாயில் மறுத்தல், அஃதாவது தலைமகள் புலவியைத் தீர்க்குமாறு தலைமகன் விடுத்த தோழி, பாங்கன், பாணன், புலவன் முதலியோரை ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்தல். இளிவு, பணியாமையாலும் பிரிவாற்றுமையாலும் அழகும்நிறையும் நாணும் இழத்தலாலும் நேர்வது, திறம், வாயில் நேர்தலும் புலவிதீர்தலும் கூடலும் முதலியன. இளிவிற் கஞ்சுதலாலும் இறந்து படமாட்டாமையாலும் கூடக் கருதுகின்ற தென்பதாம். இறந்து படவிரும்பாமை 'உயிர்க்காதல் நெஞ்சு' என்றதால் அறியப்படும்.

கஉகஉ. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.)

துன்பத்திற்கு—ஒருவர்க்குத் துன்பம் வந்தவிடத்து அதை நீக்குதற்கு; தாம் உடைய நெஞ்சம் துணையல்வழி—தம்முடன் பிறந்து தம் முறுப்பாக இரண்டறக் கலந்திருப்பதும் தமக்குதவ முழுக்கடமைப் பட்டிருப்பதுமான உள்ளமே துணையாயிருந்து உதவாத விடத்து; யாரே துணையாவார்—வேறுயார்தான் துணையாக வந்து உதவுவார்?

துன்பம் என்றது இங்கு உணர்ப்புவயின் வாரா ஊடலை. அஃதாவது தலைமகன் தெளிவிக்கவுந் தெளியாத தலைமகள் சடைவை. அதற்கு நெஞ்சந் துணையாகாமையாவது, அவனை யன்பிலனென்று விட்டு நீங்காது அவளொடு கூடற்கண் விதும்பல். வாழ்க்கைத் துணையும் எனக்குத் துணையாகாது என் அந்தக்கரணமும் எனக்குத் துணையாகாது போனபின், நான் இத்துன்பத்தை எங்ஙனந் தாங்குவேன் என்பதாம். ஏகாரம் பிரிநிலை.

கஉ00. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

(இதுவுமது)

(இ—ரை.) தாம்உடைய நெஞ்சம் தமர் அல்வழி— தம் உறுப் பாகவுள்ள உள்ளமே ஒருவர்க்கு உறவல்லாத விடத்து; ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம்—அயலார் உறவல்லாதவராக இருத்தல் மிக எளிதாகக் காணக்கூடிய செய்தியே யாகும்.

புறத்தி யொருத்தியைக் காதலியென்று கருதி என் உள்ளமே என்னை வருத்தும்போது, அப்புறத்தி புலக்கின்றதில் என்னை வியப் புள்ளது என்பதாம். 'தமர்' ஆகுபொருளி. 'தஞ்சம்' எளிமைப் பொருளிடைச் சொல். ''தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.'' (தொல். சொல். இடை. கஅ.)

அதி. கஙக—புலவி

அஃதாவது, தலைமகள் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவிடத் துப் புலத்தல். அதிகார முறைமையும் இதனுல் விளங்கும்.

புலத்தல் தலைமகள் செயலேயாதலாலும், இவ்வதிகாரத் தலைப் புப் புலவி யென்றே யிருத்தலாலும், உணர்ப்புவயின் வாராஞுடற் கண் தலைமகன் சொல்வதெல்லாம் கூடாறகியலாமைபற்றி நொந்து கொள்வதல்லது கூடல் வேண்டாமென விலக்குதலன்மையாலும் ''இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவழி ஒரு வரோடொருவர் புலத்தல்.'' எனப் பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தா தென்க.

கஙஅ. புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லலஞ் செய்காண்கஞ் சிறிது.

(வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில் நேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.)

(இ—ரை.) புல்லாது இராப்புலத்தை—தலைவியே! நீ விரைந்து சென்று காதலரைத் தழுவாது இக்கரணியத்தை மேற்கொண்டு புலப்பாயாக; அவர் உறும் அல்லல் நோய் சிறிது காகம்—அங்ஙனம் புலந்தால் அவர் அடையும் துன்பநோயைச் சற்றுக் கண்டு களிப்போம்.

உன் ஆற்றுமை கண்டும் பிரிந்துபோய் நமக்குப் பெருந்துன் பத்தை விளைத்ததினுல், நாமும் அவர்க்குச் சிறிது துன்பம் விளைத்து அவர் படுமபாட்டைக் காண்போம் என நகையாடி வாயில் நேர்

வித்தவாறு. 'அல்லல்நோய்' துன்பத்தைச் செய்யுங் காமநோய். புலவி நீளின் சுவையிழக்குமாதலால் 'சிறிது' என்றாள். 'புலத்தை' —'ஐ' ஏவலொருமை யீறு, 'புலத்தி' என்பதும் பாடம். 'இராஅ' இசைநிறையளபெடை.

கூஉ0உ. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.

(புலவி தீர்ந்து வாயில் நேரும்வகை தோழி சொல்லியது.)

(இ—ரை.) புலவி உப்பு அமைந்த அற்று—புலவி கலவி இன்பஞ் செய்தற்கு வேண்டிய அளவாயிருத்தல்; உப்புச் சமைத்த வுணவு இன்சுவையாதற்கு வேண்டும் அளவினதாயிருத்தல் போலும்; சிறிது நீள விடல் அது மிக்க அற்று—இனி, அப்புலவியை அவ்வளவினுஞ் சிறிது மிக விடுதல் அவ்வுப்பு அளவிற்கு மிஞ்சினற் போலும்.

பழகப் பழகப் பாலும் புளிப்பதுபோல, நாள்தொறும் நுகர்ந்து வரும் கலவியின்பம் நாளடைவிற் சுவைகுன்றியபோது அதற்குச் சுவையூட்டுதலின், புலவியை உப்பு என்றாள். ஆயினும், உப்பு மிக்க விடத்து உணவுச்சுவை கெட்டாற்போல, புலவி அளவிற்குமேல் நீண்ட விடத்துக் கலவியின்பங்கெடும் என்றவாறும். புலவியை நீள விடுதலாவது, கலவிமேலெழுந்த குறிப்பும் ஆசையும் அடங்குமளவு புலத்தல், வாயில் நேர்விக்கின்றுளாதலின், சிறிதும் நீளவிடலாகாது என்றாள். 'ஆல்' ஈரிடத்தும் அசைநிலை.

கூஉ0ஊ. அலந்தாரை யல்லலுநோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

(பரத்தையரிடத்து நின்றும் வந்ததாகக் கருதப்பட்ட தலைமக னெடுந்தலைமகள் புலந்து சொல்லியது.)

(இ—ரை.) தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்—தம்மைப் பெரிது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது ஆடவர் விட்டு விடுதல்; அலந்தாரை அல்லல் நோய் செய்த அற்று—முன்னமே துன்பமுற் றழிந்தாரை அதன் மேலுந் துன்புறுத்தினற் போலும்.

நீர் பிறர்பாற் செல்லுதலின் நும்மைப் பெரிது புலந்திருக்கின்ற பரத்தையரிடஞ் சென்று, அவர் புலவி நீக்கித் தழுவினாயின் அவர் ஆற்றார் என்பதாம். 'ஆல்' அசைநிலை.

கஙoச. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

(இதுவுமது)

(இ—ரை.) ஊடியவரை உணராமை—நும்மோ டூடிய பரத்தை யரை ஊடல் தீர்த்துக் கூடாது விடுதல்; வாடிய வள்ளி முதல் அரிந்த அற்று—முன்பே நீர் பெருது வாடிய கொடியை அடியில் அறுத்துவிட்டாற் போலும்.

நீர் பரத்தையரோ டிருக்குங்கால் எம் புதல்வரைக் கொண் டாற்றியிருக்கத் தக்கேமாகிய யாம், நும்மோ டூடுதற் குரியே மல் லேம். ஆதலால் எம்மை யுணர்த்தல் வேண்டேம். எம்மினும் நுமக்குரியாரா யூடிய பரத்தையரையே யுணர்த்துதல் வேண்டும். ஆதலால் அங்கேயே சென்மின் என்பதாம்.

கஙoஞ. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து.

(தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

(இ—ரை.) நலத்தகை நல்லவர்க்கு ஏர்—நற் குணங்களால் நிறையுடைய நல்ல ஆடவர்க்கும் அழகாவது; பூ அன்ன கண்ணார் அகத்துப் புலத்தகை—தம் மலர் போலுங் கண்களையுடைய மகளிரின் நெஞ்சில் நிகழும் புலவிச் சிறப்பன்றே?

தான் நுகர்ந்த சிறந்த இன் ப த் தி ற் கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு. தவறில்லாதவர்க்கும் புலவி இனிதென்பான், "நலத்தகை நல்லவர்க்கும் ஏஎர்" என்றான். அழகு இன்பப் பயனு கிய மனவெழுச்சி. சிறப்பும்மை தொக்கது. 'ஏஎர்' இசை நிறை யளபெடை.

கஙoட. துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.

(இதுவு மது)

(இ—ரை.) துனியும் புலவியும் இல்லாயின்—முதிர்ந்த சுடை வாகிய துனியும் அளவான சுடைவாகிய புலவியும் இல்லாவிடின்; காமம் கனியும் கருக்காயும் அற்று—காம வின்பம் முறையே நன்று கப் பழுத்த பழமும் பழுக்காத கன்னற் காயும் போல்வதாம்.

காமவின்பம் ஊடல், புலவி, துனி என்னும் மூவகைச் சடைவு நிலையிலும் முறையே கன்னற்காய், பழம், அளியல் என்னும் மூவகைப் பதங் கொள்ளும் பழுக்காத கன்னற்காய்ப் பதமும் மிகப் பழுத்த அளியற் பதமும் சுவையின்றி வலுத்தும் சுவை கெட்டு அளிந்தும் இருக்குமாதலின், இடை நின்ற கனிப் பதமே மென்மையும் இனிமையுங் கொண்டு இன்பந் தருவதாம். ஆதலால், அளவாகவுப்பமைந்தது போன்ற புலவி நிலையே இனிதான கனி போல் இன்பந் தருவதற் கேற்ற தென்பதாம்.

கஉ0எ. ஊடலினுண் டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

(இதுவுமது)

(இ—ரை.) புணர்வது நீடுவது(கொல்) அன்றுகொல் என்று—இனிப் புணர்ச்சி காலந்தாழ்க்குமோ தாழ்க்காதோ என்று கருதுதலால்; ஊடலின் ஓர் துன்பம் உண்டு—இன்பத்திற்கேதுவான ஊடலிலும் ஒரு துன்பமுள்ளதாம்

விரைந்து கூடற்கேதுவான ஊடலே பயன்தருவதென்பதாம். கருதுதலால் என்பது அவாய்நிலையால் வந்தது. சிறப்பும்மை தொக்கது. 'கொல்' முன்னுங் கூட்டப்பட்டது. 'ஆங்கு' அசைநிலை.

கஉ0அ. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி.

(உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் நொந்து சொல்லியது.)

(இ—ரை.) நொந்தார் என்று அஃது அறியும் காதலர் இல்லா வழி—இவர் நம் செயல் பற்றி நொந்தாரென்று அந்நோவினையறியும் அன்புடையார் இல்லாதவிடத்து; நோதல் எவன்—ஒருவர் நொந்து என்ன பயன்?

இவள் நம் காதலியல்லள். ஆகலால் நம் நோவறியாள். ஆகவே, நாம் நோவதாற் பயனில்லை யெனத் தன் ஆற்றுமையுணர்த்தியவாறு. அறிதல்—அறிந்து ஊடல் தீர்தல் மற்று—அசைநிலை.

கஉ0க. நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது

(இதுவுமது.)

(இ—ரை.) நீரும் நிழலதே இனிது—உயிர்வாழ்க்கைக் கின்றி யமையாத நீரும் நிழலடியுள்ளதே குளிர்ந்து இன்பந் தரும்; வெயி லிற் காய்ந்தது இன்பந்தராது; புலவியும் வீழுநர் கண்ணே இனிது—அதுபோலக் கலவியின்பத்தை மிகுக்கும் புலவியும் அன்புடையாரி டத்தே இன்பத்திற் கேதுவாகும்; அன்பிலாரிடத்தோ துன்பத் திற்கே யேதுவாகும்.

இது வெப்பநாடாதலின் முது வேனிற்கால நண்பகற் காட்டு வழிப்போக்கன் நீர் வேட்கை, நிலைமை நோக்கி 'நிழலதே இனிது' என்றான். தழைத்தடர்ந்த தண்கா நிழலில் தங்கிய நீர் பனிநீர் போற் குளிர்ச்சிமிக்குத் தாகமுங் களைப்புந் தணித்தலின் இனி தாயிற்று, ''காவோடறக்குளந் தொட்டானும்'' (திரிகடுகம், ஈ0) என்றதை இத்தொடர்பில் நோக்குக. 'வீழுநர்' காதலரின் ஆற்று மைக்கு நோதலும் கலவியின்கண் வேட்கையுமுடையவர். இவ ளுக்கு அவ்விரண்டுமின்மையின் இப்புலவி இன்னுதாயிற்று என் பதாம். ஏகாரம் ஈரிடத்தும் பிரிநிலை. இவற்றுள் முன்னது பிரித்துக் கூட்டப்பட்டது.

கங்க0. ஊடலுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

(புலவி நீங்கவேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் புலவி தீர்வாளாய்ச் சொல்லியது)

(இ—ரை.) ஊடல் உணங்க விடுவாரோடு—ஊடல்கொண்ட போது உணர்த்தி மகிழ்விக்காமல் வாடவிடுகின்றவரோடு; என் நெஞ்சம் கூடுவேம் என்பது—என் உள்ளம் கூடியின்புறுவேம் என்று கருதுகிறதற்குக் காரணியம்; அவா—அதன் ஆசையன்றி வேறன்று.

இதற்குப் பரிமேலழகருரை வருமாறு:—

(உணர்ப்புவயின் வாராவூடற்கட் டலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.)

ஊடல் உணங்க — தானூடற்கண்ணே மெலியா நிற்கவும்; விடுவாரோடு கூடுவேம் என்பது என்னெஞ்சம் அவா—விட்டிருக்க வல்லாரோடு கூடக்கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கேது தன்னவாவே பிறிதில்லை.

என்பதற்கேது என இருக்கவேண்டியது, 'என்பது' எனக் கருமகம் (காரியம்) காரணகமாக (காரணமாக)ச்சார்த்திக்கூறப்பட்டது.

அதி. கஉ—புலவி நுணுக்கம்

அஃதாவது, நுண்புலவி. அது, தலைமகனும்தலைமகளும்ஒருமளிக்கண் கூடியிருந்தவிடத்து அவன்பாற் புலத்தற்குக் காரணமானதவறில்லை யாகவும் தன் காதல் மிகுதியால் ஒரு நுண்ணிய தவறிருப்பதாக வுட்கொண்டு அவனெடு அவள் புலத்தல். இது புலவியின்நுணுக்க, மாதலின் புலவியின் பின்வைக்கப்பட்டது. தவறு என்னும் காரண கத்தின் நுணுக்கம் புலவி என்னும் கருமகத்தின்மேல் நிற்றது.

கஙகக. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நணணேன் பரத்தநின மாபு.

(உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தானைத் தலைமகள் சொல்வியது.)

(இ—ரை.) பரத்த—பரத்தமையுடையாய்; பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொது வுண்பர்—பெண்தன்மையுடையவரெல் லாரும் தம் கண்ணுற்பொதுவாக நுகர்வர்; நின்மார்பு நண்ணேன்— ஆதலால், அவர் நுகர்ந்த எச்சிலாகிய உன் மார்பைப் பொருந்தேன்.

முடிசூட்டு நாளன்றும் வெற்றிவிழா நாளன்றும் அரசன் தேரேறித் தன் தலைநகரத்துத்தேர் மறுகுகளில் உலாவரும்போது, பேதை முதலிய எழுவகைப்பருவமகளிரும் அவன்மீது காதல் கொள்வதாகப் பாடுவது உலா எனும் பனுவல்.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப," (தொல். கoகூ) பரத்தையர் கற்பு நிறை நாண் முதலிய நற்குணங்களின்றிப் பெண் வடிவு மட்டுங் கொண்டவர் என்னுங் கருத்தாற் 'பெண்ணியலார்' என்றார். பொதுவுண்டல் ஒருங்கு நோக்குதல். இதனாற் பரத்தமை புலவிநுணுக்கத்தில் தலைமகன்மேல் ஏற்றிக் கூறப்படுவதல்லது, உண்மையாக நிகழ்வதன்றென்றும், திருவள்ளுவர் கூறும் இன்பத் துப்பாலிற்குரியதன் றென்றும் அறிந்துகொள்க.

கஙகஉ. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

(தலைமகன் சென்றபின் வந்த தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.)

(இ—ரை.) ஊடி இருந்தேமாத் தும்மினீர்—யாம் தம்மோடு உரையாடா திருந்தேமாகக் காதலர் தும்மினீர்; யாம் தம்மை நீடு வாழ்க என்பாக்கு அறிந்து—அது எதற்கெனின், யாம் ஊடல் நீங்கித் தம்மை நீடுவாழ்க என்று வாழ்த்தி உரையாடுதற்கு.

இயல்பாக நிகழ்ந்த தும்மலை வேண்டுமென்று செய்ததாகக் கொண்டதால் (புலவி) நுணுக்கமாயிற்று. தும்மியபோது வாழ்த்துதல் மரபாகலால், உரையாடல் வேண்டியதாயிற்று என்பதாம். 'யாம்' என்றது அரசப் பன்மை (Royal 'we'), அகரந் தொக்கது.

கஙகங. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று

(தலைமகள் புலவிக் குறிப்பைக் கண்டு நீவிர் கூடி யெழுகி வரவும், இது நிகழ்தற்குக் காரணகம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

(இ—ரை.) கோட்டுப்பூச் சூடினும்—இம்மருத நிலத்து நீர்ப் பூவும் கொடிப்பூவு மன்றி வேற்று நிலத்துக் கோட்டுப்பூவைச் சூடினேனையினும்; ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று காயும்—நும்மாற் காதலிக்கப்பட்ட வேறொருத்திக்கு இப்பூவணியைக் காட்டல் வேண்டிச் சூடினீரென்று சீற்றங் கொள்வாள் என் காதலி இத்தகையாளுக்கு ஒரு காரணகமும் வேண்டுமோ?

கோட்டுப்பூ மரக்கிளைகளில் மலர்வது. கோடு—கிளை. வேற்று நிலம் முல்லை குறிஞ்சி நெய்தல். கோட்டுப்பூவைக் கோடுதலைச் செய்யும் மாலை என்றார் பரிமேலழகர். ஆசிரியர் மாலையென்னாது பூவென்றமையாலும், "கோடுதலைச் செய்யும்" என்னுங் கருத்தில் ஒருசிறப்பு மின்மையானும், அது உரையன்மை அறிக

கஙகச. யாரினுங் காதல மென்றோ ளூடினள்
யாரினும் யாரினு மென்று

(இதுவுமது.)

(இ—ரை.) யாரினும் காதலம் என்றோளை—காமவின்பம் நுகர்தற்குரிய இருவராகிய கணவன் மனைவியர் வேறு யாரினும் நாம்

மிகுந்த காதலுடையோம் என்னும் பொருளில், ''யாரினுங் காதலம்'' என்று சொன்னேனாக; யாரினும் யாரினும் என்று ஊடினாள்—உன் தலைவி அப்பொருள் கொள்ளாது, என்னைற் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் உன்பால் மிகுந்த காதலுடையேன் என்று நான் கூறியதாகக் கொண்டு, ''யாரைவிட யாரைவிட'' என்று வினவிப் புலந்தாள்.

யான் அன்பு மிகுதியால் நல்ல பொருளிற் கூறியதைத் தீய பொருளில் தவருக உணர்ந்து கொண்டதல்லது, வேறு காரணம் இல்லை யென்பதாம். தலைமகள் கொண்ட பொருட்கு 'யார்' உயர்வுப்பன்மை

கஉகஎ. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

(இதுவுமது)

(இ—ரை.) இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக— காதல் மிகுதியால். இப்பிறப்பில் நாம் ஒருபோதும் பிரியோம் என்று கூறினேனாக; கண் நிறை நீர் கொண்டனள்—அதனால் மறுபிறப்பில் நான் பிரிந்துபோவேனென்று குறித்ததாகக் கருதித் தன் கண்நிறையக் கண்ணீரைப் பெருக்கிவிட்டாள்.

நான் சொன்ன வெளிப்படைச் சொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொண்டதல்லது என்பால் தவறில்லை யென்பதாம்.

கஉகஅ. உள்ளினே னென்றேன்மற் றென்மறந் தீ
புல்லாள் புலத்தக் கனள். (ரென்றென்னைப்

(இதுவுமது)

(இ—ரை.) உள்ளினேன் என்றேன்—பிரிந்து போயிருந்த காலத்தில் உன்னை ஒருபோதும் மறவாது நினைத்திருந்தேன் என்னுங் கருத்தில், ''உள்ளினேன்'' என்றேன்; மற்று என் மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்கனள்—உடனே அதை ஒருகால் மறந்திருந்து பின்பு நினைத்துக்கொண்டேன் என்று நான் கூறியதாகக் கருதி, என்னையிடையேமறந்துவிட்டீரென்றுசொல்லி, அதற்கு முன்பு என்னைத் தழுவுதற்கிருந்தவள் அதைச் செய்யாது அன்றே புலவியை மேற்கொண்டுவிட்டாள்.

எதிர்நிலை யளவை வகையால் உள்ளுதலுக்கு மறுதலையான மறத்தலையும் உட்கொண்டு புலந்தாள் என்பதாம். 'மற்று' வினை மாற்றின்கண் வந்தது.

கஉகஎ. வழுத்தினு டும்மினே னுக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

(இதுவுமது)

(இ—ரை.) தும்மினேனுக வழுத்தினுள்—என்னெடு கூட இருந்தவள் யான் தும்மினேனுக வழக்கம்போல் "நீடு வாழ்க" என்று வாழ்த்தினுள்; அழித்து யார் உள்ளித் தும்மினீர் என்று அழுதாள்—அங்ஙனம் வாழ்த்தியவளே தன் கருத்தை மாற்றி, நும்மாற் காதலிக்கப்பட்ட மகளிருள் யார் நினைத்ததனால் தும்மினீர் என்று சொல்லி யழுதாள்.

அன்பரால் நினைக்கப்பட்டவர்க்குத் தும்மலெழும் என்பது மகளிர் குருட்டுக்கொள்கை. அதை மெய்ந் நெறிக் கொள்கையாகக் கொண்டு புலந்தாள் என்பதாம். வழுத்து என்னுஞ்சொல் வாழ்த்து தற்பொருளில் வந்தது. வாழ்த்துதலும் புலத்தலும் தம்முள் இயையாமையின், 'அழித்து' என்றுன்.

கஉஅ. நும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

(இதுவுமது)

(இ—ரை.) நும்முச் செறுப்ப—எனக்குத் தும்மல் தோன்றிய போது, என்காதலி யாருள்ளித் தும்மினீரென்று புலத்தலஞ்சி, அதனையடக்க, நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள்—நும் காதலியார் நும்மை நினைத்தலை எனக்கு மறைக்கின்றீரோ என்று சொல்லி யழுதாள்.

தும்மினுங் குற்றம், தும்மலை யடக்கினுங் குற்றமாயின் என் செய்வது என்பதாம். 'நும்மு' முதனிலைத் தொழிற்பெயர். பரத்தையரை 'நுமர்' என்றதினால், 'எம்மை' யென்பது நும்மோடியைபில்லாத எம்மை யென்பதுபட நின்றது.

கஉகக. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிங்நீர ராகுதி ரென்று.

(இதுவுமது)

(இ—ரை.) தன்னை உணர்த்தினும்—இவ்வகையிற் காணுக மின்றி யூடிய தன்னை யான் பணிந்துரைத்து ஊடல்தீர்க்குங்காலும்; பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர் என்று காயும்—பிறமகளிர்க்கும் நீர் அவரூடியவிடத்து இவ்வாறே பணிந்துணர்த்துந் தன்மையை யுடையீராகுதிர் என்று சினங்கொள்வாள்.

இவள் நான் தெளிவித்த விடத்துந் தெளியாமை பற்றி, வேறு வழியில்லாது. என்மேல் இட்டேற்றிய பொய்யான தவற்றையும் உடம்பட்டுப் பணிந்தேன். ஆனால், நான் எதிர்பாராவண்ணம் அதுவும் புலத்தற் கேதுவாய் முடிந்தது. இனி இவள்பாற் செய்யத் தக்க தென்னவென்று தெரியாது மயங்கித் தியங்குகின்றேன் என்பதாம்.

கஉ0. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

(இதுவுமது)

(இ—ரை.) நினைத்திருந்து நோக்கினும் காயும்—நான் என்ன சொல்லினும் என்ன செய்யினும் அவற்றிற் குற்றங் காணுதலால் அவற்றை ஒழிந்திருந்து, தன் உறுப்புக்களின் ஒப்பிலா வழகை நினைந்து அவற்றையே வியந்து நோக்கினும், எண்ணிச் சினந்து கொள்வாள்; அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று—என் உறுப்புக்களெல்லாவற்றையும் நோக்கினீர், அவற்றின் ஒப்புமையால் எம்மகளிரை நினைந்து என்று வினவி.

நான் எல்லாவுறுப்புக்களாலும் ஒருத்தியை ஒத்திருத்தல் முடியாது. ஒவ்வோருறுப்போடும் ஒவ்வொருத்தியின் உறுப்பை ஒப்பு நோக்கின், அத்தனை யுறுப்பிற்கும் அத்தனை மகளிர் வேண்டுமே! அவரெல்லாரையும் இன்னின்னாரென்று இன்னே எனக்குச் சொல்ல வேண்டும் என்னுங் கருத்தால் 'அனைத்து நோக்கினீர் யாருள்ளி' என்றாள். அவளையே பார்த்து மகிழ்தலுங் குற்றமாயிற்றென்பதாம்.

அதி. கஙஉ—ஊடலுவகை

அஃதாவது, அத்தகைய ஊடலால் தமக்குக் கூடலின்பஞ் சிறந்த விடத்து, அச்சிறப்பிற் கேதுவான ஊடலைத் தலைமகனும் தலைமகளும் உவத்தல். உவத்தல் - விரும்பி மகிழ்தல். இவ்வதிகாரம் ஊடலுவகை யென்று பெயர் பெற்றிருப்பினும்,

''துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.'' (கூ உ ஙூ)

என்றதனுல், புலவிக்கு அடுத்திருப்பதும் துன்பத்திற் கேதுவானது மான துனியச்சம் எள்ளளவு மில்லாதிருத்தல் வேண்டுமென்பது பற்றியே, புலவியுவகையை ஊடலுவகையென்று குறித்தாரெனக் கொள்ளலாம். இனி விரைந்து பழுத்துவிடும் பழக்காய்போலப் புலவி நிகியடையும் ஊடல் முதிர்ச்சியெனக் கொள்ளினுமாம்.

கூஉக. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

(தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி, அங்ஙனம் நீ புலக்கின்ற தென்னே யென்றுட்கு அவள் சொல்லியது.)

(இ—ரை.) அவர்க்குத் தவறு இல்லையாயினும்—காதலர் பால் தவறில்லையாயினும்; அவர் அளிக்கும் ஆறு ஊடுதல் வல்லது—அவர் நம்மொடு செய்யும் பேரின்பக் கூட்டம் இங்ஙனம் அவரோடுடுதலை விளைக்கும் வலிமையுள்ளதாக விருக்கின்றது.

எல்லையில்லாத இன்பந்தருபவராயிருத்தலின், யான் பெறும் இப்பேரின்பம் பிற மகளிரும் பெறுவரெனக் கருதி, அது பொருமை யால் இவ்வூடல் நிகழ்கின்ற தென்பதாம். 'அவர்க்கு' வேற்றுமை மயக்கம்; நஞ்லாவது ஏழாவதில் மயங்கிற்று. உம்மை ஒத்துக்கொள் வுப் பொருளது.

கூஉஉ. ஊடலிற் ரோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

(புலவாக்காலும் அத்தகையளி பெறலாயிருக்க, இப்புலவியால் வருந்துவ தென்னே யென்ற தோழிக்கு அவள் சொல்லியது.)

(இ—ரை.) ஊடலின் தோன்றும் சிறுதுனி—ஊடல் காரணமாக என்கண் தோன்றும் சிறு சடைவினுல்; நல் அளி வாடினும் பாடு பெறும்—காதலர் செய்யும் நல்ல தகையளி சற்று வாடுமாயினும் பின்பு பெருமை பெறும்.

தவறில்லாவிடத்து நிகழ்கின்ற ஊடல் விரைந்து நீங்குதலின் 'சிறுதுனி' யென்றும், ஆராமை பற்றி நிகழ்தலின் நல்லளி மாபெரும் பாலும் வாடாதென்பாள் 'வாடினும்' என்றும், ஒருகால் சற்று வாடினும் அதனுற் பேரின்பம் விளையுமென்பாள் 'பாடுபெறும்' என்றும்,

கூறினாள். சிறுதுனியாற் பெரும்பயன் விளைதலின் அது வருத்த மெனப்படாதென்பதாம். தலையளி யென்பது பேரின்பக் கலவிக் கூட்டம். எதிர்மறையும்மை அருமைப் பொருளது.

கஙஉடு. புலத்தலிற் புத்தேணு டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ரகத்து.

(இதுவுமது)

(இ—ரை.) நிலத்தொடு நீர் இயைந்த அன்னரகத்துப் புலத் தலின்—நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதல ரொடு புலத்தல் போல்; புத்தேள் நாடு உண்டோ—நமக்கு இன்பந் தருவதொரு தேவருலகம் எங்கேனு முண்டோ? இல்லை.

நீர் தான் சேர்ந்த நிலத்தொடு கலத்தல் மட்டுமின்றி அதனியல் பால் திரிதலும் போல, காதலருந் தாம் கூடிய மகளிரியல்பின ராக லான் அதுபற்றி அவரொடு புலவி நிகழுமென்பாள் 'நிலத்தொடு நீரியைந் தன்னரகத்து' என்றும், அப்புலவி பின்னர்ப் பேரின்பம் பயக்குமென்பாள் புலத்தலிற் புத்தேணு டுண்டோ என்றும், கூறி னாள். கூடிய மகளிரியல்பின ராதலென்பது இங்குந் தலைமகள் கருதுகோளேயன்றி உண்மையாக நிகழும் நிகழ்ச்சியன்றென வறிக.

கஙஉச. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

(அப்புலவி இனி எதனால் நீங்குமென்ற தோழிக்குச் சொல்லியது.)

(இ—ரை.) புல்லி விடாப் புலவியுள்—காதலரைத் தழுவிக் கொண்டு பின் விடாமைக் கேதுவாகிய அப்புலவிக் கண்ணே; நீன் உள்ளமு முடைக்கும் படை—அதை மேற்கொண்ட என் உள்ளத் தைத் தகர்க்கும் படைக்கலம்; தோன்றும்—உண்டாகும்.

புலவி யென்றது அவ்விரு நிகழ்ச்சியை. படைக்கலம் என்றது காதலரின் பணிமொழியை, புலவி நீங்குந் திறங் கூறியவாறு. விடாஅ, இசைநிறை யளபெடை.

கஙஉடு தவறில ராயினுந் தாம் வீழ்வார் மென்றோ
ளகறலி னுங்கொன் றுடைத்து.

(தலைமகளை யூடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழிபே ருவகைய னாய்த் தன்னுள்ளே சொல்லியது.)

(இ—ரை.) தவறு இலராயினும் தாம் வீழ்வார் மெல்தோள் அகறலின்— ஆடவர் தம்மிடத்துத் தவறில்லாதவராயினும் உடை யார்போல ஊடப்பட்டுத் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களினின்று சிறிது போழ்து நீங்கியிருத்தலால்; ஆங்கு ஒன்று உடைத்து அவ்வூடல் அவர்க்கு அத்தகையதோரின்பம் பயத்த லுடையது.

ஆடவர்பால் தவறிருப்பினும் இல்லாவிடினும் ஊடலெல்லாம் உணர்த்தப்பட்டுப் பேரின்பக் கூடலில் முடிவதால், அதனால் எவ் வகையிலும் கேடில்லையென்பான் 'தவறிலராயினும்' என்றும், அதனா லுண்டாகும் இன்பம் சொல்லொணாது அளவிறத்தலின் 'ஆங் கொன்று' என்றும், கூறினான். தவறின்றி யூடியதும் எனக்கின்ப மாயிற் றென்பதாம்.

கஉஉசு. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது.

(இதுவுமது)

(இ—ரை.) உணலினும் உண்டது அறல் இனிது—மாந்தர்க்கு உணவுத்துறையில், பின்னுண்பதினும் முன்னுண்டது செரித்தல் இன்பந்தருவதாம்; காமம் புணர்தலின் ஊடல் இனிது—அதுபோல அவர்க்குக் காமவின்பத்துறையில், மேற்புணர்வதினும் முன்னைத் தவறுபற்றி மகளிருடுதல் இன்பந்தருவதாம்.

பசித் துண்ணுமிடத்து இன்சுவைத்தும் மிகவுண்ணலுமாயிருத் தல் போல், ஊடலாற் பிரிந்து கூடுமிடத்துப் பேரின்பத்தும் ஆராமையுள்ளது மாயிருக்குமென்று தன் பட்டறிவு கூறியவாறு.

கஉஉஎ. ஊடலிற் ரோற்றவர் வென்ரு ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

(இதுவுமது)

(இ—ரை.) ஊடலில் தோற்றவர் வென்ரூர்— ஊடலில் தோற்ற மகளிர் வென்றவராவர்; அது மன்னும் கூடலிற் காணப்படும்— அவ்வெற்றி மிகுதியும் பின்னர்ப் புணர்ச்சிக்கண் அவரால் அறியப் படும்.

தோற்றவர் ஊடலைக் கடைபோகக் கடைப்பிடிக்காது இடையில் விட்டு விட்டவர். அவர் கலவிக்கண் பேரின்பம் பெறுதலால் வென்றாராயினர். 'மன்' மிகுதிப் பொருளது. தலைமகன் கலவியால் தான் பேரின்பம் பெறும்போதே தலைமகளும் பெறுதல் கண்டானுதலாலும், அவள் ஊடல் நீங்கியபொழுது ஒருவகைத் தோல்வி மனப்பான்மை கொண்டிருந்ததனாலும், அவளைப் பாராட்டி ஊக்குமுகமாகத் 'தோற்றவர் வென்றார்' என்றான். ஊடல் ஆடவருக்கின்மையின், தலைமகன் ஊடலில் தோற்றானென்று கூறுவது பெருந்திணையாகுமேயன்றி அன்பினைந்திணையாகாதென அறிக. அடுத்த குறளையும் பார்க்க.

கஉஉஅ. ஊடிப் பெருகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் ரோன்றிய வுப்பு.

(இதுவுமது)

(இ—ரை.) நுதல வெயர்ப்பக் கூடலில் தோன்றிய வுப்பு—இதுபோது இவள் நெற்றி வெயர்க்குமளவு செய்த கலவியின்கண் உள்ள இனிமையை; ஊடிப்பெருகுவமோ —இன் னு மெ மாருகால் இவள் ஊடியாம் பெறவொண்ணுமோ!

இனிமை ஒருங்கே நுகரும் ஐம்புலவின்பம். இனி அவ்வப்பேறு அரிதென்று பெற்றதன் சிறப்புக் கூறியவாறு. நுதல் வெயர்ப்பச் செய்தது ஒரு சிறந்த கலவிவகை யெனினுமாம். 'கொல்' அசைநிலை 'ஓ' ஐயவினை. 'இவளூடி' என்பது தனிநிலை யமைப்பு.

கஉஉக. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.

(இதுவுமது)

(இ—ரை.) ஒளியிழை மன் ஊடுக—ஒளி வீசும் அணிகலங்களையுடையாள் இன்னும் எம்மோடு மிகுதியும் ஊடுவாளாக; யாம் இரப்ப இரா மன் நீடுக—அவள் அங்ஙனம் ஊடுதற்கும் யாம் அதை யுணர்த்தும் பொருட்டு அவளை இரந்து நிற்றற்கும் போதிய அளவு காலமிருக்கும் வகை இவ்விரவு மிகுதியும் நீடுவதாக.

'ஊடுக,' 'நீடுக' என்பன ஆர்வ வியங்கோள் வினைகள். 'மன்' மிகுதிப்பொருளது ஓகாரங்கள் அசைநிலை. 'ஒளியிழை' அன்மொழித் தொகை. பின்னர்ப் பேரின்பம் பெறக் கூடுதல் உறுதியாதலின், இவ்விரா முழுதும் ஊடலே நிகழினும் நன்றேயென்பதாம்.

கஉஉஎ. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

(இதுவுமது)

(இ—ரை.) காமத்திற்கு இன்பம் ஊடுதல்—காம நுகர்ச்சிக்கின் பமாவது, நுகர்தற்குரிய காதலன் காதலியாகிய இருவருட் காதலி காதலன்பாற் குற்ற முள்ள விடத்தும் இல்லா விடத்தும் அவனெடு ஊடுதல்; அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்—அவ்வூடுதற் கின்பமாவது அதனீ அள வறிந்து நீக்கிக் காதலன் காதலியிருவரும் தம்முட் கூடித் தழுவப் பெறின் அத்தழுவல்.

கூடுதல் கருத்தொத்தல். தழுவுதல் இங்குப் புணர்தல். துளி நிலையில் துன்பம் பயத்தலானும், ஊடல் நிலையில் இன்பம் பயவா மையானும், இரண்டிற்கும் இடைப் பட்ட புலவி நிலையை நீள விடாது அளவறிந்து நீக்கிக் கூடி, அளவில்லாத இன்பம் பெறுதல் அரி தென்பது பற்றிக் 'கூடி முயங்கப் பெறின்' என்ருன். அவ்வீரின்ப மும்யான் பெற்றே னென்பதாம்.

ஈண்டுப் பிரிவினீ வடநூன் மதம் பற்றிச் செலவு ஆற்ருமை விதுப்புப் புலவி யென நால்வகைத் தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்ருமையுள்ளும், ஆற்ருமை படர் மெலிந்திரங்கன் முதல் நிறையழிதல் ஈருயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன் முதற் புணர்ச்சி விதும்பல் ஈருயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத் தன் முதல் ஊடலுவகை யீருயவற்றுள்ளுங் கண்டு கொள்க. அஃதேல், வட நூலார் இவற்றுடனே சாபத்தினுலுய நீக்கத்தினீ யுங் கூட்டிப் பிரிவினீ ஐவகைத் தென்ரு ராலெனின், அஃது அறம் பொருளின்ப மென்னும் பயன்களுள் ஒன்று பற்றிய பிரிவன்மையா னும், முனிவராணையான் ஒருகாலத்தோர் குற்றத் துளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டொழிக்கப் பட்டதென்க.'' என்று பரிமேலழகர் தம் உரை முகத்துப் போன்றே அதன் புறத் திலும் ஆரிய நஞ்சைக் கொட்டி வைத்துள்ளார். இன்பத்துப் பாலின் இரண்டாம் இயல் கற்பியல் என்பதே யன்றிப் பிரிவியல் என்பதன்று. மேலும், திருவள்ளுவர் வட நூலைப் பின்பற்ற வில்லை யென்பதை, அவர் வட நூலார் கூறும் சாபப் பிரிவினீயைக் கூற வில்லை யென்று பரிமேலழகரே தன் முரணுகக் கூறியிருப்பதி னின்று தெளிந்து கொள்க.

கற்பியல் முற்றிற்று.

இன்பத்துப்பால் முற்றிற்று.

திருக்குறள் தமிழ் மரபுரை முற்றுப்பெற்றது.

பின்னிணைப்பு

க. உரையெச்சம்

முன்னுரை பக். ஈஉ. நல்கூர் வேள்வியார் என்ற பத்தி தொடங்கு முன்பு சேர்த்துப் படிக்க.

(க) நாகன்—நாகி என்பன ஆண்பாற் பெண்பாற் பெயர்களாகத் தமிழர்க்குத் தொன்று தொட்டு இடப்பட்டு வருவதானாலும் வாசுகி என்பது வடமொழித் தொல்கதைப்படி ஒரு பாம்பின் பெயராய் இருத்தலாலும் திருவள்ளுவர் மனைவியாரின் பெயர் ஒருகால் நாகி என்று இருந்திருக்கலாம் என்று மறைமலையடிகள் கருதுவர்.

(உ) பக். கரு. வரி ஐந்தில் சேர்த்துப் படிக்க.
'நட்டகல்லைத் தெய்வமென்று' என்னும் சிவவாக்கியர் பாடலும்.

நஉ. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு.

இனி, ''சிறப்பீனும் செல்வமு மீனும்'' என்பதற்கு, ஏதேனு மொரு துறையில் தலைமை பெறுதற்கேற்ற சிறப்பாற்றலையுந் தரும்; எண்வகைச் செல்வமுந் தரும் என்று உரை கூறினுமாம்.

நஅ. வீழ்நாள் படாஅமை நன்ருற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

மூவகைக் குற்றத்தால் வரும் இருவகைவினையும் உள்ளவரை உயிர் உடம்போடு கூடிநின்று அவ்வினைகளின் இருவகைப் பயனையும் நுகருமாகலின், அந்நாளெல்லாம் 'வாழ்நாள்' எனப்பட்டன. மூவகைக் குற்றம் காமம், வெகுளி, மயக்கம் என்பன. இவற்றை வடநூலார் அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என ஐந்தாக விரித்துப் பஞ்சக்கிலேசம் என்பர். அவற்றுள் அகங்காரம் மயக்கத்துள்ளும் அவா காமத்துள்ளும் அடங்கும். இருவகை வினை நல்வினை தீவினை என்பன. இருவகைப்பயன் இன்பந் துன்பமென்பன. இனி, 'வாழ்நாள் வழியடைக்குங் கல்' என்பதற்கு, ஒருவர் நிலத்தினூடு தவருகச் செல்லும் வழியிற் பிறர் செல்லாதவாறு வைத்தடைக்குங் கல்போல, வாழ்நாள் என்னும் தீயவழியில் உயிர் செல்லாவாறு வைத் தடைக்குங்கல் எனினுமாம். இது உருவகவணி,

நஅ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்ருங்
கைம்புலத்தா ரோம்ப றலை.

பரிமேலழகர் 'தென்புலத்தார்' என்னுஞ் சொற்குப் 'பிதிரர்' என்று பொருளுரைத்து, "பிதிரராவார் படைப்புக் காலத்து அயனற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்பர்.

சூச அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

அவிழ்—அவிழ்து—அமிழ்து—அமுது=சோறு. மருமம்—மம்மம்—அம்மம்—அம்முது—அமுது=பால் பாலைக் குறிக்கும் அமுது என்னும் சொல்லும் சோற்றைக் குறிக்கும் அமுது என்னும் சொல்லொடு மயங்கி, அமிழ்து என்னும் வடிவங் கொள்ளும். அமுது—அமுதம்—அம்ருத(வ,). வடமொழியாளர் அம்ருத என்னும் வடசொல் வடிவை அ+ம்ருத என்று தவருகப் பகுத்து, சாவைத் தவிர்ப்பது என்று பொருள் புணர்த்து, தேவரும் (சுரரும்). அசுரரும் திருப்பாற் கடலைக் கடைந்தெடுத்த சுரையைத் தேவர் உண்டதனல் சுரர் எனப்பட்டாரென்றும் அச்சுரைசாவைத் தவிர்த்ததனல் அம்ருத எனப் பெயர் பெற்றதென்றும், கதை கட்டிவிட்டனர். அதைக் குருட்டுத்தனமாய் நம்பிய தமிழர், விண்ணுலகப் பொருளெல்லாம் மண்ணுலகப் பொருளினும் மிகச் சிறந்தவை யென்னும் பொதுக் கருத்துப்பற்றி, தலைசிறந்த இன் சுவை யுண்டியை அமிழ்து என்றும் அமிழ்தினும் இனியது என்றும், சொல்லத் தலைப்பட்டனர். அம்ருத என்னும் வடசொல் வடிவம் கிரேக்கத்தில் ambrotos என்றும, ஆங்கிலத்தில் ambrosia என்றும், திரியும்.

நசo. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

'ஓ' இரக்கமுமாம்.

நகூக. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

'தவாஅ' இசைநிறை யளபெடை,

சகo. 'விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றூரோ டேனை யவர்.

''கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே யிரா அது
உரைப்பினும் நாய்குரைத் தற்று.'' (நாலடி. உஙிசு)

நூஉக. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

'பற்றற்ற கண்ணும்' என்னும் தொடருக்கு ''ஒருவன் செல்வந், தொலைந்து வறியனைய வழியும்'' என்று பொருள் கூறி, ''சிறப்பும்மை, வறியனையவழிப் பாராட்டப்படாமை விளக்கிநின்றது.'' என்றும், ''பிறரெல்லாம் அவன் பற்றற்ற பொழுதே தாமும் அவனேடு பற் றறுவராகலின், ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது.'' என்றும் சிறப் புரைத்தார். பரிமேலழகர். சிறப்பும்மையில் எச்சக் கருத்துங் கலந் திருப்பதால், வறியனைய வழியும் என்பது இழிவு சிறப்பும்மையாகு மேனும், ''சுற்றத்தார் மாட்டே'' என்பதிலுள்ள ஏகாரம் சுற்றத் தாரை வேறுபடப் பிரித்து வரையறுத்தலால் பிரிநிலையேயாம்.

உ. ''அகரமுதல வெழுத்தெல்லாம்''

உலகில் முதன்முதல் தோன்றித் திருந்தி வளர்ச்சியுற்ற இலக் கிய மொழி தமிழே.

''எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்ரு
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.''

என்று நன்னூலார் (உ) கூறியவாறு, இன்றும் பன்னிருவகை எழுத் திலக்கணங்களைக் கொண்டுள்ளது தமிழே. பதம் என்னும் வட சொல்லாற் குறித்தது கிளவியை குறுங்கணக்கின் எழுத்து முறை போன்றே, உயிர்மெய்க்குத் தனிவடிவு கொண்ட நெடுங்கணக்கும் முதன் முதல் அமைந்தது தமிழே. அதைப் பின்பற்றியே சமற்கிரு கத்திலும் பிற இந்தியமொழிகளிலும் வண்ணமாலைகள் எழுந்தன. திருவள்ளுவர் காலத்தில் தமிழகத்துத் தமிழைப் பின்பற்றித் தோன்றி யிருந்த பிறமொழியெழுத்து வடமொழிக்கிரந்தமே. இங்ஙனம் அக ரத்தை முதலாகக் கொண்ட வண்ணமாலைகளே அக்காலத் தமிழ கத்து வழங்கியனையாலும், அங்காத்தலால் மட்டும் தோன்றும் அக ரம் அங்காத்தலொடு பிற முயற்சியும் கொண்ட பிறவெழுத்திற்கெல் லாம் மூலமாயிருத்தலாலும் 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்ரூர் திருவள்ளுவர். அங்காத்தல் வாய்திறத்தல்.

கூ. திருக்குறள் வடசொற்கள்

திருக்குறளிலுள்ள வடசொற்கள் பின்வருமாறு நால் வகைப் பட்ட பதினேழாம்.

(க) வடநாட்டுச்சொல்:

ஆதி, இந்திரன்.

ஆதி என்பது தொடக்கம் என்று பொருள்படுவது; பெண்பாற் பெயராயின் ஆதன் என்பதன் பெண்பால் வடிவாம். அது தூய தென்சொல். அதுவன்று இங்குள்ளது.

இந்திரன் என்பது வடஇந்தியத் திரவிடர் வேந்தன் என்னும் மருதநிலத் தமிழ்த் தெய்வத்திற்கு வழங்கிய பெயர். இத்தெய்வமும் இச்சொல்லும் மேலையாரியத்தில் இல்லையென்று மாக்கசு முல்லர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

(உ) தமிழ்த்திரிசொல்:

அமரர், காரணம், பாக்கியம், வித்தகர்;

அல்--அ. மடி—மரி—மரன்—மரர். அ + மரர் = அமரர் (வ,). மரி—L. mori, ம்ரு(இ. வே.),கருத்தல் = கைகருக்குமாறு வினைசெய்தல். இவ்வினை இன்று வழக்கற்றது. கரு—கருவி. கரு—கரணம்= செய்கை, செய்யுங் கருவி. கரணம்—காரணம் (வ.)

பகு—பாகு—பாக்கு = பகுதி, நற்பகுதி, நற்பேறு பாக்கு + இயம் (ஈறு) = பாக்கியம்.

விழித்தல் = கண்திறத்தல், பார்த்தல், காணுதல், அறிதல். விழி = பார்வை, கண், அறிவு, ஞானி (ஞானம்).

விழி—விடி (இலத்.)—வித்(வ.)—வித்தகம்—வித்தகன்—வித்தகர். சமற்கிருத அகரமுதலி விதக்த (vidagdha) என்று மூலங்காட்டும். இவற்றின் விரிவையும் விளக்கத்தையும் என் வடமொழி வரலாற்றுட் கண்டுகொள்க.

(கூ) மேலையாரியச்சொல்:

அந்தம், அன்னம், நாமம்.

OE ende, E end, OS endi OHG enti, ON endir, Goth andeis, IA அந்த OE ganra, OHG ganazzo, RV ஹம்ஸ—அன்னம்,

எகினம், ஓதிமம் என்பனவே தென் சொற்கள். மேலையாரியச்சொற்கள் முறையே பெருவாத்தையும் அதற்கினமான ஒரு கடற்பறவையையுங் குறிப்பன. அவற்றின் திரிபான ஹம்ஸ என்னும் கீழையாரியச்சொல்லே, ஓதிமத்தின் பெயராக வழங்கி வருவதாகத் தெரிகின்றது. Swan என்பது ஆங்கிலச் சொல்.

ஒருசில சொற்கள் தூயதென் சொல்லாயினும், வடமொழி வெறியரான தமிழ்ப்பகைவரால் வடசொல்லொடு தொடர்பு படுத்தப் படுகின்றன.

எ—டு:

தானை = சேலை, துணி, துணிக்கொடி பிடித்துச்செல்லும் படை. ஒ. நோ: தூசு = துணி, துணிக்கொடி, தூசு—தூசி = கொடிப்படை E colour = flagi; colours = regiment.

பார்ப்பான் பார்—பார்ப்பான் = நூல்களைப் பார்ப்பவன், அந்தணர் என்னும் வகுப்பில் இல்லறத்தான், ஆசிரியன் அல்லது உவச்சனாகப் பணியாற்றுபவன், இச்சொற்கும் பிராமணன் என்னும் சொற்கும் இடைப்பட்ட தொடர்பு இயேசுக் கிறித்து என்னும் பெயருக்கும் கேசவக் கிருட்டிணன் என்னும் பெயருக்கும் இடைப்பட்டதே.

சிலர் பார்ப்பனன் என்னும் வடிவு பிராமணன் என்பதன் திரிபைக் காட்டுமென்பர். அவர் அறியார். அனல் என்னும் சாரிலை கூடிய ஈறு, படர்க்கை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவானதே

எ—டு:	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
	பார்த்தனன்	பார்க்கின்றனன்	பார்ப்பனன்.
	பார்த்தனள்	பார்க்கின்றனள்	பார்ப்பனள்
	பார்த்தனர்	பார்க்கின்றனர்	பார்ப்பனர்
	பார்த்தன்று	பார்க்கின்றது	(பார்ப்பனது)
	பார்த்தன	பார்க்கின்றன	பார்ப்பன

பார்த்தன்று என்பது பார்த்தனது என்பதன் தொகுத்தல். பார்த்து + அன் + அது = பார்த்தனது. அனது—அன்று (அன் + து).

OE nama, E name, OS, OHG namo, Goth namo, L. nomen, நாம (இ. வே.)

(ச) சமற்கிருதச்சொல்: அவி (ஹவிஸ்), ஆகுலம், ஆசாரம், உல்கு, கணம் (கூணம்), சலம் (வஞ்சனை). பாவம்—பாவி.

ஊ. திருக்குறட்கு வடசொல் தேவையின்மை

இது பொழுதுள்ள இலக்கிய நூல்களுள் முதலதான திருக்குறளிலும் ஒரு சில வடசொற்களிருப்பதால், வரலாற்றாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் இல்லாத சில புலவரும் துறவியரும், தீருவள்ளுவரும் தம் நூற்கு வடசொற்று ணை வேண்டினரெனக் கருதுகின்றனர். தமிழ் குமரி நாட்டில் தோன்றிய உலகமுதற்றாயுயர்தனிச் செம்மொழியென்றும், திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகுமென்றும், சமற்கிருதத்தில் ஐந்திலிருபகுதி தமிழென்றும், குமரி நாட்டு உலகவழக்குச் சொற்களுடன் முதலிரு கழகச் செய்யுள் வழக்குச் சொற்களும் அடியோடு அழியுண்டனவென்றும், இந்நாடித்த நிலையிலும் பிறமொழித்துணையின்றித் தமிழ் தனித்து வழங்கவும் தழைத்தோங்கவுங் கூடுமென்றும், இது ஏனமொழி கூட்கியலாதென்றும், தமிழிற் கலந்துள்ள வடசொற்களெல்லாம் அதைக் கெடுத்தற்கென்றே ஆரியரால் புகுத்தப்பட்டனவேயன்றி, தமிழறிஞர் அவற்றின் தேவையுணர்ந்து விரும்பிக் கடன் கொண்டவையல்ல வென்றும், அவர் அறிந்திலர். அக்காலத்தில் மொழியாராய்ச்சியின்மையாலும் வடசொற்கள் தமிழில் அருகியே வழங்கியமையாலும், அவற்றைத் திருவள்ளுவர் கண்டு விலக்க முடியாமற் போயிற்று. எதுபோலவெனின், ஆயிரக்கணக்கானவர் உண்ணும் ஒரு திருமண விருந்தில் ஒரு சில அயலார் அமர்ந்திருப்பினும், பரிமாறிகள் அவரைக் கண்டு விலக்க முடியாதது போலவென்க.

திருக்குறட்கு வடசொல் தேவையின்மையை, அஃதின்றியும் கீழ்க்கண்டவாறு பொருள் கெடாது குறளமைதல் நோக்கித் தெளிக.

அந்தம்

நிகூ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞயின்
ஒருதலை யொல்லைக் கெடும்.

'வெருவருவ', 'ஒருதலையா' என்றும் அமையலாம்.

நிகூ. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்கம்
உறுதியாய்க் கைத்துடை யார்.

உறுதலைக் கைத்து என்றும் அமையலாம்.

அமரர்

கஉக. அடக்க முவணுல குய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

உவணுலகு தேவிருலகம். உவணுலகம் என்றும் அமையலாம்.

அவி

உறுகூ. நெய்சொரிந் தாயிரம் வேட்டலி னேருயிர
மெய்செகுத் துண்ணுமை நன்று.

ஊண்சொரிந் தாயிரம் வேட்டலி னேருயிரின்
ஊன்செகுத் துண்ணுமை நன்று.

அன்னம்

ககஉ0 அனிச்சமு மோதிமத் தூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

ஆகுலம்

நூசு. மனத்துக்கண் மாசில னுத லனைத்தற
னுரவா ரத்த பிற.

ஆசாரம்

க0எடு. அச்சமே கீழ்க ளொழுக்கமா மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

ஆதி

க. அகர முதல வெழுத்தெல்லா முன்னே
பகவன் முதற்றே யுலகு.

அகர முதல வெழுத்தெல்லா மாங்குப்
பகவன் முதற்றே யுலகு.

டுசநூ. அந்தணர் நூலோ டறத்திற் கடிப்படையாய்
நின்றது மன்னவன் கோல்.

இந்திரன்

உடு. ஐந்தவித்தா னுற்ற லகல்விசும்பு ளார்கோவாம்
வேந்தனே சாலுங் கரி.

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். இ.)

இந்திரன் என்னும் வடசொல்லும் அரசன் என்று பொருள் படுவதே. எ—டு: இராசேந்திரன், கசேந்திரன், கவீந்திரன், நரேந்திரன், மிருகேந்திரன், ரவீந்திரன்.

ஐந்தவித்தா னுற்ற லகல்விசும்பு ளார்கோவாம்
மைந்தவனே சாலுங் கரி.
மைந்தவன்—வலிமையுடையோன்.

உல்கு

எடுகூ. உறுபொருளும் தீர்வைப் பொருளுந்தன் னென்னுர்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

ஆயப் பொருளும் என்றும் அமையலாம்.

கணம்

உகூ. குணமென்னுங் குன்றேறி நின்ற முனிவர்
சினநொடியுங் காத்த லரிது.

காரணம்

உஎ0. இலர்பல ரான கரணியே நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

டுஉகூ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
கேதுதத் தானே வரும்.

ஏதுறுதல் காரணம் நீங்குதல். ஒ நோ : ஏது + ஈடு = ஏதீடு.

டுஙஉ. ஊழைப்பிரிந்து பின்பய னேக்கிவந் தானை
யிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

சலம்

கூகூ0. அல்வழியாற் செல்வஞ்செய் தேமார்த்தல்
கொள்கலநீர் பெய்திரீஇ யற்று. [பைம்மணணங்

கூடுகூ. படிறுற்றுப் பண்பில செய்யார்மா சற்ற
குடிபற்றி வாழ்துமென் பார்.

நாமம்

ஙகூ0. காம வெகுளி மயக்க மிவற்றின்பே
தாமுங் கெடக்கெடு நோய்.

பாக்கியம்

சகசக. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் நற்பேற்றி னல்.

பாவம்

கசகூ பகைகரி சச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

பாவி

கசகூஅ அழுக்கா றெனுமோர் கரிசன் திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.
அழுக்கா றெனுமோ ரறங்கடையன் சொம்மழித்த்து
தீயுழி யுய்த்து விடும்.
இன்மை யெனுமோர் கரிசன் மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

வித்தகர்

உஙடு ஆதல்போற் கேடு முளதாகுள் சாக்காடும்
மாதிறவோர்க் கல்லா லரிது.

நி. திருக்குறளிலுள்ள, வடமொழிச்சென்ற தென்சொற்கள்

அங்கணம் வணங்கு—வாங்கு — வங்கு—அங்கு. அங்குதல் வளைதல், சாய்தல். அங்கணம்—வாட்டசாட்டமாயுள்ள சாய்கடை. அங்கணம்—அங்கண (வ.)

அச்சு அட்டு குறுக்கு. அட்டு—அச்சு=வண்டிக்கும் தேர்க்கும் சக்கரம் கோப்பதற்குக் குறுக்காக அமைக்கப்படும் கட்டை அல்லது உத்தரம். அச்சு—அக்ஷ (வ.)

அதி அதித்தல்=வீங்குதல், பருத்தல், மிகுதல், இவ்வினை இன்று வழக்கற்றது.

அதி+இகம் = அதிகம் — அதிகன்=மிக்கோன், இறைவன்; அதி+அனம்=அதனம்=மிகுதி. அதி—அதை, அதைத்தல் வீங்குதல். அதி—அதி (வ.).

அதிகாரம் கடு—கடி—கரி—காரம்=மிகுதி, கடுமை, உறைப்பு வலிமை. அதிகரித்தல் (மீமிசைச்சொல்) மிகப் பெருகுதல். அதிகரி—அதிகாரம்=மிகுதி, வலிமை, கையாளும் உரிமை, ஆளும் வலிமை, நூலின் பெரும்பகுதி. அதி, கரி, அதிகரி என்னும் மூவினைகளும் வடமொழியிலில்லை. அதி+க்ரு (செய்) என்று சொற் புணர்த்தித் தலைமையாயிருத்தல் என்று பொருள் புணர்ப்பர். அதிகாரம்—அதிகார (வ.).

அமர் அம்முதல் பொருந்துதல். அம்—அமர் அமர்தல்=பொருந்துதல். அமர்=பொருந்திச் செய்யும் போர். ஒ. நோ: பொருதல்=பொருந்துதல், போர் செய்தல். அமர்த்தல்=போர் செய்தல், வலிமை கொள்ளுதல், செருக்குதல். அம்—சம்—சமம் (போர்)—சமர்—சமரம்—ஸமர (வ.).

அமரகம் அமர் போர். அகம் இடம். அமரகம் போர்க்களம்.

அமிழ்தம் கக—ஆம் சூச—ஆம் குறளுரைகளைப் பார்க்க.

அமைச்சு அமைத்தல்=பொருத்துதல், ஏற்பாடு செய்தல். அமை—அமைச்சு=அரசியல் முறையையும் விளைகளையும் செவ்வையாக அமைத்தல். 'சு' தொழிற்பெயரீறு, ஒ. நோ: விழை—விழைச்சு. அமைச்சு—அமைச்சன், வேந்தன் என்னும் பெயர் வேந்து என்று குறுகுவதுபோல, அமைச்சன் என்னும் பெயரும் அமைச்ச என்று குறுகி வழங்கும்.

இனி, அண்மையிலிருப்பவன் என்று பொருள்படும் அமாத்ய என்னும் வடசொல்லொடு தொடர்புடையதாகக் கொள்ளினும், அப் பொருளிலும் இச்சொல் தென்சொல்லாதற்கு எத்துணையும் இழுக்கில்லை யென்க. அமைதல் நெருங்குதல், அமை நெருக்கம். அமை அமைச்சன், ஒ. நோ; தகை—தகைச்சன், உழையிருந்தான் என்று திருவள்ளுவரும் கூறுதல் காண்க (சுஉஅ), அமைச்சன்—அமாத்ய (வ.).

அரங்கு அர்—அறு, அர்—அரை=அறுக்கப்பட்ட பகுதி (—பாதி), அர்—அரங்கு=அறுக்கப்பட்ட அறை, அறைவகுக்கப் பட்ட பாண்டி (சில்லாக்கு) விளையாட்டுக்கட்டம், சூதாட்டுக் கட்டம்.

அரங்கு—அரங்கம்—ரங்க (வ.),
கoச ஆம் குறளுரையைப் பார்க்க.

அரசு உரம்—உரவு=வலிமை. உரவு—அரவு—அரசு=வலிமை, ஆளும் வலிமை.
ஒ. நோ: உகை—அகை, பரவு—பரசு.

அரசு—அரசன்=ஆள்வோன். வேந்தன் என்பது வேந்து என்றும், மன்னன் என்பது மன் என்றும், கோவன் (கோன்) என்பது கோ என்றும், குறும்பன் என்பது குறும்பு என்றும், குறுகிவழங்குவது போல், அரசன் என்பதும் அரசு என்று பாலீறு குன்றி வழங்கும். அரசன்—ராஜன் (வ.), . rex, regis.

வடவர் ரஜ் என்றொரு செயற்கை முதனிலையைத் தோற்றுவித்து; அதற் ஒளிதற் பொருள் கூறி உலகை ஏமாற்றுவர்.

அரண் : உரம் — அரம் — அரண் = வலிய காப்பு, காப்பான கோட்டை, காப்பான இடம். ஒ. நோ: பரம்—பரண்.

அரண்—அரணம்—சரண(வ.), சரண என்னும் வடசொற்குச் சார்தல் என்று பொருள்படும் சரி என்னுஞ் சொல்லே மூலமாகக் காட்டுவர். அது சார் என்னுந் தென்சொல்லின் திரிபே.

அவம்: அவிதல் = வேதல், அழிதல், கெடுதல். அவி—அவம் = கேடு, வீண். அவம்—அவ—அப(வ.).

அவை: அமைதல் = நெருங்குதல், கூடுதல். அமை = கூட்டம், அம்பலம். அமை—அவை. ஒ. நோ: அம்மை—அவ்வை, குமி—குவி.

அவை—சவை, ஒ. நோ; அமையம்—சமையம், இளை—சிளை, உதை—சுதை (உதைக்கும் ஆவு), எட்டி—செட்டி. அவை—அவையம். 'அம்' ஒரு பெருமைப் பொருட் பின்னெட்டு. எ—டு. நிலை—நிலையம், கம்பு—கம்பம், சவை—சபா (வ.).

ஆணி: ஆழ் — ஆழி — ஆணி = ஆழ்ந்திறங்கும் முட்போன்ற கூர்ங்கருவி. ஆணிபோல் ஆழ்ந்தூன்றும் வேரை ஆணிவேர் என்றும் சுவரில் ஆணி பதித்தலை ஆணியிறங்குதல் என்றும், கூறுவது காண்க. ழ—ண, போலி. ஒ. நோ: தழல்—தணல், நிழல்—நிணல், ஆணி—ஆணி (வ.).

ஆயம்: (க) தாய்—தாயம் = தாய்வழியுரிமை. முதற்காலத்திற் குடும்பத் தலைமை தாங்கியது தாயே. தாயம்—ஆயம் = உரிமை. தாயம்—தாய (வ.).

ஆயம்: (உ) வா—ஆ—ஆயம் = வருவாய், வரி, கட்டணம். ஓடிவா என்பது கொச்சை வழக்கில் ஓடியா என்று சொல்லப்படுதல் காண்க. வா என்னுஞ்சொல்லே ஆவ் என்று முன்பின்னாக முறை மாறி இந்தியில் வந்தது. ஆயம்—ஆய(வ.).

ஆயிரம்: அயிர் = நுண்மணல், அயிர்—அயிரம்—ஆயிரம். ஆற்றுமணலும் கடற்கரை மணலும் ஏராளமாயிருப்பதால் மணற்பெயர் ஒரு பெருந்தொகைப் பெயராயிற்று. ஒ. நோ: நூறு = நீறு, தூள், நூறென்னும் எண்.

ஆயிரம்—ஆயிரம் (ம.)—ஆயிரெ (கு.)—ஹசார் (இ.)—ஸஹஸ்ர (வ.). வடசொல் வடிவத்தில் 'ஸ' என்பது முன்னெட்டு.

இமை: இமை—நிமை—நிமி (வ.)

இலக்கம்: இலக்கு=இலை, எய்யுங்குறி, குறி, குறிக்கோள், குறித்த இடம். ஒரு குறித்த இடத்தை இலக்கு என்பது பாண்டி நாட்டு வழக்கு. இலக்கு—லக்ஷ (வ.),

இலக்கு—இலக்கம்—லக்ஷ (வ.).

உரு உருத்தல்=தோன்றுதல். உரு=தோற்றம். வடிவம், வடிவுடைப் பொருள், தனிப்பொருள் (உருப்படி), வடிவம் போன்ற இயல் வரம்பு.

உரு—உருவு—உருவம்—ரூப (வ.).

உருவு—உருபு=வேற்றுமை வடிவம், அவ்வடிவு குறித்த எழுத்து அல்லது அசை அல்லது சொல்.

உலகு: உல்—உலா=சுற்றிவருதல். உல்—உல—உலவு—உலாவு. உலவுதல்=வளைதல், வட்டமாதல், சுற்றுதல், திரிதல், உலவு—உலகு=உருண்டையாயிருப்பது. சுற்றிவருவது.

உலகு—உலகம்—லோக (வ.) வடமொழியில் லோக என்னும் சொற்குக் கூறப்படும் பொருட் கரணியம் பார்க்கப்படுவது என்பதே. அது look என்னும் ஆங்கிலச் சொல்லொடு தொடர்புடையது. அது வேறு; உலகத்தைக் குறிக்கும் தென் சொல்லின் திரிபு வேறு.

"காலம் உலகம் உயிரே யுடம்பே" (தொல். இசை) என்று ஆசியர் எடுத்தோதுதலால் இவையெல்லாந் தென்சொல்லேயென்று நச்சினர்க்கினியருங் கூறுதல் காண்க.

ஏதம்: சிதைத்தல்=குலைத்தல், வெட்டுதல், அழித்தல். சிதை—சித் (வ.). சிதை—சேதம்—ஏதம்=கேடு, குற்றம். சேதம்—சேத (வ.).

ஏது: ஏ—ஏவு—ஏசு—ஏது.

ஏசுதல்=ஏவுதல், செலுத்துதல். "கொல்லம் பேசி"

(தேவா. 880: 6)

ஏது=ஏவுகை, தூண்டுதல், கரணியம். ஏது—ஹேது (வ.).

ஏமம்: ஏ= உயர்ச்சி. மரம், கோபுரம், மலைமுதலிய உயர்ந்த இடங்கள் கொடிய விலங்குகட்கும் பகைவர்க்கும் தப்பிப் பாதுகாப் போடிருத்தற்கு ஏற்றவையாயிருத்தலின், உயர்ச்சிக் கருத்திற் பாது காப்புக் கருத்துத் தோன்றிற்று.

ஏ—ஏம்=காப்பு, பாதுகாப்பு, இன்பம்.
ஏம்—ஏமா. ஏமாத்தல்=அரணுதல்.
ஏம்+மரு=ஏமரு. ஏமருதல்=காக்கப்படுதல்.
ஏம்+ஆர்=ஏமார். ஏமார்த்தல்=வலுப்படுத்தல்.
ஏம்—ஏமை—யாமை=பாதுகாப்பான ஓர்ள்ளது.
ஒ. நோ: ஏன்—யான், ஏது—யாது.
யாமை—ஆமை, ஒ. நோ. யாணை—ஆணை.
ஏம்—ஏமம்=பாதுகாப்பு. ஏமம்—யாமம்=
பாதுகாப்பான மறைவிற்கேற்ற நள்ளிரவு.
ஏமம்—சேமம். ஒ. நோ: ஏண்—சேண். சேமம்—க்ஷேம (வ.).

கசடு: கசளுதல்=கலத்தல், கலங்குதல், கலவையாதல் மண்டியாதல். கசள்—கசண்டு=அடிமண்டி. கசண்டு—கசடு=மண்டி, கோது, குற்றம். கசடு—கசட்ட (வ.).

கணம்: கல்—கல, கல்—கள். கள்ளுதல் கலத்தல். கள்—களம்=கூட்டம், அவை.

கள—கண—கணம்=கூட்டம். கணத்தல்—கூடுதல்.
கணம்—கண (வ.).

கந்து: கும்முதல்—திரளுதல், கும்—கம்—கந்து=திரண்ட தூண். ஒ. நோ: உம்—உந்து. கந்து—ஸ்கந்த (வ.).

கருமம்: கருத்தல்—கை கருக்குமாறு வினை செய்தல். இதற்கு எதிர் செய்தல். செய்தல்-கைசிவக்குமாறுவினைசெய்தல். கடுவுழைப் பால்கருப்பர் கைகருப்பதும் சிவப்பர்கை சிவப்பதும் இயற்கை. கரு-கருமம்—கர்மன் (வ.). கரு—க்ரு (வ.). கருத்தல் என்னும் வினை இன்று வழக்கற்றது. கருமம் என்னும் சொல்லொடு தொடர்பு புடையதும், கரு என்னும் வினை முதனிலையைக் கொண்டதுமான கருவி என்னும் சொல், தூய தென் சொல்லாயிருத்தலே நோக்குக.

கரை: கரைதல்=அழைத்தல், சொல்லுதல். விளம்புதல். கரை—க்ரு (வ. த).

கவரி—கவரம்=சினம். கவரம்—கவரி=சினம் மிக்க காட்டெருமை, எருமை.

"படிந்து சேடெறியுஞ் செங்கட் கவரியும்"
(கல்லாடம், இரு: கூ)

கவரி=நீண்ட மயிரடர்ந்த திபேத் தெருமை, கவரி மயிர்போல் ஆடர்ந்து வளரும் சம்பா நெற் பயிர்வகை. கவரி—சவரி—சவரம்—சமரம்—சாமரம். சவரி—சமரீ (வ,). சாமரம்—சாமர (வ).

கவுள்: கவ்வு கவுள்=குறடுபோற்கவ்வும்அலகுகன்னம் வடவர் காட்டும் கரப்—கப் (இரங்கு) கன்னம் என்னும் மூலம் இம்மியும் பொருந்தாது.

கனம்: கல்—கன்—கன. கனத்தல்=கற்போற் பளுதாவல் மிகுதியாதல், பருத்தல், தடித்தல், பெருமை. யுறுதல். கன—கனம்= பளு, பருமன், பெருமை, செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி, கூட்டம், மும்மான வடிவு கனம்—கன (வ.gh),

காண்: காணுதல்=பார்த்தல், அறிதல். காட்சி—பார்வை அறிவு.ON kanna, kunna, LL canna, OE canne, ME cun, con, E ean, ON kna, OE cna, OHG cna, E know, L gno, Gk gno, skk gna (ஜ்ஞா),

காக்கை: காகா—காக்கா—காக்கை. காகா—காகம். காக்கை —காக்க (வ.).

தமிழ் குமரிநாட்டில் மிக முந்தித் தோன்றிய இயன்மொழி சமற் கிருதம், ஆரியம் பிராகிருதம் திரவிடம் தமிழ் ஆகிய நான்கினின் றும் பிந்தித்தோன்றிய கிரிமொழி.

காமம்: கவர்தல் விரும்புதல். கவர்—கவ—கா—காதல். கா— காம்—காமம்—காமன்—காம (வ.).

காரிகை: கரு—கார்=கருமை, கரிய முகில், மழை, நீர், அழகு. நீர்வளத்தினுலேயே கண்ணிற்கினிய காட்சியளிக்கும் மரஞ்செடி கொடிகள் தோன்றுவதால், நீரைக் குறிக்குஞ் சொற்கட்கு அழகுப் பொருள் தோன்றிற்று. ஒ. நோ: அம்=நீர், அழகு.

கார்—காரிகை=அழகு, அணி, பெண். காரிகை—காரிகா (வ.) வடவர் காட்டும் பொருந்தாப் பொருட்காரணியம் வருமாறு,— க்ரு, செய். காரக (ஆ. பா.)=செய்பவன். காரிகா (பெ. பா.) செய்பவள், நடிப்பவள்.

காலம்: கோல்—கால் கம்பு, கம்பம், தூண், தூண் போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு. கால் போல் நீண்டு செல்லும் நீர்க் கால், நில்லாது நீண்டு செல்லும் காற்று, நீண்டு சென்று கொண்டே யிருக்கும் நேரம் அல்லது காலம். கால்—காலம்—கால(வ.). வட மொழியில் இதற்கு வேரில்லை. கால் என்னும் மூல வடிவும் காலை என்னும் திரி சொல்லும் இல்லை.

"கால மூலகம் உயிரே யுடம்பே
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன." (தொல். சூசை.)

குடங்கர்: குடம்—குடங்கு—குடங்கர் = குடம். குடம்போன்ற சிறு குடிசை. குடங்கர்—குடங்கை (வ.).

குடி: குடி—வீடு, வட்டமான குடியிருப்பு. முதற்காலத்தில் குடியிருப்பெல்லாம் வட்டமாகக் கட்டப்பட்டிருந்ததால், வீடு குடி யெனப்பட்டது. குடி—கூடி (வ.).

குடி = இல், இல்லத்தில் வாழும் மனைவி; மனைவியொடு கூடிய குடும்பம், கூட்டுக் குடும்பம், பல குடும்பஞ்சேர்ந்த இனம், பல தலை முறையாக வந்த குடும்பத் தொடர்ச்சி குடும்ப அல்லது இன மரபுப் பண்பு, பல வீடுகள் சேர்ந்த ஊர்.

குணம்: கொள்—கொள்கை = கொண்ட கருத்து அல்லது நம் பிக்கை, கொண்டுள்ள இயல்பு. கொள்—கோள் = தன்மை. கொள்—(கொண்)— (கொணம்)—குணம் = கொண்ட தன்மை, தன்மை.

வடமொழியிற் கிரஹ் (பற்று) என்பதை மூலமாகக் காட்டுவர்.

குதி: குத்து—குதி, குதித்தல் = நேராக மேலெழுதல், குதித்துத் தாண்டுதல், தாண்டிக் கடத்தல், வெல்லுதல். குதி—கூர்த்(வ.).

கூத்து: குத்து—குதி—கூத்து—கூர்த்த (வ.).

குலம்: குல்—குல—குலவு. குலவுதல் கூடுதல். குல்—குலம் = கூட்டம், இனம், குடி, குலம்—குல (வ).

குவளை: இது தமிழகத்து மலர். ஒரு பேரெண்ணையுங் குறிக்கும். குவளை—குவல (வ.).

குழவி: குழ — குழவு = இளமை. குழவு—குழவி. குழ—குழந்தை, குழ—கொழுந்து, குழ—குட (வ.).

கூகை: கூகூ—கூகை—கூக (வ.).

கூழ்: குழை—கூழ்=குழைந்த பொருள், இழைந்த வுணவு. கூழ்—கூர (வ.).

கோட்டி: சஂக ஆம் குறளுரையைப் பார்க்க.

கோடி: குடுமி=உச்சி. கோடி=கடைசி, முதற்காலத்துக் கடைசியெண்.

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல." (கூகஎ)

"அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்." (கூதிச)

"ஐஅம் பல்என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்." (தொல். கூகூ)

என்பவை, திருவள்ளுவர் காலத்திற்கு மட்டுமன்றித் தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பே, கோடி யென்னும் எண்ணும் அடுச்கிய கோடிகளாகிய எண்களும் தமிழரால் வழங்கப்பட்ட மையைத் தெரி விக்கும். கோடி—கோடி (வ.).

சமன்: அம்முதல்=பொருந்துதல், ஒத்தல் அம்—சம்—சமம்=ஒப்பு. சமம்—சமன்=துலைக்கோல். நிறுக்குமுன் இருபுறமும் ஒத்து நிற்கும் நிலை. சமம்—ஸம (வ.).

சாகாடு: சருக்கு—சக்கு—சக்கடம்—சகடம்—சகடு—சாகாடு—சாடு. சகடு—சகடி—சசடிகை. சகடம்—சகட்ட (வ.).

சிவிகை: சிவிதல்=சுருங்குதல், சிறுத்தல். சிவி—சிவிகை=சிறிய மூடு பல்லக்கு. சிவிகை—சிவிகா, சிபிகா (வ).

சுதை: சுதை=சுதசுத வென்றிருக்குஞ் சாந்து. சுதசுதவென் றிருத்தல் சேறுபோலிருத்தல். அது இன்று சொதசொத வென்றி ருத்தல் என வழங்குகின்றது.

இனி, சுல் (வெள்ளி)—(சுலை)—சுதை=வெண்சாந்து எனினு மாம். சுதை—ஸுதா (வ.).

சூது: இது ஒருவகைக் காயின் பெயர். சூது—சூத (வ.).

தலைடம்: தள்—தளம்=கனம், கூட்டம், படை. தளம்—தடம்=பெருமை.

தள்—தாள் = அடித்தண்டு. தள்—தண்டு = திரண்ட அடித் தண்டு, திரண்ட ஊன்றுகோல், தண்டு-தண்டம், தண்டு—தண்டி—தண்டித்தல் = பருத்தல். தண்டி—தடி, தண்டித்தல் = தடியாலடித் தல், தண்டனை செய்தல். தண்டி—தண்டம், தண்டனம், தண் டனை, தண்டம் = தண்டனை. தண்டம்—தண்ட (வ.). தண்டனம் (தண்டனை) = தண்டன (வ.).

தவம். 'தவம்' என்னும் அதிகார முகவுரையைக் காண்க. தவம்—தபஸ் (வ.).

தா தானம்: தள்ளுதல் = வாழை, தெங்கு முதலியன குலை தள்ளுதல், பயன்தருதல், தருதல். தள்—(தர்)—தரு—தா.

தா என்னும் சொல், ஒருவன் தனக்குச் சமமானவனிடமே ஒன்றை வேண்டும்போது பயன்படுத்தற் குரியதாம்.

"தா என் கிளவி ஒப்போன் கூற்றே." (தொல். கூஉக)

இனி, இச்சொல் தன்மை முன்னிலை ஆகிய ஈரிடத்திற்கே யுரிய தென்றும் இலக்கண வரம்புள்ளது.

"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த." (தொ இகஉ)

இதனால், தா என்னும் சொல் தமிழுக்கே யுரியதென்பது தெள்ளிடை மலை.

தா:—தா(வ.). L. do, Gk (di) domi.

தா + அனம் = தானம். பொதுவாக, மதம்பற்றிக் கோவிற்கும் அடியார்க்கும் கொடுப்பது தானம் என்றும், கல்வி பற்றிப் புலவர்க் கும் ட்சணர் முதலியோர்க்குங் கொடுப்பது கொடையென்றும், அறம் பற்றி எளியார்க்கும் இரப்போர்க்குங் கொடுப்பது ஈகையென்றும், சொல்லப்படும்.

தானம்—தான (வ.). L. donem.

தாமரை: தும்—துமர்—துவர் = சிவப்பு, துவர்—துவரை = செம் பயறு. துமர்—தமர் (தமரை)—தாமரை = செந்நிற நீர்ப்பூவகை. இச் சொல் இன்று தன் சிறப்புப் பொருளிழந்து, அவ்வகையின் இருநிற மலர்க்கும் பொதுப்பெயராக வழங்குகின்றது. தாமரை—தாமரஸ (வ.)

திரு: தில்—திர்—திரள். திர்—திரு=திரண்ட செல்வம், செல்வத்தின் தெய்வம். ஒ. நோ: வெறுத்தல் சிறிதல். வெறு—வெறுக்கை=செல்வம். திரு—ஸ்ரீ (வ.)=ச்ரீ.

"நிறையே அருளே உணர்வொடு திருவென"

என்று (தொல். கஉகக), காதலர் ஒப்புமைக் கூறுகளுள் திருவும் ஒன்றுகத் தொன்று தொட்டுச் சொல்லப்பட்டு வருதல் காண்க.

தீ: தேய்தல்=உரசிச் சிறுத்தல், உரசித்தீப்பிடித்தல். தேய்—தே=நெருப்பு, நெருப்பாகிய = தெய்வம், தெய்வம், தேய்—தேயு=நெருப்பு (பிங்.).

தே—தீ=நெருப்பு. தீமை=தீயின் தன்மை நன்மை யல்லாதது, தேய்—தீய். தீய்தல்=எரிதல், விளங்குதல். தீய்—தீ (வ.). தீ—தீ (வ.).

துலை: துல்—துன், துன்னுதல்=பொருந்துதல். துல்—துலை=ஒப்பு, இருபுறமும் ஒத்த நிறைகோல், துல்—துலம்=நிறைகோல், ஒரு நிறை. துல்—துலா=நிறைகோல், நிறைகோல் போன்ற ஏற்ற மரம். துலா—துலாம்=ஒரு நிறை. துல்—துல்லியம்=ஒப்பு. துலை—துலா (வ).

தூண்: துன்னுதல்=பொருந்துதல், சேர்தல். துணை=சேர்க்கை, இரண்டு, ஒப்பு. துணர்=கொத்து. துன்—(துண்)—தூண்=பருத்த கம்பம், மண்டக்கால். தூண்—தூணி. தூணித்தல்=பருத்தல். துண்—(தொண்)—தொண்மை=பருத்தது. தூண்=தூணம்=பெருந்தூண். தூணம்—ஸ்தூண, ஸ்தூணு (வ.).

தூது: துது—துதி=யாணையின் முன்னுள்ள கை (துதிக்கை), துது—தூது=அரசனுக்கு முன் சென்று அவன் வருகையை அறிவிப்பவன், அரசன் விடுத்த செய்தியை வேற்றரசரிடம் சென்று சொல்பவன், அரசன் விடுக்கும் செய்தி. தூது—தூதன் (ஆ. பா.). தூதி (பெ. பா.).

உது (உதம்—உதடு), குது (தெ. கொத்த=புதிய), நுது (நுதல்=மண்டையின் முன்னுள்ள நெற்றி. நுதலுதல்=முன் சொல்லித் தொடங்குதல்), புது, முது (முதல்) என உ, கு, நு, பு, மு என்னும் பிற சொன் முதலடிகளைக் கொண்டும் முன்மைக் கருத்துச் சொற்கள் தோன்றியிருத்தலைக் காண்க. தூது—தூத (வ.).

தெய்வம்: முதற்காலத்தில் தீயே தெய்வமாக வணங்கப்பட்டது. அதனால் தெய்வத்தின் பெயர்களுட் பழைமையானவை தீயின் பெயர்களினின்றே தோன்றியுள்ளன.

தேய்தல்=உரசுதல், மரங்கள் உரசித்தீப்பிடித்தல். தேய்—தே=நெருப்பு, தெய்வம். தேய்வு — தேவு=தெய்வம். தேவு—தேவன். தேய்வு—தெய்வு—தெய்வம்

தேவன்—தேவி (பெ. பா.), தேவர் (பலர்பால்),
"தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்" (தொல். சஅஎ)
"பால்வரை தெய்வம் விரையே பூதம்" (தொல். இசக)
"தெய்வம் உணவே மாமரம் புட்பறை" (தொல், கூகச)

என இற்றை முது பழந்தொன்னூலில் யகரமெய்யடி கொண்ட தெய்வப் பெயரே குறிக்கப்பட்டிருத்தல் காண்க. தெய்வம்— தை. (வ.) தேவன்—தேவ (வ.).

வடமொழியாளர் திவ்ய (தெய்வத்தன்மையுள்ள), த்யௌஸ் (ஒளியுள்ள வானம்) என்னும் திரிசொற்களினின்று திவ் (ஒளிர்) அல்லது த்யு என்னும் செயற்கையடிகளைத் தோற்றுவித்து அவற்றை மூலமாகக் காட்டுவர். அறிஞர் நடுநிலையாய் ஆய்ந்து உண்மை காண்க.

தே(ய்)வு—தெய்வம். L deus, Gk theos.

தேயம்: திகைதல்=முடிதல், திகை=முடிவு, எல்லை, திசை. திகை—திசை—தேசம்=ஒரு திசையிலுள்ள நாடு. தேசம்—தேயம்=நாடு, இடம், இடப்பொருளுருபு, தேயம்—தேம்=இடப்பொருளுருபு. தேம்—தே—தேவகை=இடப்பொருளுருபு, திசை—திசா (வ.) திகை—திக் (வ.).

வடமொழியில் திசா என்னும் சொற்குத் 'திச்' என்பதை மூலமாகக் காட்டுவர். திச்—காட்டு. Gk deiknumi (to show).

இந்தியில் திக்கா என்னுஞ்சொல் காட்டுதலைக் குறிக்கின்றது நோக்கு—தேக்கு (த. வி.)—திக்கா (பி. வி.)—இதற்கு மூலமான சூரசேனிச்சொல் கிரேக்க நாடு சென்று வேதமொழிக்கு வந்திருக்கலாம். வடமொழியிலுள்ள திக் என்னும் வடிவே திச் என்றும் திரிந்திருக்கலாம். அங்ஙனமாயின், தென்சொல்லும் வடசொல்லும் வெவ்வேறு வழியில் தோன்றினவாகும்.

தோட்டி: துறடு—துறட்டி—தோட்டி.

தோட்டி—த்ரோட்டி, த்ரோத்ர, தோத்ர (வ.).

தோணி: தொள்ளுதல்=தோண்டுதல், குடைதல்.

தொள்—தோள்—தோணி=குடையப்பட்ட மரக்கலம், அது போற் பலகைகளாற் பொருத்திச் செய்த கலம். தோணி—த்ரோண (வ.).

நயன்: நயம்—நயன்—நன்மை, நேர்த்தி, நேர்மை, நேர்பாடு வடவர் காட்டும் நீ என்னும் வேர் நீதி என்னும் வடசொற்குப் பொருந்துமேயன்றி, நயன் என்னும் தென்சொற்குப் பொருந்தாது.

நாகரிகம்: நகர்—நகரகம்—நகரிகம்—நாகரிகம்=முதன் முதல் நகரத்துத்தோன்றிய திருந்தியவாழ்க்கை. நாகரிகம்—நாகரிக (வ.).

நாடி: நுள்—நள்—நாள்—நாளம்=உட்டுளையுள்ள மூங்கில்.

நாளம்—நாளி—நாழி—நாடி=அரத்த அல்லது மூச்சுக்குழாய் ஊதை (வாத) பித்துக் கோழை நாடி, நாடித் துடிப்பு. நாடி—நாடி (வ.).

நாவாய்: நாவுதல்=கொழித்தல். நாவு—நாவாய்=கடல் நீரைக் கொழித்துச் செல்லும் பெருங்கலம். நாவாய்-நௌ, நாவ (வ.) L navis.

நிச்சம்: நில்—நிற்றம்=நிலையானது. ஒ. நோ: கொல்—கொற்றம். வெல்—வெற்றம்.

நிற்றம்—நித்தம். ஒ. நோ: முற்றகம்—முத்தகம்.

நித்தம்—நிச்சம். ஒ. நோ: அத்தன்—அச்சன், நத்து—நச்சு.

நித்தம்—நித்ய (வ.). இதற்கு வடவர் காட்டும் மூலம் பொருந்தாப் பொய்த்தல்.

நீர், நீர்மை: நீள்—நீர்=நீளும்பொருள். நீர்+நிலம். நில்—நிலம்=நிற்கும் பொருள்.

நீர்—நீர்மை=நீரின் தன்மை, குளிர்ந்த தன்மை, இனிய அல்லது சிறந்த தன்மை, தன்மை.

நீர்—நீரம்—நீர (வ.). நீரம்—நார (வ.).

பக்கம்: பகு—பக்கு—பக்கம்—பக்ஷ (வ.).

பகவன்: பகு—பகவு—பகவன் = அனைத்துயிர்க்கும் பகுத்தளித்துக் காப்பவன். பகவன்—பகவன் (வ. bhagavan).

பகு: பகு—பஜ் (வ. bhaj).

படாம்: பட்டுதல் தட்டுதல். பட்டு—பட்டை = தட்டையாகத் தட்டப்பட்டது. பட்டு—பட்டம் = பட்டையான தகடு, பட்டையான துணி, பட்டம்—படம் = துணி. துணியிலெழுதிய ஓவியம், சித்திரச் சீலை, யானை முகபடாம். படம்—படாம். ஒ. நோ: கடம்—கடாம், படம்—பட (வ.). படம் (படாம்)—பட்ட (வ.).

படிவம்: படுதல் விழுதல். படு—படி. படிதல் = ஒன்றின்மேல் இன்னொன்று விழுதல், விழுந்து பதிதல், பதிந்து உருவ வடிவம் அமைதல்.

படி = உருவம், உடம்பு, ஒப்பு. அப்படி = அது போல்.
படி—படிவு—படிவம். படி—படிமை—படிமம்.
படி—வடி, படிவு—வடிவு. படிவம்—வடிவம்.
படி—ப்ரதி (வ.). படிமை—ப்ரதிமா (வ.).

பதம்: பதி—பதம் = பதிந்திருக்கும் நிலை அல்லது நிலைமை, பதவி. பதம்—பதவு—பதவி—பதவீ (வ.).

பருவம்: பரு—பருமம்—பருவம் பருத்தநிலை, பயன்படுநிலை, தக்க காலம். இனி, பழு—பழுவம்—பருவம் என்றுமாம். பருவம்—பர்வன் (வ.).

பள்ளி: பள்-பள்ளம் = நிலமடத்திற்குத் தாழ்வான இடம். பள்ளையன் = குள்ளன். பள்ளையாடு = தாழ்மட்டமான ஆடு.

பள்—பள்ளி = (க). பள்ளம். பள்ளிக்கிருத்தல் = பள்ளத்திற் கிடத்தல்.

(உ.) படுக்கை. நிற்றலிருத்தலினும் தாழ்மட்டமான நிலையடைதல். பள்ளி கொள்ளுதல் = படுத்தல். பள்ளியெழுச்சி = படுக்கை விட்டெழுதல். கூ. படுக்கையறை, ச. படுக்கும் வீடு ஞ. வீடு. மடைப்பள்ளி = சமையல் வீடு. ஙு. வீடுபோன்ற அமைப்பு. பள்ளியோடம் வீடுபோலமைத்த ஓடம். எ. அரசன் வீடாகிய அரண்மனை. அ. தெய்வ வீடாகிய கோயில், கூ. துறவிகள் தங்கும் தவ நிலையம். கூ. பலர் பள்ளி கொள்ளும் ஊர் மடம்.

எக. கோயிலிலும் மடத்திலும் அமைந்த கல்விக்கூடம். (பள்ளி, பள்ளிக்கூடம்) பள்ளிக்குவைத்தல்=படிக்க வைத்தல், பள்ளிப்பிள்ளை பள்ளிக் கணக்கு.

எஉ. அரசன் அல்லது துறவி கல்லறை.
எஊ. கோயில் அல்லது மடமுள்ள ஊர்.
எஎ. பள்ளமான வயலில் வேலை செய்யும் வகுப்பான்.

இங்ஙனம் தொன்று நொட்டு வழங்கிவரும் தூய தென்சொல்லை, பிற்காலத்திற் பள்ளிச் சந்தம் என்றும் பள்ளிவாசல் என்றும் பிறநாடு களினின்று வந்த பிறமதச்சார்பாக வழங்கியமைபற்றி, அயன்மொழிச் சொல்லென்று ஆராய்ச்சியில்லார் அனைவரும் மயங்குவா ராயினர். பள்ளி—பல்லி (வ.).

பளிங்கு: பள்—பள: பளபள என்பது ஒளிர்தல் (பிரகாசித்தல்) குறிப்பு. பளிச்சு, பளீர் என்பன மின்னற் குறிப்புக்கள்.

பள்—பளி—பளிங்கு=பளிங்குக்கல். கண்ணாடி, கற்பூரம். பளி—பளிதம்=கற்பூரம். பள்—பட்டு=பளபளப்பான நூல் அல்லது துணி பட்டுப் பட்டென்று நிலா அடிக்கிறது என்னும் வழக்கை நோக்குக. பளிங்கு=ஸ்படிக (வ.).

பாகம்: பகு—பாகு—பாகம்—பாக (வ. bhaga).

பாரி: பர—பார்—பாரி. பாரித்தல்=பரப்புதல், விரித்தல். பாரி—ஸ்பரி (வ. sphar).

பித்தர்: பிதற்று—பேத்து—பித்து=பிதற்றுநிலை, அறிவுமயக்கம் மயக்கம், மயக்கஞ் செய்யும் நீர், அந்நீர்ப்பை, மயங்கிய கோட்டித் தனம், கோட்டி போன்ற பெருங்காதல், 'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல் பித்து—பித்தம்=மயக்க நீர், கோட்டித்தனம், பெருங்காதல் மதிகேடு. பித்தம்—பித்தன். பித்து—பிச்சு பித்தி (பெ, பா.)—பிச்சி. பித்தம்—பித்த (வ.).

பீழி, பீழை- பிள்ளுதல்=பிடுங்குதல், துன்பஞ் செய்தல், தொல்லை கொடுத்தல். பிய்த்துப் பிடுங்குதல் என்னும் வழக்கை நோக்குக. பிள்—பீள்—பீழ்—பீழி—பீழித்தல்=வருத்துதல், துன்பஞ் செய்தல். பீழி—பீடி—பீட் (வ.). பீழி—பீழை—பீடை—பீடா (வ.). பீடித்தல்—துன்பஞ் செய்தல். பீடை துன்பம்.

புருவம்: புரிதல்=வளைதல். புரி—புரிவு—புரிவம்—புருவம்=கண்ணிற்கு மேலுள்ள வளைவு. புருவம்—ப்ரூ (வ.), சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர் முதலி வட சொல்வடிவைப் ப்ருவ (bh) என்ற வடிவிலேயே குறிக்கின்றது. OE bru, E brow.

புர: புரத்தல்=காத்தல். புர—புரம்=காப்பு. புர—புரவு=காப்பு. புரவலன்=காவலன். புரந்தா—புறந்தா, புறந்தருதல்=பாதுகாப்பளித்தல், காத்தல். புரந்தா—புரந்தான்=காவலன், அரசன். புரந்தான்—புரந்தர (வ.)=இந்திரன், விண்ணோர் காவலன்.

புரி: புரிதல்=விரும்புதல். புரி—ப்ரீ (வ.).

புரை: புரை=துளை, அறை, வீடு, கோயில். துளைக்கருத்தினின்று குற்றமென்னுங் கருத்துந் தோன்றும். புரை—புர (வ.).

பூசினை: கஅ ஆம் குறளுரையைப் பார்க்க.

பூதம்: பூத்தல்=தோன்றுதல்.

"அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணுர் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று." (நீதிநெறி. ங)

இப்பாவிலுள்ள பூத்தற் சொல் வேறு; மலர்தலைக் குறிக்கும் பூத்தற் சொல் வேறு. மலர்தலைக் குறிப்பது பொலிவை யுணர்த்தும் பொல் என்னும் அடியினின்று திரிந்ததாகும்.

புகு—(பொகு)—போகில்=அரும்பு.

புகு—பூ—போ—போத்து=வளார், இளங்கிளை. போத்துவெடித்தல் என்னும் வழக்கை நோக்குக.

பூ: பூதம்=பெருவெளியில் தோன்றிய நால்வகை அல்லது ஐவகைப் பொருள்களுள் ஒன்று.

"வளியென வருவம் பூதக் கிளவியும்" (தொல். உசஉ)

"பால்வரை தெய்வம் விளையே பூதம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன." (தொல். இசக)

பூ:பூ, (வ. bhu), இச்சொல்லினின்றே புவந, பூமி, பவிஷ்ய, பாவந. முதலிய முன்னெட்டுப் பெருச் சொற்களும், அநுபவ, அநுபூதி, உத்பவ, ஸ்வயம்பூ முதலிய முன்னெட்டுப் பெற்ற சொற்களுமாக நூற்றுக்கணக்கான வடசொற்கள் தோன்றுமென அறிக.

பேதை: பிது--பெது--பெதும்பை. பெது--பேது-- பேதை= மடமை மிக்க வன், மடமை மிக்க பெண் பேதை.

பொறு: பொறுத்தல்=சுமத்தல். OE, OS, OHG beran, ON bera, Goth bairan, E bera, L fer port, Gk pher, Skt bhar. பொறு–ப்ரு (வ).

மணி: மண்ணுதல்=கழுவுதல். மண்—மண்ணி--மணி= கழுவப்பெற்ற ஒளிக்கல்.

"மண்ணி யறிப மணி நலம்" (நான்மணி. இ)

மணி—மணி.

மதி: முத்துதல் மெல்ல முட்டுதல். முட்டு--மட்டு= அளவு. முத்து--மத்து= அளவு. மத்து--மத்தி--மதி. மதித்தல்= அளவிடுதல். அளந்தறிதல். மதி=அளந்தறியும் அகக்கரணம், அளவிடப் படும் பொருள், பகுத்தறிவு, அறிவு. மதி—மதி, மிதி (வ.).

மங்கலம்: மங்கு—மங்கல்—மஞ்சல்= மங்கலான (மஞ்சள்) நிறம், அந்நிறக் கிழங்கு, அக்கிழங்குப்பொடி அல்லது அரையல் அல்லது குழம்பு.

ழ. நோ: பொங்கு—பொஞ்சு, இங்கே—இஞ்சே (கொச்சை).

மங்கல்—மங்கலம்=க. மகளிர் மஞ்சள் தேய்த்துக் குளிக்கும் அல்லது முகத்திற் பூசிக்கொள்ளும் கன்னி அல்லது கணவனொடு கூடிய) நிலைமை.

உ. மஞ்சளால் அல்லது மஞ்சள் நீராற் குறிக்கப் பெறும் நன்னிலைமை.

"மங்கல மகளிரொடு மாலை சூட்டி" (புறம். கஉஉ)

ஊ. திருமணம். "மங்கல வாழ்த்துப் பாடல்" (சிலப்).

ஃ. திருமணத் தாலி. "மற்றைநல் லணிகள் காணுன் மங்கலங் காத்த மன்னோ"

(கம்பரா. உருக்காட்டு. கஇ).

எ. மங்கல நிகழ்ச்சி. "சிறந்த சீர்த்தி மண்ணுமங்கலமும்."

(தொல். கoஉள)

(சு) மங்கலச் சின்னம். எண்மங்கலமும் மங்கலம் பதிஞ்றும்.

(எ) மங்கல வழக்கு. (நன். உசுஎ).

(அ) நன்மை. "மங்கல மென்ப மனைமாட்சி" (குறள். கo)

மங்கலம்—மங்களம். வடவர் காட்டும் மூலம். மங்க்=செல், இயங்கு. பகுத்தறிவுடையார் கண்டு தெளிக.

மந்திரி: முன்னுதல்=கருதுதல், எண்ணுதல். முன்—மன். மன்+திரம் (திறம்)=மந்திரம் ஒ. நோ: மன்று—மந்து—மந்தை.

மந்திரம்=எண்ணத்தின் திண்மை, சூழ்வினை.

மந்திரம்—மந்திரி=மந்திரம் செய்பவன், அரசியல் வினைகளைச் சூழ்பவன்.

மந்திரம்—மந்த்ரம் (வ.). மந்திரி—மந்த்ரின் (வ.).

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்று தொல்காப்பியம் (கஉஉசு) கூறுவது மதவியல் பற்றிய மந்திர மேனும், சொல் வேறன்மை யறிக.

மயிர்: மை=கருமை. மை—(மய்)—மயிர்=கரிய முடி. ஒ. நோ: ஐ—அயிர், பை—பயிர், உய்—உயிர், செய்—செயிர், செயிர்த்தல்=சிவத்தல், சினத்தல். மயிர்—மசிர்—ச்மச்ரு (வ.).

மயில் மை=கருமை, நீலம். மை+இல்=மயில்=நீலப் பீலிக் கண்களையுடைய குறிஞ்சி நிலப் பறவை. இது குமரி நாட்டிலேயே குறிஞ்சி வாணரால் முருகனுக்கு நேர்ந்தியாகக் கொள்ளப்பட்டு விட்டது. மயில்—மயூர (வ).

மன் முன்னுதல்=கருதுதல், எண்ணுதல், சூழ்தல். •AS munan=to think. முன்—மன்ப=பகுத்தறிவும் மதிநுட்பமும் கொண்டு சிறப்பாகக் கருதி யறியும் மாந்தன். மன்பதை=மக்கட் கூட்டம்.

"ஆறறி வதுவே யவற்றொடு மனனே" (தொல். கஉஉசு).
"மக்கள் தாமே யாறறி வுயிரே" (ஷெ கஉஉ

மன்—மநு (வ.), OE man, OS, OHG man, E man; Goth. manna.

மனம்: முன்னுதல் கருதுதல். முன்—முன்னம்=மனம் (திவா.) முன்னம்—முனம்—மனம்—மனஸ் (வ.), L mens, (AS munan—to think) OE (ge) mynd, ME mynd, E mind.

மாத்திரை: சஅ ஆம் குறளுரையைப் பார்க்க.

மாதர்: மா=அழகு. மா—மாது=அழகு, (அழகுள்ள) பெண், (பெரும்பாலும் பெண்மேற் கொள்ளும்) காதல். மாது—மாதர்=அழகு, பெண், காதல்.

மணந்த பெண்டிரெல்லாரும் பெரும்பாலும் பின்னர்த் தாய்மாராதலாலும், பெண்தெய்வக் கருத்தில் தாய்மைக் கருத்துங் கலந்திருப்பதனாலும். மகள் என்னும் சொல் தாயையுங் குறித்தலாலும், மாதர் என்னும் சொல் ஆரியமொழிகளில் தாய்ப்பொருள் பெறலாயிற்று.

L mater, Gk mater, G. mutter, E mother, வ. மாத்ரு.

மாலை: முள்—முள்கு—முள்குதல்=முயங்குதல், கலத்தல் முள்—(முய்)—முய—முயங்கு—முயக்கு—முயக்கம். முயங்கு—மயங்கு—மயக்கு-மயக்கம். முய—மய. மயத்தல்=மயங்குதல், கலத்தல். மய—மயல்—மால்=மயக்கம், கலப்பு. மால்-மாலை=பூக்கள் கலந்ததோகையிரண்டும் கலந்த வேளை. மாலை—மாலா (வ.),

மானம்: மன்=பெருமை, பெரியோன், தலைவன், கணவன், அரசன். மன்—மான்—மானம்=பெருமை. மானம்—மான் (வ.).

மீன்: மின்—மீன்=மின்னும் வெண்ணிறமீன், மின்னும் வெள்ளி அல்லது வான்சுடர்.

வெள்ளாட்டின் பெயர் அதன் இனமான காராட்டிற்கும் செவ்வாட்டிற்கும் பொதுப்பெயராக வழங்கினாற்போல, மின்னும் வெண்டை மீன் பெயர் அதன் இனமான பிறவகைகட்கும் வழங்கி வருகின்ற தென்க.

மீன்—மீனம் (பெருமீன்)—மீன (வ.).

முகம். முகு—முகிழ், முகிழ்தல்=தோன்றுதல்.

முகு—முகம். முகஞ்செய்தல்=தோன்றுதல்.

ஒரு பொருள் தோன்றும்போது அதன் முன்புறமே காண்பார்க்குத் தோன்றுமாதலால், தோற்றத்தைக் குறிக்கும் முகம் என்னுஞ் சொல் பொதுவாக முன்புறத்திற்கு அல்லது முன்னுறுப்பிற்குப் பெயராயிற்று. இயங்குதிணை யுயிரிகட்கெல்லாம் தனியடையாளமும் இனவகையுங் காட்டக் கூடியது தலையின் முன்புறமே யாதலால், அதனுக்கே முகம் என்னும் சொல் சிறப்பாகப் பெயராயிற்று.

முகம்: முக (வ. kh).

முத்தம்: முட்டு—முத்து=முட்டைபோல் உருண்டு கிளிஞ்சிற்குள் சிறிதாக விளையும் ஒளிக்கல் வகை, உருண்டு திரண்ட சிறுவிதை.

முத்து—முத்தம் (பெருமுத்து)—முக்த (வ.).

வடவர் சிப்பியினின்று விடுதலை பெற்றதென்று பொருட்காரணியங் காட்டுவது பேதைகட்கே ஏற்கும்.

யாமம்: இது முன்னரே கூறப்பட்டது. ஏமம் என்னும் சொலைப் பார்க்க.

வஞ்சி: வங்குதல் வளைதல், வங்கு—வஞ்சு—வஞ்சி. ஒ. நோ: அங்கு (வளை)—அஞ்சு, பொங்கு—பொஞ்சு.

ஒருவனை வஞ்சிப்பது அவன் தப்பமுடியாவாறு வட்டஞ்சுற்றி வளைவது போலிருத்தலால், வளைதற் கருத்தில் வஞ்சித்தற் கருத்துப் பிறந்தது. Circumvent என்னும் ஆங்கிலச் சொல்லை நோக்குக.

வஞ்சி—வஞ்சம், வஞ்சகம், வஞ்சனம், வஞ்சணை.

வஞ்சி: வஞ்ச்(வ.), வஞ்சகம்--வஞ்சக (வ.), வஞ்சனம்--வஞ்சன (வ.).

வட்டு: வள்--வட்டு=வட்டமான விளையாட்டு அல்லது சூதாட்டக் கருவி.

வட்டு—வட்டம்—வ்ருத்த (வ.).

வண்ணம் வள்—வளை, வளைத்தல்=வளைத்தெழுதுதல், எழுதுதல் வரைதல்.

"உருவப் பல்பூ வொருகொடி வளைஇ" (நெடுநல். ஙஙக).

வள்—வண்—வண்ணம்=(க) வனைத்தெழுதும் எழுத்து அல்லது ஓவியம். எழுத்திலும் ஓவியத்திலுமுள்ள கோடுகளெல்லாம் பெரும்பாலும் வளைந்திருப்பதையும், கோடு, வரி, வரை என்னுஞ் சொற்கள் வளைதற் கருத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதையும், நோக்குக.

உ. எழுதும் மை அல்லது கலவைநீர்.

ஊ. எழுதிய கலவை நீரின் நிறம்.

சு. நிறவகை, வகை.

டு. ஓவிய அழகு, அழகு.

கூ. செய்யுள் ஓசைவகை, சிறப்போசைச் செய்யுள், பாட்டு, மெட்டு, பண்.

வள்—(வர்)—வரி – வரணம் (வரி + அணம் = நிறம், நிறம் பற்றிய குலவகை. வரிதல் = எழுதுதல். வரித்தல் = எழுதுதல். வண்ணம்—வண்ணி—வண்ணனை. வரணம்—வரணி—வரணனை.

ஒ. நோ: திள் = திண்—திண்ணை; திள்—(திர்)—திரள்—திரளை—திரணை. திண்ணை திரணை என்பன போன்றே, வண்ணம் வரணம் அல்லது வண்ணனை வரணனை என்பனவும், ஒரே வேரினவாயினும் வெவ்வேறடியினின்று கிளைத்திருத்தலே நோக்குக.

வரணம்—வர்ண (வ.), வரணி—வர்ண் (வ.), வண்ணம் வண்ணி என்னும் முந்திய அடிச்சொற்கட்கு நேர் சொற்கள் வட மொழியின்மையும் கவனிக்கத்தக்கதே.

வரன்: புரம் = உயர்ச்சி, உயரமான கட்டிடம், கோபுரமுள்ள நகர். கோபுரம் = அரசனிருக்கும் உயரமான கட்டிடம், உயரமான காவற் கூண்டு.

"புரையுயர் பாகும்." (தொல். எஅடு).

புரம்—பரம் = மேலுலகம்: பரம்—வரம்—வரன் = மேலான வீட்டுலகம்.

வலம், வலி: வல், வலம், வலி வலம்-பல (வ)., L. valere வகரம் பகரமாகத்(b) திரிந்துள்ளது வடசொல்லின் பின்மையைக் காட்டும்.

வாணிகம்: பண்ணுதல் = செய்தல், உண்டாகுதல், விளைவித்தல் பண்—பண்ணியம் = பல்வேறு விற்பனைப்பண்டம்.

பண்ணியம்—பண்ணியன்—பண்ணிகன்—பணிகன்—வணிகன்—வணிகம். வணிகன்—வாணிகன்—வாணிகம்—வாணிபம்.

வாணிகன்--வாணியன். வணிகன்--வணிகு. வணிகு-- வணிஜ் (வ.), வணிகன்--வணிஜ (வ.).

விக்குள்: விக்கு--விக்கல்- விக்குள் (ஒலிக்குறிப்புச்சொல்) விக்கல்--ஹிக்கா (வ.), E hiccup. hiccough. இவ்வொலிக்குறிப்புச்சொல் குமரிநாட்டிலேயே தோன்றிவிட்டது. ஆதலால் அதன் திரிபே ஆங்கிலச்சொல்லும் வடசொல்லும்.

வித்து: வித்து--விதை. விதை--வீஜ, பீஜ (வ.)

வியம்: விள்ளுதல்=விரிதல். விள்--(விய்)-- வியம் = விரிவு, வியம்--வியன்--வியல் = அகலம். "வியலென் கிளவி யகலப் பொருட்டே." (தொல். சொல். கூடிசை).

வியம்--வியத் (வ.).

விழி: விழித்தல்=கண்திறத்தல், பார்த்தல், அறிதல். விழி= கண், பார்வை, அறிவு, ஓசி(ஞானம்.)விழி--L. vide, Gk (w) oida, Skt vid, OE, OS witan, OHG wizzan, ON vita, Goth witan.

வெஃகு: விள்--விர்--(விரு)--விரும்பு. விள்--வெள்--வெண்டு. வேண்டு. வெள்--வேள்-- வேண்=விருப்பம். வேண்டுதல்= விரும்புதல், விரும்பியிரத்தல். வெள்--வெள்கு--வெஃகு, வெஃகு தல்=விரும்புதல், பேராசை கொள்ளுதல், பிறர் பொருளை விரும்பு தல். வெஃகு--க. பேக்கு=வேண்டு E. beg. பேக்கு--பிக்ஷ (வ.).

வேலை வேல் வேலி=வேலமுட் கிளையால் அமைத்த வளைசல் சுற்றெல்லை,எல்லை. வேல்--வேலை=எல்லை, காலவெல்லை, பொழுது. வேலை--வேளை=நேரம், அமையம், பொழுது. வேலை--வேலா(வ.)

இவற்றின் விளக்கத்தை யெல்லாம் என் வடமொழி வரலாறு என்னும் நூலுட் காண்க.

இன்னும் இவைபோன்ற சொற்கள் பல உள. விரிவஞ்சி அவை இங்குக் கூறப்பட்டில.

கூ. திருக்குறட் சிறப்புச் சொற்கள்.

அதி (நுட்பம்), அளறு (நரகம்), அறன்கடை, கஃசு, குறியெதிர்ப்பை, கோட்டிகொளல், சோகா, தீயுழி, தோல் நெடுநீர், வரன்.

தோல் என்பது தொல்காப்பியச் சொல்லா வேரு என்னும் ஐயுறவிற்கிடமானதாம். அளறு பொருள் பற்றியும் வரன் என்பது வடிவு பற்றியும் சிறப்பாம். கோட்டிகொளல், சோகா என்பன துணைவினை பற்றியே சிறப்பாம்.

எ. திருவள்ளுவர் பெயரிலுள்ள தனிப்பாடல்கள்

(தனிப்பாடற்றிரட்டு-முதற்பாகம்)

க. எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானெருவ னல்லனே—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்.

உ. பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

கூ. ஐயரென் றுரைத்தீர் நாயேற் கடுக்குமோ வருளி லேனே
பொய்யொடு களவுமற்றுப் புலன்களை யொடுக்கிக் கொண்டு
உய்யவே புலன்க ளைந்து முயர்பர வெளியுள் ளாக்கி
வெய்யவன் மதியம் போல விரவுவ ரைய ராவர்.

ஙா. ஞானவா னென்று சொன்னீர் நாதவிந் துவுங் கடந்து
கானகீல வரையுஞ் சுட்டுக் கடுவெளி பரமா நந்தந்
தானெனு மவையி ரண்டுந் தவிர்ந்துதன் வசமுங் கெட்டு
மோனமுங் கடந்தே யப்பான் முடிந்தவர் ஞானி யாவர்.

ஙி. சாதியிலே தொண்ணூற்றொன் பானஞ் சாதி
சமயத்திற் பதின்மூன்றுஞ் சமய மாகும்
நீதியிலே சிவனுடைய நீதி யாகும்
நிலைமையிலே வேதாந்த நிலைமை யாகும்
ஆதியிலே யெங்களூர் கருவூ ராகும்
அந்தத்திற் போயடைவோம் பேரூர் தன்னில்
சோதியிலே பரஞ்சோதிக் கூட்ட மாகும்
சொல்லுதற்கு மெங்குலஞ்சுக் கிலம தாமே.

ங. எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச் செய்தி யறியீரோ—அந்தவூர்
மூப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழென் றறி.

ன; நில்லுநில் லென்று சொன்னீர் நேசபா சங்க ரோந்தும்
புல்லறி வோடும் வாங்காப் புலிகொலி களவு மற்றுச்
சொல்லுதற் கரிய ஞானச் சுழிமுனை முடியின் மீதில்
எல்லியுங் கடந்தே யப்பா லேகமா னவர்க ணிற்பார்.

அ. இருமிரு மென்று சொன்னீ ரேற்குமோ வேழை யேற்குத்
தருபொரு ளுணர்ந்து சைவ சமயமு மநீதத்து நீங்கி
மருடரு விநீயு நீங்கி மாசிலா வுண்மை ஞானம்
பொருந்தின ரிருப்பர் பின்பு பொருதவ ரிறப்பர் தாமே.

கூ. போமென வுரைத்தீ ரென்னைப்பொறியொடு புலன்க ரோந்தும்
ஆமெனு மவிச்சை யோடு மங்ஙனே மதித்துக் கொண்டே
ஏமமுஞ் சாம மற்றே யிரவொடு பகலு மற்றுச்
சோமனூர் பதியை விட்டுத் துறந்தவர் போவ ரன்றே.

கo. அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின்றாங்கி முன்னெழுஉம் பேதையே போதியோ
என்றாங்கு மென்க ணிரா.

கக. குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை.
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்.

இவற்றுள், 'அடிசிற் கினியாளே' என்பது திருவள்ளுவரே பாடியதாக இருக்கலாம்.

அ. திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிய சிறப்புப் பாக்கள்.

"குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி
உறுவிலைக்கு விற்றதனை டொக்கும்—தெறுகலியைச்
செற்றவேன் மாற திருவள் ளுவர்வாய்ச்
சொற்றகுமுப் பால்வாழ்த்துச் சொல்."

பெருந்தொகை, (கஉகூஅ)

"முப்பாலு முண்டோ முலிப்பா வினிறுகரோம்
அப்பாலுக் கப்பாலு மாயிருக்கும்—எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனூர் வைப்பெமக்கு வைத்து." (ஷி கஉகூஉ)

"எப்பாலு மேத்துவா மின்பம் பொருளறமா
முப்பாலு மாயிரத்து முந்நூற்று முப்பதா

ஓரடி முக்கா லுரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே." (ஷெ உ000)

"அவனே புலவ னவனே யறிஞன்
அவனே தமிழை யறிந்தோன்—சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
வுள்ளுவ தேவ னுளன்." (ஷெ உ00க)

"வாழிமழை யானினங்கள் வாழிமறை யாகமங்கள்
வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள்—வாழியரோ
வுள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்
வள்ளுவர் பாத மலர்." (ஷெ உ00உ)

"மூயோன் வடிவம் போல வேள்வியின்
முன்னொரு குறளுரு வாகிப் பின்னது
மூவடி முறைமையிற் செல்லாது தாந்தம்
ஈரடி யியக்க நிரம்பா வளவையின்
உலக மூன்று மளந்தன
புலவன் வள்ளுவன் குறள்வெண் பாட்டே" (ஷெ கூ00கூ).

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்."—உமாபதி சிவாசாரியார்.

"நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்," —ஔவையார்.

கூ. திருவள்ளுவ மாலை

இப்பாடற்றிரட்டு கடைக் கழகப் புலவராற் பாடப்பட்டதன்று. பிற்காலத்து ஆரியச்சார்பான ஒருவரோ ஒரு சிலரோ அவர்பெயரிற் பாடிவைத்ததாகும். இதற்குச் சான்றுகள்:—

க. உடம்பிலி (அசரீரி) யுரையும் நாமகள் கூற்றும் இறைவன் பாராட்டும் என்று முப்பாக்கள் கலந்திருத்தல்.

உ. இறையனாரகப் பொருளுரைக் கட்டுக் கதையிற் கூறப் பட்டுள்ள உருத்திரசன்மன் என்னும் மூவாட்டை மூங்கைப் பிரா மணச் சிறுவன், திருவள்ளுவரோடு ஒக்கவிருக்கவென்று வானுரை யெழுந்ததாகக் கூறப்பட்டிருத்தல்.

க. இத்திருவள்ளுவமாலைப் பாடகராகக் குறிக்கப்பட்டவருட் பலர் திருவள்ளுவர் காலத்தவரல்லாதவராக இருத்தல்.

ச. திருக்குறள் ஆரியவேத வழிப்பட்டதாகப் பல பாட்டுக்கள் கூறுதல்.

ஞ. பாக்களின் நடை பெரும்பாலும் பிற்காலத்தாக விருத்தல்

ஞ. உருத்திரசர்மன் என்னும் இயற்பெயர் உயர்வுப்பன்மை வடிவிற் குறிக்கப்பட்டிருத்தல்.

எ. நல்கூர்வேள்வியார் பெயரிலுள்ள பாவில் மாதானுபங்கி என்னும் ஒரு பொருளற்ற வடசொல் ஆளப்பட்டிருத்தல்.

அ. சில பாக்களில் திருவள்ளுவர் கருத்திற்கு மாறுகப் பிரா மணரை அந்தணரென்று குறித்திருத்தல்.

உடம்பிலி (அசரீரி)

க. திருத்தகு கெய்வக் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

(பொழிப்புரை) உருத்திரசர்மன் கழகப் பலகையிடத்துத் திரு வள்ளுவருடன் ஒக்கவிருக்க வென்று வானில் ஓர் உரையெழுந்தது.

நாமகள்

உ. நாடா முதலுன் மறைநான் முகனுவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்--கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(பொ--ரை.) பாண்டிய வேந்தே! நான் படைப்புக் காலத் தில் நீன்முகன் நாவிலிருந்து நான்மறை பாடினேன்; இடைக் காலத்திற் பாரதம் பாடினேன்; இன்று வள்ளுவன் வாயது என் பாட்டு.

இறையனார்

கூ. என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்--குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்.

(பொ--ரை.) திருவள்ளுவரின் திருக்குறள் நெடுங்காலஞ் செல்லினும் தேன் சொரியுந்தன்மையதான விண்ணக மலர்போலும்.

உக்கிரப்பெரு வழுதியார்

சு. நான்மறையின் மெய்ப்பொருளா முப்பொருளா
நான்முகத்தோன்
முன்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

(பொ—ரை.) நான்முகன் வள்ளுவனுகத் தோன்றிக் கூறிய முப்பால்நூலே, என்தலே வணங்குக; வாய் வழுத்துக; மனம் ஊழ்குக (தியானிக்க), செவி கேட்க.

கபிலர்

கூ. தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளுக் குறங்கும் வளநாட வள்ளுவனுர்
வெள்ளுக் குறட்பா விரி.

(பொ—ரை.) வீட்டுப் பறவைகள் வள்ளுப் பாட்டிற் குறங்கும் வளநாட்டரசே! திருவள்ளுவர் திருக்குறளின் சொற்சுருக்கப் பொருட் பெருக்கம். புல்நுனிப் பனித்துளி பனைவடிவைத் தன்னுள் அடக்கிக் காட்டினுற் போலும்.

பரணர்

எ. மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

(பொ—ரை,) திருமால் குறளாய்த் தோன்றித் தன் இருபேரடியால் உலகனைத்தையும் அளந்தான்; ஆனுல், திருவள்ளுவர் தம் குறளின் இரு சிற்றடியால் மாந்தர் கருத்தனைத்தையும் அளந்தார்.

நக்கீரர்

ஏ. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வந்நான்கு—மேனேருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வீழியுல கென்னுற்று மற்று.

(பொ—ரை.) தாமே எல்லாவற்றையும் அறிந்து, நாற்பொரு ளோயுங் குறள்வெண்பாவால் எல்லார்க்கும் எளிதாயறிவித்த திரு வள்ளுவர்க்கும் மழைபொழியும் முகிலுக்கும் உலகம் என்ன கைம் மாறு செய்யவல்லதாம்?

மாமூலனார்

அ. அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
நிறந்தெரிந்து செப்பிய தேவை--மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(பொ—ரை.) அற முதலிய நான்கையும் உள்ளவா றுலகிற் குணர்த்திய தெய்வப் புலவரை, மறந்தேனும் மாந்தனுகக் கொள் ளும் அறிவிலியின் கூற்றை அறிவுடையோர் கொள்ளார்.

கல்லாடர்

கூ. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்--நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

(பொ--ரை.) அறுவகை மதத்தாரும். ஒருபொருளின் இயல்பை இன்னதென்று ஒரு மதத்தார் கூறின், அதை மறுத்து வேறுகக் காட்டுவர் ஏனை மதத்தாரெல்லாரும், ஆனால், திருவள்ளு வர் தம் முப்பாலிற் சொன்னவற்றையோ உண்மையென்று எல்லா ரும் ஒத்துக் கொள்வர்.

சீத்தலைச் சாத்தனார்

கo. மும்மலியு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு--மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் ருரன்ரே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

(பொ--ரை.) திருவள்ளுவரின் முப்பால், மலை, நாடு, ஆறு, நகர், முரசு, கொடி, குதிரை, தமிழ் ஆகியவற்றை மும்மூன்ருகக் கொண்ட மூவேந்தரின் முடிமாலை போல்வதாம்

பருத்துவன் தாமோதரனார்

கக. சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலிக்குத்தில்--காந்தி
மலிக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலிக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

(பொ--ரை.) மலையைப் பகையென்று குத்தும் யானை போலும் அரசே! சீந்திற் சருக்கரையும் சுக்குப்பொடியும்தேனுங்கலந்து மோந்தால், யாருக்குந் தலிவலி நீங்கிவிடும். திருவள்ளுவர் திருக்குறளைப் பார்த்தபின் சீத்தலைச்சாத்தனார்க்குப் பிறர் பாடல்களால் ஏற்பட்ட தலிவலி நீங்கிற்று.

நாகன் தேவனார்

கஉ. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று--வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார்.

(பொ--ரை.) தாமரைக் குளத்திற் குளிப்பார் பிற குளத்தை விரும்பார். அதுபோல், திருவள்ளுவரின் திருக்குறளைக் கற்றூர் பிற நூல்களை விரும்பார்.

அரசில் கிழார்

கங. பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்--சுருங்கிய
சொல்லால் விளித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(பொ--ரை.) விரிவுபட்டுக் கிடக்கும் வெவ்வேறு பொருள்களையெல்லாம் ஒழுங்காகக் கூறுபடுத்திச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலில் வல்லவர் வள்ளுவரன்றி வேறு யார்?

பொன்முடியார்

கச காணின்ற தொங்கலாய் காசிபனூர் தந்ததுமுன்
கூனின் றளந்த குறளென்ப--நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தானின் றளந்த குறள்.

(பொ--ரை.) மாகூயணிந்த அரசே! முன்பு காசிபன் தந்த குறள் மண்ணில் நின்று உலகத்தை அளந்தது; இன்று திருவள்ளுவர் தந்த குறள் மண்ணிலும் விண்ணிலும் நின்று உலகத்தை யளந்தது.

கோதமனார்

கஙி. ஆற்ற லழியுமென் றந்தணர்க ணுண்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா--ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனூர் முப்பாகூச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

(பொ-ரை.) பிராமணர் நால்வேதங்களையும் ஏட்டில் எழுதினால் அவற்றின் வலிமை கெடுமென்று வாய்ப் பாடமாகவே சொல்லி காத்துவருவர்; திருவள்ளுவரின் திருக்குறளையோ ஏட்டிலெழுதினாலும் எவர் படித்தாலும் அதன் வலிமை குறைதலில்லை.

பிராமணர் ஆரிய வேதங்களை ஏட்டிலெழுதாதிருந்தமைக்குக் காரணியங்கள்--

க. ஏட்டிலெழுதினால் அவற்றின் வெள்ளைக் கோட்டியும் பிள்ளைக் கருத்தும் வெளியாகிவிடுமென்னும் அச்சம்.

உ. ஏட்டிலெழுதினால் எல்லாருங் கற்றுப் பூசாரித்தொழிலை மேற்கொண்டு பிராமணர்க்குப் பிழைப்பில்லாது செய்துவிடுவரென்னும் அச்சம்.

கூ. ஏட்டிலெழுதாதிருந்தால் மேன்மேலுங் காலத்திற்கேற்ற திருந்திய கருத்துக்களைச் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்புண்மை.

நத்தத்தனார்

கசு. ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்--போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(பொ--ரை.) ஒருவர் திருக்குறள் முழுவதையுங் கற்றபின், பிறருக்கு ஆசிரியராகிக் கற்பிக்கலாம். ஆனால், ஒருவரிடம் மாணவரா யமர்ந்து கற்க நூலில்லை.

மூகையனார்ச் சிறுகருந்தும்பியார்

கஎ. உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால--வள்ளுவனூர்

முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

(பொ--ரை.) திருக்குறளினுஞ் சிறந்தநூல் ஒன்றுண்டென்று எப்புலவருஞ் சொல்லார். ஆதலால் நாம் செய்யவேண்டியது அதையுள்ளஞ்செருது உரைத்துத் தெளிதலே.

ஆசிரியர் நல்லந்துவனார்

கஅ- சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்--தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில்.

(பொ--ரை.) எல்லாக் கலைநூற்பொருள்களையும் எடுத்துக் கூறும் திருக்குறளை யியற்றிய, திருவள்ளுவரை யொத்த புலவர் ஒருவருமில்லை.

கீரந்தையார்

கக. தப்பா முதற்பாவாற் றுமாண்ட பரடலினுன்
முப்பாலி னுற்பான் மொழிந்தவ--ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள்ளுவர்.

(பொ—ரை.) பாண்டியன் மனமகிழ நாற்பொருளையும் முப்பாலிற் குறள் வெண்பாவாற் கூறியவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவரே.

சிறுமேதாவியார்

உ0. வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றென்றாழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(பொ—ரை.) திருக்குறள் அதிகாரத்தொகை: பாயிரம் நான்கு; அறத்துப்பால் முப்பத்து மூன்று; ஊழ் ஒன்று; பொருட்பால் எழுபது; இன்பத்துப்பால் இருபத்தைந்து.

நல்கூர்வேள்வியார்

உக. உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்க
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு

(பொ—ரை.) வட மதுரைக்குக் கண்ணனே நிலைக்களமாகக் கூறுவர்; வைகை மதுரையான தென்மதுரைக்குத் திருவள்ளுவர் நிலைக்களமாவர்.

தொடித்தலைவிழுத்தண்டினார்

உஉ. அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

(பொ—ரை.) அறத்தைப் பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என நான்காகவும், பொருளை அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என ஏழாகவும், இன்பத்தை ஆண்பாற் கூற்று, பெண்பாற்கூற்று, இருபாற்கூற்று என மூன்றாகவும் வகுத்து, நாற்பொருளையுங் கூறிய திருவள்ளுவரே வேறுபொருளிருப்பினும் அதையறிவார் போலும்!

நாடு அரணுள் அடக்கப்பட்டது.

வெள்ளிவீதியார்

உங. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனு
மிதற்குரிய ரல்லாதா ரில்

(பொ—ரை.) ஒருவராலும் இயற்றப் படாத வேதமும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும் கூறும் பொருள் ஒன்றே. இவற்றுள் முன்னது பிராமணர்க்கே யுரியது; பின்னதோ எல்லார்க்கும் பொதுவாம்.

குறிப்பு.—ஆரிய வேதத்தைச் செய்யாமொழி யென்றது ஒரு துணிச்சல் மிக்க ஏமாற்று. அதற்கும் திருக்குறட்கும் பொருள்ஒன்றே

யென்றது நெஞ்சழுத்தம் மிக்க பொய். இவற்றை நம்பிய புலவரோ தமிழகத்தைக் கெடுத்த தசைப்பிண்டங்கள். திருக்குறளைப் பொய்யாமொழி யென்றமையின், வேதம் பொய்மொழியென்பது எதிர் நிலை யனவையாற் பெறப்படும்.

மாங்குடி மருதனார்

உசை. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றே
ருள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(பொ—ரை.) திருவள்ளுவரின் திருவாய்மொழி, படிப்பதற் கெளிதாயும் பொருளுணர்தற் கரிதாயுமுள்ள மந்திரநூலாக விளங்கி, தூயவறிஞர் நினைக்குந்தோறும் அவருள்ளத்தை யுருக்கும்.

எறிச்சலூர் மலாடனார்

உஞ. பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—வாய
வறத்துப்பா லல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

பொ—ரை.) திருவள்ளுவர் நன்றாக ஆய்ந்து பாயிரம் நான்கதி காரமும் இல்லறவியல் இருபததிகாரமும் துறவறவியல் பதின்மூன்றதி காரமும் ஊழ் ஒரதிகாரமுமாக, அறத்துப்பாலை நால்வகையாக வகுத்துரைத்தார்.

போக்கியார்

உகூ. அரசிய லமையந் தமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண்டொன் றெண்கூ—ழிருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.

(பொ—ரை.) திருக்குறளின் பொருட்பால், அரசியல் இருபத் தைந் ததிகாரமும், அமைச்சியல் பத்ததிகாரமும், அரணியல் ஈரதி காரமும், பொருளியல் ஓரதிகாரமும், படையியல் ஈரதிகாரமும் நட்பியல் பதினேழதிகாரமும்; குடியியல் பதின்மூன்றதிகாரமுமாக எழுபகுதிகளையுடையதாம்.

மோசிகீரனார்

உஎ. ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராருக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

(பொ—ரை.) திருவள்ளுவர் ஆண்பாற்கூற்று ஏழதிகாரமும் பெண்பாற் கூற்றுப் பன்னீரதிகாரமும் இருபாற் கூற்று ஆறதிகாரமு மாக, இன்பத்துப்பாகிய மூன்றுக வகுத்துரைத்தார்.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்

உஅ. ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது.
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனெகி
யந்தா மரைமே லயன்.

(பொ—ரை.) நான்முகன் திருவள்ளுவனெகி வடமொழி வேதப் பொருளைத் தமிழில் கூடக அதிகாரமாக விளக்கிக் கூறினன்.

மதுரைத் தமிழ் நாகனார்

உக. எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

(பொ-ரை.) எல்லாப் பொருளும் இதன்கண் உள. இதில் இல்லாத பொருள் ஒன்றுமில்லை. ஆதலால், உலகத்தார்க்கு இவ்வொரு நூலே போதுமானதாம்.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

கூ. எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு-முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

(பொ-ரை.) எல்லாப்பொருளையும் எல்லாரும் உள்ளவாறறியுமாறு திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட்குப், பாரதம், இராமாயணம் மனுதருமசாத்திரம், நால் வேதம் ஆகிய தான்கே ஒப்பாம்.

உருத்திர சன்ம கண்ணார்

கக. மணற்கிளக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால் — பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.

பொ--ரை. நீர்நிலை யடுத்த மணலைத் தோண்டுந்தோறும் நீரூறும். குழந்தை வாய்வைத் துறிஞ்சுந்தோறும் தாய்முலை சுரக்கும்; அவைபோல், திருக்குறளை ஆராயுந்தோறும் அறிவு பெருகும்.

பெருஞ்சித்திரனார்

கஉ. ஏதமில் வள்ளுவ ரின்குறள் வெண் பாவினை
லோதிய வொண்பொரு ளெல்லா--முரைத்ததனற்
ருதவிழ்த் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன

பொ--ரை. மாலையணிந்த பாண்டிய வேந்தே! திருவள்ளுவர் வேதங்களின் சிறந்தபொருளை யெல்லாம் குறள்வெண்பாவாற் கூறிவிட்டமையால், இவற்றுள் எவை மேம்பட்டவை?

நரிவெரூஉத் தலையார்

கங. இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்--மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

(பொ--ரை.), நாற்பொருளையும் மக்கட்கு அறிவிக்கும்படி இயற்றப்பட்ட நால் வேதங்கள் அவரால் உணர்தற்கு அரியதாயிருந்தமையால், அவற்றை யெளிதா யுணருமாறு திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினர்

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

கச. புலவர் திருவருள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்--நிலவு

பிறங்கொளிமா லிலக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லிலக்கும் பெயர்.

(பொ--ரை.) திருவள்ளுவரையும் பிற புலவரையும்புலவரென்று சமமாகச் சொல்லுதல், முழுமதி மாலையையும் காருவா அமாவாசை மாலையையும் மாலியென்றே ஒரே சொல்லாற் குறிப்பது போலும்.

மதுரை யறுவை வாணிகன் இளவேட்டனார்

கூ. இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

(பொ—ரை.) மக்களெல்லாரும் தமக்கு வரும் இன்பதுன்பக் காரணியங்களை யறிந்து துன்பத்தினின்று தப்பி யின்புறும்பொருட்டு, திருவள்ளுவர் திருக்குறளை வாயுறை வாழ்த்தாகப்பாடினார்.

வாயுறை வாழ்த்தாவது, முன்பு வெறுப்பை விளைப்பினும் பின்பு நலம் பயக்கும் நன் மருந்துபோற் பயன்படும் அறிவுரை வாயுறுத்தும் மருந்து.

கவிசாகரப் பெருந்தேவனார்

கூக. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக்—கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(பொ—ரை.) பூவிற்குத் தாமரையும், பொன்னிற்கு நாவற் சாறமும், ஆவிற்குக் காமதேனுவும் யானைக்கு ஐராவதமும். தேவிற்குத் திருமாலும், நூலிற்குத் திருக்குறளும் சிறந்தனவாம்.

மதுரைப் பெருமருதனார்

கூஎ. அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனு
ரோதவழுக் கற்ற துலகு.

(பொ—ரை.) திருவள்ளுவர், அறத்தை முப்பத்தெட்டதிகாரங்களாகவும் இன்பத்தை இருபத்தைந்து அதிகாரங்களாகவும் வகுத்து, வேதப் பொருளைக் குறள் வெண்பாவாற் கோவைபடக் கூறியதால், உலகம் தீயொழுக்கத்தினின்றும் தீர்ந்தது.

கோவூர்கிழார்

நடை. அறமுத லுன்கு மகவிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனர் பான்முறைநே ரொவ்வாதே
முன்னோ முதுவோர் மொழி.

(பொ-ரை.) நாற்பொருளையும் மக்கள் ஆய்ந்து தெளிந்தற்பொருட்டுத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட்கு முந்துநூல் ஒன்றும் நிகராகாது.

உறையூர் முதுகூற்றனர்

நூல். தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்
பாவிற் சிறந்திடுமப் பால்பகரார்—நாவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

(பொ—ரை.) தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் திருக்குறளை ஓதாதவரின் நாவிற்கு இன்சொற் சொலவில்லை; மனத்திற்குச் சொற்சுவை யுணர்ச்சியில்லை; உடம்பிற்கு நல்வினையில்லை என்று கருதித் திருமகள் அவரிடஞ் சேராள்.

இழிகட் பெருங்கண்ணனர்

சுற. இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனர்
பாடின ரின்குறள்வெண் பா.

(பொ—ரை.) இம்மை மறுமைக்கும் எழுபிறப்பிற்கும் பயன்படவும் நாற்பொருளும் நடைபெறவும், திருவள்ளுவர் திருக்குறளியற்றினர்.

செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

சுக. ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(பொ—ரை.) மக்களுக்கு வேண்டியவற்றையும் வேண்டாதவற்றையும் அறிஞரும் எடுத்துச் சொல்லுமாறு, திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட் கூற்றுக்களையே, ஒழுக்கத்தில் உயர்ந்தோர் கடைப்பிடிப்பர்.

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

சஉ. வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(பொ—ரை.) திருவள்ளுவர் ஆரிய வேதப்பொருளைத் தமிழுலகம் அறிதற்பொருட்டுத் தமிழில் விரித்துரைத்தார். ஆதலால், திருக்குறளில் மக்கள் கருதும்பொருள்களெல்லாம் உள்ளன.

வண்ணக்கஞ் சாத்தனார்

சஊ. ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றுரைப்பான் செப்பரிதா—லாரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனு
ரோது குறட்பா வுடைத்து.

(பொ—ரை.) வடமொழியையும் தென்மொழியையும் ஒப்பு நோக்கி இது சிறந்தது என்று ஒன்றைச் சொல்ல முடியாது. வடமொழியில் வேதமுள்ளது; தென்மொழியில் திருக்குறள் உள்ளது. ஆதலால், இரண்டும் சமமே.

களத்தூர்கிழார்

சஎ. ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதலான்குஞ் சாலு—மருமறைக
ளோந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனூர்
புந்தி மொழிந்த பொருள்.

(பொ—ரை.) இருக்குமுதல் பாரதம் ஈறான வேதங்கள் ஐந்தும் வேதவழிப்பட்ட சாத்திரங்கள் ஆறும், திருவள்ளுவர் நூலிலடங்கும்; ஆதலால் ஒருவர் உய்வதற்கு, ஓரெதுகையும் ஈரெதுகையுமாகிய இருவகைக் குறளாலு மமைந்த முப்பாலிற் சொல்லப்பட்ட நாற் பாருளையும் அறிந்தாற் போதும்.

நச்சுமனார்

சஙி. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண—மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரீன்குறள் வெண் பா.

(பொ—ரை.) எழுத்து முதல் வண் ணம் ஈருகச் சொல்லப் பட்ட எல்லாம் அழகாக எவ்வெக்காலத்தில் எவ்வெவராற் சொல்லப் பட்டனவோ, அவையெல்லாம் இக்காலத்து இத்திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இனிய குறள் வெண்பாக்களிற் சொல்லப்பட்டுள்ளன.

அக்காரக்கனி நச்சுமனார்

சஙு. கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூ னயத்தின் பயன்.

(பொ—ரை.) மதியமும் முழுமதியும் முப்பால்நூலும் முறையே பதினறுகலைகளாலும் அறுபத்துநான்கு கலைகளாலும் நிறைந்து காண்பதற்கும் ஆராய்தற்கும் இனிதாகி, புறக் கண்ணிற்குத் தண் மையும் அகக்கண்ணிற்குப் பண்பும் உடைத்தாயினும், முப்பால் நூலால் விளையும் பயன் மதியினிடத்துண்டோ?

நப்பாலத்தனார்

சஙஅ. அறந்தகளி னன்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் ஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனு ற்றினார் வையத்து வாழ்வார்க
ளுள்ளிரு ணீக்கும் விள கு.

(பொ—ரை.) திருவள்ளுவர் அறத்தை அகலாகவும், பொரு ளைத் திரியாகவும், இன்பத்தை நெய்யாகவும், சொல்லை நெருப்பாக வும், குறட்பாவைத் தண்டாகவும் கொண்டு, உலகத்தோரின் அக விருளை நீக்கும் விளக்கேற்றினார்.

குலபதிநாயனார்

சஙக. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு ளள்ளுதலால்—வள்ளுவனார்

வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கண்டு.

(பொ—ரை.) நெஞ்சத் தாமரையை விரியச்செய்து அகவிருளை நீக்குந் திருக்குறளும், நீர்த்தாமரையை விரியச் செய்து புறவிருளை நீக்கும் கதிரவனும், குணத்தால் ஒக்குமென்று கொள்ளத்தகும்.

தேனீக் குடிக்கீரனார்

சஉ. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(பொ—ரை.) தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரின் திருக்குறளைக் கற்று அல்லது கேட்டு அறிந்ததனால், மக்கள் மனத்தில் மெய்த்தன்மையான வெல்லாம் மெய்யாகவும் பொய்த்தன்மையான வெல்லாம் பொய்யாகவும் விளங்கிவிட்டன.

கொடிஞாழன் மாணிபூதனார்

ஓ0. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(பொ—ரை.) பகைவென்ற பாண்டிய! திருவள்ளுவர் வாயினின்று, இதற்குமுன் கேட்டிராதவையெல்லாம் கேட்டு நாற்பொருளின் இயல்பையும் நன்றாய் அறிந்தேம்.

கவுணியனார்

ஙக. சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா.

(பொ—ரை.) நாம் நல்லொழுக்க வழியை அறிதற்பொருட்டுப் புலமை மிக்க திருவள்ளுவர் இயற்றிய இனிய குறள்வெண்பாக்கள் ஆராய்ந்தால் மனத்திற்கும் கேட்டாற் செவிக்கும் ஓதினால் நாவிற்கும் இன்பந்தருவன; தொன்றுதொட்டு வரும் இருவினைகளாகிய நோய்கட்குச் சிறந்த மருந்தாவன.

மதுரைப் பாலாசிரியனூர்

இஉ. வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளை—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

(பொ--ரை.) வெள்ளி வியாழன் கதிரவன் திங்கள் என்பன புறவிருளை நீக்கும் ஒளிகளாம். அவைபோலத் திருவள்ளுவரின் இனிய குறள்வெண்பா அகவிருள் நீக்கும் ஒளியாம்.

ஆலங்குடி வங்கனூர்

இக. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதால்--தெள்ளமுதம்
உண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து.

(பொ--ரை.) திருவள்ளுவர் பாட்டின் தீஞ்சுவைக்குத் தெள்ள முதமும் ஒவ்வாது. தெள்ளமுதைத் தேவர் மட்டும் உண்டு சுவைப் பர்; முப்பாலமுதையோ உலகத்தாரனைவரும் உண்டு சுவைப்பர்.

இடைக்காடர்

இச. கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(பொ—ரை.) திருக்குறளின் சொற்சுருக்கமும் பொருட்பெருக்க மும் நோக்கின், ஒவ்வொரு குறளும், கடுகின் நடுவில் துளைசெய்து அதில் எழுகடல் நீரையும் பாய்ச்சி, மேலும் அது அளவிற் குறுகும் வண்ணம் சற்றுத் தறித்துவைத்தாற் போன்றதாம்.

ஔவையார்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(பொ--ரை) திருக்குறளின் சொற்சுருக்கத்தையும் பொருட் பெருக்கத்தையும் நோக்கின், ஒவ்வொரு குறளும, கடுகினும் மிக நுண்ணிய அணுவைத் துளையிட்டு அதில் எழுகடல் நீ ரை யு

பாய்ச்சி, மேலும் அது அளவிற் குறுகும் வண்ணம் சற்றுத் தறித்து வைத்தாற் போன்றதாம்.

குறிப்புக்கள்:--

(க) இத்திருவள்ளுவ மாலை கடைக்கழகப் புலவராற் பாடப் பட்டதன்றுயினும் பலபாக்களிலுள்ள கருத்துக்கள் சிறந்தனவும் நடுநிலையானவும் மேற்கோளாக ஆளத்தக்கனவுமாக உள்ளன.

(உ) சில பாக்கள் அவற்றைப் பாடியவரின் உளவிறந்த ஆசிய வெறியையோ அடிமைத் தனத்தையோ காட்டுவனவாக வுள்ளன.

(கூ) சிலபாக்கள் அளவிறந்த உயர்வுநவிற்சியாகவுள்ளன.

(ச) சிலபாக்கள் நூலின் பாகுபாட்டையே எடுத்துக்கூறுவன.

கo. திருவள்ளுவர் காலத் தமிழ் நூல்களும் கலையறிவியல்களும்,

பல்துறை நூல்கள்:—

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவர்க்கு. (கூகூ)

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. (கூஙக)

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு. (கூஞவ)

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (சoக)

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலா லோர்க்குந் துணிவு (நிகூ)

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. (கசக)

சிறந்த நூல்கள்:—

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த
னுண்மை யறிவே மிகும். (கூஎக)

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (சக0)

நவிரெறு நூனயம் போலும் பயிரெறும்
பண்புடை யாளர் தொடர்பு. (எஅங)

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதல் மாணூர்க் கரிது. (அஉங)

கலையறிவியல் நூல்கள்

கலை

அறுதொழில்: உழவு, நெசவு, ஓவியம், கட்டிடம், வாணிகம், கல்வி.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். (திசுஎ)

இலக்கியம் :

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (கூகூஉ)

கட்டிடமும் பொறிவினையும்:

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கும் நூல். (எசஙக)

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயீ மோடா நிலத்து. (சகூசு)

உருவம்:

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து. (சுசுஎ)

நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று. (சஎஎ

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு வுயிர்மருட்டி யற்று. (கஎஉஎ)

மருத்துவம்:

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. (கூசக)

இசை:

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (கூசு)

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணேட்ட மில்லாத கண். (இளங)

நாடகம்:

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. (கூகூஉ)

மறம்:

பேராண்மை யென்ப தறுகணென் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. (எளங)

அறிவியல் அறம்:

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொருத்தவற்று ளெல்லாந் தலை. (கூஉஉ)

கணிதம்:

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (கூகூஉ)

பொருள்நூல் (அரசியல்):

காதல காத லறியாமை யுய்க்கிற்பின்
ஏதில வேதிலார் நூல். (ஃஃ0)

சொற்றொகை (நிகண்டு):

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்வின்
றொகையறிந்த தூய்மை யவர். (எளங)

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். (இஅ)

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. (கூங)

நூலாருள் நூல்வல்ல னுலகில் வேலாருள்
வென்றி விளையுரைப்பான் பண்பு. (கூஅங)

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். (இசங)

மந்திரம் (மறை)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (உஅ)

ஓகம் (யோகம்):

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. (உக)

ஏரணம்:

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. (எஉ)

மெய்ப்பொருள் நூல்:

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (கூஙசு)

கக.ஏ அரசுவகைகளும் திருக்குறள் அரசியலும்

க ஒருவராட்சி

அ தாயாட்சி-Matriarchy
ஆ தந்தையாட்சி- Patriarchy
இ நாட்டாண்மை-City State
ஈ தேவாட்சி-Theocracy
உ கோவரசு-Monarchy:—

(அ) தன்னரசு-Autocracy
(ஆ) தன்மூப்பாட்சி-Dictatorship
(இ) அமைச்சரசு-Limited Monarchy
(ஈ) பாராளுமன்றக் கோவரசு-Parliamentary Monarchy

உ பலராட்சி

அ. குருக்களாட்சி-Hierocracy
ஆ. சீரியோராட்சி- Aristocracy

(அ) சிலராட்கி-Oligarhcy
(ஆ) பலரரட்சி—Polyarchy

இ. செல்வராட்சி—Plutocracy
ஈ. படையாட்சி—Stratocracy

க குடியாட்சி—Democracy

அ மக்களாட்சி—Republic
(அ) ஒற்றையாட்சி—Unitary Government
(ஆ) கூட்டாட்சி—Federal Government

ஆ. கூட்டுடைமை—Socialism
இ. பொதுவுடைமை—Communism
ஈ. கட்டுடைமை—Fascism
ஊ. உழைப்பாளராட்சி—Ergatocracy
ஊ. மன்பதாட்சி—Mobocracy Ochlocracy
எ. அனைவராட்சி—Pantisocracy

அரசுகளெல்லாம் கீழ் வருமாறு வெவ்வேறு வகையில் இவ்விரு திறப்படும்.

க செங்கோலாட்சி Benign Govt.+கொடுங்கோலாட்சி Despotic Government

உ தன்னாட்சி Home Rule × வேற்றாட்சி Xenocracy

ஊ ஒருவராட்சி Monocracy × பலராட்சி Polyarchy

ச பேரரசு Imperialism × சிற்றரசு Feudalism

ஞ பாராளுமன்ற ஆட்சி (Parliamentary Govt.) அல்லாட்சி (Non-Parliamentary Govt.)

ஈ ஆடவராட்சி Androcracy × பெண்டிராட்சி Gynecocracy Gynocracy

ஏ முதலாளியா ஆட்சி Capitalistic Govt.
தொழிலாளியர் ஆட்சி Proletarian Govt.

திருக்குறள் அரசியல்

இக்காலத்தரசியல் அரசுள்ள ஒருநாட்டை State முதலாகவும் ஆள்நிலம் Territory, குடிகள் Population அரசு Government, கோன்மை Sovereignty, ஒற்றுமை Unity எனனும் ஐந்தையும் சினையாகவும் கொண்டுள்ளது. அக்காலத் தரசியலோ அரசனையே முதலாகவும், குடி பொருள் (கூழ்) படை, அரண், அமைச்சு, நட்பு என்னும் ஆறையும் சினையாகவுங் கொண்டிருந்தது. ஆள்நிலம்

குடியுள் அடக்கப்பட்டது. செங்கோலோ கொடுங்கோலோ ஓச்சும் அமைச்சுக் கோவரசே அற்றையரசு வகையாம்.

செங்கோலரசன், அமைச்சன் படைத்தலைவன் தூதன் ஒற்றன் ஆகியோரை அறம்பொருளின்ப வுயிரச்சமென்னும் நால்வகைத் தேர்திறங்களால் தேர்ந்தெடுத்து, நாட்டுவளத்தையும் வருவாயையும் பெருக்கி, வந்த பொருள்களை அறம் பொருளின் பங்கட்குச் செலவிட்டு, சிறந்த படையரண் அமைத்து, காட்சிக் கெளியனுய்க் கடுஞ்சொல்லனல்லனுய் நடுநிலையாகக் குற்றவாளியைத் தண்டித்து முறைசெய்து, சிற்றினஞ்சேராது பெரியாரைத் துணைக்கொண்டு சுற்றந்தழுவி நட்பிற் பிழைபொறுத்து, நால்வகை ஆம்புடைகளைக் கையாண்டு பிறவரசரொடு பழகி, பேதைப் பெண்வழிச் செல்லாது பொதுமகளிரொடு கூடாது, கள்ளுண்ணாது, சூதாடாது, அளவறிந்துண்டு நோய்வராமற்காத்து, தளர்ந்த குடிகளைக் கைதூக்கிச் சிறந்த அமைச்சர்க்கும் படைத்தலைவர்க்கும் பெருஞ்சிறப்புச் செய்து, ஐவகைத் துன்பமும் வராமல் அன்பாகக் குடிகளைக் காத்தல்வேண்டுமென்பதே திருக்குறள் அரசியலாம்

இற்றை யரசு எல்வெவ்வகையா யிருப்பினும், செங்கோன்மையைப் பொறுத்தமட்டில் திருக்குறள்முறையே எல்லாவற்றிற்கும் ஏற்பதாம்.

இனி, நட்பு என்பது புறத்துறப்பாயினும், ஈராயிரம் ஆண்டுகட்குமுன் திருவள்ளுவர் வற்புறுத்தியவாறே இன்றும் அது வல்லரசுகட்கும் இன்றியமையாததாயிருப்பதை, அமெரிக்க ஒன்றிய நாடுகளும் ரசியாவும் ஏனை நாடுகளைத் தம்வயப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் இடைவிடாது செய்துவருதலால் அறிக.

கஉ. நாற்பொருளும் முப்பாலும்

மக்கள் வாழ்க்கைக் குறிக்கோள் அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கென முதன்முதற் கண்டவர் தமிழரேயென்பதும், வீட்டைக் கண்டு திரும்பியவர் இங்கொருவரு மின்மையின் அது அறவொழுக்க மாகிய வாயில்வகையாலும் அகப்பொருளின்பமாகிய உவமை வகையாலுமன்றித் தனித்துக் கூறப்படாதென்பதும், அதனால் நாற்பொருளும் என்றும் அறம்பொருளின்பமென்னும் முப்பாலாகவே யமையுமென்பதும், முன்னரே முன்னுரையிற் கூறப்பட்டு விட்டன.

அறம் முதலிய நான்கும் திருக்குறள்போல் ஒருங்கே யன்றித் தனித்தனியே கூறும் நூல்களும் உள. அறத்திற்குப் பழமொழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம் முதலியனவும், இன்பத்திற்குக் கோவை நூல்களும் வீட்டிற்குத் திருமந்திரம், மெய்கண்டநூல் முதலியனவும் எடுத்துக்காட்டாம். பண்டைப் பொருள் நூல்களெல்லாம் அழிந்து போனமை.

> ''ஏரண முருவம் யோகம் இசைகணக் கிரதஞ்சாலம்
> தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோகம்
> மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
> வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள.''

என்னுந் தனிப்பாடலால் அறியப்படும்.

இந்நூற்றாண்டுத்தொடக்கத்தில் பாலவநத்தம் வேள் பாண்டித் துரைத் தேவர் தொகுத்துவைத்திருந்த ஆயிரக் கணக்கான பழைய தமிழ் ஏட்டுச் சுவடிகளும் நூல்களும். மதுரைத் தமிழ்க்கழகத்தில் தமிழ்ப்பகைவரால் தீக்கிரையாக்கப்பட்டன. அவற்றுள் என்னென்ன நூல் இருந்தனவோ, இறைவன் தான் அறிவான்.

இன்று சமற்கிருதத்திலுள்ள பொருள் நூல்களெல்லாம், இறந்துபட்ட பழந்தமிழ் நூல்களின் வழிநூலும் மொழிபெயர்ப்புமே, மூல நூலில்லாக் காலத்தில் படிகளே மூலமாகக் காட்சியளிக்கின்றன. ஆரியர் தமிழைக்கெடுத்த அடிப்படை வகைகளுள் ஒன்றும் மூலநூல மிப்பாம் இற்றை வடமொழிப் பொருள்நூல்களுள் முதன்மையானவை பாருகற்பத்தியம், ஔசநசம், கௌடிலீயம் என்பன. இவற்றை இயற்றினோர் முறையே, வியாழன் பிருகற்பதி, வெள்ளி, சுக்கிரன், சாணக்கியர் என்போர். இவருள் தலைமையாக மதிக்கப்பட்டவர் சுக்கிரரே. இதை, சாணக்கியர் தம் நூற்றொடக்கத்தில் ''சுக்கிரற்கும் பிருகற்பதிக்கும் வணக்கம்'' என்றும், கம்பர் தம் இராமாயணத்தில் ''வெள்ளியும் பொன்னும் என்போர் விதிமுறை'' என்றும் சுக்கிரரை முன்வைத்துக் கூறியிருத்தலால் அறிக.

சுக்கிரர் அசுர குருவென்றும் பிருகற்பதி சுரகுரு அல்லது தேவகுரு என்றும் சொல்லப்படுவர் ஆராய்ந்து நோக்கின், ஆரியத் தொல்கதைகளில் புராணங்களில் அசுரர் என்பாரெல்லாம் தமிழ அல்லது திரவிட அரசரென்றும், தேவர் என்பாரெல்லாம் பிராமணரென்றும், அறியப்படும். மாவலி என்னும் மாபெருஞ் சேரவேந்தன் மகாபலி என்னும் அசுரனாகக் கூறப்பட்டிருப்பதே இதற்குப் போதிய சான்றும். ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னும், ஆரியம் என்னும் பேரே உலகில் தோன்றுமுன்னும், தமிழகத்தை மூவேந்

தரும் கணிப்பில்காலம் ஆண்டுவந்தனரென்பதும், அவருள் முன்னோன் பாண்டியன் என்பதும் வெள்ளிடைமலையாம். ஆகவே, அரசியல் நூலான பொருள் நூல் குமரிநாட்டுப் பாண்டியரிடையே முதன்முதல் தோன்றினதாகும். அதனால் தமிழரிடத்தினின்றே சுக்கிரர் என்னும் ஆரிய அமைச்சர் பொருணூலைக் கற்றிருத்தல் வேண்டும். அவர் நூலின் வழிநூலாகவே பாருகற்பத்தியமும் அவ்விரண்டின் சார்பு நூலாகவே கௌடிலீயமும் தோன்றியிருத்தல் வேண்டும்.

கக. திருக்குறளின் தன்னேரின்மை

எல்லா நாட்டார்க்கும் எக்காலத்திற்கும் ஏற்றவாறு, இல்லற வாழ்க்கையும் செங்கோலாட்சியும் எடுத்துக் கூறுவது திருக்குறள் ஒன்றே. நால்வேதமும் பாரதமும் மனுதரும சாத்திரமும் திருக்குறட்கு ஒப்பாகுமென்று திருவள்ளுவ மாலைச் செய்யுட்கள் கூறுவது அவற்றைப் பாடியவரின் அறியாமை, அடிமைத்தனம், ஒப்புநோக்குந் திறமின்மை ஆகியவற்றையே ஒருங்கே காட்டும்.

இனி, இக்காலத்தும், ஆரியருந் தமிழருமான பலர் பகவற்கீதையைத் திருக்குறட்கு ஒப்பாகக் கூறத் துணிகின்றனர். கண்ணபிரான் அருச்சுனனுக்கு அறிவுறுத்தியதெல்லாம், போர்க்களத்திற் பொருமறவன் பகைப்படையிலுள்ள உறவினரை நோக்காது ஊக்கமூகப் பொருது தன்கடமையைச் செவ்வனே நிறைவேற்றவேண்டுமென்பதே. இதைப் பிற்காலத்து ஆரிய இனவெறியனொருவன் பெரும் பயன்படுத்திக்கொண்டு, பிராமணன் சத்திரியன் வைசியன் சூத்திரன் என்னும் நால் வரணத்தையும் இறைவனே படைத்தானென்னும் நச்சுக் கருத்தை, அதிற் சூழ்ச்சியாகப் புகுத்தியிருக்கின்றான்.

நால்வரணம் இறைவன் படைப்பன்மைக்குச் சான்றுகள்

(க) முதற்கால அநாகரிக மாந்தர் வகுப்பு வேறுபாடின்றியே யிருந்தமை

(உ) இயற்கையான வகுப்புவேறுபாடு நிறத்தாலன்றித் தொழிலாலேயே ஒரு நாட்டில் ஏற்பட்டுள்ளமை.

(ஊ) தொழிலுக்குப் பிறப்பொடு தொடர்பின்மை.

(எ) தொழில் விருப்பப்படியும் திறமைப்படியும் மாற்றக் கூடியதாயிருத்தல்.

(ஙி) கல்வி ஒரே குலத்திற்குச் சிறப்புரிமையாகாது எல்லா வகுப் பார்க்கும் பொதுவாயிருத்தல்.

(சு) ஆரிய நால்வரணப் பகுப்பு உலகில் பிராமணருள்ள இந்தி யாவில் மட்டுமிருத்தல்.

(�எ) ஆரிய நால்வரணத்திற்கு மூலமான (அந்தணர் அரசர் வணி கர் வேளாளர் என்னும்) தமிழ நாற்பாற் பகுப்புத் தொழிலையே அடிப் படையாகக் கொண்டிருந்தமை.

(அ) அறிவுவளர்ச்சியினுல் நால்வரணப் பகுப்புப் படிப்படியாகச் சிதையுண்டு வருதல்.

இங்ஙனமிருப்பதால், கண்ணபிரான் கடவுளின் தோற்றர வாயின் (அவதாரமாயின்), நானே நால்வரணத்தையும் படைத்தே னென்று கூறியிருக்கமுடியாது; கூறியிருப்பின் கடவுளின் தோற்ற ரவா யிருந்திருக்க முடியாது

பகவற்கீதை பதினெண்ணதிகாரங்களையும் எழுநூறு சொல வங்களையும் (சுலோகங்களையும்) உடையது. இதிலடங்கியுள்ள விரி வான செய்தியை ஒருமெய்ப்பொருளியல் மாநாட்டுத்தலைவர் கூடச் சொல்லியிருக்க முடியாது. ஒரு மாபெரும் போர்க்களத்தில் இருதிறத் தும் நால்வகைப் படைகளும் அணியமாகிப் போருக்கு முனைந்து நிற்கும் வேளையில். இத்தகைய ஓதுவம் (உபதேசம்) ஒருபக்கப் படையின் முன்னணியில் நடைபெற்றதெனின். அதை நம்புபவன் பரமசாத்தகுரு மாணவனாகவே யிருத்தல் வேண்டும்.

மேலும், அருச்சுனனுக்கும் கண்ணபிரானுக்கும் இடையே நடைபெற்ற உரையாட்டைச் சஞ்சயன் கேட்டுத் திருதராட்டிர னுக்கு அவ்வப்போது அறிவித்தானென்றிருப்பது, இக்காலத்து ஒலி பெருக்கியும் (Microphone) உரத்தொலிப்பான்களும் (Loudspeakers) நிறைந்த மாநாட்டுச் சொற்பொழிவொன்றை, அவைக்கோடி யிலுள்ள ஒருவன் கேட்டு அருகிலுள்ள குடுட்டுச் செவிடனுக்கு எடுத்துச் சொல்வது போன்றே இருக்கின்றது.

தமிழகத்து இருபெருமதங்களுள் மூத்ததான சிவனியம் (சைவம்) கண்ணபிரானின் தோற்றரவுத் தன்மையை ஒப்புக்கொள்ளவு மில்லை.

பகவற்கீதையின் செய்தி அமைப்பு நடை முதலியவற்றைநோக்கின், கார்பு (Garbe) கூறியுள்ளவாறு, அந்நூல் கி. மு. உ ஆம் நூற்றாண்டில் தோன்றிக் கி. பி. உ ஆம் நூற்றாண்டில் விரிவுபடுத்தப் பெற்றதென்று கொள்வதே பொருத்தமாம். அன்றி, கி. மு. ஆம் நூற்றாண்டில் தோன்றியதெனக் கொள்வாரும், அதன்பின் மேன்மேலும் விரிவும் திருத்தமும் பெற்று வந்துள்ளமையை மறுக்க முடியாது. கி. மு. ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒருபோரின் சிறு நிகழ்ச்சியைப் பிற்காலத்துப் பிராமணனொருவன் பயன்படுத்திக் கொண்டு, நால்வரணத்தை நிலைநாட்ட ஒரு பெருமுயற்சி செய்துள்ளான் என்பதே உண்மையான செய்தியாம். பகவற்கீதையிற் கூறப்பட்டுள்ள ஒழுக்கநெறிகளும் மெய்ப்பொருள் விளக்கங்களும், இறந்துபட்ட தமிழ் ஒத்துக்களினின்று எடுத்தாண்டவையே என அறிக.

கச. திருவள்ளுவரின் மெய்ப்பொருள் மேம்பாடு

திருவள்ளுவர் அறிவியலிலும் அரசியலிலும் மட்டுமன்றி, மெய்ப் பொருளியலிலும் மேம்பட்டவராவர், ஆயினும், தமிழர் அவரை அறியாதும் புறக்கணித்தும், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் அயலாரும் தமிழ்ப் பகைவரும் இறப்ப இழிந்தாருமான ஆசிரியரைப் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

உலகக்கில் ஒப்புயர்வற்றவரென ஆரியர் பறைசாற்றிவரும் ஆதி சங்கராச்சாரியார், சிவனியம், மாலியம. சூமரம், மூத்த பிள்ளையம் (காணபத்தியம்), காளியம், கதிரவம் என்னும் அறுமத நிறுவனராகப் பாராட்டப் படுகின்றார். திருவள்ளுவரின் கடவுள் மதத் தொடு அதை ஒப்புநோக்கின், விண்ணிற்கும் மண்ணிற்கு மிடைப் பட்ட வேற்றுமையாம். சங்கராச்சாரியாரின் இரண்டன்மை (அத்துவிதம்)க் கொள்கையில் பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டுள்ளமையின், பேதையரே போற்றத் தக்கதாம்.

திருவள்ளுவரின் இருபத்தாறு மெய்ப்பொருட் கொள்கையும். அவர் உயர்வை விளக்கிக்காட்டும்.

கடு. திருவள்ளுவர் எம் மதத்தார்?

ஆரியத் தெய்வமாகிய நான்முகனை யுட்கொண்ட முத்திரு மேனிக் கொள்கையைத் தழுவாமையின், திருவள்ளுவர் வைதிகரல்லர்.

கடவுளில்லை யென்றும், பூதங்கள் நான்கேயென்றும், ஒருவர் கொன்ற வுயிரியின் ஊனை இன்னொருவர் உண்ணின் கரிசன்றென்

றும், கூறும் பவுத்தக் கொள்கைகளோ ஒப்புக்கொள்ளாமையால் திருவள்ளுவர் பவுத்தரல்லர்.

உலகிற்கு ஒரு முதல்வன் வேண்டுவதில்லையென்றும், இல்லறத்தினும் துறவறம் சிறந்ததென்றும், மகளிர்க்கு வீடுபேறில்லையென்றும், மெய்யுர்ணவிற்கு இன்றியமையாத 'சுக்கிலத் தியானம்' என்னும் பரமஹம்சம் இக்காலத்தில் நிகழ்வதில்லையென்றும், கூறும் சமணக் கொள்கைகளோ ஒப்புக் கொள்ளாமையால் திருவள்ளுவர் சைனரல்லர்.

கடவுளில்லையென்றும், மெய்ப்பொருள் இருபத்தைந்தேயென்றும், கூறும் சாங்கியக் கொள்கைகளோ ஒப்புக்கொள்ளாமையால் திருவள்ளுவர் சாங்கியரல்லர்.

கடவுள் தோற்றரவு கொள்வாரென்பதையும் உருவ வழிபாட்டையும் ஒப்புக்கொள்ளாமையால், திருவள்ளுவர் மாலியர் (வைணவர்) அல்லர்.

மெய்ப்பொருள் முப்பத்தாறு என்பதையும் உருவ வழிபாட்டையும் ஆரியச்சார்பையும் ஒப்புக்கொள்ளாமையால், திருவள்ளுவர் சிவனியர் (சைவர்) அல்லர்.

"ஓது மெழுத்தோ டுயிர்க்கு மூவஞ்சு
மாதி யெழுத்தவை யைம்பத்தோ டொன்றென்பர்."
(திருமந்.)

என்னும் ஒன்றே சிவனிய ஆரியச் சார்பைக் காட்டப் போதிய சான்றும்.

இற்றைச் சிவனியம் மாலியத்தினும் ஆரியம் மிகுந்துள்ளமை, என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் விரிவாக விளக்கப் பெறும்.

இனி, திருவள்ளுவர் எம்மதத்தார்தானெனின், தாயுமானவர் 'அங்கிங்கெனாதபடி' யென்னும் கடவுள் வணக்கச் செய்யுளிற், கூறியுள்ளவாறு, கடவுள மதத்தினர் என்று கூறிவிடுக்க.

ஙசு. வீடுபேற்று விளக்கம்

இல்லறத்தாலும் வீடுபெறலாமென்பது தமிழர் மதமும் திருவள்ளுவர் கொள்கையுமாகும்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். (ஙஅ)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். (சசு)

இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. (சஎ)

ஆற்றி னெழுச்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து. (சஅ)

என்னுங் குறள்களோ நோக்குக.

துறவறமும் ஒரு குலத்தார்க்குமட்டும் உரியதன்றி எல்லார்க்கும் பொதுவாம். அவாவும் செருக்கும் அடியோ டொழிந்தாலொழிய ஒருவன் வீட்டையடைய முடியாது.

''பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சை
யெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லெவருக்குந் தாழ்ச்சிசொல்லிச்
செய்போ விருப்பர்கண் டீருண்மை ஞானந் தெரிந்தவரே.''
(பட்டினத்தார் பாடல்)

மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற. (சுச)

மற்றீந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. (சுசஇ)

நீற்றைப் பூசுந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றித் தொழுஉம் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்
ஆற்றைக் கடக்கத் துறைதெரி யாம லலைகின்றையே.
(பட்டினத்தார் பாடல்)

இச்செய்யுட்களால், சிறுபிள்ளைபோல் மறுபடியும் பிறந்து செருக்கடங்கி ஆசைவேரறுத்தவரன்றி, செல்வத் தொடர்புள்ள வரும், ஆரவாரமாக ஆடையணி யணிபவரும், தம்மைப் பிறப்பாற் சிறந்தவராகக் கருதுபவரும் மனமாரு தாரிய மந்திரங்களோ யோது பவரும், வடமொழியைத் தேவமொழியென்றும் தென்மொழியைக் கீழோர்மொழி (நீசபாஷை) யென்றுங் கூறுபவரும், திருக்குறளோ ஓதக் கூடாதென்பவரும், வீட்டுலகையடைவது ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவதினும் அரிதாயிருக்குமென்று அறிந்துகொள்க.

இனி, விருந்தோம்பாமையால் இல்லறவகையாலும் செருக்கடங்காமையால் துறவறவகையாலும், ஆரியர் வீட்டையடைவதும் இயலாதென அறிந்து கொள்க.

களை இன்பத்துப்பாலின் இருநிறம்

சில ஆரிய நூல்களைக் கற்ற துணையானே தம்மைச் சிறந்த அறிஞராகக் கருதிக்கொள்ளும் மடத்தலைவரும் போலித்துறவியரும், திருக்குறள் இன்பத்துப்பாலைக் கொண்டிருப்பதால் துறவியர் கற்கத் தக்க நூலன்றென்று துணிந்து கூறுவர். இறைவனுக்கும் ஆன்மாவுக்கு மிடைப்பட்ட அன்பை உவமை வாயிலாக விளக்குதற்கு, கணவன் மனைவியரிடைப்பட்ட காதலினுஞ் சிறந்தது வேறின்மையானேயே, சிவனடியாருட் சிறந்த மாணிக்கவாசகர் சிற்றம்பலக் கோவையைப் பாடினரென்றும், அதன் வெளிப்பொருள் உலகநெறியும் உட்பொருள் வீட்டுநெறியும் பற்றினவென்றும். அறிந்துகொள்க)

"ஆரணங்கா ணென்ப ரந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங்கா ணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங்கா ணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரீன்புலவோர்
சீரணங் காகிய சிற்றம் பலக்கோவை செப்பிடினே."

(தனியன்

இத்தகையதே திருக்குறளின்பத்துப் பாலுமென்க.

களஅ. தமிழ ஆரியக் கருத்து வேறுபாடுகள்

தமிழக்கருத்து	ஆரியக்கருத்து
பிறப்பாற் சிறப்பில்லை.	பிறப்பாற் சிறப்புண்டு.
தொழில் பற்றிக் குலம்	பிறப்புப்பற்றிக் குலம்.
உழவு உயிர்களை ஓம்பும் உயர் தொழில்.	உழவு உயிர்களைக் கொல்லும் இழி தொழில்
நால்வரணம் மாந்தன் பாகுபாடு.	நால்வரணம் கடவுட்படைப்பு.
தமிழன் பிராமணனுக்குத் தாழ்ந்தவனல்லன்.	தமிழன் பிராமணனுக்குத் தாழ்ந்தவன்.
தென்புலத்தார் இறந்த முன்னோர்.	தென்புலத்தார் படைப்புக் காலத்தில் 'நான்முகனுற் ' படைக்கப்பட்ட தேவவகுப்பினர்.

விருந்தோம்பல் குலமுறை பற்றுதது

கல்வி அனைவர்க்கும் பொது.

குற்றத்தண்டனை நடுநிலை பற்றியது.

அறம் என்பது எல்லார்க்கும் பொதுவான நல்வினை

அறம்பெற ஏழைகளெல்லாரும் உரியர்.

தமிழே தேவமொழி.

கோயில் வழிபாடு தமிழில் இருத்தல் வேண்டும்

இந்திய நாகரிகம் தமிழரது.

சிவமதமும் திருமால் மதமும் வேறுபட்ட தமிழர் மதம்.

தாய் பசிப்பினும் பழிக்கத்தக்க செய்யலாகாது.

இரப்பது இழிச்சி.

இல்லறத்தாலும் வீடுபெறலாம்.

இல்லறம் துறவறம் என வாழ்க்கை நிலை இரண்டு.

துறவறம் எல்லார்க்கும் பொது.

துறவுநிலை ஒன்றே.

விருந்தோம்பல் குலமுறை பற்றியது.

கல்வி பிரமாணனுக்கே சிறப்பு

குற்றத்தண்டனை குலமுறை பற்றியது.

தருமம் என்பது வருணாசிரம ஒழுக்க வேறுபாடு.

அறம்பெறப் பிராமணரே யுரியர்.

வடமொழியே தேவமொழி.

கோயில் வழி பாடு வடமொழியிலேயேநடைபெறல்வேண்டும்.

இந்திய நாகரிகம் ஆரியரது.

சிவ மதமும் திருமால் மதமும் ஆரிய இந்து மதக் கூறுகள்.

எது செய்தும் தாயைக் காக்கலாம்.

இரப்பது இழிச்சியன்று.

துறவறத்தால் மட்டும் வீடு பெறலாம்.

மாணவம் மனைவாழ்க்கை, காடுறைவு, துறவு என வாழ்க்கை நிலை நான்கு.

துறவறம் பிராமணர்க்கே சிறப்பு

துறவுநிலைகள் குடீசகம், பகூதகம், ஹம்ஸம், பரமஹம்ஸம் என நான்கு.

குடீசகன் புதல்வர் அல்லது உறவினரிடம் உண்டி பெற்று இல்லக் குடிலில் வதிபவன். பகூதன் ஏழுவீடுகளில் இரந்துண்டு ஒழுங்குப்படி ஒழுகுபவன். ஹம்ஸன் பலர் வீடுகளில் இரந்துண்பவன். பரம ஹம்ஸன் ஐம்புலன்களையும் அடக்கினவன்.

ககூ. திருக்குறட் பொதுக்கூறுகள்

பாயிரத்தில் வான்சிறப்பு, அறத்துப்பாலில் இல்லறவியல், பொருட்பாலில் அரசியலொழிந்த பகுதிகள், இன்பத்துப்பாலிற் சில கற்பியலதிகாரங்கள் ஆகியவை எல்லார்க்கும் பொதுவாம்.

உ௦. இக்காலத்திற் கேலாத் திருக்குறட் கருத்துக்கள்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. (ருஞ)

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தாஞ் நீர்ந்தா னிடை. (கூ௭)

படைகுடி கூழமைச்சு நட்பர ணுறு
முடையா னரசரு ளேறு. (கூஅச)

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லாள் நகும். (க0ச0)

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேல் மேக பகை. ஃகச)

உக. வழக்கற்ற பண்டைப் பழக்க வழக்கங்கள்

புதிதாக வந்தவரையும் வழிச்செல்வோரையும் விருந்தோம்பல்
காட்டிலிருந்து கடுந்தவஞ் செய்தல்.
குன்றேறி யாஞைப்போர் காண்டல்.
பெண்டிர் கண்ணிற்கு மைதீட்டல்.
காதலன் மடலேற்றம்.

உ.உ. திருக்குறளிற் குறிக்கப்பட்ட தொல் (புராணக்) கதைகள்

அருகன் பூமேல் நடந்தது.
வேந்தன் (இந்திரன்) முனிவனது ஆற்றலுக்குச் சான்றுண்டு.
திருமால் மூவுலகும் ஈரடியா லளந்தது (?)

உங. திருவள்ளுவர் திருவுள்ளம்

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகட்குமுன்பு தமிழகத்துப் பிறந்து வாழ்ந்தவரே யாயினும், இவ்வுலக மெங்குமுள்ள அறுவகையுயிரிளும் எக்காலத்தும் இன்புற்று நீடுவாழவேண்டுமென்பதே அவர் திருவுள்ளமாம்.

உச திருவள்ளுவர் ஈராயிர வாட்டைவிழாச்செய்தி

தமிழினத் தீரே தமிழினத் தீரே
குமரிநன் னட்டிற் குணிப்பில் காலமுன்
நுமருயர் நாக ரிகந்தனைக் கண்டும்
ஞமலியி னிழிந்த நிலைமைய ராகி
மாந்த னுண்ணியும் மதிகிளர் காலம்
தாழ்ந்து நின்றீர் தமிழினத் தீரே
பகுத்தறி வடிப்படை பொருள்களைப் பகுத்தே
முதற்றனித் தாய்மொழி வளர்த்தனர் யாரே
பல்துறை யிலக்கியம் பாவி னியன்றபின்
பொருளிலக் கணமும் புணர்த்தவர் யாரே
முத்தமி ழெனவே இயலிசை கூத்துடன்
ஒத்தமும் மடிமொழி யுணர்த்தினர் யாரே
சோவென் அரண்மேற் சொல்லரும் பல்பொறிக்
காவல் முதன்முதற் கண்டார் யாரே
மகனை முறை செய்யும் பகையையிருந் தோம்பியும்
நடுநிலை சாற்பு நாட்டினர் யாரே
கையுங் காலுமாய்க் கரவர் வந்தே
வெள்ளை நிறத்தினும் வெடிப்பொலிச் சொல்லினும்
விண்ணவர் நிலையை விளம்பி யேமாற்ற
பகுத்தறி வைப்பயன் படுத்தாது வைத்தே
மதவியற் பித்தமும் மடவியற் கொடையும்
பழங்குடிப் பிறப்பொடு பேதைமை யூட்ட
நிலத்தேவ ரென்னும் நெடும்பொய் நம்பி
அடிமைப் பட்டும் மிடிமைப் பட்டும்
அஃறிணை யாயினிர் அனைத்து மிழந்தீர்
எஞ்சி யிருப்பது செஞ்சொல் தமிழே
அதனை யேனும் அழியாது காப்பீர்
முதலிரு கழக நூல்களு ளெதுவும்
இதுபோ துண்டோ ஏனிலை ஆய்மின்
ஆரிய மொழியில் அனைத்துமொழி பெயர்த்தபின்
அருந்தமிழ் முதனூல் அழியுண் டனவே
ஆங்கில வரசும் அம்மொழிக் கல்வியும்
நயன்மைக் கட்சியும் மறைமலை யடிகளும்
அறிவுறுத் தியபினுஞ் சிறிதுந் திருந்தீர்
அறுப்பானை நம்பும் ஆடுகள் போல
வெறுப்பானை யின்றும் விரும்பித் தொழுதீர்

புறநட் டகத்தே வேர்ப்பான் பகைமை
வெளியிட் டுடனே வேருதல் வேண்டும்
இதுதமி ழகமே இதில்தலை தமிழே
ஆரிய மென்னும் பூரிய மொழியை
அகற்றித் தமிழை அரியணை யேற்றுவீர்
கோயில் வழிபாடுங் கொண்டாடு மணமும்
வாயில் மொழிதமிழ் வழங்குதல் வேண்டும்
விண்ணக மொழியும் விண்ணக மாந்தரும்
மண்ணகம் வழங்கும் முறைமை யில்லை
சிவனியம் மாலியம் எனுமிரு மதங்களும்
செந்தமி ழோரே கண்ட நெறியாம்
என்ன பெயரும் இன்றமி ழாக்கிக்
கன்னித் தமிழின் கற்பைக் காமின்
உங்கள் போன்றே உடலும் உறுப்பும்
உள்ள அமெரிக்கர் வெள்ளிடை நீந்தித்
தீங்கள் சென்று திரும்பினர் பன்முறை
அடுத்த மனையுளும் அடியிட லின்றி
அடிநிலத் தாழ்வில் அமிழ்ந்துளீர் நீரே
முதன்முதற் பொறிவினை முகிழ்த்தனர் நும்மூரோர்
மதிநீர் முதற்சென் றிருத்தல் வேண்டும்
திருவள்ளுவரீ ராயிர வாண்டைப்
பெருவிளம் பரமாய்ப் பேணிக்கொண் டாடினிர்
அதனு லெதும்பய னுனது முண்டோ
எள்ளள வும்அவர் சொல் லேற்றீரோ
பிறப்பொடு தொடுத்த குலப்பிரி விணையாற்
கூண்டுள் விலங்குகள் போன்றனை பட்டே
ஒற்றுமை குலைந்தும் உரிமை யிழந்தும்
இனவுணர் வழிந்து மொழியுணர் வின்றிச்
சிறுமை நிலையிற் பெருமை கொண்டீர்
ஆரியன் பிறப்பா லுயர்ந்தா னல்லன்
அவனிலும் வெள்ளையர் ஐரோப் பியரே
தட்ப வெப்பத் தன்னுல் நாட்டு
மக்கள் நிறமும் மாறுவ தியற்கை
ஒன்றே குலமும் உடன்பிறப் பனைவரும்
நிலத்தேவ ரென்றொரு குலத்தோரிங் கில்லை
குடிமதிப் பிலும்பிற குறிப்புக் களிலும்
தமிழன் என்றே தன்குலங் குறிக்க
வடமொழி தேவ மொழியு மன்றும்

அதனினும் மூச்சொலி யடைந்தது காளவாய்
முழக்கும் மூச்சும் மொழியொலி பெறுகை
வழக்கில் நேர்ந்த வழிநிலைத் திரிபே
திரவிடத் தாயும் ஆரிய மூலமும்
தெரியிடத் தேதநம் தென்மொழி யாகும்
இந்திய நாகரி கந்தமி ழாகும்
பகுத்தறி வைப்பயன் படுத்தி யின்னே
நிறந்துப் புரவு நிலைநீர் முத்திறம்
ஆயினும் ஓரின மாத லறிக
அரசியற் கட்சி பலவா யிருப்பினும்
ஆங்கிலர் போன்மொழி யுணர்மின் ஒருங்கே
தாழ்த்தப் பட்ட தம்மினத் தோரை
உயர்த்தப் பெற்றோர் உயர்த்தல் கடனே
பிரித்தா னியத்தினும் பிராம ணீயம்
பன்மடி கொடிதே பகரவுங் கொடிதே
முன்ன தொருவ னுடலையே பிணித்தது
பின்னதோ பிறங்கடை யுளத்தையும் பிணிக்கும்
கல்வியுஞ் செல்வமுங் கட்டாண் மையும்
கணக்கின் பெருமையுங் கரையற் றிருந்தும்
சூத்திரர் சற்சூத் திரனைத் தம்மைத்
தாழ்த்திய தமிழர் வீழ்ச்சியை நோக்கின்
அரிமா வரிமா கரிமா வனைத்தும்
நீல நிறங்கொள் கோலங் கண்டே
நரிமா விற்கு நடுங்கிய தொக்கும்
உள்ளந் தமிழனுக் குயரா வாறு
பெருங்கலா யிழுப்பது பிராமணர்க் கஞ்சுதல்
ஆரிய வடிமை யகன்று மொழியத்
தேறும் வழியே தென்னவர்க் கில்லை
ஆரிய வேடரி னயர்ந்தனிர் மறந்தனிர்
சீரிய மொழிநூல் செம்மையி னுணர்ந்தே
ஓரின மாகி உலகத் துயர்க
பசியும் பிணியும் பகையும் நீங்கி
இருதிற உடைமை ஆட்சியும்
ஒருகுடை நீழல் ஓங்குக உலகே.

———

அருஞ்சொல் அகரமுதலி

(எண், குறள் எண்ணைக் குறிக்கும்)

அஃகாமை - சுருங்காமை களஅ
அகடு - வயிறு கஙடூ
அகன்ஞர் - பெரியராயினர் களஎ
அசாவாமை - தளராமை ஙஙக
அசைவு - மடி ஙடூஎக
அஞர் - துன்பம் கஎஅசு
அடல் - வருத்துதல் உஎசூ
கொல்லல் அகஙஙூ
அடுமுரண் - வலிமை ஙுசூஎ
அட்டிய - வார்த்த கஎகஙூ
அணங்கு - காமினிப்பேய் கூகஅ
தெய்வமகள் கஎஅக
அண்ணைத்தல்
அங்காப்பு } வாய்திறப்பு உஙஙு
அலகு - கதிர் கஎஙூச
அலகை - பேய் அடுஎ
அலர் - பலர் கூறும் பழி கஙசஙக
அவம் - பயனில்முயற்சி உசூஉ
அவாய்நிலை - பொருள்
கோளில் வேண்டப்படும்
நிலை சூஎடு
அவிர் - விளங்கும் கஙகள
அவ்வித்து - பொருது கசூள
அவ்விய - பொருத கசூஙூ
அவ்வை - அக்கை கசூள
அவி - அருள் ஙடுள
அழ - கலந்து கூக
அளறு - நரகம் உஙடு
அறுதொழிலோர் - அறு
வன்கத் தொழில் செய்பவர்
ஙடூஎ
அறுவாய்-குறைந்தவிடம் கஙகள
அல்குதல் - தங்குதல்,
நிலைத்தல் ஙடூஙூ
அற்றம் - தாழ்வு கூஅஎ
ஆடையற்றநிலை அசசு
இன்மை கஙகஅசு
ஆகுலம் - ஆரவாரம் ஙடூச
ஆசு - குற்றம் ஙஎஙூ
ஆம்புடை - உபாயம் (வ.) சசஉ

ஆயம் - கவறு, வருவாய் கூஙூ
ஆர - நிறைய ஙடூஎ, அஙூள
ஆர்க்கும் - பிணிக்கும் சஅஉ
ஆறு - பயன் ஙடூள
நெறி கசூக
இகந்து - பிரிந்து கஙஙூஎ
இகல் - மாறுபாடு அஙிக
இடும்பை - துன்பம் ச, கஙூஅ
நோய் கழஙுசூ
இணர் - கொத்து சூஙுஎ
இமையார் - தேவர் கூஎசு
இயறி - விரும்பி கஎஎஙூ
இழைத்தல் - வஞ்சினம்
கூறுதல் ளஙக
இளி - இழிவு கூஙள
ஈர்ங்கண் - குளிர்ந்தஇடம் கஎஙிஅ
ஈர்ங்கை - உண்டு பூசியகை கஎஙள
உகாமை - வெளிவிடாமை ஙிஅஙி
உக்கக்கால் - இறந்துபோனால்
கீஉளஎ
உரூற்றல் - முயல்தல் சூஉஎ
உடற்றும் - வருத்தும் கஙூ
உடற்றுபவர் - கொடுப்பவர் அகஅ
உடன்று - வெகுண்டு எசூஙி
உயிரி - பிராணி (வ.) உஙிக
உரன் - அறிவு சூஎஎ
உவரி - கடல் எகஙூ
உழ - படு, உறு கூசஎ, கஎஙூக.
உறழ் - வாதம் (வ.) எஉஙி
உறுகண் - துன்பம் உசூக
உறை - வாழ்நாள் ஙிசூச
ஊங்கு - மிக்க ஙூக, ஙூஉ
ஊர - அடர கூஎக
ஊராண்மை - பகைவர்க்
கிரங்கல் ளஎஙூ
ஊழ்த்தும் - மலர்ந்தும் சூஙுஎ
எஃகு - க. படைக்கலம் எஙிக
உ. கூர்மை ளஎஙூ
எச்சம் - க. வழியினர் ககஉ
உ. மக்கள் ,ககச
ங. புகழ் கஎஎச

எஞ்சாது - அஞ்சி விட்டு விடாது சுகூ0
எஞ்சாமை - குறையாமை நூஅஉ
எண்பொருள - எளிய பொருள சஉச
எவ்வம் - இளிவரவு உஉஉ
துன்பம் அருந
எழிலி - முகில் கள
எறிக - செய்க நுசுஉ
எற்ற - நீங்காத சுசுநூ
ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல் நூகூநி
ஏமப்புணை - ஏமப்படகு நூ0சு
ஏமம் - காவல் எநூஅ
ஏமவைப்பகம்-Savings Bank உ0சு
ஏமாப்பு - வலிமை அரண் கஉசு
ஏமுற்றவர் - பித்துற்றார் அளந
ஏர் - அழகு க0நிந
ஒக்கல் - இனத்தார் சாந
ஒட்டல் - தாக்குதல் சகூகூ
ஒருவந்தம் - ஒருதலையாக நிலைபெற்ற நிகூநூ
ஒல்காமை - தளராமை சூசுஉ
ஒற்கம் - தளர்ச்சி சஏச
ஓச்சி - தெரிடங்கி நிசுஉ
ஓட்டு - புறங்கொடுத்தல் ஏஎநி
ஓட்டோலக்கம்-ஆடம்பரம் கஉஇ
ஓதல் - ஓவுதல், விட்டு விடுதல் சுநிந
ஓத்து - வேதம் கநூச
ஓர்த்து - ஆராய்ந்து நூநிஎ
கடப்பாடு - ஒப்புரவு உகக
கடா - அயிர்க்கப்படாத நிஅநி
கடாக்களிறு - மதயானை க0அஎ
கடி - காவல் கஉ0டு
கடிதல் - தண்டித்து நீக்கல் நிசாக
கடுகி - குறைந்து நிசுச
கடுத்த - ஐயுற்ற சூகூந
கடுத்தது-கருத்துமுருந்தது எ0சு
கடைமுறை - முடிவில் எகூஉ
கட்டபின்-கனிஎடுத்தபின் க0நூஅ
கணத்தார் - இனத்தார் எஉ0
கணிச்சி - கோடரி கஉநிக
கண்ணஞ்சு-பாகர்க்கடங்கா நி00
கண்பாடு - உறக்கம் க0சாக

கதம் - சினம் கநூ0
கதுப்பு - கூந்தல் ககஅநி
கதுமென - திடுமென ககஎந
கந்தா - பற்றி நி0எ
கரப்பாக்கு - மறைதல் ககஉஎ
கரி - சான்றாள் உநி
கரிசன் - பாவி ககூஅ
கருக்காய் - கநூ0சு
கலுழ் - அழு சுகளக, ககளந
கவிகை - குடை நூஅசு
கவின் - அழகு கஉநூச
கவுள் - கன்னம், கபோலம் (வ.) சுளஅ
கவ்வை - அலர் ககசந
கழிய - மிக சா0ச
கழுவாய் - பிராயச்சித்தம் (வ.) கக0
காதற்று - காதலையுடைத்து கூச0
காம்பு - கஉஎஉ
காழ் - கொட்டை கக்கூக
காழ்த்த - முதிர்ந்த அளசு
கிழமை - உரிமை எஅநி
கீழ்ந்திடா - கெடுக்காத அ0க
குடங்கர் - குடில் அக0
குடம்பை - கூடு நூநூஅ
குழாம் - அவை அச0
குளவளா - குளப்பரப்பு நிஉந
கூம்பும் - விரியொடுங்கும் சக0
கூழ் - பயன் பாட்டுப் பொருள்கள் எசஅநி
சோறு, உணவு சுசா, எசஅநி
கெழுதகை-நட்புரிமை எ00, அ0ச
கை - செய்யும் வகை அநூசு
கையாறு - ஒழுக்கநெறி சூஉஎ
கையிகந்த-குற்றத்தின்மிக்க நிசுஎ
கொண்முடிபு - சித்தாந்தம் (வ) பொது
கொற்றம் - வெற்றி நிஅந
கோள்-புலன்களைக் கொள்ளுதல் கூ
கோறல் - கொல்லுதல் நூஉக
கௌவை - கவ்வை, அலர் (பார்க்க) ககசநூ
சலம் (வ) - வஞ்சனை சூகூ0
சாகாடு - சகடம் ஏஎநி
சாக்காடு - இறப்பு உகஅநி
சாயல் - மேனியழகு ககஅக
சாய்தல் - விடுதல் அநிஅ

சாலப்படும் - செழித்து வளரும் கo
சிமிழ்த்தல் -பிணித்தல் உஎச
சிவிகை - பல்லக்கு ஙஎ
சிறக்கணித்தாள் - சுருக்கிப் பார்த்தாள் கoகூஙி
சிறப்பு - வீடுபேறு ஙக
சிறீனப்பிது - உண்டாவது கஉoங
செப்பம் - நடுவுநிலைமை ககஉ
செம்மல் - செருக்கு அஅo
செயிர் - குற்றம் உடிஅ
செய்யவள் - திருமகள் ககுஎ
செருக்கி - மிகுத்து கூகசு
செவ்வி - இனியமனநிலை கஙo
செறிவு - அடக்கம் கஉங
சோ - அரண் கஉஅ
ஞாட்பு - போர்க்களம் கoஅஅ
தகை - நன்மை, பெருமை நுசு, அகூஎ
தஞ்சம் - எளிமைப்பொருளிடைச்சொல் அசூங
தவல் - பொருட்கேடு அடுசு
தற்று - வரிந்துகட்டிக் கொண்டு கoஉங
தார் - தூசிப்படை எசுஎ
தாளாண்மை - முயற்சி கூகங
துச்சில் - ஓதுக்கிடம் ஙகo
புலவி கஉகச
துப்பு-உணவு, வலிய பகை கூஉ, ககசுடி
துப்புரவு - நுகர்ச்சிப் பொருள் கoடிo
துவ்வாமை - வறுமை கூச
துனி-வறுமை, கoகo,
துன்னி - பொருந்தி சகச
துன்னியார் - நெருங்கிய உறவினர் சுஅஅ
தூக்கம் - நீட்டித்தல் கஅஅ
தூவி - சிறகு ககஉo
தூறு - குவை சஙடி
தெவ் - பகைவர் சுங்கூ
தென்புலத்தார் - இறந்த முன்னோர் சஙூ
தேற்றம் - வினைசெய்தற் கண் கலங்காமை டிகங
தொடலை - மாலை ககசுடி
தொல்லை - பழமை அoசு
தோல் - புகழ் கoசச
நத்தம் - வளர்ச்சி உசுடி
நயன் - நேர்பாடு(நீதி வ.) கூள
நிரந்தவர்- கூடியொழுகுவார்அஉக
நிரப்பு - வறுமை கoசஅ
நீர்மை - சிறந்த தன்மை ககூடி
நுசுப்பு - இடை ககசடி
நுதுப்பேம் - அவித்து விடுவேம் ககசஅ
நெடுநீர் - நீட்டிக்குந் தன்மை கூoடி
நெருநல் - நேற்று ஙஙசு
நொதுமல் - அயல் ககசு
நோன்மை - பொறை சுஅ
பக்குவிடும் - பிளந்து போம் கoடிஅ
பஞ்சிலம் - நாற்படைத் தொகுதி எசுக
படிறு - வஞ்சனை ஙகக
பதம் - செவ்வி டிசுஅ
பனி - நடுக்கம் கஉஉசி
பனுவல் - நூல் உக
பாக்கு - தொழிற்பெயரீறு ககஉள-அ
பால் - ஊழ் ஙஎசு
பிறங்குதல் - விளங்கித் தோன்றுதல் உசி
பீழை - துன்பம் சுடிஅ
புணை - தெப்பம் கூoசு, கஙசுச ககசுச
புரிதல் - விரும்புதல் டி
புரை - குற்றம் உகூஉ
பூரியார் - கீழ்மக்கள் கூகசு
பெற்றம் - உஎசி
பைதல் - வருந்துதல் ககளஉ
பொச்சாப்பு - சோர்வு உஅடி
பொறி - புலஉறுப்பு சு
பொறுத்தல்- சுமத்தல் கடுக, கஙிஉ
பொன்றுதல் - இறத்தல், அழிதல் கடிசு
போது - பேரரும்பு கஉஉள
மருவுக - பயில்க அoo
மல்லல் - வளப்பம் உசுடி
மாடு - செல்வம் சoo
மாண் - சிறந்த டிஉ
மிச்சில் - மீந்தது அடி
மிசை - மேல் டிஉ
முகடி - மூதேவி நடுள
முறி - தளிர் ஙகஙஉ
மைந்து - வலி டிடிசு

வட்டாடல்-உண்டையாடல் சஅக
வரன் - மேலான உசா
வழுக்கி - மறந்து கஙக
வள்ளி - கொடி கஙஅசா
வள்ளியம் - வண்மையுடை யேம் நிகஅ
வாரி - வருவாய் கசா
வால் - தூய எகசா, ககஉக
வான் - மழை கஅ
விசும்பு - மேல்வெளி, வானம் உநி
வித்தகர்-திறப்பாடுடையர் உஙநி
விழுப்பம் - சிறப்பு உக, கஙக
விளிந்தார் - இறந்தார் கசஙட
வீங்கிய - பூரித்த கஉஙங
வெஃகாமை - கவரவிரும் பாமை களஅ
வெரு - அச்சம் நிசுக
வெறி - கறுமணம் ககஙட
வெறுக்கை - ஊக்கமிகுதி சுஅஅ
வேபாக்கு - சூடுறுதல் ககஉஅ
வேர்ப்பர் - வெகுள்வர் சஅள
வேலி - காப்பு கஅகசு
வேளாண்மை - நன்றி அக
வைகல் - நாடோறும் அங

திருக்குறள்

பாட்டு முதற்குறிப்பு அகரமுதலி

[எண்கள் குறளெண்களைக் குறிக்கும்]

அ

அகடாராரல் ૬૬૬
அகப்பட்டி ૬૦૯૮
அகரமுதல ૬
அகலாதணு ૯૬૬
அகழ்வாரை ૬૭૬
அகனமர்ந்து ૮૮
அகனமர்ந்தீ ૬૬
அஃகாமை ૬૯૮
அஃதியகன் ૬૯૭
அங்கணத்து ૯૦
அசையியற் ૬૦૬૮
அச்சமுடை ૭૭૮
அச்சமேதீ ૬૦૯૭
அஞ்சாமைய ૮૬૯
அஞ்சாமையீ ૬૬૮
அஞ்சுமறியா ૮૮૭
அஞ்சுவதஞ் ૮૯૮
அஞ்சுவதோ ૬૬૯
அடக்கமம ૬૯૮
அடல்வேண்டு ૬૬૭
அடற்றகை ૯૯૮
அடுக்கியகோ ૬૬૮
அடுக்கிவரினு ૯૯૭
அடுத்ததுகா ૯૦૯
அணங்குகொ ૬૦૮૮
அணியன்றே ૬૦૬૮
அந்தணரென் ૭૦
அந்தணர்நூற் ૭૮૭
அமரகத்தாற் ૮૮
அமரகத்துவ ૬૦૯૯
அமிழ்தினு ૯૮
அமைந்தாங் ૯૯૮
அரங்கின்றி ૮૦૬
அரம்பொரு ૮૮૮
அரம்போலு ૬૬૯
அரிதரோதேற் ૬૬૭૭
அரிதாற்றி ૬૬૯૦
அரியகற்றுசற் ૭૦૭
அரியவற்று ૮૮૬
அரியவென்று ૭૬૯
அருங்கேட ૯૦
அருஞ்செவ் ૭૮૭
அருட்செல் ૯૮૬
அருமறை ૮૯૯
அருமையு ૮૬૬
அரும்பய ૬૬૮
அருவினையெ ૬૮૭
அருளல்லதி ૯૮૮
அருளில்லார் ૯૮૬
அருளென் ૯૭૬
அருளொடு ૯૭૭
அருள்கருதி ૯૮૭
அருள்சேர் ૯૮૮
அருள்வெஃகி ૬૯૬
அலந்தாரை ૬૭૬
அலறுழவாரு ૬૬૬
அலர்நாண ૬૬૮
அல்லலரு ૬૬૭
அல்லலவை ૬૬૬
அல்லற்பட் ૬૬૬
அவர்தந்தா ૬૬૬
அவர்நெஞ் ૬૬૬
அவாவில்லா ૬૭૬
அவாவினை ૬૭૬
அவாவெண்ப ૬૭૬
அவிசொரிந் ૬૬૬
அவையறிந் ૭૦૬
அவையறியார் ૭૨૬
அவ்வித்தழுக் ૬૬૬
அவ்வியநெ ૬૬૬
அழக்கொண் ૬૬૬
அழச்சொல் ૬૬૬
அழல்போ ૬૬૬
அழிவதூஉ ૬૬૬

அழிவந்த அ0எ
அழிவினவை எஅள
அழிவின்ற எசச
அழுக்கற்ற களo
அழுக்காறவா நஇ
அழுக்காறுடையார் கசஉ
அழுக்காறுடையான் கஙஉ
அழுக்காறென கசஅ
அழுக்காற்றி கசச
அளவல்லசெய் உஅக
அளவளாவில் இஉந
அளவறிந்தார் உஅஅ
அளவறிந்து சளக
அளவின்கணி உஅசு
அளித்தஞ்ச ககஇச
அறங்கூர்ன கஅக
அறஞ்சாரா கo0எ
அறஞ்சொல் கஅஇ
அறத்தாறிது நஎ
அறத்தாற்றி சசு
அறத்தான்வ நக
அறத்திற்கே எசு
அறத்தினூஉங் நஉ
அறம்பொரு இ0க
அறவழிய அ
அறவினீயா நஉக
அறவினீயூ க0க
அறனறீஇ கஅஉ
அறனறிந்தா சுஙஉ
அறனறிந்துமூ சசத
அறனறிந்துவெ களக
அறனொக்கம் கசுஙந
அறனியலா கசள
அறனீபூக்கா நஅச
அறனீனு எதிச
அறனெனப் சக
அறனேக்கி கஅக
அறன்கடை ககஉ
அறன்வரை கஙo
அறிகிலா ககஙக
அறிகொன் சுஙஅ
அறிதோறறி ககக0
அறிந்தாற்றி இகஇ
அறிவற்றங் சஉக
அறிவிலார்தா அசஙந
அறிவிலானெ அசஉ
அறிவுடுளு நகஇ
அறிவுளெ உ0ந

அறிவின்மை அசக
அறிவுடையாரா சஉள
அறிவுடையாரெ சஙo
அறிவுருவா சுஅச
அறுவாய்நி ககஎள
அறைபறை க0எசு
அற்காவியல் ஙஙஙந
அற்றதறிந்து கசசச
அற்றமறைக்கு கஅ0
அற்றமறைத்த அசசு
அற்றவரென் ஙநசுஇ
அற்றுரழிபசி உஉசு
அற்றுரைத்தே இ0சு
அற்றுர்க்கொ க00எ
அற்றுலவறி கசஙந
அற்றேமென் சுஉசு
அனிச்சப்பூ ககஙஇ
அனிச்சமு ககஉo
அன்பகத்தில் எஅ
அன்பறிவாரா சுஅஉ
அன்பறிவு இகஙந
அன்பிலனு அசுஉ
அன்பிலாரெல் எஉ
அன்பிற்குமூ எக
அன்பின்வழி அ0
அன்பின்விழை கஙக
அன்பீனுமா எச
அன்புடை-லி ககஉ-
அன்புடை-ல்வே சுஅக
அன்புநாணெ கஙஅந
அன்புமறனு சஙஇ
அன்புற்றமர்ந்த எஇ
அன்பொரீஇ க00க
அனபோடியை எங
அன்றறிவாமெ நஉசு

ஆ

ஆகாறளவிட் சளஅ
ஆகூழாற் இளக
ஆக்கங்கருதி சசுங
ஆக்கமதர்வி இகஙச
ஆக்கமிழந் இகஙந
ஆக்கமுங் சுசஉ
ஆங்கமை எசo
ஆபயன்கு இசுo
ஆயுமறிவி கஇஅ
ஆய்ந்தாய்ந் எகஉ
ஆராவியற்கை நஎo

ஆவிற்குரே கஅசுசு
ஆள்வினையு கஅஉஉ
ஆற்றுருமா சுகங்க
ஆற்றினளவறிந்து எஉஙி
ஆற்றினளவறிந்தீ சுஎள
ஆற்றின்வருந் சுசுஅ
ஆற்றினிலாத எகசு
ஆற்றினெழு சுஅ
ஆற்றுபவர்க் எசக
ஆற்றுவா-லிக அகக
ஆற்றுவா-ல்பசி உஉஞி
ஆற்றுவா-ல்பணி கூஅஞி

இ

இகலானு அசுஎ
இகலிற்கெ அஙிஅ
இகலின்மிக அஙிசு
இகலெதிர் அஙிஙி
இகலெல்ப அஙிக
இகலென்னு அஙிங
இகல்காணு அஙிக
இகழ்ச்சியிற் ஙிஙக
இகழ்தெ கஅஙிள
இடமெல்லா கஅசுச
இடனில்பரு உகஅ
இடிக்குந்து சுசள
இடிபுரிந்தென் சுஅஎ
இடிப்பாரை சுசுஅ
இடுக்கட்ப சுஙிசு
இடுக்கண்கா கஅகூஎ
இடுக்கண்வ சுஉக
இடும்பைக்கி சுஉங
இடும்பைக்கே கஅஉக
இடைதெரிந் எகஉ
இணருழ்த்து சுஙிஅ
இணரெரிதோ கூஎஅ
இதனியிதனு ஙிஙள
இமைப்பிற்கர கஙஉக
இமையாரின் கஅசு
இம்மைப்பிறப் கஙகஙி
இயல்பாகு கூசுச
இயல்பினு சுள
இயல்புளீ ஙிசஙி
இயற்றலு கூஅஙி
இரக்கவிர கஅஙிக
இரத்தலினி உஉக
இரத்தலுமீ கஅஙிச
இரந்தும்முயி கஅசுஉ
இரப்பனிரப் கஅசுள
இரப்பாரை கஅஙிஅ
இரப்பான்வெ கஅசுஅ
இரவாரிரப் கஅகூஙி
இரவுள்ளுவுள் கஅசுக
இரவென்னு கஅசுஅ
இருணீங்கி கூஙிஉ
இருநோக்கி கஅசுக
இருந்துள்ளி கஉசகூ
இருந்தோம்பி அக
இருப்பனு எகூள
இருமனப்பெ கூஉஅ
இருமைவகை உகூ
இருவேறுல ஙிஎச
இருள்சேரிரு ஙி
இலக்கமுடம் சுஉள
இலங்கிழா கஉசுஉ
இலமென்றசை கஅசுஅ
இலமென்றுவெ ஙஎச
இலர்பலராகிய உஎஅ
இலனென்றீய உஅடு
இலனென்னு உஉகூ
இல்வாழ்வா சுஙி
இல்லதெனி ஙிஙூ
இல்லாரை எஙிஉ
இல்லாளேயஞ் கூழிஙி
இல்லாள்கட் கூஅகூ
இல்லாவதவற கஙகஉக
இவறலுமாண் சுகூஉ
இழித்தொறூஉ கூசுஅ
இழிவறிந்துண் கூசுசு
இழுக்கலுடை சுஙிஙி
இழுக்காமை ஙிஙகசு
இழைத்தநிக எஎக
இளித்தக்க கஉஅஅ
இளிவரின் கூஎ0
இனதாகமு அஎக
இனியரின சுகஅ
இறந்தமைந் கஅ00
இறந்தவெ ஙிஙக
இறந்தாரிற கூகஅ
இறப்பேபுரி கூள எ
இறலீனுமெ கஅ0
இறுதிபய சுகூ0
இறைகடி ஙிசுஅ
இறைகாக் ஙிசஎ
இற்பிற-கண்ணு கூஙிக
இற்பிற-கண்ணே கஅசுச

இனத்தாற் நிகூஅ
இனம்போன் அஉஉ
இனியவுள கOO
இனியன்ன கஉகூச
இனைத்துணைத் அள
இனையரிவ எகூO
இன்கணுடை ககநிஉ
இன்சொலாலீத் நூஅள
இன்சொலாலீர கூக
இன்சொலி கூகூ
இன்பங்க கககூசு
இன்பத்து-பய அநிச
இன்பத்து-வி சுஉக
இன்பமிடை நூசுக
இன்பமொ கOஙிஉ
இன்பம்விழை-னி சுஉகூ
இன்பம்விழை-ன் சுகநி
இன்மையிடு கOசுநூ
இன்மையினி-த கOசக
இன்மையினி-து ஙிநிஅ
இன்மையு கநிங
இன்மையெ கOசஉ
இன்மையொ கூஅஅ
இன்றியமை கூசுக
இன்றும்வ கOசஅ
இன்னுசெ-ரை நூகச
இன்னுசெ-ற் கூஅள
இன்னுநிரக் உஉச
இன்னுதின ககநிஅ
இன்னுமை சுநூO
இன்னுலெ நூகசு

ஈ

ஈட்டமிவ கOOநூ
ஈதலிசைப உநூக
ஈத்துவக்கு உஉஅ
ஈர்ங்கைவி கOளள
ஈவார்கணெ கOஙிக
ஈன்றபொ கூக
ஈன்றணுமு கூஉநூ
ஈன்றள்பசி சுஙிசு

உ

உடம்பாடி அகO
உடம்பொ ககஉஉ
உடுக்கையி எஅஅ
உடுப்பதூஉ கூளகூ
உடைசெல் கூநூக
உடைத்தம் ளகநூ
உடைமையு அக
உடையரெ நிகூக
உடையார் நூகூநி
உட்கப்படா கூஉக
உட்பகைய அஅநூ
உணர்வது எகஅ
உணவினு கநூஉசு
உண்டார்க கOகO
உண்ணற்க கூஉஉ
உண்ணுது ககூO
உண்ணுமையு உஙிநி
உண்ணுமைவே உநிஎ
உதவிவரைத்த கO஫
உப்பமைந் கநூOஉ
உயர்வகலந் எகநூ
உயிருடம்பி நூநூO
உயிர்ப்பவு அஅO
உய்த்தல கஉஅள
உரமொரு சுOO
உரனசைஇ கஉசுநூ
உரனென் உச
உருவுகண் சுசுஎ
உருளாய கூநூங
உரைப்பா உநூஉ
உலகத்தாரு அநிO
உலகத்தோ கசO
உலகந்தழீஇ ஈஉநி
உலகவிடத் னசுஉ
உவக்காணெங் ககஅநி
உவந்துறை கககூO
உவப்பத் நூகூச
உழந்துழக் ககளெ
உழவினுள் கOநூசு
உழுதுண்டு கOநூக
உழுவாரு கOகூஉ
உழைப்பிரி நிநூO
உளபோன் நிஎச
உளரெனினு எநூO
உளரென்னு சOசு
உளவரைதூ சஅO
உள்ளக்களித் கஉஅக
உள்ளத்தார் உகூச
உள்ளத்தாலு உஅக
உள்ளத்தாற் கஉசக
உள்ளமிலா நிகூஅ
உள்ளமுடை நிகூஉ
உள்ளம்போ ககளO

உள்ளற்க எகூஅ
உள்ளியதெல் நஉ0கூ
உள்ளியதெய் இநச0
உள்ளினுங் கஉ0க
உள்ளினே கநகசு
உள்ளுவதெல் இகூசு
உள்ளுவன்-னு ககஅச
உள்ளுவன்-ம ககஉஇ
உள்ளொற்றி கூஉள
உறங்குவ நடங்க
உறன்முறை அஅதி
உருஅதவர்க் கஉகூஉ
உருஅதவர்போ க0கூசு
உருஅதோ ககசஙட
உருஅர்க்கு கஉ00
உறினட்ட அகஉ
உறினுயிர எளஅ
உறுதோறு ககஅசு
உறுபசியு எஙச
உறுபொரு எஇசு
உறுப்பமைந் எசுக
உறுப்பொத் கூகூந
உறுவதுசிர் அகஙு
உறைசிறி சூஅ0
உற்றநோய்நீ சசஉ
உற்றநோய்நோ உசுக
உற்றவன் கூஇ0
உற்றுணளவு கூசஉ

ஊ

ஊக்கமுடை சஅசு
ஊடலிற்றோற் கஙஉஉ
ஊடலிற்றோன் கஙஉஉ
ஊடலினுண் கஙஅ0எ
ஊடலுணங் கஙக0
ஊடலுணர்தல் ககஅகூ
ஊடற்கட் கஉஅச
ஊடிப்பெறு கஙஉஅ
ஊடியவ ககஅச
ஊடியிருந் கஙகஉ
ஊடுகமன் கஙஉகூ
ஊடுதல் கஙஙட0
ஊணுடை க0கஉ
ஊதியமென் எசுஎ
ஊரவர்கௌவை ககசஎ
ஊருணிநீர் உகஇ
ஊழிபெய கூஅகூ
ஊழிற்பெரு நஅ0

ஊழையு கூஉ0
ஊறெரா சுசுஉ
ஊனைக்கு க0கஙட

எ

எச்சமென் க0சு
எட்பகவ அஅகூ
எண்சேர்ந் ககஅ
எண்ணித்து சுசுள
எண்ணிய வெ சுசுசு
எண்ணியா சுஅசு
எண்ணென்ப கூசுஉ
எண்பதத்தாலெ சுஉக
எண்பதத்தானே இகூஅ
எண்பொருள சுஉச
எதிரதாக்கா சுஉக
எந்நன்றி ககஅ
எப்பொருளு சுசுஇ
எப்பொருளெ உதிஇ
எப்பொருள்யார் சஉங
எய்தற்கரி சஅக
எரியாற்சு அசுசு
எல்லாப்பொ எசுசு
எல்லார்க்குந கஉஇ
எல்லார்க்குமெ இஅஉ
எல்லாவிளக் உசுக
எல்லிக்கணி அ0சு
எவ்வதுறை சஉசு
எழுதுங்கா கஉஅஇ
எழுபிறப்பு சுஉ
எழுமையெ க0எ
எளிதென கசஇ
எள்ளாத சஎ0
எள்ளாமை உஅக
எள்ளினீளி கஉசஅ
எற்றிற்கு க0அ0
எறமிறன் ஈஇசு
எனைத்தானுந சகசு
எனைத்தானுமெ கூகள
எனைத்தித் சுஎ0
எனைத்துங் அஉ0
எனைத்துணை கசச
எனைத்துநி கஉ0அ
எனைத்தொ கஉ0உ
எனைப்பகை உ0எ
எனைமாட்சி எஇ0
எனையதை இகச
என்பிலதனை எஎ

என்றுமொ சுஞ்உ
என்னோமுன் எஎக

ஏ

ஏதம்பெருஞ் க00சு
ஏதிலாராரை அஉள
ஏதிலார்கு ககஂ0
ஏதிலார்போ க0ஊக
ஏந்தியகொ அக்கு
ஏமுற்றவ அளங
ஏரினுநன் க0கூஅ
ஏரினுழாஅ கச
ஏவஞ்செ அசஅ

ஐ

ஐந்தவித்தா உடு
ஐயத்தினீங் கஉஞங
ஐயப்படாஅ எ0உ
ஐயுணர்வெ ஙஞிச

ஒ

ஒட்டார் கூசுள
ஒண்ணுதற் க0அஅ
ஒண்பொரு எகஂ0
ஒத்ததறிவா உகச
ஒப்புரவினு உஉ0
ஒருதலையா ககக்கு
ஒருகாலை கஉசுஊ
ஒருபொழுது ஙஉள
ஒருமைக்க ஙகூஅ
ஒருமைச் அஙடு
ஒருமைமக கூளச
ஒருமையுளா கஉசு
ஒலித்தக்கா எசுஙக
ஒல்லுங்கரு அகஅ
ஒல்லும்வகை ஙஙக
ஒல்லும்வாயெ கூளங
ஒல்வதறிவ சளஉ
ஒழுக்கத்தினெ கஙள
ஒழுக்கத்தினெ கஙசு
ஒழுக்கத்து உக
ஒழுக்கமுடைமை கஙஙு
ஒழுக்கமுடைய கஙகூ
ஒழுக்கமும் கூஞ்உ
ஒழுக்கமுவி கஙக
ஒழுக்காறு கசுக
ஒளியார்மு எகச
ஒளிஒயாருவ கூளக

கடலன்ன ககஙள
கடலோடா சகூசு
கடனறிந் சுஅள
கடனென்ப கூஅக
கடா அக்களி க0அள
கடாஅவுரு ஞிஅஞ
கடிதோச்சி ஞிசுஉ
கடிந்தகடிந் சுஞிஅ
கடுஞ்சொல் ஞிசுசு
கடுமொழியுங் ஞிசுள
கடைக்கொட் சுசுஙு
கணிகொடிதி உளக
கண்களவு க0கூஉ
கண்டதுமன் ககசசு
கண்டாங்கலு சகளக
கண்டாருயிரு க0அச
கண்டுகேட் கக0க
கண்ணிறைந் கஉளஉ
கண்ணிற்கணி ஞிளஞி
கண்ணிற்றுளி கஉக0
கண்ணின்பச கஉச0
கண்ணின்றுக கஅச
கண்ணுங்கொ கஉசச
கண்ணுடைய ஙகூஙு
கண்ணுள்ளார் ககஉள

கண் ணுள்ளிற் ககஉசு
கண் ணெடுக ஙக00
கண் ணேட் - த் ஙிஎஉ
கண் ணேட் - மீ ஙிஎள
கண் ணேட் - மெ ஙிஎக
கதங்காத்துக் ஙங்0
கதுமெனத்தா ஙகஎங
கயலுண்கண் கஉகஉ
கரத்தலுமாற் ஙகசஉ
கரப்பவர்க் க0எ0
கரப்பிடும்பை க0ஙசு
கரப்பிலாரெ க0ஙிங
கரப்பிலார் க0ஙிஙி
கரப்பினுங் கஉஎக
கரவாதுவந் க0சுக
கருமஞ்சிதை ஙிஎஅ
கருமஞ்செய க0உக
கருமணியிற் ஙகஉங
கருமத்தாஞ ச0ஙக
கருவியுங்கா சுஙக
கலங்காதுக கசுஅ
கல்துணர் கஉசக
கல்லாதமே அசஙி
கல்லாதவரிற் எஉஃ
கல்லாதவருங ச0ங
கல்லாதாரெஞ ச0ச
கல்லாதான் ச0உ
கல்லார்ப்பி ஙிஎ0
கல்லாவொரு சடஙி
கல்லான்வெ அஎ0
கவறுங்கழக சுஙிஙி
கவ்வையாற் ஙகசச
காழாஅக்கால் அச0
களவினுலாகி உஅங
களவின்கட் உஅச
களவென்னு உஅஎ
களித்தறியே சுஉஅ
களித்தானே சுஉங
களித்தொறு ஙகசஙி
கள்வார்க்கு உகஃ0
கள்ளுண்ணுப் சுஙப0
கறுத்தின்னு ஙஙஉ
கற்கசடற ஙஙங
கற்றனுலா உ
கற்றறிந்தார் எஙஎ
கற்றிருட்கற் எஉஉ
கற்றூர்முற் எஉச
கற்றிலனெயினு சஙச

கற்றீண்டு ஙற்றுசு
கற்றுக்கண் சுஅசு
கனவிலுண் கஉகச
கனவினுமி அகசு

கா

காக்கபொரு கஉஉ
காக்கைகர ஙிஉஎ
காட்சிக்கெ சுஅசு
காணச்சின அசுசு
காணுதாற் அசுகு
காணிற்குவ கஙகச
காணுங்காற் கஉஅசு
காண்கமற் கஉசுஙி
காதலகாத சஉ0
காதலரில் கஉஉச
காதலர்தூ கஉகங
காதலவரில கஉசஉ
காதன்மை ஙிஎ
காமக்கடன் கஙசச
காமக்கடு - லு கஙங்ச
காமக்கடு - னீ கஙசள
காமக்கணிச் கஉஙிங
காமமுகாணு கஙசஉ
காமமுழுங் ஙகங்க
காமமென கஉஙிஉ
காமம்விடு கஉச஑
காமம்வெகுளி சுஉ0
காலங்கருதி சஅஙி
காலத்தினுற் க0உ
காவாழ்களரி ஙி00
காக்கக்குச் ஙஉஉஙி
காலையருப்பி கஉஉ஑
கானமுயலெ எஎஉ

கு

குடம்பை சுஙுஅ
குடிசெய்வ க0உசு
குடிசெய்வார் க0உஅ
குடிதழீஇ ஙிசுச
குடிபுறங்காத் ஙுசகு
குடிப்பிறந்தார் சுஙிஎ
குடிப்பிறந் - கு ஙிஅஉ
குடிப்பிறந் - த எகச
குடிமடிந்து சுஎ0ச
குடியாண்மை சுஎ0சு
குடியென்னுங் சுஎ0க
குணநலஞ் சுஅஉ

குணகாடி நி0ச
குணமென்னுங் உக
குணனிலனுய் அசுஅ
குணனுங்குடி எகூசூ
குலஞ்சுடுங் க0ககூ
குழலினிதி சுசு
குறிக்கொண் க0கூநி
குறித்தது எ0ச
குறிப்பறிந்து சுகூச
குறிப்பிற் - ரா எ0நி
குறிப்பிற் - ர் எ0சூ
குற்றமிலனுய் க0உநி
குற்றமேகாக் சூசூ
குன்றன்னுர் அகூஅ
குன்றினனே கூசுநி
குன்றேறி எநிஅ

கூ

கூடியகாமம் கஉசுச
கூத்தாட்ட நூசூஉ
கூழுங்குடியு நிநிச
கூறுமைநோ எ0க
கூற்றங்குதி உசுக
கூற்றத்தை அகூச
கூற்றமோ க0அநி
கூற்றுடன்று எசுநி

கெ

கெடல்வே அகூசூ
கெடாஅவழி அ0க
கெடுங்கா எகூக
கெடுப்பதூஉ கநி
கெடுவல்யா ககச
கெடுவாக ஈகள
கெட்டார்க் கஉகூசூ

கே

கேடறியா எசூக
கேடில்வி ச00
கேடும்பெ ககநி
கேட்டார்ப் சுச்சூ
கேட்டிலு எகூசு
கேட்பினுங் சகஅ
கேளிழுக்கங் அ0அ

கை

கைம்மாறுவே உகக
கையறியா கூஉநி
கைவேல்கு எளச

கொ

கொக்கொக் ஈகூ0
கொடியார் - யி ககசூ
கொடியார் - யு கஉகூநி
கொடுத்தலு நிஉநி
கொடுத்துங் அசுள
கொடுப்பத கசுசு
கொடுப்பதூஉ க00நி
கொடும்புரு க0அசு
கொடையு நூகூ0
கொலிமே நிநிக
கொலியிற் நிநி0
கொலிவினை நூஉக
கொல்லாத கூஅச
கொல்லாமை நூஉச
கொல்லான் உசூ0
கொளப்பட் சுகூக
கொளற்கரி எசநி
கொன்றன் க0கூ

கோ

கோட்டுப் கநூகநூ
கோளில் கூ

ச

சமன்செய் ககஅ
சலத்தாற் சுசூ0
சலம்பற்றி கநிசு

சா

சாதலினின் உநூ0
சாயலுநா ககஅகூ
சார்புணர்ந் நூநிக
சால்பிற்குக் கூஅசு
சான்றவர் கூக0

சி

சிதைவிடத் கநிள
சிறப்பறி நிக0
சிறப்பீ - மூ நூக
சிறப்பீ - ம் நூகக
சிறப்பொடு சஅ
சிறியாருணர் களசு
சிறுகாப்பி எளச
சிறுபடை சகூஅ
சிறுமைநமக் கஉநூக
சிறுமைபல கூநூச

சிறுமையுஞ் எசுக
சிறுமையுணீ கூஅ
சிறைகாக்கு நுள
சிறைநல சகூக
சிற்றினம சஞ்க
சிற்றின்ப களந
சினத்தைப் நு0எ
சினமென்னு நு0சு

சீ

சீரிடங்கா அ0க
சீரினுஞ்சீ கூசுஉ
சீருடைச்செ க0க0
சீர்மைசிற ஙகுநி

சு

சுடச்சுட உசுஎ
சுவையொளி உஎ
சுழலுமிசை எஎஎ
சுமன்னுமேர் க0ஙக
சுற்றத்தாற் ஙிஉச

சூ

சூழாமற்றூ க0உச
சூழச்சிமுடி சுஎங
சூழவார்கண் சசஞி

செ

செப்பமுடை ககஉ
செப்பின்பு அஅள
செயற்கரியசெ உசு
செயற்கரியயா எஅக
செயற்கைய சூநூள
செயற்பாலசெ சநூள
செயற்பாலதோ ச0
செயிரிற்றலை உஞ்அ
செலுக்கபொ எஞிக
செய்தக்க சசுசு
செய்தேமஞ் அகடு
செய்யாமற்செய் க0க
செய்யாமற் செற் நூகநூ
செய்வானே ஙிகசு
செய்வினை சுஎள
செருக்குஞ் சநூக
செருவந்த ஙிசுசு
செல்லாமை ககஞிக
செல்லாவி நூ0உ
செல்வான் க0ங்க
செல்லிடத் நூ0க
செல்வத்துட் சுக்க
செல்விருந் அசு
செவிகைப்ப ங்அக
செவிக்குண சுகஉ
செவிச்சொல் சுங்கச
செவியிற்சுவை சஉ0
செவியுணவி சுகங்ட
செறு அச்சிறு க0கள
செறிதொடி கஉழஞி
செறிவறிந் கஉங்ட
செறுநரை சுஅஅ
செறுவார்க் அசுக
செற்றவர்பி கஉஞிசு
செற்றுரென கஉசஞி
செற்றுர்பி நுஉஞிஞி
சென்றவிட சுஉஉ

சொ

சொலல்வல் சுசள
சொல்லுக - லி உ00
சொல்லுக - லீ சுசஞி
சொல்லுதல் சுசுச
சொல்லப்ப க0எஅ
சொல்வண அஉள
சொற்கோட் ககக

ஞா

ஞாலங்கருதி சஅச

த

தகுதியென ககக
தக்காங்கு ஙுசுக
தக்காரின சசசு
தக்கார்தக ககச
தஞ்சந்தம கநூ00
தணந்தமை கஉநூக
தண்ணந்துஞ்ற கஉ எள
தந்தைமகற் கள
தந்நலம் கூகசு
தந்நெஞ்சத் கஉ0ஞி
தமராகித் ஙிஉக
தம்பொரு சுநூ
தம்மிலிருந் ககஎள
தம்மிற்பெரி சளச
தம்மிற்றம் சுஅ

தலைப்பட்டார் ஙடசஅ
தலையிழி ழிந் கசுச
தவஞ்செய் உசுசு
தவமறைந் உஎச
தவமுந்தவ உசுஉ
தவறிலரா கஙஉருி
தள்ளாவிளை எஙக
தற்காத்துத் ருிசு
தனக்குவமை எ
தனியேயிருந் கஉகசு
தன்சுற்றநீக் சஙடசு
தன்றுணையின் அஎருி
தன்னுயிர்க்கின் ஙகஅ
தன்னுயிர்தா உசுஅ
தன்னுயிர்நீ ஙடஎ
தன்னூல்பெரு உருிக
தன்னெஞ்சறி உகூஙட
தன்னைத்தான் - க் ஙடஅருி
தன்னைத்தான் - த உ0கூ
தன்னையுணர் கஙடகூ

தா

தாமின்புறு ஙடகூஙூ
தாம்வீழ் - த ககஙக
தாம்வீழ் - மெ ஙக0ஙட
தாம்வேண் கடருி0
தார்தாங்கி எசுஎ
தாளாண்மையி சுஙச
தாளாண்மையெ சுஙஙட
தாளாற்றி உகஉ
தானந்தவ கஙூ

தி

திறனல்ல கருிள
திறனறிந் சுசஎ
தினற்பொரு உருிசு
தீனத்துணை ந கo0ச
தீனத்துணையா சஙஙட
தீனத்துணையு கஉஅஉ

தீ

தீப்பாலதான் உ0சு
தீயவைசெய் உ0அ
தீயவைதீய உ0உ
தீயளவன்றி சுசள
தீயிஞற்சுட்ட கஉசூ
தீவினையார உ0க

து

துஞ்சினார் கூஉசு
துஞ்சுங்காற் கஉகஅ
துணைநலமா சுருிக
துப்பார்க்கு கஉ
துப்பினவெ ககசுருி
துப்புரவில் க0ருி0
தும்முச்செறு ஙகஙகஅ
துளியின்மை ருிருிள
துறந்தா - த் உசுஙூ
துறந்தா - ந் சஉ
துறந்தார்படி ருிஅசு
துறந்தார்பெரு உஉ
துறந்தாரிற் கருிசூ
துறப்பார் ஙடஎஅ
துறைவன் ககருி1
துனியும்புல கஙூ0சு
துன்பத்திற் கஉஙசூ
துன்பமுறவ சுசுசூ
துன்புறூஉ சூசா
துன்னுத்து கஉருி0
துன்னியார் கஅஅ

தூ

தூங்காமை ஙடஅஙூ
தூங்குக சுஙஉ
தூய்மைது சுஅஅ
தூஉய்மையெ ஙடசுள

தெ

தெண்ணீரடு க0சுருி
தெய்வத்தா சுருிசூ
தெய்வந் ருிருி
தெரிதலுந் சூடுசா
தெரிந்தவி சசுஉ
தெரிந்துணை ககளஉ
தெருளாதா உசுசூ
தெளிவிலத சசுசா
தென்புலத் சஙடூ

தே

தேரான்பிற ருி0அ
தேரான்றெ ருிக0
தேவரனைய க0எடூ
தேற்றாத ருிக்ஙூ
தேறினுந் அஙசு

தொ

தொகச்சொ கஅநி
தொடங்கற் சகக
தொடலைக் ககஙநி
தொடிநோக் கஉஎக
தொடிப்புழு க0கஎ
தொடியொடு கஉங்சு
தொடிற்சுடி ககஙிக
தொட்டனைத் ஙகசு
தொல்வர க0சஙட
தொழுதகை அஉஅ

தோ

தோன்றிற் உஙசு

ந

நகல்வல்ல கஙகக
நகுதற்பொரு எஅச
நகையீகை கஙிங
நகையுமுவ ஙக0ச
நகையுள்ளு கஙகநி
நகைவகை அகள
நசைஇயார் ககஙகக
நச்சப்படா க00அ
நடுவின்றி களக
நட்டார்குறை கஙஅ
நட்டார்க்கு சுஎக
நட்டார்போ அஉசு
நட்பிற்குவீ எஅக
நட்பிற்குறு அ0உ
நண்பாற்றூ கஙகஅ
நத்தம்போற் உஙநி
நயந்தவர்க் ஙகஅக
நயந்தவர்நல் கஉஙஉ
நயனிலசொல் ககஎ
நயனிலனெ ககஙங
நயனீன்று கஎ
நயனுடை உஙக
நயனெடு கஙகச
நயன்சாரா ககஙச
நலக்குரியார் கசக
நலத்தகை கஙஎநி
நலத்தின்க கஙிஅ
நலம்வேண் கஙச0
நல்குரவெ க0சஎநி
நல்லவை கஎதி
நல்லாண் க0உசு
நல்லார்கட் ச0அ
நல்லாறென ஙஉச
நல்லாறெனி உஉஉ
நல்லாற்றூ உசஉ
நல்லினத்தி சகஙி
நவிறூறு எஅக
நற்பொரு க0சசு
நனவினுற் கஉகநி
நனவினுள் கஉஉடி
நனவினுள்காக் கஉகள
நனவினுள்காத கஉகஙட
நனவினுள்காரை கஉசிக
நனவென கஉகசு
நன்மையுள் நிகக
நன்றறிவா கடிளஉ
நன்றுகுமாக் ஙஉஅ
நன்றுங்கா ஙஎக
நன்றுற்ற ிசகக
நன்றிக்கு கஙஅ
நன்றிமறப் க0அ
நன்றென்ற எகநி
நன்றேதரி ககஙட
நன்னீரைவா கஙகக

நா

நாங்கா நல் கசகூநி
நாச்செற்று ஙடிநி
நாடாதுந எக்க
நாடென்ப எஙக
நாடொறுநாடி நிநிட
நாடோறுநாடு நிஉி
நாணகத்தி க0உடி
நாணுமை அஙட
நாணுவு க0களை
நாணுன்மற கஉகளை
நாண்ணன கஉநிள
நாணென் ளஉச
நாணெடு ககஙடி
நாண்வேலி க0கசு
நாநல சுசக
நாளென ஙடிச

நி

நிணந்தீயி கஉசு0
நிலத்தியல் சநிஉ
நிலத்திற் கூநிக
நிலவரைநீ உகிச
நிலீமகள் எஎ0
நிலீயஞ்சி ஙடிநி

நிலையிற்றி கஉசு
நில்லாதவ நஙக
நிழனீருமின் அஅக
நிறைநீர எஅஉ
நிறைநெஞ் கூகள
நிறைமொழி உஅ
நிறையரி ககஙஅ
நிறையுடைமை கஞிச
நிறையுடையே கஉஞிச
நினைத்திருந் கஙஉ0
நினைத்தொன் கஉசக
நினைப்பவர் கஉ0ந

நீ

நீங்காள்வெகு அசுச
நீங்கிற்கெற ககஅச
நீரின்மணமை உ0
நீருநிழல கஙஉகூ

நு

நுணங்கிய சகக
நுண்ணிய நூ கஉஙட
நுண்ணியமெ எக0
நுண்மாணு ச0எ
நூனிக்கொரம் சஎசு

நூ

நூலாருணூல் சுஅகட

நெ

நெஞ்சத்தார் ககஉஅ
நெஞ்சிற்றுற உஎசு
நெடுங்கட கள
நெடுநீர்மற சு0ஞ
நெடும்புன ஈகூஞ
நெய்ப்லெ ககசஅ
நெருப்பினு க0சக
நெருஙுள ஙஞகூ
நெடுநற்றுச் கஉஎஅ

நோ

நோக்கினு - கி க0சஙட
நோக்கினு - கெ க0அஉ
நோதலெவன் கஙட0அ
நோயில்லா ஙஉ0
நோய்நாடி கூசஅ
நோவற்க அளள
நோனுவுடம் ககஙஉ

ப

பகச்சொல் கஅள
பகல்கருதி அஞிஉ
பகல்வெல் சஅக
பகுத்துண் ஙஉஉ
பகைநட்பாக் அஎச
பகைநட்பாங் அஙட0
பகைபாவ கசசு
பகைமையு ள0க
பகையகத்துச் எஉஙு
பகையகத்துப் எஉள
பகையென் அளக
பசக்கமற் ககஅக
பசந்தாளி ககஅஅ
பசப்பென ககஙட0
படலாற்று ककளஞி
படியுடை சு0சு
படுபயன் கனஉ
படைகுடி ஙஅக
படைகொண் உஞிக
பணியுமாமெ கஎஅ
பணிவுடையு கூஞி
பணைநீங்கிப் கஉஙசா
பண்டறியே க0அசு
பண்ணென் ஞிஎங
பண்பிலான் க000
பண்புடை ककசு
பதிமருண்டு கஉசக
பயனிலபல் ककஉ
பயனில்சொற் ककசு
பயன்மரமூள் உகசு
பயன்றூக்கார் க0சு
பயன்றூக்கி கசஉ
பரிந்தவர்நல் கஉசஅ
பரிந்தோம்பிக் கஙஉ
பரிந்தோம்பிப் அஅ
பரியதுகூர் ஞிஙக
பரியினுமா ஙஎசு
பருகுவார் அகக
பருவத்தோ சஅஉ
பருவரலும் ककஙள
பலகுடைநீ கபஙச
பலசொல்ல சுசக
பலநல்லகற் அஉஙு
பல்குழுவு எஙஞி
பல்லவைக எஉஅ
பல்லார்பகை சுஞி0
பல்லார்முனி ककக

பழகியசெல் கூகூள
பழகியநட் அ0ங
பழிமலிந் கூஞிள
பழியஞ்சி ஃசா
பழுதெண் கூஞிக
பழைமையெ அ0க
பழையமெ எ00
பற்றற்றகண் ஞிஉக
பற்றற்றே கண்ணே நூசாக
பற்றற்றே உளஞி
பற்றிவிடா நூசள
பற்றுகபற் நூஞி0
பற்றுள்ள சஙஅ
பனியரும்பி கஉஉங
பன்மாயக்கள் கஉஞிஅ

பா

பாடுபெறு கஉங்ள
பாத்தூண் உஉள
பாலொடு ககஉஅ

பி

பிணிக்குமருந் ககo2
பிணியின்மை எஉங
பிணையேர் க0அக
பிரித்தலும் கூஙங
பிரிவுரைக் ஞகஞிசு
பிழைத்துணர் சகள
பிறப்பென்னு நூஞிஅ
பிறப்பொக் கூளஉ
பிறர்க்கின் நூகக
பிறர்நாணத் க0கஅ
பிறர்பழிய க0கஞி
பிறவிப்பெ க0
பிறன்பழி கஅசு
பிறன்பொரு கசக
பிறன்மனை கசஅ

பீ

பீலிபெய் சளஞி

பு

புகழின்ருற் ஃகூசு
புகழ்ந்தவை ஞிங்அ
புகழ்பட உங்ள
புகழ்புரிந் ஞிக
புக்கிலமை நூச0
புணர்ச்சிபழ எஅஞி

பூ

புத்தேளுல உகங்
புரந்தார்கண் எஅ0
புலத்தலிற் கங்உங்
புலப்பலென கஉஞிசு
புலப்பேன் கஉசுள
புல்லவையுட் எகக
புல்லாதிரா கங்0க
புல்லிக்கிடந் ககஅள
புல்லிவிடா கங்உச
புறங்குன்றி உளள
புறங்கூறிப் க.அங
புறத்துறுப் எக
புறந்தூய் உகஅ
புன்கண்ணை கஉஉஉ

பெ

பெண்ணிய கங்கக
பெண்ணிற் ஞிச
பெண்ணிலுற் கஉ.அ0
பெண்ணேவல் ஃ0ள
பெயக்கண்டு ஞிஅ0
பெயலாற்று ககளச
பெரிதாற்றிப் கஉளசு
பெரிதினிது அஃக
பெரியாரை அஃஉ
பெருக்கத்து ஃஞிங்
பெருங்கொ ஞிஉசு
பெருமைக்கு ஞிப0ஞி
பெருமைபெ கூளக
பெருமையு கூஞிஞி
பெரும்பொரு எங.உ
பெரு அமையஞ் கஉஃஞி
பெறினென் கஉள0
பெறுமவற்று சுக
பெற்ருற் ஞிஅ

பே

பேணுதுபெட்டா ககளஅ
பேணுதுபெட்ப ,கஉஅங
பேணுதுபெண் ஃ0உ
பேதைபெருங் அகசு
பேதைப்ப ங்ளஉ
பேதைமையு அங.உ
பேதைமையொ அங.ச
பேராண்மை அ0ஞி

பொ

பொச்சாப்பார் திருக
பொச்சாப்புக் திருஉ
பொதுநலத் ககஇ
பொதுநோக் திஉஅ
பொய்படுமொ அங்கசு
பொய்ம்மையு உசுஉ
பொய்யாமைபொ உசுஎ
பொய்யாமைய உசுசு
பொருஊர்ந் ககக
பொருட் பெண்டிர் சுக்கங
பொருட்பொரு கூகச
பொருணீங் உசஉ
பொருண்மா. கஉங0
பொருளல்லவரை எஇக
பொருளல்லவற் ங்இக
பொருளற்றூர் உசஅ
பொருளாட்சி உஇஉ
பொருளாணை க00உ
பொருளென் எஇங
பொருள்கரு சுஎஇ
பொருள்கெடுத் சுங்அ
பொள்ளென சுஅஎ
பொறியின் சுகஅ
பொறிவாயி சு
பொறுத்தலி ங்இஉ
பொறையொ எங்ங

போ

போற்றினரி சுசுங

ம

மகன்றந்தை எ0
மக்கண்மெய் சுஇ
மக்களே போல் க0எக
மங்கலமென்ப சு0
மடஞார்தல் ககங்சு
மடிமடிக் சு0ங
மடிமைகுடி சு0அ
மடியிலா சுக0
மடியுளா சுகஎ
மடியைமடியா சு0உ
மடுத்தவா சுஉச
மணிநீருமண் எசஉ
மணியிற்றிக கஉஎங
மண்ணெடியை ஞஎசு
மதிநுட்ப சுங்சு
மதியுமடந்தை ககசு
மயிர்நீப்பின் சுசுக
மருந்தாகித் உஎள
மருந்தென சுசஉ
மருந்தோமற் சுசுஅ
மருவுகமாசற் அ00
மலரன்ன - ண்ழு ககசசு
மலரன்ன - ளரு ககசஉ
மலரினுமெல் கஉஅசு
மலர்காணின் ககஎஉ
மலர்மிசை ங
மழித்தலுநீ உஅ0
மறத்தல்வெ ங0ங
மறந்தும்பி உ0ச
மறப்பினு கங்ச
மறப்பினெவ கஉ0எ
மறமானமா எசுசு
மறவற்கமா க0சு
மறைந்தவை ஞிஅள
மறைபெற ககஅ0
மறைப்பேன்மற் கஉஞிங
மறைப்பேன்மன் ககசுக
மற்றியானெ கஉ0சு
மற்றுந்தொடர் ங்சஞி
மனத்ததுமா உளஅ
மனத்தாலு சஞிஞி
மனத்தினமை அஉஞி
மனத்துக்கண் ங்ச
மனத்துளது சஞிஞி
மனத்தொடு உசஞி
மனநலத்தி சஞிக
மனநலநன்கு சஞிஅ
மனநலமன் சஞிள
மனந்தூயார் சஞிசு
மனந்தூய் சஞிஞி
மனமாணவு அஅச
மனைத்தக்க ஞிக
மனைமாட்சி ஞிஉ
மனையாளே ஃ0ச
மனைவிழைவா கூ0க
மன்னர்க்கு ஞிஞிசு
மன்னர்விழை சுசுஉ
மன்னுயிரெல் ககசுஅ
மன்னுயிரோ உசச

மா

மாதர்மூகம் ககஎஅ
மாலிநோய் கஉஉசு
மாலியோவல் கஉஉக
மாறுபாடில் கூஞி

மி

மிகச்செய் அஉக
மிகன் மேவன் அடுள
மிகுனுங்குறை கூசக
மிகுதியான் கடுஅ

மு

முகத்தான கூடு
முகத்தினினி அஉச
முகத்தின் மு எ0எ
முகநகநட்ப எஅசு
முகநோக்கி எ0அ
முகைமொக் கஉளச
முடிவுமிடை சுஎசு
முதலிலார்க் சுசக
முயக்கிடை கஉடுக
முயங்கிய கஉடுஅ
முயற்சிதிரு சுகசு
முரண்சேர்ந் சசஉ
முறிமேனி. கககடு
முறைகோடி நிடுக
முறைசெய் டுஅஅ
முறைப்பட சு0
முற்றுற்றி எசஅ
முற்றியுமுற் எசள
முனைமுகத் எசக
முன்னுறக்கா நிடுநி

மே

மேலிருந்து கூளடு
மேற்பிறந்தா ச0க

மை

மையலொரு அங்அ

மோ

மோர்ப்பக்கு கூ0

யா

யாகாவாரா கஉள
யாங்கண்ணி ககச0
யாண்டுச்செ அகநி
யாதனின்யா டுசக
யாதானுநா டுகள
யாமுமூளே கஉ0ச
யாமெய்யா டு00
யாரினுங்கா கடுகச

யானெனதெ டுசசு
யானுக்கு க0கச

வ

வகுத்தான் டுளள
வகைமாண் அகள
வகையறச் சசுநி
வகையறிந்துத அளஅ
வகையறிந்துவ எஉக
வசையிலாவ உடுசு
வசையென்ப உடுஅ
வசையொழிய உழ0
வஞ்சமனத்தா உளக
வருகமற்கொ கஉசுசு
வருமுன்னர் சசுநி
வருவிருந்து அடு
வரைவிலாமா ககசு
வலியார்க்கு அசுக
வலியார்முற் உநி0
வலியினிலை உளடு
வழங்குவ கூடுநி
வழிநோக் அசுநி
வழுத்தினுடு கடுகள
வறியார்க் உஉக
வன்கண்கு சுடுஉ

வா

வாணிகஞ்செய் கஉ0
வாய்மையெ உகக
வாராக்காற் ககளக
வாரிபெருக் இகஉ
வாழ்தலுயிர் ககஉழ
வாழ்வார்க் ககசுஉ
வாளற்றுப் கஉசுக
வாளொடென் எஉசு
வாள்போல் அஅஉ
வானின்றுல ககக
வானுயர்தோ உளஉ
வாலெனக்கி நிசஉ

வி

விசும்பிற்று கசு
விடாஅது க0க0
விடுமாற்ற சுஅக
விண்ணின்று கடு
வித்துமிடல் அடி
வியவற்க சடுசு
விருந்துபுற அஉ
விருப்பறுச் இஉஉ

விரைந்து சுசஅ
விலங்கொடு சகஎ
வில்லேருழ அளஉ
விழித்தகண் எளடு
விழுப்புண்ப எளசு
விழுப்பேற் ககஉ
விழைதகை அஎக
விழையார் அகஎ
விளக்கற்ற ககஅசு
விளிந்தாரின் கசஙட
விளரியுமெனி கஉஎக
வீணிலகந்து கஉசுஅ
வீணைக்கண்வீணெகை சுகஉ
வீணைக்கண்வீணையு நிகக
வீணைக்குரி நிகஅ
வீணைசெய் நிஅச
வீணைநகை சுஎச
வீணைத்திட் சுசுக
வீணையான் சுஎஅ
வீணைவலியி சுஎக

வீ

வீழப்படுவா ககசுச
வீழுநர்வீழ ககசுட
விழுமிருவர் ககஎஅ
வீழ்நாள்ப டஅ
வீழ்வாரினி ககசுஅ
வீறெய்தி சுசுஙி

வெ

வெண்மை அசச
வெருவந்த நிசுட
வெள்ளத்தனைய சுஉஉ
வெள்ளத்தனையவி நிசுநி

வே

வேட்ட ககஎநி
வேட்பத்தா சுசசு
வேட்பன சுகள
வேண்டற் - ஃ களள
வேண்டற் - ன் சுடக
வேண்டா டீசுடீ
வேண்டிய உசுநி
வேண்டினு டீசஉ
வேண்டுங் டீசுஉ
வேண்டுதல் ச
வேலன்று நிழசு
வேலொடு நிநிஉ

வை

வைத்தான் கஎஎச
வையத்துள் நிஎ

பிழைதிருத்தப் பட்டி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
க	உசு	நூல்களூம்	நூல்களும்
அ	உ0	இளவி	இளவித்தொகை
	உஉ	இளவி	இளவித்தொகை
கஇ	நஇ	கூறும்.	கூறும்
கசு	கக	கருத்தெழுந்தது,	கருத்தெழுந்தது.
	கச	யிருந்ததனல்.	யிருந்ததனல்
	கஇ	வாயில்லமரற்	வாயில்லாமற்
உஉ	கூக	கொா	கொ
உசு	உ0	கவரி	இதைநீக்கிவிடுக அன்னம், உல்கு என்பவற்றைச் சேர்த்துக் கொள்க.
	உக	பதிஞறே	பதினேழே
	உங	அப்பதிஞறனுள்ளும்	அப்பதினேழனுள்ளும்
	நக	கவரி என்பது சமரி என்னும் வடநாட்டுச் சொல்லின் திரிபு	பின்னிணைப்பு நோக்குக.
சக	எ	சு	சூ
சக	நங	பெருஞ்கடல்	பெருங்கடல்
சஉ	கசு	உலகிற்கிற்கு	உலகிற்கு
சஎ	கக	கூறப்பெறும்,	கூறப்பெறும்.
சசு	உஇ	வீட்டுலமாகிய	வீட்டுலகமாகிய
இக	உச	ஆராய்ந்தறியுப்	ஆராய்ந்தறியும்
	ஈறு	அறிவும்	அறிவுப்
இசு	சு	சுளும்	களும்
	கங	அழுக்காது	அழுக்காறு
இசி	உங	விணுக	வீணுக
கூ0			
கூஉ	தலைப்பு	திருக்குறள் பாயிரம்	திருக்குறள் - அறத்துப் பால்
கூச			
கூக	தலைப்பு	இல்வாழ்க்கை	இல்லறவியல் - இல்வாழ்க்கை
கூங			
எஅ	உ0	புறுத் துறுப்பாகிய	புறத்துறுப்பாகிய
அ0	உக	முற்றுமை	உயர்வு சிறப்பு
அஎ	எ	சால்	சொல்
அஅ	கஅ	பிறரிடத்து	பிறரிடத்து

திருக்குறள் தமிழ்மரபுரை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
கூங	உள	யும்மை	யும்மை.
கூடு	டு	மேற்றே	மேற்றே.
கo உ	க - உ	எல்லார்க் சிறப்பைத்	எல்லார்க்கும் சிறப்பைத்
கங்டு	கங	இனிவரவு	இனிவரவு
கசூஉ	உசூ	செய்வதால்.	செய்வதால்
களங	ஙஉ	விளக்கு	விளக்கு'
கஅங	க	முனிவர்.	முனிவர்
கஅடு	உ	உட்படுத்தற்கு	உட்படுத்தற்கு.
கஅசு	டு	நீடித்தலுமாம்	நீடித்தலுமாம்.
கஅக	அ	உலத்தில்	உலகத்தில்
ககூங	கூங	நகலடியார்	நாலடியார்
கக்க	உஅ	கூட்டை ;	கூட்டை,
கசீக	உ	(உசை	(உசை).
உoக	கள	தன்னடக்கம்	ஒழுக்கம்
உoசு	அ	ஓதியா	ஓதியர்
	எ	மீண்டுப்	மீண்டும்
	க	அவைகள்	அளவைகள்
	ஈற்றயல்	விடு	வீடு
உகக	டு	உன்னத்தில்	உள்ளத்தில்
உoக	ஐo	(ங)	(உ)
உஉஅ	ங்க்	நாட்டையுயர்த்துக்	நாட்டையுயர்த்திக்
உஉசு	ங்o	'செங்கோல்	'செங்கோல்'
	ஈறு	ளிபோல்	ஒளிபோல்
		மேல்ஓ	மேல்
உஉக	சு	என்.	என்
உஙசு	சு	தாமிள்புறுதலாலது,	தாமின்புறுதலாலது.
உஙக	கo	பின்னிணைப்	பின்னிணைப்பைப்
உஙஅ	முதல்	(gosth)	(gosti)
உஙக	உக	டைஅறிவுயார்	அறிவுடையார்
உசo	உச	உழவர்நிலத்தையே	உவர் - நிலத்தையே
உமச	உஇ	போல்லர்	போல்வர்
உஎo	ஈறு	முடித்தற்குரிய	முடித்தற்கரிய
உஎச	கo	காமுகனிடத்தும்.	காமுகனிடத்தும்,
உஙo	முதல்	ங்கூஇ.	ங்கூஇ.
உஙக	கச	ங்கூஎ	ங்கூஎ
ங்டுஅ	ஈறு	யற்சியுள்ளம்	முயற்சியுள்ளம்
ங்சக	சு	தலாஞும்.	தலானும்,
ஙஅச	ஙஉ	விளோதொடங்குமுன்	விணைதொடங்குமுன்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
ூஉள	ஈறு	றிந்து	யறிந்து
ூசுசு	முதல்	இனிய'	'இனிய'
ூசுள	எ	வில்லியின்	வில்லின்
ூளள	கூ	முதலாயின '' என்று	முதலாயின'' என்று
ூஅ0	ககூ	'தவலில்லார்'	'தவலில்லா'
ூஅஅ	ஈறு	மை	மறை
ூகூஅ	க0	கூங	அகங
நிக0	ங	(Abber)	(Abbe)
நிகஉ	ங0	'தோயார்	'தோயார்'
நிஙக	ஙூ	முற்று;	முற்றும்
நிூ0	கஉ	'முன்வைக்கப்பட்டது.	முன்வைக்கப்பட்டது'
நிூஉ	இ	பொருத்தமே	பொருத்தமே.
நிூஉ	உக	தழுவப்பெறும்	தழுவப்பெறும்.
நிூூ	உ	இன்மை	இன்மை.
நிசங	சு	செத்தான்	செத்தான் —
	உகூ	பிறப்பாவன.	பிறப்பாவன
நிகூஅ	கக	பிற 'திருநுதல்	'பிறதிருநுதல்
	கூ	முர்	முர்.
நிளக	ஈற்றயல்	(Iustice party)	(Justice•Party)
	ஈறு	ஆட்சி,	ஆட்சியும்,
நிளஉ	ங	வதுமான;	வதுமான
நிளங	உகூ	உலகு'	'உலகு'
நிஅங	உங	கரிசன் (பாலி)	கரிசன் (பாவி
நிஅூ	நி	சொல்லி.	சொல்லி,
சு0கூ	உநி	— அமைந்த கச்சு	அமைந்த கச்சு
சுநிநி	உள	வந்தது,	வந்தது,''

